*Issued* 18—8—1966]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## SATURDAY, 12TH MARCH 1966

## VOLUME XXXVI—No. 1

*CONTENTS*

| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. .. | 1–22 |
| II Point of Order— Postponement of Privilege Matter .. .. .. .. | 22–23 |
| III Voting on Demands for Grants for 1966-67—*cont.* | |
| 1. Demand No. XIX—Co-operation .. .. .. .. 2. Demand No. XL—Capital Outlay on Consumers Co-operatives .. .. .. .. .. | 23–111 |
| IV Papers laid on the table of the House .. .. .. .. | 111 |

©

GOVERNMENT OF MADRAS
1966

*Legislative Assembly Department*
*Madras*

PRICE 50 *Paise*]

D
V211,31 N66
N66.36.
137840

P
N21,31'N66
N66.36

137840

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 12th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker, (The HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*விவசாயக் கருவிகள்.*

* 257 **கேள்வி—திரு. செ. மாதவன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் வழங்குவதை எண்ணிக்கையில் அதிகரிக்க ஏதேனும் திட்டமுண்டா ?

(இ) அதிக பம்பு செட்டுகள் வழங்க மத்திய அரசாங்கம் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) ஆம்.

**திரு. செ. மாதவன் :** இந்தத் திட்டத்தினுடைய விவரம் என்ன ? எவ்வளவு உதவி மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்கார் எதிர்பார்க்கிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** மத்திய சர்க்கார் ரூ. 25.70 லட்சம் கொடுத்தார்கள். மறுபடியும் 25 லட்சம் கொடுத்தார்கள். இது வரை 50 லட்சத்தி சொச்சம் கொடுத்திருக்கிறார்கள். மேலும் 130 லட்சம் நாம் கேட்டிருக்கிறோம். இதிலே 30 லட்சம் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. செ. மாதவன் :** ஏற்கனவே பம்ப் செட் வழங்கப் பட்டிருக்கிறது. வழங்கப்பட்ட பம்ப் செட்டுகள் விவசாயிகளுக்குப் போதவில்லை என்ற குறை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் பம்ப் செட்டுகள் வழங்கப்படுகின்ற முறையும் உதவித் தொகையும் மாற்றம் செய்யப்படவேண்டும் என்ற யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ? மத்திய சர்க்கார் சப்சிடி மூலமாக மாநில சர்க்காருக்கு மேலும் உதவி செய்ய முன் வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அனேகமாக மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிறது. ஆனால், அந்தப் புள்ளிவிவரம் இல்லை. நாம் போர்டு ஆஃப் ரெவின்யூவை 400 ஆயில் என்ஜின்களை வழங்கச் சொல்லியிருக்கிறோம்.

[12th March 1966

**திரு. எஸ். முருகையன் :** ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயிகளிடமிருந்து எவ்வளவு பம்ப் செட்டுகளுக்கு விண்ணப்பம் வந்தது, மாவட்ட வாரியாக தேவை பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. மா. தண்டாயுதபாணி :** தற்போது வழங்கப் பட்டுள்ள தொகையிலே மத்திய சர்க்கார் சப்ஸிடி கொடுக்கிறதா? அல்லது மாநில சர்க்காரே கொடுக்க முன் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** மத்திய சர்க்காரின் உதவியை நாடுகிறோம். எவ்வளவு சப்ஸிடி கொடுத்தார்கள் என்ற புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. இதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன் :** விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகையைக் கொடுக்கிற நேரத்தில் கம்பெனிக்காரர்களின் பேரில் கொடுக்கிறார்கள். கம்பெனிக்காரர்கள் விலையைக் கூட்டிவைத்துவிடுகிறார்கள். ஆகையால், விவசாயிகள் பேருக்கு அந்தச் செக்கைக் கொடுத்தால், அவர்களே தேர்ந்தெடுத்து குறைந்த விலைக்கு வாங்கலாம். ஆகையால், அப்படிப்பட்ட முறையில் விவசாயிகளுக்கு செக் கொடுப்பதற்கு யோசிப்பார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது கையாண்டுவரும் முறை நல்ல முறை என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பம்ப் செட் வழங்கக்கூடிய எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமென்ற கருத்தையொட்டி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மத்திய சர்க்கார் நிதி அமைச்சராக இருந்தபோது மாநில சர்க்கார் உதவி கேட்டால் கொடுக்கக்கூடிய உதவித் தொகையை கொடுக்க வேண்டுமென்ற அறிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. வெ. ராமையா :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் மட்டும் அல்ல. நம் அரசாங்கமேகூட இந்தக் கருத்தைப் பரிசீலனை செய்தது. கிணறுகளுக்கு, பம்ப் செட்டுகளுக்குக் கொடுக்கக் கூடிய தொகைகளின் அளவை உயர்த்தவேண்டுமென்ற அடிப்படையில், ராஜ்யத்தில் இருக்கிற மாவட்டக் கலெக்டர்களைக் கலந்து பேசி ஒரு கிராஷ் ப்ரோக்ராம் போட்டால் ஒவ்வொ மாவட்டத்திலும் எவ்வளவு பம்ப் செட்டுகள் தேவைப்படும் என்ற புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டு அந்த அடிப்படையில் நம் ராஜ்யத்தில் இருக்கிற நிதி வசதிகளைக் கொண்டு வருஷா வருஷம் கொடுக்கக்கூடிய பம்ப் செட்டுகளின் எண்ணிக்கையை விட அதிகமாகக் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து கடன் உதவி எவ்வளவு வருகிறதோ, அதையும் கொடுக்கவேண்டிய அடிப்படையில் திட்டத்தை உருவாக்க இருக்கிறோம்.



12th March 1966]

**திரு. து. ப. அழகமுத்து :** பம்ப் செட்டுகள் வாங்கி வைத்த பிறகு மின்சார கனெக்ஷன் கிடைக்காத காரணத்தினால் அதைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. மின்சார கனெக்ஷன் கிடைப்பதற்குள்ளே கொடுத்த கடனை விவசாயிகளிடமிருந்து திரும்ப வசூலிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால, மின்சார கனெக்ஷன் கிடைக்காத இந்தக் குறையைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : The Government of India have been addressed for assistance for rural electrification also. இது சம்பந்தமாக மத்திய சர்க்காரினுடைய உதவியைக்கேட்டிருக்கிறோம்.

**திரு. எஸ். முருகையன் :** ஹரிஜன நல இலாக்காவிலே ஹரிஜனங்களுக்குக் கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப்படுகின்ற தொகை சப்ஸிடியாகக் கொடுக்கப்படுகிற. அதுபோல் ஹரிஜனங்களுக்கு பம்ப் செட்டுக்குக் கொடுக்கும்போது கடனாக அல்லாமல் சப்ஸிடியாகவே கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா? அப்படி இல்லையென்றால் இனிமேலாவது இதுபோன்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ரூ. 1,500 கிணறுகளுக்காக இனமாகக் கொடுக்கிறோம். பம்ப் செட்டுகள் வைத்திருக்கிறவர்கள் போரிங் போட்டு தண்ணீர் எடுப்பதில் அந்தச் செலவு குறைவாக இருந்தால் பார்க்கலாம்.

* 258 கேள்வி—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965 ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் முடிய விவசாயிகளுக்குத் தவணை முறையில் எத்தனை டிராக்டர்கள் வழங்கப்பட்டன?

(இ) எந்தெந்த கம்பெனிகள் மூலமாக என்னென்ன டிராக்டர் ரகங்கள் வழங்கப்பட்டன?

(உ) மேற்படி டிராக்டர் ஒன்றுக்கு என்ன விலை ஆகிறது?

(எ) விவசாயிகளுக்குச் சலுகை காட்டும் வகையில் அவைகளை அடக்க விலையில் குறைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) முதல் (எ) வரை : சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இந்த மேஸி பர்கூஸன் டிராக்டர்களுக்குத்தான் கடன் வழங்கப்படுகிறது, ஆனால், இதை ரிப்பேருக்குக் கொண்டுபோகும்போது, மற்ற

---

[a] 112–113ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[12th March 1966

கம்பெனிகளைவிட இதற்கு அதிகமாக சார்ஜ் கேட்கிறார்கள். ஸ்பேர் பார்ட்ஸ் விலை மிகக் கூடுதலாக இருக்கிறது. இதைக் குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்குத் தனியாகத்தான் கேள்வி வேண்டும்.

**திரு. மா. தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் இதுவரை 88 டிராக்டர்கள் வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. டிராக்டர்கள் வேண்டும் என்று கோரி வந்த விண்ணப்பங்கள் எத்தனை? அவற்றில் எத்தனை கொடுக்கப்பட்டிருக்கின்றன? மீதி இன்னும் எத்தனை டிராக்டர்கள் கொடுக்கப்படவேண்டும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை.

**திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் :** ஸார், நவீன முறையில் விவசாயிகளை முன்னேற்றுகின்ற அடிப்படையில் விவசாயிகளுக்கு எளிய முறையில் டிராக்டர்கள் கிடைப்பதற்கு தகுந்த வகையில் ஏதாவது சப்ஸிடி அரசாங்கத்திலிருந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** டிராக்டர்கள் வாங்குபவர்கள் கொஞ்சம் சொத்து உள்ளவர்களாகத்தான் இருக்க முடியும். ஆகவே, இவர்களுக்கு சப்ஸிடி கொடுக்கவேண்டும் என்பது அவசியமில்லை.

**திரு. செ. மாதவன் :** சிறிய நிலப்பரப்பு உடைய உழவர்களுக்கு தங்கள் நிலங்களை உழுதுகொள்ளக்கூடிய வகையில், சிறிய அமைப்பில் இயந்திரக் கலப்பைகளை வாங்கிக் கொடுப்பதற்கு அரசாங்கத்திடத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அப்படியானால் வெளிநாடுகளிலிருந்து இப்படிப்பட்ட இயந்திரக் கலப்பைகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ரஷ்ய டிராக்டர்கள் 14 ஹார்ஸ் பவர், 28 ஹார்ஸ் பவர், 40 ஹார்ஸ் பவர் என்ற அளவில் இருக்கின்றன. இவற்றையும் வரவழைத்துக் கொடுக்கலாம் என்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

**திரு. மா. தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஜப்பானிலிருந்து குபட்டா வாக்கின் டிராக்டர்களை 3,000 ரூபாய் விலையில் வாங்கி உபயோகித்துக்கொள்ளலாம் என்று கம்பெனி பரீட்சார்த்தமாகக் காண்பித்தார்கள். அதோடு இதை அடுத்த ஆண்டில் வரவழைத்து விவசாயிகளுக்குக் கொடுக்கலாம் என்றும், அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்றும் அதிகாரிகள் கூறினார்கள். இதைப்போன்ற டிராக்டர்களை வரவழைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அப்படியெல்லாம் வரவழைப்பதாக இல்லை. வேறு விவரங்கள் என்னிடமில்லை தனியாகக் கேள்வி போட்டால் பார்த்து விவரம் சொல்லலாம்.



12th March 1966]

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, ரஷ்ய டிராக்டர்கள் விலை குறைவாக இருக்கிறது, உண்மை தான். ஆனால், நல்ல முறையில் உழுவதற்கு பெர்குஸன் டிராக்டர்கள் தான் ஏற்றவை என்று சொல்லுகிறார்கள். இதன் விலை 17 ஆயிரத்துச் சொச்சமாக இருக்கிறது. ரஷ்ய டிராக்டர் விலை குறைவாக இருக்கிறது. ஆகவே இந்த டிராக்டரின் விலை அளவுக்கு பெர்குஸன் டிராக்டர் விலையையும் குறைக்க ஏதாவது முயற்சி செய்ய முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அது எப்படி குறைக்க முடியும்? பெர்குஸன் டிராக்டர்கள் விலை கூடுதலாகத்தான் இருக்கிறது. அதைத்தான் வாங்கவேண்டும் என்றால் கொஞ்சம் கூடுதலாகப் போட்டுத்தான் வாங்கிக் கொள்ளவேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன் :** இப்படிப்பட்ட டிராக்டர்கள் பெரும் நிலச்சுவாந்தார்களுக்குத் தான் பயன்படும். சிறு விவசாயிகளுக்குப் பயன்படும் அளவில் அங்கே இருக்கின்ற பிர்காவுக்கு ஒன்று, அல்லது பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று என்று கொடுத்து, அதன் மூலமாக விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுக்க அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? இல்லையென்றால் அப்படி ஒரு திட்டம் வகுக்க முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கலாம் என்று பரீட்சார்த்தமாக பார்க்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் இரண்டு மூன்று இடங்களுக்குக் கொடுக்கலாம் என்றும் அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Sir, difficulty has been experienced by the Government in securing Massey Ferguson Tractors and supplying them to agriculturists. Have the Government explored the possibility of securing some other tractors?

**கனம் திரு. பூ. கக்கன் :** பெர்குஸன் டிராக்டர் இங்கு செய்யப்படுகிறது. இதைத்தான் விவசாயப் பெருமக்கள் அதிகமாக விரும்புகிறார்கள். ஆகவேதான் இதற்கு அரசாங்கம் கடன் கொடுக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** நிதி வசதியுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் தாங்களாகவே சொந்தமாக டிராக்டர்களை வாங்கி வைத்துக்கொள்ளுகிறோம் என்று தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பினாலும், அவ்விதம் கொடுக்க முடியாது என்று திருப்பி அனுப்பி விடுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றிற்கு என்று இருக்கின்ற பணத்திலிருந்து வாங்கிக் கொள்வதற்கு ஏன் மறுப்பு சொல்லவேண்டும்? இவ்விதம் வாங்கிக் கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பஞ்சாயத்து யூனியன்கள் பல வேலைகளைச் செய்வதற்காகப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு டிராக்டர்கள் வாங்க வேண்டும் என்று சில பஞ்சாயத்து யூனியன்கள் கேட்கிறார்கள். இதர வேலைகளுக்கெல்லாம் இடையூறு இல்லாமல் இருந்தால் அதே நேரத்தில் மற்ற வேலைகளுக்கு

இடையூறு இல்லாமல் இதை வாங்கலாம் என்று ரெஜிஸ்டிரார் ஆஃப் கோவாப்பரேடிவ் சொஸைட்டிஸ் ஒத்துக்கொண்டால் அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

**திரு. சா. கணேசன்:** பஞ்சாயத்து யூனியன் டிராக்டர் வாங்குவதற்கும் ரெஜிஸ்டிரார் ஆஃப் கோவாப்பரேடிவ் சொஸைட்டிஸ் ஒத்துக்கொள்வதற்கும் என்ன சம்பந்தம் என்று புரியவில்லை.

**கனம் சபாநாயகர்:** அவர்கள் சொல்வது கோவாப்ரேட்டிவ் பார்ம்-களுக்குப் பொருந்தும்.

* 259 **கேள்வி—திரு. ஆ. தங்கவேலு:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965 ஜனவரி முதல் டிசம்பர் முடிய தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து நிலத்தை சமப்படுத்த வேண்டி புல்டோசர் கேட்டு, மாவட்ட விவசாய உதவிப் பொறியாளருக்கு வந்த விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) எத்தனை வேலை முடிவு பெற்றது?

(உ) கிடைத்த வருமானம் எவ்வளவு?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) 108.

(இ) 77.

(உ) ரூ. 1,56,650.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** புல்டோஸர்கள் சரியாகக் கிடைப்பதில்லை. இதற்காக விண்ணப்பம் செய்து மூன்று நான்கு வருடங்களுக்குப் பின்னால்தான் கிடைக்கிறது. இது தென் ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் பரவலாயிருக்கிறது. இதை மாற்றி துரிதமாகக் கிடைப்பதற்கு அரசாங்கம் வழி செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது போல் அப்படிப் பல வருடங்கள் ஒன்றும் ஆவதில்லை. மொத்தம் வந்த விண்ணப்பங்கள் 90, அவற்றில் 44 இப்போது பெண்டிங்-காக இருக்கின்றன. இவற்றில் 2 வருடங்களில் இருப்பது 3. ஒரு வருடம் 10, ஆறு மாதம் 15, மூன்று மாதம் 9 இரண்டு மாதம் 7. இந்த அளவில் தான் பெண்டிங்-காக இருக்கிறது. பல வருடங்களாக இல்லை.

**திரு. மா. தண்டாயுதபாணி:** புல்டோசர் வேண்டும் என்று கேட்டு ஓராண்டு, ஒன்றரை ஆண்டு காலம் ஆனபிறகுதான் கிடைக்கிறது. வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் கிடைப்பதில்லை. தற்போது விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக நிலத்தைச் செம்மைப்படுத்த இது மிகவும் தேவையாக இருக்கிறது. ஆகவே அதிகமான அளவில் புல்டோசர்களை வரவழைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? இப்போது மொத்தம் இருக்கின்ற புல்டோசர்கள் எத்தனை? அதில் மாவட்ட ரீதியாக எத்தனை வழங்கப்பட்டிருக்கின்றன?



THE HON. SRI P. KAKKAN: There are at present 104 bulldozers and 36 wheel-type tractors with the Agricultural Department. ஜில்லாவாரியாக எத்தனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரம் இப்போது என்னிடம் இல்லை.

**திரு. சா. கணேசன்:** புல்டோசர்கள் 100-க்கு மேல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயத்திற்குப் பயன்படுகின்ற டிராக்டர்கள், புல்டோசர்கள் இவைகளைப் பெற்று நிலத்தைச் செம்மைப்படுத்தி, பரவலாக நிலத்தை சமன் படுத்தி அதன் மூலமாக விவசாயத்தைப் பெருக்குவது மிகவும் இன்றியமையாதது. இப்படிப்பட்ட கருவிகள் கோவாப்பரேட்டிவ் பார்ம்களில் உள்ள நிர்வாகிகளால் ஒரு மாதம், இரண்டு மாதம் என்று வாடகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றை பார்ம்களில் உபயோகப்படுத்தாமல் பிறருக்குக் கொடுத்து தவறாக வாடகை பெற்றுவருகிறார்கள் என்கிற புகார்கள் அல்லது முறையீடுகள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா? அப்படியானால் அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அதோடு இம்முறையைச் செம்மைப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன வழிவகை செய்திருக்கிறது என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** எல்லா இடங்களிலும் அப்படியே சும்மாக் கிடக்கிறது என்று சொல்ல முடியாது. சில இடங்களில் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்காததின் காரணமாக வேலை செய்யாமல் இருக்கலாம். இதற்காக ஸ்பேர் பார்ட்ஸை வரவழைப்பதற்கு ஃபாரின் எக்செஞ்ச் கிடைப்பதற்கு மத்திய சர்க்காரிடத்தில் கேட்கிறோம். இந்தவிதமாக தக்கபடி நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. சா. கணேசன்:** நான் கேட்ட வினா வேறு, கிடைத்த விடை வேறு. நான் கேட்க விரும்புவது, பல கோவாப்பரேட்டிவ் பார்ம்களில் மானேஜ்மென்ட் பண்ணுகிறவர்கள், சர்க்காரிடமிருந்து ஒரு மாதம், அல்லது இரண்டு மாதம் என்று புல்டோசர்களை எடுத்துக்கொண்டு, அதைச் சரியான முறையில் பார்ம்களின் நிலங்களுக்குப் பயன்படுத்தாமல், பிறருக்கு வாடகைக்கு விட்டு அதன் மூலமாக தாங்கள் லாபம் அடைந்து வருகிறார்கள், இதன் காரணமாக குறிப்பிட்ட நிலங்கள் பயன்படுத்தப்பட முடியாமல் போகிறது என்கிற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா? அப்படியென்றால் அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

**கனம் திரு. பூ. கக்கன்:** இந்த மாதிரியான புகார் வந்ததாகத் தகவல் என்னிடம் இல்லை. புல்டோசர்கள் எங்கெங்கு கேட்கிறார்களோ அங்கு கொடுக்கிறோம். சில இடங்களில் பார்ட்ஸ் போய்விட்டன. அதனுடைய முனை மழுங்கிப் போய்விட்டது என்கின்ற ரிப்போர்ட் வருகிறது. அது தீரும் வரையிலும் மூடி முடங்கிக் கிடக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

[12th March 1966

கனம் சபாநாயகர் : கோவாப்பரேட்டிவ் பார்ம்களில் எடுத்துக் கொண்டவர்கள் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்று ஏதாவது புகார்கள் வந்திருக்கின்றனவா என்பது கனம் அங்கத்தினரின் கேள்வி.

கனம் திரு. பூ. கக்கன் : அந்த மாதிரி புகார்கள் ஒன்றும் வரவில்லை.

திரு. கே. பி. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்த புல்டோசரானது பார்ட்டிகளுக்கு வேலை செய்யும்போது, சில நாட்களில் ரிப்பேர் என்று அங்கேயே இருக்கிறது. கேட்டால், நம் சர்க்காரில் போதுமான ஸ்பேர்பார்ட்ஸ் இல்லாததன் காரணமாகப் பல நாட்கள் ஐடிலாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ? இனிமேல் என்ன செய்யப் போகிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க மத்திய சர்க்காரின் உதவியை நாடியிருக்கிறோம். நம் மாநிலத்திலேயே அந்த மாதிரி ஸ்பேர் பார்ட்ஸ் செய்ய என்னென்ன ஏற்பாடுகள் செய்யலாம் என்றும் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த புல்டோஸர்களைக் கொண்டு சர்க்கார் விவசாயம் செய்யக் கூடிய காலி இடங்களில் உழுது விவசாயிகளுக்கு அந்த நிலங்களை வாடகைக்குக் கொடுத்தால் விவசாயம் விருத்தியாகும். அப்படிப் பட்ட கோரிக்கை ஏதாவது அரசாங்கத்திற்கு உண்டா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அப்படிப்பட்ட கோரிக்கை என்னிடத்தில் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : மொத்தம் உள்ள புல்டோஸர்களில் நல்ல நிலையில் உள்ளவை எத்தனை ? ரிப்பேரில் உள்ளவை எத்தனை?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. சா. கணேசன் : சர்க்காரில் வைத்துக்கொண்டிருக்கிற புல்டோசர்களுக்கு, நான் சொல்லுகிறேன், பெரும்பாலான புல்டோசர்களுக்கு, ஸ்பேர் பார்ட்ஸ் இல்லை. உண்மையிலேயே இல்லையோ அல்லது வேறு என்னவோ தெரியாது. இல்லை என்ற காரணத்தினால் அவைகள் முடங்கிக் கிடக்கின்றன. அப்படி முடங்கிக் கிடக்குமானால், ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்க ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் எல்லாம் இருக்கின்றன. சர்க்கார் பண்டத்திற்கு, அதிலும் முக்கியமாக உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திக்க மிக மிக இன்றியமையாது வேண்டப்படுகிற இத்தகைய யந்திரங்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் சப்ளை செய்வதில் போதிய அக்கறையும், கவனமும் செலுத்தி, உடனடியாகச் செயல்படாமல் இருக்கிற காரணம் என்ன ? இனியாவது விரைவில் செயல்பட்டு நிலைமை திருந்துவதற்குச் சர்க்கார் முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.



12th March 1966]

கனம் திரு. பூ. கக்கன் : சர்க்கார் செயல்பட்டுத்தான் வருகிறது. இதிலே சில இடையூறுகள் வருகின்றன. ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்கு ஃபாரின் எக்சேஞ்ச் வேண்டியிருக்கிறது. ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் கிடைக்கும்போது அதைக் கொண்டு வெளிநாடுகளில் வாங்கவேண்டியிருக்கிறது. மேலும் உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டு தான் இருக்கிறது.

## புது ரக விதைகள்

* 260 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு விவசாயிகளுக்குப் புதுரக் விதைகளைக் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

(இ) ஆமென்றால், எந்தெந்த புதிய ரக விதைகள் கொடுக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) நெல் ரகம் ADT- -27.

வளர்ப்பு நெல் ரகம் 2701 (culture-2701)

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், இந்த ஆண்டு எத்தனை ஏக்கர் நிலத்திற்கு புதிய ரக விதைகள் கொடுக்கப்படும் ? இந்த விதைகள் யார் மூலமாகக் கொடுக்கப்படும் என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த ஆண்டு இரண்டு லட்சம் ஏக்கர்களுக்கு ஏ.டி.டி. 27 குறுவை விதைகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாய இலாகா மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் புது ரக நல்ல விதைகள் கிடைக்கும் என்று சர்க்கார் விவசாயிகளுக்குத் தெரியக் கூடிய முறையில் பிரசாரம் செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. கூட்டங்களில் சொல்லப்படுகிறது. பாம்ப்லெட்ஸ் வாயிலாகவும் விவசாய மக்களுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

திரு. கோ. சி. மணி : இந்த ஏ.டி.டி. 27 விதையானது குறிப்பாக ஆடுதுறைப் பண்ணையிலிருந்து சேகரிக்கப்பட்ட விதை எவ்வளவு என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆடுதுறை மட்டும் என்பது அல்ல. Nearly 5,000 tons of seed have been obtained from the State Seed Farms and nearly half of this quantity has already been distributed to the Thanjavur district. அதனாலே தஞ்சாவூர் ஜில்லாவிலே தான் ஏ.டி.டி. 27 போடுகிறோம். (அதற்காக விதைகளை சர்க்கார் விவசாயப் பண்ணைகளிலிருந்து கொடுக்கிறோம் . . . .

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் ஆடுதுறையிலிருந்து எவ்வளவு விதைகள் சேகரிக்கப்பட்டன என்று கேட்கிறார். அந்த இன்பர்மேஷன் இருந்தால் சொல்லுங்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆடுதுறை மட்டுமல்ல. கிராம விவசாயிகளிடமிருந்தும் வாங்கியிருக்கிறோம்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, குறுகிய காலத்தில் நல்ல பலன் அளிக்கும் விதை வேண்டியது தான். ஆனால் அதே நேரத்தில் உற்பத்தி ஆகும் நெல்லை மக்கள் விரும்பி உண்ணும் நிலை இருக்கிறதா ? இப்போது உற்பத்திச் செய்யப் பட்டிருக்கும் நெல் அந்த அளவுக்குத் தரம் உள்ளது தானா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தஞ்சை மக்கள் வாங்கி 60 மூட்டை நெல் அதிகமாக எடுப்பதால் இது லாபகரமாக இருக்கிறது.

**திரு. மா. தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, ஏ.டி.ட்டி. 27 மூன்று மாதங்களில் சாகுபடி செய்யக் கூடியது. ஆறு மாதங்களில் சாகுபடி செய்யக் கூடிய சம்பா விதை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ? அதன் பெயர் என்ன ? எப்போது வழங்கப்படும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கனவே சம்பா விதை ஸி.ஓ. 25 ஆராய்ச்சி செய்யப்பட்டது. அது இப்போது விவசாய மக்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. அந்த மாதிரி வேறு விதைகளைக் கண்டுபிடிக்க அரசாங்கம் மேலும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, இந்த ஏ.டி.ட்டி. 27 நெல்லைப் போடும்போது அதிக உரமிட்டால்தான் விளைகிறது என்று பரீட்சார்த்தமாகத் தெரிந்து விட்டது. ஏ.டி.ட்டி. விதை வாங்குகிறவர்களுக்கு அதற்குத் தேவையான அளவுக்கு உரம் காலத்தில் கிடைக்கவில்லை. ஆகவே, விதையைக் கொடுக்கும் போதே அதற்குத் தேவையான உரத்தையும் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த விதைக்கு உரம் கொஞ்சம் கூடுதலாகத்தான் தேவைப்படுகிறது. கூடுதலாக உரம் போட்டால் கூடுதலாகப் பலன் கிடைக்கிறது. ஏ.டி.ட்டி. விதை வாங்குகிறவர்களுக்குத்தான் உரம் கொடுக்கவேண்டும் என்று சொல்ல முடியாது. மற்றவர்களுக்கும் உரம் வேண்டியிருக்கிறது. விதை கொடுக்கும்போதே சேர்த்துக் கொடுக்க முடியும் என்று சொல்லுவதற்கில்லை.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** தலைவர் அவர்களே, ஏ.டி.ட்டி. 27 விதைகளை எந்தெந்த ஸீஸனில் போடுவது என்று யாருக்கும் சரியாகத் தெரியவில்லை. அதிகாரிகளுக்கே அது புரியவில்லையே; அதைப் பற்றி கனம் அமைச்சருக்கு ரிப்போர்ட் இருக்கிறதா ? எந்தெந்த ஸீஸனில் போடலாம் என்று சொல்லுவார்களா ?





**கனம் திரு. பூ. கக்கன் :** குறுவை ஸீஸனில்தான் போடவேண்டுமென்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகளுக்குத் தெரியாமல் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, it is a fact that there is confusion in the Agriculture Department with regard to the sowing of the seed, ADT-27. They say that it has to be sown during the Sambha season in the Thanjavur district and some other season in other districts. So, may I have a clarification in respect of this matter from the Hon. Minister?

(பதில் இல்லை.)

**திரு. மா. தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, தஞ்சையிலே இருக்கிற ஜாயின்ட் டைரக்டர் அவர்கள் புதிதாக இந்த ஆண்டு வழங்கப்போகிற 2,00,000 ஏக்கர் நிலத்திற்குப் பிரத்தியேகமாக உரத் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய, வேண்டிய உரத்திற்கு அரசாங்கத்திடம் கேட்டிருப்பதாகவும், நிச்சயம் கிடைக்கும் என்றும் கூறியிருக்கிறார். அது போன்று வழிவகை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** நான் ஏற்கனவே இந்த மன்றத்திலேயே சொன்னேன். 5,000 டன் விதை அரசாங்கப் பண்ணையிலிருந்து கிடைத்திருக்கிறது. அதைத் தவிர இதர கிராம விவசாயிகளிடமிருந்து. . . .

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் உரத்தைப் பற்றிக் கேட்கிறார். 5,000 ஏக்கருக்கு காரண்டி செய்திருக்கிறீர்களா என்று கேட்கிறார்.

**கனம் திரு. பூ. கக்கன் :** எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியுமோ அதைச் செய்யலாமே தவிர, காரண்டி கொடுப்பதற்கில்லை.

### திருத்துறைப்பூண்டியில் வெடி விபத்து

*261 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் வெடி மருந்து தயாரிக்கும் தொழிற்பட்டறையில் அண்மையில் வெடி விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் என்ன ?

(உ) அதனால் உயிர் இழந்தவர்கள் எத்தனைபேர் ?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) The District Revenue Officer, Thanjavur who conducted the enquiry under section 9 (1) of the Indian Explosives Act, 1884 has reported that the exact cause of the explosion could not be ascertained but that the accident may have been due to careless handling of the explosive substance.

(c) Five persons.

[12th March 1966

9-00 a.m. திரு. ஆ. கு. சுப்பையா : இந்த விபத்திற்குக் காரணமானவர்களின் மீது இன்னும் வழக்கு தொடராமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. வழக்கு தொடரப்படாமல் இல்லை.

It has been reported that the licensee Sri Aziz was arrested on 27—11—1965 and released on bail.

### போலீஸ் துறை மாநாடு

* 262 **கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலங்களில் தொழில் அமைதிக்காகவும், துறைமுகங்களின் அமைதிக்காகவும் இரண்டு வித போலீஸ் படைகளை நிறுவ வேண்டுவது பற்றி ஜூன் மாதத்தில் டில்லியில் நடைபெற்ற போலிஸ்துறை மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்மீது இம்மாநில அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்த மாநிலத்திலுள்ள போலீஸார் தொகையை அதிகரிக்க வேண்டும் என்று நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை ஒட்டியும், ஒவ்வொரு துறைக்கும் ஒரு போலீஸ் இருந்தால் நல்ல முறையிலே லா அண்டு ஆர்டர் கவனிக்கப்படும் என்பதை ஒட்டியும், தொழில் அமைதிக்காக ஒரு போலீஸ் படையும், துறைமுக அமைதிக்காக ஒரு போலீஸ் படையும், பொதுவாக ஒரு போலீஸ் படையும் இப்படி மூன்று படைப் பிரிவுகள் அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் முதலில் கேள்வி கேட்டது போலீஸ் துறை மாநாட்டில் இந்த விஷயம் பரிசீலிக்கப்பட்டதா என்பது. அது தான் இல்லை என்று பதில் சொன்னேன். இந்த அரசாங்கம் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு அதைப் பற்றித் தெரிவித்திருக்கிறது. குறிப்பாக தொழிற்சாலைகளைக் கவனிப்பதற்குத் தனியாக போலீஸ் வைப்பது என்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்திருக்கிறது. அவ்வாறு செய்வது நல்லது என்று இந்த அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. போர்ட் டிரஸ்டைப் பொறுத்த மட்டிலும், ஏற்கனவே மெட்ராஸ் ஸிடியில் ஹார்பர் போலீஸ் என்று இருக்கிறது. அதுவே இருந்தால் நல்லது. அதற்காக தனியாக போலீஸ் வைக்கவேண்டாம் என்று இந்த அரசாங்கம் சொல்லியிருக்கிறது.



12th March 1966]

**திரு. இராம. அரங்கண்ணல் :** அப்படியென்றால் எப்பொழுது அந்த உத்தேசம் அமலாக்கப்படும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எப்பொழுது மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தைக் கேட்டு, அவர்களுடைய அபிப்பிராயத்தை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கின்றார்களோ, நடத்தும்படி சொல்லுகிறார்களோ, அப்பொழுது எடுத்துக் கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அப்படி அமைக்கப்படுகிற போலீஸ் பிரிவு நம்முடைய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டதாக விளங்குமா அல்லது இந்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டதாக விளங்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அநேகமாக நம்முடைய மேற்பார்வையிலேதான் இருக்கும். அந்தந்த இண்டஸ்ட்ரீஸ் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும்.

### அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள்

* 263 **கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அடகு வைத்திருப்பவர்களின் தங்க நகைகளை மீட்டு அவற்றை நாட்டின் பாதுகாப்புக்காகப் பத்திரப்படுத்திப் பயன் படுத்துவது பற்றி அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : The proposal was examined and dropped by the Government.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அடகு வைத்திருக்கிறவர்களுடைய தங்க நகைகளை மீட்டு அவற்றை நாட்டின் பாதுகாப்புக்காக பத்திரப் படுத்த வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தி காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் அவர்கள் பல இடங்களில் பேசியிருக்கிறார்கள். அந்தக் கட்சிக் கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கட்சியினுடைய கொள்கை பரிசீலனை செய்யப்பட்டதா, இல்லையா என்பது பிரச்னை இல்லை. இது போன்ற ஒரு கருத்து இருந்தது. அதைப் பரிசீலனை செய்ததிலே இப்பொழுது இருக்கக்கூடிய 1943-ம் ஆண்டு மெட்ராஸ் பான் ப்ரோகர்ஸ் சட்டப்படி அடகு வைத்து அந்த நகைகள் மூழ்கிப் போகக்கூடிய காலத்தில் அவற்றை ஏலம் போட வேண்டுமே தவிர வேறு வழி இல்லை என்பதை அரசாங்கம் உணர்ந்த காரணத்தினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அடகு வைத்திருப்பவர்களுடைய நகைகள் மூழ்கி விட்டால் தனிப்பட்ட ஒருவருக்கு அந்த நகைகள் சொந்தமாகிவிடுகிறது. அப்படியில்லாமல் அடகு வைத்திருப்பவர்களுக்கு நன்மை செய்யும் விதத்திலும், அந்தத் தங்க நகைகளை

முதலீடு செய்கின்ற விதத்திலும் சட்ட விதிகளைத் திருத்தி அரசாங்கமே அந்த நகைகளை எடுத்துக் கொள்ளுவதற்கு ஏதாவது முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** யாருக்கும் சொந்தமாகிவிடுகிறது என்பது அல்ல. இப்பொழுது இருக்கக்கூடிய சட்டப்படி அந்த நகைகளை ஏலம் போடவேண்டும். அம்மாதிரி ஆக்ஷன் போட்டால் தான் அதில் இருக்கக்கூடிய தங்கத்திற்குக் கிடைக்கக் கூடிய விலையை விட அந்தப் பொருளுக்கு அதிகமான விலை கிடைக்கும். அந்த நகைளை தங்கமாக மாற்றி ஏலம் போட்டால் அடகு வைத்திருப்பவர்களுக்கு நஷ்டம் வரக்கூடும். ஆகவே, அடகு வைத்திருப்பவர்களுக்கு நஷ்டம் வரக் கூடாது என்ற கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தங்கமாக மாற்றி முதலீடு செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தங்க நகைகளை அப்படியே இருக்கிற விதத்திலேயே கொடுத்தால் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவைகள் கொடுத்த மாதிரியே திருப்பிக் கொடுக்கப்படும் என்று பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டில் எது சரி ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நகைகளாகக் கொடுத்தால், அதே நகைகள் திருப்பிக் கொடுக்கப்படும் என்பது அல்ல. அவைகளில் இருக்கக்கூடிய தங்கத்தைத் தான் திருப்பிக் கொடுப்பார்கள்.

### அக்கினி ஆற்றுப் பாசனம்

*264 **கேள்வி—திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அக்கினி ஆற்றுப் பாசனத்தை இன்னும் விஸ்தரிக்கும் செயற் குறிப்புகள் ஏதேனும் பரிசீலனையில் உள்ளனவா?

The Hon. Sri V. RAMAIAH : No Sir.

**திரு. பி. முருகையன் :** அக்கினியாறு திட்டத்தில் இடையிலே அந்த ஆறு வருகிற பகுதியிலே சில குளங்கள் விட்டுப் போயிருக்கின்றன. அந்தக் குளங்களுக்குத் தண்ணீர் கொடுப்பது பற்றி மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** புதியதாக விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிறதா என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். இல்லை என்று பதில் சொன்னேன். இப்பொழுது இந்தத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக இருக்கக்கூடிய காரணத்தினால், உபரித் தண்ணீரை விடப்பட்ட குளங்கள், கண்மாய்கள், ஏரிகளுக்குக் கொடுக்க முடியுமா என்பது பற்றி ஸ்தலத்தில் இருக்கக்கூடிய என்ஜினியர்கள் பரிசீலனை செய்கிறார்கள்.





### உணவு தானியங்கள்

* 265 **கேள்வி—திரு: ஆ. துரையரசன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள தானியக் கிடங்குகளில் எவ்வளவு தானியம் சேமித்து வைக்க வசதி இருக்கிறது ?

The Hon. Sri V. RAMAIAH : There are two godowns in Thanjavur District. One at Thanjavur and the other at Mannargudi. The capacity of the godowns is 50,000 tonnes each.

**திரு. கோ. சி. மணி :** இந்த கோடவுன் கட்டி முடிந்ததற்குப் பிறகு 1965 முடிய வைத்திருந்த நெல்லின் ஸ்டாக் எவ்வளவு ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** தஞ்சை ஜில்லாவிலிருந்து நாம் ஏராளமாக நெல் வாங்குகிறோம். அந்த நெல் பூராவும் சில சமயங்களில் உடனே மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டு போவதற்கு கஷ்டம் ஏற்படக்கூடிய காரணத்தினால் அதைச் சேமித்து வைக்க வேண்டியிருக்கிறது. கடந்த வருஷத்தில் வாங்கின நெல் பூராவும் வருஷம் பூராவும் சேமித்து வைத்து நாம். வெளியே அனுப்பவில்லை. அப்போதைக்கப்போது அனுப்பிக் கொண்டிருந்தோம். இருந்தாலும், சென்ற வருஷம் இந்த கோடவுன்களில் சேமித்து வைக்கப்பட்டது பற்றி குறிப்பிடுகிறேன்.

The total stock stored in the Thanjavur Civil Supplies Godown was 7,613 tonnes of paddy and 4,779 tonnes of rice, and in the Mannargudi Godown 13,674 tonnes of paddy and 14,705 tonnes of rice.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்த தான்ய கிடங்குகளுக்குக் கொண்டு வரும் தானியங்களை விரைவில் வாங்குவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் பல ஏஜெண்டுகளை அரசாங்கம் நியமித்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் கூட்டுறவு சொஸைடிகளும் வாங்குகிறார்கள். அதுவும் போதாது என்று சொன்னால் அரசாங்க அதிகாரிகளே நேரிடையாக வாங்கக்கூடிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** இப்படி இங்கு பல்வேறு முறைகளிலும் அல்லது பல இனங்கள் மூலமாகவும் வாங்கி ஸ்டாக் செய்யப்பட்ட சரக்குகள் சேதம் இல்லாமல் காப்பாற்றப்பட்டனவா ? அல்லது சேதம் ஏற்பட்டு இருந்தால், அதாவது புழுத்தல், ஆம்புதல், மக்கிப் போதல் இப்படி ஏதாவது சேதம் ஏற்பட்ட அளவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** என்னிடத்தில் இருக்கக்கூடிய விவரப்படி இந்த கோடவுனில் சேமித்து வைக்கப்பட்டது எதுவும் சேதம் அடைந்ததாக இல்லை.

**திரு. மு. கருணாநிதி :** திருவாரூரில் ஒரு பெரிய அரிசி ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், திருவாரூர் பகுதியிலே கொள் முதல் செய்யப்பட்ட நெல் உடனடியாக அந்த அரிசி ஆலைக்குக்

[12th March 1966

கொண்டு வரப்படாமல், மன்னார்குடி சேமிப்புக் கிடங்குக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மறுபடியும் திருவாரூர் ஆலைக்கு வருகிறது. இதனால் ஏற்படுகிற போக்குவரத்து செலவு அதிகமாக ஆகிறது. அதைத் தவிர்க்க முயற்சி எடுக்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்த மில்லில் தேவையான நெல்லை ஸ்டாக் வைப்பதற்கு இப்பொழுது அங்கே சேமிப்பு கிடங்குகள் இல்லை. அதையெல்லாம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வேலை பூர்த்தியானவுடன் அந்த மில்லுக்குத் தேவையான நெல்லை அங்கேயே சேமித்து வைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

* 266 **கேள்வி—திரு. செ. மாதவன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) தென் மாநிலங்களிடையே உணவுப் பண்டங்கள் போக்குவரத்து பற்றியும், மிகுதியான உணவு தானியங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வது பற்றியும் புதிய ஏற்பாடுகள் ஏதேனும் செய்யும் உத்தேசமுண்டா ?

(இ) அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

**திரு. செ. மாதவன் :** இப்பொழுது இருக்கக்கூடிய உணவு மண்டல முறையை மாற்ற வேண்டும் என்ற கருத்தை மத்திய அரசாங்கம் நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு ஆலோசனைக்குத் தெரிவித்திருக்கிறதா ? அப்படியானால் இந்த மாநில அரசாங்கம் ஆலோசித்து மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்த கருத்து யாது?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்பொழுது இருக்கக்கூடிய கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்று நமது அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் ஒன்றும் கேட்கவில்லை.

**திரு. செ. மாதவன் :** சார், மத்திய, அரசு, சென்னை தனி மண்டலமாக இருப்பதானால், கேரளாவிற்கு அதிகம் அனுப்ப வேண்டும், ஆகவே, அதை மாற்றி அமைக்க வேண்டும் என்கிற யோசனையை மாநில சர்க்காருக்குத் தந்ததா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இன்னும் அதிக நெல் அல்லது அரிசி கொடுப்பதாக நாம் ஒப்புக்கொள்ளவில்லை. அப்படி முடிவு எடுக்கவில்லை. தனி மண்டலத்தை ஒழித்து விடவேண்டும், மாற்ற வேண்டும் என்கிற பல கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டன. கடைசியாக இப்பொழுது இருக்கும் நிலையே நீடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு, அதை மத்திய சர்க்காரும் ஒப்புக் கொண்டிருக்கிறது.

**திரு. சா. கணேசன் :** இந்தியா ஒரு முழு நாடு, ஒருமைப்பாடு உடைய நாடு என்கிற கருத்து இருக்கின்ற நிலையில், மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டத்திற்கு வட்டம்



12th March 1966]

என்றெல்லாம் பிரிவு செய்து, அதனால், பல சங்கடங்கள், வீண் விரயங்கள், ஊழல்கள் பெருகுவதற்கு, துன்ப நிலைகள் மிகுவதற்குக் காரணமாக இருக்கின்றது என்பதை மனத்தில் கொண்டு, தேச பக்தியிலே எந்த மாநிலத்திற்கும் குறைவாக இல்லாத இந்த மாநிலம், மாநிலச் சர்க்கார், இந்த மாதிரிப் பிரிவை தகர்த்தெரிய முன்வர வேண்டும் என்பதை உணருகிறார்களா, இல்லாவிட்டால் இந்தக் கருத்தையொட்டி உடனடியாகச் செயல்பட முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினர் கூறிய தேச பக்தியிலே, இந்தியா ஒன்றுபட வேண்டும் என்கிற கருத்தைப் பொறுத்தவரையில், சென்னை ராச்சியத்திலே உள்ள சர்க்காரும் அல்லது மக்களும் வேறுவிதமான கருத்து உள்ளவர்கள் இல்லை. உணவு வேண்டும், மக்கள் தேவை பூர்த்தியாக வேண்டும் என்பதை மனதில் கொண்டு, நிர்வாக ரீதியில் இவை செய்யப்படுபவையே ஒழிய, ஏக இந்தியா. ஒன்றுபட்ட இந்தியா என்பதற்கு இது முரண் என்பது ஒன்றும் இல்லை.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த உணவு மண்டல முறை இருப்பதால், நம் மாநிலம், கேரள மாநிலத்திற்கு அதிகமாக உணவு கொடுக்க ஒத்துக் கொண்டு இருக்கிறதா? அதற்கு ஈடு செய்ய ஆந்திராவிலிருந்து நம் மாநிலத்திற்கு அவர்கள் கொடுக்க ஒப்புக்கொண்டு இருக்கிறார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** எவ்வளவு நாம் கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் இரண்டு வருஷத்திற்கு முன்பே நிர்ணயிக்கப்பட்டது. ஆந்திராவிலிருந்து ஒரு லட்சம் டன் நமக்கும், நாம் கேரளத்திற்கு இரண்டு லட்சம் டன்னும் கொடுக்க வேண்டும் என்கிற அடிப்படையில் அந்தக் கருத்தை ஏற்று இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது.

**திரு. செ. மாதவன் :** அப்படி ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஒப்புக் கொண்ட கருத்தை, மீண்டும் பரிசீலித்து அதிகப் படுத்த வேண்டும் என்று மத்திய அரசு கூறியதா ? இந்தச் சர்க்கார் அதை ஏற்றுக் கொண்டதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அவர்கள் அதிகமாகக் கேரளாவிற்குக் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால், நாம் இருக்கும் நிலையைப்பற்றி விவரமாகச் சொல்லி, இப்பொழுது இருக்கக்கூடிய நிலையே நீடிக்க வேண்டும் என்று நம் கருத்தைச் சொல்லியிருக்கிறோம்.

### *Sugar Control*

* 267 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of persons prosecuted for black-marketing in sugar during 1964; and

(*b*) the number among them convicted ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Twenty-eight only (28).
(*b*) Eighteen only (18).

*திரு. வி. எஸ். எஸ். மணி :* சார், சர்க்கரை வினியோகக் கட்டுப்பாட்டை உடனடியாக நீக்கத் தயக்கம் ஏன்? அதில் உள்ள கஷ்டங்கள் என்ன?

*கனம் திரு. வெ. ராமையா :* இப்பொழுது கண்ட்ரோலை நீக்குவதாக இல்லை. சர்க்கரைப் பற்றாக்குறை இருப்பதால், கண்ட்ரோல் நீடிக்க வேண்டும்.

*திரு. கோ. சி. மணி :* தலைவர் அவர்களே, இந்தச் சர்க்கரை வினியோகிப்பவர்கள் ஏதாவது குற்றம் செய்தார்கள் என்பதற்காக, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பர்மிட் ரத்து செய்யப்படுகிறது. அவர் வியாபாரி. அவருடைய பர்மிட் ரத்து செய்யப்படும் போது, அந்தப் பக்கத்தில் இருக்கும் மக்களுக்கு, அந்த வழக்குத் தீரும் வரை சர்க்கரை கிடைக்காமல் போகும் நிலைதான் இருக்கிறது. வழக்குப் போடப்பட்டிருக்கும் வியாபாரியைத் தவிர வேறு அங்கே உள்ள ஒருவருக்குப் பர்மிட் வழங்கி, மக்களுக்கு சர்க்கரை கிடைக்கச் செய்ய உடனடியாகக கண்டிப்பாக உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. வெ. ராமையா :* அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனால், சாதாரணமாக ஒரு லைசென்ஸ் ரத்து செய்யப்படும்போது, பொது மக்களுக்குப் பாதகம் வராத முறையில்தான் செய்யப்படுகிறது; மற்றவர்களுக்கு வினியோகம் செய்யும் பொறுப்பு கொடுக்கப்படுகிறது. எங்காவது குறைபாடுகள் இருந்தால், அதை எனக்கு எழுதியனுப்பினால் கவனிக்கப்படும்.

### *இயங்கு நீதி மன்றங்கள்*

* *268 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி :* கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நடமாடும் கோர்ட் வண்டிகள் சென்னையில் எத்தனை இயங்கி வருகின்றன ?

(இ) அவைகளில் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ? தண்டனையில் முடிந்தவை எத்தனை ?

(உ) மற்ற மாவட்டங்களுக்கும் இதனை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :* (அ) சென்னை நகரத்தில் இயங்கும் நீதிமன்றங்கள் (Mobile Courts) மூன்று பணியாற்றி வருகின்றன.

(இ) இயங்கும் நீதி மன்றங்களில் 1965-ம் ஆண்டு இறுதி வரை 3,35,295 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றுள், 2,95,065 வழக்குகள் தண்டனையில் முடிந்தன.





(உ) இயங்கும் நீதி மன்றங்களை மற்ற மாவட்டங்களில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் இப்போது அரசாங்கத்திடமில்லை.

*திரு. எஸ். ஜே. ராமசாமி :* தலைவர் அவர்களே, இந்த நடமாடும் கோர்ட்டுகளில் எந்த விதமான கேசுகள் அதிகமாக வந்திருக்கின்றன ? எம்மாதிரியான கேசுகள் விசாரிக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Cases tried here are generally cases where the accused pleads guilty under the City Police Act.

*திரு. செ. மாதவன் :* இந்த இயங்கும் நீதி மன்றங்கள் நடைபெறும் முறைகளைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்ததா ? அவை சரியாக இயங்குகின்றனவா என்பதைப்பற்றி உயர் நீதி மன்ற நீதிபதியோடு கலந்து ஆலோசித்ததா ?

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :* சார், இந்தக் கோர்ட்டுகள் இருப்பது மிகவும் சௌகரியமாக இருக்கிறது. மூன்று கோர்ட்டுகள் இருக்கின்றன. தனியாக டிராபிக் கேசுகள் வருகின்றன அல்லவா, அவற்றிற்கென்று ஒரு நடமாடும், மொபைல் கோர்ட், நிறுவ வேண்டும் என்று யோசித்து, ஹைகோர்ட்டுக்கு அவர்கள் யோசனைக்கு சென்று இருக்கிறது. பிறகுதான் ஒரு முடிவு எடுக்கப்படும். அது மாத்திரமல்ல, மதுரைக்கு ஒரு கோர்ட்டு வேண்டும் என்றும் கேட்கிறார்கள். ஆகவே, இவையெல்லாம் நல்ல முறையிலே நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

*திரு. எம். எஸ். மணி :* சார், சில வழக்குகளை எதிர்த்து வழக்காட வேண்டியிருக்கின்றது. நடமாடும் கோர்ட்டுகளில் வக்கீல்களும் செல்ல வசதி ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :* சார், இதிலே சவாரி செய்வது என்பதல்ல நோக்கம். மூன்று இடங்கள் என்றால், அவை எக்மோர், ஜார்ஜ் டவுன், சைதாப்பேட்டை என்கிற மூன்று இடங்களிலும், போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில் நிறுத்தி வைத்து நடத்துகிறார்கள். அதிலே வக்கீல்கள், மாஜிஸ்டிரேட்டுகள் சவாரி செய்வது என்பதல்ல நோக்கம். அவர்களெல்லாம் அங்கங்கே போய்ச் சேர்ந்து கொள்ள வேண்டும்.

*திரு. சா. கணேசன் :* இப்படிப்பட்ட நிலையில், நிரந்தரமாக இரண்டு வக்கீல்களை கட்சிக்காரர்களுக்கு ஆஜராவதற்கு என்று அமைத்து உதவ வழிவகை செய்ய சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா இல்லையென்றால் அந்த உத்தேசத்தைக் கவனிக்குமா ?

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :* அது அவரவர்கள் சௌகரியம்போல வக்கீல்களை ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

[12th March 1966

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Twenty-eight only (28).
(*b*) Eighteen only (18).

**திரு. வி. எஸ். எஸ். மணி :** சார், சர்க்கரை வினியோகக் கட்டுப்பாட்டை உடனடியாக நீக்கத் தயக்கம் ஏன்? அதில் உள்ள கஷ்டங்கள் என்ன?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுது கண்ட்ரோலை நீக்குவதாக இல்லை. சர்க்கரைப் பற்றாக்குறை இருப்பதால், கண்ட்ரோல் நீடிக்க வேண்டும்.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, இந்தச் சர்க்கரை வினியோகிப்பவர்கள் ஏதாவது குற்றம் செய்தார்கள் என்பதற்காக, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பர்மிட் ரத்து செய்யப்படுகிறது. அவர் வியாபாரி. அவருடைய பர்மிட் ரத்து செய்யப்படும் போது, அந்தப் பக்கத்தில் இருக்கும் மக்களுக்கு, அந்த வழக்குத் தீரும் வரை சர்க்கரை கிடைக்காமல் போகும் நிலைதான் இருக்கிறது. வழக்குப் போடப்பட்டிருக்கும் வியாபாரியைத் தவிர வேறு அங்கே உள்ள ஒருவருக்குப் பர்மிட் வழங்கி, மக்களுக்கு சர்க்கரை கிடைக்கச் செய்ய உடனடியாகக் கண்டிப்பாக உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனால், சாதாரணமாக ஒரு லைசென்ஸ் ரத்து செய்யப்படும்போது, பொது மக்களுக்குப் பாதகம் வராத முறையில்தான் செய்யப்படுகிறது; மற்றவர்களுக்கு வினியோகம் செய்யும் பொறுப்பு கொடுக்கப்படுகிறது. எங்காவது குறைபாடுகள் இருந்தால், அதை எனக்கு எழுதியனுப்பினால் கவனிக்கப்படும்.

இயங்கு நீதி மன்றங்கள்

* 268 **கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நடமாடும் கோர்ட் வண்டிகள் சென்னையில் எத்தனை இயங்கி வருகின்றன?

(இ) அவைகளில் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை? தண்டனையில் முடிந்தவை எத்தனை?

(உ) மற்ற மாவட்டங்களுக்கும் இதனை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) சென்னை நகரத்தில் இயங்கும் நீதிமன்றங்கள் (Mobile Courts) மூன்று பணியாற்றி வருகின்றன.

(இ) இயங்கும் நீதி மன்றங்களில் 1965-ம் ஆண்டு இறுதி வரை 3,35,295 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றுள், 2,95,065 வழக்குகள் தண்டனையில் முடிந்தன.



12th March 1966]

(உ) இயங்கும் நீதி மன்றங்களை மற்ற மாவட்டங்களில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் இப்போது அரசாங்கத்திடமில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இந்த நடமாடும் கோர்ட்டுகளில் எந்த விதமான கேசுகள் அதிகமாக வந்திருக்கின்றன? எம்மாதிரியான கேசுகள் விசாரிக்கப்பட்டிருக்கின்றன?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Cases tried here are generally cases where the accused pleads guilty under the City Police Act.

**திரு. செ. மாதவன் :** இந்த இயங்கும் நீதி மன்றங்கள் நடைபெறும் முறைகளைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்ததா? அவை சரியாக இயங்குகின்றனவா என்பதைப்பற்றி உயர் நீதி மன்ற நீதிபதியோடு கலந்து ஆலோசித்ததா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சார், இந்தக் கோர்ட்டுகள் இருப்பது மிகவும் சௌகரியமாக இருக்கிறது. மூன்று கோர்ட்டுகள் இருக்கின்றன. தனியாக டிராபிக் கேசுகள் வருகின்றன அல்லவா, அவற்றிற்கென்று ஒரு நடமாடும், மொபைல் கோர்ட், நிறுவ வேண்டும் என்று யோசித்து, ஹைக்கோர்ட்டுக்கு அவர்கள் யோசனைக்கு சென்று இருக்கிறது. பிறகு தான் ஒரு முடிவு எடுக்கப்படும். அது மாத்திரமல்ல, மதுரைக்கு ஒரு கோர்ட்டு வேண்டும் என்றும் கேட்கிறார்கள். ஆகவே, இவையெல்லாம் நல்ல முறையிலே நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

**திரு. எம். எஸ். மணி :** சார், சில வழக்குகளை எதிர்த்து வாதாட வேண்டியிருக்கின்றது. நடமாடும் கோர்ட்டுகளில் வக்கீல்களும் செல்ல வசதி ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சார், இதிலே சவாரி செய்வது என்பதல்ல நோக்கம். மூன்று இடங்கள் என்றால், அவை எக்மோர், ஜார்ஜ் டவுன், சைதாப்பேட்டை என்கிற மூன்று இடங்களிலும், போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில் நிறுத்தி வைத்து நடத்துகிறார்கள். அதிலே வக்கீல்கள், மாஜிஸ்டிரேட்டுகள் சவாரி செய்வது என்பதல்ல நோக்கம். அவர்களெல்லாம் அங்கங்கே போய்ச் சேர்ந்து கொள்ள வேண்டும்.

**திரு. சா. கணேசன் :** இப்படிப்பட்ட நிலையில், நிரந்தரமாக இரண்டு வக்கீல்களை கட்சிக்காரர்களுக்கு ஆஜராவதற்கு என்று அமைத்து உதவ வழிவகை செய்ய சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா இல்லையென்றால் அந்த உத்தேசத்தைக் கவனிக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அது அவரவர்கள் சௌகரியம்போல வக்கீல்களை ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

[12th March 1966

**திரு. சா. கணேசன் :** அவர்கள் அங்கே தயாராக இருந்தால், கட்சிக்காரர் வேண்டும் என்றால் அவர்களை வைத்துக்கொள்ள சௌகரியமாக இருக்குமே என்று சொன்னேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சார், இந்த நடமாடும் கோர்ட்டு களிலே, வண்டியின் உள்ளேயே நடத்துகிறார்களா, அல்லது போலீஸ் ஸ்டேஷன் உள்ளே வழக்கு விசாரணை செய்கிறார்களா என்று அறியலாமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** என்னை விட அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும். எங்கே கோர்ட்டு இருக்கிறதோ அங்கேதான் நடக்கும். வீதியில் நடக்கிறதா, உள்ளே நடக்கிறதா என்றால், கோர்ட்டு எங்கே இருக்கிறதோ அங்கே விசாரணை நடக்கும்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, நல்ல முறையிலே இயங்கும் நீதி மன்றங்கள் நடைபெறுகின்றன என்பதால், அதை எல்லா முனிசிபல் நகரங்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதைத் தான் சொன்னேன். இப்போது இருப்பது சென்னை நகரத்தைப் பொருத்து இருக்கிறது. தற்சமயம் அதை விரிவு படுத்த யோசனை எதுவும் இல்லை.

### சப் மாஜிஸ்ட்ரேட்டுகள்

*** 269 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ் நாட்டில் பணிபுரியும் சப்-மாஜிஸ்ட்ரேட்களையும், A.P.P.I. -களையும் கெஜடட் ரேங்குக்கு உயர்த்தும் திட்டம் ஏதும் அரசினரின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், பரிசீலனை எப்போது முடிவடையும் ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) சப்-மாஜிஸ்ட்ரேட்களை கெஜட் பதிவுள்ள தரத்துக்கு உயர்த்தும் செயற்குறிப்பு ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஆனால் அரசாங்கக் குற்ற விசாரணை (1-ம் தரம்) உதவி வழக்கறிஞர்களைப் பொறுத்த வரை அத்தகைய செயற்குறிப்பு எதுவுமில்லை.

(இ) இதைப்பற்றி முடிவுக்கு வர இன்னும் சில காலம் ஆகும்.

**திரு. சே. மாதவன் :** தலைவர் அவர்களே, சப்-மாஜிஸ்ட்ரேட் களைப் பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னால் சட்டக் கமிஷன் பரிசீலித்து சில அறிவுரைகளைக் கூறியிருக்கிறது. சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு உடனடியாக டிஸ்ட்ரிக்ட் முன்சீப் ராங்க் கொடுக்கவேண்டும் அல்லது சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் அல்லது ப்ரமோஷனுக்கு 'லிமிடெட் ஸ்கோப்' தான் இருக்கிறது, அதையாவது இன்க்ரீஸ் பண்ண வேண்டும் என்று



12th March 1966]

சட்டக் கமிஷன் அறிவுரை கூறியிருக்கிறதே, அந்த அறிவுரையை யாவது இந்த அரசாங்கம் பரிசீலனை செய்ததா ? இதுபற்றி உயர் நீதி மன்றம் அரசாங்கத்திற்குத் தெரிவித்த கருத்துக்கள் யாவை ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் அங்கத்தினர் குறிப்பிடக்கூடிய விஷயம் அரசாங்கத்தின் 'கன்ஸிட ரேஷன்' இல் இருக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட விஷயமும், மதுரையில் ஒரு மாநாடு போட்டு அங்கே தெரிவிக்கப் பட்ட நாலைந்து யோசனைகளும் அரசாங்கத்திற்கு வந்திருக் கின்றன. அந்த 'ப்ரபோசல்ஸ்' எல்லாம் அரசாங்கத்தின் 'கன்ஸி டரேஷன்' இல் இருந்து கொண்டிருக்கின்றன.

### செங்கற்பட்டு கூட்டுறவு மத்திய பாங்கு

*** 270 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

செங்கல்பட்டு மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கியில் இந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் இன்று வரையில் தீவிர சாகுபடி திட்டத்திற்காக எவ்வளவு தொகை எத்தனை விவசாயிகளுக்குக் கடனாக வழங்கப்பட்டது, தாலுகாவாரியாக ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** செங்கற் பட்டு மாவட்டத்தில் காஞ்சீபுரம் கூட்டுறவு மத்திய பாங்கு மூல மாக 1-7-1965 முதல் 31-1-1966 வரை, முனைப்பு வேளாண்மைப் பகுதித் திட்டத்தின் கீழ் தாலுக்கா வாரியாகக் கொடுக்கப்பட்ட கடன் தொகை பற்றிய விவரங்களும் இந்தக் கடன் அளிக்கப்பட்ட குடியானவர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | தாலுக்காவின் பெயர். | முனைப்பு வேளாண்மைப் பகுதி திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட கடன் தொகை. | கடன் கொடுக்கப்பட்ட குடியானவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | செங்கற்பட்டு .. .. .. | 0·89 | 185 |
| 2 | மதுராந்தகம் .. .. .. | 1·61 | 413 |
| 3 | காஞ்சீபுரம் .. .. .. | 0·60 | 178 |
| 4 | ஸ்ரீபெரும்புதூர் .. .. .. | 0·56 | 217 |
| 5 | சைதாப்பேட்டை .. .. .. | 0·59 | 109 |
| 6 | பொன்னேரி .. .. .. | 0·42 | 76 |
| 7 | திருவள்ளூர் .. .. .. | 0·85 | 266 |
| 8 | திருத்தணி .. .. .. | 0·72 | 174 |

### பரங்கிப்பேட்டைப் பகுதி

*** 271 கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தென்னார்க்காடு ஜில்லா பரங்கிப்பேட்டை கடலோரப் பகுதியில் இருக்கும் காடுகளின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு ?

[12th March 1966

(இ) அதில் அரசாங்கத்திற்கு (காட்டு இலாகாவிற்கு) தேவையான இடம் எவ்வளவு?

(உ) மீதி உள்ள இடத்தை நிலமில்லாத ஏழைகளுக்குக் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) 170.09 ஏக்கர்.

(இ) 170.09 ஏக்கர் முழுவதும் காட்டு இலாகாவிற்குத் தேவையாக இருக்கிறது. அதில் பூராவும் சவுக்கு நடப்பட்டிருக்கிறது.

(உ) இல்லை.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—POINT OF ORDER *RE* POSTPONEMENT OF PRIVILEGE MATTER

MR. SPEAKER : I shall take up the matter of privilege given notice of by the hon. Member, Sri K. A. Mathialagan, after the Hon. Chief Minister comes.

SRI K. A. MATHIALAGAN : Sir, on a point of order.

MR. SPEAKER : What is the point of order?

SRI K. A. MATHIALAGAN : கனம் சபாநாயகர் அவர்களே, அருள் கூர்ந்து ....

MR. SPEAKER : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

SRI K. A. MATHIALAGAN : அதைத்தான் சொல்லவிட மாட்டேன் என்கிறீர்கள்.

MR. SPEAKER : I would like to know what exactly is the point of order. If the hon. Member wants to raise a point of order against the decision of the Chair, that is a different matter. But, so far as the matter given notice of by the hon. Member is concerned I wish to make it clear to the hon. Member that I am not going to take it up now. I will take it up only after the Hon. Chief Minister comes.

SRI K. A. MATHIALAGAN : Sir, I want to raise a point of order regarding the privilege of the House in general.

MR. SPEAKER : Yes, let the hon. Member state his point of order.



12th March 1966]

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்ட மன்றத்தினுடைய சபாநாயகர் அவர்கள் நீங்கள். இந்தச் சட்ட மன்றத்திற்கென்று சில உரிமைகளும் கனம் உறுப்பினர்களுக்கென்று சில உரிமைகளும் இன்னும் பல நுண்ணிய உரிமைகளும் இருக்கின்றன. இவைகளெல்லாம் விலை மதிக்க முடியாதவை. இவைகளின் பாதுகாவலராக, இவைகளை யெல்லாம் பாதுகாப்பவர்களாக, இந்த மன்றத்தில் இந்தச் சிங்காதனத்தில் வீற்றிருக்கிறீர்கள்.

**கனம் சபாநாயகர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன என்று சொல்ல வேண்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தச் சட்ட மன்றத்திற்கு என்று சில உரிமைகள் இருக்கின்றன. இந்த உரிமைகள் பற்றிய விவகாரத்தில், சர்க்கார் கட்சித் தலைவர் வரும்வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமல், தாங்களே கூட முடிவு செய்ய வேண்டிய பெரிய அதிகாரம் தங்களுக்கு இருக்கிறது. சம்பந்தப் பட்டவர் வர வேண்டும் என்பது ஒருமுறைதானே தவிர, அது ஒரு சட்டம் தானே தவிர, இருக்கிறது என்று தாங்கள் கருதினால் . . . .

MR. SPEAKER : The hon. Member is again questioning my decision to take up the matter after the Hon. Chief Minister comes.

SRI K. A. MATHIALAGAN : I am not at all questioning the decision of the Chair.

MR. SPEAKER : Let the hon. Member please explain how there has been a breach of order or privilege?

SRI K. A. MATHIALAGAN : I will explain it.

Sir, the privilege of the House has precedence over any other matter and the presence or non-presence of the Hon. Chief Minister or any other Minister should not be taken into consideration. You, Mr. Speaker, are the custodian of the privileges of the House and a breach of privilege has occurred. The Chair must rule that there is a *prima facie* case of a breach of privilege and the matter should be referred to the Committee of Privileges.

MR. SPEAKER : I am sorry the hon. Member still persists in questioning my decision to take up the matter after the Hon. Chief Minister comes.

SRI K. A. MATHIALAGAN : I am not at all questioning the decision of the Chair.

**MR. SPEAKER : I rule that there is no point of order. I will take up the matter only after the Hon. Chief Minister comes. Let the hon. Member please resume his seat.**

[12th March 1966

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67

### (1) DEMAND NO. XIX—CO-OPERATION.

### (2) DEMAND NO. XL—CAPITAL OUTLAY ON CONSUMERS CO-OPERATIVES.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,72,73,300 under Demand No. XIX—Co-operation'.

SRI S. ARUMUGAM : Sir, I move—

'That the allotment of Rs. 2,72,73,300 under Demand No. XIX—Co-operation be reduced by Rs. 100.'

சட்ட மன்றத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் இருக்கும் "விவசாயக் கிராம நாணயக் கூட்டுறவு சங்கம் மூலம ஒரு வருடம், மூன்று வருடம் கடன் வழங்கியதை சென்ற ஆண்டி லிருந்து நிறுத்திவிட்டதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தைப்பற்றி விவாதிக்க" என்கிற வெட்டுப் பிரேரேபணையை நான் பிரேரேபிக்கின்றேன்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 19,000 under Demand No. XL—Capital Outlay on consumers Co-operatives'.

PULAVAR K. GOVINDAN : Sir, I move—

'That the allotment of Rs. 19,000 under demand No. XL—Capital Outlay on Consumers Co-operatives be reduced by Rs. 100.'

தலைவர் அவர்களே, "நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சரியாகச் செயல்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட" என்ற என்னுடைய வெட்டுப் பிரேரேபணையை நான் முன்மொழி கின்றேன்.

MR. SPEAKER: Now the Demands and the cut motions are before the House for discussion.

***கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு இயக்கம் பற்றிய விவரமான குறிப்பு கனம் அங்கத்தினர்களுக்கு ஏற்கனவே அனுப்பப் பட்டிருக்கிறது. அதையெல்லாம் நல்ல முறையில் கனம் அங்கத்தினர்கள் படித்து விஷயங்களை யெல்லாம் தெரிந்து
80 m. கொண்டிருப்பார்கள். கூட்டுறவு இயக்கம் இன்று நல்லதொரு தேர்ச்சி பெற்று நம்பிக்கை பெற்று கிராம மக்களிடையே நடந்து கொண்டிருக்கிற ஒரு இயக்கமாகும்.

நம்மைப்போன்று இருக்கக் கூடியவர்களுக்கு, விஷயம் தெரிந்த வர்களுக்குத்தான் இந்த இயக்கத்தில் திடமான நம்பிக்கை



12th March 1966]

[திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்]

இருக்க வேண்டும். நாம் தான் ஒன்றும் தெரியாத மக்களிடையே இதைப்பற்றி எடுத்துச்சொல்லி இந்த இயக்கத்தை வளர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர்களுக்கு இதுபற்றி விரிவான ஆய்வு உரை ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. பல அங்கத்தினர்கள் இது பற்றிப் பேசும்போது பல யோசனைகளைக் கூறக்கூடும். ஒன்றிரண்டு குறைகளையும் கூடச் சொல்லக்கூடும். இறுதியில் நான் அவற்றுக்கு எல்லாம் பதில் சொல்ல முனைகிறேன். இப்போது அதிக விரிவாகச் சொல்லவேண்டாமென்று கருதுகிறேன். ஆயினும், குறிப்பாக ஒன்றிரண்டு விஷயங்களை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு கடன் வழங்கவேண்டும் என்பதற்காக 50 கோடி ரூபாய் சங்கங்களுக்கு வழங்குகின்ற ஓர் ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். அவர்களுடைய தேவையைப் பூராவாகப் பூர்த்தி செய்வது என்றால் இந்த 50 கோடி போதாது. நூற்று அறுபது கோடி அளவில் ஒதுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. நூற்று அறுபது கோடி என்பது இன்றுள்ள நிதி வசதியைப் பொறுத்து முடியாததாக இருக்கிறது. ஆயினும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள்ளாக 80 கோடி ரூபாய் அளவுக்கு இந்த இனத்தின்கீழ் ஒதுக்கும் நிலை வரும் என்று நான் எதிர் பார்க்கிறேன். கனம் உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பும், மக்களுடைய ஒத்துழைப்பும்தான் தேவை.

நாம் ஆண்டுதோறும் கொடுக்கும் கடன் உதவியை அதிகரிக்க வேண்டுமானால் சங்கங்களும் தங்களுடைய நிதி வசதியைப் பெருக்கிக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. சங்கங்களின் நிதி வசதி என்கிறபோது சங்கங்களுக்கு மூன்று வகைகளில் நிதி வந்து கொண்டிருக்கிறது.

ஒன்று, சங்கங்களின் உறுப்பினர்கள் செலுத்தும் பங்குத் தொகை. இது தான் சங்கங்களின் மூலதனமாக இருக்கிறது. இந்த மூலதனத்தையும் உயர்த்தவேண்டும் என்பது சர்க்காரின் கருத்து. கடன் வாங்கும் ஓர் சங்கம் எப்பொழுதுமே தன் ஆயுள் வரையில் கடனை வாங்கிக் கொண்டிராமல் தனக்கென்று ஒரு மூலதனத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அதன் காரண மாகத்தான் ஒரு சங்கம் கடன் வாங்கும் தொகையில் 10-இல் ஒரு பங்கு மூலதனமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று வைத்திருக் கிறோம். இதையே ஐந்து வருடங்களில் ஐந்தில் ஒரு பங்காக உயர்த்திக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். அந்த முறையை இப்போது பெறுவதற்கு பல சங்கடங்கள் இருக் கின்றன என்று தோன்றினாலும் கூட விவசாயிகளுடைய எதிர் கால நிலைமையைக் கருத்தில் கொண்டு இவ்வாறு மூலதனத்தைக் கஷ்டப்பட்டாவது உயர்த்திக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. இதுபற்றியும் கனம் அங்கத்தினர்கள்தாம் இந்த ஏற்பாட்டுக்கு ஆதரவான கருத்தை எடுத்துச்சொல்லவேண்டும் என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

அடுத்தது, டெபாசிட்டுகள். டெபாசிட்டுகள் ராஜ்ய, மாவட்ட கிராமச் சங்கங்களின் மூலமாக இதுவரை 28 கோடி ரூபாய்க்குச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த டெபாசிட் தொகையையும் திரும்பக் கடன் தொகையாகக் கொடுக்க முடியாது. இதில் ஒரு குறிப்பிட்ட பகுதியை சர்க்காரிடத்தில் சேமிப்பாக வைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. மேலும் இந்த டெபாசிட் தொகையையும் கூட நாம் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திக்கொள்ளவும் வேண்டியிருக்கிறது. அதோடு இந்த டெபாசிட் தொகையை உயர்த்திக்கொள்வதில் மற்ற ஸ்தாபனங்களுடன் போட்டி போட வேண்டிய நிலைமையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். நமக்கு டெபாசிட் தொகை மூலம் அவ்வப்போது நிறையப் பணம் வந்துகொண்டிருக்கவேண்டுமென்றால் ஒரு சின்ன யோசனை—அது மிகவும் நல்ல யோசனை கூட—ஜில்லா பாங்குகளுடைய கிளைகள் நிறைய ஏற்பட்டாக வேண்டியிருக்கிறது. இதுபற்றி பாங்குகளுக்கும் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது சென்ட்ரல் பாங்கினுடைய கிளைகள் 45 ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் இன்னும் 100 கிளை பாங்குகள் ஏற்படுத்த வேண்டும் என்பது நம் திட்டம். ஆகவே, நான்காவது திட்ட இறுதிக்குள் 145 கிளை பாங்குகள் செயல்படும் ஒரு நிலை ஏற்படும். அவற்றின் மூலம் நமக்கு டெபாசிட்டுகள் நிறைய வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, இத்துறைக்கு ரிசர்வ் பாங்கு மூலம்தான் நிதி வசதி கிடைக்கும். ரிசர்வ் பாங்கில் இருந்து நிதி வசதி கிடைக்க வேண்டுமென்று சொன்னால் கிராம ரீதியில் இருக்கக் கூடிய சங்கங்கள், அதற்கு மேலே யூனியன் அளவில் இருக்கக் கூடிய சங்கங்கள் ஆகிய இந்தச் சங்கங்கள் எல்லாம் கடனைக் கொடுத்த தொகையை அங்கத்தினர்களிடம் இருந்து அவ்வப்போது பெற்று ஓவர் ட்யூஸ் இல்லாமல் கட்டி வந்தால் ரிசர்வ் பாங்கில் இருந்து பணம் வந்து கொண்டிருக்கும். இந்த முயற்சியால்தான் சில இடங்களில் தோல்வி அடைகிறோம். அதற்குக் காரணம், மழை இல்லை, விவசாயம் சரியாக இல்லை, பயிர் சாவியாகப் போய் விட்டது—இப்படிப்பட்ட காரணங்களால் விவசாயிகளால் திருப்பித்தர முடியாத நிலை இருக்கிறது. அதனால் ரிசர்வ் பாங்கில் இருந்து கிடைக்கும் பண உதவி தடைபடுகிறது.

ஜில்லா பாங்குகளைப் பொறுத்து ஓர் தொகை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்றாலும், அதை நம்பிச் செயல்பட்டுக்கொண்டு போக முடியாது. இன்னும் சில இடங்களில் நான் கேள்விப்படுகிறேன், நம்மைப் போல இருக்கக் கூடியவர்கள் கூட—நம்மைப் போல என்றால் நான் இங்குள்ளவர்கள் யாரையும் கருத்தில் கொண்டு சொல்லவில்லை—கொஞ்சம் படித்து விவரம் தெரிந்து கொண்டுள்ளவர்கள் கூட "இந்த வருஷம் கட்டாவிட்டால் பரவாயில்லை, அடுத்த வருஷம் கட்டிக் கொண்டுவிடலாம். நான் சென்னைக்குப் போவேன், அமைச்சரைப் பார்த்துப் சொல்லி





[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

விடுகிறேன் அல்லது ரிஜிஸ்திராரைப் பார்த்துச் சொல்லி வந்திருக்கிறேன்" என்பதாக சங்க உறுப்பினர்களுக்குத் தவறான உறுதியை அளிக்கிறார்கள். இந்த மாதிரியான போக்கைக் குறைத்துக்கொள்ளவேண்டும். வாங்கிய கடனை நாம் ஒழுங்காகத் திருப்பிக்கொடுத்தால்தான் மேலும், மேலும் கடன் வசதி பெற வாய்ப்பு இருக்கும். ஆகவே கனம் அங்கத்தினர்களும் இவ் விஷயத்தில் ஒத்துழைக்க வேண்டும்.

உண்மையிலேயே கடன் வசூலை ஒத்திவைக்கவேண்டிய நிலை சில இடங்களில் ஏற்படக் கூடும். இவ்வாண்டு ஹோசூர் தாலுக்காவை எடுத்துக்கொண்டால் மழை இல்லை. ஒத்தி வைக்கவேண்டிய நிலை தான் இருக்கிறது. இருந்தும் அதை நாமே செய்ய முடியாது. ரிசர்வ் பாங்க் வரைக்கும் போகவேண்டிய நிலை இருக்கிறது. மேலும் கடனை நீட்டிப்பது என்றால் குறைப்பது என்று பொருள் இல்லை. மூன்றாண்டில் கட்ட வேண்டும் என்பதை ஐந்தாண்டில் கட்டவேண்டும், அவ்வளவுதான். இதுபற்றியும் தவறாக மக்கள் நினைத்துக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது. இப்படிக் கொடுக்கக்கூடிய கடன்களுக்கு அந்தந்த ஜில்லாக்களிலே இருக்கக்கூடிய பாங்குகளே ஒரு டைம் கொடுக்கலாம். எத்தனை நாட்களுக்குள் பணத்தைத் திருப்பிக் கொடுக்கலாம் என்று மேலே இருந்துதான் முறை செய்யவேண்டுமென்பதல்ல. அங்கங்கே பாங்குகள், இருக்கக்கூடிய தொகையைப் பொறுத்து அவர்களே அதை நீடித்துக் கொடுக்கலாம், அவர்கள் அந்த முறையில் வழிவகை செய்யக்கூடிய விதிமுறைகள் கூட இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

கடன் வழங்குகின்ற முறைகளைக்கூட சிலவற்றில் நாம் மாற்றியமைத்து இருக்கிறோம். சொத்து மதிப்பிலே ஒரு பகுதி கடனாக வழங்கப்பட்டது. ஆனால், தேவையை அனுசரித்துக் கடன் வழங்கக்கூடிய முறையைக் கொண்டு வருகிறோம். ஒருவருக்கு அவருடைய சொத்து ஆதாரத்தின் மேலே 1,000 ரூபாய் வரை கடன் கொடுக்கலாம் என்றாலும்கூட அவர் செய்யும் மகசூலுக்குத் தகுந்த படி. 200 ரூபாய் அல்லது 300 ரூபாய் போதும் என்றால் அந்த அளவிற்கு மட்டும் நாம் கடனைக் கொடுக்கிறோம். சொத்து ஆதாரத்தைக் காண்பிக்கின்ற விவசாயிகள், குத்தகைதாரர்கள் எல்லோருக்கும் இந்தக் கடன் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த முறை, இந்த வழிமுறை, இந்த ஏற்பாடு ஏதோ பார்ப்பதற்குக் குறைவாகக் கொடுக்கிறோம் என்று தோன்றினாலும், 1,000 ரூபாய் கொடுத்தவர்களுக்கு இப்பொழுது ஏதோ 200 ரூபாய், 300 ரூபாய் தானே கொடுக்கிறோம் என்று தோன்றினாலும்கூட இந்த முறையினால் அவசியமான அளவுக்குக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன என்று நான் உறுதி கூறுகிறேன். அப்படி 1,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று வாங்கியவர்கள்கூட ஒரு காலத்தில் ஏதோ கடன் வழங்கினார்கள், செலவழிந்துவிட்டது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆகவே, அப்படியில்லாமல் அவசியத்திற்கு கொடுத்தார்கள், வேளாண்மைக்குத் தகுந்தபடி, பயிருக்கு தேவை காலத்தில் கொடுத்தார்கள் என்ற திருப்தி அவர்களுக்கு

[திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்]

ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட புது முறை, உதவி செய்யக்கூடிய முறை, வந்ததற்குப் பிறகு மக்களுக்கு நம்பிக்கை வந்துவிட்டது, இந்த முறையில் மாற்றம் வேண்டியதில்லை என்று மக்கள் நம்பிக்கைப்படக்கூடிய அளவுக்கு இருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், கடன் கொடுக்கின்ற முறையை இன்னொரு விதத்திலே மாற்றியமைத்திருக்கிறோம். முன்பு விவசாயிகள் ஒவ்வொரு மகசூலுக்கும் வேண்டிய கடன்களுக்கு விண்ணப்பம் போடவேண்டியிருந்தது. ஆனால், இப்பொழுது மாற்றியமைக்கப் பட்டிருக்கின்ற முறைப்படி, உச்ச வரம்பை நிர்ணயித்து அந்த வரம்பிற்குள் அந்தந்தக் கடன்களை வாங்கிக்கொள்ளலாம், திருப்பிச் செலுத்திக்கொள்ளலாம் என்ற முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த முறை தீவிரச் சாகுபடி ஜில்லாக்களுக்கு எல்லாம் கொண்டுவரப்பட்டு, அதை மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த முறையினாலே என்ன ஒரு தொல்லை குறைவாக இருக்கிறது என்றால் அடிக்கடி கடனுக்காக 'ஃபார்ம் ஃபில் அப்' செய்து கொடுத்துக்கொண்டு இருக்கவேண்டிய பிரச்னையெல்லாம் குறைந்து இப்பொழுது கடன் சௌகரியமாகக் கிடைக்க வழி இருக்கிறது.

கடன் வாங்கும் முறையில் செய்துள்ள மற்றொரு முக்கியமான சீர்திருத்தத்தையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு தனி நபர் கடன் வாங்கவேண்டிய அளவு மகசூலுக்குத் தகுந்த அளவில், விஸ்தீரணத்திற்கு தகுந்த அளவில் நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது. உதாரணமாக கரும்பு, வாழை, மஞ்சள் இவைகளுக்கெல்லாம் கடன் உதவி அதிகமாகத் தேவைப்படும். ஆனால், நெல்லுக்கு அதைவிடக் குறைவாகத் தேவைப்படும். புன்செய் தானியங்களுக்கு அவற்றைக் காட்டிலும் குறைவாகத்தான் கடன் தேவைப்படும். ஆகவே, நிலப்பரப்பையும், மகசூலையும் அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்பொழுது ஒரு நபருக்கு கடன் அதிகமாகத் தேவைப்படுமானால் ரூபாய் 10,000 வரையிலும் கொடுக்கலாம். அதிகபட்சம் 10,000 ரூபாய் வரையிலும் கொடுக்கலாம். இதனுடைய நோக்கம் என்னவென்றால் ஒரு நபர் தன்னுடைய விவசாயத்திற்கு முழுமைக்கும் தேவையான கடன் தொகையை வாங்குவதற்கு வசதிசெய்யவேண்டுமென்பதுதான். இதன் மூலம் தவறுகளைக் குறைப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், ஒரு நபர் 2,000 ரூபாய் தேவை என்ற அளவில் 2,000 ரூபாய் கடன் வாங்கிவிட்ட பிறகு, அவருக்கே 10,000 ரூபாய் அல்லது 15,000 ரூபாய் தேவையாக இருக்கிறது என்றால் அவர் மற்ற நபர்களின் பேரில் வாங்கிக் கொள்ளக்கூடிய நிலைமை இல்லாமலே 10,000 ரூபாய் வரையிலே அவருடைய பெயருக்கே வாங்கிக்கொள்ளக்கூடிய சாதகமான நிலைமை ஏற்படுகிறது. இதிலே தவறுகள் ஏற்படாமல் இருப்ப





[திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்]

தற்கும் இது வழிசெய்யும். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் அந்த வார்த்தையை இங்கே சொல்லக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் விளக்குவதற்காகக் கூறுகிறேன், தரம் என்று சொல்லக்கூடிய அதை, தரத்தைக் கீழே போகாமல் பார்த்துக்கொள்வதற்கும் இது ஒரு பாதுகாப்பு வேலியாக அமைந்திருக்கிறது. அந்த வகையில்தான் 10,000 ரூபாய் வரையிலும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். அதேபோல் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும்பொழுது, எவ்வளவு பாகம் ரொக்கமாக இருக்கவேண்டும், எவ்வளவு பாகம் உரமாக இருக்கவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் என்னிடத்திலே குறைகள் வந்து கொண்டிருக்கின்றன. விவசாய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள், விஸ்தரிப்பு அதிகாரிகள், ஜில்லா அதிகாரிகள் இவர்களையெல்லாம் இது சம்பந்தமாகக் கேட்க வேண்டிய நிலை இருக்கிறது. ஜில்லாவாரியாக நான் ஆங்காங்கே சென்று, விவசாய இலாகாவைச் சேர்ந்தவர்களையும், பாங்குகளுடைய முக்கியத் தலைவர்களையும், இன்னும் கூட்டுறவில் இருக்கக்கூடிய பெரிய அதிகாரிகளையும், அதற்குக் கீழே உள்ள அதிகாரிகளையும், கலெக்டர் இன்னும் ரெவின்யூ அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு எல்லோரையும் கலந்து பேசி இப்படிப்பட்ட நல்ல முறைகளைச் செய்வதின் மூலமாக உணவுப் பெருக்கத்திற்கு வழிவகை இருக்குமா என்பதையெல்லாம் பார்த்து வருகிறேன். ஜில்லாவாரியாக கூட்டம் போட்டு நான் இந்த வேலையைச் செய்து கொண்டு வருகிறேன். இது மிகவும் உபயோகமாக இருக்கிறது, இருக்கக்கூடிய சிக்கல்களை யெல்லாம் கேட்டு, அவற்றை நிவர்த்திப் பதற்கான வழிகளை எல்லாம் யோசித்து வருகிறோம். கலெக்டருடைய அபிப்பிராயத்தை நேரடியாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. பாங்குத் தலைவர்களுடைய கஷ்டங்களைச் சொல்கிறார்கள். அதையும் புரிந்துகொள்ள முடிகிறது. இது சம்பந்தமாக ரிஜிஸ்திரார் என்ன சொல்கிறார், மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்ள முடிகிறது. இதைப்பற்றி மக்கள் திருப்தியடைந்து கிராமங்களுக்கு உற்சாகத்துடன் சென்று கொண்டிருப்பதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். இந்த முறை நன்றாக நீடிக்குமென்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

இதிலே பயிர் சொசைடிகள் ஏற்படுத்துவதில் சிறிய சிறிய சங்கங்களாக இருப்பவைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து அமைக்கவேண்டுமென்பதும் ஒன்றாகும். அந்தமாதிரி வரும் பொழுது ஏன் அதைச் செய்கிறோம் என்றால் அது சிரியது, நல்லது என்பதற்காகத்தான். இப்படிச் சொல்லும்பொழுது ஒரு கேள்வியும் கூடவே எழலாம். ஏன் இப்படிச் செய்கிறீர்கள், இரண்டு, மூன்று சொசைடிகளை ஒன்றாகச் சேர்த்தால் தொல்லை ஏற்பட்டால் என்ன செய்வது? அப்படி ஒன்றாகச் சேர்ந்தால் கிராமங்களிலே வாங்கிக்கொண்டிருக்கிறவர்கள் எல்லாம் தொலைவாக வந்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்படுமே, அவரவர்கள் அங்கங்கேயே வாங்கிக்

[திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்]

கொள்வது சௌகரியமல்லவா என்ற கேள்வியும் எழலாம். வயபிள் சொசைடிஸ் என்று சொன்னுல் சிலர் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிருர்கள்.

நாங்கள் கணக்குப் போட்டிருப்பதெல்லாம் லேவாதேவி 2 லட்சம் ரூபாய் இருக்குமானுல் அதை அப்படியே விட்டு விடலாம்; அதற்குக் கீழே பத்தாயிரம், பதினைந்தாயிரம் இருக்கும் சங்கங்களை எல்லாம் ஒனருக இணைக்கவேண்டுமென்று முடிவு செய்திருக்கிருேம். இணைப்பில் ஒரு முக்கிய விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். ஒரு சிறு சங்கமாக இருப்பது அதன் தலைவர் வீட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும். அந்தச் சங்கத்திற்கு வருகிறவர்கள் ஜாதி அடிப்படையில் அவர்கள் வீட்டிற்குள் போக முடியுமா என்று நினைக்கக் கூடும். ஆகவே, இப்படி சிறிய சங்கங்களையெல்லாம் 'வயபிள்' ஆக ஒன்ருகச் சேர்க்கும்போது அதற்கென்று ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து, அதற்காக ஒரு கிளார்க் நியமித்து இயங்க வசதியாக இருக்கும். இதிலே இரண்டு விதமான அபிப்பிராயம் இருக்கிறது. ஒரு விதம், அப்படியே இருக்கவேண்டுமென்று சொல்வது, இன்னென்று சிறிய சங்கங்களையெல்லாம் ஒன்ருகச் சேர்க்க வேண்டுமென்பது. பத்தாயிரம் ரூபாய் லேவாதேவி பண்ணுகிற சங்கம் ஆண்டு முடிவிற்குள் 2 லட்சம் ரூபாய் அளவை எட்டிப் பிடிக்க முடியும் என்ருல் அதை அப்படியே விட்டு விடலாம். பத்தாயிரம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாய் அளவுக்குச் சுலபமாக வந்து விடுகிற நிலை இருக்கிறது. ஆனல் 40,000 ரூபாய் இருக்கிற இடத்தில் 2 லட்சம் ஆகும் நிலை இல்லாமல் பல காலமாக அப்படியே இருக்கும்படியான நிலை இருக்கிறது. ஆகவே, அந்த மாதிரிச் சங்கங்களை எல்லாம் ஒன்ருகச் சேர்த்து 'வயபிள்' ஆக அமைக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு மூன்று நான்கு சங்கங்கள் ஒன்ருகச் சேரும்போது இருக்கின்ற மெம்பர்கள் எல்லாம் உள்ளே வந்து சேரவும் விதிகள் இருக்கின்றன. அதை விளக்கமாக, ஆங்கிலத்தில் சொன்னுல் 'ஃபோர்ஸ்' செய்து ஒன்ருகச் சேர்த்து விடக்கூடிய வேலையைச் செய்ய வேண்டும். இவ்வாறு ஒன்ருகச் சேர்ப்பதால் 10,500-க்கு மேலாக இருக்கக்கூடிய சங்கங்களில் 3,000 சங்கங்கள்தான் குறையும். நீங்கள் எல்லாம் இதற்கு ஒத்துழைப்பு தந்து பொதுவாக நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்ற பெரும்போக்குடன் அந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் மூலமாகக் கனம் மெம்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வருவது கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள். அதிலே கன்ஸ்யூமர்ஸ்—கன்ஸ்யூமர்ஸ் என்ருல் தமிழிலே நுகர்பவர்கள் என்று சொல்லலாமா? நுகர்தல் என்ருல் மோந்து பார்ப்பது என்ற அர்த்தம் வருமா?

**கனம் சபாநாயகர்:** நுகர்தல் என்ருல் சாதாரணமாக அப்படித் தான் கருதப்பட்டு வந்தது. ஆனல், இப்போது 'கன்ஸ்யூம்' பண்ணுவது, அதாவது சாப்பிடுவது என்பதைக் குறிக்க உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.



**திரு. சா. கணேசன்:** 'கன்ஸ்யூமர்' என்பதற்கு நுகர்வோர் என்பது சரியான தமிழ்ச் சொல்.

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்:** நுகர்வோர் என்று சொன்னுல் எங்கே கனம் அங்கத்தினர் திரு. சா. கணேசன் அவர்கள் 'மோந்து பார்ப்பதா?' என்று கேள்வி கேட்டு விடுவாரோ என்றுதான் முதலிலேயே அதைப் பற்றிக் கேட்டுக் கொண்டேன்.

இது நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்ருல் அதற்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். இதிலே இருக்கின்ற சிக்கல்களை எல்லாம் ஓரளவு தளர்த்துவதற்கு அரசாங்கம் முனைய வேண்டுமென்று கூறப் பிரியப்படுகிறேன். இதிலே கனம் அங்கத்தினர்கள் பேசி முடிந்த தற்குப் பின்னுல் ஏதாவது சொல்லவேண்டுமென்ருல் சொல்லு கிறேன்.

தற்போது கூட்டுறவு மூலமாக ப்ரொக்யூர்மெண்ட் செய்யும் விஷயத்தில் கூட 1965-ம் ஆண்டு முடிவிற்குள்ளாக 1.9 லட்சம் டன் ப்ரொக்யூர் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் 3 லட்சம் டன் ப்ரொக்யூர் செய்யவேண்டுமென்று நாங்கள் முடிவு எடுத்திருக் கிருேம். நிச்சயமாக அந்த இலக்கை எட்டிப் பிடித்து விடுவோம் என்று கருதுகிறேன்.

திருவாரூரில் புதிதாக ஒரு மில் அமைக்கப்பட்டிருக்கிறது. திருவாரூர் மில் அமைக்கப்பட்டதிலிருந்து நல்ல அவுட் டர்ன் கிடைக்கிறது. எழுபது, எழுபத்திரண்டு சதவிகிதம் அவுட் டர்ன் கிடைக்கிறது. இது கனம் உணவு அமைச்சர் அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரும். இவ்வாறு அதிகப்படியாக அவுட் டர்ன் கிடைக்கும்போது இதைப் போல் இன்னும் தொடர்ந்து நாலைந்து மில்களை ஏற்படுத்தினுல் கூட நன்ருக இருக்கும்.

அடுத்து, இவற்றிலே சில குறைபாடுகளும் இருக்கின்றன. இதைப் பற்றி பதில் சொல்லுவதைக் கடைசியாக வைத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். நான் இதுவரை சொன்னதை வைத்து கனம் அங்கத்தினர்கள் பேசுவதற்குச் சௌகரியமாக இருக்கும். நடைமுறையிலே கூட்டுறவிலே ஒரு சில குறை பாடுகளைச் சொல்லக்கூடும். முடிந்த அளவிலே, எனக்குத் தெரிந்த அளவிலே கடைசி நேரத்திலே அவற்றுக்கு விளக்கம் தருகிறேன். 300 கோடி ரூபாய் புழக்கத்தில் இருக்கிற இந்தக் கூட்டுறவு இயக்கத்தில் தவறுதல் நடக்கிறது என்ருல், குறைவாகத்தான் இருக்கும். விரலை விட்டு எண்ணிவிடக்கூடிய அளவிலேதான் இருக்குமே தவிர அதிகமாக இருக்க முடியாது என்று கூறி, முதலிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்து, கனம் அங்கத்தினர்களுடைய யோசனைகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தகுதி மிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மதிப்புக்குரிய கூட்டுறவு அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்டிருக்கிற மானியத்தின் பேரில் எங்களால் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [12th March 1966

(திரு. மா. தண்டாயுதபாணி தலைமை)

300 கோடி ரூபாய் வரவு-செலவு நடைபெறுகின்ற கூட்டுறவு
இயக்கத்திலே ஒரு சில குறைபாடுகள் இருந்தாலும் அதைப்
பொருட்படுத்தக் கூடாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்
டார்கள். கலப் பாலில் துளி விஷம் கலந்தாலும் பால் கெட்டு
விடும் என்பதைப் போல், கூட்டுறவு இயக்கத்திலே ஏதாவது சில
தவறுகள் நேர்ந்தாலும் கூட அதைச் சரியான முறையில் திருத்தா
விட்டால் புண்ணாகிப் புரையோடிப் போகின்ற நிலைமை ஏற்படு
கிறபோது ஆப்பரேஷன் செய்யவேண்டிய அவசியம் வந்து விடு
கிறது என்றுதான் நான் கருதுகிறேன். நான் குறைபாடுகளைச்
சொல்லுகிறேன் என்றால், அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டு
மென்ற எண்ணத்திலேதான் கூறுகிறேன் என்பதை முதலிலே
தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு நடைபெறுகிற இந்த விவாதம் கூட்டுறவின் பேரில்
நடைபெறுகிறது என்ற காரணத்தினால் இங்குள்ள அங்கத்தினர்
10-00 a.m. கள் என்னோடு சற்று கூட்டுறவு கொள்ளவேண்டும். அமைச்சர்
அவர்களும் என்னோடு கூட்டுறவு கொள்ளவேண்டும் என்றும்,
குறிப்பாகவும் சிறப்பாகவும் கனம் சபாநாயகர் அவர்களும்
என்னோடு ஒத்துழைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளு
கிறேன். கூட்டுறவு இயக்கத்தில் இருக்கிற ஒரு சில குறை
பாடுகளைப் பற்றி நான் குறிப்பிட்டுப் பேசுகிற நேரத்தில் ஏதோ
கூட்டுறவு இயக்கம் எங்களுக்கு வேண்டாதது போலவும், கூட்டுறவு
இயக்கமே கூடாது என்று நாங்கள் சொல்பவர்கள் போலவும் சிலர்
கருதக்கூடும். நிச்சயமாக அப்படியில்லை. கூட்டுறவு நிச்சயம்
தேவை ; கூட்டுறவுக் கொள்கையை நாங்கள் மிக மிக ஆதரிக்
கிறோம் என்ற உறுதியை முதலில் உங்களுக்கு அளிக்க விரும்பு
கிறேன். ஆனால் கூட்டுறவு இந்த நாட்டின் உயர்வுக்காக இருக்க
வேண்டுமே தவிர ஒவ்வொருவருடைய தனிப்பட்ட சொந்த
குடும்ப உயர்வுக்காக அதைப் பயன்படுத்தக் கூடாது என்பது
தான் எங்கள் நோக்கமே தவிர கூட்டுறவுக் கொள்கையே
தேவையில்லை என்று கூறுபவர்கள் நாங்கள் அல்ல. அப்படிச்
சொல்கிற நேரத்தில் என்னிடம் வந்துள்ள சில புகார்களை வைத்து
இங்கு நான் சொல்ல முற்படுகையில் அதை நான் நிரூபிக்க
முடியுமா என்ற வாதம் வந்தால் அந்த வாதம் பிடிவாதத்
தைத்தான் காட்டுவதாகுமே தவிர நிவாரணமாக அது இருக்க
முடியாது.

**கனம் திரு. பூ. கக்கன் :** உண்மையைச் சொன்னால், எங்கே பார்த்தீர்கள் என்று கேட்கத்தான் கேட்பார்கள்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** மெம்பர் பேசும்போது நிச்சயமாக நடந்ததைத்தான் சொல்வார்கள், உண்மையைத்தான் சொல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**திரு. கே. ஏ. மதியழகன் :** உள்துறை அமைச்சர் அவர்களைப் போல் இல்லாமல் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இப்படிச் சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



12th March 1966]

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நான் அப்படிக் குறிப்பிடுகிறபோது நிரூபிக்கத் தயாரா என்று கேட்டால் இந்த அவையின் முன்னால் நான் குறிப்பிட விரும்புகிறேன், ஒரு விசாரணைக் குழுவை ஏற்படுத்தி அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்தால் தகுந்த ஆதாரங்களோடு தங்கள் முன் அவற்றை வைக்க விரும்புகிறேன் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளாக நடைபெற்றிருக்கிற ஊழல்களைப் பற்றி அந்த சங்கங்களில் உள்ள உறுப்பினர்களும், பொது மக்களும் பல மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அத்தனை பேர்களுக்கும் அனுப்பியும் குறிப்பாக கடையநல்லூரில் 164-ம் நம்பர் சொசைட்டிக்கு முன்னால் பல தோழர்கள் இந்த ஊழல்களைப் போக்குவதற்காக உண்ணாவிரதத்தை மேற்கொண்டு அவர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்களே தவிர அதற்கு ஒரு நிவர்த்தி காணவில்லை என்பதற்காகத்தான் இந்தப் பிடிகையைப் போட்டேனே தவிர நிரூபிக்க முடியாது என்பதற்காக அல்ல. முகவை மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற—மதிப்பிற்குரிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்களின் கீழ் இயங்கி வரக்கூடிய கூட்டுறவு ஆலைபற்றியும், முகவை மாவட்டத்தில் மதிப்பிற்குரிய ராமசாமி நாயுடு அவர்களின் தலைமையில் இயங்கி வரும் மத்திய கூட்டுறவு வங்கியைப் பற்றியும், சேலத்தில் மதிப்பிற்குரிய கனம் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் தலைமையில் இயங்கி வரக்கூடிய சேலம் கூட்டுறவு வங்கியைப் பற்றியும், வட ஆற்காடு மாவட்டத்தில் மதிப்பிற்குரிய முன்னாள் சபாநாயகர் திரு. பக்தவத்சலு நாயுடு அவர்கள் தலைமையில் இயங்கக்கூடிய மத்திய வங்கியைப் பற்றியும், மற்றும் சென்ட்ரல் லாண்ட் மார்ட்கேஜ் பாங்க் பற்றியும், திரு. ராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிற மத்திய வங்கியைப் பற்றியும்—இன்னும் பல பல இடங்களில் பல பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன, சபை விரும்பினால் அவற்றை தங்கள் மூலம் கொடுக்க நான் விரும்புகிறேன்—பொதுவாக நெசவாளர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு நம் அரசாங்கம் வீவர்ஸ் கூட்டுறவு சொசைட்டிகளை ஆங்காங்கு ஏற்படுத்தி மாஸ்டர் வீவர்ஸ்க்கு அவர்கள் பலியாகாமல் நல்லமுறையில் அவர்கள் வாழ வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆங்காங்கு கூட்டுறவு முறையில் பல இயக்கங்களை ஆரம்பித்தோம். அதிலும் சிறப்பாக மிகச் சிறந்த முறையில் பணியாற்றுவது என்று எல்லோராலும் பாராட்டப்பட்டு வந்தது, சேலம் அம்மாப்பேட்டை கூட்டுறவு கைத்தறி விற்பனை விநியோக சங்கம். அந்த சங்கத்தில் நடைபெற்றிருக்கிற ஒரு சில ஊழல்களை இந்த சபையில் எடுத்து வைப்பது . . .

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கூட்டுறவு சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றி பேசக் கூடாது என்பதல்ல, பேசலாம். ஆனால், கனம் அங்கத்தினர் இப்போது குறிப்பிட்ட விஷயத்தை இன்டஸ்ட்ரீஸ் லெவலில் எனது சக அமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் பார்த்து வருவதால் நானே இன்டஸ்ட்ரீஸ் டிமாண்ட்பற்றிப் பேசும்போது பேசினால் அவர்கள்

அதற்கு பதில் சொல்லக் கூடும். இந்த நேரத்தில் பேசினாலும் பேசலாம். அவர்களுக்கு நோட்ஸ் எழுதி வைத்து, அது சம்பந்தப்பட்ட விவரங்களை அவர்கள் கொடுப்பார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இன்றைக்கும் சொல்வதைச் சொல்கிறேன். நாளைக்கு ஏதாவது விட்டுப் போயிருந்தால் அப்பொழுது அதையும் சொல்கிறேன். இரண்டுக்கும் சேர்ந்து பதில் சொல்ல அவர்களுக்கு வசதியிருக்கும் என்ற காரணத்தினால். அந்தச் சங்கத்திற்கு மதிப்பிற்குரிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மாரியப்பன் என்பவர் தலைவராக இருந்து வருகிறார். அந்தச் சங்கம் நல்லமுறையிலே நடந்து வருகிறது என்று அத்தனை பேர்களாலும் பாராட்டப்பட்டு வந்தாலும்கூட அதில் நடைபெற்றிருக்கிற ஊழல்களைச் சுட்டிக்காட்ட முன் வந்தவர்கள் எல்லாம் சுட்டுத் தள்ளப்படவில்லையே தவிர அவர்கள் கட்டி இழுத்து வரப்பட்டு அங்கு அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு மற்றவர்கள் உடந்தையாக இருந்தார்களா என்று சொல்வதை விட எப்படி இருந்திருக்கிறார்கள் என்பதை எனக்கு கிடைத்துள்ள ஆதாரங்களை வைத்துக் கொண்டு விளக்க விரும்புகிறேன். அங்கு இயங்கி வருகிற சங்கத்தின் வரவு செலவுத் திட்டம், எவ்வளவு வாங்கப்பட்டது, எப்படி வாங்கப்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் சொல்வதற்கு எனக்கு நேரம் இல்லாததால் எந்தெந்த முறையில் துணிகள் வாங்கப்பட்டது, சாயங்கள் எந்த எந்த முறையில் வாங்கப்பட்டது, எப்படி விற்பனை நடக்கிறது என்பனபோன்ற சில விவரங்களை இங்கு வைக்க விரும்புகிறேன். இது சம்பந்தமாக சங்க அங்கத்தினர் தோழர் சதாசிவம் என்பவர் மதிப்பிற்குரிய அமைச்சர்கள் அத்தனை பேர்களுக்கும் புகார் அனுப்பியும் பயன் இல்லை என்பதினால் லஞ்சத்தை ஒழிப்பதற்கும், ஊழல்களை ஒழிப்பதற்கும் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற நிர்வாகத்திற்கு, ஆன்டி-கரப்ஷன்-விஜிலன்ஸ் கமிஷன் டைரக்டருக்கும், எப்படியாவது லஞ்சத்தை ஒழித்தே தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிற திரு. நந்தா அவர்களுக்கும் அனுப்பியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. போகிற அதிகாரிகளும் அங்கு சென்றவுடனே கணக்குகளைப் பார்த்துவிட்டு அது சரி என்று ஒத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். எப்படி அவர்களை ஏமாற்றுகிறார்கள் என்றால் எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். உதாரணமாக அங்கு ஜவுளி ஸ்டாக் இல்லை. ஆடிட் அதிகாரிகள், தணிக்கை அதிகாரிகள் செல்லும்போது போலி இன்வாயிஸ்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இன்வாயிஸ் என்ற பெயருக்கு முன் 'அவுட்ரைட் இன்வாயிஸ்' என்று போட்டுவிடுகிறார்கள். இந்த 'அவுட்ரைட்' என்பது அச்சடிக்கப்படுவதில்லை. கையால் எழுதியது அது. அந்த இன்வாயிஸ் எப்படி தயாரிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 30-6-1961-ல் அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி அன்ட் விற்பனை சொசைட்டி லிமிடெட் எஸ். 532, அம்மாப்பேட்டை, சேலம்—நம்பர் ஈ. 6453 இன்வாயிஸ்படி 'மானேஜர்' கோவாப்டெக்ஸ் ஸாரி ம்யூசியம், மதராஸ்' என்று பர்சனல் ஆர்டராக ஒன்று அனுப்பப்பட்டிருக்





கிறது. அனுப்பப்பட்டதல்ல பிரச்னை. அப்படி இந்தச் சங்கத்திலிருந்து அனுப்பப்படவேயில்லை. வேண்டுமென்றால் அதிகாரிகள் சென்று பார்க்கட்டும். இதை சஸ்பென்ஸ் அக்கவுண்டில் எழுதி வைத்து விடுகிறார்கள். பாக்கிங் செய்ததாகவும் குறிப்பிட்டு அந்தச் செலவையும் எழுதிவிடுகிறார்கள். ஆனால், இங்கு அப்படி ஒன்றும் வந்து சேரவில்லை. மூன்று மாதங்கள் கழிந்து மீண்டும் அது அம்மாப்பேட்டை சொசைட்டிக்கு திரும்பி வந்து விடுகிறது, ஜவுளி வாபஸ் செய்த வகையில் என்று. அதற்கும் பாக்கிங் சார்ஜ் போடப்படுகிறது. அதிகாரிகள் இதையெல்லாம் பார்த்தார்களா? கணக்கு பார்த்துவிட்டு டிக் அடித்து விட்டுச் சென்று விடுகிறார்கள். என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள்? 30-6-60-ல் ஒரு போலி இன்வாயிஸ் தயாரித்து 'மானேஜர்' கோவாப்பரேடிவ் சேல்ஸ் எம்போரியம், எஸ்பிளனேட், மதராஸ்'-க்கு ஈ. 4889 படி ஏறத்தாழ 1,000 ரூபாய்க்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது இங்கு வந்து சேரவில்லை. ஆனால் அனுப்பப்பட்டதாக கணக்கு எழுதப்பட்டிருக்கிறது. 31-8-60-ல் அதே சரக்கு, ஜவுளி வாபஸ் செய்த வகையில் லிஸ்ட்படி உருப்படி 62-க்கு ரூ. 968-29-ம், பாக்கிங் கட்டணம் 4.84-ம் கணக்கு எழுதப்பட்டிருக்கிறது. ஆடிட் செய்யும்போது சரக்கு எங்கே என்றால் எக்சிபிஷனுக்குப் போயிருக்கிறது, வேறு இடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று காண்பித்து அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி விடுகிறார்கள். இதுபோல பல பல இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் விரும்பினால் கொடுக்கிறேன், அல்லது ஒரு குழு ஏற்படுத்தினால் அவற்றை நிச்சயமாக நிரூபிக்க நான் தயாராயிருக்கிறேன். அதைப் போலவே இன்னும் நடைபெற்றிருக்கிறது. நான் இதைக் குறிப்பிடும்போது சம்பந்தப்பட்டவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த சங்கத்தில் திடீரென்று ஒரு வருடக் கணக்கு முடிவில் வரவு செலவு கணக்கு எடுக்கும்போது அங்கு வேலை செய்கின்றவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. சரக்கு குறைவாக இருக்கிறதே, அதற்கு என்ன காரணம் என்று கேட்டிருக்கிறார்கள். இதற்கு அங்கே பணியாற்றுகின்றவர்கள் எக்ஸ்பிளனேஷன் என்ற முறையில் பதில் கொடுத்திருக்கிறார்கள். அதாவது அங்குள்ள தொழிலாளர்களுக்கு கொடுத்த நோட்டீசில் ரூ. 2,510-89 என்ற தொகை கோடவுனில் குறைவாக இருக்கிறதே இதற்கு காரணம் என்ன என்று கேட்டு இதற்கு தகுந்த பதில் சொல்லாவிட்டால் வேலையிலிருந்து நீக்கப்படுவீர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பெற்றுக்கொண்ட தொழிலாளர்கள், அந்த நிர்வாகத்திற்கு அனுப்பிய பதிலில் குறிப்பிட்டுள்ளதை தங்கள் மூலமாக இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். 'ஜவுளி அனுமத்தாக கொடுக்கப்பட்டிருக்கும் விவரம் வீவர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியில் சஸ்பென்ட் அக்கௌண்டில் கொடுக்கக் கூடாது என்று விதி இருப்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் இங்கு மட்டும் அனுமத்து என்று எதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை, இவர்கள் அனுமத்து பேர்கள் என்று எண்ணி அவர்கள் கொடுத்திருக்கிறார்களா, என்னவென்று எனக்குத் தெரியவில்லை. 1957-58-ம் ஆண்டில் அதாவது 1958-வது ஆண்டு ஜுலை மாத

ஸ்டாகிஸ்ட் ஆரம்பத்தில் ஸ்டாக் எற்றுக்கொள்ளும்போது முன் ஒப்படைக்கப்பட்டிருக்கும் களால் அனுமதித்து கொடுக்கப்பட்டு அயிட்டங்கள்.

1. திரு ஆர். குழந்தைவேலு அவர்கள், சென்னை ரூ. 43.52,

2. திரு. பி. எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள், சென்னை ரூ. 41. 28.

3. திரு. பி. சபாநாயகர் அவர்கள், ஐ.ஏ.எஸ்., சென்னை ரூ. 43.10.

4. திரு. பி. நரசிம்மலு, ஆடிட்டர், சேலம் ரூ. 30.74.

5. திரு. என். வி. நடேசன், லேபர் இன்ஸ்பெக்டர், சேலம் ரூ. 54.53.

6. திரு. ஆர். குமாரகுருபரன், எஸ்.ஐ., சேலம் ரூ. 19.04.

7. திரு. டி. பி. சண்முகசுந்தரம், சென்னை, ரூ. 24.40.

ஆக மொத்தம் ரூ. 256.61. இது தவிர 1958 ஜூலை முதல் டிசம்பர் முடிய கொடுக்கப்பட்டிருக்கின்ற விபரம்.

திரு. டி. சிவஞ்ஞானம் பிள்ளை அவர்கள், எம்.எல்.ஏ., நாமக்கல் ரூ. 47.14.

சேலம் முனிசிபாலிட்டி டென்டர் ரூ. 2.63.

திரு. பி. சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., சென்னை ரூ. 66.48.

திரு. டி. எஸ். பட்டாபிராமன், எம்.பி., ரூ, 14,45,

திரு. டப்ளியூ. விவிங்க்டன், எம்.பி, (மதராஸ் போலீஸ்), சேலம் ரூ. 17.00.

திரு. டி. வெங்கடாச்சாரி, வக்கீல், சென்னை ரூ. 3.75

திரு. ஆர். குமரகுருபரன், எஸ்.ஐ., சேலம் ரூ, 4,46,

திரு. ஆர். கோதண்டராமன், சம்பால் ஹைடல் ஓர்க்ஸ் ரூ. 52.56.

ஆக ரூபாய் 825-11.

மிக இவற்றை நான் குறிப்பிடுகின்ற நேரத்தில் இவையெல்லாம் சாதாரணமாக தொகைதானே என்று யாரும் எண்ண வேண்டாம். ஆனால் இந்தத் தொகையை ரைட் ஆஃப் பண்ண லாம் என்று ஒரு விதி இருக்கிறது. ஜெனரல்பாடி கூட்டத்தைக் கூட்டி, இப்படிப்பட்ட அனுமதித்து பேர்வழி கணக்கில் இத்தனை ரூபாய் வசூலாகாமல் இருக்கிறது, இதை ரைட் ஆஃப் செய்து விடலாம் என்று சொல்லி ஜெனரல் பாடி கூட்டத்தில் ரைட் ஆஃப் பண்ணுவதற்கு வழியிருக்கிறது. ஆகவே இத்தகைய முறைகள் நியாயம்தானா என்பதைக் கேட்பதற்குத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேனே தவிர இந்தத் தொகையைப் பற்றி கவலை கொள்ளவேண்டும் என்றல்ல.





இதை விட அந்த சங்கத்தில் இப்படி கொடுக்கப்பட்ட கணக்குகள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றையெல்லாம் இதை விசாரிப்பதற்கு ஒரு கமிட்டி நியமிப்பதாக இருந்தால், அதற்கு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்றால் அனுமதித்து கணக்கு என்று வைக்கப்பட்டிருக்கின்ற இரண்டு புத்தகங்களையே எடுத்து வைக்க நான் தயாராக இருக்கிறேன். அல்லது இவையெல்லாம் தவறானவை என்று நிரூபித்தால், அதற்காக எந்தத் தண்டனை கொடுத்தாலும், அதை நான் எற்றுக் கொள்ள தயாராக இருக்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டும். மேலும் இதே சொசைட்டியில், 5-8-1960-ல் அனுமதித்து என்று கொடுக்கப்பட்டிருப்பது வெங்கட்டராமன் சப்-இன்ஸ்பெக் டர், வேட்டி ரூ. 4.76 ரேட்டில் 7 உருப்படிகளுக்கு 33.32 ரூபாய் மேற்படி துண்டு வகையில் 15 ரூபாய் 96. 25-7-1961-ல் எம். கோவிந்தசாமி, பியூன், மாணிக்கவேலு நாயக்கர். துண்டு ரூ. 2.28 சலவை வேட்டி ரூ. 2.54. இன்னும் வேட்டி ரூ. 8.19 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 27-10-1961-ல் சாமி நாயுடு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர், துண்டு ரூ. 4.98, வேட்டி ரூ. 5.94, மேற்படி வேட்டி ரூ. 11.88. 10-11-1961-ல் கே. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு, கோவாப்ரேட்டிவ், சப் ரெஜிஸ்டிரார், சேலம், வேட்டி ரூ. 5.08, கர்சீப் ரூ. 2.60, 12-4-1963-ல் பி. ராதாகிருஷ்ணன், எம். மகாலிங்கம், பி. எ. பக்தவத்சலம், மந்திரி-என்பதில் குண்டஞ்சி வேட்டி ரூ. 16.08 கர்சீப் ரூ. 2.54, 29-5-1963-ல் பி. சபாநாயகம், ஐ.ஏ.எஸ். சென்னை சலவை கர்சீப் ரூபாய் 2,68, 12-7-1963 திரு. ஆர். எஸ். அய்யர் பி.ஏ. ரயில்வே உதவி மந்திரி. வேட்டி ரூபாய் 11.08. 12-7-1963, கே. கே. கோபாலகிருஷ்ணன், முன்னாள் பி.ஏ. ரயில்வே உதவி மந்திரி, வேட்டி ரூபாய் 17.28, மேற்படி ரூ. 5.72, 16-8-1963-ல் ஆர். சங்கரன். பி.ஏ., பி.எல்., (ராமமூர்த்தி அய்யர்), சேலம் வேட்டி ரூ. 28.32, 29-10-1963-ல் தீர்த்தகிரி கவுண்டர். அரூர், பீஸ் ரூபாய் 32.64. நண்பர்களே, இவையெல்லாம் எதைக் காட்டுகிறது? (சிரிப்பு) மன்னிக்கவேண்டும், தலைவர் அவர்களே, நான் இதுவரை குறிப்பிட்ட பெயர்களோடு நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுடைய பெயரும் இருப்பதைப் பார்த்து உண்மையிலேயே நான் மிகவும் வேதனை அடைந்தேன். அவர்களுக்கு இந்த சொசைட்டியிலிருந்து கடன் வாங்கவேண்டிய அவசியமே வந்திருக்காது என்பதை நான் நன்றாக உணருகிறேன். ஆனால் அவர்கள் பெயரில் பற்று எழுதியிருக்கிறார்கள். ஏதோ மந்திரி அவர்களின் பெயரை அங்கத்தினர்களுக்கு காட்டினால் பயப்பட்டு விடுவார்கள் என்று எண்ணி இவ்வாறு எழுதியிருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நமது அமைச்சர் அவர்கள் பெயரில் எழுதியிருப்பது—9-7-1963-ல் நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் ஸ்பெஷல் 30-குண்டஞ்சி சரிகை பேட் வேட்டி, ரூபாய் 21.00 என்று எழுதப் பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது எதற்காக எழுதப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்களுக்கு கொடுத்திருக்கிறோம், மற்ற அதிகாரிகளுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று அங்குள்ள அங்கத்தினர்களை மிரட்டி, ரைட் ஆஃப் செய்து விடலாம் என்ற நோக்கத்துடன் தான் இப்படி

எழுதப்படியிருக்கிறதே தவிர உண்மையிலேயே இவர்களெல்லாம் கடன் வாங்கக்கூடிய நிலையிலுள்ளவர்களா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று தங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன் . . .

**திரு. கே. எஸ். அர்த்தநாரீசுவர கவுண்டர் :** கனம் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு பட்டியலை படித்தார்கள். அவர்களுக்கு இந்தப் பட்டியல் எப்படிக் கிடைத்தது என்பதை விளக்கினால் நன்றாக இருக்கும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** எப்படி இவர்களுக்கு பட்டியல் கிடைத்தது என்பதில்தான் ஆச்சரியப்படுகிறார்களே தவிர இப்படி நடக்கவில்லை, அல்லது நடைபெற்றிருக்காது என்று அவர்கள் மறுக்கவில்லை. ஆகவே, இப்படி நடந்திருக்கிறது உண்மை என்பது புலப்படுகிறது.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** தலைவர் அவர்களே, என்னுடைய பெயர் வந்ததினால் நான் குறுக்கிட்டுப் பேசவேண்டியவனாய் இருக்கிறேன். நான் எப்போதும் கதர் கட்டிக்கொள்கிறவன், இப்போதும் கதர்தான் கட்டிக்கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அப்படியானால் அமைச்சர் அவர்களுடைய பெயரை இதில் தவறாக எழுதியிருக்கலாம். அமைச்சர் அவர்களுடைய பெயரில் வேறு யாருக்கு கொடுத்திருக்கிறார்கள் என்கின்ற விவரம் எனக்குத் தெரியாது. எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவலின் படி 9-7-1963-ம் தேதி எழுதப்பட்டிருக்கின்ற கணக்கு நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார், ஸ்பெஷல் 30-குண்டஞ்சி, ஜரிகை பேட் வேட்டி ரூபாய் 21 என்றிருக்கிறது. இவைகளை கொடுக்க முடியுமா என்று கேட்டால், இவற்றைப்பற்றி விசாரிப்பதற்காக அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை ஏற்படுத்தினால், அதில் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி இன்னும் திடுக்கிடும் விஷயங்களை எல்லாம் நான் நிரூபிக்க தயாராய் இருக்கிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் அதற்கு தயாராக இருக்கிறார்களா என்பதை கேட்கவிரும்புகிறேன்.

இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அதிகாரிகள் போகிறார்கள், போய் ஏதோ டிக் அடித்து விட்டு வருகிறார்கள். இதில் என்ன ஊழல் இருக்கிறது என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியாதா? அந்த அளவுக்கு நமது அதிகாரிகளுக்கு திறமையில்லை என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் அவர்களுடைய திறமையை காட்ட முடியாமல் தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். இது போன்று பல சங்கங்களைத் சொல்ல முடியும். தமிழ்நாடு கைத்தறி சங்கத்தைப்பற்றியெல்லாம் பேசுவதற்கு பல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சொல்வதற்கு நேரமில்லாததால் அடுத்த முறை நிச்சயமாக புள்ளி





விரத்தோடு சொல்கிறேன் என்ற உறுதியைக் கூறிக்கொண்டு, கடையநல்லூர் வீவர்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டி பற்றி சில வார்த்தைகள் மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த கடையநல்லூர் வீவர்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டியில் 13 சங்கங்கள் இருக்கின்றன. இந்த சங்கத்திலுள்ளவர்கள் அமைச்சர்களைக் கண்டு தங்கள் குறைகளை சொன்னபோது ஏதேதோ என்று சொல்லிவிட்டார்கள். அங்கே மொத்தம் இருக்கின்ற தறிகள் 1,500, ஆனால் அரசாங்கத்திலிருந்து கடன் பெறுவதற்காக கணக்கு காட்டியிருப்பது 11,500 தறிகள் என்று. மேலும் அங்கு மொத்தம் 5,250 பேர்கள் தறிக்காரர்கள் என்று கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. மொத்தம் இதில் வேலை செய்கின்றவர்கள் 17,350 பேர்கள். இதில் கூட்டுறவு சங்கத்தில் இருப்பவர்கள் 11,500 பேர்கள். இதில் மாஸ்டர் வீவர்கள் என்றிருப்பது 5,000 பேர்கள் இப்படி தவறான கணக்கையெல்லாம் அரசாங்கத்திற்கு தருகிறார்கள் இந்தத் தாய் சங்கத்தில் இருப்பவர்கள்—இதனுடைய நம்பர் ஓ-1164. இந்தத் தாய் சங்கமே இப்படி நடந்து கொள்கிறது என்றால் பிள்ளை சங்கங்களைப்பற்றி மற்றவர்கள் புரிந்து கொள்ளலாம். இதில் மொத்தம் உறுப்பினர்கள் 996. ஆனால் ஆக்டிவலாக இருக்கின்றவர்கள் 400-க்கு குறைவானவர்கள். அந்த 996 உறுப்பினர்கள் பெயரில் கடன் வாங்கப்பட்டு, மத்திய பாங்கில் டைரக்டர்களால் கடன் தரப்பட்டு, அத்தனை பேர்களுக்கும் கடன் வழங்கப்படவில்லை. 400 பேர்களுக்குத் தான் கடன் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது . .

**கனம் தலைவர் (திரு. மா. தண்டாயுதபாணி) :** கனம் அங்கத்தினர் ஆரம்பித்து 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆகவே சீக்கிரமாக முடித்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அந்த சங்கத்திலே நடைபெற்றிருப்பதைப் பற்றி படிக்க நேரம் இல்லாத காரணத்தினால் அதை அமைச்சரிடம் கொடுக்கிறேன். எத்தனையோ தடவைகள் போனது போல் வேஸ்ட் பேப்பர் பெட்டிக்குப் போகாமல் இருப்பதற்காக ஒரு சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். அந்தச் சங்கம் நிச்சயமாக நல்ல முறையில் நடைபெறவில்லை. அங்கத்தினர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். ஊழல்களைச் சொல்லுவதை விட, ஊருக்கு வாருங்கள் கண்கூடாகக் காட்டுகிறோம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில், கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் அணுகிப் பார்த்தாகிவிட்டது. அங்கத்தினர்கள் உண்ணாவிரதம் இருந்தாகிவிட்டது. அதற்கு அப்புறம் கூட, ரிஜிஸ்ட்ரார் அவர்கள் அங்கு இருக்கும் டி. ஆர்.-ஐ அனுப்பி விசாரித்து ரிப்போர்ட் அனுப்பும்படி கேட்டு, அவரும் ரெஜிஸ்டிராருக்கு ரிப்போர்ட் அனுப்பியும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்க என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன். கனம் உள் துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்ற எல்லா அமைச்சருக்கும் நகல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஓ. 1729 நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி

விற்பனை சங்கம் என்று ஒரு விற்பனை சங்கத்தை வைத்திருக்கிறார்கள். அது பற்றிய விபரத்தையும் கனம் அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

இதைப் பற்றி இந்த அளவிலே நிறுத்திக்கொண்டு கோவாப்பரேடிவ் சொசைட்டீஸ் பற்றி என் விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இப்போது அமைச்சர் அவர்கள் படிக்கும்போது, இப்படி இப்படியெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். ஒரு ஆண்டுக்கு மேல் யாரும் தொடர்ந்து இருக்கக் கூடாது, ஒரு தடவைக்கும் மற்றொரு தடவைக்கும் ஐந்து ஆண்டு இடைவெளி இருக்க வேண்டும். அதற்காக ஒன்-தேர்ட் ரிட்டயர் ஆகவேண்டுமென்று சீட்டு குலுக்கிப் போடுகிறார்கள். சீட்டு குலுக்கி ஒருவர் விடப்பட்டால் மறுநாள் வர வாய்ப்பு இருக்கிறது. எந்த நோக்கத்திற்காக இந்த விதி ஏற்படுத்தப்பட்டதோ அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு மேல் அங்கம் வகிக்கக் கூடாது என்று விதி இருக்க வேண்டும். அதைப் போல டைரக்டர் சொந்தக்காரர்கள் வேலையில் இருந்தால் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று விதி இருக்கிறது. அப்படி சொந்தக்காரர்கள் வேலையிலிருந்து நீக்கப்படாவிட்டால் டைரக்டர் பதவி போய்விடும் என்று இருக்கிறது. அது எங்களுக்கும் பொருந்தும் என்றால் அமைச்சர் சொந்தக்காரர்கள், அங்கம் வகிக்கக்கூடாது என்பது ஏற்படுகிறது. அமைச்சர் சொந்தக்காரர்கள், மிக நெருங்கிய நண்பர்கள், மிக வேண்டியவர்கள், அவர்களுடைய கட்சிக்காரர்கள் இருக்கிற காரணத்தினால் தான் லஞ்ச ஊழல்களும் மற்ற ஊழல்களும் அதிகமாக இருக்கின்றன. அதனையும் விலக்குவதற்கு முயற்சி எடுக்கவேண்டும்.

சாகுபடி பற்றி யோசனை சொன்னார்கள். இதைப் பற்றி மட்டும் பேச அனுமதி கொடுக்கவேண்டும் என்று கனம் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது வந்த பிறகு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதை எடுத்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு தீவிரத் திட்டத்திற்காக அதி தீவிரமாக கடன் வழங்கப்படுகிறது என்று சொன்னால், நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் மிகவும் அவதிக்கு ஆட்பட்டிருக்கிறோம். இதனை நீக்கிவிடவேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன் . . . . (மணி அடிக்கப்பட்டது).

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: கனம் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மான்யத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறை இயக்கத்தின் தத்துவங்களைக் குறித்து யாரும் கருத்து வேற்றுமை கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். கூட்டுறவுத் தத்துவங்கள் மிக மிகச் சிறந்தவை. நாட்டிலே ஒரு சம தர்ம சமுதாயம் ஏற்பட வேண்டுமென்று





அனைவரும் விரும்புகிறோம். அத்தகைய சம தர்ம சமுதாயம் நாட்டில் ஏற்படுவதற்குக் கூட்டுறவின் தத்துவங்களும், அதனுடைய பலனும் அனுகூலமாக அமையும் என்பதிலே சந்தேகமில்லை. அதிலும் கருத்து வேற்றுமை இருக்காது என்றே நான் கருதுகிறேன். கூட்டுறவின் மூலம் ஏற்படும் பலன்கள் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நியாயமாகக் கிடைக்க வேண்டும். என்பது தான் குறிக்கோள். அத்தகைய வகையிலே கூட்டுறவின் தத்துவமானது சம தர்ம சமுதாய அமைப்பு உருவாவதற்கு, பொது மக்களுக்கு அதன் மூலம் பயிற்சி அளிப்பதோடு, அந்தப் பலன்கள் அவர்களைச் சென்று அடையும்போது, சம தர்ம சமுதாயத்தின் அமைப்பின் பலனை இதன் மூலமாக அடைகிறோம் என உணர்ந்து கொள்ளவும் கூடிய அத்தகைய உயரிய தத்துவங்கள் தான் கூட்டுறவின் தத்துவங்கள். என்றாலும் நடைமுறையிலே பல சிக்கல்கள், குறைபாடுகள் ஏற்படுகின்றன. இன்று மட்டு மல்ல. கூட்டுறவுத் துறை ஆரம்பித்த காலம் முதலே அங்கங்கே சில சில பகுதிகளிலே இந்தச் சபையிலே இப்போது எடுத்துக் காட்டப்பட்ட குறைகளைப் போன்று எடுத்துக் காட்டுவது இயல்பாக இருந்து வந்திருக்கிறது. அத்தகைய குறைகள் கண்டுபிடிக்கப்பட்டும் இருக்கின்றன. நீதி மன்றங்களிலே அது பற்றிய தீர்ப்புகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. என்றாலும், 10,000-த்துக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வரும் ஒரு மாநிலத்தில் ஒரு சில சங்கங்களில் கூட்டுறவுத் தத்துவத்திற்கு நேர்மாறான, முரணான கொள்கை உடையவர்கள், அல்லது பொது நலப் பணி என்ற போர்வையிலே அக்கிரமங்களைச் செய்துகொண்டு வருகிறவர்கள், அத்தகைய தத்துவங்களுக்கு அவர்கள் மாசு கற்பிப்பவர்கள் தான் என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். 10,000-க்கு மேற்பட்ட கூட்டுறவு நிறுவனங்களிலே ஒரு சில நிறுவனங்களில் இத்தகைய குறைபாடுகள் ஏற்படுகின்றன என்று எடுத்துக் காட்டும் போது பொது மக்கள் மற்ற பெரும்பாலான நிறுவனங்களைப் பற்றியும் தவறான கருத்து கொண்டு, கூட்டுறவுத் தத்துவங்கள் நாட்டிலே பரவாமல், அதைப் பற்றிய மாசு கற்பிக்கப்பட்ட எண்ணங்களையே மனத்திலே கொண்டால், கூட்டுறவின் வளர்ச்சிக்கும், இயக்கத்திற்கும், துணை புரிய முடியாத நிலையிலே பொது மக்கள் கருத்தை ஈர்த்து, கூட்டுறவுத் தத்துவத்திற்கும், கூட்டுறவு இயக்கத்திற்கும் ஒரு பலஹீனம் ஏற்படும் வகையிலே கூட குற்றங்களை எடுத்துக் காட்டுகிறவர்கள் அத்தகைய நிலைக்குச் சென்று விடக் கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிக் குறைகளை எடுத்துக் காட்டுவதிலே காட்டும் ஆர்வமானது, கூட்டுறவுத் தத்துவத்தின் மூலமாக, கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக, நாட்டுக்கு ஏற்படக் கூடிய கணிசமான பலனை அழித்து விடும் நிலைமைக்குக் கொண்டு போய் விடக் கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது கனம் அங்கத்தினர் அவர்கள் எடுத்துக் காட்டிய குறைகளைப் போன்று நானும் பல குறைகளை அறிந்திருக்கிறேன். சொல்லப்பட்டும் வந்திருக்கிறது. நான் கிட்டத்தட்ட 39 ஆண்டு கால அனுபவம் உள்ளவன் கூட்டுறவுத் துறையிலே. கூட்டுறவுத்

துறையிலே நீண்ட காலத் தொடர்பு எனக்கு இருந்து வந்திருக்கிறது. இத்தகைய குறைகளை எடுத்துக் காட்டும் சில சந்தர்ப்பங்களில், அழகாக அச்சிட்டு குறைகளை எடுத்துக் காட்டுகிற நேரத்திலும், நம்மை நம்ப வைத்து இத்தகைய குறைபாடுகள் நிகழுகின்றனவா என்று ஆத்திரத்தையும் உண்டு பண்ணி நாமும் கூட உணர்ச்சி வசப்படுகிறோம். எத்தகைய முறையிலே நடைபெற்றிருக்கின்றன, எப்படி நடைபெற்றிருக்கின்றன என்று ஆராயப் புகும்போது திடுக்கிட வேண்டியிருக்கிறது. இயக்கத்திற்கு இத்தகைய பொய்யான புகார்கள் கூறி பெரும் துரோகம் விளைவிக்கந் தக்கவர்களும் இருக்கிறார்களா என்ற நிலையில் கவலையில் ஆழ்ந்து விட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே குறைகள் சொல்லப்படும்போது, இந்த மன்றத்தில் தெரிவிப்பதற்கு முன்பே, குறைகளிலே ஆதாரங்கள் இருக்கின்றனவா என்று முழுவதும் நன்கு ஆராயாவிட்டாலும், ஒரு சிலவற்றுக்கேனும் சரியான ஆதாரங்கள் இருக்கின்றனவா என்பதை ஸ்தலத்திலே, பிரத்தியட்ச அனுபவத்திலே, நம்மை நாமே நம்பும் அளவில் தெளிவாகப் புரிந்துகொண்டு, அதற்குப் பிறகு இங்கே சொல்வது . . .

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நான் குறிப்பிடுவதற்கு முன்பு இது சம்பந்தப்பட்ட அத்தனை மனுக்களையும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் அத்தனை பேர்களுக்கும் அனுப்பி விட்டு, எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தினால் தான், அதிகார பூர்வமாக உண்மை என்று நான் நம்புகிற காரணத்தினால் தான் சபையின் முன் வைக்க முன் வந்தேன்.

10-30 a.m. **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** இலாகா பூர்வமாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் அவர்கள் சொல்லுவதைக் கேட்டு நம்புகிறவர்கள் தான் நம்புகிறார்கள். ஆகவே, அந்த ஆதாரம் கூட போதாது என்று தான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, அந்த நடவடிக்கைகள் எந்த நிலையில் இருந்து வருகின்றன, அதைப்பற்றி உண்மையைத் தெரிந்துகொள்ளுவதற்கு இலாகா பூர்வமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நடைமுறையில் இருக்கும் நிலைமைகள் என்ன என்பதையெல்லாம் தெரிந்துகொள்ளுவது சிரமந்தான். ஆனால், பொது வாழ்வில் இத்தகைய குற்றச்சாட்டுகளையெல்லாம் நினைத்தபொழுதெல்லாம் மலிவாகச் சொல்லக் கூடிய நிலைக்குக் கொண்டுபோய் விட்டுவிடுவோமேயானால், பொதுத் துறையிலே பணியாற்றக்கூடியவர்கள், மக்களுடைய பொது நலனுக்காக பணியாற்றவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள் கூட இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படுகிறதே என்று நல்லவர்களும் அந்த இயக்கத்தில் வந்து பணிபுரிவதற்கு பின்வாங்குவார்கள் என்பதைத் தான் நான் பணிவோடு இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அத்தகைய குறைபாடுகளை களைவதற்கு ஏற்பாடுகள் அவசியம் இருந்து தான் ஆகவேண்டும் ஆனால், குற்றச்சாட்டுகளை எடுத்துக் காட்டுவதன் மூலம் இயக்கத்





தினுடைய வளர்ச்சியும், அதனுடைய பலனும் பின்தங்கிவிடக் கூடாத ஒரு நிலை கைக்கொள்ளப்படவேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அநேகமாக கூட்டுறவு இயக்கத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகளை எடுத்துக் கூறுவது நலன் என்றாலும் கூட, கூட்டுறவுத் துறை எந்த அளவுக்கு வளர்ச்சி கண்டிருக்கிறதோ, அதனுடைய பரப்பு எவ்வளவு வளர்ந்திருக்கிறதோ, அரசாங்கத் திட்டத்தின் மூலமாகவும், அரசாங்கத்தின் கொள்கைகள் மூலமாகவும் அந்த இயக்கத்தை எவ்வளவு வேகமாக எப்படி பல துறைகளிலும் விஸ்தரிக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அந்த அளவில் அந்த ஸ்தாபனங்களில் பணியாற்றுவதற்கு போதிய சிரத்தையுடையவர்களும், திறமை உடையவர்களும் முன்வந்து அந்த இயக்கத்தில் கலந்துகொண்டு, அந்தப் பணிகளில் அவர்கள் பங்கு எடுத்துக்கொள்ளவில்லை என்ற மனக்குறையை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பணிகளைப் புரிந்துகொண்டு, தெரிந்து கொண்டு பணி புரியவேண்டியிருக்கிறது. கூட்டுறவுத் துறையின் பலன்களை சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்குக் கொண்டு போய் சேர்க்கவேண்டிய விதத்தில் திட்டம் வகுத்து, ஸ்தலத்திலே பணியாற்றக் கூடியவர்கள் இதன் பலன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சென்று அடையும்படி செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பு நம்மைச் சாருகிறது. ஸ்தலத்திலே உள்ளவர்களுக்கு இதிலே பெரும் பொறுப்பு இருக்கிறது. நாளுக்கு நாள் விரிவடையக்கூடிய நல்லதோர் இயக்கம் இது. அதன் மூலம் கிராமத்திலுள்ள குடும்பங்கள் பலன் அடையும்படியான வகையில் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும், பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு படித்தவர்கள் கூட அதிகமாக முன் வரவில்லை என்ற எனது மனக்குறையை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அத்தகைய பணி புரிவதற்கு, விழிப்பு உணர்ச்சி ஏற்படுவதற்கு, ஸ்தலத்தில் உள்ளவர்கள், படித்தவர்கள், பொது நலனுக்காக பணி புரிய வேண்டும் என்று அக்கறை கொண்டவர்கள் இந்த இயக்கத்தில் பங்கு எடுத்துக்கொண்டால்தான், சூரியனைக் கண்டு இருள் நீங்குவது போல, இத்தகைய குறைபாடுகள் தானே பின்வாங்கிவிடும், இந்தக் குறைகள் மலியாது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகினே.

எந்தப் பகுதியில் கூட்டுறவுத் துறையில் விழிப்பு உணர்ச்சி இருக்கிறதோ, எங்கே தகுந்தவர்கள், செல்வாக்குள்ளவர்கள் இந்தத் துறையில் பங்கு கொண்டிருக்கிறார்களோ அந்தப் பகுதியில் இத்தகைய குறைகள் தலைகாட்டுவதில்லை என்பதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். எந்த அளவுக்கு கண்காணிப்பு இருக்கிறதோ, பொது மக்கள் கவனம் அதில் திரும்பியிருக்கிறதோ, பொது மக்கள் அதைப்பற்றி கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்களோ அந்த அளவுக்கு அந்தப் பகுதிகளில் இத்தகைய சமூக துரோகிகள் இத்தகைய இயக்கத்தில் புகுந்து, இம்மாதிரி குற்றங்களைச் செய்ய முன்வரமாட்டார்கள். அந்த வகையில் நாம் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இவ்வளவு ஆயிரம் ரூபாய், இவ்வளவு லட்ச ரூபாய் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் திட்டங்களை நாம் வகுத்துக்கொண்டிருக்கிறோம். முழுக்கடன் வசதித் திட்டம் எந்தப் பகுதியில் இருக்கிறதோ அங்கு எல்லோருக்கும் வேண்டிய கடன்களை கொடுக்கவேண்டும் என்பதற்கெல்லாம் பலவிதமான திட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் இத்தனை சதவிகிதம் குடும்பங்கள் கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேரவேண்டும், அதன் பலனை அவர்கள் அடைய வேண்டும் என்றெல்லாம் திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால், கூட்டுறவு சங்கங்களின் பலனை அடைய முடியாமல் சங்கங்களுக்கு வெளியே எந்த ஒரு கிராமமும், எந்த ஒரு பகுதியும் இல்லை என்ற நிலையை நாம் இப்பொழுது பார்க்கிறோம். ஒரு கிராமத்தில் ஒரு சங்கத்தை வைத்துவிட்டு அதைச் சுற்றியுள்ள 4, 5 கிராமத்திலுள்ளவர்கள் அந்தச் சங்கத்தினுடைய பலனைப் பெற்றுக்கொள்ளவேண்டும், அந்த விவகார எல்லையிலே அந்தப் பகுதிகளையெல்லாம் சேர்த்து ரிஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டும் . . .

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், சார், கனம் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் நேற்று வேறொரு இடத்திலிருந்து பேசினார். நேற்றையதினம் பேசின இடம் திரு. காமராசருடைய இடம். இன்று வேறு ஒரு இடத்திலிருந்து பேசுகிறார். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு இடம் என்று இருக்கிறது. அவருடைய இடத்திலிருந்து அல்லாமல் வேறு ஒரு இடத்திலிருந்து பேசுவது விதி முறைக்கு உட்பட்டதா அல்லது விதி முறை தளர்த்தப்பட்டிருக்கிறதா என்ற ஒழுங்குப் பிரச்னையை நான் எழுப்புகிறேன்.

**கனம் தலைவர் (திரு. மா. தண்டாயுத பாணி) :** There is no point of order.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது அங்கத்தினர் பேசுவது சரியான இடத்திலிருந்துதானா? விதிமுறை தளர்த்தப்பட்டிருக்கிறதா? நேற்று பேசின இடம் சரியான இடம் இல்லையா?

**கனம் தலைவர் (திரு. மா. தண்டாயுதபாணி):** கனம் அங்கத்தினர் சரியான இடத்திலிருந்து தான் பேசுகிறார். நேற்று பேசினதைப்பற்றி நேற்றே கேட்டிருக்கவேண்டும்.

SRI T. M. NALLASAMY : Sir, on a point of order. The hon. Member, Sri Mathialagan, did not speak from his allotted seat some time ago. Now he has come to his allotted seat.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** சகோதர அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்களுடைய சிந்தனை திடீரென்று இதிலே திரும்பி இருக்கிறது கண்டு நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். நான் வேறு ஏதோ கேள்வி கேட்கும்பொழுது அங்கு இருந்தேன்.



ஆனால், நான் நேற்று நடந்த டிமாண்டு சம்பந்தமாக பேசும் பொழுது இந்த இடத்தில் நின்றுகொண்டு தான் பேசினேன் என்பதை கனம் உறுப்பினர் அவர்களின் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். என்னுடைய கவனத்தை வேறு வகையிலே திருப்பப் பார்க்கிறார் என்று கூட நான் நினைக்கிறேன். இப்படி ஒரு விஷயத்தை மத்தியிலே போட்டு கவனத்தை வேறு பக்கத்திலே திருப்ப முடியும் என்பது ஒரு உபாயம். அந்த உபாயத்தை கைக்கொண்டு, அந்த வகையிலே அங்கத்தினர் அவர்கள் இப்படி கேட்கிறார்கள் போலும்.

திட்டங்களுடைய பலன் எல்லா குடும்பங்களுக்கும் சென்று அடைய வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். விவகார எல்லையில் உள்ள எல்லா கிராமங்களுக்கும். அந்தச் சங்கங்களின் மூலம் பலன் போய் சேரவேண்டும் என்றால், கிராமப் பகுதியிலுள்ள எல்லா குடும்பங்களும் அந்தச் சங்கத்தில் அங்கத்தினர்களாக ஆவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை பொது நலனில் அக்கறை உள்ளவர்கள் செய்யவேண்டும். அந்தச் சங்கத்தில் எல்லோருக்கும் கடன் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். எல்லோருக்கும் ஒத்தாசை புரியவேண்டும். எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. பொது மக்கள் நம்புவது இல்லை. அந்தச் சங்கத்தில் அங்கத்தினராக சேருவதில்லை. தலைமுறை தலைமுறையாக பல வருஷங்களாக எந்த முறையிலே கடன் வாங்கிவந்தார்களோ அந்த வகையிலேதான் அதிக வட்டிக்கு கடன் வாங்குகிறார்கள். புதிய முறைகளை அவர்கள் கையாளவேண்டும். அவர்களைக் கூட்டுறவுகளில் கடன் கேட்கவிடாமல் அங்கு இருக்கும் தீய சக்திகள் வேறு பக்கம் திருப்பி விடுகின்றன. அங்குள்ள சுயநலக்காரர்கள் 'அங்கு போய் ஏன் கடன் வாங்குகிறீர்கள்' என்று தடுத்து விடுகிறார்கள். அதன் மூலம் அவர்கள் அடையவேண்டிய பலனை அடைய முடியாமல் போய்விடுகிறது. இதையெல்லாம் ஸ்தலத்தில் இருக்கக்கூடியவர்கள், சட்டமன்ற அங்கத்தினர்கள் மட்டுமல்ல பொது நலனில் அக்கறை உள்ளவர்கள் கூட்டுறவுத் துறையில் அதிக தொடர்பு கொண்டு, இதன் பலனை அனைவரும் அடையும்படிச் செய்வதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். சில சங்கங்களில் உள்ள நிர்வாகஸ்தர்கள், கெட்ட பெயரை நாம் ஏன் வாங்கவேண்டும், நம்மைச் சேர்ந்தவர்கள் சொத்து மதிப்புள்ளவர்கள் சில பேர்களுக்கு மட்டும் ரூ. 50,000 கடன் கொடுத்துவிட்டு அம்மட்டோடு நம்முடைய காரியங்களை நிறுத்திக்கொண்டுவிடுவோம், நாம் ஏன் கவலைப்படவேண்டும், நாம் ஏன் இந்தப் பொறுப்பை தலையில் போட்டுக்கொள்ளவேண்டும் என்று நினைக்கிறவர்கள் இருக்கிறார்கள். சொந்த நிலம் இல்லாதவர்கள், குத்தகை நிலம் வைத்துக்கொண்டு சாகுபடி செய்யக் கூடியவர்கள், கடன் வாங்கி சிறிய தொழில்களை புரியக்கூடியவர்கள், ஏழை எளியவர்கள் ஆகியோர்களுக்கு கடன் வழங்கப்பட வேண்டும். இத்தகைய கடன்கள் கொடுப்பதன் மூலம் இந்தச் சங்கங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதைத் தவிர்ப்பதற்கு, உதவி புரிவதற்கு அரசாங்கம் உதவித் தொகையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத் திட்டத்தின் அடிப்படையில்

கிராம சங்கங்கள் கடன் கொடுப்பதன் மூலம், அந்த சங்கங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால், வருஷக் கடைசியில் அவர்களுடைய நிகர லாபத்தில் 100-க்கு இத்தனை சதவிகிதம் இத்தகைய நஷ்டம் வருவதை ஈடுபடுத்துவதற்கு என்று அந்த வகையில் தொகைகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஜில்லா மத்திய சங்கங்களும் மாகாண சங்கங்களும் அதற்கான தொகை ஒதுக்க வேண்டும் என்றும் அரசாங்கம் வழிவகைகள் செய்திருக்கிறது. ஆகையினால், இந்த இயக்கத்தின் மூலமாக, ஸ்தலத்தில் இருக்கும் பொது மக்கள் பலனை அடையும் வகையில் பணி புரிய வேண்டும். அது சற்று சிரமமான பணிதான்.

இன்னொன்று அன்பர் கூறினார்கள். இந்த ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீமை நிறுத்தி விட வேண்டும், அப்படி நிறுத்தி விட்டால் நல்லது என்று குறிப்பிட்டார்கள். வருஷாந்தரமாக முழுக்கடன் என்பதில் சிரமம் ஒன்றும் இல்லை. நாம் அதற்கு வேண்டிய பொறுப்பு எடுப்பதில்லை. ஒரு குடும்பத்தை திட்டமிட்டு நடத்து வது போலத்தான் நாட்டின் திட்டமும். திட்டமிட்டு குடும்பம் நடத்தும் எண்ணம் விரிவு அடைய வேண்டும். திட்டமிட்டு வாழ வேண்டும் என்கின்ற எண்ணம் வளரவேண்டும். கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று இருந்து விட்டால், வரவுக்கும் செலவுக்கும் ஒத்துவராத வாழ்க்கை நடத்தும் நிலைதான் ஏற்படும். அதே நிலைதான் நாட்டிலேயும் ஏற்படும். முழுக்கடன் என்பதன் பிரகாரம் மொத்தமாக ஒரு குடும்பத்திற்கு ஒரு வருஷத்திற்கு எவ்வளவு தொகை வேண்டும் என்று பார்த்து கடன் மனுக்களைத் தயார்செய்து, எவ்வளவு நிலம் இருக்கிறது, என்னென்ன பயிர்கள் விளையும், எவ்வளவு கடன் தேவைப்படும், குடும்பச் செலவுக்கு என்ன செலவு தேவைப்படும், மற்ற காரியங்களுக்கு எவ்வளவு, என்றெல்லாம் ஆராய்ந்து வருஷாந்தர கடன் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. ஒரே காலத்தில் கடன் சாங்ஷன் செய்யப்படுகிறது. ஒரு வருஷத்தில் எவ்வப்பொழுது எவ்வளவு எவ்வளவு கடன்கள் தேவைப்படுகிறதோ அந்த அந்தச் சந்தர்ப்பங்களிலே வாங்கிக் கொள்ளலாம். கடன் மனு ஒவ்வொரு தரமும் அனுப்ப வேண்டியதில்லை. அத்தகைய வசதிகள் உண்டு. விண்ணப்ப பாரம் பெரியதாக இருக்கிறது . பல "காலங்கள்" இருக்கின்றன. அவ்வளவு தான். கூட்டுறவு சங்கங்களை எடுத்துக் கொண்டால், ஒரு கிராமத்தில் நான் செக்ரடரி அல்லது பிரசிடெண்ட் என்றால் சூப்பர்வைசர் வரும் வரை கடன் மனுக்கள் தயாரிக்கப்பட முடியவில்லை. காரணம் செக்ரடரி, பிரசிடென்ட் என்பவர்களுக்கு கடன் மனுத் தயாரிக்கத் தெரியாது. நான் வாசா கைங்கரியம் செய்வேன். எதை எதையோ சாதித்து விடுவேன் என்பேன். ஆனால், நடைமுறையில் காரியம் செய்வதில் ஒன்றும் தெரியாது. பிரசிடெண்ட், செக்ரடரி ஆக இருப்பேன்; ஆனால் உருவான விஷயம் எழுதத் தெரியாது, ஒரு தீர்மானம் எழுதத் தெரியாது. கடன் மனு தயார் செய்யத் தெரியாது. கூட்டுறவுச் சங்கங்களிலே இப்படிப் பட்ட நிலைமை இருக்கின்றது. இதை நாம் பகிரங்கமாக ஒத்துக்கொள்ள வேண்டும். இலாகாவினர் பயிற்சி அளிக்கிறார்கள். கூட்டுறவு அறிவை வளர்க்க கூட்டுறவு





சங்கங்களின் நிகர லாபத்திலிருந்து 2 சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறோம். அந்த வகையில் பிரசாரம் செய்யப்படுகிறது. அதனால் பலன் இல்லை என்றால், அதற்கு பொதுமக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்ற நாமும் தான் பங்குகொள்ள வேண்டும் என்று சொல்லுவேன்.

கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு பொறுப்பு வளரவில்லை என்று குறிப்பிட்டார்கள். அது வருந்தவேண்டிய விஷயம் தான். சட்டம் செய்திருக்கிறோம், மூன்றில் ஒரு பங்கு நிர்வாகிகள் ரிடையர் ஆகவேண்டும் என்று. அதனுடைய பலனைப் பார்க்கிறோம் இப்பொழுது. ஒவ்வொரு வருஷமும் தேர்தல் வருகிறது. தேர்தல் என்கிற மனப்பான்மை தான் இருந்துக் கொண்டே இருக்கிறது. அவர்களுக்குள்ளே ஒத்துழைப்பு, சகோதரத் தன்மை இவை குறைந்து, துவேஷம்தான் மலிந்து கிடக்கிறது. அப்படியிருக்கும்போது ஒருவர் நிதானமாக டைரக்டராக எப்படிப் பணியாற்ற முடியும்? ஆகவே தான் அது நல்ல பலன் அளிக்கவில்லை. அந்தச் சட்டம் செய்யப்படும் போதே அந்தக் கருத்தைச் சொன்னோம். ஆனால், பெரும்பாலோர் ஒவ்வொரு வருஷம் மாறுதல் செய்யவேண்டும் என்கின்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள். ஆகவே தான் கூட்டுறவுத் துறையிலே ஒத்துழைப்பு, தோழமை இருப்பதாகக் காணோம். எப்பொழுது தேர்தல் வருகிறது, தேர்தல் வருகிறது என்கின்ற உணர்வே காணப்படுகிறது. குறைந்த பட்சம் மாநில, ஜில்லா சங்கங்கள் தவிர மற்ற சங்கங்களிலாவது இந்த முறையைக் கைவிட்டு, அதற்குத் தக்கப்படி சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு நூற்பாலைகள் சம்பந்தப்பட்டவரை, பங்குக்கு ஒரு ஓட்டு என்று வைத்திருக்கிறார்கள். ஆயிரம் பங்குகள் இருந்தால் ஆயிரம் ஓட்டு. இது என்ன பொருத்தம் என்று புரியவில்லை. (மணியடிக்கப்பட்டது). ஆகவே, குறைகள் நீக்கப்பட்டு தகுந்த மாறுதல்கள் செய்து நன்மைகள் செய்யப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் பெர்சனல் எக்ஸ்ப்ளநேஷன். தலைவர் அவர்களே, சங்கத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள் இருக்கிறார்கள் என்றார்கள். மனுக்களைத் தயாரிக்கத் தெரியாது என்று குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்த வரை, நான் கூட்டுறவில், ஐக்கிய நாணய சங்கமாக இருந்த காலம் முதலே அதில் பங்கு கொண்டவன். இன்றைக்கு அது கூட்டுறவு இயக்கமாக வளர்ந்து இருக்கிறது. மத்திய கூட்டுறவு பாங்கியில் நடைபெறுகின்ற பல விஷயங்கள் எனக்குத் தெரியும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

**களம் தலைவர் (திரு. மா. தண்டாயுதபாணி):** இன்னும் 25 அங்கத்தினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு அங்கத்தினரும் ஆறு அல்லது ஏழு நிமிஷங்களை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

[12th March 1966

***திரு. ரா. சுப்பிரமணியம்:** கனம் தலைவர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தஞ்சாவூரில் மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டத்தில் 36 பிளாக்குகள் இயங்கி வருகின்றன. இதன் காரணமாக சென்ற செப்டம்பர் மாதம் வரை ஒரு கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனும், மேற்கொண்டு ஒரு கோடியும், ஆக இரண்டு கோடி அளவில் கடன்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த வருஷம் தஞ்சாவூரில் மழை போதுமானதாக இல்லாததால், தண்ணீர் இல்லாததால், சம்பா பயிர் 25 சதவிகிதம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும், தாளடிப் பயிர் 75 சதவிகிதம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் எல்லோருக்கும் தெரியும். ஆகையினால் கடன் வசூல் செய்வதை எங்கெங்கே பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் டி. ஆர். அவர்களுக்கு அதிகாரம் அளித்து, கடன் வசூலை ஒத்திவைக்கத் தகுந்த ஆர்டர் அனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு சர்க்கரை ஆலை எங்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் தஞ்சைக்கும் வல்லத்திற்கும் இடையில் மானோஜிபட்டி என்ற இடத்தில் ஆரம்பிக்க இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் தீர்மானிக்கப்பட்டு, அதற்கு வேண்டிய வேலைகள் ஆரம்பித்திருந்தார்கள். ஆனால் தொடர்ந்து வேலை நடக்காமல் நின்று விட்டது. ஏன் என்று தெரியவில்லை. ஆகையினால், தொழில் துறையில் தஞ்சையைப் பொருத்த வரையில், பின் தங்கிய நிலையில் இருக்கிறது என்கின்ற காரணத்தினால், அதைச் சரிக்கட்ட இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை தஞ்சாவூரில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த மும்முர வேளாண்மை மாவட்ட திட்டம் 36 பிளாக்குகளில் இருக்கின்றன. கிராப் லோன் கொடுக்கிறோம். அங்கே உள்ள வேளாண்மைத் துறை பணியாளர்கள் Farm plan தயாரிக்கிறார்கள். அதன் மீது கூட்டுறவு சொசைடிகள் பணம் கொடுக்கின்றன. ஆனால் காலதாமதம் ஏற்படுகிறது. ஏன் என்றால் ஒருவரை ஒருவர் பழி சொல்லுகிறார்கள். வேளாண்மைத் துறை பணியாளர்கள் ஃபார்ம் ப்ளான் வருகிறதற்கு டிலே ஆகிறது என்கிறார்கள். இவர்கள், இல்லை இல்லை; நாங்கள் அனுப்பி விட்டோம். அவர்களால்தான் டிலே என்கிறார்கள். மொத்தத்தில் கடன் சீக்கிரமாகக் கிடைக்க வேண்டும். ஜூலை மாதத்தில் கடன் கிடைக்க வேண்டும் என்றால், செப்டம்பர் மாதத்தில்தான் முழுக்கடன் கொடுக்கப்படுகிறது. இதையே காலாகாலத்தில் கொடுத்தால், விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கும். ஆகையினால், இந்தக் கடன் தொகைகளை முன்னதாகவே காலா காலத்தில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரிசர்வ் பாங்கியில் 3½ சதவிகிதம் வட்டியில் மற்றவர்களுக்குக் கொடுத்த போது கூட்டுறவு சொசைடிகளுக்கு 1½ சதவிகிதம் வட்டியில் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது அவர்கள் மற்றவர்களுக்கு 6 சதவிகிதம் என்றும், சொசைடிகளுக்கு 4 சதவிகிதம் என்றும் கொடுக்கிறார்கள். ரிசர்வ் பாங்கு ரேட் 1½ சதவிகிதம் ஆக இருந்தபோது, கடைசியாக கிராமத்தில் உள்ளவனுக்கு வரும்



12th March 1966] *[திரு. ரா. சுப்பிரமணியம்]*

போது. 6¼ சதவிகிதம் வட்டிக்குக் கிடைத்தது. இப்பொழுது 4 சதவிகிதம் ரிசர்வ் பாங்கு ரேட்டு இருக்கும் போது, கடைசியாகக் கிராமத்தாருக்குக் கிடைக்கும் போது, 8, 4 சதவிகிதம் என்று ஆகி விடுகிறது. அத்துடன் தவணை தவறினால், அது 12½ சதவிகிதம் வட்டியாகிவிடுகிறது. சாதாரணமாக ஒரு விவசாயி 12½ சதவிகிதம் வட்டி கொடுக்க வேண்டியிருக்கும் போதுதான் சொசைடியில் வாங்கியிருக்கிறோமா அல்லது ஏதாவது மார்வாரியிடம் வாங்கியிருக்கிறோமா என்கின்ற சந்தேகம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால் இந்த சொசைட்டிகளை வைத்திருந்து விவசாயிகளுக்கு நாம் நன்மை செய்வதாகச் சொல்லி வந்தபோதிலும் கூட, உண்மையிலேயே விவசாயிகளுக்கு அதனுடைய பலன் கிடைக்கவில்லை. ஆகையால், முதலிலே ரிசர்வ் பாங்கிலிருந்து வாங்கக்கூடிய பணத்திற்கு 4 சதவிகிதம் வட்டி என்றிருப்பதை மூன்று பர்சென்டாகக் குறைப்பதற்கு ஏதாவது வழி வகை செய்ய வேண்டும். அத்துடன் கூட, எவ்வளவு தான் அதிகமாகப் போனாலும் கூட, 7½ சதவிகிதத்திற்கு அதிகமாக வட்டி போகாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அல்டிமேட் பாரோயர் என்ற வகையில் கிராம க்ரெடிட் சொசைட்டியிலே இருந்து கொடுக்கக்கூடிய கடனுக்கு 7½ சதவிகிதத்திற்கு மேல் வட்டி விதிக்கப்படாமல் இருக்கப் பார்த்துக்கொள்ளும்படியாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நீண்டகாலக் கடன்களையெல்லாம் நில அடைமான பாங்குகள் மூலம் நாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஆனால், ப்ரொசிஜரைப் பார்த்தால் ரொம்ப சிக்கலான ப்ரொசிஜராக இருக்கிறது. யாராவது ஒருவர் கடன் வேண்டும் என்று மனுக் கொடுப்பாரானால் கிட்டத்தட்ட ஒரு வருஷத்திற்கு உள்ளாகக் கிடைத்தால் ரொம்ப ஜல்தியாகக் கிடைக்கிறது என்று அர்த்தம். ஒரு வருஷத்திற்கு மேலே அது போகிறது. மேலும் ஒரு எக்கர் நிலம் 4,500 ரூபாய் பெறும் என்றால், அந்த நில அடமான பாங்கைச் சேர்ந்த ஆபீசர் அதற்கு மூவாயிரம் ரூபாய் தான் மதிப்புப் போடுகிறார். மூவாயிரம் ரூபாய் தான் மதிப்பு என்று போட்டு, லோன் சாங்ஷன் செய்யும் போது, மூன்றில் ஒரு பங்காகிய ஆயிரம் ரூபாய் தான் கடன் சாங்ஷன் செய்கிறார்கள். 4,500 ரூபாய் பெறுமானமுள்ள அந்த நிலத்திற்கு நில அடைமான பாங்கியிலே கடன் வாங்குவதாக இருந்தால், ஆயிரம் ரூபாய் தான் கிடைக்கிறது. இனிமேல் நிலத்தின் விலை கீழே இறங்கப்போவது என்பது ஒருக்காலும் இல்லை. மேலும் மேலும் ஏறிக்கொண்டு போகுமே, தவிர, கீழே இறங்காது. நிலத்தின் விலை 4,500 ரூபாய் ஆக இருந்தால், 2,500 ரூபாயாவது கடன் கிடைக்கிற மாதிரி இருந்தால்தான் மிகவும் நன்மையாக இருக்கும்.

இப்பொழுது தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், க்ராப் லோன் தான் கொடுத்துக் கொண்டு வருகிறோம். தனி நபர் லோன் கொடுப்பதை நிறுத்திவிட்டோம். தனி நபர் லோன் விவசாயக் கூலிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். விவசாயக் கூலிகளுக்கு வீடு மட்டும் இருந்தால், தனி நபர் ஜாமீன் பேரில் ரூ. 50 அல்லது ரூ. 100 கடன் கொடுத்துக்கொண்டு வந்தோம்,

கஷ்டமான நிலைமையில் தனி நபர் ஜாமீனில் கடன் வாங்கி, அறுவடையானவுடன் திரும்பவும் அந்தக் கடனைக் கட்டிவிடுவது வழக்கம். இப்பொழுது க்ராப் லோன் கொடுப்பதால் சாதாரண ஏழை விவசாயக் கூலிகளெல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் மறுபடியும் தனி நபர் லோன் திட்டத்தைத் திரும்பவும் கொண்டுவரலாமா என்று யோசித்து, குறைந்தபட்சம் ஐம்பது ரூபாயாவது விவசாயக் கூலிகளுக்குக் கடன் கொடுத்தால் மிகவும் நன்மையாக இருக்கும்.

தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு சொசைட்டியிலும் தானியக் கடங்குகள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்பொழுது கவர்ன்மென்ட் மூலமாகத் தானியங்கள் ப்ரோக்யூர்மென்ட் செய்யவேண்டியிருப்பதால், இப்பொழுது யாரும் தானியத்தை அங்கே கொண்டு வைப்பது கிடையாது. ஏற்கனவே தானியத்தை வைத்தால் அதிகமான விலை ஏறும், விலை ஏறிய நேரத்தில் விற்றுக் கொள்ளலாம் என்று கூட்டுறவு தானியக் கிடங்குகளில் வைப்பார்கள். ஆனால், இப்பொழுது கவர்ன்மென்ட் மூலமாக ப்ரொக்யூர்மென்ட் செய்வதால், மூன்று மாதம் கழித்து விற்றாலும், அதே விலை தான் வரும் என்ற காரணத்தால் உடனடியாகவே விற்றுவிடலாம் என்று முடிவுக்கு வந்துவிட்டார்கள். தானியக் கிடங்குகள் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் அந்த ஊருக்கு வேண்டிய உரம், உற்பத்தி சாதனப் பொருள்கள், பூச்சி மருந்து தெளிக்கும் கருவி இம்மாதிரியான சாமான்களை வாங்கி அந்த இடத்தில் சேகரித்து வைத்து விவசாயிகளுக்குக் கொடுத்தால் மிகவும் நன்மையாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடிக்கின்றேன்.

திரு. ப. உ. சண்முகம் : கனம் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த கனம் அமைச்சர் அவர்கள், "கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஊழல்கள் சில இடங்களில், விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய சில இடங்களில் தான் இருக்கின்றன" என்று சொன்னார்கள். அதற்கு மாறாக, விரல் விட்டு எண்ணக்கூடிய சில இடங்களாவது நல்ல இடங்களாக இருக்குமா என்பதே சந்தேகம். சில இடங்களில் தான் ஊழல் இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். அதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. எனக்கு முன்னால் பேசிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் மிக அழகாக ஒன்று சொன்னார்கள். "சமுதாயத் துரோகிகள் இருக்கிறார்கள். அவர்களைப் பிடித்துப் பொது மக்கள் தான் கண்காணிக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அவருடைய வாதத்தை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். அத்தகைய சமுதாய துரோகிகள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்கள், கட்சி மாச்சரியம் இல்லாமல், தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தான் என்று நான் முதலிலேயே அழுத்தந் திருத்தமாகச் சொல்லிவிடுகிறேன். சமுதாயத் துரோகிகள் ஒரு கட்சியில் இருக்கிறார்கள் என்பதற்காக, கட்சிப் போர்வையில் புகுந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு எந்த அரசாங்கமும் பாதுகாப்பு அளிக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால், புனிதமான கூட்டுறவு ஸ்தாபனம் மோசமாக ஆகிவிடும், கெட்டு விடும், பாழ்பட்டு விடும் என்று நான் அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





இந்த மன்றத்திலே நடைபெற்ற நிதி நிலை அறிக்கைமீதான விவாதத்தின்போது நான் குறிப்பிட்டேன். இப்பொழுதும் நான் வலியுறுத்திச் சொல்லுகிறேன். கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையைக் குறித்து நான் சொல்லும் கருத்து தவறு என்று யாராலும் மறுக்க முடியாது. ஆனால், விசாரணைதான் இல்லை. கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் பங்குப் பணம் வசூலித்திருக்கிறார்கள். வசூலித்ததற்கு ரசீது கொடுத்திருக்கிறார்கள். டுப்ளிகேட் ரசீதுகளைக் கொண்டுபோய்க் கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையிலே ஒப்படைத்து இருக்கிறார்கள். ஆனால், பணத்தைக் கட்டவில்லை. நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தைக் கட்டாமல் மோசடி ஏற்பட்டிருக்கிறது. இந்த மோசடியைக் குறித்து ஆடிட் அப்ஜெக்ஷன் வந்திருக்கிறது. இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் என்ன என்று சொல்வேன் ?

அதே சர்க்கரை ஆலையைக் குறித்து எனக்கு வந்திருக்கும் இன்னொரு தகவலையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலைக்கு இயந்திரம் வரவழைத்து 71 லட்சம் ரூபாய்க்கு சர்க்கரை ஆலைக்கு அருகிலேயே கொண்டுவந்து கொடுக்க ஒரு கம்பெனி டென்டர் போட்டது. 79 லட்ச ரூபாய்க்கு இன்னொரு கம்பெனி டென்டர் போட்டது. அந்தக் கம்பெனி "சென்னை துறைமுகத்தில் தான் கொடுப்பாம்" என்று நிபந்தனை விதித்தது. ஆனால், அந்த சர்க்கரை ஆலை நிர்வாகிகள் துறைமுகத்தில் டெலிவரி கொடுக்கிற கம்பெனியில் 79 லட்ச ரூபாய் டென்டரை ஏற்றுக் கொண்டார்கள். சர்க்கரை ஆலைக்கு அருகிலேயே கொண்டுவந்து கொடுக்கிறேன் என்று சொல்லிய கம்பெனியின் 71 லட்ச ரூபாய் டென்டரை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். இதுவும் ஆடிட் அப்ஜெக்ஷனில் இருக்கிறது; ஆட்சேபணையில் இருக்கிறது. கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் இருக்கும் அத்தனை பேரும் காங்கிரஸ்காரர்கள் என்றால், அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. ஏன் காங்கிரஸ்காரர்களைப் போட்டீர்கள் ? என்று கேட்கக்கூடிய அவ்வளவு சின்ன புத்தியுடையவன் அல்ல நான். அது கூடச் செய்வதற்கு அமைச்சருக்கு உரிமை இல்லையா ? செய்து கொள்ளட்டும். ஆனால், அவ்வளவு நல்லவர்கள் இருந்தும் கூட, அங்கே இத்தகைய சமுதாயத் துரோகம் நடக்கலாமா ? என்பது தான் கேள்வி. அதைக் கண்காணிக்க வேண்டாமா ? அதைக் கண்காணிக்க ஏன் அரசாங்கம் தயங்குகிறார்கள் ? மயங்குகிறார்கள்?

இன்னொன்றும் சொல்வேன். ஒன்றரை, இரண்டு ஆண்டுகளாக சர்க்கரை ஆலையின் பங்குதாரர்கள் பொதுக்கூட்டம் கூட்டப்படவே இல்லை. எப்பொழுது கூட்டினாலும், டைரக்டர்கள் கூட்டத்திற்குக்கூட 'கோரம்' கிடையாது. 'கோரம்' கூட இல்லாத

அளவுக்கு, அந்த அளவுக்குக்கூட அக்கறை கொள்ளாதவர்கள், சர்க்கரை ஆலை டைரக்டர்களாகச் சர்க்காரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது வேடிக்கையாக இருக்கிறது; கேலிக் கூத்தாக இருக்கிறது. நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன், சர்க்கரை ஆலையில் இருக்கும் டைரக்டர்கள் அத்தனைபேரையும் கலைத்துவிட்டுப் புதிய டைரக்டர்களை நியமியுங்கள், யாரை வேண்டுமானாலும் நியமித்துக்கொள்ளுங்கள். ஒழுங்காக வேலை செய்யக் கூடியவர்களை நியமியுங்கள். கட்சி மாச்சரியம் இல்லாமல் நியமியுங்கள். காங்கிரஸ்காரர்களையே கூட நியமியுங்கள் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். டைரக்டர்கள் கூட்டம் போட்டால்கூட, 'கோரம்' இல்லாத இந்த நிலைமை ஓராண்டுக்காலமாக இருக்கிறது. உண்மையா, உண்மைக்கு மாறானதா என்று அரசாங்கம் கண்காணிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு ஸ்தாபனங்களில் நல்லவர்கள் வந்து பங்குகொள்ள வேண்டும் என்று எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நல்லவர்கள் வரவேண்டும் என்றால் எப்படி வர முடியும்? உள்ளே இருக்கிறவர்கள் விட்டால் தானே? "நாங்கள் தான் அதற்காகச் சட்டம் செய்துவிட்டோமே" என்று சொல்லுவார்கள். சட்டம் வைத்திருப்பது உண்மைதானா? என்று நான் கேட்கிறேன். நடைமுறைக்கு வந்ததா? என்று நான் கேட்கிறேன். நான் நல்லவனா? இல்லையா? என்ற வாதத்திற்குக் கூட நான் வரவில்லை. என்னையே கூட சேர்த்துக்கொள்ள மறுத்து விட்டார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். திருவண்ணாமலையில் கூட்டுறவு அர்பன் பாங்க் இருக்கிறது. அதிலே பங்குதாரராகச் சேர வேண்டும் என்று நான் மனுக் கொடுத்தேன். அப்பொழுது ஒருவர் முப்பது பங்குகள் எடுத்துக் கொள்ளலாம் என்ற சட்டம் இருந்தது. நான் மனுக் கொடுத்தவுடன், மெத்தக் கருணையோடு, அந்தத் தலைவர் இரண்டு பங்குகளை எனக்குக் கொடுத்தார். சரி ஏதோ பங்கு கொடுத்தாரே என்று பேசாமல் இருந்துவிட்டேன். "முப்பது பங்குகள் கொடுக்க வேண்டும்" என்று இன்னொரு மனுக் கொடுத்தேன். மனுக் கொடுத்த தேதிக்கு பிறகு, ஐம்பது பங்குதாரர்கள் தான் டைரக்டராக இருக்கலாம் என்று சட்டத்தைத் திருத்தினார்கள். ஐம்பது என்றிருந்தாலும் முப்பதாவது கொடுப்பார்களா? என்று டி.ஆர்.-க்கு எழுதிக் கேட்டேன். பணத்தைக் கட்டுங்கள் என்றார். பணத்தைக் கட்டினேன். ஒன்றரை ஆண்டுக் காலமாகப் பணம் அனாமத்துக் கணக்கில் இருக்கிறது. டி.ஆர். இடமிருந்து பதில் இல்லை. ரிஜிஸ்திரார் ஆஃப் கோவாப்பரேடிவ் சொசைட்டீஸ்ஸிடமிருந்து வந்த ஒரே பதில், சட்டமன்ற உறுப்பினருக்கு வந்த ஒரே பதில், "டி.ஆர். கவனித்துப் பதில் சொல்வார்" என்பது தான். ஒன்றரை ஆண்டுக் காலமாகக் கேட்கிறேன். பதில் இல்லை. கடைசியாகப் பணத்தைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்டு வாங்கிவிட்டேன். நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், சட்டமன்ற உறுப்பினருக்கே இந்தக் கதி என்று சொன்னால், நல்லவர்கள் யாராவது வந்து சேரவேண்டும் என்று சொல்வது கேலிக் கூத்தாக இருக்கிறது.



கனம் உறுப்பினர் திரு. தருமலிங்கம் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். ஓராண்டுக்கு ஒரு முறை மாற்று விட்டாலும், ஐந்தாண்டு என்றாவது ஆக்கக்கூடாதா? அது கூட வேண்டாம். இதே சட்ட மன்றத்தில் சென்ற முறை கூட்டுறவு அமைச்சராக இருந்த தொழில் அமைச்சர் கனம் திரு. வெங்கட்டராமன் அவர்கள் சட்டம் கொண்டுவந்தார். இரண்டு ஆண்டுகளுக்கு மேல், மூன்றாவது முறை கூட்டுறவு சங்கத்தில் யாரும் நிர்வாகிகளாக வரக்கூடாது என்று நகல் சட்டம் தாக்கல் செய்தார்கள். 11-00 a.m.
ஆனால் இந்தச் சட்டம் கைவிடப்பட்டுவிட்டது. நான் எப்போது கொண்டு வரப் போகிறீர்கள் என்று கேட்டுவந்தேன். பரிசீலிக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அதைக் கைவிட்டுவிட்டார்கள். நான் இப்போது சொல்கிறேன், இரண்டு முறைக்கு மேல் யாரும் நிர்வாகியாக, தலைவராக வரக்கூடாது என்று சட்டம் போடுங்கள்.

இன்றைக்குக் கிராமக் கூட்டுறவு சங்கங்களைக் கைவைத்துப் பார்த்தால் அத்தனையும் சொத்தை. ஒன்றிரண்டு கூட மிச்சப் படாது. இடைத்தேர்தல் காலத்தில் நிழலாக ஒருவர் நின்றார் என்று கேள்விப்பட்டவுடனே அவரைப் பிடித்து வழக்குத் தொடர்ந்தார்கள். வழக்குத் தொடர்ந்ததை ஆட்சேபிக்கவில்லை. அதே மாவட்டத்தில் எத்தனை பெரிய ஊழல்களைச் செய்தவர்களை எல்லாம் ஒரே ஒரு காரணம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக வழக்குத் தொடராமல் விட்டிருக்கிறார்கள். வேறு சமாதானம் கிடையாது. அவர்களது பெயரைச் சொல் என்று கனம் அமைச்சர் அவர்கள் கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். சொல்லச் சொன்னால் சொல்வதற்குத் தயாராய் இருக்கிறேன். இவ்வளவு மோசமான ஒரு இலாகா ஏன் இருக்கவேண்டுமென்று கேட்கவிரும்புகிறேன்.

இன்னும் ஒரு ஊழலைப்பற்றிச் சொல்கிறேன். மார்க்கெட்டிங் கமிட்டியைப் பொறுத்தது. சுவாரஸ்யமாகக் கூட இருக்கும். ஒரு விவசாயி கம்மபட்டு மார்க்கெட்டிங் கமிட்டிக்கு மணிலா மூட்டை பதினெட்டு கொண்டு வந்தார். அன்று விற்கப்படாத காரணத்தினால், அடுத்த வாரம் வருவதாகச் சொல்லி, அந்த மூட்டைகளை அங்கேயே போட்டுவிட்டு ரசீதும் பெற்றுச் சென்றார். அடுத்த வாரம் வந்தார். பார்க்கிற போது மூட்டை அங்கே இல்லை. கேட்டால் அவர் பெயரிலேயே மூட்டைகள் விற்கப்பட்டு, பணமும் அவர் கையொப்பமிட்டு வாங்கிக்கொண்டு போகப்பட்டிருந்தது. மிகப் பரிதாபகரமான நிலை. அவர் அங்கே சொல்லிப் பார்த்துப் பயனில்லை என்றவுடன் என்னிடம் வந்தார். போலீசுக்குத் தகவல் கொடுத்தேன். அங்கு இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சித் தலைவர்—அந்த விவசாயியை அழைத்து 2,000 ரூபாய் பெறுமான சரக்குக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து, அவரைக் கையொப்பமிடும்படி வற்புறுத்திக் கேசை அமுக்கிவிட்டார்கள். இவ்வளவு மோசமாக நடக்கிறதே, அதற்குக் காரணம் என்ன? கடுமையான தண்டனை கிடையாது. குற்றம் செய்பவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக

[திரு. ப. உ. சண்முகம்] [12th March 1966

இருந்தாலும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்ற நிலைமை இருந்தால், இப்படிப்பட்ட கையாடல் ஊழல்கள் எல்லாம் நடைபெறாது.

மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு வியாபாரிகளைத் தலைவர்களாகப் போடக்கூடாது என்று சட்டமியற்றியிருக்கிறார்கள். ஆனால் அவர் காங்கிரஸ்காரர் என்பதனால் வியாபாரியாக இருக்கக்கூடியவர் மார்க்கெட்டிங் சொசைட்டி தலைவராக இருக்கக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். இப்படிச் சட்டம் புறக்கணிக்கப்படுமானால், எப்படி நல்லவர்கள் உள்ளே வர முடியும்?

திருவண்ணாமலை அர்ப்பன் பாங்கில் ஒருவர் சினிமா ப்ரொஜெக்டரை வைத்து 5 ஆயிரம் ரூபாய் கடன் வாங்க முயன்றார். ஒரு இயந்திரத்தை வைத்துவிட்டு ஐந்தாயிரம் ரூபாய் பெற்றுக் கொள்வதாக இருந்தாலும் போய்த் தொலையட்டும். ஆனால் அந்த ஒரு இயந்திரத்தையே நான்கு பாகமாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தின் பேரிலும் 5 ஆயிரம் என்பதாக அவர்கள் 20 ஆயிரம் ரூபாய் பெற்றுப்போய்விட்டார். எப்படி நடந்தது? அவர் என்னுடன் இடைத்தேர்தலில் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர். அந்த நபர் காங்கிரஸ்காரர் என்பதினால் இத்தகைய கையாடல் நடைபெறலாமா? இதைக் கண்டுபிடித்த ஆடிட்டர் எங்கோ மாற்றப்பட்டார். உடனே பணம் கட்டப்பட்டு சரி செய்யப்பட்டது என்றாலும், இது இடைக்காலக் கையாடல் இல்லையா? அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டாமா? ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது?

இன்னும் சொல்லப்போனால் நான் ஒரு பெரிய குற்றச் சாட்டைச் சுமத்த விரும்புகிறேன். இன்றைக்கு இந்தக் கூட்டுறவு சங்கங்கள் தான் காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுச் சேகரிக்கும் ஏஜெண்டுகள். இதிலே வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் உள்ளே நுழைய இடம் கொடுக்கமாட்டார்கள். இவை காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு சேகரிக்கும் ஏஜெண்டுகளாகச் செயல்படுகின்றன. இந்த முறை மாறினாலொழிய கூட்டுறவு இயக்கமே உருப்படாது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. செ. சீனிவாசன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டிலே இப்போது நல்ல முறையில் வளர்ந்துகொண்டிருக்கிறது. இப்படி ஒரு நிலையானக் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிற நேரத்தில் ஒருசில ஊழல்கள் ஒன்றிரண்டு இடங்களில் இருக்கலாம், அதற்காக அவை காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு சேகரிக்கும் ஏஜெண்டுகளாக இருக்கின்றன என்று குற்றம் சாட்டுவது சரியாகாது. உண்மையை கவனித்துப் பார்த்தால் அநேக இடங்களில் இந்தச் சங்கங்கள் காங்கிரஸ்காரர்களுக்கு விரோதமான முறையில் தான் செயல்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சாதகமாகவும், அவர்கள் செய்கிற ஊழல்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படாமலும் நடந்து வருவதற்கு நான் பல ஆதாரங்களைத் தர முடியும்.



12th March 1966] [திரு. செ. சீனிவாசன்]

பரமக்குடி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. அங்கே நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. எதிர்க்கட்சிக்காரர்களால் நடத்தப்படும் சங்கங்களே ஆறு அல்லது ஏழு இருக்கின்றன. அவற்றில் நடக்கும் ஊழல்களைப்பற்றி பொறுப்பு வாய்ந்த பல முக்கியமான மனிதர்களால் புகார்கள் எழுதப்பட்டும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நடைமுறையிலும் சரி, நிர்வாகத்திலும் சரி நாளைய தேதி வரையில் அந்தப் புகார்கள் பரிசிலனை செய்யப்பட்டு பைசல் செய்யப்படவில்லை. காரணம் என்ன? அங்கு இருக்கக்கூடிய கூட்டுறவு அதிகாரிகளே அந்த எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சாதகமாக இருந்து வருகிறார்கள். அந்த நேரத்தில் சட்டசபையில் வந்து காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு சேகரிக்கும் ஏஜெண்டுகளாக அவை இருக்கின்றன என்று பேசுவதைவிட உண்மைக்கு மாறுபட்ட வாதம் கிடையாது.

இங்கே நமது அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைடிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். 50 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட பகுதிகளில் எல்லாம் செயல்படவேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்தத் திட்டத்தை முனிசிபாலிடி அத்தனைகளுக்கும் விஸ்தரிக்கவேண்டும். செலக்ஷன் க்ரேட் பஞ்சாயத்துக்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும். அப்போது தான் ஜனங்களுக்குப் பயன் அளிக்கக் கூடியதாக இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சங்கங்களுடைய க்ரெடிட் ஃபெசிலிடி பண்டு பற்றி டி.ஆர். சர்க்குலர் விட்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் ஷேர் காபிடலைப் போல பத்துமடங்கு, எட்டு மடங்கு, ஆறு மடங்கு என்று கடன் வாங்கிக்கொள்ளலாம். ஆனால் சங்கத்திலே காஷ் அட்வான்ஸ் எவ்வளவு இருக்கிறதோ, சங்க காபிடல் எவ்வளவு இருக்கிறதோ, அந்த அடிப்படையில் தான் கடன் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு அனுப்பியிருப்பதாக அறிகிறேன். இதனால் பல சங்கங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. புதியதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற சங்கங்கள் எல்லாம் இதனால் வெகுவாகப் பாதிக்கப்படக் கூடும். இதை எந்த முறையில் சங்கங்கள் பாதிக்கபபடாத வகையில் மாற்றி அமைக்கலாம் என்பது யோசிக்கப்படவேண்டும். அப்போது தான் கூட்டுறவு இயக்கத்திற்குப் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

மெம்பர்கள் நிறைய சேர்க்கவேண்டும். மெம்பர்களுக்கு எந்த விதமான பொறுப்பும் இல்லாமல் இருக்கிறது. வருஷத்திற்கு ஒரு முறை ஜெனரல்பாடி கூட்டவேண்டுமென்று இருக்கிறது. இருந்தும் குறிப்பிட்ட இருபது இருபத்தைந்து பேர்கள் ஒன்றுகூடி டைரெக்டர் எலெக்ஷனில் ஈடுபடுகிறார்களே தவிர, மெம்பர்களைக் கூட்டி, அதன் வளர்ச்சிக்கும், குறைபாடுகளை எடுத்துச் சொன்னால் அவற்றை நீக்கவும் தக்க வசதிகள் கிடையாது. ஆகவே, நம்முடைய விதிமுறைகளையெல்லாம் மாற்றி ஜெனரல் பாடி மீட்டிங்ஸ் எவ்வளவு அடிக்கடி கூட்டமுடியுமோ, அவ்வளவு அடிக்

[திரு. செ. சீனிவாசன்] [12th March 1966

கடி கூட்டினல்தான், அவ்வப்பொழுது ஏற்படும் குறைபாடுகளையெல்லாம் நிவர்த்திப்பதற்கு வழி பிறக்கும் என்பதைச்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏதோ டைரக்டர்ஸ் மீட்டிங் போட்டு தீர்மானத்தைப்போட்டு, ராடிஃபை செய்கிறோம் என்று இல்லாமல் அடிக்கடி மீட்டிங் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். எழுபத்தைந்து சதவிகிதம் ஆப் தி டோட்டல் மெம்பர்ஸ் ஆன் தி லிஸ்ட் கூடுகிற அளவுக்குக் குறையாமல் எவ்வளவு மெம்பர்களைக் கூட்டமுடியுமோ, அவ்வளவு பேர்களையும் கூட்டி அடிக்கடி ஜெனரல் பாடி மீட்டிங்ஸ் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் கூட்டுறவுத்துறை சம்பந்தமாகப் பிரச்னைகள் வரும்பொழுது, பேப்பர்கள் ஆபீசிலிருந்து வரும்பொழுது அந்த சர்க்குலர்களுடைய அர்த்தத்தைப் புரிந்து விவகாரத்தைப் புரிந்துகொள்வது கஷ்டமாக இருக்கிறது. வில்லேஜ் கோவாப்பரேடிவ் சொசைடிகளில் இருப்பவர்கள் இந்த சர்க்குலரையெல்லாம் புரிந்துகொள்ள முடியுமா? அவர்கள் ஏதோ அதிகாரிகள் சொல்வதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றி கூடுமான வரைக்கும் நல்ல முறையில் அவர்கள் பணியாற்றக்கூடிய வகையில் ஃபிளெக்சிபிளாக இருக்கக்கூடிய வழியைச் செய்ய வேண்டும். அதோடு அப்ளிகேஷன்ஸ் வந்தால், அவற்றை நல்ல முறையில் டிஸ்போஸல் செய்வதற்கும் வழிசெய்ய வேண்டுமென்று நான் கூட்டுறவுத்துறை அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஃபேர் ப்ரைஸ் ஷாப்களில் இருந்த கண்ட்ரோல்டு ஆர்டிகிள்ஸ் எல்லாவற்றையும் விநியோகம் செய்யவேண்டுமென்ற நல்ல கொள்கையை அரசாங்கம் வைத்திருக்கிறது. ஆனால் அந்த நல்ல கொள்கை பிரயோஜனம் இல்லாமல் போகக்கூடிய நிலை இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் இப்படிப்பட்ட ஆர்டிகிள்ஸ் சப்ளை செய்வதற்கு சம்பந்தப்பட்ட சிவில் சப்ளை அதாரிடிஸ், சங்கத்தில் உள்ள மெம்பர்களுக்குக் கொடுக்கக்கூடாது, கார்டு உள்ளவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று விதிமுறைகளைக் காட்டி நல்ல முறையில் எல்லோருக்கும் விநியோகம் செய்யமுடியாதபடி செய்துவிடுகிறார்கள். கூட்டுறவு முறையில், அந்தத் துறையில் மெம்பர்களாக இருக்கிறவர்களுக்கு கண்ட்ரோல்டு ஆர்டிகிள்ஸ் எல்லாம் கொடுக்கலாம் என்பதற்கு சிவில் சப்ளை அதாரடிஸ் தடையாக இருக்கக்கூடாது, அப்படிச் செய்தால் தான் கூட்டுறவு சங்கங்களில் அதிகமான அளவுக்கு மெம்பர்களாக சேருவார்கள். இப்பொழுது ஒரு சங்கத்தில் 50 ரூபாய் ஷேர் போடுங்கள் என்றால், இதனால் என்ன உபயோகம் என்றுதான் கேட்கிறார்கள். ஆகவே, ஏதோ மெம்பர்களாக இருந்தால், அவர்களுக்குக் கண்ட்ரோல்டு ஆர்டிகிள்ஸ் எல்லாம் கிடைக்கும் என்று இருந்தால் தான், அவர்கள் விருப்பத்துடன் சேருவார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தான் அப்படிப்பட்ட பொருள்களை வழங்க வேண்டும் என்று இருக்கிறது, வேறு வெளியிலே வாங்க முடியாது. ஆகவே மெம்பர்களாக இருக்கிறவர்களுக்கு இந்தச் சலுகையைக் கொடுக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் கூட்டுறவுச் சங்கங்கள் நசித்துப்போகக்கூடிய நிலை ஏற்படும் என்பதை



12th March 1966] [திரு. செ. சீனிவாசன்]

சொல்லிக் கொண்டு, அவர்களுக்கு இந்தச் சலுகையைச் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்து கொள்கிறேன். வணக்கம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, Co-operatives which have to play a prominent part in the country have been existing for long and with confidence we are now trying to popularise this movement. There may be certain shortcomings in the movement. Government with rules and promulgation of sufficient orders must rectify the shortcomings that are being noticed here and there.

Under Co-operative movement agriculture credit has been playing a prominent part. We have been trying to give loans to the agriculturists. Co-operative institutions have been extending loans in this direction. There are different agencies to provide credit facilities for agriculturists. I would like to request Government to examine how far it would be desirable to channelise these loans to the agriculturists through different agencies inasmuch as there is a tendency in rural areas on the part of agriculturists to have more loans and then fail to repay them within the stipulated time. We must bear in mind that we cannot be channelising these loans through different agencies, viz., through Revenue Department, through Panchayat Unions and several other agencies and at the same time ask the central institution or Co-operative institutions to finance primary societies and collect the dues in time. The main aspect should be that the ryot should not be over-financed to contribute for speculation and for creation of inflation. In such circumstances Government must bear this in mind and avoid channelising all these loans through different agencies. I would like to suggest that the takkavi loans that are being given to ryots by Revenue Department may be channelised through Co-operative societies.

Regarding loans that are given to societies, which are giving short-term loans to agriculturists depending on seasonal conditions, there is difficulty in collecting dues from agriculturists and these societies are not able to repay the loans taken from Reserve Bank. The Hon. Minister suggested a target of Rs. 80 crores. How far it would be desirable in extending loans like this? Is it necessary that we must finance to this order? What is the purpose in financing in such proportion, when the ryot or society is not in a position to repay the loans in time? We must see how far we would be able to help or benefit the ryot by giving so many loans. We have overfinanced certain agencies and we are now finding the position difficult. We have seen certain banks' over-dues are accumulating with the result genuine persons who are sincerely paying their dues are finding it difficult to get loans when they require the same badly.

Regarding diversification of units I am in favour of it. At the same time we must bear in mind that in our enthusiasm for making units 'viable', we may not amalgamate several societies doing

[Sri C. Chiranjeevulu Naidu] [12th March 1966

useful work. Some multipurpose societies are there doing useful work. In the matter of amalgamation, the betterment of the people of the locality should be the aim. In the matter of amalgamation of societies doing useful work, they should adopt a go slow policy. I think Rs. 2 lakhs is fixed as target for " viable units ". On what basis is this going to be worked out? Taking into consideration the area of operation, they may amalgamate societies.

Regarding Co-operative department, I would like to say that the department is taking all possible steps to popularise the movement. The Revenue department is slowly entering into this field and making things impossible for Co-operative department. Whenever we take into consideration the efficiency of any department, it must be allowed to function on its own for some time without any other department encroaching on it. We have fixed procurement to be done by taluk marketing societies under Co-operative department. But at the same time we have asked the Revenue department to do the distribution. How far will it be successful? There is no co-ordination between the Revenue and Co-operation departments. For rice and paddy distributed, proper accounts ought to be maintained. This aspect may be considered. I would like to say that the basic purpose when the co-operative movement was started was to develop marketing. That aspect we have completely ignored now. We have been trying to see how to encourage credit. But no progress has been made in the direction of popularising 'marketing'. For marketing to develop, accounts should be properly maintained. The co-operative department must move in the right direction in this line.

Regarding provision of loans, the Reserve Bank is insisting on certain in-puts. We are not able to provide proper fertilizers to ryots. Taking into consideration that Central Government is to give another Rs. 3 crores, we have to remember that we have to provide Rs. 17 crores in kind. Is the Government in a position to provide proper fertilisers? You must take this into consideration and see whether it would be possible to provide so much of fertilisers. At the same time it should be realised whether it would be possible to conform to the in-puts stipulated by the Reserve Bank.

In addition to co-operative societies, we have private dealers for the distribution of fertilisers. No other State has taken such a sort of attitude. It is a controlled commodity. The Government should not entrust the distribution to private dealers. If they feel that the co-operatives are not able to do the distribution properly, then they can entrust it to other people.

Regarding fixed deposits, if the Government remove the ceiling on interest, I think we may be able to tap more deposits and make the survival of the societies better. With these words, I conclude my speech.



12th March 1966] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

**திரு. ஆர். வி. சுவாமிநாதன் :** கனம் தலைவர் அவர்களே, நான் இந்த டிமாண்டின் மீது பேசுவதாக இல்லை. நண்பர்கள் பலர் பேசிய பிறகு எனக்கும் பேச வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தில் காங்கிரஸ்காரர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் அதிகச் சலுகை இருக்கிறது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், எங்கள் கட்சிக்காரர்களைக் கேட்டால், எதிர்க்கட்சிக்காரர்கள் பல சொசைடிகளில் உட்கார்ந்துகொண்டு அக்கிரமம் பண்ணுகிறார்கள், மந்திரிகளிடம், அதிகாரிகள் முறையிட்டால் கூடக் கவனிக்க மாட்டேன் என்கிறார்கள்; பழைய ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் கூட்டுறவு இயக்கத்திலே பிடித்த இடத்தை—இப்போது ஜஸ்டிஸ் பார்ட்டி இல்லை மறுபடியும் அதை ஆரம்பிக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருப்பதாகப் பேப்பரிலே செய்தி வந்திருக்கிறது—விடமாட்டேன் என்கிறார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஜஸ்டிஸ் பார்ட்டி போன பிறகு அவர் பையன் தான் இருக்கிறாரே தவிர, ஜஸ்டிஸ் பார்ட்டி இல்லை.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன் :** ஜஸ்டிஸ் பார்ட்டியைச் சேர்ந்த அவர்கள் தாங்கள் போகும்போது தங்கள் பையன்களிடம் 'இதுதான் உன்னுடைய சொத்து' என்று கோவாப்பரேடிவ் சொசைடிகளை ஒப்படைத்து விட்டுப் போகிறார்கள். பிறகு அவர்கள் காங்கிரசிலோ, டி.எம்.கே.-யிலோ சேருவார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஜஸ்டிஸ் பார்ட்டி சாமியப்பா அவர்களின் மகன் ராமலிங்க முதலியார் காங்கிரஸ்காரராகத்தான் இருக்கிறார்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன் :** ஏதோ, அத்திப் பூத்த மாதிரி யோக்கியமாக ஒரு ராமலிங்க முதலியார் இருக்கிறார், எங்கள் கட்சியில். நான் ஒரு விஷயத்தை மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறேன். இந்த சொசைட்டிகள், பெரும்பாலும் தவறுதலாக நடக்கின்றன என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மற்ற மாகாணங்களில் இருக்கிறவர்கள் நம்முடைய மாகாணத்தில் கோவாப்பரேட்டிவ் சொசைடிகள் பிரமாதமாக நடக்கின்றன என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் ஒருவன் வீட்டிலுள்ள 16 குழந்தைகளில் எந்தக் குழந்தை நல்ல குழந்தை என்று கேட்டதற்கு 'கூரை மேல் ஏறி கொள்ளி வைத்துக் கொண்டிருக்கிறவர்கள்தான் இருப்பதிலே நல்ல பிள்ளை' என்று சொன்னால் மற்றப் பிள்ளைகளைப் பற்றி நாம் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. அதே போன்று கோவாப்பரேடிவ் மூவ்மெண்ட் தமிழ்நாட்டில் பிரமாதம் என்றால், மற்ற மாகாணங்களில் எப்படி இருக்கும் என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

கூட்டுறவு இயக்கம் இவ்வளவு மோசமான நிலைமையில் இருக்கக் காரணம் என்ன என்பதைப்பற்றிக் கோவாப்பரேடிவ் அதிகாரிகளும், அரசாங்கமும், மற்றக் கட்சியினரும் தெரிந்து கொள்ள வேண்டும். முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்பு

கிறேன். மேல் நாடுகளில் பல ஊர்களில் நான் பார்த்தேன். ஸ்வீடன், டென்மார்க், பின்லண்டு, நார்வே போன்ற இடங்களில் எல்லாம் கோவாப்பரேட்டிவ் இயக்கம் ரொம்பப் பிரமாதமாகச் செயல்பட்டு வருகின்றது. பிரான்சிலே நல்ல முறையிலே நடந்து வருகிறது. அங்கெல்லாம் சொசைடிகளில் ஏதாவது தவறு நடந்தால் அரசாங்கத்தில் இருக்கும் அதிகாரிகள் சூப்பர்சீட் பண்ணி விடுகிறார்கள். அதற்குப் பிறகு டிப்பார்ட்மெண்டிலிருந்து ஆபீசரைப் போட்டு நடத்திச் செல்கிறார்கள். அங்கு அரசியலில் இருப்பவர்கள் கோவாப்பரேட்டிவ் இயக்கத்தில் இருக்க முடியாது. ஆனால் நம்முடைய நாட்டில் அந்த மாதிரி சூப்பர்சீட் பண்ணினால் நம்முடைய அதிகாரிகள் சென்று சாப்பிட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். சாதாரணமானவர்களைவிட இந்த அதிகாரிகளுக்குத் தந்திரமாக, எதிலும் அகப்பட்டுக்கொள்ளாமல் சாப்பிட்டுவிட்டு எப்படித் தப்பித்துக் கொள்வது என்பதெல்லாம் நன்றாகத் தெரியும். அங்கு அப்படி இல்லை. இங்கு பணம் சேர்க்க ஒரு வழியாக கோவாப்பரேட்டிவ் மூவ்மெண்டை நினைக்கிறார்கள். பத்துப் பேரை மட்டுமே ஷேர்ஹோல்டர்சாக வைத்துக்கொண்டு ஒரு சொசைடியை ஆரம்பித்து விடுவார்கள். எங்கள் பகுதியில் கிராமங்களில் மீன் பிடிப்பதிலே தப்புத் தண்டா வருகிறது என்ற காரணத்தால் அதைக் கோவாப்பரேட்டிவ் சொசைடிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்தார்கள். மீன் பிடிப்பதற்கான குத்தகையை கோவாப்பரேட்டிவ் சொசைடிக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது அங்கிருக்கிறவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் நாலைந்து ஆபீசரோடு சேர்ந்து கொண்டு, கோவாப்பரேடிவ் சொசைட்டி என்ற பெயரால் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் ராசிமங்கலம் என்ற பகுதியில் காண்ட்ராக்ட் சொசைடி என்று சொல்லிக் கொண்டு ஒருவர் வேலை செய்கிற ஆட்கள் பெயரில் எல்லாம் ஷேர் ஒரு ரூபாய் என்று வைத்துக்கொண்டு காண்ட்ராக்ட் எடுக்கிறார். இந்தமாதிரித் தப்பான வழியில் நடப்பதைத் தடுத்தாக வேண்டும். நான் பிரான்சுக்குச் சென்றிருந்தபோது, 'உங்கள் நாட்டிலே கோவாப்பரேட்டிவ் மூவ்மெண்டு இவ்வளவு பிரமாதமாக நடக்கிறதே, எப்படி?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் 'இங்கு அரசியல் கட்சிக்காரர்கள் கோவாப்பரேடிவ் மூவ்மெண்டில் கிடையாது. அரசியலில் உள்ளவர்கள் இதற்குள்ளே போக முடியாது' என்று சொன்னார்கள். (ஆரவாரம்) ஏதாவது அரசியல் ஸ்தாபனங்களிலே ஏதாவது ஒரு பதவிக்கு நிற்க வேண்டுமென்றால் சொசைடி அதற்கு பர்மிஷன் கொடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் அவர்கள் ராஜிநாமா பண்ணிவிட்டுத்தான் நிற்கவேண்டும். எம்.எல்.ஏ. என்று மட்டுமல்ல; எந்த அரசியல் ஸ்தாபனத்திலும் அவர்கள் மெம்பராக இருக்கக்கூடாது. அப்படி மெம்பராக இருக்கிறவர்கள் கோவாப்பரேட்டிவ் இயக்கத்தில் நுழையவே முடியாது. நம்முடைய நாட்டிலே எப்படி இருக்கிறது என்றால், கோவாப்பரேட்டிவ் இயக்கத்தில் இருக்கிறவர்கள் அந்தப் பகுதியில் எந்தக் கட்சிக்குச் செல்வாக்கு ஜாஸ்தியாக இருக்கிறதோ அதிலே நுழையப் பார்க்கிறார்கள்; அரசியலில் இருப்பவர்கள் கோவாப்பரேட்டிவ் இயக்கத்திற்குள்ளே நுழையப் பார்க்கிறார்கள். சென்னை





மாகாணத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே கோவாப்பரேடிவ் சொசைடிகள் பரிசுத்தப்படுத்தப்பட வேண்டுமென்றால், அதற்கு அரசியல் சம்பந்தம் இருக்கக்கூடாது என்ற நிலைமையை உண்டாக்க வேண்டும். அதற்கென்று தனியாக ஒரு சட்டத்தைச் செய்ய வேண்டும். எப்படி யுனிவர்சிடி ஒரு அடானமஸ் பாடி ஆக இருக்கிறதோ அதே போன்று இதையும் தனியாகப் பிரித்து விட வேண்டும். இதிலே மந்திரிக்குக்கூட எந்த விதமான அதிகாரமும் இல்லாத நிலைமை இருந்தால்தான் பரிசுத்தமாக இருக்க முடியும். நான் பிரான்சுக்குப் போயிருந்தபோது 'நெல் விவசாயம் செய்யப்படும் முறையைப் பார்க்கவேண்டும்' என்று சொன்னேன். அதற்கு 'எங்களைக் காட்டிலும் இதிலே உங்களுக்கு உதவி செய்யக்கூடியவர்கள் கோவாப்பரேட்டிவ் இயக்கத்தில் இருப்பவர்கள்தான்' என்று சொல்லி அவர்களை ஏற்பாடு செய்யச் சொன்னார்கள். மார்சேயிலிருந்து 200 மைல் தூரத்திற்கு, அரசாங்கம் கூடச் செய்ய முடியாத அளவுக்கு என்னை அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தார்கள். அங்கு அரசாங்கம்போல் நடக்கிறது கோவாப்பரேட்டிவ் இயக்கம். அரசியலுக்குச் சம்பந்தப்படாமல், அரசியல் கட்சிகளுக்குச் சம்பந்தப்படாமல் இருக்கிறது. அதே மாதிரி இங்கும் செய்யவேண்டும். ஒரே ஒரு வார்த்தையை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் எல்லாம் தாங்கள் உற்பத்தி செய்த பழங்கள், காய்கறிகள் எல்லாவற்றையும் மூட்டை கட்டி பஸ் ஸ்டாண்டிலே கொண்டு வந்து வைக்கிறார்கள். இவற்றை எல்லாம் வீட்டுக்கு முன் வைக்கிறார்கள். மறு நாள் அவர்களுக்கு என்ன தேவையோ அதன் லிஸ்டையும் அங்கேயே வைத்து விடுகிறார்கள். லாரி வந்து இவர்கள் வைத்திருக்கக்கூடிய சாமான்களை ஏற்றிச் சென்றுவிடுகிறது. மறுநாள் அவர்கள் என்னென்ன வேண்டுமென்று லிஸ்டில் குறித்துக் கொடுத்திருக்கிறார்களோ அவை கொண்டு வந்து தரப்படுகின்றன. இந்தமாதிரி ஒரு கிராமத்தில் உள்ள விவசாயிகள் அன்றாடம் விற்கக்கூடிய சாமான்களையும், அல்லது ஆறு மாதம். ஒரு வருடத்திற்கு ஒரு தடவை விற்கக்கூடிய சாமான்களையும் கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் விற்கிறார்கள். தங்களுக்கு 11-30 a.m. வேண்டியதையும் கூட்டுறவு சொசைட்டிகள் மூலமே வாங்குகிறார்கள். கூட்டுறவு இயக்கம் ப்ரொக்யூர் செய்யவேண்டும். இராமநாதபுரம் ஜில்லாவில் சிவகங்கை தாலூகாவில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அறுபத்தைந்து கிலோவிற்கு ரூபாய் 25.85 பைசா என்று அரசாங்கம் விலை நிர்ணயித்திருக்கிறது. ஆனால் கூடுதல் ஒன்றிரண்டு கிலோக்கள் வாங்குகிறார்கள். ஏன் இப்படிக் கூடுதலாக வாங்குகிறீர்கள் என்று கேட்டால் ஈரம் இருக்கும் என்று சொல்கிறார்கள். உங்கள் சம்பளத்தையா பிடிக்கப்போகிறார்கள் என்று கேட்டதற்கு இப்போது அப்படி வாங்குவதில்லை என்று சொல்கிறார்கள். ஏன் ஏழைகளை ஏமாற்றுகிறீர்கள் என்று சண்டை போட்டேன். அவர்களுடையது என்றால் 64 கிலோதான் இருக்கும். ஆகவே யாராக இருந்தாலும் சரி எப்படிச் சுரண்டுவது என்றுதான் பார்க்கிறார்கள், அவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் சரி, தி.மு.க.வாக

இருந்தாலும் சரி, அங்கு போனால் எப்படிச் சுரண்ட முடியும் என்றுதான் பார்க்கிறார்கள். ஆகவே, தேசிய நோக்கோடு, கட்சிப் பாகுபாடு இல்லாத நிலையில் இந்தக் கூட்டுறவு இயக்கத்தைச் சுத்தம் செய்ய நாம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சோ. ஆறுமுகம்:** கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் 2 கோடியே 72 லட்சம் ரூபாய்க்கு மேல் உள்ள இந்த மான்யக் கோரிக்கையை இங்கு வைத்திருக்கிறார்கள். கூட்டுறவுப்பற்றிப் பேசுகிறபோது இதி லுள்ள பல குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு நான் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை யொட்டி ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்தைத் துவக்கி வைக்கிறபோது, கூட்டுறவு இயக்கம் புனிதமானது என்று பேசியிருந்தாலும் இந்தக் கூட்டுறவு இயக்கத்தில் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன என்பதை எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் சேலம் நகரைச் சேர்ந்த ஒருவருடைய ஊழலைப்பற்றி எடுத்து விளக்கிச் சொன்னார்கள். இந்தக் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றால் 5 வருடங்களுக்கு ஒரு முறை தான் தேர்தல் நடைபெறவேண்டும். ஐந்து வருடங்கள் பதவி வகித்தவர்கள் மீண்டும் அதில் அங்கம் வகிக்கக்கூடாது என்ற கட்டாயத்தை ஏற்படுத்தவேண்டும். சர்க்கார் கூட இந்த முறையில் ஆலோசித்ததாகத் தெரிகிறது. இடையில் இந்த நிர்வாகத்தில் அதிகமாகப் பங்கு எடுத்துக்கொண்டிருக்கிற பெரும் புள்ளிகள் காங்கிரஸ் நண்பர்கள் இதில் தலையிட்டதால் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் விலகி மீண்டும் அவர்கள் தேர்தலுக்கு நிற்கலாம் என்ற விதி ஏற்படுத்தப்பட்டது. அப்படியிருப்பதினால் அது அவர்களுக்கு நன்மையாக இருக்கும். மீண்டும் அவர்கள் வர வாய்ப்பிருக்கும் என்ற நிலையில் சர்க்கார் திட்டத்தில் அவர்கள் தலையிட்டு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வேண்டும் என்பதைக்கூட மாற்றியிருக்கிறார்கள்.

தற்சமயம் ரிசர்வ் பாங்கிலிருந்து லோன் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவை விவசாயிகளுக்கு நேரடியாகப் போய்ச்சேருவதில்லை. ஆகவே மகசூல் சமயத்தில் அவர்களுக்கு லோன் வழங்கப்பட வேண்டும். நிலத்தை அடமானம் வைத்துக்கொண்டு மூன்று வருடங்களுக்குக் கொடுப்பது தவிர்க்கப்பட்டும் ஒரு ஆண்டுக்குக் கொடுப்பதும் தவிர்க்கப்பட்டும் ஆறு மாதம் லோன் தான் தர வேண்டும் என்று சொன்னதாகக் கருத்தை வைத்துக்கொண்டு அந்த முறைதான் கையாளப்பட்டு வருகிறது மாவட்டங்களில் நடக்கும் மத்திய பாங்குகளில். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவு இயக்கங்கள், கிராம நாணயச் சங்கங்கள், இவை கூடப் பாதிக்கப்படுகின்றன இதனால். அதன் காரணமாக விவசாயிகள் நன்மை அடைய முடியாத நிலை ஏற்படுகிறது. ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம் பற்றிய குறிப்புக்களைத் தந்திருக்கிறார்கள், இத்திட்டம் 274 வட்டாரங்களில் நடைபெறுவ





தாக. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டம் சென்ற ஆண்டு வந்தது. மாடுகள் வாங்குவதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகவும், நீண்ட காலக் கடன்கள் யூனியன்களில் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு இயக்கங்களில் இருந்துதான் தரப்படவேண்டும் என்று உத்தரவு வந்தது. ஆனால் யூனியன் வட்டாரங்களில் இருந்து சொசைட்டிகளுக்கு மாற்றப்பட்டு விட்டது. பத்து வருடத் தவணையில் கொடுக்க வேண்டுமென்று முன்னால் யூனியனில் இருந்த இத்திட்டம் வந்து ஒரு ஆண்டுக்கு மேலாகியும் சொசைட்டிகளுக்கு இந்த உத்தரவுகள் சரியாக வந்து சேரவில்லை. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இங்கிருந்து வருகிற உத்தரவுகள் சரியாக நடைமுறையில் செயல்படுத்தப்படுவதில்லை. ஆகவே முன்னால் இருந்ததுபோலவே யூனியனிடத்தில் இதை ஒப்படைப்பது நலம்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய பாங்கின் தலைவராக இருப்பவர் இந்த மன்றத்தில் அங்கத்தினராக இருக்கிறார். நீண்ட காலமாகப் பரம்பரைச் சொத்தாக அவர் அந்த பாங்கின் தலைவராக இருக்கிறார். அவருடைய தலைமையின் கீழ் இயங்கக்கூடிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமும், பல விவசாயக் கூட்டுறவு கிராம நாணயச் சங்கங்கள் மூலமாகவும் கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். சின்னமுத்தயம்பேட்டை கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 80,000 ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மேட்டுப்பாளையம் கூட்டுறவு சொசைட்டியிலும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் பரமத்தி கூட்டுறவு சொசைட்டியிலும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி 40,000, 50,000, 80,000 ரூபாய் என்று நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இவைகளில் விசாரணை செய்யவேண்டுமென்று அதிகாரிகளை அனுப்புகிறார்கள். அவர்கள் விசாரணை செய்கிறார்கள். பிறகு என்னவாகிறது என்று பார்த்தால், பரமத்தியில் அந்த சொசைட்டியில் தலைவராக இருந்த ஆளையே காணவில்லை. ஆகவே விசாரணை நடைபெறவில்லை என்ற நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. சேலம் கூட்டுறவு மத்திய பாங்குத் தலைவரின் நிர்வாகத்தில் பெரிய ஊழல்கள் நடைபெறுகின்றன. சேலத்தில் கூட்டுறவு இயக்கத்தில் உள்ள அங்கத்தினர்கள் ஏதாவது குறைகள் சொன்னால் அவர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். அம்மாப்பேட்டை எஸ். நம்பர் 532-ல் தலைவர் மீது புகார்கள் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன. அமைச்சர்களுக்கும் அனுப்பப்பட்டன என்று அதில் கையெழுத்து இட்டவர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். ஒருவருக்கு மாயாபஜார் என்ற ரகம் சேலையை நெய்யக் கொடுக்கிறார்கள். அது 66 கஜம் நெய்யவேண்டும். 1964-ல் இருந்து 1965-ஜூன் வரை வேலை இருக்கும். இதற்காக 111 ரூபாய் கூலி தரப்படுகிறது. ப்ராவிடன்ட் பண்ட் ரூ. 7.80 போக மீதி கிடைக்கிறது. ஆனால் விண்ணப்பத்தில் கையெழுத்திட்டார்கள் என்பதற்காக அதை மாற்றி வேறொரு ரகம் கொடுக்கப்படுகிறது. அது 100 கஜம் நீளம் உள்ள வேஷ்டி ரகம். ஆனால் இதற்குக் கொடுக்கப்படுகிற கூலி 66 ரூபாய்தான். அதிலும்

ப்ராவிடன்ட் பண்ட் போக மீதிதான் கிடைக்கும். நிகரமாகக் கிடைப்பது 43 ரூபாய் 80 காசுதான். இவ்விதமாக 50-க்கு மேற்பட்டவர்கள் இன்றையதினம் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற கூட்டுறவுத் துறைப் பதிவாளர் அவர்கள் இதற்காகக் கொடுக்கப்படுகின்ற விண்ணப்பத்தை வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அதன் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக நாளது வரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 1953-வது ஆண்டுக்கு முன்னால் இதே தலைவர் ஒரு தினக் கூலியாக இருந்து கொண்டிருந்தார், இன்றைய தினம் ஒரு பெரிய முதலாளியாக இருந்து கொண்டிருக்கிறார், பல லட்சக் கணக்கான ரூபாய்களைக் கொண்ட ஒரு அதிபராக இருக்கிறார். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் அங்கு இருக்கின்ற மத்திய பாங்குத் தலைவர் முதற்கொண்டு, இப்படிப்பட்ட தலைவர்கள் வரை ஒரே பிடியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். பகிரங்கமாகச் சொல்லவேண்டுமென்றால், கெய்ரானைப்பற்றி முன்னால் பேசப்பட்டது—அதே போன்று சேலம் மாவட்டத்திலும் குறிப்பிடத்தகுந்த இப்படிப்பட்ட கெய்ரான்களைப் பார்க்க முடியும். அந்த அளவுக்கு ஊழல்கள் நடைபெறுகின்றன. இவைகளை எல்லாம் நீக்குவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

இவற்றை எதிர் வரிசையில் உள்ளவர்கள் சொல்லுகிறார்களோ என்று கருதி நடவடிக்கை எடுக்காமல் இருந்து விடக்கூடாது. கனம் அமைச்சர் அவர்கள் அப்படி இருக்க மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

அதே போல் வட்டாரம், யூனியன் என்று தனித்தனியாக இருக்கிறது. திருச்செங்கோடு, சங்ககிரி இரண்டும் ஒரே யூனியனாக இருந்து கொண்டிருக்கிறது. திருச்செங்கோடு தனியாக ஒரு யூனியனாக இருக்கவேண்டும் என்ற முறையில் அங்குள்ள சங்கங்களை எல்லாம் இணைக்கவேண்டும் என்று பல முறை சொல்லியும் கூட, நாளது வரையிலும் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காரணம் சங்ககிரி வட்டத்தைச் சேர்ந்த தலைவர் அவர்கள் சேலம் மத்திய பாங்கில் தலைவராக இருக்கின்ற காரணத்தால், சங்ககிரி வட்டத்தோடு திருச்செங்கோட்டையும் சேர்த்து ஒரே யூனியனாக வைத்து நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

* திரு. சு. சின்னையன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கூட்டுறவு மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது மாகாணத்தில் கூட்டுறவு ஸ்தாபனம் மலைபோல் வளர்ந்திருக்கிறது என்பதைப்பற்றி இந்த மாநிலத்தில் இருக்கின்றவர்கள் மட்டுமல்ல, அடுத்த மாநிலத்தில் இருக்கின்ற அத்தனை பேர்களும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். முக்கியமாக கூட்டுறவுத் துறை சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் மிகச்



சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது என்பதைப்பற்றி மற்ற ஜில்லாக்களில் இருக்கின்றவர்கள் எல்லாம் பொறாமைப் படுகின்ற அளவுக்கு சேலம் ஜில்லா, கூட்டுறவுத்துறையில் முன்னேறியிருக்கிறது என்றால், எந்த அளவுக்கு சேலம் ஜில்லாவில் கூட்டுறவுத் துறை முன்னேறியிருக்கிறது என்பது நன்கு விளங்கும். இங்கேயிருக்கின்ற எதிர்கட்சி அங்கத்தினர்கள் உண்மைக்கு மாறாக பல கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு ஸ்தாபனத்தில் திரு. சுப்பிரமணியக் கவுண்டர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற பணி பெரியது. எந்த நேரத்திலும், அவர்கள் கூட்டுறவு சொஸைட்டிகள் இன்னின்ன முறையில் நடைபெற வேண்டும், கூட்டுறவு இயக்கம் வளரவேண்டும் என்பதற்காக இரவும் பகலும் பாடுபட்டு வருகிறார். கூட்டுறவு இயக்கம் முன்னேற வேண்டும் என்பதற்காகப் பாடுபடவேண்டும் என்பதில் கங்கணம் கட்டிக்கொண்டு, அதற்காகப் பல வழிகளில் பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலுள்ள ஒவ்வொருவரையும் அழைத்துப் பேசுவார்கள். இந்த இயக்கம் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதற்காகப் பல கருத்துக்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அங்கங்கே சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். இந்தக் கடலில் எப்படி கூவம் ஆற்றிலுள்ள தண்ணீரும், சாக்கடைத் தண்ணீரும் வந்து கலக்கிறதோ அதைப்போன்று நூற்றுக்கணக்கான, லட்சக்கணக்கான அளவில் இருந்து கொண்டிருக்கின்ற கூட்டுறவு இயக்கத்தில், 100-க்கு ஒன்று என்ற முறையில்கூட இல்லாமல் சில இடங்களில் சில குறைகள் வந்துவிடுகின்றன. ஔவையின் வாக்குப்படி 'கலக்கினும் தண் கடல் சேறாகாது' என்று சொல்வது போல், இவ்வளவு பெரிய கூட்டுறவு ஸ்தாபனத்தை எவ்வளவுதான் கலக்கினாலும்—பெரிய சமுத்திரத்தில் எப்படி சாக்கடைத் தண்ணீர் வந்து சேர்ந்தாலும் சமுத்திரம் கலங்காதோ—அதே போன்று கூட்டுறவு இயக்கத்தை வஞ்சிக்கவேண்டும், அதை மோசமாக்கவேண்டும் என்று வருகின்ற சிலருடைய செயல்களால் என்றைக்கும் கூட்டுறவு இயக்கம் கலங்கிவிடாது, மோசமடைந்துவிடாது, அதற்கு மாறாக மேலும் வளர்ச்சி அடைந்து கொண்டும், வளர்ந்து கொண்டும்தான் போகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கனம் அங்கத்தினர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசுகின்றபொழுது கூட்டுறவு இயக்கத்தில் இருக்கின்றவர்கள் காங்கிரஸுக்கு வோட்டுச் சேகரிக்கின்ற ஏஜெண்டுகளாகத்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், மாற்றுக்கட்சித் தோழர்களும் இதில் இருந்து வருவதைப்பார்க்கலாம். எங்கள் தாலூகாவில் திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தாலுகாவின் பிரதிநிதியாக இருந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பல ஸ்தாபனங்களிலும் எதிர்க்கட்சிக்காரர்கள் இருந்து வரவேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் ஒத்துழைத்து வருகிறார்கள். ஆகவே காங்கிரஸுக்கு ஏஜெண்டுகளாக இருந்து வருகிறார்கள் கூட்டுறவு இயக்கத்தில் இருப்பவர்கள் என்று சொன்னதை நான் சுத்தமாக மறுக்கிறேன்.

மேலும், கூட்டுறவு முறையைப்பற்றி ஒருசில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். கூட்டுறவு ஸ்தாபனம் விவசாயத் துறையில் முன்னேறிக்கொண்டு வருகிறது. மேலும் நல்ல முறையில் முன்னேறவேண்டுமென்றால் அங்கங்கு இருக்கின்ற புறம்போக்கு நிலங்களை எல்லாம் கூட்டுறவு முறையில் எடுத்து விருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது பல கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் அங்கங்கு நடைபெற்று வருகின்றன. இந்தச் சமயத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். முன்பு 'பாட்டர்ன் ஆஃப் அஸிஸ்டன்ஸ்' என்ற முறையில் உதவிகள் கொடுத்து, அதன் மூலமாக மாடுகள் வாங்குவதற்கும், சீர்திருத்தம் செய்வதற்கும், விவசாயக் கருவிகள் வாங்குவதற்கும் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போதுள்ள காலத்திற்கேற்றபடி இல்லாமல் முன்னால் இருந்தபடியே இந்த அஸிஸ்டன்ஸ் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது விலைவாசி ஏற்றம் அதிகமாக இருந்து கொண்டு இருக்கிறது. பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படியிருக்கும் போது, முன்பு இருந்த முறையிலேயே நாம் வைத்துக்கொண்டிருந்தால் ஒழுங்காகக் கூட்டுறவு இயக்கத்தை நடத்த முடியாது. இந்தக் காலத்திற்குத் தக்கபடி அவைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில், பல கிராமங்களில் ஏராளமான காலி நிலங்கள் இருக்கின்றன. லத்துவாடி கிராமத்தில் சுமார் 500 ஏக்கர்கள் வரை இருக்கின்றன, முட்டாஞ்செட்டி கிராமத்தில் 600 ஏக்கர்கள் வரை இருக்கின்றன, பரளி என்கின்ற கிராமத்தில் 300 ஏக்கர்கள், இப்படி சுமார் 2,500 ஏக்கர்கள் இருக்கின்றன. இவைகளில் அங்கங்கே இருக்கின்ற பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியன்களும் மரங்களை நட்டு வைத்திருக்கிறார்கள், இதனால் ஒரு பிரயோசனமுமில்லை. நட்ட மரங்கள் எல்லாம் சரியாக வளர்ச்சி அடையாமல் நிலங்கள் அப்படியே சும்மா கிடக்கின்றன. அவைகளைக் கூட்டுறவு முறையில் விவசாயத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். எங்கள் ஜில்லாவில் நல்ல உழைப்பாளிகள் இருக்கின்றார்கள். மற்ற ஜில்லாக்களிலுள்ளவர்கள் எல்லாம் உழைப்புக்குப் பெருமையாக எங்களைத்தான் சொல்லுவார்கள். அந்த முறையில் இருக்கின்ற சிறந்த உழைப்பாளிகள் இருக்கின்ற எங்கள் ஜில்லாவில் இவ்விதம் இருக்கின்ற நிலங்களை எல்லாம் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு கூட்டுறவுப் பண்ணைகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. கே. பி. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது நாட்டில் கூட்டுறவு முறை நல்ல முறையில் பயன்பட்டுவருகிறது. கோடிக்கணக்கான அளவில் நம்முடைய கூட்டுறவு மூலமாக பல திட்டங்களுக்குக் கொடுக்கப் பட்டு வருகிறது. அந்தத் திட்டங்களை எல்லாம் அமல் நடத்துவது மக்கள். கூட்டுறவுத் திட்டங்களை அமல் நடத்துவதில் காங்கிரஸ் காரர்கள் மட்டுமல்ல, எதிர்க்கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள்.



சாதாரணமாக இப்போது நடைபெற்று வருகின்ற கூட்டுறவு நிர்வாகத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்று எதிர்க்கட்சி நண்பர்கள் சொன்னார்கள். அதே நண்பர்களுக்கு நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது கூட்டுறவு இயக்கத்தில் இருக்கின்ற எதிர்க்கட்சிக்காரர்கள் மட்டும் விட்டுக்கொடுக்காமல், அவர்களே இருந்து கொண்டு தங்கள் ஆதரவாளர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று விரும்புகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். இவ்விதம் இருப்பது மனிதர்களுடைய இயல்பாக இருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனத்தில் நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குறைந்த வருமானம் உள்ள அரிஜன மக்களுக்கும் நம்முடைய சர்க்கார் நல்ல முறையில் லான்ட் காலனிசேஷன் பல திட்டங்களைப் போட்டு இருக்கிறார்கள். அதையெல்லாம் நாம் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். குறிப்பாக நம்முடைய நாட்டிலே விவசாய மக்கள் அதிகமாக உள்ள இடங்களிலே இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்தால், அதைத் தனிப்பட்ட சுய நலக்காரர்கள், பெரிய செல்வந்தர்கள், தங்களுடைய சுயநலத்தைக் கருதி, கோவாப்பரேட்டிவ் இயக்கம் நல்ல முறையில் நடக்க முடியாதபடி பல இடைஞ்சல்கள் செய்து வருகிறார்கள். அதையெல்லாம் சர்க்கார் கவனித்து, அப்படிப்பட்ட இடங்களில் நல்ல கண்காணிப்புடன் இருந்து நல்ல முறையில் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

நான் ஒரு சில சொசைட்டிகளுக்குச் சென்று பார்த்திருக்கிறேன். அவனாசிக்குப் பக்கத்தில் வேடர்காலனி என்று ஒரு ஊர் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுள் ஒரு பிரிவினர் அங்கே இருக்கிறார்கள். அரசாங்கத்திலே பல சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தும், அந்த ஊரில் உள்ள அந்தச் சங்கத்திற்கு இந்த நன்மைகள் கிடைக்காமல் தடைப் பட்டுக்கொண்டு வருகிறது. அவர்களுடைய பூமிக்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டால் கோவாப்பரேட்டிவ் மூலமாகச் செய்தால் அதிகப்பணம் செலவு ஆகும் என்று தடைப்பட்டு வருகிறது. அந்த முறையில் இல்லாமல் அவர்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்து கொடுத்து அவர்களுக்கு ஊக்கத்தையும் தைரியத்தையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன மக்கள் கண்டிஷனல் பட்டாவில் நிலம் வைத்திருக்கிறார்கள். நிலத்தைச் சீர்திருத்தி விவசாயம் செய்வதற்கு வேறு இடத்தில் பணம் கேட்டால் 12 சதவிகிதம், 15 சதவிகிதம் கூட வட்டி கேட்கிறார்கள். குறைந்த வட்டிக்குக் கொடுத்து நல்ல முறையில் ஊக்கம் அளிக்கவேண்டுமென்று எண்ணி சொசைட்டிகள் மூலமாக, க்ரெடிட் சொசைட்டி மூலமாக, லாண்ட் மார்ட்கேஜ் பாங்க் மூலமாகக் கொடுக்கும்போது, இந்த நிலத்திற்குப் போடும் வால்யுவேஷன் குறைவாக இருக்கிறது. குறைந்த தொகைதான் கொடுக்கிறார்கள். குறைந்த பணத்தை வைத்துக் கொண்டு பூமியைப் பண்பாடு செய்ய, அல்லது வேண்டிய பம்ப்செட், மோட்டார் வாங்க முடியாமல் இருக்கிறது. இந்த கண்டிஷனைத் தளர்த்தி மற்ற பூமிக்காரர்களுக்குக் கொடுக்கும்

போது வால்யுவேஷன் எப்படி இருக்கிறதோ, அந்த மாதிரிக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு கொடுக்கும் கடன் குறைந்த காலக் கடனாக இருக்கிறது. 3,000 ரூபாய் பம்ப் செட்டுக்காகவோ, அல்லது நிலத்தைச் சீர் திருத்தம் செய்வதற்காகவோ வாங்கினால், பூமி தரிசாக இருக்கும்போது , அதைச் சீர்திருத்தி மூன்று ஆண்டுகளில் எப்படி அதிலிருந்து வருவாயை எடுத்துக் கொடுக்க முடியும்? ஆகையால், நீண்ட காலத் தவணையில் குறைந்த வட்டியில் கொடுத்தால் பூமி மேம்பாட்டினால் கிடைக்கக் கூடிய வருவாயிலிருந்து திருப்பிக் கொடுக்க முடியும்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். சர்க்காரில் 750 ரூபாய் மான்யமாகவும், 250 ரூபாய் கடனாகவும் கொடுக்கிறார்கள். அதைக்கொண்டு சில இடங்களில் முடியும். கோவாப்பரேட்டிவ் முறையில் அர்பன் ஹவுஸிங் ஸ்கீம், ரூரல் ஹவுஸிங் ஸ்கீம், இண்டஸ்டரியல் ஹவுஸிங் ஸ்கீம் எல்லாம் எந்த முறையில் இருக்கிறதோ அதே மாதிரி அநேக ஹரிஜனங்கள் கொஞ்சம் வசதி, கட்டக் கூடிய திறமை உள்ளவர்கள் ரிஜிஸ்டர் செய்து வீடு கட்டவேண்டுமென்று சொன்னால், 1,000 ரூபாய் முதல் 2,000 ரூபாய் வரையில் கூட்டுறவு மூலம் கட்டவேண்டுமென்று கேட்டால், அந்த ஸ்கீம் எமர்ஜென்ஸி காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. ரிஜிஸ்டர் செய்யப்படுவது இல்லை என்று சொல்லுகிறார்கள். இனிமேலாவது அந்த ஸ்கீமை எடுத்துக்கொண்டு கிராமத்தில் 100 வீடுகளோ, 50 வீடுகளோ கட்டவேண்டுமென்றால் ரிஜிஸ்டர் செய்து அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. பொ. வடிவேல்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு மான்யத்தின் மீது எங்கள் கட்சி கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தொழில், வாணிபம், விவசாயம், போக்குவரத்து என்று கூட்டுறவு புகாத துறையே கிடையாது என்ற அளவுக்கு நல்ல முறையில் கூட்டுறவுத்துறையானது வளர்ந்து வந்திருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளுக்கு மேல் கூட்டுறவு ஸ்தாபனமானது நல்ல முறையில் இயங்கி, தன் பொன் விழாவையும் கொண்டாடிவிட்டது. அந்தக் கூட்டுறவு இயக்கத்திலே நல்ல முறையில் பணியாற்றிய அமைச்சர் மன்றாடியார் அவர்கள் கூட்டுறவு அமைச்சராக இருக்கிறார். கூட்டுறவு ஸ்தாபனம் என்றாலேயே கூட்டுக் கொள்ளை அடிப்பது என்ற கேவலமான நிலை ஏன் இருக்கவேண்டும் என்று ஆராய வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். 50 ஆண்டுகள் ஆகி பொன் விழாக் கொண்டாடியும் கிராமங்களில் கூட்டுறவுபற்றி நல்ல முறையில் பிரச்சாரம் செய்யப்படவில்லை. நல்ல முறையில் பிரச்சாரம் செய்யப்படவேண்டுமானால், இராமாயணம், பாரதம் கதைகள் கூட நாட்டிலே உள்ள படிக்காத பாமர மக்களுக்கு



எப்படித் தெரிகிறதோ, அதைப்போல கூட்டுறவு ஸ்தாபனத்தைப் பற்றி நல்ல முறையில் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் இயல், இசை, நாடகம் மூலமாகப் பிரச்சாரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலர் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு வருகிறார்களே தவிர அவர்களுக்குக் கூட்டுறவு இயக்கத்தில் பயிற்சி இல்லை. அப்படிப் பயிற்சி இல்லாத காரணத்தினால், பாங்கியிலிருந்து கடன் வாங்கிக் கொண்டு வைத்துக் கொண்டு, அந்தப் பணத்தைத் தன் வீட்டிலிருந்து கொடுப்பது போல் நினைத்து, சொந்தப் பணத்தை வட்டிக்குக் கொடுப்பது போல் கொடுத்து, அவர்களிடமிருந்து நெல் முதலியவைகளை வாங்கி வியாபாரம் செய்கிறார்கள். பல இடங்களில் இம்மாதிரி நடக்கிறது. இது தடுக்கப்படவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது மிகவும் வரவேற்கத் தகுந்தது. கூட்டுறவு இயக்கத்திலேயே அரசியல் புகுந்து விட்டது. அரசியல் கட்சிகள் புகுந்து விடுவதால்தான் சரியாக நடைபெறவில்லை என்பது ஒத்துக் கொள்ளவேண்டியதுதான். எனது அருமை நண்பர் திரு. சண்முகம் அவர்கள் சொன்னார்கள். எப்படி-தான் எம்.எல்.ஏ.-வாக இருந்தும் கூட்டுறவு ஸ்தாபனத்தில் சேர முடியாமல் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் இருக்கின்றன என்று. ஆலங்காயம் தொகுதியில் வெள்ளக்குட்டை என்று ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் 50 பேர்கள் கூட்டுறவு சொஸைட்டியில் சேரவேண்டுமென்று மனுப் போட்டார்கள். கூட்டுறவு சொஸைட்டியில் யாரும் மெம்பராகலாம், யாரையும் மெம்பராகக் கூடாது என்று தடை செய்ய முடியாது. ஆனால் அந்த 50 பேர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. என்னிடம் வந்து கூறினார்கள். பஞ்சாயத்து யூனியன் சேர்மன் என்ற முறையில் என்னிடம் மனுக் கொடுத்தபோது, அவர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று உத்திரவிட்டேன். அவர்கள் இன்னும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஏனென்றால் கூட்டுறவில் அரசியல் புகுந்து விட்டது. எங்கள் பகுதியில் முல்லைக்கொம்பு என்று ஒரு கிராமம். அதற்குப் பக்கத்திலே இரண்டு ஃபர்லாங் தூரத்தில் நிம்மியம்பட்டு என்று இன்னொரு கிராமம். அந்த நிம்மியம்பட்டு என்ற கிராமத்திற்குத் தனியாக ஒரு சொஸைட்டி வேண்டுமென்று கேட்டார்கள். அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் 40,000 ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். எங்கள் ஊரில் 30,000 ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். கீழ் மட்டத்தில் தனி சொஸைட்டி தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். இரண்டு ஃபர்லாங் தூரத்திற்குள்ளேயே இருந்தும், 100-க்கு 80 பேர்கள் மெம்பர்களாக இருக்கிறார்கள் என்று வாதமிட்டும், மண்டலக் காங்கிரஸ் கமிட்டியில் இருக்கிறவர் ஒருவர் மனுக் கொடுத்தார் என்ற காரணத்திற்காக, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் அவர்கள் செல்வாக்குப் பெற்றவர்கள் என்ற காரணத்திற்காக, அந்த நேரத்தில் ஜாயிண்ட் ரிஜிஸ்டிராராக இருந்தவர்கள்

[திரு. மு. பொ. வடிவேல்] 12th March 1966

சொசைட்டியைப் பிரித்து விட்டார்கள். ஆனால் கூட்டுறவுச் சங்கத்தில் மெம்பர்களாக இருந்தவர்கள் முல்லைக்கொம்பிலிருந்து போகவில்லை. மீண்டும் ஒரு உத்தரவு வந்திருக்கிறது. நிம்மியம் பட்டு சொசைட்டியை முல்லைக்கொம்பு சொசைட்டியோடு சேர்க்க வேண்டும் என்று உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். இப்படிச் செய்வது துக்ளக் சாம்ராஜ்யம் நடத்துவதுபோல் அல்லவா இருக்கிறது. அதே மாதிரி அரசம்மாபுரம் கூட்டுறவுச் சங்கத்தில் தகராறு வந்து விட்டது. சொசைட்டியிலே தேர்தலை நடத்த டெபுடி ரிஜிஸ்டிராரினால் ஒரு சீனியர் இன்ஸ்பெக்டர் அனுப்பப் பட்டார். தேர்தல் நல்ல முறையில் நடந்து என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் வெற்றி பெற்று விட்டார். ஆனால் அவரிடம் கணக்குப் புத்தகங்கள் ஒப்படைக்கப்பட்டு சார்ஜ் கொடுக்கப்படவில்லை. அதைப் பற்றி, டெபுடி ரிஜிஸ்டிராருக்கு எழுதியாகி விட்டது. ரிஜிஸ்டிராருக்கும் எழுதியாகிவிட்டது. மீண்டும் தேர்தல் நடத்தவேண்டுமென்று உத்தரவு வந்தது. அதைப் பற்றி ஹைக்கோர்ட் வரையில் வந்து வாதாடி, பழைய தேர்தல் செல்லும் என்று உத்தரவு வாங்கியாகி விட்டது. இன்னும் காஷ் புக், மினிட்ஸ் புக் எல்லாம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் எப்படி நாணயம் உள்ளவர்கள் பணியாற்ற முடியும் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று சொல்லுகிறேன். மத்திய பாங்கில் வேலை செய்யும் ஊழியர்களுக்குத் தலைவர் இட்டது சட்டம். சூபர் வைசர் சூபர்வைசராகத்தான் சாகவேண்டும். ப்ரோமோஷன் கிடையாது. வேறு துறைக்குப் போக வேண்டுமென்று மனுப் போட்டாலும் அதை ஃபார்வேர்டு செய்வது கிடையாது. அவர்கள் ஏதாவது தவறு செய்து விட்டார்கள் என்று ஏற்பட்டால், அப்பீல் செய்ய வேண்டுமென்றால் எக்ஸிக்யூட்டிவ் கமிட்டிக்கு அப்பீல் செய்யவேண்டும். மத்திய பாங்கின் தலைவருடைய செல்வாக்கு உள்ளவர்கள்தான் எக்ஸிக்யூட்டிவ் கமிட்டியில் இருப்பார்கள். அந்த எக்ஸியூட்டிவ் கமிட்டிக்கு அப்பீல் செய்து கொள்வதால் என்ன நன்மை கிடைக்கப் போகிறது. ரிஜிஸ்டிரார் அல்லது டெபுடி ரிஜிஸ்டிரார் அப்பீலைக் கவனிக்கவேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

12-00 noon. திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் சபாநாயகர் அவர்களே, நமது கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய ஜில்லாவைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு பருத்தி விளையக்கூடிய பெரும்பாலான பகுதி. குடியாத்தூர் கூட்டுறவு விவசாயக் கடன் வழங்கும் ஒரு ஸ்தாபனம் இருப்பதனாலே தான் மிக மிக உயர்ந்த நிலையில் பம்பாய் மாநிலம் வரையில் மார்க்கெட்டுக்குப் போகக்கூடிய அளவில், நீண்ட இழைப் பருத்தியைப் பொறுத்தவரையில், தீவிரச் சாகுபடித் திட்டத்தின் கீழ் அதிகமாக உற்பத்தியைப் பெருக்குவதற்கு, ஒரு ஏக்கருக்கு 12 பொதி, 12 பொதி என்று விளையக்கூடிய அளவுக்கு இன்றைக்கு



12th March 1966] [திருமதி சி. குழந்தையம்மாள்]

நிலைமை வளர்ந்து வந்திருக்கிறது. அந்த ஒரே ஒரு ஸ்தாபனத் திற்காக நான் கூட்டுறவுத் துறைக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, சோளம், ராகி இவற்றை உற்பத்தி செய்வதற்காக எரு வழங்கக்கூடிய திட்டத்தின்கீழ் ஒரு விவசாய பாங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ரூ. 750 கடன் கொடுக்கிறார்கள், அந்தக் கடனை வாங்கி விவசாயி நேரிடையாக விவசாயம் செய்யக் கூடிய காரணத்தினால், 10 ஏக்கருக்குக் குறைந்து விவசாயம் செய்யக்கூடியவர்கள் ஏக்கர் ஒன்றுக்கு 30 சருகை, 40 சருகை சோளம், ராகி உற்பத்தி செய்து, பரிசுத் திட்டத்தில் பரிசு வாங்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்றால், அந்த அளவுக்கு விவசாய பாங்கு பணி புரிகிறது. அதற்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு என்று சொல்லும்பொழுது 1965-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 90 சதவீதம் கிராமங்கள் கூட்டுறவு அடிப் படையில் வந்து விட்டன. இந்த ஆண்டு பார்க்கப்போனால் 100-க்கு 100 வந்திருக்கும் என்று கணக்குத் தெரிகிறது. அதில் நாம் பெரிய லாபத்தை அடைந்திருக்கிறோம் என்பதை நான் மிகத் தாழ்மை யுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எவ்வாறு என்றால், கூட்டுறவுத் துறையில் கிடைக்கக்கூடிய அளவுக்குக் குறைந்த வட்டிக்கு யாருமே விவசாயிக்குக் கடன் கொடுப்பது கிடையாது. விவசாயிகளுக்குப் பருத்தி விதை கொடுத்து, களை வெட்ட கடன் கொடுத்து, பம்பு செட்டுகள் வைப்பதற்குக் கடன் கொடுத்து, எரு வாங்குவதற்குக் கடன் கொடுத்து, பிறகு மகசூல் வந்தவுடன் ஐந்தில் ஒரு பங்கு, மூன்றில் ஒரு பங்கு வாங்கிக்கொள்ளுகிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு அது ஒரு வரப் பிரசாதம் என்று கூடச் சொல்லலாம். அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒன்றே ஒன்று நாம் செய்ய வேண்டியதிருக் கிறது. விவசாயிகளுக்கு ரூ. 50,000 பெறுமான நிலம் இருந்தால், ரூ. 5,000 தான் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதே சமயத்தில் ஒரு வியாபாரிக்கு ரூ. 10,000-க்கு பொறுப்புகள் இருந்தால், ரூ. 8,000 கடன் கிடைக்கிறது. வியாபாரிகள் மீது கோபம் கிடையாது. நாங்களும் வியாபாரம் செய்கிறோம். விவசாயிகளுடைய நிலத்தின் விலை ஏறிக்கொண்டே போகிறது. இதன் காரணமாக 50,000 ரூபாய் மதிப்புள்ள நிலம் வைத்திருக்கும் விவசாயிக்கு ரூ. 25,000 கடன் கொடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவுத் துறை மூலம் டாக்ஸி வாங்குவதற்குக் கடன் கொடுப்பதுபற்றிக் குறிப்பிடப்பட்டது. லாரிகள் வாங்கு வதற்கும் கடன் கொடுக்கவேண்டும். ஒரு லாரி, இரண்டு லாரிகள் வைத்திருப்பவர்கள் மூலதானிகளிடம் ரூ. 2-க்கு 8 அணா வட்டி கொடுத்து லாரிக்காகக் கடன் வாங்கி, கையிலிருக்கிற ரூ. 5,000, 7,000-த்தை லாரிக்குக் கொடுத்துவிட்டு, 5 வருஷம், 6 வருஷம் கழித்துப் பார்த்தால், இவர்கள் கையில் ஒன்றுமே பணம் இருக்

காது. காரணம், எல்லா வருமானத்தையும் வட்டியே தின்று விடுகிறது. ஆகவே, கூட்டுறவு முறையில் லாரிகள் வாங்குவதற்குக் கடன் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கார் ஸ்பேர் பார்ட்ஸ் விலையைப் பார்த்தால் மிகப் பெரிய கொள்ளையாகத்தான் இருக்கிறது. 5 வருஷங்கள், 6 வருஷங்கள் கழித்துப் பார்த்தால், கணக்கு எழுதிப் பார்த்தால் கார் விலையைவிட ஸ்பேர் பார்ட்ஸ் விலை அதிகமாகிவிடுகிறது. ஆகவே, கார் ஸ்பேர் பார்ட்ஸ் கூட்டுறவு முறையில் வாங்கி சப்ளை செய்யும் திட்டத்தை சென்னை மாநிலத்தில் அமுல் நடத்தவேண்டும் என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியில் இருக்கிற அங்கத்தினர்கள், கூட்டுறவுத் துறையில் இருக்கிற காங்கிரஸ்காரர்கள் எலெக்ஷனுக்காக வேலை செய்கிறார்கள், அந்த நிலையில் கூட்டுறவு இயக்கத்தையே மறந்து விட்டார்கள் என்று கூறினார்கள். நான் கூட ஒரு இடத்திற்குச் சென்று பார்த்தேன். கூட்டுறவு ஆதரவாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்கள் என்பதுதான் நான் அங்கே தெரிந்துகொண்டது. ஆகவே, உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைத் தயவு செய்து இங்கே எடுத்துச் சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். யாரிடம் கூட்டுறவு இயக்கம் இருக்கிறது, எங்கள் சொந்தக்காரர்கள் அல்லது உங்கள் சொந்தக்காரர்கள் இவர்களிடம்தான் இருக்கிறது.

“ நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே ”

என்றார் ஔவையார் அவர்கள். மக்களிடையே உயர்ந்த எண்ணம் வளர்ந்தாலன்றி கூட்டுறவு வளராது. நாடு பூராவும் இப்பொழுது கூட்டுறவு ஆகிவிட்டது. தப்பு யார் செய்தாலும் தப்புதான். நாங்கள் செய்தாலும் தப்புதான். நீங்கள் செய்தாலும் தப்புதான். நான் ஒரே ஒரு யோசனை கூற விரும்புகிறேன். பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் ஆடவர்கள் கையில் இருக்கின்றன. தயவு செய்து அவற்றையெல்லாம் 10 ஆண்டுக் காலத்திற்கு, 25 ஆண்டுக் காலத்திற்குப் பெண்கள் கையில் கொடுத்து எங்களுடைய சேவையைப் பாருங்கள். மக்களுக்கு உயர்ந்த முறையில் சேவை செய்து, நாட்டில் இப்படிப்பட்ட கொடுமைகள் நடக்காவண்ணம் பாதுகாக்கிறோம் என்று பெண்கள் சார்பில் சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. கோ. நாராயணசுவாமி நாயுடு : அன்பு மிக்க தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூறலாம் என்று நினைக்கிறேன்.





கூட்டுறவு சங்கங்களிலெல்லாம் காங்கிரஸ்காரர்கள் புகுந்து கொண்டு, நிரம்ப கொடுமையான கெடுதல்களையெல்லாம் விளைவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு சில அங்கத்தினர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். இப்படி ஏதோ சமூகத்தில் ஒரு கட்சியினர்களை மாத்திரம் இந்த வியாதி பிடித்திருக்கிறது, சரியாக இல்லை போல் இருக்கிறது என்ற ஒரு நினைப்பை உண்டாக்குவதற்காக அப்படிப் பேசுகிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. ‘மந்திரிகள் முன்னிலையிலே சட்டசபையில் முழக்கம், மந்திரிகள் பதில் சொல்ல முடியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள், பிரமாதம் ரூ. 2-லிருந்து 1-3/4 காசு வரையில் கணக்குக் காட்டவில்லை. வேறு வழியில்லாமல் மந்திரிகள் வாளா இருந்தார்கள். ‘பொதுமக்களே, எங்களுக்கு வோட்டுப் போடுங்கள்’ என்று சொல்லுவதற்காக பயன்படுத்திக்கொள்ளுகிறார்களா? இது எப்படியிருக்கிறது என்றால், மலடியின் பிள்ளையும் மரத்திலே தோன்றிய மனிதனும் இரண்டு பேர்களும் சேர்ந்து கிளிஞ்சலில் தோன்றிய பளபளப்பை வெள்ளி என்று நினைத்து, எனக்கா, உனக்கா என்று இரண்டு பேர்களும் சண்டை போட்டுக் கொண்டு, மேகத்திலே குதிரை, யானை மாதிரி தெரியுமே, அதிலே குதிரையைப் பிடித்து, அதன் மேலே ஏறி, கந்தர்வ லோகம் சென்று முயல் கொம்பை எடுத்துக்கொண்டு ஒருவருக்கொருவர் குத்திக்கொண்டு செத்தார்கள் என்று ஒரு வேதாந்தக் கதை சொல்லுவார்கள். அந்த மாதிரி ஏதோ சில குற்றச்சாட்டுகளைக் கூறிவிடுவது. ரூ. 1,000, 50,000 என்று சொன்னால் நல்ல கனிசமாக இருக்கும். ரூ. 26-13-0, குண்டஞ்சிக்கரை வேஷ்டி என்றெல்லாம் ஏதோ குற்றம் சாட்டினார்கள். குற்றம் சாட்டுவதற்கு முன்னால் கொஞ்சம் யோசனை செய்து, சிந்தனை ஆய்ந்து பார்த்தால் நலமாக இருக்கும். குற்றச்சாட்டு ஒரு கட்சியினர் பக்கம் மாத்திரம் இருக்கிறது என்பது உண்மை அல்ல. எல்லா கூட்டுறவு சொசைடிகளிலும் காங்கிரஸ்காரர்கள் தான் பதவி வகிக்கிறார்கள் என்று சொல்லுவதற்கும் இல்லை. எனக்குத் தெரிந்து, ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் எங்கள் பிரதேசத்தில் திரு. சுவாமியப்ப முதலியார் கையில் தான் அவ்வளவு கூட்டுறவு சங்கங்களும் இருந்தன. ஜில்லா பூராவும் அப்படி இருந்தது. என்னுடைய தேர்தல் பகுதியிலே கூட்டுறவு சங்கங்கள் ரொம்பவும் கடுமையாக இருந்தன. அதனால் நான் தோற்றுவிடவில்லை. ஜனங்களுக்கு அபிமானம் இருக்கிற வரையிலும் எவ்வளவு குற்றச்சாட்டுகள் சொன்னாலும், எந்தவித குற்றச்சாட்டுகள் சொன்னாலும், யாரிடம் ஜனங்களுக்கு அபிமானம் இருக்கிறதோ அவர்களுக்குத் தான் ஜனங்கள் வோட்டுப் போடுவார்கள். குற்றம் சாட்டிவிட்டால் வெற்றி கிடைத்துவிடும் என்று நினைக்கவேண்டாம். குற்றச்சாட்டு எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறது. திரு. ஜெயராஜ் அவர்கள் தன்னுடைய தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் ஒருவர் ரூ. 20,000 எடுத்து சாப்பிட்டுவிட்டார் என்று சொன்னார்கள். அதையும் சேர்த்து எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் சொல்லியிருந்தால், எல்லாக் கட்சியினருக்கும், யார் வந்தாலும், மனிதத் தன்மையில் இருக்கும் குற்றங்குறைகள் தான் நடக்கிறது,

மனிதத் தன்மையிலேயே கெடுதல் இருக்கிறது என்று சொல்லி விடலாம். நல்லவர், கெட்டவர் என்பது இரண்டு பக்கமும் தான் இருக்கிறது. ஒவ்வொரு அரசியல் கட்சியிலும் வேறு யார் இருக்கப்போகிறார்கள். மாமன், மைத்துனர் தான் இருக்கப் போகிறார்கள். மனித சமுதாயத்தில் கெடுதல் இருக்கத்தான் செய்கிறது. எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறது. எல்லா கட்சிகளிலும் இருக்கிறது. நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். சில இடங்களில் அதிகமாக இருப்பார்கள், சில இடங்களில் குறைவாக இருப்பார்கள். இதெல்லாம் பொதுப் படையாக விவாதிக்கவேண்டிய ஒரு விஷயம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கூட்டுறவு விவசாயத்திலே கொஞ்சம் நம்பிக்கை குறைந்திருக்கிறது என்று மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். நம்பிக்கைக் குறைவு வைக்கவேண்டியதில்லை. அவர்கள் சொன்னது இருக்கட்டும். நாம் சொன்னது இருக்கட்டும். பொதுவாக கூட்டுறவு சங்கங்கள் சரியாக நடைபெறவில்லை. ஒரு நண்பர் பிரான்சுக்குப் போனால், சீமைக்குப் போனால் அங்கெல்லாம் எல்லாம் சரியாக நடக்கிறது என்று சொன்னார்கள். அங்கே போய்ப் பார்த்தால் எவ்வளவு குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன, எப்படி நடக்கிறது என்பது தெரியும். பிராசிக்யூஷன் சைடில் குற்றச்சாட்டை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் டிபென்ஸ் வக்கீல் எழுந்து குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லும்போது தான் குற்றச் சாட்டுகளுடைய தன்மை தெரியும், எவ்வளவு உண்மை என்பதும் தெரியும். திடீரென்று ஒருவரைப் பார்த்து 'முந்தா நாள் 6½ மணிக்கு உன்னை ஏன் அந்த ஆள் அடித்தான்?' என்று கேட்டால், பக்கத்தில் இருப்பவர் நேரம், காலம், கிழமை எல்லாம் விவரமாகச் சொல்லுகிறாரே, அதனால் உண்மையாகத் தான் இவர் அடிவாங்கி இருக்கமுடியுமென நினைக்கக்கூடும். இவ்வளவும் பொய். இம் மாதிரி ரொம்பப் பெரிய வக்கீல்கள் வாதம் பண்ணுவதை நான் அனுபவித்திருக்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். 1927-ம் ஆண்டில் ஜூன் 27-ந் தேதி இரவு 8 மணிக்கு ஈரோடு காவேரி பாலத்தை உடைப்பதற்கு நாராயணசாமி நாயுடுவும் தேவன்பு என்பவரும் சேர்ந்து 100 ஆட்களை வைத்துக்கொண்டு பாலத்தை நொறுக்க சதி பண்ணினார்கள் என்று கோர்ட்டில் சொல்லப்பட்டது. அப்பொழுது நான் குற்றம் சாட்டப்பட்டு கீழே உட்கார்ந்திருந்தேன். உடனே பஞ்சாங்கத்தைப் பார்த்தேன். அன்று அமாவாசையாக இருந்தது. அமாவாசையன்று 8 மணிக்கு எங்கிருந்து சந்திரன் தோன்றுவான் என்று நான் கேட்டேன். அமாவாசையன்று ஒரு பர்லாங்கு தூரத்தில் இருப்பவரை எப்படிப் பார்த்தீர்கள் என்று கேட்ட பிறகுதான், குற்றச் சாட்டின் நிலைமை தெரிந்தது. ஆனால், குற்றஞ்சாட்டியபொழுது, சாட்சிகளை கேட்டபோது நானே இதை செய்திருக்கக்கூடுமோ? "சோமனும்புலிசம்" என்று சொல்லுவார்களே, அந்த மாதிரி வியாதியின் காரணமாக, ஏதாவது தூக்க வியாதியால் செய்து இருப்போமோ என்கின்ற சந்தேகம் எனக்கே ஏற்படும் வகையில் குற்றச் சாட்டு பிரமாதமாக ஜோடிக்கப்பட்டிருந்தது.





கையிலிருந்த ஆயுதம், தேதி, எங்கே இருந்தார், நாராயணசாமி நாயுடு எங்கே நின்றார், என்றெல்லாம் விவரங்களை அடுக்கடுக்காகச் சொல்லும்போது, அப்படித்தான் இருந்திருக்குமோ என்கிற நினைப்புத் தோன்றுகிறது. நினைப்பு எப்படி இருந்தாலும், உண்மையாகவே ஒருவர் இரவு எட்டு மணிக்கு, நிலவு இருந்ததாகச் சொல்லி, தாக்கப் போனார்கள் என்று குற்றம் சாட்டினால், அது உண்மையா, பொய்யா என்று கண்டு பிடிப்பது கஷ்டமாகப் போய்விடும். பின்னால் பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்த்தால், அன்றைக்கு அமாவாசை என்று தெரிந்தது. நிலவு ஏது அன்றைக்கு? ஆகவே, குற்றச் சாட்டுக்கள் எப்படி இருந்தாலும், போலீசார் உடனடியாக சி.ஐ.டி. மூலம் எந்தெந்த இடத்தில் குற்றங்குறைகள் இருக்கின்றனவோ, அவற்றை தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பால் சப்ளை சொசைடி விஷயமாக பணம் கையாடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். மொத்தம் ஆயிரக்கணக்கில் இருக்கும். அதில் எங்கள் கட்சிக்காரர்கள் இல்லை. யாராக இருந்தாலும் கண்டு பிடித்து தண்டனை கொடுக்க வேண்டும். மேலும் ஊழல்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சொசைடிகளை இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மேல் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட மந்திரிகள் போய், என்னென்ன குற்றம் குறைகள் இருக்கின்றன, அவற்றில் எவை எவை உண்மையானவை, எவை எவை கற்பனை என்பதையெல்லாம் புரிந்து கொள்ளக் கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டும். ஊழல் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. கடன் கொடுக்கிறார்கள். கடனை யாருக்காவது கொடுத்தேன் என்று சொல்லிவிட்டு, தானே எடுத்துக்கொண்டு விடலாம். இதையெல்லாம் பொதுவாக கிராமத்தார் கையில் கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு . . . (மணியடிக்கப்பட்டது.)

***திரு. து. ப. அழகமுத்து:** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய கட்சியைச் சார்ந்த நண்பர், அன்பில் தர்மலிங்கம் அவர்கள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் நடைபெறும் ஊழல்கள் பற்றி குறிப்பிட்டார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு அடிப்படையான ஆட்சேபணையை எழுப்பினார்கள். இது தொழில் மானியத்தின்போது விவாதிக்க வேண்டியது, இந்த மானியத்தில் குறிப்பிடுவது சரியல்ல என்கிற அடிப்படை ஆட்சேபணையைச் சொன்னார்கள். நான் பட்ஜெட்டைப் பார்த்த போது, 'கூட்டுறவு' என்கிற இனத்தில் கைத்தறிக்காக ஒதுக்கியிருக்கும் தொகை, 89,66,000 ரூபாய். ஆகவே, இந்த மானியத்தில் விவாதிப்பது பொருத்தமானது அல்ல என்பது எவ்வளவு பொருந்தும் என்று தெரியவில்லை.

**கனம் சபாநாயகர்:** தொழில் கூட்டுறவுத் துறைக்கு பதில் சொல்லுவது இன்னொரு அமைச்சர் பொறுப்பு என்பதுதான் பொருள். இதில் கான்ஸ்டிட்யூஷனல் பாயிண்ட் ஒன்றும் இல்லை.

[12th March 1966

**திரு. து. ப. அழகமுத்து :** இதில் தவறு ஒன்றும் இல்லை என்பதைக் காட்ட வந்தேன். இந்த இனத்திலே பணம் ஒதுக்கி விட்டு, இதிலே இருக்கக் கூடிய சிக்கல்களுக்கு பதில் சொல்ல வேண்டியது வேறொரு அமைச்சர் என்று சொன்னாலும் அது பொருந்தும் என்று படவில்லை. ஏனென்றால், இந்த சொசைடிகள் தணிக்கை செய்யப்படவேண்டிய பொறுப்பு கூட்டுறவு இலாகா விடம் இருக்கிறது. ஆகவே, இதில் இருக்கும் ஊழல் பற்றிச் சொல்லும்போது பதில் சொல்ல வேண்டிய பொறுப்பும் கூட்டுறவு இலாகாவிற்கே இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக பணம் செலவழிக்கிறோம். கைத்தறி நெசவாளர்களின் பெயரால் வீணாகப் பணம் செலவழிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கிற போது, மிக்க வருத்தமாக இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய கனம் நாராயணசாமி நாயுடு அவர்கள் 20, 30 ரூபாய் பற்றிச் சொல்லுகிறார்கள், அதிகமான தொகை சம்பந்தப்பட்ட ஊழல்கள் பற்றிச் சொல்லக் கூடாதா என்று ஆதங்கப் பட்டுக்கொண்டார்கள். குற்றம் என்று சொல்லும்போது எவ்வளவு தொகையாக இருந் தால் என்ன ? பொதுவாக, யாராக இருந்தாலும், அப்படிப்பட்ட வர்களைக் கண்டிக்க வேண்டிய கடமையில் நாம் இருக்கிறோம்.

இன்றைய தினம் கைத்தறி முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி சங்கத்தால் எக்சிபிஷன் நடத்தப்படுகிறது. எக்சிபிஷனுக்காக எவ்வளவு செலவு செய்கிறோம் என்று பார்க்க வேண்டும். எக்சிபிஷன் ஸ்டால்கள் மூலம் வரும் வருமானத்தை நீக்கிப் பார்த்தால், 1962-63-க்கு ரூ. 34,140 அதிகமாகச் செலவு செய்திருக்கிறார்கள். அதே போல, 1963-64-ல் ரூ. 42,260 அதிக மாகச் செலவு செய்திருக்கிறார்கள். 1964-65-ல் ரூ. 68,226 அதிக மாகச் செலவழித்திருக்கிறார்கள். இந்தப் பணம் எல்லாம் அப்படி என்ன என்ன வகையில் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது சந்தேகம் எழக்கூடிய நிலை இருக்கிறது. வாணி ஆர்ட்ஸ் கம்பெனிக்காரர்களுக்கு, 15 ஆண்டுகளாக, அந்த ஒரே ஆளுக்கு காண்ட்ராக்ட் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். லட்சுமணப் பெருமாள் நாடார் என்கிற ஒருவருக்கே பந்தல் போடும் காண்ட்ராக்ட் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது அடிப்படையிலேயே சந்தேகம் ஏற்படு கிறது.

டைரக்டர்கள் சம்பளம், அலவன்ஸ் என்ற முறையில் ஆண்டுக்கு மிகப் பெரிய அளவில், தொகைகள் செலவழிக்கப்படுகின்றன. உதாரணமாக, 1962-63-ல் செலவு ரூ. 26,543 ; 1963-64-ல் ரூ. 27,605 என்றும், 1964-65-ல் ரூ. 29,856 என்றும் காண்கிறோம். தறிக்காரர் கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணம் எப்படிப் போகிறது? இதை ஆடிட்டில் கண்டித்து இருக்கிறார்கள். செலவு பட்ஜட்டுக்கு அதிகம் என்றும் கண்டித்திருக்கிறார்கள். அடுத்தபடியாக, ஆபீஸ் காருக்காக, எம்.எஸ்.ஒய், 9727 ஆன செலவு என்ன ? 1962-63-ல்



12th March 1966] [திரு. து. ப. அழகமுத்து]

ரூ. 13,217 ; 1963-64-ல் ரூ. 18,940 ; 1964-65-ல் ரூ. 21,161. ஆகவே, இந்தக் காருக்கு எவ்வளவு அதிகமான செலவு ஆகியிருக்கிறது என்பது தெரியும். இந்தக் காருக்கு லாக் புக் கிடையாது. எங்கெங்கே கொண்டு போகிறார்கள் என்பதற்குக் கணக்கில்லை. கார் சம்பந்தப்பட்ட வரை அது தலைவரிடத்திலேயே எப்போதும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதுதான் குற்றச்சாட்டு. ட்ராவலிங் அலவன்ஸ் அட்வான்ஸ் வாங்குகிறார்கள். எப்பொழுதும் ரூ. 5,000 தலைவரிடம் இருந்துகொண்டே இருக்கிறது. இதைப் பற்றி ஆடிட்டிலே குறிப்பிடும்போது,

'There are huge sums under the head "Other suspenses" which require scrutiny and urgent realisation in the case of debit balances and payment in the case of credit balances. In certain cases, the 'other suspenses' account is used like running account as a result of which the balance is not at all reduced to 'NIL'. For instance, in the suspense account of Sri M. P. Nachimuthu President of the society, there was a debit balance of Rs. 5,173-69 as on 30—6—1964. This huge balance clearly shows that the advances made for a specific purpose or a particular journey are not recovered then and there when T.A. Bills are passed and paid. This practice should be stopped.' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதற்கு அடுத்தாற்போல, இந்த சொசைடி மவுண்ட்ரோடில் ரூ. 3 லட்சம் பொருமானமுள்ள நிலத்தை வாங்கியிருக்கிறார்கள். அந்த பணத்திற்கு அரசாங்கத்திற்கு வட்டி கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதைக் காலியாகவே வைத்துக்கொண்டு பயன் படுத்தவில்லை. அதில் ஏதோ தகராறு இருக்கிறது என்று கேள்வி. அடுத்து, ஸ்டாக்குகளை குறைவாக மதிப்பிட்டு கணக்கெடுத் திருக்கிறார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல கோடிக் கணக்கான ரூபாய்களுக்கு கொள்முதல் செய்துவிட்டு, இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து, 25 சதவிகிதம் குறைத்து ஸ்டாக் எடுக்கிறார்கள். இப்படி நெசவாளர்கள் பணம் வீணாக விளையாடப் படுகிறது. செலவிடப்பட்டுக்கொண்டிருக்கிறது. நெசவாளர்கள் 'எட்டிப்பார்த்தால், எட்டு இழை குறையும்' என்பார்கள். அப்படிப் பட்டவர்களுடைய பணத்தை துர்விநியோகப்படுத்தலாமா என்று கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

**திரு. கே. டி. கோசல்ராம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்தின் மீது பேசும்போது, எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் கூட்டுறவின் மூலம்தான் இந்த நாட்டின் நல்ல காரியங்களைச் செய்யமுடியும் என்கிற அடிப்படைத் திட்டத்தை ஒத்துக்கொள்ளாமல் இல்லை. எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்த எதிர்க் கட்சி அன்பர்களுக்கு, குறிப்பாக கனம் உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவு அமைப்பு, இந்த ராச்சியத்தில் அமைக்கப்பட்டபோது, ஜஸ்டிஸ் பார்ட்டி அரசாங்கம் இந்த மாநிலத்தில் இருந்தது. இந்தச் சட்ட சபையும் அப்பொழுது கவுன்சிலாக இருந்தபோது, எங்கள் தலைவர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, அதைப் பற்றிப் பேசி

ஞர்கள். ' கூட்டுறவு இயக்கமும், அறநிலைப் பாதுகாப்புத் துறையும், உங்களுடைய கட்சிக்காரர்களுக்கும், மாமன், லைன்ஸ் அண்ட் லைன்ஸ்-இன்லாக்கும் உத்தியோகம் கொடுக்கப்படும் இலாகாக்கள் என்று அவர்களைப் பார்த்து நேரிடையாகக் குற்றம் சாட்டினார்கள். அந்த அடிப்படையில் கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது. ஜஸ்டிஸ் பார்ட்டியினுடைய ஆணி வேராக அது அமையப்பட்டது. அன்று விதைத்த அந்த விதை, அந்தத் தீய சக்தி இன்றும் இருந்து கொண்டு தான் இருக்கிறது. அந்தச் சட்டத்தை அறவே மாற்ற வேண்டும் என்று எங்களைப் போன்றவர்கள் விரும்பினாலும், அதற்கு எத்தனையோ விதமான சிக்கல்கள் வந்து, இரண்டு வருஷங்களுக்கு மேல் ஒருவர் பதவியில் இருக்கக் கூடாது என்று சட்டசபைப் பொறுக்குக் கமிட்டியிலே போட்டாலும், எந்த வழியிலாவது அதை உடைத்துவிடுகிறார்கள் என்பதை நான் மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நண்பர் திரு. மன்றாடியார் அவர்கள் அமைச்சராக இருக்கிறார். அவரிடமிருந்து பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களையெல்லாம் பிடுங்கிவிட்டோம். ஜமீன்தார்களை எல்லாம் எடுத்துவிட்டோம். அவர்கள் தனிப்பட்ட மன்னர்கள் அல்லர். அந்த சிஸ்டத்தை ஒழித்துவிட்டோம் என்றாலும், கூட்டுறவு இயக்கத்திலே இருக்கும் ஜமீந்தாரித்துவத்தை இன்னும் ஒழிக்கவில்லை என்பதை அவமானத்துடன் நாம் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அது தான் அதற்குக் காரணம். இதற்குக் கட்சியைச் சொன்னார்கள். கட்சியைச் சொல்லவேண்டுமானால், அந்த அடிப்படையிலே வந்த கட்சி, காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாகத்தான் தமிழகம் அத்தனைக்கும் அமைக்கப்பட்டிருக்கிறது. காங்கிரசுக்கு விரோதமாக இருக்கவேண்டும் என்பது என்னுடைய கட்சி அல்ல. அல்லது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு விரோதமாக இருக்க வேண்டும் என்பதும் என்னுடைய கட்சி அல்ல. நண்பர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் அதைச் சொன்னார்கள். கட்சிக்கு அப்பாற்பட்டு இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். கட்சிக்கு அப்பாற்பட்டிருந்தால் தான் இந்த மாநிலத்தில் இந்த அரசாங்கம் எதையெல்லாம் செய்யவேண்டும் என்று நினைக்கிறதோ அதைச் சாதிக்க முடியும். ஆகவே, சட்டத்திலே இருக்கும் ஓட்டைகளை அடைத்தாக வேண்டும். சட்டத்திலே இருக்கும் ஓட்டைகளை அடைப்பதற்கு முன்னால் இதைச் சீர்திருத்திவிட முடியாது. கனம் சபாநாயகர் அவர்களுக்கும் தெரியும். அவர்கள் ஒரு கூட்டுறவு பாங்கிலே தலைவராக இருக்கவேண்டும் என்று வந்தபோது, எத்தனை இக்கட்டுகள், எங்கிருந்தெல்லாம் எப்படி எப்படி வந்தன என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே பிடித்துக்கொண்டு விடமாட்டார்கள். பழம்பெருச்சாளி என்று சொல்வதுண்டு. கூட்டுறவு இயக்கத்திலும் அறநிலையப் பாதுகாப்பு போர்டிலும் பெருச்சாளிகள் காட்சியளிக்கின்றனவே தவிர, வேறு மனிதனைக் காட்சி அளிப்பதே கிடையாது. அந்த நிலைமை போய்த்தான் ஆகவேண்டும். ஆனால், கூட்டுறவு இயக்கம் புனிதமான ஒரு இயக்கமாகும். அந்தப் புனிதமான இயக்கத்





திலும், தவறான சட்டங்களை வைத்துக்கொண்டிருப்பதனாலே, சில தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. எங்கள் ஊரிலே சென்ட்ரல் ஸ்டோர் இருக்கிறது. சில ஆட்கள் போய் நாமினேஷன் பாரம் வேண்டும் என்று கேட்டால், கொடுக்கமாட்டார்கள். திருநெல்வேலியிலிருந்து தூத்துகுடிக்கு டெலிபோன் பண்ணுவார்கள். அங்கிருந்து இங்கு டெலிபோன் வரும். இந்த ஆபீசைக் கேட்டால் அந்த ஆபீசில் கேட்கவேண்டும் என்பார்கள். அந்த ஆபீசில் கேட்டால் இந்த ஆபீசில் கேட்கவேண்டும் என்பார்கள். நாமினேஷன் பாரம் கிடைக்காது. ஆகவே, நாமினேஷன் பாரம் கூடக் கொடுப்பதற்கு இல்லாத சர்வாதிகார துறையிலே அந்த இயக்கம் போய்க்கொண்டிருக்குமானால் அதை என்ன என்று சொல்வது? கூட்டுறவு ரிஜிஸ்திராரைக் கேட்டால் சொல்வார்கள், அமைச்சரைக் கேட்டால் சொல்வார்கள், இத்தனை சங்கங்கள், இத்தனை அங்கத்தினர்கள் என்று கணக்குச் சொல்வார்கள். அத்தனை அங்கத்தினர்களைச் சேர்த்திருக்கிறார்கள் என்பது ஓரளவுக்கு உண்மையே. அத்தனை அங்கத்தினர்களைச் சேர்த்ததைக் குறித்து நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், மாநிலத்தில் இருக்கும் பாங்குகள், ஜில்லாவிலே இருக்கும் பாங்குகள் அதற்கு உதவி செய்தால்தானே முடியும்? தாய் குழந்தைகளை அணைக்கிற மாதிரி அணைத்தால்தானே முடியும்? யாரோ பிடித்துக் கொண்டிருப்பார்கள். தகப்பன், பிள்ளை, மாமன், மாமியார் வழியாக நடந்துகொண்டே இருக்கும். அதற்கு மேல் மாறுவதே கிடையாது. இதை மாற்ற வேண்டுமானால், சாமான்யமாக மாற்றிவிட முடியாது. சட்டம் தான் மாற்ற முடியும். சட்டத்தை மாற்றிவிட்டுத்தான் பேச வேண்டுமே தவிர சட்டத்திலே இருக்கும் ஓட்டை உடைசல்களை வைத்துக்கொண்டு ஒன்றுமே செய்ய முடியாது. இந்த இயக்கம் புனிதமான இயக்கம் தான். இந்த இயக்கம் பரவவேண்டும். இந்த இயக்கத்தின் மூலமாகத்தான் இந்த நாட்டில் சோஷலிச சமுதாயத்தைக் காண முடியும். சோஷலிச சமுதாயத்திற்கு எதிராக இருக்கும் சக்திகள் இந்தக் கூட்டுறவு இயக்கத்தை எதிர்ப்பது என்பது ஒன்று. என்னைப்போன்றவர்கள் எதிர்ப்பது என்பது வேறு. கூட்டுறவு இயக்கம் மூலமாக வட்டிக் கடை வைக்கிறதே அரசாங்கம் என்று சிலர் சொல்லுகிறார்கள். வெளியிலே 25 சதவிகிதம் வட்டிக்குக் கொடுக்கிறார்கள் என்றால் 7½ சதவிகிதம் வட்டிக்குக் கூட்டுறவு இயக்கம் மூலமாகக் கடன் கிடைக்கிறது. அது தர்மமாகக் கொடுக்கிறது. அந்த இயக்கத்திலே உள்ளவர்கள் அதைப் பிடித்துக்கொண்டு இருக்கிறார்களே, அவர்களை எப்படி விரட்டுவது? விரட்டவேண்டும் என்று சொல்லவில்லை. ஒருவர் இருவர் அங்கே இருக்கிறார்கள். "காங்கிரஸ்காரர்கள் தானே அதைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களை விரட்டவில்லையே" என்று சொல்லலாம். எத்தனையோ பேரை விரட்டியிருக்கிறோம். திரு. பிரகாசம் இருந்தார். திரு. ஓமந்தூர் ரெட்டியார் இருந்தார். திரு. குமாரசாமி ராஜா இருந்தார். எத்தனை எத்தனையோ பேர் போய்க் கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, ஜனநாயக அடிப்படையிலே

இங்கு இயங்குகிறது. ஜனநாயக அடிப்படையிலே சட்டசபையும், அரசாங்கமும் இயங்குகின்றன. ஆனால், அங்கே ஜனநாயகம் என்ற பெயரால் ஒருசிலர் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அற நிலையப் பாதுகாப்பும் கூட்டுறவும் ஒன்றாகவே அன்றிலிருந்து இன்று வரை அதே நிலையில் இருந்துக்கொண்டிருக்கின்றன என்று நான் கருதுகிறேன். அன்று மாற்றிய சட்டத்தை எப்படியோ ஓரளவுக்கு எங்கெங்கிருந்தோ செல்வாக்கெல்லாம் வந்து அந்தச் சட்டத்தை நிறைவேற்றுமாறு பண்ணிவிட்டார்கள். ஆகவே, திரு. மன்றாடியார் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். "உங்களையே எடுத்துக் கொள்ளுங்கள். எத்தனையோ ஏக்கர் நிலம் வைத்திருந்தீர்களே, அதெல்லாம் உங்களிடம் இருக்கிறதா? மாற்றிவிடவில்லையா?" ஆகவே, இன்று இருக்கிறவர்களுக்கு ஒரு வேண்டுகோள் . . . .

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் சபாநாயகர் அவர்களே, ஜனநாயக முறையிலே தேர்தல் நடக்கிறது. தேர்தலில் வெற்றி பெற்று வருகிறவர்களை, மந்திரிகள் பார்த்து, "வரவேண்டாம்" என்று சொல்ல முடியாது.

**திரு. கே. டி. கோசல்ராம்:** அதற்காகத்தான் நண்பர் கனம் திரு. கக்கன் அவர்களுக்குச் சொல்கிறேன். சட்டத்திலே ஓட்டை இருக்கிறது. அந்தச் சட்டத்திலே இருக்கிற ஓட்டையை அடைத்துவிட்டால் அதிகாரிகளைக் குறை சொல்ல வேண்டாம்; அமைச்சர்களையும் குறை சொல்ல வேண்டாம். கட்சிகளையும் குறை சொல்லவேண்டாம். ஆகவே, சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று நான் காரசாரமாகச் சொல்லிக்கொண்டு உரையை முடிக்கின்றேன்.

**திரு. பி. வி. சீராமுலு:** கனம் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீதான வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

முதலாவதாக, சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தர்மபுரி மாவட்டம் உருவாகியிருக்கிறது. அக்டோபர் மாதத்திலே பிரிக்கப்பட்டு, ஜூன் மாதத்திலே சேலத்தினுடைய மத்திய பாங்கு தனியாகப் பிரிக்கப்படும் என்று சொல்லப்பட்டும் கூட, அரசியல் காரணத்திற்காக, அதை அடுத்த தேர்தல் வரையில் தள்ளிப் போடுவதாகக் கேள்விப்படுகிறேன். அது மட்டுமல்ல. அங்கு அரசியல் தாண்டவமாடுகிறது என்பதையும் நான் சுட்டிக் காட்ட முற்படுகிறேன். ஏனென்றால், அதனுடைய தலைவர், முன்னாள் தலைவரைச் சந்தித்து, "நீங்கள் காங்கிரசில் சேர்ந்தால் தான் உங்களுக்கு அடுத்து வரும் சென்ட்ரல் பாங்க் தலைவர் பதவி கிடைக்கும், இல்லையென்றால் உங்களுக்குக் கிடைக்காது" என்று கூறியுள்ளார். எந்தக் கட்சிக் கண்ணோட்டத்தோடு அந்த பாங்கை பயன்படுத்துகிறார்கள் என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.





அதோடு மட்டுமல்ல. இந்த டார்ஜெட் போடும்படியான திட்டத்தையே ஒழிக்கவேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை. டார்ஜெட் என்று வைத்துக் கொண்டு, மத்திய பாங்க் ஷேர் கலெக்ஷன் செய்வதும், மத்திய பாங்க் கடன் பெறுவதும் என்ற கொள்கையை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலே மேகலாம்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரில் எம். கே. கண்ணுசாமி—தலைவர், ஊராட்சி மன்றம்—அந்த சொசைட்டியிலே அங்கத்தினர். அவர் 420-ஆம் எண் உள்ள அங்கத்தினர். அவருக்கு லோன் கொடுக்கப்பட்டது. அந்தத் தொகை ரூ. 1,000. ஆனால், அந்தப் பணத்தை--டார்ஜெட் வேண்டும் என்ற காரணத்திற்காக—பிக்செட் டிபாசிட்டாக வாங்கி விட்டார்கள். ஆயிரம் ரூபாய் பணத்தை லோனாகக் கொடுத்து, அதையே பிக்செட் டிபாசிட் என்று மூன்று நாட்களுக்குள்ளாகப் போட்டுவிட்டார்கள். அதிலே 90 சதவிகிதம் வாங்கலாம் என்ற நிபந்தனையின் பேரில் ஒன்றரை ஆண்டுகளுக்கு ஆயிரத்திற்கு ரூ. 900 அவர்களுக்கே லோன் கொடுத்துவிட்டார்கள். கூட்டுறவு நாணயச் சங்கங்கள் நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்று விரும்பி வேண்டிக்கொண்டாலும் கூட, இப்படி முறைகேடான காரியம் நடக்கிறது என்றால் எப்படி இந்தக் கூட்டுறவு இலாக்கா இதைப் பொறுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. கூட்டுறவு இலாக்காவிலேயே கூட்டுறவு நகர வங்கி இருக்கிறது. இத்தனை வங்கிகள் இந்த மாநிலத்தில் இருந்தாலும் கூட, சென்ட்ரல் பாங்கின் உதவி இல்லை. அந்த இலாக்காவைப் பொறுத்த வரையில், அந்த வங்கிகளுக்கு நல்ல கடன்கள் கொடுத்து மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை.

மார்க்கெட்டிங் சொசைட்டியைப் பற்றிப் பார்க்கும்போது, ஜனநாயகத்தை இந்த அரசாங்கம் விரும்பி வேண்டி அளிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டாலும் கூட, அந்த இலாக்கா சற்றும் இடம் கொடுக்கவில்லை. ஜனநாயகத்தையே சாகடிக்கத் தான் முற்படுகிறது. ஏனென்றால், மார்க்கெட்டிங் சொசைட்டியிலே 5,000, 6,000, 10,000 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால்; டெபரல் ஸ்கீம் என்ற தனிப்பட்ட ஸ்கீம் கொண்டுவந்து, முப்பது சொசைட்டியோ, நாற்பது சொசைட்டியின் டெலிகேட்டுகள் மட்டும் தான் அந்த மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்க இருந்தால், அதனுடைய நிர்வாகஸ்தர்களை டெலிகேட்டுகள் மாத்திரம் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற எண்ணம் அந்தப் பகுதிக்கு வந்தால் இது ஜனநாயகத்தின் ஆணிவேரா? சர்வாதிகாரத்தின் ஆணிவேரா? என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

அதுமட்டும் அல்ல. கூட்டுறவு மத்திய மார்க்கெட்டிங் சொசைட்டி 12-30
என்று ஒன்று இருக்கிறது. அது என்ன வேலை செய்கிறது என்று p.m.
தெரியவில்லை. இந்த மாநிலத்தில் உள்ள அத்தனை பேர்களும்

[திரு. பி. வி. சீராமுலு] [12th March 1966

ஒன்று கூடிப் பேசத் தயாராய் இருக்கிறார்கள். ஆனால் எக்ஸ்போர்ட், இம்போர்ட் சம்பந்தமாக குறிப்பிட்டு ஏதாவது செய்தார்களா என்றால் ஏதாவது ஒன்று இரண்டு என்று விரல்விட்டுச் சொல்ல முடியுமா ?

அதோடு மட்டும் அல்ல. குறிப்பாக ஆலைகளை எடுத்துக் கொண்டால் தஞ்சை மாவட்டத்தில் ஒரு அரிசி மில் இருக்கிறது. இந்தோ-ஜப்பான் கொலாபரேஷன் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது சைபன் சிஸ்டம். அதை ஏற்படுத்த செலவு 7 லட்சம் ரூபாய். இது ஒரு மணிக்கு 40 மூட்டை அரைக்கும். ஆனால் 750 ரூபாய்க்கு ஒரு ரைஸ் மில் ஏற்படுத்தினால் ஒரு மணிக்கு 20 மூட்டை அரைக்கும். அப்படி இருக்க இந்த நாட்டுக்கு அவ்வளவு அதிகமான தொகையில் ரைஸ் மில் தேவைதானா என்பதை யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டும் அல்ல. கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகள் நான்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. டிவிடெண்ட் உண்டா ? 3 சதவிகிதம் வட்டியாவது கொடுத்திருக்கிறார்களா ? 6 லட்சம் டன் உற்பத்தி செய்கிறார்களே, வெளிநாட்டுச் செலாவணியைப் பெற கன்பெக்ஷனரி ஏற்படுத்த முயன்றார்களா ? இன்றையதினம் பாரி கம்பெனியை எடுத்துக்கொண்டால் ரூ. 4 கோடிக்குச் செய்கிறார்களே, இவர்கள் எங்கே செய்ய முன்வந்தார்கள் ? இனிமேல் சர்க்கரை ஆலை புதிதாகத் துவக்கப்படுகிற முயற்சி ஒரு பக்கம் இருந்தாலும் பழைய மில்கள் நல்லமுறையில் செயல்பட லாப நஷ்டக் கணக்கைப் பார்த்து ஆராயவேண்டும். புதியதாக மில்களைத் துவக்குவது என்றால் சற்று யோசித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **திரு. மா. தண்டாயுதபாணி:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் கூற ஆசைப்படுகிறேன். கூட்டுறவுத் துறை என்பது உத்தியோகப் பற்றற்றவர்களும், உத்தியோகப் பற்றுள்ளவர்களும் சேர்ந்து செயல்படுகிற ஒரு துறையாகும். அதில் பல குறைகள் காணப்படுகின்றன என்பதால் அந்தக் குறைபாட்டின் காரணமாக அந்தத் துறை நல்லமுறையில் செயல்படவில்லை என்ற முடிவுக்கு நாம் வந்துவிட முடியாது. இந்தக் கூட்டுறவுத் துறை கடந்த ஆண்டுகளில் நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு துறைகளில் விரிந்தும், தொடர்ந்தும் முன்னேறி வந்துள்ளது. குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு நல்ல நலனை அளித்திருக்கிறதென்றாலும் அதில் உள்ள சிக்கல்களை நிவர்த்தி செய்தாலேயே மேலும் நல்லமுறையில் பணியாற்ற வாய்ப்பு ஏற்படும்.

குறிப்பாக, அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற இந்த அறிக்கையில் "ஒரு சங்கம் செம்மையாகச் செயல்பட வேண்டுமென்றால், அது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 லட்சம் கடன் வழங்கும் நிலையில்



12th March 1966] [திரு. மா. தண்டாயுதபாணி]

இருக்கவேண்டும்" என்று மதிப்பிட்டு பல சங்கங்களை ஒன்றாக இணைக்கும் யோசனை இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இப்படிச் செய்வதனால் முன்பு இருந்ததைவிட நல்லமுறையில் செயல்பட வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். கிட்டத்தட்ட ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் என்று இயங்குகிற நிலைமையை மாற்றி, மூன்று நான்கு சங்கங்களை இணைத்துவிடுவோமானால் பதவிக்குப் போட்டிகளும், பல கோஷ்டிப் பூசல்களும் தான் அதிகமாக ஏற்படும். இந்த நிலையை கனம் அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு மீண்டும் அதைப் புனராலோசனை செய்து பழைய முறைப்படியே தனித்தனி கிராமத்திற்குத் தனித்தனிச் சங்கமாக இருந்து இயங்க உதவி செய்ய வேண்டும் என்பதாக இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக சிறுசிறு கூட்டுறவு பாங்குகள் இயங்கி வருகின்றன. இவை கூட்டுறவு மத்திய பாங்கில் இருந்து கடன் பெற்று செயல்பட்டு வருகிறது. பல ஆண்டு காலமாக இந்தக் கூட்டுறவு பாங்குகள் மத்திய பாங்கில் இருந்து கடன் வாங்கி கிராமப்புறத்தில் வாழ்கின்ற மக்களுக்கு நகையீட்டின் பேரில் கடன் வழங்கிவந்தார்கள். ஆனால் விவசாயப் பணிகளுக்குத்தான் இனிமேல் கடன் வழங்கவேண்டுமென்ற நியதியை இப்போது ஏற்படுத்தியிருக்கிற காரணத்தினால் மத்திய கூட்டுறவு பாங்க் இது போன்ற பாங்குகளுக்குக் கடன் கொடுப்பதில்லை. தங்களது நகைகளை வைத்து குறைந்த வட்டிக்கு கடன் பெற்று வந்த விவசாயிகளுக்கு இன்றையதினம் கடன் கிடைக்க வழியில்லை. இவையெல்லாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எந்த வகையிலாவது விவசாயிகளுடைய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கவேண்டுமென்று சொல்கிற நேரத்தில் இதுபோல கிடைத்து வந்த கடனும் கூடக் கிடைக்காமல் போகிற நிலை உண்டாக்கப்படுவது நல்லதாக இருக்காது என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த பாங்குகள் நீண்டகாலக் கடன் வழங்கி வந்தன. அதிலே கூடச் சில மாறுதல்களைச் செய்திருக்கிறோம். நில அபிவிருத்திக்கு கடன் வாங்கவேண்டுமென்றால் முன்பு மனுச் செய்துகொண்டவுடனே கடன் கிடைக்க வாய்ப்பு இருந்தது. ஆனால் இன்றையதினம் நில அபிவிருத்தி செய்கிறோம் என்கிற நேரத்தில் எஸ்டிமேட் தயாரித்து அனுப்பவேண்டுமென்றும், மேல் அதிகாரிகள் வந்து பார்த்த பிறகுதான் கடன் வழங்க வேண்டுமென்றும் இப்போது ஏற்படுத்தியிருக்கிறோம். இதுபோன்ற சிக்கல்களைப் புகுத்துவதனால் பல வீண் தொல்லைகள் தான் உண்டாகும். ஆகவே இதைப் பழையபடியே மாற்றி அமைக்க வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நில அடமான பாங்குகள் நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு தாலுக்கா தலைநகரங்களிலும் இயங்கி வருகிறது. இந்த ஸ்தாபனங்களின் மூலமாகத்தான் ஒரு கணிச

மான தொகை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. தற்போது நாம் போட்டிருக்கும் சட்டத்தினால் அதன் வாயிலாகக் கிடைத்து வந்த பலன்களும் விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போக இருக்கிறது. முன்பு முன் கடனைத் தீர்ப்பதற்கும், நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கும் சதவிகித நிர்ணயம் செய்து நிலத்தை அடைமானம் வைத்துக்கொண்டு கடன் வழங்கி வந்தோம். அந்த நிலையை மாற்றி முன் கடன்களைத் தீர்ப்பதற்கு ப்ரோநோட்டுகள் போதாது, ஒத்திபெந்தக பத்திரம் இருந்தால் தான் கடன் வழங்கப்படும் என்று செய்திருப்பதனால் அதை வற்புறுத்துவதன் காரணமாக இரட்டிப்புச் செலவு இப்போது அவர்களுக்கு ஏற்பட இருக்கிறது. இந்த நிலையையும் மாற்றி பழையபடியே வைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் ஒரு சிறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். நில அபிவிருத்தி என்ற அடிப்படையில் கிணறு வெட்டவும், மோட்டார் வைக்கவும் தான் கடன் கொடுக்கப்படும் என்றால் ஏற்கனவே பாசன ஆதாரம் உள்ள அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு மிகவும் சங்கடம் ஏற்படும். கிணறு வெட்ட என்று ரெவின்யூ துறையில் தனியாகக் கடன் வழங்கப்படுகிறது. அந்தக் கடன் 5,000 ரூபாய் வாங்கினால் 500 ரூபாய் மானியமும் கிடைக்கிறது. ஒரு ஏக்கர் விஸ்தீரணம் உள்ள பூமியை அதற்கு அடைமானம் வைத்தால் போதும். ஆனால் நில அடைமான பாங்கின் மூலம் கிணறு வெட்டக் கடன் வாங்குவது என்றால் மாதக் கணக்கிலும் காத்திருக்கவேண்டும். மானியமும் கிடையாது. மூன்று, நான்கு ஏக்கர் விஸ்தீரணம் உள்ள பூமியையும் அடைமானம் வைக்க வேண்டியிருக்கும். நிச்சயமாக இந்த முறையை மாற்றி அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பழைய முறைப்படியே வைக்க வேண்டும். ஏற்கனவே கடன் வாங்கி நிலத்தை அபிவிருத்தி செய்திருந்தாலும் இந்தக் கடனைக் கொண்டு அதை அடைத்துக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது ஏற்கனவே பாசன வசதியைப் பெற்றிருக்கிற காரணத்தினால் அவர்களுக்குப் பழைய முறைப்படியே கடன் வழங்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. அ. தியாகராசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியினர் கொண்டுவந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இருக்கக்கூடிய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும்போது காங்கிரஸ்காரர்கள், எதிரில் உள்ளவர்கள் கோபப்படுகிறார்கள். சட்டம் எப்படி அமலாக்கப்படுகிறது என்பதைக் குறித்து ஒருசில கருத்துக்களைக் கூறுவது சாலச்சிறந்ததாக இருக்கும்.

என்னுடைய டிவிஷனில் சென்ட்ரல் பாங்க் இருக்கிறது. அதற்குத் தலைவராக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் சென்ட்ரல் பாங்க் தலைவராக வந்ததே ஒரு விநோதமான காரியம்.



வம்பன் Defunct Handpound Society-ல் ஒருடெலிகேட்டாக தம்மைப் பிரகடனப்படுத்திக்கொண்டு தேர்தலில் நின்று சென்ட்ரல் பாங்கின் தலைவராக அவர் வந்திருக்கிறார். அதோடு மாத்திரமல்லாமல் அவராலே சட்டம் இந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறது என்பதையொட்டி நான் 100 ரூபாய் கட்டி ஆர்பிட்ரேஷன் செய்வதற்குக் கோரியிருந்தேன். நான் இங்கே சட்ட மன்றத்திற்கு வரும் தேதியாகப் பார்த்து அங்கே இருக்கிற ரிஜிஸ்திரார் தேதியைக் குறிப்பிட்டார்கள். நான் அங்கிருந்து ஒத்தி வைக்கவேண்டுமென்று தந்தியடித்தேன். அவர் அந்தத் தந்தியையும் வாங்கி வைத்துக்கொண்டு எக்ஸ்பார்ட்டி டிகிரி செய்துவிட்டார்கள் என்பதையும், இரண்டாவது முறையாக இதில் சட்டம் எப்படி மீறப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தவிர வம்பன் பால் விநியோக சங்கம் என்று இருக்கிறது. அதில் அந்தத் தலைவருடைய மனைவிதான் பிரசிடெண்ட், தம்பி செகரட்டரி. இதையெல்லாம் கோவாப்பரேடிவ் டிபார்ட்மெண்ட் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது. 9—7—1964-ஆம் தேதியில் சென்ட்ரல் பாங்கியில் அந்த பிரசிடெண்ட், ரிஜிஸ்திரார் ஒப்புதல் இல்லாமலேயே ரூபாய் 2,250 எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் 250 ரூபாயை தன்னுடைய சொந்தத்திற்காக ஒதுக்கி வைத்துக்கொண்டு மீதி ரூபாய் 2,000-ஐ தலைவர் தன்னுடைய கரண்ட் அக்கவுண்டிலே அதே தேதியில் போட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நான் அங்கேயுள்ள டெபுடி ரிஜிஸ்திராரிடம் புகார் செய்தேன். நானும் புகார் செய்திருக்கிறேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். மேற்படி தலைவர் புதுக்கோட்டையிலே கீழ 4-ம் தெருவில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அங்கே தங்கிக் கொண்டு வீரடிப்பட்டியிலிருந்து வருவதாகச் சொல்லி ஒவ்வொரு மாதமும் 15 நாட்களுக்கு சென்ட்ரல் பாங்கிலே படியும், சிட்டிங் சார்ஜசும் எடுத்துக்கொள்கிறார். கூட்டுறவு Central பாங்கியில் பிரசிடெண்ட்டாக இருப்பவர் Delegate ஆக மற்றொரு கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு சென்றால் அங்கு வைஸ்-பிரசிடெண்ட் ஆகவோ, பிரசிடெண்டாகவோ இருக்கக்கூடாது என்று பை-லா இருந்தாலும்கூட அவர் வைஸ்-பிரசிடெண்ட்டாக நான்கு ஆண்டுக் காலமாக இருந்துவருகிறார். இதைத்தவிர அவர் P.C.C. மார்க்கெட்டிங் சொசைடியிலே ஒரு மாதத்தில் பாக்கியுள்ள 15 நாட்களுக்கும் படியும், சிட்டிங் பீசும் எடுத்துக் கொள்ளுகிறார். மூன்று மாதங்களுக்கு முன்பு பி.சி.சி. ஸ்டோரில் மூவாயிரம் உர மூட்டைகள் கொள்ளையடிக்கப்பட்டதாக தகவல் வந்திருக்கிறது. அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பது புரியவில்லை. பி.சி.சி. ஸ்டோரில் ஸ்டாக் ரிஜிஸ்டரே வைத்துக்கொள்ளவில்லை. அதனால்தான் கொள்ளையடிப்பதற்கு ஏதுவாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். வம்பனிலே கூட்டுறவு மில்க் சொசைடி, கிரடிட் சொசைடி என்று இரண்டு இருக்கின்றன. திருவரங்குளம் பிளாக்கிலே இந்த பிரசிடெண்டுடைய சொந்தக்காரர் சாத்தன் என்பவர் ஆசிரியராக இருக்கிறார். அவர்தான் இந்த மில்க் சொசைட்டியினுடைய செகரட்டரியாகவும், கிரடிட் சொசைட்டி-

[திரு. அ. தியாகராசன்] [12th March 1966

யினுடைய செகரட்டரியாகவும் இருக்கிறார். அவர் இந்த இரண்டு இடங்களிலும் சம்பளம் வாங்கிக்கொள்கிறார். அதோடு அந்தப் பஞ்சாயத்து யூனியனில் வேலை பார்ப்பதற்கும் சம்பளம் வாங்கிக்கொண்டு இருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமோ, தெரியாதோ, தெரியவில்லை. அப்படித் தெரிந்தால்கூட சட்டத்தை வளைத்து விடுவார்கள் என்று தான் நான் நினைக்கிறேன். ஆகவே இந்த மாதிரியான குற்றங்களையெல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொள்ளை இவ்வளவெல்லாம் உண்டாவதற்கு காரணமே கனம் அமைச்சர் ராமைய்யா அவர்கள் கொடுத்த இடம் தான் என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் அனாவசியமாக அமைச்சர் ராமைய்யா அவர்களை இதில் இழுப்பது சரியல்ல. சொந்தக்காரர்களாக இருப்பது தான் இதற்குக் காரணம் என்று சொல்வது சரியல்ல. கனம் அங்கத்தினருடைய சொந்தக்காரர் ஏதாவது செய்தால் அதற்குக் கனம் அங்கத்தினர் காடுவெட்டி தான் காரணம் என்று சொல்லமுடியுமா ?

**திரு. அ. தியாகராசன் :** உணவு அமைச்சர் அவர்கள் அங்கு வரும்பொழுது அந்த Central Bank பிரசிடெண்டைக் காரில் தூக்கிவைத்துக்கொண்டு வெளியே போவதால்தான் அவரை அங்கிருக்கின்ற அதிகாரிகள் தட்டிக்கேட்பதற்கு பயந்துகொண்டு முடியாத நிலைமை ஏற்படுகிறது என்பதைக் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அதேமாதிரி கனம் அங்கத்தினர் அவர்கள் செல்லும்பொழுது, எம்.எல்.ஏ. போகும்பொழுது அவருடன் அக்கிரமம் செய்கிறவர்கள் காரில் போகிறார்கள் என்று கருதப்படுமா ?

**திரு. அ. தியாகராசன் :** அந்த சென்ட்ரல் பாங்க் தலைவர் என் மீது மானநஷ்ட வழக்குப் போட்டிருக்கிறார்கள். இதற்குக் கூட கனம் அமைச்சர் திரு. ராமைய்யா அவர்களுடைய பெர்சனல் கிளார்க் 18—11—1956-ஆம் தேதியில் இங்குள்ள லைப்ரெரியில் 1963-ம் வருடம் நான் பேசிய கோவாப்ரேடிவ் துறை பட்ஜெட் ஸ்பீச்சை எடுத்துக்கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கனம் அமைச்சரும் அமைச்சர் அவர்களுடைய பெர்சனல் கிளார்க் கூட இதற்கு உதவி செய்யக்கூடிய வகையிலே நிர்வாகம் அமைந்திருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** பட்ஜெட் ஸ்பீச் எல்லாம்தான் டைப் பண்ணப்பட்டு, பிரிண்ட் செய்யப்பட்டு அனுப்பப்படுகிறதே.

**திரு. அ. தியாகராசன் :** இருந்தாலும் 18—11—1965-ஆம் தேதியன்று நான் 1963-ம் வருடத்தில் பேசியதை லைப்ரரியிலிருந்து வாங்கவேண்டிய அவசியமில்லை. என்னுடைய மேடைப் பேச்சை



12th March 1966] [திரு. அ. தியாகராசன்]

பற்றி போலீசிலே என்னுடைய ஸ்பீச்சின் சுருக்கெழுத்தைக் கேட்டார்கள். அவர்கள் கொடுக்க மறுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதை வேலூருக்குக் கேட்டு எழுதினார்கள். (மணியடிக்கப் பட்டது.)

* **திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சட்டமன்றத் தலைவரவர்களே, நடைபெற்றுக்கொண்டிருக்கிற விவாதத்தில் என்னுடைய கட்சியினால் கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு எங்கெங்கு எப்படி இருந்தாலும், இந்தக் கூட்டுறவுக்கே பெயர்பெற்றது என்னுடைய மாவட்டம்தான். கூட்டுறவில் எத்தனையோ மோசடிகளையெல்லாம், கைதேர்ந்த மோசடிகளை எல்லாம் செய்வதில் பெயர்பெற்ற மாவட்டம் எங்களுடைய மாவட்டம் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** அது எந்த மாவட்டம் ?

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** வட ஆற்காடு மாவட்டம்தான். அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் தலைவர்களையும், கலெக்டர்களையும் யோசனை கேட்கிறேன் என்று சொன்னார்கள். அப்படி யோசனை கேட்பதை நான் வரவேற்கிறேன். கூட்டுறவில் மாறுபட்ட கருத்துடையவர்களையும் அழைத்துப் பேசியிருந்தால் அது நன்றாக இருந்திருக்கும். அமைச்சர் அவர்கள் காலையிலே ஆற்றிய உரை, ஏதோ பாசாங்கு செய்வதுபோல்தான் இருந்ததே தவிர, அது உரையில்லை. வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடி இருக்கிறது. அதுதான் ஜில்லா பூராவுக்கும், விநியோகம், பர்சேஸ், அதாவது கொள்முதல், விற்பனை முதல் செய்கின்ற வேலைகளையெல்லாம் கவனித்துக்கொண்டு வரவேண்டும். இதைத் தவிர அங்காங்கே தாலுகாக்களிலே எல்லாம் சங்கத்தை வைத்து டிஸ்ட்ரிபியூஷன் செய்கிறது. இதைத் தவிர தாலுகா மார்க்கட்டிங் சொசைடிகள் இரண்டு இருக்கின்றன. ஒன்று திருவண்ணாமலையிலும், மற்றொன்று அரக்கோணத்திலும் இருக்கிறது. தாலுகா மார்க்கெட்டிங் சொசைடி மூலமாகத்தான் அந்த மாவட்டத்தில் செய்யக்கூடிய விநியோகம் சர்க்கரை முதற்கொண்டு, இன்னும் தானியங்கள், அமோனியம் சல்பேட், யூரியா வரையிலும் செய்யவேண்டும். டிஸ்ட்ரிக்ட் மார்க்கெட்டிங் சொசைடிகளைகள் மூலமாக டிஸ்ட்ரிபியூஷன் செய்வதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் இந்த திருவண்ணாமலை, அரக்கோணம் தாலுகா மார்க்கெட்டிங் சொசைடிகளில் தனிப்பட்டவர்கள் தவறுகள் இருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அரக்கோணம் தாலுகா மார்க்கெட்டிங் சொசைடியில் ஒரு தவறு இருக்கிறது. அங்கே 18 பேர்களுக்கு 1963-64, 1964-65-ஆம் ஆண்டுகளில் கடன் கொடுக்கப்பட்டதாக எழுதப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அங்கே இருக்கக்கூடியவர்கள் ஆடிட் செய்தாகூட இருக்கிறார்கள். ஆனால் ஆடிட் ரிப்போர்ட் செய்தாலும் கூட, அங்கேயுள்ள ரிஜிஸ்திரார் உனக்கென்னய்யா, வம்பையெல்லாம் ஏன் இழுத்துக்கொள்கிறீர்கள், ஏதோ எழுதிவிட்டுப்

போயேன் என்று சொல்கிறார்கள். இதைத்தவிர ஐக்கிய நாணய சங்கங்கள் என்று கிராமங்களில் இருக்கின்றன. நாணயச் சங்கங்கள் என்றால் அவை நாணயமாகவா இருக்கின்றன? தணிகைப் போளூர், சிறுமல்லி என்ற இரண்டு கிராமங்களில் இவை இருக்கின்றன. ஒரு கிராமத்தில் 75,000 ரூபாய் மோசடி, ஃப்ராட், செய்யப்பட்டிருக்கிறது. ஒருவர் மற்றொருவருடைய கையெழுத்தைப்போல் போட்டு யூனியன் சங்கத்திற்கு அனுப்பினார். அந்த யூனியன் சங்கம் அதைப் பாஸ் செய்து சென்ட்ரல் பாங்குக்கு அனுப்பியது. சென்ட்ரல் பாங்கும் அதைப் பாஸ் செய்திருக்கிறது. யூனியன் பாங்கில் இருப்பவர்கள்தான் அங்கே சென்ட்ரல் பாங்கிலும் இருக்கிறார்கள், அவர்களுக்குத் தெரியாதா எது உண்மை என்று இதைப்போல பல மோசடிகள் நடந்திருக்கின்றன. இதைப்பற்றியெல்லாம் நான் எழுதியனுப்பியுள்ளேன். ஆனால் இதுவரை ஒரு தகவலும் இல்லை. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் உண்மையான விவசாயிகளுக்குப் பணம் கிடைப்பதில்லை, தவறுகள் செய்பவர்களுக்குத்தான் பணம் கிடைக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டத்தான். 1963-64 என்று நினைக்கிறேன். ஒருவர் வட ஆற்காடு, பெரிய கடம்பூரைச் சேர்ந்தவர், கண்டிகை என்ற கிராமத்தில் வசிப்பவர், கோவிந்த நாயுடு என்று பெயர். அவருக்காகத் தாலுகா மார்க்கெட்டிங் சொசைட்டியில் இருந்து பணம் வாங்கப்பட்டது. 3,500 ரூபாய் அல்லது 4,000 ரூபாய் வாங்கப்பட்டது. உள்ளே கடலைக்காய் கிடையாது. அவர் அந்தக் கடலைக்காய் மூட்டைகளை எடுத்து விற்று விட்டார். இந்த நிலைமைகள் அங்கு உருவாகி வருகின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையில் கார்களுக்கும், ஜீப்புகளுக்கும் கணக்கு வழக்கு இல்லாமல் இருக்கின்றன. யாராவது எனக்கு இரவலாகக் காரைக் கொடுத்தால் கூட பெட்ரோல் போட நான் பால்மாறுகிறேன். ஆனால் அங்கு பெட்ரோல் தண்ணீர் மாதிரி செலவாகிறது. டி. ஏ. வாங்குவதை மட்டும் கொஞ்சம் கட்டுப் படுத்திக் கொள்ளுங்கள் என்று . . . (மணி அடிக்கப் பட்டது)

**திரு. கே. எஸ். சுப்பிரமணி கவுண்டர்:** மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சில விஷயங்களைப் பற்றி முதலிலே பேச வேண்டுமென்று குறித்து வைத்திருந்தேன்; ஆனால் அதை விட்டு விட்டு ஏற்கனவே சில மெம்பர்கள் பேசிய விஷயத்திற்குப் பதில் சொல்லிவிட்டு அதற்கு மேல் நேரம் இருந்தால் மற்ற விஷயங்களுக்குப் போகலாம் என்று கருதுகிறேன்.

அன்பில் தர்மலிங்கம் அவர்கள், சேலம் ஜில்லாவில் அம்மாப்பேட்டை சொசைட்டியில் பல தவறுதல்கள் நடந்து விட்டதாகச் சில அட்டவணைகளை எடுத்துப் படித்தார்கள். அவர்கள் சொன்னதில் மூன்று முக்கிய விஷயங்கள்—சொசைட்டியிலிருந்து 'பேல்' சென்னைக்கு அனுப்பப்பட்டது திரும்பி வந்து விட்டதைக் கணக்கிலே வைத்தார்கள். இரண்டாவது சிலருக்கு சொசைட்டி-



அக்கவுண்டிலே கடன் கொடுத்திருக்கிறார்கள் என்பது. அதிலே பல பெயர்களைச் சொன்னார்கள். கூட்டுறவு அமைச்சர் அவர்களுடைய பெயரையும் சேர்த்துப் படித்தார்கள். அவர் சொன்னதை வைத்துச் சொல்கிறேன்—ஏதோ ஒரு சிப்பந்தி ஸ்டாக் குறைகிறது அளவிலே, அவர் பெயரிலே என்ன குறை என்று கேட்டபோது, இன்னின்னாருக்குக் கொடுத்திருப்பதாகக் கணக்கு எழுதி வைத்திருப்பார்கள். அதைத்தான் அவர்கள் வரிசையாகப் படித்தார்கள். அன்பில் தர்மலிங்கம் அவர்கள் கூட்டுறவு இயக்கத்திற்குச் சம்பந்தப்படாதவர்கள் அல்ல. அவர் திருச்சிராப்பள்ளி சென்ட்ரல் பாங்கிலே டைரக்டராக இருக்கிறார். எக்சிக்யூட்டிவ் கமிட்டி அங்கத்தினராகவும் இருக்கிறார். சாதாரணமாக இம்மாதிரி ஒரு விஷயத்தைச் சொல்லும்போது அது விசாரணை செய்யப்பட்டு, விசாரணையில் இன்னது என்று நிரூபிக்கப்பட்ட விஷயத்தை எடுத்துச் சொல்லியிருந்தால் அவர்கள் சொல்லியது சரி என்று சொல்லமுடியும். இருக்கிறவர்களுடைய பெயர்கள், இல்லாதவர்களுடைய பெயர்கள் எல்லாவற்றையும் சேர்த்து அன்பில் தர்மலிங்கம் அவர்கள் சொல்வார்களேயானால் அதிலே எவ்வளவு தூரம் நியாயம் இருக்கிறது என்பதை அவர்களே யோசனை செய்து பார்க்க வேண்டும். நூலையும், சாயத்தையும் சங்கம் வாங்கி வைத்திருக்கிறது, அதிலே ஊழல் இருக்கிறது என்று சொன்னார்கள். சாயத்தைப் பொறுத்தவரை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது வாங்கப்படுகிறது. நூலைப் பொறுத்தவரை ஸ்டேட் ஹாண்ட்லூம் சொசைட்டியில் ப்ரொக்யூர் செய்யப்பட்ட நூலை வாங்குகிறார்கள். அதிலே தவறுதல் இருக்கிறது என்று புகார் சொன்னார்கள். எந்த அளவிலே அது நியாயம் என்பதை அவர்கள் யோசிக்கவேண்டும். சட்டசபையிலே பிரசாரத்திற்காகச் சொல்வார்களேயானால் அது எவ்வளவு தூரத்திற்கு நியாயம் என்பதையும் சொல்லவேண்டும்.

மற்றொன்று, அமைச்சர்களுக்குச் சொந்தக்காரர்கள் கூட்டுறவு இயக்கத்திலே அங்கம் வகிக்கிறார்கள் என்று பொதுவாகக் குற்றம் சொன்னார்கள். அது எப்படி, என்ன என்பதைப் பற்றித் தகவல் ஒன்றுமே சொல்லவில்லை. அமைச்சர்களுக்குச் சொந்தக்காரர்கள் கூட்டுறவு இயக்கத்திலே இருக்கிறார்கள் என்று பொதுவாகச் சொல்வது எந்த அளவுக்கு சிறந்தது என்பதை அவர்களே யோசித்துப் பார்க்கவேண்டும்.

திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது சேலம் ஜில்லாவிலே சில சங்கங்களிலே தவறுதல்கள் நடந்திருக்கின்றன என்பதைப் பற்றிச் சொன்னார்கள். சேலத்திலே 750 சங்கங்கள் இருக்கும்போது நாலைந்து சங்கங்களிலே ஏதோ ஒருசில தவறுதல்கள் இருக்கலாம். ஏதோ ஒரு பிரசிடெண்ட் இறந்துவிட்டார், அதன் பிறகு கடன் கேட்பவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார். அதைப் பற்றி உடனே விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு சுப்பிரமணிய கவுண்டர் பொறுப்பு என்று சொன்னார்கள். அதற்கு சுப்பிரமணிய கவுண்டர் எந்த அளவிலே பொறுப்பு என்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். சொல்ல

[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்] [ 12th March 1966

வில்லை. பாரமாத்தி சங்கத்தில் நடந்த தவறுதலைப் பற்றிச் சொன்னார்கள். அங்கிருக்கக்கூடிய பிரசிடெண்ட் கையாடியதாகத் தகவல் வந்து அதே நிமிஷத்தில் எக்சிக்யூட்டிவ் ஆபீசர், மாவட்ட போலீசாருக்குத் தகவல் அனுப்பியதோடு மட்டுமல்லாமல் அந்த ஊழலுக்காக அவருடைய சொத்தை அட்டாச் பண்ணுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்தது தவறு என்று அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மதிப்புக்குரிய சீராமுலு அவர்கள், மேத்தல்நாயக்கன்பட்டி சொசைட்டியில் டெபாசிட் போட்டதில் 90 சதவிகிதத்தைத் திரும்பவும் கடனைக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள்.

**திரு. பி. வி. சீராமுலு :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், கனம் அங்கத்தினர் நான் சொன்னதைப் பற்றிச் சொல்லும்போது, 'டெபாசிட் போட்டதில்' என்று சொன்னார்கள். டெபாசிட் போட வில்லை. சென்ட்ரல் பாங்கு கடன் பெற்று . . .

**கனம் சபாநாயகர் :** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. இதற்கெல்லாம் பிறகு பதில் சொல்லிக் கொள்ளுங்கள்.

**திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் :** சென்ட்ரல் பாங்கு கடனில் ஒரு பகுதியைப் டெபாசிட்டாகப் போட்டு அவர் கடன் வாங்கினார் என்று சொன்னார். அதற்கு சென்ட்ரல் பாங்கு நேரடியாகப் பொறுப்பாளி அல்ல. அதற்குப் பொறுப்பாளி திரு. சீராமுலுதான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தச் சங்கம் திரு. சீராமுலு அவர்கள் மேற்பார்வையில் இருக்கும் யூனியன் பெயரிலே இருக்கிறதே தவிர தவறுதல் இருந்தால் முழுக்க முழுக்க திரு. சீராமுலு அவர்கள்தான் பொறுப்பு என்பதை நிரூபிக்கவும் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அவருக்கு மிகவும் நெருங்கிய நண்பர் ஒருவரைக் காங்கிரசிலே சேரும்படியாக நான் சொன்னதாக அவர் சொல்கிறார். திரு. சீராமுலு அவர்களேதான் அவரைக் காங்கிரசிலே சேரும்படியாகச் சொன்னார்கள் என்பதை நான் இங்கு சொல்வது மாத்திரமல்லாமல் நிரூபிக்கவும் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்) இதற்காகப் பகிரங்க விசாரணை வேண்டுமானாலும் செய்யலாம். நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. சீராமுலு எழுந்தார்.

**கனம் சபாநாயகர் :** அவரைப் பற்றி நீங்கள் குற்றம் சொன்னீர்கள். அவரைப் பற்றிச் சொல்லும்போது அவர் கேட்டுக் கொண்டிருந்தார். இப்போது அவர் உங்களைப் பற்றிக் குறை சொல்கிறார்.

**திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் :** திரு. சீராமுலு அவர்கள் சொல்லிய கூற்றை நான் சொன்னதாக அவர் சொல்லலாம். அவர் என்ன சொன்னார் என்று சொல்வதை நான் சொல்ல



12th March 1966] [திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]

உரிமை இல்லையென்று சொல்கிறார். எந்த அளவுக்கு ஜனநாயகத்தை அவர் செயல்படுத்துகிறார் என்று புரியவில்லை. திரு. சீராமுலு அவர்களே என்னிடம் அவருடைய நண்பரைக் காங்கிரசிலே சேரும்படி சொல்லச் சொன்னார்கள். இந்த மாதிரி விஷயத்தைச் சட்டசபையிலே சொல்வது சரியல்ல என்றாலும் அவர் சொன்னதற்குப் பிறகு நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன் என்ற முறையில்தான் சொல்கிறேன்.

மற்றொன்று, ஒரு நபர் எவ்வளவு காலத்திற்கு ஒரு சங்கத்திலே இருக்கலாம் என்பதைப் பற்றி ஏற்கனவே பில் இண்ட்ரொட்யூஸ் பண்ணும்போது விதி இருந்தது. ஆனால் அதைப் பிறகு எடுத்து விட்டார்கள் என்று நண்பர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி மத்திய அரசாங்கம் ஒரு ஹை பவர் கமிட்டி நியமித்து, அதிலே ராஜஸ்தான் ஸ்பீக்கர் அவர்களைத் தலைவராகப் போட்டு, கூட்டுறவு இயக்கத்திற்கு சம்பந்தப்பட்ட நிபுணர்களையெல்லாம் அதிலே போட்டு அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையிலே ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அந்தக் கமிட்டியார் ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு இருந்தால் உசிதமாக இருக்குமென்று ரிப்போர்ட்டில் கொடுத்திருக்கிறார்கள். தயவு செய்து அதிலே என்ன சொல்லியிருக்கிறது என்று நண்பர்கள் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரியைப் பொறுத்தவரையில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் அதற்கு ஒப்புதல் கொடுத்து விட்டதாகத் தெரிகிறது. அதைச் சீக்கிரத்தில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தர்மபுரி தனி ஜில்லாவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அங்கு டெபுடி ரிஜிஸ்ட்ராருக்குத் தனியாக ஜீப் இல்லாததன் காரணமாக அவர் அந்தப் பகுதியில் இருக்கும் சங்கங்களைப் போய்ப் பார்க்க மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

மற்றொன்று, இந்த மாதம் 9-ம் தேதி அன்று ரிசர்வ் பாங்கு டெபுடி கவர்னர் அவர்கள், கூட்டுறவு இயக்கத்திலே அடுத்த ஆண்டு எப்படிக் கடன் கொடுப்பது என்பதைப் பற்றிச் சில அடிப்படையான விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி நம்முடைய ராஜ்ய அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக அவர்கள் சொன்னது கிரேடிட்டையும், மார்க்கெட் 1-00 p.m
டிங்கையும் ஒன்று சேர்த்து கடன் கொடுக்கப்பட்டால்தான் ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் கொடுக்க முடியும், இல்லாவிட்டால் கடன் கொடுப்பதில் ரிசர்வ் பாங்க் கடனை குறைக்கவேண்டி வரும். ஆகவே, இப்போதிருந்தே ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். ஆதலால், அதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தக்காவி லோனுக்குக் கொடுக்கும் பணத்தை கூட்டுறவு மூலமாகக் கொடுக்கவேண்டு

மென்ற அளவில் ரிசர்வ் பாங்க் வலியுறுத்தினார்கள். திரு. ஆறுமுகம் போன்ற நண்பர்களும் ஃபுல் பைனான்ஸ் ஸ்கீம் மூலம் அந்தப் பணத்தைக் கொடுப்பதால் பணம் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார்கள். ஆகவே, அந்தப் பணத்தை கூட்டுறவு இயக்கம் மூலமாக கொடுத்தால்தான் கொடுக்கமுடியுமே தவிர ஃபுல் பைனான்ஸ் ஸ்கீம் என்ற பெயரால் கொடுக்காமல் விட்டுவிட்டால் அதற்கு சங்கம் கொடுக்கவில்லையே என்ற குற்றச் சாட்டை சாட்டுவது சரியல்ல. Non-overdue cover விவசாயிகளுக்கு எவ்வளவு கடன் கொடுக்கவேண்டுமோ அந்த அளவிற்கு ரிசர்வ் பாங்க் புதுத் திட்டம் பிரகாரம் குறைத்துவிடுவதால் பல சென்ட்ரல் பாங்குகள் கடன் கொடுக்க முடியாத ஒரு நிலை அவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. ஆகவே விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு அதனால் கடன் கொடுப்பது பாதிக்கப்படுகிறது என்பதை பரிசீலிக்க வேண்டும். கஷ்டம் என்று தெரிந்தால் அதற்கு ஆவன செய்து ரிசர்வ் பாங்கோடு பேசி வேண்டிய நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் திரு. சுப்பிரமண்ய கவுண்டர் அவர்கள் பேசுகிறபோது—அவர்கள் மந்திரியாக ஆவதற்குள்ள தகுதியிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன்—அவர்கள் அளித்த பதில் உண்மையிலே அந்த வகையிலே இருந்தாலும்—நாங்கள் பிரசாரத்திற்காக சொல்வதாகச் சொன்னார்கள். பிரசாரத்திற்காக இதை பயன்படுத்தவில்லை. குற்றத்தை . . .

**கனம் சபாநாயகர் :** இதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது.

* **திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகரவர்களே, இப்போது சமர்பிக்கப்பட்டிருக்கிற கூட்டுறவு மான்யத்தின்மீது என்னுடைய கருத்தைப் புலப்படுத்திக்கொள்ள முன்வருகிறேன். கூட்டுறவு இயக்கம் ஒரு நல்ல இயக்கம். இயக்கத்தினுடைய இலட்சியம் நல்லது. இதன் வரலாற்றைப் படிக்கிறபோது ரைஃபீஸன் என்ற ஜெர்மன் அறிஞர் இதைத் தொடங்கியதும் அது பல்வேறு நாடுகளிலும் பரக்க இன்று நிலவுவதும் நமக்கெல்லாம் தெரியும். இது செம்மையான முறையில் செயல்பட்டு வருவது பிரிட்டனில் என்பதும் நமக்குத் தெரியும். இன்னும் சுவீடன், சுவிட்ஸர்லாந்து போன்ற பகுதிகளில் மிகத் தரமாகவும், சிறப்பாகவும் இந்த இயக்கம் பயன் கொழிப்பதையும் அறிவோம். இந்தியாவைப் பொறுத்தவரையில் 1892-ல் ஸர். ப்ரெடரிக் நிக்கல்சன் என்பவர் சென்னை அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு இதன் முறைகளையும், பலாபலன்களை ஆராய்ந்து அவரால் ஒரு அறிக்கை இதன்மீது சமர்பிக்கப்பட்டது. அவர் இந்தத் துறையை ஆய்ந்து தெரிந்து ரைஃபீஸன் கூட்டுறவு சொஸைட்டி நடக்கிற நெறியில் இதை அமைக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார். அவருடைய அந்தக் கருத்தை 1901-ல் இயங்கிய பஞ்சக் கமிஷன் வலியுறுத்திற்று. அதன் பிறகு 1904-ல் மார்ச் 25-ம் தேதி "கூட்டுறவு க்ரெடிட் சொஸைட்டீஸ் ஆக்ட்" என்ற ஒரு சட்டத்தை இந்தியாவிலே முதன் முறையாக நிறைவேற்றியது. அப்போது





அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பல்வேறு முறைகளையும், நெறிகளையும் பற்றியெல்லாம், அது பற்றிய விஷயங்களை எல்லாம் சொன்னால் இப்போது எனக்கு நேரம் போதாது. அந்த அடிப்படைத் தத்துவம் இன்று மறக்கப்பட்டுவிட்டது, ஆனால் சடங்கு நடைபெறுகிறது. துறை என்னவோ இருக்கிறது. ஆனால் பயன் இல்லை. சாறு வற்றி சக்கையாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்ல வேண்டியது என் கடமையும் உரிமையுமாகும் என்று கருதுகிறேன்.

இந்த கோவாப்பரேஷன் பல்வேறு தரப்பட்டது. இது தோன்றியதும் வளர்ந்ததும் ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில். இந்தியாவிலே இதைக் கொண்டு வருவதற்கு அடிப்படையாக இருந்ததே வேளாண்மைத் துறையை மனத்தில் கொண்டுதான், வேளாண்மைத் துறையை வளப்படுத்துவது என்ற லட்சியத்தோடுதான் தொடங்கப்பட்டது. ஆனால் பல்வேறு துறைகளில் இன்று அது இங்கு வளர்ந்திருக்கிறது. அக்ரிகல்சுரல், ப்ரொட்யூசேர்ஸ், கன்ஸுமேர்ஸ் க்ரெடிட், பாங்கிங், மார்க்கெட்டிங், ட்ரேடிங், ஹௌசிங், மல்டி பர்ப்பஸ் என்று பல வகைகளில் வளர்ந்திருக்கிறது. இத்தனை பல வகைப்பட்ட பேர்களும் ஏன் வர வேண்டும் ? இதை நாம் கவனிக்கவேண்டும். அந்தந்தத் துறையிலே அந்தந்த நெறியிலே அவரவர்களுக்கே அது பயன்பட வேண்டும். இன்று கோவாப்பரேட்டீவ்ஸ் ஏதோ மளிகைக் கடை அல்லது சாதாரண கடை வியாபாரம் போல் ஆகி விட்டது. அந்த நிலை மாறி கன்ஸுமேர்ஸ் கோவாப்பரேட்டீவ்ஸ் என்று சொன்னால் துய்ப்பவர்கள், அவர்கள் யார் யார் அங்கே உறுப்பினர்களாக இருக்கிறார்களோ அவர்கள்தான் அங்கு பண்டம் வாங்க வேண்டும், வாங்க முடியும், வாங்கலாம் என்ற வரையறை இல்லாவிடில் கோவாப்பரேஷன் என்பது பொருள் அற்ற, நியாயமற்ற, பயனற்ற, ஒன்றாகிவிடும். இப்படித்தான் எல்லாத் துறைகளிலும். ஒவ்வொன்றாக எடுத்து விரிவாகப் பேசிக் கொண்டு போவதற்கு நேரம் இல்லை. பெருவாரியான சான்றுகளையும், புள்ளிகளையும் கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன்.

கூட்டுறவு என்பது முதன் முறையாக வேளாண்மைக்காக ஏற்பட்ட ஒன்றாகையால் வேளாண்மை பற்றிய ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அந்தத் துறையில் இன்று பல்வேறு கோவாப்பரேடீவ் பார்ம்ஸ் அல்லது கலக்டிவ் பார்ம்ஸ் அல்லது கோவாப்பரேடீவ் கலெக்டிவ் பார்ம்ஸ் என்று பல பெயர்களில் இயங்கி வருகின்றன. ஏற்கனவே படத்தோடு இந்த சபை முன் சமர்ப்பித்திருக்கிறேன். "காளப்பநாயக்கன் பாளையம் கூட்டுறவு கூட்டு விவசாய சங்கம்" என்பது அதற்குப் பெயர். அதன் நம்பர் கெ. 1657. அது தொடங்கியது 1959 ஜூனில். சர்க்காரிடத்திலிருந்து இதுவரை அவர்களுக்கு உதவி கொடுக்கப்பட்டிருப்பது அந்த சங்கத்திற்கு, சுமார் 70,000 ரூபாய். அது பணி செய்கிற நிலத்தின் பரப்பு 98½ ஏக்கர்கள். 5,000 ரூபாய் மதிப்புடைய ஒரு மாட்டுத் தொழுவம் அல்லது கட்டுத்துறை அங்கிருக்கிறது.

இரண்டு கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன அல்லது தோண்டப் பட்டிருக்கின்றன. அந்த இரண்டில் ஒன்று முற்றிலும் தூர்ந்து பாழாகக் கிடப்பது நான் என் கண்ணாலே கண்ட உண்மை. மற்றொன்றில் பம்ப் செட் இருக்கிறது. இருந்தாலும் சிறிய அளவிற்குத்தான் வரி கட்டியிருக்கிறார்கள். அதுவும் இடிந்து விழுந்திருக்கிறது. இரண்டையும் சீர்படுத்தப் போனால் குறைந்தது இன்னும் 40,000 ரூபாய் ஆகிவிடும். முன்னே, இந்த நிலங்களை எல்லாம் ஒப்புவிக்கும் முன்னர் சராசரி 300 ரூபாய் ஏக்கர் ஒன்றுக்கு அவர்களுக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. இப்போதைய நிலை என்ன? 10 ஏக்கர்கள் தோட்டப் பயிர். சுமார் 70 ஏக்கர்கள் காட்டுப் பயிர். சுமார் 20 ஏக்கர்கள் வெறும் பொட்டல். மொத்தத்தில் இதுவரை 1959-ம் ஆண்டிலிருந்து நேற்று வரையில் கிடைத்துள்ள வருமானம் ரூ. 12,000. ஒரு ஏக்கருக்கு சராசரி 122 ரூபாய்தான் வருமானம் வந்திருக்கிறது, இவ்வளவு ஆண்டுகளுக்கும். செலவும் சராசரி அவ்வளவு ஆகிவிடு கிறது. நிகர வருமானம் கிடைக்கவில்லை என்பதுடன் பட்டிருக்கிற கடனுக்கு வட்டி கொடுக்க முடியாது. வட்டி கொடுக்கவேண்டுமானால் நிலச் சொந்தக்காரர்கள் வேறு எங்கிருந் தாவது பெற்றுத்தான் கொடுக்கவேண்டும். சர்க்கார் கொடுத் திருக்கிற கடன் வட்டியில்லாத க்டன் என்றும் சொல்லப்படுகிறது. எவ்வளவு தூரம் அது உண்மை என்று எனக்குத் தெரியாது. இந்த நிலையில் நிலச் சொந்தக்காரர்கள் முன்போல் பிரிவினை செய்து கொண்டு விட வேண்டும் என்றும், கடனை வேண்டுமானால் இதில் சேர்ந்த பாவத்திற்காக எங்கள் தலை மேலேயே போட்டுக்கொள் கிறோம் என்றும் சொல்கிறார்கள். அந்த நேரத்தில், அவரவர்கள் நிலத்தை பங்கீடு செய்து கொள்ளும்போது ஒருவருடைய நிலத்தில் இந்த கிணறு வருகிறது. மற்றவர்கள் சொல்லுகிறார்கள். இந்தக் கிணற்றுக்கு அந்த நிலக்காரர் பணம் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். நிலக்காரர் அதைத் தூர்க்க எங்களுக்குப் பணம் வேண்டும் என்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை அங்கே யிருந்து கொண்டிருக்கிறது. இவற்றை நான் நேரடியாகவே சென்று பார்த்துவிட்டு வந்து பேசுகிறேன். இப்போது அவர்கள் விழிக்கிறார்கள், இந்த அமைப்பை என்ன செய்வது என்று. இதை விட மோசம் என்னவென்றால், இந்த நிலத்திற்கு உரம் போன்றவைகள் போடாததின் காரணமாக இன்றையதினம் அந்த நிலம் மிக மிக மட்டமானதாகக் காணப்படுகிறது. இதையெல்லாம் செம்மைப்படுத்தி தரத்திற்குக் கொண்டு வரவேண்டுமானால் ஏறக் குறைய ஏக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் செலவழித்தால்தான் முடியும் என்றும் காண முடிகிறது.

இனி, மறு பக்கம் (கான்ட் ராஸ்டாக) எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கலாம்—எதற்கும் இன்னொரு பக்கத்தை பார்க்க வேண்டியது நியாயம். அந்த முறையில் பார்க்கும்போது, பக்கத்தில் இருக்கக்கூடிய ஒரு இடத்தை எடுத்துக்கொள்ளலாம், நான் முன்னால் சொன்னது, கூட்டுறவு முறையிலுள்ள திட்டம், இது தனிப்பட்டவர் நடத்துகின்ற ஒரு திட்டம். திரு. கிருஷ்ண சாமி கவுண்டர் என்பவர் நடத்துகிறார். இதுவும் 1959 ஜூனில்





ஆரம்பிக்கப்பட்டதுதான், பக்கத்திலுள்ள நிலங்களை பலரிடம் வாங்கினார். 45 ஏக்கர்கள் வரை கொள்முதலாகிக்கொண்டார்கள். பத்து ஏக்கர்களை குத்தகைக்கும் எடுத்துக்கொண்டு, ஆண்டு ஒன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் முன் பணமாகவே கொடுத்து விடுகிறார். மொத்தம் இதிலிருப்பது 55 ஏக்கர். நான் முன்பு சொன்னதில் 98 ஏக்கர்கள். இவர் கொடுக்கிற விபரங்களை சொல்லுகிறேன். இவர் இன்கம் டாக்ஸ் கொடுக்கிறவர்தான். அவருடைய கணக்குப்படி சொல்லுகிறேன். இவர் வைத்திருக்கின்ற பண்ணையிலிருந்து கரும்பில் கிடைப்பது ஆண்டு ஒன்றுக்கு 25 ஆயிரம் அளவிற்கு விளைகிறது. மஞ்சள் 15 ஆயிரம் அளவுக்கு, கேப்பை போன்ற தானிய வகையில் 10 ஆயிரம் விளைகிறது, மோரிஸ் வாழைப்பழம் என்று சொல்லுகின்ற வாழைப்பழம் 75 ஆயிரம் ரூபாய் அளவுக்கு விற்று முதலாகிறது. மின்கட்டணம், உரம், சம்பளம், கூலி எல்லாவற்றிற்கும் ஆக, 75 ஆயிரம் மொத்தம் செலவு. 55 ஏக்கர்களிலிருந்து ஒரு வருடத்திற்கு வருமானம் என்று கிடைப்பது ஒரு லட்சத்து 26 ஆயிரம் ரூபாய். பண்ணையாள், கூலியாள் இவர்களுக்கெல்லாம் செலவு செய்வது 30 ஆயிரம், டிராக் டர்கள், உரம் போன்றவற்றுக்கு 25 ஆயிரம், மின்கட்டணம், மோட்டார் பம்புகள் போன்றவற்றுக்கு 20 ஆயிரம் ரூபாய். இவ் விதம் செலவாகின்ற 75 ஆயிரம் போக நிகர லாபம் இருப்பது 45 ஆயிரம் ரூபாய். இது வருடம் ஒன்றுக்கு இந்த 55 ஏக்கர்களி லிருந்து கிடைக்கிறது. அதிலும் இன்னொரு விசேஷம் என்ன வென்றால், வாய்க்கால், கரைகள் இவைகளில் தென்னையை வைத்து விட்டார். இதில் 2,500 தென்னைகள் இருக்கின்றன. அடுத்த ஆண்டு முதல் காய் வெட்டப்படும் என்றும் சொல்கிறார். அந்தக் கணக்கில் பார்க்கும்போது, அடுத்த ஆண்டு 30 ஆயிரம் ரூபாய் அளவுக்கு இன்னும் அதிகமான லாபம் கிடைக்கும், நாலைந்து வருடத்திற்குள் ஆண்டு ஒன்றுக்கு இதிலிருந்து கிடைக்கின்ற மொத்த லாபம் 50 ஆயிரமாக இருக்கும் என்று சொல்லுகிறார். ஒரு தனிப்பட்டவர் நடத்தும் பண்ணையில் இந்த நிலைமை இருக்கிறது. "உடையவன் பார்க்காவிட்டால் ஒரு முழம் கட்டை" என்பது ஒவ்வொரு விவசாயினுடைய வீட்டிலும் வழக்கப்படுகின்ற பழமொழி. பக்கத்தில் இருக்கின்ற ஒரு தனிப்பட்டவருடைய நிலம் எப்படியிருக்கிறது என்பதை 'கான்ட்ராஸ்ட்'டாக இருக் கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் இதை எடுத்துக் கூறினேன். இன்றைக்குக்கூட கேள்வி நேரத்தின் போது, கோவாபரேட்டிவ் சொஸைட்டிகளில் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகின்ற டிராக்டர்களை வாங்கி பிறருக்கு வாடகைக்கு விட்டு தாங்கள் பணம் பெற்றுக்கொள்கிறார்கள் என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா என்று கேட்ட நேரத்தில் 'அப்படியொன்றுமில்லை' என்று அமைச்சர் கக்கன் அவர்கள் பதில் அளித்தார்கள் . . .

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. என்றுதான் சொன்னேன்.

**திரு. சா. கணேசன்:** நானும் அதைத்தான் சொல்லுகிறேன், இவ்விதமாக நடந்திருக்கிறது என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா என்று கேட்டதற்கு அந்த தகவல் இல்லை என்று சொன்னார்கள். இவ்விதம் நடந்ததாக தகவல் உண்டா என்று கேட்டால் இல்லை என்ற பதில் சொல்லுகிறார்கள். "அப்படி ஒன்றும் புகார் வரவில்லை" என்று கூறினார்கள். நோட்டீஸ் என்று கூடக் கூறவில்லை. ஆகவே என்ன நடந்தது என்பதை நானே சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு) உங்களுக்கு தகவல் இல்லையாதலால்தான் இதை இப்போது சொல்லுகிறேன். பள்ளியடை என்ற கிராமத்தில்—கனம் அமைச்சர் அவர்களுக்கு இந்த இடம் நன்றாக தெரியும் என்று நினைக்கின்றேன்—அங்கு சென்ற ஆண்டு ஒரு கூட்டுப்பண்ணை ஏற்படுத்தப்பட்டது. அதில் இருந்த நிலத்தை செம்மைப்படுத்துவதற்கும், சமப்படுத்துவதற்கும் அரசாங்கத்திலிருந்து டிராக்டர் வரவழைக்கப்பட்டது—மன்னிக்க வேண்டும்—புல்டோசர் வரவழைக்கப்பட்டது. அந்த புல்டோசரைக்கொண்டு பண்ணையிலுள்ள நிலங்களை செம்மைப்படுத்தாமல், பண்ணை நிர்வாகஸ்தர்களாக இருக்கின்றவர்கள் தங்கள் சொந்த நிலத்தை செம்மைப்படுத்துவதற்கும், பக்கத்திலுள்ள வேண்டியவர்களுடைய நிலத்தை செம்மைப்படுத்துவதற்கும்—புல்டோசர் வாடகைக்கு விடப்பட்டது. ஆனால் இதற்காக சர்க்காருக்கு கொடுக்கப்பட்ட வாடகை, கூட்டுப் பண்ணைப் பணத்திலிருந்து. கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் நான் போக விரும்பவில்லை. காரணம் அந்த நிர்வாகஸ்தர்கள் மீது கோர்ட்டில் நடவடிக்கை இருக்கிறது. ஆக இவ்வளவு தவறுகள் நடக்கின்றனவே, இதைப்பற்றி அரசாங்கத்திற்கு தகவல் உண்டா என்றால் தகவல் இல்லை என்ற பதில்தான் கிடைக்கிறது. இப்படிப்பட்ட தகவல்களை கூட அறிந்து கொள்ளவில்லை என்றால் இந்த சர்க்காரைப்பற்றி நான் என்ன சொல்வது.

**கனம் திரு. பூ. கக்கன்:** தகவல் தெரிந்தால்தான் சொல்ல முடியும். ஏதாவது தகவலை சொல்லிவிட்டு, உடனே அரசாங்கத்திற்கு தெரியுமா என்று கேட்டால் எப்படி பதில் சொல்வது? கனம் அங்கத்தினர் அவர்களுக்கு சரியான பதில் கிடைக்க வேண்டும் என்றால் ஏற்கனவே இதைப்பற்றிச்சொல்லியிருக்க வேண்டும்.

**திரு. சா. கணேசன்:** ஏற்கனவே சொல்வதற்கு இது என்னுடைய ஊரில் இல்லை, அரசாங்கம்தான் முன்பே தெரிந்து கொண்டிருக்க வேண்டும். கிடைக்கின்ற தகவல்களை கொண்டு கேள்விகள் கேட்டால், சரியான பதில் கொடுப்பதற்கு முடியவில்லை என்றால், நோட்டீஸ் வேண்டும் என்று கேட்கலாம். ஆனால் அப்படிப்பட்ட புகார் ஒன்றும் வரவில்லை என்று எப்படிச் சொன்னார்கள்? நிலைமை இப்படி இருக்கிறது . . . இது மாதிரி எத்தனையோ தெகிடுதத்தங்களை சொல்லிக்கொண்டே போகலாம். நெசவாளர்கள் விஷயத்தில் ரிபேட் சரியாக கொடுக்கப்படாமல் இருக்கின்ற மோசடிகள் எத்தனையோ நான் சொல்ல முடியும், இதைச் சொல்லுகின்றபோது, அதனால் ஏற்படுன்ற அத்தனை பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். சர்க்கார் அதிகாரிகளை



அனுப்பி, நான் சொல்லுகின்ற இடங்களில் உண்மையில் எத்தனை தறிகள் இருக்கின்றன, எத்தனை தறிகளுக்கு உண்மையில் ரிபேட் கொடுக்கப்படுகிறது என்று விசாரித்துவிட்டு வரட்டும். எத்தனையோ ஊழல்கள் நடந்து கொண்டிருப்பதை கண்டுபிடிக்க முடியும். காரணம் நம்முடைய சக்திக்கு அதிகமான பொறுப்புக்களை நாம் ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருப்பதினால்தான் இத்தகைய கஷ்டங்கள் நடைபெறுகின்றன—இதை நடத்துகிறவர்கள் யாராக இருந்தாலும் சரி—மகாத்மா காந்தியடிகளாகவே இருந்தாலும் சரி, இவ்வளவையும் சக்திக்கு மீறிய அளவில், சரியான முறையில் நிர்வகிக்க முடியாது. இல்லையென்றால், இது போன்ற தெகிடுதத்தங்கள் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கும் . . .

**திருமதி டி. என். அனந்தநாயகி:** 'தகடுதத்தங்கள்' என்ற வார்த்தை அன்பார்லிமெண்டரி, இதை கனம் அங்கத்தினர் அவர்கள் உபயோகிக்கலாமா?

**திரு. சா. கணேசன்:** இது சரியான பார்லிமெண்டரி வார்த்தைதான். 'எவேஷன்' என்றால் தெகிடுதத்தம், இது சரியான பார்லிமெண்டரி வார்த்தைதான் என்பதை தங்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது கூட சட்டம் பயின்ற நமது அம்மையார் அவர்களுக்குத் தெரியாமல் இருப்பதற்கு நான் என்ன செய்வது? நேரம் ஆகிவிட்டது, சில விஷயங்களை மட்டும், தெளிவாக தெரிவிக்கவேண்டும் என்பதற்காக என் கட்சியிலுள்ள மற்றவர்களை கூட பேசவேண்டாம் என்று சொல்லி நான் பேச முன்வந்தேன் . . . (திருமதி டி. என். அனந்தநாயகி: அதிலும் சர்வாதிகாரமா?) ஆம், கனம் அம்மையாருக்கு அப்படித்தான் தோன்றும், சபையினுடைய காலத்தை வீணடிக்க வேண்டாம் என்ற நல்லெண்ணம் அவர்களுக்கு சர்வாதிகாரமாகப் படுகிறது. அம்மையாருடைய 'டெஃபெனிஷன்' வாழ்க . . . (சிரிப்பு) வாழ்க என்று சொல்லாமல் என்ன சொல்வது? ஒழிக என்று என்றால் சொல்ல முடியாது.

முக்கியமாக இத்துறையில் இருக்கின்ற சில குறைகளை சொல்லுவது என்றால் அது என்னுடைய கடமை என்று நான் எண்ணுகின்றேன். பொதுவாக உரிமையை வைத்துக்கொள்ளுகிறவர்கள் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்; உரிமையை மட்டும் ஏற்றுக்கொண்டு, பொறுப்பு வரும்போது, முடியாது என்று தட்டிக்கழிப்பது சரியல்ல. ஒரு வியாபாரத்தில் லாபம் வந்தாலும் நஷ்டம் வந்தாலும் பகிர்ந்து கொள்ள வேண்டியது தான். அந்த அளவில் கூட்டுறவுத் துறையில் ஐந்து கோடி போட்டு மூன்று கோடி வந்திருக்கிறது என்றால் அது ஏதோ நிர்வாகத்தில் வருகின்ற சீர்கேடு என்று மட்டும் சொல்லிவிட முடியாது. சாதாரணமாக தனிப்பட்ட கம்பெனிகளில் டைரக்டர்களுக்கு மினிமம் 'ஷேர்' இத்தனை இருக்கவேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் கணிசமான அளவில் தொகை செலுத்தியிருக்கின்றவர்கள்தான் நிர்வாகத்தில் இருக்கலாமென்ற ஒரு முறை இருக்கவேண்டும். லாபநஷ்டத்தை நிர்வாகிகளும் பங்குதார்களுமே பொறுக்க வேண்டும். அப்போதுதான்,

[திரு. சா. கணேசன்] [12th March 1966

சந்தேகங்கள், ஒழுங்கீனங்கள், இல்லாமல் பார்த்துக் கொள்ள முடியும். கூட்டுறவுத் துறை என்றிருந்தால், ஒழுங்கீனங்கள், தவறுகள் இவற்றிற்கு இடமிருக்கக்கூடாது. சென்னை கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டால், ஒரே ஆளுக்கு எத்தனையோ வீடுகள் இருக்கின்றன. இவற்றைச் சரியான முறையில் கண்காணிக்கவேண்டும். பெரிய சர்க்கார் அதிகாரி ஒருவர் வீட்டிற்குமுன் ரோடு 30 அடி இருகக்வேண்டுமென்றிருந்தால் 20 அடிதான் விடுகின்றார்கள், அதை அனுமதிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இவற்றை என்னால் நிரூபித்துக்காட்ட முடியும். குறிப்பாக கூட்டுறவுத் துறையில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது.

ஆகவே, நான் கடைசியாகக் கூறிக்கொள்ளுவது, அரசாங்க முதலீடு குறைந்த பட்சம்தான் இருக்கவேண்டும். 1,000 ரூபாய் முதல் போடும் சொஸைட்டிக்கு 1,000 ரூபாய்தான் கொடுக்க வேண்டும். நஷ்டத்தின் பெரும்பகுதி நிர்வாகிகள் பொறுப்பாக வேண்டும். கஷ்டப்படுகிறவர்களுக்கு, நிவாரணம் கொடுக்க வேண்டியவர்களுக்கு, அரசாங்கமே நேரடியாகச் செயல்படவேண்டுமே அல்லாது, கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிக்கு 10 கோடி ரூபாயை அரசாங்கம் கொடுத்து விட்டு அவர்கள் கொடுப்பார்கள் என்று சொல்லுவது செவ்விய. சிறந்த நெறியாக, முறையாக ஆகமாட்டாது. அதே மாதிரி அதில் ஈடுபட்டிருக்கிறவர்கள், கண்காணிக்கின்றவர்கள், நடத்துகிறவர்கள்தான் அத்தனை பொறுப்புக்களுக்கும் உள்ளாகும்படி விதிகள் இருக்கவேண்டும். அதோடு அவர்கள் தவறு செய்வதைக் கண்டுபிடிக்கக் கூடிய வாய்ப்பு, வசதி எல்லோருக்கும்—ரோட்டில் ஒரு பிள்ளையார் கோவில் இருக்கிறது என்றால், அதில் ஏதாவது தவறு இருக்கிறது என்றால், "I am an worshipper" என்ற முறையில் நிர்வாகிகள் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறபோது, பொது ஸ்தாபனமாக, புனிதமான ஸ்தாபனமாக உயர்ந்த லட்சியத்தைக் கொண்டதாக இருக்கிற கோவாப்பரேடிவ் சொஸைட்டியில் தவறு நடந்தால் சாதாரண ஷேர் ஹோல்டர் கேஸ் போட்டு கோர்ட்டுக்கு இழுக்க, அல்லது கேஸ் நடந்தால் அதில் வாதியாகவோ, பிரதிவாதியாகவோ சேர்ந்து நல்ல வக்கீல் வைத்து கேசை நடத்தி, தவறு செய்தவருக்குத் தக்க தண்டனை பெற்றுத் தர வாய்ப்புள்ள அளவில் சட்டத்தைத் திருத்தவேண்டும். அதோடு சட்டத்திலே இத்தகைய பொது ஸ்தாபனங்களின் உன்னத லட்சியத்திற்கு இடையூறு செய்கிறவர்களைக் கடுமையான தண்டனை பெற வேண்டியவர்களாகச் செய்யவேண்டும். அந்தக் காலத்தில் பார்த்தால் தெரியும். இருக்கக் கூடிய சாசனங்களிலெல்லாம் பேசப்படுகிறது. 'சிவத் துரோகி', 'நாட்டுத் துரோகி' என்று எல்லாம் சொல்லும். சிவத் துரோகி என்றால் தெய்வத் துரோகி. நாட்டுத் துரோகி என்றால் ஜனத் துரோகி. சிவத்துரோகியும் நாட்டுத் துரோகியும் நாடிழந்து போவான் ஆகவும் என்று சாசனங்களில் காணலாம். இவற்றையெல்லாம் உணரவேண்டும். உணர்ந்து செவ்விய நெறியில் இதிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டு கண்காணிப்பாக இருந்து செயல்படவேண்டுமென்று கூறி முடிக்கிறேன்.



12th March 1966]

* திரு. இராம. அரங்கண்ணல் : கனம் தலைவர் அவர்களே, முழு அளவில் எல்லோரும் ஏற்று, போற்றவேண்டிய கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக நடைபெறுகிற இந்த விவாதத்தில், இதற்கான மான்யக் கோரிக்கையைக் கோரிய நம்முடைய அமைச்சர் அவர்கள் இவ்வளவு பெரிய இயக்கத்தில் சில குறைகள் இருக்கத்தான் கூடும் என்ற வாசகத்தோடு தன் உரையினை ஆரம்பித்தார்கள். இந்த இயக்கம் 1904-ம் ஆண்டு கிராமங்களிலேயிருக்கிற நாட்டுப்புற மக்களுக்கு வசதிகளும் நிவாரணங்களும் தரவேண்டுமென்று துவக்கப்பட்ட இயக்கம். இன்றையதினம் வரையில் விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டிய அளவுக்கு ஏராளமான வசதிகளை நாம் தரவேண்டுமென்கிற அதே நல்ல நோக்கத்தைக் கொண்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அந்த நோக்கத்திற்கான வகையில் பலதரப்பட்ட திட்டங்களின் கீழ் விவசாய மக்களுக்குக் கடன் தரவேண்டுமென்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அங்கே வழங்கப்படுகிற கடன்களெல்லாம் விவசாயிகளுக்குச் சரியாகப் போகிறதா என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கிற நேரத்தில், நம் திட்டக் கமிஷன் இதற்கு ஒரு பரிசீலனைக் குழுவை நியமித்து, பரிசீலனை செய்யச் சொன்ன நேரத்தில் அந்தக் குழு தன்னுடைய முடிவைத் தெரிவித்திருக்கிறது. "கிராமங்களிலே இருக்கிற விவசாய மக்களுக்குக் கடன் தருவதற்காக ஏராளத் தொகை கூட்டுறவு இயக்கத்தின் சார்பிலே வழங்கப்படுகிறது; ஆனால் அந்தத் தொகை அவர்களுக்குச் சரியாகப் போய்ச் சேருவதில்லை" என்று அந்தக் குழு சொல்லியிருக்கிறது. அந்தக் குழு மட்டுமல்ல, நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களே சென்னையிலே ஒரு விழாவிலே பேசுகிற நேரத்தில் எடுத்துச் சொன்னார்கள். "கூட்டுறவு பாங்கிகளின் மூலமாக கிராமங்களுக்குத் தரப்படுகிற தொகைகள் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை, வீணடிக்கப்படுகிறது; இருந்தாலும் நாங்கள் விவசாயிகளுக்குத் தொடர்ந்து கடன் உதவி செய்து வருகிறோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தத் துறையினை மிகவும் செம்மையான முறையிலே இந்திய துணைக்கண்டத்திலேயே நல்லதொரு இயக்கமாக ஆக்கவேண்டுமென்று, அதிலே பணியாற்றுகிற அதிகாரிகள் இப்படிப்பட்ட குறைகளைப் போக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவு இயக்கம் நல்ல முறையிலே எல்லாத் துறைகளிலும் அமல் நடத்தப்படுமேயானால், சம தர்மப் பாதைக்கு நல்ல வழி கோலுவதாக அமையும் என்று அத்தனை பேர்களும் உணர்கிறோம். விவசாயிகளுக்கென்று துவக்கப்பட்ட இயக்கம், இன்றைய தினம் சிறந்த பாங்குகளாக உருவெடுத்தும் பணிபுரிகிறது; தனிப்பட்டவர்கள் பாங்குகளையெல்லாம் எடுத்து, எல்லா இடத்திலும் கோவாப்பரேட்டிவ் பாங்க் இருக்கலாம் என்று விரும்புகிற அளவுக்கு பாங்குகள் இன்றைய தினம் கூட்டுறவுத் துறையிலே ஏராளமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, அங்காடிகளை நடத்தவும், பண்டகசாலைகளை ஏற்படுத்தவும், சிறு சிறு தொழில்கள் நடத்துகிறவர்களுக்கு உதவி செய்யவும், வீடு

[திரு. இராம. அரங்கண்ணல்] 12th March 1966

கட்டிக் கொடுக்கவும், கைத்தறி நெசவாளர்களுக்கு உதவவும், சமுதாயத்தை உருவாக்கும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வளர்ந்துகொண்டு வருகிறது. ஆனால், வளர்ந்துகொண்டு வரும் நேரத்தில், வளர்ச்சி எப்படிச் செல்லுகிறது என்பதைப் பற்றித் தான் குறைகளை இரு கட்சிகளிலும் இருக்கிற அங்கத்தினர்கள் எடுத்துச்சொன்னார்கள். அந்த முறையில் நானும் என்னிடம் கிடைத்திருக்கிற ஒரு சில குறைகளைப்பற்றி எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம் மாநிலத்தில் புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு மார்க்கெட்டிங் ஸ்டோர் என்று ஒன்று இருக்கிறது. அதற்கு திரு. நடேச அம்பலம் என்பவர் துணைத் தலைவராக இருக்கிறார். அந்தக் கூட்டுறவு ஸ்டோரில் உரம் விற்பனைக்கு பெர்மிட் கொடுக்கப் பட்டிருக்கிறது. திரு. நடேச அம்பலம் என்பவரின் ஊரின் பெயர் வம்பன். அந்த வம்பன் ஸ்டோரின் துணைத் தலைவரின் ஊரில், அவர் வீட்டின் வைக்கோல் போரிலிருந்து 10 மூட்டைகளைப் போலீசார் பிடித்திருக்கிறார்கள். காட்டாத்தி என்ற ஊரில் மார்க்கெட்டிங் ஸ்டோரின் கிளையில் 100 மூட்டைகளை, கணக்கில் இருந்து, உர மூட்டைகளைக் காணோம் என்று உதவி தாசில்தாரிடமிருந்து தகவல் தரப்பட்டிருக்கிறது. இப்படி சில சில சம்பவங்கள் மட்டுமல்ல. புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு பாங்கியின் தலைவராக நான் முன்பு குறிப்பிட்ட திரு. நடேச அம்பலம் இருக்கிறார். அவருடைய மைத்துனன் திரு. ராமச்சந்திரன் என்பவர், புதுக்கோட்டை மத்திய பாங்கில் ஒரு டைரக்டராக இருந்தார். இதே திரு. ராமச்சந்திரன், ஆலங்குடி மார்க்கெட்டிங் சொஸைட்டிக்கு நின்றார். ஆனால், தோற்று விட்டார். ஆனால் திரு. நடேச அம்பலம் என்பவர் அதே திரு. ராமச்சந்திரனை அதே மார்க்கெட்டிங் சொசைட்டியில் கோ-ஆப்டெட் மெம்பராக அன்று இரவே ஆக்கினார். திரு. நடேச அம்பலம் யார் என்றால் பிரபல காங்கிரஸ்வாதி. இதை எடுத்துச் சொல்லி ஆலங்குடி எம்.எல்.ஏ. முருகையன் அவர்கள் டி.ஆர்-க்கு கடிதம் எழுதினார். எம்.எல்.ஏ. முருகையன் எழுதிய கடிதத்தை வைத்து ராமச்சந்திரன் ஓவர் "டியூ" இருந்தால் அவரின் தேர்வு செல்லாது என்று சுட்டிக் காட்டியதால் மேற்படி ராமச்சந்திரன் கூட்டுறவு சங்கங்களின் பொறுப்புகள் அத்தனையிலும் இருந்து நீக்கப்பட்டுவிட்டார். மேற்படி ராமசந்திரன் 200 மூட்டை ஆலங்குடி மார்க்கெட்டிங் சொசைட்டியில் உண்மைக்குப் புறம்பான கணக்குக் காட்டி நெல் இருப்பாகச் சொல்லி அதற்கும் பணம் வாங்கிச் சென்றிருக்கிறார். அதுவும் எம்.எல்.ஏ. புகாரின் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுத்து பணம் வசூலிக்கப்பட்டது. வல்லத்தரக் கோட்டையில் ஒரு பால் வினியோகிக்கும் சங்கம். செயலாளர் அண்ணாசாமி என்பவர். ஆனால் பாலையூர் காசி அம்பலம் என்பவரின் மகன் சுவாமிநாதன் என்பவர் வேலைபார்ப்பதாக அவர் பெயரைச் சொல்லி மாதாமாதம் 40 ரூபாய் எடுத்துக் கொள்கிறார் செயலாளர். இது புகார் செய்யப்பட்டு ஆறுமாத காலமாக இன்னும் விசாரணை! இப்படி பற்பல இடங்களிலே எந்தெந்த நோக்கத்திற்கு உதவி



600 008.

12th March 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

அளிக்கிறோமோ அந்த நோக்கத்தைப் பாழடிக்கும் விதத்தில், தனிப்பட்டவர்கள் தங்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி பற்பல காரியங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மதுராந்தகம் தாலுகாவில் ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கிறது. நெ. 717 கொண்ட சங்கம் மாமண்டூரில் இருக்கிறது. அதற்குத் தலைவராக இருக்கிறவர் திரு. சோமசுந்திரம் என்பவர். அவர் மீது பல குற்றச்சாட்டுகள் எழுதப்பட்டிருக்கின்றன. ரூ. 13,000 கையாடல் செய்து விட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுதப்பட்டிருக்கின்றன. அந்தக் குற்றச்சாட்டுகள் மீது விசாரணையும் நடத்தப்பட்டு, 1966 ஜனவரி முதல் வாரத்தில் 22,000 ரூபாய்க்கு அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று போலீசுக்கு புகார் செய்யப்பட்டது. ஆனால் அந்த புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், கொடுக்கப்பட்டுள்ள புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று போலீசாரிடமிருந்து கூட்டுறவுத்துறை அதிகாரிகளுக்குக் கூட தகவல் வந்திருக்கிறது. ஆனால் அந்தத் தகவலை வைத்து போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்றால், இது வரையில் எடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் அந்த வட்டாரத்தில் இருக்கிற பிரபல எம்.எல்.ஸி. தலையீடு என்று தகவல் தரப்படுகிறது. இதே போல் ஒரத்தநாடு சொசைட்டியில் 80,000 ரூபாய் அளவுக்கு மோசடி நடைபெற்றது. அதற்குக் காரணமானவர் திரு. சிவப்பிரகாசம் என்ற சீனியர் இன்ஸ்பெக்டர் என்று சொல்லி நோட்டு எழுதி வாங்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

அதுமட்டுமின்றி, சேலம் மாவட்டத்தில் இருக்கிற டிஸ்ட்ரிக்ட் கோவாப்பரேடிவ் பாங்கிற்கும், அதைச் சார்ந்திருக்கிற ரெஸ்டு 1-30 p.m.
ஹவுஸுக்கும் இரண்டுக்கும் பெயிண்டு அடிக்க வேண்டும் என்பதற்காக ரூ. 80,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. அவசர காலம் என்று சொல்லப்படுகிறது. அவசர காலத்தில் பண விரயம் செய்யக் கூடாது என்று சொல்லப்படுகிறது. இருந்தும் பெயிண்டு அடிப்பதற்காக ரூ. 80,000 செலவிடப்பட்டிருக்கிறது. அந்த பாங்கினுடைய தலைவர் யார்? சட்டமன்றத்தில் இங்கே முன்பு பேசிய திருவாளர் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் தான். ஏன் இது? இப்படிச் செய்யலாமா? இப்படி நம்முடைய பணம் எல்லாம் போகலாமா என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இதிலே கட்சிப் பிரச்னை ஒன்றும் இல்லை. யார் தவறுதல் செய்தாலும் அதை ஒடுக்கவேண்டும் என்பதில் எந்தவிதமான அபிப்பிராய பேதமும் கிடையாது.

உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். திருவொற்றியூரில் இருக்கிற இம்பீரியல் டுபாகோ கம்பெனி ஊழியர்கள் ஒரு சங்கம் நடத்துகிறார்கள். அந்த சங்கத்தின் கணக்குகளை ஆடிட் செய்த நேரத்தில் ரூ. 3,000 பணம் இல்லை என்ற தகவல் தரப்பட்டது. அந்த சங்கத்திற்கு செக்ரடரியாக இருந்தவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். ரூ. 3,000 குறைந்து இருக்கிறது என்று சொன்னதும், அவர் அந்தப் பணத்தை உடனே கட்டிவிட்டார். பணத்தைக் கட்டிவிட்டாலும் விடமாட்டோம் என்று சொல்லி, அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. அப்படி வழக்குத்

[திரு. இராம. அரங்கண்ணல்] [12th March 1966

தொடரப்பட்டு உயர் நீதிமன்றத்தில் அந்த செக்ரடரிக்குச் சாதகமாக தீர்ப்பு கிடைத்திருக்கிறது. அதே சமயத்தில் திருவொற்றியூரில் இருக்கிற விம்கோ மாட்ச் பாக்டரி சங்கத்தில் நீண்ட காலமாக புகார்கள் சொல்லப்பட்டு வருகின்றன. அந்த சங்கம் ஒரு காங்கிரஸ்காரரால், திருவொற்றியூரில் கவுன்சிலராக இருக்கிற ஒருவரால், நடத்தப்பட்டு வருகிற ஒரு சங்கமாகும். அந்த சங்கத்தில் கிட்டத்தட்ட ரூ. 25,000-க்கு மேல் மோசடி செய்யப்பட்டிருக்கிறது என்று புகார்கள் அனுப்பப்பட்டன. மூன்று ஆண்டுகள் ஆகியும், மூன்று ஆண்டுகளுக்குப் பின்னும், இன்றையதினம் வரையில் எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கின்றது. இப்படி இருக்கலாமா என்பது தான் கேள்வியாகும். எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அரசியல் கட்சிப் பிரச்னை என்று கருதாமல், இப்படிப்பட்ட ஊழல்கள், மோசடிகள் ஏற்படுகின்ற நேரத்தில் அவற்றையெல்லாம் நல்ல முறையில் விசாரிக்கவேண்டாமா என்பதுதான் நம்முடைய கேள்வியாகும்.

நண்பர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் பேசும்பொழுது 'பழைய ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டுவிட்டது என்று நாம் கூறிக்கொண்டிருக்கிறோம், ஆனால் பழைய ஜமீன்தாரி முறை அழிந்துவிடவில்லை' என்று எடுத்துச் சொன்னார்கள். பழைய ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டு விட்டாலும், இப்பொழுது புதிய ஜமீன்தாரிகளைப் பார்க்கிறோம். பஸ் முதலாளிகள் ஜமீன்தார்களாக இருக்கிறார்கள். அதை அடுத்து சிற்றரசர்களாக இருப்பவர்கள் கூட்டுறவுத் துறையில் இருக்கும் அதிபர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. யார் யார் அப்படி இருக்கிறார்கள் என்று, நம்முடைய அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் விரும்புவார்களேயானால், நான் சொல்லிக்கொள்ளுவதற்கு ஆசைப்படுகிறேன். (கனம் திரு. பூ. கக்கன் குறுக்கீடு) நகைச்சுவையாக பேச ஆரம்பிக்கிறார்கள் நம்முடைய அமைச்சர் திரு. கக்கன் அவர்கள். மாநில அளவிலே ஸ்டேட் கோவாபரேடிவ் பாங்கு இருக்கிறது. அதற்குத் தலைவராக விளங்குபவர் யார்? திரு. கனக சபை அவர்கள். அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்? காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். மெட்ராஸ் கோவாபரேடிவ் சென்ட்ரல் லாண்டு மார்ட்கேஜ் பாங்கு இருக்கிறது. அதற்கு தலைவராக விளங்குகிறவர் யார்? திரு. என். எஸ். ராமலிங்கம் அவர்கள். அவர்கள் யார்? காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். மெட்ராஸ் கோவாபரேடிவ் சென்டிரல் ஹவுஸ் மார்ட்கேஜ் பாங்கு இருக்கிறது. அதற்குத் தலைவராக விளங்குபவர் யார்? திரு. வாகீசம் பிள்ளை அவர்கள். அவர்கள் யார்? அவரும் காங்கிரசைச் சேர்ந்தவர் தான். மெட்ராஸ் ஸ்டேட் கோவாபரேடிவ் சப்ளை அண்டு மார்கெடிங் சொஸைடி இருக்கிறதே, அதற்கு தலைவராக விளங்குபவர் யார்? நண்பர் திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள். அவர் யார்? அவரும் காங்கிரஸ்காரர் தான். அதுமட்டுமல்ல. நான் குறிப்பிட்ட இந்த நான்கு பாங்குகளும் நாட்டிலே இருக்கிற எல்லா பாங்குகளையும் நிர்வகிக்கிற பொறுப்பை பெற்றிருக்கின்ற தலைமைப் பாங்கிகளாகும்.



12 th March 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

ஸ்டேட் கோவாபரேடிவ் பாங்கைப் பொறுத்த அளவில், அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற சென்ட்ரல் பாங்கில் இருப்பவர்கள் டைரக்டர்களாக வந்து அதில் அமர்கிறார்கள். அப்படி 15 மாவட்டங்களிலிருந்தும் 15 டைரக்டர்கள் அதற்குப் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். இங்கே இருக்கிற சென்ட்ரல் பாங்குக்கு தனிப்பட்ட ஷேர் ஹோல்டர்ஸுக்காக இரண்டு பேர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தனிப்பட்ட ஷேர் ஹோல்டர்ஸ் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால், 109 பேர்கள் சென்ட்ரல் பாங்கில் ஷேர்ஹோல்டர்களாக இருக்கிறார்கள். தனிப்பட்டவர்களுடைய செல்வாக்கு மாற்றப்பட்டு அல்லது குறைக்கப்பட்டு எல்லோருக்கும் பொதுவாக கூட்டுறவுத் துறை அமைய வேண்டும் என்பது, கூட்டுறவுத்துறையின், கொள்கையின் முக்கிய விதியாகும். இண்டிவிஜுவல் ஷேர்ஹோல்டர்ஸ் 109 பேர்களுக்கும் இரண்டு பிரதிநிதிகள் தரப்படுகிறது. சென்ட்ரல் பாங்கில் கடன் வாங்க வேண்டும் என்று சொன்னால், மாவட்ட சென்ட்ரல் பாங்குகள் 25,000 பொறுமான ஷேர்கள் எடுக்கவேண்டும். மாவட்ட சென்ட்ரல் பாங்குகளிலிருந்து ஸ்டேட் சென்ட்ரல் பாங்குக்கு பிரதிநிதியாக வருபவர்கள் 25,000 பேர்களுக்கு ஒரு பிரதிநிதியாக அங்கே வந்து அமர்கிறார்கள். ஆனால் 109 பேருக்கு இரு பிரதிநிதிகள் தனிப்பட்டவர்களுக்கு; 109 பேர்களுக்கு இரண்டு இடம் கொடுக்கப்பட்டிருப்பது சரியல்ல என்று கருதி நம்முடைய கூட்டுறவு ரிஜிஸ்டிரார் அவர்கள் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அப்படி இரண்டு இடங்கள் கொடுக்கப்பட்டிருப்பது ஜனநாயகத்திற்கு முறை அல்ல, கூட்டுறவுத் துறைக்கு முறையல்ல என்று சொல்லி அதை ஒரு இடமாகக் குறைக்கவேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். யார் உத்தரவிட்டது? கூட்டுறவு இயக்கம் வளர வேண்டும் என்று பாடுபட்டுக்கொண்டிருக்கிற ரிஜிஸ்டிரார் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். டிசம்பர் மூன்றாவது கிழமையில் ஸ்டேட் கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கில் தேர்தல் நடைபெற இருக்கிறது. அந்தத் தேர்தல் நடைபெறுவதற்குள், மூன்று வார காலத்திற்கு முன்பு ரிஜிஸ்டிரார் தனிப்பட்டவர்கள் சார்பாக தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி ஒருவர் இருந்தால் போதும் என்று உத்தரவிட்டிருந்தும், திடீரென்று நம்முடைய அரசாங்கத்திலிருந்து ரிஜிஸ்டிரார் உத்தரவை கான்ஸல் செய்து ஒரு உத்தரவு போகிறது. நமது நண்பர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். இதற்கு யார் காரணம்? இதற்கு அரசியல் காரணம் இருக்கிறதா? யார் தலையீட்டினால் இப்படி நடந்தது? கூட்டுறவு இயக்கம் வளரவேண்டும் என்பதற்காக நல்ல அதிகாரிகளை உருவாக்கி அந்த அதிகாரிகள் வசத்தில் அதிகாரத்தை ஒப்படைத்து, அவர்கள் ஒழுங்காக பணி புரிந்து, அந்த இயக்கம் நல்ல முறையில் வளரவேண்டுமென்று நாம் கருதுகிறோம். அப்படிக் கருதுகிற நேரத்தில் அந்த அதிகாரி நியாயமான அடிப்படையில் ஒரு உத்தரவைப் பிறப்பித்தால், அந்த அதிகாரியின் உத்தரவு திடீரென்று மாற்றப்பட்டு அரசாங்கத்திலிருந்து தாக்கீது செல்லுகிறது என்று சொன்னால், எந்த

அடிப்படையில் தாக்கீது செல்லுகிறது? யார் மூலம் சிபார்சு பெற்று இந்த மாதிரி பிரச்னை அங்கே ஏற்படுகிறது? எதற்காக அந்த அளவுக்கு கூட்டுறவுப் கொள்கையில் அரசியல் நிலைமைகளை உருவாக்கவேண்டும்?

அதுமட்டுமல்ல, காலையில் அமைச்சர் அவர்கள் பேசிய நேரத்தில் ஒரு ஆண்டு காலத்தில் காஞ்சீபுரம் செண்ட்ரல் பாங்கு விவசாயிகளுக்கு சுமார் ரூ. 9 லட்சம் அளவுக்கு கடன் வழங்கியிருக்கிறது என்று தகவல் தந்தார்கள். மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு காஞ்சீபுரம் செண்ட்ரல் பாங்கு எவ்வளவு கடன் கொடுத்திருக்கிறது என்றால், ரூ. 12 லட்சம் கடன் கொடுத்திருக்கிறது. எப்படிப்பட்ட ஆலை அந்த மதுராந்தகம் சர்க்கரை ஆலை? பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டியில் தகவல் தந்திருக்கிறார்கள். ஆடிட் ரிபோர்ட்டிலும் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் 6 சர்க்கரை ஆலைகள் வைத்திருக்கிறோம். இந்த ஆறு ஆலைகளுக்கும் சர்க்கார் போட்ட முதலீடு ரூ. 128 லட்சம். நம்முடைய ஆடிட் ரிபோர்ட்டு என்ன சொல்லுகிறது என்றால், இவைகளிலிருந்து எந்தவிதமான லாபமும் இல்லை என்பது தான். தனிப்பட்டவர்கள் சர்க்கரை ஆலைகள் நடத்துகிறார்கள். தனிப்பட்டவர்கள் நடத்துகிற சர்க்கரை ஆலைகளில் கிடைத்திருக்கிற லாபத்தை கணக்கெடுத்துப் பார்த்தால் மதுரை ஷுகர் மில்ஸுக்கு 1963-ல் ரூ. 2 லட்சத்து 34 ஆயிரத்திற்குமேல் லாபம் வந்திருக்கிறது. விழுப்புரம் ஸவுத் இந்தியா ஷுகர்ஸுக்கு 1963-ல் ரூ. 1¼ லட்ச லாபம் வந்திருக்கிறது. பேட்டைவாய்த்தலை காவேரி ஷுகர்ஸுக்கு 1963-ல் ரூ. 4 லட்சம் லாபம் வந்திருக்கிறது. மதுராந்தகத்தில் அமைக்கப்பட்டிருக்கிற சர்க்கரை ஆலை தொடர்ந்து 1962-63 வரை ரூ. 28 லட்சம் நஷ்டத்தில் வேலை செய்துகொண்டிருக்கிறது. இதற்கு மொத்த மூலதனம் ரூ. 54 லட்சம்; சர்க்கார் பங்குத் தொகை ரூ. 20 லட்சம். ஆனால், தொடர்ந்து ஏற்பட்டிருக்கிற நஷ்டம் ரூ. 28 லட்சம். இப்படி சர்க்கார் கொடுத்த பங்கீட்டுத் தொகை போதாது என்று சொல்லி, சர்க்கார் மேலும் ரூ. 6 லட்சம் இந்த ஆலைக்கு கடன் வழங்கியிருக்கிறார்கள். ஒரு உருப்படியற்ற ஆலைக்கு, நஷ்டத்தில் வேலை செய்கிற ஆலைக்கு, இப்படிக் கடன் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள். இதற்கு என்ன பொருள்? எதற்காக மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு இவ்வளவு சலுகை வழங்கவேண்டும்? இதில் என்ன அர்த்தம் இருக்கிறது? இதெல்லாம் மட்டுமல்ல; இந்த ஆலை இண்டஸ்ட்ரியல் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து, ரூ. 56 லட்சம் கடன் வாங்கியிருக்கிறது. மறுபடியும் கடன் கேட்டது; ஆனால், அவர்கள் கடன் கொடுக்க மறுத்து விட்டார்கள். ஆனால் 1964-ல், ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்கிலிருந்து, ரூ. 25 லட்சம் வாங்கியிருக்கிறது, இந்த ஆலை.

**கனம் சபாநாயகர்:** டைம் ஆகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஒரு ஐந்து நிமிஷம் கொடுக்க வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்த வரையில், இன்றையதினம், தொடர்ந்து சங்கிலி பிடித்தாற்போல, ஒரு இடத்திலே ஒரு ஆள் உட்கார்ந்து கொண்டு விட்டால், அந்த இடத்திலிருந்து அகற்றுவது பெரிய காரியம்; செயின் போல டிஸ்டிரிக்ட் சொசைடி, தாலுகா சொசைடி, மாநில சொசைடி, கிராம சொசைடி என்று இப்படி எல்லாவற்றிலும் ஒரே ஆளே எல்லாவற்றிலும் உட்கார்ந்து கொண்டு யாரையும் உள்ளே விட மாட்டேன் என்கிறார்கள். இந்த அழகில் அரசு சோஷலிசம் பேசுகிறது. எங்கு இருக்கிறது அந்த சோஷலிசம் என்று கேட்க விரும்புகிறேன்.





காங்கிரஸ் தலைவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், எவ்வளவோ குறைகள் இருக்கின்றன என்பதை உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் தலைமை தாங்கும் ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஆலையைப் பொருத்துக்கூட எவ்வளவோ குறைகள் இருக்கின்றன. அவர்களே ஒத்துக் கொள்ளுவார்கள். (குறுக்கீடு) காங்கிரஸ் தலைவர் சமதர்மத்தை விளக்கப் புகுகிறவர்கள், தங்கள் சர்க்காரை வலியுறுத்தி கூட்டுறவுத் துறையில் இருக்கும் குற்றம் குறைகளைக் களைய வேண்டும் என்றும், குறிப்பாக இரண்டு தடவைகள் டைரக்டராக இருந்தவர்கள், அடுத்து ஐந்து ஆண்டுகளுக்கு அந்த ஸ்தாபனத்தில் டைரக்டராகவோ வேறு வகையிலோ வரக்கூடாது என்றும் வேறு யாராவது வரட்டும் என்றும் சட்டம் கொண்டுவரச் செய்யட்டும். கனம் அங்கத்தினர் திரு. கே.எஸ். சுப்பிரமணிய கவுண்டர், ஆல்-இந்தியா கமிட்டி இதற்கு விரோதமாக இருந்தது என்று எடுத்துக் கூறினார்கள். அமைச்சர் வெங்கட்டராமன் அப்படிச் சட்டம் கொண்டு வர இங்கே இசைவு தரவில்லையா? அப்படிப்பட்ட சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம்—சிலர் எங்கள் கட்சியிலும் கூட்டுறவில் பதவி வகித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்றால், அவர்களை வாலண்டரியாக, வருவதில்லை என்கிற உறுதிமொழியைக் கொடுக்கச் சொல்லத் தயாராக இருக்கிறோம்—முழு மனதுடன் வரவேற்கிறது. எங்கள் கட்சிக்காரர்கள் சார்பில் உறுதிமொழி கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அமைச்சரவை தயாராக இருக்கிறதா? ஆளும் கட்சி சார்பில் அப்படிப்பட்ட உறுதிமொழியை அவர்கள் கொடுப்பார்களா? இந்த இயக்கம் வளரவேண்டும் என்று கருதுகிறார்களா? நல்ல அதிகாரிகள் இருக்கிறார்கள். இயக்கம் வளரமுடியும். ஆனால் ஆளும் கட்சி ஓட்டுகள் வாங்குவதற்காக, ஐந்து விரல்களையும் நீட்டுவது போல், எல்லாப்பகுதிகளுக்கும் நீட்டி, கூட்டுறவு இயக்கத்தின் பொதுத் தன்மைக்கே கேடு பயக்கும் வகையில், இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். நண்பர் திரு. கோசல்ராம் சொன்னபடி, இதிலே ஜமீன்தார், பரம்பரை பாத்தியதை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தவிதமான குறைகளைக் களைந்தால், கூட்டுறவு இயக்கம் வளரும்; அப்படி அது வளருவது அவசியம் என்று சொல்லி முடிக்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** அவர்கள் என்னைப் பற்றிச் சொன்னார்கள். புழுதியைக் கிளப்பிவிடுகிறார்களா? ஏதாவது ஒரு ஆதாரம் கையில் இருந்தாலும் இப்பொழுது சொல்லட்டும் பார்க்கலாம். என்ன குறை சொல்லட்டும்.

12th March 1966

*திரு. கே. ஏ. மதியழகன்* : லாபம் இல்லை என்பதுதான் குறை.

*திரு. மு. கருணாநிதி* : அதுதான் குறை.

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு* : என்ன ஆதாரம் இருக்கிறது ?

*திரு. இராம அரங்கண்ணல்* : தலைவர் அவர்களே, அவர்கள் தலைமை தாங்கும் ஸ்ரீவில்லிபுத்தூர் நூற்பாலையில் லாபம் இருக்கிறதா என்கிற அளவில் சொன்னேனே அல்லாது வேறு அளவில் சொல்லவில்லை; அவரை தனிப்பட்ட முறையில் எதுவும் சொல்லவில்லை. காங்கிரஸ் தலைவர் அவர்கள் தலைமை தாங்கும் கூட்டுறவு ஆலையில் லாபம் வந்திருக்கிறது, என்று சொல்வதானால், அதை எடுத்துக் காட்டட்டும் என்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு* : லாபம் வந்திருக்கிறது. வராமல் இல்லை.

* **கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்** : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய ஆரம்ப உரையிலேயே போதுமான கருத்துக்களைச் சொல்லிவிட்டு அமர்ந்து விட்டேன். குறைபாடுகள் சொல்லுகின்றவற்றிற்குப் பின்னால் பதில் சொல்லுகிறேன் என்று சொன்னேன். காலம் ஆகிவிட்டதால், இன்னும் பத்து நிமிஷத்தில் சுருக்கமாகச் சொல்லி முடிக்கிறேன்.

இந்த சபையிலே, விவாதத்திலே கலந்துகொண்ட அன்பர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன். பல யோசனைகளையெல்லாம் சொன்னார்கள். பல குறைபாடுகளைச் சொன்னார்கள் என்றாலும் இயக்கத்தை பொறுத்தவரையில், இது நல்ல இயக்கம், நன்றாக நடக்கவேண்டும் என்கிற தொனி தெரிந்தது. அதற்கு நன்றி தெரிவிக்கிறேன். தனிப்பட்ட முறையிலே, அவரவர்கள் ஊர் விவகாரங்கள், தனிப்பட்ட விஷயங்கள் பற்றி, குறைபாடுகளைச் சொன்னார்கள். அவற்றை அங்கத்தினர்கள் குறிப்பிட்டாலும், ஏதோ அவர்களுக்கு மாத்திரம் வந்தது என்று எண்ண வேண்டாம்; அந்தக் குறைபாடுகள் பற்றிய தகவல்கள் சர்க்காருக்கும், ரிஜிஸ்டிராருக்கும் வந்து இருக்கின்றன. எது, எது எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்று விசாரித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். அதில் எந்த விதமான தாமதமும் கிடையாது என்று உங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன். இங்கே சொல்வதற்காக அவர்களுக்கு பல விஷயங்கள் வரலாம். அப்படி வந்து சேரும். ஆனால், எவ்வளவு தூரம் நிரூபிக்க முடியும் என்பது யோசிக்க வேண்டியது. சர்க்காருக்கு வரும் புகார்கள் பற்றி விசாரணை செய்து டிபார்ட்மெண்ட் மூலமாக முடிவு எடுக்க வேண்டும் என்றாலும், அதற்கும் மேலாக போலீஸ் ஸ்டேஷன் செல்ல வேண்டும் என்றாலும், பாரபட்சம் இன்றி காரியங்கள் நடந்து கொண்டு இருக்கின்றன என்பதைச் சொல்லப் பிரியப்படுகிறேன். அப்படிப்பட்ட விஷயங்களிலே கோர்ட்டிலே முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதும் அங்கத்தினர்களுக்குத் தெரியும். ஆக, அது பற்றி அதிகமாக உள்ளே புகவேண்டாம் என்று நினைக்கிறேன்



12th March 1966] [*திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்*]

இப்பொழுது உங்கள் முன்னாலே ஒரு அமெண்ட்மெண்ட் வைத்திருக்கிறேன். செக்ஷன் 28-ன் கீழ் அதைச் செய்ய வேண்டும் என்று கொடுத்திருக்கிறேன். அதற்குக் காரணம், இது போல பிரச்சினைகள் அதிகமாக வந்தால் அவற்றைத் தவிர்க்க, அப்படித் தவறுகள் செய்து விட்டார்கள் என்று நிரூபிக்கப் பட்டால், அந்த ஸ்தாபனத்திலே அவர்கள் மறுபடியும் வரமுடியாது, வரக்கூடாது என்கிற அடிப்படையில் அந்த அமெண்ட்மெண்டை வைத்திருக்கிறேன். அதை வினியோகம் செய்திருக்கிறார்கள்; அங்கத்தினர்கள் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். கூடிய சீக்கிரம் அது விவாதத்திற்கு வரும்.

இதே மன்றம் ஒரு விதியைச் செய்து இருக்கிறது. குற்றம் சொல்லுகிறவர்கள், அதை இதைச் சொல்லலாம். ஏதோ சொல்ல வேண்டும், சொல்லலாம் என்று முன் நின்று கேஸ் கொடுக்கிறார்கள். முதலில் சாட்சி சொல்ல வருகிறோம் என்கிறார்கள். ஆனால் பிற்பாடு தயா, தாட்சண்யம் காரணமாக, அங்கே இருக்கக் கூடிய சூழ்நிலை காரணமாக விட்டு விடுவார்கள். அந்த நிலையில் இல்லாமல், கட்சியின் சார்பு இல்லாமல், கூட்டுறவு வளர வேண்டும் என்று செயல்பட்டால்தான், வெற்றியைக்காண முடியும். எப்படியும் தகராறுகள் இருக்கின்றன. அவற்றைத் தவிர்க்க நல்ல வழிவகை இருக்கின்றன.

ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் அவரவர்கள் விஷயங்கள் பற்றிச் சொன்னார்கள். திரு. சுப்பிரமணிய கவுண்டர் பேசும் போது கனம் அங்கத்தினர் தர்மலிங்கம் சொன்ன விஷயங்கள் பற்றியும் கனம் அங்கத்தினர் சீராமுலு சொன்ன விஷயங்கள் பற்றியும் பதில் சொல்லிவிட்டதால், திரும்ப நான் அந்த விஷயங்களுக்குச்செல்ல வேண்டாம் என்று விட்டு விடுகிறேன். கனம் அங்கத்தினர் சண்முகம் பேசும்போது கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையிலே பணம் கையாடல் செய்துவிட்டதாகவும், அதற்குத் தகவல் இருக்கிறது என்றும் சொன்னார்கள். இது ஏற்கனவே பரிசீலனை செய்யப்பட்டதாக அறிகிறேன். பரிசீலனை ஒரு அளவில் முடிந்து, ஏதாவது நடந்திருக்கும். அப்படி நடந்திருந்தால், அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விஷயத்தை உங்கள் மூலம் சொல்லப் பிரியப்படுகிறேன்.

அடுத்து, காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள், அதன் காரணத்தால் ஏதோ சில ஸ்தாபனங்களில் தவறுகள் நடந்தாலும் விட்டு விடுகிறார்கள் என்று சொல்வது சரியாகாது. கனம் அங்கத்தினர் திரு. அரங்கண்ணல் பேசும்போது கூட முக்கிய ஸ்தாபனங்களின் பெயரைக் கெடுத்து இருக்கிறவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அநேகமாக சிலர் தொடர்ந்து இருந்து கொண்டே இருப்பதால், சில சங்கடங்கள் இருக்கலாம். சட்டத்தை என் சக அமைச்சர் திரு. வெங்கட்டராமன் கொண்டு வந்த நோக்கிலே ஒரு சில நண்பர்கள் பேசினார்கள். எப்படியானாலும், ஒரு 'கண்டின்யுடி' இருக்க வேண்டும். இருக்கக்கூடிய தலைவர்கள் நல்ல ஒரு ஸ்தாபனத்தை நல்ல முறையில் நடத்த அந்த முறை வேண்டும். சில தளர்த்

தங்கள் இருக்க முடியும். தவறுகள் செய்து இருந்தாலும், தவறுகள் இல்லாமல், தவறுகள் வரமுடியாமல், இருக்க வேண்டும் என்றுதான் இந்த 28-வது பிரிவுக்கு திருத்தம் வேண்டும் என்று அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் நல்ல பல கருத்துக்களைச் சொன்னார்கள். "பொதுவாக, இருக்கக்கூடிய தவறு எதுவாக இருந்தாலும் பார்த்துச் செய்யவேண்டும், தவறு இல்லை என்று சொல்வதற்கில்லை. தவறு இருந்து கொண்டுதான் இருக்கிறது, அதை நிவர்த்திக்க வேண்டிய கடமை இருக்கிறது, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்" என்று சொன்னதற்காக எனது நன்றியை அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளப் பிரியப்படுகிறேன்.

"நில அடைமான பாங்க் மூலமாகத் தொகை கொடுப்பது மக்களுக்குப் பிரயோஜனப்படக்கூடிய நிலை. நிலத்தினுடைய மதிப்பு அதிகமாக இருந்தாலும் கூட, ஏதோ குறைத்துக் கொடுக்கிறார்கள்" என்று சொன்னார்கள். நில அடைமான பாங்க் மூலமாக, நிலத்தினுடைய கிரயம் என்ன என்று கணக்குவைத்து அந்தத் தொகையை நாம் அப்படியே கடன் கொடுக்கவேண்டும் என்பது அல்ல. செக்யூரிடி என்ற முறையில் எடுத்துக்கொண்டாலும் கூட, மதிப்பைப் பார்த்துக் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அதிகமாகக் கொடுக்கலாம். கடன் கோருகிறவர்களுக்கு எதற்காகக் கடன் தேவை என்பதைப் பார்க்கவேண்டும். நிலத்தின் மதிப்பு அதிகமாக இருந்தாலும், கடன் எதற்காகக் கோரப்படுகிறது என்பதைக் கவனித்துத்தான் கடன் கொடுக்கப் படுகிறதே தவிர, வேறொன்றும் இல்லை.

கூட்டுறவு கைத்தறிச் சங்கங்கள் பற்றிச் சொன்னார்கள். நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிப் பேசும்போது, இதற்கெல்லாம் தகுந்த முறையில் என்ன நிவாரணம் செய்யப்படும் என்று எடுத்துச் சொல்வார்கள் என்று நான் மறு முறையும் இங்கே சொல்லிக் கொள்ளப் பிரியப்படுகிறேன்.

சுதந்திராக் கட்சித் தலைவர் கனம் திரு. கணேசன் அவர்கள் பேசினார்கள். எப்போதுமே மிகவும் சாந்தமாகப் பேசக்கூடியவர் இன்றைக்கு இங்கே பேசியது சுறுசுறுப்பாக இருந்தது என்று தான் எனக்குத் தோன்றியது. இன்றுதான் முதல் முறையாக அவருடைய பேச்சில் சுறுசுறுப்பை நான் பார்த்தேன். மிக அழகான தமிழ் வார்த்தைகளைப் பேசக்கூடிய அவர் இன்றைக்கு ஓரிரண்டு வார்த்தைகளுக்குச் சில விளக்கம் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அவர்கள் குறிப்பிட்ட பண்ணை எனது ஜில்லாவில் இருக்கும் பண்ணை. அவர் கொடுத்த விளக்கம் யார் கொடுத்தது என்று யோசித்தால், தளபதி திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடும். அவர் கட்சியிலே மிகத்தீவிரமாக இருக்கக்கூடியவர். அவருக்குத் தீவிரமாகப் பிடித்த கணக்கு. அதை வைத்து அவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னால், நேரடியாகப் பார்த்தேன் என்று சொல்லக்கூடும்.





அவர்கள் நேரடியாகப் பார்த்தால் நானும் நேரடியாகப் பார்த்திருப்பேன். அந்த நிலத்தை நான் பார்த்திருக்கக்கூடும். அது என்னுடைய ஊரைச் சார்ந்தது. நல்ல முறையில் நடந்து கொண்டிருந்த பண்ணை அது. கூட்டுறவுப்பண்ணை நன்றாக நடக்க வேண்டுமென்றால், கூட்டு மனப்பான்மையுடன் நல்ல வேலை செய்யக்கூடிய எண்ணம் இருக்கவேண்டும். அந்த எண்ணத்துடன் தான் அதை ஆரம்பித்தார்கள். அப்பொழுது அவர்களுக்குக் கூட்டு மனப்பான்மை இருந்தது. நல்ல முறையில் செய்ய வேண்டும் என்ற அவா இருந்தது. கொஞ்ச நாட்களுக்குத்தான் அந்த எண்ணமும் அவாவும் இருக்கிறது. பிறகு எப்படியோ சில பிரச்னைகள், சில கோளாறுகள் காரணமாக, அந்தப் பண்ணை நடப்பதிலே சில கஷ்டங்கள் ஏற்பட்டன. அது எனக்குத் தெரியும். அதையெல்லாம் வைத்துத்தான் அரசாங்கத்திலே இப்பொழுது கூட்டுறவுப் பண்ணைகளெல்லாம் நல்ல முறையில் நடத்துகிற அளவு நடந்துகொண்டிருக்கக்கூடிய பண்ணைகள் நல்ல முறையில் நடப்பது என்று சொன்னால், அதற்கு வேண்டிய உதவிகள் செய்வது, அதுவரைக்கும் மற்ற உதவிகள் செய்வதை ஓரளவில் நிறுத்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அரசாங்கம் இருக்கும் பண்ணைகளுக்குச் சில உதவிகள் கொடுக்கிற நிலையை ஏற்படுத்திக்கொண்டு புதிய பண்ணைகளை ஏற்படுத்துகிற வேலையை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

கனம் அங்கத்தினர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது, "வெளிநாடுகள் பலவற்றிற்குச் சென்று அங்குள்ள பல கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பார்த்து வந்தேன். நன்றாக நடக்கின்றன" என்று சொன்னார்கள். அந்த நிலை இங்கே வர வேண்டும் என்பது தான் நம்மைப்போல் இருக்கும் அத்தனை பேருக்கும் ஆசை. என்னுடைய ஆசையும் அது தான். பால், காய்கறிகள் முதலிய பொருள்கள் எல்லாம் ஒழுங்காகக் கூட்டுறவு சங்கங்களுக்குப் போகவும், கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நமக்குக் கிடைக்கும் நிலை இருக்க வேண்டும் என்ற அடிப்படையை வைத்துத்தான் பல துறைகளிலே முயற்சி செய்துகொண்டிருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல நான் பிரியப் படுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள் பேசும்போது, சில குறிப்பிட்ட விஷயங்களைச் சொன்னார்கள். அவர் பொதுவாகச் சொன்னார்கள். ஆனால், எதிர்க் கட்சி நண்பர்கள் பேசும்போது, அவர்களுக்காகப் பேசினதாக நினைத்துக்கொண்டு சில கோட்பாடுகளை எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக எப்படி எப்படியிருந்தால் நல்லது என்று கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள் சொன்னார்களே தவிர, கட்சி கட்சி என்று பேசுவது சரியல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்தக் கட்சியில் இருப்பதன் காரணமாகத்தான் ஏதோ நடந்துகொண்டிருக்கிறது என்று எதிர்க்கட்சி நண்பர்கள் சொல்வது சரியல்ல. அந்தக் கட்சியில் இருப்பவர்களும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆளும் கட்சித் தரப்பில் இருக்கும்

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்] [12th March 1966

எம்.எல்.ஏ.-க்கள் எத்தனை பேர் கூட்டுறவு சங்கங்களில் முக்கிய ஸ்தாபனங்களில் இருக்கிறார்கள் என்றால் ஒரு டஜன் பேர்களுக்கு மேல் இருக்க மாட்டார்கள் என்று தான் நினைக்கிறேன். ஆனால், எதிர்ப் பக்கத்தில் இருக்கும் நண்பர்கள் அத்தகைய ஸ்தாபனங்களில் இருக்கும் கணக்கைப் பார்த்தால் கூட, அந்த ஒரு டஜனுக்குள்ளே தான் இருக்கும்.

ஜனங்களுக்காக வேலை செய்யவேண்டும். ஏதோ தலைமையில் இருக்கக்கூடியவர்கள் அவர்களுடைய கட்சியை வளர்ப்பதற்காகப் பிரசாரம் செய்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லப் பிரியப்படுகிறேன்.

இன்னும் மற்ற நண்பர்கள் பல விஷயங்களை மிக விளக்கமாகப் பேசினார்கள். நேரம் இல்லாத காரணத்தினால் நான் அதிகமாகப் பேசவேண்டாம் என்று கருதுகிறேன். ஆக, இந்தக் கூட்டுறவு இயக்கம் நல்லதொரு இயக்கம். இது நல்ல ஸ்தாபனமாக நமக்கு அமையவேண்டும் நான் பொதுவாக முதலில் பேசிய விஷயங்களில் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட விஷயங்கள் அடங்கிவிட்ட காரணத்தினால், ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்ல வேண்டாம் என்று இத்துடன் முடித்துவிட நினைக்கிறேன். இந்த ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சியைவிட இன்னும் சிறப்பான முறையில் அடுத்த ஆண்டு இந்தக் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி அடைந்து, நமக்குப் பல துறைகளில் செயல்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கனம் அங்கத்தினர் சகோதரி திருமதி குழந்தையம்மாள் அவர்கள் பேசும்போது, "எல்லாக் கூட்டுறவு சங்கங்களிலும் ஆடவர்களே இருந்துகொண்டு இருக்கிறார்கள், பெண்களாகிய எங்களுடைய கையிலே இந்தப் பொறுப்பை விட்டுவிட்டால் செம்மையாக நடக்கும்" என்று குறிப்பிட்டார்கள். கனம் அங்கத்தினர் இப்பொழுது இங்கு இல்லை. பக்கத்தில் இருக்கும் சகோதரிகள் அவர்களுக்குச் சொல்லிவிடுவார்கள் என்று நான் கருதுகிறேன். ஏதோ ஒன்றிரண்டு கூட்டுறவு சங்கங்களைப் பெண்டிருக்காகச் சென்னையிலே வைத்துக் கொடுத்திருக்கிறோம். அங்கே சண்டை என்று நான் சொல்ல வரவில்லை; பேச்சு அதிகமாக இருந்துகொண்டிருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். அது ஏன் என்று நான் சொல்வதற்கில்லை. அவர்கள் எல்லோரும் நன்றாக நடத்தினால் ஆட்சேபணை இல்லை. அவர்கள் முன்வந்தால் இந்தக் கூட்டுறவு சங்கங்களை அமைத்துக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லி, இந்த மானியத்தை கனம் உறுப்பினர்கள் எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளவேண்டும், வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருக்கும் கனம் உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுப் பிரேரணைகளை வற்புறுத்தாமல் வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டு, அந்த நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடிக்கிறேன்.



12th March 1966]

The cut-motion of Sri S. Arumugam was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,72,73,300 under Demand No. XIX—Co-operation."

The Demand was put and carried and the Grant was made.

The cut-motion of Sri Pulavar Govindan was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 19,000 under Demand No. XL—Capital Outlay on Consumers Co-operatives"

The demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, 14th March 1966.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

**A Statutory Rules and Orders.**

***Nil.***

**B. Reports Notifications and Other Papers**

† 44. *Demand for Police Grant for 1966-67—Speech by Home Minister (Tamil and English).* 2-01 p.m.

† Circulated separately on 10th March 1966.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 14th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *ரசாயன உரங்கள்*

*குறுகிய கால கேள்வி எண் 4—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** *கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--*

*(அ) வடாற்காடு, செங்கல்பட்டு ஆகிய இரு மாவட்டங்களிலும் இந்த போக நவரை சாகுபடிக்குத் தேவையான ரசாயன உரங்கள்* Ammonium Sulphate, Urea and Nitrate *தறித்த விலையில் குறித்த நேரத்தில் கிடைக்கவில்லை என்பதை அரசாங்கம் அறியுமா ?*

*(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?*

**கனம் திரு. பூ. கக்கன்:** *(அ) இல்லை.*

*(இ) வினாவுக்கு இடமில்லை.*

**திரு. எஸ். கே. ராமசாமி:** *இப்போது நவரை சாகுபடி இருக்கிறது. இந்த நேரத்தில் கோவாப்பரேடிவ் ஸ்டோர்களை உரம் கேட்டால் அமோனியம் சல்பேட், யூரியா முதலியவை கிடைப்பதில்லை. ஆனால், வெளி மார்கெட்டில் 60 ரூபாய்க்குக் கிடைக்கிறது. இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதா ? அல்லது வளர்க்கவேண்டுமென்று கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.*

**கனம் திரு. பூ. கக்கன்:** *அரசாங்கத்திற்கு விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்பது தான். ஏற்கனவே உரம் ஷார்ட்டேஜ் ஆக இருப்பது தெரியும். அதற்கு மத்திய சர்க்காரின் உதவி பெற்று விவசாயிகளுக்கு உரம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். 4-வது க்வார்ட்டரிலே நாம் கேட்டதற்கு மார்ச் மாதத்திற்குள் கப்பல் மூலமாக அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய சர்க்காரிடமிருந்து வந்த பிறகு வழங்கப்படும்.*

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** *வட ஆற்காடு மாவட்டத்திற்கு யூரியா எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது ? அமோனியம் சல்பேட் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது ? செங்கல்பட்டு மாவட்டத்திற்கு*

## APPENDIX.

[*Vide* Answer to Starred Question No. 258 at page 3.]

A—(*a*) 88 (Eighty-eight).

(*b*) —

| Type of tractors. (1) | Name of the firms. (2) | Number of tractors supplied. (3) |
|---|---|---|
| 1. Massey Ferguson Tractors. | (i) Messrs. Sundaram Motors (Private) Limited, Madras .. | 33 |
| | (ii) Messrs. T.V. Sundaram Iyengar & Sons (Private) Limited, Madurai .. .. | 18 |
| | (iii) Messrs. Stanes Motors (South India) Limited, Coimbatore .. | 9 |
| 2. Hindustan Tractors. | (i) Messrs. Modern Machine Works, Madras .. | 14 |
| | (ii) Messrs. Gajaraj & Co., Coimbatore .. | 4 |
| | (iii) Messrs. Arasan & Co., Tirunelveli .. | 2 |
| 3. Russian Tractors .. | Messrs. National Engineering Co., Madras. | 4 |
| 4. Eicher Tractors .. | Messrs. South Indian Export Co., Madras. | 4 |

(c)—

| Type of tractors. (1) | Cost per tractor. (2) RS. | P. | |
|---|---|---|---|
| 1. Massey Ferguson Tractors (32 H.P.) | 17,317 | 84 | Ex-Farm of party. |
| 2. (i) Hindustan Tractors (50 H.P) | 20,600 | 00 | |
| (ii) Hindustan Tractors (35 H.P.) | 14,800 | 00 | |
| 3. Russian Tractors— | | | |
| (i) 14 H.P. .. .. | 5,285 | 00 | Ex-Godown, Madras. |
| (ii) 28 H.P. .. .. | 9,287 | 00 | |
| (iii) 40–48 H.P. .. .. | 12,335 | 00 | |
| 4. Eicher Tractors (27 H.P.) | 16,126 | 50 | |
| 5. Escort Tractors (34·5 H.P.) | 15,508 | 46 | Ex-Farm of party. |

(*d*) There is no such proposal.





(அ) 88 (எண்பத்தெட்டு).

(இ)—

| யந்திரக் கலப்பையின் வகை. (1) | வணிக நிறுவனங்களின் பெயர். (2) | வழங்கப்பட்ட யந்திரக் கலப்பைகளின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1. மேஸி பெர்கூசன் யந்திரக் கலப்பைகள். | (i) சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 33 |
| | (ii) டி. வி. சுந்தரம் ஐயங்கார் சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை. | 18 |
| | (iii) ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (தென் இந்தியா), லிமிடெட், கோயம்புத்தூர். | 9 |
| 2. இந்துஸ்தான் யந்திரக் கலப்பைகள். | (i) மாடர்ன் மெஷின் வொர்க்ஸ், சென்னை. | 14 |
| | (ii) கஜராஜ் அண்டு கோ., கோயம்புத்தூர். | 4 |
| | (iii) அரசன் அண்டு கோ., திருநெல்வேலி. | 2 |
| 3. ரஷ்யன் யந்திரக் கலப்பைகள். | நேஷனல் இஞ்சினீயரிங் கம்பெனி, சென்னை. | 4 |
| 4. ஈச்சர் யந்திரக் கலப்பைகள். | சவுத் இண்டியன் எக்ஸ்போர்ட் கம்பெனி, சென்னை. | 4 |

(உ)—

| யந்திரக் கலப்பைகளின் வகைகள். (1) | விலை. (2) ரூ. | காசு. | |
|---|---|---|---|
| 1. மேஸி பெர்கூசன் யந்திரக் கலப்பை (32 பரித்திறன்). | 17,317 | 84 | வாங்குவோருடைய பண்ணையில் சேர்ப்பிக்க. |
| 2. (i) இந்துஸ்தான் யந்திரக் கலப்பை (50 பரித்திறன்). | 20,600 | 00 | |
| (ii) இந்துஸ்தான் யந்திரக் கலப்பைகள் (35 பரித்திறன்). | 14,800 | 00 | |
| 3. ரஷ்யன் யந்திரக் கலப்பைகள்— | | | |
| (i) 14 பரித்திறன் .. .. | 5,285 | 00 | சென்னையிலுள்ள கிடங்கில் சேர்ப்பிக்க. |
| (ii) 28 பரித்திறன் .. .. | 9,287 | 00 | |
| (iii) 40-48 பரித்திறன் .. | 12,335 | 00 | |
| 4. ஈச்சர் யந்திரக் கலப்பைகள் (27 பரித்திறன்). | 16,126 | 50 | |
| 5. எஸ்கார்ட் யந்திர கலப்பைகள் (34·5 பரித்திறன்). | 15,508 | 46 | வாங்குவோருடைய பண்ணையில் சேர்ப்பிக்க. |

(ஊ) அத்தகைய செயற்குறிப்பு எதுவுமில்லை.

[14th March 1966

எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது? செங்கல்பட்டு மாவட்டத்திற்கு எவ்வளவு விநியோகிக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு அனுப்பியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். ஒரு சில இடங்களில் கோவாப்பரேடிவ் ஸ்டோர்ஸ் கூட 34 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆனால், வெளியில் 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதைத் தடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

MR. SPEAKER : The hon. Member has put too many questions in one supplementary.

**கனம் திரு. பூ. கக்கன் :** தாலுக்காவாரியாகக் கணக்கு என்னிடத்தில் இல்லை. விவரமாகத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன். விவசாயிகளுக்கு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் மாவட்டத்தில் நவரை சாகுபடி செய்வதற்கு உரம் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்ற அக்கறை எடுத்துக் கொண்டுதான் நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் கேட்டு, மேலும் பெறவேண்டும் என்று பிரயத்தனம் செய்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் முதல் அறிக்கையிலே இந்த ஆண்டு நவரையில் நல்ல பலன் எதிர்பார்க்கப்படுகிறது, எதிர்பார்க்கிறோம், நல்ல பலன் வரும் என்று சொன்னார்கள். ஆனால் கனம் விவசாய அமைச்சர் பதில் சொல்லும்போது உரம் மார்ச் மாதம் கடைசியில்தான் வரும் என்று சொல்லுகிறார்கள். மார்ச் கடைசியில் வந்தால் அதை எந்தப் பயிருக்குப் போடுவது, என்ன பலன் கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது நடப்பதே மார்ச் மாதம் தான். இந்த மாதம்தான் வரும் என்று எதிர்பார்க்கிறோம். வந்த பிறகு கொடுக்கப்படும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நிதிநிலை அறிக்கையில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ரசாயன உரம் பற்றாக்குறை காரணத்தால்தான் உணவு உற்பத்தி குறைந்திருக்கிறது, போதுமான அளவு கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது நாம் மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு கேட்டிருக்கிறோம் எவ்வளவு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** எவ்வளவு கேட்டோம், எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் அமைச்சர் அவர்கள் " நாங்கள் கேட்டிருக்கிறோம், அவர்கள் கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள் " என்பதாகச் சொன்னார்கள். அப்படியிருக்கும் பொழுது எவ்வளவு கிடைக்கும் என்று தெரிந்திருக்கவேண்டும். அது எவ்வளவு என்று பார்த்து விவரம் சொல்லமுடியுமா ?

(பதில் இல்லை).



14th March 1966]

**திரு. கே. ஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம் :** கனம் அமைச்சர் அவர்கள் கப்பலில் உரம் வருவதாகச் சொன்னார்கள். அது எவ்வளவு வருகிறது ? என்ன ரக உரம் வரும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** மத்திய சர்க்கார் கொடுக்கிறது. நமக்கு எவ்வளவு அலாட் பண்ணுவார்கள் என்பது பிறகுதான் தெரியும்.

THE HON. SRI P. KAKKAN : A shipment of 20,000 tons of ammonium sulphate is expected before the end of this month.

### அரிசனங்களுக்கு மனைக்கட்டுகள்

***272 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு வீடு கட்டும் மனை வழங்குவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதற்கான சாத்தியக்கூறு பற்றி பரிசீலிக்க அமைக்கப்பட்ட பரமேசுவரன் கமிட்டி, தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துவிட்டதா ?

(இ) ஆமெனில், அதன் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) கமிட்டியின் ரிப்போர்ட்டின் நகல்[a] சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த ரிப்போர்ட்டில் இரண்டாவது பாராவில் சொல்லப்பட்டிருக்கிற ரெகமன்டேஷன்களில் எத்தனை அமலாக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** பெருவாரியான சிபார்சுகள் சாதகமாக ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் சில சிபார்சுகள் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. பரிசீலனை செய்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக அரிசனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்க நில ஆர்ஜித வேலைகள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இது சம்பந்தமாக நாங்கள் அடிக்கடி எடுத்துச்சொல்லியிருக்கிறோம். இதைத் தடுப்பதற்கு புதிய வழிமுறைகள், திட்டங்கள் வகுக்கப்பட்டு பரிசீலனையில் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** நில ஆர்ஜிதம் செய்வது ஆமை வேகத்தில் இல்லை. எவ்வளவு துரிதமாக நிலங்களை ஆர்ஜிதம் செய்து அரிசனங்களுக்கு மனைக்கட்டுகளை வழங்க முடியுமோ அந்த விதத்தில் வழங்கவேண்டுமென்பதற்காகத்தான் இதைப்

---

a Laid on the Table of the House on 14th March 1966.

[14th March 1966

பரிசீலிக்க ஒரு கமிட்டி அமைப்பதற்கு அரசாங்கம் முன்வந்தது. அந்த வேலைகளெல்லாம் 6, 7 மாதத்திற்கு மேலே போகக்கூடாது என்ற அளவிலே எமர்ஜென்சி நேரத்திலே கூட சில இடங்களில் சீக்கிரமாக அக்வைர் செய்யும்படி சொல்லுகிறோம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்த பரமேஸ்வரன் கமிட்டி சிபார்சுகளில் எந்தெந்த சிபார்சுகளை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று உத்தேசித்திருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்கு விடை அதிகமாக இருக்கிறது. ஆகவே, இதுபற்றி மானியக் கோரிக்கை வரும்போது பதில் சொல்லலாம்.

**திரு. எஸ். முருகையன் :** ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகளின் இடத்தைக் குறிப்பிட்டு எழுதி கொடுக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுத்தபிறகு மீண்டும் அவர்களிடத்தில் அந்த இடம் தேவை என்று எழுதி வாங்குகிறபடியால், காலதாமதம் ஆகிறது. வேண்டுமென்று முதலிலே சொல்லக்கூடிய இடங்களை அதிகாரிகளைக்கொண்டு தேர்ந்தெடுத்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் சொல்லுகிறபடி ஒரு சில கேஸ்கள் இருக்கின்றன. 4 (1) நோடிபிகேஷன் செய்து விட்டோமானால் மாற்றுவதற்கு முடியாது. 4 (1) நோடிபிகேஷன் செய்யவேண்டுமென்று கட்டளை இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறபடி தகவல் இருந்தால் அதைப்பற்றி எழுதி அனுப்பினால், கவனிக்கப்படும்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, சில சிபார்சுகளின் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறினார்கள். சில சிபார்சுகள் பரிசீலனையில் இருக்கின்றன என்றும் கூறினார்கள். பரிசீலனையில் இருப்பவைகள் என்ன என்ன என்று விவரம் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** பரிசீலயில் இருப்பது கொஞ்சமாக இருப்பதால் வாசிக்கிறேன்.

The recommendations which are under the consideration of the Government are—

*Strengthening of the land acquisition staff.*

The Director of Harijan Welfare has been asked to suggest a suitable yardstick and also to furnish a report regarding the existing strength of the staff. A final reply from the Director of Harijan Welfare in this regard is awaited.

Provision of Rs. 15 crores for providing house-sites to all Harijans without house-sites within a period of 2 to 3 years.

The Government of India who are addressed in this matter have asked for certain particulars and they are being sent to the Government of India.



14th March 1966]

*Construction of houses through the Co-operative Societies*

The final report from the Registrar of Co-operative Societies has been received. A decision in the matter will be taken shortly.

It would, therefore, be self-evident from the above that all possible steps are being taken to streamline the procedure and avoid delays at several stages of the Land Acquisition Proceedings.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போது தாமதத்திற்குக் காரணம் திரு. பரமேசுவரன் கமிட்டி அறிக்கையின்படி போதுமான பணம் ஒதுக்கப்படவில்லை என்று கலெக்டர்கள் சொல்வதுதான் என்பதாகும். 15 கோடி இவ்வினத்தில் ஒதுக்கப்பட்டால் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியும் என்று சொல்லியிருக்கிறார். இன்றைக்கு 60 லட்சம் ஹரிஜன மக்கள் இருக்கிறார்கள் என்றால் 25 லட்சம் பேர்களுக்குத்தான் வீட்டு வசதி இருக்கிறது. பாக்கியுள்ள 35 லட்சம் பேர்களுடைய பிரச்னையை போக்குவதற்கு உபமானிய கோரிக்கையிலாவது 15 கோடியை ஒதுக்கிக் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் ஆண்டிலேயே இதற்கு நிதி ஒதுக்கப்படும் என்பது பற்றி முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுபற்றி மத்திய சர்க்காருக்கும் எழுதியிருக்கிறோம். அவர்கள் சம்மதம் இன்றி ஒன்றும் செய்ய முடியாது. மனைக்கட்டுகளுக்காக நாம் நம்முடைய பட்ஜெட்டில் இவ்வாண்டு 44 லட்சம் ஒதுக்கி வைத்திருக்கிறோம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ஹரிஜனங்கள், பிற்பட்ட சமூகத்தினர் ஆகியவர்களுக்கு மனைக்கட்டு வழங்குவதற்கு 15 கோடி ரூபாய் செலவாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள்ளாக எத்தனை கோடி செலவிடப்படும் என்று தெரிவிக்க முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நான்காவது திட்டத்தில்தான் பணம் ஒதுக்குவது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** இதுபோல பட்டா வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க ஒரு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

"With a view to speeding up acquisition proceedings, the Government will have to issue executive instructions fixing the time-limit for each stage of land acquisition proceedings so as to see that the over-all time taken does not exceed six to seven months."

இதன் மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போதுதான் இதுபற்றி முடிவு எடுத்திருக்கிறோம். அதை அரசாங்கம் நிறைவேற்ற எல்லா நடவடிக்கையும் எடுக்கும்.

[14th March 1966

**திரு. ஜே. மாதா கவுடர் :** இந்த அறிக்கையில் நீலகிரியைப் பொறுத்தவரையில் " without a house no one can live here as the climatic condition is different from the plains." என்று குறிப்பிட்டிருப்பதோடு இதற்காக 80 லட்சம் தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுபற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் மனைக்கட்டு வழங்கும் பிரச்னை இல்லை. வீடு கட்டித்தர எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்து வருகிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இதற்குத் தேவையான 15 கோடி ஒதுக்குவது பற்றி சொல்கிறார்கள். இந்த வருஷம் ஒதுக்கியிருப்பது 40 லட்சம் ரூபாய்தான். 60 லட்சம் ஹரிஜன மக்களில் 37, 40 லட்சம் மக்களுக்கு இன்றைக்கு குடியிருப்புக்கான இடம் தேவைப் படுகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இவற்றுக்குத் தேவையான 15 கோடியை குறிப்பிட்ட ஒரு 3 வருடங்களுக்குள் ஒதுக்கி இப்பிரச்னையைத் தீர்க்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது அவர்கள் வீடு இல்லாமல் இருப்பதாக கனம் அங்கத்தினர் நினைக்கக் கூடாது. ஜனத்தொகை பெருக்கத்திற்கு ஏற்ப இப்பிரச்னை எழுகிறது. ஹரிஜனங்களுக்கும் சரி, மற்ற பிற்பட்ட இனத்தவர்களுக்கும் சரி நான்காவது திட்டத்தில் வீடு கொடுக்க வேண்டும் என்பதாக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு வழங்க திட்டமிடப் பட்டது ? அது பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதா ? இல்லை என்றால் அதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை என்றாலும் குறிப்பிட்ட அளவுக்கும் அதிகமாகத்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** நீலகிரி ஜில்லாவில் நிறைய புறம் போக்கு நிலங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கே வீடு இல்லாமல் இருக்க முடியாது. ஒரு வீடு ஆயிரம் ரூபாய்க்குள் கட்ட முடியவில்லை. ஆகவே, 1,250 ரூபாயாவது அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒதுக்கவேண்டும் என்ற சிபார்சின் மீது எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நீலகிரி ஜில்லாவில் எந்த நிலத்தையும் ஜாரி செய்வது கிடையாது. ஒரு ஏக்கராவுக்குள் செய்யலாம் என்று இப்போதுதான் உத்தரவிடப்பட்டுள்ளது. அங்கு கிடைக்கும் நிலங்கள், இருக்கும் நிலைமைக்கேற்ப உதவி செய்ய முடியும்.



14th March 1966]

* 273 **கேள்வி—திரு. கோ. சி. மணி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65, 1965-66-ம் வருடங்களில் தஞ்சை மாவட்டத்தில் ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குதல், மற்றும் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல் முதலிய வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அவற்றுள், இதுவரை செலவழிக்கப்பட்டுள்ள தொகை முறையே எவ்வளவு ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கவும், சாலைகள் அமைக்கவும் 1964-65-ம் ஆண்டிற்கு 2,52,600 ரூபாயும், 1965-66-ம் ஆண்டிற்கு 2,22,600 ரூபாயும் ஒதுக்கப்பட்டது.

(இ) 1964-65-ல் ஆன செலவு—

வீட்டு மனைகளுக்காக ரூ. 1,34,007.67.

சாலைகளுக்காக ரூ. 1,18,592.33.

1965-66-க்கான செலவு (31—12—1965 வரை ஆன செலவு)—

வீட்டு மனைகளுக்காக ரூ. 2,06,819.94.

சாலைகளுக்காக ரூ. 15,970.65.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1964, 1965, 1966 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள், இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த செலவான தொகையைக் குறிப்பிட்டார்கள். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் எவ்வளவு தொகை இருந்தால் அந்த பிரச்னையை பூராவாக நிவர்த்தி செய்ய முடியும், அந்த லட்சியம் எத்தனை ஆண்டுகளுக்குள் நிறைவேறும் என்கிற விவரம் தெரிவிக்க முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

### அரசாங்க நந்தனார் உயர்நிலைப் பள்ளிகள்

* 274 **கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசாங்க நந்தனார் உயர்தர ஆண், பெண் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள், ஆசிரியைகள் பற்றாக்குறை இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதுபற்றி எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[14th March 1966

**திரு. சி. சிவசுப்பிரமணியன் :** இப்போது, பள்ளி ஆரம்ப காலத்தில் ஆசிரியர்கள் கிடைக்காத காரணத்தினால் மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இனிமேலாவது அதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கலெக்டர் கொடுத்திருக்கும் தகவலில் இருந்து ஆசிரியர்கள் எண்ணிக்கையில் குறைவு கிடையாது. பயிற்சி பெறாத ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பயிற்சி பெற்றவர்கள் கிடைத்தவுடன் இவர்களை நீக்கிவிடுகிறார்கள்.

## *Model Ration shop*

* 275 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have any proposal to run a model Ration Shop in Madras City, and

(*b*) if, so, the objects and the details thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The object of the scheme is to find out the problems involved in running a ration shop.

**திரு. வை. சங்கரன் :** ஒவ்வொரு ரேஷன் ஷாப்பைப் பொறுத்த வரையிலும் ஒரு நாணயமான, தைரியமான கன்ஸ்யூமரை தேர்ந்தெடுத்து ரகசியமாக அங்கு சப்ளை செய்யப்படும் தானியங்களின் நிலையைப் பற்றித் தெரிந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ? இப்படிச் செய்வதனால் அரிசியில் செய்யப்படும் ஒழுங்கீனத்தை தவிர்க்க இடமேற்படாதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கன்ஸ்யூமர் சொசைட்டிகள் என்றே ஏற்படுத்தும் விஷயமாக அரசாங்கம் பரிசீலித்து உதவி செய்து வருகிறது.

**திரு. வை. சங்கரன் :** நான் சொன்னதை சரியாக விளக்கவில்லை என்று நினைக்கிறேன். இப்பொழுது இருக்கக்கூடிய பிராப்ளம் ரேஷன் ஷாப் பற்றியது அல்ல. கன்ஸ்யூமர்களுக்கு அரிசி சப்ளை செய்வதில், பிராப்ளம் அல்லது கஷ்டங்கள் இருக்கின்றன, அதைத் தெரிந்துகொள்ளக்கூடிய முறையிலேதான் கவனிக்கவேண்டியிருக்கிறது. அரசாங்கம் ரேஷன் ஷாப்பை வைத்துவிட்டால் அந்தக் கடையிலே நல்லதாக அரிசி இருந்து வரலாம். ஆனால் கன்ஸ்யூமர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைத் தெரிந்து கொள்வதற்கு ரகசியமாக மாதிரி கன்ஸ்யூமர்களை தேர்ந்தெடுத்து ஏற்பாடு செய்து அந்த கன்ஸ்யூமர்களிடமிருந்து பிரச்னைகளை தெரிந்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** ஒற்றர்கள் மாதிரி வைத்து கன்ஸ்யூமர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்கள்.



14th March 1966]

**கனம் திரு. வெ. ராமையா :** அங்கத்தினர் சொல்லக்கூடிய யோசனையைவிட, அவர்களைப் போல் உள்ளவர்கள் இதில் முயற்சி எடுத்து ஒவ்வொரு பகுதியிலும் கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைட்டிகள் ஏற்பாடு செய்தால் அதற்கு அரசாங்கம் போதுமான ஆதரவு கொடுக்கும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** மாடல் ரேஷன் ஷாப் என்றால் அதில் அரிசி மாத்திரம் கொடுக்கப்படுமா ? இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் பால் ஒரு பக்கம், பருப்பு ஒரு பக்கம், அரிசி ஒரு பக்கம் என்று வாங்கவேண்டியிருக்கிறதே, அப்படியில்லாமல் ஒரே இடத்தில் கொடுக்கக்கூடிய மாதிரி அந்தக் கடையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** பரீட்சார்த்தமாக ஒரே ஒரு கடைதான் திறக்கப்படுகிறது. அங்கே ரேஷன் ஆர்ட்டிகிள்ஸ் பூராவும் கிடைக்கவேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்படுகிறது. அங்கே பேபி ஃபுட்ஸ் போன்றவையும் கிடைக்கும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இப்பொழுது இந்த மாடல் ரேஷன் ஷாப்பை அரசாங்கம் அமைத்திருப்பதின் நோக்கம் என்ன, இந்தத் திட்டம் சரியாக நடத்தப்படவில்லை என்ற கருத்தா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கருத்து ஒரு பக்கம் இருக்க, பொதுமக்களிடமிருந்து ரேஷன் கடைகளிலே திருப்திகரமாக நடக்கவில்லை என்று கம்ப்ளெயிண்ட்ஸ் வருகின்றன. தனியார்கள் நடத்தக்கூடிய ரேஷன் கடைகள் இருக்கின்றன, கூட்டுறவு அடிப்படையில் நடத்தக்கூடிய ரேஷன் கடைகள் இருக்கின்றன, கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் ஸ்டோர்ஸ் இருக்கின்றன. இவ்வளவு முறைகளிலே கொடுத்தபோதிலும், இன்னும் சிக்கல்கள் என்ன, என்ன இருக்கின்றன. கன்ஸ்யூமர்ஸ் முறையாகப் பெற்றுக்கொள்வதிலே என்ன என்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் தெரிந்துகொள்வதற்காகத்தான் இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு மாடல் கன்ஸ்யூமர்ஸ் ஸ்தாபனத்தைத்தான் இப்பொழுது ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

**திரு. சா. கணேசன் :** கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபொழுது கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைடிகள் மூலமாக விநியோகிப்பது பொருத்தமாக இருக்கும் என்ற அளவிலே அதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று ஒரு கனம் உறுப்பினருக்கு ஆலோசனை கூறினார்கள். கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைடி என்று சொன்னால் அந்த சொசைடியிலே துய்க்கிறவர்கள் எத்தனை பேர் ஷேர்ஹோல்டர்ஸ் ஆக இருக்கிறார்களோ அவர்கள்தான். ஆகவே, அவர்கள்தா வாங்க வேண்டும் என்பதுதான் கோவாப்பரேஷனுடைய அடிப்படைத் திட்டம் அப்படி இருக்கும்பொழுது இந்த ரேஷனில் பணியை கன்ஸ்யூமர்ஸ் சொசைடிகளிடம் கொடுத்துவிட்டால் அப்பொழுது அது கோவாப்பரேஷனின் அடிப்படையில் வராது, ஆகவே, துய்க்கிறவர்களுக்கு என்று பங்குதார் அல்லாத மற்றவர்களுக்கும் கொடுக்கவேண்டி

[14th March 1966

யிருக்கும். அப்படியில்லாமல் கோவாப்பரேஷன் திட்டத்தின் அடிப்படையில் ஷேர்ஹோல்டர்ஸ்க்கு மாத்திரம் கிடைக்கும் என்று சொன்னால் ரேஷனிங் செம்மையாக நடக்காது. இதைப்பற்றி யெல்லாம் அரசாங்கம் சிந்தித்து அதற்கேற்ற முறையில் என்ன, என்ன வழிவகைகள் செய்து இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இவையெல்லாம் தொடர்ந்து சிந்திக்கவேண்டிய விஷயங்கள். கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைடி என்று சொன்னால் அதில் யார் அங்கத்தினர்களாக இருக் கிறார்களோ அவர்களுக்கு மட்டும்தான் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், அந்த அடிப்படையில் இப்பொழுது சொசைடிகள் நடக்கவில்லை. ஒவ்வொரு பிராந்தியத்திலும் உள்ள சொசைடியில் அந்தப் பிராந்தியத்திலே உள்ள பெரும்பான்மை யானவர்கள் அந்த கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைடியிலே மெம்பர்களாக இருந்தால், அந்த சொசைடி லாபகரமாக இயங்கு மானால், அந்தப் பிராந்தியத்திலே உள்ள ரேஷன் கார்டு உள்ளவர் களையும் இதில் இணைத்துக்கொள்ளலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்த மாடல் ரேஷன் ஷாப் ஆரம் பித்து, அதன்மூலம் இருக்கக்கூடிய பிரச்னைகளையெல்லாம் தெரிந்து கொண்டு எதிர்காலத்தில் அரசாங்கமே ரேஷன் கடைகளை ஆரம்பித்து நடத்தக்கூடிய உத்தேசம் இருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இது ஒரு "மாதிரி"யாக இருக் கிறது. இதைப்பற்றி, எதிர்க்கட்சிகள், மற்றக் கட்சிகளிலிருந்து புகார்கள் வரவில்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** பரீட்சார்த்தமாக வைத்துப் பார்த்து, பிறகு இவைகளை அதிகரிக்க வேண்டுமா இல்லையா என்பதைப் பார்க்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறியதைத் தெரிந்து கொண்டேன். ஆனால் இப்பொழுது ஒரு கடை ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்களே, அது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஹாரிங்டன் ரோடில் ஆரம்பிக் கப்பட்டிருக்கிறது. இதில் பேபி ஃபுட்ஸ் போன்ற பொருள்கள் கொடுக்கப்படுகின்றன.

**திரு. வை. சங்கரன் :** இந்த கன்ஸ்யூமர்ஸ் ஷாப்களை நிறையத் திறந்துவிடலாம் என்று சொன்னார்கள். ஆனால் இந்த வேலை நெட் ஒர்க்காக ராஜ்யம் பூராவிலும் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் இப்பொழுது அரிசி சம்பந்தமாக மட்டும் கன்ஸ்யூமர்களுக்குக் கிடைப்பதில்தான் பல கஷ்டங்கள், பிரச்னைகள் எழுகின்றன. ஆகவே, முக்கியமாக வாங்கக்கூடியவர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களைக் கவனிக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இதை கனம் அங்கத்தினர் திருப்பத் திரும்பச் சொல்வதால் நான் பதில் சொல்ல விரும்புவது, இதிலே கன்ஸ்யூமர்ஸ்க்கும் கொஞ்சம் இன்டரஸ்ட் இருக்க



14th March 1966]

வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் அரசாங்கம் கவனிக்கும். ஆனால் கன்ஸ்யூமர்களும், தங்களுக்கு கண்காணிக்கிற உரிமை மட்டும் இருக்கிறது என்று இல்லாமல், சாப்பிடுகிற உரிமை இருக்கிறது என்று மட்டும் இல்லாமல் இது போன்ற விநியோக ஸ்தாபனங்களை ஏற்பாடு செய்ய முன்வருவார் களானால் அரசாங்கம் அவர்களுக்குப் போதுமான உதவி செய் வார்கள். இந்தக் கருத்தை வலியுறுத்தக்கூடிய முறையிலே கனம் அங்கத்தினர் முயற்சி எடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

## தரிசாகவுள்ள நஞ்சை நிலங்கள்

* 276 **கேள்வி.—திரு. கோ. சி. மணி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் இந்த பசலி (1375)-யில் தண்ணீர் பற்றாக்குறையால் சாகுபடி செய்ய முடியாமல் தரிசுபட்ட நஞ்சை நிலங்கள் எவ்வளவு ?

(இ) தாலூகாவாரியாக குறுவை, சம்பா, தாளடி நிலங்களில் சாகுபடி செய்யாமலிருந்த (தரிசான) நிலங்கள் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) An extent of 22,569 acres of wet lands was left uncultivated in fasli 1375 due to scarcity of water.

(*f*) A statement [a] showing the taluk-wise and crop-wise particulars of lands left uncultivated is placed on the Table of the House.

**திரு. கோ. சி. மணி :** தலைவரவர்களே, கும்பகோணம் தாலூகா விலே குறுவைச் சாகுபடி செய்கின்ற நிலம் தரிசாக இல்லை என்ற தகவலை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். கும்பகோணம் தாலூகாவில் மன்னியாறு ஆற்றுப் பாசனப் பகுதியில் மேட்டூர் அணை திறந்து 1, 1½ மாதங்களாகத் தண்ணீர் வரவில்லை. அங்கே குறுவை சாகுபடி செய்யப்படாமலே இருந்திருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்கள் தந்த விடையில் அந்தத் தகவல் இல்லை. ஆகவே இந்தத் தகவலை மறுபடியும் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்தப் புள்ளிவிவரம் தவறாக இருக்க முடியாது. ரெவின்யூ இலாகாவிலிருந்து அதிகாரிகள் சேகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதில் அங்கத்தினர் குறிப் பிட்ட விவரங்கள் இல்லை. என்ன விவரம் சேகரிக்கப்படவில்லை என்று எழுதியனுப்பினால் அரசாங்கம் அதைக் கவனிக்கும்.

**திரு. சா. கணேசன் :** இதேமாதிரி நான் ஏற்கனவே பட்ஜெட் டிலே பேசுகின்ற பொழுதுகூட கும்பகோணம் பகுதியிலே குறிப் பாக கடமங்குடிப் பகுதியிலே ஏராளமான ஏக்கர்கள் தண்ணீர் கிடைக்காமையினால் தரிசாகப் போய்விட்டன. அதற்குக் காரணம் அது மேட்டுப் பகுதி என்று சொல்லப்படுகிறது. அதற்கு 'டெட்'

---

a Printed as Appendix on page 223 infra.

[14th March 1966

கட்டினால் நன்றாக இருக்குமென்றும் நான் ஆலோசனை சொன்னேன். நான் இந்தத் தகவலைக் குற்றமாகச் சொல்லவில்லை. புள்ளி விவரம் சேகரிப்பதில், எங்கோ, ஏதோ, எப்படியோ தவறு இருக்கிறது என்பது தெளிவாகப் புலப்படுகிறது. ஆகவே, இதைத் திருத்தி செம்மையான புள்ளிவிவரத்தை இந்தச் சபைக்குச் சமர்ப்பிக்க அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அப்படி முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** அரசாங்கத்தினுடைய கடமை கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்களை முறையாகக் கொடுக்கக் கூடியது. அங்கத்தினர் சொல்லுகின்ற பகுதி குறுவைப் பகுதியாக இருக்கிறதா என்பதைத் தெரிந்துதான் கூற வேண்டும். தஞ்சையிலே எல்லா நிலங்களும், அங்கே இருக்கக்கூடிய 12, 13 லட்சம் ஏக்கர்களும் குறுவைச் சாகுபடி நிலங்கள் இல்லை. குறுவைச் சாகுபடி நிலங்கள் 2 அல்லது 2½ லட்சம் தான் இருக்கும். இதைத் தவிர எங்கெங்கெல்லாம் மேட்டுப் பிராந்தியமாக இருக்கிறதோ அங்கெல்லாம் குறுவைச் சாகுபடி நடப்பது இல்லை. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட பகுதி குறுவைப் பகுதி; அது தண்ணீர்ப் பற்றுக்குறையால் தரிசாகப்போய்விட்டது என்று சொன்னால் அதைப்பற்றி நான் தெரிந்து தான் சொல்ல முடியும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** விளைச்சல் நிலங்களில் தண்ணீர் இல்லாத காரணத்தால் விளையவில்லை என்று கூறி வரி வாஜா செய்ய
9-00 a.m. வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தரிசு நிலங்களைப் பொறுத்தவரையாவது முதல் கட்டமாக வரி வஜா செய்யும் உத்தரவைப் பிறப்பிக்க முன் வருவார்களா?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் அவர்கள் ரெவின்யூ இலாகா விதி முறைகளை அறிந்திருந்தால் இந்த உப கேள்வியைக் கேட்பதற்கே இடம் இருந்திருக்காது. எங்கெங்கு தரிசு நிலங்கள் இருக்கின்றன என்ற கணக்கு இலாகாவிடம் இருக்கிறது. அதற்கு என்ன நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்கம் உத்தரவிட வேண்டுமென்று அதிகாரிகள் காத்துக் கொண்டிருக்கமாட்டார்கள், அதிகாரிகளே வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்கள்.

**திரு. கோ. சி. மணி :** தஞ்சை மாவட்டத்திலே ஒரு ஏக்கருக்கு மூன்று கலத்திற்கு உட்பட்டு விளைந்த நிலங்களைப் பற்றிய கணக்கைத் தயாரித்து அனுப்ப வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா :** அரசாங்கத்திலிருந்து அது போன்ற உத்தரவு போனதாகத் தெரியவில்லை.

### *Water from Krishnarajasagar*

*277 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal before the Government to approach the Government of Mysore for release of adequate supply of water from Krishnarajasagar for relieving the present scarcity in water supply for irrigation purposes in Thanjavur Delta area; and

(b) if so, the details thereof?

The Hon. Sri V. RAMAIAH : (a) There is no proposal at present.

(b) Does not arise.

**திரு. வை. சங்கரன் :** இந்தக் கேள்வி கேட்கப்பட்டது 3, 4 மாதங்களுக்கு முன்னால். அப்போது இருந்த நிலைமை பற்றிக் கேட்கப்பட்டது. அந்த நேரத்தில் ஸ்கேர்சிடியைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

**கனம் திரு. வெ. ராமையா :** நான் சொன்ன பதிலும் அன்றைக்கு இருந்த நிலையைக் குறித்துத்தான். இன்றைக்கு அது போன்று குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. கேள்வி கேட்ட நேரத்தில் கிருஷ்ணராஜ சாகரத்தில் தண்ணீர் குறைவாக இருந்த காரணத்தால் அவர்களிடத்தில் கேட்பது லாபகரமாக இருக்காது என்று கருதப்பட்டது.

### *Drinking water scheme*

*278 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are aware of the drinking water scarcity prevailing in the towns of Coimbatore and Podanur; and

(b) if so, the steps proposed for alleviating the same?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) The Government have sanctioned the investigation for augmenting water supply to Coimbatore from 'Bhavani' river. The investigation has been completed and the outline proposals are being prepared. It is also proposed to construct an additional dam across Siruvani river with the concurrence of the Kerala Government so that more water can be drawn from the river for supply to the town.

Podanur is a part of Kurichi Panchayat. A proposal for sanctioning a water supply scheme to the Panchayat is under examination by Government.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கோவையிலும், போத்தனூரிலும் ஒரு குடம் தண்ணீர் 4 அணா, 8 அணா என்று விற்கப்படுகிறது. நீண்ட காலத் திட்டத்திற்குப் பதிலாக இதற்கு உடனடியாகப் பரிகாரம் காண அரசாங்கம் என்ன திட்டத்தை வைத்திருக்கிறது?

[14th March 1966

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** நல்லபடியாக அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்யவேண்டுமென்பதற்காகத் தான் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. உடனடியாகத் திட்டம் போட்டு அவசரமாகச் செய்வதற்கு ஒன்றும் இல்லை.

* 279 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயில்பட்டி நகரத்திற்குக் குடி நீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், குழாய் அமைக்கும் வேலை எப்பொழுது துவங்கும் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) கோவில்பட்டிக்குக் குடி நீர் வழங்கு திட்டம் ஒன்றை 27,500 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் புலனாய்வு செய்ய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

(இ) புலனாய்வு முடிந்து, திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்து அங்கீகரித்த பின்னரே நீர் வழங்கு திட்டத்தை நிறைவேற்றும் வேலையை மேற்கொள்ள முடியும்.

### சிதம்பரத்தில் புதைவடிகால் திட்டம்

* 280 **கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் டவுனுக்கான Drainage scheme தற்போது எந்த நிலையிலுள்ளது ?

(இ) அத் திட்டம், எப்பொழுது முடிக்கப்படும் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) சிதம்பரம் புதைவடிகால் திட்ட வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. சுமார் 76 சதவீதம், வடிநீர்க் குழாய்கள் பதித்து இணைக்கும் வேலை முடிவடைந்திருக்கிறது. இரு மண்டலங்களில் வடிநீர் இறைக்கும் நிலையங்கள் கட்டும் வேலையும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

(இ) இத் திட்டம் 1967-68-ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### *Court Fees*

* 281 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of Courts inspected and the number of cases examined by the Court Fee Examiners of the High Court, Madras in 1964?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Fourty-eight Courts were inspected and 23,282 cases were examined by the Court Fee Examiners of the High Court in 1964.



14th March 1966]

### *Sub-Registrar's Office*

* 282 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the places in North Arcot district in which offices of Sub-Registrars are proposed to be opened in 1965–66?

**கனம் திரு. கோ. பூவராகன் :** 1965-66-ம் ஆண்டில் துணைப் பதிவாளர் அலுவலகம் எதையும் புதிதாக ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஒன்றுமில்லை.

**திரு. எஸ். முருகையன் :** ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் ? சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால் பரிசீலனை செய்து தேவையில்லை என்று சொல்லி விடுகிறார்கள். எத்தனை கிராமங்கள் சேர்ந்திருந்தால் அல்லது எவ்வளவு ஜனத்தொகை இருந்தால் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்கப்படும் ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** ஜனத்தொகையைப் பற்றி ஒன்றும் இல்லை. போக்குவரத்து வசதி இருக்க வேண்டும். போதுமான அளவு வருமானம் வருமா என்று பார்க்க வேண்டும். அந்த இடத்தில் ஒரு உணவு விடுதி இருக்க வேண்டும் போலீஸ் நிலையம் இருக்க வேண்டும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அமைச்சர் அவர்கள் நாலைந்து நாட்களுக்கு முன்பு கூட இதே பதிலைத்தான் சொன்னார்கள். குறைந்தபட்சம் எவ்வளவு வருமானம் இருந்தால் அந்த இடத்திலே ஒரு ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்கப்படும் என்பதற்கு நான் திருப்தி அடையும் அளவுக்குப் பதில் சொல்லுவார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** ஒரு இடத்தில் பத்திரப் பதிவு அலுவலகத்தைத் திறக்க வேண்டுமென்றால் ஆண்டு ஒன்றுக்கு மூவாயிரம் பத்திரங்களாவது பதிவாக வேண்டும். குறைந்தது பத்தாயிரம் அல்லது பதினைந்தாயிரம் ரூபாய் வரை வருமானம் வருவதாக இருக்க வேண்டும்.

### *Pay of Sub-Registrars*

* 283 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal to raise the scales of pay of Sub-Registrars of the Registration Department; and

(*b*) if so, the details thereof ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) & (இ) இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சப்-ரிஜிஸ்ட்ரார்கள் செய்யும் வேலை அதிகப் பளுவானது. அந்த உத்தியோகம் பொதுவாக பலரைக் கவருவதில்லை. ஆகவே, அவர்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்துவது பற்றிப் பரிசீலனை செய்யப்படுமா ?

[14th March 1966

கனம் திரு. கோ. பூவராகன் : பரிசீலனை செய்யப்பட்டு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : அவர்களுடைய சங்கங்களிலிருந்து ஸ்கேலை அதிகரிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தனவா ? பரிசீலனை செய்யப்பட்டதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : கோரிக்கைகள் வந்தன. கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு அதிலே முடிவு எடுப்பது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

*'Son Et Lumiere' Programme*

* 284 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to extend the programme styled 'Son Et Lumiere' to the historic temples in the State for explaining the history behind those monuments vividly to tourists; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இந்திய அரசாங்கச் சுற்றுப் பயணத் துறையினரால் ஏற்படுத்தப்பட்ட இந்திய சுற்றுப்பயண கூட்டு நிறுவனம் மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயிலில் "சான்-ஏ-லூமியர்" எனப்படும் கலை நிகழ்ச்சியை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) அதற்கான ஏற்பாடுகள் இந்திய சுற்றுப் பயணக் கூட்டு நிறுவனத்தினால் வகுக்கப்பட்டு வருகின்றன.

திரு. வை. சங்கரன் : அந்தக் கலை நிகழ்ச்சியானது புதிதாகவும் முற்றிலும் விநோதமாகவும் இருப்பதால் அது என்ன மாதிரி காண்பிக்கப்படுகின்றன ? ஒலி ஒளி இரண்டும் கலந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இது பெரும்பாலும் சரித்திர, கலாசார முக்கியத்துவம் பெற்ற புராதன இடங்களைப் பற்றியதாக இருக்கும். அந்த மாதிரி இடங்களில் முன்கூட்டியே ஒலி, ஒளி அமைப்புகளுடன், முன்பு எவ்வாறு நடந்திருக்கும் என்பதை இப்போது நடப்பது போல் காட்டுகிற நிகழ்ச்சி. பேச்சும் விளக்கமும் அதற்குத் தகுந்தவாறு அமைக்கப்பட்டிருக்கும்.

*'பஸ்' நிலையம், சிதம்பரம்*

* 285 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் நகரசபை மூலம் சிதம்பரத்தில் இரண்டாவது பஸ் ஸ்டாண்டு கட்ட வேண்டுமென்று கோரி அரசாங்கத்திற்கு மனுக்கள் ஏதேனும் அண்மையில் வந்துள்ளனவா ?



14th March 1966]

(இ) ஆம் எனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சீ. சிவசுப்பிரமணியன் : சிதம்பரத்தில் ஜனநெருக்கம் அதிகமாக இருப்பதாலும், வளர்ந்து வரும் நிலையில் இருப்பதாலும் அங்கு இரண்டாவது பஸ் ஸ்டாண்டை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்த மாதிரி இன்னொரு பஸ் ஸ்டாண்டு வேண்டுமென்பதற்காக ஒரு கவுன்சிலர் தீர்மானம் கொண்டுவந்து அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. சிதம்பரம் டவுனில் அநேகமாகக் காலி இடம் கிடைப்பதில்லை. பெரும்பாலும் கோயிலுக்குச் சொந்தமான இடங்களாகத்தான் இருக்கின்றன. புறம்போக்கு நிலம் அநேகமாகக் கிடையாது என்று சொல்லலாம். அங்கு இருக்கிற லாரி ஸ்டாண்டு ஒன்றில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான சாமான்களைப் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்தக் காலி இடம் இந்த பஸ் ஸ்டாண்டுக்காகக் கிடைக்கும் நிலைமை ஏற்பட்டால் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : அமைச்சர் அவர்கள் சிதம்பரத்திற்கு வந்திருந்தபோது கொடுத்த வரவேற்பில், சென்ற ஆண்டு கொடுத்ததில் குறிப்பிட்டிருக்கிறார்கள் இது பற்றி. நேற்றுக் கூட போய் வந்தார்கள். இதற்கான திட்டம் விரைவுபடுத்தப்படும் என்று உறுதிமொழி அளிக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சம்பந்தப்பட்ட சாமான்கள் அந்த இடத்திலிருந்து காலி செய்யப்பட வேண்டும். புதை வடிகால் திட்டம் 1967-68-ல் முடிவடையும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பின்னால்தான் இதைக் கவனிக்க முடியும்.

*Panchayat Elections*

* 286 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether Police bandobust was arranged for holding panchayat elections of Moongilpadi Panchayat at Senai Goundanur village (Omalur Block, Salem district);

(*b*) whether complaints from the elected members that they were obstructed from attending the meeting by show of force, by a rival group was received by the Police; and

(*c*) whether any case has been registered in this connection?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை

[14th March 1966

பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலின்போது சச்சரவுகள் ஏற்படும் என்று எதிர்பார்த்த இடங்களில் போலீஸ் பந்தோபஸ்து ஏற்பாடு செய்யப்பட்டது. மூங்கில்பாடி பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலை நடத்த நியமிக்கப்பட்ட தேர்தல் சாவடித் தலைமை அதிகாரி போலீஸ் பந்தோபஸ்து தேவை எனக் கேட்கவில்லை. எனினும், சட்டத்தையும் ஒழுங்கையும நிலைநிறுத்துவதற்காக போலீஸ் ரோந்துப் படையினர் 17—4—1965 தேதியன்று காலை 11-30 மணியளவில் டி பஞ்சாயத்துக்குச் சென்று தேர்தல் அமைதியாக நடந்ததெனத் தெரிந்துகொண்டனர்.

(இ) ஆம்.

(உ) வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. புலன் விசாரணை செய்த பின்னர், இவ்வழக்கு நீதிமன்ற வரம்புக்குட்பட்ட வழக்கு அல்லவென்று போலீஸ் தெரிவித்துள்ளது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இம்மாதிரி வழக்குகள் தமிழகத்தில் பஞ்சாயத்துக்களில் நிறைய நடைபெறுகின்றன. ஆனால், போலீசார் இந்த வழக்கைப போடாமல், இது வழக்கு போடுவதற்குத் தகுதியில்லை என்று தள்ளி விட்டார்கள் என்று சொன்னார்கள். பப்ளிக் ப்ராசிக்யூட்டரின் ஆலோசனை கேட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களுக்கு ஆலோசனை தேவை என்றிருந்தால் கலந்திருப்பார்கள், இல்லை என்றால் கலந்திருக்கமாட்டார்கள். விவரமான தகவல் இல்லை.

**திரு. மு. கருணாநிதி :** புகார் மீது தொடரப்பட்ட வழக்குத் தனிப்பட்ட முறையில் தொடரப்பட்டதா? இல்லை, அதிகாரிகள் மூலம் தொடரப்பட்டதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தனிப்பட்ட முறையில்தான்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—CALLING ATTENTION TO ADVERSE SEASONAL CONDITIONS AND RELIEF MEASURES.

MR. SPEAKER : Eleven hon. Members have given notices under Rule 41 calling attention of the Hon. Minister for Food to the adverse seasonal conditions prevailing in their respective districts.

Hon. Members Sri K. S. Mani, Sri S. Ramasamy, Pulavar K. Govindan and Sri A. Perumal may now call the attention of the Hon. Minister for Food to the matter raised in their respective notices.

**திரு. கோ. சி. மணி :** கனம் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சென்ற பசலியில் பருவ மழை இல்லாத காரணத்தினால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதன் விளைவாக பாதிக்கப்



14th March 1966] [திரு. கோ. சி. மணி]

பட்ட தரிசு நிலங்களுக்கும் பெரு மழை காரணமாகப் பயிர்கள் நாசமாகியுள்ள நிலங்களுக்கும் வரி வஜா செய்து கொடுக்க வேண்டுமென்ற நிலையை நான் கனம் உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**திரு. சா. ராமசாமி :** கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பருவ மழை தவறியதின் காரணமாகத் திருச்சி மாவட்டத்தில் புள்ளம்பாடி வாய்க்கால் திட்டப் பாசனப் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், கரும்பு முதலிய பயிர்கள் தண்ணீரில்லாமல் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை கனம் உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** கனம் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்ட ஏரிகள்—அதிலும் குறிப்பாக செய்யாறு மாவட்ட வெண்பாக்கம், பெருங்கட்டூர், தூசி பிர்க்கா ஏரிகள், இவ்வாண்டு பாலாற்றில் வெள்ளம் இல்லாமையாலும், மழை இன்மையாலும், தண்ணீர் பெறத் தவறியதால் அவ்வேரியின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்கள், ஒரு பகுதி உழப்படாமையாலும், ஒரு பகுதி விதைத்த பயிர்கள் தண்ணீர் தட்டுப்பாட்டால் கருகியும், பயன் அளிக்காது போய் விட்டமையால் அப்பகுதிகளில் வரிக்கழிவு தரப்பட வேண்டிய பொது முக்கியத்துவம் வாய்ந்த செய்தியைக் கனம் உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ஏ. பெருமாள் :** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை, திருச்சுழி, காரியப்பட்டி ஆகிய தாலுக்காக்களில் நிலவியுள்ள பஞ்சத்தின் காரணமாக விவசாயிகளுக்கு வரி வஜா செய்யவும், விவசாயக் கடன்களை வசூலிப்பதை ஒத்திவைக்கவும், தானியங்கள் கொள்முதல் செய்வதில் விவசாயிகளைப் போலீசார் துன்புறுத்துவது பற்றியும் என்பதை கனம் உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, as you have just now pointed out; a number of hon. Members from various districts have made requests for a statement to be made about the seasonal conditions prevailing in their districts and I request your permission to make a comprehensive statement covering all these districts.

Sir, there is no widespread calamity in any district but in some districts the crop position has not been very satisfactory due to poor rainfall. A gist of the seasonal conditions prevailing in the districts is given below :—

(1) *Chingleput district.*—The conditions in the district are quite fair. The crops in Tiruttani taluk about which some fears were entertained have rallied round. There is at present no proposal for the grant of remission in this district. However, the Collector of Chingleput has been asked to send a report about the seasonal conditions in Tiruttani and Pallipet taluks. His report is awaited.

[Sri V. Ramaiah] [14th March 1966

(2) *South Arcot district.*—The places affected by the heavy rains from 3rd December 1965 to 10th December 1965 were Cuddalore, Chidambaram and Kallakurichi taluks. The other taluks were not affected. The Musukundanadi was in spate and it caused serious breaches in the irrigation tank, Rajasundaram Eri in Kallakurichi. Consequently, slight damages to the standing crops were caused and about 88 houses near the tank were damaged. Cash grants to the affected persons were promptly paid. The rains also caused minor breaches to irrigation tanks and channels. Repairs of major breaches are under execution now. Damages to standing crops were negligible. The rains saved the standing crops to a very great extent and were really beneficial on the whole. The Collector has reported that the standing crops were not affected by drought or floods.

(3) *Thanjavur district.*—There was incessant rainfall during the period from 24th November 1965 to 7th December 1965 in the district. Thiruthuraipoondi and Nagapattinam taluks were the most affected areas Arantangi taluk was affected badly due to breaches in tanks and jungle streams. The rains, though a little heavy and continuous, had saved the crops which were facing a crisis. Breaches occurred in 14 places in rivers and channels and they have been closed. A sum of Rs. 1,10,000 was sanctioned towards payment of cash grants to the victims of floods. As regards the condition of crops, the Commissioner of Land Revenue and Land Reforms inspected the areas affected by drought and made certain recommendations. Based on the recommendations of the Commissioner, instructions have been issued to let more water to save the standing crops. It has also been ordered that normal seasonal remission under Board's Standing Orders may be granted to cover any loss sustained by the ryots on account of crop failure and that remission of water rate may be granted, as a special case, in the Tirvai Jasthi areas where on account of crop failure in the thaladi season due to insufficient supplies, dry crops requiring occasional irrigation like groundnut and gingelly have been raised.

(4) *Ramanathapuram district.*—In Srivilliputhur taluk and Rajapalayam sub-taluk, rains were not adequate and the seasonal conditions were not favourable. About 9,450 acres of wet lands were affected in the above taluks. The Commissioner of Land Revenue has inspected the above taluks and recommended the following relief measures :—

(i) grant of remission under B.S.O. for wet lands;

(ii) postponement of loan collection;

(iii) postponement of co-operative loans;

(iv) grant for deepening drinking water wells;

(v) loans for deepening irrigation wells;

(vi) allotment for taking up road and irrigation works for providing employment to agricultural labourers affected by the adverse seasonal conditions.



14th March 1966] [Sri V. Ramaiah]

The matter is under consideration.

(5) *Dharmapuri district.*—The whole of Hosur and parts of Krishnagiri taluks were affected by adverse seasonal conditions due to the failure of South-West Monsoon. The Government have sanctioned the following relief measures :—

(i) A sum of Rs. 5 lakhs has been sanctioned for taking up minor irrigation works and road works with a view to providing employment to agricultural labourers.

(ii) The Collector of Dharmapuri has been permitted to grant remission for wet lands under provisions of B.S.O.

(iii) The collection of Land Revenue and Loan arrears has been postponed to fasli 1376.

(iv) The Collector has been permitted to grant takkavi loans for fodder to the ryots of Hosur taluk and Veppannappalli block in Krishnagiri taluk although the areas are covered by full Finance Scheme.

(v) A special allotment of Rs. 1 lakh has been sanctioned to provide drinking water in Harijan colonies.

(6) *Tiruchirappalli district.*—The Collector reported that 48 tanks in Pudukottai and 25 tanks in Ariyalur had breached. They were closed immediately. The condition of standing crops is fair. No report has been received from the Collector about the prevalence of adverse seasonal conditions.

(7) *Tirunelveli district.*—The taluks of Koilpatti, Sankarankoil Nanguneri and Tiruchendur were affected by adverse seasonal conditions due to failure of monsoon in the earliest part of the corrent fasli. The Government had ordered the following relief measures :—

(i) Seasonal remission of land revenue and postponement of loan collections.

(ii) The total allotment sanctioned for relief works under all items was Rs. 25 lakhs.

One thousand two hundred and twenty-four relief works were taken up for execution and 867 works have been completed. The total expenditure incurred up to 15th February 1966 is Rs. 22 lakhs roundly.

The Commissioner of Land Revenue and Land Reforms has recently inspected. Tenkasi and Sankarankoil taluks, Kadayam and Pappalkudi firkas in Ambasamudram taluk and Gangaikondan and Mudavakurichi firkas in Tirunelveli taluk and has recommended full wet remission, postponement of loan collections allotment of funds for repairing Minor Irrigation Works, taking up road works, etc. The proposals are under the consideration of Government.

(8) *Kanyakumari district.*—The district experienced squally weather from the last week of November 1965 till the middle of December. Acute scarcity conditions prevailed among

the fishermen particularly among those who were living in the coastal villages. The Government ordered in December 1965 that two measures of rice and 50 Paise worth of tapioca per family be supplied free of cost and that the relief be restricted to two weeks

In respect of the districts of North Arcot, Madurai, Coimbatore, Salem and the Nilgiris, the Collectors are taking action, wherever necessary, to give seasonal remissions under B.S.O. 13. Thus, the Government have taken all possible steps to alleviate the distress caused to the ryots by drought conditions wherever necessary.

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—(*cont.*)

(1) DEMAND NO. XVI—AGRICULTURE.

(2) DEMAND NO. XVIII—ANIMAL HUSBANDRY.

(3) DEMAND NO. XXXIX—CAPITAL OUTLAY ON AGRICULTURE.

(4) DEMAND NO. XLVII—CAPITAL OUTLAY ON SCHEMES OF GOVERNMENT TRADING.

THE HON. SRI P. KAKKAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 10,65,19,500 under Demand No. XVI—Agriculture."

*திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, ஏழை மக்கள் பாரம்பரையாய்ப் பயிர் செய்து வந்த நிலங்களை எல்லாம் வேலியிட்டடைத்து அவற்றைக் காடு எனக் கூறும் கொடுமையை நிவர்த்திக்க வழி காண்பது பற்றி விவாதிக்க என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கின்றேன்.*

"That the allotment of Rs. 10,65,19,500 under Demand No. XVI—Agriculture be reduced by Rs. 100."

*திரு. சோ. ஆறுமுகம்: கனம் தலைவர் அவர்களே, விவசாயம் செய்யத் தேவைப்படும் கருவிகள், உரம் குறைந்த விலையிலும் உடனுக்கு உடன் கிடைக்கவும் செய்யவேண்டுமென்ற அவசியத்தை பற்றி விவாதிக்க என் பெயரில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கின்றேன்.*

"That the allotment of Rs. 10,65,19,500 under Demand No. XVI—Agriculture be reduced by Rs. 100."

THE HON. SRI P. KAKKAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,34,49,700 under Demand No. XVIII—Animal Husbandry."

*திரு. சா. கணேசன்: விவசாயிகளின் கன்றுகாலிகளின் தரம் உயரவும் அவற்றுக்கு மேய்ச்சல் பூமி கிடைக்கவும் செய்வதன் அவசியத்தை வற்புறுத்த என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கின்றேன்.*



"That the allotment of Rs. 3,34,49,700 under Demand No. XVIII—Animal Husbandry be reduced by Rs. 100."

*திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, இவைபற்றிய வேலைத் திட்டங்களை விவாதிப்பதற்காக நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை முன் மொழிகின்றேன்.*

"That the allotment of Rs. 3,34,49,700 under Demand No. XVIII—Animal Husbandry be reduced by Rs. 100."

THE HON. SRI P. KAKKAN: Sir, on the recommendation of the Governor, I move:—

"That the Government be granted a sum not exceeding Rs. 39,93,100 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture."

THE HON. SRI P. KAKKAN: Sir, on the recommendation of the Governor, I move:—

"That the Government be granted a sum not exceeding Rs. 74,36,98,300 under Demand XLVII—Capital Outlay on Schemes of Government Trading."

*திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்க வாணிக முறையில் பலாபலன்களைக் கணித்தறிவிக்க உத்தியோகப் பற்றற்ற நிபுணர் குழுவின் தேவையை வற்புறுத்த என்னும் என்னுடைய வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கின்றேன்.*

"That the allotment of Rs. 74,36,98,300 under Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading be reduced by Rs. 100."

*திரு. நா. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, உணவு தானியம், உரம் கொள்முதல் விநியோகம் ஆகியவற்றில் காணப்படும் ஊழல்களைக் களைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் என்னுடைய வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.*

"That the allotment of Rs. 74,36,98,300 under Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demands and cut-motions are before the House for discussion.

*கனம் திரு. பூ. கக்கன்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய நாடு விடுதலை அடைவதற்கு முன்பாக, நாட்டிலுள்ள விவசாய மக்கள் எந்த நிலைமையில் இருந்தார்கள். குறிப்பாக அவர்களுடைய அந்தஸ்து, குழந்தைகளுடைய படிப்பு, அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எவ்வாறு இருந்தது என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். நாம் சுதந்திரம் பெற்ற பிறகு திட்டமிட்டு, இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு உணவு கொடுத்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் திட்டமிட வேண்டும் என்று நம்முடைய நாட்டினுடைய சுதந்திரத்திற்காக*

[திரு. பூ. கக்கன்] [14th March 1966

பாடுபட்ட மாபெரும் தலைவர்கள் பல திட்டங்களைப் போட்டார்கள். திட்டம் மிகவும் சிறப்பாகவும், செம்மையாகவும் நடைபெற்று வந்தது, மேலும் நடைபெற்று வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக மிகவும் பாடுபட்டார்கள். குறிப்பாக, நமது மாநிலத்தைப் பொறுத்த மட்டும் பெரிய நீர்ப் பாசனத் திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும், உணவுக்காக அந்நிய நாட்டை எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நாமே நமது உணவு உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில், கோடானுகோடி ரூபாய்களைச் செலவு செய்து கொண்டு வந்திருக்கிறோம். சொல்லப் போனால், இப்போது பெரும் அணைக்கட்டுகள் எல்லாம் முடிந்துவிட்டன. மத்திய தர அணைக்கட்டுகள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், உணவு உற்பத்திப் பெருக்க திட்டங்களின் எடுக்கப்பட்டிருக்கும் நீர்ப் பாசனத் திட்டங்கள் இவைகளைத்தான் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. விவசாயிகள் நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

என்று தமிழ் மறையிலே வள்ளுவர் சிறந்த கருத்தினைத் தந்திருக்கிறார். அதை மனத்திலே கொண்டு, விவசாய மக்கள் நமக்காகப் பாடுபடுகிறவர்களுக்கு அரசாங்கம் மூலமாக எவ்வளவு உதவிகளைச் செய்ய வேண்டுமோ அவைகளை யெல்லாம் எப்போதும் இந்த அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது. முதன் முதலாகக் விவசாயிகளுடைய குழந்தைகள் நன்கு படித்து உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமென்று அரசாங்கம் உதவிகளைச் செய்து வருகிறது. பட்டணங்களில் இருக்கிறவர்கள், பணக்காரர்கள் மட்டும்
9-30 a.m. படிப்பது என்று இல்லாமல் விவசாயிகளின் குழந்தைகளும் நன்கு படித்து உயந்த நிலைக்கு வரவேண்டுமென்று, அவர்களுக்கு எவ்வளவு ஒத்தாசை செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து வருகிறது. விவசாயிகள் என்று சொல்லும்போது நிலம் உடைய விவசாயிகளை மட்டும் நான் சொல்லவில்லை. பாட்டாளித் தொழிலாளிகள், உழவடை செய்கிறவர்களையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். விவசாயிகள் எப்படிப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது நாட்டின் வருமானத்தை எண்ணிப் பார்த்தாலேயே தெரியும். நாட்டின் தேசிய வருமானத்தைப் பார்த்தால் 50 சதவீதத்திற்கு மேல் விவசாயத்திலிருந்துதான் வருகிறது அவர்கள் எவ்வளவு தூரம் மேலும் உற்சாகத்தோடு உணவு உற்பத்தி செய்ய முன்வர வேண்டுமோ, அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் அரசாங்கம் செய்து வருகிறது.

குறிப்பாக விவசாயிகளுக்கு வேண்டிய உரம் அல்லது இதர விதைகள்--பொறுக்கு விதைகள்—கொடுக்க, அதோடு மட்டுமல்ல, கருவிகள் என்னென்ன முறையில் வாங்கிக் கொடுக்க முடியுமோ, மாடுகள் வாங்க எந்த அளவுக்குக் கடன் கொடுக்க முடியுமோ, கிணறு வெட்ட முன் வந்தால் அதற்கு எந்த அளவுக்குக் கடன் கொடுக்க முடியுமோ அந்த முறைகளிலெல்லாம் அவர்களுக்கு



14th March 1966] [திரு. பூ. கக்கன்].

அரசாங்கம் உதவி வருகிறது. அது மட்டுமல்ல. கண்மாய்கள் மேடிட்டிருந்தால் எல்லாக் கண்மாய்களையும் ஒரே வருஷத்தில் எடுத்துக்கொள்ளா விட்டாலும், கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து, மேடிட்ட பகுதிகளையெல்லாம் சீராக்கி, ஆழப்படுத்தி, தண்ணீர் தேங்கும்படி செய்து விவசாய மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று செய்து வருகிறோம். இந்த அரசாங்கமே விவசாயிகள் அரசாங்கம் என்று சொன்னால் அது மிகையாகாது, இங்குள்ள கனம் அங்கத்தினர்களை எடுத்துக்கொண்டாலும், மந்திரிகளை எடுத்துக் கொண்டாலும் அது எந்த அளவுக்கு உண்மை என்பது தெரியும். அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து, அவர்களுக்குப் பல வகைகளில் உதவி செய்யவேண்டுமென்று விசேஷமாக மக்கள் தலைவர் காமராஜ் இருக்கும்போது, பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தி அமைத்து, பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டு, முக்கியமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தான் அந்த முறையில் யூனியன்கள் அமைக்கப்பட்டன என்று சொன்னால் அது மிகையாகாது. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் விவசாயக் குடும்பங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று, விவசாய மக்களின் குழந்தைகள் நல்ல முறையில் படிக்க வேண்டுமென்று ஏற்பாடுகளையெல்லாம் செய்து, விவசாயத்தைப் பெருக்க உரம் கொடுத்து, கடன் கொடுத்து, கூட்டுறவு வாயிலாக எல்லாவற்றையும் செய்துவருகிறார்கள் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். இருந்தாலும் உரத்தை பொருத்த வரையில் போதுமான அளவு நாம் பெற முடியவில்லை. நாட்டிலே முன்பு துணிப்பஞ்சம் இருந்தது கனம் அங்கத்தினர்களுக்கெல்லாம் தெரியும். துணி இல்லாமல் காடா துணிக்குக் காத்திருந்தது உண்டு. இப்போது அந்த நிலைமை இல்லை. இப்போது எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். எந்தவிதமான துணியானாலும், எவ்வளவு வேண்டுமானாலும், பகட்டான துணிகளை, பல வருஷங்கள் பயன் படும் துணிகளை வாங்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது என்றால், திட்டமிட்டு துணி உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு செய்யப்பட்டால்தான். அதே மாதிரி உரம் கொடுக்கத் திட்டமிட்டு வேலை செய்து வருகிறோம். குறிப்பாக, மத்திய சர்க்கார், அந்நிய உதவியைக் கொண்டு டிராம்பே, விசாகப் பட்டணம் போன்ற இடங்களில் பெரிய பெரிய ஆலைகளை வைத்து உரம் அதிகமாகப் பெருக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஏற்கனவே சிந்திரி உரச்சாலை ஏற்படுத்தி, அதன் மூலமாக உரம் கொடுத்து வருவதையும் பார்க்கிறோம். அதோடு அந்நிய நாடுகளிலிருந்தும் உரம் வாங்கவேண்டியிருக்கிறது. ஆனால் அந்நிய நாடுகளிலிருந்து உரம் வாங்குவதற்கு அந்நிய நாட்டுச் செலாவணி வேண்டியிருக்கிறது. நம் நாட்டிலே அதிக அளவுக்கு உற்பத்தி செய்வதன் மூலமாக, அதைக் கொண்டு உரம் பெறுவதற்கும் பார்க்கிறோம். உரக் கஷ்டம் பாரத நாட்டிலே எப்போதும். இருக்காது. இந்தக் கஷ்டத்தைப் போக்க நம் திட்டங்கள் பெரிதும் பயன்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உரம் வாங்க, உரச்சாலை வைக்கக் கடன் வாங்கினால் ஒரு சில அன்பர்கள் சொல்லுகிறார்கள், 'கடன்பட்ட சர்க்கார்' என்று. கடன் சுமையை வரும் காலச் சந்ததிகளின் தலையில் வைக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இது முற்றிலும் தவறான வாதம், நல்ல வாதம் அல்ல. எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் அமெரிக்க நாட்டை எடுத்துக் கொண்டாலும், ரஷ்ய நாட்டை எடுத்துக் கொண்டாலும் அவர்களெல்லாம் கூடக் கடன் வாங்கவில்லையா ? ஆகவே நம் நாட்டிலே அந்நிய நாட்டு உதவி பெற்று நல்ல முறையில் செய்கிறோம். பெறக் கூடிய கடன்களைத் திருப்பிக் கொடுத்து விடுவோம். இன்றைக்கு கிணறு வெட்ட ஒருவர் கடன் வாங்குகிறார். கிணறு வெட்டப்பட்டதன் காரணமாக உற்பத்தி பெருகி, வசதி ஏற்பட்டு வாங்கிய கடனைத் திருப்பித் தந்து விடுகிறார். ஆகவே, 'கடன்பட்ட சர்க்கார்', 'வருங்கால சுதந்திகள் தலையில் வைப்பது' என்றெல்லாம் சொல்லுவது நல்லதல்ல என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம் மாநிலத்தைப் பொறுத்த மட்டிலும் அரசாங்கம் விவசாயிகளுக்காக வருஷா வருஷம் செலவு செய்து வருவதை எண்ணிப் பார்த்தாலேயே தெரியும். குறிப்பாக 1956-57-ல் ரூ. 2.1 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1957-58-ல் ரூ. 2.4 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1958-59-ல் ரூ. 2.8 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1959-60-ல் ரூ. 3.0 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1960-61-ல் ரூ. 3.3 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1961-62-ல் ரூ. 4.4. கோடி செலவு செய்திருக்கிறோம்; 1962-63-ல் ரூ. 5.6 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1963-64-ல் ரூ. 6.3 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1964-65-ல் ரூ. 7.1 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1965-66-ல் ரூ. 8.7 கோடி செலவு செய்திருக்கிறோம். இப்போது 1966-67-ல் ரூ. 10.7 கோடி செலவு செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் ஆவதைப் பார்த்தாலேயே தெரியும். அந்த முறையில் ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்துகொண்டு விவசாய மக்களுக்காக, அவர்களுடைய நன்மைக்காகத் திட்டமிட்டு வேலை செய்து வருகிறோம்.

விவசாயத்திற்கு மேலும் உரம் முதலியவை கொடுத்தாலும், அதோடு முக்கியமானது கால்நடைகள். ஆட்டுக் கிடைகள், மாட்டுக் கிடைகள் போடுவது, மாட்டுச் சாணம், கிராமங்களில் கழிவுப் பொருள்களைக் கொண்டு உரம் தயாரிப்பது எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கால்நடை சிறந்த செல்வம். கால்நடை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. விசேஷமாகச் சொல்லவேண்டுமானால் 1961-62-ல் ரூ. 1.5 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1962-63-ல் ரூ. 1.7 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1963-64-ல் ரூ. 1.9 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1964-65-ல் ரூ. 2.2 கோடி செலவு செய்திருக்கிறோம்; 1965-66-ல் ரூ. 3.5 கோடி செலவு செய்திருக்கிறோம். இப்போது 1966-67-ல் ரூ. 3.3 கோடி செலவு செய்யத் திட்டமிட்டு வேலை செய்து வருகிறது. கால்நடைகளை அபிவிருத்தி செய்ய இந்த அரசாங்கம் மேலும் மேலும் பாடுபட்டு வருகிறது. விசேஷமாக, உழைக்கும்





வர்க்கத்தையும், பால் கொடுக்கும் வர்க்கத்தையும், மாமிசத்திற்கு வேண்டிய ஆடு, கோழிகளையும், உரோமம் கொடுக்கும் வர்க்கத்தையும் பெருக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வேலை செய்து வருகிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாய இலாகா செய்யக்கூடிய உதவிகளைப் பார்க்கும்போது, இந்த இலாகாவின் அதிகாரிகள் அதிக அக்கறை எடுத்துப் பாடுபடுகிறார்கள். அதிகாரிகள் அக்கறை எடுத்தாலும், விவசாய மக்களும் ஒத்துழைத்து உற்பத்தி பெருகப் பாடுபட்டு வருகிறார்கள். டார்கெட் போடும்போது டார்கெட்டுகள் நிறைவேறவில்லை என்று சொல்லலாம். அதற்குக் காரணத்தை முன்னமேயே நான் சொல்லி விடுகிறேன். பருவ மழைக் கோளாறுகளும், போதிய உரம் கிடைக்காததும்தான் திட்டமிட்டபடி உற்பத்தி பெருகாததற்குக் காரணம், இருந்தாலும் இவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆகவே இந்த மான்யங்களை நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. அ. பெ. தர்மலிங்கம் : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்புக்குரிய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள், தம்முடைய முன்னுரையை இங்கே நிகழ்த்துகிற போது, மக்கள் தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலேதான் விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டு, பஞ்சாயத்துக்களிடம் விவசாயத் துறை ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்த விவசாயத் துறை மட்டுமல்ல விவசாயிகளைப் பற்றிக் காலம் தோன்றியது முதல் பேசாதவர்கள் யாருமே கிடையாது.

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்

என்று அமைச்சர் அவர்கள் வள்ளுவரைக் காரணம் காட்டினார்கள். "ஓதுவான் எல்லாம் உழவன் தலை கடைக்கே" என்ற பழமொழி தெரியும் என்று நினைக்கிறேன். இவ்வளவு காலமாக, வள்ளுவர் காலத்திலிருந்து காமராஜ் காலம் வரையில் விவசாயிகள் நிலைமை முன்னேறி இருக்கிறதா என்று பார்க்கும்போது, இல்லை என்றுதான் சொல்லமுடியும். அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரம் காட்டினார்களே தவிர, ஏற்பட்டிருக்கிற பலனைப் பார்க்கும்போது வேதனையாகத்தானிருக்கிறது. அந்தக் காலத்திலே சட்டை போடாத குழந்தை இந்தக் காலத்திலே பளபளப்பான சட்டை போடுகிறது என்று சொன்னார்கள். அந்தக் காலத்துப் பட்டினிச் சாவுக்கும், இந்தக் காலத்துப் பட்டினிச் சாவுக்கும் அமைச்சர் அவர்கள் முன்னுரையில் விளக்கம் தரவில்லை என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்களுடைய முடிவுரையில் அதற்கு விளக்கம் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். விவசாயத் துறையைப் பொறுத்த வரையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்பை பார்க்கிறபொழுது விவசாயிகள்

எந்த அளவுக்குத் தங்களுடைய கோரிக்கைகளைப் பெறுவதற்கு தட்டிக் கழிக்கப் படுகிறார்கள் என்பது நன்கு புலனாகும். விவசாயத் துறைக்கு அமைச்சராக இருக்கிற மதிப்பிற்குரிய நம்முடைய அமைச்சர் அவர்கள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் விவசாயிகளுடைய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்தவர் என்பதை நான் நன்றாக அறிவேன். அவர்களிடத்திலே விவசாயப் பொறுப்போடு மற்ற விவசாயம் சம்பந்தமான எல்லாத் துறைகளும் அடங்கியிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயம் இல்லை. விவசாயத் துறைக்கு ஒரு அமைச்சர், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற உணவுப் பொருள்களை வைத்து பாதுகாப்பதற்கு ஒரு தனி அமைச்சர், விவசாய வருமானத்தை வசூல் செய்வதற்கு வேறு ஒரு அமைச்சர். விவசாயம் செய்வதற்குத் தான் விவசாயிகளுக்கு உரிமை, அதனுடைய பலா பலனை அனுபவிப்பதற்கு விவசாயிகளுக்கு உரிமை இல்லை என்பதைப் போல, விவசாயத் துறை அமைச்சர் பாடுபட்டு சம்பாதிக்கும் அத்தனை நல்ல பொருள்களையும் அவர் வேறு ஒரு அமைச்சரிடம் ஒப்படைத்துவிட வேண்டியிருக்கிறது. மழை பெய்யவில்லை அல்லது விளைச்சல் இல்லை என்ற காரணத்தினால், 'ஐயா நிலவரி வசூல் செய்ய வேண்டும்' என்று சொன்னால், நமது விவசாயத் துறை அமைச்சரைக் கேட்டால், நான் என்ன செய்வது? வருவாய்த் துறை அமைச்சர் தனியாக இருக்கிறார்கள், அவரைக் கேளுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அதே போலத் தான் உணவு உற்பத்தியில் பல ஊழல்கள் இருக்கின்றன, உணவுக் கொள்முதல் திட்டத்திலே பல கோளாறுகள் இருக்கின்றன. எனவே விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று விவசாயத் துறை அமைச்சரிடம் சொன்னால், அதற்குத் தனி அமைச்சர் இருக்கிறார் என்று தான் அவர் சொல்ல முடியும். விவசாயி தன்னுடைய நிலத்தில் பாடுபட்டு, உழுது பயிரிட்டு, பலன் அடைகின்ற நேரத்தில் தன்னுடைய விளைபொருள்களை எப்படி ஒரு உழவன் பெற முடியாத நிலையில் இருக்கிறானோ, அதே போலத் தான் அமைச்சரும் தனக்கு இருக்கிற பொறுப்பினுடைய பலாபலனை அவரால் அனுபவிக்க முடியவில்லை. அது தனி அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவரிடமே எல்லாப் பொறுப்பும் இருந்தால் அவரைக் கேட்டால் பல விளக்கங்களை மூன்று பிரிவுக்கும் சேர்த்துச் சொல்லக்கூடும். விவசாயத் துறையில் அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் உள்ளதைப் பற்றிச் சொன்னார் விவசாயத் துறை அமைச்சர். 1956-57-லிருந்து 1966-67 வரையிலே உள்ள புள்ளி விவரங்களைக் காட்டி இப்பொழுது ரூ. 10.7 கோடிக்குத் திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். நான் திட்டத்தைப் பற்றிக் குறை சொல்லுகிறேன் என்று தயவு செய்து கருதக் கூடாது. திட்டத்தினுடைய பலாபலன்கள் பாடுபடுகிற மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற காரணத்தினால்தான் சொல்லுகிறேன்.

"நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்குமாங்கே பொசியுமாம்."

என்பதைப்போல உழவர்களுக்காக நிறைவேற்றப்படுகிற திட்டத்தின் பலன் விவசாயிகளுக்குப் பயன்படாமல், 'புல்லுக்குமாங்கே





பொசியுமாம்' என்பதைப்போல எங்கேயோ போய்ச் சேருகிறது என்ற குற்றச்சாட்டை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். விவசாய அமைச்சர் உழவர் என்ற காரணத்தினால் அவருக்குத் தெரியும், வயலிலே நன்றாக நீரைக் கட்டி வைத்துவிட்டு வந்தாலும், நல்ல முறையில் வரப்பை எல்லாம் வைத்துத் தண்ணீரைக் கட்டிவிட்டு வந்தாலும், எங்கேயாவது மோட்டைப் பொத்துவிட்டால், அந்தத் தண்ணீர் தன்னுடைய வயலுக்குப் பயன்படாது என்பதைப் போல விவசாயத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் விவசாயிகளின் நன்மைக்கு நிச்சயம் போய்ச் சேரவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கம் கொண்டிருக்கிற கொள்கைக்கூட அதற்குக் காரணமாக இருக்குமோ என்பதையும் நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும், உழவர்களுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையே போய் விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். இதைப்பற்றி எடுத்துச் சொன்னால், 'நாங்கள் என்ன செய்ய முடியும், பல சட்டங்கள் இருக்கின்றன' என்று கூறப்படுகிறது. விவசாயத் துறையில் உண்மையில் அரசாங்கம் சரியான கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் எத்தனை ஏக்கர் நிலங்கள் மிராசுதார்களிடமிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது என்ற கேள்விக்குப் பதில் அளிக்கும் நேரத்தில் வருவாய்த் துறை அமைச்சர் முன்பு 2473 ஏக்கர் நிலங்கள் என்று குறிப்பிட்டார். சமீபத்தில் 4744 ஏக்கர் என்று சொன்னார். தமிழ் நாட்டில் உச்ச வரம்புச் சட்டத்திற்குப் பிறகு மிராசுதார்களிடமிருந்து எடுக்கப்பட்ட நிலம் 4744 ஏக்கர் தான் என்றால், இதுவரையிலே அவர்களிடம் இருந்த நிலங்கள் என்ன ஆயிற்று? வராகாவதாரத்தில் வருவதுபோல் யாராவது இருக்கும் நிலத்தைப் பாயாகச் சுருட்டி கடலுக்குள் ஒளித்து விட்டார்களா? யாராவது அம்மாதிரி அவதாரிகள் இருக்கின்றார்களோ என்னவோ தெரியாது. உண்மையில் சட்டம் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

அதைப்போல, நிலங்களைப் பல ஆண்டுகளாக நல்ல முறையில் உழுது செப்பனிட்டு, பயிர் செய்து வரும் விவசாயிகளுக்குப் பட்டா வழங்கப்படாத காரணத்தினால், அவர்கள் திடீரென்று நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு உடனடியாகப் பட்டா செய்து கொடுப்பதற்குச் சர்க்கார் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். தேர்தல் காலத்தில்தான் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. தேர்தல் வருகிற நேரத்தில் ஏதாவது ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை விவசாயிகள் முன்னிலையில் வைத்து, அது தான் விவசாயிகளுக்குக் கற்பவிருக்ஷம், காமதேனு, அப்படியே நிலங்கள் அத்தனையும் உழவர்களுக்குச் சொந்தமாகிவிடும் என்று சொல்லி விவசாயிகளைத் திருப்திப்படுத்தப் பார்க்கிறார்கள். 1957-லிருந்து 1965 வரையில் நிறைவேற்றப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டங்களைப் பார்த்தால் உண்மையில் இப்படிப்பட்ட புரட்சிகரமான மாறுதல் தமிழ் நாட்டில் இருக்கிறதா என்று எல்லோரும் எண்ணிப் பார்க்கக் கூடிய அளவுக்கு இருக்கிறது. முச்சலிக்கா சட்டம், கையேறு

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [14th March 1966

மாட்டேறு வாரச் சட்டம் ஃபோர் ரெண்டு ஆக்ட், நிலத்திலிருந்து உழவர்களை வெளியேற்றக் கூடாது என்று தடுப்பதற்குத் தடுப்புச் சட்டம். இத்துணைச் சட்டங்களும் வந்தாலும்கூட, விவசாயிகள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். சமீபத்தில் ஒரு சட்டம் வரப்போவதாகக்கூட வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1967-ம் ஆண்டு தேர்தலை ஒட்டி அந்தச் சட்டம் வருமோ என்னவோ தெரியாது. அவசரக் காலத்தில் சட்டத்தைக் கொண்டு வந்து, அவசர அவசரமாக அதை நிறைவேற்றுகிற காரணத்தினால், அதில் இருக்கிற நல்லவைகளை உணர முடியாமல், கோர்ட்டுகளில் அந்தச் சட்டம் தோற்கடிக்கப்படுகிற துர்ப்பாக்கிய மான நிலைமைதான் ஏற்படுகிறது.

என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரு டிரஸ்ட் பிராபர்டியைப்பற்றி நான் பல நாட்களாகக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். அமைச்சர் அவர்களிடத்தில் பல முறை சொல்லிவிட்டேன். சபாநாயகர்கூட சொல்லக்கூடும் அடிக்கடி அதை ஏன் சொல்லுகிறீர்கள் என்று. ஏழை அரிசன விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவரையில் அவர்களுக்கு எதுவும் செய்யப்படவில்லை. என்னுடைய தொகுதியில் மணக்கால் என்ற கிராமத்தில் 30, 40 ஆண்டுகளாக நிலத்தில் பாடுபட்டு வந்தும் வெளியேற்றப்படுகிறார்கள். டிரஸ்டு பிராபர்டி ஆக்டிற்கு ஒரு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். வாரிசுதார் யார் என்று நிர்ணயிக்கப்படாமல் இருக்கிற காரணத்தினால் கோர்ட் ஒரு ரிசீவரை நியமிக்கிறது. அவரால் விவசாயிகள் நிலத்தி லிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். நான் அன்று ஒரு நாள் கூட சொன்னேன், ஆளுகிறவர்கள் மாறினாலும், ஆளப்படுபவர்கள் அப்படியேதான் இருப்பார்கள். ரிசீவர்கள் அடிக்கடி மாறினாலும், உழவர்கள் அப்படியேதான் இருப்பார்கள், அவர்கள் மாறவில்லை. பரம்பரையாக 30, 40 ஆண்டு காலமாக நிலத்தில் உழுதுவந்தும், விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படாமல் இருக்க பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். சித்திரைக் காலாவதி வரப் போகிறது, இந்தச் சட்டம் அவர்கள்மேல் பாய இருக்கிறது. ஆகையால் விவசாயிகள் நிச்சயம் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வரவிருக்கிற சட்டத்தில் இது சேர்க்கப்பட்டிருக்குமென எதிர்பார்க்கிறேன். இல்லாவிடில் சேர்க்க வேண்டுகிறேன். பயிர்பாதுகாப்பைப் பொறுத்தவரையில் சில திட்டங்கள் போட்டிருக்கிறோம். உண்மையில் பயிர் பாதுகாப்புத் திட்டம் மிகத் தீவிரமாக அமல்படுத்தப்பட வேண்டிய ஒரு திட்டமாகும். ஏதாவது பக்கத்திலிருக்கிற ஒரு வயலில் பூச்சி மருந்து தெளிக்காமல் இருந்தால், அதனால் மற்ற வயல்களும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, ஒரு வயலில் தெளித்து பக்கத்து வயலில் தெளிக்காமல் இருந்தால் பயன் இல்லை. ஆகவே, இந்தத் திட்டத்தை மாற்றி சர்க்காரே கட்டாயமாக எல்லா வயல் களுக்கும் பூச்சி மருந்து தெளித்துவிட்டு, அதற்கான தொகையை



14th March 1966] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

கிஸ்தியுடன் சேர்த்து விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம் என்று யோசனை கூறுகிறேன். சில விவசாயிகள் என் வயலில் பூச்சி இல்லை. பக்கத்து வயலில் இருந்தால் அவன் பூச்சி மருந்து அடித்துக் கொள்கிறான் என்று பேசாமல் இருந்து விடுகிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை நான் சொன்னபடி கட்டாயமாக மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதைப்போல கிராம சகாயக்குகள் திட்டம் நிறைவேற்றப் படுவதில் பல ஊழல்கள் இருக்கின்றன. ஆனால், இந்தத் திட்டம் கூடத் தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. இப்பொழுது இந்தத் திட்டப்படி பஞ்சாயத்து போர்டுகளால் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் நல்ல ரக விதையை உற்பத்தி செய்து, அவர்கள் மற்றவர்களுக்கு விநியோகம் செய்கிறார்கள். அவர்களுக்கு சர்க்கார் உதவித் தொகை (ஸப்ஸிடி) கொடுக்கிறது. இந்தத் திட்டத்தை மாற்றி கிராம சகாயக்குகள் உற்பத்தி செய்கின்ற விதைகள் அத்தனையையும் பஞ்சாயத்துக் கூட்டுறவு மன்றத்தில் இருக்கிற அக்ரிக்கல்சரல் டெப்போவுக்குக் கொடுத்து, அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடம் கொடுத்து, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யவேண்டும். அந்த விதத்தில் அவர்களுக்கு சப்ஸிடி கொடுத்தால் எந்த விவசாயிகள் உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்று நன்றாகத் தெரியும். அதில் ஏற்படும் ஊழல்களைத் தடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும்.

கரும்பைப்பற்றிச் சொல்லி, எனது உரையை முடிக்க விரும்பு கிறேன். கரும்பு உற்பத்தி சம்பந்தப் பட்டவரை, உண்மை யிலேயே, ஒரு ஆலை துவங்கப்பட்டால் இத்தனை ஏக்கா கரும்பு கட்டாயமாகக் கொடுக்க வேண்டும். அது மத்திய சர்க்காரு டைய அவசரச் சட்டம் அமலில் இருப்பதால் அப்படிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், பொது வாக எங்கள் பகுதியில் கோதாரி சர்க்கரை ஆலை என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நெ. 419 கரும்பைக் கொடுத் தால் அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்கிறார்கள். அந்த ரகக் கரும்பை ஏறத்தாழ வெகு காலமாக நாங்கள் உற்பத்தி செய்து கொண்டு வருகிறோம், இந்த ஆலை ஏற்படுவதற்கு முன்பாகவே அந்தக் கரும்பை உற்பத்தி செய்து ஆலை அடித்து வந்திருக்கிறோம். நல்ல பலனும் கிடைத்துக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அந்த ஆலையில், இந்த நெ. 419 கரும்பை எடுக்க மாட்டோம் என்கிறார்கள். அதைப் பற்றி அமைச்சரிடம்கூட ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறேன். அதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நெ. 419 கரும்பே எங்கள் பகுதிக்கு ஏற்றது என்று விவசாய இலாகா இயக்குனர்கூட குறிப்பில் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இந்த ரகக் கரும்பை—நெ. 419 கரும்பை, இந்த ஆலைக்காரர்கள் எடுக்கமாட்டோம் என்கிறார்கள். அவர்கள் சொல்லும் காரணம், இந்த ரகக் கரும்பில் 9.4 சதவிகிதம் ரெக்கவரிதான் வருகிறது. வேறு சில கரும்புகளில், 9.5-க்கும் மேலாக ரெகவரி வருகிறது என்கிறார்கள். அதற்குக் காரணம் இன்னும்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [14th March 1966

சொல்கிறார்கள், அரசாங்க விலைப்படி, 9.5 வரையில் எந்த ரெகவரி வந்தாலும், அந்தக் கரும்புக்குச் சர்க்கார் நிர்ணயித்த விலை கொடுக்க வேண்டும், 9.4-க்கும் குறைவாக இருந்தாலும், ஆலை நிர்வாகம் சர்க்கார் நிர்ணயித்த விலைக்கும் குறைத்துக் கொடுக்க முடியாது. அதிக ரெகவரி வரும் கரும்பில் லாபம் அதிகமாக வரும் என்று கருதி, நெ. 419 கரும்பை வேளாண்மை செய்யக்கூடாது என்று சொல்லுகிறார்கள். நாங்கள் இந்தக் கரும்பையே கொடுத்திருந்தும், இந்தச் சர்க்காரை ஆலைக்கு ரூ. 33 லட்சம் லாபம் வந்திருக்கிறது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நெ. 419 கரும்பையே கொடுத்திருந்தும், அவர்களுக்கு ரூ. 33 லட்சம் லாபம் வந்திருக்கிறது என்றால், அந்தக் கரும்பையே ஏன் தடைசெய்ய வேண்டும் என்று புரியவில்லை, ஆகவே, இதைப் பற்றிப் பரிசீலனை செய்து, அருள்கூர்ந்து விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் வகையில் அரசாங்கம் தலையிட்டு அந்தக் கரும்பையே விவசாயிகள் கொடுக்கலாம் என்று சொல்லிவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சர்க்கரை ஆலைகளின் கரும்பு செஸ் பண்டிலிருந்து ரோடு வசதிகள் செய்து கொடுக்கப் படவேண்டும் என்று இருக்கிறது. இந்த ஆலை புதிதாக அமைக்கப் பட்டது என்றாலும், ஏற்கனவே இருக்கும் நெல்லிக்குப்பம், புகளூர், பேட்டவாய்த்தலை முதலிய ஆலைகளின் செஸ் நிதியிலிருந்து எங்களுடைய பகுதியிலும் சாலைகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் மற்ற உதவிகளும் செய்யவேண்டும் என்றும், கேட்டுக்கொண்டு, இவையெல்லாம் முன்னேற்றம் அடையக்கூடிய வகையில் செயல் படவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. அ. துரைசாமி :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கு உரிய வேளாண்மை மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

உணவு உற்பத்தியை எடுத்துக் கொண்டால், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் வளர்ச்சி என்ன என்பதைப்பற்றி இங்கே புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள் 1960-61-வது ஆண்டில் அரிசி உற்பத்தி 1950-51-ம் ஆண்டைவிட 80 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்று இருக்கிறது. பிற தானியங்களை மொத்தமாக எடுத்துக் கொண்டால், மொத்த உற்பத்தியில் 60 சதவிகிதம் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. பரப்பளவு என்று எடுத்துக் கொண்டால், 29 சத விகிதம் என்றும், ஏக்கர் ஒன்றுக்குச் சராசரி 31 சதவிகிதம் என்றும் உயர்ந்திருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறது. மூன்றாவது திட்டத்திலே, 1960-61-ல் உற்பத்தி 53.14 லட்சம் டன்னாக இருந்தது. உற்பத்தி அளவு ஆண்டுக்கு 16.50 லட்சம் டன்னாக உயரவேண்டும் என்கிற குறிக்கோள் இருந்தும், 1965-66-ல் 13.30 லட்சம் டன் என்கிற அளவுக்குத்தான் உற்பத்தித் திறன் இருந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது, இந்த மூன்று ஆண்டுத் திட்ட காலங்களிலும், உணவு உற்பத்தி மிக மிக நல்ல முறையில் தான் இருந்து இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே



14th March 1966] [திரு. அ. துரைசாமி]

விவசாய உற்பத்தி மூலம் நல்ல முறையில் உற்பத்தி பெருக, சிறு பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பொதுவாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், தலைவாசல் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் புது ஏரிகள் அமைக்க வேண்டும் என்று சர்வே கூடச் செய்யப்பட்டது. ஊனத்தூர், வரகூர், செருவாச்சூர், மணிவிழுந்தான், காமக்கா பாளையம் முதலியன. அதற்குப் பிறகு ஏதோ நஷ்டம் ஏற்படும் என்று அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. சிறு நஷ்டம் இருந்தாலும் கூட அதைப் பொருட்படுத்தாமல், அந்த ஏரிகளை அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாசன ஏரிகளைத் தூர் வாருகின்ற ஏற்பாட்டைத் துரிதமாகச் செய்ய வேண்டும். மூன்றாவது திட்டத்திலே, 4,000 ஏக்கர் புதியதாகவும், 16,000 ஏக்கர் எதிர்வாய் நிலங்களையும் தூர்வாரி நன்மை செய்யத் திட்டம் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால், முடிவில் 2,000 ஏக்கர் புதியதையும், 1,360 ஏக்கர் எதிர்வாயும் மட்டுமே பண்படுத்த முடியும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது மிக மிகக் குறைவானது, என்பதைத் தெரிவிக்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொருத்த வரையில், ஆணையாம்பட்டி, சார்வாய், ஒதியத்தூர், தேவியாக் குரிச்சி, ஆத்தூர், முதலிய ஏரிகள் உடனடியாகத் தூர் வாரப் படவேண்டும், அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மூன்றாவது திட்டத்திலே, இலக்காக 6,000 கிணறுகள் வெட்டலாம் என்று இருந்தது. இன்றைக்கு 20,000 கிணறுகள் வெட்டுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. இப்பொழுது சர்க்கார் ஏழைகளுக்கு என்று தலா ஐந்து ஏக்கர் தரிசு நிலம் பட்டா கொடுத்திருக்கிறார்கள். தரிசு நிலங்களைச் சாகுபடி செய்ய கிணறு வெட்ட சர்க்கார் இடத்திலே கடன் வாங்க விவசாயிகள் ஜாமீன் கொடுக்க வேண்டும் என்றிருக்கிறது. தரிசு நிலங்களைப் பெற்றவர்கள், மற்ற விவசாயிகளின் பழைய பூர்வீகமாக உள்ள நிலங்களை ஜாமீன் கொடுத்து, ஈடு செய்ய வேண்டும் என்றால் அது அவர்களால் முடிவதில்லை. அப்படி நிலமுள்ள விவசாயிகள் ஜாமீன் போட்டால் திரும்ப அவர்கள் கடன்கள் வாங்க முடியாது. ஆகவே இந்த ஏழை விவசாயிகள் விவசாய அபிவிருத்தி செய்ய முடியாமல் இந்தத் தரிசு நிலங்களை அப்படியே போட்டு வைக்க வேண்டியிருக்கிறது. அதனால் அதே நிலங்களை ஈடாகக் கொடுத்து கடன் வாங்கக்கூடிய வசதியைச் செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். நில அடமான பாங்கியில், தரிசு நிலத்தை ஈடாக வைத்துக் கொண்டு கடன் கொடுக்கிறார்கள். அப்படி இருக்கும் போது சர்க்கார் ஏன் இந்த நிலத்தை அடமானமாக வைத்துக் கொண்டு கொடுக்கக் கூடாது என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும்; தரிசு நிலங்களுக்குக் கடன் கொடுத்தால்தான் கிணறு வெட்டி விவசாயம் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

[திரு. அ. துரைசாமி] [14th March 1966

தேவையற்ற மேய்ச்சல் தரிசுகளையும் ஓடை புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு என்று நிறைய நிலங்கள் இருக்கின்றன. இவற்றை மறுபரிசீலனை செய்து எந்த எந்த புறம்போக்குகள் தேவை, எவை தேவையற்றவை என்பதைப் பரிசீலனை செய்து தேவையற்றவைகளைச் சாகுபடி செய்வதற்கு ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவசாய மானியம் சம்பந்தமாகச் சில விஷயங்களை நான்
10-00 a.m. சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம் நல்ல பாசனம் உள்ள ஒரு மாவட்டமாக அமைந்திருக்கிறது. சுமார் 13 முதல் 14 லட்சம் ஏக்கரா வரை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும் பாசன வசதிகள் செய்வதற்கு வேண்டிய வாய்ப்புகள் இருந்தும், அந்தப் பாசன வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. மின் இறைவைப் பாசனத் திட்டத்தின் மூலமாக ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை மேலும் பாசனத்திற்குக் கொண்டுவர முடியும். சமீபகாலத்தில் போடப்பட்டிருக்கும் திட்டங்கள் எல்லாம் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. காரணம், அந்தத் திட்டங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு முடியாத நிலை என்று சொல்லப்படுகிறது. மின்சாரத்தைப் பொறுத்த வரையிலும், தனியார் துறையில் இருப்பதன் காரணமாக, காலத்தில் மின்சாரம் கொடுப்பதற்கு மறுத்து விடுகிறார்கள். இதன் காரணமாக, மின்சாரம் கிடைப்பது அரிதாகிவிடுகிறது. ஆகவே, போட்டிருக்கும் திட்டங்களை எல்லாம் துரிதமாக நிறைவேற்றுவதற்கு மின்சார விநியோகப் பொறுப்பையெல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், அந்தத் திட்டத்திற்கு உடனடியாக மின்சார இணைப்பு கொடுத்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தையாவது அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

புது ரக விதையாகிய ஏ.டி.டி. 27 இன் மூலம் நல்ல விளைவை இந்த வருஷம் தஞ்சை ஜில்லா விவசாயிகள் எதிர்பார்த்தார்கள். இந்த ஆண்டு இரண்டு லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்வதற்கு வேண்டிய விதை கொடுப்பதாக அரசாங்கத்திலிருந்து கூறப்படுகிறது. அவ்வாறு கொடுக்கக்கூடிய விதைகளை இலாக்கா மூலமாகவே கொடுப்பதற்கு வேண்டிய உத்தரவாதங்களை ஏற்படுத்தினால்தான், விவசாயிகளுக்குச் சீக்கிரமாக விதை கிடைக்க முடியும். அதைப் போல் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஏ.டி.டி. 3, ஸி.எச். 42, 27.01 போன்ற புதிய ரக விதைகளை இந்த வருஷம் சுமார் ஐயாயிரம் ஏக்கருக்குக் கொடுக்க முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விதைகளையும் அதிகமாகக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அம்மாதிரி கொடுப்பதன் மூலமாகத் தஞ்சை ஜில்லாவிலே பழைய விதைகள் வைத்திருக்கும் விவசாயிகள் எல்லாம் மாற்றம் செய்து, புதிய ரக விதைகளைக் கொண்டு சாகுபடி செய்வதன் மூலமாக அதிகமான விளைவை எதிர்பார்க்க முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



14th March 1966] [திரு. ஆ. கு. சுப்பையா]

பண்ணை சாகுபடித் திட்டம் தயாரிக்கின்றபோது கிராம சேவக்குகள் மூலம் தயாரிக்கப்படுகிறது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மோசடி காரணமாக, நேரடியாக உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளின் பெயர்கள், அந்தப் பண்ணைச் சாகுபடித் திட்டம் தயாரிக்கின்ற நேரத்தில், பதிவு செய்யப்படாமல் பல பிரதேசங்களிலே விடப்பட்டிருக்கின்றன. சாகுபடி செய்கிறவர்கள் யார் என்று கிராம சேவக்குக்குத் தெரிந்திருந்தாலும், கிராமத்தில் இருக்கும் கருணிகர்கள் சரியானபடி சர்ட்டிபை செய்வது கிடையாது. நிலத்தை வைத்திருக்கக்கூடியவர்கள் வெளி ஊரில் இருப்பதன் காரணமாக அந்த நிலங்களையெல்லாம் அவர்களே சொந்த சாகுபடி செய்வதாகக் கணக்கு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி நிலையைக் கொண்டு வருவதன் காரணமாக, குத்தகைதாரர்களுக்கு உரம் போன்றவற்றிற்குக் கொடுக்கக்கூடிய கடன் உதவிகள் எல்லாம் கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கிராம சேவக்குகள் நேரடியாகக் கிராமங்களில் சென்று, உண்மையாக நிலத்திலே உழுது பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்து, பண்ணை சாகுபடித் திட்டத்தைத் தயார் செய்து கொடுத்தார்கள் என்றால், அதையே ஆதாரமாகக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய முடியும். அந்த வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பயிர்ப் பாதுகாப்புக்காகக் கொடுக்கப்படும் பூச்சித் தடுப்பு மருந்துகள், நோய் தடுப்பு மருந்துகள் போன்றவற்றிற்காக அளிக்கப்படும் உதவிகளெல்லாம் சாமான்யமாகக் கிடைப்பதில்லை. அவை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தமாக நேற்று முன்தினம் இந்த மன்றத்தில் பல கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்; எப்படி அந்த கூட்டுறவு இயக்கம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்று சொன்னார்கள். நான் இப்பொழுது அதற்குள் போக விரும்பவில்லை. இருந்தாலும், கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு இந்த உதவிகள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. அவர்கள் அந்த சங்கத்தை முறையாக நடத்தாமல் இருப்பதன் காரணமாகத்தான் விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டிய உரம், பூச்சி மருந்துகள், மற்றும் இதர சாதனங்கள் கிடைப்பதில்லை. தாமதம் ஏற்படுகிறது. விவசாய இலாக்கா மூலமாக இவை அவர்களுக்குக் கிடைக்கும்படியான உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு கூட்டுமன்ற எல்லையிலும் மூன்று அல்லது ஐந்து விவசாய டெப்போக்கள் திறந்து அவை மூலமாக விவசாயிகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டுமன்றப் பிரதேசங்களில் இருக்கும் விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் எந்தவிதமான வேலையும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். வெறும் ஆலோசனை சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆலோசனை சொல்ல வேண்டியதும் அவசியம்

என்றாலும் கூட, அவர்களுக்குப் போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாததன் காரணமாக அவர்கள் விவசாயிகளிடம் சென்று யோசனைகள் சொல்ல முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளெல்லாம் சும்மாதான் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அவர்களால் எந்த விதமான பிரயோசனமும் கிடையாது. ஆகவே, அவர்களை யெல்லாம் வேலை செய்ய வைக்கவேண்டும், அவர்கள் ஆலோசனை கூறவேண்டும் என்றால், அடிக்கடி அவர்கள் கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளைச் சந்தித்து நல்ல அரிய ஆலோசனைகளைச் சொல்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். விவசாய டெப்போக்களை அதிகமாகத் திறக்கவேண்டும். அந்த டெப்போக்கள் மூலமாக உரம், பூச்சி மருந்துக்கள், மற்றும் இதர உபகரணங்கள் எல்லாம் கொடுப்பதற்குவேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உரம் கொடுப்பதை காலத்தில் கொடுத்தாக வேண்டும். ஜூன் மாதம் விவசாயிகளுக்கு உரம் கொடுத்தால்தான் தண்ணீர் வந்த வுடனே உரத்தை விவசாயத்திற்காக உபயோகப்படுத்திக்கொள்ள முடியும். காலத்தில் உரம் கிடைப்பதில்லை. கூட்டுறவு சங்கங் களையே நம்பியிருக்க வேண்டி இருப்பதன் காரணமாக, விவசாயம் முடிந்து கூட உரம் கிடைப்பது அரிதாகிவிடுகிறது. அந்த நிலைமை இந்த ஆண்டு இருக்கக் கூடாது. இந்த ஆண்டு, விவசாய இலாக்கா மூலமாகவும், தனியார் மூலமாகவும் காலாகாலத்திலே உரம் கிடைக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்தாகவேண்டும். குறிப்பாக, எங்கள் மாவட்டத்திற்கு அதிகமாக உரம் அவசியப்படுகிறது. இந்த ஆண்டில் ஓளவுக்கு உரம் குறைவாகத்தான் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. நிலைமையைக் கவனித்து, மேலும் அதிகமான உரம் தஞ்சை ஜில்லாவில் கிடைப்பதற்கான உத்தர வாதத்தை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சி. ம. அம்பிகாபதி : பெருமதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அறிக்கையைப் பார்க்கும்போது, கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறைக்கு அதிகமான தொகை ஒதுக்கி, விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுத்து வந்திருக் கிறோம் என்றாலும், நாம் போட்ட திட்ட இலக்குகளை எட்டிப் பிடிக்க முடியாத நிலையில் பல்வேறு தாமதங்கள் ஏற்பட்டதற்கு இயற்கைக் கோளாறு, சரியான உர விநியோகம் இல்லாதது, மற்றப்படி சிறிய நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுப்பதில் உள்ள தடங்கல் போன்றவை காரணங்களாக அமைந்திருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இவ்வளவு தடங்கல் ஏற்பட்டும் பொது வாக, விவசாயிகள் மிக ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக தஞ்சை ஜில்லாவிலே ஏ.டி.டி. 27 ரக நெல்



விதையை அதிகமாக உபயோகப்படுத்தி, அதிகமான மகசூலைக் காண்பித்திருக்கிறார்கள். விவசாயிகள் மிக்க ஆர்வமாக அரசாங்கம் கொடுக்கக்கூடிய எல்லாவிதத் திட்டங்களையும் ஏற்றுக்கொண்டு உற்பத்தியைப் பெருக்குவதிலே முனைந்திருக்கிறார்கள். அவர் களுக்கு ஊக்கம் கொடுக்கும் அளவில் நாம் மேலும் நல்ல முன்னோடித் திட்டங்களைத் தயார் செய்து கொடுக்க வேண்டும்.

பொதுவாக, அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அவ்வப்போது இருக்கக்கூடிய விலைவாசி ஏற்றத்தின் காரணமாக, அவர்களுக்குச் சம்பள சலுகைகள் அளித்து வருகிறோம். அவர் களுக்குரிய அலவன்ஸை ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்ற வகையில் உயர்த்திக் கொடுக்கிறோம். எப்படி அரசாங்க அதிகாரிகள் நாட்டிற்கு அவசியமோ அதே போல் விவசாயிகள் இந்த நாட்டிற்கு அவசியம் என்பதை உணர்கிறோம். விவசாயத் தொழிலை செய்பவர்களுக்கு ஒரு புதிய முன்னோடித் திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தால் மிகவும் நல்ல பலன் அளிக்கக் கூடியதாக இருக்கும். எப்படி என்றால் ஒரு ஏக்கர் முதல் ஐந்து ஏக்கருக்குள் நிலம் வைத்திருக்கிற நிலச் சொந்தக்காரர்களுக்கும், தாமே வயலில் இறங்கி வேலை செய்கிறவர்களுக்கும், குத்தகை நிலம் எடுத்து குத்தகைசாகுபடி செய்கிற விவசாயிகளுக்கும் அரசாங்க கடன் கொடுத்து வட்டியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் படுகிறது. இவ்விதமாக செய்வதில் உண்டாகும் ஆர்வத்தைவிட, அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கும் அலவன்ஸ்போல விவசாயிகளுக்கும் ஊக்கம் உண்டாக்க அலவன்ஸ் கொடுக்க திட்டம் வகுக்க வேண்டும். அலவன்ஸை பணமாகக் கொடுப் பதைவிட, குறைந்த விலையில் உரமாகவோ, வட்டியில்லாமல் அரசாங்க கடன், கூட்டுறவு சங்கங்களிலே வாங்கும் கடன் இவை களிலும் இச்சலுகை கொடுக்கலாம். இவ்விதமான சலுகை கொடுப்பதால் விவசாயத் தொழிலை நம்பியிருக்கும் விவசாயி களுக்கு மேலும் நல்ல ஆர்வம் உண்டாகும். ஊக்கத்தோடு விவசாயம் செய்வார்கள். குறிப்பிட்ட திட்ட இலக்கைப் பெறுவ தற்கும் நல்ல வாய்ப்பை உண்டாக்கும். இவ்விதமான ஒரு முன்னோடித் திட்டத்தை தயாரித்து விவசாயிகளுக்கு ஊக்கம் உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு அனுமதியளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம் :** மதிப் பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையிலே கொண்டு வந்திருக்கின்ற விவசாய மானியத்தின் மீது எதிர்க்கட்சி சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். விவசாயத்தைப் பொறுத்த வரையில் இப்போது இருக்கின்ற நிலைமையில் விவசாயத்தைப் பெருக்க முடியாது. விவசாயிகள் இருக்கின்ற இடங்களில் பத்தாயிரம் ஏக்கரா நிலப்பரப்புள்ள பகுதியாக ஒவ்வொரு பகுதியையும் பிரிக்கவேண்டும். அந்தப் பத்தாயிரம் ஏக்கரா நிலப் பரப்புள்ள பகுதியில் முதலில் போக்குவரத்தை ஏற்படுத்த வேண்டும். மையமான இடத்தில் இருந்து மற்ற கிராமங்களுக்கு எல்லாம் போய்வர ரோடு வசதி செய்து கொடுக்கவேண்டும்.

[14th March 1966

[திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்க அம்பலம்]

அப்படிச் செய்தால்தான் விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய உரங்களையும், விதைகளையும் கொண்டுபோகவும், விளைந்தவற்றை விற்பனை ஸ்தலங்களுக்கு எடுத்துச் செல்லவும் வசதி ஏற்படும். விவசாயத்திற்கு நாம் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிற இந்தக் காலத்தில், உணவுப் பற்றுக்குறையினால் கஷ்டப்படுகிற இந்த நேரத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் ரோடு கிடையாது. ஆகவே மையமான இடத்தில் இருந்து எல்லாக் கிராமங்களுக்கும் செல்ல ரோடு வசதி செய்துகொடுக்கவேண்டும்.

அடுத்து, விவசாயிகளுக்குத் தண்ணீர் தட்டு இருக்கிற இடங்களில் கேணி மூலமாக நீர்ப்பாசன வசதியைப் பெருக்கவேண்டும். விவசாயத்திற்கு மின்சாரம் சப்ளை செய்வது முதலிடம் பெற வேண்டும். குறைந்தபட்சம் பத்தாயிரம் ஏக்கரா நிலப்பரப்புக்கு வாடகைக்கு விடக் கூடிய டிராக்டர் ஒன்றாவது வேண்டும். நாளடைவில் இந்த எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ளலாம். உரம், விதை முதலியவற்றை கடன் கொடுக்கும்போது அவற்றை மையமான கிராமத்தில் வைத்து சுற்றியுள்ள எல்லா கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். பத்தாயிரம் ஏக்கராவுள்ள இடத்தில் கட்டாயமாக ஒரு விவசாயச் சங்கம் இருக்கவேண்டும். அந்த விவசாயச் சங்கம் சட்ட பூர்வமானதாக இருக்கவேண்டும். அந்தச் சங்கத்தின் மூலமாக அந்தப் பிராந்தியத்திற்கு என்னென்ன வேண்டுமென்று கூறுகிறார்களோ அவற்றை அவ்வப்போது செய்து தரதக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

எங்கள் இராமநாதபுரம் பகுதியை எடுத்துக்கொண்டால் எப்போது பார்த்தாலும் தண்ணீர் பற்றுக்குறை இருக்கிறது. தஞ்சை ஜில்லாவை நோக்கி பிழைக்க போய்க்கொண்டிருக்கிற நிலை இன்னமும் இருக்கிறது. அதற்கு தண்ணீரை பெரியாறு வைகையில் இருந்து கொண்டுவர சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மேலூர் பகுதியில் இருந்து ஒரு கால்வாயை வெட்டி திருவாடனைப் பகுதிக்குத் தண்ணீர் கொண்டு போக முடியும். எப்போதும் தண்ணீர் விடவேண்டும் என்று இல்லாவிட்டாலும் அதிகத் தண்ணீர் வருகிற காலத்திலாவது விடுவதற்கு வாய்ப்பாக இந்தக் கால்வாயை வெட்டித்தர அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும்.

அடுத்து, வியசாயத்திற்கு கால்நடைகள் முக்கியம். இப்போது கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை என்று ஒதுக்குவதே கிடையாது. ரசாயன உரத்தையே நம்பினால் நிலத்தின் தரம் குறைந்து வருகிறதைப் பார்க்கிறோம். பசுந்தழை உரம், கால்நடை உரம் நல்ல முறையில் வேண்டுமென்றால் அங்கங்கே மேய்ச்சல் தரை ஒதுக்க அரசாங்கம் தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் இங்கு சர்க்கார் அடைத்து வைத்திருப்பதைப்போல கால்நடைகளை வைத்தால் கோழிப்பண்ணைமாதிரி ஆகிவிடும். ஆகவே இத்தனை ஏக்கர் மேய்ச்சல் தரைக்காக என்று ஒதுக்கவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



14th March 1966]

[திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம்]

அடுத்து, இப்போது எல்லா விவசாயக் கருவிகளும் விலை உயர்ந்துபோய் விட்டது. கூலியும் அதிகமாகப்போய்விட்டது. கதிர் அறுக்கிறவர்களுக்குக் கூட சோறு போட்டு நான்கு பக்கா படி கூலி கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, விவசாயக் கூலியை சர்க்கார் நிர்ணயம் செய்துவிடவேண்டும். விவசாயத்திற்கு கூலி நிர்ணயம் செய்தால்தான் விவசாயி ஒழுங்காகச் சாகுபடி செய்ய முடியும். இன்றைக்கு இராமநாதபுரம் ஜில்லாவில் இருந்து ஆட்களைக்கொண்டுபோய் தஞ்சை மாவட்டத்தில் அறுவடை செய்வதைப் பார்க்கிறோம்.

**கனம் திரு. பூ. கக்கன் :** விவசாயக் கூலி நிர்ணயச் சட்டம் ஏற்கனவே இருக்கிறது.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம் :** அமைச்சர் ஏற்கனவே சட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். சந்தோஷம். அது நடைமுறைக்கு வரவில்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** காரணம், சட்டத்தில் கண்டுள்ளதை விட அதிகமாகப் பலவிடங்களில் கூலி கொடுக்கப்படுகிறது. இதை அமலுக்குக்கொண்டுவருவதனால் விவசாயக் கூலிகளுக்குத்தான் சங்கடம் வரும்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம் :** சிலயிடத்திலே அந்தக் கூலிகூடக் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே சட்டம் என்று போட்டால் அதை எங்கும் அமலுக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்யவேண்டும்.

**கனம் சபாநாயகர் :** அதிகக் கூலி நிர்ணயிக்கும்படி சட்டத்தையே திருத்தச் சொல்லவில்லையா?

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம் :** அடுத்து உரப் பிரச்சினையும் அதிகமாக இருக்கிறது. எந்தக் காலத்தில் எந்த உரம் தேவைப்படுகிறதோ அது கிடைக்கவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் இன்று காலையில் கூட ஒரு கேள்விக்கு பதில் சொல்லும் போது அமோனியம் சல்பேட் வந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது தேவைப்படுவது யூரியாதான். பயிர் வைக்கிற போது போடவேண்டிய உரம் யூரியா. கதிர் வாங்கும்போது உபயோகப்படுத்தவேண்டியது அமோனியம் சல்பேட். இப்போது அமோனியம் சல்பேட்டைக் கொடுத்தால் என்ன செய்வது? நான் உரம் தேவைப்படுகிறது என்று அமைச்சர் அவர்களிடம் சொல்லி மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிறது. ஆனால் இன்னும் கிடைக்கவில்லை எப்படி விவசாயத்தைப் பெருக்க முடியும்?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த உரம் வாங்குவதற்கு இரண்டு வருஷத்திற்கு முன்பெல்லாம் ஆள் இல்லை. கட்டாயப்படுத்தி, கூட்டுறவு மூலம் வாங்குங்கள், வாங்குங்கள் என்று சொல்லித் தான் கொடுக்கவேண்டி இருந்தது. ஆனால் இப்பொழுது உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு விவசாயிகள் உரத்தை உபயோகிக்

கிறார்கள். மகாஜனங்கள் உரம் நிறைய வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே எல்லோருக்கும் கொடுக்கவேண்டியிருப்பதால் கொஞ்சம் குறையத்தான் செய்யும்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் தலைவரவர்களே, தாங்கள் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கி இருக்கிறநேரமோ கொஞ்சம். அதிலும் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டால் நேரம் குறையும். ஆகவே, அமைச்சர் அவர்கள் குறுக்கிடாமல் இருந்தால் பின்னால் அவர்கள் பதில் சொல்லும்பொழுது அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம்:** திட்டங்களைப் போடுகிறார்கள். ஆனால், எந்த எந்த ஏரியாக்களுக்கு என்ன என்ன தேவை என்பதையெல்லாம் கவனித்துத் திட்டம் போட்டால்தான் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும், அவர்கள் உற்பத்தியைப் பெருக்கமுடியும். இப்பொழுது ரசாயன உரத்தை நம்பியே விவசாயத்தைச் செய்யக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டார்கள். கால்நடைகளுக்கு மேய்ச்சலுக்கு புறம்போக்கு ஒன்றும் கிடையாது. (மணியடிக்கப்பட்டது)

* **திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை வாசிக்கும்பொழுது அதிகமாக நில சாகுபடிக்குத்தான் முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. அது வரவேற்கக் கூடிய கருத்து. சில இடங்களில் பருவ மழை தவறிவிட்டது. ஆகையினால் உற்பத்தியில்லை. பருவமழை குறைந்துவிட்ட இடங்களில் செமி டிரை பாடியைப் போடுவதற்கு வழிவகை செய்ய வேண்டும். இந்த செமி டிரை பாடி சீட்ஸ் ரொம்பவும் தேவைப்படுகிறது. இந்த சீட்ஸ் மூலம் 5,000 ராத்தல் உற்பத்தி செய்ய முடியும். ஹைப்ரீட் சீட்ஸ், சோளம், கம்பு, சர்க்கார் பொறுப்பில் உற்பத்தி செய்வதற்கு வழி இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. விதை உற்பத்தி செய்யும் சலுகை தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கவேண்டியதுதான். எல்லோருக்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய நிலைமையில் உற்பத்தி பெருகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக டெஸ்டட் சீட்ஸ்களாக இப்பொழுது சீட்ஸ்கள் இல்லை. சீட்ஸ்கள் எல்லாம் டெஸ்ட் செய்யப்படவேண்டும். அப்பொழுதுதான் சீட்ஸில் தவறு இருந்தால் அதை யார் செய்தார்கள் என்பதைப் பார்த்து அதைத் திருத்திக் கொள்வதற்கு வழி இருக்கும். ஆகவே சர்க்காரால் கொடுக்கப்படுகின்ற சீட்ஸ் எல்லாம் டெஸ்டட் சீட்ஸ் ஆக இருக்க வேண்டும். ஒரே ஒரு பரிசோதனை நிலையம் வைக்கப் படுவதாகத்தான் திட்டத்தில் இருக்கிறது. அது போதாது. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் பரிசோதனை செய்யக்கூடிய அளவில் டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சுரல் ஆபீஸ்களில் பரிசோதனை நிலையங்கள் இருக்க வேண்டும்.



கருவிகள் சம்பந்தப்பட்டமட்டில், மேலூர் கலப்பையைமட்டும் வைத்துக்கொண்டு சாதாரண விவசாயிகள் எப்படி உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்பதைப் பார்க்கவேண்டும். கோயம்புத்தூர் ஆராய்ச்சி நிலையம் 20 வருஷங்களுக்கு முன்பு எப்படியிருந்ததோ அதேமாதிரிதான் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. அதை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து பல ஆராய்ச்சிகள் நடத்தி கருவிகள் உற்பத்தி செய்யக்கூடியதாக ஆக்கவேண்டும். டிராக்டர்கள் சம்பந்தமாக 20 ஆயிரம் முதலீடு கொடுக்கப் படுகிறது. இப்பொழுது டிராக்டர்கள் விலை கூடிவிட்டது. ஆகவே 20 ஆயிரம் போதாது. 25 ஆயிரமாக உயர்த்த வேண்டும் கிணறு வெட்டும் திட்டத்தில் ஒரு கிணற்று தண்ணீர் எவ்வளவு நிலங்களுக்குத்தான் பாயவேண்டும் என்ற நிலைமை இருந்தால்தான் புதிய கிணறுகள் அதிகம் வெட்ட முடியும். புதிய கிணறுத் திட்டத்தில் ஒரு கிணறுக்கு எத்தனை எக்கர் பாயும் என்று வைத்தால்தான் அது செவ்வனே நடைபெறும். வாழை அபிவிருத்தித் திட்டம் சில ஜில்லாக்களில்தான் இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தை எல்லா ஜில்லாக்களுக்கும் கொண்டுவரவேண்டும். ஏனென்றால் இது ஒரு பூவர்மேன் ஃபுட் ஆக இருக்கிறது. ஒருவன் இரண்டு வாழைப்பழங்களைச் சாப்பிட்டுவிட்டு ஒருவேளையைக் கழித்துவிடுவான். ஆகவே எல்லா இடங்களிலும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும்.

அடுத்தபடியாக பயிர்ப்பாதுகாப்புத் திட்டப்படி பரவலாக வேலை நடந்துகொண்டிருக்கிறது. மலேரியல் யூனிட் எப்படி எல்லா ஜில்லாக்களிலும் செயல்படுகிறதோ அதைப்போல் இந்தத் திட்டத்தையும் எல்லா ஜில்லாவிற்கும் விரிவு படுத்த வேண்டும். ஆகவே ஒவ்வொரு ஜில்லாவிற்கும் பயிர் பாதுகாப்பு முறையில் வேலை செய்தால்தான் நலம் என்று நினைக்கிறேன். அடுத்தப்படியாக, இந்த ஆராய்ச்சி நிலையம் சம்பந்தப்பட்டவரையில் நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை இன்னும் ஊக்குவிக்க வேண்டும். எம். எஸ்ஸி., டாக்டரேட் படித்தவர்கள், தனித்தனி சப்ஜெக்ட்டுகளில் பாஸ் செய்தவர்களை எல்லாம் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் வைத்தால் அவர்கள் நன்றாக ஆராய்ச்சி செய்வார்கள். கிரீன் மேன்யூர் விதைகள் நெடுநாள் இருக்கக்கூடிய முறையில் ப்ரிசர்வேஷன் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். கிரீன் மேன்யூர் விதைகள் ப்ரசர்வேஷன் செய்வதற்குத் திட்டம் இல்லை. ஒரு வருஷம் இருப்பு இருந்தால் பிரயோஜனப்படாது. ஆகவே கிரீன் மேன்யூர் விதைகளை ப்ரசர்வ் செய்வதற்கு ஸ்கீம் போட வேண்டும்.

கால்நடை சம்பந்தப்பட்டமட்டில் கிராஷ் ப்ரொகிராம் வரவேற்கக்கூடியதுதான். மாடுகள் உற்பத்தி செய்கிறோம், ஆனால் அவற்றிற்கு தீவனத்திற்கு கடஷ்ப்படுகிறோம். அதற்குத் திட்டமேயில்லை. மேய்ச்சலுக்கு வழியில்லை. அவைகளுக்கு ஸ்டாண்டர்டு ஃபுட் வாங்கிக்கொடுப்பதற்குத் தகுதியில்லாமல் இருக்கிறது. ஆகவே ஃபாடர் ஸ்கீம் போட்டு இதற்கு வழிசெய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது) வணிகத் திட்டத்தில் இந்த லெவியை வரவேற்கிறேன். இதில் ஒரு ஃபார்முலா இருக்கிறது. இதை டெல்டா, நான்-டெல்டா என்று பிரித்து வைத்தால் நலமாக

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [14th March 1966

இருக்கும். லெவி 2 முதல் 8 மூடை வரை வைத்திருக்கிறார்கள். இதை டெல்டா, நான்-டெல்டா என்று பிரித்து வைத்தால் நல்லதாக இருக்கும். கடைசியாக ரெகுலேட்டட் மார்க்கெட்டுகள் ஐந்து மைல்களுக்கு ஒன்றாக வைத்தால் பிளாக்மார்க்கெட் எல்லாம் இருக்காது என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கு. திருப்பதி : கனம் தலைவரவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்திற்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படுவது தண்ணீர், உரம், கால்நடைகள் இவைதான். விவசாயிகளுக்கு முக்கியமாகத் தண்ணீர் அவசியம். என்னுடைய தாலுகாவை எடுத்துக்கொண்டால் வறண்ட இடமாக இருக்கிறது. மழை வந்தால்தான் தண்ணீர், இல்லாவிட்டால் கிடையாது. அங்கே குடுப்பலாறு என்ற ஆறு இருக்கிறது. அதிலே 2, 3 மைல் தூரம் கால்வாய் வெட்டினால் ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். அதை வைத்து 3, 4 யூனியன்களுக்கு தண்ணீர் அனுகூலம் ஏற்படும். இதைப்பற்றி நான் முன்பே சொல்லியிருக்கிறேன். ஆனால், இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவசாயிகளுக்கு கடன் உதவி முக்கியம். அவர்களுக்குக் கடன் உதவி உடனடியாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சில கடன்களுக்கு தனிப் பட்டா தேவை என்று சொல்கிறார்கள். ஜாயின்ட் பட்டாவாக இருந்தால் கர்ணங்களிடம் விவசாயிகளுக்கு தொல்லையாக இருக்கிறது. ஆனால் ஜாயின்ட் பட்டாவிற்கும் கடன் கொடுப்பதற்கு வகை செய்யவேண்டும். விவசாயிகளுக்கு கிணறுகள் அவசியம். இதற்கு விவசாயிகளுக்கு கடன் கொடுக்கவேண்டும். பழைய கிணறுகளை ரிப்பேர் செய்வதற்கும் பணம் ஒதுக்கவேண்டும். எப்படிப் புது கிணறுகள் வெட்டுவதற்குக் கடன் கொடுக்கிறார்களோ, அதைப்போல பழைய கிணறுகளை ரிப்பேர் செய்வதற்கும் பணம் கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10-30 a.m. விவசாயத்திற்கு கால்நடை அவசியம். கால்நடைகளுக்கு நோய் வருவது சகஜம். நோயைத் தடுக்க ஆஸ்பத்திரி அவசியம் தேவை. அதேபோல் 1963-ம் ஆண்டில் என்னுடைய தொகுதியிலே, புதுப்பேட்டையில் முதல் உதவி கால்நடை ஆஸ்பத்திரியை அமைச்சர் ராமைய்யா அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். ஆனால் இதுநாள்வரை அங்கு டாக்டர் போடவில்லை. இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் நேரிலும் கூறியிருக்கிறேன். அந்த இடத்தில் நிரந்தரமாக ஒரு டாக்டரைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளுக்கு மேய்ச்சல் புறம்போக்கு ரொம்பக் குறைவாக இருக்கிறது. கால்நடைகளுக்கென்று மேய்ச்சல் புறம்போக்குகளை அதிகமாக ஒதுக்கினால் நன்றாக இருக்கும். விவசாயிகளுக்கு ட்ராக்டர்களுக்காகக் கடன் கொடுக்கவேண்டும். சீக்கிரமாகக் கொடுத்தால் இன்னும் தீவிரமாக விவசாயம் செய்ய முன் வருவார்கள். பருவ மழை தவறியதால் இந்த வருஷம் விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த ஆண்டு தண்ணீர் வரி வேறு



14th March 1966] [திரு. கு. திருப்பதி]

அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. பருவ மழை தவறியிருப்பதால் இந்த ஆண்டு வரி வஜா செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதோடு வருமான வரியையும் வஜா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் பம்பு செட்டுக்கு மின்சாரம் கேட்கும்போது எலக்ட்ரிசிடி ஆபீசில் கம்பி இல்லை, டிரான்ஸ்பார்மர் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த சாமான்களை தருவித்துக் கொடுத்தால் விவசாயம் செய்வதற்கு வசதி ஏற்படும்.

திருப்பத்தூரில் குடிதண்ணீருக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. அங்கு பூராவும் உப்புத் தண்ணீர். ஏற்கனவே ஒருதடவை இதைப்பற்றி இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். வாணியம்பாடி பாலாற்றிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டு வந்தால் ரொம்பவும் நன்றாக இருக்கும்.

* திரு. தோ. மு. நல்லசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசாங்கமானது தீவிரமாக விவசாயத் துறையிலே கவனம் செலுத்தி வருகிறது என்பது குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உரையில் கொடுத்திருக்கும் புள்ளிவிவரங்களைப் பார்த்தாலே தெரியும். நம்முடைய மாநிலத்தில் விவசாயத்திற்காகவும், நில அபிவிருத்திக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த தொகை 12¼ கோடி ரூபாய். வரப் போகிற ஐந்தாண்டுகளில் நம்முடைய மாநிலத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவு செய்யப் போகும் தொகை 25½ கோடி ரூபாய். இப்போது சரியாக இரண்டு பங்கு நிதி ஒதுக்கியிருப்பதைப் பார்க்கும்போது விவசாயத்தை விருத்தி செய்யவேண்டும், உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும், விவசாயத் துறைக்கு அடிப்படையான தொழில்களுக்குத் தேவையான உற்பத்திப் பொருள்களைத் தீவிரமாக உற்பத்தி செய்யவேண்டுமென்ற அர்த்தம் தொனிப்பதை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். நம்முடைய விவசாயத் துறையைப் பொறுத்தவரை பல ஆலோசனைகளைச் சொல்லவேண்டுமென்று நினைந்தாலும் கூட குறுகிய நேரமே இருப்பதன் காரணமாக 'அவுட்லைன்' என்ற அளவிலே ஒரு சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத் துறையின் ஒவ்வொரு இனத்திலும் சிறிய பாசன வசதி, நில அபிவிருத்தி, சாயில் கன்சர்வேஷன் போன்ற எல்லாத் துறைகளுக்கும் செலுத்தப்பட்டிருக்கும் கவனம் போதியதாக இருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து. இவற்றுக்கெல்லாம் நிதியை ஒதுக்கிவிட்டால் மட்டும் போதாது. அதற்கு வேண்டிய மெஷினரி போதிய அளவு இருக்கிறதா என்பதையும் பார்க்கவேண்டும். அந்த முறையில் பார்த்து நியாயமான வகையில் செலவு செய்தால் போதும் என்று கருதுகிறேன். விவசாயத் துறையைப் பொறுத்தவரை ஒரு சில ஆலோசனைகளை நான் அரசாங்கத்திற்குக் கூற விரும்புகிறேன்.

நாம் பல திட்டங்களை நாட்டிலே அமலாக்க விரும்புகிறோம். இதில் எல்லாம் விவசாயிகள் தாங்களாகவே விரும்பி வந்து ஏற்றுக் கொண்டு செய்யவேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்பதில் தக்க கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய நாட்டில் உணவுப் பொருள் உற்பத்தி அதிகமாக வேண்டுமென்று சொன்னால் விவசாயிகளுக்கு உற்சாகம் அதிகமாக வேண்டும். அவர்களுக்கு உற்சாகம் ஏற்பட வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு உற்பத்தி செய்யும் பொருள்களுக்குக் கட்டுபடியாகும் விலை கிடைக்க வேண்டும். அவர்களுக்கு மார்க்கெட்டிங் ஃபெசிலிடீஸ் இருக்க வேண்டும், கட்டுபடியாகக் கூடிய விலையும் கிடைக்கவேண்டும். அப்போதுதான் விவசாயிகள் தீவிரமாக விவசாய உற்பத்தியில் ஈடுபட முடியும்.

உதாரணமாக, தென்னாட்டில் கரும்பு உற்பத்தியில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பல கரும்பாலைகள் நம்முடைய பகுதியில் ஏற்பட்டு வருவதையும் பார்க்கிறோம். ஏற்படக்கூடிய ஆலைகள் அத்தனைக்கும் தேவையான அளவு கரும்பு உற்பத்தியாகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் கட்டுபடியாகும் விலையை அரசாங்கம் நிர்ணயித்திருப்பதுதான். கட்டுப்படியாகும் விலையை நிர்ணயிக்கவேண்டுமென்று சொல்லும்போது, வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய நிலைமையையும் பார்க்கவேண்டுமென்று அரசாங்கத்திலிருந்து சொல்லக்கூடும். இதனால் பலர் கரும்பு சாகுபடியில் இறங்கி விடுகிறார்கள். நியாயமான விலை கிடைப்பதாக இருந்தால் விவசாயிகள் ஒரு செண்ட் நிலத்தைக் கூட விளைக்காது, காய்கறி போன்றவற்றைக் கூடப் பயிரிடுவார்கள். நெல்லைப் பொருத்து அதிகக் கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நெல்லைப் பொருத்த வரை போதிய அளவுக்கு விலை நிர்ணயிக்கப்படவில்லை என்றுதான் கூற விரும்புகிறேன். வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய நிலை பாதிக்கப்படக்கூடாது என்று சொல்லும்போது நகரத்தில் இருப்பவர்கள், தொழிற்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆகியவர்களிலே குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு விநியோகிப்பதற்கு ஒரு விலையை நிர்ணயித்து விட்டு அதிக வருமானம் உள்ளவர்கள் கண்ட்ரோல் விலையில் இல்லாமல் எப்படியாவது வாங்கிக் கொள்ளட்டும் என்று விட்டு விடலாம். விசாயிகளுக்கு இன்சென்டிவ் இருக்க வேண்டுமென்றால் நல்ல விலை கிடைக்கவேண்டும். எனக்கு தஞ்சை ஜில்லா நிலவரத்தைப் பற்றித் தெரியாது; திருச்சியின் மேற்குப் பகுதி, கோவை, சேலம் போன்ற பகுதிகளின் நிலவரத்தை எடுத்துக் கொண்டால் கொடுத்திருக்கக்கூடிய ரூ. 22.95 பை விலை கட்டவே கட்டாது. இதனால் எல்லா விவசாயிகளும் நெல் பயிரிடுவதை விட்டு விட்டு கரும்பு, குச்சிக் கிழங்கு, கடலை போன்ற கமர்ஷியல் கிராப்சுக்குப் போகும் நிலைமை வருகிறது. இதைப் பற்றி நமது சட்ட மன்றத்தில் இருக்கக் கூடிய டாக்டர் நடராஜன் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள். விவசாய மக்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலையில் நெல்லை ப்ரொக்யூர் பண்ணிக் கொடுக்க எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் அவ்வாறு செய்யுங்கள். லெவி வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள். அதில் ஆட்சேபனை இல்லை. வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்குக் கட்டுப்படி-





யாகும் விலை இருக்கவேண்டுமென்று கூறுவதிலே தப்பு இல்லை. வருமானம் அதிகம் உள்ளவர்கள் அதிக விலை கொடுத்து கிச்சிலிச் சம்பா வாங்கிச் சாப்பிட்டுக் கொள்ள முடியும். அவர்களுக்கும் ரூ. 22.95 பை விலைக்கு வாங்கிக் கொடுக்க வேண்டுமென்பதில்லை. கட்டுபடியாகும் விலையை எல்லாப் பொருள்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் வழங்குத் திட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கிராமத்திலிருந்து சென்னைக்கு பால் வருவதாகச் சொன்னார்கள். இது வரவேற்கத்தக்கது. பால் உற்பத்தி செய்கிறவர்களுக்கும் நியாயமான விலை கிடைக்கவில்லை. இப்போது கொடுக்கும் 52 பைசா கட்டுபடியாகவில்லை என்று கூறுகிறார்கள். கட்டுபடியாகும் விலையைக் கொடுக்காமல் என்னதான் டிரான்ஸ்போர்ட் செய்வதற்கு லாரி வசதிகளையும், குளிர்பதனச் சாதனங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தாலும் பயன் இல்லை. அதிகச் சம்பளம் இல்லாதவர்களுக்கு ஏதாவது சப்சிடி மாதிரி போட்டுக் குறைத்துக் கொடுக்கலாம். அந்த வகையில் ஏதாவது ஏற்பாடு செய்தால்தான் உற்பத்தி அதிகரிக்க முடியும் என்பது என்னுடைய கருத்து.

அதேமாதிரி உர உற்பத்தி. உரத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு உரம் காலாகாலத்தில் கிடைக்கவில்லை என்பது கண்கூடாகத் தெரிந்த விஷயம். திருச்சியில் கரூர் பகுதியை எடுத்துக் கொண்டால்—சேலம் பகுதியில் ஏராளமாக விநியோகிக்கப்படுகிறது, நாமக்கல் தாலுகாவில் காவேரியின் வடபுறம், தென்புறத்தில் உரம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குக் கொடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. எங்கு தீவிரச் சாகுபடித் திட்டம் நடக்கிறது, எங்கு எவ்வளவு தேவை என்று ஆராய்ச்சி செய்து அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பூச்சி மருந்து அடிப்பது என்பது ஒரு ரெகுலர் ஆப்பரேஷனாகப் போய் விட்டது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு இந்தமாதிரி மருந்துகளே கிடையாது. விவசாயிகள் ஏதோ முறைகளைக் கையாண்டு வந்தார்கள். இன்று இந்த பெஸ்டிஸைட்ஸ் கொடுப்பது வரவேற்கத்தக்கது. அதே சமயத்தில் விவசாயிகளுக்கு கேடு விளைவிக்கிற ஒன்று களை ஏறுதல். ராகி வைத்தால் வேறு ஒரு புல் அதில் முளைக்கிறது, நெல் வைத்தால் அதில் புல்லும் முளைக்கிறது. ஆகவே, போடப்படும் அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்களை இவை சாப்பிட்டு விடுகிறது. ஆகவே 'வீடிஸைட்ஸ்' வழங்கவேண்டும். அதையும் செய்யவேண்டும். எனக்கு நேரம் இல்லாததால் முடித்துக்கொள்கிறேன்.

நான் குறிப்பாக வலியுறுத்திச் சொல்ல விரும்புவது, விவசாயிகளுக்கு மார்க்கெட்டிங் ஃபெஸிலிட்டீஸ் இருக்கவேண்டும். அவர்களுக்கு கட்டுபடியான விலை கிடைக்கவேண்டும். அப்படிச் செய்தால் விவசாயி நிலத்தை சும்மா போட மாட்டான். அப்போது விளம்பரம், பிரசாரம் இவை தேவையில்லை. நம் நாட்டு பிரதம மந்திரி அல்லது நம் முதன் மந்திரி அல்லது டைரக்டர்

இவர்கள் சுற்றறிக்கை விடுவது, வேண்டுகோள் விடுவது, இது போன்ற நடவடிக்கையால் பாச்சா பலிக்காது. கட்டுபடியான விலை கிடைக்கச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் அரசாங்கத்தினிடம் என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன என்று தனியாக அப்படி கேட்டறிந்து ஆராய்ச்சி செய்து உற்பத்தியைப் பெருக்க முன்வருவார்கள். அப்படி கேட்டறிந்து நாட்டிற்கு தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதை அதிகரிப்பதிலும், பருத்தி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள் இவற்றை அதிகரிப்பதிலும் நமக்குத் தேவையான அளவில் அவை கிடைக்கக் கூடிய அளவில் செய்ய தமிழ்நாடு விவசாயிகள் முன்வருவார்கள் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*கனம் சபாநாயகர்:* 'பாச்சா பலிக்காது' என்றால் என்ன அர்த்தம்?

**திரு. தோ. மு. நல்லசாமி:** முடியாது என்று அர்த்தம், கிராமத்தில் உபயோகிக்கக் கூடிய வார்த்தை அது.

* **திரு. சோ. ஆறுமுகம்:** கனம் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களை இங்கு சுருக்கமாக எடுத்துக் கூற விரும்புகிறேன். இன்றையதினம் வேளாண்மை துறை பற்றிய விளக்கமான ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதுபற்றிய எல்லாக் கருத்துக்களையும் கூறுவதற்கு சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் பஞ்சாயத்து யூனியன் வட்டார அளவில் ஏற்படுத்தியுள்ள சில திட்டங்களைப் பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட்டார அளவில், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு லட்சம் ரூபாய் அளவில் நிதி ஒதுக்கப்பட்டு அதன் மூலம் கிராமங்களில் ஒரு பதினைந்து திட்டங்களை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் நடைமுறைக்கு ஒத்து வருகிறதா என்பதை இந்த சர்க்கார் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பஞ்சாயத்து தோட்டம் அமைத்தல் என்பதும், பஞ்சாயத்து மூலம் கலவை உரம் தயாரிப்பது என்பதும், பஞ்சாயத்து மூலம் பசுந்தாள் உரம் தயாரிப்பது என்பதும், கருவிகள் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்படுவது என்பதும், பயிர்ப் பாதுகாப்பு நவீன விவசாயக் கருவிகள் வழங்குவது என்பதும், இவைபோன்ற காரியங்களில் தான் செலவு செய்ய வேண்டுமென்ற முறை உள்ளது. இதை மாற்ற வேண்டும். உரம் தயார் செய்வதற்கு குப்பை வண்டி வாங்குதல், குப்பைத் தொட்டி அமைத்தல் இவை கிராம மைனர் பஞ்சாயத்திற்கு அறவே பொருந்தாது. நகரப் பஞ்சாயத்துக்கள் மட்டும்தான் இத்திட்டத்தை செயல்படுத்தவேண்டும் என்ற முடிவான ஒரு உத்தரவை சர்க்கார் அமலாக்கவேண்டும். கிராம விதைப் பண்ணைகள் மானியத்தின்கீழ் வட்டார அளவில் 30,000 ரூபாய் ஒதுக்குகிறார்கள். இது அவ்வளவும் உண்மையில் செயல் படுத்தப்படுவதில்லை. மேல் அதிகாரிகளிடம் இருந்து, டைரக்டர் அளவில் இருந்து வரக்கூடிய காகிதங்களுக்கு பதில் அனுப்புவதற்குத்தான் அந்த வட்டாரத்தில் இருக்கிற ஈ.ஓ. (அக்ரி.)-க்கும்,





டெமான்ஸ்ட்ரேட்டருக்கும் காலம் சரியாக இருக்கிறது. அவர்கள் கிராம வேலைகளை கவனிப்பதற்குள்ள வசதிகள் போதிய அளவில் இல்லை. குறிப்புகள் எழுதுவதற்குத்தான் காலம் சரியாக இருக்கிறது. ஆகவே அங்கு ஒரு கிளார்க் நியமிப்பது நன்றாக இருக்கும். காய்கறி, பழச் செடிகள் இவைகளில் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

அடுத்தபடியாக, குழி வெட்டுவதற்கு என்று பணம் கொடுக்கிறார்கள். வெட்டுவதற்கு மூன்று ரூபாயும், அதை மூடுவதற்கு மூன்று ரூபாயும் கொடுக்கப்படுகிறது. அப்பணம் இன்று தவறான வழியில்தான் பயன்படுத்தப்படுகிறது. கிராம வட்டாரங்களில் நடைபெறுவது ஒன்றுதான். விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் பூச்சிக் கொல்லி மருந்து கொடுப்பது. மக்கள் இன்று அப்படிப்பட்ட மருந்துகளை வாங்கி உபயோகிக்க முன்வந்திருக்கிறார்கள். இப்போது 25 சதவீதம்தான் மான்யமாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இதை 75 சதவீதம் ஆக உயர்த்தினால் உள்ளபடியே பயிர்பாதுகாப்பிற்கு உதவியாக இருப்பதோடு உற்பத்தியும் அதிகரிக்கும், ஆகவே இந்த விகிதத்தை உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று விவசாயிகளுக்கும் விவசாய அதிகாரிகளுக்கும் ஒரு நிரந்தரமான தொடர்பு இல்லை. பஞ்சாயத்து யூனியனில் உள்ள ஆணையாளருக்கும் ஈ.ஓ. (அக்ரி.) போன்றவர்களுக்கும் தொடர்பு இல்லை. ஆகவே, ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள ஈ.ஓ. (அக்ரி.) டெமான்ஸ்ட்ரேட்டர் போன்றவர்களை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளரின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் அளவில் சிறிய நீர்ப்பாசன வசதிகள், ஊற்றுக் கிணறு போன்றவை மூலம் உற்பத்திக்கு அதிக வசதி செய்து தரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இவை எங்குமே காணப்படவில்லை. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை எல்லாம் பயன்படுத்தியாகிவிட்டது என்று சொல்கிறார்கள். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் கவனம் செலுத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. யூனியன் அளவில் ஒதுக்கப்படக்கூடிய பணம் நல்லமுறையில் செலவு செய்யப்படவேண்டும். மாவட்டத்திற்கு தகுந்தாற்போல், அந்த அந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் திட்டங்களை மாற்றியமைக்கவேண்டும். வட்டாரத்திற்குத் தகுந்தாற்போல் திட்டம் தீட்டப்படவேண்டும். ஒரு வட்டாரத்தில் நாலைந்து ஏரிகள் கட்டலாம் என்று சொன்னால் அதற்கான ஒரு தொகை இருக்கவேண்டும். அதை வாய்க்கால் வெட்டப் பயன்படுத்தலாம், கிணறு வெட்டப் பயன்படுத்தலாம், என்று இப்படியாக ஒரு தொகை ஒதுக்கவேண்டும். ஒரு இனத்திற்கு ஒரு தொகை என்று ஒதுக்கிவைத்திருப்பதால்தான், அதை அந்த இனத்திற்குத்தான் செலவிடலாம் என்று வைத்திருப்பதினால்தான் விவசாயத் திட்டங்கள் தோல்வி அடைகின்றன. ஒதுக்கப்பட்ட தொகை விவசாயத் தலைப்பின் கீழ் இருக்கவேண்டும். ஆகவே வாய்க்கால் வெட்டுவதற்கு, கிணறுகள் வெட்டுவதற்கு, உரம் விநியோகிப்பதற்கு என்று இப்படி எதற்காக வேண்டு

மானாலும் அப்பணத்தைச் செலவு செய்யலாம் என்ற ஒரு முறை இருக்கவேண்டும். அப்படியில்லாது தனித்தனியாக ஒதுக்கப்படுவதால்தான் திட்டங்கள் சரிவர செயல்படுத்த முடிவதில்லை.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவசாய இலாகா மான்யத்தைப்பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். இந்த மான்யத்திற்கு போதுமான பணம் ஒதுக்கப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. சென்ற வருடம் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டது, இந்த வருடம் ரூ. 8¾ கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீன் இலாகாவை குறைத்துக் கொண்டு பார்த்தால் பழைய நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் தொகையிலிருந்து அதிகமாக எதைச் செய்து விட முடியும் என்பதுதான் என் கேள்வி.

அடுத்தபடியாக, உணவில் அரிசி சாப்பிடுவது என்பதை மட்டும் வைத்துக்கொள்ளாமல் இதர வகைகளையும், உலகத்தில் பல பாகங்களில் இருப்பது போல் உபயோகப்படுத்தவேண்டும். அனிமல் ஹஸ்பண்டரியை அபிவிருத்தி செய்து, அதன் மூலம் கிடைக்கும் பொருள்களையும் உபயோகப்படுத்தினால்தான் இன்றைய உணவுப் பிரச்னையை தீர்க்க முடியும் என்பதுதான் வெகு காலமாக இந்த சட்டசபையில் சொல்லி வருகின்ற வாதம். அனிமல் ஹஸ்பண்டரியைப்பற்றி சொல்லும்போது, திடீரென்று ஒரு செய்தியை பார்த்தேன். மில்க் கமிஷனர் என்று ஒருவர் இருக்கின்றார். இந்த மில்க் பாக்டரியை, எஸ்டிமேட் கமிட்டி அங்கத்தினர் என்ற முறையில் நான் பல நாட்கள் போய் பார்த்திருக்கிறேன். எத்தனை ரூபாய் நஷ்டம் வருகிறது என்பதையும் பார்த்தோம். எதிர்பார்த்த பலன் எப்போது கிடைக்கும் என்றும் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விளக்கவேண்டும். இன்னும் பத்து வருடங்களிலாவது எதிர்பார்க்கின்ற அளவுக்கு பலன் கிடைக்குமா என்பதை சொன்னால் நன்றாக இருக்கும். அதே நேரத்தில் இதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை போடுவது அவசியமா என்று பரிசீலிக்கப்படவேண்டும் என்பது என்னுடைய கருத்து. இதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை போட்டுவிட்டு, அனிமல் ஹஸ்பண்டரியில் டெக்னிக்கல் நபர்களை இவர்களின் கீழ் போட்டிருப்பதாக அரசாங்க உத்தரவையும் பத்திரிகையில் பார்த்தேன். நான் கூறுவது இந்த பால் இலாகாவையும் அனிமல் ஹஸ்பண்டரி இலாகாவோடு சேர்த்துவிடலாம் என்பதுதான். இதற்கென்று தனியாக ஐ.ஏ.எஸ். அதிகாரி தேவையில்லை. இதைப்பற்றி பல ஆண்டுகளாக நாம் பரிசீலித்து வருகின்றோம். அது மட்டுமல்ல. மில்க் கமிஷனராக இருந்த ஒருவரை மில்க் சம்பந்தமான பல சோதனைகளை அறிந்து வருவதற்காக வெளிநாட்டுக்கு அனுப்பினோம். அவர் பயிற்சி பெற்று திரும்பி வந்தார். உடனே அவரை திடீரென்று மத்திய சர்க்காருக்கு அனுப்பிவிட்டோம். ஆகவே, இம்மாதிரி சந்தர்ப்பத்திற்கு தகுந்தவாறு, ஹேஷ்டியாக செய்யக்கூடிய காரியங்களை நிறுத்தவேண்டும். அட்மினிஸ்ட்ரேஷன் ஸைட் நல்ல முறையில் நடக்கவேண்டும் என்றால் டெக்னிக்கல் நபர்களை அவர்களின் கீழ் போடக்கூடாது. முன்னால் மின்சார போர்டு





எந்த முறையில் செயல்பட்டு வந்தது என்பதை நாம் பார்த்தோம். ஒரு ஐ.ஸி.எஸ்.-ஐ சேர்மனாக போட்டு விட்டு டெக்னிக்கல் நபர் ஒருவரை சீப்-என்சினியராக போட்டு இருந்தோம். இதன் காரணமாக சேர்மனுக்கும், சீப்-என்சினியருக்கும் சண்டைகள் தான் நடந்து கொண்டிருந்தன. இவர்களுக்குள் உள்ள தகராறை தீர்த்து வைப்பதற்கு தான் சர்க்காருக்கு நேரம் இருந்தது. இதன் காரணமாக மின்சார இலாகா நல்ல முறையில் செயல்படாமல் பல காலம் இருந்தது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அந்த முறையில் இங்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரியின் கீழ் டெக்னிக்கல் நபர்கள் வேலை செய்வது என்கின்ற நிலை இருந்து கொண்டிருந்தால், மின்சார போர்டில் ஏற்பட்ட பழைய நிலைமை வந்து விடுமோ என்பது எனக்கு பயமாக இருக்கிறது.

அனிமல் ஹஸ்பண்டரி டிபார்ட்மெண்டைப் பொறுத்தளவில் எவ்வளவோ ரிசர்ச் பண்ணவேண்டிய அவசியம் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. கோழிப்பண்ணைகள் மூலமாக கிராமப்புறங்களில் செல்வத்தைப் பெருக்க முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆனால், சர்க்காரிலிருந்து எந்த அளவுக்கு ஒத்தாசை செய்யப்படுகிறது என்பதைப் பார்த்தால் நன்றாகத் தான் இருக்கிறது. கோழிகள் வளர்ப்பதற்காக கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால், இந்தக் கடனை பெறவேண்டுமென்றால், முதலாவதாக என்னென்ன சாமான்கள் வாங்கப்போகிறோம் என்ற இன்வாய்ஸ்-ஐ அனிமல் ஹஸ்பண்டரி டைரக்டர் அவர்களுக்கு அனுப்பவேண்டும். அவர்கள் அதை அப்ரூவ் செய்த பிறகு, நேரடியாக யாரிடமிருந்து சாமான்கள் வாங்கப்போகிறோமோ அவர்களுக்கு பணத்தைக் கொடுப்பார்கள். அவர்களிடமிருந்து விவசாயிகள் சாமான்களை வாங்கிக்கொள்ளலாம், இதெல்லாம் முடிவடைவதற்கு ஆறு மாதங்கள் ஆகிவிடும். இவ்வளவு பின்பிரிக்ஸ் எதற்காக இருக்கவேண்டும் என்று தெரியவில்லை. ஏதோ நூறு கோழிகள் வளர்த்தால் அதற்கு 1,000 ரூபாய் கொடுக்கிறார்கள். இதை நேரடியாகவே கொடுத்துவிடலாம், அதல்லாமல், ஐந்து ரூபாய்க்கு சாமான் வாங்கவேண்டுமென்றாலும், அதற்கென்று, இன்வாய்ஸ் வாங்கவேண்டும், டைரக்டருக்கு அனுப்பவேண்டும், பாஸ் செய்யவேண்டும். இப்படியெல்லாம் பல முறைகள். இவையெல்லாம் எதற்காக என்றே புரியவில்லை. சர்க்கார் இதற்கு லோன் கொடுக்கிறார்கள், உயரிய நோக்கம், இதைச் சரியான முறையில் செயல்படுத்துவதற்கு, நான் முன்னால் சொன்னது மாதிரி இவ்விதமான பல பின்பிரிக்ஸ்களை எடுத்துவிட்டு நேரடியாக கொடுத்துவிடவேண்டும், இப்படிப் பட்ட லோன் கொடுப்பதைப் பற்றி நான் முன்பே ஒரு சஜஷன் கொடுத்தேன். அதாவது விவசாயிகளுக்கு அவர்களுக்கு இருக்கின்ற சொத்துக்களின் அடிப்படையில் கார்டு கொடுத்துவிடவேண்டும். பாங்கில் செக்கை கொடுத்து எப்படி பணம் வாங்குகிறோமோ அம்மாதிரி விவசாயிகளுக்கு கார்ட் சிஸ்டம் இருக்கவேண்டும். அவர்களுக்கு என்னென்ன முறையில் எல்லாம் லோன் கொடுக்கிறோம் என்றெல்லாம் கனம் அமைச்சர் மன்றாடியார் அவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறார்கள், இவற்றினால் எல்லாம் விவசாயிகளுக்கு உடனடி

[திரு. கே. டி. கோசல்ராம்] [14th March 1966

யாக எந்தவிதமான பலனும் இல்லை. இதை மந்திரிகள் சற்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும். 800 ரூபாய் கடன் வாங்குபவர்கள், 300 ரூபாய் செலவு செய்யவேண்டியிருக்கிறது. கடைசியில் 500 ரூபாய் தான் கையில் போய் கிடைக்கிறது. அதுவும் உடனே கிடைப்பதில்லை. ஆகவே, நிர்வாகத்தில் இருக்கின்ற இப்படிப்பட்ட கோளாறுகளை எல்லாம் தவிர்க்கவேண்டும். அரசாங்கம் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் உயரிய திட்டங்கள், அழகான திட்டங்கள், அழகான கொள்கைகள். ஆனால் மக்கள் மத்தியில் எந்த அளவுக்கு இவை பயன்படுகின்றன என்பதை மந்திரிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவற்றை சரியான முறையில் செயல்படுத்தினால், அரசாங்கத்தினுடைய கொள்கைகளை இப்போதிருக்கும் எதிர்க்கட்சியல்ல, யாராக இருந்தாலும் ஆளும் கட்சியைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. மக்களின் முன்னாலும் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஏதோ அது இது சொல்லலாம், நாடகமாக காட்டலாம். ஆனால் ராத்திரியில் காட்டப்படுகிற நாடகம் ராத்திரியோடு போய்விடும். நடைமுறையில் ஒன்றும் பலனளிக்காது. ஆகவே, இதைப்பற்றி மந்திரிகள் ஆலோசித்துப்பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பயிர் செய்யாமல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. சர்க்கார் நிலமாக கிடக்கின்றன. சில நிலங்கள் டிரஸ்டின் பெயரில் இருக்கின்றன. குறிப்பாக நான்குநேரி தாலுகாவில் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் வரையிலும் எந்தவிதமான பயிரும் செய்யாமல் சும்மா கிடக்கின்றன. சாதாரணமாக லிமிட்டெட் கம்பெனிகள், இன்டஸ்ட்ரிகளை 40 ஆயிரம், 50 ஆயிரம் போட்டு 'வெல்' போடுவதற்கு முன்வந்தால் ஏற்படுத்துகிறார்கள், அம்மாதிரி இவைகளை எடுத்து ரூபாய் 20 ஆயிரம், 40 ஆயிரம், 50 ஆயிரம் போட்டு 'வெல்' போடுவதற்கு முன் வந்தால் அவர்களுக்கு கொடுக்க முன் வரவேண்டும். (குறுக்கீடு.) உச்ச வரம்பு கணக்கை இதில் பார்க்கவேண்டிய அவசியமில்லை இப்போது அரசாங்கமே பல இடங்களிலும் ரூபாய் 30 ஆயிரம், 40 ஆயிரம் செலவில் கம்யூனிட்டி வெல் போட்டுக்கொடுக்கிறது. அந்த முறையில் இந்த நிலங்களை எடுத்து பயிர் செய்ய முன் வருகின்றவர்களுக்கும் உதவிகளை கொடுத்து, அவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது, கிராமங்களில் 'எக்ஸ்டென்ஷன் ஆபீசர்—(அக்ரிகல்சர்)' வேலை செய்து வருகிறார். இவர் யாருடைய மேற்பார்வையில் இருந்து வருகிறார் என்பது பிரச்னையாக இருக்கிறது. இப்போதுள்ள முறை ஏதோ இருக்கின்ற ஜனநாயக முறைகளை சோதனை போடுவதாக இருக்கிறது. இந்த நிலை இல்லாமல், டைரக்டர் ஆஃப் அக்ரிகல்சருக்கு கீழே இவர்கள் இருக்கும்படியான அளவில் இருந்தால் குறிப்பிட்ட வேலைகளை செய்வதற்கு வசதியாக இருக்கும். இப்போதுள்ள முறையில் இவர்கள் பஞ்சாயத்து யூனியன்கீழ் இருக்கின்றார்களா, அல்லது டைரக்டர் அவர்களின் கீழ் இருக்கின்றார்களா என்பதை



14th March 1966] [திரு. கே. டி. கோசல்ராம்]

விவசாயிகள் நன்றாகத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. ஜனநாயகத்தை பரிசோதனை செய்வது போல் இல்லாமல் ஈ.ஓ. (அக்ரிகல்சர்) அதிகாரியை அக்ரிகல்சர் டைரக்டர் அவர்களின் பொறுப்பிலேயே இருக்கும்படியான அளவில் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று இந்த சபையில் வைக்கப்பட்டிருக்கின்ற விவசாய சம்பந்தமான மான்யக் கோரிக்கைகளை வரவேற்று சில கருத்துக்களை கூற ஆசைப்படுகிறேன். இங்கு வழங்கப்பட்டிருக்கின்ற ஓர் அறிக்கையில் . . .

'To arrest the increase in prices of foodgrains, maximum prices for paddy and rice have been fixed for each season.'

என்ற ஒரு தலைப்பு காணப்படுகிறது. சாதாரணமாக . . .

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" . ...

என்ற வள்ளுவர் கோட்பாட்டுக்கு இணங்க பல வகையான இடையூறுகளை வைத்தும் கூட விவசாயத் தொழில் தான் பெரிய தொழிலாக விளங்குகின்றது என்பது அதனுடைய கொள்கை. இந்த விவசாயத் தொழிலுக்கும் அதில் ஈடுபட்டிருக்கின்ற உழவர் பெருங்குடி மக்களுக்கும் உணவு கன்ட்ரோல் என்பது பெரும் இடையூறாக இருக்கின்றது என்பதை தாழ்மையாக தெரிவித்துக்கொள்கிறேன். உணவு கண்ட்ரோல் என்று சொல்லக்கூடிய ஒன்று, மிகவும் இன்றியமையாததொன்று என்றிருக்குமானால், அதை சகித்துக்கொண்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் உழவர் பெருங்குடி மக்கள் இருக்கிறார்கள் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். இருந்தாலும் கூட அவர்கள் விளைவிக்கின்ற உணவு தானியங்களுக்கு அதிகபட்ச விலையை நிர்ணயம் செய்கின்ற பொழுது, அது விலையேற்றத்தை தடுப்பதற்கு கருவியாக அமைந்திருக்கிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனாலும் 11.00 a.m.
கூட, அந்த விலைவாசி ஏற்றம் என்று சொல்லக் கூடியது அந்த உழவர் பெருங்குடி மக்களுக்குத்தான் உள்ளது என்பதைக் கருத்திலே கொள்ளவேண்டும். அவர்கள் வாங்குகின்ற பண்டங்களின் விலை அதிகபட்சமாக உயர்ந்திருக்கும்போது, அவர்கள் விற்கும் பண்டங்களுக்கு மட்டும் கட்டுப்பாடு விதித்து, அதிகபட்ச விலை நிர்ணயம் செய்து, அவர்கள் வாங்குகின்ற பொருள்களுக்கு அந்த நிலையை ஏற்படுத்தாமல் விட்டிருப்பது மிகவும் அவல நிலையாக இருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். ஆதலாலே, இந்த உணவு தானியங்களுக்கு குறைந்தது, 6 மணங்கு கொண்ட பொதிக்கு 10 ரூபாயாவது அதிகபட்சமாக விலை நிர்ணயம் செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சாதாரணமாக உழவர் பெருங்குடி மக்களையும், அவர்கள் தொழில் ஆகிய உழவு என்பதையும் வேறுபடுத்திப் பார்ப்பது என்பது கூடாது. பட்டினப்பாலை என்று சொல்லக் கூடிய நூலில் உழவர்களைப்பற்றி அழகான வர்ணனை இருக்கிறது—

‘கொலை கடிந்தும் களவு நீக்கியும்
அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
நல் ஆனொடு பகடு ஓம்பியும்
நான் மறையோர் புகழ் பரப்பியும்
பண்ணியம் அட்டியும் பசும்பதம் கொடுத்தும்
புண்ணியம் முட்டா தண் நிழல் வாழ்க்கை
கொடு மேழி நசை உழவர்’

என்று சொல்லப்படுகிறது. ‘கொடு மேழி நசை உழவர்’ என்று சொன்னால், வளைந்து இருக்கிற மேழியை மிகவும் உயிரோடு ஒக்க விரும்புகின்ற உழவர் பெருங்குடி மக்கள் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறப்பட்டிருக்கின்றது. அந்த விதமாக இருக்கிற உழவர் பெருங்குடி மக்களை ஓம்புதல் செய்யாமல் உழவுத் தொழிலை ஓம்புவது என்பது சரியல்ல. அவர்கள் வாழ்க்கைக்கு ஏற்ப, அவர்களுடைய முட்டு வழிச் செலவை மட்டும் கருத்தில் கொள்ளாமல், வாழ்க்கைச் செலவுகளையும் கருத்தில் கொண்டு விலை நிர்ணயம் செய்தால்தான் நிச்சயமாக உணவுப் பண்டங்களின் உற்பத்தி அதிகரிக்குமேயன்றி, கனம் அங்கத்தினர் நல்லசாமி அவர்கள் சொன்னது போல என்னதான் திட்டம் தீட்டினாலும், என்னதான் பிரசாரம் செய்தாலும் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாது என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கின்றேன்.

**திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவாதத்திலே இருக்கிற வேளாண்மைத் துறையின் மீது எங்கள் கட்சியினர் கொண்டு வந்திருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த வரையில் இந்த சர்க்காருடைய மூன்றாவது திட்டம் தோல்வியுற்றது என்பதை நாம் நன்றாகக் காண முடிகிறது. இன்றைய தினம் விவசாயிகளைப் பொறுத்த வரையில், விவசாயத்தை ஊக்குவிக்கிற நாம் விவசாயிகளைத் திருப்திபடுத்த முடியாத நிலையில் இருந்தால் நிச்சயம் இந்த விவசாய உணவு உற்பத்தி ஏற்படாமல் பாதகத்தைத்தான் ஏற்படுத்தும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் விவசாயிகளுடைய நிலைமையைப் பொறுத்த வரையில். அவர்களுடைய வாழ்க்கைச் செலவு, அவர்களுடைய வருமானங்களைப் பார்த்தால் அவர்கள் மிகவும் கஷ்ட நிலைமையில் தான் உள்ளார்கள். விவசாயிகளுடைய உற்பத்திச் செலவைப் பார்த்தாலும், 1960-ம் வருஷத்தில் இருந்த செலவை விட இப்போது 1½ மடங்கு அதிகமாக இருப்பதை நாம் நிச்சயமாகக்



காணமுடியும். விவசாயிகளைப் பொறுத்த வரையிலே சென்ற வருஷத்தில் கொண்டு வந்த அதிகமான வரியினாலும், ஆங்காங்கு உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் போட்டிருக்கிற அபிவிருத்தி வரிகளினாலும் அவர்கள் மிகவும் கஷ்டப்படும் நிலையில் உள்ளார்கள். இந்த விவசாயத் துறையைப் பொறுத்த வரையில் அதை நிறைவேற்றுகிற பொறுப்பை இப்போது உள்ள பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற நிலைமையில், அது நன்றாக நடைபெறுகிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் உள்ள விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் எந்த ஒரு கிராமத்திற்காவது சென்று அங்கு உள்ள விவசாயிகளைப் பார்த்து, விவசாயிகள் நிலத்தின் தரத்தைப் பார்த்து, அவர்களுடைய பணிகளை நிறைவேற்றுகிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாக நான் அறிந்த வரையில் இல்லை என்று கூற முடியும். அந்த வகையிலே பஞ்சாயத்து யூனியனில் உள்ள மற்ற பொறுப்புகளை எடுத்துக்கொண்டாலும், விவசாயிகளுக்காகக் கொடுக்கப்படுகிற கடன்கள், அவர்கள் விவசாயம் ஆரம்பமாகிற காலத்தில் கடன் மனு போட்டால் அறுவடை ஆகிற காலத்தில்தான் அவர்களுக்குக் கிடைக்கிறது என்பதை நாம் நன்றாகப் பார்க்க முடிகிறது. எனது சொந்த உதாரணத்தைக் கொண்டு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய பகுதியில் விதை வேண்டுமென்று யூனியன்களிடம் வேண்டிக்கொண்ட என்னுடைய நண்பர்களுக்கு தை மாதம் கழித்து விதை கிடைத்ததை நான் பார்த்தேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்த அளவுக்கு அலட்சியப் போக்காகச் சென்றால், விவசாயிகள் தக்க பாடத்தைத் தருவார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தரும் நிலையில் உள்ளோம். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றியிருந்தாலும், கிராமங்களில் உள்ள சிறு சிறு குட்டைகளை, ஏரிகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டிய நிலையில் இருக்கும்போது உண்மையிலேயே எதுவும் நடைபெறவில்லை என்று கூறிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் 10 கிராமங்களில் ஏரிகள், நகரப்பட்டா ஏரி, நெடுஞ்சேரி ஏரி, போன்ற பல ஏரிகள் இருந்தும், கடந்த நான்கு ஆண்டுகளாகப் பல இலாக்காக்களில் முயன்றும் ஆங்காங்கு உள்ள அதிகாரிகள் ஏதாவது பதிலைச் சொல்லும் நிலையில்தான் இருக்கிறார்கள். அவைகள் சீர்திருத்தம் செய்யப்படாமலேயே இருக்கின்றன. சிதம்பரம் வட்டாரத்தைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுக்கும் ராஜன் வாய்க்காலைப் பொறுத்த வரையில், கொள்ளிடம் ஆரம்பத்திலேயே வாய்க்கால் தூர்ந்து, இந்த மாதத்தில் தண்ணீர் கொடுக்க முடியாத நிலையில் ஆங்காங்கு அதிகாரிகள் தவிக்கும் நிலைமையைப் பார்த்தேன். அதையும் போக்கித் தர சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி] [14th March 1966

மற்றும் விவசாயத்தைப் பொறுத்த வரையில் விதைகள் கொடுக்கும் நிலைமையைப் பார்த்தால் ஆங்காங்கு உள்ள கிராம சகாயக்குருகள் மூலம் கொடுக்க வகை செய்திருக்கிறார்கள். அதுவும் சரியான முறையில் கொடுக்கப்படவில்லை. நல்ல முறையில் விவசாயிகளுக்கு விதைகளை நேரடியாகக் கொடுத்து விநியோகிக்கிறார்களா என்று பார்த்தாலும் அந்த முறையில் நடைபெறவில்லை. இந்த நிலையில் விவசாயிகளுடைய தரம் மேலும் மேலும் கீழே போய்க்கொண்டே இருந்தால் எதிர்காலத்தில் உணவு உற்பத்தி கெட்டு . . . (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. சு. சின்னய்யன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கிடைத்திருக்கும் சிறிய அளவு நேரத்திலே முதலிலே என் தொகுதிப் பிரச்னையைச் சொல்லிவிட்டு மற்றதைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

நான் வரண்ட பிரதேசத்திலிருந்து வந்திருக்கக் கூடிய பிரதிநிதி. நாமக்கல் தாலூகா கிணற்றையே நம்பி வாழும் தாலூகா. தண்ணீருக்காக கிணறு தோண்ட வேண்டுமானால் 60 அடி, 100 அடி தோண்டி அந்த அளவு ஆழத்திலிருந்துதான் தண்ணீர் வரவேண்டும். மழையை நம்பி அந்தப் பகுதி வாழ்கிறது. மழை காலத்தில் வரக் கூடிய தண்ணீரை ஆங்காங்கே இருக்கக் கூடிய ஏரிகளில், பள்ளங்களில் தேக்கி, விவசாயிகளுக்குத் தண்ணீர் வசதி ஏற்பாடு செய்து கொடுத்தால் அந்தப் பகுதி விவசாயிகள் நிச்சயமாக உணவு உற்பத்தியை மிக அதிகமாகச் செய்ய முடியும். அதுவும் சேலம் ஜில்லா விவசாயிகள் கல்லிலே நார் உரிக்கக் கூடியவர்கள். கல்லிலே நார் உரிப்பது என்று சொன்னால் கல்லைக் கூட நார் ஆக்கிவிடுவார்கள். அந்த அளவுக்கு திறமைசாலிகள். பாறையில் கூட மண்ணைக் கொட்டி விவசாயம் செய்யலாம் என்ற அளவுக்கு ஊக்கம் இருக்கிறவர்கள். தண்ணீர் இல்லாததால் எப்படி செய்வது என்றுதான் கஷ்டப்படுகிறார்கள். இந்தக் கஷ்டத்தினால் விவசாயிகளெல்லாம் படித்து உத்தியோகத்திற்கு போக ஆரம்பித்துவிட்டார்கள். நல்ல முறையில் விவசாயம் செய்து அபிவிருத்தி அடையவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறவர்கள் உத்தியோகத்திற்குப் போக ஆரம்பித்து விட்டார்கள். விவசாயத்தை நம்பினால், தண்ணீர் இல்லையே என்ன செய்வது என்று இப்போது உத்தியோகத்தை நம்பும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் வெகு சீக்கிரமாக ஏதாவது ஒரு திட்டத்தை நாமக்கல் தாலூகாவுக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஜேடர்பாளையம் பெட் ரெகுலேட்டரிலிருந்து ஒரு வாய்க்கால் வெட்டி அந்தப் பகுதிக்கு தண்ணீர் விடுவதற்காக ஏற்பாடு செய்வதாக சர்க்கார் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்கள். அந்த வேலையை சர்க்கார் இது வரையில் எடுத்துக்கொள்ளவில்லை. இந்தத் தேர்தல் காலத்திலாவது அந்த வேலையை சீக்கிரம் எடுத்து முடித்துக்கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை ஏற்படும். அவர்களெல்லாம் குதூகலமாக இருப்பார்கள்.



14th March 1966]

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்கத்தினுடைய முக்கிய நோக்கமும், கொள்கையும் என்னவென்று சொன்னால், தேர்தல் காலத்திற்காக மட்டும் கால்வாய் வெட்டுவது என்பது இல்லை. விவசாய மக்கள் நல்ல முறையில் பயன் அடைந்து, உணவு உற்பத்தி செய்து, சுபீட்சமாக வாழவேண்டும் என்பதுதான். ஆகவே, தேர்தல் காலத்திற்காக கால்வாய் வெட்டவேண்டும் என்று சொல்லுவது சரியல்ல.

**திரு. சு. சின்னய்யன் :** அமைச்சர் அவர்கள் அப்படி நினைக்கக் கூடாது. இந்த அரசு தேர்தலுக்காக வந்த அரசு அல்ல. நாட்டிலே இருக்கிற மக்கள் சுபீட்சமாக வாழவேண்டும் என்று கங்கணம் கொட்டிக்கொண்டிருக்கிற அரசு. ஏதோ இந்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு நான் சொன்னேனே தவிர வேறு விதத்தில் இல்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் கோபிக்காமல் . . .

**கனம் சபாநாயகர் :** அமைச்சர் அவர்கள் கோபிக்கவில்லை.

**திரு. சு. சின்னய்யன் :** ஆகையினால் இந்த சந்தர்ப்பத்தில் செய்தால் மக்கள் சந்தோஷமாக, குதூகலமாக இருப்பார்கள் என்றுதான் சொன்னேன். விவசாயத்தைப்பற்றி வானளாவ நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணே உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்று பாரதியார் வீர முழக்கம் செய்திருக்கிறார்கள். ஆனால், உண்மையில் பார்த்தால் யார் உழவுக்கு இப்பொழுது வந்தனை செய்கிறார்கள்? சட்டசபையில் இருப்பவர்களுக்குக் கூட நான் சொல்லுகிறேன். எல்லோரும் விவசாயத்தில் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் நேரிடையாக ஈடுபடவேண்டும், அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் உணவு பற்றாக்குறையை வெகு சுலபமாக தீர்த்துவிட முடியும். நான் பெருமைக்காக சொல்லிக்கொள்ளுகிறேன் என்று நினைக்க வேண்டாம். நான் நேரிடையாக விவசாயத்தில் ஈடுபடுகிறேன். காலையில் 10 மணி வரைக்கும் என்னை தோட்டத்தில் தான் மண் வெட்டியும் கையுமாகப் பார்க்கலாம். அதிகாரிகள் வந்தால் கூட 'என்ன, இந்த மாதிரி வேலை செய்துகொண்டிருக்கிறீர்கள்' என்று சொல்லுவார்கள். அந்த மட்டாவது நம்முடைய சுயதேவையை பூர்த்தி செய்துகொள்ளலாம் என்றுதான் நான் ஊக்கத்தோடு வேலை செய்கிறேன். உணவு உற்பத்தி பெருகவில்லை என்று சொல்லுகிறோம். எல்லோரும் படிக்கப் போய்விட்டால் எப்படி உணவு உற்பத்தி பெருகும்? நாம் விவசாயம் செய்யாமல் வேறு காரியங்களில் ஈடுபட்டால் உணவு உற்பத்தியை எப்படி பெருக்க முடியும்? ஆகவே, நேரிடையாக நாம் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் எடுத்துக்கொள்ளவேண்டும். விவசாயிகளுக்கும் அதன் மூலம் நல்ல தென்பு ஏற்படும். படித்தவர்களே, சட்டசபை அங்கத்தினர்களோ இம்மாதிரி நேரிடையாக விவசாயம் செய்கிறார்கள், நாமும் விவசாயத்தில் ஈடுபடலாம் என்று விவசாயிகளுக்கு அதில் அக்கறை ஏற்படும். கனம் தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் நேரிடையாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற

காரணத்தினால் தான் விவசாயிகளுக்கு நெல் விலை எவ்வளவு அதிகமாக நிர்ணயித்துக் கொடுக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக நிர்ணயித்துக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். நான் விவசாயத்தில் நேரிடையாக ஈடுபட்டிருக்கிற ஒரே காரணத்தை வைத்துச் சொல்லுகிறேன். இப்பொழுது இருக்கிற விலை நிச்சயம் கட்டுபடியாகாது. அந்த அளவுக்கு விலை குறைவாகத்தான் இருக்கிறது. விவசாயிகளுக்கு நல்ல உற்சாகமும், ஊக்கமும் ஏற்பட வேண்டுமென்றால் அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய தான்யத்திற்கு நல்ல விலை இருக்கவேண்டும். மற்றபடி சாதாரணமான பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். அதையெல்லாம் அரசாங்கம் கண்காணிக்கத் தயாராக இருந்தால்கூட, இதில் சர்க்கார் கொஞ்சம் அதிகமாக அக்கறை காட்டவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் ஏற்கனவே சொன்னது போல, எங்கள் பிரதேசம் ஒரு வரண்ட பிரதேசம். அதற்கு நல்ல பாதுகாப்பு செய்வதற்காக ஜேடர்பாளையம் பெட் ரெகுலேட்டரிலிருந்து ஒரு வாய்க்காலைக் கொண்டு வந்து அந்தப் பகுதியில் தண்ணீரை விட்டால், 6 மாதங்களுக்கு குளங்களில் தண்ணீர் தேங்கி நிரம்பியிருக்கும், கிணறுகளில் ஊற்றும் இருக்கும், விவசாயம் நல்ல முறையில் நடக்கும். . . (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. ம. கமலநாதன்:** கனம் சபாநாயகர் அவர்களே, விவசாய அமைச்சர் அவர்கள் வேளாண்மைக்காக கோரியிருக்கும் மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த 10 ஆண்டு காலமாக ஒவ்வொரு ஆண்டும் இத்தனை கோடி ரூபாய், கோடிக்கணக்கில் விவசாயத்திற்காக நாங்கள் செலவு செய்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரம் கொடுத்தார்கள். இந்த ஆண்டு சுமார் ரூ. 10 கோடிக்கு மேல் தேவைப்படும் என்ற அளவுக்கு புள்ளி கொடுத்தார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்தனை கோடி ரூபாய் செலவழித்தும், நாம் அடையவேண்டிய இலக்கை அடைந்திருக்கிறோமோ என்றால் இல்லை. நம்முடைய இலக்கு 16.50 லட்சம் டன் என்றிருக்க, நம்முடைய சாதனை 13,30 லட்சம் டன் தான் என்றிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு சராசரி நாம் அதிகமாக விளைவித்தது 2.66 லட்சம் டன். இப்படியிருக்க இந்த ஆண்டு 4.53 லட்சம் டன் எப்படி அதிகமாக நாம் விளைவிக்க முடியும் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த குறைவுக்கான காரணங்களை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். பாசன வசதி செய்து தர இயலவில்லை. ரசாயன உர வகைகளின் பற்றாக்குறை மிகுதியாயிருந்தது. உள்ளூர் எரு பற்றாக்குறை இருந்தது, தேவையான அளவுக்கு நகரக் குப்பை எரு தயாரிக்க முடியவில்லை என்ற அளவுக்கு குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.





இந்த ஆண்டு இப்படிப்பட்ட குறைகளை எப்படி நிவர்த்திக்க முடியும், அதற்கான திட்டங்கள் என்ன வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

மேலும், சாகுபடி செய்யும் நிலப்பரப்பு அதிகரிப்பது ஒவ்வொரு ஆண்டும் குறைந்துகொண்டே போயிருக்கிறது. உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால், நெல் விளைவித்த நிலப்பரப்பு 1950–51-ல் 42.99 லட்சம் ஏக்கராக இருந்தது. 1955-56-ல் 54.56 லட்சம் ஏக்கர், 1960-61-ல் 62.21 லட்சம் ஏக்கர். 1955-56 வரையில் ஐந்தாண்டில் 27 சத விகிதம் அதிகமாகியிருக்கிறது. அதற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளிலே 14 சத விகிதம் தான் அதிகமாகியிருக்கிறது. மேலும் நாம் அதிகமான நிலப்பரப்பிலே சாகுபடி செய்ய முடியும் என்பதற்கு சாத்தியம் இல்லாமல் இருக்கிறது. பெரும் பாசனத் திட்டத்தின்கீழ் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரப்படி, மூன்றாவது திட்ட காலத்தில் 2.08 லட்சம் ஏக்கர் அளவுக்கு பாசன வசதி கொடுக்கும் திட்டத்திற்கு மாறாக 1.01 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறைவு 1.07 லட்சம் ஏக்கர். இப்படியிருக்க நான்காவது திட்ட காலத்தில் 1.85 லட்சம் ஏக்கர் புதிய பரப்பளவுக்கு பாசன வசதி எப்படி கொடுக்க முடியும் என்று தெரியவில்லை. உரத்தைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் அழகான புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். உரம் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. நமக்கு சென்ற ஆண்டுத் தேவை 6,95,471 டன். ஆனால், நமக்குக் கிடைத்ததோ 2,71,059 டன் தான். மந்திரி அவர்கள் இன்று காலையிலே ஒரு துணைக் கேள்விக்கு பதில் அளிக்கும் நேரத்தில்கூட நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்ற அளவுக்குச் சொன்னார்களே தவிர, எத்தனை லட்சம் டன் கிடைக்கும் என்ற அளவுக்குக் கூட அவர்களால் புள்ளிவிவரம் தர இயலவில்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை பொறுத்தவரையிலே 1970-71-ல் ஒரு ஆள் ஒன்றுக்கு 18 அவுன்ஸ் தர முடியும் என்ற அளவுக்கு புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். 18 அவுன்ஸ் தர வேண்டும் என்றால் 61.41 லட்சம் டன் விளைந்தால் போதும். 1960-61-ல் நமது உணவு தான்ய உற்பத்தி அளவு 53.14 லட்சம் டன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் நம்முடைய சாதனை 13.30 டன். ஆக நமக்கு இப்பொழுது கிடைத்திருப்பது 66.44 லட்சம் டன். இதை மெட்ரிக் டன்னாக மாற்றினால் 67.76 லட்சம் டன் நமக்கு கிடைத்திருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உற்பத்தியாகும் மக்கள் தொகையை கணக்கிட்டு, ஒரு ஆளுக்கு 18 அவுன்ஸ் கொடுத்தால் 61.41 லட்சம் டன் நமக்குப் போதும். ஆனால், மூன்றாவது திட்ட முடிவிலேயே நமக்கு 67,76 லட்சம் டன் கிடைத்திருக்கிறது என்றால் ஏறக்குறைய இப்பொழுதிருக்கிற மக்கள் தொகையை வைத்துக் கணக்குப் பார்த்தால் ஆள் ஒன்றுக்கு சுமார் 20 அல்லது 25 அவுன்ஸ் கொடுக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். கேரளாவில் 5 அவுன்ஸ் கொடுத்தார்கள். இப்பொழுது ஒரு வேளை பட்டினியிருந்தும்

நமது உணவு உற்பத்தி உபரியாக இல்லை. மக்கள் தொகையை வைத்துப் பார்த்தால் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கு உபரியாக இருக்க வேண்டாமா? மந்திரி அவர்கள் கொடுத்த கணக்குப்படி இவ்வளவு விளைந்திருக்கிறது. அந்த வகையில் பார்த்தால் உபரி தான்யம் எங்கேயாவது ஓடி ஒளிந்துவிட்டதா? அல்லது கள்ளச் சந்தையில் மறைந்துவிட்டதா? யாரை ஏமாற்ற கொடுக்கப்பட்ட புள்ளிவிவரம் இவை? கொடுக்கப்பட்ட புள்ளி விவரம் தவறு என்று அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன். எனது தொகுதியில் கொச்சம்பள்ளி என்ற இடத்தில் ஒரு வெடரினரி டிஸ்பென்சரி கட்டப்பட்டது. 1960-61-ல் கட்டப்பட்ட இந்த டிஸ்பென்சரிக்கு இதுவரையில் டாக்டரோ, மருந்துகளோ கொடுக்கப்படவில்லை. காரணம் கேட்டால்—டைரக்டர் அப்பொழுது வந்திருந்தார்கள்—நீங்கள் எந்தத் திட்டத்தின் கீழ் கட்டினீர்களோ, எங்களுக்குத் தெரியாது. டாக்டருக்கு குவார்ட்டர்ஸ் இல்லை. எக்விப்மெண்டு, டாக்டர் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் நேரில் வந்தபொழுதும் எடுத்துச் சொன்னேன். கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. வெ. எல்லம நாயுடு: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சரால் கொண்டு வரப்பட்டுள்ள, வேளாண்மை துறை மானியத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(திரு. மா. தண்டாயுதபாணி தலைமை)

சென்ற இரண்டு திட்டங்களிலே பல திட்டங்களையும் நிறைவேற்றி, மூன்றாவது திட்டத்திலே விவசாயத்திற்கு முக்கியமான இடம் கொடுத்து, நல்ல முறையிலே செயல்பட்டு வந்திருக்கிறது. அதற்காக அந்த இலாகா அமைச்சர் அவர்களையும் அந்த இலாகாவைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகளையும் நான் பாராட்டுகின்றேன். அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள இந்த அறிக்கையிலே, பெரிய பாசன திட்டங்கள் அநேகமாக பூர்த்தி அடைந்து விட்டன என்று காட்டப்பட்டு உள்ளது. கோவை ஜில்லாவைப் பொறுத்த வரையில் மிகக் கடினமாக உழைக்கக் கூடிய விவசாயிகள், விவசாயத்திலே நன்கு பயிர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அங்கே உள்ள குறையெல்லாம், தண்ணீர் இல்லாத குறை ஒன்றுதான் அதிகமாகத் தென்படுகிறது. அதே போல மற்றும் சிறு சிறு குறைபாடுகள், பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் ஓரளவு முடிந்துள்ளன என்று சொன்னதை பார்த்து ஆறுதல் அடைகின்றேன். குந்தா கழிவு நீர்த் திட்டம், பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிகிறது. அந்த திட்டத்தை அமல் படுத்தும் போது, கோவை தாலூக்கா, பல்லடம், அவனாசி தாலூகாக்களுக்கு விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அப்படி





விஸ்தரிக்காமல் உணவுப் பொருள் உற்பத்தி செய்யப் போதுமான நிலைமை ஏற்படும். குறிப்பாக, என்னுடைய தொகுதி பொறுத்தவரையிலும் சில மத்தியதர நீர்ப்பாசன திட்டங்களை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நொய்யல் ஆறு திட்டம் பரிசீலிக்கப்படுகிறது என்று தெரிகிறது. அதேபோல, கொடுங்கரை, மாங்கரை திட்டமும் இருக்கிறது. முண்டாந்துறை, சோமையனபள்ளம், ஜம்புகுண்டி, பண்ணிமடை முதலிய விசேஷ சிறு பாசன திட்டங்களில் சேர்த்திருக்கிறார்கள். அவைகளை உடனடியாக எடுத்துக் கொண்டு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கண்மாய்கள், குட்டைகளைப் பொறுத்த வரையில், மிக மிக துரிதமாக வேலைகள் நடைபெறுகின்றன. இருப்பினும், நிர்வாகத்தில் இருக்கும் செயல்படுத்தும் முறைகளை இன்னும் சற்றுத் தளர்த்த வேண்டும். சுமார் ரூ. 50,000 பொருமானமுள்ள வேலைகளை, கண்மாய்கள், குட்டைகள் செப்பனிடுவதை, பொதுவாக மாவட்டக் கலெக்டர்களுக்குக் கொடுத்து விடலாம். வேலைகள் துரிதமாக நடக்கும். ரூ. 50,000-க்கு மேற்போகும் தொகைகள் கொண்ட வேலைகளை உணவு உற்பத்தி மேற்பார்வைப் பொறியாளரிடம் கொடுக்கலாம். அப்பொழுது உணவு உற்பத்தி நன்றாக நடைபெறும். ரூ. 30,000 ஆக இருந்தால், அது ரெவின்யூ போர்டுக்கு அனுப்பப்படுகிறது. அங்கே, 3, 5 வருஷங்கள் ஆகி விடுகின்றன. இவைகள் துரிதமாக செய்யப்படவேண்டும்.

கிணறுகளுக்கு கடன் கொடுக்கிறார்கள். பிறகு மின்சார இணைப்புக் கொடுக்கிறார்கள். இவற்றைச் சுலபமாகக் கிடைக்கக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். ஏராளமான தொகைகளைக் கடனாகக் கொடுக்கிறோம். ஏராளமான பம்பு செட்டுகளை வைக்க மின்சாரம் தேவைப்படுகிறது. இது சுலபமாகக் கிடைப்பதில்லை. கிணறு வெட்டக் கடன் கொடுக்கும்போது, பரிசீலனை செய்கிறார்கள். ஆனால், மின்சார இணைப்புக் கொடுக்கும்போது, ஓனர்ஷிப் பட்டா இல்லை, உன் பாட்டன் பேரில் பட்டா இருக்கிறது' என்று சொல்லிவிடுகிறார்கள். பட்டா மாறுதல் செய்யப்படவில்லை என்கிறார்கள். கடன் தொகை வழங்கும் போது பரிசீலித்தது, மின்சார இணைப்புக் கொடுக்கும் போது தடை செய்யப்படுகிறது. இது விசித்திரமாக இருக்கிறது. நில மாறுதல் பட்டாக்களை ஒரு வாரத்தில் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதை அமைச்சர் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தூறு வாருதல் சம்பந்தமாக, குளங்கள், வாய்க்கால்கள் தூர் வாராமல், மேடு இட்டுக் கிடக்கின்றன. சித்திரைச் சாவடி வாய்க்கால் தூர் வாரவேண்டும். நிலம் இல்லாதவர்கள், குளத்திலே வீடு கட்டியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் சீக்கிரமாக செப்பனிட்டு, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது உணவு உற்பத்தி உபரியாக இல்லை. மக்கள் தொகையை வைத்துப் பார்த்தால் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கு உபரியாக இருக்க வேண்டாமா? மந்திரி அவர்கள் கொடுத்த கணக்குப்படி இவ்வளவு விளைந்திருக்கிறது. அந்த வகையில் பார்த்தால் உபரி தான்யம் எங்கேயாவது ஓடி ஒளிந்துவிட்டதா? அல்லது கள்ளச் சந்தையில் மறைந்துவிட்டதா? யாரை ஏமாற்ற கொடுக்கப்பட்ட புள்ளிவிவரம் இவை? கொடுக்கப்பட்ட புள்ளி விவரம் தவறு என்று அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன். எனது தொகுதியில் கொச்சம்பள்ளி என்ற இடத்தில் ஒரு வெடரினரி டிஸ்பென்சரி கட்டப்பட்டது. 1960-61-ல் கட்டப்பட்ட இந்த டிஸ்பென்சரிக்கு இதுவரையில் டாக்டரோ, மருந்துகளோ கொடுக்கப்படவில்லை. காரணம் கேட்டால்—டைரக்டர் அப்பொழுது வந்திருந்தார்கள்--நீங்கள் எந்தத் திட்டத்தின் கீழ் கட்டினீர்களோ, எங்களுக்குத் தெரியாது. டாக்டருக்கு குவார்ட்டர்ஸ் இல்லை. எக்விப்மெண்டு, டாக்டர் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் நேரில் வந்தபொழுதும் எடுத்துச் சொன்னேன். கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. வெ. எல்லம நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சரால் கொண்டு வரப்பட்டுள்ள, வேளாண்மை துறை மானியத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(திரு. மா. தண்டாயுதபாணி தலைமை)

சென்ற இரண்டு திட்டங்களிலே பல திட்டங்களையும் நிறைவேற்றி, மூன்றாவது திட்டத்திலே விவசாயத்திற்கு முக்கியமான இடம் கொடுத்து, நல்ல முறையிலே செயல்பட்டு வந்திருக்கிறது. அதற்காக அந்த இலாகா அமைச்சர் அவர்களையும் அந்த இலாகாவைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகளையும் நான் பாராட்டுகின்றேன். அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள இந்த அறிக்கையிலே, பெரிய பாசன திட்டங்கள் அநேகமாக பூர்த்தி அடைந்து விட்டன என்று காட்டப்பட்டு உள்ளது. கோவை ஜில்லாவைப் பொறுத்த வரையில் மிகக் கடினமாக உழைக்கக் கூடிய விவசாயிகள், விவசாயத்திலே நன்கு பயிர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அங்கே உள்ள குறையெல்லாம், தண்ணீர் இல்லாத குறை ஒன்றுதான் அதிகமாகத் தென்படுகிறது. அதே போல மற்றும் சிறு சிறு குறைபாடுகள், பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் ஓரளவு முடிந்துள்ளன என்று சொன்னதை பார்த்து ஆறுதல் அடைகின்றேன். குந்தா கழிவு நீர்த் திட்டம், பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிகிறது. அந்த திட்டத்தை அமல் படுத்தும் போது, கோவை தாலுக்கா, பல்லடம், அவனாசி தாலுகாக்களுக்கு விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அப்படி





விஸ்தரிக்காமல் உணவுப் பொருள் உற்பத்தி செய்யப் போதுமான நிலைமை ஏற்படும். குறிப்பாக, என்னுடைய தொகுதி பொறுத்தவரையிலும் சில மத்தியதர நீர்ப்பாசன திட்டங்களை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நொய்யல் ஆறு திட்டம் பரிசீலிக்கப்படுகிறது என்று தெரிகிறது. அதேபோல, கொடுங்கரை, மாங்கரை திட்டமும் இருக்கிறது. முண்டாந்துறை, சோமையன்பள்ளம், ஜம்புகுண்டி, பண்ணிமடை முதலிய விசேஷ சிறு பாசன திட்டங்களில் சேர்த்திருக்கிறார்கள். அவைகளை உடனடியாக எடுத்துக் கொண்டு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கண்மாய்கள், குட்டைகளைப் பொறுத்த வரையில், மிக மிக துரிதமாக வேலைகள் நடைபெறுகின்றன. இருப்பினும், நிர்வாகத்தில் இருக்கும் செயல்படுத்தும் முறைகளை இன்னும் சற்றுத் தளர்த்த வேண்டும். சுமார் ரூ. 50,000 பொருமானமுள்ள வேலைகளை, கண்மாய்கள், குட்டைகள் செப்பனிடுவதை, பொதுவாக மாவட்டக் கலெக்டர்களுக்குக் கொடுத்து விடலாம். வேலைகள் துரிதமாக நடக்கும். ரூ. 50,000-க்கு மேற்போகும் தொகைகள் கொண்ட வேலைகளை உணவு உற்பத்தி மேற்பார்வைப் பொறியாளரிடம் கொடுக்கலாம். அப்பொழுது உணவு உற்பத்தி நன்றாக நடைபெறும். ரூ. 30,000 ஆக இருந்தால், அது ரெவின்யூ போர்டுக்கு அனுப்பப்படுகிறது. அங்கே, 3, 5 வருஷங்கள் ஆகிவிடுகின்றன. இவைகள் துரிதமாக செய்யப்படவேண்டும்.

கிணறுகளுக்கு கடன் கொடுக்கிறார்கள். பிறகு மின்சார இணைப்புக் கொடுக்கிறார்கள். இவற்றைச் சுலபமாகக் கிடைக்கக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். ஏராளமான தொகைகளைக் கடனாகக் கொடுக்கிறோம். ஏராளமான பம்பு செட்டுகளை வைக்க மின்சாரம் தேவைப்படுகிறது. இது சுலபமாகக் கிடைப்பதில்லை. கிணறு வெட்டக் கடன் கொடுக்கும்போது, பரிசீலனை செய்கிறார்கள். ஆனால், மின்சார இணைப்புக் கொடுக்கும்போது, 'ஓனர்ஷிப் பட்டா இல்லை, உன் பாட்டன் பேரில் பட்டா இருக்கிறது' என்று சொல்லிவிடுகிறார்கள். பட்டா மாறுதல் செய்யப்படவில்லை என்கிறார்கள். கடன் தொகை வழங்கும் போது பரிசீலித்தது, மின்சார இணைப்புக் கொடுக்கும் போது தடை செய்யப்படுகிறது. இது விசித்திரமாக இருக்கிறது. நில மாறுதல் பட்டாக்களை ஒரு வாரத்தில் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதை அமைச்சர் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தூறு வாருதல் சம்பந்தமாக, குளங்கள், வாய்க்கால்கள் தூர் வாராமல், மேடு இட்டுக் கிடக்கின்றன. சித்திரைச் சாவடி வாய்க்கால் தூர் வாரவேண்டும். நிலம் இல்லாதவர்கள், குளத்திலே வீடு கட்டியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் சீக்கிரமாக செப்பனிட்டு, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [14th March 1966

வேண்டும். அவற்றை எல்லாம் தேடி வாங்கிக்கொண்டு வருவதற்குள்ளாகப் பயிர் அழிந்து விடுகிறது. இந்த நிலை மாற வேண்டும். விவசாய இலாகாவினரே சரியானபடி மருந்தைக் காலா காலத்தில் தெளித்து அந்தப் பயிரைக் காப்பாற்ற வேண்டும்.

கன்றுகாலிகளுக்கான ஆஸ்பத்திரிகளைப் பல இடங்களில் வைத்திருக்கிறோம். பெரும்பாலும் நகரங்களில் தான் அத்தகைய கால்நடை ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. கிராமங்களில் மாடுகளுக்கு நோய் வந்து விட்டது என்றால், அவைகளைப் பட்டணத்திற்குக் கொண்டுவரவேண்டியிருக்கிறது. சில சமயங்களில் டாக்சி வைத்து டாக்டர்களை அழைத்துவந்து மாட்டைக் காட்டும்போது, அவர் மருந்தைக் குறிப்பிடுகிறார். அந்த மருந்தை ஆஸ்பத்திரிக்குச் சென்று வாங்கிக்கொள்ளலாம் என்றால், அங்கே மருந்து இல்லை. டாக்டரைக் கேட்டால், "கடையிலிருந்து மருந்து வாங்கி வந்தால், அதைப் பயன்படுத்தலாம்" என்று சொல்லிவிடுகிறார்கள். அப்படிப் பார்க்கும்போது, எந்தக் கால்நடை ஆஸ்பத்திரியிலாவது தேவையான மருந்து இருக்கிறதா என்றால், இல்லை. இது என்னுடைய நேரடி அனுபவம். என்னைப் பொறுத்த வரையில், என்னுடைய கால்நடைகளுக்கு வேண்டிய மருந்தைக் கடையிலிருந்துதான் வாங்கிக் கொடுக்கிறேன். இந்த மாதிரி நிலை இருக்கும்போது, விவசாயிகளை எப்படி நாம் ஊக்குவிக்கிறோம் என்பதை அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாயிகளை ஊக்குவிப்பது எப்படி என்பதைச் சிந்தித்து அறிய ஒரு மகாநாட்டைக் கூட்டவேண்டும். அதில் விவசாயிகளை வரவழைத்து, அமைச்சர்களும் அதிகாரிகளும் உடன் இருந்து, விவசாயிகளுடைய குறைகள் என்ன, அவற்றைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன என்ன நடவடிக்கை எடுக்க முடியும், எந்த வகையில் உணவு உற்பத்தியை நாம் அதிகரிக்கமுடியும் என்பதை ஆராய வேண்டும். அப்படி ஆராய்ந்து, அதன் அடிப்படையில் செயல்படவேண்டுமே தவிர, அதிகாரிகளை அதிகரிப்பதனாலோ அல்லது இலாக்காவில் பலப்பல மாறுதல்களைச் செய்வதினாலோ விவசாயம் ஒருக்காலும் முற்போக்கு அடையாது.

என்னுடைய மாவட்டைப் பொறுத்த வரையில், நூற்றுக்கு நூறு நெல் சாகுபடி செய்துகொண்டிருக்கக்கூடிய ஒரு மாவட்டம் ஆகும். அந்த மாவட்டத்திற்கு ஒரு விவசாயக் கல்லூரி வேண்டும். விவசாயக் கல்லூரி இருந்தால்தான் மண் வள ஆராய்ச்சி, இதர ஆராய்ச்சிகள் எல்லாம் செய்து விவசாயத்தைப் பெருக்க வாய்ப்பு வசதி ஏற்படும். நான்கு வருஷங்களாகச் சொல்லிக் கொண்டு வருகிறோம். கன்யாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லோரும் சொல்லுகிறோம். கன்யாகுமரி மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியையாவது எங்களுக்கு ஏற்படுத்தித் தாருங்கள் என்று சொல்லுகிறோம். இதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.



14th March 1966]

**திரு. எஸ். மணி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைக்கு எங்கள் கட்சித் தரப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய வட்டாரத்தைப் பொறுத்த வரையில் உள்ள சில குறைபாடுகளை இங்கே எடுத்துச் சொல்ல நான் விரும்புகிறேன்.

எங்களுடைய வட்டாரம் நீர்ப்பாசன வசதி இல்லாத பகுதியாக இருக்கிறது. பெரம்பலூர் தாலுக்காவில் ஆத்தூர், பெரம்பலூர், வேப்பந்தட்டை, வேப்பூர் ஆகிய பஞ்சாயத்து யூனியன்கள் உள்ள பகுதி பெரும்பாலும் நீர் இல்லாத பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு புதிய கிணறுகள் வெட்டுவதற்காகக் கடன் தொகை அதிகமாக ஒதுக்க வேண்டும்.

கூட்டுறவு சொஸைட்டி மூலமாக உரம் கொடுக்கிறோம். அது விவசாயிகளுக்குச் சரிவரப் போய்ச் சேரவில்லை. பஞ்சாயத்து யூனியன் மூலமாக அங்கங்கே இருக்கும் தலைமையிடத்திலிருந்து கொடுக்க வேண்டும்.

கிராமப் பகுதிகளில் மின்சார பம்ப் செட் வைக்கவேண்டும் என்பதற்காக என்னுடைய வட்டாரத்தில் பணம் வசூலித்துக் கொடுத்தோம். மின்சாரக் கழகத்தார் கிராமப் புறங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்து, விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்பதில் ஒத்துழைக்காததால், கிராம மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயிகள் மின்சார பம்ப் செட் வைத்துக் கொள்ள கடன் வாங்கி பஞ்சாயத்து யூனியன் அனுமதியும் பெற்று வைத்திருந்தும் மின்சாரக் கனெக்ஷன் கொடுக்க மறுக்கிறார்கள். "எங்களுக்கு நிதி உதவி போதாது, கம்பி இல்லை, தேவையான பொருள்கள் இல்லை" என்று காரணம் கூறி, கனெக்ஷன் கொடுக்க மறுக்கிறார்கள். விவசாய உற்பத்திப் பெருக்கம் செய்யவேண்டியதற்காக மின்சாரக் கனெக்ஷன் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியத்தை மின்சாரக் கழகத்திற்கு அரசாங்கம் வலியுறுத்தவேண்டும். விவசாயத்திற்கு எப்படியும் மின்சாரம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் கடன் வாங்கி மின்சார பம்ப் செட்களை வாங்கி வைத்துவிடுகிறார்கள். அரசாங்கத் தரப்பிலிருந்தும் விவசாயிகளுக்கு 100 ரூபாய், 200 ரூபாய் என்று கடன் கொடுக்கிறார்கள். ஆனால், மின்சாரக் கழகம் ஒத்துழைப்பு அளிக்காமல் இருக்கிறது என்பதைத் தாழ்மையுடன் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மின்சாரக் கழகத்திற்கு இந்த அமைச்சரவை வலியுறுத்திச் சொல்லி, விவசாயத்திற்கான மின்சாரக் கனெக்ஷனைத் துரிதப்படுத்தச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் கிராம சகாயக் கிராமத்திற்குப் போய் உணவு உற்பத்தியில் கவனம் செலுத்துவதற்காக, மக்களை அணுகுவது இல்லை. என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்கிறேன். பஞ்சாயத்துக்குள்ள நிதி நிலையைப் பொருத்தது என்றாலும், பரீட்சார்த்தமாகவாவது பார்க்கவேண்டும். நான்

*[திரு. எஸ். மணி]* [14th March 1966

அமைச்சரவைக்குச் சொல்லுகிறேன்—உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்றால், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு கிராம சகாயக் போடவேண்டும். கிராம சகாயக் ஒவ்வொரு விவசாயியிடமும் சென்று, "உன்னுடைய நிலம் எப்படி இருக்கிறது, என்ன குறை இருக்கிறது? என்ன என்ன உதவி செய்ய வேண்டும்? என்று கேட்டு, நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொண்டு செயல்படவேண்டும். சர்வே நம்பர் வாரியாகக் கணக்கு வைத்துக் கொண்டு, "கிணறு வெட்ட வேண்டுமா? என்ன என்ன வசதி வேண்டும்?" என்று கேட்டு, லிஸ்ட் எடுத்து, ஒரு ஊருக்கு இத்தனை வசதிகள் செய்யவேண்டும் என்பதைக் குறித்து கணக்கெடுக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன் ஒன்றுக்கு பத்து கிராம சேவக்குகள் போட்டிருக்கிறோம். நிதி உதவிக்குத் தகுந்தபடி இதைத்தான் செய்யவேண்டும் என்ற ஒரு வரம்பை வைத்துக் கொள்ளவேண்டும். அப்படியில்லாத நிலையில் என்ன நடக்கிறது? ஒரு கிணறு வெட்டவேண்டும் என்பதற்கு கடனுக்காக மனுப் போட்டு, ஆறு மாதம் தாலுக்கா ஆபீசிற்கு அலைந்து, பிறகு வில்லங்க சர்ட்டிபிகேட் வாங்கி எடுத்துக் கொண்டு போவதற்குள் 200 ரூபாய் செலவு செய்து விடவேண்டிய நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். கடைசியிலே கடனே வேண்டாம் என்று விட்டு விடக் கூடிய அளவுக்கு நிலைமை ஏற்படுகிறது. இதிலே இன்னொரு சிக்கல் என்னவென்றால், கூட்டுப் பட்டாக்காரர்களுக்குக் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். கூட்டுப் பட்டா வைத்திருந்தாலும், கிணறு வெட்டுவதற்கான கடன் கொடுக்கலாம் என்ற வகையில் மாற்றம் செய்யவேண்டும்.

எங்களுடைய, பகுதிக்கும்கூட இரும்புக் கலப்பைகள் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கொடுக்கிறார்கள். பெரம்பலூர் வட்டாரத்தைப் பொறுத்த வரையில், இரும்புக் கலப்பை தேவை இல்லை. எந்த எந்த வட்டாரத்திற்கு இரும்புக் கலப்பை தேவையோ அந்த வட்டாரத்திற்குக் கொடுக்கவேண்டும். தேவையில்லாத வட்டாரத்திற்குக் கொடுப்பதில் பயன் இல்லை. கோயம்பத்தூரில் உற்பத்தி ஆகிறது என்று, எங்கள் வட்டாரத்தில் கொண்டுவந்து வைத்து, "நீங்கள் வாங்கித் தான் ஆகவேண்டும்" என்று ஒவ்வொரு விவசாயியையும் வற்புறுத்துவது அவசியம் இல்லாத ஒரு காரியம். இதனால் விரயச் செலவு ஆகிறது. இப்படியெல்லாம் அவசியம் இல்லாத காரியத்தைச் செய்து கொண்டிருந்தால், எப்படி உணவு உற்பத்தி பெருக முடியும்?

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டுவிட்டோம். மூன்றாவது திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம். விவசாய நாடு என்று நாம் சொல்லிக் கொள்ளுகிறோம். நம்முடைய விவசாயியும் விடியற்காலை வயலுக்குப் போனால், சாயந்திரம் தான் வீடு திரும்புகிறான். அவனுடைய நேரம் முழுவதையும் வயலிலே தான் செலவழிக்கிறான். பாடுபடுகிறான். இவ்வளவு செய்தும் உணவுப் பற்றாக்குறை நீங்கவில்லையே. ஒரு வேளை கூட விவசாயிக்கு நல்ல உணவு கிடைக்கவில்லையென்றால், இதில் என்ன செய்வது என்று யோசிக்க வேண்டும். நான் சொல்வதைக் குறித்து அமைச்சர் அவர்கள் வருத்தப்படக்கூடாது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பிக்கும் இந்த நேரத்தில் கூட வேண்டிய உணவு கிடைக்கவில்லையென்றால் இது உண்மையிலேயே வருந்தத் தக்க நிலைமை தான். இதிலே தக்க நடவடிக்கை எடுத்து, உணவு உற்பத்தியை நாம் எப்படிப் பெருக்குவது என்பதைக் குறித்து ஆலோசிக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியனில் போட்டிருக்கும் ஆட்களுக்குக் கணக்கே இல்லை. சட்டசபையிலே இருக்கிறவர்களின் எண்ணிக்கைக்கு ஒரு பஞ்சாயத்து யூனியனில் இருக்கிறார்கள். காய்கறித் தோட்டம் போடுகிற வேலைகளையெல்லாம் கிராமத்தில் உள்ளவர்களுக்கே விட்டுவிடவேண்டும். காய்கறி பயிர் செய்வதைக் குறித்து சொல்லிக் கொடுக்க சில அதிகாரிகள், செடி நட இரண்டு ஆட்கள் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஜீப்பில் போகிறார்கள். பிறகு, முளைக்கிறதா, இல்லையா என்று பார்ப்பதற்காகப் போகிறார்கள். இப்படியெல்லாம் விரயச் செலவு ஆகிறது. கிராம மக்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்து, காய்கறி உற்பத்தியைப் பெருக்குங்கள் என்றால் அவர்கள் பெருக்கி விடுவார்கள். அப்படியில்லாமல், ஆபீசர்களை வைத்து உணவு உற்பத்தியைப் பெருக்கும்படிச் செய்வது நல்லதல்ல. விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் அளிக்கவேண்டும். கடன் உதவி செய்து கொடுக்கவேண்டும். இப்படியெல்லாம் உணவு உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.



14th March 1966] *[திரு. எஸ். மணி]*

திரு. டி. பி. ஏழுமலை: கனம் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, இந்த மானியத்திற்குத் தலைமை தாங்கி நடத்துகிற அமைச்சரவர்களையும் அதிகாரிகளையும் சர்க்காரையும் பாராட்டிச் சில கருத்துக்களைச் சொல்ல நான் பிரியப்படுகிறேன்.

"பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்று சொல்லுவார்கள். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்றும் சொல்லுவார்கள். அந்த முறையில் இன்றைக்கு நாம் பார்ப்போமானால், பசியைக் காட்டித் தான் பதவியைக் கூட பெற வேண்டும் என்று பலர் நினைக்கின்றார்கள். இந்த மானியத்தைக் குறித்துப் பேசும் இந்த நேரத்தில், நாம் போடுகிற திட்டம் துரிதமாக நிறைவேறியிருக்கிறதா இல்லையா என்பதை உடனுக்குடன் ஆராய்ந்து, இதிலே இருக்கின்ற சிக்கல்களைத் தெரிந்து, விவசாயிகளுக்கு நல்ல அபிவிருத்தியான காரியங்களைச் செய்யவேண்டும் என்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாய முன்னேற்றத்திற்காக இந்த சர்க்கார் போடுகின்ற திட்டமும், எண்ணுகின்ற எண்ணமும் மலை போல் இருக்கிறது. ஆனால், அத்தனையும் நிறைவேறியிருக்கிறதா என்றால், நிறைவேறவில்லை. அத்தனையும் நிறைவேறினால், இன்றைக்கு நம்முடைய சர்க்கார் மீது யாரும் எந்தக் குறையும் சொல்ல முடியாது. நிறைவேறவில்லை என்று சொல்வதற்குக் காரணம் என்ன? இந்த சர்க்காரை நடத்துகிறவர்கள் மீது தான் குற்றம் என்று நாம்

சொல்ல முடியாது. இந்தக் காரியத்தை நடைமுறையில் செய்கின்ற சாதாரண சிப்பந்திகளும் இதற்குக் காரணமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணுகிறேன். விவசாய அபிவிருத்தி விஷயத்திலே ஜில்லாக் கலெக்டர் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆனால், அவர்கள் ஒவ்வொரு நேரத்திலும் கணக்கை காட்டுகிறபோது ஐந்தாண்டுக்கு முன்னால் நடந்த விஷயத்தைப் பற்றியே பேசுவதைப் பார்க்கிறோம். ஆகவே, நான் சர்க்காரைப் பணிவோடு கேட்டுக்கொள்வது என்னவென்றால் இவ்விலாகாவில் உள்ள கடைசி சிப்பந்தி வரை ஒன்றாக உட்கார்ந்து—போட்ட திட்டங்கள் என்ன, எவ்வளவு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, பாக்கி ஏன் நிறைவேற்றப்படவில்லை என்பதாக மாதாமாதம் பரிசீலனை கலெக்டர் காரியாலயத்திலே செய்தாகவேண்டும். விவசாயத் திட்டங்கள் நல்லமுறையில் நிறைவேற்றப்படவேண்டுமென்றால் மண் வளம் தேவை. அடுத்து மக்களது மனவளமும் தேவை. இரண்டும் இருந்தால் போதாது, நீர்வளமும் அவசியமாகிறது. மனவளத்தைப் பொறுத்தவரையில் இன்றையதினம் எதிர்க்கட்சிக்காரர்களிடையே கொஞ்சம் கூடக் கிடையாது. காரணம் நாம் போடுகிற திட்டங்களை எல்லாம் குறை சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அடுத்து நீர்வளத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய தாலுக்காவைப் பொறுத்தவரையில் நான் பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். அங்கே குடத்தலை ஆறு, ஆரணியாறு என்று இரண்டு ஆறுகள் இருக்கின்றன. அந்த ஆறுகளின் தண்ணீரைத் தேக்கி அணை கட்டிக் கொடுத்தால் பல ஆயிரம் ஏக்கரா நிலம் பாசன வசதி பெறும். ஆரணியாற்றிலே சமீபத்தில் தான் லட்சுமிபுரம் அணைக்கட்டு கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து குடத்தலை ஆற்றிலே வல்லூர் அணைக்கட்டு என்று இருக்கிறது. அங்கு சரியான முறையில் நீர் தேங்குவதில்லை. அதைச் சரிப்படுத்திக் கொடுப்பதோடு நாகப்பாளையம் சமீபத்தில் ஒரு அணைக்கட்டுக் கட்டிக் கொடுத்தால் ஐநூறு ஏக்கரா பாசன வசதி பெறும். அதையும் கவனிக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, க்ரவுண்டு வாட்டர் செல் என்பதாக என்னுடைய தொகுதியில் இன்றையதினம் பரீட்சை நடத்தப்பட்டு வருகிறது. அங்குள்ள விவசாய மக்கள் "இப்படி பரிட்சிப்பதற்குக் காரணம் தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பது தான் நோக்கமே தவிர, விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுப்பதற்கு இல்லை" என மனம் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் நீர்ப்பாசனத்திற்கும் தண்ணீர் கொடுத்து விட்டுத்தான் தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் கொடுக்கிற ஏற்பாட்டை வகுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படியே சொந்த நிலம் வைத்திருக்கிறவர்கள் தாம் விவசாயிகள் என்று கருதக்கூடாது. உழுது பயிரிடுகிறவர்களும் விவசாயிகள் தாம். ஆகவே விவசாயிகளுக்கு என்று நாம் சலுகை





கொடுக்கும்போது குத்தகைதாரர்கள், வாரக்காரர்கள் ஆகியவர்களுக்கும் அந்தச் சலுகை கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும். நிலத்தில் பயிர் செய்கிறவர்களுக்கு அந்தச் சலுகை கிடைத்தால் தான் அதிக உற்பத்தி செய்ய வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து, பத்து வருஷம், ஐந்து வருஷம் என்பதாகப் பலர் புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நாம் பட்டா வழங்கினால் தான் இன்னும் ஊக்கமாகப் பயிரிடுவார்கள். நிலமற்ற அந்த ஏழைகளுக்கு ஏன் அவற்றைப் பட்டா செய்துகொடுக்கக் கூடாது என்பதாகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, தக்க குமாஸ்தாக்களைப் போட்டு, பல வருஷங்களாக புறம்போக்கு நிலங்களில் பயிர் வைத்து வருகிறவர்களுக்கு அந்த நிலங்களைப் பட்டா செய்துகொடுக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிற விவசாய மானியத்தின் மீது நடக்கும் விவாதத்தின் கீழ் பலர் மண்வளம், மனவளம், நீர் வளம் என்பது பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த நாடு விவசாய நாடு. விவசாயம்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு. பற்றாக்குறை வேறு இருக்கிறது. இந்த நிலையில் விவசாயத்தைப் பற்றி பேசுவதற்கு கொடுக்கப்பட்டுள்ள ஐந்து நிமிஷம் என்பது போதவே போதாது. இதில் ஒவ்வொரு வளத்தையும் பற்றிப் பேசுவது என்றால் கொடுக்கப்பட்ட நேரம் காணாது. மனவளத்தை மட்டும் எடுத்துக்கொண்டால்—இன்றைக்கு விவசாயிகள் யாரும் விரும்பி அந்தத் தொழில் செய்யவில்லை. காரணம் உழுகிற நிலம் அவனுக்குச் சொந்தமில்லை. தான் பாடுபடுகிற அளவுக்கு பலன் அவனுக்குக் கிட்டவில்லை. புறம்போக்கில் பாடுபட்டாலும் அதுவும் அவனுக்குச் சொந்தமில்லை. இந்த நிலை தான் நாட்டில் இருக்கிறது. அவர்களுக்கு எங்கே மனவளம் ஏற்பட முடியும்? இதை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். உச்சவரம்புச் சட்டத்தினால் பலன் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். அதனால் எவ்விதப் பலனும் ஏற்படவில்லை என்பதை அரசாங்கமும் சரி, மற்ற அங்கத்தினர்களும் சரி எல்லோரும் அறிவார்கள். அது ஒரு பெரிய ஏமாற்றம். உச்சவரம்புச் சட்டம் சரியான முறையில் அமல்படுத்தப்படவில்லை. அதையும் சற்றுப் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புறம்போக்கு நிலங்களை எடுத்துக்கொண்டால் அவற்றை இப்போது பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்கிவிட்டார்கள். பஞ்சாயத்துகளுக்கும் அவை பூரணமாக பயன்படவில்லை. சில இடத்தில் பயன்படலாம். பஞ்சமர்களுக்காக என்று சொல்லி முன்பு நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. இன்றையதினம் அவை பஞ்சமர் கையில் இருக்கிறதா? பணக்காரர்கள் கையில் இருக்கிறதா? என்று பார்த்தால் யார் கையில் இருக்கிறது என்று தெரியும். அவற்றைப் பணக்காரர்கள் தாம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் என் தொகுதி

யில் கிளியனூர் பிர்க்கா, வானூர் பிர்க்கா, மரக்காணம் பிர்க்கா, போன்ற இடங்களில் இருக்கும் பஞ்சமர் தரிசு நிலங்கள் இன்றைய தினம் பணக்காரர்களிடத்தில் இருக்கிறது. அதைப் பஞ்சமர்களுக்கே கொடுக்க வேண்டும் என்பதாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் என் பகுதியில் மரக்காணம் முதல் வானூர் வரை இடையில் கழிவழி பகுதி இருக்கிறது. ஒன்பது, பத்து மைல் அகலத்தில் இருக்கிறது. அந்தப் பகுதியில் விவசாயத்தைச் செய்ய நல்ல வாய்ப்பு இருக்கிறது. இப்போது ரெவின்யூ போர்டிக்கு விவசாயத்தில் ஊக்கமுள்ள ஒருவர் வந்திருக்கிறார் என்று கேள்விப்படுகிறேன். அவராவது அந்த இடத்தை வந்து பார்த்து அங்கே விவசாயம் செய்வதற்கு ஆவன செய்யவேண்டும். இதைப்பற்றி நான் இங்கே பலமுறை சொல்லியாகிவிட்டது. யாரும் வருவதில்லை. பரிட்சித்துப் பார்ப்பதில்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய அந்தப் பகுதியை நன்றாகப் பரிசீலனை செய்தபிறகு அங்கே ஒன்றும் பயிர்செய்ய முடியாது என்கிறார்களே, தென்னை வைப்பது என்றால் கூட முடியாது என்கிறார்களே.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இப்போது வேண்டுமென்றாலும் கனம் அமைச்சர் அவர்கள் வந்து பார்க்கலாம். அங்கே பயிர் வைத்திருக்கிறவர்களுடைய பயிர் எவ்வாறு இருக்கிறது என்று பார்த்துவிட்டு—அதன் பிறகு ஒரு முடிவுக்கு வரலாம். உணவு இலாகா அதிகாரியோ, ரெவின்யூ போர்டுக்கு புதிதாக வந்துள்ள உற்சாகமிக்க அதிகாரியோ வந்து நேரில் பார்த்தால் தெரியும். அதற்கும் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நீர் வளத்தைப் பற்றிப் பேசுகின்ற போது இன்றைக்கு அங்கே தண்ணீர் வீணாகக் கடலிலே போய்ச் சேருகிறது. கழுவெளியின் மேல்புறத்தில் தண்ணீரைத் தேக்கினால் குறைந்த பட்சம் ஆயிரக்கணக்கான ஏக்கர் சாகுபடி செய்ய வசதி ஏற்படும். அதையும் பரிசீலிக்கவேண்டும். இந்த நாட்டின் நீந்தலையெழுத்தாகவும், முதுகெலும்பாகவும் இருக்கிற விவசாயத்தைப் பற்றிப் பேசுவதற்குக்கூட இவ்வளவு குறுகிய நேரத்தைக் கொடுத்ததற்கு நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. கே. பி. பழனிசாமி :** கனம் தலைவரவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக நம்முடைய நாடு விவசாய நாடு என்பதை நாம் எல்லாம் உணர்ந்திருக்கிறோம். 100-க்கு 75 சதவீதம் விவசாய மக்களைக் கொண்டதாக நம்முடைய நாடு இருக்கிறது. குறிப்பாக நம்முடைய நாட்டிலே விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்பதற்காக திட்டங்களை உருவாக்கி, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், மண்





வளப் பாதுகாப்பு, நிலத்தை மேநிலைப்படுத்துதல், தாவர விதைகள், ரசாயன உரம், தழை உரம், மற்றும் உள்ளூர் எரு வகைகள் இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டு வருகிறோம். இன்னும் ஒன்று விவசாயத்திலே கவனிக்கவேண்டியிருக்கிறது. விவசாயத்திலே எதிர்பார்த்த அளவு இந்த ஆண்டு உணவு உற்பத்தி பெருகவில்லை என்று நாம் கொஞ்சம் தயங்குகிறோம். குறிப்பாக, பருவ மழை தவறியதன் காரணமாக, தென்மேற்குப் பருவக் காற்றும், வடமேற்குப் பருவக்காற்றும் பொய்த்து விட்டது. பெரிய பாசனத்திற்கு ஏற்பாடு செய்துள்ள கோவை ஜில்லாவிலே உள்ள பரம்பிக்குளம் ஆளியாறுப் பகுதிகளில் அதிகமான ஏக்கர்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்கக் கூடிய நிலைமை தடைப்பட்டிருக்கிறது. பயிர் செய்தும் தடைப்பட்டிருக்கிறது, உற்பத்தியும் தடைப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக நம்முடைய நாட்டிலே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. நாம் போடுகின்ற உரத்தை யொட்டி, பூமியைப் பண்படுத்தவேண்டுமென்று சொன்னால் நம்முடைய ஆட்கள் சக்தி, அதாவது மேன் பவர் வேண்டும். உற்பத்தி செய்யவேண்டும், உற்பத்தி செய்யவேண்டுமென்று சொன்னால், அதற்கு ஆட்கள் தேவை. குறிப்பாக நாம் உணவு உற்பத்தியிலே கண்ணுங்கருத்துமாக இருக்கிற நேரத்திலே அதற்குச் சாதகமாக, வாய்ப்பாக இருக்கிற உழைப்பாளர்களுக்கு நாம் சிறந்த முறையிலே உணவு கொடுக்கவேண்டும். வேலை செய்யவேண்டுமென்று சொன்னால் அதற்குச் சக்தி வேண்டும், அந்தச் சக்தியைப் பெறுவதற்கான வழிகளை நாம் அவர்களுக்குச் செய்துகொடுக்கவேண்டும். பூமி இருக்கிறது, தண்ணீர் இருக்கிறது, எரு இருக்கிறது, இவ்வளவும் இருந்தாலும் உற்பத்தி செய்யக்கூடிய ஆள்கள் தேவை. இப்பொழுது ஏதோ உணவு கொடுக்கிறோம், பற்றாக்குறை இருக்கிறது. இருந்தாலும் நகரங்களிலும் பட்டணங்களிலும் இருக்கக்கூடிய லட்சக்கணக்கானவர்களுக்கு உணவு ரேஷன் கொண்டு வந்திருக்கிறோம். விவசாயிகள் எல்லாம் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு சாப்பிட்டு மண்வெட்டி எடுத்து வேலை செய்வது சாத்தியப்படாது. ஆகவே, அவர்களுக்கு உதவி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். எத்தனையோ சிப்பந்திகளைப் போட்டு சர்க்கார் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதே மாதிரி எத்தனை பேர்கள் இந்த நாட்டில் உழைக்கின்றவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் எடுக்கவேண்டும். இதற்காக சில லட்ச ரூபாய்கள் செலவானாலும் பரவாயில்லை. இந்த நாட்டிலே எத்தனை பேர்கள் விவசாயிகள், அதிலும் நிலத்தை உழுகின்றவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் என்ற கணக்கை எடுப்பதை அரசாங்கம் தன்னுடைய குறிக்கோளாக வைத்துக்கொள்ளவேண்டும். குறிப்பாக நம்முடைய நாட்டிலே ஏறத்தாழ முக்கால்வாசிப் பேர்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். உண்மையாக நிலத்தில் உழக்கூடியவர்கள் எத்தனை பேர்கள் என்று சுமாராகக் கணக்கு எடுத்து அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

[திரு. கே. பி. பழனிசாமி] [14th March 1966

நாம் ஹைப்ரிட் விதைகள், தரமான விதைகள் இவைகளை சயின்ஸ் மூலமாகக் கண்டுபிடித்து இருக்கிறோம். ஹைப்ரிட் சோளத்தைப் போட்டால் ஒரு ஏக்கருக்கு 40-லிருந்து 45 மூட்டைகள் வரை கிடைக்கும் என்பது கணக்கு. நாம் ஒரு ஏக்கருக்கு இடக்கூடிய எரு, 25 வண்டி சாணி என்று வைத்துக்கொண்டால், அல்லது அதற்குச் சமமாக கெமிக்கல்ஸ் ஆகிறது என்று வைத்துக் கொண்டால், பின்னால் அதற்கு வரக்கூடிய யீல்டு அதாவது மகசூல் ரேஷியோ எப்படி இருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும். ஹைப்ரிட் சோளத்தை உற்பத்தி செய்தால் கால் நடைகளுக்குக் கிடைக்கக்கூடிய தீவனம் குறைகிறது. குறிப்பாக, சாதாரணச் சோளம் ஒரு ஏக்கருக்கு 10-லிருந்து 15 மூட்டைகள் வருகிறது என்றால், இந்த ஹைப்ரிட் சோளம் ஒரு ஏக்கருக்கு 40 முதல் 45 மூட்டைகள் வருகின்றன. ஆனால் கால்நடைகளுக்கு வேண்டிய தீவனம் போன்றவை குறைகிறது. ஆதலால், இதே மாதிரி நல்ல பல திட்டங்கள் உருவாக்கும்பொழுது மின்சாரத்தைப் பொறுத்தவரையில், கெனால் புறம்போக்குகளிலும், ஆற்றோரங்களிலும், கிணறுகள் வெட்டுவதில் கஷ்டங்கள் இருக்கின்றன, ரெஸ்டிரிக்ஷன்ஸ் இருக்கின்றன. ஆகவே, தண்ணீர் கிடைப்பது தாமதப்படுகிறது. இவையெல்லாம் நன்கு கவனித்து அவ்வப்போது திட்டங்களுக்கு, நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொடுத்து, மின்சாரத்தையும் உடனடியாகக் கொடுத்து உதவினால் அதிகமாக உற்பத்தி செய்யமுடியும் என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. இராசாங்கம்:** கனம் தலைவரவர்களே, வேளாண்மைத் துறையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குடி உயர கோன் உயரும் என்பார்கள். குடி உயர வேண்டும், குடி உயர்ந்தால்தான் கோன் உயரும் என்பது பழமொழி. அது என்றென்றைக்கும் இந்த நாடு எடுத்துக்கொள்ள வேண்டிய பழமொழி. அந்தப் பழமொழியை வைத்துத் தான் நிலச்சீர்திருத்தச் சட்டம், அதாவது உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்தச் சட்டத்தினுடைய நோக்கம் எப்படியாயினும் உச்ச வரம்பு என்று சொன்னவுடன், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், லட்சக் கணக்கான ஏக்கர் நிலத்தை ஏழை எளிய மக்களுக்கு, விவசாய மக்களுக்கு, உயர்தர மக்களிலே நிலமில்லாத மக்களுக்கு, விவசாயம் செய்து பிழைக்கவேண்டுமென்ற எண்ணத்தில் கொடுத்து, அவர்கள் எல்லாம் உச்ச வரம்புச் சட்டத்தினால் நல்ல பலனை அடைவார்கள் என்று எதிர்பார்த்ததுண்டு. ஆனால் அந்தச் சட்டம் வந்தபிறகுகூட நிலம் இல்லாத ஏழைகள் பிழைக்கவேண்டுமென்ற எண்ணம் போய், சீர்திருத்தச் சட்ட விதிகள் மாற்றப்பட்டன. கரும்பு சாகுபடிக்கான நிலங்கள், தேயிலை பயிராகும் நிலங்கள், காஃபி பயிராகும் நிலங்கள், சவுக்கு பயிராகும் நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், கோயில் நிலங்கள் இன்னும் தேவஸ்தான நிலங்கள், இன்னும் தனிப்பட்டவர்கள் ஏதோ ஒரு சாமியின் பெயரால் தர்மம் என்று எழுதினால் அந்த



14th March 1966] [திரு. நா. இராசாங்கம்]

நிலங்கள் எல்லாம் போக பாக்கியுள்ள நிலங்களைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற முறையில் சட்டம் விதிக்கப்பட்டது. இந்தச் சட்டத்தால் இந்த நாடு பயனடையாது என்ற எண்ணம் உருவாயிற்று. அது போகட்டும், அண்ணா அவர்கள் சொன்னது போல் மிச்ச வரம்பு நிலத்தையாவது கொடுத்திருக்கலாம். இது வரைக்கும் மிச்ச வரம்பு நிலத்தினுடைய நிலை என்ன என்பது புரியவில்லை. இதனால் ஏற்பட்ட விளைவு என்னவென்றால் கரும்பைப் பயிரிடுகிறவர்கள் பணக்காரர்களாக ஆகிக்கொண்டே போகிறார்கள், சவுக்கைப் பயிரிடுபவர்களும் அப்படித்தான். மற்ற நிலங்களிலும் பணம் வருகிறது. இருக்கிற நிலத்திலேயாவது விவசாயிகள் மனமுவந்து வேலை செய்கிறார்களா என்பது நாடறிந்த உண்மை. இதைப்பற்றி என்னைப் போன்றவர்கள் மட்டுமல்ல, பெரிய அறிவாளிகளும் பணக்காரர்களும், நல்ல யுக்தியுள்ளவர்கள் கூட விவசாயம் நல்ல முறையில் இல்லை என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நிதி ஒதுக்கப்பட்டாலும்கூட, ஒதுக்கப்படுகிற நிதியைச் செலவழிக்கின்ற முறையில், என்ன என்ன குற்றங்கள் இருக்கின்றதோ நமக்குத் தெரியாது. ஆகவே இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தால் நன்மை இல்லை. இந்தச் சட்டத்தால் வருகிற நிலத்தையாவது விவசாயிகளுக்கு வரையறுத்துக் கொடுக்க வேண்டுமென்ற தலையாய கடமையை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதைப் போலவே பண்ணையாள் சட்டம், தஞ்சாவூரைப் பொறுத்த வரையில் வாரக் குத்தகைச் சட்டம், இன்னும் மற்ற மாவட்டங்களுக்கும் அமுலுக்கு வரக்கூடியது. இவைகளைப் பொறுத்தும் நிலைமை என்ன என்பதைப் பார்க்கவேண்டும். பண்ணையாளுக்கும் முதலாளிக்கும் தகராறு ஏற்பட்டபோது எல்லாம் பண்ணையாளுக்குப் பாதுகாப்பு தருவதற்காக ஏற்படுத்திய சட்டம்தான் இது. இது நல்ல முறையில் இப்பொழுது இல்லை. பண்ணையாளுக்கும் முதலாளிக்கும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டு அவர்கள் கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, பண்ணையாள்கள் போட்டபடி இதனால் பலனை அடையக் கூடிய நிலைமையில் இல்லை.

அதே போன்று வாரக் குத்தகைச் சட்டத்தை எடுத்துக் 12-noon
கொண்டாலும்கூட இன்றையதினம் கோர்ட்டில் ஆயிரக்கணக்கான கேஸ்கள் இருக்கின்றன. அதை அமல் படுத்துவதற்கு சட்டத்தின் நிலை சரியாக இல்லை. அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று பல முறை சொல்லியும் திருத்தப்படவில்லை. இதனால் விவசாய முன்னேற்றத்திற்குத் தடை ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டசபையிலே எடுத்துச் சொல்வதை வைத்தாவது இந்தச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறதா என்றால் இதுவரை எடுத்துக் கொள்ளவில்லை. எங்கள் பகுதியில் பெருமாள் ஏரி என்ற ஏரியைச் செப்பனிட்டுக் கொடுத்தால் கடலூர் தாலுகா முழுவதும் பாசன வசதி பெறுவதன் மூலம் அந்த இடத்தைப் பொறுத்தவரை உணவுப் பிரச்சினை தீரும் என்று சொல்லி இருக்கிறேன். கேள்வி மூலம் இதைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். இன்னும் எவ்வளவு நாள் இதற்கு ஆகும் என்றே தெரியவில்லை.

[திரு. நா. இராசாங்கம்] [14th March 1966

அதற்குள் ஆளே உயிரோடு இருக்க முடியாது போல் இருக்கிறது. இதைப் பற்றிச் சொல்லி அத்தனை நாட்கள் ஆகியும் இதுவரை நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

என்னுடைய பகுதியில் குளக்காட்டில் இருந்து குள்ளஞ்சாவடி வரை 25 ஏரிகள் தொடர்ச்சியாக இருக்கின்றன. அந்த ஏரிகளை இணைப்பு ஏரிகளாக மாற்றுவதன் மூலம் 4,000 ஏக்கர் சாகுபடி செய்ய தண்ணீர் வசதி கிடைக்கும். இதையும் அமல் நடத்தவில்லை.

விவசாயிகளுக்கு மின்சார சப்ளை சரிவர கொடுக்கப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. மின்சார விதிகளைக் கொஞ்சம் தளர்த்தினால்தான் விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்க முடியும். விவசாயி பம்ப் செட்டு வைக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு மின்சாரக் கழகத்திடம் சென்று மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்கும்போது விதிகளின்படி உடனடியாகக் கொடுக்கமுடியாது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, மின்சாரம் சப்ளை செய்வதற்கான விதிகளைத் தளர்த்தவேண்டும், எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய ஏரிகளை இணைக்கவேண்டும், பெருமாள் ஏரியை தூர் எடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. என். வடிவேல்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது நாட்டிலே மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி உணவு உற்பத்தியிலே நாம் குறிப்பிட்ட அளவு எய்தாவிட்டாலும் ஓரளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். மற்ற மாநிலங்களைக் காட்டிலும், மைசூர் மாநிலத்திலும் கேரளத்திலும் உணவு நிலைமையைப் பார்க்கும்போது நம்முடைய சர்க்கார் விவசாயக் குடி மக்களுக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்து ஓரளவு உணவு உற்பத்தியிலே முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இன்று படித்த அனைவரும் கிராமங்களுக்குச் சென்று விவசாயத் துறையிலே ஈடுபடுவதில்லை. படித்தவர்கள் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது விவசாயத் துறையிலே ஈடுபட்டால்தான் அவர்களுக்கு உத்தியோகத் துறையிலே சலுகை கொடுக்க முடியும் என்ற திட்டத்தைத் தீட்டினால் கூட நல்லது. தற்போது கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளால் விஞ்ஞான முறைகளைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. என்னுடைய தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கு எந்தவிதமான அணைகளும் கிடையாது. கிணறுகள் கூட சர்க்காரால் வெட்டிக் கொடுக்கப்படவில்லை. அங்கு வானத்தைப் பார்க்கும் பூமிகளாக இருக்கின்றன. அங்கு வானம் பார்த்துத்தான் உழ வேண்டிய நிலைமை இருக்கிறது. விஞ்ஞான முறையில் விவசாயத்தைச் செய்ய அங்கு படித்தவர்கள் இல்லை. ஆகவே, படித்தவர்களை விவசாயத் துறையிலே ஈடுபடுத்தி விவசாய முன்னேற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.



14th March 1966] [திரு. டி. என். வடிவேல்]

கிராமங்களில் உள்ளவர்களுடைய நிலங்களை எடுத்துக் கொண்டால் ஒரே பட்டாவில் பத்துப் பதினைந்து பேருக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன். இவற்றையெல்லாம் சப்டிவிஷன் செய்து கொடுத்தால்தான் போதுமான சலுகைகளைப் பெற முடியும். 'கணக்காயன் கை வைத்தால் கடவுளே வந்தாலும் அழிக்க முடியாது' என்ற பழமொழிக்கேற்ப அங்கு கிராம மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இன்று நில வரி, தண்ணீர் வரி வசூலிக்கும்போது கந்தாயம் எவ்வளவு வருகிறது என்றே புரியவில்லை. எந்த முறையில் வசூலிக்கிறார்கள், எவ்வளவு வாங்குகிறார்கள் என்று புரியவில்லை. பஞ்சாயத்து யூனியன் ஊருக்குத் தகுந்த மாதிரி வரி வாங்குகிறார்கள். சர்சார்ஜ் போடுகிறார்கள். புதிய வரி வேறு போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் வசூல் பண்ணும்போது கந்தாயத்திற்கு ஒருவனுக்கு ரூ. 1.75 வருகிறது; இன்னொருவனுக்கு ரூ. 3.75 வருகிறது. ஆகவே, பட்டாவை, அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்று இருந்தாலும் நல்ல முறையில் பிரித்து பட்டா பண்ணவேண்டும். கூட்டுறவு முறையில் கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுத்தாலும் நன்றாக இருக்கும்.

கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப்படும் பணத்தை உடனடியாகக் கொடுக்கவேண்டும். கிணறுகளை மட்டும் வெட்டினால் போதாது; பம்ப் செட்டுகளையும் தரவேண்டும்; அதற்கான மின்சாரத்தையும் தரவேண்டும். மின்சாரம் கொடுக்கப்படுவதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. முதலில் இருக்கும் கிராமத்தில் மின்சாரம் இல்லையென்றால் பின்னால் இருக்கக்கூடிய கிராமங்களில் பம்பு செட்டுகள் எல்லாம் வைத்தால் கூட மின்சாரம் கிடைப்பதில்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியில் சோளக்கொட்டாய் என்ற கிராமத்தில் 30 பம்பு செட்டுகளுக்கு அக்ரிமெண்ட் செய்ய வேண்டும். பக்கத்துக் கிராமங்களில் மின்சாரம் கொடுப்பதில் தகராறு இருக்கின்றபடியால் இங்கும் மின்சார வசதி செய்ய முடியாமல் இருக்கிறது. இந்தக் குறை இல்லாமல் மின்சாரம் வந்திருக்கிற பகுதிகளில் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கவேண்டும் என்று சொல்லும் போது இதற்கு வேண்டிய 8-ம் நம்பர் கம்பி இல்லை என்று சொல்கிறார்கள். இந்த 8-ம் நம்பர் செம்புக் கம்பியை இந்த மாகாணத்தின் தேவை பூராவுக்குமாக வரவழைக்கவேண்டும். (மணி அடிக்கப்பட்டது.) கனம் உதவி சபாநாயகர் அவர்கள் எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வி. ஆர். பெரியண்ணன்:** கனம் சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, விவசாய மானியத்தின் மீது பேசுகின்ற நேரத்தில், விவசாயத்திற்கு முக்கியமானது தண்ணீர் என்பது எல்லோரும் அறிந்ததே. எங்களுடைய மாவட்டத்தில் புதிதாகக் குட்டை வெட்டும் திட்டம் (பாண்ட்ஸ் ஸ்கீம்) அறிமுகப்படுத்தப்பட்ட நேரத்தில், குட்டைகளை வெட்ட வேண்டுமென்று மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் சொல்லப்பட்டு அந்தத் தீர்மானம் அரசாங்கத்துக்கும் அனுப்பப்பட்டது. ஆனால், அவ்வாறு அங்கு குட்டைகளை வெட்டுவதில்லை என்று அரசாங்கம் தள்ளிவைத்து

[திரு. வி. ஆர். பெரியண்ணன்] [14th March 1966

விட்டதாகத் தெரிகிறது. அப்போது எங்களுடைய மாவட்ட அபிவிருத்தி மன்றத் தலைவராக இருந்தவர்தான் இப்போது விவசாய இலாகா இயக்குநராக இருந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திற்கு அந்தத் திட்டம் அவசியம் என்பதை உணர்ந்துதான் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது. ஆனால் அவ்வாறு குட்டைகளை வெட்டுவதில்லை என்று முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இதிலிருந்து இந்த 'பாண்ட்ஸ் ஸ்கீம்' சேலம் மாவட்டத்திற்கு இல்லை என்ற நிலைமைதான் தெரிகிறது. விவசாய இயக்குநரோடு அமைச்சர் அவர்களும் கலந்து எங்களுடைய மாவட்டத்திற்கு அந்தத் திட்டம் எவ்வளவு தூரம் அவசியம் என்பதை உணர்ந்து மறு பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்குச் சாதாரணமாக சிறு உதவிகள் கூட சரிவரச் செய்யப்படுவதில்லை. நம்முடைய பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக விவசாயிகளுக்கு இரும்புக் கலப்பைகள் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்ற முறையில் வாங்கிக் கொடுக்கிறார்கள். கலப்பைகள் ஓராண்டு, இரண்டாண்டு கழித்து பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டால் அவற்றைப் பழுது பார்க்க வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. அதே போன்று மருந்து தெளிக்கும் கருவிகள் கொடுக்கிறார்கள். அந்த ஸ்ப்ரேயர்கள் கெட்டு விட்டாலும் மறுபடியும் பயன்படுத்தும் வகையில் பழுது பார்க்க சரியான ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. இதனால் நூற்றுக்குத் தொண்ணூறு ஸ்ப்ரேயர்கள் பழுதாகி பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றன.

புதிதாக பத்துக் கருவிகள் வாங்குங்கள், இருபது கருவிகள் வாங்குங்கள் என்று திட்டம் போடுகிறார்கள். இப்போது இருக்கிற கருவிகளுக்கே ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. ஆகவே இதை பரிசீலனை செய்து இந்த ஸ்பேர் பார்ட்ஸ்களை வாங்கிக் கொடுப்பதற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

புதுக் கிணறுகள் வெட்டுவதற்கு பணம் கொடுக்கிறார்கள். பழைய கிணறுகளை அடி வெட்டு வெட்டுவதற்கு பணம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, பழைய கிணறுகளுக்கு அடி வெட்டு வெட்டுவதற்கும் ஒரு தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்கிணறுகள் வெட்டுவதற்கு இவ்வளவு அடி, இவ்வளவு சதுரம், இவ்வளவு ஆழம் வேண்டுமென்று ஒரு கண்டிஷன் போட்டு பணம் கொடுக்கிறார்கள். சிலர் பணத்தை செலவு செய்து 52 அடி வெட்டினாலும் தண்ணீர் கிடைப்பதில்லை என்பது மட்டுமல்லாமல் பாறை வந்து விடுகிறது. அப்படியிருக்க அவர்களை அந்தப் பணம் பூராவையும் கட்டச் சொல்கிறார்கள். ஐந்து வருடங்கள் ஒன்றுமே செய்யாமல் இருந்தால் திரும்பக் கட்டச் சொல்வது சரி. ஆனால் பூராப் பணத்தையும் செலவு செய்து விட்டு மேலும் பணம் எங்கேயாவது வாங்கி வெட்டினால் கூட பாறையாக இருக்கிறது என்று சொன்னால் அந்தப் பணத்தை பூராவும் கட்டி விடு என்று சொன்னால் அவன் எப்படி கட்டுவான்?



14th March 1966] [திரு. வி. ஆர். பெரியண்ணன்]

அவன்தான் கிணறு வெட்டுவதற்காக அந்தப் பணத்தைச் செலவிட்டு விட்டானே? ஆகவே, அதை தவணைமுறையிலாவது வாங்கிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு யூனியனுக்கு ஒரு ட்ராக்டராவது வாங்கிக் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும். இன்று பலபேர்கள் ட்ராக்டருக்காக மனு செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ட்ராக்டர்கள் கிடைப்பதில்லை. ஆகவே ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு ட்ராக்டராவது கொடுத்தால் அதை அங்குள்ள விவசாயிகள் வாடகைக்கும் எடுத்துக்கொள்ளலாம். பின்னால் வேண்டுமானால் விவசாயிகள் வாங்கிக்கொள்ளலாம். ஆகவே இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக எலக்ட்ரிக் பம்ப் செட்ஸ் வைத்து மூன்று நான்கு மாதங்கள் ஆகியும் சர்வீஸ் கிடைப்பதில்லை. இதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஊரிலிருந்து வந்திருப்பவர்கள், எங்கள் பகுதியில் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது என்று சொல்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இவ்வளவு மணியிலிருந்து இவ்வளவு மணி வரையில் மின்சாரம் கொடுக்கப்படும் என்று அறிவித்தால் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும். அவர்கள் அப்போது தயாராக இருப்பார்கள். சில மணி நேரம் கொடுத்து விட்டு பின் கொடுக்காமல் இருந்தால் அது விவசாயிகளுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே குறிப்பிட்ட நேரத்தில் மின்சாரம் கொடுக்கப்படும் என்று அறிவித்தால் அதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வசதியாக இருக்கும். அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் மாவட்டத்திற்கு ஒரு விவசாயக் கல்லூரி வேண்டுமென்று மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலிருந்து கூட தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே நான்காவது திட்டத்திலாவது எங்கள் மாவட்டத்திற்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைத்துத் தர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஜெய் ஜவான், ஜெய் கிஸான் என்ற லால் பகதூர் சாஸ்திரி அவர்களின் கோஷம் நமக்கு நல்லமுறையில் இன்றைக்கு ஞாபகத்தில் இருக்கிறது. இந்தியா—பாகிஸ்தான் போரிலே, இந்தியா—சைனா போரிலே எந்தவிதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது நமக்குத் தெரியும். இன்று நம் நாட்டிலுள்ள விவசாய உணவுப் பற்றாக்குறையைப் போக்க ஜெய் கிஸான் என்று சொல்லும்போது நம் விவசாயத் துறையை நல்ல முறையில் 'வார் ஃபுட்டிங்கில்' யுத்தத்திற்கு தயார் செய்யும் முறையில் அதை அமைக்க முடியுமா என்பது பற்றி யோசிக்க வேண்டும். நேற்று முன்தினம் நான் பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். 'There is lopsided development in Education'. என்று வந்திருப்பதைப் பார்க்கும்போது ஒவ்வொரு ஜில்லாவிற்கும் தனிப்பட்ட எஜுகேஷனல் ப்ளான் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் விவசாய முன்னேற்றத்திற்காகவும், ஒவ்வொரு

யூனியனிலும் விவசாயத்திற்கு என்று ஒரு தனி ப்ளான் இருக்க வேண்டும். அப்படி ப்ளான் தயாரித்து ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 'ஸெல்ஃப் ஸபிஷியன்ஸி' அடையக் கூடிய முறையில் நாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு என் தொகுதி பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக் கொண்டு முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். வேடசெந்தூர் தொகுதி ஒரு பிற்போக்கான வட்டாரமாகும். இந்த வட்டாரத்தில் ஸெல்ஃப் ஸபிஷ்யன்சியை (சுயதேவை பூர்த்தி) எப்படிக் கொண்டு வரலாம் என்பதுபற்றி யோசிக்க வேண்டும். அங்கு எந்தவிதமான மேஜர் இரிகேஷன் திட்டமும் கிடையாது. அங்கு கொடவனாறு என்ற ஒரு சின்ன ஆறு இருக்கிறது. அதிலுள்ள சர்ப்ளஸ் வாட்டரை கொண்டு வர எஸ்.எம்.ஐ.பி. ஸ்கீமின் கீழ் ஒரு திட்டம் தயாரித்து அது அன்ரெம்யூனரேட்டிவ் என்று நிறுத்தி விடப்பட்டிருக்கிறது. கொடவனாறுக்கு நல்லதொரு திட்டத்தைப் போட்டு இருக்கிற தண்ணீரை விவசாயத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன். வெள்ளகுண்டான் சமுத்திரத் திட்டத்திற்காக இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு ப்ளான் போடப் பட்டது. அதையும் உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுமார் 10,000 கிணறுகள் வெட்டுவதற்கு என்று கலெக்டர் ஒரு ஸ்கீம் தயார் செய்தார்கள். அதை சர்க்காருக்கு அனுப்பினார்களோ என்னவோ தெரியவில்லை. அதில் எங்கள் பகுதியில் 5,000 கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு ஸ்பெஷல் திட்டம் கொண்டு வரவேண்டும். குஜிலியம்பாறையில் ஒரு ராக் ப்ளாஸ்டிங் யூனிட் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கு பவர் ட்ரில்ஸ், டிராக்டர்கள் இவை வேண்டுமென்று ஒரு தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. ஆகவே அங்கு ஒரு ப்ளாஸ்டிங் யூனிட் வாங்கி பவர் ட்ரில்ஸ், ட்ராக்டர்கள் இவை கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அனிமல் ஹஸ்பண்ட்ரிக்காக ஒரு க்ராஷ் ப்ரோக்ராம் போடுகிறார்கள். அதேமாதிரி ஸாயில் கன்ஸர்வேஷன் ஸ்கீமிற்காகவும் ஒரு க்ராஷ் ப்ரோக்ராம் பழனி, ஒட்டன்சத்திரம், வட மதுரை, வேடசெந்தூர், குஜிலியம்பாறை போன்ற இடங்களில் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேடசெந்தூருக்கு ஒரு பாண்ட்ஸ் ஸ்கீமும் அமைத்துத் தரவேண்டும். அனிமல் ஹஸ்பண்ட்ரி கீ வில்லேஜ் ஸ்கீம் வேடசெந்தூர்—ஜெனன்கோட்டையிலும் குஜிலியம்பாறையிலும் ஆரம்பிக்கப்பட்டு அது நல்லமுறையில் வேலை செய்து வருகிறது. இதை எப்படி மேலும் டெவலப் செய்வது என்பதில் அந்த இலாகா கவனம் செலுத்தி வருகிறது. அந்த வட்டாரம் முன்னேற வேண்டும் என்றால் அங்கு பௌல்ட்ரி யூனிட்ஸ் ஒன்றிரண்டு அமைக்க வேண்டும். கருங்கல், யானைப்பட்டியில் செம்மறி ஆடு வளர்ப்பு சொஸைடி ஒன்றை ஆரம்பிக்க இரண்டு ஆண்டுகளாகப் ப்ரப்போசல் இருந்தும் அது சாங்ஷன் ஆகாமல் இருக்கிறது. பண்ட்ஸ் இல்லை என்று சாங்ஷனாகாமல் இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். ஆகவே கருங்கல், யானைப்பட்டி, காசிப்பாளையம், குட்டம் போன்ற கிராமங்களில் இந்த சொஸைட்டிகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



* திரு. நா. ப. செங்கோட்டுவேலு: கனம் துணைத் தலைவர் அவர்களே, விவசாய மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையையொட்டி சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்திற்கு முதல் இடம் கொடுத்து ஒவ்வொரு திட்டத்திலும் தொகையை அதிகப்படுத்தி வருகிறோம். இருந்தாலும் விவசாயிகளுக்கு ஊக்கம் இல்லாத வகையில்தான் இந்தத் திட்டங்கள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. இன்று விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் விவசாயத் தொழிலை விட்டு விட்டு மற்ற தொழில்களுக்குப் போய் விட்டால் அது கௌரவமாக இருக்கும் என்று நினைக்கும் நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயத் தொழில் செய்யவேண்டுமென்றால் காலை ஆறு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை கஷ்டப்படவேண்டியிருக்கிறதென்றும், அதற்குத் தகுந்த கூலி கிடைக்கவில்லை என்பதினாலும் வேறு தொழில்களுக்கு, ஆலை போன்ற வகைகளில் வேலை தேடிப் போகும் நிலைதான் இன்று இருக்கிறது. எட்டாவது அல்லது பத்தாவது வரை படித்து விட்டு என்னிடம் வந்து எனக்கு ஏதாவது வேலை வாங்கிக் கொடுங்கள் என்று விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் கேட்கிறார்கள். அப்படி வருகிறவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் அவர்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பளிக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன்களில் 15 திட்டங்களைப் போட்டு பணத்தை செலவு செய்து வருகிறோம். அதனால் விவசாயிகள் நல்ல முறையில் பயனடையாமல் பணம்தான் செலவாகிறது. விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கிற அதிகாரிகளுக்கு விவசாயம் பற்றி நல்லமுறையில் தெரியுமா என்றால் சந்தேகமே. கோவையில் நடந்த மகாநாட்டில் கூட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயத் துறையில் உள்ள அதிகாரிகளுக்கு நல்ல முறையில் விவசாயம் செய்யத் தெரியாது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே விவசாயக் கல்லூரிகளில் சேர வரும் மாணவர்களில், விவசாயக் குடும்பங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு முதல் இடம் கொடுத்து அவர்களுக்கு பயிற்சி அளித்தால் விவசாயத் துறைக்கு நல்ல முறையில் பயன்படும் என்பதினால் அவர்களுக்கு முதல் இடம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தவிரவும், விவசாயக் கல்லூரிகள் இன்னும் அதிகமான அளவில் ஏற்படுத்தவேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒன்றிரண்டு கல்லூரிகளையாவது ஏற்படுத்தவேண்டும். அதில் ஒன்றை சேலத்திற்கு கொடுத்தால் அங்குள்ள விவசாய மக்கள் அதன் மூலமாக பல விவசாய வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

குறிப்பாக, சேலத்தை எடுத்துக்கொண்டால், தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது என்று நாமக்கல் உறுப்பினர் திரு. சின்னையன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் சொல்வதை அரசாங்கம் கேட்காவிட்டாலும், அவர்கள் சொல்வதையாவது எடுத்துக்கொண்டு ஏதாவது திட்டங்களை செயல்படுத்தவேண்டும். அதன் மூலமாக ராசிபுரம், நாமக்கல் வட்டத்திலுள்ள மக்கள் வசதி பெற முடியும் என்பதையும் தெரி

வித்துக் கொள்கிறேன். மேலும் திருமணிமுத்தாறுத் திட்டம், ஜேடர்பாளையம் வாய்க்கால் திட்டம், இவைகளையும் நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையில் பல திட்டங்களை செய்தும்கூட உணவுப் பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிறது. காரணம் விவசாயத்தில் அரசாங்கம் நல்ல கவனம் செலுத்தவில்லை என்று நான் கூற வேண்டும். என்னுடைய ஜில்லாவில் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் மக்கள் குடியேறி விவசாயம் செய்து வருகிறார்கள். இவ்விதம் பத்து ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு இன்னும் அந்த நிலங்கள் பட்டா செய்து கொடுக்கவில்லை. ஆண்டுக்கு ஆண்டு தண்டத் தீர்வையை அதிகப்படுத்தி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் விவசாயிகளுக்கு தொந்தரவு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயம் செய்கிறவர்களுக்கு அவர்கள் விவசாயம் செய்கின்ற நிலங்களை பட்டா செய்து கொடுத்தால், அதன் மூலமாக அவர்கள் கிணறுகளை அமைத்து நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும். இப்படிப்பட்ட தரிசு நிலங்களில் குடியேறி விவசாயம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு பட்டா கொடுத்து, அந்த நிலங்களை சீர்திருத்துவதற்கு பண உதவியும் செய்யவேண்டும் என்றும், அவர்களை விவசாயத்தில் ஊக்குவிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருப்பது கால்நடைப் பண்ணை, கால்நடைகள் எவ்வளவு தான் அதிகமாக இருந்தாலும் கூட, இதன் தரம் மிக மிக குறைவாக இருக்கிறது. இதன் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் முயற்சிகள் எடுக்க வேண்டும். மேலும் பஞ்சாயத்து யூனியன்கள் ஒவ்வொன்றிலும் கால்நடை ஆசுபத்திரி ஏற்படுத்தவேண்டும் என்ற கொள்கை வைத்திருக்கின்றோம். ஆனால் இருக்கின்ற சில ஆசுபத்திரிகளில் இன்னும் டாக்டர்கள் இல்லை. சில இடங்களில் ஆசுபத்திரிகளே இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. ராசிபுரம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஒரு ஆசுபத்திரி கட்டிடம் கட்டுவதற்காக பத்து ஆண்டுகள் முயற்சி செய்து வருகிறோம். இதற்காக பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆசுபத்திரி கட்ட வேண்டிய அளவுக்கு நிலத்தை இனமாக யாரும் கொடுக்காமல் இருப்பதால், ஆசுபத்திரி கட்டுவது நின்று விட்டிருக்கிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒரு மனு கொடுத்திருந்தேன். இன்னும் அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதையும் கவனித்து, இது போன்ற காரியங்களை எல்லாம் செய்து, விவசாயிகளுக்கு ஆக்கம் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் கனம் விவசாய இலாகா அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த விவசாயம் முதலிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்தை புலப்படுத்திக் கொள்கிறேன். இந்தத்துறை மிக இன்றியமையாத துறை,





மிகவும் அருமையான துறை. இதற்கு எவ்வளவு தேவை என்று கோரிக்கை சமர்ப்பிக்கப் பெற்று அதை சபை முழுவதும் அங்கீகரிப்பதற்குரிய மிக இன்றியமையாத ஒரு துறை இது என்பதை முதற்கண் புலப்படுத்திக்கொள்கின்றேன். இந்தத்துறை செம்மையாக பயன்கொழிக்க முதலில் இந்தத் துறைக்கு இன்றியமையாத அளவில் இருக்கின்றவர்களை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் உழவர்கள். நிலத்தை உடைமையாக வைத்திருக்கின்றவர்களோ, வெறும் குத்தகைக்கு உழுது விவசாயம் செய்கின்றவர்களோ, அல்லது பண்ணையாட்களாக இருந்து மொத்த சம்பளம் பெறுகின்ற முறையில் நேரடியாக பண்ணையில் விவசாயம் செய்கின்றவர்களோ, அல்லது அறைக்கூலி என்று சொல்லுகின்றோமே—அன்றாடக் கூலி பெற்று விவசாயத் தொழில் செய்கின்றவர்களோ, இவர்கள் எல்லாம் உழவர் என்னும் பெரு வகுப்பிடையே அடங்குவார்கள் என்பது நமக்கு தெரியும். அவர்கள் வளமாக வாழ வேண்டும். நிறைந்த வளமுள்ள வாழ்க்கையாக வாழ முடியாவிட்டாலும், கவலையற்ற வாழ்க்கை வாழவேண்டும். அப்போது தான் இந்தத் துறை கருதியவாறு வேண்டியவாறு வேண்டிய பயனை அளிக்க முடியும் என்பதை நாம் மிக நன்றாக அறிவோம். உழவர் வாழ்வு என்று சொன்னால், அது தான் உலக வாழ்வு என்று கொள்ளவேண்டும். ஆகவே தான் 'ஏர்ப்பின்னது உலகம்' என்ற முறையை வகுத்திருக்கின்றது தமிழ் மறை, இதை மனத்தில் கொண்டு கணக்கிடுகின்ற பொழுது, நாம் என்னென்ன செய்யவேண்டும், அவர்களுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன, வேண்டத் தகாதவைகள் எவை என்பதையெல்லாம் கண்டு அறிந்து, ஆராய்ந்து, தெளிந்து செயல்பட முன் வரவேண்டும். எனவே அவர்களது வாழ்க்கை வளவாழ்க்கையாக அமையும்படியான அளவில், பிரச்னைக்குட்படாமல் சிரமம், சிக்கல் இவை எல்லாம் ஏற்படாமல் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் மனச்சடைவு அடையாமல் இருக்கும்படியான அளவில், நூற்றுக்கு நூறு என்ற அளவில் இல்லாவிட்டாலும், இருக்கின்ற சட்டத்திட்டங்களுக்குட்பட்டு வழிமுறைகளை அமைப்பதற்கு ஆளும் கணத்தவர்கள், இந்த சபை எல்லாம் ஒன்று சேர்ந்து பணி புரிய வேண்டும்.

முதலில் உழவர்கள் இன்று இருக்கின்ற வரிக்கொடுமையிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். இன்று இருக்கின்ற வரிகளைச் சொல்லப் போனால், அது அதிகமல்ல, கடுமையல்ல, கொடுமை என்று சொல்லக் கூடிய அளவில் உச்ச நிலைக்குப்போயிருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இந்த வரி —விவசாய நிலத்திற்கு வரி என்பது கிட்டத்தட்ட இல்லாத அளவில்--ஒரு பெயரளவுக்கு மட்டும் என்ற முறையில்--அதுவும் எதற்கென்றால், தன் உரிமையை தஸ்தாவேஜ்கள் மூலமாக பதிவு செய்து கொள்வதற்காகவும், அதன் மூலம் தன் பட்டா உரிமையை நிலைநிறுத்திக்கொள்வதற்காகவும், அதற்காக ஆகின்ற செலவை சரிக் கட்டுகின்ற அளவில் இந்த வரி இருக்கவேண்டும். நிலவரி என்பது அரசாங்கத்தின் வருமானத்திற்குரிய ஒரு பகுதியாக கணக்கிடக்கூடாது. வரியினுடைய பொருள் என்ன என்பதைப்

[திரு. சா. கணேசன்] [14th March 1966

பற்றி பண்டை பலக்கியங்களிலும், சிலா சாசனங்களிலும் என்ன சொல்லியிருக்கிறது என்பதையெல்லாம் முன் ஆண்டே நன்றாக விவரித்து பேசியிருக்கின்றேன். வரி என்பது காப்பு என்கிற அளவில் தான் அடங்கும், அது ஒரு இன்கம் அல்லது வருமானம் அல்ல. காப்பதற்கு வரி என்பது தான், கிணறுக்கு வரி எடுக்கிறோம், கட்டடத்திற்கு வரி எடுக்கிறோம், கோவிலுக்கு வரி எடுக்கிறோம் என்பதையெல்லாம் பார்த்தால், இவை சிதைந்து விடாமல், தூர்ந்து விடாமல் பார்த்துக்கொள்வதற்குத்தான் வரி எடுக்கப்படுகிறது. இதை நன்கு மனத்தில் இருத்திக்கொண்டு இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களைப் பார்த்தால், அவர்களை காத்துக்கொள்வதற்காக, தங்கள் உரிமையை நிலை நாட்டிக் கொள்வதற்கு ஆகின்ற செலவுக்கு ஆகும் பணம் வரியாக அமைய வேண்டும் என்பதே என்னுடைய ஆலோசனை.

இனி இந்த மாதிரி ஏராளமான நிலத்தை வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள் செய்து வருகின்ற விவசாயத்தின் மூல மாக கிடைக்கின்ற வருமானத்தின் மீது வரி விதிப்பதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. இது பல்வேறு துறைகளை ஒப்பிட்டு, விருப்பு வெறுப்பற்று, பார்ப்போமானால் நன்கு புலப்படும். ஒருவன் கடை வைத்திருக்கிறான் என்றால், கடை வைத்திருக்கிறான் என்பதற்காக அவனுக்கு வரி கிடையாது. அந்தக் கடையிலே, அல்லது வாணிகத் துறையிலோ ஏற்படுகின்ற வருமானத்தின் மீது வரி விதிக்கப்படுகிறதே தவிர தொழிலை வைத்து நடத்துகின்றான் என்பதற்காக தொழிலின் மீது வரி விதிப்பது இல்லை. கடைக்காரன் எட்டு அடி கடை வைத்திருக்கிறான், அல்லது 200 அடி கடை வைத்திருக்கிறான் என்பதை அடிக்கணக்கில் போட்டு வியாபாரிக்கு வரி விதிப்பதில்லை. இன்னும் உணவு துறை என்பது மிகவும் அடிப்படையான துறை என்றிருந்தும், இந்தத் துறையில், நிலத்தின் பரப்பை அடிப்படையாகக் கொண்டு வரிவிதிப்பது என்பது தர்ம நியாயம் அல்ல—சட்டத்தில் என்ன சொல்லப் பட்டிருக்கிறதோ—எனக்குத் தெரியாது—அதில் எனக்கு அக்கறையும் இல்லை—இவ்விதம் நிலத்தின் மீது வரி போடுவது தர்ம நியாயம் அல்ல என்பது என்னுடைய வாதம். அதற்குப் பதிலாக வருமான அடிப்படையில் வரியைப் போட்டுக்கொள்வதில் யாருக்கும் ஆட்சேபனையும் இருக்க முடியாது. ஆட்சேபனையும் இல்லை. இன்னும் இருக்கின்ற பல நிபந்தனைகளிலிருந்து விலக்கிவிட்டு, மேலும் உணவை உற்பத்தி செய்வதற்கான வழியில் இருப்பதை சீர்படுத்த, செம்மைப்படுத்த இருக்கின்ற தரிசு நிலங்கள், பொட்டல் காடுகள் இவற்றை உணவு பயிரிடுவதற்கு எல்லோருக்கும் ஆக்கம் கொடுக்கவேண்டும். இது இன்று அல்ல,
12–30 p.m. நேற்று அல்ல, பரம்பரையாக, வரலாற்றுக் காலம் முதல் பார்க்கிறோம். பாண்டிய ராஜ்யம், பல்லவ ராஜ்யம், சோழ ராஜ்யம் இங்கெல்லாம் நிகழ்ந்த நிகழ்ச்சி. பின்னாலே வந்த பிரிட்டிஷ் ஆட்சியிலும் இதைச் செய்தார்கள். நிலத்தைத் தயார் செய்து, உழுது, பண்படுத்திப் பயிர் செய்யவேண்டுமானால், எல்லாவற்றையும் நீங்கள் செய்து கொள்ளுங்கள், பெயர் அளவுக்கு ஒரு வரி போடுகிறோம், ஆண்டு ஒன்றுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 8 அணா வரி



14th March 1966] [திரு. சா. கணேசன்]

என்று சொன்னார்கள். இந்த மாதிரி பல நூறு ஏக்கர் நிலத்திற்கு பர்மாவில் வரி கொடுத்துக்கொண்டிருந்தேன். பரந்த காடுகளை, நெருப்பிட்டு, கொளுத்தி, மேடுகளைப் பெயர்த்து; நிலங்களில் பயிரிடும்போது ஆண்டு ஒன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 8 அணா வரி. பெயர் அளவுக்கு வரி விதித்தார்கள் என்று வரலாறுகள் காட்டுகின்றன, ஆட்சி நெறி முறைச் சான்றுகள் காட்டுகின்றன. இதை இப்போது கைக்கொள்ள வேண்டும். இங்கு இருக்கிற பொட்டல் காடுகளாக இருக்கின்ற நிலங்களில், கட்டாந்தரையாக இருக்கிற நிலங்களில் அவற்றை பண்படுத்தி உணவு தானியங்களை உற்பத்தி செய்ய முன் வருகிறார்கள் என்றால், அவர்களுக்கு அரசாங்கம் எல்லாவிதமான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்து, எந்த விதமான சிக்கல்களும், பிரச்னைகளும் ஏற்படாமல், சிரமங்கள் ஏற்படாமல் செய்யவேண்டும்.

இனி, பாம்பரையாக புன்செய் பயிர் செய்து வந்த பல்வேறு இடங்களையெல்லாம், சிறப்பாக இராமநாதபுரம் ஜில்லாவிலே, அவற்றையெல்லாம் வேலியிட்டு அடைத்து, காடுகள் என்று போட்டு விட்டார்கள். பழைய காலத்தில் புன்செய் நிலங்களை 'புன்செய் காடுகள்' என்று சொல்வது வழக்கம். எந்த அதிகாரி வந்தாரோ தெரியாது. காடு ஃபாரஸ்ட் என்று போட்டு, அவைகளைக் காடுகளாக்கி, வேலி போட்டு, உழுது வந்தவர்களைத் தள்ளி, நெருக்கி, வெளியேற்றி, இன்று அவைகள் காடும் இல்லை, உழுகிற நிலமும் இல்லை என்ற நிலையில் சும்மாக் கிடக்கின்றன. ஆடுகள் வேண்டுமானால் போக முடியாதபடி வேலி அடைக்கப்பட்டிருக்கிறதே தவிர, அங்கு ஒரு ஐந்து அடி மரம் வந்திருக்கிறது என்று சொல்லுவதற்கு வாய்ப்பு இல்லை. சில இடங்களில் புதிதாக முந்திரி, யூகலிப்டஸ் போன்ற செடிகளை வைத்து கொஞ்சம் அவைகள் வளர்ந்திருக்கின்றன. இந்த மாதிரி விவசாயம் செய்து வந்த இடங்களை, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்துவந்த இடங்களை அழித்து விட்டு, காடுகள் என்று சொல்லி மரங்களை வைத்து விறகுக்கு ஆகும் என்று சொல்லுவது நியாயமுள்ள, பொருத்தமுள்ள, ஒப்புக்கொள்ளத் தக்க வாதம் ஆகாது.

இனி, பெரும்பாலும் புன்செய் விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகள் ஹரிஜனங்கள். மற்றவர்கள் மிக மிக ஏழைகள். அவர்கள் ஊரை விட்டு இரண்டு மைல், மூன்று மைல் தள்ளி காடாந்திரப் பிராந்தியத்தில் வீடு கட்டிக்கொண்டு மண்ணெண்ணெய் வாங்கவேண்டுமானால் கூட இரண்டு மூன்று மைல் சென்று காரைக்குடிக்கோ, புதுக்கோட்டைக்கோ போய் வாங்கி வர வேண்டிய நிர்ப்பந்தத்தில் வாழ்கிறார்கள். இதையெல்லாம் மனத்திலே கொள்ளவேண்டும்.

இனி இந்த நேரத்திலே உணவுப் பயிர் உற்பத்தி செய்கிறவர்
இனி, இந்த நேரத்திலே உணவுப் பயிர் உற்பத்தி செய்கிறவர்களுக்கே எல்லாவித ஆக்கமும் ஊக்கமும் கிடைக்கும், விவசாயிகளுக்குக் கிடைக்கும் உதவிகளில் உணவுப் பொருள்களைப் பயிர் செய்கிறவர்களுக்கே முதன்மையாகக் கிடைக்கும் என்று வழிவகை செய்யவேண்டும். சில கட்டுப்பாடுகளைக் கொஞ்சம் நீக்கியிருப்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் முழுக்க முழுக்க கட்டுப்

பாடுகளை நீக்கி, எல்லா இடங்களிலும் பணப் பயிரின் மேல் மோகம் கொண்டு அவைகளைப் பயிர் செய்வதில் விவசாயிகள் ஈடுபடக் காரணமாக இருக்கிற தொல்லைகளையெல்லாம் நீக்கி—விவசாயத்தி லே எல்லா விவசாயிகளும் பணப் பயிருக்குப் போகக் கூடியவர்கள் அல்ல; உணவுப் பொருள்களைத் தான் பயிரிட விரும்புகிறார்கள்—அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். யார் அது மாதிரி விண்ணப்பித்துக் கொண்டாலும் சரி, அங்கங்கெல்லாம் அவர்கள் செய்ய முழு உரிமையையும் கொடுத்து உணவுப் பயிர் செய்வதிலே வீணாக இடைஞ்சல் செய்து—இப்படி செய்யக் கூடாது, அந்த இடத்தில் செய்யக்கூடாது என்று சொல்லி—அப்படிச் சொல்லுவதற்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்று அதற்கு வரவில்லை; எல்லாவற்றுக்கும் உரிமை உண்டு; ஆனால் எல்லாவற்றிலும் உரிமை என்று சொல்லுவது உருப்படாது, அதிலும் உணவுத் துறை பாழ் பட்டு விடும்—அப்படி வீணாக இடைஞ்சல் செய்யாமல், முழு சுதந்திரம் கொடுத்து, எந்தப் பயிர் வேண்டுமானாலும் உற்பத்தி செய்ய அவர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு, உணவுப் பயிர் நிறைய செய்கிற இடங்களில் எத்தனையோ வகையான இடுமங்கள் வருகின்றன. மழை இல்லை, நீர் வரத்து இல்லை, காய்ச்சல், பூச்சி, நோய், இத்தியாதி கஷ்டங்கள் வருகின்றன. இந்தக் கவலைகளினால் கூட சிலர் பணப் பயிர்களுக்குப் போகிறார்கள். பணப் பயிர்களை விற்கும்போதே பணம் கிடைக்கிறது, உரம் கிடைக்கிறது, அக்ரிகல்ச்சுரல் டெமான்ஸ்ட்ரேட்டர் வந்து நோய்த் தடுப்பு, பூச்சித் தடுப்பு மருந்துகளைத் தெளித்து, அவர்களை முன்னிட்டாவது செய்கி றார்கள் என்ற மோகத்தினால் பணப் பயிருக்குப் போகிறார்கள். இதைத் தடுக்கவேண்டும். இதற்கு அரசாங்கம் ஏதோ செய்கிறது; இன்னும் செம்மையாகச் செய்யவேண்டும். அதற்கும் மேலே பஞ்சப்பாடு வந்து விடுமானால் நம் வாழ்க்கை என்ன ஆகும் என்று கவலைப்படாமல் இருக்க பயிர் இன்ஷ்யூரன்ஸுக்கு வழி வகை செய்யவேண்டும். அதே மாதிரித்தான் அவர்களுடைய கால் நடைகளை இன்ஷ்யூர் செய்ய வேண்டிய வழிவகை—அரசாங்க சட்டம் இருக்கிறது செய்யலாம் என்று சொல்லிவிடுவது போதாது —செய்யவேண்டும். இவைகளைச் செய்வதற்கு ஆட்சி இன்னின்ன அளவிலே இன்னின்ன துறையிலே, இன்னின்ன மாதிரியான உதவிகளைக் கணிசமாக, பிரத்தியட்சமாக, பலன் தரத்தக்க அளவில் செய்கிறது என்று கூட நிலைநாட்டி விடவேண்டும்.

இனி, இந்த பொலிகாளைகளை இப்போது பல விவசாயிகளுக்கும் கொடுக்கிறோம். அதே போல ஆடுகளையும் கொடுக்கிறோம். இது எங்கள் பக்கத்தைப் பொறுத்த வரையில் பல வித ஆட்டுக் கடாக்கள் காணப்படுகின்றன. சிறப்பாக இராமநாதபுரம் பகுதி யில் கறவைக்கடா என்பது ஒரு வகை. இந்த ப்ரீடை உற்பத்தி செய்கிறார்கள். பழங்காலத்திலிருந்து வருகிற கடா. பட்டணம் கறவைக் கடா என்று புது ஆடு வந்திருக்கிறது. அதன் உயரம், அதனுடைய பருமன், அதனுடை நிறம் எல்லாம் இதைப் போல கிட்டத்தட்ட இரண்டு மடங்கு போகிறது. அது பொலிவை யொட்டித் தருகிற வளத்திற்கும் சரி, அல்லது மாமிச உணவு





கொள்ளுகிறவர்களுக்கு ஊன் தருகிற அளவிலும் சரி, தரம் உயர்ந்ததாகவும் நல்ல பயன் அளிப்பதாகவும் இருக்கிறது. இதை மனத்திலே கொள்ளவேண்டும். மற்ற பகுதியிலே சில பேருக்கு பட்டணம் கடா என்பது தெரிந்துமிருக்கலாம், தெரியாமலும் இருக்கலாம். அந்தத் துறையில் நான் ஆராய்ச்சி செய்தவன் அல்லன். ஆனால் எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் பட்டணம் கடா நிரம்ப நிரம்ப பயன் தரத் தக்கதாகவும், அந்தப் பகுதியினுடைய சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்றதாகவும் அமைந் திருக்கிற நிலைமையை ஏற்றுக்கொண்டு அந்தப் பகுதியில் அதைக் கூட மேலும் வளர்க்க சர்க்கார் உதவி செய்யலாம். இராம நாதபுரம் கறவைக்கடா வாங்குகிறவர்களில் பெரும்பாலோர்—எண்ணிக்கையைக் கூட சொல்லலாம். எனக்கு எண்ணிக்கை சரியாகத் தெரியாததால் சொல்ல முடியவில்லை—அது மாதிரி இன உற்பத்திக்காக என்று வளர்க்காமல், உணவுத் தட்டுப்பாட்டை போக்க, வயிற்றுப்பாட்டுக்கு என்ற அளவில் வந்த ஒரு மாதத்தில், இரண்டு மாதத்தில், பிரியாணி பண்ணுகிற அளவுக்கு வந்துள்ள தை—(குறுக்கீடு)—அது பிரி ஆணியோ, பிரி இல்லாத ஆணியோ எனக்குத் தெரியாது, அமைச்சருக்குத்தான் தெரியும்.

**கனம் திரு. பூ. கக்கன்:** கறவைக் கடா இரண்டு மாதத்தில் வளர்வது இல்லை. அதற்குப் பல மாதங்கள் ஆகும்.

**திரு. சா. கணேசன்:** கறவைக் கடாக் குட்டியைச் சொல்ல வில்லை. பெரிய ஆடு இருக்கிறதே அதைச் சொல்லுகிறேன். பெரும்பாலோர் இந்த மாதிரி செய்கிறார்கள். எவ்வளவு என்று எண்ணிக்கை கூட சொல்லலாம், நான் அதைப்பற்றி நிச்சயமாக இல்லாத காரணத்தினால், பொறுப்புணர்ச்சியினால் நான் எண்ணிக்கை சொல்லவில்லை. பெரும் பகுதி சாப்பாட்டுக்குப் போகிறதேயன்றி இனப் பெருக்கத்திற்குப் போகவில்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நிலையிலே எங்கள் பகுதியைப் பொறுத்த வரையிலே விவசாயிகளுக்கு இந்த மாதிரி பட்டணம் கடா கொடுப்பதோடு, புங்கனூர் குட்டை பற்றி நான் பல முறையும் சொல்லியிருக்கிறேன். இப்போது ஆந்திராவிலே கிர்ரா அல்லது கர்ரா என்ற ஒரு வகை இனத்தோடு கலப்பு செய்து பெருக்கப்பட்டு மிகச்சிறிய தோற்றமும் அளவும் உள்ள பசுக்களாக அமைந்து விவசாயி யினுடைய எளிய நிலைக்குத் தகுந்தவாறு குறைந்த தீனி தின்று, தீனிக்கு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிறைந்த அளவு பால் தரும் வர்க்கமாக இருக்கிறது. புங்கனூர் குட்டை கிட்டத் தட்ட அற்று விட்டு, அந்தப் பகுதி ஜமீன்தாரிடம் 6 அல்லது 10 மாடுகள் இருக் கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனாலும், அதன் மூலமாக பல சேர்ப்புகளைக் கொண்டு, ஆஸ்திரேலியா போன்ற வெளி நாடு களிலிருந்து கறுப்பு நிறம், சிறிய குட்டை மாடுகள் இவைகளை வரவழைத்து, அதோடு இதைக் கலவை செய்து, அதன் மூலம் நல்ல மாடுகளை உற்பத்தி செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த முறையில் நமது பகுதியிலும் நல்ல ரக மாடுகளை உற்பத்தி செய்யவேண்டும், இப்பொழுது தர்பார்கார், சிந்தி சிவப்பாக இருக்

கிறது. சிந்தி, ஓங்கோல், காங்கேயம் முதலியவற்றையெல்லாம் வைத்து நாம் மாடுகளைப் பெருக்கிவருகிறோம். நல்ல உழவுக்கு, நல்ல ஊட்டத்திற்கு, பாலுக்கோ என்று கருதாமல், மற்ற பணிக்கு என்று கருதுகிறபொழுது காங்கேயம் தலையாக நிற்கிறது. பாலுக்கு என்று பார்க்கிறபொழுது, ஓங்கோல் வகையறு, தர்பார்கார் வகையறு, சிந்தி வகையறு இவையெல்லாம் முன்னணியில் நிற்கின்றன என்பது நமக்குத் தெரிகிறது. இம்மாதிரியான மாடுகளை வாங்கி விவசாயிகளுக்குக்கொடுத்து, அதன் மூலம் அவர்களுக்கு துணைத் தொழில் அல்லது உப தொழில் ஏற்படுவதற்கு வழிவகை செய்ய வேண்டும். எந்த விவசாயியும் சுமார் நான்கு மாதங்களுக்கு மேலே விவசாயத் துறையிலே முழுக்க ஈடுபட்டுக்கொண்டிருக்கிற நேரம் இல்லை. அந்த நான்கு மாதங்களும் ஒவ்வொரு நாளும் முழு நேரத்தையும் அவன் விவசாயத்திற்கே பயன்படுத்துகிறான் என்பதும் இல்லை. ஆகவே, விவசாயிகள் வளம் பெற, அவர்கள் வாழ்க்கை சிறக்கவேண்டுமானால், அவர்களுக்கு பணி இருக்கிற காலத்திலேயே இடை நேரத்தில் ஒரு உபரித் தொழிலை அவர்கள் மேற்கொள்ளவேண்டும். விவசாயப் பணி இல்லாத காலத்தில் முழு நேரப்பணியில் விவசாயி தன்னைத் தானே ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். அதற்கான துணைத் தொழில்கள் அல்லது உப தொழில்கள் ஆகியவற்றை அவர்களுக்கு வழங்க, அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

இனி, உரம் கிடைப்பதற்கு எவ்வித சிரமமும் இல்லாமல் இருக்க வேண்டும். ஏற்கனவே நான் சொன்னேன். உரம் கிடைப்பதற்கு அன்னியச் செலாவணி கிடைக்கவில்லை என்று சொல்லுகிற பொழுது காட்பெரீஸ் சாக்கலட் போன்ற ஏதேதோ பொருள்களுக்கு அன்னியச் செலாவணி செலவழிக்கப்படுகிறது. அதுவும் கூட ஒரு வகையிலே உணவாக இருக்கலாமே தவிர, அடிப்படை உணவாக அது அமைய முடியாது. அதற்கெல்லாம் அன்னியச் செலாவணி செலவழிக்கப் படும்பொழுது இதை மனத்திலே கொள்ளவேண்டும். உரத்திற்குப் போக எஞ்சி இருந்தால், மிஞ்சி இருக்கும்பொழுது தான், காட்பரீஸ் சாக்லெட் அல்லது அது போன்ற பொருள் எதை வேண்டுமானாலும் வரவழைக்க அன்னியச் செலாவணியை செலவழிக்கவேண்டும்.

அதே மாதிரி பம்பு செட்டுகள் முதலியவைகளை வைத்துக் கொண்டு, ஆற்றுப் பாய்ச்சல் வசதி இல்லாத பகுதிகளில், ஆற்றுப் பாசனம் இல்லாமல் ஊற்றுப் பாசனம் மூலம் நீர் பாய்ச்சி விவசாயம் பண்ணக்கூடிய பகுதிகளில், மின்சாரத்தை குறைந்த அளவு கட்டணத்தில் தேவைக்குத்தக்க அளவு கொடுக்க, ஆட்சியாளர் அவர்களுக்கு தனிச் சலுகை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாய வளம் உள்ள பகுதியிலே, தஞ்சாவூர் போன்ற நல்ல விளைச்சல் உள்ள பகுதியிலே விவசாயத்தைப் பாதிக்கக்கூடிய அளவிலே அங்கே பிற தொழில்களைக் கொண்டு செலுத்தி, புகுத்துவது முறை அல்ல. ஏதோ எங்கும் சமத்துவம் என்று சொல்லுவது எல்லா இடங்களுக்கும் பொருந்தாது. காரைக்





குடியில் உருளைக்கிழங்கையோ அல்லது ரப்பர் பிளாண்ட்டையோ நாம் வைத்து வளர்த்துவிட முடியாது. அவைகளுக்கு வேண்டிய சீதோஷ்ணஸ்திதி, மண் வளம் இவையெல்லாம் வேறுபட்டுள்ளன என்பது நமக்குத் தெரியும். அதைப்போலத் தான் நல்ல வளமான உணவு தான்யங்களை உற்பத்தி செய்யக் கூடிய பகுதிகளிலே ஏதோ பருத்தி போன்றவைகளை உற்பத்தி செய்யும்படியான காரியங்களைச் செய்துவிட்டால், அதன் மூலம் நன்செய் நிலங்களில் பருத்தி வேளாண்மை நடக்க ஆரம்பித்துவிடும். விவசாயத் தொழிலாளர்களும், தொழில் கூடத் தொழிலாளர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு, அவர்களுக்கு இருக்கிற வசதி தங்களுக்கும் வேண்டும்—கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை—என்று கேட்கலாம். இது மாதிரி போட்டாபோட்டி ஏற்படுத்தினால் விவசாயத் துறை கிட்டத்தட்ட நசிப்பதற்கு வழி செய்வதாக ஆகும். ஆகவே, இதையும் மனத்தில் கொள்ள வேண்டும். ப்ரொபஸர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் கூறிய கருத்துக்களையெல்லாம் சிந்திக்க வேண்டும். கோவாப்பரேடிவ் முறையில் எப்படி விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு கஷ்டம் வந்திருக்கிறது, நட்டம் வந்திருக்கிறது என்பதையெல்லாம் பற்றி பிளானிங் கமிஷனில் விவசாயத் துறைக்குப் பொறுப்பாக இருக்கிற ஸ்ரீமான் ராவ் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையை மனத்திலே கொண்டு, பிரத்தியட்ச நிலைமையை மனத்திலே கொண்டு கோவாப்பரேஷன் மூலம் விவசாயத் துறை வளர்ச்சிப் பெறாமல் இருக்கிறது என்பதையும் நன்றாகச் சிந்தித்து—எனக்குக் கோவாபரேஷன் பேரில் கோபமோ, தாபமோ கிடையாது, எதிலும் தனியாக, ஒரு காதல் கிடையாது—இருக்கிற நிலைமையை சிந்தித்துப் பார்த்து, எது எது நன்மை என்பதைக் கணித்து நன்மையான காரியங்களை செம்மையாக நிறைவேற்றுவதற்கு நாம் முயலவேண்டும் என்பதை நான் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இனி, இறுதியிலே ஒன்றை மட்டும் சொல்லி நான் முடித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன். அரசாங்க வாணிகத் துறைகளையெல்லாம் தணிக்கை செய்யவேண்டும் செம்மையாக. ஏதோ ஆட்சி நெறி முறை தணிக்கை முறையாக அமையாமல், வாணிகத் தணிக்கை முறையாக அது அமையவேண்டும். அதாவது 'கமர்ஷியல் ஆடிட் சிஸ்டம்' என்ற முறையில், அந்த நெறியிலே தணிக்கை செய்தால் தான் நலமாக இருக்கும். சட்டப்படி சரியாக இருக்கலாம், சாங்ஷன் சரியாக இருக்கலாம், அதற்குரிய வௌசர்கள் சரியாக இருக்கலாம். அது மட்டும் போதாது. இது தேவை தானா, இந்த அளவுக்குத் தேவை தானா என்று கண்டு பிடிக்கிற முறை இந்தத் துறையிலே இல்லை, அந்தத் துறையிலே இருக்கிறது. வாணிகம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறபொழுது, அதிலே ஆட்சித் துறைக்குப் பொறுப்பு இருக்கிறது என்று அந்த நெறி முறையிலே அதைத் தணிக்கை செய்யாமல் வேறு முறையிலே தணிக்கை செய்வது, அதாவது வாணிகத் தணிக்கை முறையில் தணிக்கை செய்வது, நோக்கம் கெடாமல் இருக்கும். இதையெல்லாம் கவனித்து சரியான அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்கு தக்க புள்ளிகளைக் கொண்ட ஒரு சிறிய குழு அமைத்து, இதன் மீது

[திரு. சா. கணேசன்] [14th March 1966

தங்கள் கருத்துக்களை ஆட்சிக்கு அந்தக் குழு அறிவிக்க வேண்டும் என்று சொல்லி, அந்தக் கருத்துக்களை நாம் நிறைவேற்றுவதற்கு முற்படவேண்டும்.

இறுதியாக, மாதவரம் பால் பண்ணையைப்பற்றிய நிலை நமக்குத் தெரியும். எவ்வளவு மாடுகள், எவ்வளவு ஆட்கள், எவ்வளவு இடங்கள், அதிலே விடுமுதல் எவ்வளவு, பிற நாடுகளிலிருந்து நமக்குக் கிடைத்ததன் மூலம் ஏற்பட்ட பலன் எவ்வளவு இவ்வளவையும் பெற்றும், அங்கு ஏற்பட்டிருக்கிற லாப நட்டம் என்ன என்பது நமக்குத் தெரியும், 1961-62-ல் ரூ. 16,16,000 நட்டம் 1962-63-ல் ரூ. 24,10,000 நட்டம். 1963-64-ல் ரூ. 40,06,000 நட்டம். ஆகவே, இந்த மூன்று ஆண்டில் மட்டும் ரூ. 78,32,000 நட்டம். இன்னும் 1964-65, 1965-66 ஆண்டுக்கான நட்டத்தைக் கணக்கிட்டால், குறைந்தபட்சம் கடைசி வருஷத்தினுடைய நட்டத் தொகை ரூ. 80 லட்சத்திற்கு குறையாது, இப்படிப் பார்த்தால் இதுவரையில் சுமார் ரூ. 1½ கோடி மாதவரம் பால் பண்ணையில் ஏற்பட்டிருக்கிற நட்டம். இன்னும் முழுவதும் அடக்கி, விற்று, வாங்கிப் பார்த்தால், நிகர லாப நட்டம் பார்த்தால் வேறு ஆகும். இதை மனத்திலே கொள்ளவேண்டும். இதிலே புண்ணியமா, புருஷார்த்தமா? இவ்வளவு நட்டம், இவ்வளவு பொருளைக் கொடுத்து, வாங்கி, பாலும் கிடைக்காமல், பாலும் தராமல் என்ற நிலையில் ரூ. 1½ கோடி நட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு மாடு ஒன்றுக்கு ரூ. 1,000 விலை என்று வைத்துக் கொண்டாலும், 15,000 மாடுகள் வாங்கியிருக்கலாம். இந்த நட்டத் தொகைக்கு மட்டும் அப்படி 15,000 மாடுகள் வாங்கி ஊரிலே இருக்கிற பால் வியாபாரிகள் ஒவ்வொருவருக்கும் இனமாகக் கொடுத்தால், வீடு பூராவும், வீட்டுக்கு வீடு படி ஒன்று என்று வரக்கூடிய அளவில் வந்திருக்கும், இவ்வளவு நட்டம் வந்திருக்காது. இதையெல்லாம் கணிக்கவேண்டும். கணித்து, இம்மாதிரி வீண்விரயம் பண்ணாமல் படாடோபத்திற்காக, காட்சிக்காக, திட்டம் எவ்வளவு பெரியதாக வளர்ந்திருக்கிறது என்பதை காட்டுவதற்காக அல்லாமல், திட்டம் பெரியது என்பதைக் காட்டுவதைவிட, திட்டம் எவ்வளவு பலன் கொடுக்கிறது என்பதைக் காட்டவேண்டும். நான் யார் மீதும் குற்றம் சுமத்தவேண்டும், குறை கூறவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இத்தகைய தீய பலன்களை விலக்கி, நல்ல பலன்களை துலக்கி, அதன் மூலம் நாட்டிற்கு, நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்பட, வளம் பெருக, அரசு, ஆளும் கணத்தவர் இதிலே தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று வேண்டி, அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. கோ. சி. மணி :** மதிப்பிற்குரிய மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற வேளாண்மை மான்யக் கோரிக்கை, விலங்கின வளர்ப்பு மான்யக் கோரிக்கை, வேளாண்மைக்கான மூலதனச் செலவு மான்யக் கோரிக்கை ஆகியவைகளின் மீது எங்கள் தரப்பிலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு 16-வது எண்ணுள்ள கோரிக்கை



14th March 1966] [திரு. கோ. சி. மணி]

யான வேளாண்மை மான்யக் கோரிக்கைக்காக ஒதுக்கியிருக்கிற தொகை ரூ. 10,65,19,500. மூலதனச் செலவுக்காக ஒதுக்கியிருக்கிற தொகை ரூ. 39,93,100. சென்ற ஆண்டு வேளாண்மைத் துறை மான்யத்திற்காக ஒதுக்கிய தொகை ரூ. 8,72,39,700. மூலதனச் செலவுக்காக ஒதுக்கியத் தொகை ரூ. 18,15,100. சென்ற முறை இந்த மன்றத்திலே வெட்டுப் பிரேரபணையை பிரேரேபித்து பேசுகிற நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். மூலதனச் செலவுக்காக ஒதுக்கியிருக்கிற தொகை மிகக் குறைவு, இன்றையதினம் நம்முடைய நாட்டில் இருக்கிற நிலைமைக்கு அந்தத் துறைக்கு அதிகத் தொகை இருந்தால் ஒழிய, எதிர்பார்த்த பலன் கிட்டாது என்பதை நான் வலியுறுத்தினேன். இந்த ஆண்டு ஏறத்தாழ ரூ. 21,78,000 அதிகத் தொகையை இந்தத் துறைக்காக கனம் அமைச்சர் அவர்கள் இங்கே கேட்டிருக்கிறார்கள். அது பாராட்டத் தக்க ஒன்று என்று குறிப்பிட்டாலும், இந்த ஆண்டில் இயற்கையின் கோளாறு காரணத்தினால், இந்தத் தொகை உள்ளபடியே போதாது என்கிற என் வருத்தத்தையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இந்த அடிப்படை மானியக் கோரிக்கை மிக முக்கியமானது, புனிதமானது என்று சொல்லப்படுகிறது. நம்முடைய அடிப்படை விவசாயம். இந்தத் துறையிலே மூன்று தரப்பினர்கள் இருக்கிறார்கள். ஒருவர் நிலச்சுவான்தார்கள்; மற்றொருவர், குத்தகை, வாரம் என்று விவசாயம் செய்யும் குடியானவர்கள்; மூன்றாமவர், விவசாயத் தினக் கூலி வேலை செய்பவர்கள். இப்படி மூன்று பிரிவினர்கள் கூட்டு முயற்சியால் அன்றி இந்தத் திட்டத்தில் வெற்றி நிச்சயமாகப் பெற முடியாது, என்பதை இந்த மன்றத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்த மூன்று இனத்தவர்களும் ஒன்று பட்டு இணைந்து பணிபுரிய நாம் இயற்றியிருக்கின்ற சட்டங்கள் உதவியாக இருக்கின்றனவா என்றால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள்; ஒன்பது வகையான விவசாயச் சட்டங்கள், விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம், வார நிர்ணயச் சட்டம், இன்னும் இம்மாதிரியான சட்டங்களெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம் என்றும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களாக, 15 வருஷகாலமாகத் திட்டங்களைப் போட்டு, இரண்டு கோடிக்கு என்று ஆரம்பித்து இன்றைக்கு 10 கோடி அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறோம்; 38 லட்சம் டன்னிலிருந்து 53 லட்சம் டன் உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்திருக்கிறோம், இன்னும் 61 லட்சம் டன்னாக உயரும் இலக்கை எதிர்பார்க்கிறோம், என்று சொல்வார்கள். இந்த நேரத்திலே, இந்தியத் துணைக்கண்டத்தில், தமிழகத்தில் விவசாயிகளுடைய சராசரி எண்ணிக்கை மற்ற தேசங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எப்படியிருக்கிறது என்று கவனிக்கவேண்டும். குறிப்பாக இந்தியாவிலும், மற்றைய நாடுகளிலும் எவ்வளவு பேர்கள் விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள் என்று ஒரு பட்டியலை தயாரித்தால், அது எப்படியிருக்கும் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். 1951-ம் வருஷக்கணக்குப்படி இந்தியத் துணைக்கண்டத்தில், 72 சதவிகித மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், அதே நேரத்தில் ஜப்பானில், 44 சதவிகித மக்கள்; இத்தாலியில் 44 சதவிகித மக்கள்; கனடாவில் 20 சதவிகிதம்; பிரான்சில் 25 சத

[திரு. கோ. சி. மணி] [14th March 1966

விகிதமும் ; அமெரிக்க நாட்டில் 15 சதவிகித மக்களும், பிரிட்டனில் 5 சதவிகித மக்களும் இருக்கிறார்கள் என்று கணக்கு இருப்பதைப் பார்க்கிறோம். விவசாயத்தை நம்பியிருக்கிற மக்கள் 72 சதவிகிதமாக இருந்து, உற்பத்தியாக்கும் உணவுப்பண்டங்களை அவர்களும் பூரணமாக உண்ண முடியாமலும், பாக்கியிருக்கின்ற 28 சதவிகித மக்களுக்குக் கொடுக்க முடியாமலும் இருக்கின்ற அவல நிலைதான் ஏற்பட்டிருக்கிறது என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே, அமெரிக்காவிலே, 15 சதவிகித மக்கள்தான் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த நாட்டு மக்கள் 15 சதவிகிதம் விவசாயிகளும் உண்டு. பாக்கியிருக்கிற 85 சதவிகித மக்களுக்கும் போட்டு, இந்தியாவிற்கும் தருகிறேன் பெற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்கள். நாமும் நிறைய திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால், அமெரிக்க நாட்டில் சென்று கையேந்தி நிற்கும் நிலையில்தானே இருக்கிறோம் ! இது வெட்கமாக இல்லையா ?

உரம் வழங்கி, விவசாயத்தை ஊக்குவிக்கிறோம் என்கிறோம். இப்படிப்பட்ட நிலை எப்படி யிருக்கிறது என்று பார்க்க வேண்டும். இயற்கை உரத்தைவிட ரசாயன உரம் சிறந்தது என்று பிரசாரம் செய்கிறோம். அதை வெளி நாடுகளில் எந்த சதவிகிதம் உபயோகிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். இந்திய நாட்டில் 1960-ம் ஆண்டு இறுதி வரை, 260 ஏக்கருக்கு ஒரு டன் உபயோகிக்கிறோம். அமெரிக்காவில், 90 ஏக்கருக்கு ஒரு டன்; பிரிட்டனில் 64 ஏக்கருக்கு ஒரு டன் செயற்கை உரம் உபயோகிக்கிறார்கள். இதாலியில் 22 ஏக்கருக்கே ஒரு டன் செயற்கை உரம் உபயோகிக்கிறார்கள். ஜப்பானில் 18½ ஏக்கருக்கு ஒரு டன் செயற்கை உரத்தை அந்த அந்த நாடுகளில் உபயோகிப்பது போல நாமும் உபயோகிக்க வேண்டும், உபயோகிக்க முடியும். ஆனால், அந்த அளவில் உரத்தை நாம் தயார்செய்து கொடுத்திருக்கிறோமா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். உரம் பற்றிய தகவல்களைப் பார்த்தால், புள்ளிவிவரங்கள் பெருமையாகக் காட்சி அளிக்கின்றன. இதற்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். இந்த இலாகாவினர் காலதாமதம் இன்றி, தேடிக் கண்டுபிடித்து, எந்தப் பக்கத்தை புரட்டினாலும், லட்சக் கணக்கில், கோடிக்கணக்கில் புள்ளி விவரங்களைக் கொடுத்திருப்பதற்காக இந்த அமைச்சரை இதற்காகப் பாராட்ட வேண்டும், என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். உண்மை. ஏட்டிலே எழுதிக் காட்டியிருக்கிறார்கள். அங்கே போய்ப் பார்த்தால், நாட்டிலே நடக்கின்றவற்றைப் பார்த்தால், ஏட்டிலே புள்ளிவிவரங்கள் இருப்பதற்கும், நடவடிக்கைகளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்பதை தயவுசெய்து சிந்தித்துப்பார்க்க வேண்டும். இதிலே, தஞ்சை மாவட்டம் போலவே, மற்ற மாவட்டங்களும் உரம் பற்றாக்குறை, உரம் பற்றாக்குறை என்று ஒவ்வொரு மாவட்டமும், தாக்கீது விட்டுக் கொண்டிருப்பது கலெக்டர்களிடம் குவிந்த வண்ணம் இருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரப்படி, 1961-62-ம் ஆண்டில் உர வகைகள் பயன்படுத்துவது பற்றிய விவரத்தில், திட்டத்தின் இலக்கு 2,89,250 டன் என்றும், அதிலே உறுதி செய்யப்பட்டது 2,75,680 டன் என்றும் விநியோகித்தது 1,88,694 டன் என்றும் தெரிகிறது. அதே வருஷம் மொத்தம் பயன்படுத்தப்பட்ட உரம், 1,65,823 டன், என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



14th March 1966] [திரு. கோ. சி. மணி]

30-12-1965 தேதியில் மாவட்ட வாரியாக எடுத்த கணக்குப் பிரகாரம், அம்மோனியம் சல்பேட் 38 ஆயிரம் டன் இருப்பு. இது மாவட்ட வாரியாக இருந்த மொத்த இருப்பு. இது 30-12-1965 தேதி வரைக்கும் இருந்து இருக்கிறது. அதே டிசம்பர் மாதம் எரு இல்லை, எரு இல்லை என்கிற ஓலம் எழுந்து, பத்திரிகையில் வந்தது மற்ற அங்கத்தினர்களுக்குத் தெரியும். ஆனால் புள்ளிவிவரம் என்ன காட்டுகிறது? 31-12-1965 தேதியில் 38 ஆயிரம் டன் அம்மோனியம் சல்பேட் கையிருப்பு இருந்ததாகக் காட்டுகிறது. இப்படி ஏட்டிலே காட்டிவிட்டு, நிலைமை மோசமாக இருப்பதைப் பார்க்கிறோம். எங்கே சென்று பார்த்தாலும், இந்த நிலைதான், இந்தக் காட்சிதான்.

நிலப் பரப்பை எடுத்துக் கொண்டால், அதில் நாம் இரண்டாவதாக இருக்கிறோம். சாகுபடிக்கு லாயக்கான நஞ்சை, புஞ்சை நிலப்பரப்பை எடுத்துப் பார்த்தால், அவ்வளவு ஒன்றும் குறைந்தபாடும் இல்லை. மன நிறைவு கொள்ளும் அளவுக்கு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். மொத்தப் பரப்பளவில், நம் நாட்டைப் பொருத்த வரையில், 62-லே வெளியிட்ட கணக்குப்படி, 1,62,43,502 ஏக்கர். இதிலே 20 சதவிகிதம்கூட நிலம் இல்லாத பகுதியைக் கொண்ட ஜப்பான் நாடு, கடலைத் தூர்க்கிறேன். கடலில் தெப்பம்போட்டு அதில் நிலம் அமைக்கிறேன் என்கிறார்கள். நாம் இருக்கின்ற நிலத்தை பூராவும் உபயோகிக்கும் அளவிற்கு வசதிகள் இருக்கின்றனவா என்றால், இல்லை. அந்த அளவுக்குச் சட்டங்கள் உண்டா என்றால், இல்லை. நிலச் சீர்திருத்தச் சட்டம், விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம், வார நிர்ணயச் சட்டம் இந்தச் சட்டங்களெல்லாம் எப்படி நடைமுறையில் இருக்கின்றன? போட்ட திட்டங்களும், நிறைவேறிய சட்டங்களும்—அவற்றின் நோக்கம் சரியானதாக இருக்கலாம்—ஆனால் அந்த அளவில் நிறைவேற்றப்படுகின்றனவா ? நிறைவேற்றும் மார்க்கம் சரியானதாக இருக்கிறதா ? என்பதை மனந்திறந்து பேசுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். போட்ட திட்டங்கள், சட்டங்கள் அத்தனையும், நோக்கத்தின்படி நிறைவேற்றும் நடவடிக்கை மார்க்கங்கள் சரியாக இருக்கின்றனவா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். முன்னமேயே ஒருமுறை குறிப்பிட்டிருக்கிறேன். உழுகிறவனுக்கு, நிலம் இல்லாதவனுக்கு உச்சவரம்புச் சட்டத்தின்படி நிலம் உபரியில் கிடைக்கும் என்று பெருமையாகப் பேசப்பட்டது. இதே மார்ச் மாதம், இதே மன்றத்திலே நான் குறிப்பிட்டேன். இந்த உச்சவரம்புச் சட்டத்தால் எவ்வளவு நிலம் கிடைத்தது ? வயிற்று வலிக்காரனுக்கு மருந்து கொடுப்பதற்கு பதிலாக சோடா உப்பைத் தந்திருக்கிறீர்கள். வயிற்று வலிக்கு மருந்து கொடுக்கவில்லை. இதை நான் சொல்லவில்லை. குறிப்பாக அமெரிக்க நிபுணர் குழு சொல்லியிருக்கிறது. 'உச்சவரம்புச் சட்டம் காகிதத்தில் இருக்கிறது, ஆனால் நடைமுறையில் இல்லை' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதற்குப் பதில்

அளிக்கும் வகையில். நம்முடைய சர்க்காரிலே, ரெவின்யூ இலாகா ஒரு அறிக்கை தந்தது. 'அப்படி இல்லை. தஞ்சை மாவட்டத்திலே மட்டும் 26,000 ஏக்கர் உபரி நிலம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம், அதற்கு ஆதாரம் இருக்கிறது' என்று. இதைப் பற்றிப் பத்திரிகைச் செய்திகளும் வந்திருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 26,000 ஏக்கரா நிலம் உச்சவரம்புச் சட்டப் படி உபரியாக மிச்சம் கிடைக்கும் என்று சர்க்கார் இலாகா கூறியிருக்கிறது.

1-00 p.m.

நிலை என்ன? இரண்டு தினங்களுக்கு முன்னால் தான் நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள், "இதுவரை உபரியாகக் கிடைத்திருக்கும் நிலம் தமிழ்நாடு பூராவும், ஐயாயிரம் சொச்சம் ஏக்கர்" என்று முடித்திருக்கிறார். தஞ்சை மாவட்டத்திலே மட்டும் கிடைக்கக்கூடிய நிலம் 26,000 ஏக்கர் நஞ்சை புஞ்சை நிலம் எங்கே போயிற்று? தமிழ்நாடு பூராவிலும் ஐயாயிரம் ஏக்கர் தான் என்றால், அந்தச் சட்டம் எந்த அளவு வளைந்து கொடுத்திருக்கிறது? குறிப்பாக யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டத்தைச் சின்னாபின்னமடித்துவிட்டார்கள். இந்தச் சட்டம் உருக் குலைந்துவிட்டது. கேட்டால் சொல்வார்கள், "அவரவர்களாகப் பிரித்துக் கொண்டார்கள்" என்று. பிரித்துக் கொண்டார்கள் என்றால், எப்பொழுது பிரித்துக் கொண்டார்கள்? எதனால் பிரித்துக் கொண்டார்கள்? எப்படிப் பிரித்துக் கொண்டார்கள்?

ஒரு பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. அமைச்சர்களும் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். மிக முக்கியமான செய்தி.

"உச்ச வரம்புச் சட்டத்தை ஏமாற்றுவதற்காகவே ஒரே ஒரு நிலச்சுவான்தார் தஞ்சை ஜில்லாவில் ஒரு லட்சம் ரூபாய்க்கு ஸ்டாம்ப் பேப்பர் வாங்கியிருக்கிறார். கோயமுத்தூர் ஜில்லாவில் ஒரே ஒரு மிராசுதார் 92,000 ரூபாய்க்கு ஸ்டாம்ப் பேப்பர் வாங்கியிருக்கிறார். இப்படி ஸ்டாம்ப் பேப்பர் அதிகத் தொகைக்கு வாங்கிவிட்ட காரணத்தால், ஸ்டாம்ப் பேப்பருக்கு பஞ்சம் வந்துவிட்டது. கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுவதும் அரசாங்கத்திற்குத் தெரியும்."

இப்படிப்பட்ட தகவல் வெளியிடப்பட்டது. எதற்காக? இந்தச் சட்டத்தை ஏமாற்றுவதற்காக 'பினாமி' ரிகார்டு செய்து வைக்கப்பட்டிருக்கிறது. சட்டங்கள் இப்படிப் புறக்கணிக்கப்படுகின்றன.

நான் முன்னமேயே குறிப்பிட்டபடி, மூன்று பேர்களுக்கு எந்த விதத் தொடர்பும் இல்லாத நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. குத்தகைதாரர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் சம்பந்தம் இல்லை. குத்தகைதாரர்களுக்கும் மிராசுதாருக்கும் சம்பந்தம் இல்லை இப்படிப்பட்ட நிலை இந்த நாட்டில் ஏற்பட்டிருப்பது உண்மையா இல்லையா என்பதை அருள் கூர்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், உழவுத் தொழிலில் தினக் கூலி செய்யக்கூடிய தொழிலாளர்கள் இருப்பதைப்பற்றி இன்றைக்குக் கூட விவாதிக்கப்பட்டது. சாதாரண எண்ணிக்கை உடையவர்கள் அல்ல. இந்தத் தமிழ்நாடு பூராவிலும் தினக்





கூலியில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 92,86,207 பேர்கள் இருக்கிறார்கள். 1964-ஆம் ஆண்டில் இந்த மன்றத்தில் நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரப்படி 92 லட்சத்திற்கு மேற்பட்ட தினக் கூலித் தொழிலாளிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கும் அந்தக் குத்தகைதாரர்களுக்கும் தொடர்பு உள்ள அளவுக்கு சட்டங்கள் உண்டா என்றால், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது கூடச் சொன்னார்கள், 'சட்டம் இருக்கிறது' என்று. கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். "தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டமும், வார நிர்ணயச் சட்டமும், கையேர் வாரம்தார் மாட்டுவாரம்தார் சட்டமும் எந்த எந்தப் பகுதியில் அமலில் இருக்கின்றனவோ அந்தப் பகுதியைத் தவிர, மற்ற பகுதிகளில் கூலி நிர்ணயச் சட்டம் இருக்கிறது" என்று குறிப்பிட்டார். இந்தப் பகுதிகள் என்ன ஆயின? "அந்தச் சட்டங்களை அங்கே அமல்படுத்துவதற்கு என்ன?" என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்போது, "அந்தச் சட்டத்தில் கண்டுள்ள கூலியை விட விவசாயிகள் அதிகமாக வாங்குகிறார்கள்; மிராசுதார்கள் அதிகம் தருகிறார்கள். ஆகவே, அதை நாம் நடைமுறைக்குக் கொண்டுவரக் கூடாது" என்று சொன்னார்கள். இது வேடிக்கையாக இல்லையா? ஒரு சட்டத்தில் கண்டுள்ளதை விட நிலச்சுவான்தார் கூலி கூடக் கொடுக்கிறார்கள் என்றால், இந்தச் சட்டம் தேவை தானா? திருத்தினால் ரௌரவாதி நரகத்திற்குப் போய்விடுவோமா? திருத்தவே கூடாதா? திருத்தக் கூடாது என்பதற்கான காரணத்தையாவது வெளியிட்டார்களா இந்த மன்றத்தில்? திருத்துகிறோம் என்று உறுதியாவது தந்தார்களா? நிச்சயமாக இல்லை. எதற்காக? தேர்தல் நெருங்கிவிட்டதே, அந்த நேரத்திலாவது செய்வோம் என்ற எண்ணத்தில் இருந்தால், அதைப்பற்றியும் கவலை இல்லை. பாராட்டுகிறேன். இப்போதே சொல்லவேண்டாம். இனிமேல் எப்போதாவது, இந்த வருஷத்திற்குள்ளாவது, தயவு செய்து சொல்லுங்கள்.

உர உற்பத்தியிலே ஒன்று சொல்லிக் கொள்ளுகிறேன். ஒரு டன்னுக்கு 25 ரூபாய் கமிஷன் தஞ்சையில் இருக்கிற டி.ஸி.எம்.எப். என்கிற ஒரு நிறுவனத்திற்குத் தரப்படுகிறது. எதற்காகத் தரப்பட வேண்டும்? ஒரு டன் உரத்திற்கு 25 ரூபாய் அங்கே இருக்கிற ஒரு ஸ்தாபனத்திற்குக் கமிஷன் தரப்படுகிறது என்றால், அதைக் குறைத்து நேரடியாக விவசாயிகளுக்குத் தந்தால் என்ன? அதே டி.சி.எம்.எப். மூலமாக அம்மோனியம் சல்பேட் மூட்டைகளில், மேலே கால் மூட்டை, கீழே கால் மூட்டை அம்மோனியம் சல்பேட் வைத்துவிட்டு, நடுவிலே அரைமூட்டை மணல் கலந்து விவசாயிக்குத் தரப்படுகிற வரலாற்றை தஞ்சை மாவட்டத்திலே பார்த்திருக்கிறோம். இல்லை என்று சொல்ல முடியாது. கலெக்டருடைய பி. ஏ. அவர்கள் அதை நேரடியாகக் கண்டுபிடித்து மூட்டைகளை எடுத்து ஸீல் வைத்தார். அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன். இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலை திட்டமிட்டும் செயல்படுகிற

[திரு. கோ. சி. மணி] [14th March 1966

நாட்டில் நடக்கலாமா ? இப்படி இருப்பதற்கு யார் குற்றவாளி என்று பார்த்ததில், வந்து இறங்கிய இடத்தில் உள்ளவர்கள் செய்திருக்கிறார்கள் என்று ஒரு தரப்பினர் கூறுகிறார்கள்.

இன்னும் ஒரு பெரிய விநோதம். அந்த விநோதத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது நியாயமா ? "மேட்டூரில் தண்ணீர் இல்லை, எனவே, விவசாயத்திற்கு நீர் தர முடியாது" என்று சொல்லலாமா ? இது திட்டம் போட்டுச் செயல்படும் நாடு இல்லையா ? 15 ஆண்டுகளாகத் திட்டம் போட்டு நடத்துகிறோமே, இங்கே இப்படிச் செய்யலாமா ? எப்பொழுது இயற்கை ஒத்துழைக்கிறதோ, அப்பொழுது சேகரித்து வைத்துக்கொண்டு, தேவைப்பட்டபோது கொடுக்கிற அளவுக்கு திட்டத்திலே வகைக் காணக் கூடாதா ? வெள்ளைக்காரன் கட்டிய மேட்டூர் அணையைத் தான் இன்னும் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமா ? மேலும் அணைகள் கட்டித் தேக்கி வைத்துக்கொண்டு, தேவைப்படுகிற போது கொடுப்பது என்பது கூடாதா ? கிடைத்தபோது வாங்கி, தேவைப்படுகிறபோது கொடுக்கும் நிலையை உருவாக்கி வைத்துக்கொள்ளக் கூடாதா ? மழை பெய்துவிட்டால் தண்ணீர் வந்துவிடும் என்றும் வெள்ளம்வரும் காவேரிக் கரையில் குடியிருக்கிறவர்களையெல்லாம் அப்புறப்படுத்தச் சொல்லி கலெக்டர் எச்சரிக்கை விடுகிறார்: மழை பெய்யவில்லையென்றால், மேட்டூரில் தண்ணீர் இல்லை. தண்ணீர் வராது, எவ்வளவு குறைத்து நாற்று விடமுடியுமோ, அந்த அளவுக்கு விடுங்கள் என்று அறிக்கை வருகிறது. இதுதானா திட்டம் போடும் நாடு செயல்படும் முறை? இந்த நிலைகளைக் களையாதவரை இந்த நாட்டிலே எந்தத் திட்டம் போட்டாலும், எத்தனை கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டுச் செலவழித்தாலும், இந்தக் காலகட்டத்தில் திட்டத்தினால் நிச்சயமாக பலனைக்காண முடியாது.

ஒன்றே ஒன்று சொல்லி முடிக்கிறேன். இந்தத் திட்டங்களில் அமைச்சர்களுடைய சுற்றுப் பயணங்களும் குறுக்கிடுகின்றன. அமைச்சர்களின் சுற்றுப் பயணங்கள் காரணமாக, இந்தத் திட்டங்களின் பெரும் பகுதி காலத்தில் நிறைவேற்றப்பட முடியாத நிலை ஏற்படுகிறது. மூன்று மாதங்களில் நடக்கவேண்டிய வேலை ஆறு மாதங்களில் தான் நடக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. அம்மாதிரி தான் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரை நிலைமை. மற்ற ஜில்லாக்களிலும் அம்மாதிரிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடும். எல்லாப் பொறுப்புக்களையும் மாவட்ட ஆட்சியாளர்களிடத்தில் நாம் ஒப்படைத்திருக்கிறோம். இந்த மூன்று நான்கு மாதங்களுக்குள் இங்கிருக்கும் அமைச்சர்கள் ஆளுக்கு இரண்டு நாள் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தால், அவர்களுக்குப் பின்னால் பத்து, பதினைந்து அதிகாரிகள் செல்ல வேண்டியிருக்கிறது. உரம்பற்றிக் கலெக்டரைக் கேட்க வேண்டுமென்று போனால், அவர் முதல் அமைச்சர் பின்னால் போயிருக்கிறார் என்று தகவல் கிடைக்கிறது. இன்னொரு சமயம், கலெக்டர், போலீஸ் அமைச்சர் பின்னால் போயிருக்கிறார் என்ற தகவல் கிடைக்கிறது. ஏன் இப்படி இடையிடையே அதிகாரிகளின் நேரத்



14th March 1966] [திரு. கோ. சி. மணி]

தை எடுத்துக் கொண்டால், நிர்வாகம் செயல்பட முடியுமா ? அது தான் திட்டத்திற்கு முதல் தோல்வி என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் மீதான இந்த விவாதத்தில் அதிகமான கனம் அங்கத்தினர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். அது, இந்த மானியங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

கடைசியாகப் பேசிய மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. மணி அவர்கள் உருக்கமாக பேசினார்கள்; ரொம்ப ஆவேசத்தோடு பேசினார்கள். ஆனால், அவர்கள் பேசும்போது, "38 ஆயிரம்" என்பதற்குப் பதிலாக "38 லட்சம்" என்று சொல்லிவிட்டார்கள். அது உண்மைக்குப் புறம்பானது என்று இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதலில் பேசிய மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்கள், "பட்டினிச் சாவு முன்பு இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாக இருக்கிறது" என்று சொன்னார்கள். எந்தக் கணக்குகளைப் பார்த்து அவர் அவ்வாறு சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. முன்பெல்லாம் கிராமப் புறங்களில் காய்ச்சல் வந்தது, காய்ச்சலினால் அதிகம் பேர் இறந்தார்கள் என்று சொல்வார்கள். பிரசவத்தினாலும் அதிகம் பேர்கள் இறந்தார்கள் என்று சொல்வார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம் காய்ச்சலினாலும், பிரசவத்தினாலும் அத்தனை பேர்கள் இறக்கிறார்களா என்று கணக்கெடுத்துப் பார்த்தால், இல்லை. அதே மாதிரி, பட்டினிச் சாவு முன்பு இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாக இருக்கிறது என்று மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் சொன்னது முழுப் பூசனிக் காயைச் சோற்றில் மறைக்கிற மாதிரி, உண்மைக்குப் புறம்பானது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (**திரு. மு. கருணாநிதி :** சோறு எங்கே கிடைக்கிறது ?) மதிப்பிற்குரிய அங்கத்தினர் "சோறு எங்கே கிடைக்கிறது ?" என்று கேட்கிறார். சென்னையில் எங்கு பார்த்தாலும் பல 'உட்லண்ட்ஸ்' ஹோட்டல்கள் இருக்கின்றன. எங்கும் தாராளமாகச் சாப்பாடு போடுகிறார்கள். இட்லி சாப்பிடுகிறார்கள். சோறு சாப்பிடுகிறார்கள். சாப்பிட்டுக்கொண்டே "எங்கே சோறு கிடைக்கிறது ?" என்று கேட்கிறார்கள். சாப்பிட்டுக் கொண்டே "சோறு கிடைக்கவில்லை" என்று . . .

**திரு. மு. கருணாநிதி :** பூசனிக் காயை மறைக்கும் அளவுக்குச் சோறு கிடைக்கவில்லை என்று தான் குறிப்பிட்டேன். (சிரிப்பு)

**கனம் திரு. பூ. கக்கன் :** காசு நிறையக் கொடுத்தால் சோறு நிறையக் கிடைக்கிறது. ஆகவே, அப்படி திரு. தர்மலிங்கம் அவர்கள் சொன்னது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கனம் அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்களே, நிலச்சீர்திருத்தச் சட்டத்தினால் விவசாயம் பாதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது சரியல்ல. நிலச்சீர்திருத்தச் சட்டத்

[திரு. பூ. கக்கன்] [14th March 1966

தினால் நூற்றுக்கு நூறு எல்லா இடங்களிலும் பயன் ஏற்பட்டிருக்கிறது என்று இல்லாவிட்டாலும், பல இடங்களில் பலர் நன்மை அடைந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக வாரச் சாகுபடித் திட்டத்தை எடுத்துக்கொண்டால், 60:40 வாரத்தினால் பல விவசாயிகள் இன்றையதினம் நன்மை அடைந்து வருகிறார்கள். எங்காவது சில குறைபாடுகள் காணப்பட்டால் எப்படிச் சட்டத்தைத் திருத்தலாம் என்பதைப்பற்றி ஆலோசனை கூறுவது நல்லதாக இருக்குமே தவிர, சட்டத்தினால் பயனே இல்லை என்று சொல்வது கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் நிலத்தில் இருந்து உழுபவர்களை வெளியேற்றக்கூடாது என்று நாம் செய்திருக்கிறோம். எங்காவது வெளியேற்றப் பட்டால், உடனே அவர்கள் மனுச்செய்து கொண்டால் அதை விசாரித்து நியாயம் வழங்கவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். நாம் சட்டம் செய்திருப்பதனாலே கோர்ட்டிலே தான் நீதியைப் பெற வேண்டும். கோர்ட்டுக்குப் போகமாட்டோம் என்று சொல்வது நல்லதல்ல. விவசாயிகள் தான் சட்டத்தின் மூலம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளமுயலவேண்டும்.

மதிப்பிற்குரிய தர்மலிங்கம் அவர்கள் பேசும்போது கோதாரி சாக்கரை ஆலையில் நெ. 419 கரும்பு வாங்க மறுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். மத்திய சர்க்காரும் எல்லாக் கரும்பையும் ஆராய்ந்து 10.4 சதவிகிதம் சர்க்கரை கொடுக்கக்கூடிய எல்லாவற்றுக்கும் ஒரே அளவு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இது அந்த ரகத்தில் வரும். இருந்தும் ஏன் மறுக்கிறார்கள் என்பதை அதிகாரிகளைக் கொண்டு விசாரணை செய்யும்படியாக நான் ஏற்பாடு செய்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கனம் அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் பேசும் போது மணக்கால் வெளியேற்றத்தைப்பற்றிச் சொன்னார்கள். அங்கே அந்தத் தகராறு இருந்து வருவதை அரசாங்கம் அறியும். என்னிடத்தில் கூடச் சொன்னார்கள். கவனிப்பதாகச் சொன்னேன். அதுபற்றி கவனம் செலுத்தப்படும். அதற்காக சட்டமே மோசம் என்பதாக எல்லா இடங்களிலும் அப்படி நடப்பது போலக் கனம் அங்கத்தினர் பேசக்கூடாது. அநேக இடங்களில் உறவு நிலை மிக அந்நியோன்யமாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பூச்சி மருந்தைப் பொறுத்தவரையிலும் அரசாங்கமே தெளித்து விட்டு, அதற்காகும் செலவை வரியோடு வாங்கிக்கொள்ளலாம் என்கிறார்கள். இது நடைமுறையில் சாத்தியமில்லை. காரணம் பூச்சி மருந்து தெளிக்க நிறைய ஆட்கள் தேவைப்படுகிறது. ஒரு சம்சாரி என்றால் தம் வீட்டில் உள்ள அத்தனைபேர்களையும் கொண்டு, செலவு இல்லாமல் தெளித்துக்கொள்கிறான். பருவ மழை சரியாக இருக்கவேண்டியிருக்கிறது. கடலை போன்ற பயிர்களுக்கு ஏரோப்ளேன் மூலம் நாம் தெளிக்கிறோம் என்றாலும்



14th March 1966] [திரு. பூ. கக்கன்]

எல்லா இடங்களிலும் . அரசாங்கமே செய்வது என்பது இப்போதுள்ள நிதி நிலையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. தர்மலிங்கம் அவர்கள் கிராம சகாயக் திட்டமே வேண்டாம் என்றார்கள். இப்படிச் சொல்வது சரியில்லை. அவர்களால் நன்மைகளும் இருக்கின்றன. அரசாங்கத்தில் விதைப் பண்ணை வைத்திருக்கிறார்கள் என்றால், இந்த விதைப் பண்ணையில் இருந்து முதல் ஈடு விதை கொடுக்கிறோம். அப்புறம் விவசாயிகளிடம் இருந்து விதையை கிராம சேவக் மூலமாகச் சேகரம் செய்கிறோம். அதை வேறு பல இடங்களுக்கும் சப்ளை செய்ய வசதி ஏற்படுகிறது. அந்த கிராம சகாயக்குகளைக்கூட பஞ்சாயத்துத் தலைவர் ஆலோசனையின் பேரில் நான் தேர்ந்தெடுக்கிறோம். சிலர் நல்லமுறையில் நடக்கவில்லை என்பதற்காக திட்டமே சரியில்லை என்பது சரியல்ல. உண்மையைச் சொல்லப் போனால் அவர்கள் தலையிடாமல் இருந்தால், இது நல்ல முறையில் செயல்படும். அதிகாரிகளே நல்லவர்களாகப் பார்த்து நியமிப்பார்கள். ஆனால், ஜனநாயக முறைப்படி இதை நாம் ஏற்படுத்தி இருப்பதால், நல்ல ஆட்கள் வரும்படி அவர்கள் சிபார்சு செய்வதோடு, அவர்கள் நல்ல முறையில் பணி செய்யவும் ஒத்துழைக்க வேண்டும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** நான் கிராம சகாயக் திட்டமே வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், இன்றையதினம் அவர்கள் சேகரிக்கிற விதைகள் நல்லமுறையில் திரும்ப விநியோகம் செய்வதற்கு வழிவகைகள் இல்லை என்று தான் குறிப்பிட்டேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** அவை மார்க்கெட்டிங் கமிட்டிக்குப் போய் அங்கிருந்து தான் விநியோகம் செய்யப்படுகிறது.

அடுத்து கனம் உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் பேசும் போது சிறு, சிறு பாசனத்திட்டங்களின் கீழ் பாசன ஆதாரத்தைப் பெருக்கவேண்டும், அணைகள் கட்டி உதவவேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய வட்டாரத்தில் தான் விவசாய இலாகா மூலமாக சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பல வேலைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அவர்கள் சொன்ன ஏரிகளைப் பற்றியும் எழுதி அனுப்பினால் அரசாங்கம் அவற்றைப் பரிசீலனை செய்து உதவிபுரிய முன்வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தரிசு நிலங்களை அடைமானமாக வைத்துக் கடன் வாங்க வசதி செய்து தரவேண்டும் என்று சொன்னார்கள். தரிசு நிலங்களைப் பொறுத்த வரையில் நிரந்தர சாகுபடிக்கு உரிமை கொடுக்கப்படுவதில்லை. அதனால் கடன் வழங்கத் தடை எழுப்பி இருக்கலாம். என்றாலும் இதுபற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றி ஹரிஜன க்ஷேமநல இலாகாவிலும் கூடத் தெரிவிக்கப்பட்டது. இதுபற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பூ. கக்கன்] [14th March 1966

கனம் அங்கத்தினர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் ரிவர் பம்பிங் ஸ்கீமைப்பற்றிச் சொன்னார்கள். அவரது மாவட்டத்தில் தான் அந்தத் திட்டம் நல்ல வெற்றி கண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற மின்சார வசதி அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலத்தில் தான் மின்சார போர்டார் நல்ல பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். மூன்றாவது திட்ட இறுதிக்குள்ளாகவே எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க வேண்டும் என்பது நம் திட்டம். துரதிருஷ்ட வசமாக இயற்கைக் கோளாறினால் நமக்குக் கஷ்டம் ஏற்பட்டது. செங்கல்பட்டு, வடாற்காடு போன்ற மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் மின்சாரத்தினால் தான் இன்றைக்கு அதிகமாக உற்பத்திசெய்து வருகிறோம். விவசாயத்திற்குத்தான் முதல் இடம் மின்சார சப்ளையைப் பொறுத்துக்கொடுக்கவேண்டும் என்றும் மின்சார போர்டுக்குச் சொல்லியிருக்கிறோம். பண்ணைச் சாகுபடி செய்யும்பொழுது, டெனன்ட்ஸ், பங்குதாரர்கள் இவர்கள் எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று சொன்னார்கள். அப்படியில்லை, அரசாங்கம் அவர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் அவர்களுக்கு உதவிசெய்ய முன்வந்திருக்கிறது, இனியும் முன்வரும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பூச்சி மருந்துகள், ஸ்ப்ரேயர்ஸ், டஸ்டர்ஸ் எல்லாம் சில சமயங்களிலே அதிகமாகக் கொடுக்கமுடியாத நிலை இருக்கிறது. இவைகளை ரிப்பேர் செய்வதைப்பற்றியும் சொன்னார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் பவர் ஸ்ப்ரேயர்ஸ், டஸ்டர்ஸ் எல்லாம் அதிகமாகக் கொடுத்து, பூச்சி மருந்துகளும் வழங்கி அதன் மூலமாக விவசாயிகளுக்கு உதவி செய்து வருகிறோம். மேலும், எவ்வளவு தூரம் நமக்கு இந்த விவசாயத்தை அழிக்கின்ற, கெடுக்கின்ற பூச்சிகளைக் கொல்வதற்கு முடியுமோ, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுத்துக் கொள்ள இந்த அரசாங்கம் முன்வரும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் ஆரம்பக் கட்டத்திலேயே சொன்னேன். இந்த ஏ.டி.டி. 27 நமக்கு தமிழ் நாட்டிற்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். குறுவைச் சாகுபடி நல்லமுறையில் நடைபெறுகிறது. தனிப்பட்ட அன்பர்களும் தங்களுடைய பண்ணையிலே இதைப் போடுவதற்கு முன்வந்திருக்கிறார்கள். இதரப் பொதுமக்களும் இதை வாங்கி உபயோகிப்பதற்கு முன்வந்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் ஈடுபடவேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உரம் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்றும், தஞ்சை ஜில்லாவுக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். தஞ்சை ஜில்லாவுக்கு—கனம் அங்கத்தினர்களுக்கு தெரியும்—அங்கே அதிதீவிரச் சாகுபடி இருப்பதினாலே, அதிகமாக உரம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். உரம் நிர்ணயித்ததிலே நாம் வேண்டிய அளவு வாங்கிக் கொடுத்து இருக்கிறோம். அதற்காக இவ்வளவு டார்ஜெட் போட்டீர்கள், இவ்வளவுதான் அச்சீவ்மெண்டா, என்று கேட்டால் இவ்வளவு என்று எண்ணக்கூடாதா? அப்படி எண்ணுவது கூடத்தப்பா? அதற்காக டார்ஜெட் போடவே கூடாது என்று கூறுவது சரியல்ல.



14th March 1966]

**திரு. கோ. சி. மணி:** புள்ளிவிவரத்தில் போடப்பட்டிருப்பது திட்டமிடப்பட்டது எவ்வளவு, கிடைத்தது எவ்வளவு, ஆக்சுவலாக எவ்வளவு செலவாகியிருக்கிறது என்பதுதான். திட்டத்தில் போட்டதைவிட செலவுசெய்தது குறைவாக இருக்கிறது. ஏன் இன்னும் அதிகமாகக் கொடுத்திருக்கக் கூடாது என்றுதான் சொன்னேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** எவ்வளவு கொடுக்கமுடியுமோ, கொடுத்து இருக்கிறோம். அதற்காக டார்ஜெட் இவ்வளவு போட்டு இருக்கிறதே, ஏன் குறைந்திருக்கிறது என்று சொல்வது நல்லதல்ல. ஏதாவது ஒரு லட்சியத்தை எண்ணும்பொழுது, ஒரு நிலத்தை உழுதால் இவ்வளவு கிடைக்கும் என்று எண்ணுவது தப்பா? திரு. அம்பிகாபதி அவர்கள், பங்குதாரர்களுக்கும் உதவி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். முன்னமேயே சொன்னேன், அவர்களுக்கும் உதவிசெய்துவருகிறோம் என்று. திரு. கரியமாணிக்க அம்பலம் அவர்கள், ரோடு வசதி செய்வதுபற்றிச் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன் மூலமாக மெயின் ரோடிலிருந்து கிராமங்களுக்கு அல்லது வயல்களிலிருந்து தானியங்களைக் கொண்டுவருவதற்குத் தகுந்தவாறு ரோடுகள் அரசாங்கம் அமைத்து வருகிறது. விவசாயச் சங்கம் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை அரசாங்கத்திலிருந்து ஆரம்பிக்க மாட்டார்கள். அங்கங்கே இருக்கின்ற மக்கள்தான் விவசாயச் சங்கத்தை ஆரம்பிக்கவேண்டும். அவர்களுக்கு ஒத்துழைப்பைக் கொடுக்கலாம். பம்புசெட்டுகளைப் பெருக்க தீவிர முயற்சிகள் எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். நாம் இப்பொழுது பம்புசெட்டுகளை அதிகமாக ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். சில வருஷங்களுக்கு முன்னால் நம்முடைய மாநிலத்தில் ட்ராக்டரே கிடையாது. இப்பொழுது நாம் அதிகமாகவே ட்ராக்டர்களைக் கொடுத்துவருகிறோம். உரம் போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் கால்நடைகள் மூலமாகக் கிடைக்கின்ற கழிவுப் பொருள்களை எல்லாம் கொண்டுவந்து சேர்த்து கம்போஸ்ட் உரம் தயாரிப்பது நல்லது. ரசாயன உரத்தைப் பெற்றுப் போட்டால் உணவு உற்பத்தி அதிகமாக இருக்கும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரம் போட்டால்தான் வாய்ப்பு இருக்கும். யூரியாதான் போடவேண்டுமென்பதல்ல, மற்ற உரங்களைப்போட்டாலும் நஷ்டம் வராது. ஆகவே, அம்மோனியம் சல்பேட்டாக இருந்தாலும், யூரியாவாக இருந்தாலும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உபயோகிக்கவேண்டுமென்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் பேசும்பொழுது புதிய கிணறுக்குத் திட்டம் போட்டிருப்பதில், ஒரு கிணறு இருந்தால் மற்றொரு கிணறுக்குக் கடன்கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள். புதிய கிணறுக்குக் கடன் கொடுக்கக்கூடாது என்பது அரசாங்கத்தின் கட்டளை அல்ல. ஏற்கனவே ஒரு கிணறு இருந்தாலும், அங்கே மற்றொரு புதிய கிணறு கேட்டாலும் அதற்கும் உதவியளிப்பார்கள் என்பதை

நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆழப்படுத்துவதற்குக் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். ஆழப்படுத்துவதற்குக் கொடுத்தால் ஏற்கனவே இருந்த கிணற்றை ஏதோ சரி செய்துவிட்டு ஆழப்படுத்தியதாகச் சொல்லி விடுவார்கள் என்பதற்காகத்தான் கொடுப்பதில்லை. ஆழப்படுத்த வேண்டுமென்று நினைப்பவர்கள்கூட ஆழப்படுத்த முடியவில்லை என்று நினைக்காமல், அதற்குப் பதிலாக வேறொரு புதிய கிணற்றை வெட்டிக் கொள்ளலாம். கோவையிலே விதைப் பரிசோதனை நிலையம் இருக்கிறது. அதுபோல் மற்ற ஜில்லாக்களுக்கும் இருப்பது நல்லதுதான். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எல்லா இடங்களிலும் விதைப் பரிசோதனை செய்வது நல்லதுதான். எந்த எந்த இடங்களில் செய்தால் நன்மையாக இருக்கும், மேலும் விதைகளைக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதையெல்லாம் பார்த்து பிரயத்தனம் செய்கிறோம்.

அடுத்தபடியாக, திரு. திருப்பதி அவர்கள் பேசும்பொழுது பழைய கிணறுகளை ஆழப்படுத்தவேண்டுமென்பதற்காகக் கடன் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். நான் ஏற்கனவே சொன்னேன், கொடுக்கப்படுவதில்லையென்று. பழைய கிணறுகளையெல்லாம் ஆழப்படுத்துவதற்குக் கொடுக்கப்படுகிற தக்காவி முதலிய கடன்களையெல்லாம் பயன்படுத்திக்கொள்ளலாம். ஃபுல் பைனான்ஸ் ஸ்கீமின்படி அந்த ஏரியாக்களில் இருக்கிற கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மட்டும் வசதி இருக்கிறது என்ற தகவலை நான் அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லை நல்ல விலைக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று திரு. நல்லசாமி கேட்டார்கள். அதற்காகத்தான் மார்க்கெட்டிங் கமிட்டிகள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. விவசாயப் பெரு மக்கள் அவர்கள் தானியங்களைக் கொண்டுவந்து விற்கவேண்டுமென்றுதான் சொல்கிறோம். ஆனால் அவர்கள் அங்கு கொண்டு வருவது இல்லை, வியாபாரப் பெரு மக்களிடம் . . .

**திரு. ம. கமலநாதன் :** ஃபுல் பைனான்ஸ் ஸ்கீமில் லோன் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஃபுல் பைனான்ஸ் ஸ்கீமில் இந்த வகைக்கு லோன் கொடுப்பதில்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஃபுல் பைனான்ஸ் ஸ்கீமில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக லோன் வாங்கிக்கொள்ளலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஆறுமுகம் அவர்கள், பஞ்சாயத்து யூனியன்கள் திட்டங்களைச் சரிவரக் கவனிப்பதில்லை என்று சொன்னார்கள். நல்ல முறையில்தான் பஞ்சாயத்து யூனியன்கள் கவனிக்கின்றன. எல்லா வேலைகளையும் பஞ்சாயத்து யூனியன்கள் ஆற்றவில்லை என்று சொல்வது சரியல்ல. பஞ்சாயத்து யூனியன்களுடன் மக்கள் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் வேலை செய்யாவிட்டால் நாம் இவ்வளவு வெற்றியைக் கண்டிருக்கமாட்டோம். பஞ்சாயத்து யூனியன்களிலே நல்ல முறையில் வேலைகள் நடைபெறுகின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





ஸ்ரீமான் கோசல்ராம் அவர்கள் பேசும்போது கோழிப் பண்ணை 1-30 p.m.
வைப்பதற்காகக் கடன் கொடுக்கும்போது இருக்கக்கூடிய கண்டிஷன்களை இலகுவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சில இடங்களில் கோழிப் பண்ணை வைப்பதற்காக ஆயிரம் ரூபாய் வரை கூட கடன் கொடுக்கிறோம். அவர்கள் அந்தப் பணத்தைக் கோழிப் பண்ணை வைக்காமல் இதரச் செலவுகளுக்குப் பயன்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கண்டிஷன்களைப் போட்டிருக்கிறோம். கட்டடம் கட்ட, எக்விப்மெண்ட் வாங்க, கோழிகள் வாங்க இப்படி ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு தேவை என்று பார்த்து அலாட் செய்கிறோம். அந்த முறையில் அவர்கள் செலவு செய்யவேண்டும். ஆகவே, இப்போது இருக்கும் முறை நல்ல முறை. இந்த முறைதான் கையாளப்படும் என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஸ்ரீமான் சுவாமிதாஸ் அவர்கள் கால்நடைகள் நோயுற்றால் மருந்துகள் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். மருந்துகள் கிடைப்பதற்கு எவ்வளவு தூரம் ஏற்பாடு செய்யவேண்டுமோ அவ்வளவு தூரம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தந்த இடங்களில் உள்ள கால்நடை அதிகாரிகளைக் கேட்டால் அவர்கள் மருந்துகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

ஸ்ரீமான் கமலநாதன் அவர்கள், அவர்களுடைய பகுதியில் உள்ள கால்நடை ஆஸ்பத்திரியில் டாக்டர் போடவில்லை என்று சொன்னார்கள். அந்த ஆஸ்பத்திரியை சாங்ஷன் பண்ணும் காலத்திலே அவர்கள் திட்டத்தின் பிரகாரம் செய்யவில்லை. அதுதான் அங்குள்ள ஒரு குறைபாடு. கால்நடை இலாகா சொன்ன நிபந்தனையை நிறைவேற்றியிருந்தால். . . .

**திரு. ம. கமலநாதன் :** இந்தத் திட்டத்தின்படி நிர்மானித்து பஞ்சாயத்து காண்ட்ரிப்யூஷன், பப்ளிக் காண்ட்ரிப்யூஷன் எல்லாம் வாங்கி முடிவாகிவிட்ட பிறகு இன்னும் என்ன செய்யவேண்டுமென்று கூறுகிறார்கள்?

THE HON. SRI P. KAKKAN : There is no sanctioned post of Veterinary Assistant Surgeon in this dispensary. . அந்த மாதிரி டிஸ்பென்சரி கிடையாது. பர்மிஷன் வாங்கி வைப்பதுதான் முறை. அது இல்லாமல் செயல்படுகிறது என்றால் அது பற்றிப் பரிசீலனை செய்யவேண்டியதாக இருக்கிறது. சர்க்கார் சொல்கிற நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் மேலும் கவனிக்க ஏற்பாடு செய்யப்படும்.

MR. DEPUTY SPEAKER : How much time will the Hon. Minister take to finish his speech?

THE HON. SRI P. KAKKAN : Sir, I will take another fifteen minutes.

**திரு. மு. கருணாநிதி :** திரு. கமலநாதன் அவர்கள் இன்னொரு பிரச்னையைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். 1971-72-ல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி 18 அவுன்ஸ்

[திரு. பூ. கக்கன்] [14th March 1966

நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆழப்படுத்துவதற்குக் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். ஆழப்படுத்துவதற்குக் கொடுத்தால் ஏற்கனவே இருந்த கிணற்றை ஏதோ சரி செய்துவிட்டு ஆழப்படுத்தியதாகச் சொல்லி விடுவார்கள் என்பதற்காகத்தான் கொடுப்பதில்லை. ஆழப்படுத்த வேண்டுமென்று நினைப்பவர்கள்கூட ஆழப்படுத்த முடியவில்லை என்று நினைக்காமல், அதற்குப் பதிலாக வேறொரு புதிய கிணற்றை வெட்டிக் கொள்ளலாம். கோவையிலே விதைப் பரிசோதனை நிலையம் இருக்கிறது. அதுபோல் மற்ற ஜில்லாக்களுக்கும் இருப்பது நல்லதுதான். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எல்லா இடங்களிலும் விதைப் பரிசோதனை செய்வது நல்லதுதான். எந்த எந்த இடங்களில் செய்தால் நன்மையாக இருக்கும், மேலும் விதைகளைக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதையெல்லாம் பார்த்து பிரயத்தனம் செய்கிறோம்.

அடுத்தபடியாக, திரு. திருப்பதி அவர்கள் பேசும்பொழுது பழைய கிணறுகளை ஆழப்படுத்தவேண்டுமென்பதற்காகக் கடன் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். நான் ஏற்கனவே சொன்னேன், கொடுக்கப்படுவதில்லையென்று. பழைய கிணறுகளையெல்லாம் ஆழப்படுத்துவதற்குக் கொடுக்கப்படுகிற தக்காவி முதலிய கடன்களையெல்லாம் பயன்படுத்திக்கொள்ளலாம். ஃபுல் பைனான்ஸ் ஸ்கீமின்படி அந்த ஏரியாக்களில் இருக்கிற கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மட்டும் வசதி இருக்கிறது என்ற தகவலை நான் அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லை நல்ல விலைக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று திரு. நல்லசாமி கேட்டார்கள். அதற்காகத்தான் மார்க்கெட்டிங் கமிட்டிகள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. விவசாயப் பெருமக்கள் அவர்கள் தானியங்களைக் கொண்டுவந்து விற்கவேண்டுமென்றுதான் சொல்கிறோம். ஆனால் அவர்கள் அங்கு கொண்டு வருவது இல்லை, வியாபாரப் பெருமக்களிடம் . . .

**திரு. ம. கமலநாதன் :** ஃபுல் பைனான்ஸ் ஸ்கீமில் லோன் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஃபுல் பைனான்ஸ் ஸ்கீமில் இந்த வகைக்கு லோன் கொடுப்பதில்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஃபுல் பைனான்ஸ் ஸ்கீமில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக லோன் வாங்கிக்கொள்ளலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஆறுமுகம் அவர்கள், பஞ்சாயத்து யூனியன்கள் திட்டங்களைச் சரிவரக் கவனிப்பதில்லை என்று சொன்னார்கள். நல்ல முறையில்தான் பஞ்சாயத்து யூனியன்கள் கவனிக்கின்றன. எல்லா வேலைகளையும் பஞ்சாயத்து யூனியன்கள் ஆற்றவில்லை என்று சொல்வது சரியல்ல. பஞ்சாயத்து யூனியன்களுடன் மக்கள் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் வேலை செய்யாவிட்டால் நாம் இவ்வளவு வெற்றியைக் கண்டிருக்கமாட்டோம். பஞ்சாயத்து யூனியன்களிலே நல்ல முறையில் வேலைகள் நடைபெறுகின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



14th March 1966] [திரு. பூ. கக்கன்]

ஸ்ரீமான் கோசல்ராம் அவர்கள் பேசும்போது கோழிப் பண்ணை 1-3 p.m.
வைப்பதற்காகக் கடன் கொடுக்கும்போது இருக்கக்கூடிய கண்டிஷன்களை இலகுவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சில இடங்களில் கோழிப் பண்ணை வைப்பதற்காக ஆயிரம் ரூபாய் வரை கூட கடன் கொடுக்கிறோம். அவர்கள் அந்தப் பணத்தைக் கோழிப் பண்ணை வைக்காமல் இதரச் செலவுகளுக்குப் பயன்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கண்டிஷன்களைப் போட்டிருக்கிறோம். கட்டடம் கட்ட, எக்விப்மெண்ட் வாங்க, கோழிகள் வாங்க இப்படி ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு தேவை என்று பார்த்து அலாட் செய்கிறோம். அந்த முறையில் அவர்கள் செலவு செய்யவேண்டும். ஆகவே, இப்போது இருக்கும் முறை நல்ல முறை. இந்த முறைதான் கையாளப்படும் என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஸ்ரீமான் சுவாமிதாஸ் அவர்கள் கால்நடைகள் நோயுற்றால் மருந்துகள் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். மருந்துகள் கிடைப்பதற்கு எவ்வளவு தூரம் ஏற்பாடு செய்யவேண்டுமோ அவ்வளவு தூரம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தந்த இடங்களில் உள்ள கால்நடை அதிகாரிகளைக் கேட்டால் அவர்கள் மருந்துகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

ஸ்ரீமான் கமலநாதன் அவர்கள், அவர்களுடைய பகுதியில் உள்ள கால்நடை ஆஸ்பத்திரியில் டாக்டர் போடவில்லை என்று சொன்னார்கள். அந்த ஆஸ்பத்திரியை சாங்ஷன் பண்ணும் காலத்திலே அவர்கள் திட்டத்தின் பிரகாரம் செய்யவில்லை. அதுதான் அங்குள்ள ஒரு குறைபாடு. கால்நடை இலாகா சொன்ன நிபந்தனையை நிறைவேற்றியிருந்தால். . . .

**திரு. ம. கமலநாதன் :** இந்தத் திட்டத்தின்படி நிர்மானித்து பஞ்சாயத்து காண்ட்ரிப்யூஷன், பப்ளிக் காண்ட்ரிப்யூஷன் எல்லாம் வாங்கி முடிவாகிவிட்ட பிறகு இன்னும் என்ன செய்யவேண்டுமென்று கூறுகிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : There is no sanctioned post of Veterinary Assistant Surgeon in this dispensary. . அந்த மாதிரி டிஸ்பென்சரி கிடையாது. பர்மிஷன் வாங்கி வைப்பதுதான் முறை. அது இல்லாமல் செயல்படுகிறது என்றால் அது பற்றிப் பரிசீலனை செய்யவேண்டியதாக இருக்கிறது. சர்க்கார் சொல்கிற நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் மேலும் கவனிக்க ஏற்பாடு செய்யப்படும் .

MR. DEPUTY SPEAKER : How much time will the Hon. Minister take to finish his speech?

THE HON. SRI P. KAKKAN : Sir, I will take another fifteen minutes.

**திரு. மு. கருணாநிதி :** திரு. கமலநாதன் அவர்கள் இன்னொரு பிரச்னையைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். 1971-72-ல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி 18 அவுன்ஸ்

உணவு கொடுப்பதற்குத் திட்டமிட்டு அப்போது உணவுத் தேவையின் அளவு 61.41 லட்சம் டன் என்று திட்டமிடப்பட்டிருப்பதாகப் புள்ளிவிவரம் காட்டுகிறது. ஆனால், இப்போதே 67.8 லட்சம் மெட்ரிக் டன் கிடைக்குமென்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. அப்படியானால் இப்போதே 18 அவுன்ஸ் உணவு தானியங்கள் வழங்கப்படுவது ஏன் அமலில் வரக்கூடாது என்று கேட்ட அந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தப் புள்ளி விவரத்திலே அரிசி, புஞ்சைத் தானியங்கள், பருப்பு வகைகள் எல்லாம் சேர்ந்திருக்கின்றன. அதனால்தான் 18 அவுன்ஸ் அரிசி என்று கொடுக்க முடியவில்லை. இந்தக் கணக்கு எல்லாம் சேர்ந்த கணக்கு என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** கொடுக்கப்படுவதாகக் கூறப்படும் 18 அவுன்ஸ் என்பது அரிசி மட்டுமா அல்லது மற்றத் தானியங்களும் சேர்ந்ததா ?

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போதே 61 லட்சம் டன் உற்பத்தி என்று போடப்பட்டிருக்கிறதே. . . . .

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தப் புள்ளி விவரத்திலே எல்லாத் தானியங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 18 அவுன்ஸ் கொடுக்க முடியும் என்று சொல்வது அரிசி மட்டுந்தான்.

மதிப்பிற்குரிய சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஆடு வளர்ப்பைப் பொறுத்து பட்டணம் கடா கொடுத்து உதவி செய்வது நல்லது என்று சொன்னார்கள். இப்போது பரவக் கடாக்களைக் கொடுத்து கிராமக் கடாக்களை மாற்றிக் கொள்கிறோம். அப்படி மாற்ற முன்வரும்போது மாற்றி பட்டணம் கடாக்களாக வளர்க்க வாய்ப்பு ஏற்படும். பரவக் கடாக்களைப் பொறுத்தவரை நம்முடைய தமிழகத்தில் அதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று பாடுபட்டுவருகிறார்கள். அதிலே இன விருத்தி அதிகமாகிறது. அதோடு மாமிசமும் அதிகமாகக் கிடைக்கிறது. சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கசாப்புக்காகவா என்று கேட்கிறார்கள். கசாப்புக்காக மட்டுமல்ல, மணிச்சத்து, தழைச்சத்து கிடைக்கவும் வழி இருக்கிறது. இது போன்ற திட்டங்களைக் கொண்டுவந்து ஆட்டு வளர்ப்பை அபிவிருத்தி செய்து வருகிறோம்.

திரு. வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள், 'கூட்டுறவுக் கடன் விவசாய வளர்ச்சிக்குச் சரியாகத் துணை புரியவில்லை' என்று சொன்னதாகக் கூறினார்கள். கூட்டுறவுத் திட்டமே வேண்டாம், விவசாயத்தில் கூட்டுறவுப் பண்ணையே வேண்டாமென்று அவர்கள் கூறியிருக்கமாட்டார்கள்.

**திரு. சா. கணேசன் :** 'கூறியிருக்கமாட்டார்கள்' என்பது ஊகம். கூறியிருக்கிறார்கள் என்று பத்திரிகை, மற்றும் குறிப்புக்களில் இருந்து எடுத்துக் காட்டியிருக்கிறேன்.





**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்பிற்குரிய ராவ் அவர்கள் அவ்வாறு சொல்லியிருந்தாலும்கூட அது அவர்களுடைய தனிப்பட்ட சொந்த அபிப்பிராயமாக இருக்கலாமே தவிர, பிளானிங் கமிஷன் அபிப்பிராயமாக இருக்காது. கூட்டுறவு மூலமாக விவசாயம் செய்வதில் பலன் இருக்கிறது. இந்த முறை நன்றாக நடந்து வருவதை இங்கு மட்டுமல்ல, பாரத நாடு முழுமையும் பார்த்து வருகிறோம்.

மதிப்பிற்குரிய மணி அவர்கள் பேசும்போது விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மைகள் பல அதிகமாகக் கிடைக்க வேண்டுமென்று சொன்னார்கள். தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திற்காக, இந்த அரசாங்கம், இது பரியந்தம் பல சட்டங்கள் செய்திருப்பதையும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்த எவ்வளவு தூரம் பிரயத்தனம் செய்ய வேண்டுமோ அந்த அளவுக்குச் செய்கிறோம். நில உச்ச வரம்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் விவசாய மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற முறையில் நிறைவேற்றப்பட்டது. நூற்றுக்கு நூறு நன்மை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். நாம் செய்த சட்டத்தின் படி, ஐந்து பேர்களுக்கு இவ்வளவு ஏக்கர் என்று நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம் என்று சொன்னால் பகிர்ந்து கொள்ளக்கூடாது என்று நாம் சொல்ல முடியாது. நன்றாகப் பரிசீலனை செய்து எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்பதை அதிகாரிகள் கணக்கெடுத்திருக்கிறார்கள், கணக்கெடுத்து வருகிறார்கள்.

ஸ்ரீமான் ராஜாங்கம் அவர்கள் பேசும்போது, பெருமாள் ஏரியைச் செப்பனிட வேண்டுமென்று சொன்னார்கள். பெருமாள் ஏரியைச் செப்பனிட வேண்டுமென்ற நோக்கம் அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதை 'டிசில்டிங் அண்டு ரெக்ளமேஷன்' திட்டத்தின் கீழ்க் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே புதுப் புது புராஜக்ட்கள் ஏற்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். பெரிய ஏரிகளில் மண் தூர்வி கரையெடுத்து அமைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. காலப்போக்கில் அவற்றையெல்லாம் அரசாங்கம் செய்ய முன்வரும். திரு. வடிவேலு அவர்கள் கூட்டுப் பட்டாவிற்குக் கடன் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். கூட்டுப் பட்டாவிற்கும் கடன் கொடுத்து வருகிறார்கள் என்று நினைக்கிறேன். பட்டாவாக இருந்தாலும், கூட்டுப்பட்டாவாக இருந்தாலும், டெனன்ட்ஸ்-ஆக இருந்தாலும் கடன் கொடுக்க விதிகள் இருக்கின்றன. ஒருசில கடன்கள் அவர்களுக்குக் கொடுக்க விதியிருக்கிறது. அதன்மூலம் அவர்கள் சில கடன்களைப் பெற்று வருகிறார்கள். திரு. பெரியண்ணன் அவர்கள் பாண்ட் ஸிஸ்டம் பற்றிச் சொன்னார்கள். சேலம் ஜில்லாவில் பாண்ட் ஸிஸ்டத்திற்கு, அது நடக்க உதவி செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இன்னொன்று சொன்னார்கள், கிணறு வெட்டித் தண்ணீர் வராவிட்டாலும் கடனை மொத்தமாகக் கொடுக்கச் சொல்வதாகச் சொன்னார்

[திரு. மு. கருணாநிதி] [14th March 1966

உணவு கொடுப்பதற்குத் திட்டமிட்டு அப்போது உணவுத் தேவையின் அளவு 61.41 லட்சம் டன் என்று திட்டமிடப்பட்டிருப்பதாகப் புள்ளிவிவரம் காட்டுகிறது. ஆனால், இப்போதே 67.8 லட்சம் மெட்ரிக் டன் கிடைக்குமென்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. அப்படியானால் இப்போதே 18 அவுன்ஸ் உணவு தானியங்கள் வழங்கப்படுவது ஏன் அமலில் வரக்கூடாது என்று கேட்ட அந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தப் புள்ளி விவரத்திலே அரிசி, புஞ்சைத் தானியங்கள், பருப்பு வகைகள் எல்லாம் சேர்ந்திருக்கின்றன. அதனால்தான் 18 அவுன்ஸ் அரிசி என்று கொடுக்க முடியவில்லை. இந்தக் கணக்கு எல்லாம் சேர்ந்த கணக்கு என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** கொடுக்கப்படுவதாகக் கூறப்படும் 18 அவுன்ஸ் என்பது அரிசி மட்டுமா அல்லது மற்றத் தானியங்களும் சேர்ந்ததா ?

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போதே 61 லட்சம் டன் உற்பத்தி என்று போடப்பட்டிருக்கிறதே. . . .

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தப் புள்ளி விவரத்திலே எல்லாத் தானியங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 18 அவுன்ஸ் கொடுக்க முடியும் என்று சொல்வது அரிசி மட்டுந்தான்.

மதிப்பிற்குரிய சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஆடு வளர்ப்பைப் பொறுத்து பட்டணம் கடா கொடுத்து உதவி செய்வது நல்லது என்று சொன்னார்கள். இப்போது பரவக் கடாக்களைக் கொடுத்து கிராமக் கடாக்களை மாற்றிக் கொள்கிறோம். அப்படி மாற்ற முன்வரும்போது மாற்றி பட்டணம் கடாக்களாக வளர்க்க வாய்ப்பு ஏற்படும். பரவக் கடாக்களைப் பொறுத்தவரை நம்முடைய தமிழகத்தில் அதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று பாடுபட்டுவருகிறார்கள். அதிலே இன விருத்தி அதிகமாகிறது. அதோடு மாமிசமும் அதிகமாகக் கிடைக்கிறது. சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கசாப்புக்காகவா என்று கேட்கிறார்கள். கசாப்புக்காக மட்டுமல்ல, மணிச்சத்து, தழைச் சத்து கிடைக்கவும் வழி இருக்கிறது. இது போன்ற திட்டங்களைக் கொண்டுவந்து ஆட்டு வளர்ப்பை அபிவிருத்தி செய்து வருகிறோம்.

திரு. வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள், 'கூட்டுறவுக் கடன் விவசாய வளர்ச்சிக்குச் சரியாகத் துணை புரியவில்லை' என்று சொன்னதாகக் கூறினார்கள். கூட்டுறவுத் திட்டமே வேண்டாம், விவசாயத்தில் கூட்டுறவுப் பண்ணையே வேண்டாமென்று அவர்கள் கூறியிருக்கமாட்டார்கள்.

**திரு. சா. கணேசன் :** 'கூறியிருக்கமாட்டார்கள்' என்பது ஊகம். கூறியிருக்கிறார்கள் என்று பத்திரிகை, மற்றும் குறிப்புக்களில் இருந்து எடுத்துக் காட்டியிருக்கிறேன்.



14th March 1966]

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்பிற்குரிய ராவ் அவர்கள் அவ்வாறு சொல்லியிருந்தாலும்கூட அது அவர்களுடைய தனிப்பட்ட சொந்த அபிப்பிராயமாக இருக்கலாமே தவிர, பிளானிங் கமிஷன் அபிப்பிராயமாக இருக்காது. கூட்டுறவு மூலமாக விவசாயம் செய்வதில் பலன் இருக்கிறது. இந்த முறை நன்றாக நடந்து வருவதை இங்கு மட்டுமல்ல, பாரத நாடு முழுமையும் பார்த்து வருகிறோம்.

மதிப்பிற்குரிய மணி அவர்கள் பேசும்போது விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மைகள் பல அதிகமாகக் கிடைக்க வேண்டுமென்று சொன்னார்கள். தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திற்காக, இந்த அரசாங்கம், இது பரியந்தம் பல சட்டங்கள் செய்திருப்பதையும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்த எவ்வளவு தூரம் பிரயத்தனம் செய்ய வேண்டுமோ அந்த அளவுக்குச் செய்கிறோம். நில உச்ச வரம்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் விவசாய மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற முறையில் நிறைவேற்றப்பட்டது. நூற்றுக்கு நூறு நன்மை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். நாம் செய்த சட்டத்தின் படி, ஐந்து பேர்களுக்கு இவ்வளவு ஏக்கர் என்று நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம் என்று சொன்னால் பகிர்ந்து கொள்ளக்கூடாது என்று நாம் சொல்ல முடியாது. நன்றாகப் பரிசீலனை செய்து எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்பதை அதிகாரிகள் கணக்கெடுத்திருக்கிறார்கள், கணக்கெடுத்து வருகிறார்கள்.

ஸ்ரீமான் ராஜாங்கம் அவர்கள் பேசும்போது, பெருமாள் ஏரியைச் செப்பனிட வேண்டுமென்று சொன்னார்கள். பெருமாள் ஏரியைச் செப்பனிட வேண்டுமென்ற நோக்கம் அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதை 'டீசில்டிங் அண்டு ரெக்ளமேஷன்' திட்டத்தின் கீழ்க் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே புதுப் புது புராஜக்ட்கள் ஏற்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். பெரிய ஏரிகளில் மண் தூர்வி கரையெடுத்து அமைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. காலப்போக்கில் அவற்றையெல்லாம் அரசாங்கம் செய்ய முன்வரும். திரு. வடிவேலு அவர்கள் கூட்டுப் பட்டாவிற்குக் கடன் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். கூட்டுப் பட்டாவிற்கும் கடன் கொடுத்து வருகிறார்கள் என்று நினைக்கிறேன். பட்டாவாக இருந்தாலும், கூட்டுப்பட்டாவாக இருந்தாலும், டெனன்ட்ஸ்-ஆக இருந்தாலும் கடன் கொடுக்க விதிகள் இருக்கின்றன. ஒருசில கடன்கள் அவர்களுக்குக் கொடுக்க விதியிருக்கிறது. அதன்மூலம் அவர்கள் சில கடன்களைப் பெற்று வருகிறார்கள். திரு. பெரியண்ணன் அவர்கள் பாண்ட் ஸிஸ்டம் பற்றிச் சொன்னார்கள். சேலம் ஜில்லாவில் பாண்ட் ஸிஸ்டத்திற்கு, அது நடக்க உதவி செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இன்னொன்று சொன்னார்கள், கிணறு வெட்டித் தண்ணீர் வராவிட்டாலும் கடனை மொத்தமாகக் கொடுக்கச் சொல்வதாகச் சொன்னார்

கள். சலுகை கொடுத்துப் பல தவணைகளில் வாங்கியதைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். திரு. நஞ்சுண்ட ராவ் அவர்களும் அவர்கள் பகுதியில் பாண்ட் ஸிஸ்டம் வரவேண்டும் என்று சொன்னார்கள். தக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்.

மூன்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு ட்ராக்டர்கள் கொடுக்க யோசித்திருக்கிறோம். நிறைய ட்ராக்டர்கள் கிடைத்தால் எல்லாவற்றிற்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். பஞ்சாயத்துக்களில் நிதி நிலைமை நல்லமுறையில் இருந்தால் ட்ராக்டர்கள் வாங்க வாய்ப்பிருக்கும்.

திரு. பெரியண்ணன் அவர்களும் திரு. செங்கோட்டுவேலு அவர்களும் சேலம் ஜில்லாவில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். கோவையில் ஒரு விவசாயக் கல்லூரி இருக்கிறது. மதுரையிலும் ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. அதன் மூலம் நல்ல பயிற்சி கொடுத்து, நல்ல பட்டதாரிகளைக் கொண்டுவர அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் போன்றவை கொடுத்து ஊக்குவித்து அவர்கள் நன்கு படித்து வர ஏற்பாடு கசய்யப்பட்டிருக்கிறது. எல்லா ஊர்களிலும் விவசாயக் கல்லூரி வைத்துவிடமுடியாது.

மதிப்பிற்குரிய சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது சிலவிடங்களை பாரஸ்ட்களாக ஆக்கி விட்டார்கள், கால் நடை மேயக்கூடிய மேய்ச்சல் தரை இல்லை என்று சொன்னார்கள். பாரஸ்ட்ஸ் நமக்குப் பெரிய செல்வங்களாக விளங்குகின்றன. மரம் வைத்தால் வளருமா என்று தெரிந்து கொண்டுதான் அவற்றை எடுத்துக் கொள்கிறார்கள். இல்லை என்றால் நிச்சயமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். காட்டு இலாகா வேண்டுமென்றே கிராம மக்களைக் கஷ்டப்படுத்தவேண்டுமென்று நிலங்களை எடுத்துக் கொண்டதாகச் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்ள முடியாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சா. கணேசன் :** 'வேண்டுமென்றே அந்த இலாகா ஜனங்களைக் கஷ்டப்படுத்தவேண்டுமென்று அப்படிச் செய்கிறது என்று நான் சொல்வதாக அமைச்சர் அவர்கள் கற்பித்துச் சொல்வது நியாமல்ல. அப்படிச் செய்வதால் ஏற்படுகிற கஷ்டங்களைச் சொன்னேன். வேண்டுமென்று ஜனங்களைக் கஷ்டப்படுத்துவதற்காகச் செய்கிறார்கள் என்று நான் சொன்னதாகச் சொல்கிறார்கள். அது உண்மைக்கு மாறுபட்டது.

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்கம் எடுத்துச் செய்கிறது என்று சொன்னால் அரசாங்கம் கஷ்டப்படுத்துவதாகத்தான் அதிலிருந்து மக்கள் நினைப்பார்கள். அவர் எண்ணத்தை அறிந்து தான் சொல்கிறேன். ஒரு குழு அமைத்துப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். விதைகள் பற்றிச் சொல்லவும், நிலத்தின் தன்மைபற்றியும், மண்ணின் தரத்தைப் பற்றிச் சொல்லவும் அட்வைசரி கமிட்டீஸ் இருக்கின்றன. அவர்கள் ஆலோசனைகள் சொல்கிறார்கள். விவசாயிகள், அனுபவசாலிகள்



ஒரு சிலர் அங்கிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டுத்தான் முடிவுகள் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதற்காக ஒரு குழு அமைத்து அதற்காகச் செலவு செய்து நஷ்டப்படவேண்டாம் என்று சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

மாதவரம் பால் பண்ணைபற்றிச் சொன்னார்கள். அதில் நஷ்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. அது எதற்காக ஏற்படுத்தப்பட்டது? நகரத்தில் வாழும் பல லட்சக்கணக்கான மக்களுக்குப் பால் கொடுக்கவேண்டுமென்றுதான் அத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. மாடுகள் வளர்ப்பவர்கள் எல்லாம் அங்கேயே தங்கி அவற்றைப் பாதுகாத்துப் பால் கொடுக்க வேண்டுமென்று திட்டம் வகுக்கப்பட்டது. இடையில் மாடுகளுக்கு நோய் வந்ததால் நஷ்டம் ஏற்பட்டது. பக்கத்திலுள்ள கிராமங்களுக்கும் கடன் கொடுத்து மில்க் சொஸைட்டீஸ் வைத்து நகர மக்களுக்குப் பால் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். மதுரை மாநகரிலிருந்து கூட மதராஸுக்கு பால் கொண்டு வரவேண்டுமென்று திட்டமிட்டு வேலை செய்து வருகிறோம். ஈரோட்டிலிருந்து கூட பால் வருகிறது. மில்க் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் ஏற்படுத்தி பால் கெட்டுப்போகாது கொண்டுவரச் செய்து நகர மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று பாடுபட்டு வருகிறோம். பலவிடங்களில் மில்க் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இண்டன்ஸிவ் ஏரியாஸ் மதுரை, கோவை, சென்னை. மதுரையில் ஒரு மில்க் யூனிட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கோவையில் நல்லமுறையில் ஏற்படும் என்று நினைக்கிறேன். இங்கு மில்க் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் ஏற்படுத்தி பால் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. யானைக்கும் அடி சறுக்கும் என்பார்கள் மனிதனுக்குத் திடீரென்று காலரா, ஹார்ட் ஃபெயில்யூர் வருவதில்லையா? திடீரென்று மாடுகள் செத்துவிடுகின்றன. நல்லமுறையில் திட்டத்தைப் பாராட்டி எவ்வளவு நஷ்டமானாலும் பரவாயில்லை, கவலைப்பட வேண்டாம் என்று சொன்னால் உற்சாகம் அளிக்கக்கூடியதாக இருக்கும். அதைக் க்ளோஸ் செய்யலாம் என்ற முறையில் நஷ்டம் வந்துவிட்டது, நஷ்டம் வந்து விட்டது என்று சொல்லி நன்றாக பால் கிடைக்கவில்லை என்று சொல்வதில் பொருள் இல்லை.

**திரு. சா. கணேசன்:** 1962-63-ல் சிந்திப் போன பாலால் வந்த நஷ்டம், ஸ்பில்லேஜினால் வந்தது. 7½ லட்சம் ரூபாய் பால் கெட்டுப்போயிருக்கிறது. கெடாமல் இருக்க வகை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். 1962-63-ல் மட்டும் சிந்திக் கெட்டுப் போனது 7½ லட்சம் ரூபாய் பால்.

**கனம் திரு. வெ. ராமையா :** மாதவரம் பால் பண்ணை குறித்து ஒன்றும் பேசவேண்டாம் என்று நினைத்தேன், அதற்கு நேரம் அதிகம் பிடிக்கும் என்பதால். சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் இதுபற்றிப் பேசியதால் சொல்கிறேன். பால் பண்ணை அமைத்திருக்கும் முறையை கனம் அங்கத்தினர்கள் ஆரம்பக் கட்டத்திலிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். பால் உற்பத்தி செய்வதற்காக அமைக்கப்பட்ட அமைப்பு என்று

கள். சலுகை கொடுத்துப் பல தவணைகளில் வாங்கியதைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். திரு. நஞ்சுண்ட ராவ் அவர்களும் அவர்கள் பகுதியில் பாண்ட் ஸிஸ்டம் வரவேண்டும் என்று சொன்னார்கள். தக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்.

மூன்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு ட்ராக்டர்கள் கொடுக்க யோசித்திருக்கிறோம். நிறைய ட்ராக்டர்கள் கிடைத்தால் எல்லாவற்றிற்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். பஞ்சாயத்துக்களில் நிதி நிலைமை நல்லமுறையில் இருந்தால் ட்ராக்டர்கள் வாங்க வாய்ப்பிருக்கும்.

திரு. பெரியண்ணன் அவர்களும் திரு. செங்கோட்டுவேலு அவர்களும் சேலம் ஜில்லாவில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். கோவையில் ஒரு விவசாயக் கல்லூரி இருக்கிறது. மதுரையிலும் ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. அதன் மூலம் நல்ல பயிற்சி கொடுத்து, நல்ல பட்டதாரிகளைக் கொண்டுவர அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் போன்றவை கொடுத்து ஊக்குவித்து அவர்கள் நன்கு படித்து வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லா ஊர்களிலும் விவசாயக் கல்லூரி வைத்துவிடமுடியாது.

மதிப்பிற்குரிய சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும் போது சிலவிடங்களை பாரஸ்ட்களாக ஆக்கி விட்டார்கள், கால் நடை மேயக்கூடிய மேய்ச்சல் தரை இல்லை என்று சொன்னார்கள். பாரஸ்ட்ஸ் நமக்குப் பெரிய செல்வங்களாக விளங்குகின்றன. மரம் வைத்தால் வளருமா என்று தெரிந்து கொண்டுதான் அவற்றை எடுத்துக் கொள்கிறார்கள். இல்லை என்றால் நிச்சயமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். காட்டு இலாகா வேண்டுமென்றே கிராம மக்களைக் கஷ்டப்படுத்தவேண்டுமென்று நிலங்களை எடுத்துக் கொண்டதாகச் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்ள முடியாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சா. கணேசன்:** 'வேண்டுமென்றே அந்த இலாகா ஜனங்களைக் கஷ்டப்படுத்தவேண்டுமென்று அப்படிச் செய்கிறது என்று நான் சொல்வதாக அமைச்சர் அவர்கள் கற்பித்துச் சொல்வது நியாமல்ல. அப்படிச் செய்வதால் ஏற்படுகிற கஷ்டங்களைச் சொன்னேன். வேண்டுமென்று ஜனங்களைக் கஷ்டப்படுத்துவதற்காகச் செய்கிறார்கள் என்று நான் சொன்னதாகச் சொல்கிறார்கள். அது உண்மைக்கு மாறுபட்டது.

**கனம் திரு. பூ. கக்கன்:** அரசாங்கம் எடுத்துச் செய்கிறது என்று சொன்னால் அரசாங்கம் கஷ்டப்படுத்துவதாகத்தான் அதிலிருந்து மக்கள் நினைப்பார்கள். அவர் எண்ணத்தை அறிந்து தான் சொல்கிறேன். ஒரு குழு அமைத்துப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். விதைகள் பற்றிச் சொல்லவும், நிலத்தின் தன்மைபற்றியும், மண்ணின் தரத்தைப் பற்றிச் சொல்லவும் அட்வைசரி கமிட்டீஸ் இருக்கின்றன. அவர்கள் ஆலோசனைகள் சொல்கிறார்கள். விவசாயிகள், அனுபவசாலிகள்





ஒரு சிலர் அங்கிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டுத்தான் முடிவுகள் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதற்காக ஒரு குழு அமைத்து அதற்காகச் செலவு செய்து நஷ்டப்படவேண்டாம் என்று சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

மாதவரம் பால் பண்ணைபற்றிச் சொன்னார்கள். அதில் நஷ்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. அது எதற்காக ஏற்படுத்தப்பட்டது? நகரத்தில் வாழும் பல லட்சக்கணக்கான மக்களுக்குப் பால் கொடுக்கவேண்டுமென்றுதான் அத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. மாடுகள் வளர்ப்பவர்கள் எல்லாம் அங்கேயே தங்கி அவற்றைப் பாதுகாத்துப் பால் கொடுக்க வேண்டுமென்று திட்டம் வகுக்கப்பட்டது. இடையில் மாடுகளுக்கு நோய் வந்ததால் நஷ்டம் ஏற்பட்டது. பக்கத்திலுள்ள கிராமங்களுக்கும் கடன் கொடுத்து மில்க் சொஸைட்டீஸ் வைத்து நகர மக்களுக்குப் பால் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். மதுரை மாநகரிலிருந்து கூட மதறாஸுக்கு பால் கொண்டு வரவேண்டுமென்று திட்டமிட்டு வேலை செய்து வருகிறோம். ஈரோட்டிலிருந்து கூட பால் வருகிறது. மில்க் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் ஏற்படுத்தி பால் கெட்டுப்போகாது கொண்டுவரச் செய்து நகர மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று பாடுபட்டு வருகிறோம். பலவிடங்களில் மில்க் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இண்டன்ஸிவ் ஏரியாஸ் மதுரை, கோவை, சென்னை. மதுரையில் ஒரு மில்க் யூனிட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கோவையில் நல்லமுறையில் ஏற்படும் என்று நினைக்கிறேன். இங்கு மில்க் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் ஏற்படுத்தி பால் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. யானைக்கும் அடி சறுக்கும் என்பார்கள் மனிதனுக்குத் திடீரென்று காலரா, ஹார்ட் ஃபெயில்யூர் வருவதில்லையா? திடீரென்று மாடுகள் செத்துவிடுகின்றன. நல்லமுறையில் திட்டத்தைப் பாராட்டி எவ்வளவு நஷ்டமானாலும் பரவாயில்லை, கவலைப்பட வேண்டாம் என்று சொன்னால் உற்சாகம் அளிக்கக்கூடியதாக இருக்கும். அதைக் க்ளோஸ் செய்யலாம் என்ற முறையில் நஷ்டம் வந்துவிட்டது, நஷ்டம் வந்து விட்டது என்று சொல்லி நன்றாக பால் கிடைக்கவில்லை என்று சொல்வதில் பொருள் இல்லை.

**திரு. சா. கணேசன்:** 1962-63-ல் சிந்திப் போன பாலால் வந்த நஷ்டம், ஸ்பில்லேஜினால் வந்தது. 7½ லட்சம் ரூபாய் பால் கெட்டுப்போயிருக்கிறது. கெடாமல் இருக்க வகை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். 1962-63-ல் மட்டும் சிந்திக் கெட்டுப் போனது 7½ லட்சம் ரூபாய் பால்.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** மாதவரம் பால் பண்ணை குறித்து ஒன்றும் பேசவேண்டாம் என்று நினைத்தேன், அதற்கு நேரம் அதிகம் பிடிக்கும் என்பதால். சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் இதுபற்றிப் பேசியதால் சொல்கிறேன். பால் பண்ணை அமைத்திருக்கும் முறையை கனம் அங்கத்தினர்கள் ஆரம்பக் கட்டத்திலிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். பால் உற்பத்தி செய்வதற்காக அமைக்கப்பட்ட அமைப்பு என்று

[திரு. வெ. ராமைய்யா] [14th March 1966

அடிப்படையில் பார்த்தால் நாம் ஏற்படுத்தியிருக்கிற பலவித அமைப்புகளுக்கே தேவையிருக்காது. சென்னை நகரில் உள்ள மாடுகள் மட்டும் அங்கில்லை. அது மட்டுமல்ல, மாடுகள் வைத்தி ருக்கும் பல தனிப்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு அங்கேயே இட வசதி செய்து கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதற்காக காப்பிடல் எக்ஸ்பெண்டிச்சர் ஏற்பட்டது. இதை வட்டிக்கணக்கில் பார்க்கும்போது நஷ்டமாகத் தெரியும். தொடர்ந்து இந்த நிலை இருக்கக்கூடாது என்பதற்காக ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்னால் ஒரு விசேஷ அதிகாரியாக அப்போது இருந்த சீஃப்-செக்ரட்டரி அவர்களை நியமனம் செய்து அங்கு இருக்கின்ற பல குறைபாடுகளையும் கண்காணித்து, சர்க்காருக்கு ஓர் அறிக்கை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டது. அவர்களும் அவ்வாறே ஓர் அறிக்கை கொடுத்திருக் கிறார்கள். அவர்கள் சிபாரிசு செய்திருப்பது, அங்கு கட்டடம் கட்டிக்கொடுத்திருப்பவைகளை எல்லாம் உற்பத்தியாளர்கள் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளவில்லை. அந்த முறையும் பொருத்தமாக இருக்காது என்று சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, அரசாங்கமே வாங்கி வைத்துக்கொண்டு உதவி செய்யக்கூடிய அளவில் இருக்கவேண்டும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதை இந்தச் சபையும் நன்கு அறிந்திருக்கும்.

இன்னும் நான் சொல்ல விரும்புவது இந்த மாதவரம் பால் பண்ணை ராஜ்யம் பூராவுக்கும் இருக்கின்ற ஒரு திட்டமாக செயல் படும். அது மட்டுமல்ல, அங்கே உற்பத்தியாகக்கூடிய பாலுக்கு மட்டும் நாம் திட்டமிடவில்லை, வெளியேயிருந்து வருகின்ற பாலை யும் வாங்கிப் பக்குவப்படுத்தி வழங்கவேண்டும் என்ற திட்டமும் சேர்ந்து ஒன்றாக விளங்குகிறது. கனம் கோசல்ராம் அவர்கள் கூட கேட்டார்கள், இதற்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி எதற்காக என்று. முன்பு இங்கு மட்டும் மில்க் கமிஷனர் என்ற முறை இருந்தது. இப்போது இராஜ்யம் முழுவதற்கும் பால் உற்பத்திக்கு இந்த மில்க் கமிஷனர் பொறுப்பாக இருப்பார். அந்த அளவுக்கு ராஜ்ய அதிகாரியாக மாறியிருக்கிறார். முன்பு கூட்டுறவுத் துறையில் பால் உற்பத்தி கணக்கிடப்பட்டு வந்தது. இப்போது, மாதவரம் பால் பண்ணைக்கு மட்டுமல்ல, ராஜ்யத் திலுள்ள பிற கூட்டுறவுத்துறையில் உற்பத்தி செய்யப்படும் பால் சம்பந்தமான கணக்குகளும் மில்க் கமிஷனரின் பொறுப்பில் வந்திருக்கிறது, இவ்விதம் ராஜ்யத்திற்குத் தேவையான அளவை நாம் உற்பத்தி செய்யவேண்டும் என்ற முறையில் அரசாங்கம் பலவிதமான வழிகளில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கடைசியாக இன்ஷூரன்ஸ் திட்டத் தைப்பற்றிச் சொல்லப்பட்டது. அதாவது பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் வேண்டும் என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பொறுத் தளவில், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் பரீட்சார்த்தமாக இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயல் படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைத் தெரி



14th March 1966] [திரு. பூ. கக்கன்]

வித்துக் கொள்கிறேன். இது வெற்றிபெறுமானால் இந்தத் திட்டத்தைப் பிற இடங்களுக்கும் விரிவுபடுத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தைப் பொறுத்த அளவில், இதைப் புஞ்சைத் தானியங்களுக்கு மட்டும் பரீட்சார்த்தமாக வைத்துப் பார்க்கலாம் என்று ஸ்ரீ. ராவ் அவர் கள் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். இதைச் சில இடங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம் என்று அரசாங்கம் உத்தேசித்திருக் கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொல்லும்போது, அநேக ஏக்கர் நிலங்கள் எந்தவிதமான பயனும் இல்லாமல்— யாரும் பயன்படுத்தாமல் கிடக்கின்றன என்று சொன்னார்கள். இதைப்பற்றி விசாரித்ததில், இதை எந்த அளவுக்குப் பயன்படுத்த லாம் என்று பார்த்திருக்கிறார்கள். இதைப்பற்றிப் பரிசீலனை செய்து சப்-டிவிஷன் செய்வதற்கும் கவனம் செலுத்தி வருகிறார் கள். மேலும் கவனம் செலுத்தவேண்டும் என்று சொல்லுகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இங்கு சமர்ப்பிக்கப்பட்ட எல்லா மான்யக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர் கள் சரியாகப் பதில் சொல்லவில்லை. நான் கேட்பது நான்காவது திட்ட இறுதியில் 61 லட்சம் டன் கிடைக்கும் என்றும், அதன் மூலமாக 18 அவுன்ஸ் உணவு கொடுக்கலாம் என்றும் சொல் லப்பட்டிருக்கிறது, அப்படியானால் நடப்பு ஆண்டிலேயே 66 லட்சம் டன் உற்பத்தியாகும் என்றிருந்தால், இப்போதே 5 லட்சம் டன் உபரி தானே—அப்படியானால் இப்போது ஏன் 18 அவுன்ஸ் உணவு கொடுக்க முடியவில்லை என்பதை அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** உடனடியாகக் கிடைத்துவிடும் என்று சொல்லவில்லை, அரிசியை மட்டும் சொல்லவில்லை, எல்லாத் தானியங் களையும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது, எல்லாம் சேர்ந்திருக் கின்ற 'அச்சீவ்மென்ட்' டைத்தான் தெரிவித்திருக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி :** எல்லாவற்றையும் சேர்த்து, இது அரிசி யை மட்டுமல்ல, என்று அடிக்கடி குறிப்பிடுவதினால் தான் இந்தப் பிரச்னை ஏற்படுகிறது. இப்போதே ஆறு லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி உபரியாக இருக்கிறதே, அப்படியானால் ஏன் 18 அவுன்ஸ் தர முடியவில்லை என்பது தான் கேள்வி.

**கனம் திரு. பூ. கக்கன் :** இதில் அரிசி உற்பத்தி 38 லட்சம் டன் மட்டும்தான். மற்றத் தானியங்களை எல்லாம் சேர்த்துத்தான் 66 லட்சம் டன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் எப்படிக் கொடுக்க முடியும்?

**திரு. மு. கருணாநிதி :** கனம் அமைச்சர் அவர்கள் எதையோ சொல்லிச் சமாளிக்கப் பார்க்கின்றார்கள். உணவு தானியங்களில் புள்ளிவிவரம் தரப்பட்டிருப்பதில் 4-வது திட்ட இறுதியில், 61.41

[திரு. மு. கருணாநிதி] [14th March 1966

லட்சம் டன் இருந்தால் 18 அவுன்ஸ் உணவு கொடுக்கலாம் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 53.14 (கூட்டல்) 13.30 இரண்டையும் சேர்த்து 66.44 லட்சம் டன் உற்பத்தி இருக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 66 லட்சம் டன் என்பது மெட்ரிக் டன்னில் 67.8 லட்சம் டன்னாகும். அப்படியானால் இப்போதே ஐந்து லட்சம் மெட்ரிக் டன் உபரியாக வருகிறது. ஆகவே இப்போதே ஏன் 18 அவுன்ஸ் உணவு கொடுக்க முடியவில்லை என்பதைத்தான் கேட்க விரும்புகிறோம்.

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலில் அரிசியைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள், இப்போது எல்லாத் தானியங்களையும் என்று சொல்கிறார்கள். அரிசி என்று மட்டும் எடுத்துக்கொண்டால் முடியாது என்று முன்பே சொன்னேன்.

The target of 66.44 lakhs tonnes is only the food production potential and not the actual yield at the end of 1965-66. This year, the actual yield is only about 54 lakhs tonnes. இப்படியிருக்கும்போது, எப்படி 18 அவுன்ஸ் கொடுக்க முடியும் என்று தெரியவில்லை.

**திரு. மு. கருணாநிதி :** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எதிர்பார்ப்பது 13.30 லட்சம் டன் என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த இரண்டையும் சேர்த்துப்பார்த்தால் 66.44 லட்சம் டன் வரும் அதாவது மெட்ரிக் டன்னில் 67.8 லட்சம் டன் என்று வரும். அப்படியானால் ஏன் 18 அவுன்ஸ் கொடுக்க முடியாது என்று கேட்கிறோம்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் எதிர்க்கட்சி உபதலைவர் அவர்கள், எதிர்பார்க்கின்ற உற்பத்திப் புள்ளிவிவரத்தையும் சேர்த்துச் சொல்லுகின்றார்கள். இப்போது இருப்பது 53 சில்லறை லட்சம் டன் தான். இதை வைத்துக்கொண்டு எந்த அளவில் வினியோகிக்க முடியுமோ அந்த அளவில் வினியோகிக்கப்பட்டு வருகிறது. பூர்ணமாக 18 அவுன்ஸ் ஏற்படவேண்டுமென்றால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த இலக்கை உயர்த்த வேண்டும் என்பது தான் நிலைமை.

The cut motions to Demand No. XVI—Agriculture were put and lost.

.m. MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 10,65,19,500 under Demand No. XVI—Agriculture."

The Demand was put and carried and the Grant was made.

The cut-motions to Demand No. XVIII—Animal Husbandry were put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,34,49,700 under Demand No. XVIII—Animal Husbandry."



14th March 1966] [Mr. Deputy Speaker]

The Demand was put and carried and the Grant was made.

The cut motions to Demand No. XXXIX—Capital outlay on Agriculture were put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 39,93,100 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture."

The Demand was put and carried and the Grant was made.

The cut-motions to Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading were put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 74,36,98,300 under Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 2-03 p.m.

The House then adjourned.

### IV—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 150. *Notification issued with R.O.C. No.* 84682/65/F5, *dated the 13th December 1965, declaring that the provisions of the Madras District Municipalities Act, 1920, specified in the schedule of the notification and rules issued thereunder shall be extended to and be in force in the area for the time being within the jurisdiction of the Srivaikundam Town Panchayat in Tirunelveli district with effect from 1st January 1966. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

* 151. *Notification issued with G.O. Ms. No. 194, Rural Development, dated 4th February 1966, making the Madras Public Buildings (Licensing) Rules, 1966, under the Madras Public Buildings (Licensing) Act, 1965. [Laid on the Table of the House under section 25 (4) of the Madras Public Buildings (Licensing) Act, 1965 (Madras Act 13 of 1965).]*

* 152. *Notification issued with G.O. Ms. No. 200, Rural Development and Local Administration Department, dated the 4th February 1966, appointing the 1st day of April 1966 to be the date on which the Madras Public Buildings (Licensing) Act, 1965, shall come into force. [Laid on the Table of the House under section 25 (4) of the Madras Public Buildings (Licensing) Act, 1965 (Madras Act 13 of 1965).]*

[14th March 1966

*153. *Notification issued with G.O. Ms. No. 195, Rural Development and Local Administration, dated the 4th February 1966, specifying certain officers to perform the functions of the competent authority under the Madras Public Buildings (Licensing) Act, 1965 for the areas specified in the notification.* [*Laid on the Table of the House under section 25 (4) of the Madras Public Buildings (Licensing), Act, 1965 (Madras Act 13 of 1965).*]

**B. Reports, notifications and other papers.**

† 45. *Review of the Progress made in Co-operative Development schemes, 1965–66 (Tamil and English).*

---

* Laid on the table of the House on 12th March 1966.
† Circulated on 11th March 1966



14th March 1966]

APPENDIX.

[*Vide* answer to Starred Question No. 276 at page 125 supra]

STATEMENT SHOWING THE TALUK-WISE AND CROP-WISE PARTICULARS OF LANDS LEFT WASTE OR UNCULTIVATED IN FASLI 1375.

| Taluk. (1) | | Kuruvai. (2) | I Samba. (3) | Thaladi. (4) |
|---|---|---|---|---|
| Thanjavur | .. .. | 1,928 | 3,168 | 650 |
| Orathanad | .. .. | 74 | 328 | 174 |
| Kumbakonam | .. .. | .. | 140 | 160 |
| Papanasam | .. .. | .. | .. | .. |
| Mayuram | .. .. | 3,581 | 762 | 1,775 |
| Sirkali .. | .. .. | .. | .. | .. |
| Nagapattinam | .. | .. | .. | .. |
| Nannilam | .. .. | .. | .. | .. |
| Mannargudi | .. .. | .. | 2,437 | 2,079 |
| Thiruthuraipoondi | .. | .. | .. | .. |
| Pattukkottai | .. .. | 762 | 3,122 | 1,102 |
| Aranthangi | .. .. | 327 | .. | .. |
| Total | .. | 6,672 | 9,957 | 5,940 |

தாலூகாவாரியாகவும், பயிர்வாரியாகவும் 1375-ம் பசலியில் தரிசாக அல்லது சாகுபடி செய்யாமல் விடப்பட்ட நிலங்களைப்பற்றிய தகவல்களைக் காட்டும் விவர அறிக்கை.

| தாலூகா. (1) | | குறுவை. (2) | I சம்பா. (3) | தாளடி. (4) |
|---|---|---|---|---|
| தஞ்சாவூர் | .. .. | 1,928 | 3,168 | 650 |
| ஒரத்தநாடு | .. .. | 74 | 328 | 174 |
| கும்பகோணம் | .. .. | .. | 140 | 160 |
| பாபநாசம் | .. .. | .. | .. | .. |
| மாயூரம் | .. .. | 3,581 | 762 | 1,775 |
| சீர்காழி | .. .. | .. | .. | .. |
| நாகப்பட்டினம் | .. .. | .. | .. | .. |
| நன்னிலம் | .. .. | .. | .. | .. |
| மன்னார்குடி | .. .. | .. | 2,437 | 2,079 |
| திருத்துறைப்பூண்டி | .. | .. | .. | .. |
| பட்டுக்கோட்டை | .. .. | 762 | 3,122 | 1,102 |
| அறந்தாங்கி | .. .. | 327 | .. | .. |
| மொத்தம் | .. | 6,672 | 9,957 | 5,940 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 15th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*அரிஜனங்களுக்கு குடியிருப்பு நிலங்கள்*

*287 கேள்வி—திரு. சீ. சிவசுப்ரமண்யம்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா -முட்லூர் மதுரா, மேட்டுக் குப்பத்திலுள்ள ஹரிஜனங்கள் குடியிருக்கும் புறம்போக்கு நிலத்தைத் தங்களுக்குப் பட்டா செய்துதர வேண்டுமென்று கோரி அரசாங்கத்திற்கு மனு கொடுத்துள்ளார்களா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையென்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) No petition on the subject has been received by the Government. However, it is seen from a report from the District Revenue Officer, South Arcot, that action is being taken by him to assign to the Harijans the portions they are already occupying.

திரு. செ. மாதவன்: புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்து போர்டு எடுத்ததற்குப்பின்னாலே ஹரிஜனங்கள் குடியிருக்கின்ற இடங்களிலிருந்தே கிளப்பக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைக் கவனிப்பது ரெவின்யூ போர்டா அல்லது பஞ்சாயத்தா என்ற தகராறு இருக்கிறது. ஆகையால் பொதுவாக ஹரிஜனங்கள் புறம்போக்கு நிலங்களில் குடி இருந்தால், அவர்களை ஒருக்காலும் அகற்றக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: அப்படிப் பொதுவாக உத்தரவு போடுவது சிரமம். காரணம், நம்முடைய சட்டப்படி பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய நிலங்களை கொடுக்கமுடியாது. அந்த நிலங்களை ரெவின்யூ இலாகாவிற்கு மாற்றி நிலம் இல்லாத ஏழை ஹரிஜனங்களுக்குக் குடியிருப்பதற்குத் தேவைப்பட்டால் அதைப் பரிசீலனை செய்து கொடுக்கப்படும்.

[15th March 1966

## சிதம்பரம் புகைவண்டி நிலையம்

* 288 கேள்வி.—திரு. சீ. சிவசுப்ரமண்யம் : கனம் உணவு அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிதம்பரம் ரயில்வே நிலையத்தை விரிவு படுத்த வேண்டு மென்று கோரி இம்மாநில அரசு மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் செய்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

**திரு. சீ. சிவசுப்ரமண்யம் :** இனிமேல்தான் இதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** எனக்கு இருக்கிற தகவல்படி சமீபத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களிடத்திலே திட்டம் ஒன்றும் இல்லை. 1960-ம் வருஷம்தான் இந்த நிலையத்தை விஸ்தரிப் பதற்கு அல்லது அகலப்படுத்துவதற்காக ஏழு லட்சம் செலவு செய்தார்கள். ஆகவே, மீண்டும் உடனே செலவு செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

## திருச்சிராப்பள்ளியில் வைத்தியக் கல்லூரி

* 289 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : கனம் சுகாதார அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நான்காவது திட்ட காலத்தில் திருச்சிராப்பள்ளியில் வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென சர்க்காரை திருச்சி வடக்கு மாவட்ட வளர்ச்சி மன்றம் 1965-ம் வருடத்தில் கேட்டுக் கொண்டதா ?

(இ) ஆமெனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) ஆம்.

(இ) இந்த விஷயத்தில் முடிவு எடுக்கப்படவில்லை.

**திரு. வை. சங்கரன் :** இதில் எப்போது முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** திருச்சிராப்பள்ளியில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பது சம்பந்தமாக பக்கத்தில் தஞ்சாவூரில் மருத்துவக் கல்லூரி இருக்கிற காரணத்தினால் அதை எடுத்துக் கொள்ளலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. ஆகையால் இதை ஆராய்ந்து பார்த்து முடிவுக்கு வந்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.



15th March 1966]

## *Post-Graduate Medical Education Centre*

* 290 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Madras Government have proposed to establish a post-graduate medical education centre in the State; and

(b) if so, the details thereof and the benefits to accrue therefrom ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) Details have not yet been finalised. Training will be given to candidates in certain higher specialities like Neuro-surgery, Thoracic Surgery and specialised treatment and medical research work will also be carried out.

**திரு. வை. சங்கரன் :** இந்த இன்ஸ்டிட்யூஷன் ஆரம்பிக்க ஒரு சில ஆண்டுகளாகவே முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. என்ன காரணத்தால் தாமதமாகிக் கொண்டு வருகிறது என்று சொல்ல முடியுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூஷன் ஆரம்பிக்கவேண்டுமென்றால், ரூ. 5 கோடி செலவாகும். அவ்வளவு செலவு பண்ண மாகாண அரசாங்கத்திற்கு தற்போது உத்தேசம் இல்லை. மத்திய அரசாங்கம் ஓரளவு பங்கு கொள்ளவேண்டும். ஆகவே, அவர்களுடைய முடிவையும் அபிப்பி ராயத்தையும் நமது அரசாங்கம் எழுதிக் கேட்டிருக்கிறது. முடிவு வந்த பிறகு எப்பொழுது எடுத்துக்கொள்ளலாம் என்பது நிர்மானிக்கப்படும்.

**திரு. வை. சங்கரன் :** இதிலே ஸ்டாஃப் ப்ரொபசர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்க நான்-கிளினிகலாக அதாவது பிரைவேட் ப்ராக்டிஸ் இல்லாத அஸிஸ்டன்ட் சர்ஜன்களை வைத்துக் கொள்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்வி எப்படியிருக்கிறதென்றால் ஒருவன் மனைவியைப் பார்த்து, "பெண்ணே, பெண்ணே பசு வாங்கப் போகிறேன்" என்று சொன்ன உடனே அவள், "பிறந்த வீட்டிற்கு மோர் கொடுப்பேன்" என்று கூறியது போல் இருக்கிறது. இன்னும் திட்டமே உருவாகவில்லை. அதற்குள் உத்தியோகத்தைப் பற்றிய நினைப்பு வந்திருக்கிறது.

[15th March 1966

### இராணுவ சேவைக்கு டாக்டர்கள்

* 291 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராணுவ சேவைக்கு பணிபுரிய டாக்டர்கள், நர்சுகளை அனுப்புமாறு மாநில அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் கேட்டிருந்ததா ?

(இ) ஆமெனில், அதன் விவரமும், எடுத்த நடவடிக்கையும் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) 84 doctors and 115 nurses have been selected as on 31st January 1966 for the Armed Forces after the conflict with Pakistan arose.

### மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி

* 292 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : கனம் செய்தி, விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 7—1—1966-ல் திருச்சி மத்திய சிறையை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டாரா ?

(இ) அப்போது கைதிகள் குறை கேட்கப்பட்டதா ? ஆமெனில் அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம்.

(இ) இல்லை. கேள்விக்கு இடமில்லை.

### 'பஸ்' நிலையம், திண்டிவனம்

* 293 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் நகரிலுள்ள பஸ் ஸ்டாண்டை வேறு இடத்திற்கு மாற்றக்கூடாது என்று திண்டிவனம் நகராட்சி சமீபத்தில் ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரியான தீர்மானம் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

**திரு. ஆ. தங்கவேலு :** சமீபத்தில் திண்டிவனம் நகராட்சி பஸ் ஸ்டாண்டை மாற்றுவது கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நகர மன்றத்தால் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்கள் இங்கே அம்மாதிரி ஒன்றும் தீர்மானம் வரவில்லை என்று கூறுகிறார்களே ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஏகமனதாக தீர்மானம் செய்து மாற்றலாம் என்றால், சர்க்கார் அதை ஜாக்கிரதையாக பரிசீலனை செய்து அங்கீகரிக்கும்.



15th March 1966]

### பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள்

* 294 கேள்வி—திரு. சா. ராமசாமி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள விஸ்தரிப்பு அதிகாரிகளில் சிலரை எடுத்துவிட அரசாங்கத்துக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இவ்விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றது.

**திரு. மு. பொ. வடிவேல் :** சில ஆசிரியர்கள் கல்வி விஸ்தரிப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அவர்களுக்கு ஏதேனும் ப்ரமோஷன் உண்டா ? அவர்களுடைய எதிர்கால நிலை என்ன என்று அறியலாமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** விதிமுறைக்கு இணங்க அவர்களுக்கு ப்ரமோஷன் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன்.

**திரு. சா. ராமசாமி :** இந்தப் பிரச்னை பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எப்பொழுது பரிசீலனை முடிவடைந்து, முடிவு அமலாக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பரிசீலனை முடித்தவுடனேயே முடிவுகள் அறிவிக்கப்படும்.

### *Compulsory donation*

* 295 Q.—SRI M. KALYANASUNDARAM :<br>
SRI M. KARUNANITHI :<br>
SRI S. MADHAVAN :<br>
SRI T. P. ALAGAMUTHU :<br>
} Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have received any complaints regarding compulsory "donations" collected by Private Educational Institutions for new admission; and

(b) if so, the steps taken to prevent such collections?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) There are already instructions prohibiting collection of any sum other than special fees at the time of admission. When specific allegations of compulsory collection of amounts are received, action will be taken against those concerned by the Education Department.

**திரு. செ. மாதவன் :** கட்டாய வசூல் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது புதிய சட்டப்படி பள்ளி சம்பளம் இல்லாத சூழ்நிலை உருவாகி இருக்கிற காரணத்தினால், மறைமுகமாக நன்கொடை வசூல் செய்வதில்

[15th March 1966

ஒழுங்காக நடக்கவேண்டும், அவற்றில் தவறுகள் ஏற்படக் கூடாது, அவற்றை எப்படி ரெகுலேட் செய்வது என்பதுதான் இந்த மசோதாவின் கருத்து.

### பயிற்சிப் பள்ளிகள்

*297 கேள்வி—**திரு. எஸ். ஜே. ராமசாமி**: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிக்குச் சேர 1965-66-ம் ஆண்டில் எத்தனை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தன, தாலுகாவாரியாக ?

(இ) அவர்களில், தாலுகாவாரியாக சேர்த்துக் கொள்ளப் பட்டவர்களின் எண்ணிக்கை என்ன ?

(உ) மேற்படி பள்ளியில் மேலும் இடங்களை அதிகரிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: (அ) & (இ) இது குறித்து சபைமுன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(உ) வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பயிற்சிப் பள்ளிகள் அனைத்திலும் சாதாரணமாக ஒரு பிரிவில் 40 பேர்தான் சேர்த்துக்கொள்ளப்படுவர். ஆனால், 1965-66-ல் 45 பேரைச் சேர்த்துக் கொள்ளும்படி உயர்நிலைக் கல்வி நெறியாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

**புலவர் கா. கோவிந்தன்**: தலைவர் அவர்களே, தாலுகா வாரியாக கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கில், ஒரு தாலுகாவில் 44 மாணவர்களும், ஒரு தாலுகாவில் 18 மாணவர்களும் என்று வித்தியாசம் இருக்கிறது. பெண்கள் எண்ணிக்கையைப் பார்த்தால், ஒரு தாலுகாவில் 32 என்றும், இன்னொரு தாலுகாவில் 2 என்றும் வித்தியாசம் இருக்கிறது. வந்த மனுக்களில் இத்தனை என்று தேர்ந்தெடுக்கப்பட்டதா அல்லது தாலுகாவிற்கு இத்தனை என்று தேர்ந்தெடுக்கப்பட்டதா ? எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டது என்று அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: பொதுவாக எல்லாத் தாலுகாக்களிலும் பரவலாக இருக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். தாலுகாவிலிருந்து எவ்வளவு மனுக்கள் வந்தன, தாலுகாவின் தேவை என்ன என்பதையெல்லாம் பார்த்து செலெக்ஷன் செய்யப்படுகிறது. இந்த ஜாபிதாவில் காணப்படும் கணக்குப்படி, அவ்வளவு பேரும் எல்லாத் தாலுகாக்களிலும் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

---

a 339-ம் பக்கங்களில முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



15th March 1966]

**திரு. ஆ. தங்கவேலு**: தலைவர் அவர்களே, 1965-66-ல் சேர்க்கப்பட்ட ஆதாரப் பயிற்சி, ஜூனியர் பேசிக் மாணவர்களுக்கு ஸ்டைபண்ட் நிறுத்தப்பட்டிருக்கிறதா ? நிறுத்தப்பட்டிருந்தால், காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. மு. பொ. வடிவேல்**: கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட ஐந்து பேர்களுடைய தேர்வு நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறதே. அதன் பேரில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: அது பற்றித் தகவல் இல்லை.

*298 கேள்வி—**திரு. ஆ. கு. சுப்பையா**: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மகளிர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளுக்கு 1965-66-ம் ஆண்டில் விண்ணப்பம் செய்து கொண்ட மாணவிகள் எத்தனை பேர்.?

(இ) அவர்களில் எந்தெந்த பள்ளிகளுக்கு எத்தனை மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

(உ) இதற்கென்ன, தேர்வுக்குழு ஏதேனும் அமைக்கப் பட்டதா ?

**களம் திரு. எம். பக்தவத்சலம்**: (அ) 1,387 பேர் முது நிலை ஆதார கிரேடு பயிற்சிக்கும், 948 பேர் தொடக்க அல்லது இளநிலை ஆதார கிரேடு பயிற்சிக்கும் விண்ணப்பம் செய்தனர்.

(இ) செகண்டரி கிரேடு அல்லது முதுநிலை ஆதார கிரேடுக்கு தஞ்சாவூர், அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 80 பேரும், வேதாரண்யம், அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 40 பேரும், மன்னார்குடி செய்ண்ட் ஜோசப் பயிற்சிப் பள்ளியில் 40 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தொடக்க அல்லது இளநிலை ஆதார கிரேடுக்கு தஞ்சாவூர், அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 80 பேரும், தரங்கம்பாடி செய்ண்ட் தெரசா மகளிர் ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 40 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(உ) ஆம். அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளுக்கு, தேர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. தனியார் பயிற்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு கல்வி விதிகளைச் சேர்ந்த 132-வது விதியின்படி நிர்வாகத்தினரே மாணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**திரு. ஆ. கு. சுப்பையா**: சார், இந்தக் குழு யார் யார்களைக் கொண்டு அமைக்கப் பட்டிருக்கிறது ? எந்தத் தகுதி அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் ?

[15th March 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கக் கல்வித்துறை ஸ்தாபனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், தலைமை ஆசிரியர்கள், உத்தியோகப் பற்றற்றவர்கள், இவர்களையெல்லாம் சேர்த்துக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சார், இந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுக்கும் பணியில், அதிகாரிகள் மட்டும் இருந்தாலே போதுமானதே. கலெக்டர், அல்லது டெபுடி கலெக்டர் இவர்களிடம் இருந்தாலே போதுமானது. இதற்காகத் தனிப்பட்டவர்கள் போடப்படும்போது காங்கிரஸ்காரர்களை மட்டும் போடுவானேன், மற்றவர்களைப் போடாததற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்படி உத்தியோகப் பற்றற்றவர்கள் இல்லாமல் அதிகாரிகளேதான் இருந்தனர். ஆனால், உத்தியோகப் பற்றற்றவர்கள் இருக்கவேண்டும் என்கிற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வந்தது. அதன் காரணமாக, அப்படிப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சேர்க்கப்படவேண்டும், அந்தக் கட்சிக்காரரைச் சேர்க்கக் கூடாது என்று நிபந்தனை ஒன்றும் கிடையாது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அமைச்சருடைய வாதத்திற்கு மாறாக, எங்களில் 50 பேர்கள் இருக்கும்போது, அவர்களில் ஒருவர் கூட சேர்க்கப்படவில்லையே. அதன் காரணம் என்ன என்று விளக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யார் சேர்க்கப்படவில்லை என்பதற்குக் காரணம் கூற முடியாது.

*299 **கேள்வி—திரு. ஆ. துரையரசன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ம் ஆண்டில் மதுரை மாவட்டம் பெரியகுளம் தாலூகாவிலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு விண்ணப்பம் செய்துகொண்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) பெரியகுளம் தாலூகாவில் பயிற்சிப் பள்ளி எதுவும் இல்லை. எனினும், செகண்டரி அல்லது சீனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 1,664 விண்ணப்பங்களும், தொடக்க அல்லது ஜூனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 534 விண்ணப்பங்களும் இத்தாலூகாவிலிருந்து வரப்பெற்றன.

(இ) செகண்டரி அல்லது சீனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 124 நபர்களும், தொடக்க அல்லது ஜூனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 35 நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

*300 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Girls Teachers' Training School in Palani was temporarily closed due to spread of a severe



15th March 1966]

type of fever among the students resulting in the death of two of them; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) On account of the prevalence of a severe type of fever and on the advice of the Municipal and Health Officers, the school had to be closed from 1st September 1965 to 12th September 1965 instead of from 11th September 1965 to 20th September 1965 for mid-term holidays. One local student died of diarrhoea on 30th August 1965 in her residence and the other passed away on 4th September 1965 during the holidays.

**திரு. வை. சங்கரன் :** இந்த இறந்துபோன இரண்டு பேர்களுடைய கேஸ்களிலும் விரைவாக டயக்னோசிஸ் செய்து காலா காலத்தில் மருந்து கொடுக்கப் படவில்லை என்று கூறப்படுவது வாஸ்தவமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது சரியல்ல.

## முதியோர் கல்வி

* 301 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :**
**திரு. வை. சங்கரன் :** } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முதியோர் கல்விக்காக புதிய திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில் அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வை சங்கரன் :** கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில், அவர்களுக்கு ஒரு சீலிங், மாக்சிமம் வயது, 45 என்று, அதற்கு மேல் போகக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? அடல்ட் எஜுகேஷன் என்று வரும்போது, கீழே வரையறை வைப்பது சரியாக இருக்கலாம். ஆனால், மேல் வரையறை வைப்பது சரியல்ல. அதற்குக் காரணம் என்ன என்று கூறமுடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முதியோர்களுக்குக் கல்வி புகட்டுவது என்பதுதான். ஓரளவாகிலும் எல்லோருக்கும் கல்வி பயில வசதி கொடுக்க வேண்டும் என்பதுதான் நோக்கம், அது தான் முக்கியம். பலன் பரவலாகக் கிடைக்க வேண்டும் என்று தான் 45 வயது என்று வைக்கப்பட்டிருக்கிறது.

---

[a] 340-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : சார் முதியோர் கல்விக்கூடங்களை நடத்த முன்வரும் தனியார் ஸ்தாபனங்களுக்கு, சங்கங்களுக்கு சர்க்கார் உதவி அளிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மேசை மீது வைக்கப்பட்டிருக்கும் திட்டப்படி, அதன் கீழ் ஆதரவு அளிக்க முடியும் என்றால் அது கவனிக்கப்படும்.

திரு. செ. மாதவன் : சார், இப்பொழுது 175 பள்ளிகளுக்கு முன்னோடித் திட்டமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் எத்தனை திறக்கப்பட்டுள்ளன, அவற்றிற்கான செலவு என்ன என்று அறிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, முதியோர் கல்வி அளிக்கும் முறை ஒரு தனிப்பட்ட முறையா, அல்லது மற்ற பள்ளிகளில் பின்பற்றப்படுகின்ற முறையையே கையாளுகிறார்களா? தனிப்பட்ட முறை என்றால், அந்த முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைத் தயாரிக்க வழிவகை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆங்காங்கே உள்ள வசதிகளைக் கவனத்தில் கொண்டு, இது செய்யப்படுகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், முதியோர் பாடத் திட்டங்களை, முதியோர்களே தயாரிக்கிறார்களா ? அது எந்தவிதமான திட்டம் என்று அறிவிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏதோ குறிப்பிட்ட பாடத் திட்டம் என்று கூற மாட்டேன். ஓரளவு இவற்றை நிபுணர்கள் தான் தயாரித்திருக்கிறார்கள்.

திரு. வை. சங்கரன் : முதியோர் கல்வி எவ்வளவு தூரம் நன்மை கொடுக்கிறது, முதியோர் எவ்வளவு தரம் அடைந்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள, அதற்கு அவர்கள் ஓரிரண்டு ஆண்டுகள் படித்தபின் பரிட்சை, பரிசோதனை ஏதாவது வைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலிலே அவர்கள் படிக்க வசதி செய்து, அவர்கள் அறிவு பெற வழிவகை செய்யவேண்டும். அவர்கள் புத்தகங்களைப் படிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். பரிட்சை முக்கியம் இல்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.



**[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

II.—CALLING ATTENTION TO SHORTAGE OF ESSENTIAL DRUGS ETC.

திரு. து. ப. அழகமுத்து : கனம் சபாநாயகர் அவர்களே, "பிணியாளர்களுக்கான மயக்க மருந்துகள், 'எக்ஸ்ரே', எடுப்பதற்கான படச்சுருள் முதலியன போன்ற இன்றியமையா மருத்துவப் பொருள்கள், இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக எல்லா இடங்களிலும், குறிப்பாக அரசாங்க மருத்துவ மனைகளில், கிடைக்கப் பெறாமையால், ஏற்பட்டுள்ள இடரான நிலைமை பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்."

* THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker, Sir, I wish to make the following statement :—

After the declaration of Emergency, a severe restriction was placed on the import of raw materials from abroad in order to conserve foreign exchange to meet the demands of Emergency. 9-0 a.m.
Even the announcement of import policy, which is usually done on 1st of April every year, was made only on 15th October 1965 for the period April 1965 to March 1966. The new import policy was based on Mathur Committee's Report as per which ceilings were fixed for different industries and for States.

Due to the Emergency there was stock-piling of drugs by the Defence and the Government institutions. Anticipating shortages, the dealers might have also over-stocked the drugs. This has given rise to shortage of essential drugs like Antibiotics, Sulpha drugs, etc. To meet this extra demand, the Central Government allowed the import of Sulpha drugs, Vitamins, Dextrose and some other drugs which were in short supply, from rupee sources.

The Government of India are also making arrangements to import the raw materials through State Trading Corporation, New Delhi, for distribution to actual users whose past turnover was less than five lakhs of rupees. In view of the tight foreign exchange position, the import of drugs was restricted only to essential drugs numbering 49. The raw materials mentioned in the above import licences are expected to arrive shortly and relieve the slight shortage of essential drugs. Antibiotics like Penicillin, Streptomycin, etc., which are indigenously manufactured are available, although there was occasional shortage of certain proprietary brands.

Ephedrine Hydrochloride, Glycerophosphates and Calcium Gluconate were not allowed for import since they are manufactured indigenously. Of these, Ephedrine Hydrochloride is now included in the essential list of 49 items allowed for import in view of the fact that the item is still in short supply. Regarding Bismuth salts, the Drugs Controller, India, has stated that the

[Srimathi Jothi Vencatachellum] [15th March 1966

international price of Bismuth metal has gone up and that other antacids may be used in place of Bismuth salts which are mainly used as antacids. Accordingly import of Bismuth salts is not allowed. The hospitals have been advised to use other antacids found in National Formulary of India.

In regard to the scarcity of Vitamin C and Vitamin B-6, the import of these items was not allowed during 1964-65 import period, as the products were manufactured in India. In 1965, it was said that due to breakdown of plant and other difficulties in production, the indigenous manufacturers were not able to meet the demands of the country. To overcome this, import of these items has since been allowed from both rupee as well as general resources.

It will thus be seen that the shortage of some of the essential drugs is due to the restrictions on imports owing to difficult foreign exchange position prevailing in the country. The Drugs Controller of India was being kept informed of the various shortages and trends in prices by the Director of Medical Services of this State. The Drugs Controller, India, has also been taking necessary steps to relieve the shortage by arranging to import the drugs through rupee payment sources, etc. It is learnt that the Drugs Controller, India, is arranging through the State Trading Corporation of India Ltd., for import and distribution of essential drugs to the actual users. It is hoped that the position will improve soon, as the drugs allowed for import from rupee sources are likely to arrive shortly.

Due to present National Emergency, instructions have been issued by the Director of Medical Services to the Heads of Government medical institutions to enforce strict economy in the use of X-ray films, consistent with treatment of patients. Soon after the declaration of Emergency, the Director of Medical Services met the dealers and importers of X-ray films in her office on 14th September 1965. They expressed the difficulty that due to drastic cut in the import of the quantity of the films in the country, they could not get even fifty per cent of their indents which they had asked for and that they were unable to meet the entire demands of the Government medical institutions as well as the private institutions. Certain firms supplying films had also represented to the Director of Medical Services that it had been directed in the Import Trade Control Notice of the Ministry of Commerce, dated 14th August 1965, that the distribution of X-ray films imported by the licensees would be made on the directions of the Director-General of Health Services, New Delhi, and that the matter might be taken up with him for getting necessary orders to enable them to continue the supplies of ting necessary orders to enable hem o continue the supplies of importing. At the instance of the Director of Medical Services, the matter was taken up with the Government of India. The Drugs Controller, India, has assured that this State can get supplies of X-ray films to the extent of seventy per cent of the



15th March 1966] [Srimathi Jothi Vencatachellum]

past consumption of X-ray films. If there is any immediate requirement for the X-ray films or in cases where radiological examination and investigations are to be made for diagnostic purposes, the Heads of medical institutions have been instructed to use the films and in other cases they have been instructed to use the films with discretion and conserve them to meet the needs in times of emergency. The matter was also discussed with the Drugs Controller, India, by the Director of Medical Services, when the former was here and the requirements of X-ray films for this State were fully explained to him by the Director. The Drugs Controller has promised to look into the matter and augment the supply of films from the reserve stock to the extent possible.

## III.—PRIVILEGE MATTER.

### CHIEF MINISTER'S STATEMENT *RE* DETENU SRI UMANATH, M. P.

MR. SPEAKER : Hon. Member Sri K. A. Mathialagan has given notice of a matter of privilege. But, I wish to point out that according to Rule 186 of the Assembly rules a matter of privilege must be raised after the questions and before the list of business for the day is entered upon. But as soon as the questions were over, I called the item relating to the notice under Rule 41. Now, if the House is to take up the matter of privilege, the rule has to be suspended; otherwise, on some future occasion any Member may raise a point of order quoting this as a precedent. It is only a procedural matter and I hope the Hon. Leader of the House and also the House will agree to the suspension of the rule.

The hon. Member Sri Mathialagan was not in the House after question time. If I had called him to raise the privilege matter then and if he had not been in the House, what I should have done with the privilege matter is a different issue.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I agree with the Hon. Speaker.

MR. SPEAKER : All right. I hope the House agrees to take up the matter of privilege. The privilege matter involves subtle questions on legal aspects. Hence it is very essential that it is discussed without heat, pinpointing only the legal aspects. The hon. Member Sri K. A. Mathialagan will now speak.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I request your permission to raise a matter of privilege against the Hon. Chief Minister of Madras.

On 9th March 1966 when Mr. Saw. Ganesan, Leader of the Swatantra Party, called the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, viz., the charge of contempt on Madras Government in the Lok Sabha in connection with the refusal of permission to Mr. Umanath, M.P., now on

[Sri K. A. Mathialagan] [15th March 1966

parole, to attend the Lok Sabha. At that time the Hon. Chief Miniser denied that any fresh order had been issued by the Madras Government preventing Mr. Umanath from going to Delhi to attend the Parliament. The Hon. Chief Minister also denied on the floor of this House that no Sub-Inspector served any order on Mr. Umanath restraining him from attending the Lok Sabha. But the fact is that an order was served on Mr. Umanath on 2nd March 1966 by the Sub-Inspector of Police, Uraiyur, conveying a Madras Government memorandum instructing him not to go to Delhi to attend the Lok Sabha. The number of the memorandum order is 93857 of 2nd March 1966 and true copies of the order have been sent to Messrs. H. V. Kamath, Hiren Mukerjee and other Members of Parliament. Mr. Umanath has also sent a telegram to me which reads as follows :—

" Mathiazagan, M.L.A., 126, Mount Road, Madras-6.

Sub-Inspector served written Government order on 2nd March night after 7-30 prohibiting me from going to Delhi. Memorandum 1 containing order number 93857 and wireless message number 02743. "

The telegram has been sent to me yesterday (Monday). I am expecting to get a photostat copy of the second order of the Madras Government given in the Lok Sabha and I will give it before the House rises to-day. Some Members moved a privilege motion regarding this affair and the Hon. Speaker of the Lok Sabha has in his historic ruling made certain points which may also be useful for our purposes. Regarding the second order of the Madras Government, the Hon. Speaker of Lok Sabha has said that if it was an elucidation order, it was unnecessary. If it was a second order, the Hon. Speaker of the Lok Sabha had said that it was improper. He has said that issuing of a second order when the Parliament was seized of the matter was improper. Regarding the impropriety of Madras Government, Parliament has expressed its displeasure and the Hon. Minister for Parliamentary Affairs has apologised for this act. What I want to point out is this. The main issue before this House is not whether a Member of Parliament can be prevented or not from attending the Lok Sabha. The main issues here are—

(1) The Hon. Chief Minister of Madras has expressed facts which are not true and which are incorrect.

(2) He has withheld facts which this House has a right to know. By saying that there was no second order, he has placed before this House incorrect and untrue facts.

(3) He has deliberately misled this House and this is not only a gross breach of privilege but it also amounts to contempt of this House.

So, this matter should be referred to the Committee of Privileges. Our Hon. Chief Minister may take shelter by saying that this is only an elucidation order. Under the Defence of India Act, there are certain conditions for release on parole. Under Section 30(b) of the Defence of India Rules, certain provisions are enumerated. Five sub-sections are there. The State Government or Central Government cannot issue a second order. Certain conditions are prescribed by Government and the detenu agrees to those conditions and then he is released on parole. If the detenu disobeys any of the conditions prescribed, the Government can cancel the parole and put the man in prison. Nowhere do I find any provision by which this Government or the Government of India can issue a second order. My contention is that it is not only a second order but an illegal order. It is an illegal order which this Government or the Government of India have no right to issue. From that point of view it amounts to a gross breach of privilege.



15th March 1966] [Sri K. A. Mathialagan]

Apart from the above facts, the Hon. Chief Minister has had telephonic talk with the Hon. Home Minister, Government of India, Sri Nanda. We do not know what had happened between Madras Government and Central Government. The Hon. Chief Minister has misled this House and misleading the House amounts to a serious breach of privilege. Misleading of the House is construed as a serious breach of privilege in the House of Commons. I may refer to the privilege issue raised in connection with the affair of Mr. Profumo with Miss Keeler. There, the House of Commons was not at all concerned about the illicit affair of Mr. Profumo with Miss Keeler. Mr. Profumo was a very famous Minister. The issue at that time was that Mr. Profumo had misled the House of Commons. The price he had to pay for that was to resign from the Government. This august Assembly may not demand such a zealous thing from our Hon. Chief Minister. But if demanded, it may be a reasonable demand. The Hon. Chief Minister has misled this House. Misleading the House, as I have stated earlier, is construed as a gross breach of privilege. We want to perform our duties as legislators. We have certain privileges. These are ancillary privileges.

I shall refer to ' May's Parliamentary Practice ' and point out one or two things to substantiate and justify my stand. Under Chapter III, ' General View of the Privilege of Parliament ' (Pages 42-43 of May's Parliamentary Practice) it is stated as follows :—

" The distinctive mark of a privilege is its ancillary character. The privileges of Parliament are rights which are ' absolutely necessary for the due execution of its powers '. They are enjoyed by individual members, because the House cannot perform its functions without unimpeded use of the services of its Members: and by each House for the protection of its Members and the vindication of its own authority and dignity."

[Sri K. A. Mathialagan] [15th March 1966

Regarding breach of privilege and contempt, it is stated as follows in 'May's Parliamentary Practice':—

"When any of these rights and immunities, both of the Members, individually, and of the assembly in its collective capacity, which are known by the general name of privileges, are disregarded or attacked by any individual or authority, the offence is called a breach of privilege, and is punishable under the law of Parliament. Each House also claims the right to punish actions, which, while not breaches of any specific privilege, are offences against its authority or dignity, such as disobedience to its legitimate commands or libels upon itself, its officers or its Members. Such actions, though often called "breaches of privilege" are more properly distinguished as "contempts".

Again on Page 109 of May's Parliamentary Practice, it is stated as follows :—

"It may be stated generally that any act or omission which obstructs or impedes either House of Parliament in the performance of its functions, or which obstructs or impedes any member or officer of such House in the discharge of his duty, or which has a tendency, directly or indirectly, to produce such results may be treated as a contempt even though there is no precedent of the offence."

Again on page 114 of May's Parliamentary Practice, it is observed as follows :—

"It has already been seen that the giving of false evidence, prevarication or suppression of the truth by witnesses while under examination before either House or before committees of either House is punished as a contempt; and that persons who present false, forged or fabricated documents to either House or to committees of either House are guilty of a breach of privilege."

All the above things found in May's Parliamentary Practice should be applied to the present matter before the House. It would be then clear that the Hon. Chief Minister has committed a gross breach of privilege of the House. The issue before the House is not whether this Government can prevent a member of Parliament from attending Parliament or not. The Hon. Chief Minister has said that he never issued a second order and that no Sub-Inspector of Police issued a second order. But the facts are different. The Hon. Chief Minister deliberately placed facts which were not true, before the House. He deliberately withheld and suppressed facts. So he has misled the House and has committed contempt of **the House**.

With great respect to you, Sir, I may say that the Hon. Speaker of the Lok Sabha has very ably appreciated the dignity, rights and privileges of Members of Parliament. The Hon. Speaker of the Lok Sabha has given a historic ruling. The Hon.



15th March 1966] [Sri K. A. Mathialagan]

Chief Minister has misled this House. He has misled not only this House but has also misled the Parliament. By doing so he has done disservice to the laudable ideals which he so eloquently pleaded, day before yesterday, while delivering the Convocation Address of the Bihar University.

Sir, there is a *prima facie* case of breach of privilege and Mr. Speaker, you may kindly take the opinion of the Leaders of Parties on this matter.

MR. SPEAKER: That I will do, if necessary. Now, what is the point ?

SRI K. A. MATHIALAGAN: Sir, this may be referred to the Committee of Privileges. With these words, I resume my seat.

MR. SPEAKER: Now I want an answer to one question from the hon. Member. Does the hon. Member say that at the time the Hon. Chief Minister made the statement in this House on 9th March 1966, he was aware of the order served by the Sub-Inspector ?

SRI K. A. MATHIALAGAN: My point is . . .

MR. SPEAKER: My question is, whether he was aware of **it.**

SRI K. A. MATHIALAGAN : He was aware of it.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்னையைக் குறித்து, அவர் கூறிய சில கருத்துக்களைக் குறித்து நான் குறிப்பிடுவதற்கு முன்பு ஒன்று கூற விரும்புகிறேன். இந்த விஷயம் இந்த மன்றத்திலே மட்டுமல்லாமல் பாராளுமன்றத்திலேயும் கிளப்பப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்திலே இரண்டு நாட்கள் அல்லது அதற்கு மேலேயே இந்த விஷயம் சம்பந்தமாக நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த நிகழ்ச்சிகள், கனம் உறுப்பினருக்குத் தெரிந்ததுபோல், பத்திரிகையின் மூலம்தான் எனக்கும் தெரியும். மத்திய உள்துறை அமைச்சர் அவர்களுடைய டெலிபோன் வந்தது என்பதை நானே குறிப்பிட்டேன். அதையும் கனம் உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கு விளக்கம் கூறக்கூடிய முறையிலே நான் அப்பொழுதே தெரிவித்தேன். நான் ஒன்று கூற விரும்புகிறேன். இந்த மன்றத்திலே நாம் விவாதிக்கின்றபொழுது, வேறு ஒரு மன்றத்தினுடைய, அதுவும் பாராளுமன்றத்தினுடைய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவது முறையல்ல என்று நான் கருதுகிறேன். நான் அவ்வாறு பாராளுமன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றிக் குறிப்பிடமாட்டேன். அவ்வாறு குறிப்பிட முன்வந்தால் நிகழ்ச்சிகளைப்பற்றி கிரிட்டிசைஸ் பண்ணவேண்டிய நிலைமை ஏற்படும். பாராளுமன்ற நிகழ்ச்சிகளைக் குறைகூறுவது

இந்த மன்றம் நடக்க வேண்டிய முறைக்கு உகந்ததல்ல என்றுதான் நான் கருதுகிறேன். பாராளுமன்ற நிகழ்ச்சிகளைப்பற்றிக் குறிப்பிடப் போவதில்லை. மற்ற யாரும் அப்படிக் குறிப்பிடுவது சரியல்ல என்பதையும் நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI K. A. MATHIALAGAN: Sir, can it be said that Members of the Parliament are irresponsible?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த அரசாங்கத்தைக் குறை கூறினால் அதற்கு இந்த அரசாங்கம் பதிலளித்தாக வேண்டும்; இந்த அரசாங்கம் டிஃபென்டு செய்யவேண்டியிருக்கிறது.

SRI K. A. MATHIALAGAN rose.

MR. SPEAKER: The hon. Member, Sri Mathilagan, should not interrupt the speech of the Hon. Chief Minister.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மற்றொன்று கூற விரும்புகிறேன். நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றியும் குறிப்பிடப்பட்டது. அதைப்பற்றி நேற்று மாலைப் பத்திரிகையிலோ அல்லது இன்று காலைப் பத்திரிகையிலோ படித்திருக்கலாம். நான் இன்று காலையிலேதான் ஹிந்து பத்திரிகையிலே படித்தேன். கனம் உறுப்பினர்களும் படித்திருப்பார்கள், தாங்களும் படித்திருப்பீர்கள். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அந்த நிகழ்ச்சியின்போது, "சென்னை அரசாங்கத்தைக் கேட்காமல், அந்த முதலமைச்சருக்கு ஒரு ஹியரிங் கொடுக்காமல், அதற்கு வாய்ப்பளிக்காமல் அவரைக் குறை கூறுவது, ரூலிங் கொடுப்பது முறையா?" என்று கேட்க, அதற்குப் பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள், "மை ரூலிங் கன்சர்ன்ஸ் ஒன்லி தி சென்ட்ரல் கவர்ன்மெண்ட்" என்று கூறியிருக்கிறார்கள், அது பத்திரிகையில் வந்திருக்கிறது. 'My ruling concerns only the Central Government' என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் கனம் உறுப்பினர் கவனிக்க வேண்டும். தாங்களும் கவனித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். 9-ஆம் தேதியன்று சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் விளக்கம் கோரியபோது, நான் விடையளித்தேன். அதைப்பற்றி திரு. மதியழகன் அவர்கள் உரிமைப் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்கள். திரு. சா. கணேசன் அவர்கள் பாராளுமன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுக் கேட்டார்கள். இந்தப் பிரச்னை பாராளுமன்றத்திலே வந்து பாராளுமன்றத்தின் விவாதத்தில், பரிசீலனையில் இருக்கிறபொழுது புதிதாக ஒரு உத்தரவை அரசாங்கம் போட்டது தவறு என்று கனம் அங்கத்தினர்கள் அங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்களே, அதைப்பற்றி என்ன விளக்கம் என்று கோரினார்கள். அப்பொழுது நான் எல்லாவற்றையும் சொன்னேன். எந்தச் சூழ்நிலையிலே பரோலில் விடுதலை அளிக்கப்பட்டது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் டெட்டின்யூவுக்கு என்றெல்லாம் விளக்கிச் சொன்னேன். அவர் திருச்சியிலே தன்னுடைய மனைவியைக் காணவேண்டுமென்பதற்





காக ஒரு மாதம் பரோல் அளிக்கப்பட்டது அவர் பரோலில் வெளியே வருவதற்கு முன்பு, சிறையிலே ஒரு 'அண்டர்டேக்கிங்' அங்கேயுள்ள டெபுடி ஜெயிலருக்கு எழுதிக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார்கள். அன்றாடம் திருச்சியிலிருந்து உறையூர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று அவர் தாக்கல் செய்யவேண்டுமென்றும், தவறினால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்றிருப்பதையெல்லாம் அவர் பார்த்து 'அண்டர்டேக்கிங்' எழுதிக் கொடுத்திருக்கிறார் என்று குறிப்பிட்டேன். என் பேரில் புகார் சொல்லப்பட்டது. பாராளுமன்றத்திலே இந்த நிகழ்ச்சிகள் பிரஸ்தாபிக்கப்பட்ட பிறகு புதிய உத்தரவு, முன்பே இருந்த உத்தரவை மாற்றிப் புதிய உத்தரவு போடப்பட்டதா என்றுதான் அன்று சுதந்திராக் கட்சித் தலைவர் கேட்டார்கள். இன்று உரிமைப் பிரச்னையாக திரு. மதியழகன் கிளப்பியிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்தை மதிக்கவில்லை என்று அவர்கள் கூறினார்கள். ஒன்று, நான் கூறியது இந்த அரசாங்கம் அவ்வாறு ஒன்றும் போடவில்லை என்பது. இரண்டாவது, போலீஸ் சப்- இன்ஸ்பெக்டரால் வேறு உத்தரவு உமாநாத் அவர்களுக்குப் பிரயோகிக்கப்படவில்லை என்று சொன்னேன். "No seroving of any order" என்று சொன்னேன். மற்றொன்று கூற விரும்புகிறேன். தாங்கள் கூறியதுபோல், சப்-இன்ஸ்பெக்டர் போனாரா, என்ன கடிதம் கொடுக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. இந்த அரசாங்கத்தின் பப்ளிக் டிபார்ட்மென்டிலிருந்து செய்தி அனுப்பப்பட்டது, அது சம்பந்தமாக சப்-இன்ஸ்பெக்டர் சென்றதும் எனக்குத் தெரியாது. மார்ச் 2-ஆம் தேதிதான் இது நடைபெற்றது. மார்ச் 2-ஆம் தேதிதான் இந்த விவாதம் பாராளுமன்றத்திலே கிளப்பப்பட்டது. ஆனால், அந்த விவாதம் கிளப்பப்பட்டபொழுது அதையொட்டி இங்கிருந்து இம்மாதிரிப் போட்டிருப்பார்கள் என்று வாதத்திற்குக் கூறலாம். அன்று பாராளுமன்றத்திலே இது சம்பந்தமாக விவாதம் கிளப்பப்பட்டபொழுது இலாகாவினருக்குப் பாராளுமன்றத்திலே நடைபெற்றது ஒன்றும் தெரியாது, தெரிந்திருக்கமுடியாது, எனக்கும் தெரியாது. அங்கே 2-ஆம் தேதி நடைபெற்றதை மார்ச்சு 3-ஆம் தேதி காலைப் பத்திரிகையிலே பார்த்து நான் தெரிந்துகொண்டேன். தெரிந்திருந்தால் என்ன என்பதை நான் சொல்லமுடியாது. யதார்த்த நிலையைத்தான் சொல்கிறேன்.

9-30 a.m.

மார்ச் மாதம் முதல் தேதி அரசாங்க இலாகாவினருக்கு ஒரு தகவல் வந்தது. இம்மாதிரி நிபந்தனையோடு அவர்கள் போலீசுக்குத் தகவல் கொடுக்கவேண்டும். நிபந்தனையோடுதான் அவர்கள் வெளிவந்திருக்கிறார்கள். பார்லிமெண்ட் நடவடிக்கையைப் பற்றி எனக்குத் தெரியாது. அவர்கள் டில்லிக்குப் போவதாக யோசிக்கிறார்கள் என்று தகவல் வந்தது. அவர் போனால் போகட்டும் என்று விட்டு விட்டால் அவர் நிபந்தனையை மீறியவராகிவிடுவார். அவ்வாறு நிபந்தனை மீறப்பட்டால் பரோலைக் கான்சல் செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். உத்தரவு என்பது ஒன்று, விளக்கம் கூறுவது மற்றொன்று. விளக்கம் கூறும்

[திரு. எம். பக்தவத்சலம்] [15th March 1966

வகையிலே அவர் தெரிந்து கொள்ளட்டும்; அதற்கு மேலே அவர் டில்லி போக வேண்டுமென்று விரும்பினால், முதலிலே 'அண்டர் டேக்கிங்' கொடுத்திருப்பதால் அதை மாற்றிக் கொள்ளவேண்டுமென்று அவர் கேட்கவேண்டும். கேட்ட பிறகு வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாம். நான் அன்றே கூறினேன். சில டிடென்யூக்கள் ஊரை விட்டு வெளியே போவதற்குக்கூட அனுமதி கொடுத்திருக்கிறோம். நிபந்தனையை மாற்றிக் கொள்ளாமல் வெளியே போனால் அது தவறு; நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அவ்வாறு நடவடிக்கை எடுத்துக் கொள்வதைத் தவிர்க்கும் வகையில் மாற்றியமைக்கக் கோரட்டும்; அரசாங்கம் கொடுத்து விடும் என்பதல்ல, பரிசீலனை செய்து கொடுக்கலாம். அவ்வாறு கோராமல் போனால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அந்த நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காகவே விளக்கம் கொடுக்கப்பட்டது. உத்தரவு ஒன்றும் அனுப்பவில்லை; அதை உத்தரவு என்று இப்போதும் ஒப்புக்கொள்ளமாட்டேன். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் சொன்னதைச் சொல்கிறேன்—பார்லிமெண்டில் நடந்ததைச் சொல்லவில்லை. பார்லிமெண்ட் சபாநாயகர் கூட 'அது கிளாரிபிகேஷனாக இருக்கலாம், ஆனால் அதற்கு அவசியம் இல்லை' என்றுதான் கூறியிருக்கிறார்கள். அதற்கு அவசியம் உண்டா இல்லையா என்பதிலே மாறுபட்ட கருத்து இருக்கலாம். அவசியம் உண்டு என்று இந்த அரசாங்கம் கருதுகிறது; பார்லிமெண்ட் சபாநாயகர் அவசியம் இல்லையென்று கருதுகிறார்கள். 'அது கிளாரிபிகேஷனாக இருக்கலாம்' என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதைக் கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களே குறிப்பிட்டார்கள். அங்கு நடந்ததை நான் சொல்லவில்லை. 'கிளாரிபிகேஷன்' உத்தரவு அல்ல; உத்தரவும் ஆகாது. அது வெறும் விளக்கந்தான். 'நீ இப்படிச் செய்யவேண்டும்; ஒரு நாளைக்கு இரண்டு முறை ரிப்போர்ட் செய்யவேண்டும்' என்று போட்டால்தான் உத்தரவு. உத்தரவு என்றால் "It has to be implemented" அன்றைக்குச் சொன்னதைத்தான் இன்றும் நான் சொல்கிறேன். அன்றைக்கு 'மிஸ்லீடிங்' ஆகச் சொல்லிவிட்டேன், இன்றைக்கு மாற்றிக் கொள்கிறேன் என்ற நிலைமை இல்லை. அன்றைக்குச் சொன்னது 'சப்-இன்ஸ்பெக்டர் உத்தரவு போடவில்லை; விளக்கம் கூறியிருக்கிறார்கள்' என்பதுதான். தாங்கள் குறிப்பிட்டது போல் சப்-இன்ஸ்பெக்டர் போனது வந்தது பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. உமாநாத் அவர்களுக்கு உறையூர் போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர் கொடுத்த எழுத்திலே என்ன இருக்கிறது என்றால்,

"This is to inform you as per message received from the Deputy Secretary, Public (General) Depatment"
என்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதிலே "inform you" என்பதைத் தாங்கள் கவனிக்க வேண்டும். இரண்டாவது—

'Inform immediately Mr. Umanath, he should not go to Delhi under present conditions of parole'



15th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

என்பது. இதிலே "present conditions of parole" என்பதையும் தாங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கண்டிஷனில் கையெழுத்துப் போட்டு விட்டு, அந்தக் கண்டிஷன் இருக்கும்போதே அவர்கள் டில்லிக்குப் போவதற்கில்லை. கனம் உறுப்பினர் உமாநாத் அவர்களுக்குக் கொடுத்த விளக்கம், பார்லிமெண்டுக்குப் போகக் கூடாது என்பதல்ல; அவர் டில்லிக்குப் போவதாகத் தகவல் வந்தது, இந்தக் கண்டிஷன்கள் இருக்கும் போது அவர் போனால் கஷ்டங்கள் வரலாம், நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கும்; அவர் வேண்டுமென்றால் 'மாடிபிகேஷனுக்கு' எழுதிக் கொடுக்கட்டும் என்ற முறையில் அனுப்பிய அறிவிப்பே தவிர, உத்தரவல்ல. உத்தரவு என்றால் அரசாங்கந்தான் பாதுகாப்பு விதிகளின்படி உத்தரவிட வேண்டும். அதிலே அரசாங்கப் பிரதம காரியதரிசி அல்லது டெபுடி செக்ரடரிதான் கையெழுத்து போடலாம். பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விஷயங்களில் அசிஸ்டெண்ட் செகரடரிகூடக் கையெழுத்துப் போட முடியாது. ஆனால் சப்-இன்ஸ்பெக்டர் அனுப்பியதிலே என்ன இருக்கிறது?

"He should not go to Delhi under present conditions of parole"
என்றுதான் இருக்கிறது.

அதிலே, "Signed, Sub-Inspector, Woraiyur Police Station' என்றுதான் இருக்கிறது. ஒரு உத்தரவை சப்-இன்ஸ்பெக்டர் போட முடியுமா? சூப்பரின்டெண்ட் ஆஃப் போலீஸ் இல்லையா? கலெக்டர் இல்லையா? சில இடங்களில் கலெக்டருக்கு பவர்ஸ் டெலிகேட் செய்திருந்தால் கலெக்டர் கையெழுத்துப் போடலாம். இந்த நிலையில் சப்-இன்ஸ்பெக்டர் எப்படி உத்தரவு போட முடியும்? அதிலே சப்-இன்ஸ்பெக்டர் கையெழுத்துப் போட்டதிலிருந்தே அது உத்தரவல்ல என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். ஒரு விளக்கம் கொடுத்தார்கள், எச்சரிக்கையாக. பின்னால் சங்கடம் வரக்கூடாது என்ற காரணத்தால் 'மாடிபிகேஷன் வேண்டுமென்றால் கோரட்டும்' என்ற வகையிலேதான் இது நடைபெற்றிருக்கிறது. ஆகையால், நான் அன்று கூறியதில் தவறு இல்லை. உண்மைக்கு மாறாக ஒன்றும் கூறவில்லை. நான் மீண்டும் சொல்கிறேன்—முதலிலே அரசாங்கம் பரோலில் ரிலீஸ் உத்தரவு போட்டது; அதற்கு மேல் எந்த உத்தரவையும் அரசாங்கம் போடவில்லை என்று தெரிவித்துக் கொண்டு இதிலே 'பிரைமா ஃபேசி' கேஸ் இல்லை; உரிமைப் பிரச்சினை எழவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி: கனம் தலைவர் அவர்களே, நண்பர் திரு. மதியழகன் இந்த மன்றத்தின் முன் தங்களுடைய தீர்ப்புக்காக வைத்திருக்கின்ற மிக முக்கியமான இந்த உரிமைப் பிரச்சினையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 9-ஆம் தேதியன்று திரு. சா. கணேசன் அவர்கள் இங்கு எழுப்பிய வினாவுக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்த நேரத்தில் "திருச்சியை விட்டு உமாநாத் அவர்கள் வெளியே போகக்கூடாது

என்பதுதான் நிபந்தனை; அந்த நிபந்தனையில் உமாநாத் அவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அதன்படி பரோலில் விடப்பட்டது. அதன் பிறகு அவர்கள் பாராளுமன்றத்தில் கலந்து கொள்ள முடியுமா முடியாதா என்பது வேறு கேள்வி. அதற்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை. நம்மைப் பொறுத்தவரையில் இவ்வளவுதான் நடந்தது, வேறு ஒன்றுமில்லை. நேற்று இதைப் பற்றிப் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டபோது, "ஏதோ சப்-இன்ஸ்பெக்டர் போய் டெல்லிக்குப் போகக்கூடாது என்று உத்தரவு கொடுத்தார்கள் என்று சொல்வதெல்லாம் வெறும் அபாண்டம். அப்படி எந்த விதமான உத்தரவையும் இந்த அரசாங்கம் போடவில்லை. பாராளுமன்றத்தில் கேள்வி கேட்பது என்றால் இந்த அரசாங்கம் என்ன செய்தது என்பதைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்து கொண்ட பின்னால் கேட்டிருக்கவேண்டும். அதல்லாமல் அரசாங்கத்தைக் குறை கூறுவது என்பது தகாத காரியம். நான் முன்னால் சொன்னதைத் தவிர வேறு இரண்டாவது எந்தவிதமான உத்தரவும் போடப்படவில்லை" என்று முதலமைச்சர் அவர்கள் இங்கு பதில் அளித்தார்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள், சப்-இன்ஸ்பெக்டர் அப்படி ஒரு உத்தரவு அல்லது அறிவிப்பு வழங்கியது அப்போது தனக்குத் தெரியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே வேடிக்கையான வாதம் என்னவென்றால்—அன்று முதலமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "பாராளுமன்றத்தில் கேள்வி கேட்பது என்றால் இந்த அரசாங்கம் என்ன செய்தது என்பதைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்து கொண்ட பிறகு கேட்டிருக்கவேண்டும்" என்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் புத்தி சொன்ன அமைச்சர் அவர்கள், 'ஓரளவு தெரிந்து கொண்டு கேட்டிருக்கவேண்டும்' என்று கூறுகிற அமைச்சர், 'சப்-இன்ஸ்பெக்டர் உத்தரவு கொடுத்தாரா' என்பதைத் தெரிந்து கொண்டு இங்கு பதில் சொல்லியிருக்க வேண்டாமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** திடீரென்று 9-ம் தேதியன்று காலையில் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கேள்வியை எழுப்பினார்கள். உடனடியாக நான் பதில் சொன்னேன். அதையும் கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**திரு. மு. கருணாநிதி:** அது கிளப்பப்பட்ட வரலாற்றை நான் ஒருவாறு உணருவேன். எப்படிக் கிளப்பப்பட்டது என்பதெல்லாம் தெரியும். திடீரென்று கிளப்பப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் டில்லிக்குப் போகக்கூடாது என்று தடை விதிக்கப்படுகிற அளவுக்கு ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இந்த அரசாங்கத்திலே உரிமை பெற்றிருக்கிறார் என்றால் அது எப்படி என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நிபந்தனை இருக்கும்போது வெளியிலே போகக் கூடாது என்று சொல்லியிருக்கலாம். குறிப்பிட்டு டெல்லிக்குப்





போகக் கூடாது என்று சொல்லவேண்டிய அவசியம் என்ன? பாராளுமன்றத்தில், டெல்லியில் நடைபெறுகிற நடவடிக்கைகளில் திரு. உமாநாத் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்பது அங்கு விவாதத்தில் இருக்கிற பிரச்னை. அந்த நிலையில் யாருக்கும் இல்லாத ஒரு அக்கறை ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கு ஏற்பட்டு, "நீ டெல்லிக்குப் போகக் கூடாது" என்று சொல்லவேண்டிய அவசியம் அவருக்கு எப்படி ஏற்பட்டது என்பது முக்கியமான கேள்வியாகும். அது மாத்திரமல்ல. மாலை நேரத்தில் அல்லது ஒவ்வொரு நாளும் அங்கிருக்கிற காவல் நிலையத்திற்கு வந்து உமாநாத் அவர்கள் கையெழுத்து போடவேண்டுமென்று இருக்கிறது. தினந்தோறும் அவர்கள் கையெழுத்து போடவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அப்படி ஒரு நிபந்தனை இருக்கும்போது, அவர் தானாக வந்து கையெழுத்து போடவேண்டும், இல்லாவிட்டால் பரோல் ரத்து செய்யப்படும் என்ற அளவிற்கு விரிவாக ஒரு நிபந்தனை இருக்கும்போது அவர் டெல்லிக்குப் போகக் கூடாது என்று ஒரு சப்-இன்ஸ்பெக்டர் குறிப்பிட்டு கூறியிருக்கிறார்கள் என்றால் அது அரசாங்கத்தின் தூண்டுதல் இல்லாமல் சப்-இன்ஸ்பெக்டர் அதை நிச்சயமாகக் குறிப்பிட்டிருக்க முடியாது. அது மாத்திரமல்ல. இது அரசாங்கம் செய்த முறைகேடான செயல் என்று இந்த மன்றத்திலுள்ள நாங்கள் மாத்திரமல்ல, டெல்லி பாராளுமன்றத்தினுடைய சபாநாயகர் அவர்களே கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னை அரசினர் இதில் முறைகேடாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்ற விளக்கத்தையும் அதனையொட்டி உரிமைப் பிரச்னைக்கு வேண்டிய ஏராளமான ஆதாரங்களும் இந்தப் பிரச்னையில் இருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது உரிமைப் பிரச்னைக்குரிய ஒன்று அல்ல என்று யாரும் கூற முடியாது என்று அறுதியிட்டு கூறியதோடு கடைசியாக வருத்தம் தெரிவிக்கிற அளவிற்கு அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதுபற்றி கேள்வி கேட்கிற நேரத்தில் இந்த சபையிலே விவரங்கள் தருவதற்கு மாறாக இந்த சபை உறுப்பினர்களை வேறு பக்கம் திருப்புகிற அளவிற்கு ஒரு தவறான பதிலை முதல் அமைச்சர் அவர்கள் இங்கு தந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலே ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களானாலும், எதிர்கட்சி உறுப்பினர்களானாலும் அவர்களுக்கு ஒரு சரியான தகவலைத் தர கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தெரியாவிட்டால் அந்தத் தகவல் தரப்படுவதில்கூட ஓரளவிற்கு நாம் பொறுத்துக் கொள்ளலாம். தெரியாமல் கூறி விட்டார்கள், அவருக்கு விவரங்கள் தெரியாத காரணத்தால் இந்தப் பதில் வந்தது என்று எண்ணிவிடலாம். நான் முழுக்க முழுக்க குற்றஞ் சாட்டுகிறேன், வேண்டுமென்றே ஒரு தவறான தகவல் தரப்பட்டு; பாராளுமன்றத்தில் இவ்விஷயம் குறித்து பேச்சு வந்தபோது அதை மறைக்கவேண்டுமென்ற உணர்ச்சி முதல் அமைச்சர் அவர்களுக்கு வந்து, அதுபற்றி ஒரு விளக்கம் கொடுக்கப்பட வேண்டும்

[திரு. மு. கருணாநிதி] [15th March 1966

என்ற ஒரு நிலை ஏற்பட்டு, 'நல்ல வேளையாகக் கேட்டீர்கள், அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று நன்றி தெரிவித்துவிட்டு அவ்வளவு அவசர அவசரமாகத் தரப்பட்ட விளக்கம் அல்ல. வேறு பாதைக்கு, ஒரு தவறான பாதைக்கு, சரியற்ற ஒரு பாதைக்கு ஒரு தவறான பதில் மூலம் இந்த சபையை முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள் என்ற கண்டனத்திற்குரியதாகும். ஆகவே, அப்படி கண்டனத்திற்குரியதும், தவறான வழியில் உறுப்பினர்களை இழுத்துச் செல்வதும், உண்மை விளக்கம் தெரிந்திருந்தும் அது இங்கே மறைக்கப்பட்டாலும் உண்மையாகவே உரிமைப் பிரச்னைக்கு உரியதாகும். ஆகவே திரு. மதியழகன் அவர்கள் எழுப்பியிருக்கிற இந்தப் பிரச்னையை தாங்கள் ஆராய்ந்து இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டுமென்ற என் கோரிக்கையை தங்கள் முன்னால் வைக்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, 9-ம் தேதி அன்றைக்கு பத்திரிகைகளிலே வந்த விஷயங்களை வைத்துக்கொண்டு இதன்மீது ஆட்சி என்ன கருத்து தெரிவிக்கிறது, இந்தத் தவறு அல்லது பிழை ஏன் ஏற்படுகிறது என்று ஆராய இந்தச் சபையினுடைய எல்லை வரம்பு எவ்வளவுக்கு, இந்திய பாராளுமன்றத்தின் ப்ரிவிலேஜ், உரிமை எவ்வளவுக்கு, இந்த ஆட்சி அல்லது இந்த மாநிலம் பாராளுமன்ற அங்கத்தினர் ஒருவரை பாராளுமன்றத்திற்குச் செல்லலாம், செல்லப்படாது என்று தடை விதிக்கும் முறையோ அல்லது விதியோ அல்லது உரிமையோ உண்டா என்ற வினா அன்று என்னால் எழுப்பப்பட்டது. அதற்கு பதில் சொல்கிறபோது அமைச்சர் அவர்கள் அரசாங்கம் இப்படி ஒரு உத்தரவைப் போடவில்லை என்று சொன்னார்கள். பின்னர் அந்த சப்-இன்ஸ்பெக்டர் அங்கு சென்று அவருக்கு எவ்வித உத்தரவையும் கொடுக்கவில்லை, ஏதோ சப்-இன்ஸ்பெக்டர் அங்கு போனார்; வேலையாகப் போனார்; அதை உத்தரவு சமர்ப்பித்ததாகக் கொள்வது சரி அல்ல என்றும் கூறினார்கள். அதை விட, பாராளுமன்றத்தில் இந்த விவாதங்கள் நடந்த நிலையை பத்திரிகைகளில் படித்த நேரத்திலே, பாராளுமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் நடைபெற்ற விஷயங்களை, விவரங்களை தெரியாமல் பிரச்னைகளை எழுப்பியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது சுமத்தினார்கள். இவற்றை எல்லாம் மனத்திலே கொண்டு பார்க்கிறபோது இனி மாநில சட்டசபைகளுக்கும், மாநில ஆட்சிக்கும் உள்ள அல்லது இருக்க வேண்டிய எல்லை வரம்பு என்ன என்பதை, நிர்ணயிப்பதற்கும் அதற்கு மேலும் பாராளுமன்றத்திற்கு என்ன உரிமை அல்லது எல்லை வரம்பு இருக்கிறது என்பதை நாம் நிர்ணயிக்க முடியாது—ஆகவே பாராளுமன்றத்தினுடைய உரிமை அல்லது எல்லை வரம்பு எவ்வளவிற்கு இருக்கிறது என்பதையும் நாம் தெரிந்து கொள்வதற்கும் இன்று திருவாளர் மதியழகன் அவர்கள் கிளப்பியிருக்கிற இந்த விஷயம் பேருதவி புரியும் ஒன்றாக இருக்கும். ஆகவே, இதை சபாநாயகர் அவர்கள் அவர்களுக்கு சரி என்று தோன்றுகிற நிலையில் எதிர்க் கட்சிகள், ஆளுங் கட்சி இவர்களுடைய தலைவர்



15th March 1966] [திரு. சா. கணேசன்]

களை எல்லாம் கூட்டி வைத்து ஒரு முடிவு எடுப்பதோடு அல்லது இந்த நெறியை இன்னும் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக அட்வகேட் ஜெனரல் போன்றவர்களையும் வைத்துக் கொண்டு, ஏற்படுகிற பயன், வரையறை செய்ய வேண்டிய நிலை இவற்றை எல்லாம் செம்மைப்படுத்துவதற்கு சபாநாயகர் அவர்கள் வழி செய்வதோடு இதை உரிமைக் கமிட்டிக்கும் அனுப்பி அங்கிருந்து வாதப்பிரதிவாதங்கள் செய்து பலாபலன்களை தெரிந்து இதைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதுதான் சிறப்பும், நம் மாநிலத்தின் வருங்காலத்திற்கும், சட்டசபை அங்கத்தினர்களாகிய எங்களைப் போன்றவர்களுக்கு நல்ல வழியை வகுத்துக் காட்டுவதற்கும் உரிய ஒன்றாக இருக்கும் என்று நான் மனப்பூர்வமாக கருதி இதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்புவதுதான் நியாயம், சரி, தர்மம் என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

**திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையிலே உண்மையிலே இது உரிமைக் கமிட்டிக்கு விட வேண்டியதொன்றாகும். இந்த பதினைந்து ஆண்டுகளில் என்றுமே நடந்திராத ஒரு சம்பவம் இது. ஆகவே இதைப் பொறுத்தவரையில் இதை உரிமைக் கமிட்டிக்கு விடுவது யாருக்கும் வெற்றியோ அல்லது தோல்வியோ அல்லது சந்தோஷத்திற்குரியதோ அல்லது அவமானத்திற்குரியதோ என்று நாம் நினைக்கக்கூடாது. இது, மாநில சட்டமன்றம், பாராளுமன்றம், சட்டசபை அங்கத்தினர்கள், பாராளுமன்ற அங்கத்தினர்கள் என்ற முறையில் அவர்களுக்குள்ள உரிமைகளை கண்டு தெளிந்து தெரிந்து கொள்ளவேண்டிய ஒரு நிலையில்தான் இந்த விஷயம் வந்திருக்கிறது. இதைப் பொறுத்த வரையில் நிச்சயமாக இதை உரிமைக் கமிட்டிக்கு விடுவதின் மூலமாகத்தான் அரசியல் சட்ட பூர்வமாக ஒரு பிரஜை அல்லது சட்டமன்ற அல்லது பாராளுமன்ற அங்கத்தினர்களுடைய நிலை என்ன என்பதை நிர்ணயித்துக் கொள்ள இது ஒரு சாதனமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். பொதுவாக தமிழ்நாடு நிர்வாகத்திற்கு, தமிழ்நாடு சர்க்காருக்கு ஒரு நல்ல பெயர் உண்டு, திறமையான முறையில் நடக்கிற சர்க்கார் என்று சொல்லப்படுகிற சர்க்காராக கருதப்பட்டு வருகிறது. அந்த நிலையில், இன்றைக்கு பத்திரிகையில் இந்தச் செய்தியை படித்தவுடன் எனக்குக் கூட சுருக் என்றிருந்தது. தமிழ்நாடு சர்க்கார் தெரியாத்தனமாக இந்த வேலையில் ஈடுபட்டு விட்டார்கள் என்ற மாதிரியில் பாராளுமன்ற சபாநாயகர் உள்பட கூறியிருக்கிறார்கள். நமக்கெல்லாம் மேலே இருக்கக்கூடிய மிக உயர்ந்த அதிகாரம் படைத்தவர். . .

MR. SPEAKER : The hon. Member is arguing beside the point.

**திரு. க. ர. நல்லசிவம்:** ஆகவே, இதை உரிமைக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று அழுத்தந்திருத்தமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

[15th March 1966

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூறுவதற்கு உதவி புரிகின்ற வகையில் சிறு விளக்கம் கூற விரும்புகிறேன். இன்றைக்கு நம் முன்னால் இருக்கின்ற பிரச்னை, ஆர்டர் போடலாமா போடக்கூடாதா என்பதல்ல. இங்கிருக்கின்ற பிரச்னை, உத்தரவு போட்டதை இந்தச் சபைக்குச் சொல்லாமல் இருந்ததுதான். முன்னால் உத்தரவே இல்லை என்று சொன்னார்கள். இப்போது மெமோராண்டம் என்று சொல்லப்படுகிறது. நான் முன்பே விளக்கினேன். இங்கிருந்துபோன வயர்லெஸ் நம்பர்—02743-ன் படி பப்ளிக் டிப்பார்ட்மென்டிலிருந்து போய் இருக்கிறது. அதை ஜாரி செய்வதற்குத்தான் சப்-இன்ஸ்பெக்டர் போய் இருக்கிறார். இதற்கு முதலமைச்சர் அவர்கள் சப்-இன்ஸ்பெக்டர் உத்தரவு போட முடியுமா என்று கேட்கிறார். அரசாங்கம்தான் இதை அனுப்பியிருக்கிறது. நான் சொல்ல விரும்புவது, இவ்விதம் உத்தரவு போட்டது அமைச்சர் அவர்களின் ஞானத்திற்கு வராமல், knowledge இல்லாமல் நடக்கவில்லை என்பதுதான். அப்படியிருக்கும்போது அந்த விவரத்தை இந்த சபைக்கு முதலமைச்சர் அவர்கள் சொல்லாமல் இருந்தார் என்பதுதான் பிரச்னை என்பதை மீண்டும் தங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இதில் உரிமைப் பிரச்னை கிளம்பியிருப்பது ஒரே ஒரு விஷயத்தில் தான். மற்ற விஷயங்களை எல்லாம் நாம் எடுத்துக்கொள்வதில் பயனில்லை. அன்று அதாவது 9-ம் தேதி இந்த மன்றத்தில் நான் சொன்னபோது, குறிப்பிட்டது, இரண்டாவது எந்தப் புதிய உத்தரவையும் அரசாங்கம் போடவில்லை என்று சொன்னேன். முதலில் போட்ட பரோல் உத்தரவைத் தவிர வேறு எந்தவிதமான உத்தரவையும் போடவில்லை என்பதைச் சொன்னேன். அதோடுமட்டுமல்ல, சப்-இன்ஸ்பெக்டர் எந்த உத்தரவையும் அவரிடம் கொடுக்கவில்லை என்றும் சொன்னேன். அவ்விதம் நான் சொன்னது உண்மைக்கு மாறானதா என்பதுதான் பிரச்னை. நான் முன்பே விளக்கியிருக்கிறேன். இந்த விவரத்தை அவருக்குத் தெரிவிக்கப்பட்ட விவரம் அன்றையதினம் எனக்குத் தெரியாது. அதோடு, பார்லிமெண்டில் நடந்த விவரமும் இங்கு தெரியாது. இங்கிருந்து சப்-இன்ஸ்பெக்டருக்கு Message போய் இருக்கிறது. இது முதல் தேதி அனுப்ப முடிவு எடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றியும் அன்றையதினம் எனக்குத் தெரியாது. ஆனால் அவர்களுடைய பரோல் உத்தரவில் சில நிபந்தனைகள் இருந்தன. அதன்படி அவர் டெல்லிக்குப் போக முடியாது. அதை மீறி அவர்கள் போனால் அரசாங்கம் அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். அவ்விதம் அவர் டெல்லிக்குப் போகவேண்டும் என்று விரும்பினால் அவர்கள் இந்த உத்தரவை மாற்றித் தரும்படி கேட்கலாம். அந்த முறையில், அவருக்கு மாற்றவேண்டுமென்றால் மாற்றிக்கொள்ளலாம் என்று சொல்வதற்கு அவகாசம் கொடுக்கும் வகையில்தான் இந்த விளக்கம் அவருக்கு கொடுக்கப்பட்டது. அதல்லாமல் எந்தவிதமான உத்தரவும் போடவில்லை என்பதை



15th March 1966] *[திரு. எம். பக்தவத்சலம்]*

இப்போதும் சொல்லுகிறேன். உத்தரவு போடுவது என்றால் சப்-இன்ஸ்பெக்டரா போடுவது? இதில் சொல்லியிருப்பது என்ன? "This is to inform you" என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. கம்யூனிகேஷன் செய்கின்ற முறையில்தான்—'இன்பர்மேஷன்'—கொடுக்கப்பட்டிருக்றது. கம்யூனிகேஷன் எல்லாம் உத்தரவு ஆகிவிட முடியாது. கம்யூனிகேஷன் என்று எடுத்துக்கொண்டால் 'மை டியர் சார்' என்று அழைக்கப்பட்டிருக்கும். அந்த முறையில் இதை எடுத்துக்கொள்வதற்கில்லை. விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** கனம் சபாநாயகர் அவர்களே, 2-ம் தேதி எந்தவிதமான உத்தரவும் போடப்படவில்லை என்று முதலாவது நமது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது இங்கிருந்து Message அனுப்பப்பட்டது என்று சொல்லுகிறார்கள். அவ்விதம் 2-ம் தேதி Message போயிருப்பதைப் பற்றி 9-ம் தேதி இந்த சபையில் அவர்கள் தெரிவிக்கவில்லை. இப்போதுள்ள பதிலில் 2-ம் தேதி இங்கிருந்து Message அனுப்பியிருப்பதை ஒத்துக்கொள்கிறார்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதில் ஒத்துக்கொள்வது என்ற பிரச்னை ஒன்றுமில்லை. நான் சொல்வதெல்லாம் அரசாங்கத்திலிருந்து இரண்டாவதாக எந்தவிதமான உத்தரவும் போடப்படவில்லை என்பதுதான். 9-ம் தேதி அரசாங்கத்திலிருந்து இரண்டாவது உத்தரவு போடப்பட்டதா என்று கேட்டார்கள். அது மட்டுமல்ல, சப்-இன்ஸ்பெக்டர் புதிய உத்தரவு போட்டிருக்கிறாரா என்று கேட்டார்கள் . . .

*(இந்தச் சமயத்தில் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் பக்கத்திலிருந்து அங்கத்தினர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார் . .)*

MR. SPEAKER : I may tell the hon. Member Sri R. V. Swaminathan that we are discussing a very serious matter here. Perhaps the hon. Member is not interested in that.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் உத்தரவு போடுவது என்றால் அதில் காரியதரிசி கையெழுத்திட்டிருக்கவேண்டும், காரியதரிசி இல்லாவிட்டால் டெபுடி செக்ரட்டரி கையெழுத்திட்டிருக்கவேண்டும். கலெக்டர் அவர்களுக்கு இவ்விதம் உத்தரவு போடுவதற்கு ஏதாவது 'டெலிகேஷன்' கொடுக்கப்பட்டிருந்தால் அவர் கையெழுத்து போட்டிருக்க வேண்டும். ஆனால், இவர்களிடம் கொடுக்கப்பட்ட கடிதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது . . . .

This is to inform you . . . .Communicate the order . . . . . . . என்றுதான் இருக்கிறது. கம்யூனிக்கேட் செய்வது என்பது உத்தரவாகிவிட முடியாது. ஆகவே இதில் உத்தரவு என்கிற விஷயமே இல்லை. நான் இப்போதும் சொல்ல விரும்புவது, அரசாங்கம் எந்தவிதமான உத்தரவையும் போடவில்லை. இரண்டாவது, சப்-இன்ஸ்பெக்டரும் எந்தவிதமான உத்தரவையும் போட

வில்லை என்பதுதான். இதை நான் முன்பே கூறியிருக்கிறேன். மற்றொன்றையும் நான் கூற விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட்டில் இந்த மாநிலத்திலிருந்து வழக்குகள் தொடரப்பட்டன. இந்த மாநிலத்தில் டிட்டன்யூ-க்களாக இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், டிட்டன்யூ-க்களாக இருக்கின்ற நேரத்திலும் பாராளுமன்றத்தில் கலந்து கொள்ள உரிமையிருக்கிறது என்று கூறி வழக்குகள் போடப்பட்டன. அவை சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பைப் பற்றியும் இந்த அரசாங்கத்திற்கு நன்கு தெரியும். அந்தத் தீர்ப்பில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், "டிட்டன்யூ-க்களாக இருக்கும்போது பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமையில்லை" என்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெரிவித்திருக்கிறார்கள் . . . .

SRI K. A. MATHIALAGAN : The Hon. Chief Minister is not speaking on the privilege motion.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Member could give me a written speech I will read that!

MR. SPEAKER : The Hon. Chief Minister may continue his speech.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பாராளுமன்ற உறுப்பினர்கள் டிட்டன்யூ-க்களாக இருக்கின்ற நேரத்தில் பாராளுமன்றத்தில் அதாவது பாராளுமன்றக் கூட்டங்களில் அட்டென்ட் பண்ணுவதற்கு உரிமையில்லை என்று அந்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே பாராளுமன்றக் கூட்டத்திற்குச் செல்லக் கூடாது என்று பரோலில் இருக்கின்றவர்களைத் தடுப்பதற்கு அவசியமில்லை. நிபந்தனைகளின்படி, அதாவது அவர்கள் கையெழுத்திட்டிருக்கும் நிபந்தனைகளின்படி டெல்லிக்குச் செல்ல முடியாது. அதை மீறினால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அதனால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படும். இதில் அரசாங்கத்திற்குப் பெரிய கஷ்டம் ஒன்றும் இல்லை என்றாலும், இதைத் தவிர்க்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் இந்த விளக்கத்தை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் டெல்லிக்குப் போகவேண்டும் என்று விரும்பினால் அவர்களுக்கு போடப்பட்டிருக்கும் உத்தரவை மாற்றிக் கொடுக்கும்படி அவர்கள் அரசாங்கத்தைக் கேட்கலாம். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கும். அவ்விதம் மாற்றிக் கொடுக்காவிட்டால் முன்னால் இருக்கின்ற நிபந்தனைகளின்படி நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும் என்கின்ற விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இவ்விதம் தெரிவித்தது 'இன்பர்மேஷன்' தானே தவிர 'ஆர்டர்' அல்ல என்பதை மீண்டும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Ruling is reserved.





Regarding the notice given by the hon. Member, Sri M. Karunanithi I will decide about tomorrow. If it is admitted, time will be fixed in consultation with the Hon. Leader of the House and the mover and at a convenient time it can be taken up.

## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont*

### (1) DEMAND NO. I—LAND REVENUE DEPARTMENT.

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,17,40,900 under Demand No. I, Land Revenue Department."

**திரு. து. ப. அழகமுத்து:** பருவ நிலை தவறியதன் காரணமாக நடப்புப் பசலியில் நிலவரி, நீர்வரி வசூலை ரத்து செய்யவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கின்றேன்.

"That the allotment of Rs. 1,17,40,900 under Demand No. I, Land Revenue Department be reduced by Rs. 100."

### (2) DEMAND NO. IV—*STAMPS* ADMINISTRATION.

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 32,08,400 under Demand No. IV-Stamps Administration."

**புலவர் கா. கோவிந்தன்:** நிலவரித் துறை ஆட்சியாளர்களுக்கு விடுக்கும் விண்ணப்பத் தாள்களில் முத்திரைத்தாள் ஒட்ட வேண்டும் என்பதை கைவிடவேண்டும் என்பதை வலியுறுத்த என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கின்றேன்..

"That the allotment of Rs. 32,08,400 under Demand No. IV-Stamps Administration be reduced by Rs. 100."

### (3) DEMAND NO. XXXI—FAMINE RELIEF.

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 11,14,300 under Demand No. XXXI—Famine Relief." a.m.

திரு. சா. ராமசாமி: தலைவர் அவர்களே, வெள்ளம், புயல், தீ முதலியவற்றால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் உதவி ரூ. 30–ஐ ரூ. 75 ஆக உயர்த்துவது பற்றி விவாதிக்க, என் பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கின்றேன்.

"That the allotment of Rs. 11,14,300 under Demand No. XXXI—Famine Relief be reduced by Rs. 100."

[15th March 1966

(4) DEMAND No. XXXVII—COMPENSATION TO ZAMINDARS.

THE HON. SRI V. RAMAIAH: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,50,000 under Demand No. XXXVII-Compensation to Zamindars."

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, ஜமீந்தார்களுக்கு கொடுக்கப்படும் நஷ்ட ஈடு கடன் பத்திரமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கின்றேன்.

"That the allotment of Rs. 9,50,000 under Demand No. XXXVII—Compensation to Zamindars be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

திரு. மு. பொ. வடிவேல் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, நில வரி மான்யக் கோரிக்கையின் மீது எனது கட்சி உறுப்பினர் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நிலவரி கடந்த 35 ஆண்டு காலமாக இங்கே உயரவில்லை, உயர்த்தும் கொள்கை இல்லை என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த 35 ஆண்டுகளாகப் பார்த்தால், வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இன்றுவரையில், ஒரு ரூபாய் கிஸ்தி கட்டிக்கொண்டு இருந்தவர்கள் மூன்று அணா ஸெஸ் என்று ஆரம்பித்து, அது ஐந்து அணா ஆகி, அது மாறி ஏழு அணா ஆகி, ஒன்பது அணாவாக உயர்ந்து, இன்றையதினம் பதிமூன்று அணா வசூல் செய்யப்படுகிறது. அதோடு ஸெஸ், சர்சார்ஜ், அடிஷனல் சர்சார்ஜ் என்றும் தண்ணீர் வரி என்றும் விதித்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் பஞ்சாயத்து யூனியன்களில் ஸென்ட் பர்ஸெட் வரி விதிக்கலாம் என்று உத்திரவும் போட்டிருக்கிறோம். அதன் காரணமாக முன்பு விவசாயிகள், ஒரு ரூபாய் நில வரி கொடுத்தவர்கள் இன்று மூன்று ரூபாய் அல்லது நான்கு ரூபாய் கொடுக்கவேண்டிய துர்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். சென்னை சர்க்காரின் மொத்த வருமானத்தில் 4 சதவிகிதம்தான் நிலவரி வருவதாக அறிக்கைகள் கூறுகின்றன. பத்து ரூபாய்க்குக் குறைந்த நிலவரி கட்டும் விவசாயிகளை இந்த வரியிலிருந்து வரி விலக்கு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், நூற்றுக்கு 80 பேர்கள் படிப்பு இல்லாத விவசாயிகளாக இருப்பதால், கிராமத்தில் போய் மணியக்காரரிடம் போய் கட்டும்போது, 10 ரூபாய் கட்டவேண்டியதாக இருந்தாலும் 15 ரூபாய், 20 ரூபாய் வாங்கி விடுகிறார்கள். போன வாரம் நான் என்னுடைய கிராமத்திற்குச் சென்றபோது ஒரு விவசாயி என்னிடம் வந்து ஒரு ரசீதைக் காட்டினார். ரசீதில் எவ்வளவு போட்டிருக்கிறது என்று கேட்டார். அதைப் பார்த்துவிட்டு, நீங்கள் ரூ. 8.60 கட்டியிருக்கிறீர்கள் என்று சொன்னேன். என்னிடம் ரூ. 15.60



15th March 1966] [திரு. மு. பொ. வடிவேல்]

வாங்கிவிட்டாரே மணியக்காரர் என்று சொன்னார். அப்படியானால் மீண்டும் அவரிடம் போய்க் கேட்கிறேன் என்று சென்று கேட்டுவிட்டு மீண்டும் என்னிடம் வந்து, 'ஜமாபந்திச் செலவுக்காக மீதிப் பணத்தை ரசீது இல்லாமல் வாங்கிக்கொண்டேன்' என்று சொன்னதாகச் சொன்னார். இது எதைக் காட்டுகிறது? கிராம ராஜ்யம், சுய ராஜ்யம் என்று சொல்லப்பட்டு, இதுவே ராம ராஜ்யம் என்று சொல்லப்பட்டது. கிராம ராஜ்யம் இல்லை, கர்ணம் ராஜ்யமாகத்தான் இருக்கிறது.

இன்றைக்கு திட்டங்கள் தீட்டுகிறோம். கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்குகிறோம். இந்தப் பணம் எந்த அடிப்படையில் போகிறது? பஞ்சாயத்திடம் சென்று பஞ்சாயத்து தலைவர்கள் கிராமத் தலைவர்கள், அவர்கள் மூலம் செயல்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. திட்டம் எப்படி இருக்கிறது என்றால், கிராமத்தில் ரோடு போடவேண்டும் என்றாலும், பள்ளிக் கட்டடம் கட்டவேண்டுமென்றாலும், கிணறு வெட்டுவதற்கு கடன் வேண்டுமென்றாலும், உரம் வாங்குவதற்கு கடன் வேண்டுமென்றாலும், இதற்கெல்லாம் என்ன செய்யவேண்டும் என்றால் கிராமக் கர்ணத்தின் சிபாரிசு வேண்டும். கிராமக் கர்ணம்தான் பார்த்து சர்வே நம்பர் கொடுக்கவேண்டும். அவர்தான் ஸ்கெட்ச் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது. ஒரு ரோடு போடவேண்டுமென்றால், அதற்கு ஸ்கெட்ச், மாப், ப்ளான் எல்லாம் கிராமக் கர்ணம்தான் கொடுக்கவேண்டும். கிராமக் கர்ணத்தைக் கேட்டால் அவர் பஞ்சாயத்து தலைவர் கேட்கும்போது கொடுப்பதில்லை. அதைப்பற்றி ஆணையாளருக்குச் சொன்னால் ஆணையாளர் தாசில்தாருக்கு எழுதுகிறார். தாசில்தாருக்கு எழுதினாலும் அவர் விசாரிப்பதில்லை. ரெவின்யூ டிப்பார்ட்மென்டில் ரெட் டேப்பிசம் அந்த அளவுக்கு இருக்கிறது. நான்கூட கலெக்டரிடம் அதனாலேயே என்னுடைய பிளாக்குக்கு ரெவின்யூ அதிகாரியை போடவேண்டாமென்று கேட்டுக்கொண்டேன்.

நேற்று முன் தினம் ஒரு பஞ்சாயத்து தலைவர் என்னிடம் வந்தார். "இப்போது பழைய கிணறுக்குக் கடன் கொடுக்கிறார்கள் என்று கேட்டு வந்தார் ஒரு வெல்த்தி பட்டாதார். கணக்கப் பிள்ளையை அழைத்துக்கொண்டு போனேன். கணக்கப்பிள்ளைக்கு பணம் கொடுக்கவில்லை என்று என்க்வயரி முடிந்து ரிப்போர்ட் எழுதும்போது 'சொத்து உள்ளவர், மதிப்பு உள்ளவர், ஆனாலும் தவணைகளைச் சரியாகக் கொடுப்பதில்லை' என்று எழுதி விட்டார், ஆகையால் கொடுக்கவில்லை" என்று குறிப்பிட்டார்கள். இந்த நிலைமை இருக்கிறது.

அறுபது ஆண்டுகள், எழுபது ஆண்டுகள் ஆகியும்—கனம் அமைச்சர் அவர்கள்கூட விவசாயிதான் என்று நான் அறிகிறேன்—பட்டா டிரான்ஸ்பர் செய்து கொடுக்கப்படவில்லை. சாதாரணமாக, பஞ்சாயத்து தலைவர் ஆகிய நான் 60 நாட்களுக்கு மேல் கூட்டம் நடத்தவில்லை என்றால் தாக்கீது வருகிறது, 'நீ கடமையைச் செய்யத் தவறி விட்டாய்; என் நடவடிக்கை எடுக்கக் கூடாது' என்று கேட்டு. கிராமக் கர்ணங்களுக்கு போதுமான

[திரு. மு. பொ. வடிவேல்] [15th March 1966

அவகாசத்தைக் கொடுத்து பட்டா டிரான்ஸ்பர் செய்தாக வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் ஏன் உத்தரவிடக் கூடாது? அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் போதாது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. அவர்கள் எப்படி வேலை செய்வார்கள்? அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், எல்லோருக்கும் தெரியும் இவர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று. இவர்கள் என்ன செய்வார்கள்? அதுமட்டுமல்ல, விவசாய வருமானவரியின் மூலம், அந்த அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட போதுமான அளவு வரி வரவில்லை என்று சொல்லப்படுகிறது. நில உச்ச வரம்புச் சட்டம் வந்த பிறகு அது தேவையில்லை. சொத்து மதிப்பு இருந்தாலும் கிராமக் கர்ணத்திற்குத் தனியாக ஒன்றும் கொடுக்கவில்லை என்றால், வில்லங்கம் இருக்கிறது என்று எழுதி விடுகிறார்.

நான் ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர். என் பகுதியில் ஹோப்லி என்று ஒருவர் கடன் வேண்டுமென்று கேட்டார். அவர் என்னிடம் வந்து, 'கணக்கப்பிள்ளை ரூ. 50 கேட்கிறார்; கொடுத்துவிட்டு மனு எழுதிக் கொண்டு வருகிறேன்' என்று சொன்னார். நான் அவரிடம் கணக்கப்பிள்ளைக்கு பணம் கொடுத்தால் லோன் சாங்ஷன் செய்ய முடியாது, மனுவைப் போடுங்கள் என்று சொன்னேன். அவரும் மனு போட்டார். பிறகு ஒரு நாள் அவர் என்னைச் சந்தித்து, 'கமிஷனரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது; வில்லங்கம் இருப்பதால் கடன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது' என்று சொன்னார். அதோடு '50 ரூபாய் கொடுத்து கர்ணத்தைச் சரி செய்திருந்தால் இந்தக் கடனை வாங்கியிருப்பேன்' என்று வருத்தப்பட்டுக்கொண்டார். உங்கள் பேச்சைக் கேட்டு கடன் பெற முடியாமல் போய் விட்டதே என்று வருத்தப்பட்டுக் கொண்டார். உடனே நான் கமிஷனருக்கு நோட் எழுதி கட்டை புதுப்பிக்கச் சொல்லி, 'இதிலே வில்லங்கமே கிடையாது; உண்மைக்கு மாறான தகவல் கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று எழுதினேன். உடனே கமிஷனர் தாசில்தாருக்கு எழுதினார். தாசில்தார் கர்ணத்தைக் கேட்டார். 'எங்கள் ஊரில் ஹோப்லி என்ற பெயருடன் மூன்று பேர்கள் இருக்கிறார்கள், இது எந்த ஹோப்லி என்று தெரியாமல் எழுதி விட்டேன்' என்று பதில் அளித்தார். ஹோப்லி என்ற பெயருடன் மூன்று பேர்கள் அல்ல 30 பேர்கள் இருக்கலாம், குறிப்பிட்ட நபர் யார் என்று விசாரிக்காமல் எழுதியதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். இன்னும் அதன்மீது தாசில்தார் நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அதோடு அந்தக் கர்ணத்தின்மீது நான் ஒரு கண் வைத்துக்கொண்டிருந்தேன். வேறு ஒருவர் கர்ணத்திடம் 50 ரூபாய் கொடுத்து மனு போட்டிருக்கிறார் என்று தகவல் வந்தது. நான் கவனித்துக்கொண்டே இருந்தேன். கடைசியாக மனு வந்தது. அதில் கர்ணம் என்ன எழுதி இருக்கிறார் என்று பார்த்தேன். 'இவருக்கு மேஜரான குமாரர் அல்லது குமாரத்தி இல்லை; எந்த க்ரெடிட் சொஸைட்டியிலும் மெம்பராக இல்லை; அரசாங்கத்திடம் எவ்விதக் கடனையும் பெறவில்லை' என்று எழுதி இருந்தார். 'இந்தக் குறிப்பிட்ட நபரைப் பற்றி எனக்குத் தெரியும். அவருக்கு மேஜரான குமாரர், குமாரத்தி இருக்கிறார்



15th March 1966] [திரு. மு. பொ. வடிவேல்]

கள்; இவர் க்ரெடிட் சொஸைட்டி உறுப்பினர் என்பது எனக்குத் தெரியும். அரசாங்கத்திடமிருந்து இன்டஸ்ட்ரீஸ் லோன் வாங்கியிருக்கிறார். அதுவும் எனக்குத் தெரியும். உண்மைக்கு மாறான முறையில் எழுதிய கர்ணத்தின்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று நான் எழுதினேன். கமிஷனர் தாசில்தாருக்கு எழுதினார். இது நடந்து 1½ ஆண்டு காலம் ஆகியும் நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இவரை டிஸ்மிஸ் செய்திருக்கவேண்டாமா? ஆகவேதான் கர்ணம் ராஜ்யமாக இருக்கிறது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பருவ மழை தவறி விடுகிறது. உடனே வரி வஜா செய்வது என்பது அரசாங்கத்தின் கொள்கை. ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது? கிராம கர்ணம் வரி வஜா செய்யவேண்டுமென்றால் ஏராளப் பதிவு ஏடுகளைத் தயார் செய்யவேண்டுமே, யார் தயார் செய்வது என்று நினைத்துக்கொண்டு கரும்பு என்றால் கம்பு என்றும், கம்பு என்றால் கரும்பு என்றும் எழுதி 8 அணா பலிதம், 10 அணா பலிதம் என்று போட்டுவிடுகிறார்கள். இப்படி இருந்தால் எப்படி வரி வஜா செய்ய முடியும். பஞ்சாயத்து அளவில் அஃபிஷியல்ஸ், நான்-அஃபிஷியல்ஸ் கொண்ட குழு அமைத்து, பருவ மழை தவறி விட்டால் அந்தக் குழு முடிவு செய்ய வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2-சி மரப்பட்டாக்களை ஏராளமாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பட்டாக்கள் பெரும்பாலும் பெரிய மிராசுதார்கள் கையில்தான் இருக்கிறது. 40, 50 புளிய மரங்கள் இருந்தால்கூட அதற்கு ரூ. 1½ தான் வசூல் பண்ணுகிறார்கள். ஒரு புளிய மரத்திற்கு தற்பொழுது ரூ. 100 வரைக்கும் மகசூல் கிடைக்கிறது. 40, 50 புளிய மரங்களின் மகசூலை ஏலத்திற்கு விட்டால் சுமார் ரூ. 1000-க்கு போகும். ஆனால் இதற்காக வரித்தொகை வசூலிப்பது ரூ. 40, 50 தான். இந்தப் பட்டாக்களை ரத்து செய்து, இந்த மரங்களை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கவேண்டும். இதிலே இன்னொரு வேடிக்கை. இப்படி வசூல் செய்த தொகையை பஞ்சாயத்துக்கள் கணக்கில் கட்ட வேண்டும். இதுவரைக்கும் இது சம்பந்தமாக அரசாங்கம் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த 2-சி பட்டாக்கள் பொறுத்தவரை இந்தப் பொறுப்பை கர்ணத்திடம் கொடுத்து, கர்ணம் டிமாண்டு நோட்டீஸ் கொடுத்து, பணத்தை வசூல் செய்து பஞ்சாயத்து யூனியன் கஜானாவில் செலுத்திவிடலாம். இந்த தொகை ரெவின்யூ அதிகாரிகளால் வசூலிக்கப்பட்டு, ரெவின்யூ கணக்கிலிருந்து மாற்றப்பட்டு இன்னும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு இதுவரை போய் சேரவில்லை. ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்திலும் இதைப்பற்றி சொல்லிவிட்டேன். தாசில்தாரிடமும் சொல்லிவிட்டேன். ஒரு நடவடிக்கையும் இன்னும் எடுக்கப்படவில்லை. இம்மாதிரி நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு ஒரே ஒரு யோசனை கூற விரும்புகிறேன். கிராம சேவக்களிடம் அடங்கல், சிட்டா, 'எஃப்.எம்.' காபி, வில்லேஜ் மாப் இவைகளையெல்லாம் கொடுத்துவிடவேண்டும். இம்மாதிரிச்

[மு. பொ. வடிவேல்] [15th March 1966

செய்தால் பஞ்சாயத்து தலைவர்களுடன் கலந்துகொண்டு நல்ல முறையில் வேலை செய்வதற்கு வழி வகுக்கப்படும் என்று கூறிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, டிமாண்டு எண்ணிக்கை ஒன்றில் நிலவரியில் கணிசமான அளவு குறைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்த என்னுடைய வெட்டுப் பிரேரணையை சமர்ப்பிக்கிறேன்.

"That the allotment of Rs. 1,17,40,900 under Demand No. I—Land Revenue Department be reduced by Rs. 100."

அதே மாதிரி டிமாண்டு நான்கிலும் என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை, அதாவது, வேண்டுகோள் மனுக்களுக்கு குழந்தை உணவு போன்றவைகளுக்குக்கூட முத்திரை ஒட்டவேண்டுமென்ற நிலையைத் திருத்தவேண்டிய அவசியத்தை வற்புறுத்த சமர்ப்பிக்கிறேன்.

"That the allotment of Rs. 32,08,400 under Demand No. IV—Stamps Administration be reduced by Rs. 100."

* திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய ரெவின்யூ துறை மானியங்களை நான் வரவேற்கிறேன். ரெவின்யூ துறையில் ரீ-செட்டில்மெண்டு செய்ய 1963-ம் வருஷத்திலிருந்து முயற்சி செய்து இருக்கிறார்கள். ரீ-சட்டில்மெண்டு பண்ணுவதற்கான அரசாங்கத்தின் திட்டம் நல்ல திட்டம். ரீ-செட்டில்மெண்டினால் அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கப்படுமா என்ற கவலை வேண்டியதில்லை. ரீ-செட்டில்மெண்டு மூலம் சில நிர்ணயமான முடிவுகள் செய்யப்படும். அதனால் பல சிரமங்கள் நீங்கும் என்பது தான் விவசாயிகளின் எண்ணம். சமீபத்தில் பல்வேறுவிதமான தீர்வை மாற்ற எற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலியில் மணிமுத்தாறு தேக்கம் வந்த பிறகு ஏ; பி; சி; டி என்று பல்வேறு பிரிவுகளில் இருந்த நிலங்களையெல்லாம் ஏ பிரிவுகளாக மாற்றியிருக்கிறார்கள். இந்த மாற்றத்தை விவசாயிகளால் புரிந்து கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. அதுமாத்திரம் அல்லாமல் மண்வளம் பொறுத்தவரையில் ஒரு எகர் நிலத்திற்கும் அடுத்த ஏகர் நிலத்திற்கும், ஒரு கால்வாய் பாய்ச்சலுக்கும் அடுத்த கால்வாய் பாய்ச்சலுக்கும் பல்வேறுவிதமான மாற்றங்கள் இருக்கின்றன. தீர்வை செலுத்தக்கூடிய விவசாயிகளுக்கு அதுபற்றி சரிவர புரிந்துகொள்ளமுடியாமல் கஷ்டமாக இருக்கிறது. விவசாயிகள் தாங்கள் செலுத்தவேண்டிய வரி என்ன என்பதை சரிவர புரிந்துகொள்ளுதல் வேண்டும். அந்த நிலைமையை ஏற்படுத்துவதற்கு என்ன வழி செய்யலாம் என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். பஞ்சாயத்து தீர்வைக்கு டிமாண்டு நோட்டீஸ் வருவது போல தீர்வை விவரங்களை, அதாவது நில அளவு எவ்வளவு : தீர்வை எவ்வளவு போன்ற விவரங்களை முன்கூட்டியே டிமாண்டு நோட்டீசில் எழுதி கர்ணம் அவர்கள் விவசாயிகளுக்கு கொடுப்பதன் மூலம் இதற்கு பரிகாரம் காணலாமா என்பது பற்றியும் யோசிக்க வேண்டும். அதுபோல தாலூகா ஆபீஸ்,



15th March 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

பஞ்சாயத்து ஆபீஸ், கிராமச் சாவடிகள், பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ் ஆகிய இடங்களில் இந்தத் தீர்வையில் ஏற்படக்கூடிய மாற்றத்தைப்பற்றி சரிவர விளம்பரம் செய்வதன் மூலம், விளம்பரப் பலகைகள் போடுவதன் மூலம் இதற்கு பரிகாரம் காண முடியும்.

தண்டத் தீர்வையை அரசாங்கம் நல்ல எண்ணத்தில் குறைத்து வந்திருக்கிறது. இது நல்ல முயற்சி. திருநெல்வேலியில் தண்ணீர் தீர்வை ஒரு ரேட்டாக போடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஒரு ரேட்டின் அனுகூலத்தைக்கூட கார் பயிர்களுக்குக் கொடுத்திருப்பது போல் மழை காலத்தில் பயிரிடக்கூடிய பிசானப் பயிருக்கும் ஒரு ரேட் பிரகாரம் முடிவு செய்வது நலமாக இருக்கும். திருநெல்வேலி ஜில்லாவில் தண்டத் தீர்வைக்கு உட்பட்ட நிலம் 11,000 ஏகர் இருக்கிறது. எங்கள் கணக்குப்படி 20,000 எக்கர் இருக்கலாம். தண்ணீர் தண்டத் தீர்வைக்கு உட்பட்டுள்ள விவசாயிகள் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு லோக்கலைஸ் செய்து நஞ்சை என்று முடிவுசெய்து தீர்வை விதிக்கவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறது. சீக்கிரம் அந்த வேலையை முடித்து காலாகாலத்தில் தண்ணீர் தீர்வைக்குட்பட்ட நிலங்களையெல்லாம் நஞ்சை என்று முடிவு செய்து, நஞ்சை தீர்வை வசூலிக்க வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுபோல இனாம் நிலங்களுக்கெல்லாம் பட்டா கொடுப்பதற்கு அரசாங்கம் சட்டம் செய்திருக்கிறது. அதிலே காலதாமதம் இல்லாமல் பட்டாக்கள் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்டாம்பு விற்பவர்களுக்கு முன்பு ரூ. 6, 6¼ கமிஷன் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது ரூ. 2 கொடுத்துவருகிறார்கள். முன்பு தாலூகா ஆபீஸ் இருக்கிற இடத்தில் ரூ. 5-ம் மற்ற இடங்களில் ரூ. 6-¼-ம் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது எல்லோருக்கும் ரூ. 2 என்று இருக்கிறது. இந்தக் கமிஷனை உயர்த்த முடியுமா என்று பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். வெளியூர்களில் இருப்பவர்களுக்காவது கமிஷனை உயர்த்த முடியுமா என்பதைப் பற்றி கவனிக்க வேண்டும். பல வருஷங்களுக்கு முன்பு நிர்ணயித்தது ரூ. 400 வரைக்கும் ஸ்டாம்பு விற்கலாம் என்று. இப்பொழுது அதை மாற்ற முடியாதா ? குறைந்த பட்சம் ரூ. 1,000 வரை விற்கலாம் என்று அந்தத் தொகையை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்ச நிவாரண வேலைகள் சம்பந்தமாக முன்பே ஒரு 'கோடு' இருக்கிறது. அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் அதிகமாக சம்பளம் கொடுத்தால் விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபடாமல் இந்த வேலைகளுக்கு திரும்பி விடுவார்களோ என்ற அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். பஞ்ச நிவாரண வேலைகளுக்காக 10 பேர்கள் சாங்ஷன் செய்யப்பட்டால், உண்மையிலே 5 பேர்கள்தான்

செய்வார்கள். இத்தகைய தவறான சம்பவங்கள் நடப்பதற்கு அரசாங்கம் துணை செய்யக்கூடாது. பஞ்ச நிவாரண வேலைகள் சம்பந்தமான 'கோடை' மாற்றி அமைப்பதில் அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் என்பதைப்பற்றி அரசாங்கம் தீவிரமாக யோசனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாம்பரபரணி தீரத்தில் இந்த வருஷம் நிலத் தீர்வை விதிப்பதிலே 25 சத விகிதம் சர்சார்ஜ் வசூலிக்கிறார்கள். சென்ற வருஷம் பஞ்சம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். நான் ஒரு நல்ல கேள்வியை எழுப்ப விரும்புகிறேன். எல்லா நிலங்களையும் 'ஏ' கிளாஸ் என்று நிர்ணயித்துவிட்டிருக்கிறார்கள். 'ஏ' கிளாஸ் என்றால் இரண்டு போகம். 'ஏ' கிளாஸ் நிலங்களுக்கு அரசாங்கம் காரண்டி செய்வது என்னவென்றால், இரண்டு போகத்திற்கும் தண்ணீர் கொடுக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அப்படி 'ஏ' கிளாஸ் நிலங்களாய் இருப்பதில், ஒரு போகம் தீய்ந்து போய்விட்டது என்று அரசாங்கம் தெரிந்துக்கொண்டும், இரண்டு போகத்தில் ஒரு போகம் தீய்ந்து போய் விட்டால் கூட, நிலவரி வஜா செய்யாமல் இருப்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அரசாங்கம் ஏதோ சில இடங்களில் வஜா செய்திருக்கிறது, ஒத்தி வைத்திருக்கிறது. அதற்காக யோசனைகள் செய்கிறது. இந்த வருஷம் வரி வசூல் செய்ய மே மாதம் வரை ஆகலாம். மகசூல் வந்து விவசாயி கொடுக்கும் போது, 'ஏ' கிளாஸ் நிலங்கள் சம்பந்தப்பட்ட வரை, ஒரு போகம் விளையா விட்டாலும், புதுத் தீர்வையை வசூல் செய்யாமல் இருக்க அரசாங்கம் யோசிக்க வேண்டும். சர்-சார்ஜ் தீர்வை விதித்த பிறகு, மணிமுத்தாறு திட்டம் சம்பந்தப் பட்டவரையில், அபிவிருத்தி வரியை இந்த வருஷம் முதலே வசூல் செய்ய நியாயமே கிடையாது. அதை இந்த வருஷம் வேண்டுமானால் ஒத்திவைக்கிறோம் என்று, பிற்பாடு சேர்த்து வசூல் செய்வது கூடாது. அதை இந்த ஆண்டு முதல் வசூல் செய்வது என்பது இல்லாமல், அந்த வசூலையே சில ஆண்டுகள் தள்ளி வசூல் செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஆரம்பிப்பதையே தள்ளிப் போடவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. பி. வி. சீராமுலு**: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, நிலவரி மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு இதே மன்றக் கூட்டத் தொடரிலேயே, நிலவரி 25 சத விகிதம், நீர் கூலி 25 சத விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது இந்த அரசாங்கத்தால். இந்தத் தடவை என்னுடைய தொகுதியில் கே. ஆர். பி. ரிசர்வாயரைப் பார்க்கும்போது, ஏழு வருஷத் தீர்வையை இப்பொழுது வசூல் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் திட்ட வட்டமாக ஆணையிட்டு இருக்கிறது. அதோடு கூட வட்டியையும் சேர்த்து கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் கூறுகிறது. ஒரு ஏக்கருக்கு ரூ. 40 வீதம் கொடுக்கவேண்டும் என்று இருந்தாலும், ஏழு ஆண்டுகளில் பாக்கிப் பணத்தையும் கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதற்கு முன்னால், இப்படி ஒரு ஏக்கருக்கு 40 ரூபாய் என்று தெரிவித்திருந்





தால், எந்த அளவுக்குத் தண்ணீரை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிந்து செய்திருப்போம். இப்பொழுது இப்படி வசூல் செய்யப் புகுவது வேதனையாக இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், 1962-ம் ஆண்டு இந்தச் சட்ட மன்றத்திலே, இந்த நீர்க் கூலியை உயர்த்துவதற்கு, 'ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுத்து, 1957-ம் ஆண்டிலிருந்தே வசூல் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் பெயரில் வசூல் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, 1962-ல் சட்டம் வந்திருந்தும், 1963-64-ல் தண்ணீர் எடுத்துக்கொண்ட நிலச்சுவான்களுக்கு ஏழு ஆண்டுத் தீர்வையும் கட்ட வேண்டும் என்று அரசாங்கம் கேட்டுக் கொண்டு இருப்பதால், அதை எப்படிக் கட்ட முடியும்; விவசாயிகள் இது சமயம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், அப்படியிருக்க, இப்பொழுது ஏழு ஆண்டுகளின் தீர்வையைக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருப்பதால், தயவு செய்து 1962-வது ஆண்டு, எப்பொழுது இந்த சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்களோ, அன்று முதல் கட்ட ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். ஒரு பக்கத்திலே உணவு உற்பத்தி பெருகவேண்டும் என்கிறோம்; இன்னொரு பக்கத்திலே திட்டமிட்டபடி உணவு விநியோகம் செய்வதைக் குறிக்கோளாக வைத்துக்கொண்டு, இந்த ஏழு ஆண்டுகளில் தீர்வையையும் சேர்த்துக் கட்ட வேண்டும் என்றால் அது நலமாக இருக்காது. ஆகவே, 1962-ம் ஆண்டிலிருந்தாவது, வரி வசூல் செய்ய அரசாங்கம் முற்படவேண்டும், அப்பொழுதுதான் ஓரளவுக்காவது அப்பகுதி விவசாயிகள் நல்வாழ்வு வாழ சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதேபோல நிலத்தைத் தரம் வாரியாகப் பிரித்து கந்தாயம் நிர்ணயித்திருக்கிறார்கள். கே.ஆர்.பி. ரிசர்வாயருக்கு கீழே உள்ள 9,000 ஏக்கர் நிலத்தையும் தரம் பிரித்து, வரி வசூல் செய்ய வேண்டும். அப்படியில்லாமல் அப்பகுதியில் எல்லா நிலங்களுக்கும் ஒன்றாக சேர்த்து, அவுட்ரைட்டாக ஏக்கருக்கு ரூ. 40 என்று வைத்து நிலவரியை வசூல் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இது சமயம் கஷ்டமான சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், விவசாயிகள் கட்ட முடியாத சூழ்நிலை இருப்பதால், அரசாங்கம் அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **திரு. மா. தண்டாயுதபாணி**: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மானியத்தின் பேரில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நிலவரி விதிப்பு முறை 1930-வது ஆண்டு முதல் ஒரே நிலையில் இருக்கிற காரணத்தினால், அதன் மீது அடிஷனல், அஸெஸ்மெண்ட், ஸெஸ், ஸர்-சார்ஜ், இது போன்ற புது வரிகளைச் சேர்த்துக் கொண்டே வருகிறோம். விதிக்கும் புதிய வரிகளை, விவசாயி பேரில் போடுவதால், அவன் கர்ணம் எழுதிக் கொடுத்த கணக்குப்படியே கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. ஒரு விவசாயிக்கு இரண்டு ஏக்கர் நிலம் இருந்தால், எவ்வளவு தீர்வை கட்டவேண்டும் என்று கர்ணத்திடம் கேட்கும் போது, அவர் நிலத்தீர்வை, நீர்க் கூலி, ஸெஸ், ஸர்-சார்ஜ், அடிஷனல் அஸெஸ்மெண்ட், புதிதாக விதித்த 25 சதவிகிதம் வரி, ஆக இத்தனை வரிகளுக்கும் காலங்கள் ரசீதில்

[திரு. மா. தண்டாயுதபாணி] [15th March 1966

போட்டு, "உனக்கு ரூபாய் 60 வரும்" என்று கணக்குக் கொடுக்கிறார்கள். உரிய நிலத்திற்குச் செலுத்தும் வரி சரியானதுதானா என்று சிந்தித்துப்பார்க்கும் நிலையில் அவன் இல்லை. புது வரிகள் போட்ட பிறகு திட்டவட்டமாக ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று தெரியவில்லை. தஞ்சை ஜில்லாவிலே எடுத்துக்கொண்டால், பட்டுக்கோட்டை தாலூகாவில் ஒரு ஏக்கருக்கு ஒரு போகம் என்றால் இத்தனை ரூபாய், இரண்டு போகம் சாகுபடி செய்தால் இத்தனை ரூபாய் என்று தெரியாமல், பல சிரமங்கள் விவசாயிகளுக்கு ஏற்படுகின்றன. இந்த நிலையை மாற்றி அமைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, விவசாய வருமான வரியைப் பற்றி, நிலச் சீர்திருத்த மசோதா சட்டம் வருவதற்கு முன்பு, இந்த வரியினால் வருவாய் வந்தது. ஆனால், இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்த பிறகு, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று செய்த பிறகு, வரும் வருவாய் குறைவாக இருப்பதால், இது விவசாயிகளுக்குப் பெரும் பளுவாக இருப்பதால், இதை எடுத்து விடவேண்டும் என்று பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறோம். அதைப் பரிசீலனை செய்து அதை எடுத்து விடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, வரிவஜா இந்த ஆண்டு தாராளமாகச் செய்யப்படும் என்று மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் இந்த சட்ட மன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் வரி வஜா செய்யும்போது, பழைய ஆங்கிலேய முறையையே மேற்கொள்ளுகிறோம். குறிப்பாக ஒரு ஏக்கர் ஒன்றுக்கு 84 பட்டணம் படிக்குக் குறைவாக விளைந்தால்தான் அந்த நிலத்திற்கு வஜா என்று விதி இருக்கிறது. அதே போன்று குறைவான விளைச்சல் உள்ள நிலத்திற்கு வரி வஜா என்று செய்தால் ஒரு தாலூகாவிற்கு 20, 30 ஏக்கர் நிலம் கூட வராது. சாகுபடி செய்யாமல் தரிசாகப் போட்ட நிலங்களுக்குத்தான் இந்த விதி சிறப்பாக அமையும். சாகுபடி செய்த நிலங்களில் 84 படிக்கு அதிகம் விளைந்திருந்தால், வரிவஜா கிடைக்காது. வரிவஜா தாராளமாகச் செய்ய வேண்டும் என்று நினைத்தால் கூட, வஜா செய்ய முடியாமல் இருக்கிறது இந்த விதியைப் பின்பற்றுவதால். ஆகவே இந்தப் பழைய முறையை மாற்றி உண்மையாகவே நஷ்டம் ஏற்பட்டிருக்கும் நிலங்களுக்கு வரிவஜா செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது ஜமாபந்தி செய்கிறோம். கணக்கப் பிள்ளை கணக்குக் கொடுத்தபடி, மணியக்காரர் வசூல் செய்து, மார்ச் மாதம் முடிந்த பிறகு ஏப்ரல் மாதத்தில், ஜமாபந்தி செய்கிறார்கள். விவசாயி, தான் கட்ட வேண்டிய முழுத் தொகையையும் கட்டிய பிறகு, மேல் அதிகாரிகள் பரிசீலனை செய்து பார்க்கும் அந்த நேரத்தில் ஏதோ விடுபட்டுப் போய்விட்டால், அதை விவசாயி மறுபடியும், ஜமாபந்தி பாக்கி என்ற அளவிலே கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஜமாபந்தியில் கணக்கப் பிள்ளை போட்ட கணக்குச் சரியா, விகிதம் சரியா என்றெல்லாம் சரிபார்ப்பதை, வசூல் செய்வதற்கு முன்பாக வைத்தால், ஒரு விவசாயி இரண்டு



15th March 1966] [திரு. மா. தண்டாயுதபாணி]

முறை வரி கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது. ஆகவே, ஜமாபந்தியை வசூலுக்கு முன்பாக வைக்கலாம் என்பதை பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த நில வரியை 25 சத விகிதம் ஆக சென்ற ஆண்டு உயர்த்தியதை, பருவநிலைத் தவறியதால், விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறபடியால், வசூலை ஒத்தி வைக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். விவசாயிகளுடைய கஷ்டமான நிலைமையை மனதில் கொண்டு, இந்த ஆண்டு, தள்ளாவிட்டாலும் கூட, வசூல் செய்வதையாவது ஒத்தி வைக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன். நிலவரியையே ரத்து செய்ய வேண்டும் என்று பல வேண்டுகோள்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஒரு ஏக்கருக்கு மொத்தமாக ரூ. 25 இருந்தது என்றால், நில வரி எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை ஒரு ரூபாய்க்குக் குறைவான அளவில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. இதை ரத்து செய்து விடுவதனால் நமக்குப் பெரும் நஷ்டம் a.m 10-30
ஏற்படாது. ஏனென்றால், தண்ணீர்த் தீர்வை, செஸ், சர்சார்ஜ் இவற்றையெல்லாம் வசூல் செய்து விடுகிறோம். நில வரி என்ற பேரில் 85 பைசா, 87 பைசா, 74 பைசா, என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு இவ்வளவு குறைவாக உள்ள அதைத் தள்ளுபடி செய்து கொடுத்துவிட்டால், விவசாயிகளுக்கு அது ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையும் என்று கூறிக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைய நிலவரிதான் அரசாங்கத்தின் பழைமையான வருமானம் என்று அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, பழைய வருமான ஆதாரம் என்ற மனோபாவத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். இப்பொழுது பல்வேறு புதிய தொழில்களைச் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறது. பஸ் போக்குவரத்து இருக்கிறது. இதைப் போன்ற துறைகளில் சர்க்காருடைய வருமானத்தை உயர்த்திக்கொள்ளும் முயற்சி எடுத்துக்கொண்டு நில வரி வருமானத்தைப் பொறுத்த வரையில் இதை நான்காவது, ஐந்தாவது பட்சமாகத்தான் வைத்துக் கொள்ளவேண்டும். எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு வரி குறைகிறதோ, அந்த அளவுக்கு அவர்கள் உற்சாகமாகத் தொழிலில் ஈடுபடுவார்கள். அந்தச் சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும். ஆகவே, தற்போதைய கொள்கையை மாற்றிக் கொண்டு, நில வரி முறையை அடியோடு மாற்றியமைப்பதற்கும், அதிலே அடிப்படை மாறுதலை உண்டாக்குவதற்கும் சர்க்கார் திட்டமான முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

தண்ணீர்த் தீர்வை விதிப்பைப் பொறுத்த வரையில், பயிர் மீது தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுகிறது. இந்த முறை கூடாது என்று நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ளுகிறேன். எந்தப் பகுதிக்கு எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்படுகிறதோ, அந்தத் தண்ணீர் அளவை வைத்துக்கொண்டுதான் தண்ணீர்த் தீர்வை விதிக்கவேண்டும். ஒருவன் ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு

[திரு. க. ர. நல்லசிவம்] [15th March 1966

குறிப்பிட்ட பயிரைச் சாகுபடி செய்யலாம்; இன்னொருவன் ஐந்து லிட்டர் தண்ணீரில் சாகுபடி செய்வான். அவனுக்கும் இவனுக்கும் ஒரே மாதிரி வரி போடுவதென்பது முறையானதல்ல. புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம், கீழ் பவானித் திட்டம், மேட்டூர்க் கால்வாய்த் திட்டம் இருக்கும் இந்தப் பகுதிகளில் எல்லாம் ஓரளவுக்குக் குறைந்த தண்ணீரை வைத்துக்கொண்டு நஞ்சை வெள்ளாண்மை செய்யக்கூடிய நிலை இருக்கிறது. இவைகளுக்கும் மீதியுள்ள நீர்ப்பாசனப் பகுதிகளுக்கும் ஏறத்தாழ ஒரே மாதிரி தான் விதிக்கப்படுகிறது. குறிப்பாக, இந்தப் பகுதிகளில் நெல்லுக்கு 15 ரூபாய், கடலைக்கு 10 ரூபாய், பருத்திக்கு 20 ரூபாய் என்று விதிக்கப்படுகிறது. இந்த முறை இருக்கக் கூடாது. இதற்குப் பதிலாக, தண்ணீர் எவ்வளவு கொடுக்கப்படுகிறதோ, அந்த அடிப்படையிலேதான் வரி விதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிறிய இனம்களை ஒழிப்பதற்குச் சட்டம் வந்திருக்கிறது. அந்தச் சட்டங்கள் மூலம் கோயில்களிலே சேவகம் செய்கின்ற பூசாரிகள், அர்ச்சகர்கள், மற்ற ஊழியர்கள் விவசாயம் செய்து கொண்டிருப்பார்களானால், அல்லது விவசாயம் செய்யத் தயாராயிருந்தால், குறிப்பிட்ட அளவுக்கு நிலம் ஒதுக்கச் சட்டத்தில் ஏதாவது வழிவகை செய்யவேண்டும்.

கீழ் பவானிப் பகுதியிலே அடியோடு இந்த வருஷம் பூராவும் தண்ணீர் கிடையாது. ரெவின்யூ அமைச்சர் அவர்களிடத்தில் நான் ஒரு விண்ணப்பம் கொடுத்தேன். ஜில்லாக் கலெக்டரிடமும் விண்ணப்பம் கொடுத்தேன். இதுவரையிலும் நிலத் தீர்வை வசூலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர, இதற்குக் கூட கருணை காட்ட ஏன் முடியவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. நிலத்திலே பயிர் வைக்க முடியாத நிலைமையில் அங்குள்ள விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே, நமது அரசாங்கம் இனியும் யோசனை செய்து கொண்டிருக்காமல், உடனடியாக அங்கு வசூலிக்கும் வரியை நிறுத்தவேண்டும். ஏக்கருக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் தானே என்று நினைக்கலாம். ஆனால், அங்கிருக்கும் விவசாயிகள் பத்து ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கும் விவசாயிகள், ஒரு இருபத்தைந்து ரூபாய் கொடுக்க என்ன கஷ்டப்படுகிறார்கள் என்பதை அங்கே நேரில் போய்ப் பரிசீலித்துப் பார்த்தால்தான் தெரியும். இந்தத் தடவை நிச்சயமாக நிலத் தீர்வையை அரசாங்கம் வஜா செய்யவேண்டும் என்று ரெவின்யூ அமைச்சர் அவர்களை, கனம் சபாநாயகர் மூலமாக, நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். அதுவும் உடனடியாக உத்தரவு போட வேண்டும். ஒரு அதிகாரியைப் பார்த்தால், "தனித் தனியாகப் பார்த்துச் செய்யவேண்டும்" என்கிறார். இன்னொரு அதிகாரியைப் பார்த்தால், " தனித் தனியாகப் பார்க்க முடியாது, சர்க்காராக உத்தரவு இடவேண்டும்" என்று சொல்லுகிறார். அமைச்சரைக் கேட்டால், "போர்டு ஆஃப் ரெவின்யூவைக் கன்சல்டேஷன் செய்ய வேண்டும். அவர்கள் முடிவைப் பார்த்து வரி வஜா கொடுக்க முடியும்" என்கிறார். அமைச்சர் அவர்களை நான் குறிப்பாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். எந்த எந்த ப்ராஜெக்ட் ஏரியாவில் அடியோடு



15th March 1966] [திரு. க. ர. நல்லசிவம்]

தண்ணீர் கொடுக்கப்படவில்லையோ, அங்கெல்லாம் அடியோடு நிலத் தீர்வையை வஜா செய்யவேண்டும் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோயமுத்தூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில், தாராபுரம் போன்ற பகுதிகளில் பஞ்சாயத்துக்கள் மூலமாக ரேஷன் கார்டு கொடுத்து தண்ணீர் கொடுக்கும் அளவுக்குப் பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. இன்று நேற்று அல்ல, பரம்பரையாகவே பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. அதுபோன்ற பிரதேசங்களில் சர்க்கார் ஏதாவது கவனம் செலுத்தி, அந்தப் பிரதேசங்களைப் பஞ்ச நிலையிலிருந்து மாற்றியமைக்கத் திட்டவட்டமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, நிலத்திற்கு அடியிலுள்ள தண்ணீரை மேலே கொண்டுவர முயற்சி எடுக்கப்படவேண்டும். மேலும், சிறு தொழில்களை அதிக அளவிற்கு ஆரம்பிக்கவும் முயற்சி எடுக்கவேண்டும். மிகக் குறைந்த கூலிக்கு ஆட்கள் முன்வரும் இடங்களைப் பஞ்சப் பிரதேசமாகக் கொண்டு, பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பிக்கவேண்டும் என்ற அடிப்படையை அரசாங்கம் வைத்துக் கொள்ளக்கூடாது. அந்த முறை சரியல்ல என்றும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சில இடங்களில், தண்ணீர் பாயக்கூடிய பகுதிகளிலும், இரண்டு ரூபாய் கூலி இருக்கும். சில இடங்களில் ஆட்கள் அதிகமாக இருப்பார்கள். அங்கே ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய்க்குக் கூட ஆட்கள் வேலை செய்ய முன்வரக்கூடும். கூலி அளவைக் கணக்கில் கொள்ளாமல், அங்கங்கே இருக்கும் நிலையை அனுசரித்துப் பஞ்ச நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். தாராபுரம் போன்ற தாலூக்காக்கள் மிகவும் பஞ்சப் பிரதேசமாகக் கருதப்படவேண்டும் வருஷா வருஷம் திட்டமிடாமல், அதற்கென்றே ஒரு ஐந்தாண்டுத் திட்டம் போட்டு, அதில் ஏதாவது கவனம் செலுத்த வேண்டும். மத்திய சர்க்கார் மூலமாகக் கிடைக்கக்கூடிய தொகையையும் பெற்று அவர்களுக்குச் சரியான நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கீழ் பவானிப் பிரதேசத்தில் இப்பொழுது வசூலித்துக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்தி வைத்து, வரி வஜா செய்ய வேண்டுமென்று கேட்டு, இத்துடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மானியத்தில் எங்களுடைய கட்சித் தரப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே, நில வரி வஜா செய்யவேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டபோது, நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள், " நிச்சயமாக நில வரி வஜா செய்து கொடுப்பது மாத்திரமல்ல, இந்த வருஷம் நிலத்திலிருந்து விவசாயிகள் வெளியேற்றப்படாமல் பாதுகாக்கப்பட உறுதி அளிக்கிறேன் என்பதோடு கூட நிச்சயமாகச் சட்டத்தைத்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [15th March 1966

திருத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் நான் அதைச் செய்கிறேன்" என்ற உறுதியை இந்தச் சபையின் முன்னால் தெரிவித்தார்கள். ஆனால், "நில வரி வஜா செய்வதற்கு திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை" என்பதை நேற்று பதிலிலே இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நாங்கள் கேட்டதற்குப் பிறகு, இப்படிப்பட்ட தாக்கீது அங்கிருந்து வந்திருக்கிறது என்பதை அறிகிறபோது உண்மையிலேயே நாங்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம். ஏனென்றால், சமீபத்தில் மழை இல்லாத காரணத்தால், அங்கே ஆற்றிலே போகின்ற ஊற்று நீரைக் கூடத் திருச்சி மாவட்டத்திலே இருக்கிறவர்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். மேட்டூரிலிருந்து வருகிற தண்ணீர் தஞ்சை மாவட்டத்திற்குத்தான் செல்லவேண்டும் என்று சொல்லி ஊற்று நீரைக் குரம்பு வைத்து எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற உத்தரவைப் போட்டுவிட்டு, அதற்குப் பிறகு விளைந்தாலும் விளையாவிட்டாலும், வரி கொடுக்கவேண்டும் என்ற கொள்கை வைத்துக்கொண்டிருப்பது சரியான கொள்கை அல்ல என்று நான் சொல்ல விரும்புகிறேன். மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும், விளைந்தாலும் விளையாவிட்டாலும் குத்தகையைக் கொடுத்துவிடவேண்டும் என்று கட்டாயப்படுத்துகிற நிலப் பிரபுக்களைப் போல் தான் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும், தண்ணீர் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் வரியைக் கொடுத்துவிட வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதைப் போலவே, இங்கே சமீப காலத்தில் உயர்த்தப்பட்ட நீர் வரி, நில வரியைப்பற்றி நாங்கள் கேட்டபோது, "இது யுத்த கால அவசரத்திற்காகப் போடப்படுகிறது" என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். யுத்த காலம் நீங்கி இப்பொழுது அமைதி நிலவுகிற நேரத்திலே அந்த வரி இருப்பது சரியல்ல என்று நான் கருதுகிறேன். அமைதி இருக்கிறது என்பது உண்மையானால், நிச்சயமாக சமீபத்திலே போடப்பட்ட யுத்த கால நெருக்கடி வரியை ரத்து செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த வருவாய்த் துறையைப் பொறுத்த வரையில், கீழேயிருந்து வரி வசூலித்துக் கொடுக்கிற கணக்கப் பிள்ளையிலிருந்து, மேலே கலெக்டர் வரையில் இருக்கிறவர்கள் நான்கு நாட்களுக்குள் மக்களுடைய கோரிக்கைக்குப் பதில் சொல்லவேண்டும் என்ற முறை இருந்தாலும் கூட, அந்த முறை சரிவரக் கடைப்பிடிக்கப் படாத காரணத்தால், பல கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதைப் போலவே, சமீபத்தில் ஏதோ நெருக்கடி காலத்தை உத்தேசித்து, தலையாரி, வெட்டி போன்றவர்களைக் குறைக்க வேண்டும் என்று உத்தரவு வந்ததாகவும், அதன் பிறகு இப்பொழுது அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற உத்தரவும் வரப்பெற்றிருக்கிறது என்றும் நான் அறிகிறேன்.



15th March 1966] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

உண்மையிலேயே தலையாரி, வெட்டி போன்றவர்கள் ஏறத்தாழ 30, 35 ஆண்டுகளாகப் பணி புரிந்து வருகிறார்கள் என்றாலும் கூட, அரசாங்கம் ஏதோ சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதாகக் கருதி அவர்கள் தலையில் கைவைப்பது அவ்வளவு நல்லதல்ல என்று நான் கருதுகிறேன். அவர்களை எப்போதும் நிரந்தரமான வேலைக்காரர்களாக ஆகக் வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்வே அண்டு செட்டில்மெண்ட் டிபார்ட்மெண்டில் இருக்கிறவர்கள் என்ன வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. சர்வே டிபார்ட்மெண்ட் நல்ல முறையில் பணியாற்றினால், பல காரியங்களை நிச்சயமாகச் செய்ய முடியும்.

கொடுக்கப்படுகிற கடன்களை வசூல் செய்யும் முறையில் ஆங்காங்கு இருக்கும் பல கஷ்டங்களை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, கிணறு வெட்டுவதற்கெல்லாம் கொடுக்கப்படுகிற கடன்கள் காலா காலத்தில் கொடுக்கப்படாவிட்டாலும் கூட, கடன்களை வசூல் செய்யும் நேரத்தில் காலத்திற்கு முன்பாகவே வசூல் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். கிணறு வெட்டி விவசாயம் செய்து ஒரு போகம் அறுவடை ஆவதற்குள்ளேயே, அவர்கள் கொடுத்த கடனை வசூலிக்க நிர்ப்பந்திப்பது மாத்திரமல்ல, அவர்களுடைய உழவு மாடுகளைக் கூட பிடித்துச் செல்லும் நிலைமை இருக்கிறது. நிச்சயமாக அந்த முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான் சமீபத்திலே கூட அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது, எங்கள் பகுதிக்குக் குரம்பு வேண்டுமென்று கேட்டுக் கொண்டபோது, அதை நிரந்தரமாக வைத்துக் கொடுக்க முடியாது என்று குறிப்பிட்டார்கள். விவசாயிகளே சேர்ந்து குரம்பு அடிக்கின்ற பழக்கத்தை இதுவரை கொண்டுவந்திருக்கிறோம். இனியும் முடியாத நிலைமை இருக்கிற காரணத்தால், மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் தற்காலிகமாகக் குரம்பு வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் மூலமாக ஏற்பாடு செய்து கொடுத்தால் தான் பல ஏக்கர் நிலங்களை விவசாயம் செய்ய முடியும். எனவே, அதை அவர்கள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: மிஸ்டர் ஸ்பீக்கர், இந்த நிலவரி முறையை ஒழிக்கவேண்டுமென்று ரொம்ப நாளாக அநேக அங்கத்தினர்கள் இங்கே பேசினார்கள். இந்த அபிப்பிராயம் இன்று நேற்று தோன்றியதல்ல. நீண்ட நாட்களாகவே இந்தச் சபையிலும், இதற்கு முந்திய சபையிலும் நிலவரி முறை மாற வேண்டும், நிலத்தில் வருமானத்தின் மீது வரி போடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வருகிறோம். இதுபற்றி எல்லாக் கட்சியினரும் ஒரேவித அபிப்பிராயம் தான் கொண்டிருந்தார்கள். இதில் ஏன் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை என்பது தான் யோசனையாக இருந்துகொண்டிருக்கிறது. விவசாய வருமான வரி போட்டுவிட்டு, நிலவரியை எடுப்பது என்றால், விவசாயிகளிடம்

தக்க ரெக்கார்டுகள் இருக்கவேண்டும். ரெக்கார்டு இல்லாத போது என்ன செய்வது என்று நினைக்கலாம். அதற்கு என்ன செய்வது என்றால் ஏக்கருக்கு நான்கணு என்று பிளாட் ரேட்டாகப் போட்டுவிட்டு, மறுபடியும் நிலத்தின் வருமானத்திற்குத் தகுந்தாற்போல் ஏற்பாடு செய்யலாம்.

ஜமீன்தார்களுக்குக் காம்பென்சேஷன் கொடுப்பது பற்றிய மானியமும் இன்று வந்திருக்கிறது. சுதந்திரப் போராட்ட காலத்தில் அதாவது 1930-ஆம் வருஷத்தில் இருந்து சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால்—சுதந்திரம் என்றால் ஜமீந்தாரி ஒழிப்பு முறைதான் என்று கருதப்பட்டது என்று தெரியவரும். காரணம் ஜமீன்தார்கள் ஏக்கருக்கு 22 ரூபாய் வரை வரி வாங்கி ஜனங்களைக் கொடுமைப்படுத்தி வந்தார்கள். சுயராஜ்யம் என்றால் ஜமீன் ஒழிப்புத்தான் என்ற மனப்பான்மையில் அந்தக் கொடுமையில் இருந்து விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்றப் போராடினோம். அந்தச் சரித்திரத்தை எல்லாம் நாம் மறந்து வருவது தான் வருந்த வேண்டியதாக இருக்கிறது. சுயராஜ்யம் பெற்று காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகு சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு 8 ரூபாய் என்று வைத்தார்கள். ஆனால் இன்றைக்குள்ள நிலைமை என்ன? அந்த வரி, இந்த வரி என்று நிலத்தின் மீது விதிக்கக் கூடிய வரியை ஏக்கருக்கு 22 ரூபாய் அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். கிட்டத்தட்ட 15 வரிகள் போடுகிறோம். இந்த முறையைப் பார்த்து விவசாயப் பெருங்குடி மக்கள் மனம் புழுங்குகிறார்கள்.

அதுபோக, நிலவரியை வசூல் செய்வதிலே வெள்ளைக்காரர்கள் சில சிறப்பான பழக்கங்களைப் பர்மா போன்ற பல நாடுகளில் ஏற்படுத்தினார்கள். நாம் வெள்ளையர்களிடத்தில் இருந்த கெட்டவற்றை அப்படியே விடாமல் பற்றிக்கொண்டிருக்கிறோமே தவிர, நல்ல பழக்கங்களை எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் நிலவரியை வசூல் செய்யக் கையாண்ட முறையைச் சொல்கிறேன்.

கிராமங்களில் உள்ள கர்ணங்கள் எப்போதும் கணக்கு சரியாக வைத்துக் கொள்வதில்லை. வைத்துக்கொண்டிருக்கிற இடங்களில் கூடக் கையாடல் நடை பெறுகிறது. அரசாங்கம் பின்னர் கண்டு பிடித்து வழக்குப் போடுகிறது. சிலர் சிறையில் கூட இருக்கிறார்கள் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. வெள்ளைக்காரன் என்ன செய்தான், தெரியுமா? ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று நிரந்தரமாக டாக்சை நிர்ணயித்து—ஒரு ரசீது—அதில் அவர் பெயர், ஒரு ஏக்கருக்குக் கட்ட வேண்டிய வரி, அவரிடம் உள்ள மொத்த நிலம், அவர் கட்ட வேண்டிய மொத்த வரி—இப்படி ஊரில் உள்ள மிராசுதார்கள் அத்தனை பேர்களுக்கும்—ஒரு ஊருக்கு 200 நிலச்சுவாந்தார்கள் இருந்தால், 200 ரசீது அனுப்பிவிடுவான். அதில் நான்கு மாதத் தவணை அந்தப் பணத்தைக் கட்ட கொடுக்கப்பட்டிருக்கும். தேவைப்பட்டால் மேலும் ஒரு மாதம் தவணை கேட்டுக்கொள்ளலாம். அதற்குள் எத்தனை ரசீது பணம் வசூல் ஆகிறதோ, அதை அவ்வப்போது கர்ணங்கள் வசூல் செய்து கஜானாவில் கட்டிவிடவேண்டும். அவர் மொத்தத்தில் எவ்வளவு





பணம் அந்த ரசீதுப்படி வசூல் செய்து கட்டுகிறாரோ, அதில் நூற்றுக்கு இவ்வளவு என்று கமிஷன் கொடுத்துவிடுவார்கள். தவணை முடிவில் எவ்வளவு பேர்கள் வரி கட்டவில்லையோ அவர்களுடைய ரசீதுகளை ரெக்கவரி இலாகா என்று ஒன்று உண்டு, அதற்கு அனுப்பிவிடுவார்கள். அவர்கள் அந்த பாக்கியை எப்படி சட்டப்படி வசூல் செய்யவேண்டுமோ, அப்படி வசூல் செய்ய அந்த ஆண்டுக்குள்ளேயே நடவடிக்கை எடுத்துக் கொண்டு விடுவார்கள். கணக்கு ஒழுங்காக வரும். இதில் கையாடல் என்பதற்கு இடமே இல்லை. தாம் எவ்வளவு வரி கட்டவேண்டும் என்ற கணக்கையும் விவசாயிகள் முன்கூட்டியே அறிந்துகொள்ள வாய்ப்பும் இருக்கிறது. அந்த ரசீதுக்கு பிசா என்று பெயர்.

ஆனால் இன்றைக்கு நம் மாநிலத்தில் அத்தகைய முறை எதுவும் கிடையாது. விவசாயிகள் 25, 50 என்று கட்டிக்கொண்டே வருகிறார்கள். கர்ணங்களும் 100 பாக்கி, 200 பாக்கி கணக்கு எழுதி வைத்துக்கொண்டே வருகிறார்கள். எந்த எந்த இனத்திற்கு எந்த அடிப்படையில் எவ்வளவு வரி நிர்ணயிக்கப்படுகிறது என்று விவசாயிகளுக்குத் தெரிவதே இல்லை. கர்ணங்கள் வைத்தது தான் சட்டமாக இருக்கக் கூடிய நிலைமையில் நாம் கையாடலுக்கும், மோசடிக்கும் சந்தர்ப்பம் அளித்துவிட்டு இருக்கிறோம். இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், வரி பாக்கி கோடிக் கணக்கில் இருப்பதாகச் சொல்கிறார்கள். விவசாயிகளைக் கேட்டால், நாங்கள் கொடுத்து விட்டோம், கர்ணம் வேண்டுமென்றே சொல்கிறார் என்கிறார்கள். கணக்கு எந்த இடத்திலும் சரியாக இல்லை.

இன்னொன்று. ஒரு விவசாயி 100 ரூபாய் கடன் என்றால் 95 கட்டிவிட்டான் என்றால் பாக்கி 5 ரூபாய்க்கு 6.25 சத விகிதத்திற்கு தண்ட வரி என்று வேறு போட்டுக்கொண்டே வருகிறார்கள். இது எல்லாம் நியாயமா என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.

நிலவரி வசூலாகாமல் எங்கள் பகுதியில் பாக்கியிருக்கிறது என அதிகாரிகள் சொல்கிறார்களே தவிர, பாக்கியே இல்லை என்பது விவசாயிகள் கருத்து. ஆகவே தான் நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். ஒரு ஸ்பெஷல் ஆபீசர் நியமித்து, இதுபற்றி நன்கு விசாரணை செய்யவேண்டும். பாக்கி என்றால் எப்படி பாக்கி, அது நியாயமான பாக்கிதானா? இதுபற்றி விசாரணை செய்யவேண்டும். நிலம் இருக்கிறது. விவசாயி சாகுபடியே செய்வதில்லை. அதைப் புஞ்சை லாண்டு என்று வரி போட்டுக் கொண்டே வந்தால், அந்த விவசாயிகளால் எப்படி அதைக் கொடுக்க முடியும்? விவசாயிகளைக் கடனாளிகளாகவே வைத்துக் கொண்டிருப்பது நல்லதல்ல. இப்படியே நிலைமை போய்க்கொண்டிருந்தால் கதி மோட்சம் உண்டா? ஜமீன் ஒழிப்பு முறையைக் கொண்டு வந்தும் அவர்கள் தலையில் இத்தகைய சுமையை வைப்பது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். வரி வசூல் செய்கிற முறையை எப்படி வகுப்பது என்பது அதிகாரிகளுக்குத் தெரியாது இருக்கலாம். எல்லாம் தெரிந்தவர்கள் என்று யாரும் கிடையாது. ஆனால், அத்துறையில் நல்ல அனுபவம் உள்ள

எக்ஸ்பர்ட்ஸ்கள் இருக்கிறார்கள். அவர்களை நாம் கேட்பதா என்கிற இன்பீரியாரிடி காம்ப்ளக்ஸ் தேவையில்லை. நல்ல நிபுணர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு விவசாயிகளுக்குத் தாம் இவ்வளவு வரி கட்டவேண்டும் என்பதை முன்கூட்டியே ரசீது மூலம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு வரி பாக்கியைப் பற்றி ஆராய்ந்தாகவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, நிலத்தின் மீது போடப்பட்டுள்ள வரியின் பளு அதிகரித்துக்கொண்டு வருகிறது என்பது நீண்ட காலக் குற்றச்சாட்டாகும். அதோடு விவசாயிகளுக்குப் போட்டிருக்கிற பளுவைவிட எத்தனை வரிகள் போட்டிருக்கிறார்கள் என்பது தெரியாமல் இருக்கிறது. நிலவரி, விவசாய வரி, சர்சார்ஜ் வரி, தண்ணீர் வரி, பெட்டர்மெண்டு வரி, பாசன வரி என்பதாகப் பலவிதமான வரிகளைப் போடாமல், ஒரே ஒரு வரியாக மாற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வரிச்சுமையைப் பொறுத்த வரையில் நாம் 3 கோடி ரூபாய்க்கு அதிகப் படுத்தியிருக்கிறோம். ஆறு கோடி ரூபாயாக இருந்ததை 9 கோடியாக உயர்த்தி இருக்கிறோம். அதே சமயம் எதனால் வரி பாக்கி ஏற்படுகிறது என்பதையும் நாம் பரிசீலனை செய்யவேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். மொத்தம் 3 கோடிக்கு நிலத்தின் மீது நாம் தீர்வை விதித்திருக்கிறோம் என்றால் இரண்டு கோடி இருபத்தோரு லட்சம் வசூல் செய்யப்படாமல் பாக்கியாக நிற்கிறது எனக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை யோசனை செய்யவேண்டுமென்று கேட்டு கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தப் பாக்கியிலே இராமநாதபுரம் ஜில்லாவிலே மாத்திரம் இருப்பது 73 சதவிகிதம் பாக்கி. மொத்த பாக்கியிலே இராமநாதபுரம் ஜில்லாவில் மாத்திரம் இருக்கக்கூடிய பாக்கி 73 சதவிகிதம். ஏன் இப்படி பாக்கி ஏற்படுகிறது என்பதைப்பற்றி அக்கௌண்டன்ட்-ஜெனரல் கூட பரிசீலனை செய்திருக்கிறார்கள். 1948-ஆம் வருஷ ஜமீன் ஒழிப்புச் சட்டத்திலே பழைய பாக்கியை வசூலிப்பது சம்பந்தமாக ஒரு பிரிவு இருக்கிறது. ஆனால் அந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதில், அசல் பண்ணுவதில் ஏற்படுகிற தவறுகளினாலே தான் பாக்கி ஏற்பட்டிருக்கிறது என்று அக்கௌண்டன்ட்-ஜெனரல் சொல்லிவிட்டார்கள், நாங்களும் இதைப்பற்றி பல முறைகள் எடுத்துச்சொன்னோம். அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் கேட்கவில்லை. ஆகவே இப்போது அக்கௌண்டன்ட்-ஜெனரல் சொன்னதற்குப் பிறகாவது இதைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வசூலிக்கும் முறையிலே ரசீது கொடுப்பதிலே பல ஊழல்கள் இருக்கின்றன, பல தவறுகள் ஏற்படுகின்றன. இந்தக் காங்கிரஸ் அரசாங்கம் 10 ஆண்டுகளுக்கு முன்பேயே இதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு பரிசீலித்தது. அதற்கு முன்பே காங்கிரஸ் கட்சி இதற்காக



ஒரு கமிட்டியைப் போட்டு அவர்களுடைய கருத்தை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இவ்வளவுக்கும் பிறகு விவசாயத்தில் நல்ல பயிற்சி பெற்றிருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க தவறுவது வியப்பாக இருக்கிறது. இதில் கையாடல்கள் அதிகமாக இருக்கின்றன. 1964-ஆம் ஆண்டில் 467 கையாடல்கள் ஏற்பட்டிருக்கின்றன, இதில் 9 லட்சம் ரூபாய் கையாடப்பட்டிருக்கின்றது. 1965-ஆம் ஆண்டில் 350 கையாடல்கள் ஏற்பட்டிருக்கின்றன, இதில் 8 லட்சம் ரூபாய் கையாடப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கண்டறிய வேண்டும். அல்லது இலாகாவில் உள்ளவர்களையாவது இது சம்பந்தமாக கேட்டறிந்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரே ஒரு உதாரணம் மட்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுடைய மாவட்டத்திலே தொடர்ந்து 10 ஆண்டுகளாக ஒரு கர்ணம் கையாடல் செய்திருக்கிறார். ஆனால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு தான் அதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர் கையாடியிருப்பதாகச் சொல்லப்படுவது 45 ஆயிரம் ரூபாய். எனவே, இதையெல்லாம் உடனடியாகக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். நிலவரியை வசூலிப்பதிலே, அது யாருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற பிரச்னை வந்தபோது, அது பஞ்சாயத்திலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கொள்கையை அரசாங்கம் தெரிவித்தது. அப்படிக் கொள்கையைத்தான் தெரிவித்தார்களே தவிர, அதன்மேல் என்ன முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் விளக்கவில்லை. ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சொன்னார்கள். இதற்காக ஒரு காபினட் சப் கமிட்டி இருக்கிறது என்று தெரிவித்தார்கள். ஆனால் முடிவு என்ன ஆயிற்று என்பதைப்பற்றி விளக்கமே இல்லை. முதலமைச்சர் அவர்கள் கும்பகோணத்திலே பேசும்பொழுது, கிராம அதிகாரிகளுக்கு சர்வீஸ் கண்டிஷன், பே ஸ்கேல்ஸ் இவைகளையெல்லாம் மாற்றவேண்டும். அவர்கள் அதிகமாக வேலைபார்க்கிறார்கள், அவர்களுக்கு எல்லாவற்றையும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உறுதியளித்திருக்கிறார்கள். ஆனால் உறுதியளிக்கிறார்களே தவிர, அவர்கள் எந்த விதமான முடிவுக்கும் வர பயப்படுகிறார்கள். போர்டு ஆஃப் ரெவின்யூ இதற்காக ஒரு ஸ்கீம் கொடுத்து இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கின்றவர்களையும் மாற்றி, வில்லெஜ் ஹெட்மேன், பிர்க்கா இவற்றையெல்லாம் ராஷனலைஸ் செய்து, இப்பொழுது இருக்கின்ற அமைப்பை மாற்றி, புதிய அமைப்பை உண்டாக்க வேண்டுமென்று ஒரு ஸ்கீமைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஸ்கீம் அரசாங்கத்திற்கு வந்து தூங்குகிறது.

அடுத்தபடியாக இந்த நிலச் சட்டங்களைப் போடுகிறார்கள். போட்ட சட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது. ஒரு கொள்கையை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் தயக்கம் காட்டினால் பொருள் உண்டு. ஆனால் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்த மன்றத்திலே அது சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதற்குப் பிறகு தயக்கம் காட்டுவது மக்களை

ஏமாற்றுவதாகும். 1960-ஆம் ஆண்டு நில உச்ச வரம்புச் சட்டம் வந்தது. இதற்காக ஒரு ஸ்பெஷல் ஆபீசர் போட்டிருக்கிறார்கள். சட்டம் போட்ட பொழுது எவ்வளவு வரும் என்று எதிர்பார்க்கப் பட்டது. முதலமைச்சர் அவர்கள் பயங்கரமாகச் சொன்னார்கள், சட்டம் போட்ட பொழுது எத்தனை ஏக்கர் வரும் என்று நினைத் தோமோ, அத்தனை ஏக்கர்தான் வந்தது என்று சொன்னார்கள். ஆனால் கணக்கு இல்லை என்று சொல்லி ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தப்பித்துக்கொண்டார்கள். 1960-ஆம் ஆண்டிலே 2 லட்சத்து 82 ஆயிரம் ஏக்கர் வரும் என்று போர்டு ஆப் ரெவின்யூ கணக்குக் கொடுத்திருக்கிறது. அந்தக் கணக்கை இந்த மன்றத் திலே அப்பொழுது இந்த ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். 2 லட்சத்து 82 ஆயிரம் வரும் என்று எதிர் பார்க்கிறோம் என்று. வெட்லாண்டு எவ்வளவு, நஞ்சை எவ்வளவு, புஞ்சை எவ்வளவு என்றும் இந்த மன்றத்திலே புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். நாலாயிரத்துச் சொச்சம் தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் சட்டமன்றத்திலே 5,000 சொச்சம் என்று சொன்னார்கள். அது உண்மையா பொய்யா என்று தெரிய வில்லை எப்படியோ 2 லட்சத்து 82 ஆயிரம் ஏக்கர் வர வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டு 4 ஆயிரம் ஏக்கர்தான் வந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் என்ன? அரசாங்கம் எங்கே தவறியிருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். இந்த 4 ஆயிரம் ஏக்கர்களை எடுப்பதற்கு இலாக்காவை அமைத்து செல வழிக்கப்பட்டிருக்கின்ற தொகை 36 லட்சம். 4 ஆண்டுகளுக்கான கணக்குத் தான் எனக்குக் கிடைத்தது. கடைசியில் மலையைப் புரட்டி எலியைப் பிடித்த கதையாக 4 ஆயிரம் ஏக்கர்கள்தான் எடுத்திருக்கிறார்கள். ஆனால் என்ன நினைத்தோமோ, அதுதான் வந்திருக்கிறது என்று சொல்வது எவ்வளவு தவறானது என்பதை யும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஜமீன் ஒழிப்புச் சட்டம் 1948-இல் போட்ட சட்டம். இது சம்பந்தமாக ஹைக்கோர்ட்டில் வழக்குகள் பெண்டிங், சுப்ரீம் கோர்ட்டில் வழக்குகள் பெண்டிங் ஆக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர் களுக்குத் தெரியும் தென்கரை கிராமத்தைப் பொறுத்தவரையிலே சுப்ரிம் கோர்ட் தீர்ப்பு எல்லாம் முடிந்த பிறகு 4 மாதம் ஆகிவிட் டது. இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதற்காக செக ரட்டரியைப் பார்த்து ரெப்ரசன்டேஷன் பண்ணியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசாங்கத்திற்கு இன்னும் மனது வரவில்லை, இன்னும் செட்டில்மெண்ட் பண்ணவில்லை. இனும் ஒழிப்புச் சட்டத்திலே என்ன செய்யப்பட்டது. ஸ்டே ஆகி இருக்கிற கிராமங்கள் குறைந் திருக்கலாம். ஸ்டே ஆகாமல் இருப்பது ஏராளமாக இருக்கலாம். இன்னும் செட்டில்மெண்ட் ப்ரொசீடிங்ஸ் அமலாக்கப்படவில்லை. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களிடம் நேரடியாக விளக்கப் பட்டிருக்கிறது. ஒரு கிராமம் இனும் ஒழிப்புச் சட்டத்திலே பார்ட் வில்லேஜ் ஆக நோடிபிகேஷன் ஆகியிருக்கிறது. அதிலே இரண்டு வரியை வசூலிக்கிறார்கள். 74-வது பசலியில் வசூலிக்கிறார் கள். சட்டபடி அப்படி வசூலிக்கக்கூடாது "It will be deemed to have effect o nthat fasli" என்ற முறையிலே வசூல் பண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள். இது சம்பந்தமாக அமைச்சர்





அவர்களிடம் எவ்வளவோ விளக்கங்கள் சொன்னோம். ஆனால் அமைச்சர் அவர்கள் சட்டசபையில் அது ஆர். ஆர். வில்லேஜ் என்று இலாகாவிலிருந்து வந்த பதிலை அப்படியே வாசிக்கிறார்கள். இதனால் மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே இது உயர்நீதி மன்றத்தில் உள்ள சட்டப் பிரச்னைதான். நிர்வாகப் பிரச்னை அல்ல. இந்தச் சட்டப் பிரச்னை யை சர்க்கார் தீர்த்துவிட்டால் ஏராளமான கிராமங்களை இன்னும் இனும் ஒழிப்புச் சட்டத்திலே கொண்டு வரமுடியும் என்பதைக் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. துரைப்பாண்டியன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகளைச் சொல்ல முன்வருகிறேன். வரிப்பளு அதிகமாக இருக்கிறது, ஆகவே, இதைக் குறைக்க வேண்டுமென்று சில அங்கத்தினர்கள் சொல்லி வந்தார்கள். அதை எல்லோருமே இந்த மன்றத்திலே உள்ளவர்களும், குறிப்பாக நானும் என்னுடைய மாவட்டத்தில் உள்ள மக்களும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வோம். இருந்த போதிலும் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் உள்ளவர்கள் எல்லாம் வரியைக் கொடுக்க வேண்டாமென்று பேசிவருகிறார்கள். ஆனால், எங்கள் மாவட்டத்திலே எல்லாம் என்ன எண்ணம் இருக் கிறது என்றால் நாமும் இந்தியப் பிரஜைகளில் ஒருவர், இந்த நாட்டில் உள்ளவர்களில் ஒருவர், ஆகவே இந்த அரசாங்கத்திற்கு நம்மாலான உதவியைச் செய்யவேண்டுமென்று அவர்கள் வரியைச் சந்தோஷமாக கொடுக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக எங்கள் வட்டத்திலே வெள்ளை யர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்திலே கிராமங்களிலே வரி வசூலிக்கும்பொழுது ஒவ்வொரு கிராமத்திலும் ஏதாகிலும் ஜப்தி செய்யவேண்டிய நிலைமை வரும். ஆனால் இன்றைய சூழ்நிலையில் அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. கிராமத்திலே உள்ள மக்களை கிராம முன்சீப், கர்ணம் இலேசாக ஏமாற்றிவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் எங்கள் வட்டத்திற்கு அது பொருந்தி வராது, காரணம் என்னவென்றால் இன்றைய நிலைமை யில் மூன்று மைலுக்கு ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. கிராமங்களில் 11-00 a.m. உள்ள விவசாயிகள் அத்தனை பேர்களுடைய பிள்ளைகளும் நன்றாகப் படித்திருக்கிறார்கள். ஆகவே, கிராம முன்சீப், கர்ணம் எல்லாம் அன்றைய தினத்தைப்போல் இன்றைய தினம் ஏமாற்றக்கூடிய நிலை இல்லை. உச்சவரம்புச் சட்டத்தை இன்னும் பரிசீலிக்க வேண்டும். உச்ச வரம்புச் சட்டம் போட்டவுடனே $12\frac{1}{2}$ ஏக்கர் ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு உட்பட்ட அத்தனை பேரும் விவசாய வருமான வரி கொடுக்க வேண்டுமென்று அந்தச் சட்டத்தில் இருக்கிறது. அதே சமயத்தில் ஒரு ஏக்கருக்குத் தீர்வை புஞ்சை நிலத்திற்கு 19 பைசாவிலிருந்து நல்ல நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 4 ரூபாய் வரை இருக்கிறது. அந்த நிலையில் இன்றுள்ள அரசாங்கம் 50 ஏக்கர் நிலம் யாருக்கு இருந்தாலும் அவர்கள் வருமான வரிக் கணக்கைக் காட்டவேண்டுமென்று கூறுகிறார்கள். ஒரு ஏக்கர் 50 ரூபாய் கிரயம் கூடப் பெறாத தரிசு நிலங்கள் நாங்குனேரி

வட்டாரத்தில் அதிகமாக இருக்கின்றன. ஒரு குடும்பத்திலே தகப்பனார் இருக்கும்போது 100 ஏக்கர் என்று கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அந்தக் குடும்பத்திலே உள்ள நான்கு பிள்ளைகளுக்கும் அந்த நிலம் சேர்ந்துவிட்ட பிறகும் வருமான வரி கட்ட வேண்டுமென்று எழுதி அனுப்புகிறார்கள். 'நீர்தான் குடும்பத்திலே மூத்த பிள்ளை; ஆகவே, கணக்குக் காட்டவேண்டும்' என்று கேட்கிறார்கள். ஜமீந்தாரி முறை ஒழிந்து விட்டது. இன்றைய சூழ்நிலையில் மறுமலர்ச்சி எப்படித் தோற்றமளிக்கிறது என்றால், தொழில் அதிபர்கள் பழைய ஜமீந்தாரிகளைப் போல் வந்து விடுவார்களோ என்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது. கரும்பு பயிரிடும் நிலங்களுக்கு உச்ச வரம்பு கிடையாது என்று சொன்னார்கள். அதனால் பெரிய பெரிய தொழில் அதிபர்கள் எல்லாம் ஒருவரே பல ரூபத்தில் கரும்புத் தொழிற்சாலையை உண்டாக்கி ஆயிரக்கணக்கான ஏக்கர்களை வைத்துக் கொண்டு கரும்பைப் பயிரிடுகிறார்கள். 40, 50 ரூபாய் ரேட்டில் இதற்காக ஆயிரக் கணக்கான ஏக்கர்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாந்தோப்பு என்று சொல்லி பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் இருக்கும்போது 50 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதைப் பற்றி அரசாங்கம் யோசனை செய்யவேண்டும்.

முன்னால் தர்மத்திற்கு என்று நிலத்தை எழுதி வைத்திருப்பது மட்டுமல்லாமல் இப்போது அந்த மாதிரி எழுதி வைத்து விடுகிறார்கள். இப்போது ஒரு குடும்பத்தில் ஒருவர் பெயரில் நிலத்தை எழுதி வைத்து, 'செந்தில் ஆறுமுகம் பணிக்கு' என்று எழுதி வைத்து விடுகிறார்கள். அவர்கள் ஏதோ ஆண்டுக்கு ஒரு முறை சுவாமிக்குக் கட்டளை நடத்தியோ அல்லது தண்ணீர்ப் பந்தல் வைத்தோ, அல்லது வருகிறவர்களுக்கு மோர் கொடுத்தோ தர்மம் செய்ததாகக் கூறிவிடுகிறார்கள். இதன் காரணமாக நூற்றுக்கணக்கான ஏக்கர் நஞ்சை நிலங்களும், புஞ்சை நிலங்களும் அவர்களுடைய அனுபவத்திலே இருந்து கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. இந்த முறையில் சாமியின் பேரால், தர்ம ஸ்தாபனங்கள் என்ற பெயரால் தப்பித்துக் கொள்வதற்குச் சட்டம் இடம் கொடுக்கிறது. இவற்றையெல்லாம் அரசாங்கம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது 'க்ரீவன்ஸ் டே' என்று வைத்திருக்கிறார்கள். இதைப் பற்றி முதலில் கேட்டபோது பொதுஜனங்களுக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது. உடனுக்குடன் குறைபாடுகள் எல்லாம் நீங்கிவிடும் என்ற ஆசையோடு மக்கள் மனுக்களைக் கொண்டு வந்தனர். ஆனால் அந்த மனுக்களின்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை எல்லாம் 'ஃபார்வேர்டட்-சப்மிடெட்' ஆகிய இரண்டுந்தான். இவ்வாறு ஒவ்வொரு வாரமும் கலெக்டர் ஆபீசில் 'க்ரீவன்ஸ் டே' நடத்துவதற்குப் பதிலாக, மாதத்திற்கு ஒரு முறை வைத்து அதிலே கடந்த மாதம் வாங்கப்பட்ட





மனுக்களின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற பதிலை வருகிற மாதத்திலே கொடுப்பார்களேயானால் நன்றாக இருக்கும். என்னுடைய கிராமத்தில் ஒருவர் கிணறு வெட்டக் கடன் வாங்கினார். கிணறுவெட்டிக் கொண்டிருக்கும்போது நடுவில் மழை வந்துவிடுகிறது. அதனால் கிணற்றை வேண்டிய அளவு ஆழப்படுத்த முடியாமல் போகிறது. அந்தக் கிணறு எடுத்து முடிந்த பிறகு பி.டி.ஓ.-விடம் அதைப் பற்றித் தெரிவித்தபோது போய்ப் பார்க்காமலே 'கிணறு எடுக்கவே இல்லை; ஆகவே, கடன் வாங்கிய 2,000 ரூபாய் பணத்தைத் திருப்பிக் கட்டவேண்டும்' என்று எழுதி அனுப்புகிறார். இதைப் பற்றி 'க்ரீவன்ஸ் டே' அன்று மனு எழுதிக் கொடுக்கப்பட்டது. அந்த மனுவின் கதியும் 'ஃபார்வார்டெட்-சப்மிடெட்' தானே ஒழிய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. வக்கீல் வைத்து வாதாட வேண்டிய நிலைதான் இருக்கிறது. இந்த நிலைமைகளைப் போக்கி உடனுக்குடன் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்**: கனம் சபா நாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் ரெவின்யூ மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முன்பு பேசிய பல அங்கத்தினர்கள் நில வரியை அறவே எடுத்து விட வேண்டுமென்று தெரிவித்தார்கள். என்னைப் பொறுத்தவரை நில வரியை எடுக்க வேண்டாமென்றுதான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். விவசாயி என்று இருந்தால் உண்மையிலேயே சர்க்காருக்கு வரி கொடுத்தால்தான் அவனுக்கும் அதிலே ஒரு உரிமை இருக்கும். இந்த வரியைப் பொறுத்தவரை பணமாக வாங்குவதை விட தானிய ரூபத்திலே வாங்கினால் விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கும். விலைவாசி எப்படி இருந்தாலும் தானிய ரூபத்திலே கொடுக்க வேண்டுமென்றால் விவசாயிகள் சந்தோஷமாகக் கொடுப்பார்கள் என்பதிலே ஆட்சேபணை இல்லை சர்க்காரிலே இருக்கக்கூடிய கடைநிலை ஊழியர்கள், நடுத்தர வகுப்பார்களுக்கு தானியத்தைச் சர்க்கார் கொடுப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டிலே எங்களுடைய பகுதியிலே, குறிப்பாக மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்திலே, லோயர் பவானி பிரதேசத்திலே, பாசனத்திற்குத் தண்ணீர் விடாததன் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. வாய்க்காலில் தண்ணீர் வரும் என்று விவசாயிகள் எதிர்பார்த்தார்கள். தண்ணீர் வராது என்று நிச்சயமாகத் தெரிந்திருந்தால் மழையை எதிர்பார்த்து விவசாயம் செய்திருப்பார்கள். சர்க்காருக்கே கூட தண்ணீர் விட முடியுமா என்பது தெரிய முடியாத நிலை இருந்தது. அந்த நிலையில் விவசாயிகள் நிலங்களைத் தரிசாகப் போட்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக இராமநாதபுரம் மாவட்டத்திலே வரி வஜா செய்து வந்திருக்கிறார்கள். எனக்கே கூட இந்தச் சபையில் சொல்ல

[திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்] [15th March 1966

வருத்தமாக இருக்கிறது—சேலம், கோயம்புத்தூரில் இதுவரை யாரும் வரி வஜா செய்யவேண்டுமென்று கேட்டது கிடையாது; வரி பாக்கியும் அங்கு இருந்தது இல்லை என்பதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் அங்கு வந்து பார்த்தால் இந்த ஆண்டு லோயர் பவானி பிரதேசத்திலும், மேட்டூர் கால்வாய் பிரதேசத்திலும் விவசாய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது நன்றாக விளங்கும். அப்படிக் கஷ்டப்படும் நிலையில் அவர்கள் நூற்றுக்குப் பத்து ரூபாய், பன்னிரண்டு ரூபாய் வட்டிக்குப் பணத்தை வாங்கி கிணற்றைத் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகளைப் போடுங்கள் என்று சொல்லியும் அந்த விவசாயிகள் அதற்கு முன் வராத காரணத்தால், அந்தத் தொகையைச் செலவு செய்து கோயம்புத்தூரிலும், சேலத்திலும் விவசாயிகளுக்குக் கிணறு வெட்டிக் கொடுத்தார்களேயானால் நல்ல பலன் கிட்டும் என்பதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த ஆண்டு தண்ணீர் இல்லாத காரணத்தால், ஏதோ இருக்கின்ற தண்ணீரை வைத்துக் கொண்டு பயிர் செய்ததில் அந்தப் பகுதிகளில் பயிர்களெல்லாம் பச்சையாக இல்லாமல் வெளுப்பாக இருக்கின்றன. கனம் அமைச்சர் அவர்கள் அங்கு சுற்றுப் பயணம் செய்து நிலைமையை அறிந்து இந்த ஆண்டு வரி வஜா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, கிணறு வெட்டுவதற்கான தொகையையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. சா. ராமசாமி:** கனம் தலைவர் அவர்களே, நிலவரி, வருவாய்த் துறை மானியத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு பல மாவட்டங்களில் பருவ மழை தவறிய காரணத்தால் வரி வஜா செய்ய வேண்டுமென்று பலரும் கூறினார்கள். திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில் பருவ மழை தவறிய காரணத்தால் வாய்க்காலில் தண்ணீர் இல்லாது பயிர்கள் நாசமடைந்து விட்டன. இது பற்றி அமைச்சர் அவர்களிடமும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் புகார் கொடுத்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. புள்ளம்பாடி வாய்க்காலில் சில ஏரிகளில் மழைத் தண்ணீர் இருந்ததால் ஓரளவு விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்பகுதியான நேரிடைப் பாசனப் பிரதேசங்கள் வரண்ட பகுதியாகத்தான் இருக்கின்றன. அவர்களுக்கு நில வரி வஜா செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இப்போது தீர்வை வசூலித்துக் கொண்டிருப்பதை நிறுத்தி வைப்பதற்கும் ஆவன செய்யவேண்டும். விவசாயிகளுக்கு அரசாங்கம் கொடுக்கும் கடன்களையும், கூட்டுறவுக் கடன்களையும் திருப்பிக் கொடுக்கும் தவணையை நீடித்துத் தரவேண்டும். விவசாயிகள் வெள்ளம், புயல் தீ போன்றவற்றால் பாதிக்கப்படுகிறபோது கொடுக்கப்படுகிற உதவித் தொகையானது போதாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. 30 ரூபாய்



15th March 1966] [திரு. சா. ராமசாமி]

கொடுக்கப்பட்டு வருகிறது. அதை வைத்துக்கொண்டு 200 கீற்றுகள் கூட வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே குறைந்தபட்சம் 75 ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்கவேண்டும். 10 ரூபாய்க்கு மேல் கிஸ்தி கட்டுகிறவர்களுக்கு இந்த உதவித் தொகை இல்லை என்று கூறப்படுகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் 10 ரூபாய்க்கு குறைவாக கிஸ்தி கட்டிக் கொண்டிருந்தவர்களுக்கு இந்த சலுகை இருந்தது. புன்செய் நிலமாக இருந்தால் அன்று 10 ரூபாய் கட்டி வந்தவர்கள் இன்று 22 ரூபாய்க்கு மேல் கட்டுகிறார்கள். நன்செய் நிலமாக இருந்தால் அன்று ரூ. 10 கிஸ்தி கட்டி வந்தவர்கள் இன்று ரூ.24.50 கட்டுகிறார்கள். ஆகவே, ரூ. 24.50 கிஸ்தி கட்டுவதால் இவர்களுக்கு இந்த நிவாரணத் தொகை கிடைப்பதில்லை. ஆகவே இந்த வெள்ளம், புயல், தீ இவற்றினால் பாதிக்கப்படுகிறவர்கள் குறைந்தபட்சம் 50 ரூபாய்க்குள்ளாக கிஸ்தி கட்டுபவர்களாக இருந்தால் இந்த நிவாரணத் தொகை அளிக்கப்படலாம் என்ற நிலையை உருவாக்க வேண்டும் அல்லது புன்செய் நிலமாக இருந்தால் 10 ஏக்கரும், நன்செய் நிலமாக இருந்தால் 5 ஏக்கருக்கும் குறைவாக இருக்கிறவர்களுக்கு இந்த நிவாரணத் தொகை கிடைப்பதற்குள்ள நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியைப் பொறுத்தவரையில் டி. பழூர் பஞ்சாயத்து ஸ்ரீனிவாசபுரம் கிராமத்திலும், அரியலூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கருப்பளாக்கட்டளை பஞ்சாயத்து கீழவண்ணம் கிராமத்திலும் ஆண்டுதோறும் 20 வீடுகள் வரை பாதிக்கப்படுகின்றன. இது நீர்ப்பாசன இலாகாவின் கீழ் இருந்தாலும் ரெவின்யூ இலாகாவிலிருந்துதான் தொகை கொடுக்கப்படுகிறது. ஆகவே, அவர்களை அங்கிருந்து வேறு ஒரு இடத்திற்கு மாற்றவேண்டும் அல்லது அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படாத அளவிற்கு கிராமத்தைச் சுற்றி தடுப்புச் சுவர் மூலம் நிவாரணம் அளிக்க வேண்டும். தஞ்சை திருச்சி மாவட்டத்தை இணைக்கக்கூடிய திருமானூர்-விளாங்குடிக்கு இடையில் உள்ள கொள்ளிடம் ஆற்றில் பாலத்தை கட்டித் தர வேண்டுமென்று பல ஆண்டுகளாக மக்கள் கோரி வந்தார்கள். சென்ற ஆண்டில் கூட திருச்சி மாவட்ட கலெக்டர் அவர்கள் இந்தப் பாலம் வருகிற ஆண்டு கட்டப்பட இருப்பதாக பொதுக்கூட்டம் ஒன்றில் உறுதி அளித்தார்கள். இப்போதிருக்கிற நிலையைப் பார்த்தால் அப் பாலம் அமைப்பது பற்றிய செயற் குறிப்பு 1966-67-ல் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதல் ஆண்டிலேயே அந்த வேலையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மதிப்பிற்குரிய கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் கூற ஆசைப்படுகிறேன். இந்த நில வரி வசூலிப்பதில், குறிப்பாக நன்செய் பகுதிகளில் எல்லாம் அறுவடை மார்ச் மாதக் கடைசியில் தான் முடிவடைகிறது. ஆனால் பெப்ரவரி மாத

ஆரம்பத்திலேயே அந்த வசூலில் இறங்கி விடுகிறார்கள். ஆகவே பெப்ரவரியில் வசூல் செய்ய ஆரம்பிப்பதை காலம் கடத்தி மார்ச், ஏப்ரல், மே என்று இம்மூன்று மாதங்களில் தவணைகளாக வசூலிக்கும் ஒரு நிலையை ஏற்படுத்தினால் அது விவசாயிகளுக்கு நல்லமுறையில் அமையும். பருவமழை தவறிய பகுதிகளில் ஏக்கருக்கு சாதாரணமாக 30 மூட்டை விளைகிறது என்றால் இப்போது 15 மூட்டை, 10 மூட்டை, 3 மூட்டை என்றுதான் விளைந்திருக்கிறது. ஆகவே அப்பேர்ப்பட்ட பகுதிகளுக்கு முழு வரி வஜா செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் அப்பகுதிகளை கணக்கில் எடுத்துக் கொண்டு பாதிக்குப் பாதி யாவது குறைத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். மதுரை ஜில்லாவைப் பொறுத்தவரையில் நிலக்கோட்டை தாலூகாவில் நிலக்கோட்டை பிர்க்கா வரண்ட ஒரு பகுதியாகும். கிணற்றில் தண்ணீர் கூட இல்லாதிருக்கும் பகுதியாகும். சோளம் கூட அங்கு விளைவதில்லை. அதையும் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு முழு வரி வஜா என்றில்லாவிட்டாலும் அதில் பாதியாவது குறைத்து வசூல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் விளைச்சல் இல்லாமல் இருந்தால் தாட்சண்யமே வேண்டியதில்லை. பரிபூர்ணமாக வஜா கொடுப்ப தற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மிக்க நன்றி, வைகை பெரியாறு பகுதிகளில் ஏற்கனவே இரண்டு போக நீர்வை செலுத்தி வருகிறார்கள். இரண்டு போக சாகுபடியும் செய்து வருகிறார்கள். இரண்டு போக சாகுபடியை ரெகுலரைஸ் செய்யாததினால் தண்ணீர் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. ஆகவே, ஒரு போக சாகுபடியாக இருப்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அதை இரண்டு போக சாகுபடி என்று மாற்றிக் கொடுத்தால் தண்ணீர் காலாகாலத்தில் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கும். ஆகவே, அதையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தரிசு நிலங்களை பட்டா செய்து கொடுப்பதில் உண்மையிலேயே ஒரு பாவம் செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். எனது சொந்த ஊரில் ஜம்புதரக்கோட்டை பஞ்சாயத்தில் 89 ஏக்கர் நிலத்தை சென்னையில் இருந்து வந்திருக்கும் ஒரு தனிப்பட்ட பெரிய முதலாளிக்கு, ஒரு தொழில் அதிபருக்கு பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். 40 ஆண்டுகளாக அந்த நிலத்தில் விவசாயம் செய்து கிஸ்தி செலுத்தி சிலர் பட்டா கூட வைத்திருக் கிறார்கள். டைரக்டர் ஆஃப் செட்டில்மென்டிலிருந்து எனக்கு பட்டா வந்து விட்டது என்று அவர்களை அங்கிருந்து அடித்து துரத்தும் நிலை இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்த நிலையை நேரில் வந்து பார்த்து பரிசீலனை செய்து அந்த தனிப் பட்ட முதலாளிக்கு கொடுத்திருக்கக் கூடிய பட்டாவை கான்சல் செய்து அந்த ஏழை மக்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டு மென்று அந்த ஏழை மக்கள் சார்பில் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.





இன்று எங்கெங்கெல்லாம் அணைகள் கட்டவேண்டுமோ அவற்றை எல்லாம் கட்டி தண்ணீர் வசதி செய்து கொடுக்கிறோம். வாட்டர் செஸ்ஸும் வசூல் செய்கிறோம். ட்ரை ஏரியாவில் இருக்கக்கூடிய புன்செய் நிலம் உள்ள பகுதிகளில் உள்ள மக்க ளுக்கு வெல் இரிகேஷன் திட்டத்தை துரிதப்படுத்தவேண்டும். எவ்வளவு பணமானாலும் சரி. சர்வேயர்கள், டெப்டி தாசில்தார்களை நியமித்து இந்த வெல் இரிகேஷன் திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும். அப்படிச் செய்து வாட்டர் செஸ்ஸும் போட்டுக் கொள்ளலாம். ஒன்றிரண்டு ஏக்கருக்கு லெவி—பெட்டர்மென்ட் டாக்ஸ் போட்டிருக்கிறார்கள். சொல்வதற்கு தயங்குகிறேன், அதைத் தள்ளும்படி செய்ய முடியுமா என்பதையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். ஸ்டாம்ப் ட்யூட்டி, 1 ரூபாய் ஸ்டாம்ப், நான்கணா ஸ்டாம்ப் இவை கிடைப்பதில் மிகுந்த கஷ்டம் இருக்கிறது. இவற்றை வாங்குவதற்கு ஸ்டாம்ப் வெண்ட ரிடம் போனால் கொஞ்சம் உட்கார்ந்திருங்கள், கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு சிறிது நேரம் கழித்து, இதை வெளியில் இன்னொரு இடத்திலிருந்து 1½ ரூபாய்க்கு வாங்கி வந்தேன் என்று சொல்லி 1 ரூபாய் ஸ்டாம்பிற்கு 1½ ரூபாய் வாங்கி விடுகிறார்கள். நான்கணா ஸ்டாம்பும் கிடைப்பதில்லை. ஆகவே இந்த நான்கணா ஸ்டாம்ப், ஒரு ரூபாய் ஸ்டாம்ப் இவை அதிகப் படியாக விநியோகம் செய்யப்படவேண்டும். ஒருவர் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு நிலம் எழுதவேண்டுமென்றால் 100 ரூபாய் ஸ்டாம்ப் கோர்ட் பீஸ் ஸ்டாம்ப் ஒட்டவேண்டியிருக்கிறது. ஏழை மக்கள், அரசாங்கத்தை ஏமாற்றுகிறோம் என்பதை நினைக்காமல் தாங்களே தங்களை ஏமாற்றிக் கொள்கிறார்கள். ஆகவே ரூ. 5,000-க்கு குறை வாகவும், நிலம் இல்லாமல் புதிதாக நிலம் வாங்கும் ஹரிஜனங் களுக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் இந்த ஸ்டாம்ப் சார்ஜை 100 ரூபாயிலிருந்து 50 ரூபாயாகக் குறைத்துக் கொடுக்க முடியுமா என்பதையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உணவு உற்பத்தி பற்றி என் சொந்த அனுபவத்தைச் சொல்கிறேன். தனிப்பட்டவர்களின் கண்மாய் பட்டா நிலம், எங்களுக்குள்ள 9 ஏக்கர் 30 செண்ட் நிலத்தை பஞ்சாயத்துக் கொடுத்தோம். 6-30 எங்களுக்குச் சொந்தம், எங்கள் பங்காளிகளுக்கு 3 ஏக்கர். மொத்தம் பத்து பேர்கள். இதில் ஒரு நபர் 30 செண்டை இது என் சொந்தக் கண்மாய் இதை விட மாட்டேன் என்று சொல்லி அப்பீல் செய்யப்பட்டு போர்டில் ஒன்றிரண்டு ஆண்டுகள் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே எங்கெங்கெல்லாம் பஞ்சாயத்துக்கு சொந்தம் என்று டிக்ளேர் செய்து விட்டார்களோ அதில் தனிப்பட்டவர்கள் ஆக்கிர மிப்புச் செய்தால் அவர்களை அப்புறப்படுத்திவிட்டு குளத்தை ஆழப்படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற விதத்தில் அமைத்துக் கொடுத் தால், விவசாயிகளுக்கு சிறந்த உதவி செய்தவர்களாவார்கள்.

[15th March 1966

*திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சபாநாயகர் அவர்களே, நில வரி மான்யத்தின் மீது திரு. அழகமுத்து அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய வெட்டுப்பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றையதினம் தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தரிசு நிலங்களாக இருக்கிறது. பிரிட்டிஷ் காலத்தில் என்று நினைக்கிறேன், இந்த தரிசு நிலங்களை குறித்து அதில் பயிர் செய்யக்கூடாது என்று ஒரு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தடையை ரத்து செய்யவேண்டுமென்று நம் சர்க்கார் வந்த பிறகு பல்லாண்டு காலமாக அந்த ஜில்லாவில் உள்ள மக்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், இந்த மன்றத்திலும் நாங்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டு வருகிறோம். இந்தத் தடைகளை ரத்து செய்வதின் மூலமாக பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நிலம் கிடைப்பதற்கு வழிவகை ஏற்பட முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் அப்படிப்பட்ட நிலங்கள் தரிசாக கிடக்கிறதா என்று சொன்னால் இல்லை என்று நான் சொல்லவேண்டும். எல்லாம் சாகுபடியில் தான் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு தண்டத் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. தண்டத் தீர்வை என்று சொல்லும்போது, அரசாங்கத்திலிருந்து சொல்லப்படுவது, புஞ்சைக்கு 19 காசிலிருந்து 4 ரூபாய் வரையிலும் விதிக்கலாம், நஞ்சைக்கு 87 காசிலிருந்து, 15 ரூபாய் வரை விதிக்கலாம் என்றிருக்கிறது. ஆனால் அங்கு விதிக்கப்படக் கூடிய தண்டத் தீர்வையைப் பார்த்தால் புஞ்சைக்கு 4 ரூபாயும் நஞ்சைக்கு 15 ரூபாயும் விதிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலங்களில் பலன் கிடைத்ததா இல்லையா என்பதைக்கூட பார்ப்பதில்லை. சாகுபடி செய்கிறார்கள் என்ற காரணத்திற்காக அங்கிருக்கக்கூடிய கிராம அதிகாரிகள் அதிகமான தொகையை தண்டத் தீர்வையாக விதிக்கக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

தரிசு நிலங்களை அடைமானம் செய்து கொடுக்கின்ற விஷயத்தில் இதற்கென்று தனியாக ஒரு அஸைன்மென்ட் தாசில்தார் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்கள் மாதம் ஒன்றுக்கு 50 அஸைன்மென்ட் வரை செய்யலாம் என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் 50 அஸைன்மென்ட் செய்கிறார்களா என்று பார்த்தால் அதுவே அரிதாக இருக்கிறது. காரணம் சர்க்காருடைய தரிசு நிலங்கள் எல்லாம் பலவாறாக பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பஞ்சாயத்துக்கள் அவைகளை உபயோகப்படுத்தாமல் சும்மா போட்டிருக்கிறார்கள். அதே போல் ரெவின்யூ புறம்போக்கு என்று சொல்கிறார்கள். அதே போன்று பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என்று பல நிலங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் உதயமதாண்டபுரம் கிராமத்தில் 862 ஏக்கர் தரிசு நிலங்கள் பொதுப் பணித்துறைக்கு சொந்தம் என்று சொல்கிறார்கள். இந்த நிலங்களில் விவசாயிகள் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். இதை பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்கும்போது, பொதுப் பணித்துறை அவ்விதம் பட்டா செய்து கொடுக்கக்கூடாது என்று



15th March 1966] [திரு. ஆ. கு. சுப்பையா]

மறுத்துவிடுகிறார்கள். இதன் காரணமாக அசைன்மென்ட் தாசில்தாருக்கு எந்தவிதமான வேலையும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இவருக்கு நல்லமுறையில் வேலை கொடுக்கவேண்டுமென்றால், தரிசு நிலங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு அந்த நிலங்களை பட்டா செய்து கொடுக்க விரைவான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். எங்கள் ஜில்லாவில் குறிப்பாக திருத்துறை பூண்டியில் தரிசு நிலங்களை பட்டா செய்து கொடுப்பதில் இருக்கின்ற தடைகளை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் தரிசு நிலங்களை அதிகம் நிலம் உள்ளவர்கள், பத்து ஏக்கர், இருபது ஏக்கர், ஐம்பது ஏக்கர், 100 ஏக்கர் என்று ஆக்கிரமித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களை அந்த நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு இப்போது அரசாங்கத்தில் எந்தவிதமான சட்டமும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இவ்விதம் தரிசு நிலங்களை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டிருந்தால் அவர்களை வெளியேற்றுவதற்கு அதிகாரங்கள் கொடுக்கக்கூடிய ஒரு சட்டத்தை அரசாங்கம் இயற்றவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவில், இந்த வருடம் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற ஆபத்தை உத்தேசித்து அவர்களுக்கு வரி வஜா செய்து கொடுக்கவேண்டும் என்று முன்பே கேட்கப்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் உடனடியாக கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த ஆண்டு வரி வஜா செய்வது ஒரு பக்கம் இருந்தாலும், குத்தகைக்கு விவசாயம் செய்து கொண்டிருப்பவர்கள் நெல் அளக்க முடியாத நிலைமை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. தனி நபர்கள் என்றால் குத்தகை விவசாயம் செய்யக் கூடியவர்கள், அவர்களை அணுகி குத்தகையை குறைத்துக் கொள்வதற்கு, கேட்டுக்கொள்வதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. ஆனால் கோவில், மடங்கள், தர்ம ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இதற்காக கேட்டால், தங்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்று சொல்லுகிறார்கள். இதன் காரணமாக குத்தகைப் பாக்கிக்காக ரெவின்யூ கோர்ட்டில் வழக்குப் போட்டு, குத்தகை விவசாயிகளை எல்லாம் நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கத்திலிருந்து ரெவின்யூ அதிகாரிகளுக்கும் மாவட்ட கலெக்டர் அவர்களுக்கும் உத்தரவு அனுப்பி குத்தகை விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றிவிடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வரி வஜா சம்பந்தமாக என்னுடைய ஆலோசனையை தெரிவித்துக்கொள்கிறேன். ஐம்பது ரூபாய், கிஸ்தி செலுத்தக்கூடியவர்கள் வரைக்கும் இந்த வரி வஜா செய்யவேண்டும். அதோடு நிலவரியைப் பொறுத்தளவில், மாற்றம் செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[15th March 1966

***திரு. எம். எஸ். மணி** : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் நிலத்தில் கிடைக்கிற வருமானத்தின்மீது வரி விதிக்கவேண்டும் என்று பரவலாக ஒரு கருத்து பேசப்பட்டு வருகிறது. ஆனால், புஞ்சை நிலங்களை எடுத்து, கஷ்டப்பட்டு உழைத்து, நஞ்சை நிலங்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வரும்போது, வருமானத்தின் மீது வரி விதிக்கவேண்டும் என்று சொல்வது, இப்படிப்பட்ட நிலங்களுக்கு எப்படி பொருந்தும், எப்படி கணக்கிடுவது என்பது தெரியவில்லை, இதன் மூலமாக லஞ்சம் தான் தாண்டவம் ஆடும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, நிலத்தின் விலையை பார்க்கின்ற நேரத்தில் இப்போது எக்கர் ஒன்றுக்கு 7,000 ரூபாய், 10,000 ரூபாய் என்று சொல்லப் படுகிறது, இந்த நிலைமையில் மாற்றாருக்கு தங்கள் நிலங்களை விற்கும்போது, பத்திரச் செலவை குறைப்பதற்காக விலையை குறைத்து சொல்கிறார்கள். இதை கணக்கில் எடுக்காமல், தற் காலத்தில் நிலங்களினுடைய மதிப்பு என்ன என்பதைப்பற்றி தெரிந்து அதற்கு தகுந்தபடி ரெஜிஸ்டர் செய்வதற்கு கட்டணம் வசூலிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை, அரந்தாங்கி, இராமனாதபுரம் ஆகிய பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக கருதி, தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். சுதந்திரம் அடைந்து 18 ஆண்டு கள் ஆகியும் அந்த வட்டாரத்து மக்கள் இன்னும் பழைய நிலைமை யிலேயே இருந்து கொண்டிருக்கிறார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இவர்கள் கொடுத்த விண்ணப்பத்தின் மீது இதுவரை எந்தவித மான பேச்சும் நடந்திருப்பதாக தெரியவில்லை. ஆனால் உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த இப்படிப்பட்ட சில இடங்களைப்பற்றி ஆராய்வதற்காக திட்டக் கமிஷன் ஒரு குழு நியமித்திருக்கிறது. அந்த குழு ஆராய்ந்ததின் பலனாக இப்போது 10 கோடி ரூபாயை இதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஏன் இவ்விதம் தமிழகத்தில் புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம், அரந்தாங்கி போன்ற இடங்களையும் பின்தங்கிய பகுதி என்று பிரகடனப்படுத்தப்பட வில்லை என்று கேட்டதற்கு, தமிழக ஆட்சிக்கு இது சம்பந்தமாக கடிதம் எழுதியிருந்தோம், அவர்களிடமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை, பதில் வந்தால் கவனிக்கப்படும் என்று அங்கே பதில் சொல்லியிருக்கிறார்கள். பிற மாநிலங்கள் எல்லாம்



15th March 1966] [திரு. எம். எஸ். மணி]

இதற்காக பதில் அனுப்பியிருக்கும் நேரத்தில் இந்த சர்க்கார் மட்டும் ஏன் இந்தப் பிரச்னையில் பிற்போக்காக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் அறிய விரும்புகிறேன்.

தவிரவும், செட்டில்மென்டைப்பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். பல ஆண்டுகளாக செட்டில்மென்ட் இலாகா வில் பணிபுரிந்தவர்களை, சென்னை பப்ளிக் சர்விஸ் கமிஷன் மெமோ—24328-ன் படி கீழ் நிலை பிரிவு எழுத்தர்களாகவும், உயர் நிலை பிரிவு எழுத்தர்களாகவும் அதாவது ஸ்தல ஸ்தாபனங் களில் பஞ்சாயத்து யூனியன்களில்—வேலை கிடைக்கும்படியாக நியமனம் செய்யவேண்டும் என்று விபரம் கொடுக்கப்பட்டிருக் கிறது. அதன்படி செய்யவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இதை ஒழுங்குபடுத்த உடனே உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். செட்டில்மென்ட் இன்ஸ்பெக்டர்கள் தற் காலிகமாக பல பேர்கள், ஐந்து வருடங்களுக்கு மேல் பணியாற்றி வருகிறார்கள். இவர்கள் பணி முடிந்த பின்னால் இவர்களை அரசாங்கம் என்ன செய்யப் போகிறது. என்ன வேலை கொடுக்கப் போகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அறிந்து கொள்ள விரும்புகிறேன். ஸ்டேட் எலக்ட்ரிசிட்டி போர்டில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது, ஆனால் அப்படி இன்னும் சேர்க்காமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். . . . .

**கனம் திரு. வெ. ராமையா** : யாரைச் சேர்க்கவில்லை என்று சொல்கிறீர்கள்?

**திரு. எம். எஸ். மணி** : செட்டில்மென்ட் இன்ஸ்பெக்டர்களைப் பற்றி குறிப்பிட்டேன். மேலும் தமிழ்நாடு என்.ஜி.ஓ. சங்கத்தின் சார்பாக மனு ஒன்றை கொடுத்திருக்கிறார்கள். தஞ்சாவூரில் செட்டில்மென்ட் அதிகாரிகள் இன்னும் காரியங்களை அமல் நடத்தாமல் இருக்கிறார்கள். மேற்கொண்டு 20, 30 பேர்களை வேலையிலிருந்தும் நீக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அதோடு அரசாங்கம் இது சம்பந்தமாக சுற்றறிக்கை அனுப்பியிருக்கும்போது, நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன என்பதையும் கேட்டுக்கொண்டு, இந்த அளவோடு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் உணவு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற இந்த நிலவரி மான்யக்கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்தை சமர்ப்பிக்க முன் வருகின்றேன். முதலில், இந்த நிலவரி ஏற்பட்ட வரலாற்று நிலைமைகளை எல்லாம் தெரிந்து கொள்வது நலமாக இருக்கும். அதைப்பற்றி இந்த சபையிலே, பல முறை எடுத்துக் கூறியிருப்பதனாலே நான் அதை பரக்க அல்லது விளக்க விரும்ப வில்லை. முதன் முதலிலே செட்டில்மென்ட் செய்தபோது பிரிட்டிஷ் 11-30 a.m.
ஆட்சியாளர்கள் நிலத்தின் தரத்தை மட்டும் கணக்கு எடுக்காமல்,

நிலத்தில் விளையும் விளைவை மட்டும் கணக்கு எடுக்காமல், அந்தப் பண்டம் சென்று ஏற்றுமதி ஆகக் கூடிய எல்லை வரையில், ரெயில்வே ஸ்டேஷன் அல்லது ஹார்பர் வரையில் ஏற்படுகிற செலவுகளையெல்லாம் கணித்து, ரெயில் நிலையத்திற்கும் அந்த நிலத்திற்கும் இடையே இருக்கும் தூரம், அதற்கு ஏற்படுகிற வண்டிச் சத்தம் அல்லது ஆள் கூலி இவற்றையெல்லாம் கணித்து, அதிலிருந்து கழித்து, அதன் மீது ஏற்படுகிற நிகர லாபத்தை அடிப்படையாகக் கொண்டு வரி விதித்த நிலைமைகளையெல்லாம் நாம் வரலாற்று நூல்களில் காண்கிறோம். (கனம் திரு. வெ. ராமைய்யா : இக்கனாமிக் கன்டிஷன் ஆஃப் தி பீப்பிள் எப்படி இருந்தது ?) இக்கனாமிக் கன்டிஷன் என்று சொல்லுகிறபோது, ஒன்றை அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். ஆயிரம் ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும், ½ ஏக்கர் வைத்து கொண்டிருக்கிறவர்களுக்கும் ஒரே வரி என்பதை மனத்திலே கொள்ளவேண்டும். அது பொருளாதார அடிப்படையில் அமைகிறதா அல்லது வேறு அடிப்படையில் அமைகிறதா என்று கனம் அமைச்சர் அவர்கள் மனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு மேலே செல்லுகிறேன்.

இனி, இப்போது இருக்கிற நிலங்கள் இன்னும் செம்மையாக சர்வே பண்ணப்பட்டு, விவகாரங்களுக்கு, வழக்குகளுக்கு இடம் இல்லாத நிலையிலே அமைந்து விடவில்லை. இன்னும் அதிலே பல விவகாரங்கள், தகராறுகள் ஏற்படுவதற்கு வழிவகை செய்வதாக இருக்கிறது. இவ்வளவு காலம் ஆகியும் அது முற்றுப் பெறாமல் இருப்பது ஒரு குறை. இதனால் வீண் கால விரயம், பண விரயம், அதையெல்லாம் விட ஒருவருக்கு ஒருவர் ஏற்படுகிற விரோதம், பகை என்றெல்லாம் சொல்லுகிறோமே, அதெல்லாம் ஏற்படுகின்றன. இவற்றை மனத்திலே கொண்டு ஒரு பிர்க்காவுக்கு ஒரு சர்வேயர் என்றாவது போட்டு, அதை நிரந்தரமாக ஆக்கிவிட வேண்டும். அதில் நமக்குப் புதிய கஷ்டங்கள் எல்லாம் வந்திருக்கின்றன. முன்னே இருந்த செயின், லிங்க்ஸ், வேலி, மா எல்லாம் போய் ஏக்கர் வந்து, அதுவும் போய் இப்போது வேறு பல்வித நிலைகளுக்கு வரவேண்டிய கஷ்டங்களைக் கொண்டிருக்கிறோம். ஏதாவது ஒரு நிலையை எல்லா இடத்திற்கும் வைத்து, ஒரே அளவு முறையை வைத்து, அதை கணித்துவிட முதலிலே வகை செய்ய வேண்டும்.

அதற்கு அடுத்து, இப்போது இருக்கிற நில வரி முழுக்க முழுக்க குறைக்கப்படவேண்டுமென்று நேற்றைய தினம் காரணங்களையெல்லாம் பேசி முடித்தேன். இன்று இருக்கிற நிலையில் சிறப்பாக, அதுவும் உணவுப் பற்றாக்குறை என்ற நிலையில் விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் ஏற்படுகின்ற முறையிலே நிலவரியை மிகக் கணிசமான அளவுக்குக் குறைத்து, பத்திரங்கள், பட்டாக்கள் பதிவுகள் இவற்றிற்கு ஏற்படுகிற செலவுக்குத் தக்க முறையில் நிலவரி வருமானத்தைக் கட்டுப்படுத்தி இறக்கிவிடவேண்டும். அதனாலே நஷ்டம் வந்து விடாது சர்க்காருக்கு. இவ்வளவு நிலவரி வருகிறது என்று சொன்னால், இடையிலே ஏற்படுகிற





உத்தியோகஸ்தர்கள் சம்பளம் முதலியவற்றுக்கு ஏற்படுகிற பல்வேறு செலவுகளைப் பார்த்தால், எவ்வளவு குறைவாக நிகர லாபம் கிடைக்கிறது என்பது தெரியும். இந்த நிகர லாபம் எவ்வளவு குறைவாக இருக்கிறது என்று பார்த்து அதை விட்டு விடுவதால் விவசாயிகளுக்கு லாபம் அல்லது மனத்திலே ஊக்கம் ஏற்படுகிறது என்பதையும் மனத்திலே கொள்ள வேண்டும். அதுதான் இப்போது முடியவில்லை என்றாலும் குறைந்தபட்சம் ஐந்து ஏக்கர்களுக்குக் குறைந்திருக்கிற விவசாயிகளுக்கு வரி இல்லை என்றாவது ஆக்க வேண்டும். பெயர் அளவுக்கு ஏக்கருக்கு 2 அணா, 4 அணா பதிவுக்கு, பட்டா கொடுப்பதற்கு ஆகும் செலவுக்கு என்று வைத்துக்கொண்டு அந்த அளவுக்குக் குறைத்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு வெளிநாடுகளிலிருந்து துரத்தப்பட்டிருக்கிற பல்வேறு மக்களில், பெரும்பகுதி தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். மற்றபடி துரத்தப்பட்டவர்கள் எல்லாம் பல வகைகளில் லாபத்தோடு வந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களிலே தான் மிக மிகப் பெரும்பாலோர் துரத்தப்பட்டபோது ஒன்றும் இல்லாமல், இரண்டு துணிகளோடு, தாலிச் சங்கிலியைக் கூட பிடுங்கிக் கொண்டு, தாலி தானே வேண்டும், சங்கிலி எதற்காக என்று சங்கிலியைக் கூட பிடுங்கிக்கொண்டு, அந்த நிலையில் பர்மா அகதிகள் வந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அப்படிப் பட்டவர்கள், இங்கிருந்து சென்றவர்கள், காடாந்திரங்களை கஷ்டப் பட்டு, காட்டை வெட்டிப்போட்டு, நெருப்பு வைத்து, அதையே ஊராக ஆக்கி, அதை வளமாக ஆக்கிய பெரும்பாலானவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நமது பகுதியில் உள்ள மிகத் தரம் குறைந்த அல்லது தரிசாகக் கிடக்கிற நிலங்களையெல்லாம் வழங்கி, அவர்களுடைய உழைப்பின் மூலமாக அதைச் செம்மைப்படுத்தி, நாட்டின் உணவுப் பஞ்சத்தைப் போக்குவது என்ற ஒரு நிலையிலே அவர்களுக்கே அதைக் கொடுத்து, வேண்டிய அளவுக்கு தொடக்கச் செலவுக்கும் கொடுத்து, இத்தனை ஆண்டுகளுக்கு உங்களுக்கு எந்த விதமான வரியுமே இல்லை என்று விதித்து, அதன் மூலமாக நமது மாநிலம் செழிக்கவும், நமது உணவுப் பிரச்னை பிரச்னையாக இல்லாமல், 'இவ்வளவு விளைந்து விட்டதே, என்ன செய்வது ?' என்று அமெரிக்கர்கள் கடலில் கொட்டுகிறார்களே அந்த மாதிரி அளவுக்கு விளைச்சல் பெருகும்படி அந்த நிலைமையை உண்டாக்குவது ஆட்சியின் தலையாய கடமை என்று வற்புறுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி, இந்த ஆண்டிலே மழை அல்லது நீர் வரத்து இல்லாததினாலே பல்வேறு பகுதிகளிலே நிலங்கள் எதிர்பார்த்த அளவு பயனைக் கொழிக்க இல்லை என்பது நமக்குத் தெரியும். அங்கு எல்லாம் கூடிய அளவு, முடிந்த அளவு வெறுமனே வரியைக் குறைப்பது கூடப் போதாது என்று சொல்லுகிறேன். வீட்டில் இருக்கிற நகை நட்டுக்களை விற்று விவசாயம் செய்து ஒன்றும் விளையாமல் போனவர்களுக்கு அவர்களுடைய நஷ்டத்தைச் சரிக்

[திரு. சா. கணேசன்] [15th March 1966

கட்டுவது, அந்தப் பொறுப்பு ஆட்சியைச் சேர்ந்தது என்று நான் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். எங்கள் பகுதியில், நான் கண்ணால் கண்ட உண்மை, முதல் கூற்றிலே நல்ல மழை. பயிர்களெல்லாம் நான் நின்றால் கூட மறைத்துவிடக் கூடிய அளவிற்கு செம்மையாக, அருமையாக வளர்ந்திருந்தன. (கனம் திரு. வெ. ராமைய்யா : நெல்லா ?) ஆம், நெல் பயிர் தான். நாணலைப்பற்றிச் சொல்லவில்லை. அவ்வளவு அழகாக வளர்ந்திருந்தன. ஆனாலும் பின்னே தண்ணீர் இல்லாத காரணத்தினால் அவ்வளவும் மடிந்து விழுந்து மக்கிப் போய் விட்டன. இப்போது காண்கிற யதார்த்த நிலை என்ன என்றால், முன்பு 10 வண்டி வைக்கோல் கிடைத்தது இப்போது 15-16 வண்டி வைக்கோல் கிடைக்கிறது. ஏற்கனவே கிடைத்த தானியத்திற்குப் பதில் கருக்காய்கள் கிடைக்கின்றன. இந்த நிலை இருக்கிறது. இதையெல்லாம் மனத்திலே கொண்டு செம்மையான நிவாரண முறையை, உதவியை, நஷ்ட ஈட்டைக் கொடுக்க ஆட்சி முன்வரவேண்டும். நிறைய நஷ்ட ஈடு கொடுக்கவில்லையானாலும், மேலும், நஷ்டம் இல்லாமல் வைக்கவாவது, இன்னும் வரியைக் கொடு, அதைக் கொடு என்று தொந்தரவு இல்லாமல் சகல வரிகளிலிருந்தும் நிவாரணம் அளித்து விலக்கு செய்து அவர்களைக் காக்கவேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

இனி, இந்த முத்திரை ஸ்டாம்புகள், இந்த பத்திர ஸ்டாம்புகள் விஷயமாக, முதலிலே ஒன்றை மனத்திலே கொள்ளவேண்டும். நிலத்திலே பயிர் செய்கிற விவசாயிகள், தனக்கு உரம் வேண்டும், இது மாதிரி சாமான்கள் வேண்டும், அல்லது உதவி வேண்டும் என்று தாசில்தார்களுக்கு அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நிலைமையைத் தெரிவிக்கும்போது, இல்லாத கஷ்டத்தினால் தானே மனுவை போட்டு, விண்ணப்பித்து, கையைக் கட்டிக் கொண்டு நிற்கிறான். அவனைப் போய் ஸ்டாம்ப் ஒட்டு என்று சொன்னால், தன்னால் முடியவில்லை, இந்த சாமான் கிடைக்கவில்லை என்று கேட்பதற்கும் ஸ்டாம்ப் ஒட்டு என்று சொல்லுவது நியாயமும் அல்ல, நெறியும் அல்ல, தர்மமும் அல்ல என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, இன்னும் ரொம்ப வேடிக்கையான நிலை ஒன்று உள்ளது. ஏராளத் தாய்மார்கள்—குழந்தையை ஆண்டவன் ஏதோ கொடுத்து விட்டான்—பால் பற்றாக்குறை, பால் டப்பா வேண்டும், அல்லது இது மாதிரி சாமான் வேண்டும் குழந்தைக்கு என்று தாசில்தாருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்த நிலை வந்து விட்டது. அதற்கு அப்ளிகேஷன் கொடுத்தாலும் ‘ஸ்டாம்ப் ஒட்டு’ என்று சொல்லப்படுகிறது. இதையெல்லாம் பார்க்கும்போது கனிவு உள்ள, இரக்கம் உள்ள, கொஞ்ச இளக்கம் உள்ள நெஞ்சு பொறுக்காது. இது ஆட்சிக்கே அவமானம் என்று சொல்லக் கூடத் துணிகின்றேன். சொல்லக் கடமைப்பட்டும் இருக்கின்றேன். மனுக்களுக்கு 25 காசு என்று வைத்திருக்கிறார்கள். சர்க்காரிலே சமதர்ம அடிப்படையில் 25 காசு ஸ்டாம்ப் 1,000 ; 50 காசு ஸ்டாம்ப் 1,000 ; 1 ரூபாய் ஸ்டாம்ப் 1,000 ; 5 ரூபாய் ஸ்டாம்ப் 1,000 என்று அச்சிடுகிறார்களோ என்னவோ தெரியாது. 25 காசு



15th March 1966] [திரு. சா. கணேசன்]

ஸ்டாம்ப் எப்போதும் பஞ்சம். பெற்ற குழந்தை செத்துப் போகக் கூடாதே, பால் வாங்கவேண்டுமே, குழந்தை உணவு உடன் வாங்கவேண்டுமே என்று சொல்லி 25 காசுக்கு பதிலாக, 50 காசு, ஒரு ரூபாய் ஸ்டாம்பு கிடைத்தாலும் சரி அதை வாங்கி ஒட்ட வேண்டியிருக்கிறது. அப்படி ஒட்டுகிற நிலைமையை நான் கண்ணாலே பார்த்திருக்கிறேன். நமது சட்ட மன்ற உறுப்பினர்கள் பலரும் பார்த்திருக்கக்கூடும். இது மாதிரி நிர்ப்பந்தம் எதுவும் இல்லாமல் ஸ்டாம்பு கிடைக்கவில்லையென்றால் தாசில்தாரிடம் நான்கு அணா கொடுத்தால், அதை வாங்கிக்கொண்டு அவர் ரசீது கொடுக்கக்கூடாதா ? கோர்ட்டுகளில் கூட ஸ்டாம்ப் கிடைக்கவில்லை. என்னுடைய கம்ப்ளெய்ண்டு, என்னுடைய பெடிஷன், ஏதோ பெயர் சொல்லுவார்கள், இந்த வழக்கை நான் சமர்ப்பிக்கிறேன். ‘ஸ்டாம்பு கிடைத்த பிறகு ஸ்டாம்பை ஒட்டுகிறேன்’ என்று சொல்லி, டைம் பாராவதற்கு முந்தி ஸ்டாம்பு இல்லாமல் கோர்ட்டில் கொடுத்து, அதற்குப் பின் ஸ்டாம்பு கிடைக்கிற காலத்தில், நான்கு நாட்கள், 10 நாட்களுக்குள் ஸ்டாம்பு வாங்கி, ஒட்டி, முத்திரை போடுகிற நிலைமையை நாம் காணவில்லையா ? ஸ்டாம்பு ஒட்டுவது என்று சொல்லுவதே அநியாயம். அதற்கு மேலே நான்கு அணா ஸ்டாம்பு கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக ரூ. 1, 2 மடங்கு, 4 மடங்கு பொறுமதி, விலையுள்ள ஸ்டாம்பு ஒட்டவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை, ஆளாக்கியுள்ளதைத் தடுக்க வேண்டும் என்ற கடமையும் பொறுப்பும் அரசாங்கத்திற்கு உண்டா, இல்லையா என்பதைச் சிந்திக்கவேண்டும். இம்மாதிரி நிலைமைகளெல்லாம் மிகவும் கவனம் செலுத்தி, மேலும் மேலும் ஏழை எளியவர்களுக்கு சிரமத்தைக் கொடுக்கும் அளவில் அமைந்துள்ள இவற்றையெல்லாம் நிவர்த்திக்க வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் நான் கூறி அமைய முயல்கிறேன். இப்பொழுது கிணறுகள் வெட்டுவதற்காக ஏதோ மான்யத் தொகைகள் கொடுக்கிறோம், உதவித் தொகைகள் கொடுக்கிறோம். கிணறு வெட்டுவதற்கு என்று கொடுக்கிற தொகையிலே கிட்டத்தட்ட 50 சதமானம் அந்த விவசாயிக்கு வந்து சேர்ந்தால் அவன் மிகவும் புண்ணியவான். அதற்கு இடையிலே பல் செலவு மற்றவர்களுக்கு, ஊழல்களுக்கு, இன்னும் ஆசைகளுக்கு இதற்கெல்லாம் கொடுத்துவிட்டு, 50 சதமானம் அவனுக்கு வந்து சேர்ந்தால் அற்புதம். அப்பொழுது என்ன ஆகும் ? இருக்கிற கிணற்றிலேயே மண்வெட்டியை போட்டுவிட்டு, கட்டிய கிணறு இது தான் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. கட்டியிருக்கிற கேணிகளின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால் உதவித் தொகை கொடுக்கப்பட்டு கட்டப்பட்டிருக்கிற கேணிகளின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், சிமெண்டு கூடப் பூசப்படாமல் பழைய காரையுடன் கூடிய கிணறுகள் கூட உதவித்தொகை பெற்று வெட்டப்பட்ட கிணறுகள் என்று அந்தக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதை மறந்துவிட முடியுமா அல்லது மறுத்துவிட

முடியுமா? நான் குற்றம் சொல்லுவதோடு நிற்பவன் அல்ல, அதற்கு வேறு செம்மையான வழியையும் சொல்லுவது என்னுடைய முறையாக இருப்பதினாலே, நான் ஒரு வழியையும் சொல்லுகிறேன். இம்மாதிரி கேணி வேண்டும் என்று விவசாயி நேரிடையாக ஒரு மனுப் போடவேண்டும். அப்படி மனுப் போட்ட உடனேயே, அங்கு கேணி தேவை என்பதை உணர்ந்து, உடனே அங்கே கேணி கட்டுவதற்கு செயல் புரியவேண்டும் ஆட்சி. பூராவும் ஆட்சி செய்ய முடியாமல் போகலாம். குறிப்பிட்ட, தகுதியுள்ள, தரமுள்ள, கண்டிராக்டர்களிடம் அதை விட்டு, அதைக் கட்டச் செய்யவேண்டும். (குறுக்கீடு) கண்டிராக்டர் சாப்பிடுவானேன்? நாங்கள் காண்டிராக்ட் விடுகிறோமே, அங்கெல்லாம் சாப்பிடுகிறார்களா? சர்க்கார் விடுகிறபொழுது தான் சாப்பிட முடிகிறது. ஆகவே, அவர்களிடம் காரண்டி, உத்திரவாதம் "இத்தனை ஆண்டுகளுக்குள் விழுந்தால், நான் இன்ன தொகை தருவேன்" என்று ஒரு அடைமானம் கொடுக்கிற மாதிரி, உத்திரவாதம் வாங்கிக்கொள்ளவேண்டும். அப்படி வாங்கிக்கொண்டு இந்தக் கிணறுகள் கட்டப்படவேண்டும். அப்படி கட்ட முடியும். என்னிடம் ஒரு பகுதி அளித்தால் கூட, அதைச் செய்து, காண்டிராக்டுக்கு விட்டு, அது மாதிரியான உத்திரவாதத்தை வாங்கித் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன். இந்த மாதிரி தவறுகள் நிகழ்ந்தபிறகு தண்டிக்கிறேன் என்று சொல்லுவது ஆட்சிக்குப் பெருமை அல்ல. அவ்விதத் தவறுகள் நிகழ முடியாத நெறியை, வழியை வகுப்பது தான் செம்மையான, தரமான ஆட்சிக்கு எடுத்துக்காட்டு என்பதை மனத்திலே கொண்டு, அந்த நெறியில் செயல்படவேண்டும்; செயல்பட்டு, நாட்டையும், நாட்டின் நலத்தையும், அதன் சுபீட்சத்தையும் வளர்க்க வேண்டும் என்று கூறி, அமர்கிறேன். வணக்கம்.

* திரு. மு. கருணாநிதி: கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வருவாய்த் துறை முதலிய மான்யங்கள் மீது தரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். நேற்றைய தினம் பேசிய கனம் உறுப்பினர்கள் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். அதையே தான் நான் மீண்டும் இந்த மன்றத்திலே நினைவு படுத்த விரும்புகிறேன். விவசாயத் துறையைக் கவனிப்பதற்கு ஒரு அமைச்சர் உணவுத் துறை என்று உருப்பெற்ற பிறகு அதைக் கவனிப்பதற்கும், அதைப்பற்றிய கோரிக்கைகளுக்குப் பதில் அளிப்பதற்கும் இன்னொரு அமைச்சர் என்ற வகையிலே இந்த இலாகாக்கள் பிரிக்கப்பட்டிருப்பதும் உள்ளபடியே பெரிய சங்கடத்தை விளைவிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. பாசனத்திற்கான அமைச்சர், அவர்களுடைய இலாகா வேறு. பாசனத்திற்குரிய அமைச்சர் அந்தப் பாசனத்தின் காரணமாக பயிர் எப்படி இருக்கிறது என்று ஆராய்வதற்கு அந்த அமைச்சருக்கு உரிமை கிடையாது அல்லது அதைப்பற்றி எடுத்துச் சொல்வதற்கும், பதில் அளிப்பதற்குமான வாய்ப்பும் அவருக்குக்





கிடையாது. அடுத்து பயிர் நெல்லாக மாறி, அது அரிசியாக மாறுகிற நேரத்தில், மறுபடியும் பாசன இலாகா அமைச்சருக்கு அங்கே உரிமை வருகிறது. இதைக் காணுகின்ற நேரத்தில் இந்த ஏற்பாடு ஒரு வேளை பிரச்னைகளிலிருந்து நழுவிக் கொள்வதற்காகத் திட்டமிட்டு செய்யப்பட்ட ஏற்பாடா, தப்பித்துக் கொள்வதற்கு அமைச்சர்கள் இப்படி இலாகாக்களை பிரித்துக் கொண்டார்களோ என்ற சந்தேகம் கூட வராமல் இல்லை. அப்படிப்பட்ட சந்தேகத்திற்கு இடமில்லை என்று நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எடுத்து விளக்குவார்களா? இப்படிப்பட்ட சூழ்நிலை இனியும் இருக்காத அளவுக்கு இந்தத் துறைகளைப் பொறுத்தவரையிலே விவசாயத் துறைக்கும், உணவுத் துறைக்கும் ஒரே அமைச்சர் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை இந்த மன்றத்தின் முன்னே வைக்க விரும்புகிறேன்.

ஆளும் கட்சித் தரப்பிலும், எதிர்க்கட்சித் தரப்பிலும் எடுத்துச் சொல்லப்பட்ட பல்வேறு விஷயங்கள் ஏறத்தாழ முரண்பாடான வகையில் அமையாமல், ஒருமித்த கருத்துக்களை எடுத்து வைக்கிற வகையிலே அமைந்திருக்கின்றன. நான் சென்ற ஆண்டு நடைபெற்ற இந்த மான்ய விவாதத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பல நண்பர்களும் பேசியிருக்கிற பல்வேறு விதமான உரைகளையெல்லாம் படித்து வைத்திருக்கிறேன். அவைகளிலே ஒரு சிலவற்றை இந்த மன்றத்திலே நினைவு படுத்துவது நல்லது என்று கூட நான் கருதுகிறேன். ஏனென்றால், தமிழகத்திலே முதுகெலும்பு என்று சொல்லத்தக்க விவசாயிகளுடைய பிரச்னை, அவர்கள் நீர், நில வரித் தீர்வைகளினால் பாதிக்கப்பட்டிருப்பது, அவர்களுக்காகச் செய்யப்பட்ட, பாதுகாப்புச் சட்டங்கள், நிவாரணச் சட்டங்கள் அவர்களுடைய வீட்டுக் கதவுகளைத் தட்டாமல், அவர்களுக்கு வாழ்வு அளிக்காமல் மேலும் மேலும் ஆதிக்கமுறையில் இருப்பவர்களுக்கு, பணக்காரர்களுக்கு நிலச்சுவாந்தார்களுக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் திருப்பி விடப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றியெல்லாம் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் எதிர்க்கட்சி தரப்பிலிருந்து சொல்லப்பட்ட கருத்துக்களிலிருந்து மாறுபட்டவையாக இல்லை. ஆகவே, அவைகளில் சிலவற்றை நான் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு 23-ம் தேதி மார்ச்சு திங்கள் இந்த அவையிலே நடைபெற்ற விவாதத்தில் கனம் ஆர். சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். "பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம், உச்சவரம்புச் சட்டம், இப்படியெல்லாம் கொண்டுவந்திருக்கிறோம். நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருந்தாலும், அதை முறியடிப்பதற்காக வசதியுள்ளவர்கள், நிலச்சுவாந்தார்கள் இப்படிப்பட்ட கும்பல்களெல்லாம் சதி செய்து விடுகிறார்கள்" என்று நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் இந்த மன்றத்தில் ஆளும் கட்சியின் தரப்பில் ஒரு வாதத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். வாதம் என்று சொல்லுவதைவிட,

உண்மையை எடுத்துக்கூறினார்கள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள் "புறம்போக்கு நிலங்களை ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுக்கிற பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது. ஆயினும் புறம்போக்கு நிலங்கள் சீக்கிரமாக ஜாரி செய்து கொடுக்கப்படுவது இல்லை. வெள்ளைக்காரன் காலத்தில் தாமதமானால் அர்த்தமுண்டு. இப்போது தாமதம் செய்வதிலே அர்த்தமில்லை" என்று கூறிவிட்டு, சில பல கிராமங்களை அவர் சுட்டிக்காட்டி, அங்கெல்லாம் ஏழைகளுக்குப் புறம்போக்கு நிலங்கள் 'ஜாரி' செய்து தரப்படவில்லை என்பதையும் எடுத்துக் கூறினார்கள். திரு. ஐயாரஜ் என்கிற உறுப்பினர், "60-40 சட்டப் பிரகாரம் விவசாயிகள் பெறுகிறார்களா? அப்படிப் பெற்று அந்நிலம் அவர்கள் கையில் இருக்கிறதா? இல்லை. பெரும் பகுதி விவசாயிகள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அதே போல, திரு. தண்டாயுதபாணி என்கிற உறுப்பினர் பேசுகின்ற நேரத்திலே, "ஆண்டுதோறும் கிஸ்தி கட்டுவதில் மாறுபட்ட நிலை ஏற்படுகிறது. கடந்த ஆண்டு ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஒரு விவசாயி, ரூ. 22 கிஸ்தி செலுத்தினால், மறு ஆண்டு ரூ. 30 என்று நிர்ணயம் செய்கிறார்கள். அது பற்றி கர்ணிகரிடத்தில் கேட்கக் கூட விவசாயிகட்குச் சக்தியில்லை" என்று விவசாயிகளின் சக்தியற்ற தன்மையை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். திரு. கே. பி. பழனிசாமி என்கிற உறுப்பினர், ஆளும் கட்சி உறுப்பினரேதான், "இன்றைக்கு ஒரு விவசாயி, கூலி வேலை செய்துவிட்டு இரண்டு ரூபாய் சம்பளம் பெற்று வருகிறபோது அரிசி வாங்கிச் சாப்பிடக் கூடிய நிலையில் இல்லை. சோளம், கம்புதான் வாங்கிச் சாப்பிடுகிறார்கள்" என்ற அளவிலே ஆளும் கட்சித் தரப்பிலிருந்து, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எடுத்து வைக்கும் உண்மைகளைப் போலவே, எடுத்து வைத்திருக்கிறார்கள். வேண்டுமானால், வோட்டு அளிக்கும் நேரத்தில், ஆளும் கட்சிக்காரர்கள், சிலபல கட்டுப்பாடுகளுக்கு அடங்கி, அவர்கள் எடுத்துச் சொன்ன உண்மைகளுக்கு மாறாக வோட்டு அளிக்க வேண்டிய நிலைமை இருக்கலாம். ஆனால், அவர்களுடைய உள்ளம் எதிர்க் கட்சிக்காரர்களுடையது போலவே விவசாயிகளுடைய குறைகளை எடுத்துக் காட்டுவதில் ஈடுபட்டிருக்கிறது என்பதைக் காட்டவே இந்த எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிட்டேன்.

பொதுவாக நிலவரி, நீர்வரி குறைக்கப்படவேண்டும், தீர்வைகள் குறைக்கப்படவேண்டும் என்கிற பொதுவான கருத்து இங்கே எடுத்துக்காட்டப்பட்டது. இந்தக் கருத்து காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக வருவதற்கு முன்பே, 1938-ம் ஆண்டு என்று நினைக்கிறேன்—அந்த ஆண்டில் பம்பாய் நகரத்தில் காங்கிரஸ் கட்சி மாநாட்டில் ஒரு தீவிரமான தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டது. நிலவரியானாலும் நீர்வரியானாலும், மக்கள், உழவர் பெருங்குடி மக்கள் பளுவை கணிசமான அளவுக்குக் குறைக்கவேண்டும் என்ற தீர்மானம் 1938-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அமைச்சர் வேண்டுமானால் பதிலளிக்கலாம், 1938-ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி





கொண்டுவந்த தீர்மானத்திற்கு இப்பொழுது இருக்கும் காங்கிரஸ் சர்க்கார் பொறுப்பாளிஅல்ல என்று. அப்படியென்றால், அது காங்கிரஸ் கட்சியின் தீர்மானங்கள் எப்படிக் காற்றிலே பறக்க விடப்படுகின்றன என்பதற்கு அதுவும் ஒரு சான்றாக இருக்கும். அமைச்சர்கள் ரூ. 500-க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்கள் யாரும் இருக்கக் கூடாது என்று ஒரு தீர்மானம் கராச்சி மாநாட்டில் கொண்டு வரப்பட்டது. ஆனால், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் அந்தச் சம்பளத்தில் யார் இருக்கிறார்கள்? அந்தத் தீர்மானம் எங்கே போய்விட்டது என்று தெரியாத அளவுக்குப் போய்விட்டது. இந்தத் தீர்மானம் காங்கிரஸ் பம்பாய் மாநாட்டில், நிலவரி, நீர்வரி முதலிய தீர்வைப்பளுவை விவசாயிகளால் சுமக்க முடியவில்லை. ஆகவே, அவை தளர்த்தப்பட வேண்டும், குறைக்கப்படவேண்டும் என்று கொண்டுவரப்பட்டது. ஆனால், இன்றையதினம், அது காங்கிரஸ் கட்சியினால் அலட்சியப் படுத்தப்பட்டிருக்கிறது.

நிலங்கள் மறு அளவை செய்யப்படவேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஜமீன்கள் ஒழிப்புக்குப் பிறகு, கொடுக்கப்பட்டுள்ள குறிப்பின்படி, 9.8 சதுர மைல் தவிர, சுமார் 11,000 சதுர மைல் அளவிற்கு ஜமீன் ஒழிப்பிற்குப் பிறகு, கைப்பற்றிய நிலங்கள் சர்வே செய்யப்பட்டு, ரயத்துவாரி நிலங்கள் மீண்டும் சர்வே செய்யப் படவேண்டும். ஏனென்றால், முன்பு தீர்வைகள் விதிக்கப் பட்டபோது, தரம் வாரி பட்டா வழங்கப்பட்டது. பழைய ரயத்துவாரி நிலங்களை மறுபடியும் தரங்களை நிர்ணயிக்க மறு பரிசீலனை, மறுநில அளவையை மேற்கொள்ள வேண்டும் என்று பல கனம் உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். நானும் அதையே வலியுறுத்த விரும்புகிறேன்.

பொதுவாக, விவசாயத்திலே நாம் எதிர்பார்க்கின்ற முன்னேற்றம் இருக்கிறதா என்றால், இல்லை. நேற்றைய தினம் கூட அமைச்சர், எதிர்பார்த்த உற்பத்தி கிடைக்கவில்லை என்றார்கள். இப்படி எதிர்பார்ப்பது, கிடைக்காதது இவைகளில் மாற்றம் அற்ற நிலைகளுக்கு, நாட்டில் செய்யப்படுகின்ற நிலச் சட்டங்கள் ஒழுங்கான முறையில், திட்டமிட்டபடி அவைகள் நடத்தப்படவில்லை என்பதுதான் தலையாய காரணம் ஆகும். அதைத்தான் திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் பல முறை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கூறும்போது, மன்ற அங்கத்தினர்கள் எடுத்துக்காட்டியதற்கேற்ப, "கடுமையான பொருளாதார நிர்ப்பந்தங்களில் கூட நிலவரியை உயர்த்துவது, விரும்பத்தக்கதல்ல. அதிக உற்பத்தி மூலமாக விவசாயிகளுக்கு அதிக வருமானம் தரச்செய்யும் விவசாயக் கொள்கை இதனால் பாதிக்கப்படும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், மறைந்த லால் பகதூர் சாஸ்திரி. இப்படிப்பட்ட தெளிவான கருத்தை எடுத்துச் சொன்ன பிறகும், அந்த அடிப்படையில் இந்த மாமன்றத்தில் உறுப்பினர்கள், இந்த வரியைத் தளர்த்தி, பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரத்து செய்யப் படவேண்டும் என்று சுட்டிக்காட்டிய பிறகும், விவசாயிகளிடம் ஊக்கமும், உற்சாகமும், உழைப்

[திரு. மு. கருணாநிதி] [15th March 1966

பிற்குத் தரவேண்டிய மதிப்பும் கொடுக்கப் படவேண்டும் என்பனவற்றில் அக்கறை இல்லாமல், கோரிக்கைகள் கேட்பாரற்றுப் போகும் நிலையில் இருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

1963-ம் ஆண்டில் ஃபோர்டு பௌண்டேஷனைச் சேர்ந்த ஒருவர், வுல்ப் லாடோஜின்ஸ்கி என்பவர், இந்தியாவிற்கு வருகிறார். வந்தவர் ஒவ்வொரு மாநிலத்திலேயும், குறிப்பிட்ட மாவட்டங்களை, அங்கே போய் விவசாய ஆராய்ச்சி நடத்துகிறார். அப்படி நடத்திய பிறகு, ஒரு அறிக்கை விடுகிறார். அந்த அறிக்கையில், "வாய்ச்சொல் அளவிலேயே குத்தகைகள் நடைபெறுகின்றன. ரிக்கார்டுகள் இல்லாததால் குத்தகை வாரச் சட்டங்களின்படி உரிமை பெறமுடிவதில்லை; கூட்டுறவு இயக்கத்திலிருந்து உதவி பெறமுடியவில்லை.

"குறிப்பாக தஞ்சை, மேற்கு கோதாவரி பகுதிகளில் 50 சதவிகிதம் அல்லது அதற்கு மேலும் கூட விவசாயிகள் முழுமையாக அல்லது ஒரு பகுதியையாவது வாய்ச்சொல் மூலமே குத்தகைக்கு உழுகிறார்கள். குத்தகைக்காரர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களது நிலையைப் பற்றி அவர்களுக்கே உறுதியில்லை.

"தமிழகத்தில் நிலச்சீர்திருத்தச் சட்டம் தாற்காலிகத் தன்மையில்தான் இருக்கிறது". இப்படி அவர் அறிக்கையில் கூறியிருக்கிறார். இந்த அறிக்கைக்குத் திட்டக் குழுவிடம் நம்முடைய தமிழக அரசாங்கம் அளித்த பதில் என்ன? "அந்த நிபுணரது முடிவுகள், விவசாயிகள் அளித்த பதிலை அடிப்படையாகக் கொண்டது. அதிகாரிகளுடன் கலந்து ஒப்பிட்டுப் பார்க்கவில்லை" என்பதாகும். விவசாயிகளுடைய பதிலை அடிப்படையாகக் கொள்ளாமல் யாருடைய பதிலை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்? ஆசிரியர்களுடைய பதிலையா? ஆலைத் தொழிலாளர்களுடைய பதிலையா? எதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்கிறார்கள். "அதிகாரிகளைக் கலந்தாலோசிக்காமல், இந்த அறிக்கை வெளியிடப்பட்டது" என்று கூறுகிறார்கள். ஆனால், இதற்கு நேர் முரணாக அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர், திரு. காமராஜர், நேற்று முன் தினம் தஞ்சையில், காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில், "விவசாயிகளைக் கலந்தாலோசிக்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில் தான் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. வெளி நாட்டு நிபுணர் விவசாயிகளைக் கலந்தாலோசிக்கிறார்கள். ஆனால், "அதிகாரிகளைக் கலந்தாலோசிக்கவில்லை" என்று தமிழக அரசு சொல்லுகிறது. அதே நேரத்திலே அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் என்ன சொல்லுகிறார்? "மேலேயிருந்து திட்டங்களைப் போடுகிறார்கள்; விவசாயிகளை யாரும் எதுவும் கேட்பதில்லை. கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளைக் கூட்டிப் பேசி திட்டங்களை வகுக்க வேண்டும். இல்லாவிடில் எந்தத் திட்டமும் தோல்வியடையத்தான் செய்யும்" என்று கூறியிருக்கிறார்கள். "முரண்பாடே, உனக்குப் பெயர்தான் காங்கிரஸ் ஆட்சியா?" என்று, கனம் உதவி சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.



15th March 1966] [திரு. மு. கருணாநிதி]

"விவசாயத் தொழிலாளிக்குரிய ஒரு நாள் ஊதியம் ஒரு ரூபாய் என்ற அளவை இன்னும் எட்டிப்பிடிக்காத மாநிலங்களில் ஒன்று தமிழகம்," என்று டில்லியில் நடைபெற்ற விவசாயத் தொழிலாளர் மாநாட்டுக்குத் தயாரிக்கப்பட்ட குறிப்பில் கண்டிருக்கிறது. "நிலச் சீர்திருத்தங்களுக்குப் பிறகும், நாட்டிலே நிலத்தில் ஆதிக்கம் இருந்துவருகிறது. மாநில அரசுகள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமல்படுத்திய பிறகும் இந்த நிலைமை இருக்கத் தேவையில்லை" என்று பதவியிலிருந்து விலகியிருக்கும், முன்னாள் நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள்.

விவசாயிகளுக்காக என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்டால், அவர்களிடம் வரி வாங்குகிறார்கள். 10, 15 ஆண்டுகளுக்கு முன்னே எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், "உழுபவனுக்கு நிலம்" என்ற குரல் எழுப்பிய காலத்தில், இவர்கள் என்ன சொன்னார்கள்? உழுபவனுக்கு நிலம் என்பதுபோல, கட்டியவனுக்கு வீடு சொந்தமா என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு, வீசி அடித்த புயல், ஏற்பட்ட அரசியல் விபத்தின் காரணமாக, விவசாயிகளுக்கு நிலச் சீர்திருத்தச் சட்டம், உச்ச வரம்புச் சட்டம் போன்ற கண்துடைப்புச் சட்டங்கள்தான் இந்த நாட்டில் இன்றையதினம் காட்டப்படுகின்றனவே தவிர, அவைகளால் விவசாயிகள் ஒருக்காலும் மேன்மை அடைந்துவிட முடியாது. நான் சில கணக்குகளை மாத்திரம் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 12-00 noon

1962-ம் ஆண்டின் கணக்கின்படி, தமிழ்நாட்டிலுள்ள நஞ்சை, புஞ்சை மொத்த நிலங்கள் 1,62,43,502 ஏக்கர். இந்த மன்றத்திலே தரப்பட்ட பதிலின் அடிப்படையிலே சொல்லுகிறேன். அதில் நஞ்சை 34 லட்சத்து 20 ஆயிரம் சொச்சம் ஏக்கர். புஞ்சை ஒரு கோடியே 28 லட்சம் சொச்சம் ஏக்கர். உச்ச வரம்புச் சட்டம் என்ற மகா பயங்கரமான சட்டம், புரட்சிகரமான சட்டம், புதுமையான சட்டம், உலகத்திலே எங்கும் காணாமல் இந்தச் சர்க்கார் கொண்டு வந்ததாகச் சொல்லப்படுகிற இந்த தீவிர உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் இந்த ஒரு கோடியே 62 லட்சம் சொச்சம் ஏக்கர் நிலத்திலிருந்து பெற்றிருக்கின்ற ஏக்கர் எவ்வளவு? தொகையைக் கேட்பதற்கே நாணமாக இருக்கிறது. சொல்வதற்கே கூச்சமாக இருக்கிறது. ஆனால், அவர்கள் சொன்னார்கள் துணிந்து. "நாலாயிரம் சொச்சம் ஸ்டாண்டர்டு ஏக்கர் தான் என்று குறிப்பிட்டார்கள். கேட்டால், "அவரவர்கள் பிரித்துக் கொண்டார்கள்" என்று சொல்வார்கள்.

நேற்றையதினம் அமைச்சர் கனம் திரு. கக்கன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "சட்டம் போட்டோம். சட்டத்திற்குள்ளேயே நுழைந்து கொண்டார்களே, என்ன செய்வது?" என்று சொன்னார்கள். "சட்டப்படி பிரித்துக் கொண்டார்கள்" என்ற பதிலைத் தந்தார்கள்.

இதற்கு முன்பு, இதே மன்றத்தில் இருந்த கனம் திரு. மாணிக்கவேலு அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "பிரிக்க வேண்டும்

என்பது தானே நம்முடைய கொள்கை; அவரவர்கள் பிரித்துக் கொண்டார்கள்; நம்முடைய கொள்கை நிறைவேறிவிட்டது" என்று சொன்னார்கள்.

இப்படிப்பட்ட வேடிக்கையான வாதங்கள் தான் தரப்படுகின்றனவே தவிர, "உண்மை நிழலாடி வருகிறதா?" என்பது தான் எங்களுடைய கேள்வியாகும். பிரித்திருக்கிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. பாட்டனார் பெயருக்கு; பாட்டியார் பெயருக்கு; அத்தை பெயருக்கு; அக்காள் பெயருக்கு; தந்தை பெயருக்கு; தங்கை பெயருக்கு; அடுத்த வீட்டில் நம்பிக்கையானவன் பெயருக்கு; வேலைக்காரன் பெயருக்கு; நம்பிக்கையான வேலைக்காரி பெயருக்கு; இப்படிப் பலபேருக்குப் பிரித்திருக்கிறார்கள். ஆனால், அறுவடையாகிற நெல் அவரவர்கள் வீட்டிற்குச் செல்கிறதா? என்றால் இல்லை அறுவடையாகும் நெல் ஆண்டுதோறும் பழைய பத்தாயத்துக்கேதான் போய்கொண்டிருக்கிறது. நெல்லாகப் போகிறதா? என்று கேட்டால், நெல்லாக இல்லாவிட்டால் 'செக்' ஆகப் போகும். ஆகவே, பழைய இடங்களுக்குத்தான் அந்த அறுவடையின் பயன் போய்க்கொண்டிருக்கிறது. எங்கே பிரிக்கப் பட்டிருக்கிறது? இவர்கள் தான், "வரப் போகிறது", 'வரப் போகிறது" என்று முன் கூட்டியே பத்து ஆண்டுகளாகவே சொல்லிவிட்டார்களே." உச்ச வரம்புச் சட்டம் வரப் போகிறது. பெரு நிலச்சுவாந்தார்களே பெருவாரியாகக் காங்கிரசை ஆதரித்துக் கொண்டிருக்கிற நிலப் பிரபுக்களே, பிரிக்க வேண்டியதையெல்லாம் பிரித்து வைத்துக் கொள்ளுங்கள். சட்டம் வருகிற நேரத்தில் பிறகு திண்டாடாதீர்கள். பிறகு எங்களைக் குறை சொல்லிப் பயன் இல்லை" என்று அவர்கள் முன்கூட்டியே எச்சரிக்கை செய்து, இந்த 1,62,43,502 ஏக்கரும் ஏறத்தாழ மிகத் தந்திரமாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.

தஞ்சை மாவட்டத்திலே உள்ள கணக்கை மாத்திரம் சொல்லுகிறேன். பரிதாபகரமாக இருக்கும். அங்கே நஞ்சை, புஞ்சை பட்டாக்களில் 1960-ம் ஆண்டிற்கு முன்பிருந்த பட்டாக்கள் 4,89,732. 1961-ம் ஆண்டில் இந்த மகா புரட்சிகரமான சட்டம் வந்தது. 1962-ம் ஆண்டில் உள்ள பட்டாக்களின் எண்ணிக்கை 6,41,958 ஆக மாறுகிறது. எப்படி? உச்ச வரம்பு காரணமாக, நான் முதலிலேயே கூறிய வகையிலே, பிரிக்கப்பட்டு, பட்டாதார்கள் அதிகமாக ஆகிறார்கள்.

தஞ்சை மாவட்டத்திலே, 1952-ம் ஆண்டுக் கணக்கின்படி, ஒரு ரூபாயும் அதற்குக் குறைந்தும் நிலவரி செலுத்திய பட்டாதார்கள் 1,48,491 பேர்கள். ஆயிரம் ரூபாயும் அதற்கு மேலும் வரி செலுத்திய பட்டாதார்களின் எண்ணிக்கை 481 பேர்கள். இந்த 1,48,491 பட்டாதார்களுக்குச் சொந்தமான நிலம் 43,570 ஏக்கர். 481 பட்டாதாரர்களுக்குச் சொந்தமான நிலம் எவ்வளவு தெரியுமா? 1,30,305 ஏக்கர் இந்தப் பட்டாதார்கள் தான் இந்த உச்சவரம்புச் சட்டத்திற்குப் பிறகு நிலங்களைப் பிரித்து, பட்டாதார்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கியவர்களே தவிர, உரிமையை வஞ்சகமாக, தந்திரமாக இன்றையதினம் தாங்களே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.





1957-ம் ஆண்டுக் கணக்கின்படி தமிழ்நாட்டில் அரசாங்க ஏற்பாடுகளில் இயங்கும் ஸ்தாபனங்கள் என்ற வகையில் பெரிய கோயில்கள் 12,925. பெரிய மடங்கள் 218. சிறு தரும நிலையங்கள் 16,295. பெரிய தரும நிலையங்கள் 668. மொத்த ஸ்தாபனங்கள் 30,106. இந்த மொத்த ஸ்தாபனங்களுக்கும் சொந்தமான நிலம் எட்டு லட்சம் ஏக்கர். இதற்கு உச்சவரம்பு கிடையாது.

அது மாத்திரமல்ல. திருப்பனந்தாள், தருமபுரம், திருவாவடுதுறை ஆதீனங்களுக்குச் சொந்தமான, அனைத்தும் துறந்த துறவிகள் வாழ்கிற இந்தப் பண்டாரசந்நிதானங்களுக்குச் சொந்தமான நிலம் இரண்டு லட்சம் ஏக்கர். அதற்கு உச்சவரம்பு கிடையாது.

1955-ம் ஆண்டுக் கணக்கின்படி தஞ்சை மாவட்டத்திலே உள்ள பெருநிலச்சுவாந்தார்கட்குச் சொந்தமான நிலம் 40,500 ஏக்கர் ஒரு மாவட்டத்திலே மாத்திரம் இருக்கிற பெருநிலச்சுவாந்தார்கள்—குறிப்பாகக் காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பவர்கள்—ஆளும் கட்சியிலே அங்கம் வகிப்பவர்கள். அவர்களுக்குச் சொந்தமான நிலம் 40,500 ஏக்கர். ஆனால், இந்த மாநிலம் முழுவதும் நமக்குக் கிடைத்திருக்கும் நிலம் நாலாயிரம் சொச்சம் ஸ்டாண்டர்டு ஏக்கர் தான்.

ஒரு மாவட்டத்தில் உள்ள பெருநிலச்சுவாந்தார்களுக்குச் சொந்தமான நிலம் 40,500 ஏக்கர் என்று சொன்னேன். வடபாதிமங்கலம் திரு. வி. எஸ். தியாகராஜ முதலியாருக்கு ஒன்றிரண்டு ஏக்கர் அல்ல; 12,000 ஏக்கர். கரும்பு போட்டுவிட்ட காரணத்தால் இந்த உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து அவர் தப்பித்துக் கொள்ளுகிறார். அதைத்தான் ஆளும் கட்சியின் சார்பிலே பேசிய கனம் உறுப்பினர் பாண்டியன் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். இப்படித் தப்பித்துக்கொள்ள பல வழிகள் அவர்களுக்குச் சொல்லித்தரப்பட்டுவிட்டன என்று காங்கிரஸ் தரப்பிலிருந்து எடுத்துக் காட்டப்பட்டது. 12,000 ஏக்கரில் பெரும்பகுதி, கரும்பு போடப்பட்ட காரணத்தால், உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து காப்பாற்றப்படுகிறது. அடுத்து, பூண்டி வாண்டையார். காங்கிரஸ் கட்சிக்குத் தஞ்சை மாவட்டத்திலே பெரும் தூண். ஏழாயிரம் ஏக்கர் புஷ்பம் கல்லூரிக்கு அவைகளிலே பெரும் பகுதி தொடர்பு படுத்தப்பட்டு, உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து அவர் தப்பித்துக் கொள்ளுகிறார். குன்னியூர் சாம்பசிவ அய்யர் 5,000 ஏக்கர். குத்தகைதார் கூட்டுறவு சங்கம் என்ற அந்தச் சங்கத்திலே தொடர்பு ஏற்படுவது காரணமாக அவர் பல ஆயிரம் ஏக்கர்களுக்கு உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விலக்கு பெறுகிறார். சீர்காழி முதலியார் 6,000 ஏக்கர். திரு. சீனிவாச முதலியார் 4,500 ஏக்கர். திரு. என். எஸ். ராமலிங்க முதலியார்

2,000 ஏக்கர். குன்னம் அய்யர் 6,000 ஏக்கர். இவர்கள் எல்லாம் மிகத் தீவிரமாக ஜனநாயக சோஷலிசத்தை உலகத்திற்கே போதிக்கின்ற அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய தலைமையிலே பணியாற்றுகின்ற சீரிய பெரும் தொண்டர்கள். அவர்கள் இருக்கின்ற காங்கிரஸ் கட்சியிலே தான் இந்த நிலைமை, இதைத்தான் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். அதை மாத்திரம் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"மிக விரிந்து பரந்த வளங்கள் கொண்ட நாடு ஏன் உணவுப் பிரச்சினையில் சிக்கிக் கொண்டிருக்கிறது? நிலச் சீர்திருத்தங்களை ஏன் நமது சட்டசபையினர் செய்ய முடிவதில்லை? பொருளாதார நலன்களைத்தான் சட்டசபையினர் பெரிதாகக் கருதிக் கொள்கிறார்கள். நம்மால் நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியவில்லை. நாம் ஜமீன்தாரிகளை, மிராசுதார்களை ஒழித்துவிட்டோம். நிலப்பிரபுக்கள் இன்னும் இருக்கிறார்கள். நமது சட்டசபையினர் இதைத் தடுக்க தேவையான சட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. காரணம், அவர்கள் மீதும் ஆதிக்கம் இருக்கிறது." இதைப் பேசியவர் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள். மார்வாரி சங்கத்தில் பேசியிருக்கிறார். பேசிய இடம் வார்தா. காந்தியார் உலவிய இடம். ஆகவே, உண்மைக்குப் பெயர் போன இடம். புனிதத்திற்குப் பெயர் பெற்ற இடம். அந்த இடத்தில் குடியரசுத் தலைவர் உண்மையைச் சொல்லுகிறார். "நமது சட்டசபையினர் நிலச் சீர்திருத்தத்திற்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. காரணம், அவர்கள் மீதும் ஆதிக்கம் இருக்கிறது". நான் படித்துக் காட்டிய பட்டியலுக்கு உரிய பெருநிலச்சுவாந்தார்களுடைய ஆதிக்கம் இருக்கிற காரணத்தால் நிலச் சீர்திருத்தம் ஒழுங்காக உருவெடுக்கவில்லை, விவசாயிகள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கண்ணீர் துடைக்கப்படவில்லை என்ற நிலைமையில் அவர்களை மேலும் மேலும் புண்படுத்துகின்ற வகையிலே விதிக்கின்ற வரிகளைத் தளர்த்தவேண்டும், ரத்து செய்யவேண்டும் என்பதைக் குறித்து எங்களுடைய கட்சி சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**கனம் திரு. வெ. ராமைய்யா** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று சபைக்கு முன் நான் வைத்திருக்கும் மானியக் கோரிக்கைகளைக் குறித்து பல கனம் அங்கத்தினர்கள் சபையிலே பேசியதுடன், பல வெட்டுப் பிரேரணைகளையும் அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்ற முறையில் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுப் பிரேரணைகளைக் கவனித்துப் பார்க்கும்போது சில முக்கியமான ஆலோசனைகளுக்கு முதலில் பதில் கூறிவிடலாம் என்று நினைக்கிறேன்.

இந்த வருஷம் பருவ மழைக் கோளாறினால் ஏற்பட்டிருக்கக் கூடிய கஷ்ட நிலையைப் பற்றி எல்லா மாவட்டங்களில் இருந்தும்



137840



வந்திருக்கக் கூடிய அங்கத்தினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்று மட்டும் அல்ல. இந்தக் கூட்டுத் தொடரிலே பல கவன ஈர்ப்புப் பிரேரணைகளையும் கொடுத்திருக்கிறார்கள். இந்த வருஷ நிலையைப் பார்க்கும்போது எல்லோரும் ஒப்புக்கொள்ள... கடந்த பல வருஷங்களாக நாம் காணாத பயங்கர நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது தான். பொதுவாக இது நம் ... மட்டும் பாதிக்கவில்லை. உண்மையிலேயே கடந்த நவம்பர் மாத வாக்கில் நாம் சூழ்ந்து நிலைமையைக் கவனித்தபோது பயங்கரமான தாகத்தான் இருந்தது என்றால் அது மிகையாகாது. தென் மேற்குப் பருவமழையும் நமக்கு பாதகமாக இருந்தது. வடகிழக்குப் பருவ மழையும் நமக்கு ஆரம்ப கட்டத்தில் சாதகமாக அமையவில்லை. அந்தப் பயங்கரமான நிலை தொடர்ந்திருந்தால் நம் ராஜ்யம் எத்தகைய ஒரு பெரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் என்பதைச் சிந்திக்கும்போது நாம் செய்த அதிருஷ்டமோ என்னமோ வடகிழக்குப் பருவ மழையினால் பின்பகுதியில் நல்ல மழை ஏற்பட்டு நாம் காப்பாற்றப்பட்டோம் என்றால் மிகையாகாது. கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டபடி பாசன வசதி பெற்றிருக்கக்கூடிய இடங்களில், வழக்கம்போல் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைத்து நாம் நிம்மதியாக இருக்க முடிந்தது என்று சொல்வதற்கில்லை. ஆகையால்தான், இந்த வருஷம் நமக்கு எதிர்பாராத வகையில் ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமையைக் கவனத்தில் கொண்டு ரெவின்யூ இலாகாவினர் கொஞ்சம் தாராளமான வகையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம். நேற்றையதினம் பல அங்கத்தினர்கள் எழுப்பிய கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குப் பதில் அளிக்கும்போதுகூட எல்லோருடைய கருத்துக்களையும் மொத்தமாக வைத்து, அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை எடுத்துச் சொன்னேன். விசேஷமாக திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில் ஒரு சில பகுதி, தஞ்சை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள நிலைமை—எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னேன். இந்த வருஷம் மொத்தமாகக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டபடி ஜமாபந்தி காலத்தில்தான் மனுக்கள் கொடுத்து தீர்வு காணப்படவேண்டும் என்ற நிலை இல்லாமல் ரெவின்யூ போர்டில் உள்ள பொறுப்புள்ள அதிகாரி ஒருவரே அங்கெல்லாம் சென்று ரெவின்யூ அதிகாரிகளுடன் கலந்து இருக்கக்கூடிய நிலைமைக்கேற்ப நிவாரணம் அளிக்க வழிவகுக்கவேண்டும் என்பதாக அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. ஜமாபந்திக்குப் பிறகு போகக்கூடிய அதிகாரி இந்த வருஷம் முன்கூட்டியே தஞ்சை ஜில்லாவிற்குப்போய் இருக்கிறார். எல்லா விஷயங்களையும் நேரிடையாகக் கவனித்து சர்க்காருக்கு ஓர் அறிக்கையும் கொடுத்திருக்கிறார். நேற்று ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் போது எவ்வளவு என்று புள்ளிவிவரம் கொடுத்தேன். தஞ்சை ஜில்லாவில் இருந்து வந்தவர்கள் அது மிகவும் குறைவு என்று சொன்னார்கள். அதைத் தொடர்ந்து பரிசீலனை செய்யலாம். அதிகாரிகள் பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

[திரு. வெ. ராமைய்யா] [15th March 1966

கனம் அங்கத்தினர் திரு. தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் பேசும்போது இப்போது இருக்கக்கூடிய ஸ்டாண்டிங் ஆர்டர்படி பஞ்சப் பகுதியாகிய இராமநாதபுரம் போன்ற இடங்களுக்குத் தான் நிவாரணம் கிடைக்கலாம் என்பதாகவும், அத்தகைய நிலை தஞ்சை ஜில்லாவில் இல்லாவிட்டால் பயிர் தீய்ந்து போன நிலை ஏற்பட்டு விளைச்சல் கணிசமாகக் குறைந்திருக்கிறது, எப்போதும் போலக்காணவில்லை, ஆகவே, இதை அரசாங்கம் தனியாகப் பரிசீலனை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதை அரசாங்கம் உணர்ந்திருக்கிற காரணத்தினால்தான் விசேஷ கவனம் எடுத்துக்கொண்டு அதிகாரியை முன் கூட்டியே அனுப்பி, விவரங் களைச் சேகரித்திருக்கிறோம். பொதுவாக தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் வருஷா வருஷம் தென்மேற்குப் பருவ மழை யினால் பயிர் வெள்ளத்தில் மூழ்கிவிட்டதான செய்திதான் வரும். யினால் பயிர் வெள்ளத்தில் மூழ்கிவிட்டதான செய்தி தான் வரும். ஆனால் இவ்வாண்டு பருவ மழை இல்லாத காரணத்தினால் ஆரம்பக் கட்டத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை. பின்னால் வடகிழக்குப் பருவ மழையினால் சில இடங்களில் பயிர் தண்ணீரில் மூழ்கிற்று. இது சாதகமானதா, பாதகமானதா என்ற சர்ச்சைக்குள் நான் போகவில்லை. வழக்கம் போல் இன்றி இவ்வாண்டு தண்ணீர் கிடைக்காத கஷ்டம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு இதுபோல ஏற்படவில்லை. உணவு நெருக்கடி நிலைமையை உத்தேசித்து நான் அடிக்கடி அங்கே போனபோது பார்த்தேன். ஆகவே தான் விசேஷ அக்கறை காட்ட வேண்டும் என்று சொன்னேன். அந்த அடிப்படையில் திரு. தர்மலிங்கம் அவர்கள் கூட என்மீது குறை சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டது. "தஞ்சை மாவட்டத்திற்குத் தண்ணீர்விடவேண்டுமென்று எங்கள் பகுதியில் குறம்பு அடைக்கக் கூடாது என்று சொல்லி விட்டார்கள்" என்றார். தஞ்சையில் இருக்கக்கூடியவர்கள், "திருச்சி ஜில்லாக்காரர்கள் குறம்பு அடைத்து எங்களுக்குத் தண்ணீர் கிடைக்காதபடி செய்து விட்டார்கள்" என்று சொல்வார்கள். அவரவர்கள் மனதில் இப்படி உதிக்கும். திருச்சி ஜில்லா, தஞ்சை ஜில்லா, சேலம் ஜில்லா என்ற ஜில்லா அடிப்படையில் இந்தப் பிரச்னையை அணுகாமல் உணவுப் பிரச்சினையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் யாரும் குறை சொல்ல இடமிருக்காது. சம்பாப் பயிரைப் பொறுத்தவரையில் தஞ்சை ஜில்லா விவசாயிகள் ஒன்றும் சொல்லமாட்டார்கள். ஆனால் தாளடிப் பயிரைப் பொறுத்தவரையில் நாம் எதிர்பார்த்தபடி விசேஷ விளைச்சல் ஏற்பட்டது என்று நான் சொல்லத் தயாராய் இல்லை. அதற்காகத்தான் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

அதுபோல ராஜ்யத்தின் மற்றப் பாகங்களில், பின் தங்கிய பாகங்களில் இந்த வருஷம் மழை இல்லாத காரணத்தினால் பயிர் தீய்ந்து போய்விட்டது. சங்கரன்கோயில், தென்காசி போன்ற இடங்களில் பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே வரி வஜா, கடன் வசூல் ஒத்திவைப்பு ஆகியவை மட்டும் போதாது. இதனால் நிலச்சுவாந்தார்கள் தான் நன்மை அடைவர். அதே



15th March 1966] [திரு. வெ. ராமைய்யா]

சமயம் விவசாயக்கூலிகள் வேலை கிடைக்காது அடைந்திருக்கிற கஷ்டத்தையும் நாம் போக்கவேண்டுமென்றால் அங்கே வேலை வாய்ப்பையும் தேடித்தரவேண்டும். அதன் காரணமாகத்தான் அதுபோன்ற பகுதிகளில் பஞ்ச நிவாரண வேலைகளையும் ஆரம்பித் திருக்கிறார்கள். அதைப்போலவே இராமநாதபுரம் ஜில்லாவிலே ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதிகளிலும் இப்படிப்பட்ட வேலைகளைத் துவக்கியிருக்கிறார்கள். அங்கங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள், எங்கே விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அல்லது நிலத்தை நம்பியிருக்கக்கூடியவர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் பார்த்து நிவாரண வேலைகளைச் செய்யக்கூடிய முறையில் அரசாங்கம் இதில் தயக்கமில்லாமல் உதவியளிக்கும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திரு. எம். எஸ். செல்வராஜன் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் பேசும்போது ஒரு விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். தண்ணீரைப் பயன்படுத்துவதிலே ஒரு விவசாயினுடைய முயற்சியின் காரணமாக இதற்கு முன்பு செட்டில்மெண்ட் அடிப்படையிலே தண்ணீருக்கு உரிய இடம் என்று இல்லாமல் புதிய இடத்திலே தண்ணீர் பாய்ச்சினால் அதற்கு தண்டத்தீர்வை 20 மடங்கு அல்லது அதிகமாகவே போடக்கூடிய நிலைமை இருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக் கிறது. உணவு உற்பத்தியை அதிகமாக்கவேண்டுமென்று சொல் லும்பொழுது ஒரு விவசாயி பெருமுயற்சியுடன் நல்ல முயற்சியிலே ஈடுபடும்பொழுது தண்டத்தீர்வை போடவேண்டுமா என்ற கேள்வி எழும்பொழுது இது அவசியமில்லை என்று சொல்லலாம். ஆனால் இதில் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. மேலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக் காமல் இருக்குமானால் பயன் இல்லாமல் போகும். லோயர் ரைப்பேரியன் ரைட்ஸ் பாதிக்கப்படக் கூடாது. அவர்கள் சொன்னதைக் கவனிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அந்தப் பகுதியிலே யாருக்கும் பாதகம் இல்லாமல் இருக்குமானால் ரீசெட்டில்மெண்ட் ஆகவேண்டுமென்பதற்காகக்கூட காத்திராமல் தண்டத் தீர்வை விலக்கு கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்பு திருநெல்வேலி ஜில்லாவில் தண்டத் தீர்வை பாதகமில்லா பகுதிகளிலே போடுவது இல்லை என்று உணர்ந்த காரணத்தால் அப்பொழுது சாதகமாகச் செய்தோம். இது ஒரு பகுதியில் மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதைப்பற்றி பரிசீலனை செய்து பாதகம் இல்லாமல் ஒரு விவசாயி தண்ணீரைப் பயன்படுத்தினால் தண்டத் தீர்வை இல்லாமல் செய்யலாமா என்பதைப் பரிசீலிக்கத் தயாராக இருக் கிறேன் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் அலைன்மெண்ட் முறையில் யாரோ ஒரு பெரும் செல்வந்தருக்கு அலைன்மெண்ட் செய்துவிட்டதாக ஒரு குற்றச்சாட்டு அல்ல, ஒரு குறையைச் சொன்னார்கள். ஆனால் அதே நேரத்தில் அது செட்டில்

மெண்டில் நடந்ததாகச் சொன்னார்கள். அலைன்மெண்டில் அப்படி நடந்திருக்க முடியாது. செட்டில்மெண்டில் போதிய தஸ்தாவேஜுகள் இருந்து, அவர்களுக்கு உரிமை இருந்தால் அதில் நாம் தலையிட முடியாது. அலைன்மெண்ட் என்பது நிலம் இல்லாதவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. இன்னும் சில அங்கத்தினர்கள் பேசினார்கள், நிலம் இல்லாத ஏழைகள், 10 வருஷம், 20 வருஷம், அல்லது 30 வருஷம், 1 ஏக்கர் அல்லது 2 ஏக்கர், 50 செண்ட் நிலத்தை வைத்துக்கொண்டு விவசாயம் செய்யக்கூடியவர்கள் தொடர்ந்து விவசாயம் செய்யமுடியாமல் அப்புறப்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது என்று. இப்பொழுது இருக்கிற விதிமுறைகளின்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். உண்மையிலேயே பல வருஷங்களாக சாகுபடிக்காக நிலம் வைத்திருப்பவர்களுக்குப் பாதகம் ஏற்பட்டால் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக இந்த இலாகா தயாராக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான கோரிக்கை ஒன்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த வருஷம் பருவ நிலை காரணமாக ப்ராஜக்ட் ஏரியாக்களில் எல்லாம் அதிகமாக விவசாயம் இல்லை, லோயர் பவானி, மேட்டூர் கெனால்ஸ் இந்தப் பகுதிகளைப் பொறுத்தவரையில், இரிகேஷன் இலாகாவைப் பொறுத்தவரையில், தண்ணீர் திறந்துவிடவில்லை என்பது எனக்குத் தெரியும். அங்கே தள்ளுபடி செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது தெரியவில்லை. காலாகாலத்தில் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக மிக முக்கியமாகப் பேசப் பட்டது நில உச்சவரம்புச் சட்டம் சம்பந்தப்பட்டது. கனம் உறுப்பினர் மாதவன் அவர்களும் இன்னும் மற்ற பல அங்கத்தினர்களும் இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய முடிவுகளைக் குறித்துச் சொன்னார்கள். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் இந்தச் சட்டம் அமுல் நடத்தப்பட்டதைக் குறித்து அவர்களுக்கு இருக்கக்கூடிய முறையிலே உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ரொம்ப ஜாஸ்தி இல்லை. அதை அவர்களே சொல்கிறார்கள். இந்த ராஜ்யத்திலே சாகுபடிக்கு தகுந்ததாக இருக்கக்கூடிய நிலத்தினுடைய புள்ளிவிபரத்தைப் பொறுந்த வரையில் 1 கோடியே 50 லட்சம் என்று சொன்னார்கள். இவ்வளவு நிலம் இருக்கக்கூடிய நம்முடைய ராஜ்யத்தில் நில உச்சவரம்பிற்குக் கட்டுப்பட்டு வந்தது, நான் கொடுத்த புள்ளி விவரம், இதுவரை நம்முடைய கைக்கு வந்திருப்பது. ‘ The total extent of taken over and to be taken over lands by 9th March 1966 ’. 6,714 ஏக்கர் என்று சொன்னேன். இந்த மாதம் முடிவடைவதற்குள் வரவேண்டியது 2 ஆயிரத்து 657 ஏக்கர். ஆக மொத்தம் மார்ச்சு மாதத்திற்குள் வரவேண்டிய அளவு 9,371 ஏக்கர். இன்னும் மீதம் இருக்கக்கூடிய 1,594 கேஸ்களிலே பல கட்டங்களில் வேலை முடிந்து வரவேண்டிய நிலம் எவ்வளவு இருக்கிறது என்றால்





80 ஆயிரம் ஏக்கருக்கு மேல் வரவேண்டியிருக்கிறது. இது ஜூன் மாதத்திற்குள் முடிவடையலாம் என்று எனக்குக் கொடுத்த குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்பொழுது ஏறத்தாழ 1½ கோடி ஏக்கர் நிலம் இருக்கக்கூடியதில் இவ்வளவு குறைவாகத்தானா நிலம் வந்தது என்று சொன்னார்கள். நாம் இந்தச் சட்டத்தைக் கூர்ந்து கவனித்தோமானால் 30 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் உள்ளவர்கள் கொடுக்கலாம் என்று இருக்கிறது. 1½ கோடி ஏக்கர் நிலம் உள்ள ராஜ்யத்தில் 30 ஏக்கர்கள் என்று உச்ச வரம்பு வைத்த பிறகு ஏன் இவ்வளவு குறைவாக இருக்கிறது என்றால் 1½ கோடி ஏக்கர் நிலமும் உச்சவரம்பிற்குக் கட்டுப்பட்ட நிலம். ஆகவே அதிகமாக ஏன் வரவில்லை என்று யாரும் கேட்கமாட்டார்கள். அதுவும் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அப்படி நினைக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். 30 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாகத்தான் இருக்கும். ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களும் குறைவாக இருப்பார்கள். இதையெல்லாம் உணர்ந்து இந்தச் சட்டத்திற்குள் எது எது வரும் என்பதையெல்லாம் இந்தச் சபையிலே பரிசீலனை செய்யப்பட்டுதான் ஒரு முடிவு ஏற்பட்டிருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** 1½ கோடி ஏக்கர் நிலமும் உச்சவரம்பிற்குள் வரவேண்டுமென்று நான் சொல்லவில்லை. 10 ஆயிரம், 12 ஆயிரம், 15 ஆயிரம் ஏக்கர் நிலம் என்று வைத்திருக்கிறார்களே, அவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டது எவ்வளவு என்றுதான் கேட்டேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுது இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையிலே என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமோ அது எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்தச் சட்டம் இந்தச் சபையிலே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சட்டம். இந்த உச்ச வரம்புச் சட்ட வேலையைப் பொறுத்த வரையில் கடந்த ஒரு வருஷமாக தீவிரமான கவனஞ்செலுத்தி, துரிதமான முறையில் இதை நிறைவேற்றக்கூடிய முறையில் கால அட்டவணையெல்லாம் நிர்ணயம் செய்து அதற்கு வேண்டிய முறையில் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

கனம் அங்கத்தினர் திரு. ஆர். வி. சாமிநாதன் அவர்கள் ஒரு 12·30 p.m.
கருத்தைச் சொன்னார்கள். அவர்களுடைய மாவட்டத்தைப் பொருத்தவரை, அரசாங்கம் சொல்லும்போதும், கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போதும் அங்கு வரி பாக்கி ஏராளமாக இருப்பதாகச் சொல்கிறார்கள், அங்கிருக்கிற விவசாயிகள் அது போன்ற நிலுவை ஒன்றுமில்லை என்று சொல்கிறார்கள்; இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்கத்தில் இருக்கக்கூடியவர்களோ, அதிகாரிகளோ பிறரைக் கலந்து பேசுவதிலே ஏன் தயக்கம் காட்ட வேண்டுமென்று கேட்டார்கள். யார் நல்ல ஆலோசனைகளைச் சொன்னாலும் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதிலே சந்தேகமே இல்லை. கனம் அங்கத்தினர் அந்த வட்டார நிலையை எடுத்துச் சொன்னதைப் போல் சொல்லும்

[திரு. வெ. ராமைய்யா] [15th March 1966

பட்சத்தில் அவரைக் கலந்து பேசுவதிலோ அல்லது அவர்கள் யாரைக் கலந்து பேசினால் நல்ல முடிவுக்கு வரமுடியும் என்று சொல்கிறார்களோ அவர்களைக் கலந்து பேசுவதிலோ அரசாங்கத்திற்குத் தயக்கம் கிடையாது. திரு. சாமிநாதன் அவர்கள், அவர்களுடைய மாவட்டத்திலே கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே நிலுவை பாக்கி ரொம்ப அதிகமாக இருப்பதற்கு விவசாயிகள் பொறுப்பாக இருக்க முடியாது, கணக்கில் கோளாறு இருக்க வேண்டும். அதை ஆராயவேண்டும் என்று சொன்னார்கள். இதைப் பற்றி ஆராய விசேஷ அதிகாரியை நியமிக்க வேண்டுமா, இப்போது இருக்கிற அதிகாரிகளைக் கொண்டே ஆராயலாமா என்பதைப் பற்றி முடிவு செய்ய அடுத்த மாதத்தில் ஒரு தேதியை நிர்ணயித்தால் நானே அந்தப் பகுதிக்கு வரத் தயாராக இருக்கிறேன்.

கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள், நில உச்ச வரம்புச் சட்டத்தைப் பற்றியும், இனும் ஒழிப்புச் சட்டம் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். அந்தச் சட்டங்களை அமல் படுத்துவதிலே ஹைகோர்டிலே இருக்கிற ஒரு சில கேஸ்களைத் தவிர—அவை கூடத் தீர்ப்பாகியிருக்கும், அல்லது விரைவில் தீர்ப்பாகிவிடும்—மற்ற எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தியாகி, பிறகு சர்வே செட்டில்மெண்ட் சம்பந்தமாக வேண்டிய அதிகாரிகளைப் போட்டு விரைவில் நடத்துவதற்கான முயற்சிகளை இப்போது செய்து கொண்டிருக்கிறார்கள்.

MR. DEPUTY SPEAKER: The Hon. Speaker has allotted $2\frac{1}{2}$ hours for the discussion on these Demands. That time-limit has now come to a close. So I am going to put the Demands to the vote of the House.

THE HON. SRI V. RAMAIAH: I will reply to just one point raised by the hon. Deputy Leader of the Opposition.

நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். செட்டில்மெண்டைப் பொருத்தவரை மீண்டும் பரிசீலனை செய்து ரயத்துவாரி ஏரியா பூராவும் ரீ-செட்டில்மெண்ட் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். 1930-க்குப் பிறகு ரீ-செட்டில்மெண்ட் பண்ணாத காரணத்தால் விவசாயிகளுக்குப் பளு அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் ரீ-செட்டில்மெண்ட் செய்யும்போது பளு குறையும் என்று சொல்லமுடியாது; குறையாது. சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் ரீ-செட்டில்மெண்ட் செய்யும்போது என்னென்ன காரியங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். டிரான்ஸ்-போர்ட், கம்யூனிகேஷன் ஆகியவற்றைப் பற்றிக் கவனத்தில் கொள்ள வேண்டும். விசேஷமாக அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய எகனமிக் கண்டிஷனை ஞாபகத்தில் வைக்கவேண்டும். திட்டங்களினால் வளர்ச்சியடைந்திருந்தால் ரீ-செட்டில்மெண்ட் வருவதால் விவசாயிகளுக்கு லாபமாக இருக்காது. ஆகவே,



15th March 1966] [திரு. வெ. ராமைய்யா]

அதைச் செய்யாமல் நில வரி, நீர் வரியை நிரந்தரமாக்கும் நேரத்தில் அப்போதைக்கப்போது ஏற்படக்கூடிய நிலைக்குத் தகுந்த முறையில் விசேஷ வரிகளைப் போட்டிருக்கிறார்கள். இதிலே பல சங்கடங்கள் இருப்பதையும், விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய தொந்தரவுகளைப் பற்றியும் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால்தான் நம்முடைய ராஜ்ய முதலமைச்சர் அவர்கள் பொதுவிவாதத்திற்குப் பதில் சொல்லும் போது, எப்படிக் குறைக்க வேண்டும், எதைக் குறைக்க வேண்டும் என்பதைப் பற்றிய ஆராய்ச்சிகள் தீவிரமாகச் செய்து தான் இந்த வரி விதிப்புகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினார்கள். அந்த நிலையில் இந்த மானியத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

The cut motion of Sri Saw Ganesan to Demand No. I—Land Revenue Department was put and lost.

The cut motion of Sri T. P. Alagamuthu to Demand No. I—Land Revenue Department was put and declared.

A poll was demanded.

The Hon. Speaker called first those Members who were in favour of the cut motion to rise in their seats and then those who were against the cut motion in each block. The number of Members who rose in favour of the cut motion was 35 and the number of Members who rose against the cut motion was 59.

The cut motion was declared lost.

MR. SPEAKER: The question is:—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,17,40,900 under Demand No. I—Land Revenue Department."

The Demand was put and carried and the Grant was made.

The cut motions to Demand No. IV Stamps Administration were put and lost.

MR. SPEAKER: The question is:—

"That the Government be granted a sum not exceeding Rs. 32,08,400 under Demand No. IV-Stamps Administration."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion to Demand No. XXXI—Famine Relief was put and lost.

MR. SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 11,14,300 under Demand No. XXXI—Famine Relief."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion to Demand No. XXXVII—Compensation to Zamindars was put and lost.

[15th March 1966

MR. SPEAKER: The question is :—

" That the Government be granted a sum not exceeding Rs. 9,50,000 under Demand No. XXXVII—Compensation to Zamindars ".

The Demand was put and carried and the grant was made.

(5) DEMAND No. XXVII—PUBLIC WORKS—WORKS.

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 6,60,94,400 under Demand No. XXVII—Public Works—Works."

*திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி* : கனம் தலைவர் அவர்களே, கிராம புறங்களிலுள்ள பாசன வாய்க்கால்களைப் பொது மராமத்து இலாக்காவே மராமத்து செய்து கொடுக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

" That the allotment of Rs. 6,60,94,400 under Demand No. XXVII—Public Works—Works be reduced by Rs. 100."

*திரு. சா. கணேசன்* : கனம் தலைவரவர்களே, 'சென்னை மாநிலப் பெருஞ்சாலைகள் பலவற்றின் சீர்கேட்டைத் திருத்தவும் குறுகிய பாலங்களை அகலப்படுத்தவும் வேண்டும் என்பதை எடுத்துக் காட்ட' என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கின்றேன்.

" That the allotment of Rs. 6, 60, 94,400 under Demand No. XXVII—Public Works—Works be reduced by Rs. 100."

(6) DEMAND No. XXVIII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

THE HON. SRI V. RAMIAH : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 2,68,86,800 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant.

*திரு. து. ப. அழகமுத்து* : என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

" That the allotment of Rs. 2,68,86,800 under Demand No. XXVIII—Public Works-Establishment and Tools and Plant be reduced by Rs. 100."

(7) DEMAND No. XLII—CAPITAL OUTLAY ON PUBLIC WORKS.

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the remmendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 5,00,70,400 under Demand No. XLIII—Capital Outlay on Public Works."



15th March 1966]

*திரு. து. ப. அழகமுத்து* : என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

" That the allotment of Rs. 5,00,70,400 under Demand No. XLIII—Capital Outlay on Public Works be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion. We may not go beyond 2-00 p.m. The hon. Member Sri M. R. Krishnamoorthi may now speak.

* *திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி* : கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பொதுமராமத்து இலாகா மான்யத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக பொதுமராமத்து இலாகாவைப் பொறுத்தவரையில் வெகுவான மந்த நிலைமையும் அதே நேரத்தில் லஞ்ச ஊழலும் தலை விரித்தாடுகிற நிலைமையை நான் நன்றாகக் காண்கிறேன். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இப்போது ஒரு பஞ்சாயத்தில் ஒரு பாலம் கட்டவேண்டுமானாலும் பி. டபிள்யூ. டி. யில் உள்ள எஸ்.இ. அளவில் பி.டபிள்யூ.டி. பெர்மிஷன் கொடுக்க வேண்டிய நிலையில் இப்போது வரையறை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலைமையில், ஒரு பஞ்சாயத்து ஒரு எஸ். ஈ.யை பார்க்க வேண்டும் என்று சொல்லும்போது, மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏதாவது அனுமதி வாங்க வேண்டுமென்றால் எத்தனையோ காலதாமதம் ஏற்படுகிறது என்பதையும் பார்க்க வேண்டும். ஒரு வேலைக்காக ஒரு வருடமாக அனுமதி கேட்டு வந்தும், நேராகப் போய்ச் சொல்லியும் இன்னும் அனுமதி கிடைக்காத நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி இருந்து கொண்டிருந்தால் நிர்வாகம் எப்படி நடக்கும் என்பதை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும். என்னுடைய தொகுதியில் லால்பேட்டை என்ற ஒரு செக்ஷன் ஆபீஸ் இருக்கிறது. அங்குள்ள ஓவர்சியரைப்பற்றி, தஞ்சாவூர் எஸ் ஈ. அவர்களிடத்தில் போய்ச் சொன்னேன், அதாவது அவர் பொது மக்களிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டு விவசாயிகளுக்கு இடைஞ்சல் செய்து வருகிறார் என்று நேராகச் சொல்லியும், அங்குள்ள பொதுமக்கள் நேராகச் சென்று வாக்கு மூலம் கொடுத்தும், அவர் உடனடியாக மாற்றப்படவேண்டும் என்று சொல்லி ஓராண்டு காலம் ஆகியும் இன்னும் மாற்றப்படாமல் இருக்கிறார். இதற்கிடையில் இவர் மாற்றப்பட்டு உத்தரவு வந்தது என்றும். மீண்டும் இவர் இங்கேயே வருவதற்கு உத்தரவு வாங்கி வந்துவிட்டார் என்றும் அறிந்தேன். இந்த முறையில் பொது மராமத்து இலாகா செயல்பட்டுக் கொண்டிருந்தால், மக்களுடைய தேவைகளாக இருக்கின்ற சாலைகள், ஏரிகள், குளங்கள், பாலங்கள் இவைகள் எல்லாம் எந்த முறையில் நிறைவேற்றப்படும் என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

[திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி] [15th March 1966

அடுத்து, என்னுடைய தொகுதியிலுள்ள சில குறைபாடுகளை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். காட்டுமன்னார்குடியிலிருந்து அணைக்கரைக்குச் செல்லும் வடவாற்றங்கரை ரோடு ஏறத்தாழ 14, 15 மைல் இருக்கிறது. இது சீர்திருத்தப்பட்டால் 30, 40 கிராமங்களுக்கு நல்ல பாதைவசதி கிடைக்கும். இப்போது இந்தப் பாதை மண் ரோடாக (Road) இருந்து கொண்டிருக்கிறது. இதைச் சீர் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி தென் கடலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் கேள்வி கேட்டுகும்போது, இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்றும், இதற்காக 14 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. இப்போது இருக்கிற அந்த ரோட்டை கப்பி ரோடாகப் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் சொன்னார்கள். இதை 1966-67-வது ஆண்டில் நடத்த முடியாவிட்டாலும் அடுத்த ஆண்டு ஆரம்பத்திலாவது நடத்திக் கொடுத்தால் அந்த இடத்திலுள்ள விவசாய மக்களுக்கு நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே என்னுடைய தொகுதியில் காட்டுமன்னார்குடியிலிருந்து திருச்சி மாவட்டத்திலுள்ள மிஞ்சுருட்டிக்குச் செல்லும் பாதை ஏறக்குறைய 7 மைல் நீளமிருக்கிறது. இதைப் பஞ்சாயத்து யூனியன் நிர்வகிக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருப்பதால், பஸ் போக்குவரத்துக்கு வசதியில்லாமல் மக்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கூடிய விரைவில் Highways இலாகாவில் எடுத்துச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார்குடிக்குப் போகக் கூடிய ரோடு, 16, 17 மைல் நீளம் இருக்கிறது. இதில் நாள் ஒன்று குறைந்தது 100 பஸ்கள் வரை போய் வந்து கொண்டிருக்கின்றன. இந்த ரோடு மிகவும் மேடு பள்ளமாகவும், குறுகலாகவும் இருந்து கொண்டிருக்கிறது. இதைச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காட்டுமன்னார்குடியிலிருந்து ஓமாம்புலியூர் செல்லும் ரோடு 6, 7 மைல் நீளமிருக்கிறது. இந்த ரோடு மிகவும் சீர் கேடாக இருப்பதால் பஸ் போக்குவரத்துக்கு வசதியில்லாமல் இருக்கிறது. இந்த ரோடு இப்போது மண்ரோடாகவும் செம்மண் கப்பி ரோடாகவும் இருந்து கொண்டிருக்கிறது. இதை கருங்கல் ஜல்லி ரோடாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் காட்டுமன்னார்குடி ஓமாம்புலியூர் ரோடில் வெள்ள மதகு என்று ஒன்றிருந்தும், இதில் பஸ்கள் போக முடியாமல் குறுகலாகவும், அபாயகரமானதாகவும் இருக்கிறது. இதன் மூலம் நெல் எடுத்துக்கொண்டு போக முடியாத நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த வெள்ளமதகை மாற்றி அமைப்பதற்குச் சர்க்கார் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



15th March 1966] [திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி]

அதை அடுத்து பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் குடிமராமத்துத் திட்டம் சமீப காலமாக எந்த அளவிற்குத் தோல்வி அடைந்து இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் நன்குக் அறிவார்கள். எந்த கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் பஞ்சாயத்துத் தலைவர்களிடமுள்ள ஊழல்கள் இந்தக் குடிமராமத்து வேலைத் திட்டத்திலிருந்து ஆரம்பமாகிறது. இதன் காரணமாகப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு கெட்ட பெயர் ஏற்படக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே குடிமராமத்து வேலைத் திட்டத்தை பஞ்சாயத்துக்களிடமிருந்து எடுத்து பொதுமராமத்து இலாகா மூலமாகப் பாசன வசதிகள், கிணறு வெட்டுதல், குளங்கள் வெட்டுதல் இவைகளை எல்லாம் காண்டிராக்ட் மூலமாக வேலை செய்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. நா. இராசாங்கம் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலை, மேம்பாட்டுப்பணி போன்ற மான்யக் கோரிக்கைகளின் மீது என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். என் தொகுதியில் மிகக் தேவையாக இருந்து வந்த பரவானாற்றின் மீது பாலம் கட்டுவது என்பதைப் பல ஆண்டுகாலமாகச் சொல்லி வந்ததின் காரணமாக இப்போது அதற்கு 8 லட்சம் ரூபாய் அளவிற்கு அனுமதி கொடுத்திருக்கிறது அரசாங்கம். பல காலமாகச் சொன்னதற்கு இப்போது தான் பரிகாரம் கிடைத்திருக்கிறது என்றாலும், இப்போதாவது அனுமதி வழங்கியதற்காக என் பாராட்டுதல்களை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்ற இந்த நேரத்தில் சில குறைகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பெருமாள்கரை ஏரி ஓரமாக இருக்கின்ற ரோட்டில் வண்டிகள் போக முடியவில்லை, பஸ்ஸும் போக முடிவதில்லை அந்த அளவிற்குச் சீர்கெட்டிருக்கின்றது. இந்த ரோட்டைப் பற்றி நெடுஞ்சாலை இலாகாவுக்குப் புகார் எழுதினால், இதைப்பற்றி பஞ்சாயத்து யூனியன் தான் பார்க்க வேண்டும் என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனிடத்தில் கேட்டால், இது நெடுஞ்சாலை இலாகாவைச் சேர்ந்தது என்று சொல்கிறார்கள். இவ்விதம் தகராறு இருந்து கொண்டிருப்பதால் பல ரோடுகள் இன்னும் சீர்கேடான நிலைமையிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இன்னின்ன ரோடுகள் இன்னின்ன இலாகாவுக்குச் சேர்ந்தது என்று வரையறுத்துக் கொடுத்து, ரோடுகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உப்பனாற்றின் மீது பாலம் கட்ட வேண்டும் என்று சொன்னதற்கு, அதற்கான அனுமதி வழங்கப்பட்டு, இன்வெஸ்டிகேஷன் எல்லாம் ஆகியிருப்பதாகச் சொல்லப்பட்டது. இப்போது எந்த அளவில் இருக்கிறது என்பது தெரியவில்லை. ஆகவே, அரசாங்கம் பரவானாற்றின் மீது பாலம் கட்டப் பணம் ஒதுக்கியது போல் இதற்கும் பணம் ஒதுக்கி எங்கள் பாராட்டுதல்களைப் பெறக்கூடிய வகையில் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. நா. இராசாங்கம்] [15th March 1966

அடுத்ததாக, கருங்குழிக்கு அருகிலுள்ள செங்கால் ஓடைத் திட்டத்திற்காக 70 ஆயிரம் ரூபாய் செலவில், வேலை நடத்த அனுமதி வழங்க வேண்டும் என்று மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில், சிபாரிசு செய்து அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதையும் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது போன்ற பல திட்டங்களையும் நிறைவேற்றுகின்ற வகையிலும் எங்கள் பாராட்டுதலைப் பெறுகின்ற வகையிலும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI K. A. MATHIALAGAN : Sir, as permitted by you, I will just give a true copy of the Madras Government Order . . .

MR. SPEAKER : The hon. Member will please give it to me.

Sri K. A. Mathialagan handed over the paper to the Hon. Speaker.

**திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே நம்முடைய ராஜ்யத்தில் பொதுப் பணித்துறை இயங்கிக் கொண்டு வருகின்ற முறை முதல் தரமாக இருக்கிறது. மற்ற ராஜ்யங்களை எல்லாம் விட நமது ராஜ்யத்தில் பொதுப்பணித்துறை சிறந்த முறையில் இருக்கிறது. மற்ற ராஜ்யங்களை விட நம் ராஜ்யம் நல்ல பெயரை வாங்கியிருக்கிறது என்றால், அதற்குப் பொறுப்பாக இருக்கக்கூடிய இந்தப் பொதுப்பணி இலாகாவினரை உண்மையிலேயே நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் ஒரே ஒரு குறையை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த இலாகாவிலே வேலை
1·00 p.m. செய்கிறவர்களுக்குப் போதுமான அளவு வசதியும், அவர்களுக்கு வேண்டிய சவுகரியமும் கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. இந்தக் குறைபாடு பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. வொர்க்-சார்ஜ்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட் என்று பலவகைப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஹைவேஸ் என்று பிரிக்கப்பட்டிருக்கிறார்கள், ஸ்பெஷல் பில்டிங்ஸ் என்று பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். வேறு விதமாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். வொர்க்-சார்ஜ்ட் எஸ்டாப்ளிஷ்மெண்டில் இருக்கிறவர்களை எடுத்துக் கொண்டால் 10-15 ஆண்டுகளுக்கு மேலே டெம்பாரி ஆக இருக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த ஒருவர், திரு. வாசுதேவன் என்பவர், மெட்ராஸ் பில்டிங்ஸ் டிவிஷனில் 24 ஆண்டுகளாக அந்த மாதிரியே இருக்கிறார். அவர்களுக்கு மெடிகல் லீவ் கிடையாது, காஷுவல் லீவ் கிடையாது, ப்ரிவிலேஜ் லீவ் கிடையாது. அவர்கள் எந்த லீவும் எடுத்துக் கொள்ள முடியாது. அதோடு அவர்களுக்குப் ப்ராவிடென்ட் ஃபண்ட் கிடையாது, பென்ஷன் கிடையாது, க்ராச்சுயிட்டி கிடையாது. சம்பளத்தை எடுத்துக் கொண்டாலும், அவர்கள் யுக்தப்படி எக்ஸியூட்டிவ் என்ஜியர் 90 ரூபாய்



15th March 1966] [திரு. வை. சங்கரன்]

பேசிக் பேக்குள் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அதில் கூட ஃபேவரிட்டஸம் வந்து விடுகிறது. தெரிந்தவர்கள் மூலம் வந்தால், சிபாரிசு இருந்தால், அடிப்படைச் சம்பளம் 60 ரூபாய், 70 ரூபாய் கிடைக்கலாம். இல்லையென்றால் 30 ரூபாய், 40 ரூபாய் கிடைக்கலாம். அதோடு ஒரு டிவிஷனில் மொத்தம் 90-100 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கலாம். அவரே இன்னொரு டிவிஷனுக்குப் போகும் போது 140-150 ரூபாய் வாங்க முடியும். இதற்கு ரைம், ரீசன் ஒன்றும் கிடையாது. இந்த மாதிரி பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. 1963-ம் ஆண்டிலே மூன்று ஆண்டுகளுக்கு மேல் சர்விஸ் உள்ளவர்களைப் பர்மனென்ட் செய்ய சர்க்காரிலே ஒரு ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். 1963-லேயே பஞ்சாயத்து யூனியனில் மூன்று பேர்களையாவது பர்மனென்ட் செய்ய வேண்டுமென்று ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். அந்த ஜி.ஓ.-வை சர்க்கார் இலாகாவிலேயே இம்ப்ளிமெண்ட் செய்யவில்லை என்றால், மற்றவர்கள் எப்படிச் சர்க்கார் உத்தரவை இம்ப்ளிமெண்ட் செய்வார்கள்? தனிப்பட்டவர்களைப் பொறுத்த வரையில் ஆர்டர் போடுகிறோம், அவார்டு போடுகிறோம் இம்ப்ளிமெண்ட் செய்யவில்லை என்றால், அரசாங்கத்தின் இலாகாவே அரசாங்க ஜி.ஓ. இம்ப்ளிமெண்ட் செய்யாமல் ஆண்டுக் கணக்கில் சும்மா இருந்தால் என்ன செய்வது? சீக்கிரம் இம்ப்ளிமெண்ட் செய்யவில்லை என்று மற்றவர்களை நாம் எப்படி, சொல்ல முடியும்? இப்போது சீக்கிரத்தில் அவர்களுக்கெல்லாம் நிவாரணம் கிடைக்கும் என்று தெரிகிறது. இதைச் சீக்கிரத்தில் செய்யவேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இருக்கிறவர்களையாவது முதன்முதலாக எடுத்து அவர்களை பர்மனென்ட் செய்ய வேண்டும்.

இன்றைக்கு இந்த அறிக்கையில் பார்த்தால், சேதுசமுத்திரம் ப்ராஜெக்ட், ஈஸ்ட் கோஸ்ட் ரோடு சம்பந்தமாகப் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறதே தவிர ஆமை வேகத்தில் தான் சென்று கொண்டிருக்கிறது. இரண்டும் பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஈஸ்ட் கோஸ்ட் ரோடு பற்றிக் குறிப்பிடும் போது, 25 மைல்கள் தான் புதிதாகப் போட வேண்டும். பாக்கி 431 மைல்கள் இம்ப்ரூவ் தான் செய்யவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதனால் வரக்கூடிய பெனிஃபிட்ஸ் ஏராளமாக இருக்கின்றன. இதற்கு சீக்கிரத்தில் ஸாங்க்ஷன் வாங்கி, உடனடியாக ஈஸ்ட் கோஸ்ட் ரோடைப் பொறுத்தவரையில் வேலைகளைச் செய்ய வேண்டும். சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேறினால் தென் பகுதியில் நல்ல வளர்ச்சி ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதையும் சீக்கிரத்தில் முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பியூட்டி ஸ்பாட்ஸ் நீலகிரியில் ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் பல இடங்களில் பியூட்டி ஸ்பாட்ஸ் இருக்கின்றன. நீர்வீழ்ச்சிகளெல்லாம் இருக்கின்றன. மதுரை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கே சுருளி ஃபால்ஸ் இருக்கிறது. பியூட்டி ஸ்பாட்ஸ், யாத்திரை ஸ்தலங்கள், உல்லாச ஸ்தலங்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகளையெல்லாம் நல்ல முறையில் சீக்கிரத்தில். . . . . (மணி அடிக்கப்பட்டது.)

[15th March 1966

* திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் தலைவரவர்களே கொடுக்கப்பட்ட காலம் குறைவாக இருந்தாலும் சுருக்கமாகப் பேசி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

பொது மராமத்துத் துறையில் பல பிரச்னைகள் இருக்கின்றன. இருந்தாலும் முதலில் கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பேசின் பிரிட்ஜை அகலப்படுத்தும் திட்டம் இதிலே சேர்க்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்கு உரிய செய்தி. இருந்தாலும் இதிலே சேர்த்ததோடு நின்று விடாமல், உடனே அதற்கு அஸ்திவாரக் கல் போடும் வேலை நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேம்பாலம் கட்டுவதிலே தயவு செய்து அந்த வேலையை கார்ப்பரேஷனிடத்தில் ஒப்படைக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். கார்ப்பரேஷனுக்கு ஒப்படைப்பதில் பல பிரச்னைகள் புகுந்து காலதாமதம் ஏற்படுகிறது. குறித்த காலத்தில் கோடம்பாக்கம் பாலம் கட்டி முடிக்கப்பட்டு இப்போது போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னமேயே கார்ப்பரேஷனிடத்தில் ஒப்படைக்கப்பட்ட திருவொற்றியூர் ஓவர் பிரிட்ஜ் இன்னும் கட்டி முடியவில்லை. இந்தக் காலதாமதத்திற்கான காரணங்களைச் சொல்லுவது நன்றாக இருக்காது என்ற முறையில் சொல்லாமல் விடுகிறேன். இனிமேல் ஓவர்பிரிட்ஜுகளைக் கட்டும் போது, பி. டபிள்யூ. டி-ல் எடுத்துக் கொண்டு உடனே கட்டி முடிக்கவேண்டும். அதை விட்டு கார்ப்பரேஷனிடத்தில் ஒப்படைத்தால் காலதாமதம் ஏற்படுகிறது, பல சிக்கல்கள் ஏற்படுகின்றன என்று மீண்டும் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இன்னும் பல இடங்களில் ரோட் சைட் பார்க்ஸ் கட்ட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். பல நூறு மைல்கள் காரில் போகிறோம். நான் கூட சிதம்பரத்திற்கு அருகில் ரோட் சைட் பார்க் ஒன்றைப் பார்த்தேன். நமது மாநிலத்திற்கு வெளி நாட்டினர்கள் வருகிறார்கள். அன்னியர்கள் வருகிறார்கள். அந்த பார்க்கைப் பார்த்துக்கூட அழகாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது போதாது. இன்னும் பல இடங்களில் பார்க்குகளை அழகாகப் போட்டு, அங்கே உட்கார்ந்து சாப்பிட வசதி செய்து கொடுத்தோமானால் இன்னும் நலமாக இருக்கும். இந்த யோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரை எடுத்துக் கொண்டால் பஸ் போகும் வீதிகள் ரொம்ப மோசமான நிலையில் இருக்கின்றன. நகரசபைக்குப் பணம் கொடுத்தால், திட்டத்தை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டு, பிரச்னைகளெல்லாம் வந்து, பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்படுவதில்லை. பெரிய வீதிகளில் பணத்தைச் செலவழித்து விட்டு, உள்ளே இருக்கக் கூடிய வீதிகளைக் கவனிப்பதில்லை. பஸ் போகும் வீதிகளை அரசாங்கமே எடுத்துக்கொள்ளுவது சிறந்தது. சென்னை நகரத்தில் மூன்று வீதிகளைத் தான்---பூந்தமல்லி ரோடு, மவுண்ட் ரோடு, நார்த் ட்ரங்க் ரோடு ஆகிய வைகளைத் தான்—அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அது போதாது.



15th March 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

எங்கெல்லாம் பஸ் போகிறதோ அந்த ரோடுகளையெல்லாம் அரசாங்கமே பொறுப்பு ஏற்றுச் செய்தால் நல்ல முறையில் ரோடுகளை வைத்துக்கொள்ள முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சின்னப் பிரச்னை. சில ஊர்களில் ஆறுகளைத் தாண்டுவதற்குக் கூட வழியில்லாமல் இருக்கிறது. பழனியில் சுற்றுப்புறத்தில் தாமரைக் குளம், பாலசமுத்திரம் என்ற கிராமங்களில் பார்த்தால் அங்கே காட்டாறுகள் ஓடுகின்றன. அந்த ஆறுகளில் பெட் லெவல் காஸ்வே கூடக் கிடையாது. அந்த ஊரிலிருந்து வைத்திய வசதிக்குக்கூட பழனிக்குத்தான் வர வேண்டும். அந்த ஆறுகளில் தண்ணீர் வந்துவிட்டால் தாண்ட முடியாது. இந்த நிலை மிக மிக மோசமானது. இதை உடனடியாகக் கவனிக்க அரசாங்கம் அக்கறை எடுக்கவேண்டும்.

அதே மாதிரி, இராமநாதபுரம், தஞ்சை ஜில்லாக்களில் ரோடு வசதிக் குறைவாக இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் நிலமெல்லாம் நன்செய் நிலம், ரோடு போடுவது கஷ்டம். அப்படியே ரோடு போடாமல் நெக்லெக்ட் செய்து விடுகிறார்கள். அப்படி இல்லாமல், இராமநாதபுரம், தஞ்சை ஜில்லாக்களைப் பொறுத்த வரையில் முக்கியத்துவம் கொடுத்து உடனடியாக ரோடு வசதிகளைப் பெருக்க வேண்டியது மிகவும் அவசியம். காரணம் நெற்களஞ்சியம் தஞ்சை மாவட்டம். நெல்லை வாங்கிக்கொண்டு ரோட்டை கவனிக்க மாட்டேன் என்று சொல்வது சரியல்ல. அதே மாதிரி இராமநாதபுரம் மிகவும் பிற்பட்ட பகுதி. அதிகமாகப் பணம் ஒதுக்கி, எல்லா மாவட்டங்களையும் பார்ப்பது போல் பார்க்காமல் இவைகளை விசேஷமாக பார்க்க வேண்டுமென்று கனம் அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, பி. டபிள்யூ. டி. வொர்க்ஷாப் லேபரர்ஸ் பிரச்னை. கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் கூடச் சொன்னார்கள். பி. டபிள்யூ. டி. வொர்க்ஷாப்பில் வேலை செய்கிறவர்கள் பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் டெம்பரரியாக இருக்கிறார்கள். இதைக் காட்டிலும் கொடுமை இருக்கமுடியாது. அவர்களுக்குப் ப்ரொமோஷன் கிடையாது, பென்ஷன் கிடையாது, கிராச்சுயிட்டி கிடையாது. மனித சமுதாயத்தைத் தக்க முறையில் வைக்க வேண்டுமென்று ஆசைப்படும்போது, அடிப்படைத் தேவை கூட கிடைக்கும்படி செய்ய முடியவில்லை என்றால் அது முறையல்ல. திரு. ராமுண்ணி மேனன் கமிஷன் ரிப்போர்ட்டில் என்ன சொன்னார்கள் என்றால், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இருந்தால் கட்டாயமாகக் காயப்படுத்த வேண்டும் என்பது தான். அவர்களுக்குக் காயமான வேலை வேண்டும். காயமான வேலை இல்லாமல் 20-30 ஆண்டுகள் ஓடாகும் வரையில் உழைத்து விட்டு, வீட்டுக்குப் போகும்போது ஓட்டாண்டியாகப் போக வேண்டுமானால், அவர்கள் நிலை என்ன ஆகும்? நாம் முதலில் வழிகாட்டியாக இருந்தால் தானே தனிப்பட்டவர்கள் நாம் சொல்லுகிறபடி நடப்பார்கள்? அதே மாதிரி வொர்க்-சார்ஜ்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட்ஸ் என்று சொல்லி பல ஆண்டுகளாக இருக்கக்கூடிய மேஸ்திரிகளைத்

திடீரென்று வீட்டுக்குப் போகச் சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் இப்போது வந்தவர்களை வைத்துக் கொள்கிறார்கள். என்ஜினீயருக்கு எப்படி மனம் இருக்கிறதோ அப்படி நிலைமை இருக்கிறது. இதிலே ஒரு வரையறை இருக்க வேண்டும். வரையறை எதும் இல்லை என்றால் அவர்கள் விருப்பப்படி செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும். முடிந்தவரையில் பிறருக்கு நாம் ஒரு எடுத்துக் காட்டாக இருந்தால்தான் பிறர் நாம் சொல்லுகிறபடி கேட்பார்கள், நாம் போடும் சட்டத்திற்கு மதிப்பு இருக்கும். அரசாங்கம் நடத்துகிற பி. டபிள்யூ. டி. வொர்க்ஷாப்பில் இருக்கிற டெம்பாரி தொழிலாளர்கள் பிரச்னையையும், வொர்க்-சார்ஜ்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட்ஸ் பிரச்னையும் தீவிரமாகக் கவனிக்க வேண்டும். இப்போது மெயின்டினன்ஸ் செலவைக் குறைக்கப் போகிறோம். அப்படிக் குறைக்க வேண்டும் என்றால் அது இவர்கள் தலையின்மேல்தான் போய் விழப்போகிற . . . (மணி அடிக்கப் பட்டது).

* **திரு. மா. தண்டாயுதபாணி** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாகத் தஞ்சை ஜில்லாவில் ரோடு வசதி மிகவும் குறைவு. அதற்கு இரண்டு காரணங்கள். ஒரு ஆண்டில் 8 மாத காலத்திற்கு ரோடின் இரு பக்கமும் தண்ணீர் தேங்கி நின்று விடுகிறது. மற்றொரு காரணம் அங்கு 'குவாரி' கிடையாது. அடுத்த ஜில்லாக்களாகிய இராமநாதபுரம், திருச்சி போன்ற இடங்களிலிருந்து தான் கப்பி வரவேண்டிய நிலை இருக்கிறது. மாநிலம் பூராவும் பொதுவாக ஏறக்குறைய கணக்கிட்டு ஒரு மைலுக்கு இத்தனை ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டு, தஞ்சை ஜில்லாவுக்கும் அந்த அடிப்படையில் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. கப்பி கொண்டுவருவதற்குத்தான் அந்தப் பணம் போதுமானதாக இருக்கிறதேதவிர, நல்ல முறையில் ரோடுகளைப் பராமரிப்பதற்குப் போதுமானதாக அந்தத் தொகை இல்லை. மற்ற மாவட்டங்களோடு இதை ஒப்பிட்டுப் பார்க்காமல் அதற்குத் தனியாக அதிகமான தொகை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.,

பஞ்சாயத்து யூனியன் சாலைகள், கப்பி போடப்பட்ட பிறகு பஸ் விட்ட பிறகு கூட, அதை ஹைவேஸ் டிபார்ட்மெண்டு எடுத்துக்கொள்ளுவது இல்லை. அதற்குக் காரணம் பிரையாரிடி கொடுத்து, ஆண்டு ஒன்றுக்கு 250 மைல் நீளமுள்ள ரோடுகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நிர்யணம் செய்யப் பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பண வசதி மிக மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால் நிச்சயமாக ஆண்டு ஒன்றுக்கு 500 மைல் நீளமுள்ள ரோடுகளையாவது பஸ் போகிற பஞ்சாயத்து யூனியன் சாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு முடிவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து பொறுப்பிலே இருக்கிற சாலைகள் சரிவர பராமரிக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்குப் போதுமான நிதி வசதி கிடையாது. கப்பி போட்ட சாலைகளாக





இருந்தாலும்சரி, மண் சாலைகளாக இருந்தாலும்சரி, அவைகளைப் பராமரிப்பதற்குப் போதுமான நிதி வசதி அவர்களிடம் இல்லாத காரணத்தினால் அவர்களால் அவைகளைப் பராமரிக்க முடியவில்லை. ஆண்டு தோறும் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் அந்த ரோடுகளை எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு நிலை இல்லை. அவர்கள் வசத்தில் இருக்கிற சாலைகளைப் பராமரிப்பதற்கு தலை ஒன்றுக்கு 40 பைசா என்று நிர்ணயம் செய்யப்பட்டு, தொகை ஒதுக்கப்படுகிறது. அது மிகமிகக் குறைவாக இருக்கிறது. அதைச் சற்று உயர்த்தி 80 பைசாவாக ஆவது உயர்த்தி, அந்த அடிப்படையில் தொகையை ஒதுக்கிக் கொடுத்தால், பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் சாலைகளை நல்ல முறையில் பராமரிப்பு செய்ய முடியும் என்பதையும் பஞ்சாயத்துச் சாலையை எடுத்துக் கொள்ளவும் முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, தஞ்சை ஜில்லாவில் ஆறுகள் அதிகம். அதன் கரைகளை சாலைகளாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. ஆனால், அம்மாதிரி ஆற்றங்கரைகள் பி.டபிள்யூ.டி. பொறுப்பில் இருக்கிற காரணத்தால் அம்மாதிரி கரைகளில் போக்குவரத்தை அவர்கள் அனுமதிப்பதில்லை. ஆற்றங்கரைகளை கப்பிச் சாலைகளாக மாற்றி, போக்குவரத்திற்குப் பயன்படக்கூடியதாக மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, 1956-ம் ஆண்டிலிருந்து எனது தொகுதியிலுள்ள ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் நசுளியார் என்ற ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றில் ஒரு பாலம் கட்டுவதற்கு இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அது நமது கிழக்கு கடற்கரைச் சாலையில் இணைந்த, சார்ந்த, பாலமாக இருப்பதால் அது மிகவும் அவசியமாக இருக்கிற காரணத்தினால், அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிழக்குக் கடற்கரை ரஸ்தா சம்பந்தப்பட்டவரை, குறைவாக வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் விடப்பட்டிருக்கிற பகுதிகளில் துரிதமாக வேலை துவங்கி நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. செ. கோ. விசுவநாதன்** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலையானது மத்திய சர்க்காருடைய பரிசீலனையில் இருக்கிறது, அதை உடனே நிறைவேற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைய தினம் தென் பிராந்தியத்தில் இருக்கக்கூடிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது, அந்தச் சாலைகளில் போக்குவரத்திற்குள்ள இடைஞ்சலைப்

போக்குவதற்கு நிச்சயம் கிழக்குக் கடற்கரை ஓரத்தில் ஒரு பெரிய சாலை அமைக்க வேண்டும். அப்படி அமைபதன் மூலம் உணவுப் பொருள்கள் கொண்டுவருவது, மற்றப் போக்குவரத்துக்களை யெல்லாம் சீர்செய்ய முடியும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறத்திலுள்ள சாலைகளாக இருந்தாலும், நகர்ப்புறத்தில் நகர சபைகளால் பராமரிக்கப்படுகிற சாலைகளாக இருந்தாலும் உடனடியாகச் சீர்செய்வதற்கு ரோடு ரோலர்கள் கிடைக்காத காரணத்தினால், நகர சபையில் போடப்பட்ட தீர்மானங்களை அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட கிராமச் சாலைகளுக்கும், நகரங்களில் இருக்கக் கூடிய சாலைகளுக்கும் வேண்டிய ரோடு ரோலர்களை, அந்தந்த டிவிஷனில் இருக்கிற ரோடு ரோலர்களை உடனடியாகக் கொடுத்து அந்த ரோடுகளைப் போடுவதற்கு ஒத்துழைக்கவேண்டும் என்று இந்த இலாகாவினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல நெடுஞ்சாலைகள் நகர்ப்புறங்களில் செல்லும்போது குறுகலாக இருக்கின்றன. செங்கற்பட்டை எடுத்துக்கொண்டால், நெடுஞ்சாலை நகர்ப்புறத்திற்கு உள்ளே செல்லும்பொழுது மிகவும் நெருக்கமாக இருக்கிறது. அதனால் பல விபத்துக்கள் அங்கே ஏற்படுகின்றன. ஆகவே, நகர்ப்புறங்களின் வழியாகப் போகிற குறுகலான சாலைகளை நீக்கிவிட்டு, நகர்ப்புறத்தைச் சுற்றிச் செல்லுகிற பெரிய சாலைகளை அமைப்பதின்மூலம் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் பி. டபிள்யூ. டி. பொறுப்பில் இருக்கிற கட்டடங்களின் பராமரிப்பு மிக மோசமாக இருக்கிறது. புதிய கட்டடங்கள் கட்டும்பொழுது நவீனமாகக் கட்டுகிறார்கள். ஆனால், தாலுகா ஆபீஸ், ஜில்லா கோர்ட்டு போன்ற பழைய கட்டடங்கள் மிகவும் சுகாதாரக் கேடாக இருக்கின்றன. சாதாரணமாக தண்ணீர் வசதி, கக்கூஸ் வசதி போன்ற வசதிகூட அந்த இடங்களில் இல்லை. செங்கற்பட்டு ஜில்லா கோர்ட்டுக் கட்டடத்தை நல்ல முறையில் பராமரிப்பு செய்து, அங்கு குடி தண்ணீர் வசதி, மற்ற எல்லா வசதிகளையும் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு முன்பு பேசிய திரு. சங்கரன் அவர்கள் ரோடு இன்ஸ்பெக்டர்களின் கோரிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. ஏறக்குறைய 4,000 பேர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேலையை நிரந்தரமாக்குவதற்கும், சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கும் எல்லா வசதிகளும் அவர்களுக்குக் கிடைப்பதற்கும் வேண்டிய வழிவகைகள் செய்யவேண்டும். அவர்கள் மாநாடு கூட்டி அவர்களுடைய கோரிக்கைகளைத் தீர்மான வடிவிலே போட்டு மந்திரி அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும். வீட்டு வாடகை அலவன்ஸ், சைகிள் அலவன்ஸ் போன்றவைகளையும் அவர்களுக்கு வழங்கவேண்டும்.





* **திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்** : கனம் சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பற்றிய ஒரு விஷயத்தை நீண்ட நாட்களாக இந்தச் சபையில் தெரிவித்து வந்துள்ளேன். அதாவது மைசூர் மாநிலத்தை இணைக்கக்கூடிய மல்லேசுவரம் ரஸ்தாவை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் காலத்திலேயே அனுமதி கொடுத்து, அந்த வேலை ஆரம்பிக்கப்பட்டு முடிவடையக் கூடிய தருவாயில் இருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் மற்றொரு வேலைக்கும் அந்தத் திட்டத்துடன் சார்ந்து மத்திய சர்க்கார் அனுமதி கிடைத்திருக்கிறது. அதாவது, காவேரிக்குக் குறுக்கே ஒரு பாலம் கட்டவேண்டுமென்பது. அது இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. அதையும் அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்களைச் செய்யுமாறு நான் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. நா. ப. செங்கோட்டுவேலு** : கனம் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஒட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுப்பணித் துறையில் போடப்படும் ரோடுகளின் அகலம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஹைவேஸ் ரோடுகளின் அகலம் மிகவும் குறைவாக இருக்கிறது. குறைந்தது 40 அடிகள் இருக்கவேண்டும் என்று விதி இருந்தும், சில இடங்களில் 20 அடிக்குக் கூடக் குறைவாக ஹைவேஸ் ரோடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் 22 அடி இருக்கவேண்டும் என்று கட்டுப்படுத்தி, அங்கே ரோடுகள் போடுவதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. ஹைவேஸ் ரோடுகள் 20 அடிக்கும் குறைவாகக்கூட இருக்கின்றன. ஆனால் பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் 22 அடிக்குக் குறைவாக இருந்தால் போடக்கூடாது என்று விதி இருக்கிறது. அதனால் ரோடு போடவேண்டிய வேலை மிகவும் பாதிக்கப்படுகிறது. சில இடங்களில் 22 அடிக்குக் குறைவாக இருந்தாலும் ரோடுகள் போடலாம் என்று அவர்களுக்கு அனுமதி வழங்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஹைவேஸ் ரோடுகளைப் பார்க்கிறபொழுது சில இடங்களில் 40 அடி அகலம் இருக்கும். ஆனால், அதிலே அமைந்திருக்கிற பாலம் மிகவும் குறுகலாக இருக்கும். 16 அடி, 20 அடி அகலமுள்ள பாலங்கள்கூட இருக்கின்றன. இதனால் பஸ் ஒன்றுக்கொன்று முந்திக்கொண்டு, ஓவர்டேக் செய்து கொண்டு வருகிறபொழுது, லாரிகள் வருகிறபொழுது விபத்துக்கள் ஏற்படுகின்றன. ரோடு எத்தனை அடி அகலம் இருக்கிறதோ, அதே அகலத்தில் பாலங்களை அமைத்தால் போக்குவரத்து வசதி நல்ல முறையில் அமையும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[திரு. நா. ப. செங்கோட்டுவேலு] [15th March 1966

பெரிய நகரங்களில் குறுக்கே ஹைவேஸ் ரோடுகள் சென்று கொண்டிருக்கின்றன. அம்மாதிரி இருக்கிற காரணத்தினால் முனிசிபல் நகரங்களிலும், மற்றப் பெரிய நகரங்களிலும் பஸ் போக்குவரத்து, லாரி போக்குவரத்து இவைகளுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. அம்மாதிரிப் பெரிய நகரங்களில் 'பை-பாஸ்' ரோடுகளை அமைத்து நல்ல முறையில் போக்குவரத்தை எளிதாக ஆக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

சில இடங்களில் ரயில்வே லைன் குறுக்கிடுகிறது. முக்கியமான இடங்களிலாவது, சேலம் போன்ற பெரிய நகரத்திலாவது, ஓவர் பிரிட்ஜ் அமைக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால் ஓவர்-பிரிட்ஜை அமைக்கும்போது, சிற்சில இடங்களில் இடைஞ்சல் ஆக இல்லாமல், அமைக்க வேண்டும். சிலருடைய விருப்பு வெறுப்புக் காரணமாக, அதற்கு இணங்க, எடுத்த இடத்தை விட்டுவிட்டு, வேறு இடங்களுக்கு மாற்றச் செய்கிறார்கள். அப்படியில்லாமல்,, ட்ராபிக் நெரிசலாக இருக்கும் இடத்தில் அமைக்கவேண்டும். அதோடுகூட சொல்லி மலைக்கு ஒரு ரோடு ரூ. 30 லட்சம் செலவில் போட்டிருக்கிறார்கள். ஆனால், பாதிப்பணம் கூட . . . (மணியடிக்கப்பட்டது);

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து. . . .

MR. SPEAKER : Each hon. Member should take only three minutes.

* திரு. ஜே. மாதா கவுடர் : இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தின் குறைபாடுகளைப் பற்றிச் சொல்லுகிறேன். இந்த இலாகா நல்ல முறையில் நம் மாநிலத்து ரோடுகளைப் பராமரித்தும், ரோடு வசதிகளைச் செய்துகொண்டும் வருகிறது. அது எல்லோருக்கும் தெரியும். ஒரு சில குறைபாடுகள் உண்டு. என்னுடைய ஜில்லாவைப் பொறுத்தவரையில், அன்னிக்கரை பள்ளிக்கூடக் கட்டடம் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. இப்பொழுது வேலை நின்று இருக்கிறது. தயவு செய்து அதை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

நெங்குளா ப்ரைமரி ஹெல்த் சென்டர் கட்டடம் கட்டுவதை உடனடியாகக் கவனிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரோடுகள் பொறுத்தவரையில், கோத்தகிரி, சோளூர் மட்டம் ரோட்டுக்கு தார் போடுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு ஆவன செய்ய வேண்டும். கட்டுபெட்டு ஆஜ்ஜூர் லிங்க் ரோடுக்கு பில்லிகம்பைவரை தார் போட்டிருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். ட்ரைபல் ரோட்டைப் பொறுத்த வரை, நீலகிரி ஜில்லாவில் சோளூர் மட்டம்-தெங்குமொராட ட்ரைபல் ஏரியாவில் மாவட்ட மன்றத்திலிருந்து 'ஸ்டாம்ப்'



15th March 1966] [திரு. ஜே. மாதா கவுடர்]

களைப் போடவேண்டுமென்று கேட்டோம். அது சென்ட்ரல் ஸ்கீமாக இருப்பதால், கூடிய சீக்கிரம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குன்னூரில், ஜூபிலி பிரிட்ஜ் மோசமான நிலையில் இருக்கிறது. அதற்கு வேலை சாங்க்ஷன் ஆகிவிட்டது என்று கூடத் தெரியும். ஆனால் வேலையை எடுக்கவில்லை. அதை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய நீலகிரி மாவட்ட ரோடுகளை வருஷா வருஷம் பஞ்சாயத்துகளிலிருந்து சர்க்காரிலே எடுத்துக்கொண்டு வருகிறோம். பஸ் ரூட்டுகளைச் சர்க்காரில் எடுத்துக்கொண்டு வருகிறோம். அத்தனை ரோடுகளையும் சர்க்கார் ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் எடுத்துக்கொண்டு, என்னுடைய ஜில்லாவை ஒரு அழகான ஜில்லாவாக ஆக்க முடியும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய ஜில்லாவில் ரோடுகளை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* SRI S. NANJUNDA ROW : Mr. Speaker, Sir, while welcoming the Demands relating to the Public Works Department, I wish to state that the Public Works Department is a Public Welfare Department to the people and not the old Public Waste Department.

Coming to the point, I wish to thank the Government because Dindigul has been provided with an overbridge which has been a long-felt need.

Then, under the Rural Road Programme, though a substantial amount has been set apart for the Panchayat Unions, the Panchayat Unions are not able to look after the bus plying roads. So, I request the Government to see that the bus plying roads are treated as major district roads and are looked after by them. In my constituency, there are four such roads and I request the Government to consider them as 'major district roads'. (1) Dindigul-Koombur bus road (via) Marambadi. Nathapatti, Ammapatti, R. Pudukottai and Vanikkarai. (2) Eriyodu-Ayyalur road, (3) Guziliamparai-Sulapuram road and (4) Kasipalayam-Kalwarpatti to Reddiyarchatram bus road. If these four roads are taken away from the control and care of the Panchayat Unions, it would be a great relief to the Panchayat Unions also.

Then, coming to the Economic and Inter-State road programme, there is a scheme for forming a new hill road from Dharmathupatti to Panrimalai and it has been a long felt need of the people there. It is a plantation area. So, it gives some relief to the people there, I would request the Government to give top priority to the scheme. I hope this scheme will be included in the Fourth Five-Year Plan.

[Sri S. Nanjunda Row] [15th March 1966

Then, with regard to the National Water-Supply Scheme (Rural), there are two or three villages in my constituency which do not have drinking water facilities. Mammaniyur and Kadayanur in Ayyalur Hill area and Pallanathan of Mallapuram in Palayam area. I request that the National Water-Supply Scheme may be extended to these villages and these villages should be provided with drinking water facilities.

Then, there is one more need felt by the people in my constituency. There is no Travellers Bungalow constructed by the Highways Department in Palayam area. If a Travellers Bungalow is constructed near Palayam or Guziliamparai it would be a great relief to the people there.

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, regarding the roads in the Madras City that have been taken over by the Highways Department, it is a good thing that they have done a lot of work in improving the roads. But we see electric poles and other poles standing like 'ghosts' in the middle of the roads, obstructing the road traffic in the City. Necessary action may be taken to remove them. In this connection, I wish to point out that with regard to the maintenance of these roads, there is no co-ordination between the Public Works Department and the Electricity Department of the Madras Government and the Posts and Telegraphs Department. The Public Works Department go on laying and black-topping roads with one foot thickness on one day. The very next day the Posts and Telegraphs Department or the Electricity Department dig trenches and thus obstruct road traffic. I request the Government that they may effect co-ordination between these departments in respect of this matter.

Regarding buildings, I would like to point out that in America there is a device to find out the life and suitability of the building. I request the Government to kindly consider this aspect of the matter and introduce that device in this State also and also accept the tenders when the contractors come forward to give the duration of the building.

Regarding Tiruttani, I would like to state that a bridge across the river near Pallipat a bridge near Kanakammachatram and Tiruvelangadu are necessary. Though they have been included in the Part II Scheme, they were dropped. Representations with regard to this matter have been made for the past four years. River bridge near Pallipat is an important link connecting the sub-taluk office and even if there is a small rain, people there are put to a lot of difficulties. So, I request the Government to look into this aspect of the matter also.

With regard to the Primary Health Centres, since Tiruttani is a Transferred Territory, some buildings were handed over as in complete in Parumagudi village in Tiruttani taluk. In this connection, I made representation to the Hon. Minister for Health and I request the Government to give the necessary grant for the buildings to be constructed and complete the construction of Primary Health Centre buildings at Parumagudi village.



15th March 1966]

திரு. டி. என். வடிவேல் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தர்மபுரி-கிருஷ்ணகிரி மருத்துவ மனை குடியிருப்பு மிக அவசியமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். படிப்படியாகக் கட்டடங்கள் கட்ட ரூ. 29.68 லட்சம் ஒதுக்கியிருக்கிறது. அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே நேரத்திலே, இந்தத் தொகை தர்மபுரி மாவட்டத்திற்குப் போதாது. காரணம், ஜில்லா பிரிந்து எல்லோரும் குடியிருக்க வருவார்கள். தற்சமயம் எல்லா ஆபீசர்களும் வரவில்லை. தீ விபத்து ஏற்பட்டு இரண்டு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. உடனடியாக தீ அணைக்கும் படை சேலத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது. வெகு தூரம் இருப்பதால் அதிக காலம் ஆகிறது. ஆகவே, உடனடியாகக் கட்டடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே நேரத்தில் வெள்ளாளப்பட்டிக்குப் பாலம் கட்டவேண்டும் என்று திட்டம் இருக்கிறது. அரியகுளம் பக்கத்தில் நடமாடும் ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கே போக ஆறு குறுக்கே இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு பாலம் கட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வேங்கடம் பட்டி, மாதே மங்கலம், தின்னம்பட்டி, லலிகம், முதலிய பல கிராமங்கள் இருக்கின்றன. அதற்காக அங்கே பாலம் போட வேண்டும். அங்கே உள்ள ரோடுகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் செப்பனிடவேண்டும். ரோடுகளையும் போட்டு, பஸ் விடுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1-30 PM.

* திரு. நா. சௌந்திரபாண்டியன் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் பொதுப் பணி மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் நெடுஞ்சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பது பாராட்டத்தக்கதாகும். ஆனால், திருநெல்வேலி-கன்னியாகுமரி இரயில் பாதை இல்லாததால், திருநெல்வேலி-கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. அந்த நெடுஞ்சாலை நல்ல முறையில் பராமரிக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். திருநெல்வேலி-கன்னியாகுமரி இரயில் பாதையையும் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, கிழக்குக் கடற்கரைச் சாலையைத் தேசீய நெடுஞ்சாலையாக அமைக்க அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும். அஞ்சு கிராமம் உவரி ரோடை நல்லமுறையில் சீர்திருத்தி, கடற்கரை பகுதியோர் மக்களுக்கு நல்ல ரோடு வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். மேலும், வள்ளியூர்-இட்டமொழி ரோடானது

பல ஆண்டு காலமாக நெடுஞ்சாலை ரோடாக இருந்தாலும் கூட, அதில் பாலம் கட்டி நல்ல முறையில் பராமரிக்கப்படவில்லை, அதையும் பராமரிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாங்குனேரியில் கிளைப் பாதை ஒன்று அமைக்கவேண்டும் என்பது அங்குள்ள மக்களுடைய கோரிக்கையாகும். ஆனால், இந்தத் திட்டத்திலே எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கோவில்பட்டி-திருநெல்வேலி இவற்றில் கிளைப் பாதை (பைபாஸ் ரோடு) அமைக்க சேர்க்கப்பட்டிருந்தாலும், நாங்குனேரியில் கிளைப்பாதை அமைப்பது சேர்க்கப்படவில்லை. அதையும் திட்டத்தில் சேர்த்து, நாங்குனேரியில் கிளைப் பாதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருநெல்வேலியைப் பொறுத்த வரையில் அங்கு மேம்பாலம் தேவை என்பது மக்களுடைய நெடு நாளையக் கோரிக்கை. அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, இந்த ஆண்டில் சேர்த்துக் கொள்ள முயற்சிக்கவேண்டும். இல்லையென்றால், வரும் நிதி ஆண்டிலாவது அதை அமைத்துக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ராதாபுரம்-வடக்கன்குளம் ரோடானது, இரண்டு பஞ்சாயத்து யூனியன்களுடைய பொறுப்பில் இருப்பதால், அதை ஒரு பஞ்சாயத்து யூனியனும் கவனித்துக்கொள்ளுவதில்லை. இரண்டு பஞ்சாயத்து யூனியன்களை ஒன்றுசேர்க்கக்கூடிய ரோடுகளைக் கூடுமானவரை அரசாங்க ரோடுகளாக எடுத்துக் கொள்ளலாம். வடக்கன்குளம்-ராதாபுரம் ரோடை அரசாங்க ரோடாக எடுத்துக் கொண்டு, ஹனுமதி நதியில் பாலம் ஒன்று கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இட்டமொழி-திசையன்விளை ரோட்டையும் அரசாங்க ரோடாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு இப்பொழுது ரோடு மானியமாகக் கொடுக்கப்படும் பணம் அதிகமான அளவில் இல்லை. அதனால் அவர்கள் ரோடுகளைச் சரிவரப் பராமரிக்க முடியவில்லை. ஆகையால், பஸ் ரூட் உள்ள எல்லா ரோடுகளையும் அரசாங்கமே நேரடியாக எடுத்துப் பராமரிக்கவேண்டும். அப்பொழுதுதான் நல்ல முறையில் பாதைகள் அமைய முடியும். திசையன்விளை-கரைச்சுத்துப்புதூர் ரோடும் நெடுஞ்சாலை ரோடாக எடுக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் நல்லமுறையில் பராமரிக்கப் படவில்லை. அதையும் பராமரிக்கவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடிக்கிறேன்.

திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டைத் தமாஷாகச் சொல்லவேண்டும் என்று, பி. டபிள்யு. டி. என்ற வார்த்தையை வைத்துக்கொண்டு, "பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மெண்ட்" என்று சொல்வதுண்டு. அப்படியெல்லாம் இல்லை என்பதைப் போலத்தான், இப்பொழுது





நிமிஷங்கள் கணக்கில் பேசக்கூடிய அளவிலே வந்து, காலத்தைக் கூட 'வேஸ்ட்' பண்ண முடியாத நிலையில் சென்று கொண்டிருக்கிறோம்.

பொதுவாக, சென்னை மாநில ரோடு முதலியவற்றைக் கண்காணிக்கும் நிலையைப் பார்க்கும்போது, இந்தியாவிலேயே நம்முடைய இலாக்காவிற்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். பாராட்டுத் தெரிவிக்கின்ற அளவோடு நாம் திருப்திப்பட்டுவிட முடியாது என்பதைக் கூறி, குறைகளை அல்லது தேவைகளை வற்புறுத்த நான் முன்வருகிறேன்.

இப்பொழுது பல ரோடுகள் செம்மையாக இருப்பினும் இன்னும் பல ரோடுகள் மிகச் செம்மைக் குறைவாக இருக்கின்றன. அவற்றிற்கு அடிப்படையான காரணம், ரோடு இன்ஸ்பெக்டர்கள் போதவில்லை. அவர்களுக்குக் கொடுக்கின்ற சைக்கிள் படி போன்றவை தேவையை நிறைவு செய்யவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கள் வருகின்றன. இவற்றைக் கவனித்து, நம்முடைய ஊழியர்களுக்கு ஓரளவிற்கு வாழ்க்கைத் தரத்தைச் செம்மைப் படுத்திக்கொள்ள முடிந்தால்தான் அவர்களுடைய பணி செம்மையாக இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது என்பதை மட்டும் உணர்த்திவிட்டு, காலக் குறைவு காரணமாக மேலே செல்கிறேன்.

மாநிலம் முழுவதும் இருக்கின்ற பல்வேறு நகர எல்லைகளிலும் நம்முடைய மாநில ரோடுகள் செல்லுகின்றன. அங்கே பல குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லா இடங்களிலும் அப்படித் தான். ஆனால், உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக்கொண்டு சொல்லுகிறேன். காரைக்குடியின் வட எல்லையோடு சர்க்கார் பாதை தீர்ந்துவிடுகிறது. அங்கு ஒரு போர்டு இப்பொழுது போடப்பட்டிருக்கிறது, "சர்க்கார் எல்லை இதோடு முடிகிறது" என்று. ஏன்? சர்க்கார் ரோடு தொடருகிறது என்று நினைத்து விடுவார்களோ என்ற பயத்தினாலே தான் அந்த போர்டு போடப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். காரைக்குடி முனிசிபல் எல்லையைவிட்டு, அடுத்த இடம் வருகிறபோது, அந்த அளவிலே தெற்கிலே அது போகிறது, அதே மாதிரி தான் மதுரை, தஞ்சை, திருச்சியிலிருந்து வரும் ரோடுகளும் இருக்கின்றன. ஐந்தாறு ரோடுகள் காரைக்குடியில் வந்து நிற்கின்றன. இந்த ஐந்தாறு ரோடுகளும் ஏராளமான லாரிகள், பஸ்கள்—கவர்ன்மெண்ட் எக்ஸ்பிரஸ் பஸ்கள் உட்பட—செல்லுகின்ற ரோடுகளாக இருக்கின்றன. அங்கே முனிசிபல் நிர்வாகத்திற்கு இருக்கும் வசதிக் குறைவுகள் நமக்குத் தெரியும். சம்பள ஏற்றங்கள் இவையெல்லாம் நமக்குத் தெரியும். முனிசிபாலிடியில் நூற்றுக்கு எண்பது பங்கு முனிசிபல் நிர்வாகத்திற்கே சம்பளமாகப் போய் விடுகிறது. நூற்றுக்கு 20 பங்குதான் ரோடு முதலிய பிற வசதிகளுக்குச் செலவழிக்கப்படுகிறது என்பதைப் புள்ளி விவரங்களிலிருந்து நாம் அறிய முடிகிறது. நூற்றுக்கணக்கான மைல் தூரம் வருகிற ரோடுகள், நகர எல்லையோடு நின்றுவிடுகின்றன. அதற்குப் பிறகு உள்ள ஒன்றரை, இரண்டு மைல் தூரத்தைச்

சர்க்கார் இலாக்காவே பராமரிக்காமல் "நகரசபை கவனித்துக் கொள்ளவேண்டும்" என்று விட்டுவிடுகிறார்கள். இதனால், என்ன ஏற்படுகிறது? 150 மைல் களைப்பு இல்லாமல் ஓடிவந்த லாரி, பஸ் போன்றவை, நகர எல்லைக்குள் ஒன்றரை, இரண்டு மைல் போவதற்குள் டயர்கள் பாதிக்கப்படுகின்றன. இதை மனத்திலே கொள்ள வேண்டும். இம்மாதிரி பல்வேறு நகரங்களில் இருக்கின்றன. உதாரணத்திற்காக ஒரு நகரத்தைச் சொல்கிறேன். இதுமாதிரி பல்வேறு நகரங்களுக்கு இடையிலே, ஆங்காங்கு துண்டித்துவிட்டு, துண்டித்துவிட்டு, ரோடுகளைத் தொடருவதை விட முழுத் தொடர்பாகவே இருக்கச் செய்யவேண்டுவது அரசாங்கத்தின் கடமையாகும்.

காரைக்குடியிலிருந்து தேவக்கோட்டை போகும் வழியில் தேனாறு இருக்கிறது. முனிசிபல் லிமிட்டுக்கு அப்பால் இருக்கிறது. (கனம் திரு. வெ. ராமையா: தேன் ஓடுகிறதா?) தேன் எவ்வளவு அளவிலே அதிகமாக இந்த நாட்டிலே ஓடுகிறதோ அந்த அளவு அந்த நதியிலே தண்ணீர் ஓடும். ஆகவே, அதற்குத் தேனாறு என்று பெயர் வந்திருக்கிறது. அது காரணப் பெயர். அது பெரும்பாலும் காரைக்குடி முனிசிபாலிடிக்கு உதவுவது இல்லை என்று சொல்லப்படுகிறது. அங்கிருந்து தொண்டி கடற்கரை வரையிலும் போகிற ரோடு. அது முனிசிபல் எல்லையை ஒட்டி இருக்கிறது. அது மிகப் பழங்காலத்தில் போடப்பட்டது. அதை அகலப்படுத்தவேண்டும் என்று அகலப் படுத்தினார்கள். இரும்பு கர்டர் கூடப் போடவில்லை. ரயில்வே தண்டவாளம் மாதிரி வைத்துப் போட்டிருக்கிறார்கள். அகலப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், பலம் இல்லை. ஒரு வருஷம், இரண்டு வருஷம், மிஞ்சினால் ஐந்து வருஷம்தான் அந்தப் பாலம் நீடித்திருக்கும் என்று சில கணிப்புக்கள் மூலம் சொல்லுகிறார்கள். அதை ஒழுங்காகச் செய்து செம்மைப்படுத்த வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை நகரத்தையொட்டி, வரலாற்றுக்கு எடுத்துக் காட்டாக இருக்கிற ஒரு சிறந்த பாலம் இருக்கிறது. அது மார்மலாங் ப்ரிட்ஜ். அதை ஒரு மானுமென்ட் மாதிரி வைக்க வேண்டும் என்ற கருத்துப்பட, 1957-ம் ஆண்டில் 20 லட்ச ரூபாய் செலவில், தனியாக ஒரு பாலம் அமைத்துவிட்டு, மார்மலாங் பாலத்தை அப்படியே வைத்துவிடுவது என்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இப்பொழுது இந்திய சர்க்காருடைய செலவில் நான் அந்தப் பாலம் அமைக்கப்படுகிறது என்று சொல்லலாம், அல்லது மத்திய சர்க்கார் உதவி வருகிறது என்று சொல்லலாம். அந்தத் துறை எனக்குத் தெரியாது. ஒருக்கால், நம்முடைய மாநில சர்க்காரே முழுப் பொறுப்பும் ஏற்றுக் கொண்டிருக்கவும் கூடும். அதற்குள் நான் பிரவேசிக்கவில்லை. 1957-இல் இருந்த திட்டத்தின்படி, மார்மலாங் பாலத்தை அப்படியே வைத்துவிட்டு, புதியதாக 20 லட்சம் ரூபாய் செலவில் அமைக்காதது அப்பொழுது நம்முடைய இலாக்காவிலே இருந்த பல்வேறு அதிகாரிகளுடைய குறை என்றுதான் நான் கருதுகிறேன். குழப்பம் அல்லது குற்றம் என்று சொல்லவில்லை. கருத்து வேறுபாடு அடிப்படையில்





அதை விட்டிருக்கவும் கூடும். தாம் நினைப்பது சரி என்று ஒருவர் நினைக்கலாம், அதுவே தவறு என்று மற்றவர் நினைக்கலாம். ஆகவே, நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை. கருத்து மாறுபாடு காரணமாக இருக்கலாம். அப்பொழுது அந்தப் பாலத்தை அமைத்திருந்தால் 20 லட்ச ரூபாயில் முடித்திருக்கக் கூடும். இப்பொழுது அமைக்கப்படுகிற பாலத்திற்கு 40 லட்சம் ரூபாய் செலவு ஆகிவிடுமோ என்னவோ? என்னுடைய சாதாரண புத்திக்கு எட்டிய அளவிற்கு நான் கணிக்க முற்படுகிறேன். பழைய மார்மலாங் பாலமானது பழைய பாலம்தான் என்றாலும், கிட்டத்தட்ட நம்முடைய மாநிலத்தில் உள்ள பெரிய பாலங்களுக்குள்ளேயே முதன்மையானது என்று சொல்லத்தக்க ஒன்று என்று சொல்லலாம். அம்மாதிரியான அந்தப் பாலம் தகர்க்கப்பட்டு விட்டது. அந்தப் பாலத்தை இடிப்பதற்கு எவ்வளவு செலவு ஆயிற்று என்ற கணக்கை எடுத்துப் பார்த்தால் தெரியும். இடிக்கிறபோது நாம் பார்க்கிறோம். இயந்திர சாதனம் வைத்து இடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அன்றாடம் பார்க்கிறோம். நானும் 100 தடவை அந்தப் பாலத்தின் மேல் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருக்கிறேன். அந்தப் பாலம் அவ்வளவு நன்றாக இருந்தது. அதை அப்படியே வைத்துக் கொண்டுவிட்டு, அதற்கப்பால் பெரிதாக ஒரு பாலம் கட்டியிருக்க வேண்டும். பழைய பாலத்தில், கட்டை வண்டிகள், ரிக்ஷாக்கள் போன்ற வண்டிகள் போகும்படியாக வைத்திருக்கலாம். அதை இடித்துவிட்டார்கள். போனது போகட்டும். அம்மாதிரி அப்பொழுது பண்ணியிருந்தால் அந்தச் செலவு இருபது லட்சத்தோடு போயிருக்கும். இப்பொழுது, 40 லட்சம், 50 லட்சம் என்று செலவழித்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது. எவ்வளவு செலவானாலும், அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு வந்திருக்கிறது.

அதே மாதிரிதான், அதற்குப் பக்கத்திலே சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்குள்ளே ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது. வேலை தொடங்கியிருக்கிறார்கள். சுமார் ஐந்தாறு மாதங்களுக்கு முன்னாலேயே நிலச் சோதனை (ஸாயில் டெஸ்ட்) செய்து முடித்துவிட்டு, கண்டிராக்டுக்குக் கொடுத்துவிட்டார்கள். சுமார் மூன்று லட்சம் செலவாகக்கூடிய வேலை அது. அந்த வேலை ஐந்து மாதங்களாகத் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லை என்பதைப் போல், மேல் நிலையில் உள்ளவர்கள் அனுமதி தந்துவிட்டாலும், கீழ் அதிகாரி, "ஸாயில் டெஸ்ட் பண்ணவேண்டும்" என்று சொல்கிறார். என்ன காரணம்? காரணத்திற்குள் நான் நுழைய வில்லை. ஸாயில் டெஸ்ட் பண்ணுகிறேன் என்று சொல்லி ஐந்து மாதமாக வேலை தடங்கலில் இருக்கிறது. அந்த பார்ட்டிகுலர் கண்டிராக்டர் இருக்கிறார். அவர் நஷ்ட ஈட்டுக்குக் கோர்ட்டில் தாவா செய்வாரானால், நிச்சயம் நாம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும். இம்மாதிரியான தவக்கங்கள், கஷ்டங்களை நாம் ஏன் உற்பத்தி செய்துகொள்ள வேண்டும்? ரிகார்டு சிலவற்றைப் பார்த்தேன். மேலே இருக்கிற அதிகாரிகள் சாங்ஷன் செய்து

விடுகிறார்கள். செய்து விட்டார்கள். 'செய்' என்றும் சொல்லி விட்டார்கள். பிறகு கீழே இருக்கிறவர்கள் அந்தக் காரணம், இந்தக் காரணம் என்று சொல்லி இன்னும் பல காரணங்களைச் சொல்லி அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

இம்மாதிரியெல்லாம் போகிறபோது, நம்முடைய நிர்வாகத் திற்கும் சிரமம். செலவும் கூட. ஒரு மாதம் தவக்கப்பட்டாலும், ஒரு மாதத்திற்குள்ளே ஐந்து பர்செண்ட் பண்டங்களின் விலை ஏறிவிடுகிற உண்மை நமக்குத் தெரியும். மேலும் எஸ்டிமேட் போட்டு, அதன் இடையில் ஏற்படுகிற செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் ஏற்படக்கூடும். அத்தகைய உரிமை யும், தேவையும் கூட கண்டிராக்டருக்கோ மற்றவர்களுக்கோ வந்து விடுகிறது.

இந்தத் துறையிலே இன்னும் சிறப்பாக, செம்மையாக, திறமை யாக வேலை செய்ய வேண்டும். பெரிய ரோடுகளில் உள்ள பல பாலங்கள் இன்னும் அகலப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அவை அகலப்படுத்தப்படாமையினால், பல கஷ்டங்கள் உண்டா கின்றன. நூற்றுக்கணக்கான பாலங்களை அகலப்படுத்திவிட்டு, பத்து, பன்னிரண்டு பாலங்களை மட்டும் அகலப்படுத்தாமல், குறுகிய அகலமுள்ள பாலங்களாக வைத்திருப்பதனால், அகன்ற சாலைகளில் பஸ்களையோ, லாரிகளையோ ஓட்டிக்கொண்டு வருகிற வர்கள், இம்மாதிரிக் குறுகிய பாலங்களில் வருகின்றபோது, எதிரி லே வருகிறவர்களைப் பார்க்காமல் முட்டி மோதிக்கொள்ளுகிற நிலை யெல்லாம் ஏற்படுகின்றன. பல அபாயங்கள் ஏற்பட்டு வருவதை நாம் அறிகிறோம். ஓடிக்கொண்டிருந்த பஸ் அப்படியே சக்கரம் கழன்று தொங்கிக்கொண்டிருந்ததை—நல்லவேளையாக அவற்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஐம்பது பேர்கள் பிழைத் தார்கள்—நான் பார்த்திருக்கிறேன். இவற்றுக்கு எல்லாம் காரணம் ஒரு ரோடில் உள்ள ஒரு பாலத்தை அகலப்படுத்தி, இன்னொன்றை அகலப்படுத்தாமல் விடுவதுதான். ஆகவே ஒரு ரோடில் உள்ள ஒரு பாலத்தை அகலப்படுத்துவது என்றால் அந்த ரோடில் உள்ள எல்லாப் பாலங்களையும் அகலப்படுத்தும் நடவடிக் கையை மேற்கொள்ள வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு மேலும் சபை நேரத்தைக் கரைக்கூடாது என்ற காரணத்தினால் இத்துறையைப் பாராட்டினாலும், இன்னும் பாராட்டைப் பெறுவதற்குரிய பல காரியங்களைச் செய்தாக வேண்டும் என்று சொல்லி இந்தத் துறையில் திருப்தி என்பது எப்போதுமே இல்லை—இன்றைக்கு 50 அடி அகலப்படுத்தினால் போதும் என்று நினைப்போம், சில ஆண்டுகளிலேயே அந்த ரோடை நூறு அடி அகலப்படுத்த வேண்டிய நிலையும் வரும்—அவற்றை ஆட்சியினரும் சம்பந்தப்பட்ட இலாகாவினரும் கவனித்து அவ்வப்போது செம்மையாகச் செயல்பட்டு வரவேண்டு மென்று கூறி அமைகிறேன். வணக்கம்.

திரு. ம. கமலநாதன்: கனம் தலைவர் அவர்களே, பெருவழித் துறை, பொதுப்பணித்துறை, உணவு உற்பத்தி இலாகா ஆகிய வற்றில் வொர்க் சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மெண்டின்கீழ்





பணியாற்றி வருகின்றவர்களைப்பற்றி எனக்கு முன் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களும் விளக்கமாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அத்துறைகளின்கீழ் இன்று பல ஆயிரம் பேர்கள் வேலை செய்து வருகிறார்கள். ஆயினும் அவர்களது சர்வீஸ் கண்டிஷன் சீர்படுத்தப்படாமலேயே இருக்கிறது. சம்பள விகிதமும் நிர்ணயிக்கப்படவில்லை. அவர்கள் டெம்பரரி ஸ்டாஃபாக இருக்கக் கூடாது. என்.ஜி.ஓ.-க்களுக்கு உள்ளதுபோல அவர் களுடைய நிலைமை கவனிக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். அதை நானும் வற்புறுத்துகிறேன்.

மெட்ராஸ் பே கமிஷன் 1959-60-இல் என்.ஜி.ஓ.-க்களுக்கு உள்ளதுபோல் அவர்களுக்கும் சம்பள விகிதம் இருக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக பெருவழித்துறையில் வேலை செய்து வரும் ரோட் இன்ஸ் பெக்டர்கள் 4,000 பேர்களில் 993 பேர்கள்தான் நிரந்தரமாக்கப் பட்டிருக்கிறார்கள். அரசாங்க ஆணை எண். 2114 பி. டபிள்யூ.டி. ப்படி 45-56 படி சொல்லப்பட்ட அளவிற்கு நிரந்தரமாக்கப் படவில்லை என்பது குறித்து வருந்துகிறேன். மேலும் ஐந்து வருட சர்வீஸுக்கு மேலானால் அவர்களுடைய சர்வீஸ் நிரந்தரமாக்கப் பட வேண்டும் என்ற அரசாங்க ஆணை 1368, தேதி 4-11-1963 படி, ஐந்து வருட சர்வீஸுக்கு மேலான பலருடைய சர்வீசுகள் நிரந்தரமாக்கப்படவில்லை என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கான்க் கூலிகளும் கூட தினக்கூலிக்கு பஞ்சாயத்துகளிலும், இந்த இலாகாக்களிலும் வேலை செய்து வருகிறார்கள். ஏதாவது ஒரு வழிவகை செய்து அவர்களையும் நிரந்தரமாக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமச் சாலைகளின்கீழ் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் திலே ரூ. 15 கோடி திட்டச் செலவாக ஒதுக்கப்பட்டிருந்தது என்றாலும் அதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டையும் சேர்த்து 6 ஆண்டில் செலவழிக்கப்படவேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று கேட்ட நேரத்தில் நெருக்கடி காரணமாக அதற்கு நிதி ஒதுக்கப் படவில்லை என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் என்ஜினியரிங் ஸ்டாஃப் சரியான முறையில் வேலை செய்யாத காரணத்தினால்தான் இம்மாதிரி தொகை செலவழிக்கப்படாமல் நிறுத்தப்பட்டது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் ரோடு போட்டுக்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, அவர்களுக்குத் தேவைப் படுகிற இயந்திரங்கள் கொடுக்கப்படவில்லை. ரோலர், ரோடு என்ஜின் ஆகியவைகளும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன் சாலைப் பராமரிப்புக்கு அளிக்கும் மானியம் மக்கள் தொகை அடிப்படையில் தலைக்கு 40 பைசா என்ற முறையில் அளிப்பது சரிதானா என்பதைச்

[திரு. ம. கமலநாதன்] [15th March 1966

சிந்தித்துப் பார்க்கவேண்டும். பஞ்சாயத்து யூனியனில் உள்ள மக்கள் தொகைக்கும், பாதையின் நீளத்திற்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. சில பஞ்சாயத்துக்களில் ஜனத்தொகை குறைவாக இருக்கும். ஆனால் அவர்கள் பராமரிக்க வேண்டிய சாலைகளின் நீளம் அதிகமாக இருக்கும். சில இடங்களில் சாலைகளின் நீளம் குறைவாக இருந்தாலும் மக்கள் தொகை அதிகமாக இருக்கும். அதனால் சாலை பராமரிப்புக்கு மக்கள் தொகை அடிப்படையில் மானியம் கொடுப்பது சரியாகுமா? ஆகவே இதைப் பரிசிலனை செய்து பாதையின் நீளத்தைப் பொறுத்துத்தான் மானியங்கள் வழங்கப்படவேண்டும்.

அடுத்து, கிருஷ்ணகிரியில் உள்ள டி.பி.யை கோர்ட் கட்டடமாக மாற்ற எஸ்டிமேட் எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அங்கு அடிக்கடி பலர் காம்ப் வருகின்ற நிலை இருப்பதனால் அதைக் கோர்ட் கட்டடமாக மாற்றுவதற்கு முன்பு கிருஷ்ணகிரியில் வேறு ஒரு டி.பி. கட்டடத்தைக் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் ஜில்லாவை இரண்டாகப் பிரித்த பிறகு தர்மபுரியில் பல கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி வேலை செய்தாலும் கிருஷ்ணகிரியில் எதுவும் கவனிக்கப்படவில்லை, இந்த இடத்திலும் பல கட்டடங்கள் கட்ட தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. நஞ்சுண்டராவ் அவர்கள் பேசும் போது இது பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மெண்டு அல்ல, பப்ளிக் வெல்பேர் டிபார்ட்மெண்டு என்று சொன்னார்கள். இன்றையதினம் இந்த பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு எப்படி பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மெண்டாக இருக்கிறது என்பதற்கு என்றால் உதாரணம் கொடுக்க முடியும். திருச்சியில் உள்ள கொதிகலன் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் தரையைச் சமப்படுத்தமட்டும் 21 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதில் பத்து லட்சம் கையாடல் செய்யப்பட்டு பலர் கைது செய்யப்பட்டு வருவதை நாம் பார்க்கிறோம். இப்படி பத்து லட்சம் ரூபாய் கையாடல் செய்யப்படுகிற வரையில் இலாகாவில் உள்ளவர்கள் கவனக்குறைவாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஹரூரில் பி.டபிள்யூ.டி.-க்குச் சொந்தமான 0.41 செண்ட் நிலத்தை பி.எஸ். 424 ஏ. படி தனிப்பட்ட ஒரு காங்கிரஸ் தலைவருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஹைவேஸ் டிபார்ட்மெண்டார் கேட்டார்கள், கொடுக்கவில்லை. பொதுக் காரியத்திற்க்காக கேட்டார்கள், கொடுக்கவில்லை. ஆனால் இந்த காங்கிரஸ் தலைவருக்கு ஆண்டு ஒன்றுக்கு 20 ரூபாய் குத்தகை விதம் 20 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுத்துள்ளார்கள். இதுபற்றி போர்டுக்கு அப்பீல் செய்துகொண்டதில் 20 ஆண்டுக் குத்தகை என்பது அதிகம் என்பதாக ஐந்தாண்டாகக் குறைத்துள்ளார்கள். 20 ரூபாய் வாடகை என்பது குறைவு என்பதாக 100 ரூபாய் வாடகை என்று செய்துள்ளார்கள். இப்படி அந்த இலாகாவில் ஊழல் நடக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



15th March 1966] [திரு. ம. கமலநாதன்]

கடைசியாக இவ்விலாக்காக்களின்கீழ் வொர்க் சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மெண்டு என்ற இனத்தின்கீழ் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கானவர்களுடைய வேலையை நிரந்தரமாக்க வேண்டும், சம்பள விகிதம் நிர்ணயிக்கப்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் தலைவர் அவர்களே, இன்று இந்த முக்கியமான மானியக் கோரிக்கையிலே நேரம் குறைவாகக் கொடுத்தும் கூட பல அங்கத்தினர்கள் சிறப்பாகத் தங்கள் தங்கள் பகுதியில் உள்ள குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய கருத்துக்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, ரோடு போக்குவரத்தைப் பொறுத்தவரையில் நாம் பாராட்டக்கூடிய நல்ல பல வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன என்றாலும் இன்னும் கவனிக்கப்படவேண்டிய வேலைகள் இருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்தின் பொருளாதார நிலையும், தொழில் வளர்ச்சியும் பெருகப் பெருக இத்துறையில் நாம் பல வேலைகளைச் செய்தாக வேண்டியிருக்கிறது. இவற்றை நாம் முறையாக யோசித்துச் செயல்படவேண்டியதாக இருக்கிறது. மக்களுக்கு வசதி, லாபம் இவற்றைக் கொடுக்கவேண்டுமென்றால் அவர்கள் உற்பத்தி செய்கிற பண்டங்களை வியாபார ஸ்தலங்களை நோக்கி எடுத்துச் செல்ல முக்கியமாகத் தேவைப்படுவது ரோடுகள்தான். பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு இரண்டாவது மகாயுத்தம் முடிந்ததற்குப் பிறகு சாலைப் போக்குவரத்து பராமரிப்பு நிபுணர்கள் எல்லாக் கிராமங்களையும் கச்சா ரோடு போட்டு இணைத்துவிட்டால் கூட நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்துவிடலாம் என்று நினைத்தார்கள். அந்த அடிப்படையில் கூட பெரிய திட்டங்களை உருவாக்கினார்கள். ஆனால் முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பிறகு பார்த்தால் எல்லா கிராமங்களையும் இணைத்து விட்டால் போதாது, தொழில் வளர்ச்சிக்குத்தகுந்த முறையில் ரோடுகள் அமைக்கப்படவேண்டும் என்பதைப் பார்க்கிறோம். அதோடு மட்டுமல்லாமல் போக்குவரத்திலே ஏற்படுகிற நெரிசல்களை எல்லாம் தவிர்க்கவேண்டுமென்று சொன்னால் அதற்குத் தகுந்த அகலமான ரோடுகளையும், பலமான ரோடுகளையும் ஏராளமாக நாம் போட வேண்டும். ஆகையினால்தான் இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் இதற்கு முன்பு அவர்கள் பார்த்த நிலையைவிட அன்று மக்களுக்குத் தேவைப்பட்டதைவிட இன்று இன்னும் அதிகமாகத் தேவைப்படுவதால் அதற்குத் தகுந்தபடி இன்னும் அதிகமான கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு உண்டு. இன்றைக்குச் சபையிலே பல

[திரு. வெ. ராமையா] [15th March 1966

அங்கத்தினர்கள் தங்களுடைய தேவைகளைச் சொன்னார்கள் என்றால் ஒரு சில பகுதிகளில் இருக்கக்கூடிய தேவைகள் மட்டு மல்ல அவை. ராஜ்யம் பூராவிலும் எல்லாப் பகுதிகளிலும் தேவைகள் அதிகமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இன்னும் அதிகமாக இந்தத் தேவைகள் ஆகும் என்பதிலே சந்தேகமில்லை. இருந்தாலும் நிதி வசதிக்குத் தகுந்தமுறையில் போதுமான முயற்சிகள் எடுத்துக் கொள்கிறோம். இன்னும் அதிகமாகக் கவனம் காட்ட வேண்டுமென்ற கருத்தை நானும் ஆதரிக்கிறேன் என்றால் அது மிகையில்லை.

எல்லாத் துறைகளும் நல்லமுறையில் செயலாற்ற வேண்டு மென்றால் அதற்குப் போக்குவரத்து மிகவும் அவசியம். அந்த அடிப்படையில் நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். விசேஷமாக கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய ரோடுகள் மாட்டு வண்டி, சாதாரணமாக மக்கள் நடந்துபோகக்கூடிய முறையில் இருந்தாலும் போதும் என்ற முறையில் தான் ஏராளமான கச்சா ரோடுகளைப் போட்டிருக்கிறார்கள். அப்பொழுது மக்கள் நினைத்த தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய நிலையில்தான் பூர்த்தி செய் திருக்கிறார்கள். ஆனால் துரிதப் போக்குவரத்து இருக்க வேண்டு மென்று இப்பொழுது மக்கள் நினைக்கக்கூடிய காரணத்தாலே கிராமங்களை இணைக்கக்கூடிய முறையிலே பஸ்கள் போகக்கூடிய அளவுக்கு இருக்கவேண்டுமென்ற பலமான கோரிக்கைகள் இருக் கின்றன. அதற்குத் தகுந்த முறையிலேதான் பஸ்கள் செல் வதற்குத் தகுந்த முறையில் ரோடுகள் இருந்தாலும், இல்லா விட்டாலும் நாம் போட்டிருக்கக்கூடிய ஸ்டாண்டர்டு ஸ்பெஸிபி கேஷனைக் குறைத்துக் கொண்டு பஸ்கள் விடுகிறோம். அப்படிக் குறைத்துக் கொண்டு பஸ்கள் விடுவதற்கு நாம் அனுமதித்த நேரத்தில் அரசாங்கத்தினுடைய கருத்து, மிகக் குறுகிய காலத்தில் அரசாங்கத்தின் பொறுப்பில் ரோடுகளை எல்லாம் எடுத்துப் பராமரிக்க வேண்டுமென்பதாக இருந்தது. ஆனால் அப்படி முடிவு எடுத்ததற்குப் பிறகு இரண்டு முக்கியமான நெருக்கடிகள் ஏற்பட்டன என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். ஒன்று சைனாவிடமிருந்து ஏற்பட்ட நெருக்கடி, மற்றொன்று பாகிஸ் தான் மூலம் ஏற்பட்ட நெருக்கடி. இதன் காரணமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளேயே கிராமப்புறங்களில் பஸ்கள் ஓடக்கூடிய ரோடுகளை எல்லாம் அரசாங்கத்தின் பொறுப் புக்குக் கொண்டுவரவேண்டுமென்றிருந்த முடிவைத் தளர்த்த வேண்டிய நிலை வந்துவிட்டது. ரோடுகள் எல்லாம் இன்னும் பூரண மாக அரசாங்கத்தின் பொறுப்புக்கு வரவில்லை. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலிலும் இருந்து வருகின்ற தீர்மானங்களைப் பார்த்தால், அவர்கள் எந்த எந்த ரோடுகளையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டு மென்று தெரிவிக்கக்கூடிய முறையில் இருக்கின்றன. ஆனால் இப்பொழுது இருக்கக்கூடிய நிதி வசதிக்குத் தகுந்த முறையிலே



15th March 1966] [திரு. வெ. ராமையா]

நாம் ரோடுகளை எடுத்துக்கொள்கிறோம். இவைகள் எல்லாம் வேகமாக எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. சங்கரன் அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் ஓர்க் சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மெண்டு சம்பந்தமாக ஊழியர் களுடைய பலவிதமான கோரிக்கைகளைப் பற்றி சொன்னார்கள். இது தொடர்ந்து பரிசீலனையில் இருந்து வருகின்ற விஷயம். பல குறைகளைத் தீர்த்துக்கொடுத்திருக்கிறோம், இன்னும் தீர்த்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குத் தகுந்த முறையில் சீஃப் எஞ்சினியர் முயற்சி எடுத்துக்கொள்வார்கள். இப்பொழுதும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், இதில் அரசாங்கம் தயக்கம் காட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல அரசாங்கத்திலே சேர்க்கப் பட்டு அவர்கள் நிம்மதியாகவும், அவர்கள் அடைய வேண்டிய வசதிகளை எல்லாம் அவர்கள் அடைந்தோம் என்ற நிம்மதியிலே யும் அவர்கள் பணியாற்றினால்தான் நல்ல முறையில் பணிகள் நடை பெறும் என்ற கருத்துக்கு மாறுபட்ட கருத்து அரசாங்கத்திற்குக் கிடையாது. அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை யெல்லாம் செய்து கொடுக்கமுடியும். ஆனால், அதே நேரத்தில் அரசாங்க ஊழியர் ஆக இருக்கவேண்டுமென்று சொல்வதைப் பரிசீலனை செய்யும்பொழுது, தனியார் துறையில் இருப்பதைப் போன்று சில வசதிகளை கொடுக்க வேண்டுமென்று மாறுபட்ட கோரிக்கைகள் வரும்பொழுது அதைப் பரிசீலனைசெய்து முடிவுகள் எடுப்பது சங்கடமாக இருக்கிறது. இருந்தாலும், இது தொடர்ந்து கவனம் செலுத்தப்படுகிற விஷயம்.

கனம் சுதந்திராக் கட்சித் தலைவர், இங்கே நகரத்தில் வேலை நடந்துகொண்டு இருக்கிற மார்மலாங் பிரிட்ஜையும், அதற்கு அருகாமையிலே இருக்கின்ற சிறு பிரிட்ஜைப்பற்றியும் சொன்னார்கள். மார்மலாங் பிரிட்ஜைப் பொறுத்த வரையில் பாலத்தை உடைப்பது நல்லதல்ல என்று சொன்னார்கள். அதில் சரித்திரமோ அல்லது மறக்க முடியாத சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவோ அந்தப் பாலம் இல்லை. ஆனால் அது பலஹீனம் ஆக இருக்கக்கூடிய நிலையை நிபுணர்கள் சொன்ன காரணத்தாலே இரண்டு பக்கத்திலும் புதிய பாலங்களைக்கட்டி, அதன்மூலமாக பலப்படுத்தலாம் என்று இதையெல்லாம் பூர்வாங்கமாக அடிப் படைப் பரிசீலனைசெய்து முடிவுக்கு வந்திருக்கிறார்கள். உடைப் பதைப் பார்த்தால் கஷ்டமாக இருப்பதுபோல்தான் தெரியும், உடைப்பதே கஷ்டமாக இருப்பதால் பலமாக இருக்கலாம் என தோன்றும்; ஆனால், அதன்மேல் எத்தனை டன் உள்ள போக்குவரத்து இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். அடுத்த படியாக சைதாப்பேட்டை கல்லூரிக்கு அருகாமையில் இருக்கின்ற பாலத்தைப்பற்றிச் சொன்னார்கள். இது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டிருப்பதால் சீஃப் எஞ்சினியர் இதைக் கவனித்துக் கொள்வார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

வெட்டுப் பிரேரணைகள் ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், குறிப்பாக தர்மபுரித் தொகுதியிலிருந்து வருகின்ற திரு. வடிவேல் அவர்கள் கூறியதைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். அவர்கள் இந்த 24 லட்ச ரூபாய், 26 லட்ச ரூபாய் சாங்ஷன் செய்ததற்காக நன்றி சொன்னார்கள். ஆனால் அதே நேரத்தில் அதே மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கமலநாதன் அவர்கள் என்னுடைய பகுதிக்கு வரவில்லையே என்று சொன்னார்கள். இரண்டு பேர்களும் தருமபுரியைச் சேர்ந்தவர்கள் தான். கட்டட வசதிகளைப் பொறுத்தவரையில் ஒத்திப் போட்டாலும்கூட தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருக்கக்கூடிய காரணத்தாலே நாம் கட்டடங்களைக் கட்டிக்கொடுக்கின்றோம். இன்னும் பல இடங்களில் கட்டடங்கள் கட்டுகிறார்கள்.

இன்னும் சில அங்கத்தினர்கள் பேசும்பொழுது பிரயாண விடுதிகள் ஏராளமாகக் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அதுதான் எல்லோருடைய விருப்பமும் ஆசையும்கூட. சௌகரியப்பட்ட இடங்களில் எல்லாம் பிரயாணிகள் வந்து தங்குவதற்கு ஏற்றவகையில் பிரயாண விடுதிகள் கட்டவேண்டும், அவர்கள் உல்லாசமாக இருக்கக்கூடிய வகையில் பூங்கா முதலியவை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாம் எதைச் செய்வதானாலும் ராஜ்யத்திலே இன்றைக்கு மிக முக்கியமாக இருக்கக்கூடிய பிரச்னைகளைத் தீர்க்கக் கூடிய முயற்சியிலே ஈடுபட்டு, மற்றவைகளை நாம் நிதி வசதியைப் பார்த்து ஒத்திப்போடலாம் என்பது கட்டடங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் விசேஷமாக, நுணுக்கமாகக் கண்காணிக்க வேண்டுமென்பதுதான் விருப்பம். அந்த முறையிலே தான் ராஜ்ய முதலமைச்சர் அவர்கள் கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். கட்டடங்களைக் கட்டும்பொழுது நாம் அதில் போடக்கூடிய மூலதனத்தைக் குறைக்கமுடியுமா அல்லது தொடர்ந்து நடந்துவரக்கூடிய முறையே இருக்கட்டுமா என்பதையெல்லாம் பரிசீலனை செய்வதற்காக ஒரு உயர்மட்டக் கமிட்டியை அமைக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு இருக்கக்கூடிய நிதிவசதிக்குத் தகுந்தமுறையில் பி. டபிள்யூ.டி. கட்டக்கூடிய கட்டடங்கள் எல்லாம் திரு. சிரஞ்சீவலு நாயுடு அவர்கள் சொன்ன கருத்தையொட்டி, 50 அல்லது 100 வருஷங்களுக்கு இருக்கக்கூடிய கட்டடங்களாகவோ அல்லது பலமான கட்டடங்களாகவோ இருக்கவேண்டுமென்று சொன்னால் அதற்கு அதிகமான பணம் தேவைப்படுகிறது. இப்பொழுது விவசாயத்திற்குப் பணம் தேவைப்படுகிறது, கிணறுகளுக்குப் பணம் தேவைப்படுகிறது, சிறு சிறு நீர்த்தேக்கங்களுக்குப் பணம் தேவைப்படுகிறது. திட்டம் வேகமாக வளர்ந்துகொண்டே வரும் பொழுது, நிதி வசதிக்குத் தகுந்தாற்போல் இருக்கவேண்டுமா, அல்லது பலமான கட்டடங்கள் கட்டுவது அவசியமாக இருக்கிறதா அல்லது 10 அல்லது 15 வருஷங்களுக்குத் தாங்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய பொருளாதார நிலைக்குத் தகுந்தவாறு கட்டடங்கள் கட்டவேண்டுமா என்பதையெல்லாம் பரிசீலனை





செய்யவேண்டுமென்ற கருத்தை நிபுணர்களிடத்திலே விட்டுவிடுகிறோம்.

நாம் ஏராளமாக 'செமி-பர்மனென்சி ஸ்டாக்சர்', 'டெம்பாரி 2-00 p.m.
நாம் ஏராளமாக 'செமி-பர்மனென்சி ஸ்டரக்சர்', 'டெம்பரரி
ஸ்டரக்சர்' என்ற அடிப்படையில் கட்டினால்குறைந்த பட்சம் 20 வருஷம் 25 வருஷம் தாங்கும். இரண்டாவது மகாயுத்தத்தின் பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் செலவைக் குறைத்து அதனால் மிச்சப்படக்கூடிய பணத்தை உடனடியாக நீர்ப்பாசனம், சிறு பாசனம், கிணறு தோண்டுவது போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாமா என்பதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி நிபுணர்களை ஆலோசனை கேட்டிருக்கிறேன். இந்த அடிப்படையில் வேலைகள் துரிதமாக நடக்கும். ஏராளமான கட்டடங்கள் கட்டுவதும் தேவையாக இருக்கிறது. இந்த ராஜ்யத்தில் இங்குமங்கும் இரண்டொரு கட்டடங்களைக் கட்டிவிட்டால் போதாது. ஒவ்வொரு கிராமத்திலும் 2, 3 கட்டடங்கள் அமைய வேண்டிய நிலைமை இருக்கிறது. பள்ளிக்கூடத்திற்கு, மருத்துவ மனைக்கு, விவசாயக் கோடவுன்களுக்கு என்று பல துறைகளில் கட்டடங்கள் கட்ட வேண்டியிருக்கிறது. குறிப்பாக, சிவில் சப்ளைஸ் வேலையைக் கவனிப்பவர்களுக்கு கட்டடம் தேவையாக இருக்கிறது. அந்த அடிப்படையில் ராஜ்யத்திற்குத் தேவையான கட்டடங்களைக் கட்டுவதில் புது முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

குறிப்பாக, சேது சமுத்திரத் திட்டம் சம்பந்தமாகவும், தூத்துக்குடி துறைமுகம் சம்பந்தமாகவும் நேரம் இல்லாத காரணத்தால் கனம் அங்கத்தினர்கள் பேசவில்லை. அந்த வேலைகள் எல்லாம் மிக நல்ல விதமாக, துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, சேது சமுத்திரத் திட்டம் சம்பந்தமாக மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியைப் பெருமளவு பாராட்ட விரும்புகிறேன். விசேஷமாக முன்னாள் நிதியமைச்சர் திரு. டி. டி. கே. அவர்கள், தனுஷ்கோடி புயலால் பாதிக்கப்பட்ட நேரத்தில், மிக வேகமாகப் பல உத்தரவுகளைப் போட்டு அடிப்படை அமைப்புகளை எல்லாம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தார்கள். பிரதம எஞ்சினியரை நியமனம் செய்து விட்டார்கள். ஸ்தலத்தில் இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சூப்பிரின்டெண்டிங் எஞ்சினியரை நியமனம் செய்திருக்கிறார்கள். உயர்மட்ட அதிகாரிகள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த வேலை மிகச் சிக்கல் நிறைந்த வேலை. தேசத்திற்கே புது அனுபவம் தரக்கூடிய வேலை. கடலுக்குக் கீழே—30 அடி, 40 அடிக்குக் கீழே—20 அடி ஆழம் வெட்ட வேண்டிய நிலை இருக்கிறது. நல்ல விதமாக அதைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆராய்ச்சி வெற்றிகரமாக முடியும் என்பதிலே சந்தேகம் இல்லை. அந்தத் திட்டம் வேகமாகச் செயல்பட்டு இந்த ராஜ்யத்திற்கு மட்டுமல்லாது இந்தத் தேசத்திற்கே பெரிய நன்மையைத் தரும்.

[திரு. வெ. ராமைய்யா] [15th March 1966

அதே போன்றே தூத்துக்குடி துறைமுக வேலையும் மத்திய அரசாங்கப் பொறுப்பில் நடந்து கொண்டிருக்கிறது. அங்கிருக்கக் கூடிய பிராஜக்ட் அட்மினிஸ்ட்ரேட்டர் பெரிய முயற்சி எடுத்து அந்த வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. மற்றச் சிறு துறைமுக வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நேரத்திலே நான் இந்தப் பணிகளிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, சேது ரஸ்தா என்னவாயிற்று என்று கேட்பதற்காகத் திரு. சா. கணேசன் அர்கள் நிமிர்ந்து உடகார்ந்து கொண்டிருக் கிறார்கள். அந்த வேலையையும் கம்ப்ளிட் பிராஜக்டாக அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. அதையும் மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்வரை காத்திருக்காமல், எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் முன்னோடியாக நமது ராஜ்ய அரசாங்க மானியத்திலேயே செய்யத் திட்டமிடப் பட்டிருக்கிறது. கடலூர் துறைமுகத்தைப் பொறுத்த வரை அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை தரும் வகையில் அதை ஒரு மீன்பிடித் துறைமுகமாக அமைப்பதற்கான ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன. கடலூர் துறைமுகத் திட்டமும் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது என்று கூறி என்னுடைய நன்றியைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

The cut motion of Sri M. R. Krishnamurthy to Demand No. XXVII—Public Works—Works was put and lost.

SRI SAW GANESAN : I am not pressing my cut motion to Demand No. XXVII—Public Works—Works.

The cut motion was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,60,94,400 under Demand No. XXVII—Public Works—Works."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion to Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,68,86,800 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion to Demand No. XLIII—Capital Outlay on Public Works was put and lost.



15th March 1966]

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,00,70,400 under Demand No. XLIII—Capital Outlay on Public Works.

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 2-08 p.m.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 154. *Notification issued with G.O. Ms. No. 3348, Revenue, dated the 30th November 1965 relating to the Tribunals for Dharmapuri District under the (i) Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1963 (Madras Act 26 of 1963 (ii) Madras Minor Inames (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963); (iii) Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 27 of 1963); (iv) Madras Inams (Supplementary) Act, 1963 (Madras Act 31 of 1963). [Laid on the Table of the House under sections 73(5), 48(5), 50(5), 13(4) of the above Acts respectively.]*

* 155. *Notification issued with G.O. Ms. No. 210, Rural Development and Local Administration, dated the 7th February 1966 relating to the constitution of "Yercaud Township"; "Yercaud Township Committee", etc., under the Madras Panchayats Act, 1958. [Laid on the Table of the House under section 179(4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

* 156. *Notification issued with G.O. Ms. No. 187, Rural Development and Local Administration, dated the 3rd February 1966 appointing in addition to the Director of Rural Development, the Joint Director of the Rural Development also as an inspecting and superintending officer, in respect of townships constituted under the Madras Panchayats Act, 1958. [Laid on the Table of the House under section 179(4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

* 157. *Notification issued with G.O. Ms. No. 73, Home, dated the 7th January 1965 making an amendment to the Madras Motor Vehicles Rules, 1940, published with Home Department Notification No. 357, dated the 29th March 1940. [Laid on the Table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

[15th March 1966

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கப்பட்ட விவரங்கள்—தொடர்ச்சி.

| வட்டத்தின் பெயர். | வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை, | | | | சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முது நிலை ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் | | இள நிலை ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் | | முது நிலை ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் | | இள நிலை ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் | |
| | ஆண்கள். | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| திருவண்ணாமலை. | 220 | 73 | 103 | 27 | 20 | 10 | 7 | 9 |
| ஆரணி .. | 125 | 82 | 88 | 13 | 19 | 10 | 4 | 2 |
| வந்தவாசி .. | 314 | 87 | 132 | 17 | 44 | 4 | 10 | 6 |
| அரக்கோணம் .. | 200 | 59 | 99 | 27 | 18 | 9 | 4 | 5 |
| வாலாஜாப்பேட்டை | 297 | 157 | 200 | 19 | 31 | 15 | 12 | 10 |
| செய்யாறு .. | 284 | 67 | 87 | 7 | 35 | 6 | 7 | 4 |
| | 2,555 | 1,086 | 1,390 | 281 | 291 | 133 | 87 | 89 |

**குறிப்பு** :—6 முதல் 9 வரையுள்ள பத்திகளின் கீழ் கொடுத்துள்ள மாணவர்களுடன் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரப்படி சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

| முதுநிலை ஆதாரப் பயிற்சிப்பள்ளி. | | இளநிலை ஆதாரப் பயிற்சிப்பள்ளி. | |
|---|---|---|---|
| ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். |
| 2 | 2 | 2 | 1 |

## APPENDIX II

[*Vide* Answer to Starred Question No. 301 at page ]

The Government of India have approved an outlay of Rs. 75,000 with cent percent assistance for "the Pilot Project for Adult Literacy" as an Advance Action Scheme during 1965-66. This Government have sanctioned the opening of 175 Adult Literacy Schools (100 for Men and 75 for Women) in 1965-66 as an Advance Action Scheme. The Director of Secondary Education will select one Panchayat Union area in each of the following districts, viz., Chingleput, South Arcot, Tiruchirappalli, Ramanathapuram and Salem in consultation with the District Devolpment Councils concerned and open 20 Adult Schools for Men and 15 for Women in each of those Panchayat Unions. These Adult Schools will be opened by the Panchayat Unions concerned in the respective Panchayat Union Schools. The Government have extended the upper age-limit for admission to the Adult Schools to 45.

2. The Scheme of adult education has been included in the Fourth Five-Year Plan at a total cost of Rs. 26 lakhs. The proposal involves the opening of 1,500 Adult Education Schools and 2 Adult Education Training Schools during Fourth Plan period. About 150 Adult Schools will be opened during 1966-67.



15th March 1966]

1965–66-ல் முன் கூட்டியச் செயல் திட்டமாக, "முதியோர் கல்விக்கான முன்னோடி திட்டத்திற்கு "நிதி உதவித் தொகையுடன் ரூ. 75,000 செலவிட இந்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இதில் முன் கூட்டியச் செயல் திட்டமாக நமது அரசாங்கம் 1965–66-ல் முதியோர் கல்விக்கான 175 பள்ளிகளைத் (ஆண்களுக்கு 100 பள்ளிகளும், மகளிர்க்கு 75 பள்ளிகளும்) தொடங்க அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. உயர் நிலைக் கல்வி நெறியாளர், சம்பந்தப்பட்ட மாவட்ட வளர்ச்சி மன்றங்களைக் கலந்தாலோசித்து, செங்கற்பட்டு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், சேலம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பஞ்சாயத்து யூனியன் பகுதியைத் தேர்ந்தெடுத்து, அத்தகைய பஞ்சாயத்து யூனியன்கள் ஒவ்வொன்றிலும் ஆண்களுக்கான முதியோர் பள்ளிகள் 20, மகளிர்க்கான முதியோர் பள்ளிகள் 15 ஆகியவற்றைத் தொடங்குவார். இந்த முதியோர் பள்ளிகளைச் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள், அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் திறந்து வைக்கும் முதியோர் பள்ளிகளில் சேர்ந்து படிப்போரின் உயர் வயது வரம்பை 45 ஆக அரசாங்கம் உயர்த்தியுள்ளது.

2. முதியோர் கல்வித் திட்டம், மொத்தம் 26 லட்சம் ரூபாய்ச் செலவில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இச்செயற் குறிப்பு, நான்காம் திட்டக் காலத்தில் முதியோர் கல்விககான 1,500 பள்ளிகள் துவக்கப்படவும், முதியோர் கல்விப் பயிற்சிப் பள்ளிகள் 2 துவக்கப்படவும் வகை செய்கிறது. 1966–67-ல் சுமார் 150 முதியோர் பள்ளிகள் துவக்கப்படும்.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 16th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Inam Estates*

* *S. N. Q.—No.* 5—SRI M. KALYANASUNDARAM : SRI A. K. SUBBIAH : } Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any report was received from the Collector of Tiruchirappalli, regarding details of Inam Estates, not notified so far, under the Inam Estates Abolition Act; and

(*b*) if so, the details of the report and when a final decision would be taken?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

*திரு. ஆ. கு. சுப்பையா :* திருச்சி ஜில்லா புதுக்கோட்டைப் பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் இந்த இனும் ஒழிப்பில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று அந்தப் பிரதேச விவசாயிகள் சங்கத்தினிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது விண்ணப்பங்கள் வந்தனவா ?

*கனம் திரு. வெ. ராமைய்யா :* அதுபோன்ற ஒரு விண்ணப்பம் வந்ததாகத் தெரியவில்லை. புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள இனும்கள் எல்லாம் புதுக்கோட்டை இனும் சட்ட அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மீதம் இருக்கக்கூடியவைகளை யும் காலாகாலத்தில் நோட்டிஃபிக்கேஷன் செய்து எடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

*திரு. ஆ. கு. சுப்பையா :* பல கிராமங்கள் இம்மாதிரி எடுத்துக் கொள்ளப்படாததால் சம்பந்தப்பட்ட விவசாயிகளை எல்லாம் இனும்தார்கள் வெளியேற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒரு ஸ்பெஷல் தாசில்தாரையாவது நியமித்து இன்றையதினம் விவசாயத்தில் உள்ள விவசாயிகளைப் பதிவு செய்வதற்கு நடவடிக் கைகள் எடுக்கப்படுமா ?

*கனம் திரு. வெ. ராமைய்யா :* இவற்றை எடுத்துக் கொள் வதற்கு சட்ட அடிப்படையில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் படும். ஆகவே, ஸ்பெஷலாக தாசில்தார் தேவையில்லை. தேவைப் பட்டால் அரசாங்கம் வேண்டிய கவனம் காட்டும்.

[16th March 1966

### பாலங்கள்

* 302 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுராந்தகம் வட்டம் சூணாம்பேட்டிலிருந்து அசப்பூர் போகும் பாதையில், அசப்பூர் ஆற்றில் பாலம் கட்ட திட்டமிடப் பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) தென் ஆர்க்காடு மாவட் டத்திலுள்ள சூணாம்பேட்டு சாலைக்கு 1/5, 1/7-வது மைல்களில் அசப்பூர் ஆற்றின் குறுக்காகப் பாலங்கள் கட்டும் வேலை நான்கா வது திட்ட முதற்குறிப்பில் சாலைகள் குறித்த செயல் திட்டங்களின் கீழ் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) இவ்வேலை நிதி வசதியைப் பொறுத்து, அதன் முறை வரும்போது நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஆ. தங்கவேலு : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது நிதி வசதியைப் பொறுத்து என்று சொன்னார்கள். சென்னையிலிருந்து பாண்டிச்சேரி, கடலூர் போன்ற முக்கியமான பகுதிகளுக்குள்ளாக ஒரு சிறிய மழை பெய்தாலும் அசப்பூர் ஆற்றில் தண்ணீர் வந்து லாரி, பஸ் கார் போக்குவரத்து தடைபடு கிறது. போக்குவரத்தே நின்று விடுகிறது. ஆகவே, தயவு செய்து அதற்கு முதல் இடம் கொடுத்து நிறைவேற்றி ஆவன செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அங்கத்தினர் அவர்களுக்கு இங்கு ஏற்படக்கூடிய நெருக்கடி தெரிந்திருக்கிறது. இன்று ராஜ்யத்தில் பல பாகங்களில் போக்குவாத்துக்குத் தடங்கல் ஏற்படக் கூடிய எல்லா இடங்களையும் அரசாங்கம் மொத்தமாகப் பரிசீலனை செய்து எந்த எந்த இடத்திற்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் ப்ரயாரிட்டி பிக்ஸ் செய்கிறோம். சில, தேவையைப் பரிசீலனை செய்து நான்காவது திட்டத்தில்கூட சேர்க்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே இதெல்லாம் முறையாகப் பரிசீலனை செய்யப்பட்டு கொடுக்கவேண்டிய ப்ரையாரிடி கொடுத்து நிதி நிலைக்குத் தகுந்தாற்போல் இந்த வேலைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த ஆற்றில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அந்த இரண்டு பிரிவுகளையும் ஒன்றாகச் சேர்த்தே அந்தப் பாலத்தைக் கட்ட திட்டம் போடப்பட்டிருக் கிறதா அல்லது தனித்தனியாக அந்த ஆற்றில் இரண்டு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : மைல் 1/5, 1/7-க்கு இடையில் இருக்கிறது. இரண்டும் ஓர் இடத்தில் சேருகிறதா இல்லையா என்ற விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்கிறேன்.



16th March 1966]

* 303 கேள்வி—திரு. சீ. சிவசுப்ரமணியன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிதம்பரத்திற்கும், கடலூருக்கும் நடுவிலுள்ள வெள்ளாற்றில் B. முட்லூர் என்ற இடத்தில் அதிக தூரத்தைத் தடுக்கும்பொருட்டு ஒரு மதகு கட்டும் வேலையை (பாலம்) நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The work has not been included in the Fourth Five-Year Plan.

(b) Does not arise.

* 304 கேள்வி—திரு. சீ. சிவசுப்ரமணியன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தென்னாற்காடு ஜில்லா, பரங்கிப்பேட்டை ஓரம் வெள்ளாற்றில் போக்குவாத்துக்காக ஒரு மிதக்கும் பாலம் போட அரசாங்கத்தில் ஏதேனும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில் அது எப்பொழுது தொடங்கும் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) There is no such proposal under consideration of the Government.

(b) Does not arise.

* 305 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for food be pleased to state—

(a) whether the Government are aware of the traffic jam caused on the Bhavani-Komarapalayam Highway due to the norrow width of the Bhavani-Komarapalayam bridge, and

(b) whether there is any proposal to widen the sand bridge?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes Sir.

(b) A scheme for reconstructing the bridge, has been proposed for inclusion in the draft Fourth Five-Year Plan for National Highways.

திரு. வை. சங்கரன் : இது எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கலாம் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான்காவது ப்ளானில் சேர்க்கப் பட்டிருக்கிறது. நிதி வசதிக்குத் தகுந்தாற்போல் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. பொன்னுசாமி : திருநெல்லியில் தாம்பரபரணியைக் கடக்கும் பாலத்தில் அதை விரிவுபடுத்தும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். கிராஸிங்

[16th March 1966

இருப்பதால் டவுனுக்குப் போகக் கஷ்டமாக இருப்பதினால் ஒரு பை பாஸ் ரோடும் சாத்தூரில் இருப்பது போன்று ஒரு பாலமும் போடுவதற்கு உத்தேசமுண்டா ?

(பதில் இல்லை)

திரு. ஜே. மாதா கவுடர் : பவானி—கொமாரபாளையம் பாலத்தை அகலப்படுத்துவது பற்றி சொன்னார்கள். பவானிக்கும் கோவைக்கும் போகக் கூடிய ரோட்டிலே, அந்த நாஷனல் ஹைவேஸ் ரோட்டில் அந்தப் பாலம் இருக்கிறது. பக்கத்திற்குப் பக்கத்தில் இருப்பதால் இரண்டு பாலங்களும் ஒட்டு மொத்தமாக எடுக்கப்படுகின்றனவா அல்லது தனித்தனியாக எடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் எந்தப் பாலத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. வை. சங்கரன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டிலா, இரண்டாவது ஆண்டிலா, மூன்றாவது ஆண்டிலா, நான்காவது ஆண்டிலா, அல்லது ஐந்தாவது ஆண்டிலா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri V. RAMAIAH : The approval of the Government of India for the draft Fourth Five-Year Plan for National Highways is still awaited.

Mr. SPEAKER : I shall take up the questions relating to Public Health after the Hon. Minister for Health arrives.

### பஞ்சாயத்து தலைவர்கள்

*309 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் சமீபத்தில் நடந்த பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்களின்போது, சிறையில் இருந்தபடி தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) மேற்படி பஞ்சாயத்துக்கள் எவ்வாறு செயலாற்றுகின்றன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இருவர்.

(இ) ஒரு பஞ்சாயத்தின் நிர்வாகம் அதன் துணைத் தலைவராலும், மற்றொன்றின் நிர்வாகம் தலைவரின் பிரதிநிதியாலும் நடத்தப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், இவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டதன் காரணமாக பள்ளிக்கூட வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்த மாதிரி தகவல் இல்லை.



16th March 1966]

திரு. ஆ. கு. சுப்பையா : ஒரு பஞ்சாயத்தில் கட்டப்பட்டு வந்த பள்ளிக்கூட வேலை பாதியில் நிறுத்தப்பட்டிருக்கிறது, இவ்விதம் நிறுத்தப்பட்டு மூன்று வருடங்கள் ஆகின்றன. இது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக எழுதி அனுப்பினால் இதிலுள்ள காலதாமதத்தைப் போக்குவதற்கு முயற்சி செய்யலாம்.

Sri C. CHIRANJEEVULU NAIDU : In the main answer, the Hon. Minister has stated that in the case of one panchayat, the administration is carried on by the Vice-President and in another panchayat, by a representative of the President. I want to know whether the Panchayats Act provides for such a delegation of power to the Vice-President or a representative of the President, when the President is virtually absent?

The Hon. Sri S. M. A. MAJID : Under the Act, the President can delegate powers to a Vice-President or any Member he desires.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து தலைவர்கள் இல்லாத ஊர்களில் உபதலைவர்களே இந்த வேலைகளைப் பார்த்து வரலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். தேர்தலே நடைபெறாத பல ஊர்கள் இருக்கின்றனவே, அந்த ஊர்களில் நிர்வாகம் எப்படி நடைபெறும் ?

கனம் சபாநாயகர் : எந்த இடத்தில் என்று சொன்னால் பதில் சொல்ல முடியும்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : குறிப்பிட்டு எந்த இடம் என்று சொன்னால் அதைபற்றி விவரங்களை சொல்ல முடியும்.

திரு. ஆ. கு. சுப்பையா : பஞ்சாயத்துக்களில் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னால் தான் உப தலைவர் தேர்ந்தெடுக்கப்பட முடியும். பஞ்சாயத்துத் தலைவரே சிறையில் இருக்கும்போது, எப்படி உப தலைவர் தேர்தல் நடக்கும் என்பதை அறியலாமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்து சட்ட விதிமுறைகளுக்கேற்ப அவ்வப்போது பஞ்சாயத்து தேர்தல்கள் நடத்தலாம். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகின்ற விஷயம் இப்போது கோர்ட்டில் இருப்பதால் அங்கு வைஸ் பிரசிடன்ட் இல்லாமல் இருக்கிறது என்பதைக் கனம் அங்கங்கத்தினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

### பஞ்சாயத்து 'யூனியன்'கள்

* 310 கேள்வி—திரு. சா. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து கல்வி நிர்வாகத்தை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசினருக்கு உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No.

[16th March 1966

திரு. சா. ராமசாமி: தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டின்மூலம் தங்களை பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திடமிருந்து நீக்கிக் கல்வி இலாகாவோடு சேர்ப்பதற்கு அவர்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆசிரியர்கள் தங்களுக்கு பஞ்சாயத்து நிர்வாகத்தினிடமிருந்து விடுதலை வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டது உண்மைதான். ஆனால், அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. மா. தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகள் பஞ்சாயத்துக் கூட்டுமன்றப் பொறுப்பில் இருந்தாலும் ஹையர் எலிமெண்டரி பள்ளிகளையாவது அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆரம்பக் கல்வியோடு சேர்ந்ததுதான் ஹையர் எலிமெண்டரி கல்வியும். அதாவது 6 வயது முதல் 11 வயது வரையுள்ள மாணவர்கள், மாணவிகள் இவர்களுக்கு அளிக்கப்படுகின்ற கல்வி. இது முற்றிலும் பஞ்சாயத்து யூனியன் பொறுப்பிலே இருக்கவேண்டும் என்பது சட்டபூர்வமாக இருக்கிறது. அந்த முறையில்தான் இப்போது நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

திரு. சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலுள்ள பள்ளிகள் நிர்வாகப் பொறுப்பை முன்னிட்டு, ஆசிரியர்களை மாற்றக்கூடாது என்று அரசாங்கம் அளித்த உத்தரவையொட்டி, நிர்வாகத்தில் தடங்கல்கள் ஏற்படுகின்றன என்றும், ஆசிரியர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடப்பதில்லை என்றும் சர்க்காருக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு சில பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு இப்போதுள்ள முறை பிடிக்காமல் இருக்கலாம். எல்லாவற்றையும் பரிசீலனை செய்து புகார்களுக்கு இடமில்லாத வகையில், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சில நேரங்களில் அளவுக்கு மீறி, அனாவசியமாகவும் புகார்கள் வருகின்றன. அதே நேரத்தில், ஆசிரியர்களும் பாதிக்கப்படுகிறார்கள், பள்ளிகளும் பாதிக்கப்படுகின்றன என்ற புகார்களும் வருகின்றன. எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் அரசாங்கம் இப்போதுள்ள முடிவை எடுத்திருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன்: இப்போது பள்ளிகளின் பொறுப்பு பஞ்சாயத்து யூனியனிடம் கொடுக்கப்பட்டிருந்தாலும், பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்களைப் போடுவது என்பதை நிர்ணயிப்பது டி.பி.ஐ. தான். அதோடு ஆசிரியர்களை மாற்றுதல் செய்வதும் அட்ஹாக் கமிட்டி செய்யவேண்டும் என்றிருக்கிறது. இதன் காரணமாக பஞ்சாயத்து யூனியன்களின் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்பு பறிக்கப்படுகிறது என்ற உணர்வு பஞ்சாயத்து யூனியன் தலைவர்களிடம் பரவி வருவதாகச் சொல்லப்படுகிறது. இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?



16th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆசிரியர்களை மாற்றுவது மட்டும்தான் பொறுப்பு என்று எடுத்துக்கொள்ள முடியாது. ஆண்டுத் துவக்கத்திலேயே எங்கெங்கு ஆசிரியர்களை மாற்றுவது என்பதை நிச்சயிக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாகப் பார்க்கும்போது, நிர்வாகத்தை நடத்துகின்றவர்கள் கமிஷனர்கள். அவர்களே ஆசிரியர்களை மாற்றுவதற்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்று கோரலாம். அவ்விதம் இல்லாமல் எந்த விதமான புகார்களுக்கும் இடமில்லாமல் இந்தக் குழுவுடன் கலந்து ஆலோசித்து மாற்றுவதுதான் சரியாக இருக்கும். இந்த முறை ஒரு சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். மொத்தத்தில் இதுதான் சிறந்த ஏற்பாடு என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: பஞ்சாயத்து யூனியனிலிருந்து தங்களை விடுவிக்கவேண்டும் என்று ஆசிரியர்கள் கேட்பதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தங்களை நியாயமாக நடத்துவதில்லை என்று சொல்கிறார்கள். இவ்விதம் சொல்வது சரி என்று நான் சொல்லவில்லை. தாங்கள் நடத்தப்படுகின்ற முறை நியாயமானதாக இல்லை என்று ஆசிரியர்கள் நினைக்கிறார்கள். எல்லாரும் அப்படி நினைக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஒரு சிலர் அவ்வாறு நினைக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல்: பஞ்சாயத்து யூனியன் வசம் கல்வி நிர்வாகம் இருப்பதால் எந்தெந்த வகையில் முன்னேற்றம் ஏற்படும் என்று அரசாங்கம் கருதுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில் ஸ்தலங்களிலுள்ளவர்களுக்குத்தான் முதன்மையான இடம் இருக்கவேண்டும். லோக்கல் இனிஷியேட்டிவ் இருக்கவேண்டும் என்ற முறையில்தான் முன்பு தாலுகா லெவலில், ஜில்லா போர்டு லெவலில் இருந்தது. அது இப்போது பஞ்சாயத்து யூனியன் அளவில் இருக்கவேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்தது. சட்டமன்றமும் முடிவு செய்திருக்கிறது.

*Madurai Municipality*

* 311 *Q*.—Sri P. K. MOOKIAH THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any representation has been received from the Councillors of Madurai Municipality on 30th June 1964 regarding the appointments of teachers and clerks in the Municipality; and

(*b*) if so, the action taken thereon ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Representation from certain Councillors of the Madurai Municipal Council, dated 30th June 1964 complaining of certain irregularities in the appointment of teachers in the Municipality was received. There was no reference to the appointment of clerks.

[16th March 1966

(*b*) No action was taken on the representation, as the appointments made were in order.

### கைத்தொழில் ஆசிரியர்கள்

*312 கேள்வி—**திரு. சோ. ஆறுமுகம்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உயர்நிலைத் துவக்கப் பள்ளியில் பணிபுரியும் கைத்தொழில் ஆசிரியர்களை பகுதிநேர ஆசிரியர்களாக மாற்றியதையொட்டி, எத்தனை ஆசிரியர்கள் அவ்வாறு மாற்றப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : None.

**திரு. சோ. ஆறுமுகம்** : தலைவர் அவர்களே, உயர்நிலைத் துவக்கப் பள்ளிகளிலும், ஆரம்பக் கல்விப் பள்ளிகளிலும், கைத்தொழில் ஆசிரியர்களை எடுத்துவிடவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போட்டிருப்பதால், பள்ளிகளில் கைத்தொழில் ஆசிரியர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பகுதி நேர ஆசிரியர்களாக இவர்களைப் போட்டுக்கொள்ளலாம் என்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கின்ற பொழுது, முழு நேரம் பணியாற்றி வந்த ஆசிரியர்கள், இப்போது குறைந்த சம்பளத்தில் எப்படிப் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்ற முடியும் என்பதை சர்க்கார் உணர்ந்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அவ்வாறு முழு நேரம் பாடம் சொல்லிக் கொடுத்தவர்களைப் பகுதி நேர ஆசிரியர்களாக மாற்றவில்லை.

*313 கேள்வி—**திரு. சா. ராமசாமி** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபல் பள்ளிகளிலும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலும், நியமனம் செய்யப்பட்டு பல ஆண்டுகளாகப் பணியாற்றி நிரந்தரமாக்கப்பட்ட புக் பைண்டிங், பாய் நெசவு ஆகிய கைத்தொழிலாசிரியர்கள் தற்சமயம் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes.

**திரு. சா. ராமசாமி** : தலைவர் அவர்களே, இப்படி நீக்கப் பட்டதின் காரணமாக 10 ஆண்டு, 15 ஆண்டு வேலை செய்தவர் எல்லாம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு வேறு வேலைகள் கொடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சிகள் எடுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நீடில் வொர்க், டாய் மேக்கிங், புக் பைண்டிங் இவைகளிலுள்ள பாடத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. புக் பைண்டிங் வேலையில் இருந்தவர்கள் தோட்டவேலைப் பயிற்சியில் வரலாம் என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. அவ்விதம் தோட்ட வேலை தெரிந்தவர்கள் முன்வரும்போது, வேலைகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன.



16th March 1966]

**திரு. சோ. ஆறுமுகம்** : தோட்ட வேலைகளில் இப்படிப்பட்ட ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று சொன்னார்கள். தோட்ட வேலைகளில் அமருவதற்கு என்னென்ன தகுதி பெற்றிருக்க வேண்டும்? எந்த அடிப்படையில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இதுவரை யாரும் இதனால் வேலையில்லாமல் போகவில்லை என்று குறிப்பிட்டேன். இந்த அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கின்ற தகவலின்படி, வேறு பாடங்கள் சொல்லிக் கொடுப்பதற்கு இடமில்லை என்றால், தோட்ட வேலையில் சேர்ந்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தகுதிக்கு ஏற்றபடி பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன்** : அவர்களை ஹையர் கிரேட் ஆசிரியர்களாக நியமிப்பதற்குக் குறுகிய காலப் பயிற்சி ஏதாவது கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : ஹையர் கிரேட் ஆசிரியர் பயிற்சிக்குக் குறுகிய காலப் பயிற்சி என்பது போதாது.

### வாணிப இயல் ஆசிரியர்கள்

*314. கேள்வி—**திரு. பி. முருகையன்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் செகரட்டேரியல் பிரிவில் வேலை பார்க்கும் Commercial Instructor (Higher Grade) சுருக்கு எழுத்துப் பயிற்சி பெற வேண்டும் என்ற சர்க்கார் விதியினைத் தளர்த்தும் நோக்கம் பரிசீலனையில் உள்ளதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : சுருக்கெழுத்துப் பயிற்சி பெறாதவர்களையும் Commercial Instructor களாக நியமிக்கலாம் ஆகவே விதியினை தளர்த்த வேண்டிய அவசியமில்லை.

**திரு. பி. முருகையன்** : தலைவர் அவர்களே, இவ்வாறு விதிகளைத் தளர்த்தும்போதும், அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளத்தில் வித்தியாசம் ஏற்படுகிறது அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று பே கமிஷன் அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அந்த மாதிரி தகவல் ஒன்றுமில்லை.

### பள்ளிக் கண்காணிப்பாளர்கள்

*315. கேள்வி—**திரு. சீ. சிவசுப்பிரமணியன்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்தில் வட்டக் கண்காணிப்பாளர்களாக (Deputy Inspectors of Schools) வேலை செய்யும் ஆண், பெண் இருபாலர்கள் எத்தனை பேர் ?

(இ) இதில் ஹரிஜனங்கள் தனித்தனியே எத்தனை பேர் ?

[16th March 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 324.

(b) Men—7.
Women—Nil.

### மாவட்டக் கல்விக் கண்காணிப்பாளர்கள்

* 316. கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்தில் பணியாற்றும் மொத்த மாவட்டக் கல்விக் கண்காணிப்பாளர்கள் D.E.O. எத்தனை பேர் ?

(இ) இவர்களில் ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 45.

(b) Nil.

### ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

* 306. கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) நகரப் பஞ்சாயத்தில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், எத்தனை நகரப் பஞ்சாயத்துக்களில் திறக்கப்பட்டுள்ளன ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) ஆம். ஆனால், அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நகர பஞ்சாயத்துகளுக்காக மட்டும் தொடங்கப்படவில்லை.

(இ) 34 நகர பஞ்சாயத்துகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**திரு. மா. தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் வைத்திய வசதி பெறுவதற்கு வாய்ப்பில்லாத குறிப்பிட்ட கிராமங்களில் வைத்திய வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஆரம்பிப்பதாகத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கட்டட வசதி இல்லை என்ற காரணத்தினால் நகர் புறத்தில் ஆரம்பித்தால் நோக்கமே ஈடேறாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதை மீண்டும் பரிசீலனை செய்து கூட்டு மன்றங்களில் தீர்மானம் போட்டு எந்தக் கிராமத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களோ அந்தக் கிராமப் பஞ்சாயத்திலேயே அதை ஆரம்பிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** டவுன் பஞ்சாயத்திலே ஏற்படுத்தப்பட்டாலும் கூட சுற்றி இருக்கக் கூடிய பல பஞ்சாயத்துக்களுக்கு அது பயன்படுகிறது. அதனால் மருத்துவ வசதி



16th March 1966]

கிடைக்கிறது. தனிப்பட்ட முறையில் கிராமங்களில் ஆரம்பிக்க வேண்டுமென்றால், தக்க வசதி இருந்தால் தான் ஆரம்பிக்க முடியும். இல்லாவிட்டால் முடியாது.

**திரு. க. ர. நல்லசிவம் :** கிராமங்களிலே ஆரம்பிக்கப்பட்ட சில ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்ஸுக்குக் கட்டடம் கட்டப்படாமல் 10 ஆண்டுகளாக இருக்கின்றன. அவைகளுக்குத் துரிதமாகக் கட்டடம் கட்டும் திட்டத்தை சர்க்கார் மேற்கொள்ளுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சமீபத்தில் ஏற்பட்ட பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின் காரணத்தினால் புதிய கட்டடங்கள் கட்டும் திட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. வாடகைக்குக் கட்டடங்கள் கிடைத்தால்தான் எங்கெல்லாம் அத்தியாவசியமாக மருத்துவ வசதிகள் ஏற்படுத்த வேண்டுமோ அங்கெல்லாம் ஏற்படுத்த இயலும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஆரம்ப சுகாதார நிலையங்கள் சில 5-6 மாதங்களுக்கு முன்பே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக தென் திருப்பேரி என்ற இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டும் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. டாக்டர்கள் பற்றாக்குறை தான் இதற்குக் காரணமா ? புதிதாக டாக்டர்கள் வந்த பிறகு தான் திறக்கப்படும் என்ற கொள்கையா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சில பஞ்சாயத்து யூனியன்களில் ஏற்படுத்திவிட்டுத் தொடங்காததற்குக் காரணம், அவைகள் கம்ப்ளீட்டாக எக்விப் செய்யாததும், டாக்டர்கள் போடாததும்தான் என்று ஒப்புக்கொள்ளுகிறேன். இம்மாத முடிவுக்குள் எங்கெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நடைமுறையில் நடக்க இயலாது இருக்கின்றனவோ அங்கெல்லாம் டாக்டர்கள் போட்டு எக்விப் செய்து ஆரம்பிக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் க்ட்டுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சில இடங்களில் க்வார்ட்டர்ஸ் கட்டப்பட்டு விட்டன, மருத்துவ மனைக்கட்டடம் கட்டவில்லை. அதைப் போன்ற இடங்களிலாவது கட்டடங்களைக் கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்துகிற இடங்களில் டாக்டர்களுக்கு வசதி செய்து கொடுத்தால்தான் அவர்கள் பணி செய்ய இயலும் என்று டாக்டர்களுக்குக் க்வார்ட்டர்ஸ் கட்டப்பட்டது உண்மை. ஆனால் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்ட அதிகச் செலவு ஆகும் என்கிற காரணத்தினால் அங்கு உள்ளவர்கள் டொனேஷன் கொடுத்தால் கட்டப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[16th March 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 324.

(b) Men—7.
Women—Nil.

**மாவட்டக் கல்விக் கண்காணிப்பாளர்கள்**

* 316. கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்தில் பணியாற்றும் மொத்த மாவட்டக் கல்விக் கண்காணிப்பாளர்கள் D.E.O. எத்தனை பேர்?

(இ) இவர்களில் ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 45.

(b) Nil.

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள்**

* 306. கேள்வி—திரு. து. ப. அழகமுத்து: கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) நகரப் பஞ்சாயத்தில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், எத்தனை நகரப் பஞ்சாயத்துக்களில் திறக்கப்பட்டுள்ளன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம். ஆனால், அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நகர பஞ்சாயத்துகளுக்காக மட்டும் தொடங்கப்படவில்லை.

(இ) 34 நகர பஞ்சாயத்துகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திரு. மா. தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் வைத்திய வசதி பெறுவதற்கு வாய்ப்பில்லாத குறிப்பிட்ட கிராமங்களில் வைத்திய வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஆரம்பிப்பதாகத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கட்டட வசதி இல்லை என்ற காரணத்தினால் நகர் புறத்தில் ஆரம்பித்தால் நோக்கமே ஈடேறாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதை மீண்டும் பரிசீலனை செய்து கூட்டு மன்றங்களில் தீர்மானம் போட்டு எந்தக் கிராமத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களோ அந்தக் கிராமப் பஞ்சாயத்திலேயே அதை ஆரம்பிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: டவுன் பஞ்சாயத்திலே ஏற்படுத்தப்பட்டாலும் கூட சுற்றி இருக்கக் கூடிய பல பஞ்சாயத்துக்களுக்கு அது பயன்படுகிறது. அதனால் மருத்துவ வசதி



16th March 1966]

கிடைக்கிறது. தனிப்பட்ட முறையில் கிராமங்களில் ஆரம்பிக்க வேண்டுமென்றால், தக்க வசதி இருந்தால் தான் ஆரம்பிக்க முடியும். இல்லாவிட்டால் முடியாது.

திரு. க. ர. நல்லசிவம்: கிராமங்களிலே ஆரம்பிக்கப்பட்ட சில ப்ரைமரி ஹெல்த் ஸென்டர்ஸுக்குக் கட்டடம் கட்டப்படாமல் 10 ஆண்டுகளாக இருக்கின்றன. அவைகளுக்குத் துரிதமாகக் கட்டடம் கட்டும் திட்டத்தை சர்க்கார் மேற்கொள்ளுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சமீபத்தில் ஏற்பட்ட பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின் காரணத்தினால் புதிய கட்டடங்கள் கட்டும் திட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. வாடகைக்குக் கட்டடங்கள் கிடைத்தால்தான் எங்கெல்லாம் அத்தியாவசியமாக மருத்துவ வசதிகள் ஏற்படுத்த வேண்டுமோ அங்கெல்லாம் ஏற்படுத்த இயலும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஆரம்ப சுகாதார நிலையங்கள் சில 5-6 மாதங்களுக்கு முன்பே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக தென் திருப்பேரி என்ற இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டும் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. டாக்டர்கள் பற்றாக்குறை தான் இதற்குக் காரணமா? புதிதாக டாக்டர்கள் வந்த பிறகு தான் திறக்கப் படும் என்ற கொள்கையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சில பஞ்சாயத்து யூனியன்களில் ஏற்படுத்திவிட்டுத் தொடங்காததற்குக் காரணம், அவைகள் கம்ப்ளீட்டாக எக்விப் செய்யாததும், டாக்டர்கள் போடாததும்தான் என்று ஒப்புக்கொள்ளுகிறேன். இம்மாத முடிவுக்குள் எங்கெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நடைமுறையில் நடக்க இயலாது இருக்கின்றனவோ அங்கெல்லாம் டாக்டர்கள் போட்டு எக்விப் செய்து ஆரம்பிக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. எஸ். முருகையன்: தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் க்ட்டுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சில இடங்களில் க்வார்ட்டர்ஸ் கட்டப்பட்டு விட்டன, மருத்துவ மனைக்கட்டடம் கட்டவில்லை. அதைப் போன்ற இடங்களிலாவது கட்டடங்களைக் கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்துகிற இடங்களில் டாக்டர்களுக்கு வசதி செய்து கொடுத்தால்தான் அவர்கள் பணி செய்ய இயலும் என்று டாக்டர்களுக்குக் க்வார்ட்டர்ஸ் கட்டப்பட்டது உண்மை. ஆனால் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்ட அதிகச் செலவு ஆகும் என்கிற காரணத்தினால் அங்கு உள்ளவர்கள் டொனேஷன் கொடுத்தால் கட்டப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[16th March 1966

**திரு. மா. தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, சர்க்கார் தற்போது மேற்கொள்ளுகிற முறைப்படி புதிய கட்டடங்கள் கட்டுவதையும் நிறுத்தி, நகரப் புறங்களில் வசதி உள்ள இடங்களில் ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணப்பட்டால் நிச்சயமாக கிராமப் பகுதிகளுக்கு வைத்திய வசதி கிடைக்காது. பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் விரும்புகிற இடங்களில் இனாமாகக் கட்டடம் கொடுத்தால் அந்த இடத்தில் ஆரம்பிக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பிரதம சுகாதார நிலையங்கள் ஏற்படுத்துவதன் காரணம் அங்கு இருக்கக் கூடிய கிராம மக்களுக்கு மருத்துவ வசதி கொடுக்க வேண்டும் என்பது தான். இதை அரசாங்கம் ஏதோ விருப்பம் கொண்டு அங்கு ஏற்படுத்துகிறது என்ற காரணமே கிடையாது. ஜில்லா கலெக்டர்களைக் கேட்டு, பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டு, எங்கு கட்டினால் அங்கு இருக்கக் கூடிய மக்களுக்கு நலமாக இருக்கும் என்று பார்த்து, மக்கள் எண்ணிக்கை எல்லாவற்றையும் எடுத்து ஆராய்ந்து தான் கொடுக்கப்படுகிறது. அந்த முறைதான் அனுஷ்டிக்கப்படும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லை இல்லை என்று அடிக்கடி சொல்லி வந்ததன் காரணமாக இப்போது அந்த மருத்துவ நிலையங்களில் ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியிலிருந்து டாக்டர்களைப் போட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படி டாக்டர்கள் எடுக்கப்பட்டால் ஜில்லா பூராவுக்கும் உள்ள, தலைநகரில் இருக்கிற மருத்துவ மனையில் வைத்திய வசதி குறையாதா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பல முறை இந்தச் சட்ட மன்றத்திலே கனம் அங்கத்தினர்கள் பிரதம சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லை என்ற குறையைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். டாக்டர்கள் இல்லை என்றாலும் குறை கூறிக்கொண்டு, டாக்டர்களைப் போட்டாலும் குறை கூறுவார்களானால் அட்மினிஸ்ட்ரேஷன் செய்வதற்கே இயலாது. அதிலும் குறிப்பாக டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸ் ஹாஸ்பிடலிலிருந்து டாக்டர்களைப் போட்ட காரணம் ப்ரைமரி ஹெல்த் செண்டர்கள் கிராம மக்களுக்கு மட்டும் வைத்திய வசதி கொடுக்கும் காரணத்தினால் சற்று எக்ஸ்பீரியன்ஸ் டாக்டர்களாக வேண்டுமென்று கேட்டதன் காரணமாகத் தான் டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வாட்டர்சிலிருந்து டாக்டர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** தலைவர் அவர்களே, ப்ரைமரி ஹெல்த் செண்டர்களுக்கு டாக்டர்கள் வேண்டுமென்று அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தால் டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸ் ஹாஸ்பிடலிலிருந்து டாக்டர்களைப் போட்டோம் என்று சொன்னார்களே, நகரப் புறங்களிலிருந்து நாங்கள் அடிக்கடி அவர்களைத் தொந்தரவு செய்யவில்லை என்ற காரணத்தினால்தான் எடுத்து



16th March 1966]

விட்டார்களா என்று கேட்க விரும்புகிறேன். ப்ரைமரி ஹெல்த் செண்டர்களுக்கு டி.எம். அன்ட் எஸ்., ஜி.சி.ஐ.எம். படித்துவிட்டு இருக்கக்கூடிய டாக்டர்களைப் போட்டு விட்டு, அனுபவம் உள்ளவர்களை டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸில் போட்டால் அங்கு ஆப்பரேஷன் முதலியன செய்ய வேண்டியிருப்பதால் வசதியாக இருக்கும் ; ஆகவே, இதைச் சிந்திப்பார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் என்னுடைய பதிலைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். எக்ஸ்பீரியன்ஸ்ட் டாக்டர்ஸ் என்று கூறும்போது, இரண்டு ஆண்டுகள் டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டஸில் பணிபுரிந்தவர்களை மாற்றியிருப்பதைத் தான் சொன்னேன். ஜில்லா மருத்துவ மனையில் போஸ்ட் கிராஜுவேட் படித்துள்ள சர்ஜன்கள், ஃபிஸிஷியன்கள் எல்லாம் இருக்கிறார்கள். டிஸ்ட்ரிக் ஹெட்க்வார்ட்டர்ஸ் மருத்துவ மனையில் வருகிறவர்களுக்கு எந்த விதத்திலும் மருத்துவ வசதி குறைந்து விடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### அரசாங்க மருத்துவ மனைகள்

* 307. **கேள்வி.—திரு. எல். ஆனந்தன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தாலுகா தலைமை ஆஸ்பத்திரியில் (X-ray) வசதி ஏற்படுத்தும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** எக்ஸ்ரே கர்சா பிலிம்களைப் பெறுவதில் உள்ள இடர்பாட்டினால் கள்ளக் குறிச்சியில் உள்ள அரசாங்க மருத்துவமனைக்கு எக்ஸ்ரே இயந்திரங்கள் வாங்கும் திட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. 1967-68-ம் ஆண்டில் இது ஆலோசிக்கப்படும்.

* 308. **கேள்வி—திரு. ஆ. தங்கவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்ட பழைய தலைமை மருத்துவ மனைக்கு 1965 ஜனவரி முதல் டிசம்பர் முடிய பிரசவத்திற்கு வந்த பெண்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுள் உயிர் இழந்தவர்கள் எத்தனை பேர் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஐந்து.

(இ) ஏழு.

**திரு. ஆ. தங்கவேலு :** தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையில் பிரசவத்திற்கு வருகிற பெண்கள் சரியான முறையில் கவனிக்கப்படாததால் உயிர்ச் சேதம் ஏற்படுகிறது என்பதைக் குறித்து ராமநாதபுரத்திலிருந்து புகார் வந்திருக்கிறதா ? இங்கே

அமைச்சர் அவர்கள்கூட, ஏழு பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த இழப்புக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த ஏழு கேஸ்களையும் ரொம்ப ஸீரியஸ் கண்டிஷனில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்திருக்கிறார்கள் அதற்குப் பிறகு டாக்டர்கள் செய்ய வேண்டிய சிகிச்சைகள் எல்லாம் அளித்தும்கூட, அவர்கள் உயிரைக் காப்பதற்கு இயலாமல் போய்விட்டதேயொழிய, நெக்ளிஜென்ஸால் இறந்தவர்கள் எண்ணிக்கை ஏழு-ஆக இருக்கிறது என்று கூறுவது சரியல்ல. 1295 பேஷன்ட்டுகளில் 7 பேர்கள், அதுவும் அவர்கள் வீட்டிலேயே பார்த்து, அதன் பிறகு மெட்டர்னிட்டி அஸிஸ்டென்ட்டை அழைத்துப் பார்த்து, ப்ளீடிங் rupture uterus போன்ற கண்டிஷனில் கேஸுகள் கொண்டுவரப்பட்டன. ஆகவே, டாக்டர்கள் அவர்கள் இறந்ததிற்கு காரணம் என்று கூறுவதற்கில்லை.

9-00 மு.ப. **திரு. எம். எஸ். மணி :** இறந்துபோன பெண்களுடைய எண்ணிக்கை 7 என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பிரசவத்திலே பிறந்த குழந்தைகளில் எத்தனை இறந்தன என்று குறிப்பிட முடியுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** வயிற்றிலே இறந்து போன குழந்தை (ஸ்டில் பார்ன்) ஒன்று.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—CALLING ATTENTION TO THE PROMULGATION OF ORDERS UNDER SECTION 144, Cr.P.C. IN NEYVELI.

SRI T. KARCHA GOWDER : Sir, I call the attention of Hon. Chief Minister to a matter of urgent public importance, viz., the explosive situation caused by the police in Neyveli in promulgating orders under section 144, Cr.P.C., prohibiting meetings and processions of workers of the I.N.T.U.C. Union in the Neyveli Lignite Corporation for ten days and thereby curbing the rights of the workers under the Trade Union Acts and **Laws.**

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to make this statement about this matter.

The Neyveli Lignite Corporation in South Arcot District has proposed to retrench the surplus staff of about 208 Section Officers and Junior Engineers of the Corporation in stages. In the first phase of the retrenchment, about 85 of the officers are facing the prospect of losing their jobs from 31st March 1966. The Administration is however doing its best to absorb the retrenched staff in other Government of India undertakings.

The Staff Union of the Corporation under the fold of the I.N.T.U.C. wanted to take out a procession, consisting of Junior Engineers and Section Officers on 28th February 1966 to meet



the Chairman of the Corporation to present him with a memorandum regarding the proposed retrenchment of the surplus staff. This attempt of the Staff Union was however frustrated as the Security Officer refused permission to take out the procession. As a sequel at about 7 p.m. on 28th February 1966, the date on which the procession was scheduled to take place, the Staff Union held a general body meeting with Sri Ramanujam, the President of the staff union, in the Chair. About 100 Members of the Union attended the meeting. One Sri Md. Hussain criticised the Security Officer for refusing permission to take out the procession proposed by the Union. At this meeting, it was, decided to organise a procession on 6th March 1966 which was to start from the I.N.T.U.C. Office and from there to proceed to the residence of the Chairman, Neyveli Lignite Corporation. The intention of the procession this time was to present a memorandum to the Chairman regarding the proposed retrenchment of the Junior Engineers and Section Officers and also regarding the non-payment of Dearness Allowance from December 1965.

The Local Police discerned in the proposal of the Staff Union to take out a procession on 6th March 1966 an attempt to exploit the already disturbed state of affairs in the Corporation with a view to create more labour unrest and law and order problems prejudicial to the public tranquillity of the area. The police approached the Executive Second-Class Magistrate, Cuddalore, to avoid development of such a situation. The Magistrate therefore promulgated an order under section 144, Cr. P.C., prohibiting taking procession, etc., in the Neyveli Lignite Corporation limit for ten days from 6th March 1966. The situation is calm.

## III.—ANNOUNCEMENT.

### DISCUSSION FOR SHORT DURATION ON THE ORDER SERVED ON SRI UMANATH, M.P. ON PAROLE

MR. SPEAKER : Yesterday a notice under Rule 57 was presented to me by Sri M. Karunanithi and Sri Rama. Arangannal to discuss about the propriety or impropriety of the order served on Sri Umanath on 2nd March 1966 by some officer of the Madras Government. I have admitted the notice. The time for discussion will be fixed as early as possible in consultation with the Hon. Leader of the House.

## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

(1) DEMAND NO. XXVI—IRRIGATION.

(2) DEMAND NO. XLII—CAPITAL OUTLAY ON IRRIGATION.

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,99,84,800 under Demand No. XXVI—Irrigation."

[16th March 1966

திரு. பி. முருகையன்: பாசன வசதிகளை நமது மாநிலத்தில் விஸ்தரிக்க வேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்ட என்னுடைய வெட்டுப் பிரேரணை பிரேரெபிக்கிறேன்.

"That the allotment of Rs. 6,99,84,800 under Demand No. XXVI—Irrigation—be reduced by Rs. 100."

திரு. சா. கணேசன்: ஆற்றுப் பாசன வசதிபெற முடியாத பகுதிகளில் ஊற்றுப் பாசனம் கிடைக்க எல்லாச் சலுகைகளையும் அளிக்க வேண்டும் என்பதை வற்புறுத்த என்னுடைய வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 6,99,84,800 under Demand No. XXVI—Irrigation—be reduced by Rs. 100."

THE HON. SRI V. RAMAIAH: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,79,87,900 under Demand No. XLII—Capital Outlay on Irrigation."

திரு. பி. முருகையன்: கொள்கையைப் பற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

"That the allotment of Rs. 9,79,87,900 under Demand No. XLII—Capital Outlay on Irrigation—be reduced by Rs. 100."

திரு. சா. கணேசன்: கம்வாய் ஏரிகள் முதலியவற்றைத் தூர்வு எடுப்பதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்திப்பது பற்றி விவாதிக்க என்னும் என் பெயரால் உள்ள வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 9,79,87,900 under Demand No. XLII—Capital Outlay on Irrigation—be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

Is the Hon. Minister going to make a statement now?

THE HON. SRI V. RAMAIAH: No, Sir.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன இலாகா மான்யத்தின் மீது எதிர்க்கட்சித் தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் இங்கே பேசலாம் என்று இருக்கிறேன். நம்முடைய அரசாங்கம் கடந்த மூன்று ஐந்தாண்டுகளில் திட்டங்கள் மூலமாகத் தமிழகத்தைப் பொறுத்த வரையிலே பல திட்டங்களை நிறைவேற்றி வைத்திருக்கிறோம், பல லட்சக் கணக்கான ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தந்திருக்கிறோம் என்றெல்லாம் அறிக்கையிலே இங்கே வைத்திருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டம் துவங்கப்படுவதற்கு முன்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் 21,95,000 ஏக்கர் இரிகேடட் லாண்டு என்று சொல்லுகிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்



16th March 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

ரூ. 20 கோடி செலவு செய்து 1,32,000 ஏக்கர் நிலங்களுக்கும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 14 கோடி செலவில் 2,09,000 ஏக்கர் நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 31,73,00,000 செலவு செய்திருக்கிறோம், கிடைக்கிற தண்ணீர் அத்தனையும் வீணாக்காமல் சேமித்து வைத்திருக்கிறோம். அதை நியாயமான முறையில் பகிர்ந்து கொடுக்கிறோம் என்பதை யெல்லாம் பற்றி விவரமாக அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உங்கள் மூலமாக நான் சொல்லிக் கொள்ளுகிறேன், நம்முடைய அரசாங்கம் கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்ட ஆண்டுகளிலே இந்த இலாகாவுக்காக, நீர்வழங்குகின்ற பணிக்காக செலவிட்ட தொகை ஏறக்குறைய ரூ. 65 கோடி. ரூ. 65 கோடி செலவு செய்து, ஏறக்குறைய 5 லட்சம் ஏக்காராவுக்கு நாங்கள் நீர்ப்பாசன வசதி செய்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். பல அணைகளைக் கட்டியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், உணவு உற்பத்தி மட்டும் ஆண்டுக்கு ஆண்டு நின்ற நிலையிலேதான் இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் வானத்தைக் காட்டலாம் அல்லது வறண்ட நதியைக் காட்டலாம். ஆனால், அமைச்சர் அவர்களுக்கு உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்ளுகிறேன். வானம் பொய்த்ததா என்றால், பொய்க்கவில்லை, கொஞ்சம் காலதாமதமாகத் தான் இந்த ஆண்டு பருவ மழை பெய்திருக்கிறது. இந்த ஆண்டு பெய்த பருவ மழை எப்போதாகிலும் பஞ்ச காலத்தில் பெய்தது போல இல்லாமல் அதிக பட்சமாகத் தான் பெய்திருக்கிறது, குறையவில்லை. இருந்தாலும், உணவு உற்பத்தித் துறையிலே பார்த்தால், அந்த இடத்தில் மந்தம் இருக்கிறது. நீர்ப் பாசனத் துறைக் கணக்கைப் பார்த்தால் மட்டும் 5 லட்சம் ஏக்கரா பாசன வசதி பெற்றிருக்கிறது என்று சொல்லுகிறார்களே தவிர, அணைக்கட்டுகள் கட்டப்பட்டிருந்தும், நீர்ப்பாசனம் நல்ல முறையில் நடைபெற்றிருந்தும், எதற்காக உணவுப் பஞ்சம் வரவேண்டும்? எப்படி உணவுப் பஞ்சம் இந்த நாட்டிலே ஏற்படும்? ஏற்கனவே இருந்த மக்கள் தொகைக்கும், இப்பொழுது இருக்கும் மக்கள் தொகைக்கும் ஒப்பிட்டு கணக்கிட்டால், இன்றைய தினம் அதிகமாகக் கொடுத்திருக்கும் நீர்ப்பாசன வசதியையும் சேர்த்துப் பார்த்தால், அதிகமாக விளையக் கூடிய நெற்களெல்லாம், தானியங்களெல்லாம் எங்கே போனது? ஆகையினால், இந்தத் திட்டங்கள் மூலம் கிடைக்கக் கூடிய நீர்ப்பாசன வசதி பெற்று பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் விவசாயத்திற்கு வந்திருக்கிறது என்று சொல்வதெல்லாம், மிகைப் படுத்திக் கூறுவது நான் என்பேன். அமைச்சர் புள்ளிவிவரத்தைக் கொடுப்பார்கள். அவர்கள் புதிய அணைகளைக் கட்டியிருக்கிறார்கள்; புதிய திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள்; ஆனால் அதே நேரத்திலே பழைய ஏரிகளை, நீர்ப்பாசன சாதனங்களை அவர்கள் அபிவிருத்தி செய்யவில்லை. அதன் காரணமாக ஏற்கனவே 22 லட்சம் ஏக்கர் நிலம் இருந்தால், அதில் பாதிக்கு மேல் நீர் பிடிப்பு அற்று, கபாசிடி கொள்ளக் கூடிய அளவு நீர் பிடிக்க முடியாமல், இன்றையதினம் நிலைமை இருந்து வருகிறது. இந்த மாநிலத்தைப் பொருத்தவரை, இந்தப் பத்தாண்டுக் காலத்தில்,

மின்சார சாதனை அடைந்திருப்பதைப் பார்த்து, மெச்சுகிறோம். வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர் முதலிய மாவட்டங்களில் மின்சார விசைகொண்டு, மோட்டார்களை உபயோகித்து, லிப்ட் இர்ரிகேஷன் மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் ஏராளமான ஏக்கர் நிலங்களை நல்ல முறையில் சாகுபடி செய்து கொண்டு வருகிறார்கள். வானம் கொழிக்கிறது, நதி ஓடுகிறது. அணைகள் கட்டுகிறோம், ஏரிகளுக்குத் தண்ணீர் விடுகிறோம், 5 லட்சம் ஏக்கருக்கு மேலாக விஸ்தரிக்கிறோம் என்று சொல்லும் போது, லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் லிப்ட் இர்ரிகேஷன் மூலம் இம்ப்ரூவ் ஆகி இருக்கிறது. அப்படி விளையக்கூடிய நெல் எங்கே போனது ? தானியங்கள் எங்கே போனது ? நீங்கள் சொல்லுவதெல்லாம் புதிய அணைகளையும், திட்டங்களையும் பற்றி மட்டும் தான். அதில்தான் கவனம் செலுத்திக் கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் ஏற்கனவே இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஏரிகளைச் சரிபார்ப்பது இல்லை. அவை தூர்ந்து போய் இருக்கின்றன. ஏற்கனவே இருந்த ஆயிரக்கணக்கான கிணறுகள் தூர்ந்து போய் இருக்கின்றன. அவற்றைச் சீர்திருத்த இந்த அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்க வில்லை. அதன் காரணமாக, நீர்பாசனம் சரியாக இல்லாமல், நாடு இந்த நிலைக்கு வந்திருக்கிறது. கிராமத்தில் ஒன்று சொல்லுவார்கள். கடப் பாறையை விழுங்கிவிட்டு, சுக்குக்கஷாயம் குடித்தால் போதுமா என்று. அந்த வகையில் இருக்கிறது உங்கள் திட்டங்கள். அமைச்சர் சொல்லலாம், சாத்தனூர் திட்டத்தைப் பற்றி ; மணிமுத்தார் திட்டத்தைப் பற்றி ; கடானா திட்டத்தைப் பற்றி. ஆனால் பழைய திட்டங்கள் பற்றிக் கேட்டாலும் நீங்கள் கொடுப்பதில்லை ; அவர்கள் திட்டங்களெல்லாம், அவர்கள் போடும் திட்டங்களெல்லாம் பயன் அளிக்கவில்லை.

நம்முடைய அமைச்சரவர்கள், நீர்ப்பாசனத் துறையில் சரியாக செயல் படாததன் காரணமாகத்தான் இப்படிப் பஞ்சம் ஏற்படும் நிலைமை, சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மழை பெய்யாவிட்டால், நிலைமை வேறு. இந்தப் பழைய ஏரிகளை சீர் திருத்தி அமைத்தால் வெகுவாக நன்மை கிட்டியிருக்கும். குறிப்பாக ஒன்று இரண்டு ஏரிகளைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். காட்டுமன்னார்குடி வீராணம் ஏரி, வெள்ளைக்காரன் காலத்திற்கு முன்பு கட்டியது. அந்த ஏரியில் கொள்ளக்கூடிய தண்ணீரின் அளவு இன்றைக்கு இருக்கிறதா என்றால் இல்லை. அதிலே படிந்திருக்கிற 'சில்ட்' மண் மேடு, அகற்றப் படவில்லை. அதை அகற்ற வேண்டும் என்றால், அமைச்சர் அதற்கு 5 கோடி, 4 கோடி, 3 கோடி ரூபாய் வேண்டும் என்று சொல்லக் கூடிய அளவில் இருக்கிறது. முன்பு ஒரு முறைகூடச் சொன்னேன். அமைச்சர் பூவராகன் சார்ந்த தொகுதியில் வெல்லிங்டன் ரிசர்வாயர் என்று இருக்கிறது. அந்த எஞ்ஜினியரைக் கேட்டேன். அது எப்பொழுது கட்டடப்பட்டது என்று. அதற்கு எஞ்ஜினியர் சுதந்திரம் அடைவதற்கு முன் வெல்லிங்டன் என்பவரால் கட்டப் பட்டது என்றார். அதன் கபாசிடி என்ன என்று கேட்டேன். அவர், 27,500 ஏக்கர் என்று சொன்னார்கள். இப்பொழுது எவ்வளவு நிலத்திற்குப் பாய்கிறது என்று கேட்டேன். அதற்கு



அவர், 18,000 அல்லது 20,000 ஏக்கர் தான் பாய்கிறது. மீதம் 5, 6, ஆயிரம் ஏக்கர்கள் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன என்று சொன்னார். அவர்கள் சொன்னார்கள். இதற்குக் காரணம், அந்த சப்ளை சானல் தூர்ந்து போய்விட்டது. வேறொரு வாய்க்காலை அமைக்க அலசி, ஆராய்ந்து, திட்டம் போடுகிறோம் பத்து ஆண்டு காலமாக என்று சொன்னார்கள். நிலைமை இப்படி இருக்கிறது. ஆகவே இப்படி ஏற்கனவே இருக்கும் வசதிகளை, பழைய ஏரிகளைச் சரி செய்ய ஏதாவது செய்கிறார்களா என்றால், இல்லவே இல்லை என்று இங்கே சொல்ல விரும்புகிறேன். நான் இந்த மன்றத்திலே நான்கு ஆண்டு காலமாக இருக்கிறேன். கிட்டத் தட்ட 8, 9 தடவை பேசியிருக்கிறேன். என்னுடைய தொகுதியாகிய நெல்லிக் குப்பம் தொகுதியில், ஏறக்குறைய 20 ஏரிகள், மைனர் இர்ரிகேஷன் டாங்குகள் இல்லை, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்டுமெண்டு ஏரிகள் 500, 600 ஏக்கர் நிலங்கள் பாயக்கூடிய வசதி பெற்ற ஏரிகள் அவை. அமைச்சர்கள் வந்து பார்ப்பதே இல்லை. தென் ஆர்க்காட்டுக்கு வருகிறார்கள். ஆனால் அவை ஒன்றையும் பார்ப்பதில்லை. நான் சொல்லவில்லையா என்றால், பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். 4, 5 அல்லது 6 தடவைகளுக்கு மேல் சொல்லியாகிவிட்டது. என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? ஒவ்வொரு தடவையும் அவர்களிடம் சொல்லுவதுதான் மிச்சம். நடவடிக்கை ஏதாவது எடுத்தார்களா? 1962-லே விண்ணப்பம் கொடுத்தேன். மறுபடியும் 1963-ல் விண்ணப்பம் கொடுத்தேன். வெட்டுப் பிரேரணை கொடுத்துப் பேசினேன். அத்தனைக்கும் ஒன்றும் நடக்கவில்லை. பின்னால், பிரதம எஞ்ஜினியர் அவர்களைக் கண்டு, 20-3-1964,-ல் ' 20 P.W.D. tanks situated on the right side of Penniar river in my constituency are badly affected after the construction of the Sathanur Dam ' என்று விண்ணப்பம் கொடுத்தேன். விண்ணப்பம் கொடுத்த தேதி, 1964, ஜனவரி 20; நாளது தேதிவரை என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? சீஃப் எஞ்ஜினியர் பெற்றுக் கொண்டேன் என்று 27-ம் தேதி பதில் எழுதியிருக்கிறார்கள். நடவடிக்கை எடுத்தார்களா ? அங்கு இருக்கிற எக்ஸிக்யூடிவ் எஞ்ஜினியர் எந்த எந்த ஏரிகள் என்று கேட்கிறார்கள். ஆகட்டும் லிஸ்ட் கொடுக்கிறேன். கொடுத்தால் எஸ்டிமேட்டுப் போடுவார்களா ? இல்லை. நாங்கள் கேட்பதெல்லாம், என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதுதான். என்னுடைய தொகுதி என்பதாலா இத்தனை ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் பாயும் ஏரிகள் தூர்ந்து கிடக்கின்றன ? அந்த ஏரிகளுக்குத் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன. அமைச்சர் அவற்றைப் பரிசீலிக்காத காரணத்தினால், இன்றைய தினம் நீர்ப்பாசன வசதி குறைந்திருக்கிறது. இதற்கு மந்திரி சபைதான் பொறுப்பு ; இதைச் சிர் தூக்கிப் பார்க்கவில்லை என்கிற குற்றத்தைச் சாட்டுகிறேன்.

இன்னொரு திட்டம் எங்கள் பகுதியில் ஒரு ஏரிக் கரையில்லாமல் வெள்ளப் பெருக்கினால், சப்மர்ஜ் ஆகிவிடுகின்றன. இதைப்பற்றிச் சொன்னது 1963-ல். டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் தீர்மானம் போட்டு அனுப்பியது 1964-ல் ; எஸ்டிமேட் போட்டது

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [16th March 1966

ரூ. 1,68,000 என்று சொல்லுகிறார்கள். முதல் அமைச்சர் விவசாய அமைச்சராக இருந்த காலத்தில் அழைத்துப் போய்க் காட்டினோம். சென்ற பத்து ஆண்டுகாலமாக, அதற்கும் முன்பே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு கலெக்டர் கங்கரன்ஸும் கொடுத்திருக்கிறார்கள். 17—11—1964-ல் அவர்களுடைய கடிதம் டி.டிஸ். நெ. 19279/64 என்கிற எண்ணுள்ள கடிதம் மூலம் கலெக்டர் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். என்ன ஆவது? இதுவரையில் ரெவின்யூ போர்டில் இருந்து கொண்டிருக்கிறது. எப்படி நீங்கள் உணவு உற்பத்தி செய்ய முடியும்? இந்தத் துறை அமைச்சர் தூங்கிக் கொண்டு இருக்கிறார்கள். சரியாகச் செயல்படவில்லை என்று குற்றம் சாட்டுகிறேன். ரெவின்யூ போர்டில் 1½ வருஷ காலமாகக் கிடக்க வேண்டியதில்லை. கலெக்டர் கங்கரன்ஸ் கொடுத்த பிறகு, டெவலப்மெண்ட் கவுன்சிலில் தீர்மானம் போட்டு அனுப்பிய பிறகு, ரூ. 1,68,000-க்கு எஸ்டிமேட் போட்ட பிறகு, இவ்வளவு காலமாக 2,000 ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றால், இதற்கு என்ன பொருள்? (மணியடிக்கப்பட்டது) இதற்கு அமைச்சரவையைக் குற்றம் சாட்டி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. அப்பாவு தேவர்**: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் 1966-67-ம் ஆண்டுக்கான பாசனத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து, ஒருவேற்றுச் சில வார்த்தைகள் பேச நான் விரும்புகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் நீர்ப்பாசனம் ஆறு பிரிவுகளாக இருக்கின்றன. அவற்றில் ஆற்றுப் பாசனம், குளப் பாசனம் தஞ்சை, அறந்தாங்கி, பொராவூரணி, ஆவுடையார்கோயில், நாகை ஆகிய பகுதிகளில் இருக்கின்றன. தஞ்சை தாலுக்காவில் பம்பிங் ஸ்கீம் இர்ரிகேஷன், திறந்த வெளிக் கிணறு, வடி முனைக் குழாய்கள் போன்ற திட்டங்களும் இருக்கின்றன. திறந்த வெளிக்கிணறு, வடி முனைக் குழாய்கள் திட்டங்கள் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் பைலட் ஸ்கீம் மாயவரம் டிவிஷனில் கோவிந்தக்காவேரி, மன்னார்குடி தாலுக்காவில் ராஜன் வாய்க்கால் இவ்விரண்டிலும் நவீன நீர்ப்பாசன முறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எங்கள் ஜில்லாவில் வெண்ணாற்றுப் பாசனம் மிக மிக அதிகமானது. அதில் 'ஏ' க்ளாஸ் சானல்கள் மிக அதிகம் இருக்கின்றன. அவைகளில் நீர்ப்பாசனம் சில சமயங்களில் தடைப்படுகின்றது. வெண்ணாற்றின் இரு கரைகளும் மிகப் பலவீனமாக இருக்கின்றன. அந்தக் கரைகளைக் கொஞ்சம் உயர்த்த வேண்டும். அதற்கு க்ராயின் அல்லது ரிவெட்மென்ட் கட்ட வேண்டும் என்று சென்ற பட்ஜெட் விவாதத்தின்போதும் நான் இதே மன்றத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த வேலை இன்னும் செய்யப்படாமல், வெண்ணாற்றங்கரைகள் மிகப் பலவீனப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை உடனடியாகக் கவனித்து அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். வெண்ணாற்றிலிருந்து பிரியும் 'ஏ' க்ளாஸ் சானல்கள் சில வெட்டப்படாமையினாலும் சென்ற வருஷம் பாசனத்திற்குத் தடை இருந்தது. அவைகளையும் உடனடியாகக் கவனிக்க வேண்டுமாய் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.



16th March 1966] [திரு. அ. அப்பாவு தேவர்]

பொதுவாக, தஞ்சை ஜில்லாவில் வடிகால் வசதிகள் குறைவாக இருக்கின்றன. அவைகளையும் கவனிக்க வேண்டும். என்னுடைய சாலியமங்கலம் தொகுதியில் வெண்ணாற்றுப் பாசனம், உக்கடை வட்டம், சேர்மாநல்லூர் கிராமத்திற்கும் மன்னார்குடி தாலுக்காவில் உள்ள இன்னொரு கோறல்வண்ணி வட்டத்திற்கும் நடுவில் இருக்கும் நிலங்கள் வடிகால் வசதி இல்லாமல் வருஷாவருஷம் 70 ஏக்கர் வரையில் விவசாயத்திற்கு நல்ல முறையில் கொண்டு வரப்பட முடியாமல், அந்த 70 ஏக்கரில் வருமானம் மிக குறைவாகக் கிடைக்கக்கூடிய நிலை இருந்து வருகிறது. வெள்ளக் காலங்களில் அந்தப் பகுதிகள் மூழ்கிவிடுகின்றன. அதற்கும் ஆவன செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தண்ணீர் வராத காலங்களில் வெண்ணாற்றை நடுவில் அடைத்து சில கிராமத்தார்கள் சாகுபடி செய்து கொண்டிருந்தார்கள். அது அவ்வளவு நல்லதல்ல. இன்னும் மேல் உள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் போகாமல் அங்குள்ள விவசாயிகள் மிகக் கஷ்டப்பட்டார்கள். அப்பொழுது, அதைப் பற்றி தலைமை எஞ்ஜினியருக்கும், மற்றுமுள்ள அதிகாரிகளுக்கும் நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதற்குள் மழை நன்றாகப் பெய்துவிட்டதனால், அதற்குமேல் ஒன்றும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அது மாதிரி ஆறுகளை அடைத்தோ, அல்லது ஜலம் ஜாஸ்தியாக வரும் காலங்களில் வெண்ணாற்றங்கரைகளை சில இடங்களில் கிராமத்தார்கள் வெட்டியோ விட்டுவிடுகிறார்கள். அதையும் அரசாங்கம் கவனித்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் இதற்கு முன்பு ஏரிகளும் குளங்களும் அதிகமாக இருந்திருக்கின்றன. இப்பொழுது ஏரிகளெல்லாம் குறைவாகத்தான் இருக்கின்றன. அந்த ஏரிகளையெல்லாம் இனிமேலாவது தியாகிகளுக்கோ, மிலிடரி சர்வீஸ் செய்துவிட்டுத் திரும்பி வந்தவர்களுக்கோ கொடுக்காமல், சர்க்காரே பராமரித்து வந்தால் நீர்பாசனத்திற்கு மிக நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கு மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கும்பொழுதும் மூடும் பொழுதும், அரசாங்கம் எங்கள் தஞ்சை ஜில்லாவில் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, அதில் விவசாயிகளையும் மெம்பர்களாக வைத்துக் கொண்டு, முக்கிய அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு, அதைக் கொஞ்சம் ஆலோசித்துச் செய்தால் மிகவும் நலமாக இருக்கும். ஏனென்றால், சிலர் முன் சாகுபடி செய்கிறார்கள். சிலர் பின் சாகுபடி செய்கிறார்கள். அதில் கஷ்டங்கள் ஏற்படுகிறது. ஆகவே, அந்த விவசாயிகளையும் கலந்து செய்தால் மிக நலமாக இருக்கும்.

[திரு. அ. அப்பாவு தேவர்] [16th March 1966

இதற்கு அட்வைசரி கமிட்டி மாதிரி கொஞ்சகாலத்திற்கு முன் இருந்திருக்கிறது. அதே மாதிரி செய்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் நஞ்சை சாகுபடி சுமார் 14 லட்சம் ஏக்கரில் உள்ளது. இது சென்ற வருஷக் கணக்குப்படி இந்த வருஷம் இன்னும் கூடுதலாக இருக்கும் என்று நினைக்கிறேன். குறுவை சாகுபடி ஐந்து லட்சத்திற்கு மேல் இருக்கிறது. இதுவும் சென்ற வருஷக் கணக்குபடி. இந்தவருஷம் கூட இருக்கும் என்று கருதுகிறேன். இன்னும் கூட சாகுபடி செய்ய இந்த வடிகால் வசதிகள், வாய்க்கால் வசதிகள் செய்து கொடுத்தால் ஏக்ரேஜ் இன்னும் அதிகமாகும், விளைச்சலும் மிக அதிகம் ஆகும் என்று அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இத்துடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன் எனக்கு இந்த வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியும் வணக்கமும்.

* **திரு. கோ. சி. மணி:** கனம் மன்றத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிற பாசன மானியக் கோரிக்கையையும், பாசன மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையையும் பற்றிய விவாதத்தில், எங்களது இயக்கத்தின் சார்பாகத் தரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் இரண்டொரு வார்த்தைகளை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, இந்த மானியக் கோரிக்கை வேளாண்மைத் துறைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். சென்ற சில தினங்களுக்கு முன்னால், வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை விவாதம் இங்கே நடைபெற்ற நேரத்தில் உரத் தட்டுப்பாடு என்றும், பாசன வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்றும் இங்கே பெருவாரியான அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டியது நினைவில் இருக்கும்
9-30 a.m. என்று நான் கருதுகிறேன். அதிலும் குறிப்பாக, வருஷா வருஷம் ஆற்று மூலம் தரப்படுகிற பாசனம் முறைப்படுத்தப்படவில்லை என்றும் கால்வாய்கள் தூர் வாரப்படவில்லை என்றும், கால்வாய்த் தலைப்புகள் சரியாக அமைக்கப்படவில்லை என்றும் வருஷா வருஷம் இந்த மன்றத்தின் மூலமாகவும் தனியாகவும் அதிகாரிகளிடத்திலும் குறைகள் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால், இந்த ஆண்டு பேசுகின்ற நேரத்தில் உணவு உற்பத்தி குறைந்ததற்கும் பாசன வசதி செய்து கொடுக்காததற்கும், இயற்கை பொய்த்துவிட்டது, பெய்த மழையும் காலம் தவறிப் பெய்தது என்பதாக மிக்க வலுவாகச் சொல்லித் தப்பித்துக் கொள்கின்ற ஒரு நிலையைத்தான் நாம் பார்த்தோம். அப்படித்தான் அமைச்சர் அவர்கள் தம் உரையில் இன்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நேற்றைய முன் தினம் நடைபெற்ற விவாதத்திலும் குறிப்பிட்டார்கள். இந்த மன்றத்தில் நான் ஆண்டுக்கு ஆண்டு சொல்லி வருகிற குறைகளை எந்த ஒரு ஆண்டிலாவது கவனித்து நிவர்த்தி செய்திருப்பார்களானால் சேர்ந்தாற்போல் இவ்வளவு தொகை



16th March 1966] [திரு. கோ. சி. மணி]

செலவழிக்க வேண்டிய ஒரு நிலை வந்திருக்காது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை திருப்தி அளிக்கக் கூடும் என்று கருதலாம். இப்போது நாங்கள்—இதுவரை தந்திருக்கிற சாதாரணச் செலவினங்கள், மூலதனச் செலவினங்கள் ஆகியவற்றோடு சேர்த்தால் பத்தில் ஒரு பங்கு கூட இது இருக்காது என்று கருதுகிறோம். மாதங்கள் பல ஆகியும் என்ன செய்வது? "நம்முடைய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை இவ்வளவுதான். இவ்வளவு வேலைகள்தான் முடிந்திருக்கின்றன. முடியும் தருவாயில் இருக்கும் வேலைகள் இவ்வளவு, பாக்கியை எப்படி எடுத்துக் கொள்வது?" என்று அதிகாரிகளைக் கேட்டால் சொல்லி விடுகிறார்கள். நாங்கள் அதற்குமேல் அதிகாரிகளிடத்தில் சொல்ல ஒன்றும் இல்லை.

மேட்டூர் நீர்த் தேக்கத்தை எடுத்துக் கொண்டால் அங்கே போதுமான நீர் இல்லை. குறைந்துவிட்டது என்கிறார்கள். திட்டமிட்ட நாட்டில் இப்படிப்பட்டதொரு அவல நிலை இருக்கலாமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டது—அதைக் கொண்டு இரண்டு ஜில்லாக்களுக்கு சப்ளை செய்கிறோம் என்று சொல்லி, தஞ்சை மாவட்டம் நீர்வளத்திற்குப் பெயர்போன மாவட்டம் என்று சொல்லி இன்றையதினம் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த எங்களையும் வானம் பார்த்து நிற்க வேண்டிய ஒரு நிலைக்கு உள்ளாக்கி விட்டீர்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். தண்ணீர்விடுகின்ற காலத்திலும் முறை வைத்துவிடுகிறோம் என்கிறார்கள். அந்த முறை என்ன என்பதைத் தயவு செய்து விளக்கினால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். காவேரியில் 3 நாள் தண்ணீர் விடுகிறார்கள். பின்னர் அதை அடைத்து வெண்ணாற்றில் ஒரு 2 நாள் விடுகிறார்கள், அப்புறம் அதை அடைத்துக் கல்லணைக் காலில் 2 நாள் முறை போட்டுத் தண்ணீர் விடுகிறார்கள். இந்த முறைப்படி தண்ணீர் விடுகிறோம் என்றாலும் முறை வைத்துத் தண்ணீர் விடுகிறபோது ஆற்றிலே தண்ணீர் வருகிறதா என்றால் கிடையாது. நான் பாய்வதற்குச் சொல்லவில்லை. ஆனால் அந்த ஆற்றுக்கோடி வரை தண்ணீர் வந்து சேருவதற்கே ஐந்தாறு நாட்கள் ஆகின்றது. ஆனால் மூன்றாம் நாளே தண்ணீரை அடைத்து விடுவதால் வறண்ட நிலையில் இருக்கும் ஆற்றில் விடப்படுகிற தண்ணீரும் அங்கங்கே சோர்ந்து போகிறதே தவிர கடைக்கோடி வரை வந்து சேர்வதே இல்லை. அப்படி என்றால் முறை வைத்துத் தண்ணீர் விட்டும் எப்படிச் சாகுபடி செய்ய முடியும் என்பதை யோசிக்க வேண்டும். தண்ணீர் வருகிறது என்று நினைத்து வயலுக்குப் போனால், தண்ணீர் அடைக்கப்பட்டு வெண்ணாற்றுக்குத் திருப்பப்பட்டுவிட்டது என்ற செய்தி வந்து விடுகிறது. தண்ணீர் நிறைந்து இருக்கும்போது திறந்துவிட்டால் ஓரளவாவது வரக்கூடும். அப்படி இல்லாத காரணத்தினால் முறை வைத்துத் தண்ணீர்விடும் இந்த முறையையே கொஞ்சம் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். வாரா

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [16th March 1966

உரியவராவார்கள். மற்றும் பக்கத்து ராஜ்யங்களுடன் கலந்து பேசி கஷ்டமான நிலையில் அவர்களுடைய உதவியைப் பெறவும் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார்கள். குறிப்பாக மைசூர் அரசாங்கம் உதவிக்கு வந்திருக்கிறது. கேரள அரசாங்கத்துடன் கூட நல்லமுறையில் பேச்சுவார்த்தை நடத்தி, அங்கு வீணாகப் போகும் தண்ணீரைப் பாசனத்திற்குப் பெற துரிதமாக முடிவு செய்யவும் முன்வரவேண்டும். குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பம்பையாறு, கிறியாறு திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதையும் நல்லமுறையில் நிறைவேற்றித் தரவேண்டும். பல ராஜ்ய நதிகளையும் இப்படி இணைப்பதன் மூலமாக ராஜ்யத்திற்கு ராஜ்யம் உதவுவது சாத்தியமாவது போல நமது ராஜ்ய நீர்ப்பாசனத் திட்டங்களையும் ஒன்றோடொன்று இணைப்பதன் மூலம் தேவையேற்படுகிற நேரத்தில் உதவி செய்ய வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். அரசாங்க அதிகாரிகள் இந்தத் துறையிலே நல்ல முயற்சி செய்வதற்கு ஒரு அடையாளமாக நீர்ப்பாசனத் துறையே நீரை விநியோகிக்கும் பொறுப்பையும் கூட எடுத்துக்கொள்வது சரியென்று நினைக்கிறேன். குளங்களிலே பாய்மான வசதிகளைப் பொறுத்த வரையில் இப்பொழுது ரெவின்யூ இலாகா கவனித்துக் கொண்டு வருகிறது. இத்தகைய பொறுப்புக்களைக்கூட எந்த எந்த இடங்களில் சாத்தியமோ அந்த அந்த இடங்களிலே எல்லாம் நீர்ப்பாசனத் துறையே எடுத்துக்கொள்வதின்மூலம் நல்ல முறையிலே நீர் வழங்கப்படுவதற்கும் வீணாகக் கூடிய நீரைக் கட்டுப் படுத்துவதற்கும் ஒரு வழி ஏற்படும். அதேபோல் குளங்களிலே உள்ள தண்ணீர் வடிகால்கள் முழுமையும் ரெவின்யூ இலாகாவில் பொறுப்பில் தான் இருக்கின்றன. இதையுங்கூட எங்கெங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் நீர்ப்பாசனத் துறையே மேற்கொள்வது நல்லது என்று கருதுகிறேன். அதேமாதிரி இந்தக் குளக்கரை, வாய்க்கால் இவைகளின் ஓரங்களிலே உள்ள ரோடு அமைப்புத் திட்டங்களைக் கூட நீர்ப்பாசனத் துரையினரே எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் திடீரென்று ஆபத்து ஏற்பட்ட இடங்களையெல்லாம் சென்று பார்வையிட்டு உடனடியாகச் செம்மைப்படுத்துவதற்கு, கப்பி போட முடியாவிட்டாலும் சரல் போடுவதன்மூலமாக, இந்தக் குளக்கரை, வாய்க்கால் ஓரங்களில் உள்ள ரோடுகளையெல்லாம் மேற்கொள்வது நல்லது என்ற கருத்தையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். திருநெல்வேலி ஜில்லாவில் மழை நிலைமை ஏற்பட்டிருந்தது. இருக்கிற தண்ணீரை வைத்து காலாகாலத்தில் பயன் படுத்திக்கொள்வதற்கு, திருநெல்வேலி ஜில்லாவிலே ஸ்ரீவைகுண்டம் தென்கால், வடகால், மருதூர் மேலக்கால், கீழக்கால் ஆகிய 4 கால் பாசனப்பகுதிகளுக்கும் சுமார் 35 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு உடனடியாகப் பழந்தொழிலுக்குப் தண்ணீர் கொடுத்து உதவ வேண்டும். அரசாங்கம் இதில் தயக்கம் காட்ட வேண்டிய அவசியமில்லை. 20 ஆண்டுகளாக உள்ள விவரங்களையெல்லாம் எடுத்துப் பார்த்தால் எல்லா வருடங்களிலும் அரசாங்கம் நிர்ணயித்த அளவைவிட அதிகமாகத்தான் அட்வான்ஸ் கார்பயிர் விளைந்து வருகிறது அரசாங்கம் அளவை நிர்ணயிக்கும் பொழுதே வெகு ஜாக்கிரதையாக குறைவாகப் போடுகிறார்கள்.



16th March 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

ஆனால் அந்தத் திட்டத்திற்கும் மேலாகவே விளைந்து வருகிறது. சமீபத்திலே மழை பெய்து இருக்கிறது. தென்மேற்குப் பருவ மழையும் காலா காலத்தில் வந்துவிடும் என்று எண்ணுகிறேன். மணிமுத்தாறுப் பகுதியில் சில குளங்களில் இன்னும் ½ குளம் 3/8 குளம் தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரைப் பயன் படுத்திக்கொள்வதற்கும் அரசாங்கம் தீர்க்கமாக யோசிக்க வேண்டும். சில பகுதிகளில் விளைவு தாமதமாக ஏற்படுவதற்கு, பயிர் ஏற்றுவதற்குத் தாமதப்படுவதே காரணம். பயிர் ஏற்றத் தாமதமாவதற்கு காரணம் என்னவென்றால் பெரிய குளங்கள் முழுவதும் நிரம்பிய பிறகுதான் பல கீழ்க் குளங்களுக்குத் தண்ணீர் வரவேண்டியதாக இருக்கிறது. அதனால் அந்தப் பகுதிகளில் எல்லாம் பயிர் ஏற்றுவது தாமதப்படுகிறது. திருச்செந்தூர்ப் பகுதியிலே கடம்பாக்குளம் என்ற ஒரு குளம் இருக்கிறது. இந்தக் குளத்திற்குத் தண்ணீர் வந்து ஓரளவு நிரம்பியபின்தான் அதற்குக்கீழே உள்ள 12 பெரிய குளங்களுக்குத் தண்ணீர் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட குளங்களுக்கு எல்லாம் தனிக் கால் வசதி செய்வதின் மூலமாக சீக்கிரமாகப் பயிர் ஏற்றுவதற்கு முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக இந்த சர்பளஸ் ஆக இருக்கக்கூடிய தண்ணீர் கடலில் போய் வீணாகக்கூடிய நிலைமை, கோடிக் கணக்கான க்யூசெக்ஸ் தண்ணீர் வீணாகக்கூடிய நிலைமை இருக்கிறது. மருதூர் கால்வாயிலிருந்து பிரித்து நொச்சிக்குளம் தனிக் கால் திட்டம் ஒன்று பரிசீலனையில் வெகுகாலம் இருந்துவருகிறது. உடன்குடி பகுதியிலுள்ள சடையனேரிக்குளம் வரை புதிய கால்வாய்கள் ஏற்படுத்தும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. இது பல வருஷங்களாகப் பரிசீலனையில் இருந்துவருகிற திட்டம். இதைக் காலாகாலத்தில் பூர்த்தி செய்தால் வறட்சியாக இருக்கக் கூடிய பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும், அதோடு கடலிலே போய் வீணாகக்கூடிய தண்ணீரையும் பயன்படுத்திக் கொள்ள முடியும். புத்தன்தறுவை, குலசேகரப்பட்டணம் தறுவை ஆகிய பகுதிகளிலே தண்ணீர் தேங்கிக்கிடக்கிறது. அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ள வசதியில்லாவிட்டாலும்கூட, அந்தத் தண்ணீர் அங்கேயே தேங்கிக்கிடப்பதால் அங்கே இருக்கக்கூடிய இரண்டாயிரம் ஏக்கர் பயிர் சேதப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. பயிருக்கு அழிவு ஏற்படாமல் நிலத்தையும் தண்ணீரையும் பயன் படுத்தக்கூடிய நடவடிக்கைகளை காலாகாலத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். எழுவரை முக்கிப் பகுதியிலே செம்மறி குளம் பகுதியில் மேலே ஒரு குளம் அமைப்பதின் மூலம் பயிர் அழிவைத் தடுப்பதற்கு முடியும். கடம்பா ஏழாம் நம்பர் மடை பாசனப் பகுதியை துப்புரவு செய்ய திட்டமிருக்கிறது. அவ்வேலையைச் செம்மையாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுவைகுண்டம் அணைக்கட்டுக்கு கீழே உள்ள பகுதியிலே லிப்ட் இரிகேஷன் மூலம் ஆற்றுத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் திட்டம் போடப் பட்டது. அதையும் துரிதப்படுத்த வேண்டும். மணிமுத்தாறு புதிய சாகுபடிப் பகுதிகளிலே விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கக் கூடிய முறையில் விவசாயப் பயிற்சிப் பண்ணைகள் நிறுவுவதற்கு

ஏற்பாடு செய்ய வேண்டும். காவேரிப் பகுதியிலே பூமிக்கடியிலே இருக்கக்கூடிய தண்ணீரைக் கொண்டுவருவதற்காக பூகர்ப்ப சாஸ்திரிகளைக் கொண்டு திட்டம் தயாரிக்கப்படுகிறது. திருச்செந்தூர் தாலுகாவிலும், மற்றும் ஆற்றூரைத் தாலுகாக்களிலும் நீர்ஊற்றுக்கள் பூமிக்கடியில் இருப்பதாகத் தெரிகிறது. இந்தத் திட்டத்தையும் காலாகாலத்தில் நிறுவுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. தா. பெருமாள் ராஜு :** கனம் சபாநாயகர் அவர்களே, நமது ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1966-67-ஆம் ஆண்டு நீர்ப்பாசன மான்ய கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்பொழுது பல பல நீர்த் தேக்கங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பாசன வசதியற்ற, பல வருஷங்களாகவே குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லாத சில பிரதேசங்கள் எல்லாம் கோவை ஜில்லாவில் குறிப்பாக பவானித் தாலுகாவிலே அந்தியூர் பிர்க்காவிலே இருக்கின்றன. பதினைந்து ஆண்டு காலமாக நீர்ப்பாசன வசதிகள் இல்லாமல் இருந்து வருகிறது. வரக்கோம்பைப் பள்ளம், வழுக்குப் பாறை பள்ளம், கரும்பாறைப் பள்ளம் இங்கேயுள்ள திட்டங்கள் எல்லாம் இன்னும் ஆராய்ச்சியிலேதான் இருந்துகொண்டிருக்கின்றனவே தவிர, இன்னும் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. இந்தத் திட்டங்களுக்கு சுமார் 23 லட்சம் ரூபாயும், 33 லட்சம் ரூபாயும் எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். இத்திட்டங்களை நிறைவேற்றினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களை பாசன வசதிக்குக் கொண்டுவரலாம். அங்கேயுள்ள ஜனங்கள் எல்லாம் இதை வைத்து நன்றாக ஜீவிக்கக்கூடிய வழி ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டங்களை உருவாக்கிவிட்டால் பல குளங்கள், அந்தியூர் குளம், பிரமதேசம் ஆப்பக்குடல் குளம் இவைகளுக்கு எல்லாம் தண்ணீர் பாயும். அப்படித் தண்ணீர் பாய்வதால் 2 அல்லது 3 போகம் விவசாயம் செய்து அங்கேயுள்ளவர்கள் நல்ல முறையில் ஜீவிக்க வழி ஏற்படும். இரண்டாவதாக கோபி தாலுகாவிலே கொடிவேரி அணைக்கட்டுக் கருகிலே தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, திட்டப்பள்ளி அருங்கேரி ஆகிய இரண்டு கால்வாய்கள் பிரிக்கப்படுகிறது. கூகலூர் பிரிவு சிங்கம் பிரிவு என்ற பிரிவுகள் இதில் இருக்கின்றன. இதன் கரைகள் பழங்காலத்தில் பாசன வசதிக்காகக் கட்டப்பட்டவை. இங்கே அடிக்கடி லோயர் பாவானி கழிவு நீரால் கரைகள் எல்லாம் நீர்ப்பெருக்கு ஏற்பட்டு உடைந்துபோகக்கூடிய நிலைமை அடிக்கடி ஏற்படுவதால் விவசாயிகள் இதனால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு மாதத்திற்குக்கூட தண்ணீர் வாய்க்காலில் விடமுடியாத சூழ்நிலை இருக்கிறது. விவசாயம் மிகவும் பாதிக்கப்படுகிறது. இதைப் பற்றி எக்ஸிகியூடிவ் எஞ்சினியரைக் கேட்டால் அவர்கள், பணம் அதிகமாக ரிப்பேருக்கு ஒதுக்குவதில்லை என்று சொல்லுகிறார்கள். இந்தக் கரைகளை யெல்லாம் நல்ல முறையில் சீர்படுத்தி கரைகளைப் பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இந்த புட்புரடெக்ஷன் ஸ்கீமில் தாளவாடி பிர்க்காவில்





சிறு சிறு குட்டைகளாக 30 குட்டைகள் இருக்கின்றன. இந்தக் குட்டைகள் எல்லாம் இன்னும் ஆராய்ச்சி நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறதே தவிர இதுநாள் வரையில் திட்டங்கள் நிறைவேற்றப்படாத சூழ்நிலைதான் இருக்கின்றது. தாளவாடி மக்கள் மிகவும் பிற்பட்ட மலை ஜாதி வகுப்பைச் சேர்ந்தவர்கள். உண்ண உணவு கூட இல்லாத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க நல்ல பாசன வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு வருஷங்களுக்கு முன்பாக கோபி தாலுகாவில் கொளப்பலூர் என்ற ஊரிலே குட்டை வெட்டப்பட்டது. அந்தக் குட்டை வெட்டியதிலே சுமார் 20 விவசாயக் குடும்பங்களின் பூமி அந்தக் குளத்தில் மூழ்கி விட்ட காரணத்தால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நஷ்ட ஈடு இதுவரை கொடுக்கப்படவில்லை. அவர்கள் கூலி ஜீவனம் செய்து உண்ணும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களிடமிருந்து தீர்வை கூட வசூல் செய்வதாகக் கேள்விப்படுகிறேன். அவர்களுக்கு வரி வஜா செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. க. ர. நல்லசிவம் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இங்கு கொடுத்திருக்கக்கூடிய ரெவின்யூ அமைச்சர் அவர்களுடைய ஆய்வுரையில் தண்ணீரை எப்படிச் சிக்கனமாகப் பாசனத்திற்குப் பயன்படுத்துவது என்பதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக அதிகாரிகளை நியமித்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். நடைமுறையில் கடந்த மூன்று ஆண்டுகளாக நாங்கள் சிக்கனமாகத்தான் தண்ணீரைப் பயன்படுத்தி வருகிறோம். புதிய பாசன ஆதாரங்களுக்கு இனிமேல் வழி எதுவும் இல்லையென்று மந்திரியவர்கள் கூறியிருக்கிறார்கள். இருக்கக்கூடிய தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி மிச்சப்பட்ட தண்ணீரைப் புதிய பாசன ஆதாரங்களாகக் கொடுப்பதுதான் நன்றாக இருக்கும்.

பழைய கால்வாய்கள், படப்பள்ளி, அரக்கன்கோட்டை, வைகை, காவேரி போன்ற இடங்களில் இருக்கின்றன. அந்தப் பழைய கால்வாய்களிலும் மதகுகளிலும் ஏராளமான தண்ணீர் சேதமாகிறது. அவற்றை எல்லாம் நவீனப்படுத்த வேண்டும். பழைய பாசன ஆதாரங்களை எல்லாம் புதுப்பிப்பதற்காக ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை மேற்கொண்டால் கூட நல்லது.

தரைக்கடியில் உள்ள தண்ணீரைக் கண்டு பிடிப்பதற்குச் சோதனைகளை விரிவாகச் செய்யவேண்டும். தரையிலே எங்கெங்கு தண்ணீர் இருக்கிறது, எத்தனை அடியில் இருக்கிறது என்பதை எங்களைப் போன்ற விவசாயிகள் கண்டு பிடிக்க வேண்டுமென்றால் வாழ்க்கையே நாசமாகிவிடும். விஞ்ஞான ரீதியில் தண்ணீர் எத்தனை அடியில் கிடைக்கும் என்பதைப் பற்றிக் கண்டுபிடித்து கெஜட் நோடிபிகேஷன் மூலமாக அறிவிக்கவேண்டும். அப்படி நீங்கள் அறிவித்து விட்டால் உங்களுடைய உதவி கூட இல்லாமல் நாங்களே கூட தண்ணீரை எடுத்துக் கொள்ள முடியும்.

[திரு. க. ர. நல்லசிவம்] [16th March 1966

பிற மாநிலங்களிலுள்ள தண்ணீரை நம்முடைய ராஜ்யத்திற்குக் கொண்டு வர சர்க்கார் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்தக் காரியம் சரியாக நடைபெறவில்லை. அதற்கு நான் ஒரு சிறிய யோசனை சொல்ல விரும்புகிறேன். வேறு பல திட்டங்கள் நம்முடைய மாநிலத்திற்கும், பிற மாநிலங்களுக்கும் பொதுவாக இருக்கின்றன. அவைகளில் ஏதாவது ஒரு திட்டத்தை விட்டுக் கொடுப்பதன் மூலமாகவாவது அவர்களிடமிருந்து தண்ணீரைப் பெற நம்முடைய மாநில சர்க்கார் முயற்சி எடுக்கவேண்டும். மத்திய சர்க்காரை வற்புறுத்துவதன் மூலமாக மீதியுள்ளபெரும் ஆதாரங்களை நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டு வர முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அதிலே தயங்குவதோ, பயம் காட்டுவதோ கூடாது. தைரியமாக, துணிவாக மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லி அந்தத் தண்ணீரை நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டு வருவதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ளவேண்டும்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் இந்த வருஷம் தண்ணீர் இல்லை. கடந்த வருஷம் பாதி அளவு பயிர் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டது. அங்கு 100-க்கு 20 சதவீதம் நஞ்சை, 80 சதவீதம் புஞ்சை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. புஞ்சைப் பகுதியில் போய் இன்ன வெள்ளாமைதான் வைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். பிறருடைய தண்ணீரை எடுத்துக் கொள்ளாமல் எந்தப் பயிரைச் செய்தாலும் சர்க்கார் தலையிட வேண்டிய அவசியம் கிடையாது. 100-க்கு 80 சதவிகிதம் உள்ள அந்த விவசாயிகள் தாராளமாக எதை வேண்டுமானாலும் விவசாயம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

அங்கு ஒரு புகார் கூறப்படுகிறது. நஞ்சை என்று அறிவிக்கப்படுகிறபோது இரண்டு பக்கமும் தண்ணீர் பாய்ந்து ஒரு பக்கம் பள்ளமாக இருக்கிறது என்று சொன்னால் அது நஞ்சை என்று அறிவிக்கப்படும். ஆனால் வசதியுள்ளவர்களுடைய நிலம் மேடாக இருந்தால் கூட நஞ்சை என்று அறிவிக்கப்படுவதாகக் கேள்விப் படுகிறேன். இந்த ஆபத்தைத் தடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

நான் நமது அமைச்சர் அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். காவிரியில் 60 சதவிகிதம் பாசன வசதியைக் கொண்டே இந்த ஆண்டு குறுவை, சம்பா ஆகியவற்றைக் காப்பாற்றி இருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில் எங்களுடைய பகுதிக்கு எந்தத் திட்டமும் இல்லாமல் போய்விட்டது. வயிறு காய்கிறது; நெஞ்சு குமுறுகிறது. இனிமேல் இரண்டாவது போகத்திற்கு பாதித் தண்ணீர் தான் கொடுப்போம் என்ற உத்தரவை நீக்கவேண்டுமென்று அழுத்தந்திருத்தமாகக் கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன். அந்தப் பகுதியில் உள்ள 10 சட்ட மன்ற அங்கத்தினர்களும் இதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறார்கள். சட்டசபையிலே நீங்கள் சொல்வதை ஒருகால் கேட்டுக் கொண்டிருக்கலாம். கீழ்பவானி பிரதேசத்தில் இரண்டாவது போகத்திற்குப் பாதித் தண்ணீர்தான் விடுவோம் என்ற உத்தரவை நீக்க வேண்டுமென்பதைப் பொறுத்த வரை அவர்கள் என்னோடுதான் சேர்ந்து கொள்வார்கள் என்பதிலே ஆட்சேபணை இல்லை. அங்கு இந்த உத்தரவை எதிர்த்து . . .



16th March 1966]

Mr. SPEAKER: The hon. Member speaks as if he is talking to the Hon. Minister directly. He must remember that while speaking in the House he should address the Chair.

**திரு. க. ர. நல்லசிவம்:** அங்கு இருக்கக்கூடிய உணர்ச்சிக்காகச் சொல்லுகிறேன். அங்குள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அவ்வளவு பேரில் எவரும் இந்த உத்தரவை விரும்பவில்லை. இது கூடாது, இதை எதிர்க்கவேண்டும். இதைக் கிழித்தெறியவேண்டும், ரத்து செய்யவேண்டும் என்பதிலே தீவிரமாக இருக்கிறார்கள் என்பதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1959-ல் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. இரண்டு முறையாகத் தண்ணீர் கொடுப்பது, பயிர்க்கட்டுப்பாடு கிடையாது என்று கூறினார்கள். நாங்கள் எல்லாம் மன மகிழ்ச்சியோடு அதை ஏற்றுக்கொண்டோம். அங்கு உள்ள 1,60,000 ஏக்கரில் ஐந்து நாளைக்கு ஒரு முறை கிடைக்கக்கூடிய தண்ணீரைக் கொண்டு நாங்கள் நெல் சாகுபடி செய்தோம். இதையெல்லாம் பாராட்ட வேண்டும், பரிசு கொடுக்க வேண்டும். இதையெல்லாம் செய்யாவிட்டாலும் கொடுக்கக் கூடிய தண்ணீரையாவது நிறுத்தாமல் இருந்தால் நல்லது. பெருந்துறையில் ஒரு குளம், தூர்ந்து கிடந்தது. சென்னிமலை தொகுதியில். மேலும் ஒரு குளம் வெட்டி பிறகு கீழே தண்ணீர் கிடையாது. அந்தத் தண்ணீரை எடுத்து வேறு பகுதிக்குக் கொடுப்பதன் மூலமாக எங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. (மணி அடிக்கப்பட்டது) செப்டம்பர் மாதம் 1964-ம் ஆண்டு போடப்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. மா. தண்டாயுதபாணி:** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டு இயற்கை பொய்த்து விட்ட காரணத்தால் நீர்த்தேக்கங்களிலே போதுமான அளவு தண்ணீர் இல்லாத அளவிலேகூட ஏறத்தாழ பாசனத்தில் இருக்கக்கூடிய 28 லட்சம் ஏக்கரிலே 24 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி செய்து கொடுத்து நல்ல முறையில் விவசாயத்தைப் பெருக்கியிருக்கிறார்கள். தண்ணீர் தட்டுப்பாடு இடையிலே இருந்தது என்று கூறினாலும் கிடைத்த தண்ணீரை ஒழுங்காக, முறையாகப் பகிர்ந்து கொடுத்த காரணத்தால் உற்பத்தி பெருக முடிந்தது என்பதை நினைக்கும் நேரத்தில், அந்த இலாகாவினரையும், பொறுப்பேற்றிருக்கும் அமைச்சரையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் நெல் விவசாயத்தைப் பற்றிக் கோவை ஜில்லாவுக்கு வந்து பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாநிலம் பூராவும் மொத்த சாகுபடி செய்கின்ற நிலப்பரப்பு 28 லட்சம் ஏக்கர். தஞ்சை ஜில்லாவில் மட்டும் ஏறத்தாழ 15 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்து வருகிறார்கள்.

நாங்கள் சாகுபடி செய்து வருகிற காலம், 150 ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்தே நாங்கள் நெல் சாகுபடி செய்து வருகிறோம். புதிதாக 1947-ம் ஆண்டிற்குப் பிறகு அணை கட்டி அதிலிருந்து நெல் 10-00 a.m.

சாகுபடி செய்யக் கற்றுக் கொண்டவர்கள் எங்களை அங்கு வந்து பார்த்துக் கற்றுக் கொள்ளச் சொல்வது விந்தையாக இருக்கிறது. நாங்கள் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துகிறோமா, தேவையற்ற நிலையில் தண்ணீரைப் பயன்படுத்துகிறோமா, என்பதை எங்கள் ஜில்லாவில் வந்து பார்க்க வேண்டும். அதிலும் குறிப்பாக 14 லட்சம் ஏக்கர்கள் சாகுபடி செய்கிற விஸ்தீரணத்தில் 1927-ல் கல்லணைக் கால்வாய் என்ற ஒரு கால்வாய் வெட்டப்பட்டது. அங்கு மூன்று லட்சம் ஏக்கர்களுக்கு தண்ணீர் கொடுத்து வருகிறார்கள். அந்த மூன்று லட்சம் ஏக்கர்களுக்கும் இந்த அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற தண்ணீர் அளவைப் பார்த்தால் இந்த மாநிலத்தில் வேறு எங்குமே அந்த அளவிற்கு குறைவாக தண்ணீர் கொடுக்கப்படவில்லை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். ஒரு கன அடி தண்ணீர் 75 ஏக்கர் நிலத்திற்கு பாசனம் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் மூன்று லட்சம் ஏக்கர்களுக்கு தண்ணீர் கொடுத்து வருகிறார்கள். பரம்பிக்குளம் ஆளியாறு பகுதியில் கூட 50 ஏக்கர் பாசனம் செய்வதற்கு ஒரு கன அடி தண்ணீர் கொடுப்பது என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவில், கல்லணைப் பகுதியில் 75 ஏக்கர்களுக்கு ஒரு கன அடி தண்ணீர் என்று நிர்ணயம் செய்யப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. தஞ்சை ஜில்லாவில் 14 லட்சம் ஏக்கரில் 4 லட்சம் ஏக்கரில் குறுவை போட்டு கிட்டத்தட்ட 10½ லட்சம் ஏக்கர்களுக்கு மேல் சம்பா சாகுபடி செய்துவருகிறார்கள். ஆகவே இந்த நிலையில் எங்களுக்கு ஒருவரும் அறிவுரை கூறத் தேவையில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கல்லணைக் கால்வாய்ப் பகுதிக்கு இந்த விகிதம் நிர்ணயம் செய்திருப்பது மிக மிகக் குறைவாக இருப்பதால் தண்ணீர் பற்றாக்குறை கடைமடைப் பகுதிகளுக்கு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கல்லணையில் இந்தக் கால்வாய் தலைப்பை மாற்றிக் கொடுத்தால் இன்னும் அதிகமாக தண்ணீர் விடலாம். புது ஆற்றில் கொள்அளவு 4,000 கன அடி கொண்டதாகும் என்று சொல்கிறார்கள். இப்போது விடப்படுவது 2,000, 3,000 கன அடிதான். போதுமான தண்ணீர் கிடைக்காததால் அவ்வளவு குறைவாக விடப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே அந்த நிலைமையை மீண்டும் பரிசீலனை செய்து அந்தத் தலைப்பை மாற்றி கொள் அளவு 4,000 கன அடிக்கு விடக் கூடிய அளவிற்கு அந்தத் தலைப்பை மாற்றிக் கொடுத்தால் கடைநிலைப் பகுதிகளான பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, ஒரத்தநாடு, போன்ற இடங்களில் விவசாயம் செய்ய வசதியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அந்தப் பகுதியில் காட்டாறுகள் அதிகம். அந்தக் காட்டாறுகளில் சிறிய அணைகள் கட்டி கடைமடைப் பகுதிகளுக்கு பாசன வசதி செய்து கொடுக்க முடியும். அந்த அடிப்படையில் பட்டுக்கோட்டை தாலூகாவைப் பொறுத்தவரையில் நசுவினியாறு என்ற ஆற்றில் ஒரு அணை கட்ட ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. மூன்று ஆண்டுகள் ஆகியும் அதன் நிலை எப்படி இருக்கிறது என்பது தெரியவில்லை. ஆகவே அதை





விரைவில் பரிசீலனை செய்து கடைமடைப் பகுதிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க வேண்டுமென்ற நிலையில் அந்த அணையை விரைவாகக் கட்ட ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கண்ணனாற்றில் ஒரு பம்பிங் ஸ்கீம் அமைத்திருக்கிறார்கள். 1963-ல் 14 லட்சம் ரூபாய் அதற்காக அனுமதி செய்து க்ராஷ் ப்ரோக்ராமில் அதையும் சேர்த்து 4,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கத் திட்டமிட்டப்பட்டது. அதன் வேலை துவங்கி ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. அங்கு நடந்திருக்கிற வேலைகளைப் பார்க்கிற நேரத்தில் விந்தையாக இருக்கிறது. பணியாளர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் மட்டும்தான் இந்த 18 மாத காலத்தில் கட்டி முடித்திருக்கிறார்கள். க்ராஷ் ப்ரோக்ராமில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதினால் விரைவில் தண்ணீர் கிடைத்து விடும் என்று அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எண்ணுகிற நேரத்தில் இவ்வளவு மெதுவாக, காலதாமதமாக அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றுவோமானால் அது அந்த மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை விளைவிக்கும் என்பதை மனதில் கொண்டு இதைத் துரிதப்படுத்தி வருகிற ஆண்டிலாவது அவர்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தப்படியாக, அதே கண்ணனாற்றில் இந்த பம்பிங் ஸ்கீமில் தண்ணீர் எடுத்தபிறகு மிகுதியுள்ள தண்ணீர் வடசேரி என்ற கிராமத்தில் ஒரு அணைகட்டி அங்கு 1,500 ஏக்கர்களுக்கு பாசனவசதி செய்து கொடுக்க ஒருதிட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. எம்.ஐ.பி. டிவிஷனில் ரூ 1,16,000-க்கு எஸ்டிமேட் தயாரித்து வேலை துவங்குகிற நேரத்தில் ஜி.எஸ்.ஸி. டிவிஷன் அதை பராமரிப்பதால், எம்.ஐ.பி. டிவிஷன் அந்த வேலையைச் செய்யக்கூடாது என்று ஜி.எஸ்.ஸி. டிவிஷன் மறுபரிசீலனை செய்தார்கள். வருடம் ஒன்று ஆகிறது. அதன் நிலை என்ன என்பது தெரியவில்லை. ஆகவே அதை மீண்டும் பரிசீலனை செய்து விரைவாக அந்தப் பகுதி மக்களுக்கு அந்த அணையைக் கட்டிக் கொடுத்து பாசன வசதியைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில் வடிகால் பிரச்னை டெல்டா பகுதியில் அதிகமாக இருக்கிறது. இரண்டு மூன்று ஆறுகளை நேராக கடலில் கொண்டு விட்டு விட்டால் எளிதில் தண்ணீர் வடிந்து விடும். பாமணி ஆறு, கோரை ஆறு இரண்டையும் தனித்தனியே கடலில் கொண்டு விட்டு விட்டால் தண்ணீர் எளிதில் வடிந்து விடும். பாமணி ஆற்றிலிருந்து கடல் அருகில்தான் இருக்கிறது. அப்படிச் செய்தால் தண்ணீர் வடிவதற்கு சௌகரியமாக இருக்கும். திருத்துறைபூண்டி தாலுக்காவில் கந்தபிரிச்சானுறு தண்ணீரை நேராக கடலில் கொண்டு வடிக்க பல லட்சம் ரூபாய் செலவு செய்து அதற்கு ஒரு ஸைஃபான் கட்டி தண்ணீர் வடிக்க திட்டமிட்டு ஆறு ஆண்டுகள் ஆகின்றன. அந்த ஸைஃபனைக் கட்டி முடித்து விட்டார்கள். ஆனால் அதைத் திறந்து விடவில்லை. அதையும் விரைவில் பரிசீலனை செய்து அதைத் திறந்து விட்டு இந்த வடிகால் பிரச்னைகளைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[16th March 1966

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, the Irrigation Department which is doing useful work is tapping all the sources in the State and has provided irrigation facilities wherever sources are available. In the matter of irrigation, as I have been stressing in the past, all the different departments that are working for maintenance of minor irrigation and medium irrigation sources may be amalgamated and an Irrigation Board may be constituted to control the entire structure of irrigation system.

I would like mainly to deal with the problems which are today prevalent in the border areas on account of the Alteration of Boundaries Act and adjustment of villages between Andhra and Madras. I would like mainly to deal about difficulties that are today being experienced in maintaining certain projects and also about the schemes that are pending. Certain schemes remain to be executed since the concerned papers are kept pending with Andhra Government and unless they give clearance for execution, the projects cannot be started. Regarding Araniar project though major ayacut is in Madras State, the headworks are being maintained by Andhra Government. There has been of late some difficulty in the proper functioning and execution of the project. It was feared recently that the entire project would be breached. Madras Government might write to the Andhra Government to have a joint control over the Araniar Project, in regard to technical matters.

Regarding 'Surutupalli' project, though Madras Government is in charge of ayacut, the headworks are being maintained by Andhra Government. There had been some difficulty in providing water to ryots during season. The Surutupalli project may kindly be taken over by Madras Government in consultation with Andhra Government and maintained solely by Madras Government.

Many schemes are pending with the Andhra Government. Regarding the 'Kushasthali' scheme, the matter is pending with Andhra Government for the past two years to send "no objection". Though the estimates had been prepared and the scheme had been sanctioned by Madras Government, since the headworks are in Andhra, we want clearance from Andhra for execution of these projects. Though as per the 'Pataskar Award' the irrigation source and ayacut must be in one State whenever there is demarcation of boundaries between one State and another yet somehow that aspect has been ignored and the headworks are retained in Andhra, we have not got clearance yet for schemes that are proposed to be executed on the river Kushasthali. Regarding 'Poornimangadu scheme' the papers are pending with Andhra for the last two years. If the ryots approach the authorities in our State, the reply they get is that the papers are pending with the Andhra Government. I appeal to the Madras Government that they should take the initiative in the matter. I request the Hon. Minister for irrigation to personally attend to



16th March 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

these things and request the Andhra Government to give clearance to the above schemes. He sohuld see to it that prompt orders are issued in the matter so that the schemes could be put into execution immediately. With these words, I conclude by speech.

* திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப் பட்டிருக்கின்ற பாசனத்துறை மான்யத்தை நான் வரவேற்கிறேன்.

"பாரி பறித்த பரியும் பழையனூர்க்
காரி அன்றீந்த களைகட்டும்—சேரமான்
வாராய் என அழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர். . ."

என்று ஔவையார் சொல்லியது போல் என்ன தான் மைசூர் மாநிலத்திலிருந்து நீரைக் கொடையாகக் கொடுத்தாலும், வட மேற்கு பருவ மழை, காலம் தாழ்த்தாவது பெய்திருந்த போதிலும், அந்த பருவ மழையின் காரணமாக போதிய அளவில் தண்ணீர் கிடைத்தது என்றிருந்தாலும், கீழ்பவானி அணையில் தண்ணீர் இல்லாதிருந்தால் சோழவளநாடு சோறு உடைத்ததாக இருந்திருக்காது. கீழ் பவானி அணையில் குறைந்த அளவிலாவது தண்ணீர் இருந்ததினால் தான் சோழவளநாடு சோறு உடைத்தகாக ஆயிற்று. இருந்தாலும் இந்த ஆண்டு அனுசரித்த முறையை ஆண்டுதோறும் மாமூலாக கையாளவேண்டாம் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம் கீழ் பவானி ஆயக்கட்டுகள் எல்லாம் வறண்ட நிலைமையில் இருக்கின்றன. அந்தப் பகுதிகள் வறுமை மிகுந்து இருக்கின்றன. ஆகவே வழக்கமாக கீழ்பவானி அணையிலிருந்து தண்ணீரை சோழ மண்டலத்திற்கு கொடுத்துக்கொண்டிருக்காலாம் என்று ஏற்படுத்தி விட்டால் கொங்கு நாட்டிலுள்ள மக்களினுடைய நிலை மிகவும் கஷ்டமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கீழ்பவானி ஆயக்கட்டில் நடைமுறையில் இருக்கின்ற மாற்றுமுறை பாசனம் என்பது மிகவும் அருமையான திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் சென்ற நாலைந்து ஆண்டுகளாக விவசாயப் பெருங்குடி மக்கள் நல்ல முறையில் விவசாயம் செய்து வருகிறார்கள். அது சர்க்காருக்கும் நன்றாக தெரிந்திருக்கும். பயிர்கட்டுப்பாடு என்பதை அறவே எடுத்து விட்டதின் காரணமாக அங்கிருந்த பல தொல்லைகள் ஒழிந்தன. இப்போது விவசாயம் நல்ல முறையில் நடந்து வருகின்றது இப்போது சர்க்கார் திரும்பவும் ஒரு பயிர் கட்டுப்பாட்டை கொண்டு வரப்போவதாகத் தெரிகின்றது. அதாவது இரண்டாம் முறைப்பாசனத்தில் புஞ்சைப்பயிர் தான் வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனால் மீண்டும் விவசாயிகளுக்கு தொல்லை கொடுப்பதாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஐந்து ஆண்டுகளுக்குமுன் பயிர் கட்டுப் பாடு முறையின் காரணமாக, விவசாயிகள் எவ்வளவு தொல்லைபட்டார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியும். அவர்கள் இதற்காக எவ்வளவோ விண்ணப்பங்கள் சர்க்காருக்குக் கொடுக்கிறாக்

கிறார்கள். ஆகவே இப்போதும் அதுபோன்ற பயிர்கட்டுப்பாடுத் திட்டத்தை கொண்டு வரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஐந்து ஆண்டுகளாக கீழ்பவானி அணையிலிருந்து எந்த அளவிற்கு தண்ணீர் விடப்பட்டதோ, அதாவது ஆயக்கட்டுக்களுக்கு எந்த அளவுக்கு தண்ணீர் விடப்பட்டதோ, அதை நிர்ணயம் செய்து, ரிக்கார்ட் மூலமாக நிர்ணயம் செய்து, அந்த அளவில் சிறிதும் குறைக்காமல் கீழ்பவானி ஆயக்கட்டிற்கு தண்ணீர் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கீழ்பவானி ஆயக்கட்டில் புதிய கிணறுகள் வெட்டப்படுவது தடுக்கப்பட்டு வருகிறது. வாய்க்காலிருந்து ஒரு பர்லாங் அல்லது இரண்டு பர்லாங் தூரத்திலிருக்கின்ற இடத்தில் கிணறு வெட்டினாலும் தடுக்கப்படுகிறது. அப்படி வெட்டினால் தண்டத் தீர்வையும் விதிக்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் எல்லாம் கிணறுகள் வெட்டுவதற்காக அரசாங்கத்திலிருந்து ஆக்கமும், ஊக்கமும், கடனும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் கீழ்பவானி பகுதியில் கிணறுகள் வெட்டப்படுவது தடுக்கப்பட்டு தண்டத் தீர்வையும் விதிக்கப்பட்டு வருகிறது. இது கூடாது. இதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கீழ்பவானி திட்டத்தின் கீழ் உரம்பு நீர் 20, 30 ஏக்கர்கள் அளவுக்கு பயன்படக் கூடிய அளவில் ஓடிக்கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்தி கிணற்றில் பாய்ச்சி ஆயில் எஞ்சின் மூலமாக இறைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவதிலும் அனுமதி வழங்கப்படுவதில் சில தடைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதோடு தண்டத் தீர்வையும் விதிக்கப்படுகிறது. இதை எதிர்த்து ஹைக்கோர்டில் பல விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன, ரிட்-களும் போடப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட தொல்லைகளை எல்லாம் சர்க்கார் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஈரோடு தாலூகாவில், தற்போது குரங்கன் பள்ளம், பெரும்பள்ளம் என்ற இரண்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை துரிதமாக முடித்து வருகின்ற இரண்டு மூன்று மாதங்களுக்குள் தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கீழ் பவானியில் தண்ணீர் விட்டுவிட்டால், இந்த இரண்டு பள்ளங்களிலுள்ள வேலைகளும் நடைபெறாது. நீர் ஊற்று வந்து இந்த வேலைகள் தடுக்கப்பட்டுவிடும். ஆகவே இரண்டு மூன்று மாதங்களுக்குள் இந்த வேலையை முடித்துவிட்டால் 6,000 ஏக்கர்களுக்கு பாசன வசதி கிடைக்கும். செலவோ குறைவு தான். முப்பது லட்சம், ஆனால் மக்களுக்கு பெரும்பயன் கிடைக்கிறது. இப்போது இரண்டு கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் சற்று துரிதமாக வேலை நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மொசுக்காடு என்ற இடம், சித்தோடுக்கு அருகாமையில் இருக்கிறது. இங்கு சுமார் 350 ஏக்கர் விடப்பட்டிருக்கிறது. இதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று பல





ஆண்டுகளாக, அங்குள்ள மக்கள் வாய்மொழி மூலமாகவும், விண்ணப்பங்கள் மூலமாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் கீழ்பவானி ஆயக்கட்டில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு தொட்டிபாளையம் என்ற இடத்திலும் 400, 500 ஏக்கர் சேர்க்கப்படவில்லை. இந்த இடங்களில் உரம்புத் தண்ணீர் தான் வந்து கொண்டிருக்கிறது. இந்த இடத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

**திரு. நா. இராசாங்கம்:** பெருமதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் துறை மான்யத்தின் மீது என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற ஆசைப்படுகிறேன். சிதம்பரம் தாலூகாவில் கொள்ளிடத்திலிருந்து சிதம்பரத்திற்கு தண்ணீர் வருகிற அணையின் அருகில் ராஜன் வாய்க்கால் இருக்கிறது. இதிலிருந்து தஞ்சாவூர் பகுதிகளில் பாய்வது போல் இங்கு பாய முடியாத நிலை இருக்கிறது. காரணம் இங்கு 2,000 க்யூசெக்ஸ் தண்ணீர் பாயக்கூடிய நிலை தான் இருக்கிறது. இதற்கு பொறி இயல் வல்லுநர்கள் சொல்லுகின்ற கருத்து என்னவென்றால் 2,000 க்யூசெக்ஸ் என்றிருப்பதை 4,000 க்யூசெக்ஸ் என்ற அளவுக்கு மாற்றினால், வீணாகக் கடலில் போய்விழுகின்ற கொள்ளிட தண்ணீர், வெள்ளாற்றுத் தண்ணீர், பரவனாற்றுத் தண்ணீர் இவைகளை எல்லாம் தடுத்து, பாசனத்திற்கு கொடுக்கலாம் என்பதை சர்க்காருக்குத் தெரிவித்திருப்பதாக தெரிகிறது. இந்தத் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டால் தென் ஆர்க்காடு மாவட்டமும் தஞ்சாவூர் மாவட்டத்தைப் போன்று உணவு உற்பத்தி பெருக்குவதில் முன்னணியில் நின்றுகொண்டிருக்கும் என்பதைத் தெரிவித்து, இதை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கொள்ளிடத்திலிருந்து வருகின்ற தண்ணீர் வீராணத்து ஏரியின் வழியாக பெருமாள் ஏரியில் வந்து விழுகிறது. இதை இன்னும் வடக்கே கொண்டு போகலாம் என்று எஞ்ஜினியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்கு பெருமாள் ஏரியை இன்னும் அகலப்படுத்தி தூர் எடுக்கவேண்டும்; இதைப்பற்றி இந்த மன்றத்தில் நான் பல முறை எடுத்துச்சொல்லியிருக்கிறேன். அவ்விதம் பெருமாள் ஏரியை தூர் வாரி அகலப்படுத்தினால் அங்கு இருக்கும் தண்ணீரை வடக்கே கொண்டு போவதற்கு நல்லதொரு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கடலூர் தாலுகாவில் ஏரிகள் அதிகமாக இருக்கின்றன. என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு கிராமத்திலும் ஏரி இருக்கும். மேலக்குளக்குடியிலிருந்து எடுத்துக்கொண்டால், பார்வதிபுரம் வடக்கூர், சோரார்க்குப்பம், விழிப்பள்ளம், கருங்குழி, குறிஞ்சிப்பாடி, ஆயக்குப்பம், பேத்தநாயக்கன்குப்பம், கஞ்சமநாதன்பேட்டை, வழுதலம் பட்டு இப்படியாக இந்த ஊர்களில் எல்லாம் ஏரிகள் இருக்கின்றன. ஒரு தடவை தண்ணீர் தங்குகின்ற முறையில் இந்த ஏரிகளை தூர் வாரி கொடுத்தால், மழை காலத்தில் தண்ணீர்

வந்து தேங்கி, இரண்டு மாத காலத்திற்குப் பாசன வசதி கிடைக்கும். இதைப்பற்றி நான் அவ்வப்போது சொல்லிக்கொண்டு தான் இருக்கிறேன். எப்படியாயினும் பெரிய திட்டங்கள் என்றில்லாவிட்டாலும், அதாவது பல லட்சக்கணக்கான ரூபாய் களைப் போட்டு திட்டங்களை நடத்துவதற்கு அரசாங்கம் அஞ்சினா லும் 5,000 ரூபாய் அளவிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் வரையிலும் குறைந்த பட்சம் 5,000 ரூபாய், அதிகபட்சம் 25,000 ரூபாய் வரை யிலும் ஆகின்ற செலவின் அடிப்படையில், ஒவ்வொரு கிராமத்தி லுள்ள ஏரியையும் சீர்படுத்தவேண்டும், இதை அவசரமான நடவடிக்கை என்று எடுத்துக்கொண்டு வேலை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெருமாள் ஏரியிலிருந்து சிறுபாலையூர் வழியாக ஒரு வாய்க்கால் இருக்கிறது. 6,000, 7,000 எக்கர்களுக்கு உதவுகிற வாய்க்கால் அது. கடலுக்கு அருகில் 1½ மைல் தூரத்தில் பாய்வதற்கு வசதி அற்றுப் போய்விடுகிறது. பரவனாறு குறுக்கிட்டு, உப்பனாறு குறுக்கிட்டு உப்புத் தண்ணீரோடு கலந்து விடுகிறது. சிறுபாலையூர் ஏரியிலே ஒரு அணையைக் கட்டிக் கொடுத்தால் 6,000 ஏக்கர்களுக்குச் சுலபமாகப் பாசன வசதி செய்து கொடுக்க முடியும். அந்தத் திட்டத்தை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதைப் பரிசீலித்து அமைச்சர் அவர்கள் இலாகாவுக்கு அதை எடுத்துக்கொள்ள உத்தரவிடுவார்கள் என்று நம்புகிறேன்.

பெருமாள் ஏரிக்குக் கீழே ஆண்டார்முள்ளிப் பள்ளம் வாய்க் கால் இருக்கிறது. அதிலே ஒரு பகுதித் தண்ணீர் கடலுக்குப் போய்விடுகிறது. அங்கே ஒரு சிறு அணைக்கட்டுக் கட்டி தண்ணீரைப் பாயவிட்டால் 500 ஏக்கர் குறைந்த பட்சம் சாகுபடி செய்யலாம். அந்தத் தண்ணீர் இப்போது வீணாகப் போகிறது.

இந்தக் கருத்துக்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு, இவைகளை விரைவுபடுத்தி, உணவு உற்பத்திக்கு வேண்டிய முயற்சிகளில் ஈடுபடவேண்டுமென்று. . . . (மணியடிக்கப்பட்டது)

* **திரு. செ. சதாசிவம்** : மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான நீர்ப்பாசன மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சென்ற ஆண்டிலே பருவ மழை தவறி, சுமார் 40 அல்லது 50 சதவிதம் அளவிலே தண்ணீர் வரத்து குறைந்திருந்தாலும், 85 சதவித அளவிலே நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்த இந்த இலாகாவுக்கும், இதை நிர்வகித்து வந்த அமைச்சர் அவர்களுக்கும் நன்றி செலுத்தாமல் இருக்க முடியாது. நமக்குக் கொடுக்கப் பட்டுள்ள இந்தக் குறிப்பிலே கூட, குறைந்த அளவிலே உள்ள நீரை செம்மைப்படுத்தி நீர்ப்பாசன வசதி செய்ய முற்படுவோ மானால் இன்னும் அதிக பாசன வசதி செய்ய முடியும் என்ற கருத்தையும் காண்கிறோம். இதே கருத்தை நான் 1957-வது வருஷத்திலிருந்து வலியுறுத்தி வந்திருக்கிறேன். ஏராளமான தண்ணீர் வீணாகப் போகிறது. இதைத் தகுந்த முறையில் பயன் படுத்த வேண்டு மென்று கூறிக்கொண்டு வந்திருக்கிறேன். இந்த ஆண்டிலே இந்தக் கருத்து நிலவுவது என் போன்ற பிற்பட்ட





வறண்ட பகுதி மக்களுக்கு ஓரளவு வாய்ப்பு அளிக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, அமராவதி கடைக்கோடியில் இருக்கும் எங்கள் பகுதி மிகவும் பிற்பட்ட பிரதேசம் என்பதை அமைச்சர் அவர்களும் இலாகாவினரும் உணர்வார்கள். அமராவதி ஆற்றிலே பெரும் பகுதி பாசன வசதி செய்து வருகிற இந்த நேரத்தில் அங்குள்ள சிறு குறைகளையும் கவனிக்கவேண்டும். குறிப்பாக இந்த ஆண்டு, ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கா வேலைகள் என்ற தலைப்பிலே, அமராவதி வாய்க்கால் மராமத்து செய்கிற இனத்தில், கோயம்புத்தூர் ஜில்லா வாய்க்கால்கள் மராமத்து செய்யப் போவதாகக் காண்கிறேன். திருச்சி ஜில்லாவில் அமராவதி நதி கடைக்கோடியில் இருப்பதால் இப்பகுதியில் முதலில் மராமத்து செய்யவேண்டுமென்று நான் பல முறை கூறியிருக்கிறேன். ஒரு அணைகட்டின் கடை கோடியில் இருக்கக் கூடிய வாய்க்கால்களை நல்ல முறையில் மராமத்து செய்து கொடுத்தால் கடைக்கோடி விவசாயிகளைக் காப்பதாக ஆகும். அத்துடன் அந்தத் திட்டப் பகுதி நீர்ப்பாசன வசதியும் செம்மைப்படும். ஆகவே, முதன்மை யாக அமராவதி ரீ-மாடலிங் ஸப்-டிவிஷனின் எஸ்டிமேட்டு படி கரூர் தாலூகாவிலுள்ள வாய்க்கால்களை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதியில் பாசனத்திற்கு தண்ணீர் போதவில்லை என்ற நிலைமை மாறி இப்போது உபரித் தண்ணீர் இருக்கிறது என்ற நிலைமைக்கு வந்திருக்கிறோம். இந்த நிலையைப் பார்க்கும்போது கனம் அமைச்சர் அவர்களுக்கும் நன்கு புரியும், அமராவதியில் உள்ள தண்ணீரை உபயோகிக்கும் முறையில் சிறு சிறு திட்டங்கள் மூலமாக, பயன் அளிக்கும் திட்டங்களை வகுத்துக் கொடுத்து, வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். குறிப்பாக, பம்பிங் மூலமாக சிறு சிறு விவசாயிகள் மிகத் திறமையாக பம்ப்செட் போட்டு 20,000, 30,000 ரூபாய் அளவில் 10 ஏக்கர், 15 ஏக்கர் என்ற அளவில் விவசாயம் செய்து வருகிறார்கள். அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். 2-10-1961-க்கு முன்பு இருந்த இந்தத் திட்டங்கள் எல்லாம் ரெகுலரைஸ் செய்யப்பட்டு, கலெக்டர் அவர்களே பர்மிட் வழங்கலாம் என்று ஜி.ஓ. இருக்கிறது. அதற்குப் பிறகு வைத்திருக்கிற விவசாயிகளுடைய நிலைமை மோசமாக இருக்கிறது. இது வரையில் உள்ள விவசாயி களுக்கு இந்தத் திட்டத்தை ரெகுலரைஸ் செய்து உடனடியாக பர்மிட் வழங்கி மின்சார வசதி செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதிக்கு வந்து பார்த்திருக்கிறார்கள். நீர்ப்பாசன இலாகா தலைமை என்ஜினியர் அவர்களையும் கூட அழைத்து வந்து அமைச்சர் அவர்களும், என்ஜினியரும் மறுபடியும் வந்து பார்த் தால் நிச்சயமாக இதை அனுமதிப்பார்கள் என்று தாழ்மை யுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. என்னுடைய பகுதியில் அமராவதி கீழ் வலது புறத்தில் நீண்ட தூரத்தில் ஒரு வித நேரடி பாசனமும் இல்லாது இருக்கிறது. கரூர்தாலுக்காவில் உள்ள வெங்கக்கல்பட்டி

அணையிலிருந்து ஒரு வாய்க்கால் வெட்டினால் அந்தப் பெரும் பகுதியிலும் பாசனம் செய்ய முடியும். இத்திட்டம் முன்பே பரிசீலிக்கப்பட்டது. அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும்.

அதோடு அமராவதி அணைக்கட்டானது பெரும்பகுதி மழை காலத்தில் ஒரு நாளில் பெய்யும் மழையிலேயே தண்ணீர் வழிந்து ஓடும் நிலைமை இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து மேலோ அல்லது கீழோ வேறு ஒரு அணை கட்ட முடியுமா என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி உப நதிகளான குடகனாறு, நங்காஞ்சி ஆகியவை வறண்ட ஆறுகளாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் கிணறு வெட்டுவதற்குத் தடை இருக்கிறது. நிச்சயமாக அந்தத் தடையை நீக்கவேண்டும். அப்போது தான் வறண்ட பகுதி விவசாயிகள் விவசாயத்தைப் பெருக்க முடியும். நம் விவசாய இலாகா மூலமாக சென்ற மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலே 50 ஆற்றுப்பாசன இறைவை என்ஜின்கள் அமைக்கும் திட்டங்கள் தீட்டுவதாக இருந்தார்கள். ஆனால் அந்தத் திட்டத்திற்கு பயன் இல்லை என்று கருதுகிறார்கள். என்னுடைய பகுதியில் அமைச்சர் கூட வந்து பார்த்திருக்கிறார். 400 ஏக்கருக்குத் திட்டம் போட்டிருக்கிறோம், நிச்சயமாக வெற்றி கிடைக்கும் என்று அவரும் உணர்ந்திருக்கிறார். அதனால் அந்த மாதிரித் திட்டங்களை எங்கள் பகுதியில் நிறைவேற்ற முன்வரவேண்டும். உடனடியாக தலைமை என்ஜினியரும் அமைச்சர் அவர்களும் வந்து நேரில் இவற்றைப் பார்வை இடவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு என்னுடைய பகுதியில் உள்ள சிறு சிறு ஓடைகளைத் தேக்கி செக் டாம்ஸ் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அதற்குத் தடையாக இருப்பது பி. டபிள்யூ. டி இலாகாதான். செக் டாம்ஸ் போடப்பட்டால் நேரடியாகப் பாய்ச்சல் இல்லை என்று, அப்படிம் பாய்ச்சல் இல்லாத திட்டங்களை மேற்கொள்ள முடியாது என்றும் விதியை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சர்க்காருடைய திட்டங்களுக்குள்ளேயே முரண்பாடு இருக்கிறது. ஏராளமான புது கிணறுகள் தோண்டும்போது, (ஸம்ஸாயில் வாட்டர்), ஊற்றுத் தண்ணீர் மட்டம் அதிக ஆழத்திற்கு கீழ்போய்விடுகிறது. ஸ்ப்ரிங்குக்கு வேண்டிய திட்டம் போடவேண்டுமென்றால் செக் டாம்களை சர்க்கார் செலவிலேயே அமைக்க, பி.டபிள்யூ.டி. யிலேயே வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கரூர் பகுதியில் உள்ள சாந்தப்பாடி கிராமத்தில் சண்முக சிற்றாற்றின் குறுக்கே ஒரு குளம் கட்டுவதாக எஸ்.எம்.ஐ.பி.-ல் நீண்டநாட்களாக இருக்கிறது. அந்தக் குளம் வெட்டும் வேலை ஆரம்பித்துக் கொள்ளப்படவில்லை. அதை அடுத்த ஆண்டிலாவது தயவு செய்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நொய்யல் ஆற்றில் அணை கட்டுவதாக இருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதன் மூலமாக 20,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்று வலியுறுத்தப்



பட்டிருக்கிறது. அதைப் பற்றி எந்தவிதமான தகவலும் தெரிவிக்கப்படவில்லை. அதைப் பற்றி மறு பரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது அதைச் சேர்க்க வழி வகை செய்ய வேண்டுமென்று கூறி, லோயர் பவானி தண்ணீரை எங்கள் பகுதிக்கும் கொண்டு வர வழிவகை செய்யவேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. தா. சின்னசாமி:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது எங்கள் தரப்பிலே உள்ளவர்கள் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

'ஏதும் அறியேன் பராபரமே' என்ற முறையில் கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் நீர்ப்பாசனம் என்பது சொப்பனத்தில் கூட காண முடியாது இருக்கிறோம். அந்தப் பகுதியிலே கோமுகி நதி அணை என்று ஒரு அணையை மண் அணையாகக் கட்டி, பொதுப் பணித் துறை அமைச்சரான திரு. ராமையா அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் வந்து திறப்பு விழா நடத்தினார்கள். அணைக்கட்டின் கீழ்ப் புறத்தில் எந்த இடத்திலும் பாய்ச்சல் இல்லாமல் சங்கராபுரம் பகுதி வரையில் இருக்கிறது. கள்ளக் குறிச்சி வட்டாரத்தில் சின்னசேலம், குகையூர் வரையில் இறைத்தே பிழைக்க வேண்டியிருப்பதால் சில கோடி ரூபாய்கள் பணத்தை ஒதுக்கி, தென்புற அணையையொட்டி கால்வாய் வெட்டி தண்ணீரைக் கொண்டுபோனால் லட்சக் கணக்கான ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.
அதே நோத்திலே இறைத்துப் பிழைக்கவேண்டும் எங்களுடைய 10-3 a.m.
பகுதியிலே. அங்கே ஏரிகளெல்லாம் சிறு ஏரிகளாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் பஞ்சாயத்து ராஜ்யம் என்று சொல்லி பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத்திருப்பதால், எந்த ஏரியும் மராமத்து செய்யப்படவில்லை, ஆழப்படுத்தப் படவில்லை. பி.டபிள்யூ.டி. மூலம் பெரிய ஏரிகளை 200, 300 ஏகர்கள் ஆயக்கட்டு உள்ள ஏரிகளை ஆழப்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு கூட பின் மழை கொஞ்சம் பெய்தால் கூட சின்ன சேலம் ஏரியில், 360 ஏகர் ஆயக்கட்டு உள்ள ஏரியில் ஒரு மாதத்திற்கு கூட தண்ணீர் வரவில்லை. அங்கு வரவேண்டிய கால்வாய் இன்னும் வெட்டப்பட வில்லை. ஆகவே, வெகு விரைவாக இதைக் கவனித்து, அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அங்கு மக்கள் இறைத்து பிழைக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். விவசாயிகள் மின்சாரம் வேண்டும் என்று விரும்பிக் கேட்டால், ஏழை எளிய மக்கள் விவசாயிகள் தனித்தனியாக அந்த அலுவலர்களுக்கு ஏதோ நிதியைக் கொடுக்கவேண்டும் என்ற முறை இருக்கிறது. அதை சர்க்கார் கவனித்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதன் காரணமாக எங்கள் பகுதியிலே இருக்கிற ஏழை ஹரிஜனங்களுக்கு, கிராமப்

பகுதியில் இருப்பவர்களுக்கு பிழைப்பதற்கே ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. விவசாயத்திற்குத் தகுதி இல்லாமல் இருப்பதினால், லாண்டு காலனைஸேஷன் ஏற்படுத்துவதன் மூலம், அவர்களெல்லாம் 10 கெஜம், 15 கெஜம் ஆழம் வெட்டியும் உள்துறை அமைச்சர் அவர்கள் ஆரம்பம் செய்துவைத்த விவசாயத் திட்டம் எந்தப் பகுதியிலும் செயல்படவில்லை. அவர்கள் கேணிகளை ஆழப்படுத்துவதற்கு வேண்டிய உதவி செய்யவேண்டும். ஹரிஜனங்களுக்கு வேண்டிய மின்சார பம்பு செட்டுகளைக் கொடுக்கவேண்டும் என்று நான் சர்க்காரை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் என்னுடைய பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு மின்சார வசதியும், கேணி வெட்ட லோனும் இனாம் மான்யமாகக் கொடுக்காது போனாலும், 10 ஆண்டுகளுக்கு தவணைக் கடனாகவாவது கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பழைய கேணி வெட்டுவதற்கு உதவித் தொகை கொடுக்க முடியாது என்று பஞ்சாயத்து யூனியன் தள்ளிவிடுகிறார்கள். வீட்டிற்கு வேகாத தண்ணீர் உதவாது என்று சொல்லுவார்கள். புதிய கேணிகளை வெட்டுவதற்கு முன்பு பழைய கேணிகளை ஆழப்படுத்தவேண்டும். புதிய கேணிகளை வெட்டுவதற்கு ரூ. 2,000, 3,000 கொடுக்கும்பொழுது, பழைய கேணிகளை ஆழப்படுத்துவதற்கு ஏன் ரூ. 500, 1,000 கொடுத்து உதவக் கூடாது. அம்மாதிரி கடன் உதவி அளித்தால் விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்வார்கள் என்று இந்த அரசாங்கத்திற்கு நான் தெளிவுபடுத்துகிறேன்.

கனம் உதவி சபாநாயகர் எங்களுடைய பகுதியில் இருந்தும் கோமுகி நதித் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஜனங்கள் இதனால் ரொம்பவும் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கோமுகி நதி அணையைக் கட்டுவதற்கு ரூ. 4 கோடி ஒதுக்கி. . . . (மணியடிக்கப்பட்டது)

* **திரு. சி. மாணிக்கம்** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பாக கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும், நான்கு ஆண்டுகளாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். குடிதண்ணீர் வசதியைப்பற்றிச் சொல்லியும் எதுவுமே காதில் போட்டுக்கொள்ளவில்லை. எதையுமே எடுத்துப் பார்க்கவில்லை. நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் நாங்கள் சொன்னதெல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதினால் போலத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது. நான் இதுபற்றி வருத்தப்படுவதோடு ரொம்பவும் வெட்கப்படுகிறேன். சேரியிலே பார்த்தால் சேரி மக்களெல்லாம் குடி-தண்ணீர் இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். பல முறை இதுபற்றி எடுத்துச் சொல்லியும் ஒன்றும் பலன் இல்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பல இடங்களில் அணைக்கட்டுகள் கட்டவேண்டியிருக்கிறது. சிறு பாசன ஆதாரங்கள் இருக்கின்றன. சிறிய கால்வாய்கள் இருக்கின்றன. அந்தக் கால்வாய்களில் 'வுட்' அணைகளை கட்டிக்கொடுத்தால்





விவசாயிகளுக்கு சாதகமாக இருக்கும். சில 'வுட்' அணைகளில் தண்ணீர் நின்றால் பக்கத்துக் கிணறுகளுக்கும் உபகாரமாக இருக்கும் விவசாயிகளுக்கு நல்ல சேவை செய்த மாதிரி இருக்கும். குறிப்பாகச் சொல்லப்போனால் முள்ளிக்காட்டு அணையைப் பற்றி நான் சொன்னேன். முத்துணையூர் ஏரியைப்பற்றி நான் சொன்னேன். பில்லுபுரித்தி, கருங்குரிப்பட்டி, அருர் ஏரிகளைப் பற்றி நான் சொன்னேன். கல்லாறு என்று ஒரு ஆறு இருக்கிறது. அதில் ஒரு அணைக்கட்டு கட்டவேண்டும் என்று சொன்னேன். இத்தனை சொல்லியும் ஒன்றும் பலன் இல்லை. டி.டி.ஸி. மீட்டிங்களிலும் சொல்லியிருக்கிறேன். சட்ட மன்றத்திலும் சொல்லியிருக்கிறேன். எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் இதுபற்றி மிகவும் வருத்தப்படுகிறேன். ஒரு காகம் இருக்கிறது. அது தன்னுடைய குஞ்சுக்கு எந்தவிதமாக இரை கொண்டுவருகிறதோ, அம்மாதிரி கேட்கிறேன், எங்களுக்கு தாகத்துக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும். வேதனைப் படுகிறோம், குடி தண்ணீர் இல்லை, வெகு சிரமப்படுகிறோம். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்** : கனம் சபாநாயகர் அவர்களே, என் தொகுதியில் சேலம் ஜில்லாவில் ஏற்காடு-சேர்வராயன் மலைஅடிவாரத்தில் மழை பெய்தவுடனேயே டேனிஷ் பேட்டைக்கு பக்கத்தில் இருக்கும் காடையாம்பட்டி என்ற ஊரில் 4 கெஜம் தண்ணீர் வந்துவிடுகிறது. பல முறை இங்கே ஒரு அணை கட்டவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். டேனிஷ் பேட்டைக்குப் பக்கத்தில் அந்த அணையைக் கட்டி தண்ணீரை தேக்கி வைத்து, விவசாயத்திற்கு விட்டால் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும். சேர்வராயன்மலை அடிவாரத்தில் குடும்பப்பட்டி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. போன வருஷம் இதைப்பற்றி பேசியிருக்கிறேன். அங்கே மழை பெய்தால் ஊரையே மழை அடித்துக்கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறது. அங்கே ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றின் கிழக்குப் பகுதியிலே ஒரு அணையைக் கட்டி, தண்ணீரைத் தேக்கி, தண்ணீர் பயிரை அழிக்காமல் செய்து விவசாயத்திற்கு தண்ணீர் விட்டால், அந்தக் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு நல்ல வசதி ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பனைமரத்துப்பட்டி என்று ஒரு ஏரி இருக்கிறது. ராசிபுரத்திற்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக பம்பு செட்டுகள் புதைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் தண்ணீர் ராசிபுரம் போய்ச்சேரவில்லை. தண்ணீரை எங்கிருந்து கொண்டுவருவது என்பது பற்றி நான் முன்பே சட்டசபையில் பேசியிருக்கிறேன். சல்லூத்து கிராமத்தில் ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றுத் தண்ணீர் பாரெஸ்டில் 3 மைல் தூரம் ஓடி வீணாகப் போகிறது. சல்லூத்துக் கிராமத்திலிருந்து கம்பம்பட்டி கிராமம் வரையில் ஒரு கால்வாய் வெட்டி, கால்வாய் ஒரு மைலுக்குள் தான் இருக்கும். அந்தத் தண்ணீரை தும்பம்பட்டி கிராமத்திற்குக் கொண்டு வந்து காட்டாற்றில் விட்டால், பனைமரத்துப்பட்டி ஏரிக்குத் தண்ணீர்

*[திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்]* [16th March 1966

வரும். குடி தண்ணீர் கிடைப்பதற்கு ஜனங்களுக்கு உதவியாக இருக்கும். அமைச்சர் அவர்கள் இதை உடனே கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில் சேர்வராயன் மலை அடிவாரத்தில் பூமானூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. மஞ்சவாடிக் கணவாயிலிருந்து ஒரு ஆறு வருகிறது. மழை பெய்தால் உடனே தண்ணீர் வந்துவிடுகிறது. பூமானூரில் ஒரு ஆறு வருகிறது. மஞ்சவாடியில் ஒரு ஆறு வருகிறது. மழை பெய்தால் ரோடுக்கு வர முடியாமல் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அடிவாரத்தில் ஒரு அணையைக் கட்டி தண்ணீரைத் தேக்கினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அங்கு 10, 20 கிராமங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் விவசாயத்திற்கு தண்ணீர் விட்டால், நல்ல வசதி ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதோடுகூட இன்னும் அனுதூரத்து மலை, கல்வராயன் மலை, கீரைப்பட்டி, புழுதிக்குட்டை, புங்கமடுவு ஆகிய கிராமங்களில் மழை பெய்தால் தண்ணீர் வருகிறது. அங்கே போலூரிலிருந்து ஒரு ஆறு வருகிறது. போலூருக்கு இரண்டு, மூன்று ரோடுகள் போகின்றன. அடிவாரத்தில் ஒரு அணையைக் கட்டி, தண்ணீரைத் தேக்கினால், விவசாயிகள் மிகவும் பலன் அடைவார்கள். . . . (மணி அடிக்கப்பட்டது)

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சரால் கொண்டுவரப்பட்டுள்ள மானியங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையில், இருக்கக் கூடிய தண்ணீரையெல்லாம் எங்கெங்கெல்லாம் வசதி செய்து கொடுக்க முடியுமோ, அங்கெல்லாம் செய்து கொடுத்து 94 சத விகிதம் வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி 94 சத விகிதம் வசதி செய்துகொடுத்து, 20 லட்சம் ஏக்கரா நிலங்களுக்கு மேல் பாசன வசதிகள் பெற்று இருக்கின்றன. அதற்காக இந்த அரசாங்கத்தையும், அமைச்சரையும்—கட்சிக்காக, கட்சி கட்சி என்று இங்கே எப்படிப் பேசினாலும்—வெளியிலே இருக்கும் மக்கள் நிச்சயமாக கிராம மக்கள் விவசாய மக்கள் பாராட்டுகிறார்கள், வரவேற்கிறார்கள், (குறுக்கீடு) இந்தத் திட்டங்களைப் போடுவதற்காக.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இந்த டிபார்ட்மெண்டை எடுத்துக்கொண்டாலும், அமைச்சரவையை எடுத்துக்கொண்டாலும், சாத்தியமான திட்டங்களை, லாபம் வருகிறதா, நஷ்டம் வருகிறதா என்று பார்த்தாலும், நஷ்டம் வரும் என்று இருந்தாலும், மக்களுடைய நலனுக்காக வென்று, அந்த அடிப்படையில் காரியங்களைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். கையாலாகாதவர்கள் டிபார்ட்மெண்டைப் புரிந்து கொள்ளாமல், காரியத்தைச் செய்வதற்கு முடியாமல், இங்கே வந்து குறை கூறினால் அது நல்லதல்ல. பருவ மழை தவறியதனால் . . .



16th March 1966]

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் ,** சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், "கையாலாகாதவர்கள்" என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களே, அது இந்தச் சபைக்கு உகந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** இந்தச் சபையிலே பல கனம் அங்கத்தினர்கள் இம்மாதிரி உபயோகிக்கிறார்கள். அம்மாதிரி வார்த்தைகளை உபயோகிக்காமல் இருக்கலாம். ஆனால், அது சபையின் கௌரவத்திற்கு உகந்தது அல்ல என்று சொல்லமாட்டேன்.

SRI K. T. KOSALRAM : Sir, it is not an unparliamentary word.

MR. DEPUTY SPEAKER : Yes, it is not an unparliamentary word.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தென்மேற்குப் பருவ மழை தவறியதால், வைகையில் அதிகம் தண்ணீர் இல்லாமல் இருந்தும் நான்கு நாளைக்கு ஒரு முறை என்று தண்ணீர் கொடுத்து விவசாய வளர்ச்சியை அடைந்திருப்பது, இலாகாவின் திறமையைக் காட்டுகிறதா அல்லது இலாகாவின் திறமையின்மையைக் காட்டுகிறதா என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையில், எந்த எந்த அளவிற்கு மக்களுக்கு நலன் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு நல்ல முறையிலே செயலாற்றியிருக்கிறார்கள். இருந்தாலும் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றைச் சொல்ல வேண்டும்.

எங்கள் பகுதியில், என் தொகுதியில் கூட பல திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால், இன்னும் மஞ்சள் ஓடைதிட்டம், நிலக்கோட்டைத் தாலுக்காவைச் சேந்தது, இன்னும் செயல் படுத்தப் படவில்லை. திருச்சியில், பிப்ரவரி மாதம் 16-ம் தேதி எஸ்.இ. ஆபீசில் பார்த்தேன். மேலே அனுப்பிவிட்டதாகச் சொன்னார்கள். ஆகவே, அந்த மஞ்சள் ஓடை ஸ்கீமையும் சாங்ஷன் செய்ய வேண்டும். அதோடு வாடிப்பட்டி யூனியனில் பழனி ஆண்டவர் ஓடைத் திட்டம் இன்னும் செய்யப்படவில்லை. சிறுமலைத் திட்டம் இன்னும் சாங்ஷன் செய்யப்படவில்லை. இவற்றைச் சற்றுப் பார்த்து, இந்த அசெம்பிளி முடிவதற்கு முன்னதாக சாங்ஷன் செய்து கொடுத்தால், அந்த மக்கள் சார்பில் அமைச்சருக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டவளாக இருப்பேன்.

அடுத்து, பெரியாறு பகுதியில், பல ஆண்டுகளாகக் கிணறுகள் வைத்திருந்தும், தண்ணீர் பாசனத்திற்குக் கொடுக்கிறோம். ஆனால், மழை இல்லாத காலங்களில், அல்லது பெரியாற்றில் தண்ணீர் இல்லாத காலங்களில், பாசன வசதி செய்து கொடுக்க மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, பெரியாற்றுப் பகுதியில் உள்ள கிணறுகளில் பம்பு செட்டுகள் என்று ஆர்டர் போட்டு இருந்தும் கூட, அது நடைமுறைக்குக் கொண்டு வந்து அமல் படுத்தப் படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். அந்தப் பகுதி மக்கள்

தண்ணீர் இல்லாத போது, கிணறுகளை உபயோகிக்க முடியும். ஆகையினால், இதைப் பரிசீலித்து, தண்ணீர் இல்லாத காலங்களில், கிணறுகளில் பம்புசெட்டுகள் வைத்துக்கொள்ளலாம் என்று பர்மிஷன் கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டில் இருக்கும் பெரிய கண்மாய்களில் மணல் மேடிட்டுத் தூர் எடுக்க முடியாத நிலை இருக்கிறது. குறிப்பாக என்னுடைய பகுதியில், மேலக்கால் கண்மாயில் 6, 7 ஆண்டுகளாக எஸ்டிமேட் போட்டு இருந்தும் வேலை சாங்ஷன் ஆகாமல் இருக்கிறது. அதில் துரிதமாக நடவடிக்கை எடுத்தால், தண்ணீரை தேக்கி வசதி செய்ய முடியும்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். அது பெரிய பிரச்சினை; அதைப் பற்றி பல முறைகள் சொல்லியிருக்கிறேன். சட்டமன்றத்திற்கு வந்து கடந்த ஒன்பது ஆண்டுகளாகச் சொல்லிவருகிறேன். நிலக்கோட்டைப் பகுதியில் தன்னிச்சைப் பகுதியில், இரு போகச் சாகுபடி செய்து வருகிறார்கள். தீர்வையும் செலுத்துகிறார்கள். ஆனால், அது ஒரு போக சாகுபடி என்று ரெகார்டில் இருக்கிறது. அதை மாற்றி, அந்த நிலங்கள் இரு போக சாகுபடி செய்யப்படுபவை என்று உத்தரவு போட்டால், அவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் மனதில் வைத்து, அந்த வகையில் அந்த மக்களுக்கு நிவாரணம் தேடித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது.) வைகை நதியில், ஏதோ புதுத் திட்டம் கொண்டுவரப் போகிறார்கள் என்று தெரிகிறது. கொண்டு வாருங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. வரவேற்கிறோம். ஆனால், நிலக்கோட்டை வட்டாரத்து மக்கள் என்ன பாவம் செய்தார்களோ என்று நினைக்கக்கூடிய அளவில் அவர்களுக்கு வசதிகள் கிடைப்பது இல்லை. திருமங்கலத்திற்குக் கொடுக்கிறோமே, அதே போல இங்கேயும் கொடுக்க வேண்டும். 10,000 ஏக்கரா நிலம் நலன் பெறும். அந்த மக்கள் இரண்டு மடங்குத் தீர்வை வேண்டுமானால் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடைசியாக வெல் இர்ரிகேஷன் பற்றி—ஒரே ஒரு நிமிஷம். (மணியடிக்கப்பட்டது.)

* திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பாசன மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நீர்ப் பாசனம் சம்பந்தமாக சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்தில், விவசாயக் கருத்தரங்கு ஒன்று நடத்தி, அந்த அரங்கிலே பலர் அபிப்பிராயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை அரசாங்கம் எந்த அளவுக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது, எந்த அளவுக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப் போகிறார்கள் என்பது இந்த மானியம் சம்பந்தப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய முறையில். தண்ணீர் பற்றாக் குறையினால் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதுபற்றி எல்லா கனம் அங்கத்தினர்களும் பேசியிருக்கிறார்கள். அதற்கு காரணம் ஒன்று சொல்லப்படுகிறது. விவசாயத்திற்கு ஜூன் மாதத்திலேயே, பழக்கத்திற்கு மாறாக, தண்ணீர் திறந்துவிட்டதன் காரணம்தான்





என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இம்மாதிரி தண்ணீர் குறைவாக இருக்கிற போது தண்ணீர் திறந்து விடவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு நிலைமை எப்படி இருக்கிறது என்பது பற்றி பெரிய அச்சம் இருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய தண்ணீரும் கரும்புக்குத் திறந்துவிடப்பட்டு, பாய்ந்துகொண்டு இருக்கிறது என்கிற தகவல் கிடைத்திருக்கிறது. கரும்புப் பயிருக்கு, இருக்கும் தண்ணீரை விடவேண்டிய அவசியம் இல்லை. கரும்பு விவசாயத்திற்குக் கிராமங்களில் இருக்கும் கிணறுகளிலிருந்து அல்லது புதிதாகக் கிணறுகள் தோண்டி தண்ணீர் கொடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என் தொகுதியில் வடவாறு பாசனத்தை விரிவுபடுத்தி திருமகோட்டை, பாலையகோட்டைப் பகுதியில் இருக்கும் கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கப்படவேண்டும், இந்த கோரிக்கையை பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம். ஆனால் அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாமல், என்ன காரணமோ நிராகரிக்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் தெரியவில்லை. இந்த வேலைக்கு அதிக ரூபாயும் செலவாகாது, சில லட்ச ரூபாய்ச் செலவிலேயே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். அதனால் பல கிராமங்கள் பாசன வசதி பெறும். அதே போல், அங்கே திருமணி ஏரி என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. சுமார் 600, 700 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள ஏரி. அந்த ஏரியில் பூராவாகத் தண்ணீர் தேக்கினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்ய முடியும். அந்த ஏரியை இப்பொழுதே ஆயக்கட்டிலே எடுத்துக்கொண்டு, கரைகளை உயர்த்தி ஏரியில் தண்ணீரைத் தேக்கி விவசாயத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த ஏரியை மீன் இலாகாவிடம் ஒப்படைத்து மீன் இலாகாவினர் மீன் பிடிக்க, குத்தகைக்கு விட ஏற்பாடு செய்வதாகவும் தெரிகிறது. இம்மாதிரி மீன் இலாகா குத்தகைக்குக் கொடுத்தால், ஏலம் எடுக்கிறவர்கள் தண்ணீரை இறைத்து, மீன் பிடிக்க ஏற்பாடு செய்துவிடுவார்கள். தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுப் பாசனம் பெறக்கூடிய விவசாயிகள் பாசனம் பெறமுடியாமல் தண்ணீர் பாசனத்திற்குக் கிடைக்காத நிலைமை ஏற்படும். நாகை தாலுக்காவில் வெள்ளாற்றில் வளிவலம் கிராமத்தில் ரெகுலேட்டர் கட்டினால் கொறப்பாடு, முத்தரசபுரம், போன்ற கிராமங்களுக்குப் பாசனத்திற்கு வழி ஏற்படும். ஆகவே, அந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் குளங்குட்டைகள் அதிகமாக இருக்கின்றன. இதைப்பற்றி நான் இதற்கு முன்னால் பல முறை சொல்லியிருக்கிறேன். அந்த மாவட்டத்திலே குடிமராமத்து வேலை செய்யப்பட்டு வருகிறது. பஞ்சாயத்து மூலமாக அந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. குளங்குட்டைகள் மராமத்துச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்தால் நலமாக இருக்கும். குளங் குட்டைகளை மராமத்துச் செய்வதன்

[திரு. ஆ. கு. சுப்பையா] [16th March 1966

மூலம் தண்ணீர்ப் பற்றுக்குறைக் காலங்களில் இவற்றில் தேங்கியிருக்கும் தண்ணீரை எடுத்து இறைத்து விவசாயத்திற்கு உபயோகப்படுத்த முடியும்.

தஞ்சை மாவட்டத்திற்கு வடிகால் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கோரியதன் காரணமாக 12 கோடி ரூபாய் செலவில் திட்டமிட்டு இருப்பதாக அரசாங்கத்தின் மூலமாகவும் அமைச்சர்கள் மூலமாகவும் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால், அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வழி இல்லை. அவர்களுடைய அறிக்கையைப் பார்த்தால், முக்கியமான வேலைகளில் இதுவும் ஒரு வேலையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறதே தவிர, அந்தத் திட்டத்தை எந்த அளவுக்கு எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் கந்த பரிச்சான் வடிகால் திட்டம் குறித்துப் பேசினார்கள், இந்த ஆண்டு திறந்துவிட கேட்டுக்கொண்டு முடித்துவிடுகிறேன்.

* **திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, சில அபிப்பிராயங்களை நான் சொல்லப் பிரியப்படுகிறேன்.

வறண்ட பிரதேசமாக இருக்கும் இடங்களுக்கு யாதொரு திட்டமும் உருவாக்கப்படவில்லை. முக்கியமாக 'அண்டர்-க்ரௌண்டு வாட்டர் இன்வெஸ்டிகேஷன்' சம்பந்தமாக, மணலி, மீஞ்சூர் என்ற இடங்களில்தான் வேலை நடந்து கொண்டிருக்கிறது. அண்டர்க்ரௌண்டு வாட்டர் இன்வெஸ்டிகேஷன் ஸ்கீம் வறண்ட பிரதேசங்களுக்குப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டால் கொஞ்சம் நன்மை ஏற்படும்.

இரிகேஷன் சம்பந்தமாக இப்பொழுது ஐந்து, ஆறு இலாக்காக்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. எஸ்.எம்.ஐ.பி., ஃபுட் ப்ரொடக்ஷன், பி.டபிள்யூ.டி. மூலமாகவும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மைனர் இரிகேஷன் டாங்க்ஸ் மேற்பார்வை ஹைவேஸ் டிபார்ட்மெண்டின் கீழ் இருக்கிறது. ரெவினியூ டாங்க்ஸ், ரெவினியூ டிபார்ட்மெண்டின் கீழ் இருக்கின்றன. இது தவிர, டீ-ஸில்டிங் வேலையும் நடந்து வருகிறது. இப்படிக் கிட்டத்தட்ட ஆறு வகைகளில் வேலை நடந்துகொண்டிருக்கிறது. இந்த இலாக்காக்களுக்கிடையில் ஒற்றுமை இல்லை. இத்தனை இலாகாக்கள் செய்யக்கூடிய வேலைகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்தால் நலமாக இருக்கும். மைனர், மேஜர் என்று பிரித்தால் மக்களுக்குப் பிரயோஜனப்படும். இப்பொழுது ஏதாவது ஒரு வேலையைப்பற்றி மனுக் கொடுக்கவேண்டும் என்றால், எந்த இலாகாவை அணுகவேண்டும் என்று யோசிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. முடிவு ஏற்படுவதற்கு வருஷக் கணக்காகத் தாமதம் ஏற்படுகிறது. ஆக, இரண்டு பிரிவுகளாகப் பிரித்தால் நலம் என்று நான் நினைக்கிறேன்.

ரீ-மாடலிங் ஸ்கீம் முக்கியமாக எஸ்டேட் வில்லேஜ்களுக்கு மிகவும் அவசியம். இப்பொழுது மராமத்துச் செய்யப்பட்டாலும், கால்வாயில் செவ்வனே தண்ணீர் வந்து பாய்வதற்கு ஏற்றபடி ரீ-மாடலிங் ஸ்கீம் இல்லை. குடிமராமத்து ஃபோர்ஸில் இருக்க வேண்டும். அது இல்லாமல் கால்வாய்கள் மிக மோசமாக இருந்து



16th March 1966] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

கொண்டிருக்கின்றன. குடிமராமத்துக்குச் சட்டம் வைத்தால் கூட நல்லது என்று நான் நினைக்கிறேன். அதைச் சர்க்காரே செய்து மக்களிடம் வசூலிக்கக்கூடிய நிலைமையில் ஒரு புதுச் சட்டத்தைக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும்.

இரிகேஷன் கமிட்டி ஒவ்வொரு பகுதிக்கும் தேவை. ஒவ்வொரு சிஸ்டத்திற்கும் அல்லது ஒவ்வொரு ஆயக்கட்டுக்கும் இருந்தால் நலம். இரிகேஷன் சம்பந்தமாக, விநியோகக் கட்டுப்பாடு சரிவர இல்லை. விநியோகக் கட்டுப்பாடு ரொம்ப அவசியம். இருக்கக் கூடிய தண்ணீரைச் சரியாக விநியோகிக்கவேண்டுமானால் கட்டுப்பாடு அவசியம். அதற்கு இரிகேஷன் கமிட்டி ஆங்காங்கு இருந்தால் நலம். அநேக சானல்கள் மராமத்துச் செய்யப்படவில்லை. அதை உடனடியாகச் செய்ய வேண்டும்.

என் தொகுதி சம்பந்தப்பட்ட வரையில் செங்கோட்டை தாலுக்காவில் குளங்கள் யாருடைய பொறுப்பில் இருக்கின்றன என்கிற கணக்கு இல்லை. மொத்தமாக எடுத்துப் பார்த்தால், ஜில்லாவில் எத்தனை குளங்கள் இருக்கின்றன, யாருடைய மேற்பார்வையில் அவை இருக்கின்றன, யார் மராமத்துச் செய்கிறார்கள் என்ற கணக்கு இல்லை. ஜில்லா முழுவதும் இதே நிலைதான் இருக்கிறது. மனுப்போட்டால் பதில் வருவதில்லை. ஒவ்வொரு ஜில்லாவிற்கும், இன்ன இன்ன டாங்க் யார் யாருடைய பொறுப்பில் இருக்கிறது என்ற கணக்கு இருந்தால் பிரயோஜனப்படும். அந்தக் கணக்கு இப்பொழுது இல்லை.

கடையநல்லூர் பக்கம் உள்ள பாப்பான்கால் பி.டபிள்யூ.டி. மேற்பார்வையில் இருந்துகொண்டிருக்கிறது. ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் (மைனர் இரிகேஷன்) மேற்பார்வையிலும் இருந்து கொண்டிருக்கிறது. இரண்டு இலாக்காக்களின் மேற்பார்வையிலும் இருக்கின்றது. ஏதாவது ஒரு இலாகாவின் மேற்பார்வையில் இருப்பது நல்லது. பல முயற்சிகள் எடுத்தும் இன்றுவரை செயல்படாமல் இருக்கிறது. பாப்பான்கால் ஒரு இலாகாவின் மேற்பார்வையில் வரவேண்டும். ஐயாயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி செய்துதரக்கூடிய அந்தப் பாப்பான்கால் ஒருவருடைய மேற்பார்வையில் இருந்தால் நல்ல நிலைமை ஏற்படும்.

கருப்பா நதி, அடைவிநயனாறு வரட்டாறு திட்டங்கள் இருக்கின்றன. இரண்டு வருஷமாக இந்தத் திட்டங்கள் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இன்றுவரை ஒருவிதமான நடவடிக்கையும் இல்லை.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வரக்கூடிய தண்ணீர் சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். அச்சன்கோயில் திட்டம் இருக்கிறது. கேரளாவிற்கு அந்தத் தண்ணீர் தேவையில்லை. அமைச்சர் அவர்கள் அடிக்கடி கேரளா சர்க்காருடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தும் செயல்படக் கூடிய நிலைமை இல்லை. மேற்கொண்டு செயல்பட வழி செய்ய வேண்டும்.

என்க்ரோச்மெண்ட் டாங்க் பெட்ஸ் அண்டு சானல்ஸ் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த என்க்ரோச்மெண்டினால் தண்ணீர் விரயமாகிறது. அதன் பயனை யார் அடையவேண்டுமோ

அவர்கள் அடைய முடியாத நிலைமை இருக்கிறது. இந்த என்க்ரோச்மெண்டை அப்புறப்படுத்த வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. தோ. மு. நல்லசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1966-67-ம் ஆண்டு நீர்ப்பாசன மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அரசாங்கம் தங்களால் இயன்ற அளவு பரிசிலனைகள் செய்து பெரிய திட்டங்களை நிறைவேற்றியதோடு, எங்கெல்லாம் பாசன வசதிகள் கொடுக்க முடியுமோ அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். என்னுடைய வட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஒருசிலவற்றைச் சொல்லி நான் என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன்.

கரூர் தாலுக்கா மிகவும் வறண்ட பிரதேசம். அங்கு 15,000 ஏக்கர் போன்ற நில அளவு மட்டும் அமராவதி மூலமாகவும், காவேரியின் மூலமாகவும் பாசனம் பெற்றது. இந்த வருஷம் மழை இல்லாத காரணத்தால், அமராவதிப் பகுதி பூராவும் வறட்சி ஏற்பட்டு விட்டது. அங்கே பாசனத் திட்டங்களைப் பற்றிப் பரிசீலனை செய்கிற நேரத்தில், நொய்யல் நதியிலிருந்து ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதாக ட்ராஃப்ட் ப்ளானில் சொல்லியிருந்தார்கள். ஆனால், அந்தத் திட்டம் பல இடையூறுகளின் காரணமாகக் கைவிடப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. அதை அமைச்சர் அவர்கள் கவனித்து, உடனடியாக அந்தத் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டும். அது மிகவும் பயன் தரத்தக்க திட்டமாகும். அந்தப் பகுதி விவசாயிகள் மிகவும் உற்சாகமாக விவசாயத்தில் ஈடுபடக் கூடிய வகையில் அந்தத் திட்டத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே சமயத்தில், கரூர் தாலுக்காவிற்கு பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டத்தையோ, லோயர் பவானித் திட்டத்தையோ விஸ்தரிப்புச் செய்து கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அமராவதி நதியின் இரு கரைகளிலும் உள்ள வறண்ட பிரதேசங்களுக்கு அமராவதித் தண்ணீரைக் கொண்டு பாசன வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். நெடுநாளாக இந்தக் கோரிக்கையை நானும், அண்டைத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. சதாசிவம் அவர்களும் வலியுறுத்தி வந்திருக்கிறோம். அமராவதி நதியைப் பொறுத்த வரைக்கும், எங்களுக்குக் கொடுக்கப்பட்ட பதில் எல்லாம், "போதிய அளவு தண்ணீர் இல்லை, ஆகையால் அதிலே விஸ்தரிப்புச் செய்ய முடியவில்லை" என்பது தான். ஆனால், சமீபத்திலே கேள்விப்படுகிறோம். அமராவதி நதியின் நீரைப் புதுக்கோட்டைப் பகுதிக்கும் எடுத்துச் செல்லவேண்டும் என்ற ஒரு திட்டம் இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜில் இருப்பதாகக் கேள்விப்





பட்டேன். அது மிகவும் வருந்தத் தக்கது. ஏனென்றால், கரூர் வட்டம் வறண்ட பிரதேசம் என்று தெரிந்திருந்தும், "தண்ணீர் இல்லை, ஆகவே விஸ்தரிப்புச் செய்ய முடியாது" என்று பதில் சொல்லிய அரசாங்கம், புதுக்கோட்டைப் பகுதிக்குத் தண்ணீர் கொண்டுபோக முயற்சி எடுத்துக்கொள்ளுகிறது என்றால், அதை உண்மையிலேயே என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதைப் பற்றி அரசாங்கத்திற்கும் நான் எழுத்து மூலமாக ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். எந்தவிதமான விஸ்தரிப்புச் செய்ய வேண்டுமானாலும், கரூர் வட்டத்தில் போதிய அளவு நிலம் இருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே தண்ணீர் உபரியாக இருக்குமானால், அதைக் கரூர் வட்டத்திற்கே கொடுக்கவேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் நெடுநாளாக வலியுறுத்தி வரும் நொய்யல் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதோடு தண்ணீர் உபரியாக இருக்குமானால் அதை கரூர் வட்டத்திற்கு விஸ்தரித்துக் கொடுக்கவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. தங்கவேலு :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் 11-00
தலைவர் அவர்களே, கனம் உணவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது என் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இங்கே நீர்ப்பாசனத்திற்காக 6,99,84,800 ரூபாய் மானியம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். மூன்றாவது திட்டத்திலேயும் பல கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. நான்காவது திட்டத்திலேயும் பல திட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இருந்தும் கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களிலோ, இந்த ஆண்டு பட்ஜெட்டிலோ வரப்போகிற திட்டத்தைப் பற்றிய குறிப்பிலோ என்னுடையப் பகுதியைப் பொறுத்த வரையில் ஒன்றுமே கிடையாது. அந்த பகுதி எந்த விதமான நீர்ப்பாசன வசதியும் செய்யப்படாமல் இருக்கிறது என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய நீர்ப்பாசனத் திட்டம், சிறிய நீர்ப்பாசன திட்டம், குழாய்க்கிணறுத் திட்டம், நில மீட்பு, தூர்வாரல் திட்டம், பூகர்ப்ப நீர் ஆராய்ச்சித் திட்டம், வடி குழாய் கிணறுத் திட்டம்—ஆக இப்படிப் பல அமைப்புக்கள் இருக்கின்றனவே தவிர—என்னுடைய பகுதியில் எந்த ஒரு அமைப்பின் கீழும் எந்த ஒரு சிறியவேலையாவது நடைபெறுகிறதா என்றால் சந்தேகமாகத்தான் இருக்கிறது. ஆனால் இங்கே பற்பல திட்டங்களைப்பற்றிப் புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் பார்க்கிறபோது எப்படி இருக்கிறதென்றால் பசி, பசி எனத் துடிக்கும் ஒருவனிடத்தில் காகிதத்திலே பல உணவுப்பண்டங்களின் படங்களைப்போட்டு, புசி புசி எனக்கொடுப்பது போலத்தான் இருக்கிறது. காரணம் எந்த ஒரு திட்ட அமைப்பின் கீழும் என்னுடைய பகுதியில் எந்த வேலையும் நிறைவேற்றப்படவில்லை.

குறிப்பாக எதிர்க்கட்சிக்காரர்கள் தொடர்ந்து அந்தப் பகுதியில் தேர்ந்து எடுக்கப்பட்டு வருகிற காரணத்தினால் தான் அந்தப் பகுதி புறக்கணிக்கப்படுகிறதோ என்று கருத இடமேற்படுகிறது. எத்தனையோ முறையாகச் சொல்லிவந்தும் கூட ஒரே ஒரு ஏரியின் கலிங்கைக் கூட அமைத்துக்கொடுக்க அமைச்சரவையில் உள்ளவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மனம் வரவில்லை. சென்ற ஆண்டு தென் பசார் ஏரி கலிங்கல் மாற்றியமைப்பதுபற்றி ஒரு கேள்வி கேட்டபோது விவசாய அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள், இந்த வேலை 1964-65-க்குள் முடிந்து விடும் என்பதாக. ஆனால் அது பற்றி எவ்விதக் கவனமும் செலுத்தப்படவில்லை. அதிகாரிகளும் அக்கறை காட்டவில்லை என்று சொல்கிறேன். இந்த அமைச்சர் அவையும், அதிகாரிகளும் இப்படி என்னுடைய பகுதியைப் புறக்கணித்திருப்பது வருந்தத்தக்கது. எங்களை ஓரவஞ்சனையாக நடத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டையும் வைக்கிறேன்.

விவசாய அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், "உங்களுடைய பகுதியில் தான் வீடூர் அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறதே" என்பதாக. சென்ற வாரத்தில் கனம் உணவு அமைச்சர் வீடூர் அணையை வந்து பார்வையிட்டார்கள். அதனால் என் பகுதிக்கு பயன் இல்லை. பாண்டிச்சேரி பகுதிக்குத்தான் பயன் உள்ளதாக இருக்கிறது. கொஞ்சம் என் பகுதிக்குப் பயன் ஏற்படும் என்றாலும், இன்றையதினம் அந்த அணைக்கட்டினால் அங்கு உள்ளவர்கள் பாதகம் அடைந்திருக்கிறார்கள் என்பதைக் கூர்ந்து அமைச்சர் அவர்களே கவனித்தார்கள். குறிப்பாக அந்த அணைக்கட்டு கட்டிய பகுதியில் தொண்டியாற்றில் கோடை மழை பெய்தாலும், வருகின்ற நீரை முன்பு விவசாயத்திற்குப் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் இப்போது அணை கட்டிய பிறகு முன்பு அவர்களுக்கு இருந்த உரிமை போய்விட்டது. அக்டோபர் மாதத்தில்தான் தண்ணீர்விடுவது என்ற நிலை ஏற்படுகிறபோது அவர்கள் பின்தங்கிவிடக் கூடிய நிலை இருக்கிறது. இதை அமைச்சர் அவர்களே கூர்ந்து கவனித்தார்கள். நியாயமான அவர்களுடைய கோரிக்கையைக்கூட அதிகாரிகள் புறக்கணித்து வந்தார்கள். கனம் அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். 10 சதவிகிதம் கூடுதல் வரி விதிப்பதைக் கூட 3 ஆண்டுகளுக்கு வசூலிக்கக் கூடாது என்ற அவர்களுடைய கோரிக்கையையும் கவனிப்பதாகச் சொன்னார்கள். அப்போதே கலெக்டரிடத்தில் கூட அந்த வசூலை நிறுத்தி வைக்கும்படி சொன்னார்கள். இப்படி கனம் உணவு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு நேரில் வந்திருந்து ஆறுதல் அளித்தமைக்கு அந்த வீடூர் பகுதி மக்கள் சார்பிலே நன்றியும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடூர் நீர்த்தேக்கத்தை எடுத்துக்கொண்டால் இப்போதே கரை வெடித்திருக்கிறது. பூங்கா காய்ந்து கிடக்கிறது. கனம் அமைச்சரே நேரில் பார்த்து வருத்தப்பட்டார்கள். பூங்காவும், கரையும் சரியான முறையில் மராமத்து செய்யப்படாமல் கள்ளியும், முள்ளும் படர்ந்து உலர்ந்து இருக்கிறது. அதற்குக் காரணம்





வேலைசெய்து வந்த என்.எம்.ஆர். தொழிலாளர்களை நிறுத்திவிட்டார்கள். கேட்டால் வீண் செலவு என்கிறார்கள். அலாட்மெண்டு இல்லை என்கிறார்கள். நம் அரசாங்க பூசனிக்காய் போவது தெரிவதில்லை. கடுகைத் தேடித் தேடி எடுத்துப் போகிறார்கள். மேற்படி தொழிலாளர்களைத் தொடர்ந்து வேலையில் அமர்த்தி அந்தக் கரைகளையும், பூங்காக்களையும் நல்ல முறையில் மராமத்துச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். வில்லியம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது மாநிலமானது ஒரு நெருக்கடியான நிலைமையில் இருந்தது என்பதை அறிவோம். பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும், காலம் தவறிப் பெய்ததன் காரணமாகவும் பல வருத்தங்களும், கஷ்டங்களும் ஏற்பட்டன. ஒரு வேளை பஞ்சம் ஏற்பட்டுவிடுமோ என்றே சந்தேகித்தோம், இந்த வேளையில் நமது அமைச்சர் அவர்களும், அரசாங்க ஊழியர்களும் தீவிர நல்ல நடவடிக்கை எடுத்து ஆவன செய்வதற்காக நன்றி பாராட்டுகிறேன்.

இந்த நிலையில் குமரி மாவட்டத்தைப்பற்றி ஒன்றிரண்டு கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். சித்தாறு-பட்டணங்கால் திட்டம் அங்கே நல்லமுறையில் திறம்பட நடந்து வருகிறது. அந்தப் பொறுப்பை வகித்திருக்கும் என்ஜினியர் அவர்களும், பட்டணங்கால் இன்வெஸ்டிகேஷன் ஆபீசரும் நல்லமுறையில் பணியாற்றி வருகிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். அந்த வேலையைத் தீவிரமாகத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திப்பரப்பு சானல் விஷயமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதனுடைய வலதுகரை சானல் மஞ்சால்மூடு என்ற இடத்தோடு நின்று விடுகிறது. இன்னும் ½ மைல் அதை நீட்டி, முல்லையாறு வரை கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். அந்த வேலையைச் செய்யவேண்டுமென்று டி.ஸி. ஸ்டேட்டில் இருந்த காலத்தில் இருந்து வற்புறுத்தி வந்தோம். இன்றைக்கு அதைச் செய்து கொடுத்தால் 500 ஏக்கராக்களுக்குமேல் சாகுபடிக்கு வரும். வலது கரை சானலிலிருந்து சிதறால் வரை கிளை சானல் ஏற்படுத்துவது குறித்தும் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலையையும் ஆரம்பிக்க வேண்டும்.

நெய்யாறு இடதுகரை சானல் வேலை அரைகுறையாக இருக்கிறது. கிளை சானல்கள் வெட்டப்படவில்லை, 25 ஏக்கராவுக்கு மேல் சாகுபடிக்குக் கொண்டுவரமுடியுமானால், அந்த இடத்தில் கிளை சானல் வெட்டுவதாகச் சொன்னார்கள். அதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதை பரிசீலித்து கிளைச் சானல்களை அவசியம் வெட்டும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெய்யாறு சானல் சித்தாறு-பட்டணங்கால் திட்டம்போல நல்ல முறையில் நடத்தப்படவில்லை. பணம் ஏராளமாகச் செலவழிக்கப்பட்டது. வீண் விரயம்தான். நல்ல முறையில் மடைகள் கூடக்

கட்டப்படவில்லை. அரைகுறையாகவும் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து, ஒழுங்கு படுத்துவதற்கு இப்போதுள்ள பட்ஜெட்டில் ஒருவிதமான தொகையும் ஒதுக்கப்படவில்லை. இதைப்பற்றியும் பரிசீலனை செய்து இது சம்பந்தப்பட்ட வேலைகளைச் செய்துகொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மைனர் இரிகேஷன் விஷயமாக ஒரு சில விஷயங்கள் குறிப்பிட விரும்புகிறேன். சிறு பாசனத் திட்டங்கள் பஞ்சாயத்து யூனியன் களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ஏக்கரா நிலத்திற்கு இரண்டு ரூபாய் மானியமாக அளிக்கிறார்கள். ஆனால் அது மிகவும் குறைந்த தொகை என்று கருதுகிறேன். குறைந்தது ஒரு ஏக்கருக் குப் பத்து ரூபாயாவது ஒதுக்கவேண்டும். அவ்விதம் ஒதுக்கினால் தான் அவேலைகளை நல்ல முறையில் நடத்த முடியும். இப்போது அவ்வேலைகள் மோசமாக நடக்கின்றன. குளங்களை எடுத்துக் கொண்டால் அவை மேடிட்டுக் கிடக்கின்றன. பருவகாலங்களில் மழை பெய்கிறபோதுகூடத் தண்ணீர் தேங்குவது இல்லை. பஞ்சாயத்திலும் சரி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சரி அஜாக்கிரதையாகத்தான் இருக்கிறார்கள் என்று கூற விரும்பு கிறேன். அந்த வேலைகள் சரியான முறையில் கண்காணிக்கப்பட வில்லை. அவற்றையும் நல்ல முறையில் கண்காணித்து, மராமத்து செய்யத்தக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன இலாகா மானியத்தில் இந்த ராஜ்யம் சாதித்துள் ளவைகள் மூலமாக ஏராளமான தண்ணீர் வளத்தை பயன்படுத்தி இருக்கிறோம். அப்படிப் பயன்படுத்தியிருந்தாலும், ஒரு சில காரியங்கள் நடக்க வேண்டியதைப்பற்றியும் சொல்லவிரும்பு கிறேன். நண்பர் திரு. சுப்பையா முதலியார் இந்த அச்சன்கோவில் ஆற்றுத் தண்ணீரை உபயோகப்படுத்தவேண்டுமென்று சொன்னார் கள். முன்பு அச்சன்கோவில் நதி சென்னை ராஜ்யத்துடன்தான் இருந்தது. மனிதனைப் பார்த்துப் பேச மறுக்கின்றவர்கள் இப்பொழுது இருப்பது போல் அப்பொழுதும் இருந்தார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளால்தான் அது கேரள ராஜ்யத்துடன் சேர்ந்தது. முன்பு இருந்த திரு. பந்த் அவர்களுக்கு, முன்பு முதலமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்களிடமிருந்து டி.ஓ. லெட்டர் எழுதி வாங்கிக்கொண்டு சென்றோம். கேரள ராஜ்யத் திற்கும் நமக்கும் பிரிவினை செய்யும்பொழுது பி.டபிள்யூ.டி. அதிகாரியும், ஃபாரஸ்ட் அதிகாரியும் சேர்ந்து அதை அந்த ராஜ்யத் துடன் சேர்த்துவிட்டார்கள். அப்பொழுது இருந்த சூப்பிரண் டெண்டிங் எஞ்சினியர் திரு. கோபியஸ் என்பவர் இந்த ஆற்றுக்கும் கடனா நதிக்கும் ½ மைல் தூரம்தான் இருக்கிறது, அதில் ஒரு டனல் போட்டு அந்தத் தண்ணீரைக்கொண்டு வந்து 1½ லட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்யக்கூடிய திட்டம் கொடுத்து இருக்கிறார்கள். அப்பொழுது இருந்த பி.டபிள்யூ.டி. கன்சர்வேடிவ் ஆக இருந்தது. இன்னும் கூட அந்தத் துறையில் உள்ள சில அதிகாரிகள் துர்ப்பாக்கியவசமாக அப்படித் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இதையெல்லாம்



செய்யவேண்டுமென்று அதி தீவிரமாக இருந்தாலும், இந்த அதிகாரிகள்தான் இதில் குறுக்கே நிற்கிறார்கள். மனிதனைப் பார்த்துப் பேசமாட்டேன், சுவற்றைப்பார்த்துப் பேசினாலும் பேசுவேன் என்று சொல்லக்கூடிய சில அதிகாரிகள் இன்னும் இருந்துவருகிறார்கள். மாடு மேய்க்கிறவர்கள் சொல்லக்கூடிய யோசனைகளைக் கேட்டுக்கூட நாம் திட்டம் போட்டிருக்கிறோம். அப்படியிருக்கும்பொழுது, மனிதனைப் பார்த்து பேசமாட்டேன் என்று சொல்லுகிறார்கள் என்பதைக் கேட்டால் நமக்கு ரத்தம் துடிக்கிறது. ஓட்டுப் போட்டு மக்கள் தேர்ந்தெடுக்கின்ற அவர்களுடைய பிரதிநிதிகளைக்கூடப் பார்த்துப் பேச விரும்பாத அதிகாரிகள் சிலர் இருக்கிறார்கள் என்று சொல்லும்பொழுது நான் அதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். இந்த அச்சன்கோவில் திட்டத்தைப்பற்றிப் பலமுறை எழுதியிருக்கிறேன். ஆனால் இன்னும் முடிவு ஏற்படாமல் இருக் கிறது. நண்பர் ராமையா அவர்கள் மணிமுத்தாறுத் திட்டத்தில் குளங்களைச் சேர்த்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இன்னும் 110 குளங்களைச் சேர்க்கவேண்டுமென்றுதான் அவர்கள் அந்த வட்டாரத்திற்கு வந்து பார்வையிட்டு வந்தார்கள். இந்த 110 குளங்களும் தீயக்கூடிய அவசியமில்லை என்பதால் சேர்த்துக் கொள்ளலாம் என்று கலெக்டருக்கு உத்தரவு போட்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். அங்கே ஐந்து தாலுக்காக்கள் இருக் கின்றன, திருநெல்வேலி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், போன்ற ஐந்து தாலூக்காக்கள் இருக்கின்றன. இப்படிப் பாவலாக இருப் பதால் இந்தக் குளங்களையெல்லாம் ரிசர்விலே வைக்காமல் 110 குளங்களையும் சேர்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, இந்த கீரியாறு திட்டம் பைனலைஸ் பண்ணப் பட்ட திட்டம். இதற்கும் கேரளாவிற்கும் சம்பந்தம் இல்லை. முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள்கூட அங்கு வந்து பார்வையிட்டார்கள், நான் கூட்டிக்கொண்டு போய் காட்டியிருக் கிறேன், அவர்கள் பார்வையிட்டார்கள். ஆனால் அதனுடைய நிலைமை என்ன என்பது இன்னும் புரியவில்லை. பொதுமக்களுக்குத் தெரியவேண்டாமா பெரிய சூப்பிரண்டண்டிங் இஞ்சினியர் நியமிக்கப்பட்டு இதை இன்வெஸ்டிகேஷன் பண்ணித் தயாரிக்கப் பட்ட ரிப்போர்ட் என்ன ஆயிற்று? சர்க்கார் இந்த கீரியாறு ஸ்கீமை விட்டுவிட்டதா அல்லது வைத்திருக்கிறதா என்ற விவரத்தை அரசாங்கம் தெளிவுபடுத்தினால் நன்றாக இருக்கும். ஸ்ரீவைகுண்டம் பேய்க்குளம் வேலையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னேன். இதை ட்ரெயல் பார்க்கப் போகிறோம் என்று உத்திரவு எல்லாம் வந்தது. மண்ணைப்போட இடம் இல்லை, அதைப்போட இடம் இல்லை என்று ஏதோ காரணங்கள் சொல்லுகிறார்கள். அதெல்லாம் கிடையாது. எஞ்சினியர்கள் நினைத்தால் முடியாதது ஒன்றும் இல்லை. அவர்கள் நினைத்தால் " everything is possible " தான். அவர்கள் நினைக்கவேண்டும், அத்துடன் அமைச்சர்கள் மனது வைக்க வேண்டும். இரண்டு பேர்களும் நினைத்தால் செய்துமுடிக்க முடியும். சில்ட் கிளியரன்ஸ் என்றெல்லாம் சால்ஜாப்புச் சொல்லிக்

கொண்டிருக்காமல் குளங்களை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும், அதுவும் டெயில் என்ட்ஸில் இருக்கின்ற குளங்களை உடனே எடுத்துக்கொள்ள வேண்டும்.

காவேரி, நெய்வேலி முதலிய இடங்களில் பூகர்ப்ப சாஸ்திரிகளை வைத்து, பூமிக்கடியிலே இருக்கின்ற தண்ணீரை எடுப்பதற்கு முயற்சி நடக்கிறது. அதேமாதிரி தாம்பிரபரணி, மணிமுத்தாறு எல்லாம் இருக்கக்கூடிய திருநெல்வேலி மாவட்டத்திற்கு இதை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேரளா ராஜ்யத்தில் வீணாகப்போகும் தண்ணீரைப்பற்றி அவர்களுடன் பேசி, அவர்களுக்கும் நாம் நன்மை செய்கிறோம் என்பதை நன்கு உணர்த்தி அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பம்பையாறு ஸ்கீம், ஃபர்ஸ்ட் பைவ் இயர் பிளானில் இருந்தது. அப்பொழுதே சேர்க்கப்பட்ட திட்டம் இது, புரசீடிங்ஸை படித்துப் பாருங்கள் தெரியும். ஆனால், அப்பொழுது இதைப்பற்றி பேரம் பேசினார்கள். கோயம்புத்தூருக்குத் திட்டம் வரவேண்டுமென்றால் அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அப்பொழுது இருந்த பட்டம்தாணுப்பிள்ளை அவர்கள் பம்பையாறு ஸ்கிமை அந்த ஸ்கீம் வேண்டுமென்றால் பிரஸ் பண்ணுகிறீர்கள் என்று சொன்னார்கள். ஆகையால் விடப்பட்டது, திட்டத்தில் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்படாத திட்டம் இது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அதிக அக்கறை எடுத்துக் கொள்வார்கள், இது நடக்கும், நாடு செழிக்கும் என்று நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் தலைவரவர்களே, நமது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்ற நீர்ப்பாசன மானியத்தின் மீது முக்கியமான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பெரிய பாசனத் திட்டத்தின் கீழே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கிருஷ்ணா—கோதாவரித் திட்டத்தைப் போட்டு, இப்பொழுது மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்தும் கொண்டு வரமுடியவில்லை, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் கொண்டு வருவார்கள் என்ற அபிப்பிராயம் இல்லை என்று தெரிகிறது. இதற்காக வருந்தாமல் இருக்கமுடியாது. நடுத்தர நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்டமட்டில் சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து நந்தங்கால் வழியாக வீடூர் நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் விடலாம் என்ற அபிப்பிராயத்தைக்கொண்டு நிபுணர்கள் எல்லாம் பரிசீலனை செய்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் இதுவரைக்கும் அது என்ன நடவடிக்கையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. இதற்காகவும் நாம் வருந்தாமல் இருக்கமுடியாது. வீடூர் நீர்த்தேக்கத்திற்கு ஒரு பக்கத்திலேதான் தண்ணீர் பாய்கிறது, மறு பக்கத்திலும் தண்ணீர் பாயவேண்டுமென்று இந்த மன்றத்திலே பலமுறை எடுத்துச்சொல்லிவிட்டேன். ஆனால் அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்காக நாம் சந்தோஷப்படுவதற்கில்லை. இப்பொழுது கிராமங்கள் பூராவிலும் ஏரிகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் தூர் வாராமல் இருக்கின்றன. 20 ஆண்டுகள், 25 ஆண்டுகளாக அப்படியே தூர் வாராமல் இருக்கின்றன. ஏரிகளில், பி.டபிள்யூ.டி.





ஏரிகள், ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் ஏரிகள், மைனர் இரிகேஷன் ஏரிகள் இருக்கின்றன. மரக்காணம் பகுதியில் எல்லாம் ஊற்றுக் குட்டைகள் அப்படியேதான் தூர்வாராமல் இருக்கின்றன. தூர் எடுக்கவில்லை என்று பலமுறை இதைப்பற்றி நான் சொல்லியும் கூட எந்தக் காரியமும் நடைபெறவில்லை என்றால் இந்த சர்க்காரைப்பற்றி என்ன சொல்வது என்றே புரியவில்லை. அம்மையார் அவர்கள் சொன்ன பாணியில் சொல்ல வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அப்படிச் சொல்வதற்கு நான் விரும்பவில்லை. நாங்கள் இங்கே இருக்கின்ற குறைகளை எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. சொல்லித் தீரவேண்டியிருக்கிறது. அதைச் செய்ய சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறது.

நாங்கள் சொல்வதெல்லாம் அமைச்சர்கள் காதிலே படாவிட்டாலும், அதிகாரிகள் காதிலே கூடப் படவில்லையா என்பதுதான் என்னுடைய வருத்தமான கேள்வி. 1962-ல் இருந்து நான்கு ஆண்டுகளாக நீர்ப்பாசனத்தைப்பற்றிப் பேசாத நேரமே கிடையாது. இதுவரை தென்னாற்காடு மாவட்டத்திலே, திண்டிவனம் தாலுக்காவிலே, வானூர் தொகுதியிலே நீர்ப்பாசனத்திற்காக என்ன செய்தார்கள் என்றுதான் புரியவில்லை. மக்களைச் சந்திக்கும்போது 'நீ சட்டசபையில் இதைப் பற்றிப் பேசவில்லையா? கேட்கவில்லையா?' என்று கேட்கிறார்கள். நாங்கள் இங்கே சொன்னது எல்லாம் என்ன ஆயிற்று? கேட்டதெல்லாம் என்ன ஆயிற்று? இதற்கு யார் பதில் சொல்வது? இதிலே உள்ள குறைகளை எடுத்துக்கொண்டால் பேசிக்கொண்டே இருக்கலாம். நேரம் இடம் கொடுக்கவில்லை. மறுமுறை இந்தச் சபைக்கு வருகிறேனா, இல்லையோ என்பதைப் பற்றியப் பிரச்சினை இல்லை. நீங்களே வாருங்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அந்தப் பகுதி மக்களுக்கு நன்மைகளைச் செய்து கொடுங்கள். நீர்ப்பாசனத்திற்காக எல்லா முயற்சிகளையும் கையாண்டு பார்த்துவிட்டு, இப்போது கிணறு தோண்டுவதிலே இறங்கியிருக்கிறார்கள். பூமிக்கு அடியில் நிறைய நீர் இருப்பதாக நிபுணர்கள் சொன்னார்கள். அதைப் பரிசீலனை செய்தார்களா என்று தெரியவில்லை. கிணறு ஒன்றுக்கு 2,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கடனை வாங்குவது அவ்வளவு சாமானியமாக இல்லை. இதைப்பற்றிப் பல மானியங்களிலே பேசியிருக்கிறேன். உடனடியாக அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்காகவாவது 5,000 ரூபாய் வரை கடன் கொடுத்து உதவுவதன் மூலம் விவசாயத்தைப் பெருக்குவதற்கான வழி வகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. பொன்னையன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நடுத்தர, பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் மிகவும் முதன்மை வாய்ந்தது. இது 2,40,000 ஏக்கருக்குத் தண்ணீர் பாயவேண்டிய திட்டம். பாதிக்கு

[திரு. கே. பொன்னையன்] [16th March 1966

மேல் முடிந்து விட்டது. பாம்பிக்குளம் அணையானது ஏறக் குறைய முடிந்து விட்டது; திருமூர்த்தி அணை முடிந்து விட்டது. சோலையாறு அணைக்கட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற் காக உண்மையிலேயே அரசாங்க இலாகாவைப் பாராட்டுகிறேன். அங்கு எஞ்சினியர்களுடைய திறமையைப் பார்ப்பதற்கு அங்கத்தினர்கள் அனைவரும் என்னுடைய தொகுதிக்கு வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொருவரும் வரும்போது கட்டுச்சோறு கட்டிக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சுமார் 9 மைல் நீளம் மலையைக் குடைந்து தண்ணீரைக் கொண்டு வருகிறார்கள். 32 மைல் நீளம் மலைச் சரிவுகளில் வாய்க்காலாக வெட்டி உடுமலைப்பேட்டை திருமூர்த்தி டாமுக்குத் தண்ணீர் வருகிறது. கனம் அங்கத்தினர்கள் அனைவரும் நம்முடைய எஞ்சினியர்களுடைய திறமையைப் பார்க்க வேண்டுமென்றால் எங்களுடைய தொகுதிக்கு வரவேண்டு மென்று மறு முறையும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதால் மெயின் கனால், பிராஞ்சு கனால் என்று பல இடங்களுக்கும் கொண்டு போயிருக் கிறார்கள். அங்கு விவசாய நிலங்களுக்கு மத்தியில் கூடக் கொண்டு போனதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயக்கட்டிலும் அந்தப் பூமிகள் சேரவில்லை. அவர்கள் ஏதோ பழைய கிணறுகளை வெட்டியிருந்தாலும் கூட அந்தக் கிணற்றில் பம்ப் செட் வைக்க நமது டிப்பார்ட்மென்ட் ஒத்துக் கொள்வதில்லை. அவர்களுக்கு ஸ்பெஷல் கேஸ் ஆக அந்த இடங்களில் பம்ப் செட் வைக்க அனுமதி கொடுக்கவேண்டும்.

பழைய வாய்க்கால்கள் நிறைய இருக்கின்றன. பள்ளி விளங்கரை வாய்க்கால், பெரிய அணைக்கட்டு வாய்க்கால், காரைப் பட்டி வாய்க்கால் போன்ற பல வாய்க்கால்களால் 1,500 ஏக்கர் வரை சாகுபடி செய்யப்படுகிறது. அந்த வாய்க்கால்களின் 'டெயில் என்டில்' தூர்ந்து போயிருப்பதால் அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளியாறானது நமது எல்லையை விட்டுக் கேரளாவுக்குப் போகிறது. பல பட்டாக்களை மேவிக்கொண்டு போகிறது. பட்டாதாரர்கள் துரவு வெல் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதில் பம்ப் செட் வைத்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்யலாம். கேரளாவில் உள்ள சித்தூருக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று இருப்பதால் அங்கு துரவு வெல் எடுக்கவும் பம்ப் செட் வைக்கவும் பர்மிஷன் கொடுக்கவேண்டு மென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



16th March 1966] [திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்]

இந்த ஆண்டு இயற்கையாகவே மழை இல்லாத நிலையிலே கிடைத்த ஓரளவுத் தண்ணீரைக் கொண்டு எல்லா நிலங்களுக்கும் பகிர்ந்து கொடுத்து அதிக விளைச்சல் ஏற்பட்டிருப்பதற்காக உணவு அமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பாராட்டுகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தேவைக்கேற்ப நீர் வழங்குவதும் நீர் சேதத்தைத் தவிர்ப்பதும், நீரைப் பயன்படுத்து வதைச் சுருக்குவதும் முக்கியமாக இருக்கிறது. இப்போது பாசன வசதி இல்லாதபோது தஞ்சாவூரிலேகூட, கிணறு தோண்டு வதற்காகவும், மின்சாரம் வழங்குவதற்காகவும் சுமார் 28 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதேபோல் லோயர் பவானி பகுதியிலும் வாய்க்காலில் இருந்து 2 பர்லாங் தூரத்திற்குள்ளாகவும், கிளை வாய்க்காலில் இருந்து ஒரு பர்லாங் தூரத்திற்குள்ளாகவும் கிணறு வெட்டக்கூடாது என்ற நிலையைத் தளர்த்தவேண்டும். எல்லாப் பகுதியிலும் இந்த விதியைத் தளர்த்தியிருக்கிறார்கள்; ஆனால் லோயர் பவானிப் பிரதேசத்தில் மட்டும் தளர்த்தவில்லை. இது ரொம்பவும் குறையாக இருக்கிறது. லோயர் பவானியில் இப்போது தண்ணீர் இல்லாமல் இருப்பதால் புதுக் கிணறுகள் வெட்டும் நிலைமை இருக்கிறது. பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் வேண்டியிருக்கிறது. இனி மேலாவது ஒரு மாத காலத்திற்கு லோயர் பவானி வாய்க்காலில் தண்ணீர் விட்டால்—அந்தத் தண்ணீர் காவிரி ஆற்றில் போய் விழுந்தாலும் பரவாயில்லை—எல்லாக் கிணற்றிலும் தண்ணீர் வந்து விடும். புதுக் கிணறு வெட்டவேண்டுமென்றால் பணம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, லோயர் பவானி வாய்க் காலில் தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பம்ப் செட்டுகள் 5 எச்.பி.-க்கு மேலாக வைக்கக்கூடாது என்ற விதியைத் தளர்த்தி 10 ஹார்ஸ் பவர் வரை வைத்துக்கொள்ள அனுமதிக்கவேண்டும்.

தண்ணீர் வரும்போது உறும்புத் தண்ணீரை எடுப்பதற்கு விவசாயிகள் ஒவ்வொரு வருஷமும் தாலுகா ஆபீசுக்குச் சென்று ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் பார்த்து உத்தரவு வாங்க வேண்டி யிருக்கிறது. இது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. மறு உத்தரவு வரை என்று போட்டுவிட்டால் நல்லது. அந்த மாதிரி செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

இப்போது சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் உள்பட இந்த 11-30 a.m.
வருடம் 862 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. அது போதாது என்று நினைக்கிறேன். குறிப்பாக லோயர் பவானியில் அவனாசியில் 30,000 ஏக்கர்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் விடுவ தாக இருக்கிறது. அப்படிக் கொடுப்பதை நான் ஆட்சேபிக்க வில்லை. நம்பியூர் தொகுதி, பள்ளடம் தொகுதி, திருப்பூர் தொகுதி, சூலூர் தொகுதி போன்ற தொகுதிகள் அந்தப் பக்கங்களில் இருக் கின்றன. அவற்றில் 75 சதவிகிதம் வரண்ட பிரதேசமாக இருக் கின்றன. அங்கு குளம் குட்டைகள் ஆங்காங்கு அமைத்து

[திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்] [16th March 1966

தண்ணீரை நிரப்பிக் கொடுத்தால் அதிகம் விளைச்சல் ஏற்பட முடியு. கன்னியாகுமரியில் 200 ஹார்ஸ் பவரில் 100 அடி உயரத்தில் ஆறு பம்ப் செட்ஸ் வைத்து தண்ணீர் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அதேபோல ஆங்காங்கு எங்கள் பக்கங்களிலும் நிரப்பிக் கொடுத்தால் விளைச்சலுக்கு வசதியாக இருக்கும்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த பாசன மான்யக் கோரிக்கை மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேபணைகளை ஒட்டி ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். போர் முனைக் கேற்றவாறு முக்கியத்துவம் ஏர் முனைக்கும் கொடுக்கப்படும் என்று அரசாங்கம் பிரசாரம் செய்தாலும் போர் முனைக்குக் கொடுக்கப்படுகிற முக்கியத்துவம் ஏர் முனைக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். என் தொகுதியைப் பொறுத்த வரையில் சின்னாறு நீர்த்தேக்கத் திட்டம் இந்த அரசாங்கத்தால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அது திட்டக் கமிஷனுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு திட்டக் கமிஷனின் அங்கீகாரம் பெறாமல் இந்த அரசுக்கு திரும்பி வந்தது. அதற்குக் காரணம் என்ன என்ற கேள்வியை எழுப்பிய நேரத்தில் சின்னாறு காவேரியின் கிளை, மைசூர் அரசாங்கம் சின்னாற்றில் அணை கட்டுவதற்கு திட்டக் கமிஷனிடம் ஆட்சேபனை செய்தது, ஆகவே திட்டக் கமிஷன் அனுமதி தரவில்லை என்ற பதிலை நம் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது எடுத்துச் சொன்னார்கள். காவேரியில், ஹேமாவதி, ஆரங்கி என்ற கிளைகளில் அணைகள் கட்ட மூன்றாவது திட்டத்தில் ஒரு அணைக்கு ரூபாய் 7 கோடியும், இன்னொரு அணைக்கு ரூ. 10 கோடியும் செலவு செய்ய மைசூர் அரசாங்கம் திட்டக் கமிஷனின் அனுமதி பெற்றிருக்கிறது. அதுவும் காவேரியின் கிளை நதிகளாயிற்றே; நம் அரசாங்கம் அதற்கு ஆட்சேபனை செய்ததா என்ற கேள்வியை எழுப்பியபோது அமைச்சர் அவர்கள் பெருந்தன்மையாக இவைகளை எல்லாம் யோசித்துத்தான் நாம் காவேரி தண்ணீர் தட்டுப்பாடு நிவாரண வேலையாகவோ அல்லது நான்காவது திட்டத்திலே சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பணிகளில் ஈடுபடுகிறோம் என்ற பதிலை இந்த மாமன்றத்தில் சொன்னார்கள். அதற்கு வேண்டிய திட்டத்தை நான்காவது திட்டத்தில் சின்னாறு நீர்த்தேக்கத் திட்டம் மாநில அளவில் சேர்க்கப்பட்டு திட்டக் கமிஷனிடம் எடுத்துச் சொல்லப்பட்டது. அப்படி எடுத்துச் சொல்லப்பட்ட அந்தத் திட்டத்திற்கு திட்டக் கமிஷன் அனுமதி கிடைத்ததா இல்லையா என்பதை இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஏற்கனவே சொன்ன வார்த்தை மைசூர் அரசாங்கம் எடுத்து வைத்து அந்த வாதத்திற்கு சரியான வாதத்தை நம் மாநில அரசு தராமல் அந்தத் திட்டம் நீக்கப்பட்டு விட்டதா அல்லது சேர்க்கப்பட்டு விட்டதா என்ற சந்தேகத்தை இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்கள் போக்குவார்கள் என்று நான் கருதுகிறேன்.



16th March 1966] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

அடுத்தபடியாக, சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்தைப் பொறுத்த வரையில் பெயர் சின்னாறு என்றிருந்தாலும் அதில் வருகிற வெள்ளம் பெரு வெள்ளம். அப்படி வருகிற வெள்ளத்தின் கணக்கை எடுத்துக் காட்டுகிறபோது ஒரு சில நிலச்சுவாந்தார்கள் அந்தக் கணக்கை குறைத்துக் காட்டுவதால் அது சிறிய திட்டமாக அமைந்துவிடுமோ என்ற அச்சம் அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், வெள்ளையன் காலத்தில் தாம்ப்ஸன் என்பவர் இருந்தபோது தர்மபுரி மாவட்டத்தில் பெரிய ஒரு திட்டமாக இதைக் கட்ட முடியும் என்று நல்ல முறையில் எஸ்டிமேட்ஸ் எல்லாம் போட்டு வெளியிடப்பட்டதாக சொல்லப்படுகிறது. வெள்ளையன் காலத்தில், நம் நாட்டை விட்டு வெள்ளையன் வெளியேறுவதற்கு முன்பு இப்படி ஒரு திட்டம் போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நம் சுதந்திர ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னால் இந்த 18 ஆண்டு காலத்தில் இத்திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநில அளவில் சேர்ந்து திட்டக் கமிஷனால் நிராகரிக்கப்பட்டது என்பதும், நான்காவது திட்டத்தில் இது சேர்க்கப்பட்டு திட்டக் கமிஷனிடம் எடுத்துச் சொல்லப்பட்டு அதற்கு அனுமதி கொடுத்திருந்தால் மிக்க நன்றி. அப்படி நிறைவேற்றப்படுகிற திட்டம் நல்ல பெரியதொரு திட்டமாக இருக்க வேண்டும், பெரிய அளவில் அத்திட்டம் இருக்க வேண்டுமென்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாநில அரசைப் பொறுத்து ஒரு முக்கியமான யோசனையைக் கூற விரும்புகிறேன். ஜமீன் பிராந்தியங்களைப் பொறுத்தவரையில் அப்பிராந்தியங்களில் ஏறக்குறைய 12,400 ஏரிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் ஏறக்குறைய 1,500 ஏரிகள் ஜமீன் பிராந்தியத்தில் இருக்கும். ஜமீன் பிராந்திய ஏரிகள் என்றால் எல்லோருக்கும் தெரியும், அவற்றிற்கு கரைகள் இருக்காது. அப்படி கரைகள் இருந்தால் அதில் வருகிற வார்க்கால்கள் தூர்ந்திருக்கும். அதுவும் சரியாக இருந்தால் ஏரியே தூர்ந்திருக்கும். இப்படி ஜமீன்களால் கவனிக்கப்படாமலிருக்கிற ஏரிகள் தர்மபுரி மாவட்டத்தில் 1,000 இருக்கும். தர்மபுரி வட்டத்தைப் பொறுத்தவரையில் மட்டும் சற்றேறக்குறைய 500 ஏரிகள் இருக்கும். இந்த 12,400 ஏரிகளில் செப்பனிடப்பட்டது, பழுது பார்க்கப்பட்டது 3,800 ஏரிகள்தான் என்று அரசாங்க புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. ஆகவே அரசாங்க புள்ளிவிவரப்படியே பார்த்தாலும் கூட இன்னும் ஏறக்குறைய 8,600 ஏரிகள் செப்பனிடப்படாமல், பழுது பார்க்கப்படாமல், ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கின்றன. இந்நிலையை இப்படியே நீடிக்கவிடலாமா? உணவுப் பஞ்சம், உணவுப் பஞ்சம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? இந்த ஏரிகள் எல்லாம் பழுது பார்க்கப்பட்டால் கூடுதல் உற்பத்தியாகுமே என்று சிந்தித்துப் பார்த்து உடனடியாக கூடுதல் தொகை ஒதுக்கி இந்த ஏரிகள் எல்லாம் பழுது பார்க்கப்படவேண்டும், செப்பனிடப்படவேண்டும், மராமத்து செய்யப்படவேண்டும் என்று சொல்லிக் கொண்டு நேரம் இல்லாத

தினால் என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நீர்ப் பாசன மான்யக் கோரிக்கையை நான் முழு மனதுடன் பாராட்டு கிறேன், வரவேற்கிறேன். இதை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நீர்ப்பாசனத் திட்டம் என்ற உடனே நாட்டிற்கு மிக முக்கியமானது அதுதான். சமுதாயத்திலே இருக்கிற அத்தனை தொழில்களும், எவ்வளவு திட்டங்கள் வகுக்கப் பட்டாலும், நாம் மின்சாரத்தில் முன்னேறியிருக்கிறோம், கல்வியில் முன்னேறிவிட்டோம், தொழில் துறையில் முன்னேறுகிறோம், பல பல துறைகளில் நாம் முன்னேற்றம் அடைந்து வருகிறோம் என்ற நிலையில் அத்தனைக்கும் அடிப்படைத் தேவையாக இருக்கிற இந்தப் பாசன கோரிக்கைதான் மிக முக்கியமானது என்பதை வலியுறுத்தி பல திட்டங்கள் வகுக்கப்பட்டு அதில் வெற்றி கண்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் என பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நாட்டின் உயிர்நாடி போன்றது நீர்ப்பாசனம். இதிலிருந்து வருகிற வருமானத்தை மட்டும் அரசாங்கம் பார்த்ததாகத் தெரியவில்லை. நாட்டு மக்களுக்குப் பாசன வசதி செய்து கொடுத்து விளையாத நிலங்கள் எல்லாம் விளையவும், வற்றிய வாய்க்கால்களில் தண்ணீர் பெருக்கெடுத்தோடவும், ஆறுகள் கண்ட இடங்களில் எல்லாம் அணைகள் கட்டவும் இப்படியாக பல திட்டங்கள் போட்டு முன்னேறி வருவதைப் பார்க்கிறோம். பக்ரா நங்கல், பரம்பிக்குளம், பாலாறு போன்ற பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படி யிருக்க எங்கள் மாவட்டம் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த தலைவர்கள் இது பற்றிப் பேசினார்கள். அந்தக் கருத்தை நானும் இந்த சமயத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எங்களுக்கு ஒரு மணிமுத்தாறு திட்டத்தைக் கொடுத்தார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வந்த திட்டம் அது. அந்தத் திட்டத்தின் பயனாக இன்று விளை யாத நிலங்கள் எல்லாம் விளைகின்றன. அன்று ஐந்து காசு கூட பெறாத நிலங்களுக்கு இன்று குருணிக்கு 500 ரூபாய் கொடுத்தா லும் கூட அதை யாரும் விற்கத் தயாராகயில்லை. காரணம் விளை யும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அவைகளில், லாபம் அதிகமாகயிருக் கிறது. ஒரு திட்டத்தைக் கொடுத்துவிட்டோம், ஆகவே அவர்கள் வேறு திட்டங்களைப் பெறவேண்டியதில்லை என்ற நிலையில் அமைச் சர் அவர்களும், அதிகாரிகளும் எங்கள் மாவட்டத்தையே மறந்து விட்டார்களோ என்ற வகையில் எனக்கு முன்னமே பேசிய என் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் கூறியதைக் கேட்டோம். அது பற்றி நினைக்கும்போது எங்களுக்கு மனம் வருத்தமடைகிறது. சங்கரன்கோவிலில் கிரியாறு, பம்பையாறு, அச்சன்கோவிலாறு போன்ற பல திட்டங்களைப் பற்றி எங்கள் மாவட்டத்திலிருந்து வந்துள்ள அங்கத்தினர்கள் பேசினார்கள். அத்திட்டங்கள் ஏன் வராமல் இருக்கின்றன என்று எண்ணும்போது எங்களுக்கு





வருத்தம் ஏற்படுகிறது. கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பேசுவதைப் பார்க்கிறோம். பத்து ஆண்டுகளுக்கு முன்பு அங்கு இவ்வளவு விளையும் என்று சொல்லியிருக்க முடியாது. அம் மாவட்டத்திற்கு விவசாயத்திற்காக பல திட்டங்கள், பல வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம். சோழ நாடு சோறுடைத்து என்று சொல்வார்கள். தஞ்சைக்கு அடுத்தபடியாக நெல்லையிலிருந்து தான் அதிகமாக நெல்லை ப்ரொக்யூர்மெண்ட் செய்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நெல் போதிய அளவுக்கு எங்கள் பகுதியில் விளையாமல் இருந்தாலும், யானை கொடுத்தால் குதிரை வரும் என்று எண்ணி, நாங்கள் உதவி செய்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட எங்களுக்கு வரவேண்டிய திட்டங்கள் ஒன்றும் வரக் காணவில்லை. அதைப் பார்க்கும்போது மிக வருத்தமாகத் தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த மாநிலத்தில் இருக்கின்றவர்களோடு, நம்முடைய அமைச்சர்கள், அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தி, அங்கு அவர்களுக்கு தேவையில்லாத தண்ணீரை நமக்கு உபயோகப்படுத்திக்கொள் கின்ற முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய அரசில் ஆற்று நீர் ஆலோசனைக் குழு ஒன்று ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. அதே போன்று இங்கும் ஒரு குழு ஒன்று அமைத்து, நதிகளின் வரலாற்றை ஆராய்ந்து அதில் தண்ணீரைப் பெருக்கு வதற்கு ஏதாவது சாத்தியக் கூறுகள் இருந்தால் அவற்றைப் பரிசீலனை செய்து தண்ணீரை தருவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சங்கரன்கோவில் பகுதி இன்னும் நல்ல முறையில் வளர்ச்சி அடையவில்லை. அங்குதான் நல்லதங்கை சரித்திரம் நடைபெற்றது என்பதைச் சொன்னார்கள். அப்படிப்பட்ட பரிதாபகரமான சம்பவம் நடந்த இடமாகிய தேவர் குளம் என்ப தெல்லாம் இங்குதான் இருக்கிறது. இப்படிப்பட்ட இடங்களுக்கு ஏன் இன்னும் பல திட்டங்களைப் போடக்கூடாது? மணிமுத்தாறு திட்டம் மட்டும் போதும், அல்லது தாமிரபரணி என்கின்ற ஜீவ நதி இருக்கிறது என்று நினைத்து ஒன்றும் செய்யவேண்டாம் என்று இருந்து விட்டார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. மேலும் மேலும் இங்கு தண்ணீர் வசதி தேவைப்படுகிறது. ஆகவே, கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி, தண்ணீர் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாவுக்கும் ஆசை, பணியாரத்திற்கும் ஆசை என்ற அளவில் இருக்கின்ற தண்ணீரை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளவும் மாட்டோம், பிறருக்கும் கொடுக்க மாட்டோம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற கேரளாவுக்கு நாம் அவர்களுக்கு அரிசியில்லை என்று சொல்லாது, அரிசி கொடுக்கிறோம். அவர்கள் அதுவும் அரிசியை சோறாக்கி எடுத்துக் கொண்டு போகக்கூடிய நிலைமையில் நாம் உதவி செய்துகொண்டு வருகிறோம். இந்த நிலையில் அவர்களிடமிருந்து வீணாகின்ற தண்ணீரை எடுத்து, நெல்லை ஜில்லாவுக்கு எந்த அளவுக்கு கொடுக்கலாம் என்பதைப் பற்றி அவர்களோடு அடிக்கடி ஆலோசனை நடத்தி தண்ணீரைப் பெறவேண்டும் என்பதை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [16th March 1966

அதோடு பூகர்ப்ப ஆராய்ச்சி என்பது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். தாமிரபரணி ஆற்றங்கரையில் இந்த ஆராய்ச்சி செய்யவேண்டும். அதோடு கால்வாய் அருகில் கிணறு போடக்கூடாது, பம்பு செட் போடக்கூடாது என்று தடுத்துவிடுகிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன். நான் சொன்னதை அமைச்சர் அவர்கள் அங்கீகரித்து, அதிகாரிகளும் கையெழுத்துப் போட்டு விட்டார்கள். இதன் பேரில் கொடுக்கப்பட்ட பேப்பர் ரெவின்யூ போர்டில் போய் சிக்கிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட சிக்கல்களை எல்லாம் தகர்த்தெறியக் கூடிய வகையில் வழிமுறைகளை வகுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பாசனத் துறை மான்யத்தை வரவேற்று, ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சி. ம. அம்பிகாபதி:** பெருமைக்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, 1966-67-ம் ஆண்டு பாசனத்துறை மான்யக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். தமிழ் நாட்டினுடைய உணவுப் பிரச்னை தஞ்சாவூர் ஜில்லாவில்தான் இருக்கிறது என்பதை அறிந்த கனம் அமைச்சர் அவர்கள், அடிக்கடி தஞ்சையில் முகாமிட்டு, விவசாயிகளை கலந்து பேசி, எந்தெந்த முறையில் இருக்கின்ற தண்ணீரைப் பகிர்ந்து அளிக்க முடியும் என்பதைப் பற்றி ஆலோசித்து, சிக்கனமாக தண்ணீர் அளித்த பெருமை கனம் அமைச்சர் அவர்களுக்குச் சாரும். அதற்காக தஞ்சை ஜில்லா விவசாயிகள் சார்பில் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போன்று குறைந்த நீரை அணையில் வைத்துக்கொண்டு நல்ல முறையில், பாசனத்திற்கு முறையோடு வகுத்து தண்ணீர் கொடுத்த பெருமை அந்த இலாகா என்ஜினியர்களுக்குச் சாரும். இதற்காக தஞ்சை ஜில்லா விவசாயிகள் நமது இலாகா என்ஜினியர்களுக்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தேவைக்கு ஏற்ற முறையில் மைசூர் அரசாங்கம் தண்ணீர் தந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்ற பெரிய திட்டத்தை ஏற்படுத்தி அதற்கான எல்லா வேலைகளையும் தஞ்சாவூர் ஜில்லாவில் செய்து வருகிறார்கள். மேலும் தண்ணீர் வறட்சி ஏற்படக்கூடிய நேரத்தில் பூமிக்கு அடியில் இருக்கின்ற தண்ணீரை எடுத்து பம்புசெட் மூலமாக கொண்டு வந்து விநியோகிப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக 2,0000 வடிமுனை குழாய் கிணறுகள் வெட்டவேண்டும் என்று திட்டமிட்டு, தற்போது 1,200 கிணறுகள் வரை வெட்டப்பட்டு விட்டன என்றும், 1966 ஜூன் மாதத்திற்குள் மீதி கிணறுகளும் வெட்டப்பட்டுவிடும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் நான் சொல்ல விரும்புவது, தஞ்சையைப் பொறுத்த வரையில், கீழ் தஞ்சை என்றும் மேல் தஞ்சை என்றும் இரு பகுதிகளாக இருக்கிறது. கீழ்த் தஞ்சையைப் பொறுத்தவரை நீர் தேங்கக் கூடிய பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. ஆரம்பத்தில் அணையில் தண்ணீர் திறந்துவிட்டால் கடைக் கோடியில் தண்ணீர் போய்



16th March 1966] [திரு. சி. ம. அம்பிகாபதி]

சேருவதற்கு ஒரு மாதம் ஆகிறது. தலைமடையில் நாற்றுவிட்டு நாற்று நடும் போதுதான், நாற்றுவிடுவதற்கு, கடைக் கோடியில் தண்ணீர் வந்து சேருகிறது. பருவ மழை தாமதமாக பெய்வதால் நல்ல அறுவடை சமயத்தில் குறுவை நெல் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. காலத்தோடு நாற்று விட்டு, நாற்றை பாதுகாப்பதற்கு வடிமுனைக்குழாய் அவசியம் என்ற முறையில் வடிமுனைக் குழாய் கிணறு வேண்டும் என்று விவசாயிகள் கேட்கிறார்கள். அவர்களுக்கு முதலில் செய்து கொடுக்கவேண்டும். இவ்வாறு கீழ் தஞ்சைக்கு முன்னதாக கொடுத்துவிட்டு, அதற்குப் பின்னால் மேல் தஞ்சைக்கு எடுத்துச் செல்லலாம். அதில் எந்த விதமான ஆட்சேபணையும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, பம்பு செட் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முக்கியமாக எலக்ட்ரிசிட்டி பம்பு செட் ஆயில் என்ஜின் என்ற இருமுறைகளிலும் கொடுக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுவாக தஞ்சை ஜில்லாவை பொறுத்தமட்டிலும், இன்னும் பல கிராமங்களுக்கு எலக்ட்ரிசிட்டி போகாமல் இருக்கிறது. ஆகவே எல்லா கிராமங்களுக்கும் எலக்ட்ரிசிட்டியை இணைத்துக் கொடுப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது, கீழ்த்தஞ்சையின் கடலோரப் பகுதியில் வடிகால் வசதி சரியாக இல்லை. சென்ற ஆண்டில் தஞ்சை ஜில்லாவில் வடிகால் பிரச்னையை தீர்ப்பதற்காக 12 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை அமைக்கலாம் என்று அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் தஞ்சையில் ஆலோசனை நடத்தி தஞ்சை ஜில்லா விவசாய மக்களுக்கு நம்பிக்கையூட்டினார்கள். ஆனால் இது வரையிலும் அதை நடைமுறையில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. கீழ்த் தஞ்சையைப் பொறுத்த வரையில், சீர்காழி. நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி தாலூக்காக்களில் கடலோடு சேருகின்ற ஆறுகளை சங்கமாகும் இடத்தை ஆழப்படுத்த வேண்டும். இந்த இடங்களில் எல்லாம் ஸில்ட் க்ளியரன்ஸ் செய்து மண்ணை அப்புறப்படுத்தவேண்டும், அப்படி செய்துவிட்டால் நல்ல வடிவு ஏற்படக்கூடும். இந்தப் பகுதிக்கு வடிகால் பிரச்னைகளை முடிவு செய்யவேண்டும் என்ற திட்டம் அரசாங்கத்தின் கவனத்தில் நீண்ட காலமாக இருந்து வருகிறது. கீழ்த் தஞ்சையில் எந்தெந்த பகுதிகளுக்கு வடிகால் தேவை என்ற திட்டத்தை பரிசீலித்து வருகிறார்களோ அதை எல்லாம் வரும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் வருடத்திலேயே எடுத்து இந்தப் பிரச்னையை தீர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சா. ராமசாமி:** கனம் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மான்யத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் பொன்னாறு வாய்க்காலின்கீழ் 4,266 ஏக்கர் 53 சென்ட் நஞ்சை பாசனம் பெறுகிறது. 1,485 ஏக்கர் வரை புஞ்சை பாசனமாக இருக்கிறது. இந்த

ஆண்டு இந்த வாய்க்காலில் தண்ணீர் இல்லாததின் காரணமாக பயிர்கள் எல்லாம் சாவியாகிவிட்டது. இந்த ஆண்டு பருவமழை தவறியதின் காரணமாக இப்படிப்பட்ட கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வாய்க்காலில் சரியான முறையில் தண்ணீர் வருவதற்கான வழிமுறைகளை அரசாங்கம் இதுவரை செய்து தரவில்லை. அங்கு கொள்ளிடத்தின் மூலமாக தண்ணீர் கிடைக்கின்ற இடங்களில் தூர் எடுக்கப்படாததன் காரணமாக சரியாக இதில் தண்ணீர் வருவதில்லை. ஆரம்ப காலத்தில் தண்ணீர் வந்து கொண்டிருக்கும், பின்னால் வர வர குறைந்து கொண்டே போகும். ஒவ்வொரு ஆண்டும் இந்த நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. இதை சீர்படுத்தி சரியான முறையில் பாசன வசதி பெறுவதற்கான வழிமுறைகள் எதுவும் உருவாக்கப்படவில்லை. அதாவது கொள்ளிடம் தண்ணீர் ஹெட் அருகில் கரையோரமாக சென்று கொண்டிருந்தது. அப்போது தண்ணீர் நல்ல முறையில் வந்து கொண்டிருந்தது. தற்சமயம் தண்ணீர் தள்ளித் தள்ளி சென்று கொண்டிருக்கிறது, அதனால் வாய்க்காலிலும் தண்ணீர் வருவதில்லை. ஆகவே, இந்த ஹெட்டை மாற்றி அமைத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து மருதையாறு மூலமாக இந்த வாய்க்காலுக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இருந்தது, பின்னால் அது ஒத்தி வைக்கப்பட்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்படி நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டில் இதை எடுத்து நிறைவேற்றினால், கிட்டத்தட்ட 6,000 சொச்சம் ஏக்கர் நிலங்கள் இதன் மூலம் பலன் பெறும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, நந்தியாறு வாய்க்கால் மூலமாக, கண்டிராதித்தம் பெரிய ஏரியின் மூலம் 4,357 ஏக்கர் நஞ்செய் நிலமும், 1,700 ஏக்கர் புஞ்செய் நிலமும் பாசனம் ஆகிக்கொண்டு வருகிறது. அந்த ஏரி ஆரம்ப காலத்தில் 15 நாட்களுக்கு நீர் கொள்முதல் இருக்கிற அளவுக்கு விஸ்தரிக்கப்பட்டிருந்தது. இப்போது ஒரு நாளைக்குக்கூட இத்தனை ஏக்கர் நிலத்திற்கும் தண்ணீர் பாயக் கூடிய நிலைமையில் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தூர் எடுக்கப்படாது 60–70 ஆண்டு காலமாக இருந்து வருகிற காரணத்தினால் சரியான முறையில் தண்ணீர் தேங்குவதில்லை. அதையும் தூர் எடுத்து, செம்மைப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஏரிக்கு நந்தியாறு மூலமாக வரும் தண்ணீர் சரியாக இல்லை. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் 40,000 ரூபாயில் சொந்தமாக வசூலித்து செங்கரையூர் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். அதை கனம் அமைச்சர் அவர்கள்கூட அங்கு வந்து பார்வையிட்டதாகத் தெரிகிறது. இதற்கான 40,000 ரூபாயை வசூல் செய்வதற்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை அரசாங்கமே நேரடியாக எடுத்து, வசூலித்திருக்கக் கூடிய பணத்தைத் திருப்பி கொடுத்து விட்டு, அதிகச் செலவு ஆனாலும் மொத்தச் செலவையும் ஏற்றுக் கொண்டு அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





விசேஷ நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சேருபதிக் கருப்பூர் என்ற ஊருக்கு அருகில் உள்ள ஓடையில் அணை கட்டினால், கல்லக்குடி, கருப்பிலாக் கட்டளை, கீழவண்ணம் ஆகிய கிராமங்களில் உள்ள ஏரிகள் மூலம் நல்ல முறையில் பாசன வசதி ஏற்படும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

புள்ளம்பாடி வாய்க்கால் திட்டத்தின் மூலம் ஏலாக்குரிச்சியிலிருந்து நரியனூர் வரையில் 400 ஏக்கர் பாசன வசதி பெறாமல் இருக்கின்றன. ஏலாக்குரிச்சியில் வண்ணான் ஏரியை அகலப்படுத்தி, ஆழப்படுத்திக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

புள்ளம்பாடி தலைமை வாய்க்காலானது கீழக்குளத்தூர் சின்ன மூப்பனூர் ஏரி, ஆதித்திராவிடன் ஏரி ஆகிய ஏரிகளின் குறுக்கே சென்ற காரணத்தினால் அவைகளின் மூலம் பாசனம் ஆகி வந்த 60 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு இன்று வரையில் நீர்ப்பாசன வசதி செய்யப்படவில்லை. ஆனால் அரசாங்கம் அவர்களிடமிருந்து நீர் வரி வசூலிக்கிறது. அதற்கு திர்வையும் அதிக நீர்வரியும் வசூலித்துக் கொண்டிருக்கிறது. பல முறை எடுத்துச்சொல்லியும் கேளாக் காதினர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்வதோடு, உடனடியாக அவர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விசேஷ நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலமாக இரண்டு ஏரிகளையும் தனி ஏரியாக்கி அந்த நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1961-ம் ஆண்டிலே புள்ளம்பாடி பகுதியிலே அமைச்சர் அவர்கள் பார்வையிடுகிற நேரத்தில் சுக்கிரன் ஏரியில் புத்தூர் அருகில் ஒரு மதகு வைத்து தண்ணீரைப் பாசனத்திற்கு விடவேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூறினார்கள். அதிகாரிகளும் உடனே மதகு வைத்து விட்டார்கள். 300 ஏக்கர் அந்த ஆண்டு பாசனம் ஆகியது. ஆனால், அடுத்த ஆண்டு என்ன காரணத்தினாலோ அந்த மதகை எடுத்து விட்டார்கள். மூன்று ஆண்டு காலமாகப் பாசனம் இல்லாமல் இருக்கிறது. பாசன வசதி ஏற்பட அந்த மதகை மறுபடியும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. துரைப்பாண்டியன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து நான் சில வார்த்தைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு இயற்கையின் சோதனை காரணமாக திருநெல்வேலி ஜில்லாவில் பஞ்சம் வந்து விடுமோ என்று பரிதவிக்கும் நேரத்தில், அமைச்சர் அவர்களுடைய திறமையினாலும், அவரைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களாலும் கட்டுப்பாடு வைத்துத் தண்ணீரைப் பாய்ச்சி, குறைந்த தண்ணீரில் அதிக விளைச்சல் காட்டினார்கள். அதை நாம் போற்றுகிறோம்.

அதே மாதிரியாக இந்த ஆண்டு துவக்கத்தில் மழை இல்லாமல் போய்விடும் என்ற பயம் நாட்டிலே பரவலாக இருந்தபோது அமைச்சர் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவுக்கு வந்தார்கள். அப்போது மணிமுத்தாறு அணையை நேரில் போய்ப் பார்த்தார்கள். அங்கு உள்ள மரங்கள், தென்னைகள், மா மரங்கள் எல்லாம் பட்டுப் போயிருந்தன. அந்த நேரத்தில் அவர்களே வருத்தப்படும்போது, எங்கள் ஜில்லா ஜனங்கள் எல்லாம், ரிஷ்யசிருங்கர் மாதிரி அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார், இன்றே மழை பெய்யும் என்று நம்பிக்கொண்டிருந்தார்கள். கேலியாக என்னிடத்தில் கூடச் சொன்னார்கள். நான் அதற்கு உண்மையிலேயே மழை வரும் என்று சொன்னேன். என்னுடைய தொகுதி பூராவிலும் சுற்றிக் கொண்டு கடைசிக் கூட்டம் முடிந்து ஊருக்குத் திரும்பும்போது அன்றே மழை வந்தது. அந்த மழை காரணமாக மணிமுத்தாறு பெருகிவிட்டது, பாபநாசம் பெருகி விட்டது. மணிமுத்தாறு மூலமாகப் பாயக்கூடிய குளங்கள் எல்லாம், மணிமுத்தாறு தண்ணீர் இல்லாமலேயே மழைத் தண்ணீரால் நிறைந்து விட்டன. நாங்குனேரி மக்கள், மணிமுத்தாறு தேக்கத்தில் 80 அடிக்கு மேல் தண்ணீர் வந்து விட்டது. மறுபடியும் தண்ணீர் விடுவார்கள், இரண்டாம் போகம் விளையும் என்று மிக மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். இந்த நேரத்தில் எல்லோரும் யோசிக்க வேண்டியது, ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீணாகப் போகக் கூடாது என்பதுதான். ஏனென்றால் இப்போது உள்ள உணவுப்பஞ்சம் இரண்டாம் போகம் விளையுமா என்றால் விளையும் என்று நிச்சயமாக நம்பலாம். இப்போது ஒரு போகம் அறுவடை ஆகிவிட்டது. எஞ்சிய தண்ணீர், குளங்களில் ஒரு மாதத்திற்குத் தேவையான அளவுக்கு இருக்கிறது. நாற்றுக்கு ஒரு மாதம் ஆகிறது. மேலும் ஒரு மாதத்திற்குத் தண்ணீர் விட்டால் போதுமானது. வள்ளியூர், நாங்குனேரி, திருக்குறுங்குடி, விஜயநாராணன் என்று நான்கு பெரிய குளங்கள் இருக்கின்றன. இந்த நான்கு ஏரிகளைக் கொண்டுதான் நாங்குனேரி என்று பெயர் வந்தது. மணிமுத்தாறு தேக்கத்திலிருந்து விஜயநாராணன் ஏரிக்குத் தண்ணீர் விட்டால் திருச்செந்தூர் வரையில் உள்ள நீர் ஊற்றுக்களில் கிணறுகளில் தண்ணீர் வற்றாது, மணிமுத்தாறு தண்ணீர் மூலமாக இரண்டாவது போகம் மட்டுமல்ல, பம்புசெட்டு மூலமாக, கிணற்று இறவை உற்பத்தி ஆகிறது. இந்த வேளையில் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று உரிமையோடு கேட்கலாம். ஏனென்றால் 80 அடிக்கு மேல் உள்ள தண்ணீர் நாங்குனேரிக்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உணவுப் பஞ்ச நிலையில் அவர்கள் நல்ல முறையில் உற்பத்தி செய்வார்கள் என்று கூறி அவர்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல 136 குளங்கள் மணிமுத்தாறு திட்டத்தில் மேலும் சேர்க்கலாம் என்று அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். முன்னால் பேசிய அங்கத்தினர்கள் 10 குளங்களை கட்டாயம் சேர்க்கவேண்டுமென்று வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அரசாங்கத்திலே 136 குளங்





களையும் கட்டாயம் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்பியாற்றில் குடமாடி அணை கட்டவேண்டுமென்று சொன்னோம், சர்க்காரிலே புள்ளிவிவரப்படி தண்ணீர் இல்லை என்று சொன்னார்கள். என்றாவது ஒரு நாள் ஆற்றில் வெள்ளம் வருகிறது. மழையினாலேயே குளங்கள் அத்தனையும் நிறைந்து போகும்போது தண்ணீர் எல்லாம் கடலில் போய்ச் சேருகிறது. அப்படி இல்லாமல் அணைக்கட்டு கட்டினால், வரக் கூடிய தண்ணீரைத் தேக்கி வைத்து பிற்பட்ட இடங்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தால் நல்ல முறையில் பயன்பட வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக இந்த அணையை எடுத்துக்கொண்டால் . . . (மணி அடிக்கப்பட்டது).

**திரு. ஆ. துரையரசன்:** கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக்கொண்டிருக்கிற நீர்ப்பாசன மான்யக் கோரிக்கையின் மீது எங்களுடைய கட்சிக்காரர்கள் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் எட்டிப்பிடிக்கிற நிலைமையிலேகூட இன்னமும் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு நம்முடைய திட்டங்கள் செயலாற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எங்கள் தரப்பிலே தரப்பட்டதைவிட, சற்று அதிகமாக, வேகமாக ஆளும் கட்சித் தரப்பிலே, குறிப்பாக நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை அதிகமாக எடுத்து வைத்தார்கள். நம்முடைய மாநிலத்திலே தண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அண்டை மாநிலங்களோடு நல்ல பேச்சுவார்த்தை நடத்தி பற்றாக்குறையைப் போக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே திட்டத்திலே நாம் மேட்டூர் தண்ணீரையும் காவேரித் தண்ணீரையும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைவிட இன்னும் பாசன வசதி இல்லாத பகுதிகளுக்கு, அடியில் உள்ள நீரை, நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பதில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், 12-00 noon
மேட்டூர் கால்வாய், காவேரி நீர் கால்வாய் பாசனம் என்று சொன்னாலும், பட்டுக்கோட்டை அறந்தாங்கி ஓரத்தநாடு ஆகிய இடங்களில் பல பகுதிகளில் நீர்ப்பாசனம் இல்லாத ஒரு சூழ்நிலையில், வானத்தையே நம்பி வாழ வேண்டிய துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. அந்த வட்டாரத்து மக்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அறந்தாங்கி வடபகுதியிலே மாமடக்கி, கணையக்காடு, காசக்காடு, ஆண்டவராய சமுத்திரம் ஆகிய இடங்களில் பூமிக்கு அடியிலே நீர் ஊற்று இருக்கிறது. ஊத்துக்குழி என்ற ஒரு கிராமமே இருக்கிறது. நீர் ஊற்றை பயன்படுத்திக்கொள்வதற்

[திரு. ஆ. துரையரசன்] [16th March 1966

கான திட்டத்தை உடனடியாக அந்த வட்டாரத்திற்கு விரிவுபடுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்களை தங்கள் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன். வெள்ளாற்றுப் பகுதிக்கு ஆரம்ப காலத் திலேயே அந்த வட்டாரத்தில் உள்ள ஏரிகளுக்கு மேட்டூர் தண்ணீரை நிரப்பிக்கொள்ள வேண்டும் என்று ஒரு குழு அமைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், அமைச்சர்களையும் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்ப காலத்தில் அதாவது ஐப்பசி, கார்த்திகை போன்ற மாதங்களில் அல்லது கடைசியில் வீணாகக் கடலில் போய் விழுகிற நீரை வெள்ளாற்றில் கொண்டு வந்து சேர்க்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

என்னுடைய வட்டாரத்தில் ஏராளமான ஏரிகள் பி.டபிள்யூ.டி.யினால் புதுப்பிக்கப்படாமல் இருக்கின்றன. பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வட்டாரத்தில் ஜமீன் குளங்கள் ஏராளமாக இருக்கின்றன. 100 ஏரிகள் இன்னும் செப்பனிடப்படாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதை உடனடியாகக் கவனித்து, விவசாயத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய இந்த சந்தர்ப்பத்தில், இந்த இலாகாவினுடன் ஆலோசனை நடத்தி, ஆளும் கட்சி சார்பிலே கேட்டுக்கொண்டது போல அதற்கு ஒரு குழுவை நியமித்து அந்தக் குழுவை மாவட்ட வாரியாக சுற்றுப்பிரயாணம் செய்ய வைத்து, எங்கெல்லாம் ஏரிகள், குளங்கள் தூர்ந்துபோயிருக்கின்றன, எங்கெல்லாம் தூர் எடுக்கப்படவேண்டும் என்று கவனித்து செய்யுமாறு இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் எங்களுடைய வட்டாரத்தைச் சேர்ந்தவராக இருக்கிற காரணத்தினால் புதுக்கோட்டை, அறந்தாங்கி, கிழக்கு ராமனாதபுரம் ஆகிய பகுதிகளுக்கு காவேரி நீர் திட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்று நீண்ட நெடுங்காலமாக பேச்சு இருந்துகொண்டிருக்கிறது. ஆளும் கட்சி தரப்பிலிருந்து பேசிய அங்கத்தினர்கள் அமராவதி தண்ணீரை கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். அமராவதித் திட்டம் புதுக்கோட்டைக்கு வரும் என்று எதிர்பார்த்தோம். காவேரி நீரைக் கொண்டு வந்தால் அறந்தாங்கி, கிழக்கு ராமநாதபுரம் ஆகிய பகுதிகள் பலன் அடையமுடியும். அதையும் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். உணவு இலாகாவும், ரெவின்யூ இலாகாவும் . . . (மணி அடிக்கப்பட்டது).

* திரு. நா. சௌந்திரபாண்டியன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் நீர்ப்பாசன மான்யக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் நீர்ப்பாசன வசதி நல்ல முறையில் செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக அமைச்சர் அவர்களையும், அவரைச் சார்ந்த இலாகாவையும் நான் பாராட்டுகிறேன்.



16th March 1966] [திரு. நா. சௌந்திர பாண்டியன்]

சித்தாறு பட்டணங்கால் திட்டத்தின் கீழ் எதிர்பார்த்த அளவு வேலை நடைபெறவில்லை என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்காக கட்டப்பட இருக்கும் இரு நீர் தேக்கங்களும் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. மேலும் இராதாபுரம் கால்வாயில் முன்பு துரிதமாக வேலை நடந்து வந்தது. இப்பொழுது வேலை சிறிது தாமதப்பட்டுக்கொண்டிருக்கிறது. இதை நல்ல முறையில் துரிதப்படுத்தி, உப கால்வாய்களை உடனடியாக வெட்டி, விரைவில் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் திட்ட ரீதியிலே பயன் நிர்ணயக்குழு கன்யாகுமரி மாவட்டத்திற்கு ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒன்றும் இருப்பதாக ஆய்வுரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் குழு எப்படி செயல்படுகிறது, அதில் யார் யார் அங்கத்தினர்கள், அதில் உத்தியோகப் பற்றற்றவர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்களா அல்லது விவசாயப் பெருமக்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்களா என்பதையெல்லாம் நான் அறிய விரும்புகிறேன்.

மேலும் அமைச்சர் அவர்கள் ஆய்வுரையிலே "500 ஏக்கரா ஆயக்கட்டுக்கு ஒன்று விதம் மூன்று ஏக்கரா பரப்புள்ள 8 விவசாய பயிற்சி பண்ணைகள் துவக்கப்பட்டு விவசாயிகளுக்கு புன்செய் சாகுபடியில் பயிற்சி அளித்து வருகின்றன" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்கு, யாருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என்று தெரியவில்லை. அப்படி பயிற்சி பண்ணைகள் செயல்படுவதாகத் தெரியவில்லை.

இராதாபுரம் கால்வாயின் கீழுள்ள சில கிராமங்கள் தானாகவே தண்ணீர் பாயக்கூடிய வசதி பெற்றிருக்கின்றன. அதாவது கூடங்குளம், விஜயாபதி கிராமங்கள் இந்தத் திட்டத்தில் சேரவில்லை. இந்த கிராமங்களையும் இந்தத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பணகுடி மலையில் அர்த்தலை ஆறு திட்டம் சம்பந்தமாக பூர்வாங்க ஆராய்ச்சி, சர்வே நடந்திருக்கிறது. மக்கள் நீண்டகாலமாக கேட்டுக் கொண்டிருக்கிற கோரிக்கை அது. இதிலே அரசாங்கம் உடனே கவனம் செலுத்தி, இந்த வேலையை துரிதமாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதன் காரணமாக கிட்டத்தட்ட 1000 ஏக்கர் நிலங்களுக்கு மேல் பயன் அடையும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் வடமலையான் கால்வாய் என்ற ஒரு கால்வாய் பொதுப் பணித்துறை நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டு ஏறத்தாழ 4 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் ஒரு வேலையும் நடக்கவில்லை. அதனை சீர்திருத்தி, செம்மைப் படுத்தி எல்லாக் குளங்களுக்கும் எளிதில் தண்ணீர் கிடைக்கும் வகையில் செய்து கொடுக்கவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்பியாற்றுப் பாசன திட்டத்தை செம்மைப்படுத்தி, ஒழுங்குபடுத்தவேண்டும் என்று இந்த மன்றத்தில் பல தடவை சொல்லியிருக்கிறேன். அதை ஒழுங்குபடுத்தினால் நல்ல பலன் அடைய முடியும். அதிலுள்ள கோவங்குளம் அணைக்கட்டு, புலிமாங்குளம் அணைக்கட்டுகள் பழுதடைந்திருக்கின்றன. வருவாய் துறையைக் கேட்டால் அது பொதுப் பணித்துறை மேற்பார்வையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பொதுப் பணித் துறையைக் கேட்டால் பஞ்சாயத்து யூனியனைக் கேட்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதை மாற்றி இதைப் பொதுப் பணித் துறையில் நிர்வாகத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். புலிமாங்குளம் என்ற குளத்தை பழுதுபார்க்க 1958-ம் வருடமே மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டன. இதையும் விஜயநாரணத்தின் கீழுள்ள பீலி குளம் சப்ளை சானலையும் உடனடியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

* திரு. அ. தியாகராஜன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, புதுக்கோட்டை பகுதிக்கு அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு ஒரு திட்டம் இருப்பதாக அண்மையிலே வெளியிடப்பட்டிருந்தது. கனம் அங்கத்தினர் நல்லசாமி அவர்களும், கனம் அங்கத்தினர் சதாசிவம் அவர்களும் இதற்கு இங்கே எதிர்ப்பு தெரிவித்தார்கள். நீண்ட நெடுங்காலமாக காவேரி ஆற்றுத் தண்ணீர் கொண்டு வருவது பற்றி பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்களும் வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். இப்பொழுது அமராவதி ஆற்றுத் தண்ணீர் கொண்டுவரப்படும் என்று சொல்லுகிறார்கள். கரூர் பகுதிக்கு தண்ணீர் போக பாக்கி இருப்பது புதுக்கோட்டை பகுதிக்கு வரவேண்டும் என்றால் மணலைத் தவிர வேறு ஒன்றும் வராத நிலைமை இருக்கிறது. ஆகவே, இதற்கு காவேரி ஆற்றுத் தண்ணீர் தான் ஏற்றது என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்குக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ஏற்கனவே சுந்தரப்பட்டி கிராமம் பக்கத்தில் ஒரு அணைக்கட்டு இருந்தது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்று பல முறை இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். அதை கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். அதற்குள்ளே அது தற்சமயம் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டுவிட்டது. அதை உடனே மராமத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏரி, குளங்கள், கண்மாய்கள் இவைகளையெல்லாம் வெட்டுக்கு விடவேண்டும் என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இனும் குளங்கள் நிறைய இருக்கின்றன. அவைகளையெல்லாம் நல்ல முறையில் வெட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நீர் பழனி கண்மாய் கலங்கல் தண்ணீரை செங்களாக்குடி கண்மாய்க்கு திருப்பி விடவேண்டும். அந்தத் தண்ணீர் வீணாக காவேரிக்குப் போகிறது. அப்படித் திருப்பிவிட்டால் பாக்குடி, ஆலூர் போன்ற பகுதிகளுக்கு பலன் கிடைக்கும்.





அடுத்து, பின்தங்கிய பகுதிகள் என்று பிரகடனப்படுத்த வேண்டும் என்று அண்மையில் பாராளுமன்றத்தில் இடது சாரி கம்யூனிஸ்டு எம்.பி. திரு. உமாநாத் அவர்கள் இதுபற்றி ஒரு கேள்வியைக் கூட கேட்டார்கள். அந்தக் கேள்விக்கு கனம் பகத் அவர்கள் பதில் கொடுத்திருக்கிறார்கள்.

"Replies to Planning Commission's letter of January 5, 1965, enclosing a list of selected Indicators of Development have been received from all State Governments except Madras."

ஆகவே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேர்ப்பதற்கு புதுக்கோட்டை, அறந்தாங்கி, கிழக்கு ராமநாதபுரம் ஆகிய பகுதிகள் பின்தங்கிய பகுதிகள் என்று பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. எஸ். ஆனந்தன் : கனம் சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மான்யக்கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச முன் வந்துள்ளேன். கள்ளக்குறிச்சி தாலூகாவிலே கோமுக நதி நீர்த்தேக்கம் கட்டப்பட்டு முடிவடையும் தறுவாயில் உள்ளது. தற்பொழுது இந்த ஆண்டு கள்ளக்குறிச்சி தாலூகாவில் மணிமுத்தாறு திட்டம் தயாரிக்கப்பட்டு 10 லட்சம் ரூபாய் செலவு செய்ய இந்த அரசாங்கம் திட்டமிட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதோடு, அந்த வட்டார மக்கள் சார்பாக அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. டி. என். வடிவேல் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 1966-67-க்கான நீர்ப்பாசன மானியத்தை ஆதரிக்கிறேன். தமிழகத்திலே நீர்வளத்தை 94 சதவிகிதம் பாசனத்திற்கு வகை செய்தாகி விட்டது என்று அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கியிருக்கும் 6 சதவிகிதத்தை தர்மபுரி மாவட்டத்திற்கு பாசன வசதி செய்து கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். நாங்கள் மூன்றாவது திட்டத்திலேயும் எந்தவிதமான பாசனவசதியையும் அடைய முடியவில்லை. அங்கே பல சிறு பாசனங்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், கோமையாறு, வரட்டாறு முதலிய திட்டங்கள் இருக்கின்றன. இவை பல நாட்களாகக் கேட்கப்பட்டு வருகின்றன. வரட்டாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால், தர்மபுரி ஏரிக்கு தண்ணீர் கிடைத்து, பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பாசனம் அடைய முடியும். அத்திக்குட்டைப் பள்ளம் திட்டம் பற்றி ஜில்லா வளர்ச்சி மன்றத்தில் கேட்கும்போது, அது புதிய திட்டம் என்றும் . . . (மணியடிக்கப்பட்டது).

* திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விருத்தாசலம் தாலூகாவில், வெலிங்டன் ரிசர்வாயர் என்ற ஒரு நீர்த் தேக்கம் இருக்கிறது. அதன் மூலம் 28,000 ஏக்கர் பயனடையும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அவ்வளவு ஏக்க

ருக்கும் வசதி செய்து கொடுக்கவில்லை. காரணம், தொழுதூரிலிருந்து வரும் வாய்க்கால் குறுகலாக இருக்கிறது. நீர் பிடிப்பு இல்லை. அதே போல, கீவளூரில் புதிய அணைக்கட்டு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டு, மந்திரி கக்கன் அவர்களும், செய்தித் துறை அமைச்சரும் வந்து துவக்க விழா நடத்தினார்கள். ஆனால் வேலை தொடங்கவில்லை. அது நல்ல திட்டம் என்பதால், அந்த வேலையைத் துவக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த சந்தர்ப்பம் கொடுத்த உங்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைக்கு ஒதுக்கியிருக்கும் தொகை குறைக்கப்பட வேண்டும் என்று வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கப்பட்டு இருந்தாலும், அதிகப்படுத்தப்பட வேண்டும். என்கிற யோசனைகள் சொல்வதற்காகவே அன்றி குறைப்பதற்காக அல்ல. நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்கு இந்த இனத்தில் ஒதுக்கப் பட்டிருக்கும் தொகையைப் பார்த்தால், அடுத்த 4, 5 வருஷங்களுக்கு இந்த இனத்தில் வேலை நடக்குமா, நடக்காதா என்கிற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது. மூன்றாவது திட்டத்திற்கு 27 கோடி ரூபாய் ஒதுக்கி யிருந்தும், 31 கோடி ரூபாய் அளவிற்குத் தான் செலவு செய்யப்படுகிறது. பலன் எப்படி என்பதைப் பற்றி பின்னால் ஆராய்கிறேன். நான்காவது திட்டம் ஆரம்பமே ஏன் சுறுசுறுப்பாக இல்லை என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நான்காவது திட்டத்திற்கு அதிகப்படியாக மதிப்பீடு செய்து இருந்தும் 1966-67-க்கு ஒதுக்கியிருக்கும் தொகை ரூ. 5,70,000 என்று அமைச்சர் கொடுத்திருக்கும் விவரங்களிலிருந்து தெரிகிறது. ஏன் இவ்வளவு குறைவாக இருக்கிறது? அப்படிக் குறைவாக இருப்பது, நான்காவது திட்டமே வருமா, அல்லது வாராதா என்கிற சந்தேகம் இருப்பதைக் காட்டுகிறதா என்று அறிய விரும்புகிறேன். அமைச்சர் தன்னுடைய பதிலிலே அதைத் தெளிவு படுத்த வேண்டும். குறைவான அலாட்மெண்டுக்குக் காரணம் என்ன? வேலைகள் எடுக்கப்பட மாட்டாவா? எடுக்கப் படமாட்டா என்பதற்கு அறிகுறியா? மூன்றாவது திட்ட காலத்தில் நிறைவேற்றப் பட்டிருக்கக் கூடிய சில வேலைகளைப் பார்க்கும்போது அவை பூர்த்தி செய்யப்பட்டு பயன் பெற்றது எவ்வளவு என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். மூன்றாவது திட்டத்திலே, இரண்டு திட்டத்திலே தொடங்கப்பட்டவை, மூன்றாவது திட்டத்திலே பூர்த்தி செய்யப்பட்டவை, இவையெல்லாம் சேர்த்து, சில புள்ளி விவரங்களை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

அமராவதி ரிசர்வாயர் ப்ராஜக்ட்டில் திட்டமிட்ட இலக்கு 53,500 ஏக்கர். ஆனால், இந்த வேலை தொடங்கப்பட்டது 1957-ல் என்றாலும், இது வரையில், 1965 செப்டம்பர் முடிய, பூர்த்தியாகி பாசனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது 51,474 ஏக்கர்; கிட்டதட்ட 2,000 ஏக்கருக்கு அதிகமாகத் துண்டு விழுந்திருக்கிறது. அதேமாதிரி வைகைத் திட்டத்திலே 4,000 ஏக்கரா துண்டு விழுந்து



இருக்கிறது. திட்டம் 1959-ல் தொடங்கப்பட்டது. சாத்தனூர் திட்டத்திலே அதற்குத்தக்க வகையிலே 801 ஏக்கரா துண்டு விழுந்து இருக்கிறது. கிருஷ்ணகிரி திட்டத்தில் 2,900 ஏக்கரா துண்டு விழுந்து இருக்கிறது. (குறுக்கீடு) பாசனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை என்பதைச் சொல்லுகிறேன்.

அடுத்து, புதிய கட்டளை வாய்க்கால் திட்டம். இதிலே 2,500 ஏக்கர் என்று அரசாங்கக் கணக்கு. ஆனால், அகௌண்டண்ட்-ஜெனரல் கணக்குப்படி, 5,000 ஏக்கர் குறைபாடாக இருக்கிறது என்பது. 2,550 ஏக்கர் என்றே எடுத்துக் கொள்ளலாம். புள்ளம் பாடிக் கெனாலில் 2,356 ஏக்கர் துண்டு. இவை 1959-லே தொடங்கப்பட்டவை. நான் அதிகமாகக் கவனம் செலுத்துவது என்னுடைய மாவட்டத்தில் இருக்கும் இரண்டு திட்டங்கள் பற்றி அப்படித் துண்டு விழுந்து இருப்பதற்கு என்ன சமாதானம் சொல்லப்படுகிறது? கட்டளை வாய்க்காலையும், புள்ளம்பாடி வாய்க்காலையும் எடுத்துக்கொள்ளலாம். கட்டளை வாய்க்கால் பற்றி அது என்னுடைய தொகுதியில் இருப்பதால், எனக்கு விவரம் தெரியும். என்ன காரணம் கொடுக்கிறார்கள்? "Ryots neglet" விவசாயிகளே புறக்கணித்துவிட்டார்கள் என்கிறார்கள். பாசனத்திற்குக் கொண்டு வராமல் இருப்பது 1207 ஏக்கர் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல காரணங்களுக்காக இலக்கிலிருந்து விலக்க வேண்டியது என்றும், மொத்தம் 1600 ஏக்கர் என்றும் கொடுத்திருக்கிறார்கள். அது பற்றி அமைச்சர் அவர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் மகஜர் கொடுத்திருக்கிறேன். அவர்கள் அந்தப் பகுதியல் கவனம் செலுத்துகிறார்கள் என்றால், நோக்கம் வேறாக இருக்கலாம். இருந்தாலும், அவர்கள் இந்த திட்டத்திலே அதிகக் கவனம் செலுத்தக் கூடியவர்கள். எத்தனை கிராமங்களுக்கு பாசன வசதி கொடுத்திருக்கிறார்கள்? என்ன சொல்லுகிறார்கள்? ரயத்துக்கள் கவனம் செலுத்தவில்லை, புறக்கணிக்கிறார்கள் என்கிறார்கள். ரயத்துக்கள் புறக்கணிக்கவில்லை, ரயத்துக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள், ஏழு வருஷமாக, டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் சொல்லியும், அரசாங்கத்தில் தொடர்பு கொண்டும், ஒன்றுகூட பரிசீலிக்கப்படவில்லை, அனுமதிக்கப்படவில்லை. 2,550 ஏகரா பாசனவசதி பெறுவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறபோது ஏன் இதைக் கவனிக்கவில்லை? இந்த வாய்க்காலுக்கு மட்டும் தனி அந்தஸ்து கொடுத்திருக்கிறார்கள். ஒரு கிராமத்திற்கு விஸ்தரிக்க வாய்ப்பு இருந்தால், அதை சீப் என்ஜினியர் அல்லது எஸ்.ஈ. மட்டத்தில் செய்துவிட முடியாது. நேரிடையாக அரசாங்கத்திற்கு வரவேண்டும். என்னுடைய தொகுதி என்கிற பாவத்தாலோ என்னவோ, அதற்கு அந்த விசேஷ அந்தஸ்து. அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான் விஸ்தரிக்கப்படவேண்டும். இப்படியிருந்தால், எப்படி வளர்ச்சி ஏற்படும்? புள்ளம்பாடிக் கால்வாயை எடுத்துக் கொண்டாலும், 2,366 ஏக்கர் பயன் பெறாமல் இருக்கிறது. ரயத்துக்கள் நெக்லட் செய்தது 1,149 ஏக்கரும், இன்னும் வேறு பல காரணங்களுக்காக பாக்கி என்றும் தெரிகிறது. கட்டளை வாய்க்கால் சம்பந்தப்பட்டவரை, கிராமங்களிலே பாசனத்திற்கு நிலங்கள் வாராததற்குக் காரணம், அரசாங்

கம் புறக்கணித்தால், ரயத்துக்கள் புறக்கணித்ததால் அல்ல. பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. இந்தத் திட்டம், எத்தனை ஏக்கர்களுக்கு பாயும் என்று கூறுகிறோமோ, அதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதற்கு முன்னோடியாக, அடி மட்டத்திலேயே இருக்கக் கூடிய அதிகாரிகளையும், பொதுமக்கள் பிரதிநிதிகளையும், ரெவின்யூ அதிகாரிகளையும், உணவு உற்பத்தித் துறை அதிகாரிகளையும், ஒன்று சேர்த்து, அடிக்கடி விவாதித்து, விஸ்தரிக்கப்படவேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறது. அதன் பேரில் முடிவு எடுக்கப்பட்டதா? வேறு என்ன செய்யலாம் என்று ஆலோசிக்கப்பட்டதா? இன்னும் புதிய பகுதிகளுக்குக் கொடுக்கலாம் என்பது பற்றி யோசிக்கப்பட்டதா? கொடுத்த யோசனைகள் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் ரயத்துக்கள் மேல் பழி போட வேண்டாம். அதிகாரிகளைக்கூட குறை சொல்ல மாட்டேன். அரசாங்கத்திற்கு அரசியல் காரணம் இருக்குமா என்னவோ, எனவேதான் இதையெல்லாம் ஊறுகாய்ப் பானையில் ஊறப் போட்டு வைத்திருக்கிறார்கள். இதை அரசியல் பிரச்சினையாகக் கருத வேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன். வளர்ச்சி திட்டங்களில் அரசியலைப் புகுத்தி, மக்களை பழி வாங்கவேண்டாம், வாங்கக்கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசியலை தேர்தலுக்கு வைத்துக் கொள்ளலாம். அவர்கள் எத்தனையோ அக்கறை செலுத்துகிறவர்கள். செலுத்தட்டும். என்னுடைய தொகுதி என்று குறைக்க வேண்டாம்.

அதே போன்று இன்னும் பல இருக்கின்றன. இந்தத் துறையைப் பற்றிப் பேசிய கனம் அங்கத்தினர்கள் பலர் பல திட்டங்களைப்பற்றிக் கூறினார்கள். இன்னும் பாசன வசதியைப் பெருக்கி நம்முடைய ராஜ்யத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதிலே கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். புதிய திட்டங்கள், மீடியம் இரிகேஷன் திட்டங்கள், இடைநிலைத் திட்டங்கள் இவற்றில் எல்லாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். பூமிக்கடியில் இருக்கும் ஜலத்தை மேலே கொண்டுவந்து பாசன வசதி அளிக்கவேண்டும் என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். அதில் ஏதோ நல்ல ஒரு அறிகுறி இருக்கிறது. பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு ஒரு தனிக் குழு ஏற்படுத்தி ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன, அது பலன் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது நல்ல அறிகுறி.

இடைத்தரத் திட்டங்களின் கதி என்ன ஆயிற்று? திருச்சி, சேலம் மாவட்டங்கள்—இப்பொழுது புதிதாக ஏற்பட்டிருக்கக் கூடிய தருமபுரி மாவட்டம் இருக்கிறது. நான் 'சேலம் மாவட்டம் என்று குறிப்பிடுவது, பழைய சேலம் மாவட்டத்தைத்தான்—இந்த இரண்டிலும் இடைநிலைத் திட்டங்கள் பல பரிசீலனை செய்யப்பட்டிருக்கின்றன. குடகனாறு திட்டம், நொய்யல் திட்டம், மருதையாறு திட்டம், கொல்லிமலை திட்டம், சின்னாறு திட்டம், தொப்பை





யாறு திட்டம் ஆகிய திட்டங்கள் இருக்கின்றன. சின்னாறு திட்டம், தொப்பையாறு திட்டம் ஆகிய இந்த இரண்டும் சேலம், தருமபுரி மாவட்டங்களுக்குரிய திட்டங்கள். இந்த இரண்டு திட்டங்களினுடைய நிலை என்ன ஆயிற்று? இவை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. மூன்றாவது திட்டம் முடிந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறோம். கடனாநதித் திட்டம் வர வேண்டும் என்பது நான் என்னுடைய கவலை. எல்லா ஜில்லாக்களிலும் திட்டம் வர வேண்டியதுதான். "அனுமதியை எதிர்நோக்கியிருக்கிறோம்" என்று கூறப்படுகிறது. அப்படியானால், அவை என்ன ஆகும்? கோரியிருப்பதற்காவது அனுமதி கிடைக்குமா என்பது சந்தேகம். இவைகளெல்லாம் என்ன ஆயின என்பதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, அவர்களுடைய உரையிலே குறிப்பிட வேண்டும். திருச்சி, சேலம், தருமபுரி ஆகிய இந்த ஜில்லாக்களில் உள்ள இடைத்தரத் திட்டங்கள் புறக்கணிக்கப்படுவதற்குக் காரணம் என்ன? திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து வரக்கூடிய கனம் அங்கத்தினர்கள்—அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—அவர்களும் குறைப்பட்டுக் கொண்டார்கள். அவர்கள் குறிப்பிட்டவையெல்லாம் புதிய திட்டங்கள் கூட அல்ல. அவைகளையெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும். சில கனம் அங்கத்தினர்கள் சொல்ல விட்டுப்போன ஒரு திட்டத்தைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். செங்கோட்டை தாலூக்காவில் இருக்கும் குந்தாற்றிலே அணை கட்டுவதைப்பற்றி ஒரு தாவா இருந்துகொண்டிருக்கிறது. கால தாமதத்திற்குக் காரணம் என்ன? ரயத்துக்கள் விரும்பக்கூடிய இடத்தில் சிலருடைய தென்னந் தோப்புகள் அடிபடுகின்றன் என்ற காரணத்திற்காக . . . (திரு. கே. டி. கோசல்ராம்: இரண்டு பேர்களுடையது) இரண்டு பேர்களுடைய தென்னந்தோப்புகள் அடிபடுகின்றன என்ற காரணத்திற்காக இந்தத் திட்டம் தாமதப்படுகிறது. அவர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டால், நஷ்ட ஈடு கொடுத்துவிட்டால் போகிறது. காஸ்ட் ஆப் அக்விஸிஷன் என்ற வகையில், நிலத்தை வாங்குவதற்கான செலவு அதிகம் ஆகும். எனக்கு இருக்கும் தகவலிலிருந்து, அவர்கள் தென்னந்தோப்பு வைத்திருக்கும் பகுதி பெரும்பாலும் புறம்போக்கு என்று கேள்வி. அதையும் ஆராய்ச்சி செய்யவேண்டும். அப்படியானால், நஷ்ட ஈடு அவர்களுக்கு எதற்காகக் கொடுக்கவேண்டும்? தென்னந்தோப்பு வைத்து அனுபவித்த பலன் இருக்கிறதே, அதோடு போகட்டும். இனி அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய அவசியம் கூட இல்லை. ஆகையால், அமைச்சர் அவர்கள் இதை எல்லாம் பரிசீலனை செய்து, இதற்குத் தக்க ஒரு பதிலை இன்றைக்குக் கொடுக்க முடியாவிட்டாலும், இன்னொரு சந்தர்ப்பத்திலாவது, ஏன் இதில் கால தாமதம் இருக்கிறது என்பதை விளக்கியாக வேண்டும் என்று நான் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த ஆண்டு அந்தப் பகுதி மிகவும் கஷ்டப்படுகிறது. எப்போதும் இல்லாத அளவிற்கு, இந்த ஆண்டு மழை இல்லாமல் ரொம்பவும் கஷ்டப்படக்கூடிய பகுதியிலே இம்மாதிரி மக்களுடைய மனத்தைப் புண்படுத்தக் கூடாது என்பதை

கம் புறக்கணித்தால், ரயத்துக்கள் புறக்கணித்ததால் அல்ல. பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. இந்தத் திட்டம், எத்தனை ஏக்கர்களுக்கு பாயும் என்று கூறுகிறோமோ, அதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதற்கு முன்னோடியாக, அடி மட்டத்திலேயே இருக்கக்கூடிய அதிகாரிகளையும், பொதுமக்கள் பிரதிநிதிகளையும், ரெவின்யூ அதிகாரிகளையும், உணவு உற்பத்தித் துறை அதிகாரிகளையும், ஒன்று சேர்த்து, அடிக்கடி விவாதித்து, விஸ்தரிக்கப்படவேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறது. அதன் பேரில் முடிவு எடுக்கப்பட்டதா ? வேறு என்ன செய்யலாம் என்று ஆலோசிக்கப்பட்டதா ? இன்னும் புதிய பகுதிகளுக்குக் கொடுக்கலாம் என்பது பற்றி யோசிக்கப்பட்டதா ? கொடுத்த யோசனைகள் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் ரயத்துக்கள் மேல் பழி போட வேண்டாம். அதிகாரிகளைக்கூட குறை சொல்ல மாட்டேன். அரசாங்கத்திற்கு அரசியல் காரணம் இருக்குமா என்னவோ, எனவேதான் இதையெல்லாம் ஊறுகாய்ப் பானையில் ஊறப்போட்டு வைத்திருக்கிறார்கள். இதை அரசியல் பிரச்சினையாகக் கருத வேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன். வளர்ச்சி திட்டங்களில் அரசியலைப் புகுத்தி, மக்களை பழி வாங்கவேண்டாம், வாங்கக்கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசியலை தேர்தலுக்கு வைத்துக் கொள்ளலாம். அவர்கள் எத்தனையோ அக்கறை செலுத்துகிறவர்கள். செலுத்தட்டும். என்னுடைய தொகுதி என்று குறைக்க வேண்டாம்.

அதே போன்று இன்னும் பல இருக்கின்றன. இந்தத் துறையைப் பற்றிப் பேசிய கனம் அங்கத்தினர்கள் பலர் பல திட்டங்களைப்பற்றிக் கூறினார்கள். இன்னும் பாசன வசதியைப் பெருக்கி நம்முடைய ராஜ்யத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதிலே கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். புதிய திட்டங்கள், மீடியம் இரிகேஷன் திட்டங்கள், இடைநிலைத் திட்டங்கள் இவற்றில் எல்லாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். பூமிக்கடியில் இருக்கும் ஜலத்தை மேலே கொண்டுவந்து பாசன வசதி அளிக்கவேண்டும் என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். அதில் ஏதோ நல்ல ஒரு அறிகுறி இருக்கிறது. பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு ஒரு தனிக் குழு ஏற்படுத்தி ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன, அது பலன் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது நல்ல அறிகுறி.

இடைத்தரத் திட்டங்களின் கதி என்ன ஆயிற்று ? திருச்சி, சேலம் மாவட்டங்கள்—இப்பொழுது புதிதாக ஏற்பட்டிருக்கக் கூடிய தருமபுரி மாவட்டம் இருக்கிறது. நான் 'சேலம் மாவட்டம் என்று குறிப்பிடுவது, பழைய சேலம் மாவட்டத்தைத்தான்—இந்த இரண்டிலும் இடைநிலைத் திட்டங்கள் பல பரிசீலனை செய்யப்பட்டிருக்கின்றன. குடகனாறு திட்டம், நொய்யல் திட்டம், மருதையாறு திட்டம், கொல்லிமலை திட்டம், சின்னாறு திட்டம், தொப்பை





யாறு திட்டம் ஆகிய திட்டங்கள் இருக்கின்றன. சின்னாறு திட்டம், தொப்பையாறு திட்டம் ஆகிய இந்த இரண்டும் சேலம், தருமபுரி மாவட்டங்களுக்குரிய திட்டங்கள். இந்த இரண்டு திட்டங்களினுடைய நிலை என்ன ஆயிற்று ? இவை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. மூன்றாவது திட்டம் முடிந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறோம். கடனாநதித் திட்டம் வர வேண்டும் என்பது தான் என்னுடைய கவலை. எல்லா ஜில்லாக்களிலும் திட்டம் வர வேண்டியதுதான். "அனுமதியை எதிர்நோக்கியிருக்கிறோம்" என்று கூறப்படுகிறது. அப்படியானால், அவை என்ன ஆகும் ? கோரியிருப்பதற்காவது அனுமதி கிடைக்குமா என்பது சந்தேகம். இவைகளெல்லாம் என்ன ஆயின என்பதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, அவர்களுடைய உரையிலே குறிப்பிட வேண்டும். திருச்சி, சேலம், தருமபுரி ஆகிய இந்த ஜில்லாக்களில் உள்ள இடைத்தரத் திட்டங்கள் புறக்கணிக்கப்படுவதற்குக் காரணம் என்ன ? திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து வரக்கூடிய கனம் அங்கத்தினர்கள்—அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—அவர்களும் குறைப்பட்டுக் கொண்டார்கள். அவர்கள் குறிப்பிட்டவையெல்லாம் புதிய திட்டங்கள் கூட அல்ல. அவைகளையெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும். சில கனம் அங்கத்தினர்கள் சொல்ல விட்டுப்போன ஒரு திட்டத்தைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். செங்கோட்டை தாலூக்காவில் இருக்கும் குந்தாற்றிலே அணை கட்டுவதைப்பற்றி ஒரு தாவா இருந்துகொண்டிருக்கிறது. கால தாமதத்திற்குக் காரணம் என்ன ? ரயத்துக்கள் விரும்பக்கூடிய இடத்தில் சிலருடைய தென்னந்தோப்புகள் அடிபடுகின்றன் என்ற காரணத்திற்காக . . . (திரு. கே. டி. கோசல்ராம் : இரண்டு பேர்களுடையது) இரண்டு பேர்களுடைய தென்னந்தோப்புகள் அடிபடுகின்றன என்ற காரணத்திற்காக இந்தத் திட்டம் தாமதப்படுகிறது. அவர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டால், நஷ்ட ஈடு கொடுத்துவிட்டால் போகிறது. காஸ்ட் ஆப் அக்விஸிஷன் என்ற வகையில், நிலத்தை வாங்குவதற்கான செலவு அதிகம் ஆகும். எனக்கு இருக்கும் தகவலிலிருந்து, அவர்கள் தென்னந்தோப்பு வைத்திருக்கும் பகுதி பெரும்பாலும் புறம்போக்கு என்று கேள்வி. அதையும் ஆராய்ச்சி செய்யவேண்டும். அப்படியானால், நஷ்ட ஈடு அவர்களுக்கு எதற்காகக் கொடுக்கவேண்டும் ? தென்னந்தோப்பு வைத்து அனுபவித்த பலன் இருக்கிறதே, அதோடு போகட்டும். இனி அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய அவசியம் கூட இல்லை. ஆகையால், அமைச்சர் அவர்கள் இதை எல்லாம் பரிசீலனை செய்து, இதற்குத் தக்க ஒரு பதிலை இன்றைக்குக் கொடுக்க முடியாவிட்டாலும், இன்னொரு சந்தர்ப்பத்திலாவது, ஏன் இதில் கால தாமதம் இருக்கிறது என்பதை விளக்கியாக வேண்டும் என்று நான் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த ஆண்டு அந்தப் பகுதி மிகவும் கஷ்டப்படுகிறது. எப்போதும் இல்லாத அளவிற்கு, இந்த ஆண்டு மழை இல்லாமல் ரொம்பவும் கஷ்டப்படக்கூடிய பகுதியிலே இம்மாதிரி மக்களுடைய மனத்தைப் புண்படுத்தக் கூடாது என்பதை

அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இதையெல்லாம் பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வெஸ்ட்ஃப்ளோயிங் ரிவர்ஸைப் பொறுத்த வரையில், ஒரு கோடி ரூபாய் என்று போட்டு, ஒரு புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. புள்ளி என்றாலே சந்தேகம் வந்துவிடுகிறது. ஏதோ போட்டு வைத்திருக்கிறோம் என்று சொல்வது ஆத்மதிருப்திக்குச் சொல்வது மாதிரி இருக்கிறது. இதனால் என்ன பலன் ஏற்படும்? திருநெல்வேலி கனம் அங்கத்தினர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். கிரியாறு திட்டம், பம்பையாறு திட்டம், அச்சன்கோயில் திட்டம் இவற்றைப்பற்றியெல்லாம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவைகளுக்கான நடவடிக்கைகளை நம்முடைய அரசாங்கம் எடுக்கவில்லை என்றால், இதற்கெல்லாம் கேரளாவில் ஒரு நிலையான அரசாங்கம் ஏற்படாதது காரணமா? ஒரு ராஜ்யத்தினுடைய அரசியல் மற்ற ராஜ்யத்தினுடைய வளர்ச்சியைப் பாதிக்கிறது. கேரள ராஜ்யத்தில் ஒரு நிலையான அரசாங்கம் இல்லாததால் அண்டையிலுள்ள நம்முடைய ராஜ்யத்தின் வளர்ச்சியைப் பாதிக்கிறது என்றாலும், முன்பு கம்யூனிஸ்டு மந்திரி சபை அங்கு இருந்த காலத்தில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டதே. அங்கு அந்த மந்திரிசபை இருக்கக்கூடாது என்று அதைக் கவிழ்த்துவிட்டார்கள். ஆனால், அவர்களுடைய திட்டத்தைக் கூடக் கவிழ்க்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. அப்போதே அமைச்சர் அவர்கள் பயன்படுத்தியிருக்கவேண்டும். அங்கு திரு. நம்பூதிரிபாட் மந்திரிசபை கொடுத்த திட்டத்தைப் பயன்படுத்தி இருக்கலாம். அப்பொழுது திரு. வி. ஆர். கிருஷ்ண அய்யர் அவர்கள் ஒரு திட்டம் தயார் செய்து அந்தத் திட்டம் இந்த ராஜ்யத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பிய திட்டங்கள் இருக்கின்றன. கம்யூனிஸ்டு மந்திரிசபை போட்ட திட்டங்களைத் தொடர்ந்து பின்பற்றி அந்தத் திட்டங்களை அமல் நடத்துவதற்கு நம்முடைய ராஜ்ய சர்க்கார் முயற்சி எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை நான் சொல்வது, கேரள ராஜ்யத்தில் ஓடும் தண்ணீரை, அவர்களுக்கு உரிய தண்ணீர் நம் பக்கம் திருப்பப்பட வேண்டும் என்ற பேராசையினால் அல்ல; அவர்கள் நன்றாக இருந்தால்தான் தமிழ்நாடு நன்றாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை உடையவன் நான். கேரளாவில் உள்ள மக்களுக்கு 12 அவுன்ஸ் கொடுத்தால்தான் நம்முடைய தமிழ் நாட்டில் அரிசி விலை ஏறாமல் இருக்க முடியும், கள்ளக் கடத்தல் இல்லாமல் இருக்கும் என்ற நம்பிக்கை உடையவன் நான். நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு அரிசி போய், அங்குள்ள அரிசிப் பஞ்சம் போகவேண்டும் என்பதில் எனக்கு அக்கறை உண்டு. அந்தப் பக்கம் கடலிலே விழக்கூடிய தண்ணீரைத் திருப்பிவிட்டு, நாம் பாசனத்திற்குக் கொண்டுவந்து மின்சக்தியை உற்பத்தி செய்து அவர்களோடு மின்சக்தியை நாம் பங்கு போட்டுக்கொள்ளலாம். பணத்திற்குப் பதிலாக அரிசியாக வேண்டுமானாலும் நாம் அவர்களுக்குக் கொடுத்து





விடலாம். அம்மாதிரி இருவருக்கும் நன்மை அளிக்கக்கூடிய திட்டங்களைத் தயாரித்து, வற்புறுத்தி அமைச்சர்கள் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய சர்க்காரிடம் அல்லது திட்டக்கமிஷனிடம் இந்தத் திட்டங்களைப் பற்றி வற்புறுத்த வேண்டும். நம்முடைய அமைச்சர்களும் முதல் அமைச்சர் அவர்களும் நல்ல திறமைசாலிகள் என்று சொல்லுகிறார்கள். இதிலும் அவர்களுடைய முழுத் திறமையைக் காட்ட வேண்டும். நம்முடைய ராஜ்யம் எதற்கும் முன்வரிசையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதற்குச் சம்மதத்தைப் பெறுவதில் அவர்களுடைய முழுத் திறமையைப் பயன்படுத்தி, இதிலும் முன்வரிசையில் வருவார்கள் என்று நான் நம்புகிறேன். இவை புதிய திட்டம் ஒன்றும் இல்லை. பத்து வருஷங்களாக இருந்துவரக்கூடிய திட்டங்கள்தான். அவற்றில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கேரள ராஜ்யத்திற்கும் நமக்கும் மட்டும் இருக்கக்கூடிய திட்டங்கள் ஒரு புறம் இருந்தாலும், நிலையான மந்திரிசபை இருக்கக்கூடிய மைசூர் அரசாங்கத்திற்கும் நமக்கும் என்ன தகராறு இருக்கிறது? மைசூர் ராஜ்யத்தோடு செய்து கொள்ளவேண்டிய ஒப்பந்தத்தை ஏன் சீக்கிரம் செய்யக் கூடாது? ஹொக்கனக்கல் திட்டம் ஒத்திப்போடப்படுவானேன்? காவிரி தண்ணீர் போன்ற விஷயங்களில் ஏன் கஷ்டம் இருக்கவேண்டும்? பாலாற்றுத் தண்ணீர் பற்றி ஏன் பிரச்னை இருக்கிறது? பாலாறு என்ற அழகான பெயர் இருக்கிறது. ஆனால், பாலாற்றிலே தண்ணீர் எல்லாம் இப்படிக் காய்ந்து கொண்டு இருக்கவேண்டுமா? மைசூர் ராஜ்யத்திற்கு உரியதை நம் பக்கம் திருப்பிவிடவேண்டும் என்று நாம் சொல்லவில்லை. நமக்கு உரியது நமக்கு வரவேண்டாமா? அங்கே அவர்கள் அணை கட்டி, பாலாற்றைக் காய வைக்க ஒரு அரசாங்கத்திற்கு உரிமை உண்டா? காவேரி அங்கே உற்பத்தியானால் பல உபநதிகள் அதில் வழியில் கலக்கின்றன. அங்கே அது உற்பத்தியாகிறது என்று சொல்லி, அதில் உள்ள தண்ணீரை அவர்கள் அணை கட்டித் தடுத்துவிட அவர்களுக்கு உரிமை உண்டா? இரண்டு ராஜ்யங்களுடைய நன்மையை உத்தேசித்து, ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டாமா? இரண்டு அரசாங்கம் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். காசியில் இருந்தாலும், கன்னியாகுமரியில் இருந்தாலும், காஷ்மீரத்தில் இருந்தாலும், எங்கிருந்தாலும் நாமெல்லோரும் இந்தியர் என்றும், நாமெல்லோரும் ஒன்று என்று நினைக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், தண்ணீரைப் பங்கு போட்டுக்கொள்வதில் ஏன் தகராறு இருக்கவேண்டும்? தமிழ் நாட்டில் பாசனத் திட்டங்கள் அதிகமாக இருந்து, அதிகமாக உற்பத்தியைப் பெருக்கினால், அது மைசூருக்கு நஷ்டமா? இப்போதே கூட புஞ்சைத் தானியங்கள் தமிழ்நாட்டிலிருந்து மைசூர் ராஜ்யத்திற்குப் போய்க்கொண்டிருக்கின்றன. அவர்களுடைய பற்றாக்குறையைப் போக்குவதற்குக் கூட நாம் ஏராளமாக அவர்களுக்குக் கொடுக்கலாமே. ஏன் அந்தப் பரந்த மனப்பான்மை இருக்கக்கூடாது? ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [16th March 1966

தான் இந்த ராஜ்யத்திலும் மந்திரிகளாக இருக்கிறார்கள்; அந்த ராஜ்யத்திலும் மந்திரிகளாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது, காவிரித் தண்ணீரைப் பங்கிட்டுக் கொள்வதிலும், பாலாற்றுப் பாசன உரிமைப் பாதுகாப்பதற்கும் ஏன் ஒப்பந்தம் செய்து கொள்ள முடியவில்லை? இரண்டு ராஜ்யங்களும் ஒப்பந்தம் செய்துகொள்ள என்ன சிக்கல் இருக்கிறது என்பதைச் சபை முன்பு வைக்கவேண்டும். சபைக்கு மறைத்து வைக்கவேண்டிய ரகசியம் இதில் ஒன்றும் இருக்கவேண்டியதில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். அதிலும் நம்முடைய கனம் அமைச்சர் அவர்களிடம் இப்போது தகவல் இருந்தால் சொல்லட்டும். இல்லையென்றால், இன்னொரு சந்தர்ப்பத்திலாவது இதையெல்லாம் விளக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்தத் திட்டங்களைப்பற்றி இன்றைக்குப் பேசுகிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இவ்வளவு கோடி, நான்காவது திட்டத்திற்கு இவ்வளவு கோடி என்று செலவு செய்கிறோம். ஆனால், இந்தத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றக்கூடிய நேரத்தில், முடித்துக் கொடுக்கக்கூடிய பொறுப்பு ஏற்றிருக்கக் கூடிய ஊழியர்கள் இருக்கிறார்கள். இன்ஜினியர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. நிர்வாகத்தில் சில குறைபாடுகள் இருக்கும். மற்ற நிர்வாகத்தில் குறைபாடு இருப்பது போல் நம்முடைய நிர்வாகத்திலும் குறைபாடு இருக்கலாம். ஆனால், சராசரியாகப் பார்த்தால் திட்டங்கள் நிறைவேற்றுவதில் நம்முடைய நிர்வாகம் ஓரளவுக்கு முன்னேற்றம் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே சமயத்தில், இதிலே ஊழியம் செய்யக்கூடிய ஊழியர்கள், ப்ராஜெக்டில் வேலை செய்யக்கூடிய ஊழியர்கள் பூராவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இரண்டு ஜாதியாகப் பிரித்திருக்கிறார்கள். பர்மெனென்ட் என்று ஒரு பிரிவு. ப்ராஜெக்டிலே வேலை செய்யக்கூடிய 'ஓர்க்-சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மென்ட்' என்று இன்னொரு பிரிவு. ஓர்க்-சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மென்ட் என்ற பெயரில் இருப்பவர்கள் எத்தனை ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள்? அவர்களுடைய உழைப்பின் காரணமாகத்தான் எந்தத் திட்டமும் உண்மையிலேயே வெற்றியடைய முடியும். இந்தத் திட்டங்களின் வெற்றிக்கு யார் அஸ்திவாரமாக, முதுகெலும்பு போல் இருக்கிறார்களோ அவர்களுக்கு நிலையான சர்வீஸ் கிடையாது. ஒரு திட்டத்திலிருந்து இன்னொரு திட்டத்திற்குப் போவோம் என்ற உத்தரவாதம் கூட அவர்களுக்கு இல்லை. 24 மணி நேரத்தில் கூட அவர்களை நிறுத்திவிட முடியும். எந்தவிதமான நஷ்ட ஈடும் அவர்களுக்கு இல்லை. பத்து, பதினைத்து வருஷங்கள் வேலை செய்திருந்தாலும், அவர்களுக்கு பிராவிடென்ட் பண்டு வசதி உண்டா? திடீரென்று நிறுத்திவிட்டால், சர்வீசுக்குத் தகுந்தபடி சம்பளம் கொடுக்க வேண்டும் என்று தர்மத்திற்காவது ஏதாவது உண்டா? விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், 10, 15 வருஷம் நிலத்தில் உழைத்திருந்தால், அவர்களுக்கு ஆயிரமோ, ஐநூறோ கொடுக்கவேண்டும் என்ற பாரம்பரியம் நம் நாட்டில் இருக்கிறது.



16th March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

இவ்வளவு தூரம் வேலை செய்து நம்முடைய திட்டங்களை எல்லாம் 12-30 p.m.
வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொடுத்துள்ள ப்ராஜெக்ட் ஊழியர்கள் வேலையில் இருந்து நீக்கப்படுகிறபோது அவர்களுக்கு ஒரு சன்மானம் கூடக் கிடையாது. அந்த நிலையில் இருக்கிறார்கள். அதே நேரத்தில் பர்மனென்ட் ஸ்டாபகளுக்கு ப்ராஜெக்ட் அலவன்சு உண்டு. வீட்டு வாடகை உண்டு. விலைவாசிகள் எல்லாம் ஒரேயடியாக ஏறிக்கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் இந்த ப்ராஜெக்ட் ஊழியர்களைப் பொறுத்த வரையில் ஒன்றும் கிடையாது. இதை அமைச்சர் அவர்களும், அரசாங்கமும் கவனித்து அவர்களுடைய குறைகளைக் களைவதற்குத் தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். மற்ற அரசாங்க ஊழியர்களைப் போல அவர்களுக்கும் கொடுத்து, அவர்களிடத்தில் ஒரு திருப்தியை ஏற்படச் செய்து, நம்முடைய நான்காவது ஐந்தாண்டு திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது, சபையிலே, கனம் உணவு அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற பாசனம் முதலிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை கூற என்னை அனுமதித்தமைக்காக தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றி.

பாசனத் துறை என்பது இன்றியமையாத துறை. அதுவும் இன்று நாடு இருக்கிற நிலையிலே, உணவுப் பிரச்சினை இருக்கிற நிலையிலே இந்தத் துறை முதல் கவனத்தைப் பெறவேண்டிய முக்கியம் வாய்ந்த துறை என்பதை நான் சொல்ல வேண்டுமென்பது அவசியம் இல்லை. இதனுடைய பணி, அதன் அளவினால் மட்டுமின்றி தரத்திலும் உயர்ந்ததாகவும், சிறந்ததாகவும் அமைந்திருக்கிறது. இந்தப் பணி கூடிய வரையில் பாராட்டத்தகுந்த வகையில் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். ஆனாலும், குறைகள் அல்லது தேவைகள் பூர்த்தியாகிவிட்டன என்று சொல்வதற்கில்லை. அந்த நிலையிலே சில கருத்துக்களை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு மாவட்டங்களைப் பொறுத்து அந்த அந்த பகுதியைச் சேர்ந்தவர்களால் எடுத்துச் சொல்லப்பட்டன. மொத்தமாக மாநிலம் என்ற அளவில் எடுத்துக்கொண்டு பார்க்கிறபோது விருப்பு வெறுப்பு இல்லாத நிலையில் இத்துறையின் கீழ் பணியாற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது. இவற்றை எல்லாம் கணிக்கின்றபோது ஓரளவு செம்மையாக இருக்கிறது என்று சொன்னாலும் அங்கங்கே பிழைகள், தவறுகள் தோன்றவேயில்லை என்று சொல்ல முடியாது. இப்படிச் சொல்வதனால் ஏதோ பெரிய குற்றச்சாட்டைச் சுமத்துவதாகவும் கருதிவிடப்படாது. எங்கெங்கோ தவறுகள் ஏற்படுகிறதோ அவற்றை உடனுக்குடன் கவனித்து, கணித்து, அவற்றைப் போக்குவரத்து இத்துறையில் உள்ளவர்

[திரு. சா. கணேசன்] [16th March 1966

களுக்கும், ஆட்சியில் உள்ளவர்களுக்கும் தலையாய கடமை என்பதை விண்ணப்பித்துக்கொண்டு இனி தேவைகளைக் கூறி அல்லது குறைகளைக் கூறி எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நேரடியான ஆற்றுப் பாசன வசதி இல்லாத பகுதிகள் நமது மாநிலத்திலே பல கிட்டத்தட்ட ஒரு பாதி முழுக்க முழுக்க இருக்கிறது. ஆற்றுப்பாசன அல்லது கால்வாய்ப் பாசன வசதியுள்ள பூமிகளைத் தவிர பெரும்பகுதி ஆற்றுப்பாசன வசதி இல்லாமல் கண்மாய் அல்லது ஏரி அல்லது குளம் அல்லது கிணறு இவற்றை மட்டுமே நம்பி வேளாண்மை செய்து வருகின்றன என்பதை நாம் மனத்தில் கொள்ளவேண்டும்.

அப்படிக் கணிக்கின்றபோது—ஆற்று நீர் மூலமாகப் பாசன வசதி பெறுகின்ற மக்களுக்கு முழுக்க முழுக்க இந்த ஆற்றுநீர் பாசன வசதியை அகலப்படுத்திக்கொண்டே போகாமல் ஓரிடம் என்றால் அதற்குப் பூரணமாகக் கொடுக்கத்தக்க வகையில் அந்த அந்த எல்லையிலேயே வரையறுத்துவிடவேண்டும். இருக்கிற தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்கிறோம் என்று சொல்லி நூறு ஏக்கராவுக்குக் கொடுக்கக்கூடிய தண்ணீரை நானூறு ஏக்கராவுக்குக் கொடுத்தால் இரண்டு இடங்களிலும் போதுமான தண்ணீர் இன்றி—முன்பு 100 ஏக்கராக்களில் கிடைத்த வெள்ளாமை கூட இந்த 400 ஏக்கராக்களில் கிடைக்காமல் போகக்கூடிய நிலைதான் உண்டாகும். இந்த அடிப்படையில் வீண் விரயம், சேதம், கஷ்டம் உணவுப் பற்றாக் குறை ஆகியவைதான் ஏற்படும். இதை மனத்திலே கொண்டு நாம் செயல்பட வேண்டும்.

இரண்டாவதாக, அத்தகைய ஆற்று நீர் செல்ல முடியாத இடங்களுக்கு வேறு வகையில் உதவி, நிவாரணம் கொடுக்க ஆட்சி உதவவேண்டும். பெரும்பாலான நம்முடைய நீர்த்தேக்கங்களிலே இன்றைய தினம் மின் விசையும் கூட உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த மின்சாரத்தின் மூலமாக ஆற்றுப் பாசன வசதி இல்லாத பகுதிகளுக்கு ஊற்று வளம் மூலமாக நீரை எடுத்து விவசாயம் செய்ய முழுக்க முழுக்க முதன்மை இடம் கொடுக்கவேண்டும். இந்த மின்சாரம் கொடுப்பதிலே கூட மின்சாரக் கட்டணம் சம்பந்தமாக பல கணக்குகள் நமக்குக் கொடுக்கப்படுகின்றன. இப்போது விவசாயத்திற்கு கொடுக்கப்படுகிற மின்சாரக் கட்டணமே—கொள்முதல் உற்பத்தி அளவைவிட கொஞ்சம் குறைந்தது என்று அந்தத் துறை அமைச்சர் அவர்கள் நமக்கு விளக்க முடியும். ஒருகால் அது உண்மையாகவும் இருக்கலாம். அது பிரயோஜனம் இல்லை. உண்மையாக இருப்பது மட்டும் பயன் தராது. உண்மை நிலை எப்படி இருக்கவேண்டுமென்றால் ஆற்றுப் பாசனம் மூலமாக பயிர் செய்கிறவர்களுக்குத் தண்ணீருக்காக எவ்வளவு செலவாகிறதோ அந்த அளவுக்கு பாசன வசதி இல்லாத பகுதியில் மின்சாரத்தைக் கொண்டு ஊற்று நீரைப் பயன்படுத்தி பயிர் செய்ய முன்வருகிறவர்களுக்கு தண்ணீருக்காக செலவாகவேண்டும் என்பது மனிதாபிமானம் உள்ள எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒன்று.



16th March 1966] [திரு. சா. கணேசன்]

இன்றையதினம் உற்பத்திச் செலவைவிட குறைந்த விகிதத்தில் தான் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்றால் இதற்குக் காரணம் உற்பத்தி நிலையிலேயே அதிகச் செலவு ஏற்படுகிறது என்பதை நாம் மறந்துவிடப்படாது. 20 வருஷப் புள்ளி விவரங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் மின்சாரக் கட்டணம் படிப்படியாக எவ்வளவு உயர்ந்து வந்திருக்கிறது, முன்பு இருந்ததைவிட இன்று எவ்வளவு மடங்கு உயர்ந்திருக்கிறது என்பது தெரியும். முன்பு கார்ப்பரேஷனாக இருந்தபோது இருந்ததைவிட பல மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிடப்படாது. நன்மையோ, தீமையோ, எல்லாவற்றையும் சென்டிரலைஸ் பண்ணின காரணத்தினால் தான் செலவு மிகமிக உயரத்திற்கு ஏறிவிட்டது. இந்த நிலையில் உற்பத்திக்கு செலவு எவ்வளவு ஆயிற்று என்பதைப் பார்த்துக்கொண்டிராமல் பாசன வசதியுள்ள பகுதியில் இருப்பவர்களுக்கு பாசனத்திற்காக எவ்வளவு செலவாகிறதோ, அந்த அடிப்படையில் அதற்கு இந்த பாசன வசதியுள்ள பகுதியினருக்குப் போடும் நீர் வரியைஉயர்த்தி ஏற்படுகிற செலவைக் கொண்டுவரவேண்டும். இப்படிச் சொல்கிற காரணத்தினால் மின்சாரத்தின்மூலம் பாசன வசதி பெறுகிறவர்கள் எந்த அளவுக்குச் செலவு செய்கிறார்களோ அந்த அளவுக்கு பாசன வசதியுள்ள பகுதியினருக்குப் போடும் நீர்வரியை உயர்த்திவிடப்படாது. அந்த நிலைக்கு பாசன வசதி அற்ற பகுதியில் உள்ளவர்களுக்கு நாம் அளிக்கும் மின்சாரத்தின் கட்டணத்தைக் குறைக்கவேண்டும். விவசாயத்தைத் தவிர வேறு துறைக்கு மின்சாரத்தை உபயோகப்படுத்திக் கொள்கிறவர்களுக்கு வேண்டுமானால் ஓர் அளவை வைத்து நிர்ணயுங்கள். ஆனால் விவசாயத்தைப் பொறுத்தவரையில் இப்படி மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து நிர்ணயிக்க முன் வந்தால், நமக்கு ஓரளவு பண நஷ்டம் வந்தாலும் அதைக் கருதாமல்—மக்களுடைய உணவுப் பிரச்சினை, வாழ்வுபிரச்சினை, தொழில் துறையில் ஏற்படச் செய்யும் ஊக்க, உற்சாக நிலை அவற்றைக் கணக்கிடும்போது—அந்த நஷ்டத்தை விட பல மடங்கு நாம் லாபம் பெற முடியும். ரூபாய், அணாக் கணக்குப் பார்க்காமல் நமக்கு இதனால் கிடைக்கக்கூடிய ஒரு பெரிய லாபத்தை உணர்ந்து நாம் செயல்பட வேண்டுமென்பதை ஆளும் கணத்தாரிடம் நான் வேண்டிக்கொள்கின்றேன்.

இனி, பாசனத் துறையில் ஆங்காங்கு இருக்கக்கூடிய பற்பல குறைகள், தவறுகள் பற்றி பல உறுப்பினர்கள் சொன்னார்கள். இறுதி நிலைக்குச் செல்கின்ற அளவு தண்ணீர் விடப்படவேண்டும். முதலில் உள்ள இடத்தில் பாசனம் செய்து கொண்டு, இறுதியில் உள்ள நிலத்தை காயவிடப்படாது—இதை எல்லாம் செம்மைப்படுத்தவேண்டும், நெறிப்படுத்த வேண்டும். இன்றைய தினம் இந்தத் துறையில் உள்ளவர்கள் மனச்சாட்சிப்படி நடக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டு நான் கணிக்கிறேன். அவர்களுடைய பணிகளைக் கண்டு, குறைகளைக் கண்டு, பிழைகளைக் கண்டு, வழுக்களைக் கண்டு நான் கணிக்கவில்லை. அவர்கள் எப்படி செயல்பட்டாலும் நடு நிலையில் வெளியில் இருக்கிறவர்களுக்கு உண்மை தெள்ளெனப் புலப்படும் என்பதை நாம் மறக்கக்கூடாது, மறந்து

[திரு. சா. கணேசன்] [16th March 1966

விட முடியாது. ஆகவே, இத்தகைய துறைகளிலே சொல்லப்படுகின்ற குறைபாடுகள் அல்லது தேவைகள் இவற்றை யெல்லாம் கணித்து திரட்டி, அனைத்தையும் தொகுத்து அதைப்பற்றி ஆய்ந்து ஒரு செவ்விய நேரிய நெறியிலே இந்தப் பாசன நெறியை வழிப்படுத்துவதற்கோ முறைப்படுத்துவதற்கோ முயலவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இனி சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் என்று சொல்லப்படுகின்றவைகளுக்குள்ளே சென்று பார்க்கும்பொழுது பல துறைகள், கம்வாய், ஏரி, குளம் என்றெல்லாம் பகுதிகளாக இருக்கின்றனவே இவைகளில், தண்ணீர் புரண்டு வந்து, இதை எங்கள் பகுதிகளிலே தண்ணீர்ப் புரளி என்று சொல்வோம், காட்ச்மெண்ட் ஏரியாக்களிலே தண்ணீர் புரண்டுவந்து ஏரி, குளங்களிலே நிரம்பினுல்தான் நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுத்த முடியும். மழை வராத காலத்திலே கம்வாய் எவ்வளவு பெரியதாக இருந்தாலும்கூட பயன் இல்லை. ஆறு மாதிரி கம்வாய்கள் பயன் அளிப்பதில்லை. ஆறுகளைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தில் மழை பெய்தால் மட்டுமல்ல, மைசூர் மாநிலத்தில் மழை பெய்தாலும் கூட ஆற்றிலே தண்ணீர் வந்துவிடும். ஆனுல் சிறிய நீர்ப்பாசனத் துறைகளில் அந்தந்தச் சுற்றுவட்டாரத்திலே நல்ல மழை பெய்தால்தான் அவை நிரம்பி புறமடைகள் மூலமாகக் கழனிகளுக்குச் சென்று பாய்கிற வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. ஆகவே, இந்தத் துறையிலே மிகச் செம்மையாக ஒன்றைக் கவனிக்கவேண்டும். மழையில்லாத காலத்திலும்கூட இந்த கம்வாய்ப் பாசனம் இருக்கிறதே, ஏரிப் பாசனம் இருக்கிறதே அந்தப் பகுதிகளிலே உள்ள நிலங்கள். எல்லாம் வறண்டு போகாமல் இருக்கவேண்டுமென்ருல் இவைகளினுடைய புறவாய்ப் பகுதிகளிலே பெரிய பம்புசெட்டுகளைப்போட்டுவிட்டால், ஆழக் கிணறுகள் தோண்டி, எலக்ட்ரிசிடி மூலமாகத் தண்ணீர் பெறுவது என்றுகொண்டால் சுலபமாக அந்த ஏரியிலிருந்து மழைக்காலத்தில் பெற்ற அளவு நீரைப் பெறமுடியும். இதைப்பற்றி நான் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகவே சொல்லிக்கொண்டே வருகிறேன். பம்புசெட்டுகளைப் போடுவதைத் தவிர வேறு வழியில்லை. மழைநீரைப் போலவே பம்புசெட்டுகள் மூலமாக இறைக்கப்பட்ட நீர் சென்று ஆங்காங்கு உள்ள நிலங்களுக்குப் பாய வாய்ப்பு வசதியும் ஏற்படும். இதை நான் வெறுமனே கற்பனையில் சொல்லவில்லை. காரைக்குடியிலே அழகப்பாபுரம் என்ற இடத்திலே சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புள்ள வறண்ட பிரதேசம். அங்கே இரண்டே இரண்டு பம்புசெட்டுகள்தான் வைக்கப்பட்டிருக்கின்றன. பருவமழையற்ற காலத்திலும், கடுமையான வெயில் காலத்திலும், வேனிற் காலத்திலும் நாளொன்றுக்கு 1½ லட்சம் முதல் 2 லட்சம் காலன் வரை தொடர்ந்து நீர் சப்ளை செய்து கொண்டிருப்பதை நாம் காண்கிருேம். அது ஆட்சியின் கணக்கிற்கு வந்து அவர்களும் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவுக்கு எழுதி அங்கே எலக்ட்ரோ கெமிக்கல்ஸ் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் ஒன்று நிறுவப்பட்டது என்பதும் நமக்குத் தெரியும். அந்த அனுபவத்தை வைத்துத்தான் திரும்பத் திரும்ப நான் இதைச் 



16th March 1966] [திரு. சா. கணேசன்]

சொல்கிறேன். ஆட்சி இதை ஆராய்ந்து ஆற்று வளம் இல்லாத இலக்குகளுக்கு ஊற்று வளம் இருக்கிறது என்ற முறையிலே அதைப் பயன்படுத்த அதைச் சுரண்டி நீரை உறிஞ்ச முயல வேண்டும்.

**கனம் திரு. வெ. ராமையா :** இரண்டு கிணறுகள்தான் போடப்பட்டனவா அல்லது எத்தனை கிணறுகள் போடப்பட்டு அதில் எத்தனை சக்சஸ்புல் ஆக வந்தன?

**திரு. சா. கணேசன் :** மொத்தம் போட்டது மூன்று கிணறுகள். இரண்டு கிணறுகள் தொடர்ந்து லட்சம் காலனுக்கு மேற்பட்ட அளவில் தண்ணீரை அளித்துக்கொண்டு வருகின்றன, மூன்ருவதும் இருக்கிறது, ஆனுல் அது லட்சத்தையொட்டிக் கீழே இருக்கிறது, அதிலே தண்ணீர் கூடுதலாகவோ குறைச்சலாகவோ இருக்கிறது. கீழேயுள்ள நீரோட்டம், கரண்ட் இதிலே கொஞ்சம் மாறுபட்டதாக இருக்கிறது என்று சொல்லுகிருர்கள். அவ்வளவுதான், உண்மை. நான்கு கிணறுகள் போட்டு அது இரண்டாக வந்தாலும் அதில் நட்டமில்லை. இதனுல் ஏற்படுகிற பயன் எவ்வளவு, உணவுப் பற்ருக்குறை எவ்வளவு நிவர்த்திக்கப்படும் என்பதையும் பார்க்கவேண்டும். திரும்பத் திரும்பச் சொல்கிறேன். புறமடைகளுக்குப் பக்கத்திலே பெரிய பம்புசெட்டுகள் போட்டு எலக்ட்ரிசிடி மூலமாகத் தண்ணீரை எடுத்து பாசன வழியிலே இருக்கின்ற நிலங்களுக்குக் கொடுத்து, அதற்குரிய கட்டணத்தை, ஆற்றுப் பாசனத்தைப் பெறுகின்றவர்கள் என்ன கட்டணம் கொடுக்கிருர்களோ அந்தக் கட்டணத்தைப் பெற்றுக் கொண்டால் அது செவ்வையான, நன்மையான பலனைத் தரும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கிட்டத்தட்ட, இந்த வறண்ட பிராந்தியங்களில் ஐந்து ஏக்கர்களுக்குக் குறையாமல் இருக்கிற ஒவ்வொரு நிலத்திலும் பம்புசெட்டுகள் வைப்பதற்கு அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும். பம்பு செட்டுகள் இருப்பதின் காரணமாக, நெல் முதலிய தானியங்களை மழைக்காலத்திலே உற்பத்தி செய்யப்படுவது மட்டுமல்ல, பிற காலங்களிலும் காய்கறிகள் போன்றவை உற்பத்தி செய்து உணவுப் பிரச்னையில் மற்ருெரு பிரச்னையையும் நிவர்த்தி செய்யமுடியும். இந்தச் சிறிய நிலக்காரர்களுக்கு ஆங்காங்கு பம்பு செட்டுகளை வைத்துக் கொள்வதற்கு ஊக்கத்தையும் வேண்டிய உதவி, ஒத்தாசைகளையும் ஆட்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கம்வாய் தூர் எடுத்தல் துறை இருக்கிறது. இதைப்பற்றி பெட்டிஷன்கள் சர்க்காருக்கு வந்திருக்கின்றன. எனக்கும் காப்பிகள் வந்திருக்கின்றன. அவர்களுக்கு 100 என்ற கணக்கிலே வந்திருக்கும். எனக்கு நான்கு என்ற அளவிலேதான் வரும். அந்தத் தொகுதி என்ற முறையில் அல்லது அறிமுகம் ஆனவர் என்ற முறையில் அவ்வளவுதான் வரும். கம்வாய் தூர் எடுக்கப்படுவதுபற்றிய தண்டோரா பகுதி முழுவதும் போடப்படுவதில்லை. ஏதோ ஒரு இடத்திலே ரெவின்யூ இன்ஸ்பெக்டரோ அல்லது தாசில்தாரோ உட்கார்ந்து ஏலம் போட்டுவிட்டு, ஐந்து ரூபாய், 10 ரூபாய் அல்லது ஐயாயிரம்

ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் என்று சொல்லி போட்டுவிட்டுப் போய் விடுவார்கள். சில கண்மாய்களைத் தூர் எடுப்பதற்குப் பணம் கொடுத்தே தூர் எடுக்க முன் வருவார்கள். நீர், மண்வளம் முதலியவற்றைக் கருதி வருவார்கள். சிலர் பேருக்கு 25 ரூபாய் என்று காண்ட்ராக்ட் எடுத்துக்கொள்வார்கள். சிலர் 200 ரூபாய் 300 ரூபாய் தருகிறோம் என்றும் முன்வருவார்கள். ஆனால் பின்னால் பயன்வரும் என்று கருதி 1,000 ரூபாய், 1,200 ரூபாய் என்றும் எடுப்பார்கள். சமீபத்திலே காரைக்குடியிலே நாட்டான் கம்வாய் ஏலத்தைப்பற்றிய புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**கனம் திரு. வெ. ராமையா :** மீனும்தானே எடுக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** மீனும் ஓரளவுக்கு எடுக்கிறார்கள். பாசி என்று சொல்வார்கள், பாசி என்று சொல்லும்பொழுது மீனை மட்டும் பிடிப்பதல்ல, மீனோடு அங்கிருக்கின்ற ஒரு சதுப்பு அல்லது சகதி மாதிரி இருக்கிற காம்பை மாதிரி இருக்கின்றவற்றை சுத்தப் படுத்தி எடுத்துக்கொள்வார்கள். ஒரு முறை 5 ரூபாய் அல்லது 50 ரூபாய் என்று ஏலம்போட்டு, அதே க்ரூப்புக்குள்ளே ஒருவர் 300 ரூபாய்க்கு ஏலம்போட்டு, மறுப்புக் கடிதம் எழுதி மறு ஏலம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இதையெல்லாம் களைந்து நெறியாக, செம்மையாக ஊர் முழுவதும் தண்டோரா போட்டு, நிலப்பிரபுத்துவம் உள்ளவர்கள் சபைக்குள்ளே வைத்துக்கொண்டு ஏலம் போடுவது நியாயமன்று, பகிரங்கமாக ஏலம் போடும்படி செய்தால் ஆட்சியினுடைய வருமானம் கூடும், தரமும் செம்மை யாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

அதே மாதிரி பிற மாநிலங்களிலே இருக்கக்கூடிய ஆறுகளில் பல அணைகள் கட்டப்பட்டு தண்ணீரைத் தேக்கி வைக்கும் அளவுக்கு முற்பட்ட நிலையிலே, மீறி வருகிற தண்ணீர்தான் நமக்கு வரும் என்ற நிலை இருக்கிறது. நான் அதைப்பற்றி ரொம்பக் குறைவோ, கவலையோ படவில்லை. இன்னொன்றையும் நாம் பார்க்கவேண்டும். தண்ணீர் மிகுதியாகி ஊரையே அழிக் கக்கூடிய அளவுக்கு நீர் பெருகிவிட்டால், அந்த நீரை எல்லாம் நமது பகுதியிலே தள்ளக்கூடிய நிலை இருக்கிறது. அதைத் தாங்கிக் கொண்டு அதனால் நேரக்கூடிய சேதத்தைக் கூட அனுப விக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். தனிப்பட்டவர்கள் வீடு, தோட்டம் முதலியவற்றில் கூட, என்னுடைய தண்ணீர் விழுகிற இடம் என்று விட வேண்டும்; என்னுடைய வீட்டு . மாக் கினை பக்கத்து வீட்டுப் பக்கம் போகக் கூடாது என்றெல்லாம் இருக் கிறது. பெருகி வரும் தண்ணீரால் அபாயத்திற்கு உள்ளாகும் நமக்கு, தேவையானபோது ஓரளவு—முழுவதும் என்று சொல்ல வில்லை—கஷ்டப்படுகிறபோது ஓரளவு, இரக்கப்பட்டாவது கொடுக்கவேண்டுமென்பதற்குத்தான் இந்த வாதங்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கடைசியாக, இந்தத் துறையிலே ஊழியம் செய்கிறவர்கள் பலர் பல்வேறு அணைக்கட்டுகளிலே பத்து வருஷங்களுக்கு மேற் பட்டு ஊழியம் செய்பவர்களாக இருந்தும் கூட, அவர்களுடைய ஊழியத்தை நிரந்தரம் என்று ஆக்காமல் இருப்பது ஒரு பெரிய குறை என்று என்னாலே சுட்டிக் காட்டாமல் இருக்கமுடியாது. காப்பி ஹோட்டல்காரரிடத்தில் கூட 10 பேர் வேலை பார்த்து வந்தால், அவர்களை நிரந்தரமாக்கவேண்டும்; அவர்களுக்கு இன்னின்னது செய்யவேண்டும் என்றெல்லாம் வற்புறுத்துகிற ஆட்சி, தன்னிடத்திலே பல ஆண்டுகளுக்கு மேலாக வேலை பார்க் கிறவர்களுக்கு அவர்களுடைய உத்தியோகத்தை நிரந்தரப்படுத் தாமல், அவர்கள் பணி செய்வதற்கு வேண்டிய பிற உரிமைகளை வழங்காமல், அரசாங்க ஊழியர்களுக்கு உரிய சலுகைகள், விதி முறைகள் அளிக்காமல் இருப்பது மிக மிகப் பெரிய குறை, குற்றம். இதை மனத்திலேகொண்டு ஆட்சியாளர்கள் அவர்களுடைய உத்தியோகத்தை நிரந்தரமாக்குவதோடு, அவர்களுடைய உத்தி யோக நெறி முறையையும் வகுத்து, பிற துறைகளிலுள்ளவர்களுக் குக் கொடுக்கக்கூடிய உரிமைகளையும் கொடுக்க முன் வரவேண்டும். அப்படிச் செய்ய முன் வருவதுதான் ஆட்சியின் சிறப்புக்கும், ஆட்சியின் பாரபட்சமற்ற நிலைக்கும் சான்றாக இருக்கும் என்று கூறி என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

***திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் தலைவர் அவர்களே, நீர்ப் பாசன மானியத்தின்கீழ் இன்றைக்கு நடைபெறுகிற விவாதத்தில் கடைசியாக சில கருத்துக்களைச் சொல்ல தங்கள் அனுமதியை வேண்டுகிறேன். இன்றைக்கு நடைபெற்ற விவாதத்தில் ஆளுகிற கட்சி, எதிர்க்கட்சி என்று இல்லாமல் எல்லா உறுப்பினர்களுமே தங்கள், தங்களுடைய பகுதிகளுக்கு இந்த நீர்ப்பாசன வசதிகள் அதிகரிக்கப்படவேண்டும்; இன்னும் உற்பத்தி பெருக வேண்டு மென்றால் நல்ல வகையிலே நம்முடைய நீர்ஆதாரங்களை வளர்ப் பதற்கான மார்க்கங்கள் இருக்கின்றன என்பதை எங்கள் பக்கத்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல, எதிர்ப்பக்கத்தில் இருப்பவர் களும் சொன்னார்கள். நான் வரிசையாக அவர்களுடைய பெயரைச் சொல்ல வேண்டுமென்றால் நேரமாகும்.

அமைச்சர் அவர்கள் ஒரு அடிப்படையான கருத்தைச் சொல் கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே இருக்கிற நீர்ஆதாரங்கள் எல்லாம் முடிந்து விட்டன; இனி நாம் கிணறுகளைத் தோண்டு வதைத் தவிர வேறு மார்க்கங்கள் இல்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்து அவ்வளவு ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல. உண்மையிலேயே அது பரிசீலனைக்குரிய கருத்து என்ற வகையிலேதான் இப்போது நான்கு மணி நேரம் நடந்த விவாதம் இருந்தது. ஆளுகிற கட்சியிலிருந்தும் எங்கள் கருத்தை ஆதரிக்கும் வகையிலேதான் பேசியிருக்கிறார்கள். வெட்டுப் பிரேரணை வந்தால் ஆளும் கட்சிக்கு வாக்களிக்கிறோம் என்று சொல்வார்களே தவிர, இந்தக் கருத்தை ஆதரித்துத்தான் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [16th March 1966

முதலமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையானாலும் சரி, நீர்ப்பாசன அமைச்சருடைய ஆய்வுரையானாலும் சரி, மற்ற உரைகளானாலும் சரி, 'நீர்ப்பாசன ஆதாரங்கள் எல்லாம் தீர்ந்து விட்டன; இனி வேறு துறைக்குத்தான் செல்லவேண்டும்' என்ற கருத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடத்திலேதான் எல்லாக் கருத்துக்களையும், கோரிக்கைகளையும் பரிசீலிக்கப்பட வேண்டியது என்ற முறையிலே, அவர்கள் ஏன் அந்த முடிவுக்கு வந்தார்கள் என்று மிக அழுத்தந்திருத்தமாகக் கேட்க விரும்புகிறேன். நம்முடைய நீர் ஆதாரங்கள் எல்லாம் தீர்ந்து விட்டன என்று சொல்வதற்கு நாம் என்ன தனித் தமிழ் நாட்டிலா, நாம் தமிழர் கட்சி சொல்லுகிற நாட்டிலா இருந்து கொண்டிருக்கிறோம்? இன்றைக்கு இந்தியத் திருநாட்டிலே இருந்து கொண்டிருக்கிறோம். இந்தியத் தண்ணீர் என்கிறோம்; இந்திய மண் என்கிறோம்; இந்தியக் காற்று என்கிறோம். இந்த நிலைமையில் இந்தியாவின் பூபாகங்களில் இன்றைக்கு இருக்கிற நீர் ஆதாரங்களை, அண்டை மாநிலங்களில் இருக்கின்ற நீர்ஆதாரங்களைப் பெற இந்தப் பத்து வருஷங்களாகத் தவறி இருக்கிறோம்; பெருமளவு தவறியிருக்கிறோம் என்றுதான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைப் பற்றி மிகப் பெருமையாகப் பேசப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை, தாராபுரம் பகுதிகளில் லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும் என்று குறிப்பிட்டார்கள். கோவை மாவட்டத்தில் 40 கோடி ரூபாய் செலவில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறோம்; அடுத்த வருஷத்தில் ஒரு லட்சம் ஏக்கர் பாசன வசதியைப் பெறும் என்று அமைச்சர் அவர்கள் நல்வாக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்கு நிறைவேறுவதாக. இன்னும் கூட நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன. கேரளக்காரர்களும் நாமும் அண்ணன் தம்பிகளாக, சகோதரர்களாகத்தான் இருக்கிறோம். இன்றைக்கு அவர்கள் அரிசி வேண்டுமென்று கேட்கிற நேரத்தில் ஆத்திரத்தோடு கேட்கிறார்கள். அது நியாயமான கோரிக்கைதான். 'எங்களுக்கு இந்தியாவிலே சொந்தம் கிடையாதா? இந்தியாவில் இருந்து அரிசி கொடுக்கவில்லையா என்றால் எங்களுடைய மாநிலத்தின் மூலம் பெறும் 50 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியைக் கொடு; **நாங்கள்** வெளியே வாங்கிக் கொள்கிறோம்' என்று ஆவேசத்தோடு காங்கிரஸ் கமிட்டியிலேயே கேட்டார்கள். இன்னும் கூட ஒரு பாராளுமன்ற உறுப்பினர் வேகமாகப் பேசினார். '50 கோடி ரூபாய் அளவு அந்நிய செலாவணியைக் கேரள நாடு கொடுக்கிறது; அதைக் கொண்டு நாங்கள் தாய்லாந்தில் இருந்து அரிசியை வாங்கிக் கொள்கிறோம்' என்று சொன்னார்கள். இன்னொருவர், 'அரிசி கொடுக்கவில்லை என்றால் இந்த கேரள நாடு இந்தியாவில் இருந்து பிரிந்துவிடும்' என்று பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார். அவை எல்லாம் இன்றைக்கு நமக்கு உடன் பாடானவை அல்ல. கேரளத்திற்கு அரிசி கொடுக்கவேண்டுமென்பதிலே நியாயவாதம் இருக்கிறது. அதே சமயத்திலே அரபிக் கடலிலே



16th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

சென்று யுகம் யுகமாக வீணாகிக் கொண்டிருக்கும் தண்ணீரைக் கேட்டுப் பெற இந்தப் பதினைந்து ஆண்டு காலமாக என்ன செய்தார்கள்? உங்களுக்கே கூட அலுத்துப் போயிருக்கும். 'இது என்ன வேலை' என்று விட்டு விடுவார்களோ என்று கூட நான் எண்ணுகிறேன். பதினைந்து ஆண்டுகளாக திருவனந்தபுரத்திற்கு எவ்வளவோ தடவை போயிருப்பார்கள். வெற்றி கிடைத்தா? ஏன் முடியவில்லை? இன்றைக்கு பரம்பிக்குளத் திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். கணக்கெட்டை எடுத்துப் பார்த்தால் நீராறுத் திட்டம் காத்துக் கொண்டிருக்கிறது. தலைமடை என்று சொல்வார்கள்; தலைமடை நிறைவேறாமல் 40 கோடி திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனைமலையாறு இருக்கிறது. ஆனைமலை உறுப்பினர் கூடப் பேசினார். இடமலையாறு, நீராறு, ஆனைமலையாறு நீர்ச்சாதனங்களைப் பயன்படுத்தினால் கோவை மாவட்டத்திலே, சகோதரி திருமதி பார்வதி அர்ஜுனன் சொன்ன மூலனூர் பஞ்சப் பிரதேசத்திலே பல ஆயிரம் ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெற வாய்ப்பு ஏற்படும். பரம்பிக்குளத் திட்டத்தை, நீராறு, இடமலையாறு, ஆனைமலையாறு ஆகிய மூன்று ஆறுகளின் தண்ணீரையும் கோவை மாவட்டத்திற்கு திருப்பினால் 50,000 ஏக்கர் பாசன வசதி பெறும். இதேபோன்றுதான் இராமநாதபுரத்திலும், ஸ்ரீவில்லிபுத்தூர்-சிவகாசிப் பகுதியில் இருக்கும் வத்திராயிருப்பு கண்மாயைப் பெரிதாக்கி மேற்கே போகும் நதிகளின் தண்ணீரை மலையைக் குடைந்து கொண்டு வந்தால் முதுகுளத்தூர் பகுதி, மானாமதுரை பகுதி, பரமக்குடி பகுதி போன்ற பஞ்சப் பகுதிகள் எல்லாம் நீர்ப்பாசன வசதியைப் பெற பெரு வாய்ப்பு ஏற்படும் இதையெல்லாம் நான் கனவாகச் சொல்லவில்லை; இங்கே திட்டங்களாக இருக்கின்றன. கோவை ஜில்லாவிலே—திருமதி குழந்தையம்மாளைக் காணோம், எத்தனையோ முறை பேசியிருக்கிறார்கள்—'அப்பர் பவானி' என்ற திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அவனாசிப் பகுதியில் பெருமளவு பாசன வசதி ஏற்பட முடியும். குல்கத்தி கமிஷனிலே சென்னை நகருக்கு குடிதண்ணீருக்காகத் தண்ணீர் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறோமே தவிர காவிரித் தண்ணீரும் வரவில்லை குல்கத்தி கமிஷனில் சொன்னது என்னவாயிற்று? எங்கு தேடினாலும் காணோம்; காகித மலைகளுக்கு மத்தியிலே எங்கும் காணோம்.

ஹொகனக்கல்லில் இருந்து மின்சாரம் மட்டும் போதும் என்று 1-00 p.m.
சொல்கிறார்கள். அங்குள்ள தண்ணீரை வட பெண்ணை ஆற்றிற்கு திருப்பலாம் அல்லவா? கிருஷ்ணகிரி அருகில் உள்ள சாகரத்திற்கு அதைத் திருப்பலாம் அல்லவா? அந்தத் தண்ணீரை சாத்தனூர், வளவனூர் போன்ற இடங்களுக்கு திருப்பக் கூடாதா? நம்மைச் சுற்றியுள்ள நீர்ஆதாரங்கள் வங்காள, அரபிக் கடலில் முயற்சி செய்தார்கள்? ஏதாவது முயற்சி எடுத்து வெற்றி கண்டிருக்கிறோமா? நாம் எல்லோரும் இந்தியர்கள் என்று விழுகின்றன. அந்தத் தண்ணீரை எடுத்து உபயோகிக்க என்ன சொல்கிறோம். அண்டை மாநிலங்களில் வீணாகப் போகும்

தண்ணீரை நம் மாநிலத்திற்குக் கொண்டுவர என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது? அவர்களால் முடியவில்லை யென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு நல்லெண்ண தூது கோஷ்டியை அனுப்புங்கள். கேரளாவில் ஒரு அரசாங்கம் இருந்தது. அது அவர்களுக்குப் பிடிக்காது என்று அகற்றி விட்டார்கள். இன்றைய தினம் நிலை என்ன? 1972-ல் நமக்கு கிடைக்க இருப்பது 18 அவுன்ஸ் அரிசி என்கிறீர்கள். எப்படி 18 அவுன்சு வரப்போகிறது. ஒரு நல்லெண்ண தூது கோஷ்டி ஆந்திராவுக்குப் போகட்டும், ஒரு கோஷ்டி திருவனந்தபுரத்திற்குப் போகட்டும், ஒரு நல்லெண்ண தூது கோஷ்டி மைசூருக்குப் போகட்டும். சென்று அங்கு வீணாகும் தண்ணீரை பெற்று வரலாமே. இன்று ஹீராகுட், பக்ரா நங்கல், தாமோதர் அணைக்கட்டு என்ற பெரிய திட்டங்கள்—மூன்று மாநிலங்களை சேர்த்திருக்கிற திட்டங்கள்—மத்திய அரசாங்கத் திட்டங்கள். இவையெல்லாம் வடக்கோ! இத்தகைய ஒருபெரிய திட்டத்தை நம் தமிழ் நாட்டில் ஏன் கொண்டு வரவில்லை? அதற்கான முயற்சிகள் என்ன செய்தோம்? அப்படியொன்றும் செய்யாத காரணத்தினால் இன்று நமக்கு உற்பத்தி இல்லை. அப்படியிருக்க நமக்கு அளவு ரேஷன்தான் கிடைக்கும்.

அடுத்து, நம் மாநிலத்திலுள்ள நிலைமைக்கு வருகிறேன். சுருக்கமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. வைகை நதித் திட்டம் என்று மதுரையில் இருக்கிறது. அங்கு தலை மதகுகள் இல்லை, ரெகுலேட்டர்ஸ் இல்லை. அழகாக இதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். 414 ஏரிகளுக்கு நீர்பாய்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். இவை ஜமீன் பகுதிகளில் இருந்ததால் கவனிக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆக, வைகை கால்வாய்களை நவீனமாக்குதல் என்ற தலைப்பில் கிட்டத்தட்ட 400 லட்சம் ரூபாய் செலவு செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். இது வந்தால் ஏற்கனவேயுள்ள ஒரு லட்சம் ஏக்கரா நிலங்களுக்கு பாசன உறுதி அளிப்பதுடன் துண்டு விழும் 14,000 ஏக்கரா நிலங்களுக்கு பாசன இணைப்பு அளிக்கவும் இந்தத் திட்டம் வகை செய்யும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்காக அங்குள்ள, மதுரையிலுள்ள மக்கள் மந்திரிகளுக்கு வாழ்த்துக் கூறுவார்கள். வைகை கால்வாய்களை நவீனமாக்குதல் என்ற பெயர்தான் இருக்கிறது. திட்டம் நான்கு கோடிக்கு. இதை முன்னமேயே செய்திருக்கக்கூடாதா? இதற்கு கேரளாக்காரர் அல்லது ஆந்திராவின் தயவு வேண்டியதில்லையே. இன்று கூட என்ன செய்திருக்கிறார்கள்? திட்டம் நான்கு கோடிக்கு. ஆனால், இந்த ஆண்டுக்கு ஒதுக்கியிருப்பது 10 லட்சம் ரூபாய்தான். ஜகதலப்பிரதாபன் கதையின் இரண்டாவது பகுதி இது. ப்ளானிங் கமிஷன் அனுமதி கிடைத்தால் நான்கு கோடி செலவு செய்யப்போகிறோம் என்பதுதான் நிலைமை. எப்போது அனுமதி கிடைக்கப் போகிறது? தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால், பாசன வசதிகள், வடிகால் வசதி போன்றவை முன்பு குலோத்துங்கன் காலத்தில் இருந்தது போன்று அல்லது ராஜ ராஜ சோழன் பேரன் காலத்தில் அவை எப்படி இருந்தனவோ அதேநிலையில்தான்





இன்றும் இருந்து கொண்டிருக்கின்றன. அங்கு வீணாகும் தண்ணீரை வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்தக் கூடாதா? இது சர்க்காரின் பொறுப்பில்லையா? ஏழு ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். அப்போது திரு. சுப்பிரமண்யம் அவர்கள் இங்கு இருந்தார்கள் என்று கருதுகிறேன். பாலாற்றுப் படுகை போன்ற இடங்களில் நீர் ஊற்றுக்கள் இருக்கின்றன, சப் ஸாயில் வாட்டர் இருக்கிறது, அதை கிணறுகள் எடுத்துப் பயன்படுத்தக் கூடாதா என்று முன்பே கேட்டிருக்கிறார்கள். அன்று அத்திட்டத்தை கேலி செய்துவிட்டு இன்று இவர்களே அந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். வடிமுனை குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இன்று இரண்டாயிரம் கிணறுகள் வெட்டப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். சப் ஸாயில் வாட்டரை எடுத்து உபயோகித்து நம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அண்ணா சொன்னால் அலட்சியம், இன்று அமெரிக்காக்காரன் சொன்னவுடன் அமுல் படுத்துகிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவதில் எங்களுக்கும் அக்கறை இருக்கிறது. பாலாறு பேசின் ரூல்ஸ் என்று சொல்கிறார்கள். பாலாறு பேசின் விதிகள் என்ன? அவை எதற்காகக் கொண்டுவரப்பட்டன? யார் நன்மைக்கு இன்று அந்த பாலாறு பேசின் ரூல்ஸ் நடைமுறையில் இருக்கிறதா? இது மந்திரங்களில் ஒன்றாக ஆகிவிட்டது. அவற்றிலிருந்து சில இடங்களில் விதிவிலக்கு கொடுக்கப்படுகிறது. ஆனால் சிலவிடங்களில் அப்படிப்பட்ட விதிவிலக்கு கொடுக்கப்படுவதில்லை. மற்ற இடங்களுக்கும் ஏன் அந்த விதிவிலக்கு கொடுக்கக்கூடாது? உங்கள் பிரதிநிதிகளே அதைப்பற்றிச் சொல்லட்டும். சில இடங்களில் கிணறுகள் வெட்டுகிறார்கள். சிலவிடங்களில் கிணறுகள் வெட்ட அனுமதி மறுக்கப்படுகிறது. ஏன் இந்த நிலை?

கோவை மாவட்டத்தில் அமராவதி திட்டம் என்ற ஒரு திட்டமிருக்கிறது. இதில் எனக்கு விசேஷ அக்கரை கூட இருக்கிறது. என் பிறந்த ஊர் அந்த இடத்தில்தான் இருக்கிறது. எனக்கு கொஞ்சம் நிலம் கூட அங்கு இருக்கிறது. "அமராவதி பழைய கால்வாய்களின் கீழ் உள்ள பயிர்களை காப்பாற்ற, அமராவதி நீர்த்தேக்கத்தில் இருந்து 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை விசேஷ சலுகை நீர் வழங்கப்பட்டது. 1966 பிப்ரவரி 21-ல் இருந்து அமராவதி பழைய கால்வாய்களுக்கு விசேஷ சலுகை நீர் வழங்கப்பட்டு வருகிறது. இது 1966 மார்ச்சு 31-வரை தொடரப்படும். அமராவதி கால்வாய், முதல் தடவையில் 31/0 மைல் வரை பாசனத்திற்கு திறந்துவிடப்பட்டது. 31/0 மைலுக்குக் கீழ் உள்ள விவசாயிகள் புன்செய் பயிர் மட்டும் சாகுபடி செய்ய அனுமதிக்கப்பட்டார்கள்." என்று இங்கு கூறியிருக்கிறார்கள். பழைய பாசனத்திற்கே தண்ணீர் இல்லை. புதிதாக பெட்டர்மென்ட் டாக்ஸ் வேறு வாங்குகிறார்கள். என் குடும்பத்திற்குச் சொந்தமான நிலம் 50 ஏக்கர் இருக்கிறது அங்கு. பயிர் செய்ய முடியாத நிலையில் எப்படி தீர்வை கட்டுவது என்று விழித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக, பழைய பாசனத்திற்கே

தண்ணீர் இல்லாதிருக்கும்போது அமராவதி தண்ணீரை கரூருக்கு கொண்டு போய் காவேரியில் கலந்து அங்கிருந்து புதுக்கோட்டைக்கு—அமைச்சர் அவர்கள் ஊருக்கு—அமராவதித் தண்ணீரை எடுத்துக்கொண்டு போகத்தான் திட்டம் வருகிறது என்ற நிலையில்தான் இது இங்கு விவாதிக்கப்பட்டது. என் சுயநோக்கத்தால் சொல்லவில்லை. தாராசுரத்தில் தாய் பிச்சை எடுக்கும்போது தனயன் கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அங்கேயே பழைய பாசனத்திற்கு தண்ணீர் இல்லாமல் இருக்கும்போது இப்படி வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லலாமா? புதுக்கோட்டைக்கு தனிப்பட்ட திட்டம் போடுங்கள். எங்கள் கட்சி உறுப்பினர் கனம் காடுவெட்டியார் பல திட்டங்கள் பற்றிச் சொன்னார்கள். புதுக்கோட்டைக்கு காவேரியிலிருந்து தண்ணீர் எடுக்க 1922-ல் சர். சி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்கள் காலத்தில் ஒரு திட்டம் தீட்டப்பட்டது. என்ஜினியர் அவர்கள் தங்குவதற்காக ஒரு பங்களா கூட கட்டப்பட்டது திருச்சிக்கு ஆறாவது மைலில். அப்போது இருந்தவர்கள் அதை மறுத்து விட்டார்கள். புதுக்கோட்டைக்கும் திட்டங்கள் வேண்டியதுதான், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அமராவதி திட்டத்திலிருந்து தண்ணீரை எடுத்துக்கொண்டு போகவேண்டாம், இப்போது அங்குள்ள நிலங்களுக்கே தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது, இதை சகோதரி திருமதி பார்வதி அர்ஜுனன் அவர்கள் நன்றாக விளக்கினார்கள். கொங்கு நாட்டு மக்கள் எதையும் கொடுக்கும் உள்ளம் உடையவர்கள் எதையும் தாராளமாக கொடுப்பவர்கள். கோவை வழியாக ஓடும் காவேரி தண்ணீரையே தஞ்சை தரணிக்கு கொடுத்து உதவியிருக்கிறார்கள். ஆகவே, இருக்கின்ற தண்ணீரையே எடுத்து இன்னொரு இடத்திற்கு கொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, பல திட்டங்களைப்பற்றியும் மிகப் பெருமையாக சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் ஏக்கர்களுக்கு பாசன வசதி கொடுக்கலாம் என்று இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திட்ட ஆரம்பத்தில் போட்ட கணக்கு, புள்ளிவிவரங்கள் என்னிடத்தில் இருக்கிறது. 1962-ம் வருடத்தில் இந்தத் திட்டத்தின் மூலமாக 30 ஆயிரம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்று என்ஜினியர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். இப்போது இந்தப் புத்தகத்தில் 1 லட்சம் ஏக்கர்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரம் கொடுக்கிறார்கள். புள்ளிவிவரம் என்பது வெறும் கற்பனையாக ஆகிவிடக் கூடாது. முன்பு இதைப்பற்றி தெளிவாக எழுதியிருக்கிறார்கள், 30 ஆயிரம் ஏக்கர்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்று. ஆனால் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தில் 'சுமார் ஒரு லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி இவ்வருடமே அளிக்கலாம்' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதில் இருக்கின்ற கணக்கைப் பார்த்தால், இங்கு இப்போது சொல்லப்படுவது



வித்தியாசமாக இருப்பது தெரியும். பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில், 1962 அக்டோபர் முதல் 1963 பிப்ரவரி வரையிலும் எடுக்கப்பட்டது. அதற்கு மேல் ஆண்டுகளில் எடுக்கப்பட்டது எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கூறுகிறேன் :

| ஆண்டு. | நீர்ப்பாசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (ஏரியா லோக்கலைஸ்ட்.) | உண்மையாக நீர்ப்பாசன வசதி பெற்றது. (ஏரியா இறிகேட்டட்.) |
|---|---|---|
| | ஏக்கர். | ஏக்கர். |
| 1962 அக்டோபர் முதல் 1963 பெப்ரவரி வரையில். | 8,866 | 870 |
| ஏப்ரல் 1963 வரையில் .. | 10,221 | .. |
| செப்டம்பர் 1963-64 .. | 18,160 | 8,432 |

இவ்விதம் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 30 ஆயிரம் ஏக்கர்களுக்கு பாசன வசதி கொடுக்கப்படும் என்று சொல்லி, கடைசியில் 18 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு வந்து, உண்மையாகவே நீர்ப்பாசன வசதி பெற்றது 8,000 ஏக்கர்கள். இவ்விதம் 40 கோடி ரூபாய் திட்டத்தில் பாசனவசதி பெற்றது 8,000 ஏக்கர்தான் இந்தக் குறைவுக்கு காரணம் என்ன என்று கேட்டால், கவுறு சரியாகப் போடவில்லை என்று—எங்கள் பக்கத்தில் கவுறு என்று சொல்வார்கள், சில இடங்களில் போத்தீஸ் என்று சொல்வதுண்டு. இம்மாதிரிப்பட்ட போத்தீஸ் சரியாக அமைத்துக்கொடுக்கவில்லை என்று காரணம் சொல்லப்படுகிறது. இதற்காக செலவு செய்யப்பட்டிருப்பதைப் பார்த்தால் 40 கோடி ரூபாய். இதற்கு வட்டிக் கணக்குப் பார்க்கக் கூடாது. பொதுமக்களுடைய நன்மையைக் கருதித்தான் திட்டங்களைப் போடுகிறோம் என்று நமது முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள். அவ்விதம் வட்டிக்காரன் என்ற முறையில் கணக்குப் பார்க்காமலேயே என்னென்ன நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி விபரமாக பேசுவதற்கு இப்போது நேரம் இல்லை. போத்தீஸ் சரியான முறையில் இருந்தால் மேலும் கூடுதலான அளவுக்கு பாசன வசதி கிடைத்திருக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. அதற்காக என்னென்ன செய்யவேண்டும் என்று பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அதை நான் குறிப்பிட விரும்புகிறேன் :

"The Madras Irrigation Works (Construction of Field Bothies) Act, 1959, provides for construction of field bothies by Government in the event of failure to do so by the ryots and the recovery of cost from them. It would appear that so far no work has been undertaken by Government under the provisions of this Act. The Committee is anxious that the irrigation potential created should be fully utilised and for this purpose Government should invoke the provisions of the Field Bothies Act, 1959, wherever necessary."

என்றிருக்கிறது. இதன்படி எதுவும் செய்யப்பட்டதாக தெரியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட ஒரு பெரிய திட்டத்திற்கு நாம் செலவு செய்யும்போது அதனால் ஏற்படக்

[திரு. கே. ஏ. மதியழகன்] [16th March 1966

கூடிய பலனையும் நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். நாங்கள் வட்டிக் கணக்குப் பார்ப்பதில்லை, பொதுமக்களின் நன்மையைக் கருதித்தான் திட்டங்களைப் போடுகிறோம் என்று சொல்லலாம். ஆனால் நிலைமை என்ன, ரெவின்யூ போர்ட்கூட சொல்கிறது. 1:5 அல்லது 1:10 என்ற முறையில் வருமானம் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறது. செலவிற்கேற்ற பலன் இல்லாவிட்டாலும ஓரளவுக்கேனும் வருமானம் வரவேண்டும் என்பதுதான் நவீன பொருளாதார சித்தாந்தம். அதல்லாமல் ஒரு கோடி ரூபாய்க்கு கால் அணா கூட வருமானம் இல்லாவிட்டால் அதை பெருமையாக சொல்லிக்கொள்ள முடியாது. 1963 வரையில் நமது மாநிலத்தில் 40 நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அதில் அத்தனையும் நஷ்டம். வட்டியைச் சேர்க்காமலும் கணக்கு சொல்லுகிறேன், வட்டியைச் சேர்த்தும் கணக்கு சொல்லுகிறேன். மொத்தம் 40 நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன:

| ஆண்டு. | திட்டங்கள் எண்ணிக்கை. | வட்டியை சேர்க்காமல் நஷ்டம் இருப்பது. லட்சம். | வட்டியைச் சேர்த்து நஷ்டம இருப்பது. லட்சம். |
|---|---|---|---|
| 1961–62-ல் | 16 | 27 | 49 |
| 1962–63-ல் | 14 | 71 | 92 |
| 1963–64-ல் | 14 | 16 | 37 |

இவையெல்லாம் ப்ரொடக்டிவ் ஸ்கீம்கள். இதல்லாமல் அன்-ப்ரொடக்டிவ் ஸ்கீம்கள் வேறு இருக்கின்றன. அதில் 24 ப்ராஜக்ட்களில் 46 லட்சம் ரூபாய் நஷ்டம். வட்டியையும் சேர்த்தால் 165 லட்சம் ரூபாய். அந்த நஷ்டத்தையும் தெரிவிக்கிறேன். 1962-63-ல் 26 திட்டங்கள்—வட்டியில்லாமல் 43 லட்சம். வட்டி சேர்த்து 217 லட்சம். 1963-64-ல் 26 திட்டங்கள்—வட்டியில்லாமல் 63 லட்சம். வட்டி சேர்த்து 229 லட்சம். இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றால், இதை நான் வெறும் விமர்சனத்திற்காக மட்டும் இங்கு சொல்லவில்லை. இதையும் நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, பொது மக்களின் நன்மைக்காகத்தான் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இப்படிப்பட்ட நஷ்டத்தைத் தவிர்க்க பப்ளிக் அக்கௌன்ட்ஸ் கமிட்டி கொடுத்திருக்கும் சிபாரிசியையும் மன்றத்திற்குத் தெரிவிக்கிறேன் :

" The Committee is informed that (a) in the matter of sanction of irrigation projects, Government no longer look into the financial return but are mainly concerned with the food production potential and it is only the "cost-benefit ratio" which is taken into consideration, (b) if the projects are to be remunerative, water rates will have to be charged on the "cost of service" principle and not on the principle of "what the traffic could bear", and as a greater emphasis is placed on food production, Government are not able to fix the water rates at higher levels. The Committee understands that the Board of Revenue has been asked to undertake a performance evaluation of irrigation projects with reference to the original expectations, acreage to be brought under



16th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

cultivation, increase in output, crop pattern, etc. It is anxious that the irrigation projects so far sanctioned should satisfy at least the cost-benefit ratio; namely 1.5 : 1. "

என்று கூறிக்கொண்டு, இந்த அளவில் செயல்படவேண்டுமே தவிர, இப்படிப்பட்ட பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் .07 சத விகிதம் இலாபம் என்ற அளவில் குறைவாக இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று சபைமுன் இருக்கக்கூடிய இந்த மான்யக் கோரிக்கையின் மீது சுமார் 35 அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். பேசின அங்கத்தினர்கள் அத்தனை பேருக்கும் அவர்கள் விரும்பக் கூடிய அளவில் நேரம் கொடுத்திருந்தால் இப்போது சொல்லப் பட்டிருக்கும் கோரிக்கைகள் இன்னும் ஆயிரக்கணக்கில் ஆகியிருக்கும், அதோடு இன்னும் இந்த மான்யத்தின் மீது பேச வேண்டும் என்று விரும்பின அங்கத்தினர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்திருந்தால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகியிருக்கும். சில அங்கத்தினர்கள் ஒரு நிமிடம், அரை நிமிடம் என்று தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த குறைந்த கால அளவுக்குள் அவர்கள் பேசியதைப் பார்க்கும்போது, அவர்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு தேவைகளைப்பற்றி குறிப்பிட்டு அவைகளை எவ்வளவு துரிதமாக நிறைவேற்றவேண்டுமோ அவ்வளவு துரிதமாக நிறைவேற்ற வேண்டும் என்று சொல்வதிலிருந்தும், இவற்றையெல்லாம் எவ்வளவு நன்றாகத் தெரிந்து சொல்கிறார்கள் என்பதையும் பார்த்து நான் உண்மையிலேயே மிகவும் சந்தோஷம் அடைகிறேன். இந்தக் கோரிக்கைகள், ஸ்தலத்தில் நடக்க வேண்டிய வேலைகள் எல்லாவற்றிலும் அரசாங்கம் போதுமான கவனம் காட்டிக்கொண்டுதான் வருகிறது.

கனம் அங்கத்தினர் சுப்பையா முதலியார் அவர்கள் இப்போது இருக்கக்கூடிய அமைப்பைக் குறித்துச் சொன்னார்கள். இந்த நீர்ப்பாசன இலாகா என்று சொன்னால் 4—5 பிரிவுகள் இருக்கின்றன. அதை கண்ட்ரோல் செய்யக் கூடிய இலாக்காக்கள் 2–3 இருக்கின்றன—நீர்ப்பாசன இலாகா, ரெவின்யூ இலாகா, ஃபுட் ப்ரொடக்ஷன் என்றெல்லாம் இருக்கின்றன. இதெல்லாம் தனித் தனியே இயங்குவதற்குக் காரணம், சில சந்தர்ப்பங்களில் அவசரமாக வேலைகள் நடக்க வேண்டும் என்பதுதான். குறிப்பாக ரெவின்யூ இலாகாவில் இருக்கக்கூடிய, விவசாய இலாகாவிலே, ஃபுட் ப்ரொடக்ஷன் அடிப்படையில் இருக்கக்கூடிய, இவைகளெல்லாம் நீண்ட காலதாமதம் இல்லாமல் உடனடியாக வேலைகள் நடக்கவேண்டுமென்பதற்காகத்தான். இந்த ஒவ்வொரு பிரிவிலும் இருக்கக் கூடிய மொத்த திட்டங்களைப் பார்த்தோமானால், அவைகளையெல்லாம் ஒரு சில வருஷங்களுக்குள் செய்ய முடியுமா என்று பார்த்தால், என்ஜினியர்களே கொடுத்திருக்கக் கூடிய திட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன. இப்போது இருக்கக் கூடிய நிதி வசதிக்குத் தகுந்த முறையில் நாம் எவ்வளவு சிறிய

திட்டங்களை, நடுத்தரத் திட்டங்களை அல்லது பெரிய திட்டங்களையெல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டுமோ அவைகளையெல்லாம் தொடர்ந்து கவனம் காட்டி எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். கனம் அங்கத்தினர்களுடைய கோரிக்கைகளைப் பார்க்கும்போது இன்னும் அதிக நிதி வசதி கிடைக்கும்பட்சத்தில் ஏராளமான திட்டங்களை நிறைவேற்ற முடியும். அதற்குத் தேவையான இன்வெஸ்ட்டிகேஷன் பூர்த்தியான திட்டங்களே ஏராளமாக இருக்கின்றன.

இப்போது ஒவ்வொரு அங்கத்தினரும் பதில் சொல்ல வேண்டுமென்றால், ஒரு திட்டத்திற்கு ½ நிமிஷம் என்று வைத்துக் கொண்டாலும் கூட பல மணி நேரம் ஆகும். அந்த அடிப்படையில் இல்லாமல் மொத்தமாக இந்த நீர்ப்பாசன இலாகா கவனம் காட்டியிருக்கக் கூடிய, காட்ட வேண்டிய சில அடிப்படைக் கொள்கைகளைக் குறித்து நான் விவரம் சொல்ல விரும்புகிறேன்.

நான் இந்தச் சபைக்குக் கொடுத்திருப்பதைப் பார்த்தால்—ரெவ்யூ ஒன்று கொடுத்திருக்கிறேன், என் பெயரில் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறேன். என் பெயரில் வந்திருக்கக்கூடிய உரையை கனம் அங்கத்தினர்கள் கவனித்துப் பார்த்திருந்தால் அதிலே அதிகமாக நான் இடம் கொடுத்திருப்பது இந்த வாட்டர் டிஸ்ட்ரிப்யூஷன் அண்ட் மானேஜ்மெண்ட் சம்பந்தமாகத்தான். அதிலும் பெரிய பெரிய நீர்ப்பாசன ஆதாரங்களில் இருக்கும் தண்ணீரை எப்படிப் பயன்படுத்தவேண்டுமென்பதிலே சென்ற வருஷம் நமக்குப் பெரிய அனுபவத்தைத் தந்த ஒரு வருஷம். சென்ற வருஷ பருவ நிலையைப் பொறுத்த வரையில், ராஜ்யத்திற்கு சாதகமாக இல்லாவிட்டாலும் கூட, நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தவரையிலே அதில் இருக்கக் கூடிய நிபுணர்களைப் பொறுத்த வரையிலே இதைப் போன்ற முக்கிய வருஷம் ஏற்பட்டதில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், சாதாரணமாக நல்ல மழை இருக்கக் கூடிய சமயத்தில் அல்லது பருவ நிலை நன்றாக இருக்கும்போது, எல்லோருமே அதைக் குறித்து ஆழ்ந்து சிந்திப்பதில்லை. ஆனால் சென்ற வருஷம் ஏற்பட்ட நெருக்கடியை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்தப் பிரச்னையை அனுகுகிறபோது இந்த வாட்டர் மானேஜ்மெண்ட் எவ்வளவு அவசியம் என்பதை சபை உணர்வதைப்போல இந்த இலாகாவில் இருக்கக்கூடிய நிபுணர்களும் உணர்ந்திருக்கிறார்கள் என்று இன்றைக்கு நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். ஏதோ நீர்ப்பாசன இலாகாவைப் பொறுத்தவரையில் அணைகளைக் கட்டினோம், சப்ளை சானல் வெட்டினோம், அதோடு வேலை பூர்த்தி ஆகிவிட்டது என்று நினைக்காமல் விவசாயத்திற்கு எவ்வளவு முட்டுக்கட்டைகள் இருக்கின்றன என்று பார்க்கிறபோது சென்ற வருஷம் அதைப்பார்த்தோம். இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு முடியுமா என்று முயற்சி எடுக்கும்போது, ராஜ்யத்தில் ஒரு பக்கத்தில் மட்டுமல்ல. காவிரிப் பகுதியில் மட்டுமல்ல, பெரியாறு திட்டத்தை எடுத்துக் கொண்டாலும், தாம்பரபாணி, மணிமுத்தாறு திட்டங்களை எடுத்துக்கொண்டாலும் சென்ற வருஷம்





முத்தாறு திட்டங்களை எடுத்துக்கொண்டாலும் சென்ற வருஷம் குறைவாக இருந்த தண்ணீரைக்கொண்டு நாம் மகசூல் எடுத்திருக்கிறோம் பெரிய பெரிய ஆய்க்கட்டுகளில் என்றால் அதிகமாக டிஸ்ட்ரிப்யூஷனைப் பொறுத்தவரையில் கவனம் காட்டியதுதான் காரணம்.

காவிரியை மட்டும் எடுத்துக்கொண்டோமானால், அந்தப் பகுதியில் பயிரைக் காப்பாற்றக் கூடிய முறையில் சில முடிவுகளை அரசாங்கம் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனால் கோயம்புத்தூர் ஜில்லாவில் இருக்கக் கூடிய விவசாயிகளுக்கு மன வேதனை ஏற்பட்டிருக்கலாம். அதனால் சர்ச்சைகளெல்லாம் வந்திருக்கும். ஆனால், எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய நிலையிலே, விவசாயம் முறையாக நடக்கவேண்டும், பயிர்கள் காப்பாற்றப்படவேண்டும் என்ற முறையில் சில நடவடிக்கைகள் எடுத்து, இன்றைக்கு பெரும் பகுதி ஆயக்கட்டைக் காப்பாற்றியிருக்கிறோம். அதனால் சில இடங்களில் பாதகம் ஏற்படலாம். அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டுதான் கனம் அங்கத்தினர் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் சொன்னார்கள். இந்த வருஷம் லோயர் பவானிக்குக் கொடுக்காமல் காவிரிக்குத் திருப்பிவிட்டு தஞ்சைக்குக் கொடுத்ததைத்தான், அது மாமூலாக வந்துவிடக் கூடாது என்று சொன்னார்கள். லோயர் பவானி அணை அமைந்ததிலிருந்து சென்ற வருஷம் வரையில் அதுபோன்ற நிலை ஏற்பட்டிருக்காது என்று நான் நினைக்கிறேன். நடப்பு வருஷத்தில் அந்தமாதிரி ஏற்பட்டதற்குக் காரணம் எல்லோருமே உணர்ந்திருக்கக் கூடிய சூழ்நிலைதான். தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய பயிரைக் காப்பதற்காகத்தான் பல முடிவுகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதுபோல லோயர் பவானி ஏரியாவில், மற்ற திட்டங்களின் ஏரியாவில் பயிர்கள் இருந்தால் அவைகளைக் காப்பாற்ற என்ன கவனம் காட்டி இருக்கவேண்டுமோ அந்த கவனத்தை அரசாங்கம் காட்டியிருக்கும். அதில் ஒன்றும் பாரபட்சம் கிடையாது. அந்த அடிப்படையிலே பல நடவடிக்கைகள் எடுக்கும்போது, சில சமயங்களிலே தீவிரமான முடிவுகள் எடுக்கும்போது, சில புதிய பாசன ஆதாரங்களில் இருக்கும் ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிலைமை லோயர் பவானியில் மட்டும் ஏற்பட்டது என்று நினைக்கக்கூடாது. மேட்டூர் திட்டத்தை எடுத்துக்கொண்டால் சேலம் ஜில்லா இருக்கிறதே அங்கும் கொடுக்கவில்லை. பெரியாறு திட்டத்தை எடுத்துக்கொண்டால், நியூ எக்ஸ்டென்ஷன்ஸ் இருக்கிறதே அங்கெல்லாம் கொடுக்கவில்லை. தண்ணீர் வசதிக்குத் தகுந்த முறையில் ஒவ்வொரு ப்ராஜெக்ட்டும் செயல் பட்டிருக்கிறது.

பெரியாறு ப்ராஜெக்டை எடுத்துக்கொண்டால் முதல் போக சாகுபடிக்கு ஜூன் மாதத்திலேயே கொடுத்திருக்கவேண்டும். வைகையில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் ஆகஸ்ட் மாதம் வரையில் தள்ளிப் போடப்பட்டது. மணிமுத்தாறு திட்டத்தை எடுத்துக்கொண்டோமானால், திருநெல்வேலி ஜில்லாவின் அதிர்ஷ்

டம்தான் இந்த வருஷம் பஞ்சமில்லாமல் காப்பாற்றப்பட்டது என்று சொன்னால் அது மிகையில்லை. நவம்பர் மாதம் 18-19-ம் தேதியில் மணிமுத்தாறு அணையைப் பார்க்கும்போது மீண்டும் இந்த வருஷமும் அணை நிரம்பாமல் பஞ்சம் ஏற்பட்டால் அந்த ஜில்லாவின் நிலை எப்படி இருக்கும் என்று நினைக்கும்போதே எனக்கு அச்சம் ஏற்பட்டது. ஆனால், கடைசி நேரத்திலே நல்ல மழை பெய்து அங்கு வேறு ஒரு விசேஷ நிகழ்ச்சி ஏற்பட்டது. நல்ல மழை தொடர்ந்து 10-15 தினங்கள் பெய்த காரணத்தினால் அணை நிரம்பி வழிந்ததோடு அல்லாமல், தொடர்ந்து ஒரு மாதத்திற்கு மேலே வழிந்து கொண்டிருந்தது. இதை நான் சொல்லும்போது நமது நாட்டுக்குள் இருக்கும் நீர்ப்பாசன ஆதாரங்களை, வசதிகளை இன்னும் ஊன்றி கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது தெரிகிறது. தஞ்சை ஜில்லாவிலே 1965-ம் வருஷம், ஜூன் மாதம் 12-ம்தேதியே தண்ணீர் திறந்து விட்டோம். அந்தத் தேதியிலிருந்து நவம்பர் மாதம் முடிகிற வரைக்கும் அந்த ஜில்லாவிலிருந்து வந்த பத்திரிக்கைச் செய்திகளையெல்லாம் பார்த்தால், பற்றாக்குறை, பஞ்சம் வந்து விடும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். காரணம், அவர்கள் பழக்கத்திற்குத் தகுந்தாற்போல, அவர்கள் காவிரியைத் தெரிந்துகொண்டிருக்கிற வகையில் பார்க்கும்போது, கனம் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் கூடச் சொன்னார்கள், 61 அடி தண்ணீரை வைத்துக்கொண்டு இவர்கள் எப்படி துணிச்சலாக சம்பாவுக்குத் தண்ணீர் திறக்கலாம், ஜூன் மாதத்திலேயே ஏன் திறக்கச் சொன்னார்கள் என்று பலமாக ஒரு கருத்தைச் சொன்னார்கள் அங்கு உள்ள மக்கள்; கனம் அங்கத்தினர் திரு. ஏ. கே. சுப்பைய்யா அவர்களுடைய கருத்து அல்ல. தொடர்ந்து சவுத்-வெஸ்ட் மான்ஸூன் சரியாக இல்லாதபோது கொடுத்தோம். அப்படித் திறந்ததில் லாபமா, நஷ்டமா என்று பார்த்தால் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம், அந்தப் பகுதியிலே டிசம்பர் முதல் வாரத்தில் வந்த பத்திரிக்கை செய்திகள் எல்லாம், அங்கு இருக்கிறவர்கள் கொடுத்த செய்தியெல்லாம், எங்கள் ஜில்லாவே வெள்ளத்தினால் மூழ்கி விட்டது என்பதாகும். ஆனால் ஒரு நாள், இரண்டு நாள், அல்லது மூன்று நாள் மழை பெய்தால் போதும்,
1-30 p.m. வெள்ளம் அதிகமாக ஏற்பட்டுவிடும். இந்த வருஷம் பருவ நிலை பூர்ணமாக இருந்தது, இந்த வருஷம் பருவநிலை சரியாக இருந்தது என்று சொல்லுவது பொருத்தமில்லை. வெள்ளம் இருந்தது, பார்த்தீர்களா என்று கனம் அங்கத்தினர் கிருஷ்ண மூர்த்தி அவர்கள் சொன்னார்கள். ஏதோ 5 நாள், 10 நாள் வெள்ளம் வந்துவிட்டால் தண்ணீர் பூர்ணமாக வந்து விட்டது என்று சொல்ல முடியாது. நார்த்—ஈஸ்டு மான்ஸூன் மூலம் அக்டோபர்-டிசம்பர் வரைக்கும் எவ்வளவு மழை பெய்ய வேண்டுமோ அதைவிட அதிகமாக, நவம்பர் கடைசியிலிருந்து டிசம்பர் 15, 16 தேதிக்குள்ளே அதிகமாக மழை பெய்திருக்கிறது கடலூரில் என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், அது பிரயோசனப்படாது. மழை பெய்தாலும், அந்த வெள்ளம் அடித்துக்கொண்டு கடலுக்குப் போய்விடும்.





இந்த வருஷம் இருக்கக்கூடிய நிலையில் நீர்ப்பாசன ஆதாரங்களை நாம் ஆராய்ச்சி செய்கிறபொழுது நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய 'ரீ-மாடலிங் ஸ்கீமை' அல்லது சீர்திருத்தம் செய்யக்கூடிய ஸ்கீம்களைப்பற்றி முன்னாலேயே நினைத்திருக்கக்கூடாதா என்று கேட்டார்கள். நீர்ப்பாசன இலாகாவின் 15, 20 வருஷ சரித்திரத்தைப் பார்த்தால் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு கட்டத்திலும் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். மிக அவசரமான, அவசியமான, மக்களுக்கு பயன்படக்கூடிய திட்டங்களை நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கும்பொழுது, மிகக் கடினமான திட்டங்களுக்கு நாம் போகவேண்டுமென்று சொன்னால், அது பொருத்தமாக இருக்காது. முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவைகளின் கீழ் நாம் பெரிய பெரிய திட்டங்களை நிறைவேற்றி, விவசாயத்திற்குப் போதுமான ஒரு ஊக்கத்தை, பாதுகாப்பைக் கொடுத்திருக்கிறோம். அதிகமாக தண்ணீரை பயன்படுத்தி விட்டோம், இனிமேல் தண்ணீர் இல்லையே என்று நான் நினைத்துவிடுவேனோ என்று கனம் திரு. மதியழகன் அவர்களுக்கு சந்தேகம் வேண்டாம். பெரிய நீர்ப்பாசன ஆதாரங்களில் தேவையான அணைகளை கட்டியிருக்கிறோம், கால்வாய்களை வெட்டியிருக்கிறோம். ஆனால் அது மட்டும் போதாது. கனம் மதியழகன் அவர்களுடைய கட்சியைச் சார்ந்த அறந்தாங்கித் தொகுதி அங்கத்தினருடைய கருத்தைக் கொஞ்சம் ஆலோசனை செய்திருந்தால் நாம் அடுத்த கட்டத்திற்கு வரவேண்டியிருக்கிறோம். பெரிய ஆதாரங்களில் இருக்கக்கூடிய தண்ணீர் ஒரு பக்கம் இருக்கட்டும், அதைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

மற்றொரு நிலை என்னவென்றால் ஸ்தலத்திலேயே பெய்யக் கூடிய மழையை பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அந்தத் தண்ணீரை பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் திட்டங்களை வகுக்க வேண்டும். கிழக்கு இராமநாதபுரம், அறந்தாங்கி, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஜில்லாக்களில் சில பகுதிகள், செங்கற்பட்டு ஜில்லா போன்ற இடங்களில் பார்த்தோமானால் முன்கூட்டியே ஏராளமான ஏரிகள், கண்மாய்களை அமைத்திருக்கிறார்கள். புதுக்கோட்டைப் பகுதியை எடுத்துக்கொண்டால் சாதாரணமாக ஒரு ராஜ்யத்தில் ஒரு ஜில்லாவின் விஸ்தீரணம் எவ்வளவு இருக்குமோ அந்த அளவு இருக்கும். புதுக்கோட்டை பகுதியில் மட்டும் 4,000 5,000 ஏரிகள் இருக்கின்றன. ஏரிகள் பாதியாக இருக்கும், நிலம் பாதியாக இருக்கும். ஸ்தலத்திலே பெய்யக்கூடிய மழையைக் கொண்டு தண்ணீரை நிரப்பி வைக்கிறார்கள். அங்கே இருக்கக் கூடிய கஷ்டம் பருவ நிலை ஆரம்பக் கட்டத்தில் சாதகமாக வந்தால்தான் அவர்களுக்கு பயிர் வரும். ஆனால் ஸவுத்-வெஸ்ட் மான்ஸூன், நார்த் ஈஸ்டு மான்ஸூன் எப்பொழுது வரும் என்று தெரியாமலேயே விவசாயிகள் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. அறந்தாங்கி அங்கத்தினர் அவர்கள் 'எங்களுக்கு ஆரம்பக் கட்டத்தில் 10, 15 நாட்களுக்கு தண்ணீர் கிடைத்தால் போதும்,

*[திரு. வெ. ராமைய்யா]* [16th March 1966

இல்லாவிட்டால் கடைசி கட்டத்தில் தண்ணீர் இருந்தால் போதும்' என்று கோரிக்கை விடுத்தார்கள். அது அவர்களுடைய கோரிக்கை மட்டும் அல்ல. கிழக்கு இராமநாதபுரம், திருச்சி, புதுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய பகுதிகளில், எங்கே ஏரி, கண்மாய்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அதே கோரிக்கைதான். அதே அடிப்படையில்தான் நாங்குனேரி பகுதி திட்டத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மணிமுத்தாறு பாசனத்தில் இருக்கக்கூடிய ஒரு பகுதி. ஆனால் அது வரண்ட பகுதி, ஏராளமாக ஏரிகள் இருக்கக்கூடிய பகுதி. கனம் அங்கத்தினர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல் வெள்ளம் வரக்கூடிய ஒரு நிலைக்கு ஒரு அணை கட்டினால் கூட அதனால் விவசாயிகளுடைய பிரச்னை தீருகிறது.

மணிமுத்தாறு திட்டத்தைப் பார்க்கிறபொழுது லாபமா, நஷ்டமா என்ற அடிப்படையில் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் கணக்குப் போட்டார்கள். அவர் போட்ட கணக்குப்படி பார்த்தால் மணிமுத்தாறு திட்டம் வந்திருக்கவே முடியாது. விவசாயிகளுக்கு என்ன லாபம் இருக்கும் என்பதை வைத்துக்கொண்டு, எத்தனை ஏரிகள் நிரம்புகின்றன, அதில் எத்தனை ஆயிரம் ஏக்கர் சாகுபடிக்கு வருகிறது என்பதைப் பார்க்கவேண்டும். அந்த அடிப்படையிலே இன்றைக்கு நம் முன் இருக்கக்கூடிய பிரச்னையைத் தீர்க்கவேண்டும். ஏதோ பெரிய நதிகளில் இருக்கக்கூடிய தண்ணீரைப் பயன்படுத்திவிட்டோம், அதனால் நமது பிரச்னை தீர்ந்து விட்டது, இனிமேல் மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய தண்ணீரைப் பெறுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும், அதிலே கவனம் இருக்கவேண்டும் என்று சொல்லுவதை நான் ஓரளவுக்கு ஒப்புக்கொண்டாலும், நம் மாநிலத்தில் இருக்கக்கூடிய தண்ணீரை முறையாக பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுக்கவேண்டும். நமது எல்லைக்குள்ளேயே இருக்கிற தண்ணீரை பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒரு பக்கம் பெரிய நதிகளில் இருக்கக்கூடிய தண்ணீரை பயன்படுத்திக்கொள்ளுவது என்று இருந்தாலும், 'லோகல் ரெய்ன்ஃபாலை' பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதைத்தான் கனம் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் சொன்னார்கள். அதை கனம் மதியழகன் அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை நிறைவேற்றி விட்டால் மட்டும் போதாது. ஸ்தலத்தில் இருக்கக் கூடிய வேலைகள் ஏராளமாக இருக்கின்றன. ஸர்ஃபேஸ் வாட்டர் என்றால் பெரிய நதிகளில் வருவது ஒன்று, லோகலாக அங்கு அங்கு சிறு சிறு ஓடைகள், காட்டாறுகள் அல்லது நீர்த்தேக்கங்களில் இருக்கக் கூடிய தண்ணீரைப் பயன்படுத்தவேண்டும். அது போன்று இரண்டாம் தரம், தகுதி படைத்த அணைகள் அல்லது ஏரிகளில் இருக்கக் கூடிய தண்ணீரை முறையாக விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுவது பற்றி நாம் இனிமேல் யோசிக்க வேண்டும். பெரிய திட்டங்களுக்கு எப்படி ஸப்ளிமெண்டு செய்யலாம், அவசர காலத்தில் கஷ்டப்படக்கூடிய காலத்தில் என்பதை நாம் அழுத்தமாக சிந்திக்கவேண்டும், இல்லாவிட்டால் பிரயோசனம் இருக்காது, 'மாக்ஸிமம் யூட்டிலிஸேஷன்' என்று சொல்லி இன்னும் கொஞ்சம் தீவிரமாக



16th March 1966] *[திரு. வெ. ராமைய்யா]*

பரிசீலிக்கவேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். அதுமாதிரி நம்மால் செய்ய முடியும். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுகிறபொழுதுகூட நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையிலே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே, இவர்கள் சொன்ன லாப நஷ்டக் கணக்கு அடிப்படையில் பல வருஷங்களாக என்ஜினியர்கள் அதிலே ஊறிப்போய் இருக்கிற காரணத்தினால் எந்த ஒரு திட்டத்தை நிறைவேற்றினாலும், அதை எவ்வளவு சிக்கனமாக அமைக்க முடியுமோ அந்த முறையில் அமைப்பதற்கு பாடுபடுகிறார்கள். கட்டுபடியாகக்கூடிய திட்டமாக நீர்ப்பாசன திட்டங்கள் இல்லை. கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள், "பிளானிங் கமிஷனுக்கு போக வேண்டுமா, உடனே செய்யக் கூடாதா ?" என்றெல்லாம் கேட்டார்கள். எப்படி முடியும்? எந்த ஒரு திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் நமது ராஜ்யத்தில் நீர்ப்பாசனத்திற்காக செலவு செய்யக் கூடியது முறையாக இருக்குமா, லாபமாக இருக்குமா, நஷ்டமாக இருக்குமா என்று அங்கே மத்தியில் இருக்கக்கூடிய நிபுணர்கள் பரிசீலிக்கிறபொழுது, நமது ராஜ்யத்திலிருந்து போகக்கூடிய திட்டங்கள் அவர்கள் கணக்குப்படி கட்டுப்படியாகாத திட்டங்களாகத்தான் இருக்கும். மற்ற எந்த ராஜ்யங்களை எடுத்துக்கொண்டாலும், இன்னும் அணைகள் கட்டப்படாத நதிகள் ஏராளமாக இருக்கின்றன. அந்த நதிகளின் குறுக்கே அணை கட்டிவிட்டால் போதும், பெரிய தேக்கம் அமைந்துவிடும். அதனால் அங்கே லாபம் அதிகமாக இருக்கும். அதே நேரத்தில் விவரம் சொல்லவேண்டுமென்றால் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்களுக்கு வேறு ஒரு இலாகாவில் நடக்கக்கூடியதை நான் சொல்ல விரும்புகிறேன். மேட்டூரில் மின்சார உற்பத்தி செய்வது என்றால் மிகக் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியும். அங்கு ஒரு அணை கட்டி, பின்புறத்தில் ஒரு ஜெனரேட்டர் வைத்துவிட்டால், மின்சார உற்பத்தி செய்து விடலாம். 1930-ம் வருஷத்தில் அது கூட கட்டுபடியாகாத திட்டமாகும். குந்தாவில் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம் என்று சொன்னால், அங்கு ஒரு அணை கட்டினால் போதாது. பல டாம்ஸ் கட்டவேண்டும், டன்னல்ஸ் கட்டவேண்டும். மேட்டூரில் இவ்வளவு சுலபமாக குறைந்தபட்ச செலவில் மின்சாரம் உற்பத்தி செய்ய முடிகிறதே, ஏன் குந்தாவில் அதிகமாகச் செலவு செய்யவேண்டும் என்று கேள்வி போட்டால், அது சரியாக இருக்காது.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய முக்கியமான நதிகளிலுள்ள தண்ணீரை ஒழுங்காக பயன்படுத்தியிருக்கக்கூடிய காரணத்தினால், கட்டுபடியாகக்கூடிய திட்டம் நமது ராஜ்யத்தில் எப்படி இருக்க முடியும்? மற்ற ராஜ்யங்களில் அம்மாதிரித் திட்டங்கள் போடுகிறார்களே என்றால், அங்கு அம்மாதிரி போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன்னும் 10 வருஷங்கள் ஆனாலும் அங்கே கட்டுபடியாகக் கூடிய திட்டங்கள் போடமுடியும். திரு. மதியழகன் அவர்கள் பத்திரிகை படிக்கக் கூடியவர்கள். அடிக்கடி பத்திரிகைகளில் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். பக்கத்தில் இருக்கிற ஆந்திர ராஜ்யத்தில் இருக்கக்கூடிய முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள்.

மற்ற ஊர் என்றால் எதுவானாலும் சொல்வார்கள். ஆனால், அவர்கள் ஊர் என்பதும் கஷ்டமாக இருக்கிறது. (குறுக்கீடு) எங்கள் ஊர், உங்கள் ஊர் என்றெல்லாம் பார்த்தால் சரியாக வராது. திரு. நல்லசாமி அவர்கள் கூடச் சொன்னார்கள், கனம் அங்கத்தினர் திருமதி பார்வதி அர்ஜுனன் அவர்களும் பேசும்போது சொன்னார்கள், அமராவதியில் தண்ணீர் இல்லை, புதுத் திட்டங்கள் எடுக்கமுடியாது என்று அதிகாரிகள் சொல்லுகிறார்களே, புதுக்கோட்டைக்கு மட்டும் எங்கே இருக்கிறது தண்ணீர் என்று கேட்டார்கள். நான் ஆரம்பத்திலே சொன்னது போல, அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும், வெள்ளம் ஏற்படுவது வருஷத்தில் 5 அல்லது 10 நாட்கள் அல்லது ஒரு வாரம், இரண்டு வாரங்கள் தான். ஆகவே, நாம் வெள்ளத் தடுப்பு வேலை செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். வெள்ளத் தடுப்பு வேலைக்கு கனம் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் சொன்னது போல, தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரை அங்கே பாதகம் வராமல் செய்ய வேண்டும். அங்கே வாய்க்கால் வெட்டிக் கடலிலே விட்டுவிடலாம். தஞ்சை ஜில்லாக்காரர்கள் சொல்லுவார்கள், தங்களுக்கு முக்கியமாக வேண்டியதெல்லாம் வடிகால்தான் என்று. தண்ணீர் வடிந்தால் போதும். மற்ற வழிகள் என்ன என்பதைப் பற்றி நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள். 1961-ம் வருஷ வெள்ளச் சேதத்திற்குப் பிறகு விசேஷ சூப்பரின்டென்டிங் எஞ்ஜினியரை நியமனம் செய்து, வெள்ளத் தடுப்புக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனைகள் சொல்லி வருகிறார்கள். இன்று காவிரியில், வெள்ளம் வரும்போது, மேட்டூர் டாமில் வழிந்து வரும்போது தண்ணீர் அவ்வளவையும் தஞ்சைக்குப் போகாமல் தடுத்து வேறு திசையில் முடிந்தால் திருப்பவேண்டும். மேட்டூரில் இருந்து இரண்டு கரைகளிலும் வாய்க்கால் வெட்டி, தஞ்சைக்குப் பாதகம் வராமல், மற்ற வரண்ட பகுதிகளுக்கு, புதுக்கோட்டைப் பகுதிக்கு, சேலம் பகுதிக்கு இன்னும் எங்கெங்கே சாத்தியமோ அங்கெல்லாம் எடுத்துச் செல்லலாம் என்றார்கள். கோயம்புத்தூர் ஜில்லாக்காரர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள், தங்களுக்கு நேரிடையாகப் பாசனம் வேண்டாம், வாய்க்கால் வெட்டி, பூமி சுரந்தால் போதும் என்று இருந்தால் போதும் என்று. அவர்கள் கிணறு வெட்டுகிறோம் என்கிறார்கள். அதே போலத்தான் கிழக்கு இராமநாதபுரம், இன்னும் மற்றப் பகுதிகளில் இருக்கிறவர்கள், நிரந்தரமாகத் தண்ணீர் வேண்டாம் என்கிறார்கள். எப்பொழுதாவது கண்மாய்கள் வரண்டு போனால், அப்பொழுது தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது, அதற்கு வேண்டிய தண்ணீர் கொடுக்க வசதி செய்தால் போதும் என்பார்கள்.

கனம் அங்கத்தினர் திரு. நல்லசாமி குறிப்பிட்டதைப் பற்றிச் சொல்லவரும்போது, புதுக்கோட்டைக்குத் தண்ணீர் கொடுப்பது பற்றிப் பத்திரிகையில் பார்த்ததாகச் சொன்னார்கள். அதெல்லாம் இன்னும் இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜில்தான் இருக்கிறது. திட்டம் பூர்த்தியாகும்போது கரூருக்குக் கொடுக்க வேண்டியது, புதுக்கோட்டைக்குக் கொடுக்க வேண்டியது இல்லை என்பதெல்லாம்



இல்லை. மூலனூருக்குக் கொடுக்கும் திட்டத்தின் 'காஸ்டை' கூட்டி, அதை ஏதோ மூடி மறைத்து, எடுத்துப் போகவேண்டிய அவசியம் இல்லை. வெள்ளம் வரும்போது தேக்கி வைக்க ஆதாரங்கள் இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். அறந்தாங்கி முதலிய ஏரியாக்களில், வெள்ளம் வரும்போது கடலுக்குப் போகும் தண்ணீரை வேறு பக்கம் திருப்பக் கூடாதா என்பது தான் பிரச்னை. அமைச்சர் இருக்கக் கூடிய காரணத்தால் நடக்கிறது என்று தயவுசெய்து அந்த நினைப்பே வர வேண்டிய அவசியம் இல்லை. இது பற்றியெல்லாம் பூர்வாங்க பரிசீலனை இன்னும் முடியவில்லை. நிபுணர்கள் அல்லது இலாகா லாப நஷ்டக் கணக்குப் பார்க்கும் என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் சொன்னார்கள், ரெவின்யூ போர்டில் யார்ட்ஸ்டிக் வைத்திருக்கிறார்கள், அது சரியல்ல நவீனகால முறைக்கு என்றார்கள். (குறுக்கீடு) கமர்ஷியல் அகௌண்ட்ஸ், எகனாமிக் அகௌண்ட்ஸ் எல்லாம் கனம் அங்கத்தினர் சொல்லுகிறபடி இரிகேஷன் டிபார்ட்மெண்ட் ஏற்றுக் கொண்டு இருந்தால், இவ்வளவு அங்கத்தினர்கள் ஒன்றுமே சொல்லியிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது, முன்பே மூடிக்கொண்டு போயிருக்கலாம். எப்படியேனும் தண்ணீர் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டும். அதற்கு லாப நஷ்டக் கணக்குப் பார்த்தால் நிச்சயமாக லாபமாக இருக்க முடியாது. கனம் அங்கத்தினர் அவர்கள், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய நினைப்புப்படியே லாபகரமான திட்டமாக ஆக்கிக் கொடுத்திருக்க முடியும். எல்லாத் தண்ணீரையும் பொள்ளாச்சியிலேயே கொடுத்திருக்க முடியும். அங்கே இருக்கும் கோரிக்கை கூட அது தான். கனம் அங்கத்தினர் அவர்கள், 1961-ம் வருஷம் அந்த அணையைத் திறந்து பிறகு, முப்பதாயிரம் ஏக்கருக்குப் பாசனம் என்று சொல்லி, 17,000 ஏக்கருக்குப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அங்கிருக்கும் விவசாயிகள் அந்த நேரத்தில் என்ன நினைத்தார்கள்? "எங்களுடைய பகுதியில் நஞ்சை பயிர் தான் செய்ய முடியும், புஞ்சை பயிர் செய்ய முடியாது. ஆகையால் எல்லாத் தண்ணீரையும் கொடுத்து விடுங்கள்" என்று அங்கிருப்பவர்களுடைய கோரிக்கை இருந்தது. அப்பொழுது கொடுத்தால், திருமூர்த்தி அணை வேண்டியதில்லை. ஒன்பது மலை ஏறி இறங்கி வெட்டவேண்டும் என்று சொன்னார்களே, அது தேவையில்லை, உலக நாடுகளே அதிசயிக்கும்படியாக முப்பது மைலுக்கு வெட்டியிருக்கக்கூடிய அந்த சானலைக்கூட வெட்டியிருக்க வேண்டியதில்லை. இதிலே இத்தனை கோடி ரூபாய் போடாமலிருந்தால் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் நினைக்கக்கூடிய முறையில் லாபகரமாக இருந்திருக்கும். ஆனால், அப்படித்தான் செய்ய வேண்டுமா?

இன்னொரு கனம் அங்கத்தினர், "காங்கயத்தைப் பார்த்தீர்களா? தாராபுரத்தைப் பார்த்தீர்களா? தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது, ஒன்றுக்கொன்று முரணாக

இருக்கக் கூடாது. பஞ்சம், பசி, பட்டினி போக வேண்டும். அதிலே லாபம் அடைந்துதான் தீரவேண்டும் என்று பார்க்க முடியாது?

தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், காவிரி தண்ணீர் தஞ்சை ஜில்லாவிற்குத்தான் உரியது என்பதுபோல கனம் உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் பேசினார்கள். அப்படிப் பார்த்தால், லோயர் பவானித் திட்டமே வந்திருக்க முடியாது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி குற்றம் சாட்டியிருக்கிறது; ஏன் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று கேட்டிருக்கிறது.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** அந்தத் திட்டத்தில் இருக்கக் கூடியதை நான் சொல்லுகிறேன். கனம் உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் கொஞ்சம் ஆத்திரமாக, வேகமாகப் பேசினார்கள். லோயர் பவானி தண்ணீர் வேண்டும், அதை எங்கோ கொடுத்தோம் என்று புலவர் பேசினார். கொடுத்திருக்காவிட்டால் இந்த வருஷம் சோழ நாட்டில் மகசூல் வந்திருக்காது என்று சொன்னார்கள். அதற்கு கனம் உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள், "காவிரித் தண்ணீர் எங்களுடைய தண்ணீர். அதை எங்களுக்கு இல்லாமல் வேறு எங்கோ தேக்கி வைத்துக் கொண்டுவிட்டார்கள்; எங்களுக்கு இல்லாமல் செய்துவிட்டார்கள்" என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். "லோயர் பவானியிலே இருந்து அவிநாசி மற்றப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும்; அந்தத் திட்டம் என்ன ஆயிற்று?" என்று கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் கேட்டார்கள். அங்கேதான் கொஞ்சம் தயக்கம் வருகிறது. பவானி ஆற்றில் வரக்கூடிய தண்ணீர் லோயர் பாவானிக்கு இருப்பதைப் போலவும், அதைக் குறித்து வேறு திட்டமே சிந்திக்கக்கூடாது என்பது போன்று கனம் உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் சற்று ஆக்ரோஷமாகப் பேசினார்கள்.

**திரு. க. ர. நல்லசிவம்:** நான் சொல்வதெல்லாம் இதுதான். கடந்த நான்கைந்து வருஷங்களாகத் தொடர்ந்து எங்களுக்குக் கொடுத்து வந்த தண்ணீரை ஒழுங்காகக் கால்வாயில் விட்டு விடுங்கள்; அதை மற்றவர்களுக்குக் கொடுக்காதீர்கள் என்றுதான் சொன்னேன். வேறு புதிய திட்டம் கொண்டுவருவதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கீழ் பவானித் திட்டம் வகுக்கப் பட்டபோது, இவ்வளவு தண்ணீர் என்று நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு மேலும் தண்ணீர் இருந்து, அப்பொழுது மேல் பவானித் திட்டத்தை எடுத்துக்கொள்ளவில்லை. இருக்கிற தண்ணீர் வீணாகப் போகவேண்டாம் என்று ஒன்றைச் செய்தால், "நான் காண்டுகள் அனுபவித்தோம்" என்று வெஸ்டெட் இன்டெரஸ்ட்





ஜமீந்தாரி இன்டரஸ்ட் இருப்பதுபோல் நினைத்துக்கொண்டு, "அதை யாருக்கும் கொடுக்கக்கூடாது" என்று சொல்வது முறையல்ல; நியாயம் அல்ல.

**திரு. க. ர. நல்லசிவம்:** 'ஜமீந்தாரி இன்டெரெஸ்ட்' என்று சொல்லக் கூடாது. அந்த மாதிரி மனோபாவம் எனக்குக் கிடையாது. முன்பு இருந்தவர்களுடைய நலனைக் கவனிக்காமல், புதியவர்களைக் காப்பாற்றவேண்டும் என்று நினைப்பது சரியல்ல என்பதற்காகத்தான் சொன்னேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** கனம் உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் குறிப்பிட்டதையொட்டி, கனம் முதல் அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய நிலையை விவரமாகச் சொன்னார்கள். லோயர் பவானித் திட்டத்திற்கு எவ்வளவு தண்ணீர் உரியதோ அந்தத் தண்ணீரைக் கொடுக்கத் தயார். உபரியாக இருக்கும் தண்ணீர் வறண்டிருக்கும் அவிநாசி போன்ற மற்றப் பகுதிகளுக்குக் கொடுக்கலாமா என்கிற திட்டத்தையே ஆலோசிக்கக்கூடாது என்று சொன்னால், அது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? லோயர் பவானிக்கு, நாம் அந்தத் திட்டம் உருவாகும்போது எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று சொன்னோமோ, அதிலிருந்து குறைக்கமாட்டார்கள் என்றுதான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். அதற்கு மேலே கொடுக்கிறோம். ஆற்றிலே வரும் தண்ணீரைப் பற்றி வேறு யாரும் சிந்திக்கக் கூடாது என்ற நினைப்பு இருக்கும்போது, ரொம்பச் சுலபமாக கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள், "ஏன் கேரள ராஜ்யத்திலிருந்து நமக்கு வரக் கூடாது? ஆந்திராவிலிருந்து வரக் கூடாது?" என்று கேட்பதையும் கவனிக்கவேண்டும். ஒரு மாநிலத்தைச் சேர்ந்த நமக்குள்ளேயே இவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. காடுவெட்டி அவர்கள் . . .

**திரு. கே. ஏ. மதியழகன்:** திரும்பத் திரும்ப கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், இன்றைக்கு அமராவதித் தண்ணீர் பழைய கால்வாய்க்கே போதவில்லை. இப்படியிருக்கும்போது, இது ஏன் புதுக்கோட்டைக்குப் போகவேண்டும்? என்று கேட்கிறோமே தவிர, அமைச்சர் அவர்கள் தேர்தல் பிரசாரத்திற்காகவே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிச் சொல்லி, இப்படி விவகாரத்தைப் பேசிக்கொண்டு போகிறார்கள்.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களுக்குச் சொல்கிறேன். நான் தேர்தலைப் பற்றியே நினைக்கவில்லை. தேர்தல் ஞாபகமே எனக்கு இல்லை. ஒருகால் அவர் அந்த ஞாபகத்தில் பேசியிருக்கலாம். நீர்ப் பாசனத்தில் இருக்கும் சிக்கல்களைத்தான் நான் சொன்னேன். நான் அறிக்கையில் கொடுத்திருக்கும் விவரம் பூராவும், கனம் அங்கத்தினர்கள் அவைகளைப்பற்றி அழுத்தமாகச் சிந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் கொடுத்திருக்கிறேன்.

இதெல்லாம் தேர்தலுக்காகப் பேசிவிட்டுப் போவதென்றால் லாபமே இருக்காது. ஏனென்றால், ஒன்றுக்கொன்று இணைந்திருக்கக் கூடிய பிரச்னை. லோயர் பவானியிலே இருக்கும் தண்ணீரை மற்ற ஒரு தாலுக்காவிற்குக் கொண்டு போனால் கஷ்டம் வந்துவிடுமோ என்று நாம் நினைக்கிறோம். அமராவதித் தண்ணீர் வேறு எங்காவது போனால் கஷ்டம் வந்துவிடுமோ என்றும் நாம் நினைக்கிறோம். நமக்குள்ளேயே இவ்வளவு சர்ச்சைகள், சந்தேகங்கள் இருக்கின்றன. ஆனால், அதே நேரத்தில், அண்டை ராஜ்யத்தில் இருக்கும் தண்ணீரைப்பற்றி நாம் இங்கே சொல்கிறோம். இந்த ராஜ்யத்தில் இருக்கக்கூடிய கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் போன்றவர்கள் சொல்கிறார்கள். "வீணாகக் கடலிலே போய்க் கலக்கிறது" என்று சொல்லுகிறார்கள். நான் சொல்லுகிறேன்— புதுக்கோட்டையில் இருக்கும் நான், "தஞ்சை விவசாயிகள் தண்ணீரை ஒழுங்காகப் பயன்படுத்தவில்லை, கடலுக்குப் போகிறது" என்று சொன்னால், தஞ்சை ஜில்லாவில் இருக்கிறவர்களுக்குக் கோபம் வருகிறது. நம் ராஜ்யத்தில் இருக்கின்றவர்களே ஒருவருக்கொருவர் இப்படிச் சொல்லும்போது, அண்டை ராஜ்யமாகிய கேரளாவில் உள்ள தண்ணீர் கடலுக்குப் போய் விழுகிறது, ஆந்திராவிலே உள்ள தண்ணீர் வீணாகக் கடலிலே விழுகிறது என்று நாம் சொல்லுவது என்றால், அந்தந்த ராஜ்யங்களில் உள்ளவர்களுக்குக் கோபம் வருகிறது. "எங்களுக்குத் திட்டம் இருக்கிறது; எங்கள் ராஜ்யத்தில் இருக்கும் தண்ணீரை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளுகிறோம்" என்கிறார்கள். பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்த நிலைக்கும், இப்பொழுது இருக்கும் நிலைக்கும் அந்தந்த மாநிலத்தில் எத்தனையோ மாறுதல் இருக்கிறது. கேரளாவில் அவர்கள் எத்தனையோ திட்டங்கள் போட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன்** : அப்படியானால், தமிழ்நாட்டுக்குக் கேரளாவில் இருந்து தண்ணீர் வேண்டாம் என்று அமைச்சர் கருதுகிறாரா? கேரளத்தில் இருந்து நாம் தண்ணீர் கேட்பது நியாயம் இல்லை என்றும் அமைச்சர் கருதுகிறாரா?

**கனம் திரு. வெ. ராமையா** : கனம் அங்கத்தினர் இம்மாதிரி குறுக்குக் கேள்வி போட்டு மடக்கிவிடலாம் என்று நினைக்கக் கூடாது. நான் பொதுவாக இருக்கும் பிரச்னையைச் சொல்கிறேன். பத்து வருஷமாக அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறார்கள். முயற்சி எடுக்கும்போது, அவர்களுடைய தேவையை உணர்ந்து அவர்கள் வழி செய்துகொண்டது போக, நடைமுறையில் சாத்தியமானது நமக்கு வரவேண்டும். கேரள அரசாங்கம் ஸ்ரீமான் சங்கர் அவர்கள் தலைமையில் நடந்து கொண்டிருந்த போது, அவர்கள் இந்தப் பிரச்னையைக் குறித்துப் பூர்வாங்கமாகப் பேசவேண்டும், இருக்கக்கூடிய பிரச்னைகளையெல்லாம் அவருடைய காலத்தில் தீர்த்து, எங்கெங்கே சாத்தியமோ அங்கிருந்தெல்லாம் தமிழ் நாட்டுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அவர்கள் ஆலோசனை சொன்னார்கள். இந்திய அரசாங்கத்தினுடைய தலையீட்டினாலே





எதுவும் தொந்தரவு வந்துவிடக்கூடாது, நாமே நேரடியாகப் பேசலாம் என்ற அடிப்படையிலே, நம்முடைய ராஜ்யத்தில் இருக்கும் தொழில் துறை அமைச்சரையும் என்னையும் திருவாங்கூருக்கு அழைத்துப் பேச நல்லதொரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டது. இரண்டு ராஜ்யப் பிரதம இன்ஜினியர்களும் முதல் தடவையாக ஒவ்வொருவருடைய கையில் இருக்கும் திட்டங்களைப் பார்த்துப் பரிசீலனை செய்வதற்கான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அங்கே தண்ணீர் அதிகமாக இருக்கிறது என்று நாம் சொல்கிறோம். அவர்கள், "தண்ணீர் இல்லை" என்று சொல்லுகிறார்கள். ஆகையால், ஒவ்வொருவருடைய கையில் இருக்கும் புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு பேசக்கூடிய அந்தக் கட்டத்தில் சென்னை அரசாங்கப் பிரதிநிதிகளாக நாங்கள் சென்றோம். ஆனால், அங்கிருக்கும் நிலை எப்படி இருக்கிறது என்றால் ஒன்றை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதை நான் சொல்லும்போது உடனே குறுக்கிட்டு, "முயற்சி எடுக்கத் தவறிவிட்டீர்கள்" என்று சொல்லக் கூடாது. நமக்குக் கேரளாவில் எங்கிருந்து சுலபமாகத் தண்ணீரைத் திருப்பிவிட முடியுமோ, அங்கே கிடைக்கும் தண்ணீர் அளவு கொஞ்சம் குறைவாகவே இருக்கிறது. அந்த ராஜ்யத்தில் அதிகமாக மழை பொழியக் கூடிய பகுதி, கடலோரப் பகுதியாகும். இன்னும் கொஞ்சம் உள்ளே தள்ளி, நமக்குச் சௌகரியமான இடத்தில் திருப்பிவிடலாமென்றால் அங்கே கம்மியாக இருக்கிறது. அதோடல்லாமல் அவர்களும் ஏராளமான திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். அங்கே அவர்களுக்கு வருஷா வருஷம் கடலரிப்பு மிக அதிகமாக இருக்கிறது, உப்புத் தண்ணீர் உள்ளே வந்து கொண்டிருக்கிறது, அதற்கு நல்ல தண்ணீர் வேண்டும். நல்ல தண்ணீர் வேகமாக வந்தால்தான் உப்புத் தண்ணீரை அடித்துக்கொண்டு போகும், பூமியைக் காப்பாற்ற முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், கேரள அரசாங்கம் நமக்குப் பரிபூரண ஒத்துழைப்பைக் கொடுக்காமல் இல்லை. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் வெற்றிக்கு அவர்களுடைய பரிபூரண ஒத்துழைப்புத்தான் காரணம். அதுபோலவே, மற்றத் திட்டங்களையும் பரிசீலனை செய்யவேண்டும் என்ற கருத்து இருக்கிறது என்பதை இந்தச் 2-00 p.m.
சபை உணர்ந்திருக்கும், அதற்கு வேண்டிய விடா முயற்சியோடு நாம் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோம். அதுபோலவே, ஆந்திர மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் ஸ்ரீமான் சஞ்சீவி ரெட்டி அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற ஆசையோடு அவர்களுடைய நீர் ஆதாரங்களைப் பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு நிபுணரைப் போட்டார். அவரும் அதுபற்றிப் பரிசீலனை செய்து அந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் உபரி தண்ணீர் எவ்வளவு என்பதை அந்த ராஜ்ய திட்டங்கள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டவுடன்தான் நிர்ணயிக்க முடியும் என்று ரிப்போர்ட் கொடுத்தார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் இதுபற்றி எல்லாம் அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதைக் காட்டவேதான்.

[திரு. வெ. ராமைய்யா] [16th March 1966

இன்னும் முக்கியமாக யுடிலிசேஷன் என்பதைப்பற்றி கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அவர் கொடுத்திருக்கக்கூடிய விவரம் தொடர்ந்து பரிசீலனையில் இருக்கும். ரயத்துகளுடைய முயற்சிக் குறைவினால்தான் இதில் தாமதம் ஏற்படுவதாக அரசாங்கம் சொல்கிறது என்று சொன்னார்கள். சில இடங்களில் நாம் தண்ணீர் கொடுக்கிறோம். ஆனால், அந்தத் தண்ணீரை உபயோகித்துத்தான் விவசாயம் செய்யவேண்டுமென்று நாம் விவசாயிகளை வற்புறுத்த முடியவில்லை. பல திட்டப் பிரதேசங்களில் பார்க்கிறோம். குறிப்பாக நெய்யாறு திட்டத்தை எடுத்துக்கொண்டால்—டி.சி. ஸ்டேட்டில் கன்னியாகுமரி இருந்த போதே வற்புறுத்தப்பட்டு வந்த திட்டம். அதை நாம் எடுத்து நல்லமுறையில் நிறைவேற்றியிருக்கிறோம். இருந்தும் அங்கு இருக்கக்கூடிய விவசாயிகள் அந்தத் தண்ணீரை எடுத்துப் பயன்படுத்திக்கொள்ளும் நிலையில் இல்லை. இந்தத் தண்ணீரை பயன்படுத்தாமல் நல்ல மிளகு போன்ற லாபம் தரக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்திருக்கிறார்கள். நாம் உடனே விவசாயிகளை வற்புறுத்த வேண்டும் என்று சொன்னாலும்—அந்தப் பகுதி நிலத்தை சீர்படுத்துவதற்கே எத்தனையோ கோடி செலவழிக்கவேண்டும்.

அடுத்து, திரு. நல்லசிவம் அவர்கள் பரம்பிக்குளம்-ஆளியாறு ப்ராஜெக்ட் ஏரியாவில் நஞ்சைப் பயிர் உற்பத்தி செய்வதில்—செல்வாக்குள்ளவர்களுக்கு ஒருமாதிரியாகவும், மற்றவர்களுக்கு ஒரு மாதிரியாகவும், நடத்துவதாகச் சொன்னார்கள். இதுபோன்ற புகார்கள் எழும் என்பதை அரசாங்கம் உணர்ந்துதான்—பரம்பிக்குளம் ஆளியாறு ப்ராஜெக்ட் என்ஜினியரிடம் அந்தப் பிரச்னையைவிடாமல் பூராவாக அங்குள்ள நிலைமையைப் பரிசீலனை செய்து ஒரு சீனியர் கலெக்டர், சூப்பிரின்டென்டிங் என்ஜினியர், கூட்டுறவு இலாகா அதிகாரி ஆகியோரை ஒரு டீமாகப்போட்டு—எந்த எந்த இடத்தில் எந்தப் பயிர் வைக்கவேண்டும் என்பதை நிர்ணயிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். திரு. நல்லசிவம் அவர்கள் அவர்களுடைய கவனத்திற்குக் குறிப்பிட்ட குறைபாடுகளை எடுத்துச் சென்றால் நியாயம் வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ராஜ்ய மட்டத்திலும் கூட பி.ஏ.பி. அடிப்படையில் போர்டு செயல்படுகிறார்கள்.

நான் ஆரம்பத்தில் சொன்னபடி பருவ மழையினால் இவ்வாண்டு ஒரு பயங்கரமான நிலை தோன்றிற்று. அதை முன்கூட்டி உணர்ந்து, தக்க வகையில் உணவுக் கஷ்டம் வந்துவிடாதபடி இலாகாவில் உள்ள அதிகாரிகள் பணிபுரிந்திருக்கிறார்கள். எல்லாரும் சிறப்பாகப் பணியாற்றி வந்திருக்கிறார்கள் என்றாலும் நான் இரண்டொருவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய ராஜ்ய பிரதம என்ஜினியர் அவர்கள் இவ்வாண்டு பொறுப்பேற்றுக்கொண்டார்கள்—இவ்வாண்டே தான் எந்த வருடமும் இல்லாத வகையில் நமக்குச் சோதனை ஏற்பட்டது. இந்த நேரத்தில் அவர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று ஊக்கம் கொடுத்து நல்ல தொண்டைச் செய்தார்கள். அதற்காகத் திரு. ஆர். எஸ். பாண்டியன் அவர்களைப் பாராட்டுகிறேன்.



16th March 1966] [திரு. வெ. ராமைய்யா]

அதேபோல சூப்பிரன்டென்டிங் என்ஜினியர் திரு. ஆழ்வார் அவர்கள்—எனக்கே பரிதாபமாக இருந்தது—ஜீப்பைவிட்டு 3 மாதம் இறங்காமலேயே தஞ்சை டெல்டா பகுதியில் சுற்றிச் சுற்றி நல்ல சிறப்பன தொண்டைச் செய்திருக்கிறார்கள். அதுபோலவே பெரியாறு பகுதியில் செயல்பட்ட எக்சிக்யூடிவ் என்ஜினியர் திரு. மணவாளன் அவர்களையும் பாராட்ட விரும்புகிறேன். அதுபோல இந்த வருஷம் விசேஷமாகப் பல திட்டங்களை உருவாக்குவதற்கு—மத்திய அரசாங்கம் கேட்கிற புள்ளி விவரங்களை எல்லாம் அளித்து, தன் உடல் நலத்தையும் கூடக் கவனிக்காமல் செயல்பட்ட அந்த இலாகா காரியதரிசி திரு. திருமலை அவர்களுக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திருவண்ணாமலை தொகுதியில் மேய்ப்பாக்கம் அருகில் இருந்த அணை உடைந்து நான்கைந்து ஆண்டுகளாகியும் . . .

Mr. DEPUTY SPEAKER : The hon. Member cannot except the Hon. Minister to reply to every point raised by him.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் மிக்க முயற்சி எடுத்துக்கொண்டு எல்லா விவரங்களுக்கும் பதில் அளித்தார்கள். அதிகாரிகளையும் பாராட்டினார்கள். திட்டப்பகுதியில் வேலை செய்துகொண்டிருக்கக் கூடிய ஊழியர்களைப்பற்றி நான் வற்புறுத்திச் சொன்னேன், அவர்களைக் கனம் அமைச்சர் பாராட்டவேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர்களுடைய பரிதாபகரமான நிலைக்குப் பரிகாரமாக என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்கள் என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் அதிகாரிகளைப் பாராட்டிவிட்டு மற்றவர்களைப் பாராட்டாமல் விட்டுவிட்டதாகச் சொல்லக்கூடாது. நான் அதற்காகத்தான் எல்லோருக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். விசேஷமாக பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் வேலைசெய்த தொழிலாளர்களுடைய திறமையை, ஊக்கத்தை நான் அறிவேன். அம்மாதிரி தொழிலாளர்கள் பத்தாயிரம், இருபதாயிரம் பேர்களுக்குமேல் இருக்கிறார்கள். நல்ல திறமை வாய்ந்த அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய பெரிய திட்டத்தை வேறு எங்கே துவக்கலாம் என்றே நான் யோசித்து வருகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்களும், சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களும் பத்துப் பன்னிரண்டு வருஷங்களாகத் தொடர்ந்து வேலையில் இருந்த அவர்கள் இன்றைக்கு நிர்கதியாக விடப்படுகிறார்களே என்று சொன்னார்கள். ஆனால் அதுபோல ஒரு திட்ட அடிப்படையில் வேலைக்கு அமர்த்திக் கொள்பவர்கள் அத்தனைபேர்களையும் நிரந்தரமாக சர்க்கார் வைத்துக்கொள்ளவேண்டுமென்று யாரும் சொல்லமாட்டார்கள். காரணம், அந்தத் திட்டம் முடிந்து விட்டால் வேலை இல்லை. அதற்

[திரு. வெ. ராமையா] [16th March 1966

காகத்தான் வேறு திட்டம் என்று ஆரம்பித்தால் இந்தத் திறமை மிக்க, அனுபவமிக்க ஊழியர்களுக்கே முதல் இடம் கொடுக்க வேண்டும் என்பதும் கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கோசல்ராம் : மணிமுத்தாறு திட்டத்தில் 80 அடிக்குமேல் இருக்கும் தண்ணீரை நாங்குநேரிக்குக் கொடுக்க வேண்டுமென்று கண்டிருக்கும்போது தாம்பிரபரணிக்குக் கொடுக்க யோசித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்களே, முதலில் போட்ட திட்ட அடிப்படைக்கு மாறாமல் நாங்குநேரிக்குக் கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** நான் சொன்னது பொதுவாக நீர்ப்பாசனத் திட்டத்தை எப்படி அணுகவேண்டும் என்பது. ஒரு திட்டத்தை எடுத்துக்கொண்டால் அந்தத் திட்டத்தில் எப்படி இருக்கிறதோ, ரெக்கார்டில் எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறதோ அதைப்பொறுத்துத்தான் வேலையை எடுத்துக்கொள்வார்கள்.

திரு. ஏ. ஆறுமுகம் : பாலாறு பாசன விதியை ரத்து செய்கிறோம் என்று சொன்னார்கள். பாலாறு பாசன விதியை செங்கல்பட்டு மாவட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் மாவட்டத்தில் எடுத்துவிடுவதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** கனம் அங்கத்தினர் என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். எதிர்க்கட்சி அங்கத்தினர் திரு. மதியழகன் கூடப் புரிந்துகொள்ளவேண்டும். பாலாறு கடலில் போய் விழுகிற இடம் செங்கற்பட்டு ஜில்லாதான். கடலில் போய் விழுகிற ஜில்லா என்பதற்காகச் செய்யவேண்டிய தில்லை, முதல் அமைச்சர் அல்லது இன்னொரு அமைச்சர் ஜில்லா என்பதற்காகவும் செய்யவேண்டியதல்ல. செங்கல்பட்டு ஜில்லாவில் எப்போது அந்த விதியைத் தளர்த்த வேண்டுமோ அது தளர்த்தப்பட்டுக்கொண்டு வருகிறது; சித்தூரில்கூட தளர்த்தப் பட்டிருக்கிறது.

Mr. DEPUTY SPEAKER : The hon. Member Sri Saw Ganesan, is not in his seat. So his cut motion to Demand No. XXVI—Irrigation is deemed to have been withdrawn.

The cut motion of Sri P. Murugaiyan to Demand No. XXVI—Irrigation was put and lost.

Mr. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,99,84,800 under Demand No. XXVI—Irrigation."

The Demand was put and carried and the Grant was made.

Mr. DEPUTY SPEAKER : The hon. Member Sri Saw Ganesan is not in his seat, So, his cut motion to Demand No. XLII—Capital Outlay on Irrigation is deemed to have been withdrawn.

The cut motion of Sri P. Murugaiyan to Demand No. XLII—Capital Outlay on Irrigation was put and lost.



16th March 1966]

Mr. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,79,87,900 under Demand No. XLII—Capital Outlay on Irrigation."

The Demand was put and carried and the Grant was made.

Mr. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned. 2-12 p.m.

### V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory rules and Orders.

* 159. *Notification issued with G.O. Ms. No. 33, Public (Services-A), dated 5th January 1966, amending the Madras Public Service Commission Regulations, 1954 in so far as it relates to the Madras Fisheries Subordinate Service published with Public (Services) Department Notification No. 50, dated the 5th May 1954 at pages 759 to 768 of Part I of the* Fort St. George Gazette, *dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article* 320 (5) *of the* **Constitution of India.]**

* 160. *Notification issued with G.O. Ms. No. 35, Public (Services-A), dated 5th January 1966, amending the Madras Public Service Commission Regulations 1954 in so far as it relates to the Madras Agricultural Subordinate Service published with Public (Services) Department Notification No. 50, dated the 5th May 1954 at pages 759 to 768 of Part I of the* Fort St. George Gazette, *dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India.]*

* 161. *Notification issued with G.O. Ms. No. 2073, Education, dated 3rd December 1965, approving the list of all the Parks and Play fields set out in the Schedule of the notification in the area within the jurisdiction of the Mettupalayam Municipal Council. [Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]*

† 162. *Notification issued with G.O. Ms. No. 341, Rural Development and Local Administration, dated 17th February 1966 making certain amendments to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 23 of 1966, dated the 7th Febaruary 1966, published at page 2 of Part II—Section 2 of the* Fort St. George Gazette Extraordinary, *dated the 10th February 1960. [Laid on the Table of the House under section 179 (4) of Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

† 163. *Notification issued with G.O. Ms. No. 481, L.A., dated 1st March 1966 declaring that with effect on and from the 1st March 1966, the area specified in the Schedule of the notification*

[திரு. வெ. ராமையா] [16th March 1966

*shall be a township called the "Avadi Township" and relating to the constitution of "Avadi Township Committee", etc.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

† 164. *Notification issued with G.O. Ms. No.* 385, *Home, dated 8th February* 1966 *relating to Import of Foreign liquor by Messrs. Banchet and Company, Ootacamund.* [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937).]

† 165. *Notification from the Collector of North Arcot and Inspector of Panchayats No. R.C. NBl.* 2678/66, *dated* 21*st January* 1966 *regarding a motion of "No-Confidence" in Sri R. Arjunan, President of Perumugai Panchayat in Vellore taluk and removal from office.* [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

## B. Reports, Notifications and other papers.

‡ 50. *Speech of Hon. Minister for Food while moving Demand No. I—Land Revenue Department.*

‡ 51. *Policy Note on Demand No.* 1—*Land Revenue Department.*

‡ 52. *Speech of Hon. Minister for Food while moving Demand No. IV—Stamps Administration.*

‡ 53. *Policy Note on Demand No. IV—Stamps Administration.*

‡ 54. *Policy Note on Demand No. XXXI—Famine Relief....*

‡ 55. *Policy Note on Demand No. XXXVII—Compensation to Zamindars.*

‡ 56. *A review on Road Development and Building Programme in Madras State*—1965–66 (*English and Tamil*).

‡ 57. *A review on working of Minor Ports in Madras State* 1965–66 (*English and Tamil.*)

* Laid on the Table of the House on 15th March 1966.
† Circulated separately.
‡ Despatched to Members on 14th March 1966.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 17th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*பாதுகாப்பு விதிகளின்கீழ் நடவடிக்கை*

* குறுகிய கால கேள்வி எண் 6.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965, 1966-ஆம் ஆண்டுகளில் பாதுகாப்பு விதிகளின்கீழ் எத்தனைச் சட்டமன்ற உறுப்பினர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது ?

(இ) என்ன காரணங்களுக்காக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) In 1965, one M.L.A. and one M.L.C. were detained and four M.L.As. were prosecuted under the Defence of India Rules. No action was taken against any of the legislators in 1966.

(*b*) One M.L.A. and one M.L.C. were detained under Rule 30 of the Defence of India Rules with a view to preventing them from acting in a manner prejudicial to the public safety, the maintenance of public order, etc. Three M.L.As. were prosecuted for indulging in prejudicial acts under Rule 35 (6) read with rule 41 of the Defence of India Rules and one for causing damage to Government buildings under Rule 36 of the Defence of India Rules.

**திரு. மு. கருணாநிதி :** கூட்டங்களிலே பேசிய இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் ஒரு வழக்கில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் விடுதலை செய்யப்பட்டார். நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பேச்சில் எந்தக் காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? அப்படிப்பட்ட பேச்சு குறிப்பு என்ன என்று விளக்குவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த விவரம் என்னிடம் இல்லை. மேலும் இந்த விஷயம் வழக்கு மன்றத்தில் இருப்பதால், இதைப்பற்றி நான் விரிவாகக் கூறுவதற்கில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் சட்டமன்ற உறுப்பினர் துறையூர் அழகமுத்து அவர்கள் மீது இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டு, தள்ளுபடி செய்யப்

பட்டிருக்கிறது என்பதிலிருந்து டி.ஐ.ஆர். இன் கீழ் எதற்கெடுத்தாலும், இம்மாதிரி வழக்குத் தொடரப்படுவது சரியல்ல என்ற உண்மையை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரு வழக்கு ஏற்பட்டால், நீதிபதிகள் தீர்ப்பு கொடுக்கிறார்கள். பலவிதமான தீர்ப்புகள் வருகின்றன. ஒரு நீதிபதி ஒரு தீர்ப்பு கொடுத்து, அதற்கு மேலே இருக்கிற கோர்ட்டில் அப்பீலில் நீதிபதி வேறொரு தீர்ப்பு கொடுப்பதும் உண்டு. ஆகையால் குறிப்பிட்ட ஒரு நீதிபதியின் தீர்ப்பை வைத்துக்கொண்டு, கனம் அங்கத்தினர் வேண்டுமானால், சில கருத்துக்களை வைத்துக்கொள்ளலாம். ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரு தீர்ப்பிலிருந்தே அந்த வழக்கு நியாயமாகத் தொடரப்பட்டதா என்று சொல்வதற்கில்லை. அப்படிச் சில சமயங்களில் நீதிபதிகள்கூட அரசாங்கம் அநியாயமாக இம்மாதிரி இந்த வழக்கைத் தொடர்ந்திருக்கிறது என்று கூற உரிமை இருக்கிறது. அப்படி ஏதாவது சொல்லியிருந்தால், அதைப்பற்றி விளக்கம் கூறலாம்.

**திரு. மு. கருணாநிதி :** கூட்டங்களில் சட்டவிரோதமாகப் பேசுவதைத் தடுப்பதற்கும், நடவடிக்கை எடுத்து வழக்கு மன்றங்களில் வழக்குத் தொடருவதற்கும் ஏற்கனவே பல சட்டங்கள் இருக்கின்றன. அப்படியிருக்கும்போது பாதுகாப்புச் சட்டத்தின் துணையை நாடவேண்டிய அவசியம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எத்தகைய பேச்சு, ஆட்சேபகரமான பேச்சு என்பதைப் பொறுத்தது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா, இல்லையா என்பது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** எந்தெந்தக் கருத்துக்கள் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்திற்கு முரணானவை, பேசக்கூடாதவை என்று வைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி ஒரு வரையறை இன்ன கருத்தின் மீது என்று சொல்லமுடியாது.

**திரு. மு. கருணாநிதி :** பேசப்படுகிற அல்லது எழுதப்படுகிற கருத்துக்கள் வெளிநாட்டவர்களுக்கு ஆதரவாக—அதாவது இந்தியாவினுடைய எதிரிகள் இந்தியாவின்மீது படை எடுப்பதற்கு ஆதரவாக இருக்கும் வகையிலே—இந்தியாவைக் காட்டிக் கொடுக்கிற வகையிலே இருந்தால்தான், அப்படிப்பட்டக் கருத்துக்களைப் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் தடைசெய்ய வேண்டும். உள்நாட்டுப் பிரச்னைகள் பற்றிய கருத்துக்கள் இருக்கும் பட்சத்தில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரவேண்டிய அவசியம் இல்லை என்று மத்திய சர்க்கார் உள்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படியானால், எந்த வகையில் அந்தப் பேச்சு குற்றம் என்று கருதப்படும் ?



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொதுவாகக் கருத்து, பேச்சு அல்லது வேறு வேறு சம்பவங்களுக்காகப் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தவேண்டியதில்லை என்று மத்திய சர்க்கார் உள்துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் முன்பு கூறியதுபோல் என்ன வகையிலே பயன்படுத்தப்படுகிறது என்பது எத்தகைய சூழ்நிலையிலே கூறப்படுகிறது என்பதைப் பொறுத்தது. அமளி, கலவரம் இருக்கலாம். அமளி, கலவரம் இருந்தால் ஒன்று. அமளி, கலவரம் இல்லையென்றால் மற்றொன்று. இதிலேகூட உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு, உள்நாட்டு அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய வகையிலே இருந்தால், என்னென்ன நடவடிக்கை எடுப்பது, எந்தச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்வது என்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.

**திரு. சா. கணேசன் :** நாட்டுப் பாதுகாப்பு சம்பந்தமான முறையில், பாதுகாப்பிற்கு விரோதம் இல்லாத இவற்றைக் கருதித்தான் இந்தியப் பாதுகாப்பு விதிகள் பயன்படுத்தப்படுகின்றன என்று பொருள்பட கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால், திரு. ராமசாமி நாயக்கர் அவர்கள் தங்களுடைய பத்திரிகையில் ரஷ்யா படையெடுத்தால், ரஷ்யாவோடு நானும் சேர்ந்துக்கொள்வேன் என்று பகிரங்கமாக எழுதி இருக்கிறார்கள். அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி கனம் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் முன்பு ஒரு விவாதத்தின்போது குறிப்பிட்டார்கள். அப்போது அதற்கு விளக்கம் கூறியிருக்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அரசினர் நடவடிக்கைகளை விமர்சிப்பதற்கு ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிக்கு உரிமை இருக்கிறது. அப்படி விமர்சிப்பதுகூட இந்தியப் பாதுகாப்பிற்கு முரணாகக் கருதப்படுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு அரசாங்கம் கருதவில்லை. அரசாங்கத்தினுடைய குற்றங்கள் தவறுகளை எடுத்துச் சொல்வதற்கு, இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சமூக விரோதிகளான கள்ளக்கடத்தல் செய்பவர்கள் யார் மீதாகிலும் நம் ராஜ்ய சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று சொல்லமுடியாது. எடுத்துக் கொள்ளப்படுகிறது. யார்மீது, எங்கே என்ற விவரம் என்னிடம் இல்லை.

**திரு. எம். எஸ். மணி :** உள்நாட்டிலே குழப்பத்தை விளைவிக்கிற முறையில், சில காங்கிரஸ்காரர்கள் பேசிவருகிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அவர்கள் மீது இந்தச் சட்டத்தின் கீழ் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

**கனம் திரு எம். பக்தவத்சலம்:** அவ்வாறு புகார் ஒன்றும் வரவில்லை.

தொழிற்பேட்டைகள்

*317 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொழிற்பேட்டையில் கடந்த அக்டோபர் திங்கள் பொருள்கள் ஏதேனும் களவாடப்பட்டனவா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** (அ) & (இ) கோவில்பட்டி தொழிற்பேட்டையின் வளைவுக்குள் உள்ள பண்டகசாலைக் கொட்டகையில் 17-10-65 தேதி இரவு ஒரு திருட்டு நடந்தது. சுமார் ரூ. 416 மதிப்புள்ள 12 மில்லி மீட்டர் மிருது எஃகு கம்பிகள் 6 கட்டுகளும், 10 மில்லி மீட்டர் மிருது எஃகுக் கம்பிகள் 5 கட்டுகளும் களவாடப்பட்டன. களவுபோன பொருள்கள் அனைத்தும் பின்னர் மீட்கப்பட்டன.

**திரு. மு. கருணாநிதி:** இந்தக் களவு சம்பந்தமாக அந்தத் தொழில் பேட்டையினுடைய தோட்டத்தின் காவலாளி கைது செய்யப்பட்டு, அவர்தான் களவாடியதாக ஒப்புக் கொள்ள வேண்டுமென்று போலீஸ் அதிகாரிகள் வற்புறுத்த முற்பட்டதன் காரணமாக, மனமுடைந்து அவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்த மாதிரி விவரம் என்னிடத்தில் இல்லை.

'The night watchman on duty on the night of theft is reported to have been suspended from duty and that another suitable watchman from Tuticorin has been transferred and posted to Kovilpatti in his place.'

என்றுதான் இருக்கிறது. அது சம்பந்தமாகத் தனியாகக் கேள்வி போட்டால், சக போலீஸ் அமைச்சர் அவர்கள் விவரங்களைச் சொல்வார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** அவர் தன்மீது சுமத்தப்பட்ட பழிக்கு அஞ்சித் தற்கொலை செய்து கொண்டார் என்று அந்தத் தோட்டக் காவலாளியின் மனைவி உள்துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு மனு எழுதியிருக்கிறார்கள். அதை விசாரித்து நடவடிக்கை எடுப்பார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அதைச் சக அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள். இது சம்பந்தமாக ஜட்ஜ்மெண்டில் என்ன இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். வற்புறுத்தப்பட்டது என்று சொல்லுகிற காரணத்தால் ஜட்ஜ்மெண்டில் குறிப்பிட்டிருப்பதைப் படிக்கிறேன்.



'. . . The plea of accused 1 and accused 2 is voluntary. Hence, I accept their plea, find accused 1 and accused 2 guilty under Sections 457 and 380 of the Indian Penal Code and convict them . . .' என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கன்விக்ஷன் கூட 'Probation Offenders Act' பிரகாரந்தான். மற்றவர்களுக்கு ஆறு வாரம் தண்டனை கொடுத்திருக்கிறார்கள். இந்த விதமாகத் துன்புறுத்தப்பட்டார் என்றால் அதைப் பற்றி அப்போதே கோர்ட்டில் தெரிவித்திருக்க வேண்டும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** அமைச்சர் அவர்கள் படிக்கும் போது 457-வது செக்ஷனை மட்டுந்தான் சொன்னார்கள். அதிலே, களவு போகாமல் களவு செய்ய முயற்சித்ததற்காக தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** 380 செக்ஷன் என்றும் படித்தேன்.

**திரு. மு. கருணாநிதி:** அந்தக் குற்றவாளிகளின் பெயர்களை அறிவிக்க முடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** வெள்ளச்சாமி, சங்கரன் இரண்டு பேர்.

*318 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள தொழிற்பேட்டையில் புதிதாக தொழிற்கூடங்கள் கட்டப்பட்டனவா?

(இ) ஆமெனில், அவைகள், யார் யாருக்குக் கொடுக்கப்பட்டன?

(உ) அந்தக் கூடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகை விகிதம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Seven additional Units are under construction in the Industrial Estate Tiruchirappalli.

(b) They have been allotted to—

(i) Government Regional Press.

(ii) Messrs. Lamina Industries.

(iii) Naan Foundry.

(iv) Messrs. Espee Engineering Works.

(v) Messrs. Madras Rubber Industries.

(vi) Messrs. Texjay Industrial Corporation.

(vii) Messrs. Standard Electronics and Radio Industries

The Units have not yet been occupied by the allottees.

[17th March 1966

(c) The existing rate of subsidised rent for units in this Industrial Estate is 10 paise per mensem per square foot.

திரு. து. ப. அழகமுத்து : இந்தத் தொழிற் பேட்டையில் உள்ள கட்டடங்களுக்கு வாடகை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதிலே தொழிலை நடத்த முடியவில்லை என்று தொழில் நடத்துபவர்கள் கூறுகிறார்கள். அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்கள் சொல்வது நியாயம் அல்ல. காரணம், எகனமிக் ரென்ட்தான் வசூலிக்கப்படுகிறது. அதில் எவ்வளவு செலவழிக்கிறோமோ, அதிலே ஒரு பகுதிதான் சப்சிடைஸ்டு ஆக வசூல் செய்து கொண்டிருக்கிறோம். அதை விடக் குறைத்து வசூல் செய்ய முடியாது. இப்போது கொடுக்கிற சப்சிடி மூன்றில் ஒரு பங்கு அளவு இருக்கிறது. இந்த வாடகை கூட அவர்கள் கொடுக்க முடியவில்லை என்றால் அவர்கள் தொழில் நடத்த முடியாது என்றுதான் கூறவேண்டும். வெளிநாடுகளில் இந்த வாடகைக்கு இந்த மாதிரிக் கட்டடம் மட்டுமல்ல, எந்த விதமான கட்டடமும் கிடைக்காது.

திரு. எம். எஸ். மணி : இந்தத் தொழில் பேட்டையில் தொழில் நடத்த காங்கிரஸ் கட்சிக்கு யார் யார் தேர்தலுக்குப் பணம் கொடுக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது என்ற புகார் இருப்பது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முற்றிலும் தவறான புகார். யார் தொழில் செய்ய முன் வந்தாலும், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

திரு. து. ப. அழகமுத்து : அமைச்சர் அவர்கள் 10 சத விகிதம் வாடகைதான் வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். கட்டடம் மிகப் பெரிய அளவில் கட்டிவிட்டு அதற்கு 10 சத விகிதம் வாடகை என்று வரும்போது அதிகமாக இருக்கிறது. கட்டட அமைப்பு முறையை மாற்றி குறைந்த செலவில் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதே இரண்டு மூன்று டைப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஏ, பி, சி, டி என்று நான்கு விதமான கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. யார் யாருக்கு எந்தெந்த விஸ்தீரணம் உள்ள கட்டடங்கள் வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளலாம். இதை விடக் குறைவான செலவில் கட்டினால், ஃபாக்டரி சட்டத்திற்கு உரியதாகவும், தொழில் நடத்துவதற்குப் போதிய வசதி உள்ளதாகவும் இருக்காது.

* 319 கேள்வி.—திரு. சீ. சிவசுப்ரமணியன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-66-ம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் தொழிற்பேட்டைகள் நிறுவும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளது ?



17th March 1966]

The Hon. Sri R. VENKATARAMAN : There is no proposal to establish an Industrial Estate in South Arcot District during 1965–66.

திரு. நா. இராசாங்கம் : தென்னாற்காடு மாவட்டத்தில் பன்ருட்டி வட்டத்தில் குறிஞ்சிப்பாடி என்ற இடத்தில் போல்ட்ஸ் அண்டு நட்ஸ் தொழிற்சாலை நடத்த டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்சிலிருந்து அரசாங்க அனுமதி கோரி வந்திருக்கிறது. அதிலே ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டதா ? எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : போல்ட் அண்டு நட்ஸ் சம்பந்தமான இந்தத் தொழிற்சாலையைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும். அந்த யூனிட்டை இரண்டு இலாகாக்களாக வைக்க முடியும். ஒன்று இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்ட் ; மற்றொன்று ஆர்.டி. & எல்.ஏ. டிப்பார்ட்மென்ட்; ஆகவே, தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : 1965-66-லே இந்த இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை ஆரம்பிக்க உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். 1966-67-ல் அதை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? எந்த இடத்தில் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்காவது திட்ட காலத்தில் வைப்பதற்கு உத்தேசம் இருக்கிறது. ஆனால் திட்டத்தைப் பற்றி இன்னும் முடிவுகள் எடுக்கப்படாத காரணத்தால், எந்த இடம் என்று இப்போது சொல்வதற்கில்லை.

## வீடு கட்டும் திட்டம்

* 320 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) ஆயுள் இன்சூரன்ஸ் நிறுவனத்திலிருந்து வீடு கட்டும் திட்டத்திற்காக இம்மாநில அரசுக்கு 1965-66-ல் கிடைத்த கடன் தொகை எவ்வளவு ?

(இ) இத்தொகை எம்முறையில் பயன்படுத்தப்படுகிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) Rs. 294 lakhs (Rupees two crores and ninety-four lakhs).

(b) The total allocation of Rs. 294 lakhs of Life Insurance Corporation funds is being distributed among the Housing Agencies in the State, for implementation of the various housing schemes.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இப்போது விநியோகிக்கப்படும் பணமானது பெரும்பாலும் நகரங்களில் வீடு கட்டும் திட்டத்திற்குத்தான் விநியோகிக்கப்படுகிறது. ரூரல் ஹவுசிங் ஸ்கீமுக்கு, கிராமப்புற வீடு கட்டும் திட்டத்திற்கு இந்தக் கடன் வசதியைச் செய்து கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

[17th March 1966

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கிராமங்களில் வீட்டு வசதி கொடுப்பதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்குவதாகச் சர்க்கார் முடிவு எடுத்திருக்கிறார்கள். 294 லட்சம் ரூபாயில் 10 லட்சம் ரூபாயை ரூரல் ஹவுசிங் ஸ்கீமுக்காக ஒதுக்குவதாகத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்த 2,94,00,000 ரூபாயில் நகரப் 'புறங்களில் இருக்கிற குடிசை வாழ் பகுதிகளைப் புனரமைப்பு செய்வதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக் கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** லாண்டு அக்விசிஷன் டெவலப்மெண்ட் ஸ்கீம் என்று வைத்திருக்கிறார்கள். அதிலேதான் குடிசை வாழ் பகுதிகளைச் சீரமைப்புச் செய்கிறார்கள். அதற்காக இப்போது ரூ. 1,25,00,000 ஒதுக்கியிருக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி :** இந்தத் தொகை ஆரம்பத்திலேயே உடனடியாக வாங்கப்பட்டு விடுகிறதா அல்லது அப்போதைக்கப் போது தேவைக்கேற்றவாறு வாங்கப்படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எல்.ஐ.சி.-யிடம் இருந்து மொத்தமாக வாங்கிக் கணக்கில் வைத்துக்கொண்டு ஆண்டு தோறும் செலவழிக்கிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** நிலம் வாங்கி மனைகளாகப் பிரித்துக் கொடுக்கும் திட்டம் சென்னைக்கு மட்டுந்தான் இருக்கிறதா ? வேறு எந்தெந்த நகரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கோவை, திருச்சி, மதுரை, தஞ்சை போன்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** இந்தத் தொகைக்கு வட்டி கொடுக்க வேண்டுமா ? அப்படியானால் முதலிலேயே மொத்தமாக வாங்கி விடுவதால், அதிக வட்டி கொடுக்கவேண்டியிருக்குமல்லவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வட்டி கொடுக்கத்தான் வேண்டும். அப்படி வாங்கவில்லை என்று சொன்னால் பணம் கிடைக்காமல் போய்விடும். வட்டி கொடுத்தும் கட்டுபடியாகும் என்ற காரணத்தால் உடனடியாக அது வாங்கப்படுகிறது.

**திரு. சா. கணேசன் :** இந்தத் திட்டத்தை மாநகரங்களில் அல்லாமல் மற்ற முனிசிபல் அளவுள்ள நகரங்களுக்கும் விஸ்தரிப்பதற்கான கருத்து உண்டா ? அப்படியானால் எவ்வளவு சீக்கிரத்தில் இந்த முறை பிற நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தத் திட்டம் இப்போதே முக்கியமான ஜில்லா தலைநகரங்கள் எல்லாவற்றிலும் அமலில் இருக்கிறது. 'ஹவுசிங் இன் மெட்ராஸ் ஸ்டேட்' என்ற புத்தகம் மேஜையின் மீது வைக்கப்படுகிறது. அதைப் பார்த்தால் ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு வீடுகள் கட்டப்படுகின்றன என்ற விவரம் தெரியும்.



17th March 1966]

**திரு. இராம. அரங்கண்ணல் :** குடிசைவாழ் பகுதிகளுக்கு என்று ஒரு கோடிக்கு மேல் இப்பணம் செலவழித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னை வீட்டு வசதி போர்டைப் பொறுத்தவரையில் இந்தவிதமான குடிசை வாழ் பகுதிகளில் திட்டங்களை எடுப்பதற்கு பணம் இல்லாத நிலைமை இருக்கிறது. அதையொட்டி வேண்டிய அதிகப் பணத்தை எல்.ஐ. சி. யிலிருந்து பெற முயற்சிப்பார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** குடிசைவாழ் பகுதிகள் சீரமைப்பிற்கு பணம் இல்லாமல் இருக்கிறது என்று நிகழ் காலத்தில் சொல்வது சரியல்ல. கடந்த காலத்தில் அது உண்மையாக இருந்தது. இப்போது பணம் கிடைத்து விட்டது. நமக்குத்தான் அதிகமாக மூன்று கோடி ரூபாய் அளவிற்கு கிடைத்திருக்கிறது. வேறு எந்த ராஜ்யத்திற்கும் இப்படிக் கிடைக்கவில்லை. 75 லட்சம் ரூபாயில் பெரிய நகரங்களில் விஸ்தரிப்பு செய்கிறோம்; மூன்றில் ஒரு பகுதி குடிசை வாழ் பகுதிகளுக்கு ஒதுக்கி மற்றவற்றை மிடில் இன்கம், லோ இன்கம் க்ரூப்பிற்குக் கொடுக்கிறோம். போதிய அளவு குடிசைவாழ் பகுதி சீரமைப்பிற்காக அமைக்கப் பட்டிருக்கிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : In the matter of allocation of funds for Rural Housing Schemes the rural areas are being neglected. As such, will the Government consider the disirability of providing funds to rural housing schemes and ask the Life Insurance Corporation to extend the benefit to rural areas?

THE HON. SRI R. VENKATARAMAN : Contrary to the statement made by the hon. Member, it is very difficult to spend on rural housing societies. Sufficient number of applications are not forthcoming and they do not conform to the minimum standards required. We are trying our best to spend money on rural housing societies. We have allotted Rs. 10 lakhs for that purpose.

**திரு. இராம. அரங்கண்ணல் :** வீட்டுவசதிக்கு என்று ஒதுக்கப் படுகிற பணத்தில் பெரும்பாலான பணத்தை மாநிலங்கள் செலவழிப்பதில்லை என்று மத்திய வீட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டிற்கு நம் மாநிலம் இலக்காகியிருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது சற்று விளக்கிச் சொல்ல வேண்டிய விஷயம். இந்த ராஜ்யத்திற்காக ப்ளான் ஸ்கீமிற்காக 10 கோடி ரூபாய் கொடுத்தார்கள். ஆனால், நம் ராஜ்யம் செலவழித்திருப்பது சற்றேறக்குறைய 18 கோடி ரூபாய். ப்ளான் ஸ்கீமில் நாம் பணத்தை அதிகமாகக் காட்டாமல் செலவழித்த பணத்தை நான்-ப்ளான் ஸ்கீமில் காட்டியிருக்கிறோம். மத்திய சர்க்கார் கணக்கைப் பார்த்தால் பிளான் ஸ்கீமிற்கு செலவழிக்காததுபோல் ஒரு தோற்றமிருக்கும். உண்மையில் ப்ளான் ஸ்கீமிற்கு இங்கு அதிகமாக செலவழித்திருக்கிறோம். இது நான்-ப்ளான் எக்ஸ்பென்டிச்சரில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

[17th March 1966

**திரு. நா. இராசாங்கம்:** பத்து லட்சம் ரூபாய் கிராமப்புறங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்காக ஒதுக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் குறைந்தபட்சம், உயர்ந்தபட்சம் எவ்வளவு ஒரு வீட்டிற்கு இருக்கும்? வீடுகள் கட்டிக் கொடுக்க கேட்கிறவர்களுக்கு வருவாய் எவ்வளவு இருக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்போதிருக்கிற திட்டப்படி கிராமப்புறங்களில் வீடு கட்டும் திட்டத்திற்காக 3,000 ரூபாய் வரை கொடுக்கலாம். 80 சத விகிதம் வீடு கட்டுவதற்காக கடனைக் கொடுக்க முடியும். அதற்குத் தகுந்த அளவு நிலம் முதலிய ஜாமீன்கள் தேவைப்படும் என்று நினைக்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** எல்.ஐ.சி.-யிலிருந்து கொடுக்கும் 296 லட்சத்தில் கிராமப்புறங்களுக்கு 10 லட்சம் தான் ஒதுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது கடலில் கரைத்த பெருங்காயம் போல் இருக்கிறது. நகர்ப்புறங்களில் கட்டும் வீடுகள் பெரிய பணக்காரர்களுக்குத்தான் உதவியாக இருக்கிறது. கிராமப் புறங்களில் மேலும் பல விண்ணப்பங்கள் வரக் காத்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து கிராமப்புறங்களுக்கு குறைந்தது பாதியாவது ஒதுக்க முயற்சிப்பார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** வீட்டுவசதியானது நகரங்களில்தான் மிகவும் அதிகமாக வேண்டி இருக்கிறது. காரணம் என்னவென்றால் பலர் நகரங்களுக்கு வேலை வாய்ப்பு தேடி வந்து விடுகிறார்கள். பலர் குடிசைப் பகுதிகளை எல்லாம் அமைத்து விடுகிறார்கள். ஆகவே, இங்கு அதிகம் தேவைப்படுகிறது. கிராமங்களைப் பொறுத்தவரையில் இந்த பத்து லட்சம் ரூபாய் முதல் ஒதுக்கீடாகச் செய்கிறோமே தவிர, அதிகமாகத் தேவைப்பட்டால் சர்க்கார் அதற்கு வேண்டிய உதவியைச் செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* 321 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any cut has been effected in the funds allotted to the State Housing Board for its construction work in the various districts of the State, in view of the Emergency; and

(*b*) if so, its extent and how far it would affect the works already begun and pending?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

**திரு. வை. சங்கரன்:** எமர்ஜன்சி காரணமாக ஏதாவது திட்ட வேலைகள் பரிபூர்ணமாக நிறுத்தப்பட்டிருந்தனவா? அப்படியானால் அங்கு பழையபடி எப்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கிறது?



17th March 1966]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எமர்ஜன்சி காரணமாக சப்சிடைஸ்ட் இன்டஸ்ட்ரியல் ஹௌசிங் என்று சொல்லக் கூடியதில் சப்சிடியைத்தான் நிறுத்தி வைத்திருக்கிறோம். இந்த மூன்று கோடி கிடைப்பதற்கு முன்னால் நிலைமை எப்படி இருக்கும் என்று சொல்வதற்கில்லை என்று இருந்தோம். இந்தப் பணம் வந்த பிறகு திட்டம் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**திரு. வை. சங்கரன்:** பல லேபர் ஹௌசிங் ஸ்கீம்ஸ் எமர்ஜன்சி காரணமாக நிறுத்தப்பட்டிருந்ததா? அவர்களுக்கு இப்போதாவது ஸ்டேட் ஹௌசிங் போர்டுக்கு கொடுத்த பணத்திலிருந்து அதை ஆரம்பித்து நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** நிறுத்தி வைக்கப்படவில்லை. சப்ஸிடி கொடுப்பதற்கில்லை என்றுதான் சொல்லியிருக்கிறோம். அவர்கள் முழுப் பணத்தையும் கடனைத் திருப்பிக் கொடுப்பதாக இருந்தால், பார்த்து கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும். அதேபோல் இப்போது கடன் மனு செய்தால் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

**திரு. நா. இராசாங்கம்:** லோயர் இன்கம் க்ரூப்பிற்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டப்படி வீடு கேட்கிறவர்களுக்கு அவர்களுக்கு மாத வருவாய் எவ்வளவு இருக்கவேண்டும்? அதில் எத்தனை வகைகளில் மதிப்பீடுகள் இருக்கின்றன? ஒவ்வொரு மதிப்பீட்டிற்கும் எவ்வளவு எவ்வளவு முதலில் செலுத்தவேண்டும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** லோ இன்கம் க்ரூப்பில் வேண்டுமென்றால் 500 ரூபாய்க்கு குறைவான வருமானம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். 500-க்கு மேல் 1,250 ரூபாய் என்றால், மிடில் இன்கம் க்ரூப் வீடுகள் அனுமதிக்கப்படும். என்னென்ன டைப் டிஸைன்ஸ் என்று இப்போது சொல்ல இயலாது. எவ்வளவு கடன் கொடுக்கிறோம் என்றால் வீடுகளின் அமைப்பைப் பொறுத்து அந்த அளவிற்குக் கொடுக்கப்படுகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** இந்த வீட்டு வசதி போர்டுக்கு அரசாங்கம் தருகிற பணம் மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கிற மானியம், கடன், எல்.ஐ.சி. யிலிருந்து கிடைப்பது இவ்வளவையும் கொண்டு காரியங்கள் நடத்தப்படுகின்றன. இந்தப் பணம் போதவில்லை என்ற நிலைமை இருப்பதால், இன்னும் அதிகப் பணம் கொண்டு வருவதற்காக லாட்டரி சீட்டுகள் போடுவது, பொதுக் கடன் எழுப்புதல் ஆகிய முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபடுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எவ்வளவு பணம் இருந்தாலும் வீட்டு வசதிக்கு போதாது என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வர். அதற்காக லாட்டரி சீட்டு போடவேண்டும் என்பதை இந்த சர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லை. ஒருவேளை வேறு சர்க்கார் வந்தால் லாட்டரி போடுவார்களோ என்னவோ தெரியாது. கடன் எழுப்பும் விஷயத்தில் சர்க்கார் எழுப்பியிருக்கிற கடன்களுக்கே போதிய அளவு பணம் கிடைப்பதில்லை, மேலும் கடன் எழுப்புவது கஷ்டமாக இருக்கிறது.

[17th March 1966

## பொறியியல் கல்லூரி

* 322 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்தில் அரசாங்க அங்கீகாரம் இல்லாமல் எஞ்சினீயரிங் கல்லூரிகள் நடத்தப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், அதைத் தடை செய்யச் சட்டம் ஏதேனும் கொண்டுவரும் உத்தேசமுண்டா ?

**கனம் திரு ஆர். வெங்கட்டராமன் :** (அ) & (இ) அங்கீகாரம் பெறாத சில கல்வி நிலையங்கள் 'கல்லூரிகள்' என்று தங்களை அழைத்துக் கொண்டு பொறியியல் 'டிப்ளொமாக்கள்' அல்லது 'சான்றிதழ்கள்' கொடுப்பதாகக் கூறி மாணவர்களுக்கு பொறியியல் பாடங்களில் பயிற்சிகள் அளித்து வருகின்றன. இது குறித்து விசாரிக்க அரசாங்கம் குழு ஒன்றை அமைத்துள்ளது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** மே மாதத்திற்குப் பிறகு ஜூன் மாதம் புதிய கல்வி ஆண்டு தொடங்க இருக்கிற காரணத்தால், இந்தக் குழு விசாரித்து அதைத் தடுப்பதற்கு அல்லது முறைப் படுத்துவதற்காக ஒரு சட்டத்தை உடனடியாக கொண்டு வர அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எவ்வளவு சீக்கிரம் அந்தக் கமிட்டி பரிசீலனை செய்து கொடுக்க முடியுமோ, அதைக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கமிட்டி வந்து சில மாதங்கள்தான் ஆகியிருக்கிறது. இதைச் சீக்கிரமாக செய்ய முயற்சி எடுத்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன் :** இதுமாதிரி பயிற்சி கொடுக்கிற ஸ்தாபனங்கள் தங்களை கல்லூரிகள் என்று சொல்லிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் ஏ.எம்.ஐ.ஈ. போன்ற பீ.ஈ.-க்கு நிகரானவை சர்க்கார் உத்தியோகங்கள் பீ.ஈ.-க்குள்ள சலுகைகளோடு கொடுக்கப்படுகின்றன என்றெல்லாம் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு வருவதையும் அரசாங்கம் கவனத்தில் கொண்டு அது சரியா, சரியாக இருந்தால், அப்படி அனுமதிக்கப்படுகிறதா ? அல்லது சரியல்ல என்று கருதுகிறதா, அப்படி சரியல்ல என்று கருதினால் அதற்கு தடை விதிக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறதா ? என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதை எல்லாவற்றையும் ஆராயத்தான் கமிட்டி போட்டிருக்கிறோம். ஏ.எம்.ஐ.ஈ.பி.ஈ.-க்கு சமமானது என்று யூனிவர்சிட்டியாலும், கவர்ன்மென்டாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இவர்கள் ஏ.எம்.ஐ.ஈ.-க்கு தகுதியுள்ளவர்களாகச் செய்ய சக்தி படைத்தவர்களா,



17th March 1966]

அதற்கு வேண்டிய பாடப் புத்தகங்கள், லாபரட்டரி, ஃபெசிலிட்டிஸ் ப்ராக்டிக்கல் ட்ரெயினிங் ஃபெசிலிட்டிஸ் இவை எல்லாம் இருக்கின்றனவா என்பது சந்தேகம். அதற்குத்தான் ஏற்பாடு செய்கிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சார், இந்தக் கமிட்டியில் யார் யார் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் ? அவர்கள் விசாரணை செய்வதற்கு விடப்பட்டிருக்கின்ற விஷயங்கள் என்னென்ன என்பதை அறியலாமா ? 9-00 a.m.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதன் அங்கத்தினர்கள்—

(1) Sri T. Muthian, Director of Technical Education.

(2) Sri G. R. Damodaran, Principal, P. S. G. College of Technology, Coimbatore.

(3) Sri V. A. Chandran, Manager, A. S. E. A. Electric Limited, Madras.

(4) Sri K. Sreenivasan, Director, M. I. T., Chromepet.

இவர்களுக்கு விடப்பட்டிருக்கும் விஷயங்கள், காலேஜில் சொல்லிக் கொடுப்பது போல் தாங்களும் டிப்ளமா படிப்பு சொல்லிக் கொடுக்கிறோம் என்று பயிற்சி கொடுத்து வருகின்ற காலேஜ்-களைப்பற்றியும், அவைகளில் கொடுக்கப்படுகின்ற கல்வியைப் பற்றியும் ஆராய்ந்து அதில் ஏற்பட்டிருக்கின்ற குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு என்ன பரிகாரம் என்பதைச் சிபாரிசு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. வை. சங்கரன் :** உண்மையிலேயே நல்ல வசதிகளோடு தனியார் காலேஜ்கள் நடத்தி வந்தால், அதை அனுமதிக்கும் விஷயத்திலும் இந்தக் கமிட்டி நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a hypothetical question.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த நுட்பக் கல்விகள் சம்பந்தமாகப் பயிற்சி அளிப்பதற்கு அரசாங்கம் பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கும் போது, தனியார்கள் இது போன்ற பள்ளிகளை எதற்காக நடத்த வேண்டும்? இதைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதைத் தடை செய்ய முடியுமா என்பதையும் ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று இந்தக் கமிட்டிக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. தடை செய்ய முடியுமானால் சட்டபூர்வமாக எந்த விதத்தில் தடை செய்ய முடியும் என்பதைப் பற்றியும் பரிசீலிக்க வேண்டும்.

**திரு. நா. இராசாங்கம் :** தலைவர் அவர்களே, இந்தக் குழு ஆராய்ச்சி செய்து முடிவு எடுத்து சர்க்காருக்குத் தெரிவித்த பின்னால் சர்க்காருடைய உசிதம்போல் நடவடிக்கை எடுத்துக்

சொல்லலாம். ஆனால், அதற்கு முன்னால் இப்படிப்பட்ட பள்ளிகள் பயிற்சி கொடுத்து சர்டிபிகேட்கள் வழங்குகின்றன, அப்படிப்பட்ட சர்டிபிக்கேட் அரசாங்கத்தில் உலாவுகின்ற போது, அதற்கு என்ன மாதிரியான மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது வழிமுறை செய்யப்பட்டிருக்கிறதா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது சம்பந்தமாகச் சர்க்காரில் விதிகள் இருக்கின்றன. சர்க்கார் நியமிக்கின்ற பாடமுறையிலேயே அவர்களும் பரீட்சை நடத்தி வருகின்றார்கள். அதோடு சர்க்காரால் அது அங்கீகரிக்கப்பட்டால் அந்தப் படிப்பை சர்க்கார் ஏற்றுக்கொள்ளும், அங்கீகரிக்காமல் இருந்தால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

## தென்னை மர நோய்த் தடுப்பு ஆராய்ச்சி

*323 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தம்பிக்கோட்டையில் தென்னை மர நோய்த் தடுப்பு ஆராய்ச்சி ஏதேனும் நடத்தப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) தஞ்சை மாவட்டம், தம்பிக் கோட்டையில் தென்னை மர வாடல் wilt நோய் ஆய்வுத் திட்டம் 1965, ஜனவரி மாதத்திலிருந்து தொடங்கப்பட்டிருக்கிறது.

(இ) இத் திட்டத்தின்கீழ், இந்த நோய் பரவியுள்ளதையும், அதன் ஊற்றத்தையும் ஆராய்வதற்காக இம் மாநிலத்தில் தென்னை மரங்கள் முக்கியமாக வளர்க்கப்படும் நிலப் பரப்புகளைக் கணக்கெடுக்க எண்ணியுள்ளது. இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள், இந்நோயுடன் தொடர்புள்ள உயிரினங்கள், நோய் காணப்படும் இடங்கள் நோய் பரவியிருப்பது முதலியவை இத் திட்டத்தின் கீழ் ஆராயப்படும். மரவளர்ப்பு முறைகள், காளான் கொல்லி மருந்து தெளிப்பு ஆகிய இருவகைகளிலும் இந் நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உருவாக்கப்படும். கரிம உரங்களையும் மற்ற உரங்களையும் வெவ்வேறு அளவுகளில் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளும் ஆராய்ந்தறியப்படும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சார், தென்னை மர நோய்த் தடுப்பு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து உபகரணங்கள் வேண்டும் என்று கோரி அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் அனுப்பப்பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் அந்த உபகரணங்கள் அனுப்பப்பட்டுவிட்டனவா? இல்லையென்றால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** உபகரணம் வேண்டும் என்று கேட்ட தகவல் என்னிடம் இல்லை.



**திரு. மா. தண்டாயுதபாணி :** இந்த மாநிலத்தில் மொத்தம் தென்னை மரங்கள் எத்தனை ? தென்னை மரங்கள் வளருகின்ற நிலத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மொத்தம் தென்னை மரங்கள் 1 கோடி. 32 லட்சத்து 80 ஆயிரம். விளைகின்ற மொத்த விஸ்தீரணம் ஒரு லட்சத்து 66 ஆயிரம் ஏக்கர்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** தென்னை மரங்களின் உற்பத்தி அதிகமாகப் பெருகவேண்டும் என்று அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்து வருகிறது. ஆனால் நல்ல வளர்ந்த முதிர்ந்த தென்னை மரங்களில் நோய்கள் வருவதன் காரணமாகப் பாழ்பட்டு வருகின்றன. குறிப்பாக, சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் இப்படிப்பட்ட நோய்கள் பரவலாக இருக்கிறது. ஆகவே, இதற்கு விசேஷமாக அதிகாரிகளை அனுப்பி இதைச் சோதனை செய்து இந்த நோயைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எங்கெங்கு நோய் இருக்கிறதோ அங்கெல்லாம் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நோயை எந்த விதத்தில் வெற்றிகரமாகத் தடுக்கலாம் என்பதைப்பற்றி பரீட்சார்த்தமாகப் பார்ப்பதற்காக அதிராம் பட்டினத்தில் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. இதை 1965 ஜனவரியில் தான் ஆரம்பித்திருக்கிறார்கள். காலப்போக்கில் இந்த ஆராய்ச்சியின் மூலமாக நோய்கள் தடுக்கப்படும் என்று நம்புகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு சில சாதனங்கள் வேண்டும் என்று கேட்டு அவர்கள் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அது அனுப்பப்பட்டு விட்டதா ? இல்லையென்றால் இதில் காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது அதற்கான தகவல் என்னிடம் இல்லை

**திரு. மா. தண்டாயுதபாணி :** தென்னை மரம் என்பது, விவசாயிகளுக்கு நல்ல வருவாய் வரக்கூடிய இனமாக இருக்கிறது, விவசாயிகளுக்கு இது பேருதவியாக இருந்து வருகிறது. இப்படிப்பட்ட தென்னை வளர விவசாயிகளுக்கு நாத்துக்களோ அல்லது தென்னை நெற்றுகளோ அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகிறதா, அல்லது இதற்கென்று மானியங்கள் ஏதாவது கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI P. KAKKAN : The distribution of seedlings during the Third Plan period was as follows :—

1961-62—Rs. 2.15 lakhs.

1962-63—Rs. 2.0 lakhs.

1963-64—Rs. 2.97 lakhs.

1964-65—Rs. 3.11 lakhs.

1965-66—Rs. 4.38 lakhs.

[17th March 1966

திரு. டி. கார்ச்சா கவுடர் : நம் மாநிலத்தில் 1 கோடி 30 லட்சத்து சொச்சம் அளவுக்குத் தென்னை மரங்கள் இருந்தும் தற்போது தேங்காயின் விலை இவ்வளவு அதிகமாக ஆகியிருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : காரணம் சில இடங்களில் தேங்காயை அதிகமாக உபயோகிக்கிறார்கள், சாப்பிடுகிறார்கள். வெளியிடங்களுக்கும் தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று நினைக்கிறேன். இப்போது இருப்பதைவிட இன்னும் தேங்காய் உற்பத்தி அதிகமாகிவிட்டால் விலை குறையக்கூடும்.

திரு. எம். எஸ். மணி : இப்படிப்பட்ட நோய்கள் தென்னை மரங்களில் வருவதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும்போது, அதற்குத் தென்னை மர விவசாயிகள் சொல்லுகின்ற காரணம், முன்னால் தென்னை மரத்தில் கள் இறக்குவதற்காக கலயம் கட்டப்பட்டு வந்தது. அதில் வண்டுகள், பூச்சிகள் விழுந்துவிடும். இப்போது அம்மாதிரி கலயங்கள் இல்லாததால் தென்னங் குருத்துக்களைப் பூச்சிகள், வண்டுகள், தின்று விடுகின்றன. அதோடு அடிக்கடி தென்னை மரங்களில் ஏறி பன்னாடைகளைச் சுத்தம் செய்து கொண்டிருந்ததால் விளைவும் கூடுதலாக இருந்தது. இப்போது அவ்விதம் இல்லாததால் குறைந்துவிட்டது என்று சொல்கிறார்கள். இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தக் காரணங்களைக் கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லியிருக்கலாம். அரசாங்கத்தினிடத்தில் இந்த விவரங்கள் வரவில்லை.

திரு. மா. தண்டாயுதபாணி : தஞ்சை ஜில்லாவில் வேப்பங்குளம் என்ற கிராமத்தில் தென்னை மரங்கள் இருக்கக்கூடிய ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு சர்க்காரில் இருக்கிறது. அதில் பல ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே இப்போது அமைப்பட்ட ஆராய்ச்சி நிலையத்தை இங்கேயே வைத்திருக்கலாமே, இப்போது வைத்திருக்கும் தம்பிக்கோட்டை பகுதி தனிப்பட்டவர்களின் நிலமா, அதற்கு அரசாங்கம் ஏதாவது மானியம் வழங்குகிறதா என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது அதிராம்பட்டினம் என்ற இடத்தில் ஆயிரம் ஏக்கர் இருக்கக்கூடிய இடத்தில் இந்த பரீட்சார்த்த சோதனை நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இடம் தனிப்பட்டவருடைய இடமா என்கின்ற தகவல் சர்க்காரிடம் இல்லை.

### எலுமிச்சை மரங்கள்

* 324 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் எலுமிச்சை, சாத்துக்குடி மரங்களுக்கு அண்மையில் நோய் கண்டது ?

(இ) இதனைத் தடுப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



17th March 1966]

கனம் திரு. பூ. கக்கன் : (அ) திருநெல்வேலி, சேலம் மாவட்டங்களில் எலுமிச்சை, சாத்துக்குடி மரங்கள் 'டிக்லைன்' (Decline) என்னும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன.

(இ) மாநில வேளாண்மைத்துறை வளர்ச்சிப் பணியாளர்கள் இந்நோயின் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பரிகார ஏற்பாடுகளை உரிய காலத்தில் மேற்கொண்டுள்ளனர். இவ்வியாதியைப்பற்றி ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. சிகிச்சையின் திறனை விளக்குவதற்காக, திருநெல்வேலி மாவட்டம் கடையத்தில் குடியானவர்களுடைய நிலங்களில் காட்சிப் பகுதிகள் (Demonstration Plots) அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்த வேளாண்மைக் கிடங்குகளில் அவசியமான ரசாயன மருந்து இருப்புகள் போதிய அளவில் இருக்க வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், எத்தனை ஏக்கர் நிலத்தில் எலுமிச்சை, சாத்துக்குடி சாகுபடி செய்யப்படுகிறது ?

THE HON. SRI P. KAKKAN : The total area under lime and sathukudi is roughly 6,000 acres.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, எவ்வளவு தான் சிரமப்பட்டு பக்குவமாகச் சாத்துக்குடியை சாகுபடி செய்தாலும், நகரி, சாத்துக்குடியைத்தான் எல்லோரும் விரும்பி வாங்குகிறார்கள். இதைவிட பிற வகை சாத்துக்குடி நன்றாக இருந்தாலும் வாங்குவதில்லை. இதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. பூ. கக்கன் : என்ன காரணம் என்பதை நான் சொல்ல முடியாது. சாதாரணமாக சாத்துக்குடி நல்ல கனமாக இருந்தால் நல்ல சாறு கிடைக்கும். அதற்காக கனமுள்ளதைப் பார்த்து மக்கள் வாங்குவார்கள்.

### மாவட்டக் கழக மருத்துவ மனைகள்

* 325 கேள்வி.—திரு. வி. எஸ். எஸ். மணி : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மாவட்டக் கழக மருத்துவ மனைகள் அனைத்தும் அரசாங்க நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டனவா ?

(இ) இல்லையெனில், இன்னும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை எத்தனை ?

(உ) எடுத்துக்கொள்ளப்பட்ட மருத்துவ மனைகளின் பணியாளர்களுக்கும், எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் ஏனைய மருத்துவ மனைகளின் பணியாளர்களுக்கும் ஒரே வீதத்தில் சம்பளம் அளிக்கப்படுகிறதா ?

(எ) இல்லையென்றால், அதன் காரணங்கள் யாவை ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) & (எ) அரசாங்கம் எடுத்துக் கொண்ட முன்னாள் தலநிதி மருத்துவ மனைகளின் பணியாளர்கள் அனைவரும் அரசாங்கப் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அரசாங்கச் சம்பள விகிதங்களில் அவர்களுக்குச் சம்பளமும் வழங்கப்படுகிறது. ஆனால் (1) சிவகெங்கை, அரசாங்கப் பெண்கள்—சிறார்கள் மருத்துவ மனை (2) பள்ளத்தூர், அரசாங்கப் பெண்கள் சிறார் மருத்துவ மனை ஆகிய இரண்டின் பணியாளர்கள் இன்னும் அரசாங்கப் பணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இந்த இரு மருத்துவ மனைகளின் பணியாளர்களையும் அரசாங்கப் பணியில் சேர்த்துக் கொள்வது குறித்து அரசாங்கம், மருத்துவத்துறை நெறியாளரைக் கலந்தாலோசித்துப் பரிசீலனை செய்து வருகின்றது.

### *Research on Indian Medicines*

*326 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have proposed to create any "Research Cell" for Indigenous and Indian Medicine; and

(*b*) if so, the scope and function and activities of the said Cell?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) A Research Scheme in the three branches of Indian Systems of Medicine namely Ayurveda, Siddha and Unani was undertaken from the Second Five-Year Plan Period (1958) at the Kilpauk Medical College and Hospital, Madras with the assistance of the Government of India. The Scheme was wound up on 1st March 1965. Subsequently, at the instance of the Government of India, fresh Research Schemes have been drawn up and are being finalised in consultation with the Government of India. Pending approval of the Scheme by the Government of India, the Research staff is being continued with their approval.

(*b*) The following diseases are to be taken up for research and investigation in the three branches at the Kilpauk Medical College and Hospital, Madras :—

*Ayurveda*

(i) Leucoderma.
(ii) Filariasis.

*Siddha*

(i) Cirrohsis of the liver in adults.
(ii) Peptic Ulcer.

*Unani*

Rhemmatoid Arthritis.

The Research Units of Indian Systems of Medicine will have a close and intimate colloboration of the Departments of pharmacology, Bio-chemistry and pathology and other basic sciences of the Kilpauk Medical College. The Units will be guided by Professor of Medicine, Madras Medical College with vast experience in guiding such research schemes.



திரு. வை. சங்கரன் : சார், சித்த வைத்தியம் என்பதானது நம் ராஜ்யத்திலே தோன்றி அதற்கென்று தனியாக சாஸ்திரமும் இருப்பதால், சித்த வைத்தியம் சம்பந்தமாகத் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய அதற்கென்று ஒரு ரிஸர்ச் ஸெல் ஏற்படுத்தி ஆராய்ச்சி செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த இண்டியன் ஸிஸ்டம் ஆஃப் மெடிஸினுக்கான அட்வைஸர் வந்திருந்தார். அவர்களோடு சேர்ந்து ஆலோசித்து ரிஸர்ச் ஸ்கீமில் சித்தாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஆயுர்வேதம், யூனானி எல்லாவற்றிலும் ரிஸர்ச் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்திற்கென்று தனிக் கவுன்ஸிலும், யூனானி, ஆயுர்வேதத்திற்கு ஒரு தனிக் கவுன்ஸிலும், ஹோமியோபதிக்கு ஒரு தனிக் கவுன்ஸிலும், நவீன வைத்திய முறைக்குத் தனிக் கவுன்ஸிலும் ஆக நான்கு கவுன்ஸில்களை அமைக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வர அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதே, அது எந்தக் கட்டத்தில் இருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சித்தா, யூனானி, ஆயுர்வேதம், ஹோமியோபதி ஆகியவைகளுக்குத் தனிப்பட்ட கவுன்ஸில்கள் அமைக்க வேண்டுமென்று ஒரு யோசனை அரசாங்கத்தில் இருக்கிறது. கன்ஸாலிடேட்டெட் மெடிக்கல் பிராக்டிஷனர்ஸ் ரிஜிஸ்ட்ரேஷன் பில் கொண்டு வந்து, பொறுக்குக் குழுவின் அபிப்பிராயத்தைக் கேட்டு அவர்கள் அபிப்பிராயம் தெரிந்த பிறகு தான் தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவத்திற்கென்று ஒரு ஆராய்ச்சிப் பிரிவு அமைப்பது சம்பந்தமாக மத்திய சர்க்காரிலிருந்து வந்த அறிஞருடன் கலந்து முடிவு செய்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சித்த வைத்தியம் என்பது தமிழ் நாட்டுக்கே உரிய மருத்துவ முறை ஆகும். ஆயுர்வேதம் யூனானி என்பது சமஸ்கிருதம் அரபு ஆகிய மொழியிலிருந்து தயாரிக்கப்பட்ட மருத்துவ முறை. அதையொட்டி சித்த மருத்துவ முறையை நம் நாட்டு அறிஞர்களைக் கலந்து அதை வளர்க்க அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆராய்ச்சிக் கூடம் ஏற்படுத்தி இங்கு ஆராய்ச்சி செய்யப் போவது மூன்று ஸிஸ்டத்திலும் தான். சித்த வைத்தியத்திற்கென்று தனிப்பட்ட அனுபவம் வாய்ந்த சயன்டிஃபிக் பர்ஸானல் போட்டு ஆராய்ச்சி செய்ய உத்தேசம் இருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : சார், இந்த சித்த மருத்துவம் பற்றியும், சித்தர்கள் எழுதிய மருந்து வகைகள் பற்றியும் அடங்கிய குறிப்புகளையும் புத்தகங்களையும் திரு. கே. ஏ. பி. விசுவநாதன் அவர்கள் அமைச்சருக்கு அனுப்பி வைத்தாரா? அப்படி அனுப்பி இருந்தால் அதன் மீது ஏதாவது ஆராய்ச்சி நடத்தப்படுகிறதா?

[17th March 1966

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : சித்த வைத்தியத்திலே தேர்ச்சி பெற்று, அந்த முறையைக் கையாண்டு வரும் பல வைத்தியர்கள் தங்களிடத்தில் சித்த வைத்திய முறை பற்றி எழுதி இருக்கிற பழைய ஓலைச் சுவடிகள் இருப்பதாக எழுதித் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அந்த மாதிரிப் புத்தகங்கள் ஒன்றும் இன்னும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்** : தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்தில் நாடி வைத்தியம் என்ற ஒரு முறை இருக்கிறது. அதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : இந்த ஆராய்ச்சிக் கூடத்தை ஏற்படுத்தி அதிலே அனுபவம் மிகுந்தவர்கள் அந்த முறையை எடுத்து ஆராய்ச்சி நடத்தும்போது இவையெல்லாம் கவனிக்கப்படும் என்று நினைக்கிறேன்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : இப்போது அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லுகிற இந்த ஆராய்ச்சிக் கூடத்தை எந்த இடத்தில் அமைப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : சென்னை மாகாணத்திலே வரும் என்று கூறிக்கொள்ளுகிறேன். (சிரிப்பு).

*Patasalas for Thevaram*

* 327 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal before the Commissioner of Hindu Religious and Charitable Endowments to advise all affluent Devasthanams and Madathipathis to start Thevaram and Divyaprabandha patasalas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department has stated that it has been the policy of the Department to encourage the starting and maintenance of Patasalas for Thevarams and Divya Prabandhams, wherever possible and subject to availability of funds in religious institutions. Classes are being conducted in some important religious institutions.

**திரு. வை. சங்கரன்** : சார், சொல்லப்பட்டிருக்கும் பதிலிலே, ஆரம்பிப்பதாக இருந்தால் இந்த டிப்பார்ட்மெண்ட்டில் வேண்டிய என்கரேஜ்மெண்ட் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நல்ல நிதிநிலை உள்ள இடங்களில், அதனுடைய நிர்வாகம், பூஜை வகையறா போக அதிக நிதி நிலை உள்ள தேவஸ்தானங்கள், மடங்கள் இவற்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற வகையில் ஏதாவது அறிக்கை அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அவ்வாறு இலாக்கா உத்தரவு போட அதிகாரம் இல்லை. பெரிய தேவஸ்தானங்கள் ஏற்கனவே நடத்திக் கொண்டிருக்கின்றன. இப்போது இருக்கிற தகவல் படியே 12 பெரிய ஸ்தாபனங்கள் இம்மாதிரிப் பாடசாலைகள் நடத்திக் கொண்டு வருகின்றன.



17th March 1966]

**திரு. இராம. அரங்கண்ணல்** : சார், இந்த அறக் கட்டளைகளிலிருந்து திருக்குறள் நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இது போல அறக் கட்டளையிலிருந்து தேவாரம், திவ்யப்பிரபந்தம், மணிவாசகம் ஆகியவைகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கு முன்பாக தமிழர்கள் அதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதுதான் இப்போது கவனிக்கப்படுகிறது.

**திரு. நா. இராசாங்கம்**: தலைவர் அவர்களே, அறக் கட்டளைகள் தேவாரம், திவ்யப்பிரபந்தம் போன்ற மற்ற நூல்களை வைத்து நடத்த வேண்டுமென்று இருக்கிற நிலைமையில், திருக்குறளும் சிவஞானபோதமும் முக்கிய நூல்கள், அறக் கட்டளைகளுக்கு அனுமதி வழங்கி அவைகளையும் சேர்த்துப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்ற நிலையை உணர்த்துவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : திருக்குறள், சிவஞான போதம் மட்டுமல்ல, எத்தனையோ அரிய நூல்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம்கூட பாடம் சொல்லிக் கொடுக்க தேவஸ்தானங்கள் முன் வந்தால் இத்தகைய பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதில் அறநிலையப் பாதுகாப்பு இலாகாவினர் குறுக்கே நிற்க மாட்டார்கள், ஆதரவு அளிப்பார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Vedapatasalas and patasalas that are now being run by Hindu Religious and Charitable Endowments Department are becoming extinct. Will the Government consider the desirability of suggesting to the Hindu Religious and Charitable Endowments Department to start more Vedapatasalas and promote Sanskrit teaching ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The endowments are not created by the Hindu Religious and Charitable Endowments Department. Endowments are created by those who can afford to create them and who are interested in particular endowments. There are endowments even now for teaching Vedas. According to the endowment, that has to be done.

**திரு. சா. கணேசன்** : இந்தத் தேவாரம், திவ்யப் பிரபந்தம் போன்றவற்றைப் பாடம் சொல்லிக் கொடுப்பதன் மூலம் பழைய காலப் பண்முறைகள், இசை அமைப்புகள் எல்லாம் சுலபமாக அல்லாவிட்டாலும் சிரமைப்பாவது கொண்டு படிக்க வாய்ப்பு இருப்பதாலே அதற்கான வசதிகளையும் செய்து இந்த மாதிரிக் கல்விக் துறையிலே, நம்முடைய நாகரீகத் துறையிலே, பண்பாட்டுத் துறையிலே வரலாற்று அமைப்பை அமைக்கக் கூடிய நெறியும் அதிலே இருப்பதாலே அதற்குத் தனிச் சலுகை கொடுத்து, மான்யம் கொடுத்து. அந்த ஆலயங்கள் அல்லது மடங்கள் இதை மேற்கொண்டு செம்மையாக நடத்துவதற்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[17th March 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தேவாரம், திவ்யப் பிரபந்தம் போன்ற பாசுரங்களை இன்னிசையோடு, ஏற்ற பண்ணோடு சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தேவஸ்தானங்கள் அற நிலையங்கள் இதைக் கவனித்து வருகின்றன. அதற்காக அரசாங்கம் மான்யம் கொடுக்க வேண்டிய அவசியம்கூட இல்லை. அதோடு தேவஸ்தானங்கள் ஒத்துழைப்போடு, அரசாங்கத்தின் முயற்சியால் சிறந்த ஓதுவார்களை அல்லது ஆசிரியர்களைக் கொண்டு சிறந்த பிள்ளைத்தமிழ், தேவாரம், திருவாசகம் போன்றவற்றிலுள்ள சிறந்த பாசுரங்களை இன்னிசையோடு பாடச் செய்து 16 ரெக்கார்டுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அது இப்போது விலைக்கு வழங்கப்படுகிறது. அதோடு இந்தக் குறிப்பிட்ட 16 ரெக்கார்டுகளில் இருக்கிற பாசுரங்களைப் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கும் விளக்கும் வகையில் இன்னமுதம் என்ற விளக்கமும் வெளியிடப்பட்டிருக்கிறது.

**திரு. மா. தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, இந்த 12 பாடசாலைகளை நடத்தி வருகிற தேவாலயங்கள் எவை எவை என்று அறியலாமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (1) Sri Swetaranyeswaraswamy temple, Thiruvengadu, Thevaram.

(2) Sri Agneeswaraswamy temple, Thiruppugalur, Nannilam Taluk–Thevaram.

(3) Sri Pitchai kattalai attached to Sri Amirthakateswarar Devasthanam, Thirukkadayur, Mayuram taluk–Thevaram.

(4) Sri Dhandayuthapaniswamy temple, Palani, Madurai District–Thevaram.

(5) Sri Pettai Visweswaraswamy temple–Coimbatore–Thevaram.

(6) Sri Rajan kattalai attached to Sri Thiyagarajaswamy temple–Thiruvarur, Thanjavur District, Thevaram.

(7) Sri Sarangapaniswamy temple–Kumbakonam–Dhivya Prabandha Patasalai.

(8) Sri Varadarajaperumal temple, Vilanagar, Mayuram taluk—Dhivya Prabanda Patasalai.

(9) Sri Parijathavaneswarar Devasthanam, Thirukalar, Mannargudi taluk–Thevaram.

(10) Sri Kapaleeswarar Devasthanam, Mylapore, Madras–Thevaram.

(11) Sri Dharmapuram Adheena Math, Dharmapuram, Mayuram taluk–Thevara Patasalai.

(12) Sri Thiruvaduthurai Adheena Math, Thiruvaduthurai, Thanjavur District–Thevara Patasalai.

**திரு. சா. கணேசன் :** கனம் அமைச்சர் அவர்களை நான் வேண்டிக் கொண்டது சுருதியோடு பண்முறையோடு அதைப் பாடக் கற்றுக்கொடுக்கிற அல்லது பயிற்றுவிக்கின்ற முறை மட்டும் அல்ல,



17th March 1966]

தேவார திவ்ய பிரபந்தங்கள் முதலியவற்றில் வரலாற்றுக் குறிப்புகள், வரலாற்று அடிப்படை நெறிக்கு வேண்டிய செய்திகள் நிரம்ப இருப்பதோடு, இசை அமைப்பிற்கும் அந்தப் பாசுரங்கள் உதவி செய்வதால், அதைப்பற்றி இசை குறிப்புகளைத் தொகுப்பதற்கும், அதிலே காணப்படுகிற வரலாற்றுச் செய்திகளைத் தொகுப்பதற்கும் அரசாங்கம் மானியம் கொடுத்து, அந்தப் பள்ளிகளிலேயே ஒன்றிரண்டு ஆராய்ச்சிக்காரர்களை அமைத்து, அதையெல்லாம் வெளிப்படுத்துவதற்கு உதவி செய்ய வேண்டும். அதைச் செய்வார்களா என்று நான் அறிய விரும்பி அதைக் கேட்டேன். அதற்குப் பதில் கூறவேண்டும் என்று வேண்டுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ் இசை சங்கத்தினர் இந்தப் பண் ஆராய்ச்சி போன்றதிலும் கவனம் செலுத்தி வருகிறார்கள். தேவாலயங்களும் மற்ற அற நிலையங்களும் கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அவர்களும் அரசினருடைய உதவியை நாடினால், அப்பொழுது அரசாங்கம் அதைக் கவனிக்கும்.

## கோயில்களிலுள்ள விக்ரகங்கள்

* 328 கேள்வி.—**திரு. மு. கருணாநிதி :** கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலயங்களிலுள்ள விக்ரகங்களைப் புகைப் படமாக எடுத்து வைக்கவேண்டும் என்று கோவில் நிர்வாகிகளுக்கு அரசினர் ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனரா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ஆம்.

(இ) பழிக்கு அஞ்சாத சில கோயில் பணியாளர்களை அல்லது அறங்காவலர்களை உடந்தையாகச் சேர்த்துக் கொண்டு கலைநுட்ப வேலைப்பாடமைந்த தொன்மைச் சிறப்பும் மதிப்பும் மிக்க தெய்வச் சிலைகளை அப்புறப்படுத்திவிட்டு அவற்றிற்குப் பதிலாக அவற்றையொத்த மலிவான புதுச்சிலைகளை சில குறும்பர்கள் மாற்றி வைத்து விடுகிறார்கள். இதைத் தடுக்கும் பொருட்டு இந்து சமய அறநிலைய (ஆட்சித்) துறைக் கமிஷனர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**திரு. மு. கருணாநிதி :** இப்படிக் களவாடப்படுகின்ற முயற்சி, அப்புறப்படுத்தப்படுகின்ற முயற்சி தடுக்கப்படுவது பற்றி என்னுடைய ஆதரவைத் தெரிவிக்கின்ற நேரத்தில், இந்த விக்ரகங்களைப் புகைப்படங்கள் எடுக்கின்ற காரணத்தினால், பழிக்கு அஞ்சாதவர்கள் ஆலயத்தில் இருக்கிற அந்தப் புகைப் படங்களில் இருக்கிற விக்ரகங்களைப் பார்த்து அது போன்ற விக்ரகங்களை அழகாகச் செய்து வைத்துவிட்டு பழைய விக்ரகங்களை அப்புறப்படுத்துவதற்கு இன்னும் இலகுவாக காரியங்களைச் செய்து கொடுக்க மாட்டார்களா என்ற சந்தேகத்தை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

[17th March 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விக்ரகங்களை எப்பொழுதும் பூட்டி வைக்க முடியாது. புகைப்படங்கள் பாதுகாப்பில் வைக்கப் படும். இவர்கள் கையில் கிட்டாது.

**திரு. எம். எஸ். மணி:** அப்படி விக்ரகங்களைப் புகைப்படம் எடுக்கின்ற காரணத்தினால் அவைகளுடைய புனிதத் தன்மை கெட்டுவிடும் என்று வைதீகர்கள் சொல்லுவார்களே, அது எவ்வாறு என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** புகைப்படம் எடுப்பதினாலே புனிதத் தன்மை கெட்டுவிடும் என்பது பழைய கால நம்பிக்கை தான். விக்ரகத்திற்கே ஆபத்து வருகிறது என்றால், அதை முன்னால் பாதுகாக்க வேண்டும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** வெளிநாடுகளிலிருந்து வரக் கூடிய பிரயாணிகள்கூட நம்முடைய நாட்டுப் புராதனக் கோவில் களைப் பற்றிய வரலாறு, இன்னும் அங்குள்ள விக்ரகங்களைப் பற்றிக் கூட தெரிந்துக்கொள்ளுவதற்கு ஆவல் உள்ளவர்களாக இருக்கிறார் கள். எல்லா இடங்களுக்கும் அவர்கள் போவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருப்பதினால், இதுபோன்று போட்டோ எடுப்பதைத் தொகுத்து, அதை ஆல்பமாகச் செய்து, குறிப்பிட்ட இடத்தில் வைத்தால் அது அவர்களுக்கும் உதவியாக இருக்கும். பள்ளிக் குழந்தைகளுக்கும் உதவியாக இருக்கும். அது பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** வெளி நாட்டிலுள்ளவர்கள் அதில் அக்கறை உள்ளவர்களாக இருக்கிறார்கள், வருகிறார்கள், அவர்களுக்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்கப்படு கின்றன. ஆனால் முக்கியமாக இம்மாதிரி அழகு மிகுந்த தொன்மை யான விக்ரகங்களுக்குக் குறிப்பிட்ட சில நாடுகளில் மிகுந்த கிராக்கி இருக்கிறது. லட்சக்கணக்காகப் பணம் கொடுத்து அவர்கள் விக்ரகங்களை வாங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அதில் திருட்டுத்தனமாக ஒரு வியாபாரம்கூட ஏற்பட்டிருக் கிறது. இதிலே ஒரு சைன் இருக்கிறது. ஒரு சில பேர்கள் இதிலே சேர்ந்து கொண்டு, எப்படியாவது திருட வேண்டும் என்று திட்டமிடுகிறார்கள். ஆனால், பழைமையான விக்ரகங்களைத் தான் வெளி நாட்டவர்கள் விரும்புகிறார்கள். இப்பொழுது தொழில் இலாக்காவினால் நடத்தப்படும் தொழிற்கூடங்களில், அதாவது மகாபலிபுரத்தில் பல விக்ரகங்களைச் செய்கிறார்கள், சுவாமி மலையில் உத்ஸவ விக்ரகங்களைச் செய்கிறார்கள். ஆனால், குறிப்பிட்ட ஒரு சில நாடுகளில் இந்த விக்ரகங்கள் எவ்வளவு அழகாக இருந்தாலும் அதில் அவர்களுக்கு அக்கறை இல்லை. பழைமையான விக்ரகங் களைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். ஆகையால் இவைகளைத் திருடுவதில் சிலர் ஈடுபடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

**திரு. து. ப. அழகமுத்து:** விக்ரகங்கள் மாற்றப்படாமல் இருப்பதற்காகப் புகைப்படங்கள் எடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். புகைப்படங்கள் எடுத்தாலும்கூட அதே



17th March 1966]

போன்று போலிகளைத் தயாரிக்கிறார்கள். நிபுணர்கள் கூறுவது என்னவென்றால், பழைய காலத்து விக்ரகங்களின் எடை புதியதாகத் தயாரிக்கப்பட்ட விக்ரகங்களுக்கு வராது என்று கூறுகிறார்கள். ஆகவே, இப்பொழுது கோவில்களிலுள்ள விக்ரகங் களை எடை போட்டு வைப்பதற்கான காரியங்களைச் செய்ய அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** என்ன செய்யப்படுகிறது என்ற விவரங்களை நான் கூறுவது சரியல்ல. ஆனால், பழைய விக்ரகங் களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமோ, அவை எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. மு. கருணாநிதி:** இப்படி எத்தனை களவாடல்கள் நடத்தி ருக்கின்றன? எத்தனை வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஒன்றிரண்டு களவாடல்கள் எனக்குத் தெரியும். இது தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் களவாடப்பட்டு, வழக்குப் போடப்பட்ட விவரம் என்னிடம் இல்லை.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** அம்மாதிரி களவாடல் முயற்சி யில் ஈடுபட்டவர்களின் பெயர்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப் பார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பணம் அதிகமாகக் கொடுக்கப் படுவதால், ரூ. 5,000, 5,000 கொடுக்கப்படுவதால் ஏழை தர்ம கர்த்தாவாக இருப்பவர்கள், பணம் வருவதினாலே, சில நபர்கள் தவறு செய்பவர்கள் ஒன்றிரண்டு பேர்கள் இல்லாமல் இல்லை. ஆனால், அதற்கு மேலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இப்பொழுது யார் இம்மாதிரி செய்தார்கள் என்று தெரிவிப்பதற்கு என்னிடம் தகவல் இல்லை. கோர்ட்டிற்குப் போய் குற்றம் சாட்டப்பட்டு ஒரு தீர்ப்புக் கூறப்படாத வகையிலே நான் அந்தப் பெயர்களைத் தெரிவிப்பதும் முறையல்ல.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** மனிதனிடத்திலே தவறான ஆசை யைத் தூண்டுகிற விக்ரகங்களை யெல்லாம் பத்திரமாக வைத்து விட்டு, வேறு நல்ல விக்ரகங்களைக் கோவில்களிலே வைப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுப்பார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** வெளி நாடுகளில் இருப்பவர் கள் இந்த விக்ரகங்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் கொடுக்க முன் வருகிறார்கள். அவைகளைப் பார்த்து ஆனந்தப்படுவதற்கு, அனுபவிப்பதற்கு வெளி நாடுகளில் அவ்வளவு மோகம் இருக்கிறது. நாம் பெற்ற செல்வத்தை அப்படிப் பூட்டி வைப்பதில் பயன் இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, வெளி 9-30 a.m.
நாட்டில் உள்ளவர்கள் விக்கிரகங்களை லட்சக்கணக்கான ரூபாய்கள் கொடுத்து வாங்குவதாகச் சொன்னார்கள். அப்படி வாங்குவதன் பலன் என்ன? அதை வாங்கி அனுபவிக்கிறார்கள் என்றார்கள். அவற்றை வாங்கிப் பார்ப்பதில் என்ன அனுபவம் இருக்கிறது?

[17th March 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நமக்கு அதன் அருமை தெரியாது. வெளிநாடுகளில் ஜெர்மனி போன்ற நாடுகளில், அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளவர்களுக்கு அவற்றின் அருமை தெரிகிறது. நாம் அவற்றின் அருமையைப் போதிய அளவு உணரவில்லை.

**திரு. எம். எஸ். மணி :** சார், களவாடிய விக்கிரகங்களை அமெரிக்கர்கள் வாங்கியிருக்கிறார்கள் என்றால், அந்த விக்கிரகங்களை மீட்டுக் கொண்டு வர ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படிச் சொல்ல முடியாது. இங்கேயிருந்து களவாடி அங்கே விற்க முயற்சி எடுக்கிறார்கள் என்றுதான் தெரியும்.

**திரு. மு. கருணாநிதி :** மிகப் பெரிய கோவில்களில் பெரிய ஆண்டவர்களுக்கு போலீஸ் பாதுகாப்புப் போடப்படுமா என்று அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கெல்லாம் அன்றாடம் போலீஸ் பாதுகாப்புப் போடமுடியாது. திருவிழாக் காலங்களில் போலீஸ் பந்தோபஸ்து இருக்கிறது. சாதாரண நாட்களில்தான் திருட்டுப் போகிறது. கூடியவரைக்கும் அதைத் தவிர்க்க காவல் வைத்து தக்க முறையில் கவனம் செலுத்தப்படுகிறது.

**திரு. சா. கணேசன் :** சார், இந்த ஆலயங்களில் மூர்த்திகள் தவறான கருத்தை அல்லது எண்ணத்தை உண்டாக்குகின்றன என்று சொல்லப்பட்டது. ஆலயங்களில் மூர்த்திகள் என்ன கோலத்தில் இருந்தாலும், அவை மேலைநாட்டுப்பாணியில் இல்லாமல், தென்னாட்டுச் சிறப்போடு, mere flesh and bone என்ற முறையில் அல்லாமல், spiritual aspects -ல் வளர்க்கப்பட்டு இருப்பதால், எந்தவிதமான மனவிகாரமும் அங்கே செல்லுகிறவர்களுக்கு, நியாயமானவர்களுக்கு ஏற்படுவதில்லை என்பதை அமைச்சர் அவை ஏற்றுக் கொள்ளுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்குத் தெரிந்த வரையில் அவை அப்படி ஒன்றும் மனவிகாரம் ஏற்படும் விக்ரகங்கள் அல்ல.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இராமேச்வரம், மதுரை போன்ற இடங்களில் உள்ள கோயில்களில் 24 மணிநேரமும் போலீஸ் காவல் இருக்கிறார்களே, அது விக்கிரகங்களைப் பாதுகாக்கவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஏராளமான யாத்திரிகர்கள் வருகிறார்கள். (குறுக்கீடு) கருவூலத்தில் இருக்கிறார்களே. கருவூலங்களில் வைக்கப்பட்டிருப்பது, புராதனமாக உள்ள, சிறப்பு வாய்ந்த ஆபரணங்களைப் பார்க்க வேண்டும் என்று யாத்திரிகர்கள் விரும்புகிறார்கள்; இராமேச்வரத்தில்கூட, ரூ. 25 கட்டினால், அப்படிப்பட்ட ஆபரணங்களை எடுத்துக் காட்டுகிறார்கள். அப்படிக் காட்ட வேண்டியிருக்கிறது, காட்டும்போது காவல் வேண்டியிருக்கிறது.



17th March 1966]

## அமைச்சர்கள் வீடுகளுக்குத் தொலைபேசிகள்

* 329 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அமைச்சர்களின் வீடுகளில் உள்ள டெலிபோன்களுக்குபில் பணம் சர்க்காரால் கட்டப்படுகிறதா ?

(இ) ஆமெனில் 1964-65-ம் ஆண்டுக்கு ஒவ்வொரு அமைச்சரின் வீட்டிஉள்ள டெலிபோனுக்கும் மாதவாரியாக எவ்வளவு பணம் கட்டப்பட்டது டிரங்க் அண்டு லோகல் சார்ஜ்ஸ் தனித்தனியாக எவ்வளவு என்ற விவரம் சபைமுன் வைக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes. The private call charges in respect of trunk calls and phonograms made by the Ministers including Chief Minister are however collected from the Ministers concerned and credited to Government account.

(b) The information required is furnished in the Statement [a] placed on the Table of the House separately.

**திரு. மு. கருணாநிதி :** இந்தப் பதிலுக்காக சட்டசபையிலே வைக்கப்பட்டுள்ள ஏட்டிலே, 65 ஜனவரி மாதத்தில் டெலிபோன் டிரங்குகால் செலவு—அந்த சமயத்தில்தான் இந்திக் கிளர்ச்சி நடந்தது—உள்துறை அமைச்சர் கக்கன் அவர்களுக்கு ரூ. 101 என்றும், அதே நேரத்தில் முதல் அமைச்சருக்கு ரூ. 105 என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல பெப்ருவரி மாதத்தில் உள்துறை அமைச்சருக்கு ரூ. 65 தான் ஆகியிருக்கிறது. ஆனால், முதல் அமைச்சருக்கு ரூ. 652-க்கும் மேல் ஆகியிருக்கிறதே ? முக்கியமாக அந்த நேரத்தில் உள்துறை அமைச்சருக்கு அதிகச் செலவு ஆக வேண்டியிருக்க, முதல் அமைச்சருக்கு ஆகியிருப்பதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கெல்லாம் காரணம் சொல்ல முடியாது. என்னென்ன கால் என்று கேட்டால் சொல்லத் தயார். சொந்தத்திற்கு போட்ட கால் என்றால், அதற்கு அவரவர்களே பணம் கொடுத்துவிடுகிறோம். டில்லியிலிருந்து டிரங்கு கால் வருகிறது; நாம் அவர்களோடு பேச வேண்டியிருக்கிறது. கால் போடுகிறோம். இதனாலெல்லாம் அதிகச் செலவு ஆகிறது. அரசாங்க அலுவல்களுக்கு மட்டும் சர்க்காரிலிருந்து வசூலிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** தமிழ் நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்ட காலத்தில், உள்துறை அமைச்சருக்கு பல பக்கங்களுக்கும் பேசி, நிலைமையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால், செலவு அவர்களுக்கு அதிகமாகலாம். ஆனால் முதல் அமைச்சருக்கு ஆகியிருப்பதற்கும் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உள்துறை அமைச்சர் என்று இல்லை. முதல் அமைச்சருக்கும் பொறுப்பு இருக்கிறது. இதிலேயெல்லாம் உள்துறை அமைச்சரும் விசாரிக்கலாம். முதல் அமைச்

---

[a] Printed as Appendix on pages 580-591

சரும் விசாரிக்கலாம். முதல் அமைச்சர் 'ஸ்பியர்' உள்துறை அமைச்சர் 'ஸ்பியர்' என்று கிடையாது. ஆனால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறாரோ, எங்களுக்குள் தகராறு கிடையாது. பொறுப்பை உணர்ந்து, காரியங்களைச் செய்கிறோம். உள்துறை அமைச்சர் சிலவற்றைக் கவனிக்கலாம். வேறு சிலவற்றை நான் கவனிக்கலாம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஜனவரி மாதத்திலே உள்துறை அமைச்சருக்கு ஆன செலவில், அலுவல் வகையில் ரூ. 101 என்றும், தனிப்பட்ட வகையில் ரூ. 146.50 என்றும் இருக்கிறது அதிகாரி களை தவிர வேறு தனிப்பட்டவர்களோடும் தொலைபேசியில் அவ்வளவு பேசியிருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிப்பட்டவர்களிடமும் பேசலாம். அப்படிப் பேசினால், கையிலிருந்து பணம் கொடுத்து விடுகிறோம். அதில் கனம் அங்கத்தினருக்கு என்ன ஆட்சேபம் என்று தெரியவில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அமைச்சர்கள் தங்களுடைய அலுவலகங்களிலிருந்து பேசும் போது அங்கே உள்ள தொலை பேசிகளை உபயோகிக்கலாம். அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளலாம். ஆபீசின் மூலம் நடைபெறும் காரியங்களுக்கு வீட்டிலிருந்து போனை உபயோகிக்க வேண்டிய அவசியம் இல்லை. வீட்டிலிருந்து ஆபீசர்களோடு அவ்வளவு அதிகமாகப் பேச வேண்டிய அவசியமும் இல்லை. அப்படியிருக்க ஏன் இவ்வளவு செலவு என்று அறிவிக்கமுடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எந்த நேரத்தில் பேசப்படுகிறது என்பதைப் பொருத்தது. வீட்டிலேயிருந்து பேசும் போது அரசாங்க அலுவலாக இருந்தால், அதிகாரிகளோடு மட்டுமல்ல, மற்ற மந்திரிகளோடும், மத்திய சர்க்காரோடும் மற்ற மாநில சர்க்காரோடும் பேச வேண்டியிருக்கலாம். வீட்டிலிருக்கும்போது என்றால் வீட்டு போன் பயன்படுகிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சார், பெரும்பாலும் உத்தியோக தோரணையில் காரியங்கள் செய்ய செக்ரடரி, டெபுடி செக்ரடரி இவர்கள் இருக்கிறார்கள். அமைச்சர் நேரிடையாக மற்ற ஜில்லா அதிகாரிகளோடு பேசி, ரூ. 10,000 வரை செலவழிக்க வேண்டிய அவசியம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஜில்லா அதிகாரிகளோடு அவசியம் இருந்தால் பேசப்படுகிறது. அமைச்சரே பேச வேண்டிய நிமித்தம் ஏற்படுகிறது. மத்திய சர்க்காரோடு பேச வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் டிரங்கு கால் பில் அதிகமாகப் போகிறது. மத்திய சர்க்கார் அமைச்சர் பேசுகிறார்கள். நாம் அவர்களோடு பேச வேண்டியிருக்கிறது. மற்ற மாநில அமைச்சர்களோடு பேச வேண்டியிருக்கிறது. ஆகையினால் அதிகமாகச் செலவு ஆகிறது.

**திரு. மு. கருணாநிதி :** உள்ளூர் தொலைபேசிச் செலவை சர்க்காரிலிருந்து கொடுப்பதைத் தவிர்க்க உத்தேசம் உண்டா ?





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டது, அதன் பிறகு இப்பொழுது இருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்ற உத்தேசம் இல்லை.

## கட்டபொம்மன் வழிவந்தவர்கள்

* 330 கேள்வி—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) வீரபாண்டிய கட்டபொம்மன் இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் எத்தனைபேர் இருக்கிறார்கள் ?

(இ) அவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது மானியம் கொடுக்கிறதா ?

(உ) ஆமெனில், எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) திருநெல்வேலி மாவட்டம் கோயில்பட்டி தாலுகா, ஆதனூர் கிராமத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனின் வழி வந்தவர்கள் மூவர் இப்போது வசித்து வருகின்றனர்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. தங்கவேலு :** தலைவர் அவர்களே, இந்த மூவர்களும், அரசாங்கத்திடம் மானியம் கொடுக்க வேண்டும் என்று முறையிட்டு வருவது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கட்டபொம்மன் குடும்பத்திற்கு பென்ஷன் கொடுக்கப்பட்டது. கட்டபொம்மன் சிறைப்படுத்தப்பட்டபோது, அந்தக் குடும்பம் எட்டு பேர்களைக் கொண்டதாக இருந்தது. அவர்களுக்கு 15 பகோடா (ரூ. 52-8-0) பென்ஷனை பிரிட்டிஷ் ஆட்சியில் கொடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு, அது 40 பகோடா (ரூ. 140) என்று உயர்த்தப்பட்டது. அந்தக் குடும்பம் சிறைப்படுத்தப்பட்டிருந்தது. அதற்காகக் கொடுக்கப்பட்டது. அவர்களுடைய பெருமைக்காக அல்ல. அவர்களில் யாராவது தவறிவிட்டால், மீண்டும் இந்த பென்ஷன் கொடுப்பது பரிசீலிக்கப்படவேண்டும் என்றிருந்தது. கட்டபொம்மன் மகன் இறந்தபோது, இந்த ரூ. 52-8-0 பென்ஷன் அவருடைய மகன் தளவாய் குமாரசாமி தொரை என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. அவரும் 1920-ல் இறந்தபோது, அந்தப் பென்ஷன் ரூ. 50 ஆகக் குறைக்கப்பட்டு, அவருடைய மகன் ஜயவீர ராம கட்டபொம்மன் கம்பெனி செல்வம் தொரைக்கு கொடுக்கப்பட்டது. 1935-ல் இவரும் இறந்தார். அப்பொழுது, இந்த பென்ஷன் தொகையில் இன்னும் ரூ. 2-8-0 குறைக்கப்பட்டு, அவருடைய சகோதரர் தளவாய் சுப்பிரமணிய தொரைக்கு ரூ. 47-8-0 என்று கொடுக்கப்பட்டது. இந்த பென்ஷனை அதிகப்படுத்த வேண்டும் என்று கோரிக்கைகள் வந்தன. தளவாய் சுப்பிரமணிய தொரைக்கு ரூ. 5 மாத்திரம் என்று அதிகப்படுத்தப்பட்டது. இது 1-11-1944-லிருந்து கொடுக்கப்பட்டது.

1951-52-ல் பொலிடிகல் பென்ஷன் பற்றி ஆராயப்பட்டபோது, இது 'லைஃப் பென்ஷன்' என்று தீர்மானிக்கப் பட்டு, இதை வாங்குகிறவர் இறந்து விட்டால், அவரோடு அது முடிகிறது என்று முடிவு செய்யப்பட்டது. 1-6-1958-ல் பென்ஷன்காரர் இறந்தபோது, இது நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, திருமதி பாஞ்சாலி அம்மாள், சுப்பிரமணிய தொரையின் மகள், இந்த பென்ஷனைத் தொடர்ந்து கொடுக்கவேண்டும் என்று சர்க்காரிடம் கேட்டார்கள். இதை மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து, அப்படிக் கொடுக்க இடம் இல்லை என்று அவருடைய கோரிக்கையை நிராகரித்து விட்டார்கள். தளவாய் சுப்பிரமணிய தொரை இருந்த போது, அந்த வம்ச மகளிர் நால்வருக்கு கலியாணம் செய்ய என்று மொத்தமாக ரூ. 350 கேட்டார்கள். அதைச் சர்க்கார் கொடுத்தது. அதற்குப் பிறகு, திரு. துரைராஜ பாண்டியன் son of Sri Umathurai alias Soodamani Kumaraswami Dorai the brother of late Sri D. Subramania Dorai அவர்கள்தான் கடைசி பென்ஷனர். அவர் தன்னுடைய கலியாணத்திற்காகவும், தன்னுடைய சகோதரியுடைய கலியாணத்திற்காகவும் மொத்தமாக ஒரு கிராண்டு ரூ. 1000 கொடுக்க வேண்டும் என்று கவர்ன்மெண்டிடம் கேட்டார். நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்னால் இந்தமாதிரிக் கொடுக்க கவர்னருக்கு அதிகாரம் இருந்தது. ஆனால், சுதந்திரம் அடைந்த பிறகு அந்த அதிகாரம் நம்மிடம் இருக்கவில்லை. 1952-ல் இதையெல்லாம் ஆராய்ந்த பிறகு, ஏதாவது மத்திய சர்க்கார் நிதியிலிருந்து செலவழிக்க வேண்டும் என்றால், மத்திய சர்க்காரைக் கலந்தாலோசிக்க வேண்டியிருந்தது. திரு. துரைராஜ பாண்டியன் தன்னுடைய கலியாணத்திற்கு என்று கேட்டது, மத்திய சர்க்காருடைய கோட்பாடுகளுக்குப் புறம்பாக இருந்ததால், அது கொடுக்கப் படவில்லை. அதுதான் நிலைமை.

**திரு. மு. கருணாநிதி:** வெள்ளையர்களை எதிர்த்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆகஸ்டுத் தியாகிகளுக்கு ஐந்து ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. வீர பாண்டிய கட்டபொம்மன் இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்திலே மூவர் இருப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள், விடுதலைப் போராட்டத்தின் கொடியை முதலிலே உயர்த்திய பரம்பரையைச் சேர்ந்தவர்கள். அப்படிப்பட்ட பரம்பரையினருக்கு ஏதும் தரவில்லை என்பதற்கான காரணங்களை இங்கே முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இனிமேலாவது இந்தப் பிரச்னைகள் கவனிக்கப்படுமா? அதற்கான முயற்சிகள் எடுக்கப் படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** வெள்ளையர்களை எதிர்த்துப் போராடிய ஆகஸ்டு தியாகிகள் எல்லோருக்கும் நிலம் கொடுக்கப் படவில்லை. ஏதோ சிலருக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. நேரான டிஸென்டென்ட் என்று இருக்கிறவர்கள் மூன்று பேர்கள், அவர்களுடைய நிலைமையைச் சொன்னேன். அதல்லாமல், 24 கிராமங்களில், கட்டபொம்மன் சொந்தக்காரர்கள் என்று 200 பேர்கள் குடியிருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்கென்று பிரத்தி





யேகமாக, வீரபாண்டிய கட்டபொம்மனுடைய குடும்பத்தைச் சேந்தவர்கள் என்ற காரணத்திற்காக, இப்பொழுது அவர்களுக்கு எதுவும் பென்ஷன் கொடுப்பதாக அரசாங்கம் உத்தேசிக்கவில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்களுக்கு உதவி செய்வது இருக்கட்டும். நான் கூட அந்த இலக்கணத்திற்குள் வரவேண்டியவன். நானும் பொலிடிகல் ஸஃபரர் தான். ஆகஸ்டு தியாகி தான். சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு ஜெயிலில் இருந்திருக்கிறேன். ஆனால், ஒரு பைசா கூட இந்த அரசாங்கத்திலிருந்து வாங்கவே இல்லை. அதிருக்கட்டும், வெள்ளைக்காரன் கொடுத்த பணம் கூட இவர்களுக்கு இன்னும் கொடுக்கவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் கூட ஒன்றும் வாங்கவில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** அது தவறல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். 'பொலிடிகல் பென்ஷன் எல்லாம் நிறுத்தப்பட்டது' என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1951-52-லேயே அதை முன்னிட்டு இது நிறுத்தப்பட்டது என்று சொன்னார்கள். 1951-52-ல் நிறுத்தப்பட்டது பொலிடிகல் பென்ஷன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குத் தூணாக இருந்தவர்களுக்கு பொலிடிகல் பென்ஷன் கொடுக்கப்பட்டது. இப்போதும் கொடுக்கப்படுகிறது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குத் தூணாக இருந்து உதவி செய்தவர்கள் எல்லாம் தொடர்ந்து பென்ஷன் பெறுகிற போது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முதன் முதலில் தமிழ்நாட்டில் போர்க்கொடி உயர்த்திய கட்டபொம்மன் பரம்பரையில் இருப்பவர்களுக்கு மறைந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் தேசபக்திக்கு மரியாதையைக் காட்டும் வகையில், பென்ஷன் தொகையைக் கொடுப்பதற்கு மத்திய சர்க்காருக்கு நம்முடைய ராஜ்ய சர்க்கார் சிபார்சு செய்யுமா? இந்தப் பென்ஷன் தொகையை வைத்தே தான் அவர்கள் ஜீவிக்கப்போகிறார்கள் என்பது இல்லை. நம்முடைய மரியாதையைக் காட்டுவதற்காவது பென்ஷன் கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்தக் குடும்பத்தாருக்குக் கொடுக்கப்பட்டது கூட 'பொலிடிகல் பென்ஷன்' ஆகத்தான் கருதப்படுகிறது. இதை மத்திய அரசாங்கம் கொடுத்துக்கொண்டு வந்தது. இதற்குமேலே கொடுப்பதற்கு இடம் இல்லை; அடுத்த வாரிசு இல்லை. அவர்களுக்குக் கொடுப்பதற்கு இடம் இல்லை என்று தான் மத்திய அரசாங்கம் கருதுகிறது.

### 'செக்ரட்டேரியட்' கட்டடங்கள்

* 331 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை அரசினர் காரியாலயமான கோட்டையில் சிற்சில பகுதிகளில் தென்படும் "வீறல்" (வெடிப்பு) களைச் சரிப்படுத்தும் திட்டம் அரசாங்கத்திடம் உண்டா?

[17th March 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இக் கட்டடங்களில் கட்டட விரிசல் எதுவும் ஏற்படவில்லை. மேற் பரப்பில் வெடிப்பு ஏற்படும் போதெல்லாம், அந்த இடங்களில் சாந்துக் கலவை பூசி அது சரி செய்யப்படுகிறது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—STATEMENT BY MINISTER FOR HOME *RE* : CORRECTION TO ANSWER TO SUPPLEMENTARY QUESTION.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, I wish to make the following correction to the answer given by me to the Supplementary Question by Sri Rama Arangannal, M.L.A. to Question No. 430 (54) answered on 2nd February 1966 regarding distribution of Murrah buffalo calves to Sri M.S. Palaniappa Mudaliar.

To a Supplementary Question whether 60 Murrah Buffalo calves were distributed to the Co-operative Milk Supply Union, Coimbatore or to an individual member, I replied from memory that the calves were distributed to the individual Sri M. S. Palaniappa Mudaliar who is also the President of the Co-operative Milk Supply Union. I have now verified that the Murrah Buffalo calves were distributed to Sri M. S. Palaniappa Mudaliar not in his individual capacity but the calves were allotted to the Coimbatore Co-operative Milk Supply Union of which he is the President.

## III—ANNOUNCEMENT.

### DISCUSSION FOR SHORT DURATIOON *re.* ORDER SERVED ON SRI UMANATH, M.P., ON PAROLE.

MR. SPEAKER : Regarding the notice under Rule 57 of the Assembly Rules which I have admitted, I want to know when it can be taken up for discussion.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I suggest that 1 p.m. to 2 p.m. on the 19th instant may be allotted for the discussion. On that day there will be disscussion on the Demand relating to Sales Tax. I do expect and it may even be arranged that the Question Hour may be over at 9 o'clock—sometimes it is over by 9 o'clock—so that half an hour earlier, we can start discussion on the Demand and finish the discussion and voting by one o'clock. So, between 1 and 2 p.m. on the 19th instant, the motion which has been given notice of by the hon. Deputy Leader of the Opposition and admitted by you may be taken up for discussion.

MR. SPEAKER : Yes, it will be taken up at 1 p.m. on the 19th instant. I take it that the House agrees to it.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, 19-ந் தேதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது, விவாதத்திலே கலந்துகொள்ளக்கூடிய கனம் அங்கத்தினர்களாவது,



17th March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பாராளுமன்ற உறுப்பினர் அவர்களை விடுதலை செய்வதற்கு உத்தர விட்ட அந்த உத்தரவினுடைய நகலும், அதில் இருக்கக்கூடிய நிபந்தனைகளுக்கு அவர்கள் கையெழுத்துப் போட்டதும், அதோடு மார்ச் 2-ம் தேதி உறையூர் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் மூலம் அவருக்குக் கொடுக்கப்பட்ட தாக்கீதோ அல்லது கடிதமோ அவற்றையெல்லாம் பார்வையிடுவதற்கு, அதிகாரிகளுடைய தஸ்தாவேஜுகளையெல்லாம் பார்வையிடுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்களில் யார் தகவல் கேட்டாலும் நான் அவருக்குத் தெரிவிக்கத் தயாராயிருக்கிறேன். நாளைக்குப் பகல் 11 மணியிலிருந்து 12 மணிக்குள் என்னுடைய சேம்பருக்கு வந்தால், என்ன என்ன வேண்டும் என்று இன்றைக்கே தெரிவித்து விட்டால், அதையெல்லாம் நான் வைத்துக்கொண்டிருப்பேன். அதையெல்லாம் அதிலே அக்கறை உள்ள கனம் அங்கத்தினர்களுக்கு நான் காட்டலாம்.

## IV.—PRIVILEGE MATTER.

### CHIEF MINISTER'S STATEMENT *re.* ORDER SERVED ON SRI UMANATH, M.P., ON PAROLE.

MR. SPEAKER : Honourable Members, Regarding the notice of privilege of Sri K. A. Mathialagan, M.L.A., against the Chief Minister, I am giving the following ruling :—

The facts are these. On 9th March 1966, Sri Saw. Ganesan, raised a matter under Rule 41 of the Assembly Rules, on the reports in newspapers that day, regarding a motion of contempt against the Madras Government in the Lok Sabha. The Chief Minister said, in the course of his statement, that no fresh order was issued by the Government of Madras and that no such order was served by any Sub-Inspector on Sri Umanath. Now, it is ascertained that the Sub-Inspector of Police, Woriyur, had served an order on Sri Umanath, M.P. on 2nd March, informing him 'that he should not go to Delhi under the present conditions of parole', on the basis of a wireless message from the Deputy Secretary, Public Department, Madras.

Therefore, Sri Mathialagan, on 12th March 1966 gave notice of a privilege motion against the Chief Minister that "on 9th March 1966, the Chief Minister placed facts which were incorrect and not true; withheld facts which the House has a right to know and thereby deliberately misled this House. Therefore, the Chief Minister is liable for breach of privilege and contempt of this House." He also presented to me a copy of the order served on Sri Umanath, with a personal letter to him.

The Chief Minister in his reply to this notice on 15th March 1966 accepted that the Sub-Inspector of Police had served a Communication on Sri Umanath on the 2nd March, on a message in wireless from the Deputy Secretary, Public Department. But he contended that this communication was not an order of this

[17th March 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இக் கட்டடங்களில் கட்டட விரிசல் எதுவும் ஏற்படவில்லை. மேற் பரப்பில் வெடிப்பு ஏற்படும் போதெல்லாம், அந்த இடங்களில் சாந்துக் கலவை பூசி அது சரி செய்யப்படுகிறது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—STATEMENT BY MINISTER FOR HOME *RE* : CORRECTION TO ANSWER TO SUPPLEMENTARY QUESTION.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, I wish to make the following correction to the answer given by me to the Supplementary Question by Sri Rama Arangannal, M.L.A. to Question No. 430 (54) answered on 2nd February 1966 regarding distribution of Murrah buffalo calves to Sri M.S. Palaniappa Mudaliar.

To a Supplementary Question whether 60 Murrah Buffalo calves were distributed to the Co-operative Milk Supply Union, Coimbatore or to an individual member, I replied from memory that the calves were distributed to the individual Sri M. S. Palaniappa Mudaliar who is also the President of the Co-operative Milk Supply Union. I have now verified that the Murrah Buffalo calves were distributed to Sri M. S. Palaniappa Mudaliar not in his individual capacity but the calves were allotted to the Coimbatore Co-operative Milk Supply Union of which he is the President.

III—ANNOUNCEMENT.

DISCUSSION FOR SHORT DURATIOON *re.* ORDER SERVED ON SRI UMANATH, M.P., ON PAROLE.

MR. SPEAKER : Regarding the notice under Rule 57 of the Assembly Rules which I have admitted, I want to know when it can be taken up for discussion.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I suggest that 1 p.m. to 2 p.m. on the 19th instant may be allotted for the discussion. On that day there will be disscussion on the Demand relating to Sales Tax. I do expect and it may even be arranged that the Question Hour may be over at 9 o'clock—sometimes it is over by 9 o'clock—so that half an hour earlier, we can start discussion on the Demand and finish the discussion and voting by one o'clock. So, between 1 and 2 p.m. on the 19th instant, the motion which has been given notice of by the hon. Deputy Leader of the Opposition and admitted by you may be taken up for discussion.

MR. SPEAKER : Yes, it will be taken up at 1 p.m. on the 19th instant. I take it that the House agrees to it.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, 19-ந் தேதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது, விவாதத்திலே கலந்துகொள்ளக்கூடிய கனம் அங்கத்தினர்களாவது,



17th March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பாராளுமன்ற உறுப்பினர் அவர்களை விடுதலை செய்வதற்கு உத்தரவிட்ட அந்த உத்தரவினுடைய நகலும், அதில் இருக்கக்கூடிய நிபந்தனைகளுக்கு அவர்கள் கையெழுத்துப் போட்டதும், அதோடு மார்ச் 2-ம் தேதி உறையூர் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் மூலம் அவருக்குக் கொடுக்கப்பட்ட தாக்கீதோ அல்லது கடிதமோ அவற்றையெல்லாம் பார்வையிடுவதற்கு, அதிகாரிகளுடைய தஸ்தாவேஜுகளையெல்லாம் பார்வையிடுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்களில் யார் தகவல் கேட்டாலும் நான் அவருக்குத் தெரிவிக்கத் தயாராயிருக்கிறேன். நாளைக்குப் பகல் 11 மணியிலிருந்து 12 மணிக்குள் என்னுடைய சேம்பருக்கு வந்தால், என்ன என்ன வேண்டும் என்று இன்றைக்கே தெரிவித்து விட்டால், அதையெல்லாம் நான் வைத்துக்கொண்டிருப்பேன். அதையெல்லாம் அதிலே அக்கறை உள்ள கனம் அங்கத்தினர்களுக்கு நான் காட்டலாம்.

IV.—PRIVILEGE MATTER.

CHIEF MINISTER'S STATEMENT *re.* ORDER SERVED ON SRI UMANATH, M.P., ON PAROLE.

MR. SPEAKER : Honourable Members, Regarding the notice of privilege of Sri K. A. Mathialagan, M.L.A., against the Chief Minister, I am giving the following ruling :—

The facts are these. On 9th March 1966, Sri Saw. Ganesan, raised a matter under Rule 41 of the Assembly Rules, on the reports in newspapers that day, regarding a motion of contempt against the Madras Government in the Lok Sabha. The Chief Minister said, in the course of his statement, that no fresh order was issued by the Government of Madras and that no such order was served by any Sub-Inspector on Sri Umanath. Now, it is ascertained that the Sub-Inspector of Police, Woriyur, had served an order on Sri Umanath, M.P. on 2nd March, informing him 'that he should not go to Delhi under the present conditions of parole', on the basis of a wireless message from the Deputy Secretary, Public Department, Madras.

Therefore, Sri Mathialagan, on 12th March 1966 gave notice of a privilege motion against the Chief Minister that "on 9th March 1966, the Chief Minister placed facts which were incorrect and not true; withheld facts which the House has a right to know and thereby deliberately misled this House. Therefore, the Chief Minister is liable for breach of privilege and contempt of this House." He also presented to me a copy of the order served on Sri Umanath, with a personal letter to him.

The Chief Minister in his reply to this notice on 15th March 1966 accepted that the Sub-Inspector of Police had served a Communication on Sri Umanath on the 2nd March, on a message in wireless from the Deputy Secretary, Public Department. But he contended that this communication was not an order of this

Government or by any competent authority, but only a clarification of the existing conditions of parole made with good intention. He also stated that at the time he replied to the notice of Sri Ganesan on the 9th, he was not aware of this clarification served by the Sub-Inspector or the message of the Deputy Secretary. So, he maintains that there is no ground for a motion for breach of privilege.

Sri Mathialagan also read from May's Parliamentary Practice several passages about the privilege of the House of the members. The ruling in the matter of Mr. Profuma in the House of Commons, England, is the only available ruling which is revelant to the matter in question. In India, Sri Mavalankar, Speaker of Lok Sabha in 1951, and Sri Ananthasayanam Ayyangar in 1958, have held that misleading statements, even intentional, will not constitute breach of privilege. But, in Profuma case the House of Commons stated the law "that the House may treat the making of a deliberately misleading statement as a contempt." I think that is the correct position which we have to follow now.

Coming to the matter now before me, the main question is whether the Chief Minister made a deliberately misleading statement in this House on the 9th March as alleged?

The Chief Minister contends that what was served on Sri Umanath, on 2nd March 1966 by the Sub-Inspector of Police is only a clarification and it is not an order; it was not issued or signed by a competent authority. Sri Mathialagan says it is an order, much more an illegal order. It may not be an order. But the pertinent question arises why that fact was not mentioned by the Chief Minister on the 9th when he made the statement in this House? For this the Chief Minister has stated that at that time he was not aware of the communication served by the Sub-Inspector of Police or the message from the Deputy Secretary. On the other hand, the sponsor of the motion asserted that the Chief Minister should have had the knowledge about this order earlier.

That is a question of fact which I have to decide.

The House is aware of what happened on the 9th March. Some news appeared in the newspapers about the contempt proceedings in the Lok Sabha against the Madras Government. There was eagerness on the part of some members to know about it. As a special case the notice of Sri Saw. Ganesan, under Rule 41, though oral and not a written one as usual, was admitted and the Chief Minister also made a statement in a hurry. If the Chief Minister had the information, in his possession, then, about the order or clarification served on Sri Umanath, my opinion is that, he would not have withheld that or suppressed it, especially when is is an order served in writing on no less a person than a member of the Lok Sabha.



Considering the facts and circumstances of this matter, I feel that there are no materials before me to indicate that the Chief Minister was in possession on the 9th of the fact of the order or clarification, served on Sri Umanath, and he wilfully suppressed it, before this House. I do not think the omission is a deliberate one with the intention to mislead the House.

It may be asked and as a matter of fact, was asked by the Deputy Leader of the Opposition, during the discussion, whether it was not necessary on the part of the Chief Minister to gather all facts before making a statement. The Chief Minister could have taken time, for which he was entitled under the rules, to answer the notice of Sri Saw. Ganesan, after getting the particulars. But that is beside the point for deciding the issue before me.

In the result, I hold that there is no *prima facie* case of breach of privilege and I rule the notice out of order.

V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

(1) DEMAND NO. XX—INDUSTRIES.

(2) DEMAND NO. XLI—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,82,64,100 under Demand No. XX—Industries."

*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, நான் என்னுடைய பெயரில் உள்ள வெட்டுப்பிரேரணையை "சேலம் இரும்புத் தொழிற்சாலையை உடனடியாகத் துவக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்பதை வற்புறுத்த பிரேரேபிக்கிறேன்.*

"That the allotment of Rs. 1,82,64,100 under Demand No. XX—Industries be reduced by Rs. 100."

*திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, "பிற்பட்ட தாக்குகள்* (pockets) *எவை எனப் பரிசீலித்து அவற்றிற்கிசைந்த தொழில் துறைகளை அமைத்து அவை வளர வழி செய்வதைப்பற்றி விவாதிக்க" என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.*

"That the allotment of Rs. 1,82,64,100 under Demand No. XX—Industries be reduced by Rs. 100."

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move :—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,88,17,500 under Demand No. XLI—Capital Outlay on Industrial Development.

[17th March 1966

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, "செம்மையான தொழில் வளம் உண்டாகக் கொள்கை மாற்றம் இன்றியமையாத தென்பதை வற்புறுத்த" என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 8,88,17,500 under Demand No. XLI—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

**திரு. து. ப. அழகமுத்து :** கனம் தலைவர் அவர்களே, "கைத்தறி நெசவுத் தொழிலுக்கு அரசினர் கொடுக்கும் முதலீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்பதை வற்புறுத்த" என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 8,88,17,500 under Demand No. XLI—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demands and the cut-motions are before the House for discussion.

Is the Hon. Minister for Industries going to make any statement?

THE HON. SRI R. VENKATARAMAN : I have placed an elaborate statement on the Table of the House, Sir.

* **திரு. எம். எஸ். மணி :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் கொண்டுவந்துள்ள வெட்டுப்பிரேரணையை ஆதரித்து என் கருத்துக்களை இந்த நேரத்தில் சொல்ல விரும்பு கிறேன். நம்முடைய அரசாங்க ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் புவனேசுவரத்தில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகா நாட்டிலே ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தில் தனிப்பட்டவர்களுடைய சொத்திற்கு உச்ச வரம்பு கொண்டுவரவேண்டும், என்று வற்புறுத்தப்பட்டது. ஆனால் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் நோக்கம் சோஷலிசம் இங்கே உருவாக்கப்படவேண்டும் என்பது தான். ஆனால் அந்த மாநாடு முடிவுற்று இதுவரை அந்தத் தீர்மானத்தை ஏற்று ஏதாவது காரியம் செய்தார்களா என்றால் இல்லை. அதற்குக் காரணம் என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களின் நோக்கம் ஒருவருக்கே பல தொழில்கள் கொடுக்கப்படுகின்றன, அதற்கு ஒரு உச்ச வரம்பு கொண்டுவரவேண்டும் என்பதற்கு ஒரு குடும்பத்தில் உள்ளவருக்கு ஒரு லைசென்சு தான் கொடுக்கப்படவேண்டுமென்று கூறப்பட்டது. ஆனால், நடைமுறையில் இதுவரை அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வராததற்குக் காரணம் என்ன என்று உங்கள் மூலம் அறிய விரும்பு கிறேன்,



17th March 1966] [திரு. எம். எஸ். மணி]

அதுமட்டும் அல்ல. இந்த மன்றத்திலே சென்ற ஆண்டு நமது தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது "எங்கள் பாலிசி மிக்செட் எக்கானமி" கலப்படப் பொருளாதாரம் என்று குறிப்பிட்டார்கள். தேர்தல் நேரத்திலேயே இந்தக் கொள்கையைத்தான் நாங்கள் மக்களிடத்தில் சொன்னோம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்வது கலப்படப் பொருளாதாரம் அல்ல, சோஷலிசப் பொருளாதாரம். டெல்லியில் நிதி மந்திரியாக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் 31-8-65-இல் பாராளு மன்றத்தில் பேசுகின்றபோது '' In a mixed economy, one sat between two stools " என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு ஸ்டூல்களுக்கு மத்தியில் உட்காரும் நிலையில் இருக்கிறோம் என்று அவர் வேதனைப்பட்டுக் கூறியுள்ளார். எனவே, இரண்டுங்கெட்டானகத்தான் இன்றைய தினம் அரசாங்கத்தின் கொள்கை இருக்கிறதே தவிர, திடமான கொள்கை என்று 10-00 a.m
சொல்கிற நிலைமை இல்லை. இன்று அமெரிக்காவின் கொள்கை ஜனநாயகம் என்று கூறுகிறார்கள்; ரஷ்யாவின் கொள்கை சோஷலிசம் என்று கூறுகிறார்கள். நம்முடைய நாட்டிலே மட்டும் ஜனநாயகத்தையும் சோஷலிசத்தையும் சேர்த்துக் கூறுகிறார்களே தவிர, இதுதான் எங்களுடைய கொள்கை என்று தைரியமாகக் காரியமாற்ற நம்முடைய அரசாங்கம் முன்வரவில்லை. இங்கே தனிப்பட்ட ஒரு சிலர்தான் வளருவதற்கு வாய்ப்பளிக்கப் படுகிறது. குறிப்பாக, ஒரு தனியாருக்கு எவ்வளவு ஸ்தாபனங்கள் கொடுக்கப்படுகின்றன, எவ்வளவு தொழிற்துறைகள் கொடுக்கப் படுகின்றன என்பதைப் பற்றி இந்த மன்றத்தில் கூற விரும்பு கிறேன்.

பொதுவாக, இந்த மாநிலத்திலே அரசாங்கத்திற்கு அடுத்த படியாக இருக்கிற பெரிய பஸ் கம்பெனி டி. வி. எஸ். பஸ் கம்பெனி. அது மட்டுமல்ல; அதே ஸ்தாபனத்தார் டி. வி. எஸ். லாரி கம்பெனியும் வைத்திருக்கிறார்கள். சென்னையிலே லூகாஸ் டி.வி.எஸ். டயர், டி.வி.எஸ். சுந்தரம் கிளேடன் போன்ற பெரும் தொழில்களை எல்லாம் தனிப்பட்டவர்களிடம் கொடுத்தால் எப்படி சோஷலிசத்தை உருவாக்க முடியும்? ஏன் இதை எல்லாம் அரசாங்கத் தொழிற்துறையிலே கொண்டு வரக்கூடாது? வெளி நாட்டு மூலதனத்தில் பல தொழில்கள் நடைபெறுகின்றன. இதனால் வரக்கூடிய லாபம் தனியாருக்குப் போய்ச் சேருவதுதான் சோஷலிசமா? மத்திய நிதி மந்திரியாக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களைப் பற்றி மத்திய சர்க்காரிலே முன்பு ஒரு புகார் கொடுத்தார்கள். தனிப்பட்ட ஒருவருக்கு, மத்திய நிதியமைச்சராக இருந்த ஒருவருக்குச் சொந்தமான கம்பெனிகள் எத்தனை என்று பார்க்கும்போது 18 பெரும் கம்பெனிகள் அவருக்குச் சொந்தமாக இருக்கின்றன. உதாரணத் திற்கு ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். ஓரியண்ட் காஸ்மாடிக் பிரைவேட் லிமிடெட், டி.டி.கே. கெமிகல்ஸ் பிரைவேட் லிமிடெட், இப்படி 18 கம்பெனிகளை அவருடைய குடும்பத்தார் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், இப்படி ஒரே குடும்பத்தாருக்கு

வருமானம் செல்லாமலாவது, பலருக்கு இத்தகைய கம்பெனிகள் வைக்க அனுமதி கொடுத்தால் தனித் தனிக் குடும்பங்கள் பல இன்றைய தினம் நல்ல நிலைமைக்கு வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கு அரசாங்கத்திலே நல்ல தொடர்பு இருந்த காரணத்தால்தான் வெளிநாட்டிலே இருக்கும் பெரும் கம்பெனிகளுக்கெல்லாம் அவர்தான் ஏஜன்சியாக இருக்கிறார். ஒரு கம்பெனிக்கு ஏஜன்சியாக இருந்தாலே இன்றைய தினம் லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கிறார்கள். குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கிற 'உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர்', சோப்பு சீப்பு, கண்ணாடி, மற்றும் அன்றாடத் தேவையுள்ள எல்லாச் சாமான்களுக்கும் அவருடைய குடும்பந்தான் ஏஜன்சியாக இருக்கிறது. வெளிநாட்டிலுள்ள 22 ஸ்தாபனங்களுக்கு அவருடைய குடும்பம் ஏஜன்சியாக இந்தியா பூராவுக்கும் இருக்கிறது என்றால் எப்படி சோஷலிசத்தை உருவாக்க முடியும் என்றுதான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வெளிநாட்டுக் கூட்டுறவுடன் நடத்தப்பட இருக்கிற எந்தத் தொழிலாக இருந்தாலும் தனியாருக்குக் கொடுப்பதற்குப் பதிலாக நம்முடைய அரசாங்கமே ஏற்று பொதுத் துறையில் நடத்த முன் வந்தால் உள்ளபடியே சோஷலிசம் வெகு எளிதில் வர ஒரு வாய்ப்பாக இருக்கும். தனியார் துறையில் தொழில்களை நடத்த அனுமதிப்பதன் காரணமாக நம்முடைய சென்னை அரசாங்கம் அவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக டாட்டாவைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். டாட்டாவினுடைய டர்ன் ஓவர் ஆண்டு ஒன்றுக்கு 325 கோடி ரூபாய். நம்முடைய சென்னை சர்க்கார் பட்ஜட்டின்படி ஆண்டு வரவு 188 கோடி ரூபாய்தான். ஒரு தனியாரிடம் ஆண்டு ஒன்றுக்கு 325 கோடி ரூபாய் டர்ன் ஓவர் நடக்கின்றது. நமது சென்னை சர்க்காரின் வரவைப் போல் இரண்டு மடங்கு டர்ன் ஓவர் நடக்கிறது. அந்த அளவிலே அவருடைய நிர்வாகம் நடக்கிறது. பிர்லாவை எடுத்துக் கொண்டால் 290 கோடி ரூபாய் ஓராண்டு டர்ன் ஓவர். நம்முடைய அரசாங்கத்தை விடப் பெரிய அரசாங்கத்தைத் தனிப்பட்டவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதே போல மார்ட்டின் பர்ன் என்பவர் தம்முடைய பட்ஜட்டை 109 கோடி ரூபாயில் நடத்திக் கொண்டிருக்கிறார். தனியார் ஒரு அரசாங்கத்தை விடப் பெரிய அளவில் இன்று தொழிற் துறையில் இருக்கிறார்கள் என்றால் இந்த நாட்டில் சோஷலிசம் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் வர முடியாது, வர விட மாட்டார்கள் என்றுதான் கூற விரும்புகிறேன்.

25-2-1966-ல் பிர்லா அவர்கள் இந்தியன் மெர்ச்சன்ட்ஸ் சேம்பரில் பேசியிருக்கிறார்கள். என்ன பேசியிருக்கிறார்கள்? "அரசாங்கம் நமக்கு இவ்வளவு சலுகைகளைக் கொடுக்கிற காரணத்தால் வருகிற தேர்தலில் இப்போது ஆளுகின்ற காங்கிரஸ் கட்சிக்குத்தான் ஆதரவு கொடுக்கவேண்டும்" என்று



பேசியிருக்கிறார். அதற்குக் காரணம் அரசாங்கம் அவர்களுக்கு அனுசரணையாக இருப்பதுதான் "புதிய பிரதமராக வந்திருக்கிற இந்திரா அம்மையார் அவர்கள் தனியார் தொழில்கள் வளர எல்லா உதவிகளையும் செய்வார்கள்" என்ற கருத்தையும் தம்முடைய பேச்சில் கூறியிருக்கிறார். அதைச் சுட்டிக்காட்டி, வருகிற தேர்தலில் இந்தக் கட்சியினுடைய ஆட்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிர்லா அவர்கள் இந்தியன் மெர்ச்சன்ட்ஸ் சேம்பரில் பேசியிருக்கிறார்கள். எனவேதான், இப்படிப் பட்ட பெரும் முதலாளிகளுக்குச் சந்தர்ப்பம் அதிகமாகக் கொடுக்கக் கூடாது; பரவலாக இருக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தனியாருக்குத் தொழில்களைக் கொடுப்பதால் ஏற்படக் கூடிய தொல்லைகளையும் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தனியார் திறமைசாலிகள் அல்லவென்று நான் சொல்லவில்லை. அவர்களிடம் தொழில்களைக் கொடுக்கிற காரணத்தால் பொதுமக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் எந்த அளவு தொல்லைகள் ஏற்படுகின்றன என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். மேட்டுப் பாளையத்தில் The Indo-Swiss Synthetic Gem Manufacturing Co., Limited. என்ற கம்பெனி இருக்கிறது. அதிலே மானேஜிங் டைரக்டராக மதிப்புக்குரிய கனம் அங்கத்தினர் திரு. மகாலிங்கம் அவர்கள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்தக் கம்பெனிதான் இன்றையதினம் செயற்கை தளத்தை உற்பத்தி செய்கிறது. அதற்கு 'Sole distributors' ஜி.எஸ் அண்டு கம்பெனி. அவர்களுடைய தலைமை அலுவலகம் ஜெய்ப்பூரில் இருக்கிறது. திருச்சியிலே ஒரு பிராஞ்சு வைத்திருக்கிறார்கள். தளம் பூராவும் உற்பத்தி செய்யப்பட்டு அவர்களுக்கு அனுப்பப்பட்டு விடுகிறது. அவர்கள் திருச்சியிலே 30 ஏஜண்டுகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் தளத்தைத் தோலா ஒன்றுக்கு 30 ரூபாய்க்கு வாங்கி 120 ரூபாய்க்கு மார்க்கெட்டில் விற்கிறார்கள். திடீரென்று ஒருநாள் அவர்கள் 30 பேரும் சேர்ந்து பேசி 200 ரூபாய் என்று விற்கிறார்கள். இதனால் தொழிலாளர்கள் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். அந்த ஏஜண்டுகள் உட்கார்ந்த இடத்திலே இருந்து கொண்டே ஒரு நாளைக்கு 300, 400 என்று சம்பாதிக்கிறார்கள். ஆனால், காலையிலிருந்து இரவு வரை பாடு படுகிற தொழிலாளர்களுக்குப் பலன் ஏற்பட முடியாமல் போகிறது. அரசாங்கம் இதிலே தலையிட்டு இதை ஒரு நிர்ணய மான விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அந்தத் தளம் மெருகு போடும் தொழிலாளர்களுக்கு நேரடியாகப் போய்ச் சேரும் நிலைமையை ஏற்படுத்தினால் அதனால் வரக்கூடிய லாபம் ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேரும்.

அதே போலவே ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் நிலைமையும் இருக்கிறது. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாக்டரியைத் தொழிற்பேட்டையில் பல பேர் வைத்திருக்கிறார்கள். அதற்கு ரா-மெட்டீரியல்ஸ் வேண்டு மென்று திருச்சியிலுள்ள அதிகாரியைப் போய்க்கேட்டால், 'வேறு தொழில் இப்போதே ஆரம்பியுங்கள். ரா-மெட்டீரியல்ஸ் இனிக் கிடைக்காது' என்று கூறுகிறார்கள். டைரக்டர் அதற்கான

மனுக்களை வாங்க வேண்டாமென்று கூறிவிட்டார் என்று அந்த அதிகாரி கூறுகிறார். இந்தத் தொழிலிலே பலர் மூலதனம் போட்டிருக்கிறார்கள்; பல தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் திருட்டுத்தனமாக ஸ்டெயின்லெஸ் ஸ்டீலை வாங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் அதை பம்பாயில் இருந்து வாங்குகிறார்கள். பம்பாயிலிருந்து எப்படி வாங்குகிறார்கள்? அங்கிருந்து பெரும் பெரும் அண்டாக்களாகச் செய்து திருச்சிக்கு வருகிறது. அந்தப் பாத்திரங்களைச் சிறு சிறு துண்டுகளாக்கி இவர்கள் வேண்டிய சாமான்களைச் செய்கிறார்கள். இந்தியா பூராவும் ஒன்று என்று சொல்கிறார்கள். இப்படி பம்பாயில் இருக்கும் தனிப்பட்டவர்கள் அண்டாவாக அனுப்பவும் இங்கிருக்கிறவர்கள் அதை வாங்கிச் சிறு சிறு பாத்திரங்கள் செய்யவுமான நிலை இருக்கிறது. இப்படி வாங்கிச் செய்வதன் காரணமாக அதிலிருந்து கிடைக்க வேண்டிய அளவு லாபம் கிடைப்பதில்லை. யாராக இருந்தாலும் தொழிற்சாலை நடத்த அனுமதி கொடுத்தால் அதற்குத் தேவையான ரா-மெட்டீரியல்ஸ் கிடைப்பதற்கும் வழி செய்யவேண்டும்.

திருச்சியில் மிகப் பெரிய ஒரு தொழிற்சாலையைப் பொதுத் துறையில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கொதிகலன் தொழிற்சாலையை 25 கோடி ரூபாய் மூலதனத்திலே இன்றைய தினம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அதையொட்டி பல ஸ்தாபனங்கள், உதாரணமாக, கொதிகலன் பாய்லரைத் தயார் செய்கிறார்கள் என்றால், அதற்கு வேண்டிய சில்லரைச் சாமான்களைச் செய்ய தொழிற்பேட்டை அமைத்திருக்கிறார்கள். இவற்றைத் தனியார் பலர் நடத்துகிறார்கள். பெரிய ஒரு தொழிற்சாலைக்கு வேண்டிய சிறு சாமான்களைச் செய்வதைத் தனியாரிடம் கொடுப்பதற்குப் பதிலாக பொதுத் துறையில் நடத்தினால் மிகவும் நலமாக இருக்கும். தனியாருக்கு ஏன் கொடுக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நமக்கு ஒரு சந்தேகம் வருகிறது. தனியாருக்கு அவற்றைக் கொடுப்பதன் மூலமாக தேர்தலில் நிதி பெற முடியும் என்ற காரணத்தால் அவ்வாறு கொடுக்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. 'நாங்கள் உங்களுக்கு பர்மிட் கொடுக்கிறோம்; நீங்கள் தேர்தலுக்குப் பணம் தாருங்கள்' என்று கேட்பதற்கு வசதியாக இருக்கும் என்ற முறையில்தான் தனியாரிடம் இவற்றைக் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இன்டஸ்ட்ரியல் ஏரியா என்று சொல்லுகிறபோது தரையை சமப்படுத்துகிற வேலையிலிருந்து, அந்த மனையை வாங்கி அடக்கமாக கொடுக்கிற வேலை வரை அரசாங்கமே செய்கிறது. அங்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்கிறது. ரோடு வசதி செய்து கொடுக்கிறது. மின்சார விளக்குகள் போட்டுக் கொடுக்கிறது. சாக்கடை வசதி செய்து கொடுக்கிறது. இந்த பாக்டரிக்கு வேண்டிய மின்சாரத்தைக் கொடுக்கிறது. இவ்வளவையும் அரசாங்கம் செய்து கொடுத்து அவர்களுக்கு நல்ல ஊக்கம் கொடுக்கும்போது அந்த பாக்டரிகளை ஏன் நாமே நடத்தக் கூடாது என்ற கேள்வியை நான் எழுப்புகிறேன்.





அடுத்து, நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்கள் போலீஸ் மானியத்தில் பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். தொழில்துறை அமைதியைக் காப்பதற்காக விசேஷ போலீஸ் படை ஒன்றை இந்த நாட்டில் நிறுவியிருக்கிறோம். மத்திய சர்க்காருடைய ஆலோசனைக்கிணங்க அத்தகைய காரியத்தை நாம் செய்திருக்கிறோம் என்று அவர்கள் உரையில் அன்றைய தினம் குறிப்பிட்டிருக்கிறார்கள். 11—3—1966-ல் இப்படி குறிப்பிட்டிருக்கிறார்கள். படையை கண்காணிக்கும் பொறுப்பு மாநில சர்க்காருக்கு இருக்கும். ஆனால் அந்தச் செலவுகளை எல்லாம் அந்த ஆலை முதலாளி அல்லது பாக்டரி முதலாளி கொடுப்பார்கள் என்றும் அன்றையதினம் குறிப்பிட்டார்கள். ஆகவே, நமக்கு செலவு இல்லை என்றால் இது எதைக் காட்டுகிறது? அங்கு தொழில் தகராறு ஏற்பட்டால் உடனுக்குடன் அவர்களை அடிப்பதற்காக, தடி கொண்டு தாக்குவதற்காக போலீஸ் படையை வைத்து அவர்களே சம்பளம் கொடுப்பது என்றால் அந்த போலீஸ் நடுநிலைமையாக இருக்க முடியுமா? நடுநிலைமையாக எப்படி அவர்கள் இருக்க முடியும்? நிர்வாகமே சம்பளம் கொடுக்கிறது. அப்படி சம்பளம் கொடுக்கிறபோது அந்த முதலாளிகளோடு அவர்கள் ஒத்துழைப்பார்களே தவிர தொழிலாளர்களுடன் ஒத்துழைப்பார்களா? ஆகவே அந்த போலீஸ் படை தேவை இல்லை என்று நாம் சொல்லியிருக்கவேண்டும். மத்திய அரசாங்கம் நம் அரசாங்கத்திற்கு ஆலோசனைதான் கூறியது. ஆனால் அதை நாம் மறுத்திருக்கமுடியும். அப்படி மறுக்காததற்குக் காரணம் என்ன? இந்த யோசனையை மாநில அரசு நிச்சயமாக நிராகரித்திருந்தால் அது நல்லமுறையில் அமைந்திருக்கமுடியும். இதற்கு முன்னால் நிராகரித்திருக்கிறார்கள். போர்ட் டிரஸ்டில், துறைமுகத்தில் இப்படிப்பட்ட ஒரு போலீஸ் படையை வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு யோசனையை மத்திய அரசு கூறியது. ஆனால் அதற்கு நாம் பணம் கொடுக்கவேண்டுமென்று நிலைமை வந்தபோது நம் அரசு, ஸ்டேட் போலீஸின் ஒரு பகுதியை வைத்துக்கொண்டு பார்த்துக் கொள்கிறோம், இதற்காக தனி போலீஸ் படை வேண்டியதில்லை என்று அன்றைய தினம் கூறியிருக்கிறார்கள். அப்படி அன்று கூறிவிட்டு இன்று பாக்டரிகளில் போலீஸை வைத்து நடத்துவது என்றால் உள்ளபடியே நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்தமுடியுமா, தொழில் அமைதி ஏற்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

வெளிநாட்டு பாங்குகளில் இன்றைய தினம் இந்தியாவிலுள்ள தொழில் அதிபர்கள் ஏராளமான பணம் போட்டிருக்கிறார்கள். வெளிநாடுகளுக்கு இவர்கள் அடிக்கடி போய் வருகிறார்கள். இதனால் ஏற்படுகிற செலவு என்ன என்பதை நாம் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அது தொழில் அமைச்சர் அவர்களுக்கு தெரிந்திருக்கும். அவர்கள் அந்தப் புள்ளிவிவரத்தை கொடுத்தால் அன்னியச் செலாவணித் தட்டுப்பாடு ஏன் ஏற்படுகிறது என்பது பற்றி அறிந்து கொள்ள முடியும். இப்படி ஒரு சிலருக்காக அன்னியச் செலாவணியை செலவு செய்யும்போது பொது காரியங்களுக்காக ஏன் அன்னியச் செலாவணியை செலவழிக்கக்கூடாது என்ற எண்ணம் ஏற்படுகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய தொழில் கைத்தறித் தொழில். கைத்தறித் தொழிலில் இன்றைய தினம் ஏராளமானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதே போன்று தமிழகத்தில் கதர் தொழிலும் இருக்கிறது. அரசாங்கம் கதர் தொழிலை ஊக்குவிப்பதை தன் கொள்கையாக வைத்திருக்கிறது. ஆனால் கைத்தறியைப்பற்றி அவர்கள் அக்கறைப்படுவதில்லை. கதருக்கு இருக்கிற ஒரு சலுகை கைத்தறிக்கு கிடையாது. கதருக்கு இருக்கிற ரிபேட் கைத்தறிக்குக் கிடையாது. கைத்தறிக்கு ஆண்டுக்கு ஒரு முறை ஒரு எட்டு நாட்கள் விழா கொண்டாடி அங்கு பிரசங்கங்கள் நடைபெறுகிறதே தவிர அதனுடைய தரத்தைப் பற்றி, அதன் நேர்த்தியைப் பற்றி, அதன் உழைப்பைப் பற்றி வெளிநாடுகளில் நல்ல பிரசாரம் செய்வதற்கு ஆள் இல்லை. விழா ஏழு நாட்கள்தான் வைத்தார்கள். ஆனால் ஆறாவது நாளே துணி அத்தனையும் தீர்ந்து விட்டது. காரணம் என்ன? உயர்ந்த வேலைப்பாடுள்ள, சிறந்த சரக்குகள் வந்ததால் ஆறாவது நாளே எல்லாம் தீர்ந்து போய் விட்டன. எனவேதான் கைத்தறியைக் காப்பாற்றவேண்டும், அந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால் அந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல ஊக்கம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஏ. பி. ஸி. வீரபாகு: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்த மான்யத்தை ஆதரித்து பேசுகிற இந்த நேரத்தில் பொதுவாக இந்த மாநில மக்களின் பாராட்டுதலை நான் முதலில் தொழில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கருத்துக்களைப் பற்றி பேசுவதற்கு முன்னால் இரண்டொரு விஷயங்கள் பற்றி, எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் பேசியது பற்றி குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று விசேஷ போலீஸ் படையைப் பற்றி. போலீஸ் படையை அடிப்பதற்குத்தான் வைத்திருக்கிறது என்ற அனுமானம் எப்படி வந்தது என்று தெரியவில்லை. அப்படியானால் போலீஸ் படையே வேண்டாம். போலீஸுக்குள்ள அதிகாரங்கள் எல்லாம், என்னென்ன அதிகாரங்கள், எப்படி எப்படிச் செய்யலாம் என்பதெல்லாம் வரையறை செய்யப்பட்டுள்ளது. தொழில்துறை பாதுகாப்பிற்காக போலீஸை உபயோகப்படுத்துகிறோமே தவிர போலீஸ் படை தொழில்துறைக்கு வேண்டாம் என்றால் போலீஸ் படையே வேண்டாம் என்று சொல்லலாம். தொழில் அதிபர்கள் சம்பளம் கொடுக்கிறார்கள் ஆகவே, அவர்கள் சார்பாக இருப்பார்கள் என்ற அனுமானமும் எப்படி வந்ததோ எனக்குத் தெரியவில்லை. போலீஸ் படையினருக்கு நாம்தான் சம்பளம் கொடுக்கிறோம். பொது மக்களின் வரிப் பணத்திலிருந்து தான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, பொது மக்கள் சொல்லுகிறபடி எல்லாம் அவர்கள் கேட்பார்களா? எதற்காக தொழில் துறையில் போலீஸ் படை வைக்கப்பட்டிருக்கிறது என்றால், ஆத்திரம் ஊட்டுகிற சந்தர்ப்பங்களில் அவர்கள் எதை நம்பி வாழ்கிறார்களோ அந்த சாதனங்களுக்கே அழிவு தேடுகிறார்கள் தொழிலாளர்கள். சில சமயங்களில் ஆத்திரம் காரணமாக,





நிதானம் இழக்கிற நேரத்தில் உற்பத்தி சாதனங்களைக் காப்பதற்காகவே இந்த போலீஸார் இருக்கின்றனர். ஆகவே தொழில் துறையைப் பாதுகாப்பதற்காக, தொழிற்சாலை சாதனங்களை பாதுகாப்பதற்காகத்தான் போலீஸ் வைக்கப்பட்டிருக்கிறதே தவிர தொழிலாளர்களை அடிப்பதற்காக போலீஸ் வைக்கப்பட்டிருக்கிறது என்ற அனுமானம் தவறு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்களுக்கு எதுவுமே சலுகை காட்டவில்லை என்கிறார்கள். ஒன்பது ஸ்பின்னிங் மில்ஸ் கைத்தறிக்காக ஏற்பட்டு 66,000 பேல்ஸ் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஹான்ட்லூம்ஸ் செஸ் பண்ட் வேறு இருக்கிறது. கைத்தறி ஜவுளியை ஏற்றுமதி செய்வதற்கு ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது வரை கைத்தறி சகாப்தத்திலேயே இல்லாத முறையில் 'ப்ளீடிங் மட்றாஸ்'-யை ஏற்றுமதி செய்ய எந்தளவிற்கு ஊக்குவிக்க முடியுமோ அது செய்யப்பட்டு வருகிறது. செய்தது காணாது என்று சொல்லாமல் எதுவுமே செய்யவில்லை என்று சொல்வதில் அர்த்தமில்லை.

சோஷலிஸ கருத்துக்குப் புறம்பாகவே இந்தத் தொழில் நடைமுறைகள் பூராவும் அமைந்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அது பற்றி நம் தொழில் அமைச்சர் அவர்களின் அறிக்கையிலும் சரி, மத்திய அரசாங்கமும் சரி சொல்லியிருக்கிறார்கள். 'மிக்ஸ்ட் எக்கானமி'-யில் இருக்கிறோம், இன்னும் அந்த நிலையைத் தாண்டி விடவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி மூலம் உள்ள வருமானம் 18 சதவிகிதம், மொத்தத்தில் பார்க்கிறபோது 283 கோடி அளவிற்குத்தான் தொழில் பகுதியிலிருந்து வருமானம் கிடைக்கிறது என்பதைப் பார்க்கும்போது அதிகப்படியான தொழில்களை நாம் உருவாக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த கடமைப்பட்டிருக்கிறோம். அப்போதுதான் இந்த மாநிலத்தின் சராசரி வருமானம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். தொழில்களை சர்க்கார் துறையில் அல்லது க்வாஸி கவர்ன்மெண்ட் துறையில் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிடலாம். ஐந்தாண்டுத் திட்டம் போட்டு ஐந்தாண்டுகளில் இன்னின்ன தொழில்களை சர்க்கார் துறையில் ஏற்று நடத்தலாம், இன்னின்ன தொழில்களை க்வாஸி கவர்ன்மெண்ட் துறையில் நடத்தலாம் என்று திட்டம் போட்டு செய்கிறோம். அப்போது பாக்கியுள்ளதை நடத்தவேண்டாமென்று சொன்னால் அப்படிச் சொல்லிவிடலாம். அப்படிச் செய்வோமானால் மேற்கொண்டு தொழில்கள் வளராது, பத்து ஆண்டுகளுக்கு என்றல்ல நம் தலைமுறையில் அது நடக்காது. அப்படிச் செய்வது பாவர்டியை நிரந்தரமாக ஆக்குவதாகத்தான் அமையும். எந்தெந்த ஏஜென்ஸிகளை எல்லாம் உபயோகப்படுத்தினால் நம் தொழில் வளர்ச்சி சீக்கிரம் ஏற்படும் என்றுதான் பார்க்கவேண்டும்.

நாட்டில் இன்றுள்ள நிலைமையைப் பார்த்தால் இப்போது நாம் கலப்புப் பொருளாதாரத்தை நம்பி வாழவேண்டிய நிலைமையில் தான் இருக்கிறோம்.

இன்னொன்று, இந்த தொழில் வளர்ச்சி இந்த மாநிலத்தில் எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற விவரங்கள் சான்றுகள் பகருகின்றன. தொழில்களுக்கு பயன்படுகின்ற மின்சார அளவை எடுத்துக் கொண்டு பார்த்தால் 1,800 மில்லியன் யூனிட் அளவை நாம் எட்டியிருக்கிறோம் என்பதைப் பார்க்கும்போது, இந்த மின்சார வளர்ச்சியே நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கிறது என்பதை நாம் பார்த்துக் கொள்ள முடியும்.

மத்திய திட்டங்களைத் தவிர நாம் ஸ்டேட் பப்ளிக் செக்டாரின் கீழ் பல திட்டங்களை போடுவதற்கு முற்பட்டிருக்கிறோம். இது மட்டுமே நாம் எந்த அளவுக்கு சோஷலிஸப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு கட்டியம் கூறுகிறது. இதில் சுமார் 100 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்வதற்கு ஸ்டேட் பப்ளிக் செக்டாரில் இடம் செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய சாதனையாகும், இதைத் தீவிரமாக ஏற்படுத்திக் கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய சர்க்காரிலிருந்து ஏற்படுத்துகின்ற தொழிலை நம்முடைய மாநிலத்தில் ஏராளமாக வைக்கவேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் மாநிலங்களில் ஏற்படுத்தக்கூடிய தொழில், மத்திய தொழில்சாலைகளாக இருந்தாலும் சரி, ஸ்டேட் பப்ளிக் செக்டாரில் ஏற்படுத்தக்கூடிய தொழிலாக இருந்தாலும் சரி இவைகள் சென்னை நகரத்தில் இருக்க வேண்டுமா என்பதை நாம் கவனிக்கவேண்டும். ரீஜினல் டிஸ்பாரிட்டி கூடாது என்று சொல்லி வருகின்ற நாம் இந்த விஷயத்தில் சற்று கவனம் செலுத்தி ஏற்படுத்துகின்ற தொழிற் சாலைகளை எல்லா இடங்களிலும் பரவியிருக்கும்படியாக அமைக்க வேண்டும். மெட்ராஸ் ஸிடியை எடுத்துக்கொண்டால், தொழிற் சாலைகள் எல்லாம் இதைச் சுற்றியே இருந்து வருகின்றன, சென்னையும் அதன் சுற்றுப்புறமும் தொழில் மயமாகி வருகிறது. இது அவ்வளவு பொருத்தமானதுதானா என்பதை பார்க்க வேண்டும். திருச்சியில் பாய்லர் பிளான்டை ஏற்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தினோம். அதே போன்று பல வேறு ஜில்லாக்களிலும் தொழிற்சாலைகளை வைக்கவேண்டும் என்பதுதான் கோரிக்கை. தற்போது சிமின்ட் தொழிற்சாலை ராஜபாளையத்திற்கு அருகில் நிறுவப்போகிறார்கள்; அது வரவேற்கக்கூடிய அம்சம்தான். அதேபோன்று சோடா ஆஷ் பிளான்ட்டை சென்னையில் வைக்கப்போவதாக தெரிகிறது, ஏன் இதை தூத்துக்குடியில் வைக்கக்கூடாது? இதற்கு தேவைப்படுகிற காமன் ஸால்ட் தூத்துக்குடியில் ஏராளமாக கிடைக்கிறது. பப்ளிக் செக்டாரில் வைப்பதை தூத்துக்குடியில் வைக்கவேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு இருக்கிறோம். ரீஜினல்





இம்பாலன்ஸ் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடாது என்பதைத் தான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்படுத்துகின்ற தொழிற்சாலைகளை எந்தெந்த ஜில்லாக்களில் ஏற்படுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவோ அங்கங்கே ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

600008.

இன்னொன்று, இப்போது இருக்கக்கூடிய புதிய தொழில் வளர்ச்சியை எடுத்துப் பார்க்கும் போது, ஏற்கனவே இருந்து வருகின்ற தொழிலையும் காப்பாற்றுவதற்கு நாம் செயல் பட வேண்டும். இப்போது ஏற்கனவே இருந்து வருகின்ற பல்வேறு தொழில்களுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஒன்று பண நெருக்கடி. மற்றொன்று மூலப் பொருட்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி காரணமாக ரா-மெடீரியல்ஸ் இறக்குமதி செய்வதில் ஏற்பட்டிருக்கின்ற கஷ்டம், இவற்றையெல்லாம் நாம் சமாளித்தாக வேண்டியிருக்கிறது. இந்த உணர்வோடு நாம் புதிய தொழில்களில் ஈடுபடவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக புதிய வேலைகளை நிறுத்த வேண்டும் என்று நான் சொல்வதாக எண்ணவேண்டாம். இதை நான் ஏமாற்ற உணர்வு என்று சொல்லவில்லை, ஜாக்கிரதை உணர்வோடு இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் சொல்லுகிறேன். ஏற்கனவே இருந்து வருகின்ற தொழில்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். இருந்து வருகின்ற தொழில்களுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் ஏற்கனவே இருந்து வருகின்ற தொழில்கள் வளம் பெறக்கூடிய வகையில் புதிய தொழில்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களுக்கு கொடுக்கப்படும் உதவிகளைப் பொறுத்த வரையில், சர்க்கார் மூலமாகவும், இந்த மாநிலத்திலிருந்து இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் மூலமாகவும் 30 கோடி ரூபாய் அளவுக்கு உதவி செய்திருக்கிறார்கள். பிரைவேட் செக்டாரில் 200 கோடி ரூபாய் அளவுக்கு மூலதனம் வந்திருக்கிறது என்று சொன்னால் அதில் 30 கோடி ரூபாய், இந்த மாநிலத்திலிருக்கின்ற ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் உதவுகிறது என்று சொன்னால் இந்தத் தொகை பெரியதொரு பங்கு என்று சொல்லலாம். சர்க்காரில் இதற்காக வட்டி வாங்கிக்கொள்கிறார்கள் என்று இருந்தாலும் கூட, தனியாக இதற்கு ஏன் ஒரு சென்டேஜ் சார்ஜ் போடக்கூடாது என்பது தான் என்னுடைய ஆலோசனை. லாபகரமாக நடக்கக் கூடிய தொழில்களுக்கு எல்லாம் ஸ்டேட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் பணம் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு தனியாக 1 சதவிகிதம் என்று ஏன் சென்டேஜ் சார்ஜ் போடக் கூடாது? அவ்விதம் வசூல் செய்தால், அதை திரும்பவும் அதை எடுத்து தொழில் வளர்ச்சிக்கு கொடுத்து உதவலாம் அல்லவா? இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் செய்வது சோஷலிஸ முறைக்கும் பொருந்தியதாக இருக்கும் என்று கருதுகிறேன். இண்டரஸ்ட் சார்ஜ் செய்கிறோம் என்று இருந்தாலும், குறைந்த அளவில்தான் இப்போது இண்டரஸ்ட் சார்ஜ் செய்யப்படுகிறது. வெளியில் 13 சதவிகிதத்துக்குக் குறைந்து பணம் கிடைப்பதில்லை. எந்த

[திரு. எ. பி. ஸி. வீரபாகு] [17th March 1966

பாங்குகளை எடுத்துக்கொண்டாலும் 12 சதவிகிதத்துக்கு குறைவாக கொடுப்பதில்லை. சாதாரணமாக இதை கணக்கிட்டுப் பார்த்தால் கொடுக்கின்ற கடனுக்கு 1 சதவிகிதம் சென்டேஜ் சார்ஜ் போடலாம், இதன் மூலமாக மேற்கொண்டும் தொழில்களை பெருக்குவதற்கு நிதி உதவி செய்யலாம், இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கின்ற தொழில்களை எடுத்துக் கொண்டால், சிறு தொழில்களாக இருக்கின்ற பல தொழில்களில், அதாவது குடிசைத் தொழில்களாக இருக்கின்ற தொழில்களை எடுத்துக்கொண்டால்—நான் மாட்ச் பாக்டரியை ஞாபகத்தில் வைத்துக்கொண்டுதான் சொல்லுகிறேன்—சென்னை மாநிலத்தில் அதிலும் குறிப்பாக தென் பகுதியில் இந்த தொழிலுக்கு வேண்டிய க்ளோரைட் கிடைக்காமல் இருப்பதின் காரணமாக இந்தத் தொழிலில் பெரிய பாதகம் ஏற்படுகிறது. இதன் காரணமாக இதில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு பாதகம் அடைகிறது. இப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கு வேண்டிய க்ளோரைட்-டை வேண்டிய அளவுக்கு தருவித்துக் கொள்ள மத்திய சர்க்காரிடம் நம் சர்க்கார் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவ்வப்போது, இப்படிப்பட்ட தடங்கல் வராத வண்ணம், ரா-மெட்டீரியல்ஸ் வேண்டிய அளவுக்கு தருவித்துக்கொள்வதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும். ஏற்கனவே நடந்து கொண்டு வருகின்ற தொழில்களை கணக்கிட்டு தான் நம்முடைய பெர்-காப்பிட்டா வருமானத்தை கணக்கிடுகின்றோம். அப்படியிருக்கும்போது, பெர்-காப்பிட்டா டிஸ்டிரிப்யூஷன் சரியாக இல்லாத முறையில் மக்களுக்கு வேலையில்லாமல் போகக் கூடிய நிலைமை ஏற்படக் கூடாது. இப்படிப்பட்ட தொழில்களை எடுத்துக் கொண்டால், வலுவடையாத தொழில்களாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றன. ஏதாவது க்ளோரைட் போன்றவை வரா விட்டால் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் ஆகிவிடுகிறது, தொழிலும் பாதிக்கப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட பொருட்களை வேண்டிய அளவுக்கு வரவழைத்து வைத்துக்கொள்வதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பஞ்சம் ஏற்படாத அளவுக்கு பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்தில் விவசாய அபிவிருத்திக்காக, அக்ரோ-இன்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்போவது மிக நல்ல காரியம். நான்காவது திட்டத்தில் இதை ஏற்படுத்தப்போகிறோம் என்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது. இதை சீக்கிரத்தில் ஏற்படுத்தவேண்டும், இதன் மூலமாக இந்த மாநிலத்தின் விவசாய வளர்ச்சியில் நல்ல பயன் ஏற்பட முடியும் என்று நம்புகிறேன்.

மேலும், ஸ்டேட் இன்டஸ்ட்ரியல் கோவாப்ரேட்டிவ் பாங்க் மூலமாக எவ்வளவோ உதவி அளிக்கப்பட்டு வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து அளிக்கப்படுகின்ற உதவிகளைப் பார்த்தால் சிறு பிளான்டேஷன்களுக்கும் உதவி அளிக்கப்



17th March 1966] [திரு. எ. பி. ஸி. வீரபாகு]

படுகிறது. ட இன்டஸ்ட்ரியல் காரியங்களுக்கும் இதிலிருந்து அமைச்சர் அவர்களுடைய முயற்சியால் உதவி கிடைக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. இப்போது நிலைமை என்னவென்றால், ஸ்டேட் இன்டஸ்ட்ரியல் கோவாப்ரேட்டிவ் பாங்கில் பணம் இல்லை, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சர்க்கார் நேரடியாக கொடுக்கப்படுகின்ற பணத்தையும் சேர்த்து கணக்கிட்டு இருக்கிறார்கள். ஸ்டேட் எய்ட் என்ற முறையில் கொடுக்கப்படுவதும் தனியாக சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் சர்க்கார் கொடுக்கப்படுவதை ஸ்டேட் இன்டஸ்ட்ரியல் கோவாப்ரேட்டிவ் பாங்க் மூலமாக ரூட் செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். இப்போது இந்த பாங்கிலிருந்து எத்தனையோ லோன்கள் கொடுக்கப்படுகின்றன. சர்க்கார் உத்யோகத்தில் இருப்பவர்கள் பரிசீலனை பண்ணிப் பார்த்து அவர்கள் ஒத்துக் கொண்டால் தான் லோன் கொடுக்கப்படுகிறது. தங்கள் இஷ்டப்படி பணம் கொடுத்துவிடுவதில்லை. இதில் கூட்டுறவு இயக்கம் மட்டும் அல்ல, ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் நடத்துகின்றவர்கள், தனிப்பட்டவர்கள் மெம்பர்களாக இருக்கிறார்கள், கிட்டத்தட்ட எட்டு, ஒன்பது லட்சம் ரூபாய் தனிப்பட்டவர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஸ்டேட் எய்டாக கொடுக்கப்படுவதையும் இந்த பாங்க் மூலமாக ரூட் செய்தால் மேலும் தொழில்களை வளர்த்துக்கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்பாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு விஷயம் என்னவென்றால், அலுமினியம் இன்டஸ்ட்ரீஸைப் பொறுத்தவரையில், நமக்கு கிடைத்து வருகின்ற கனிவள வாய்ப்பில் முக்கியமானதாக இருக்கிறது. அலுமினியத்தை என்னென்ன முறைகளில் உபயோகப்படுத்த முடியும் என்பதை அரசாங்கத் தொழில் எஸ்டேட்-களில் முன் மாதிரியாக காட்டவேண்டும். சிறு தொழில்களில், அதாவது காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் என்ற முறையில் எவ்வாறு பயன் படுத்தலாம் என்பதைப்பற்றி அரசாங்கமே முயற்சி எடுத்துக்கொண்டு, தங்கள் தொழில் பேட்டைகளில் முன் மாதிரியாக காட்டவேண்டும் என்று கூறிக்கொண்டு, அதன் மூலம் அலுமினியத் தொழிலுக்கு நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதை கூறிக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. காஞ்சி மணிமொழியார்:** மன்றத தலைவர் அவர்களே, 10
இன்று கைத்தறி பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே, a.m.
நூல் சந்தையில் ஏராளமான நூல்கள் தேங்கி விட்டதாலும், பண முடையினாலும் சென்ற ஆண்டு இறுதியில் மிகவும் பாதகமான நிலை கைத்தறிக்கு ஏற்பட்டது, அது இந்த ஆண்டு தொடக்கத்திலே கொஞ்சம் சீர்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு இறுதியிலே கைத்தறியாளர்களுக்கு மிகக் கஷ்டமான நிலைமை இருந்தது என்று ஒப்புக்கொண்டு, இந்த ஆண்டு அது சீர்திருந்தியிருக்கிறது என்று தெரிவிக்கிற நேரத்தில், நேற்றைய தினம் நான் நெசவுத் தொழிலாளர்கள் வசித்துக்கொண்டிருக்கிற ஒரு இடத்திற்குச் சென்றேன். சென்ற ஆண்டு இருந்ததைவிட

இந்த ஆண்டு நெசவாளிகளுடைய நிலை மிகவும் மோசமாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள். திடீரென்று 10 நாட்களுக்கு முன்னால் கட்டு ஒன்றுக்கு ரூ. 7-8 வரையில் உயர்த்தப்பட்டிருக்கிறது. பதினைந்து நாட்களுக்கு முன்னால் நூல் விலை 62 ரூபாயாக இருந்தது இன்றைய தினம் ரூ. 69.70 அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ஏற்கெனவேயே கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் வேலை இல்லாமலும், கூலிக் குறைவினாலும் மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமையில் திடீரென்று நூல் விலை ஏறிய காரணத்தினால் அங்கே இருக்கிற முதலாளிகள் கூலியைக் குறைப்பதா அல்லது தறியைக் குறைப்பதா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கைத்தறித் தொழிலாளர்களைக் கூப்பிட்டுக் கேட்கிறார்கள், ' நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ? தறியைக் குறைக்கட்டுமா ? அல்லது கூலியை குறைக்கட்டுமா ? என்று கேட்கிறார்கள். அப்படிக் கேட்கக் காரணம், நூல் விலை ஏறிவிட்ட காரணத்தினால் அந்த விலைக்கு நூலை வாங்கி ஆடைகளை உற்பத்தி செய்தால் அதிக விலைக்கு விற்க முடியாது என்று கருதுகிறார்கள். கல்கத்தாவுக்கு இது வரையில் சென்றுகொண்டிருந்த லுங்கித் துணி சில மாதங்களாக அங்கே செல்லுவதில்லை. அதனால் நெசவாளர்களிடத்தில் ஏராளமான லுங்கித் துணி தேங்கி இருக்கிறது. அப்படி இருக்கும்போது மேலும் அதிக விலை கொடுத்து நூல் வாங்கி உற்பத்தி செய்து தேக்கி வைத்துக்கொள்ள முடியாது என்று அவர்கள் சொல்கிறார்கள். ஏன் இப்படி விலை ஏறியது என்று கேட்டால், மத்திய சர்க்காரிலே இப்போது நூலுக்கு—மெல்லிய நூலுக்கெல்லாம்—எக்ஸைஸ் வரி போட்டிருக்கிறார்கள். ஆனால், மெல்லிய நூல் என்று சொன்னார்களே தவிர, எல்லா நூல்களுக்கும் வரி போட்டிருக்கிறார்கள். பழைய 40-ம் நம்பர் நூலுக்கு முதன் முதலாக 1963-64-ல் எக்ஸைஸ் வரி 10 சதவிகிதம் போடப்பட்டது. 10 சதவிகிதம் இப்போது 40 சதவிகிதம் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. 34-ம் நம்பர் நூலுக்கு 5 சதவிகிதம் போடப்பட்டிருந்தது. இப்போது 25 சதவிகிதம் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. 29-ம் நம்பர் நூல், முரட்டு நூல். அதற்கு புதிதாக வரி போடப்பட்டிருக்கிறது 10 சதவிகிதம். இதன் காரணமாக சாதாரண நெசவு செய்கிற தொழிலாளிகளுக்கு இன்றைய தினம் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப் பற்றி இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு என்ன ஆலோசனை கூற இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

நாம் ஏராளமாக கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும், தனிப்பட்ட நூற்பு ஆலைகளுக்கும் லைஸென்ஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டில் கூட ஒன்பது கூட்டுறவு நூற்பு ஆலைகள் துவக்கி இருக்கிறோம். அதற்கு முன்பே நான்கு ஆலைகள் இருக்கின்றன. மொத்தத்தில் பதின்மூன்று கூட்டுறவு ஆலைகளைத் துவக்கியிருக்கிறோம். அந்த நூற்பு ஆலைகளில் யார் அதிக பங்குகளை எடுத்திருக்கிறார்கள். 15 லட்சம் ரூபாய் மூலதனம் போடவேண்டுமென்று சொல்லுகிறோம். மூலதனத்தை 10-15 பேர்கள் சேர்ந்து கட்டி விடுகிறார்கள். அதற்குப் பிறகு சர்க்கார் 20 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கிறது மேற்கொண்டு தொழில் நிதி , உதவிக் கார்ப்பரேஷன் அவர்களுக்குத் தேவையான பணத்தை—கிட்டத்தட்ட





ஒரு கோடி ரூபாய் மில்லுக்குத் தேவை என்றால்—மீதிப் பணத்தை அவர்கள் தருகிறார்கள். இப்படி ஒரு சிலர் சேர்ந்துகொண்டு கூட்டுறவு மில்லைத் துவக்கி விடுவதால் இந்த நாட்டிலே சோஷலிசம் பரவுமா என்று கேட்கிறேன். சாதாரண மக்களுக்கு, தொழிலாளிகளுக்கு அந்த மில்லில் பங்கு கிடைக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. ஏதோ ஒரு கூட்டுறவு ஆலையில் மட்டும் தொழிலாளர்களுக்கும் பங்கு வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைப் போல சென்ற ஆண்டு துவக்கப்பட்ட ஒன்பது நூற்பு ஆலைகளிலும் தொழிலாளர்களுக்கு ஏன் பங்கு வைத்திருக்கக் கூடாது ? அங்கு வேலை செய்கிற தொழிலாளிகளுக்கும் வெளியிலே வேலை செய்கிற கைத்தறித் தொழிலாளர்களுக்கும் பங்கு ஒதுக்கி, அவர்களையும் பங்காளிகளாகச் சேர்த்தால் மில் தொழிலாளர் நிலைமையும் நெசவுத் தொழில் செய்கிறவர்களுடைய நிலைமையும் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைய வாய்ப்பு இருக்காதா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு ரகத் தொழில்களுக்கு சர்க்கார் கடன் தந்துகொண்டிருக்கிறது. தருகிற கடன்கள் இன்றைய தினம் எப்படிப் பயன்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். எத்தனையோ பேர்கள் தொழில் துவக்கக் கடன் பெறுகிறார்கள் சர்க்காரிடமிருந்து. பெற்ற கடனை மெஷின் வாங்காமல் வேறு வகையில் பயன்படுத்திக் கொள்ளுவதைப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல, கடன் வாங்கியவர், முதல் தவணை செலுத்துவதற்கு முன்பே இன்ஸால்வென்ஸி ஃபைல் செய்கிறார். முதல் தவணை செலுத்துவதற்கு முன்பாகவே இன்ஸால்வெண்ட் ஆகிவிடுகிறார். இப்படிப் பட்ட நிலைமை ஏன் வருகிறது ? ஒருவருக்கு ஒரு மெஷின் மீது அதை ஈடாக வைத்துக்கொண்டு கடன் கொடுக்கிறார்கள். 5,000 ரூபாய் கடன் கொடுத்து, இரண்டு ஆண்டில் கட்ட வேண்டிய தவணையைக் கட்ட முடியாத காரணத்தினால், அதே மெஷினை ஏலத்திற்குக் கொண்டு வரும்போது, 5,000 ரூபாய் கொடுக்கப்பட்டுள்ள அந்த மெஷின் ஏலத்தில் 400 அல்லது 500 ரூபாய்க்குப் போகிறது என்று சொன்னால், கடன் எவ்வளவு பொறுப்பற்ற முறையில் வழங்கப் பட்டிருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். ஏராளமாகத் தொழில்கள் வளரவேண்டுமென்ற ஆசையோடு இந்த சிறு ரகத் தொழில்களுக்குக் கடன்களைக் கொடுக்கும் நேரத்தில் அந்தக் கடன்கள் சரியான முறையில் தக்கவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதா என்று பார்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்குமானால், இதற்குக் காரணமாக இருந்தவர் யார் என்று கண்டறிந்து தக்கவர்களுக்குக் கடன் கொடுக்காமல் இப்படிப் பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடனை ஸாங்க்ஷன் செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் இந்த நாட்டிலே நம்முடைய மாநிலமானது ஏனைய மாநிலங்களுக்கு எந்த வகையிலும் பின் தங்கியிருக்கக் கூடாது தொழில் துறையிலே என்ற

லட்சியத்தில் மிக அக்கறை எடுத்துக்கொண்டு பல வகையான தொழில்கள், கனரகத் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், சிறு தொழில்கள் அத்தனையையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். பல தொழிற்பேட்டைகளை கிராமப்புறங்களிலும் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள. இது மிகவும் பாராட்டப்படத்தக்க ஒன்று. நாங்களும் எங்கள் கட்சியில் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறோம், பாராட்டுகிறோம். நாங்கள் பாராட்டுகிற நேரத்தில் காங்கிரஸ் கட்சியில் இப்படிப்பட்ட நல்ல முறையில், நம் மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு இணையாக இருக்கவேண்டும் என்ற முறையில், பணியாற்றிக்கொண்டிருக்கிற தொழில் அமைச்சரைப் பற்றி காங்கிரஸ்காரர்களே குறை சொல்லி, பலத்த குற்றச்சாட்டுகளை காங்கிரஸ் பத்திரிக்கைகளில் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி மறுக்காமல் இருக்கக் காரணம் என்ன? எங்களுக்கு அந்தப் பத்திரிக்கை அனுப்பப்படுகிறது. நாங்கள் அந்தப் பத்திரிக்கையை வாங்குவது இல்லை என்றாலும், இந்த மாதிரிக் குற்றச்சாட்டுகள் எந்தப் பத்திரிக்கையில் வருகிறதோ அந்தப் பத்திரிக்கைகளை மட்டும் எங்களுக்கு அனுப்புகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வேண்டுமென்றே அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பப்பட்டிருக்கிற சில பத்திரிக்கைகளை நான் கொண்டு வந்திருக்கிறேன். நான் அவற்றைப் படிக்கப் போவதில்லை. அந்தக் குற்றச்சாட்டுகள் வாரம் வாரமாக, கிட்டத்தட்ட 7-8 வாரங்களாக தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கின்றன. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டிலே தொழில் வளர்ச்சிக்கு பாதகம் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்த வரையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது கைத்தறி நிதி உதவிக் கார்ப்பரேஷன் அமைத்திருக்கிறோம். அந்தக் கார்ப்பரேஷனிலே கொடுக்கப்படுகிற பணம் பெரும்பாலும் ஏழை நெசவாளிகளுக்குப் பயன்படவேண்டும். கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளில் சேராத நெசவாளிகளுக்குப் பயன்படவேண்டும் என்பதற்காகத்தான் நிதி உதவிக் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டது. ஆனால், அந்த கார்ப்பரேஷன் மூலம் இன்றைக்குப் பயன் அடைகிறவர்கள் தனிப்பட்ட நெசவுத் தொழிலாளர்கள் அல்ல. அவர்கள் கடன் வேண்டுமென்று போனால், கடன் கொடுப்பதற்கு முன்னால் என்ன சொத்து இருக்கிறது, என்ன ஜாமீன் கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். சாதாரண தொழிலாளி தனியாகத் தொழிலை நடத்த சர்க்காரிடத்திலே ரூ. 150 கடனை எதிர்பார்க்கிறான். 150 ரூபாயை சர்க்கார் கொடுத்தால்தான் தறி நெசவு செய்ய முடிகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு கடன் கொடுக்கவேண்டுமென்றால் வீடு இருக்கிறதா, ஜாமீன் இருக்கிறதா என்று கேட்டால் எப்படி அவனால் கடன்களைப் பெற முடியும்? ஆகையினால், அதிலே கடன் பெறுபவர்கள், அதனுடைய பலனை அனுபவிப்பவர்கள் அத்தனை பேர்களும் நெசவாளர்கள் அல்ல. 40, 50 பேர்களை வைத்துக்கொண்டிருக்கிற மாஸ்டர் வீவர்கள் தான் இன்றையதினம் நிதி உதவி கார்ப்பரேஷன் மூலம் பயன் அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நிதி உதவி கார்ப்பரேஷன்





சாதாரண கைத்தறி நெசவாளர்களுக்கு எளிமையாக கடன் கொடுப்பதற்கு விதிகளைத்தளர்த்தி வசதிகளைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கும்படியான நிலைமையில் உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

60-ம் நம்பருக்கு உட்பட்ட சேலைகளையும் வேஷ்டிகளையும் கைத்தறிக்கு ஒதுக்கவேண்டும் என்று பல ஆண்டுகளாக கேட்டுக் கொண்டு வருகிறோம். இந்த சர்க்காரும் அதே கருத்தைத் தான் கொண்டிருக்கிறது. ஆனால், மத்திய சர்க்கார் இது வரையிலே அதற்கு எந்த விதமான உத்தரவும் போடவில்லை. மிகவும் குறைந்த எண்ணிக்கை உள்ள நூலைக் கொண்டு நெய்கின்ற கைத்தறி நெசவாளர்கள் தான் தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஏராளமாக இருக்கிறார்கள். அத்தனை பேர்களும் கஷ்டமான நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே மத்திய சர்க்காரை வற்புறுத்தி 60-ம் நம்பர் நூலுக்குக் கீழே உள்ள எல்லாத் துணிகளையும் கைத்தறிக்கு ஒதுக்கவேண்டும். 60-ம் நம்பருக்கு கீழே உள்ள நூலுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் எக்ஸைஸ் வரி போடக்கூடாது என்று மத்திய சர்க்காரிடம் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. நா. மகாலிங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, தொழில் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மான்யக் கோரிக்கையை முழு மனதுடன் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதலிலே தொழில் அமைச்சர் அவர்களையும், தொழில் இலாகாவையும் நான் பாராட்ட விரும்புகிறேன். சென்ற 10 ஆண்டுகளிலே நமது ராஜ்யத்தில் மின்சார உற்பத்தியானது 6 மடங்கு அதிகமாகி, அதன் மூலம் ராஜ்யத்தில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் 4,600-லிருந்து 6,900 ஆக உயர்ந்திருக்கின்றன. சென்னை ராஜ்யம் தொழில் துறையில் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருந்த காலம் ஒன்று உண்டு. வடக்கே சிந்நிரி, தெற்கே முந்திரி என்ற பிரசாரத்தைக் கேட்டுக்கொண்டிருந்த காலம் கூட சென்னையில் இருந்தது என்பதை நாம் அறிவோம். இன்று அந்த நிலை மாறி இந்தியாவிலே தொழில் துறையிலே மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிற மாகாணங்களில் ஒன்று என்று சென்னை மாகாணம் விளங்குகிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் நம்முடைய ராஜ்ய தொழில் அமைச்சர் அவர்கள் சென்ற 10 ஆண்டுகளாக எடுத்துக்கொண்ட சிறந்த முயற்சி தான் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் மேற்கு வங்காளம் முதல் இடத்தையும், மகாராஷ்டிரம் இரண்டாவது இடத்தையும். சென்னை மூன்றாவது இடத்தையும் தொழில் துறை வளர்ச்சியில் அகில இந்தியாவிலும் பெற்றிருக்கிறது. ஆகவே, பின்தங்கி இருந்த சென்னை ராஜ்யம் தொழில் துறையிலே சிறப்பாக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு சிறப்பாக ஒத்துழைத்த தொழில் இலாகாவையும், கனம் அமைச்சர் அவர்களையும் மறுமுறையும் பாராட்டுவது மிகவும் பொருத்தமானது என்று கருதுகிறேன்.

*[திரு. நா. மகாலிங்கம்]* [17th March 1966

அவ்வாறு சிறப்பாக தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்து வந்திருக்கிற ராஜ்யத்தின் இன்றைய நிலையைப் பற்றி அவசியம் சிந்தித்தாகவேண்டும். இதே நிலை மேலும் நீடித்து வந்தால், தொழில் வளர்ச்சிக்கு குந்தகம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சென்ற ஒரு வருஷ காலத்தில் மத்திய சர்க்காரிடமிருந்து நமது ராஜ்யத்திற்கு என்ஜினியரிங் துறையிலே வேண்டிய மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு சரியானபடி பணம் கிடைக்கவில்லை. ராஜ்யம் பூராவிலும் இது ஒரு பிரச்னையாக இருக்கிறது. நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் பெருவாரியாக என்ஜினியரிங் தொழில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு வேண்டிய மூலப்பொருள்கள் இல்லாவிட்டால், அந்தத் தொழில்களையெல்லாம் மூடிவிடும்படியான நிலை அநேகமாக வந்துவிடலாம். ஏற்கனவே ஸ்டாண்டர்டு மோட்டார் கார்களின் உற்பத்தியை நிறுத்திவைத்திருக்கிறார்கள். அசோக் லேலெண்டில் உற்பத்தி செய்யப்பட்ட டிராக்குகள் வெளியே ஓட முடியாத நிலையில் இருக்கின்றன. சில பாகங்கள் தேவை என்ற காரணத்தினால், ரூ. 70 ஆயிரம், 80 ஆயிரம் பெறுமான டிரக்குகள் 300, 400 பாக்டரியிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன, அவை வெளியே அனுப்பப்பட முடியாத நிலை இருக்கிறது. இதே போன்று சென்னை சுற்று வட்டாரத்தில் இருக்கக்கூடிய மோட்டார் சம்பந்தமாக ஸ்பேர் பார்ட்ஸ் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் எப்பொழுது மூடிவிடவேண்டிய நிலை வந்துவிடுமோ என்ற நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. மேலும், பெரிய தொழிற்சாலைகளிலும், ரயான் பாக்டரி போன்ற தொழிற்சாலைகளிலும் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி சாமான்கள் கிடைக்கவில்லை என்றால், உற்பத்தி குறைந்து கொண்டே போகிறது.

இதையெல்லாம் தவிர, நமது ராஜ்யத்தில் மிகப் பெரிய தொழிலான, நூல் உற்பத்தித் தொழிற்சாலைகளை எடுத்துக் கொண்டால், ஜவுளித் துறையை எடுத்துக்கொண்டால் மிகவும் கஷ்டமான நிலையாகத் தான் இருக்கிறது. ஏற்கனவே தமிழ் நாட்டில் ஜவுளித் தொழிலின் கேந்திர ஸ்தானமான கோவையில் 4, 5 மில்கள் மூடப்பட்டுவிட்டன. இன்னும் சில மாதங்களுக்கு இதே நிலை நீடித்தால் இன்னும் சில மில்களும் மூடப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன. அம்மாதிரி கஷ்டமான நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் வெளிநாடுகளிலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்யப்படாதது அல்ல. உள்நாட்டில் பணக் கஷ்டம் இப்பொழுது மிகவும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. தென் நாட்டிலே தொழில் துறையிலே தொழிற்சாலைகளெல்லாம் ஏதோ கொஞ்சம் மூலதனம் வைத்துக்கொண்டு, மேலும் வேண்டிய பணத்தை நிதிக் கார்ப்பரேஷனிடமும், மக்களிடமிருந்து டெபாஸிட்டுகளைப் பெற்றுத்தான் நடந்து வருகின்றன. கோவையில் இம்மாதிரி தான் அதிகமான தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடந்துவருகின்றன. முன்பெல்லாம் நமது ராஜ்யத்தில் கோவையில் 8 சதவிகிதம், 10 சதவிகிதம் வட்டிக்கு பணம் சாதாரணமாகக் கிடைத்துக்கொண்டு வந்தது. ஆனால், சென்ற ஒரு ஆண்டு காலமாக முதல்தரமான



17th March 1966] *[திரு. நா. மகாலிங்கம்]*

கம்பெனிகள் கூட தங்களிடம் இருக்கக் கூடிய டெபாசிட்டுகள் வெளியிலே போகாமல் இருப்பதற்காக 12 சதவிகிதம் வட்டி கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இரண்டாம்தர, மூன்றும் தர கம்பெனிகள் மேலும் அதிகமான வட்டி கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, ஜவுளி நூல் ஆலைகள் சில சென்ற ஒரு வருஷத்திற்கு மேலாக லாபம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன, பல அநேகமாக நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன என்ற நிலை இருந்துகொண்டு வருகிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

சென்ற ஒரு வருஷ காலத்தில் இந்த நிலை ஏன் ஏற்பட்டது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பொதுவாக விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்காக மத்திய சர்க்கார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்கள். ரிசர்வ் பாங்கு மூலமாக பாங்குகளுக்கு பணம் கொடுக்கும் முறையிலே சில மாற்றம் செய்யப்பட்டது தவிர, ஹூண்டி என்று சொல்லக்கூடிய வழக்கமாக கடன் கொடுக்கக்கூடிய முறையே இப்பொழுது அநேகமாக இல்லாமல் செய்துவிட்டார்கள். ஹூண்டி மூலம் சாதாரணமாக 12, 12¼ சதவிகிதத்திற்கு பணம் அவசரத்திற்குக் கிடைக்கும். அதன் காரணமாக நாட்டிலே வட்டி விகிதம் 10 சதவிகிதம் ஆக மார்க்கெட்டில் இருந்துகொண்டிருந்தது. ஹூண்டி முறை இப்பொழுது இல்லாத காரணத்தினால் சாதாரணமாக தொழிலுக்குக் கிடைக்கவேண்டிய பணம் கிடைக்கவில்லை. கைத்தறி ஜவுளித் தொழிலை எடுத்துக்கொண்டால், நூல் உற்பத்தி செய்து, அது கைத்தறி ஜவுளியாக மாறி வெளியே போகவேண்டும். நமது ராஜ்யத்திலுள்ள கைத்தறி ஜவுளி இந்தியா பூராவும் வியாபாரம் ஆகக்கூடிய பொருள். அந்தப் பிரதேசங்களில் சிறு சிறு வியாபாரிகள் 90 நாட்கள் தவணையில் ஹூண்டி மூலம் கடன் பெற்று, சாமான்கள் வாங்கி, கடைகளில் இருப்பு வைத்து, விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். வட நாட்டில் பாங்கு வசதி குறைவு. அங்கெல்லாம் சரியானபடி பாங்கு வசதி கிடையாது. ஆகவே, ஹூண்டி மூலம் தான் வியாபாரம் பெருவாரியாக நடந்துகொண்டிருந்தது. ஹூண்டி முறையை மத்திய சர்க்கார் கட்டுப்பாடு செய்த காரணத்தினால், வியாபாரத் துறையில் ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டு, அதன் மூலம் வியாபாரிகள் அதிக சரக்குகளை வாங்கி ஸ்டாக் வைக்க முடியாத நிலை ஏற்பட்டு, அதன் மூலம் நம்முடைய ராஜ்யத்திலிருந்து வெளியே நூல் போவதற்கு, கைத்தறி ஜவுளி போவதற்கு பெரிய தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கனவே பேசிய கனம் அங்கத்தினர்கள் கைத்தறித் துறையில் ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். என்ன கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றி அரசாங்கம் அவசியம் சிந்திக்கவேண்டும். முக்கியமாக பணக்கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, ஆகவே தான் இந்தக் கஷ்டம் வந்திருக்கிறது என்ற என்னுடைய எண்ணத்தை கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

மற்றொன்று, தொழில் துறையில் என்ஜினியரிங் தொழில் வளர்ச்சி சென்ற 10 ஆண்டு காலமாக, தேசத்தில் சிறப்பாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. நல்ல இயந்திரங்களை நாம் இப்பொழுது உள்நாட்டிலேயே தயார் செய்கிறோம். அதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் இன்னும் வெளிநாடுகளிலிருந்து வரவேண்டியிருக்கிறது. 120 கோடி முதல் 150 கோடி வரை அல்லாய் ஸ்டீல் முக்கியமாக இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. சரியான காலத்தில் ஏன் திட்டக் கமிஷன் முன்னாலேயே உருக்கு உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவில்லை. சர்க்கார் செய்திருக்கலாம். தனியார் துறையில் கொடுக்கப்பட்ட அனுமதியும் உற்பத்திக்கு வரவில்லை. நமது ராஜ்யத்தில் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற இரண்டு பாக்டரிகளும் உற்பத்தி தொடங்குமா, தொடங்காதா என்று தான் சந்தேகமாக இருக்கிறது. உற்பத்தி சம்பந்தமான வேலைகளில் ஒத்துழைப்பு இல்லை என்று தான் கருதுகிறேன். டாடா போன்ற பெரிய கம்பெனியும் நீண்ட காலமாக வைத்திருந்த உருக்கு சம்பந்தமான லைசென்சை சர்க்காருக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். குறைந்தபட்சம் உருக்கு சம்பந்தமாக கார்பன் ஸ்டீல் வேண்டும். 'இம்போர்ட் ஸப்ஸ்டிட்யூஷன்' என்று சொல்லக்கூடிய இறக்குமதியை தடை செய்யக்கூடிய, மாற்றக்கூடிய ஏதாவது வேலை செய்யவேண்டும் என்று சொன்னால், அதற்குக் குறைந்தபட்சம் கார்பன் ஸ்டீல் வேண்டும். நமது நாட்டில் கார்பன் ஸ்டீல் உற்பத்தி கிடையாது. பல்வேறு வகையான தொழில்களுக்கு பல்வேறு வகையான உயர் ரக ஸ்டீல், அல்லாய் ஸ்டீல் இவைகளெல்லாம் வேண்டியிருக்கிறது. அது இல்லை. மற்றொன்று நமது ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், கோவையிலும், சென்னை சுற்று வட்டாரத்திலும் நிறைய மின்சார தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகளுக்கு வேண்டிய **Silican** ஸ்டீல் நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியாவது இல்லை. அல்லாய் ஸ்டீல், ஸிலிகன் ஸ்டீல் உற்பத்தி சம்பந்தமாக வெகு சீக்கிரம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ராஜ்ய சர்க்கார் துறையாக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்கள் துறையில் இருந்தாலும் சரி, அது சீக்கிரம் வரும்படியான நிலையை அவர்கள் ஏற்படுத்தவேண்டும். இல்லையென்றால், நிறைய தொழிற்சாலைகள் ஏற்படும்போது, தொழில்களை நடத்த மூலப் பொருள்கள் இல்லாத நிலைமை ஏற்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய சர்க்காருடைய கொள்கை என்னவாக இருந்தாலும், மாநில சர்க்கார், அவர்களோடு பேசி, அதை மாற்ற வேண்டும். நிச்சயமாக மூலப் பொருள்கள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

தேசத்தில் பணவீக்கம், விலைவாசி உயர்வு சம்பந்தமாக, மத்திய சர்க்காருடைய நடவடிக்கைகள் காரணமாக குறையவில்லை. தேசத்தின் மிகச் சிறப்பான பொருளாதார நிபுணரான, டாக்டர் லோகநாதன் போன்றவர்கள், ரூபாயை டீவால்யூவேஷன், மதிப்பைக் குறைக்க வேண்டும் என்றும், அல்லது டீமானிடைஸேஷன், 100 ரூபாய் நோட்டுகளின் மதிப்பை இல்லாமல் செய்யவேண்டும்





என்றும் பல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக மத்திய சர்க்காரோடு ஆலோசித்து, நல்ல மாறுதல் ஏற்படுத்த வேண்டும். நூற்றுக்கணக்கான சிப்பந்திகளை தொழில்கள மேல் ஏவிவிட்டு விடுவதால் பலன் கிடையாது. சிறு உத்தியோகஸ்தர்களுடைய தொந்தரவுதான் அதிகரிக்கும். ஆகவே இந்த விதமான பொருளாதார நெருக்கடியில் கண்காணிப்போடு காரியங்களைச் செய்யவேண்டும்.

கைத்தறி தொழிலைப் பொருத்தவரை, நீண்ட நாளாக வேஷ்டி, புடவை போன்றவற்றை ஒதுக்கித்தர வேண்டும் என்கிற கோரிக்கை இருந்து வருகிறது. மத்திய சர்க்கார் அதை ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் முடிவான உத்தரவு வரவில்லை. நான்காவது திட்ட முதலாவது அறிவிப்புகளைப் பார்த்தால், அயல் நாட்டிலிருந்து வருஷம் ஒன்றுக்கு 70 கோடி ரூபாய்க்கு உயர்ந்த ரக பஞ்சு வேண்டும் என்றும், அதே மாதிரி, உயர்ந்த ரக 80-க்கு மேற்பட்ட துணிகளை உற்பத்தி செய்ய 130 கோடி ரூபாய் அயல் நாட்டு நாணய வசதி தொழிலைச் சீரமைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருக்கிறது. சுமார் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 500 கோடி ரூபாய் அந்நிய நாணய வசதி பெற்று பஞ்சை இறக்குமதி செய்ய, தொழிற்சாலைகள் சரியாக இயங்க, அவசியம் என்றால், அந்த நிலை அவசியமே இல்லை. அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யாமலே சமாளிக்க வேண்டும். 1948-லேயே மகாத்மா காந்தி உள் நாட்டிலேயே துணிகளை கைத்தறி மூலம் உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு செய்வதன் மூலம், கிராமங்களில் இருக்கக் கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்க முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, அந்தத் துறையில் அரசாங்கம் அந்நிய நாட்டு நாணயத்தைக் குறைக்கவேண்டும் என்றும், அந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். . .

அது தவிர, இப்பொழுது சர்க்கரை ஆலைகள் வேறு அமைக்கப்பட்டு கரும்பு உற்பத்திக்கு ஆக்கம் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில், உணவு உற்பத்தியில் ப்ரொக்யூர்மெண்டு என்று கஷ்டப்படாமல், புதிய ரைஸ் மில்களை விவசாய பூமிகளில் வைத்து, அந்த மில்கள் மூலம், அது கூட்டுறவுத் துறையாக இருந்தாலும் சரி, சர்க்கார் துறையாக இருந்தாலும் சரி, அல்லது தனியார் துறையாக இருந்தாலும் சரி, 5,000 ஏக்கருக்கு ஒரு மில் என்று வைத்தால், அதன் மூலமே விதை கொடுக்கலாம், கடன் கொடுக்கலாம், உரம் கொடுக்கலாம், இன்னும் பல்வேறு வசதிகளையும் செய்து கொடுக்க வசதியாகச் செய்து கொள்ளலாம். அப்படி தானியங்களை மில்கள் மூலமாகவே வாங்கவும் முடியும். அப்படிப்பட்ட அமைப்பு பற்றி சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த ஆண்டு தொழில்துறை மானியத்தை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: கனம் சபாநாயகர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொழில் துறை மானியங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [17th March 1966

கூற விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே தொழில்கள் ஒவ்வொரு ஆண்டும் நல்ல வகையில் உருவாகி வளர்ந்து வருகின்றன. ஏதோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அரசர்கள், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நீதிகளைக் கூறிச் சென்றார்கள். அவர்களிலே அதிவீர ராம பாண்டியன் என்கிற ஒருவர் ஒரு நீதியைச் சொன்னார். "பெற்றமும், கழுதையும் மேய்ந்த அப்பாழ் பொற்றொடி மகளிரும் மைந்தரும் சூழ, நெற்பொலி நெடு நகர் ஆயினும் ஆகும்" என்று. அப்படி அது கற்பனையிலே இருந்து வந்தது என்பதை எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிக் கற்பனையில் இருந்ததை, அனுபவத்திலே கொண்டு வந்த ஒரு உண்மையை, நம்முடைய தொழில் அமைச்சரும் நம்முடைய தொழில் கொள்கைகளும் நிலைநாட்டி வருகின்றன. தினமும் இந்தக் காட்சியைப் பார்க்கிறோம். பாழ்பட்டுக் கிடந்த பகுதிகளிலும், இப்பொழுது நல்ல முறையிலே தொழில்கள் நிறுவ வேண்டும் என்று செய்து வருகிறோம். காங்கிரஸ் சமதர்ம சோஷலிசக் கொள்கையை இந்த நாட்டுக்கு உகந்தது என்று கருதுகிறது. சோஷலிச சமுதாய அமைப்பில் கண்ணும் கருத்துமாக இருந்த நமது தலைவர்கள் உலகமெல்லாம் உள்ள சோஷலிசங்களையெல்லாம் நன்கு ஆராய்ந்து, ஜனநாயக சோஷலிச அமைப்பு வேண்டும் என்று முடிவு செய்தார்கள். அந்த லட்சியத்தை அடைந்துவிடவேண்டும் என்று காங்கிரஸ் பாடுபடுகிறது. சோஷலிசம் நான் அறிந்த வரையில், ஒவ்வொரு நாட்டிலும் ஒரே மாதிரியாக செயல்படுவது இல்லை. ரஷ்யா நாட்டு சோஷலிசம் தனி; சைனா நாட்டு சோஷலிசம் தனி; செக்கோஸ்லோவேகியா நாட்டு சோஷலிசம் வேறு; இங்கிலாந்து நாட்டு சோஷலிசம் வேறு. இப்படிப் பல இடங்களிலும் அந்த அந்த நாட்டின் பொருளாதாரம், மக்களுடைய வாழ்க்கைத் தரம், விருப்பங்கள், பண்பாடு இவைகளையெல்லாம் அனுசரித்து அந்த அந்த நாட்டில் உள்ள சோஷலிச முறைகள் மாறுபட்ட வகையில் நடைமுறையில் இருந்து வருகின்றன. அந்த வகையில் இந்திய நாட்டுக்கு ஏற்ற வகையில் அதை அமைக்க வேண்டும் என்று காங்கிரஸ் பாடு பட்டு வருகிறது. இந்தியாவிலே அதற்காக வகுத்துக் கொண்டுள்ள கொள்கை, அதற்கு உகந்ததாக இல்லை என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி விரிவாகச் சொல்ல நேரம் இல்லை. சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

எஸ்டேட் ட்யூடி என்று ஒரு வரி இருக்கிறது. அதை காங்கிரஸ் சர்க்கார் விதித்து இருக்கிறது. அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தந்தையினுடைய சொத்து மீது அந்தச் சொத்து பிள்ளைகளைச் சேரும்போது வரி. முதல் 50,000-க்கு ஒன்றும் இல்லை. அடுத்த 50,000 க்கு 4 சதவிகிதம் சர்க்காருக்கு சொத்து வரியாகச் செலுத்த வேண்டும். அதற்கு அடுத்த ஒரு லட்சத்திற்கு 6 சதவிகிதம் என்றும், அதற்கு அடுத்த 3 லட்சத்திற்கு 15 சதவிகிதம் என்றும் அதற்கு அடுத்த 5 லட்சத்திற்கு 25 சதவிகிதம் என்றும், அதற்கு அடுத்த 5 லட்சத்திற்கு 40 சத விகிதம் என்றும், அதற்கு மேற்பட்ட 5 லட்சத்திற்கு 50 சதவிகிதம் என்று



17th March 1966] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

வைத்திருக்கிறார்கள். இதுவரையில் 20 லட்சத்திற்கு வந்திருக்கிறது. அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு நூறுக்கும் சர்க்காருக்கு ரூ. 85 என்றும், வாரிசுக்கு ரூ. 15 என்றும் செய்திருக்கிறார்கள். 11-00 a.m. இது சோஷலிசம் இல்லையா? ஒரே இடத்தில் தனமும் வசதிகளும் செல்வமும் குவியக்கூடாது என்கிற கண்ணோட்டத்தோடு செய்யப்பட்ட வரி இல்லையா இது? இதே மாதிரி எத்தனையோ வரிகளை, என்ன என்ன வகைகளில் எல்லாம் நாம் போட்டு அந்த சோஷலிச சமுதாய அமைப்பை உருவாக்க முடியுமோ அதற்கான வருமான மூலங்களை விஸ்தரித்துக்கொண்டு வருகிறோம். அந்த வகையிலே, காங்கிரஸ் ஆட்சியானது தாம் வகுத்துக்கொண்ட கொள்கையை நோக்கி முன்னேறிக் கொண்டுதான் வருகிறது. சோஷலிசக் கண்ணோட்டத்துடன்தான் தொழில்கள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு மில்கள் லாபகரமாக இல்லை என்ற கருத்தும் இங்கே சொல்லப்பட்டது. பல்வேறு குறைகளும் கூறப்பட்டன. கூட்டுறவுத் துறைகளை, கூட்டுறவு நிறுவனங்களை லாப நோக்கத்திற்காக வைப்பது இல்லையே! அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு விவாதிப்போமானால் அது நேர்மாறான விஷயமாகும். விவாதிப்பவர்கள் இதை முதலில் ஞாபகத்தில் கொள்ளவேண்டும். ஒரு கூட்டுறவு மில்லுக்கு நான் சேர்மன். லாபம் இல்லை என்று அன்று கூட இங்கே சொல்லப்பட்டது. புதிய மில்களுக்கு சர்க்கார் கொடுத்துள்ள சலுகைகளால் 25,000 ஸ்பின்டில் வைப்பதற்கும், புது முறைகளிலே தொழிலைப் பெருக்குவதற்கும், வேறு பல நிதிகளைச் சேகரித்து வைத்துக்கொள்ளுவதற்கும் வழிவகை இருக்கிறது. அதற்கென பல லட்ச ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. 25,000 ஸ்பின்டில் வைத்து அந்த மில்லை விஸ்தரிப்பதற்கு யாருடைய தயவும் வேண்டியதில்லை. நிதி இருக்கிறது. அவ்வளவு நல்ல முறையிலே நிதிகள் ஒதுக்கீடு செய்து, அந்த மில்லின் வளர்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. டிவிடென்டு கொடுத்திருக்கலாம் என்றால், அரசாங்கம் கொடுத்த சலுகைகளைப் பெற முடியுமா? மில் பலம் அடைய முடியுமா? தொழிலை விஸ்தரிக்க முடியுமா? இதையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். லாப நோக்கத்தோடு மட்டும் அல்ல; நூல் விலை மார்க்கெட்டில் உயர்ந்திருக்கும்போது, நெசவாளிகள் மற்றவர்களோடு போட்டி போட முடியாத நிலை ஏற்பட்டது. மார்க்கெட் விலையிலிருந்து, கூட்டுறவு மில்கள் கட்டு ஒன்றுக்கு ஐம்பது காசு, ஒரு ரூபாய் கூட விலையைக் குறைத்துக் கொடுத்திருக்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சமீபத்தில், மாகாண கைத்தறி நெசவாளர் சங்கத்தில் சரக்குகள் தேக்கம் அடைந்துவிட்டன. அப்பொழுது எங்கள் மில் சம்பந்தப்பட்ட வரையில், தினமொன்றுக்கு ரூ. 600 நஷ்டத்தில் நூல் உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு நாங்கள் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். மாகாண கைத்தறி நெசவாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்களுடைய ஸ்டாக்கைக் குறைப்பதற்காகவும் அவர்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காகவும், எங்கள் மில்

சம்பந்தப்பட்ட மட்டில் உதவி வந்திருக்கிறது. இப்படி இன்னும் சில மில்களும் அதற்காக உதவி வந்திருக்கின்றன. ஆகவே கூட்டுறவுத் துறையில் உள்ள மில்களுக்கு நல்ல ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையிலே நம்முடைய முயற்சிகளும் நம்முடைய ஆதரவும் அதற்கு இருந்து வரவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

நூலுக்கு வரி விதிப்பதில், கடந்த ஆண்டு வரை இருந்து வந்ததைப் போல், தொழில் துறை அமைச்சர் அவர்கள், நம்முடைய தமிழ் நாட்டிலும் சம்பந்தப்பட்ட வரையில், அனுசரித்து வரும் கொள்கை மிகவும் நல்ல கொள்கையாகும். நாற்பதாம் நம்பர் நூல் வரையிலும் மத்திய வரிக்கு உட்படாத வகையில் மத்திய சர்க்காருடன் ஏற்பாடு செய்து வெற்றி காணவேண்டும். 40-ஆம் நம்பர் நூல் வரையிலும் அந்த வரிக்கு உட்படாத நிலையில் ஒரு ஏற்பாடு செய்வது கூட்டுறவு மில்களுக்கும் நல்லது; கூட்டுறவு மில்களிலிருந்து நூல் வாங்கி துணி நெய்யும் கைத்தறி நெசவாளர்களுக்கும் நல்லது. அந்த முயற்சியில் நம்முடைய அமைச்சர் அவர்கள் வெற்றி காண வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. நா. இராசாங்கம்: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய நிலையைப்பற்றிய இந்த விவாதத்தில் என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்கள், தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கடலூர் தாலுகாவில் 10 கிராமங்களிலும், புதுப்பேட்டையை அடுத்த ஏழெட்டு கிராமங்களிலும், குறிஞ்சிப்பாடியை அடுத்த 15 கிராமங்களிலும் கிட்டத்தட்ட நாற்பதாயிரம் அல்லது ஐம்பதாயிரம் பேர்கள் கைத்தறியை நம்பி வாழ வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். கைத்தறி நெசவாளிகளுக்குக் கூட்டுறவு சங்கங்கள் உதவி செய்கின்றன என்பதை நாம் நன்றாக அறிவோம். கூட்டுறவு சங்கங்களின் மூலமாக கைத்தறி நெசவாளிகளுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகள் ஏழை கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு உள்ளபடியே கிடைக்கிறதா என்றால், அவை கிடைக்கவில்லை என்று அப்போதைக்கப்போது அரசாங்கத்திற்கு வந்த புகார்களிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டும். அதை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. கூட்டுறவு சங்கங்கள் ஆங்காங்கு ஏற்பட்டு, கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கொடுக்கவேண்டும், நூல்களை அப்போதைக்கப்போது அவர்களுக்குக் கொடுத்து, அன்றாடம் வேலை செய்து அவர்கள் ஜீவிக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் கூட்டுறவு சங்கங்கள் கடனைக் கொடுக்கின்றன. கூட்டுறவு சங்கங்கள் மூலமாகச் செலவழிக்கப்படவேண்டிய நிதியினுடைய விவகாரமே தேவை இல்லை என்ற கூக்குரல் கிளம்பிற்று. கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கப்படுகிற பணம் சர்க்காருடைய பணம். சர்க்கார் பணம் கொடுத்து, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அது சரிவர நடக்கிறதா இல்லையா, நடந்தது சரியா இல்லையா என்பதை விவாதிக்கத்தான் இந்த மானியமே





கோரப்படுகிறது. ஆகவே, கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையில் இயங்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் அமைந்திருக்கலாம். ஆனால், அவற்றில் செலவழியும் பணம் உள்ளபடியே சேர வேண்டியவர்களுக்கு, அதாவது கைத்தறி நெசவாளத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைக்காத காரணத்தால் அவர்களுக்கு நூல் கிடைக்காமல் போய், அன்றாடம் பிழைக்க வேண்டிய பிழைப்புக்கே வழி இல்லாமல் போய்விடுகிறது என்ற நிலைமையை நான் இங்கே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

கரை போட்ட வேஷ்டிகளையும் புடவைகளையும் கைத்தறி நெசவாளர்களிடமே விட்டுவிட வேண்டும் என்ற எண்ணம் சுமார் பத்து ஆண்டுக் காலமாக இந்த மாநில சட்டசபையில் சொல்லிவரப்படும் ஒரு விஷயமாகும். ஆனால், இன்றும் அது நினைவுபடுத்த வேண்டிய ஒரு விஷயமாகத்தான் நமது அரசாங்கத்திற்கு இருக்கிறது. கைத்தறி நெசவாளர்களிடம் கரை போட்ட வேஷ்டிகள், புடவைகள் இவற்றை நெய்யும் பொறுப்பை விட்டுவிட்டால், உள்ளபடியே இன்றைக்கு அவர்களிடம் இருக்கும் பற்றாக்குறையைப் போக்க முடியும் என்ற கருத்து அரசாங்கத்திற்குப் பல தடவை வந்திருக்கும். ஆனால், அதை அரசாங்கம் பரிசீலனை செய்யத் தவறியிருக்கிறது. இப்போதாவது பரிசீலனை செய்யும் என்ற எண்ணத்தில் நான் இதைத் தெளிவுபடுத்துகிறேன்.

கைத்தறி நெசவாளர்களுடைய கூட்டுறவு சங்கங்கள் தான் இந்த முறையில் இருக்கின்றன என்றால், கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு அந்தச் சங்கங்கள் உள்ளபடியே சேர்த்துக்கொள்வதற்கு உரியவர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றனவா என்றால், அதுவும் இந்நாள் அளவில் சரியாகச் செயல்படவில்லை. ஆகவே, கூட்டுறவு சங்கங்களின் அமைச்சராக இருப்பவர் அதை நன்றாகக் கவனித்து, எந்த நோக்கத்திற்காகக் கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக பணம் கொடுக்கப்படுகிறதோ அதை நல்ல முறையில் செலவழித்து, நல்ல பலன் அடையச் செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் இருப்பது நாடறிந்தது. அந்த நெய்வேலித் திட்டத்தில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் நிலைமையைக் குறித்து நான் முன்பு கூடச் சொல்லியிருக்கிறேன். நெய்வேலிக்கு ஐந்து மைலுக்கு அப்பாலிருந்து வருகின்றவர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ், வீட்டு வாடகை அலவன்ஸ் இல்லையென்றாலும் கூட ஓரளவு பொருத்தமாக இருக்கலாம். ஆனால், சிதம்பரம் தாலுக்கா, விருத்தாசலம் தாலுக்கா இங்கிருந்தெல்லாம் வருகிற தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ், சைக்கிள் அலவன்ஸ் கிடையாது என்ற விதி இருப்பதை ஆராய்ந்து, அது மத்திய சர்க்கார் செய்ய வேண்டியதாக இருந்தாலும், நமது அமைச்சர் அவர்கள் பூரண சிரத்தை எடுத்து, மத்திய சர்க்காருக்கு ஆலோசனை கூறவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வடலூரில் சேஷசாயி இன்டஸ்ட்ரீஸ் இருக்கிறது. சேஷசாயி இன்டஸ்ட்ரீஸில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும்படியாக அமைச்சர் அவர்களிடம் நேரிலே சொன்னேன். மகசரும் போயிருக்கிறது. தீர்மானங்களும் போட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து, அந்த வீடு கட்டும் பிரச்னையில் சேஷசாயி இன்டஸ்ட்ரீஸில் வேலை செய்கின்றவர்களுக்கும் உதவி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். முன்பே கூட நான் சொன்னேன். கல் வீடு கூட வேண்டாம், கூரைவீடு கட்டிக் கொடுத்தாலும் போதுமானது. ஒரு குடும்பத்தில் இரண்டு பேர் தங்கும்படியான ஒரு கூரை வீடு இருந்தால் கூடப் போதும் என்று நான் சொன்னேன். அந்த அளவுக்காவது அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

புதுப்பேட்டை நெசவாளர்கள், கூட்டுறவு சங்கங்களினால் தங்களுக்கு ஒன்றும் பலன் இல்லை என்று பல முறை விண்ணப்பித்திருக்கிறார்கள். அப்போதைக்கப்போது கூட்டுறவு சங்க நிர்வாகிகளிடமும் சொன்னோம். கூட்டுறவு சங்கத் தலைவர்களிடமும் சொன்னோம். ஆனால், இதுவரை அவர்களாகவோ, அரசாங்கம் சொல்லியோ தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. அதையும் அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. டி. கடம்பவனசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் தொழில் துறை மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்ற கோஷம் பல வருஷங்களுக்கு முன்பு இங்கே கேட்டுக் கொண்டிருந்தது. 1962-ம் ஆண்டுக்கு முன்பு அந்தக் கோஷம் கேட்டுக்கொண்டிருந்தது. இன்று அந்த நிலை மாறிவிட்டது. 'தெற்கு வாழ்கிறது' என்ற நிலைமையிலே நமது மாநிலம் தொழில் துறையிலே முன்னேற்றம் அடைந்திருப்பதற்குக் காரணமாக இருக்கும் கனம் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட இலாக்காவினருக்கும் முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது நாட்டிலே உள்ள மிகப் பெரிய தொழில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக உள்ளது, நெசவுத் தொழில் ஆகும். அதைப்பற்றி நான் சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். நமது சர்க்கார் ஆரம்பத்தில் கைத்தறியாளர்களுக்கு உதவுவது என்றால், அது கூட்டுறவுத் துறையின் மூலமாகத்தான் உதவ முடியும் என்ற எண்ணத்திலே இருந்தார்கள். ஆனால், சமீபத்தில், கூட்டுறவுத் துறையில் இல்லாதவர்களுக்கும் உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு ஹாண்ட்லூம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது ஏற்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் நல்ல





சந்தர்ப்பம். இப்பொழுது கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கிற மிகக் கஷ்டமான நிலையில், கூட்டுறவுத் துறையில் சேராத நெசவாளர்களுக்கும் தொடர்ந்து வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கவேண்டும் என்று, நெசவாளர்களுக்கும், குறிப்பாக மாஸ்டர் வீவர்களுக்கும் வழங்கியிருக்கிறது என்பதை நான் பெருமையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், கடன் கோரி வரக்கூடிய விண்ணப்பங்கள் அத்தனைக்கும் கடன் வழங்கக் கூடிய அளவிலே அந்தக் கார்ப்பரேஷனிடம் நிதி நிலைமை இல்லை என்று நான் கேள்விப்படுகிறேன். ஆரம்பத்தில் ரிசர்வ் பாங்கிலே வாக்களித்தபடி கார்ப்பரேஷனுக்குக் கடன் வழங்கப்படவில்லை. இப்பொழுது ஸ்டேட் பாங்கார் மனமுவந்து ஏதோ 15 லட்ச ரூபாய் கடன் கொடுப்பதற்கு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் தான் இருக்கிறது. வசூல் செய்கிற ஷேர் காபிடலைத் தான் மாஸ்டர் வீவர்களுக்கும் கடனாகக் கொடுக்கவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, மாநில சர்க்கார் இந்தக் கார்ப்பரேஷனுக்கு அதிக நிதி உதவி தேடிக் கொடுப்பதில் அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கிற பெரிய கஷ்டம் சமீப காலத்திலே இரண்டு மூன்று மாதங்களாக நூல் விலையும் பட்டு விலையும் கூடிக்கொண்டிருக்கிறது. அதுவே இப்போது கைத்தறி ஜவுளி தேக்கத்திற்குக் காரணமாக இருக்கும் என்று கருதுகிறேன். நூல், பட்டு ஆகியவற்றில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் இன்றைதினம் வேலையற்று இருக்கும் நிலைமை சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் ஆலைகளை ஏற்படுத்தியிருந்தும் கூட. செயற்கைப் பட்டுக்கு நாம் வெளி மாநிலங்களை எதிர்பார்த்து நின்ற நிலை மாறியிருந்தும் கூட—இங்கே உற்பத்தி செய்யப்படுகிற செயற்கைப் பட்டின் விலை ஏறிக் கொண்டு போவதைத் தடுக்க வேண்டும். அதுபோல நூல் விலை ஏறிக்கொண்டு போவதையும் கட்டுப்படுத்த வழிவகை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி ஜவுளி தேங்கிய சமயத்தில் கூட்டுறவுத் துறையில் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுகிற ஜவுளிக்கு ரிபேட் வழங்கப்படுகிறது. முழுக்கவும் அசல் பட்டினால் நெய்யப்பட்ட துணிக்கு ரிபேட் வழங்கப்படுகிறது. முழு பருத்தியினால் நெய்த துணிக்கும் ரிபேட் வழங்கப்படுகிறது. பட்டு, பருத்தி ஆகிய இரண்டினாலும் நெய்யப்பட்ட துணிக்கு வழங்கப்படுகிறது. ஆனால் செயற்கைப் பட்டினால் நெய்யப்படுகிற துணிக்கு ரிபேட் வழங்கப்படவில்லை என்று அறிகிறேன். என்னுடைய பகுதியை எடுத்துக் கொண்டால் கூட்டுறவுத் துறையில் செயற்கைப் பட்டினால் நெய்யப்படுகிற துணித் தறிகள் தான் அதிகம். இந்தச் சரக்குகளும் தேங்கி இருக்கிறது. இந்த நெசவாளர்களும் வேலையின்றி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே கூட்டுறவுத் துறையில் நெய்யப்படுகிற செயற்கைப் பட்டுத் துணிக்கும் ரிபேட் வழங்க சர்க்கார் ஆவன செய்யவேண்டும். இத்துறைக்கும் அதை விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் உள்ள நெசவாளர்கள் சாயம் தோய்ப்பதற்கு அனுபவிக்கக்கூடிய ஒரு கஷ்டம் இருக்கிறது. குறிப்பாக தங்களுக்கு வேண்டிய நூல்களுக்கு நெசவாளர்கள் தங்கள் வீட்டிலேயே தான் சாயம் தோய்த்துக் கொள்வார்கள். ஆனால், நகரசபையினர் வீடுகளில் சாயம் தோய்க்கக்கூடாது, இண்டஸ்ட்ரியல் ஏரியாவுக்குக் கொண்டுபோய்த்தான் சாயம் தோய்க்கவேண்டும் என்கிறார்கள். இதனால் பலர் நகரசபை அதிகாரிகளுக்குத் தெரியாமல் சாயம் தோய்த்துக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகிறது. நெசவாளர்கள் கையாளும் முறை கைச்சாய முறை தான். எவ்விதமான இயந்திரங்களும் பயன்படுத்தப்படுவதில்லை. ஏன் இதை ஒரு குடிசைத் தொழில்போல செய்ய முடியாது? ஆகவே கைமுறைப்படி சாயம் தோய்த்துக்கொள்வதை குடிசைத் தொழில் முறை என்று வகுத்துவிட வேண்டும். குடிசைத்தொழில் வகையில் இதைச் சேர்த்தால் முனிசிபாலிடியினரின் தொந்தரவு இருக்காது. (மணியடிக்கப்பட்டது.)

* திரு. சு. அங்கமுத்து நாயக்கர் : மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச முன் வந்திருக்கிறேன். பொதுவாக, நமக்குச் சுதந்திரம் கிடைத்த பிறகு தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் எல்லா மாநிலங்களையும் காட்டிலும் நமது தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த வகையில் நம்முடைய நாட்டில் தொழில் வளம் நல்லமுறையில் பெருகி வந்திருந்தும் கூட இன்னும் சில தாலுக்காத் தலைநகரங்களில் எவ்விதத் தொழிலும் கிடையாது. அங்கெல்லாம் தொழில்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதாகத் தொழில் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, சேலம் இரும்புத் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டோமானால் அது இன்னும் சில நாளைக்குள், சில மாதத்திற்குள் வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதோடு நெய்வேலியைப் பொறுத்தவரையில் சேலம் இரும்புத் தொழிற்சாலையோடு இணைந்து மத்தியில் • இருக்கும் ஆத்தூர் போன்ற நகரங்களிலும் தொழில் பெருக ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, விவசாயிகள் அதிகம் வசிக்கும்படியான சேலம் ஜில்லாவில் ஆத்தூர் தாலுக்காவில் எவ்வித தொழிற்சாலையும் இல்லை. விவசாயத்தைத் தவிர வேறு தொழில் செய்வதில்லை. முன்பு ரைஸ் மில்களாவது இருந்துகொண்டிருந்தன. இப்போது அதையும் மூடவேண்டிய நிலை இருப்பதனால் தொழில்களை ஏற்படுத்தித்தர வேண்டும். அங்கே தொழில் வாய்ப்பு இல்லை என்பதனாலேயே பாலிடெக்னிக்கை ஏற்படுத்தித்தரவேண்டும் என்று சொல்லி இருந்தேன். அமைச்சர் அவர்கள் பார்க்கலாம் என்று சொல்லியிருந்தார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ஆத்தூரிலே அதை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.





ஆத்தூரைப் பொறுத்தவரையில் மண்பாண்டத் தொழில் ஆரம்பிப்பதாக இருந்தது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. அதையும் ஏற்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆத்தூரிலே தொழில் பேட்டை ஒன்றையும் ஏற்படுத்தித்தரவேண்டும். அதையும் கூட்டுறவு சங்கம் மூலமாக இல்லாமல் சர்க்கார் துறையிலேயே ஏற்படுத்தித்தரவேண்டும்.

பொதுவாக இந்த அரசாங்கமும், அமைச்சரவையும் தொழில் துறையில் உள்ளவர்களுக்கு நல்ல ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கவேண்டும். இன்னும் அதிகக் கடன் வசதியும் செய்து கொடுத்தால் அதிக உற்சாகத்தோடு வேலை செய்வார்கள் என்று நினைக்கிறேன். அந்த வகையில் அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில தலைநகரங்கள், ஜில்லாத் தலைநகரங்கள் என்பதோடு தாலுக்கா தலைநகரங்களிலும் தொழில்களை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் தொழில் அமைச்சர் கோரியிருக்கும் மானியத்திற்கு என் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் இங்கே என் கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன். தொழில் அமைச்சர் அவர்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்கார் உதவி 325 கோடியும், மாநில சர்க்கார் 100 கோடியும், தனியார் முதலீடு 175 கோடியும் ஆக 600 கோடிக்குத் திட்டம் போட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த வருகின்ற ஆண்டில் ஏற்படுத்த இருக்கக்கூடிய தொழில் வளத்தைப் பார்த்தால் முற்றும் ஏமாற்றம் தரக்கூடிய அளவில் இருக்கிறது என்பதை வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில்வளப் பெருக்கத்தைப்பற்றி திரு. வீரபாகு அவர்கள் குறிப்பிட்டார்கள். அமைகிற எல்லாத் தொழில்களும் சென்னை, வட சென்னை என்பதாக சென்னைச் சுற்றுப்புறங்களிலேயே அமைக்கப்படுகிறது. இந்தக் கொள்கை தவறானது. இப்படியே போனால் வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்பதாக சென்னை, வடாற்காடு நீங்கலாக தென்னாற்காடு முதல் கன்னியாகுமரிவரை உள்ள காங்கிரஸ்காரர்களே கோஷம் எழுப்புவார்களோ என்று ஐயப்படக்கூடிய அளவில் போகிறது. இந்த அரசாங்கம் ஏற்படுத்துகிற தொழில் வளர்ச்சியை பரவலாக தென் மாவட்டங்களிலும் ஏற்படுத்தித்தர ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கங்கேயுள்ள மாவட்ட தலைநகரங்கள், தாலுக்கா தலைநகரங்கள் ஆகியவற்றில் ஏற்படுத்தினால் தான் தொழில்வளம் பரவலாக ஏற்பட வாய்ப்பு உண்டு.

கைத்தறி என்று எடுத்துக்கொண்டால் அது சம்பந்தமாக கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். கைத்தறி வாரம் என்று கொண்டாடப்படுகிறபோது அங்கே போய் கைத்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [17th March 1966

தறியைப்பற்றிப் பேசி வருகிறார்கள். கைத்தறியைப் பற்றிப் பேச இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று நான் கேட்கிறேன். இவர்கள் அணிவதோ கதர். கைத்தறிக் கண்காட்சியில் கதர் இடம் பெறவில்லை. மற்றவர்களை கைத்தறி வாங்குங்கள் என்று சொல்வதற்கு முன் இவர் ஒரு நாள் கைத்தறி, ஒரு நாள் கதர் என்று அணிந்து வந்தால் கைத்தறியை ஆதரிக்கின்ற வகையில்—அதை வாங்குங்கள் என்று இவர் சொல்வதைப் புரிந்துகொள்ள முடியும். நீங்கள் கைத்தறியைக் கட்டினால் நாங்களும் ஒரு நான் கதர் கட்டுகிறோம். (மணியடிக்கப்பட்டது.)

Sri K. S. G. HAJA SHERIFF: Mr. Speaker, Sir, I rise to speak in support of the Demands moved by the Hon. Minister for Industries. Sir, I very heartily congratulate him and the officers of his Department for extremely doing well in the industrialisation of our State. The progress maintained by our State is very remarkable and should be commended when we take into consideration the various difficulties which the Industry and the Business community are facing with regard to shortage of raw materials, power, credit facilities, etc.

Sir, if only my esteemed friends in the Opposition view things in a very dispassionate manner, leaving aside the party affiliations for some time—and note the remarkable progress made by our State in the last ten years, we cannot but come to the conclusion that we have done extremely well. In this connection, I would like to read certain excerpts from the booklet brought out by one of the leading Banks in our State, the Indian Overseas Bank. In that booklet they have reviewed the progress made towards the industrialisation of our State and have compared it with the Government of India and the Maharashtra State, which is an industrially very advanced State in our country. I am just now giving statistics with regard to the Household Manufacturing Industry and the Non-household Manufacturing Industry.

| | *Household Manufacturing Industry.* | *Non-household Manufacturing Industry.* | |
|---|---|---|---|
| | | *Small.* | *Large.* |
| | (1) | (2) | (3) |
| **Madras—** | | | |
| Employment .. .. .. | 56·2 | 32·1 | 11·7 |
| Net Output .. .. .. | 13·2 | 45·5 | 41·3 |
| **Maharashtra—** | | | |
| Employment .. .. .. | 35·9 | 33· | 31· |
| Net Output .. .. .. | 11·7 | 24·3 | 64·0 |
| **India—** | | | |
| Employment .. .. .. | 54·5 | 27·7 | 17·8 |
| Net Output .. .. .. | 16·9 | 33·2 | 49·9 |

So, it could be seen without fear of contradiction, to what extent, the State has progressed in the industrial field. I therefore feel that there is nothing wrong in our policies and the support which both the business community and the industrialists are giving to the Government which realise the growth of industries in a developing economy.



17th March 1966] [Sri K. S. G. Haja Sheriff]

Sir, at the same time I want to impress upon the Government the various difficulties which the industrialists and the business community are now undergoing. If only these difficulties are removed, I am sure, the industrial growth will be much more remarkable. For instance, there is the power shortage. This is due to the failure of monsoons and I am sure, this will be overcome very shortly after the establishment of thermal stations in two or three sectors.

Another important shortage is with regard to raw materials. Now, hundreds of big factories have been established by investing a capital of crores and crores of rupees and they have employed lakhs and lakhs of people. No doubt, they are producing component parts and other ancillaries required for the manufacture of the finished products. But at the same time, certain essential parts are required to be imported and these are not given in full, with the result the factories have either to slow down their production or to close down their business for two or three months. I leave it to the Government to find out whether there is going to be a national wastage. Why this situation arose? I am sure, the Government will consider the question of importing only such vital raw materials which will not stand in the further functioning of the Factories.

Sir, another very great difficulty which both the industrialists and the business community are at present facing is the credit facility. Some of the hon. Members have already pointed out how the want of this facility retards to a very great extent the growth and development of the business and the industry. Now, when the industries are in the middle of the production stage, the credit squeeze is being applied and the business community which require credit for doing their business are not getting credit facilities as have been given to them previously. Now, why is this state of affairs? I would like to know ? No doubt, the Reserve Bank wanted to apply this credit squeeze for mopping up money so that inflation does no go up. But it has proved to be a great failure. In a developing economy there is no doubt that money is being circulated to a very considerable extent and to that extent production is not coming up. If for that reason, the people who are engaged in vital industries and who are producing vital goods are not given credit facilities, difficulties arise. Now, having engaged themselves in the industries they want more money and they would have to go for help to the private banks and others. Now, I am told that the private people, Multanees, are charging more than 20 to 22 per cent interest in the case of industrialists. If the Multanees do not give money, they would have to go to private banks which charge even a higher rate of interest. These are the complications which are arising. Although this matter is

not within the competence of this Government, inasmuch as it is affecting the growth and development of the business and industry in our State, I am sure, the Government will certainly make strong representations to the Centre and see that their monetary policy does not impede our growth and development.

Sir, it occurs to me that we should consolidate our achievements particularly in the industrial field. We want to keep the prices of essential goods at a reasonable level but the production is not coming to the extent that the money is being pumped out and money percolates at all levels. The only alternative will be to see that the expenditure on the non-production sector is rather slowed down or the Government should give a free hand in seeing that there is maximum production. That can be achieved only by giving all facilities to the people who are engaged in production —credit facilities, raw materials, power and various other things. I therefore suggest that the Government do consider this matter very carefully and see that in a developing economy these difficulties do not hamper the industrial activities. I do greatly appreciate to what extent transport and power have developed in our State. These are the things that precede the development of industries. But unfortunately for power, we have to depend too much on the hydel projects and now we have realised that thermal stations are also very essential. If only the Government of India had agreed to the proposal of our Government made three or four years ago for the location of thermal stations, I am sure that in the last two or three years the Madras State need not have slowed down their production for want of power in the hydel areas

Sir, while appreciating the establishment of many industries on a co-operative basis, my only submission is that the industries which have already been established in the private and public sectors should not be made to suffer for want of raw materials or finance or other things. We require more and more industries to
11-30 a.m. be established in every sector and the pamphlet which the Industries Department has circulated about industrial development in Madras State gives a very detailed account of our achievements. I must congratulate the department for the tremendous achievements this State has made in the industrial field. I only wish that this important document which the Hon. Minister has placed before this House is distributed at least a couple of days earlier so that it may enable individual members to go through it very carefully and make a careful study. If, as is done now, it is distributed only a couple of hours before the Industries Demand is taken up, I should say that many hon. Members had not gone through it fully, many hon. Members would not have applied their mind to it and would not be able to appreciate it. I hope this would be taken for future guidance.

Thank you, Sir.



*** திரு. ரா. சுப்பிரமணியம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தொழில் மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் ராஜ்யத்தில் மூலப்பொருள்களும், இயற்கை வளங்களும், இல்லாத நிலையில் மிகவும் தீர்க்கதரிசனத்துடனும், கற்பனைத் திறனுடனும் திட்டங்களை வகுப்பதால் இன்று இந்தியாவில் மூன்றாவது இடத்தை நம் ராஜ்யம் தொழில் துறையில் அடைந்திருக்கிறது என்பது எல்லோரும் மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும். 1951-ல் 32 கோடி யூனிட் தொழிலுக்காக உபயோகித்தோம் என்றால் அதைவிட ஆறு மடங்கு அதிகப்படியாக உபயோகப்படுத்தும் அளவிற்கு தொழில் துறையில் நாம் நல்லமுறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். 1961-ல் 15.22 சத விகிதம் நம் ராஜ்யத்தின் வருமானம் இதிலிருந்து கிடைத்திருப்பது 18.3 சத விகிதம் ஆக ஆகியிருப்பது வரவேற்கத்தக்கது. இதற்கெல்லாம் காரணம், அஸ்திவாரமாக முதல் ஐந்தாண்டுத்திட்டத்தில் திட்டம் இட்டபோதிலும் கடந்த பத்து ஆண்டுகளில் பிரமிக்கத்தக்க அளவிற்கு நாம் தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். இதற்குக் காரணம் தொழில் துறை ஒரே அமைச்சரிடம் இருந்ததாலும், இந்தத் தொழில் துறையில் உள்ளவர்கள் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டதாலும் இந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும், தொழில் துறையைச் சேர்ந்தவர்களையும் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அடுத்தபடியாக, இந்தியாவைப் பொறுத்தவரையில் தொழில் பரவலாக்கப்படவேண்டும் என்ற கொள்கையை அனுஷ்டித்து வருகிறார்கள். எல்லா ராஜ்யங்களிலும் அது பரவலாக்கப்பட்டு வருகிறது. அப்படி தொழில் எல்லா ராஜ்யங்களிலும் பரவலாக்கப்படவேண்டுமென்ற அகில இந்தியக் கொள்கை இருக்கும்போது நம் ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் எல்லா ஜில்லாக்களிலும் அது பரவலாக்கப்படவேண்டும் என்ற கொள்கையை நாம் கடைப்பிடிக்கவேண்டும். சென்னை, சவுத் ஆற்காடு, சேலம், கோவை, நீலகிரி இவற்றை எல்லாம் இண்டஸ்ட்ரியல் டெல்டாவாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். உலோகங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை ஏற்படுத்த இந்த இடங்களில்தான் வாய்ப்பிருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில், சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தினம் தினம் ஒரு இண்டஸ்ட்ரி வந்து கொண்டேயிருக்கிறது. அப்படி அதிகப்படியான இண்டஸ்ட்ரீஸ் வருவதால் ஜில்லாக்களிலிருந்து அதிகப்படியான ஊழியர்கள் இங்கு வருகிறார்கள். இது ஸீஸனல் லேபர் மாதிரி அல்ல. சென்னைக்கு வருகிறவர்கள் வேலையிருந்தால் அதைச் செய்து விட்டு திரும்பி சென்று விட வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு கிடையாது. இங்கு வந்து வேலை கிடைத்தாலும் சரி, கிடைக்கவில்லையானாலும் சரி இங்கேயே தங்கி விடுகிறார்கள். ஆகவே, அப்படி அவர்கள் சென்னையிலேயே தங்கி விடுவதினால் ஜில்லாக்களின் நன்மை பாதிக்கப்படுகிறது. அதேசமயத்தில் சென்னையின்

[திரு. ரா. சுப்பிரமணியம்] 17th March 1966]

நன்மையும் பாதிக்கப்படுகிறது. இதைக் காரணமாகக் கொண்டாவது சென்னையில் ஆரம்பிக்கப்படும் தொழில்களை எல்லாம் ஜில்லாக்களில் பரவலாக அமையச் செய்யவேண்டும். அப்படி பரவலாக்கும்போது எந்தெந்த ஜில்லாக்கள் மிகவும் தொழில் துறையில் முன்னேற்றம் அடையாமல் இருக்கிறதோ அங்கு அதிகப்படியான தொழில்களை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The hon. Member's time is up.

SRI R. SUBRAMANIAM: May I know the time-limit fixed for each hon. Member ?

MR. DEPUTY SPEAKER: Five minutes.

SRI R. SUBRAMANIAM: All right. My previous speakers had each taken ten minutes. I shall finish my speech within a few minutes.

தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் தொழில் துறையில் அது மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. அங்குள்ள விவசாயக் கூலிகளுக்கு ஆறு மாதங்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. ஆகவே இதை மனதில் கொள்ளவேண்டும். அங்கு உலோகத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஆரம்பிக்கப்படும் பெரிய தொழில்கள் எதுவும் இல்லை. விவசாயப் பொருள்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஆரம்பிக்கும் தொழில்களை அங்கு ஏராளமாக ஆரம்பிக்க வசதியிருக்கிறது. அங்குள்ள விவசாயக் கூலிகளுக்கு ஆறு மாதம்தான் வேலை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்காக சிறிய தொழில்களை ஆரம்பித்துக் கொடுக்கவேண்டும். அத்தொழில்களை பெரிய அளவில் ஆரம்பிக்கவேண்டும். அதற்கு அங்கு வசதியிருக்கிறது என்று திரு. லோகநாதன் அவர்கள் டெக்னோ எக்கனாமிக் சர்வே என்பதில் கூறப்பட்டிருக்கிறது. விவசாயக் கருவிகள், எலக்ட்ரிக் மோட்டார்ஸ், வொயரிங் செய்யவேண்டிய உப தொழில்கள், நூல் வொர்க்ஷாப் இவை எல்லாம் ஆரம்பிக்க அங்கு வசதிகள் இருக்கின்றன என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அம்மாதிரிப்பட்ட சிறிய தொழில்களை அங்கு ஆரம்பிக்க வேண்டும். உச்சவரம்புச் சட்டத்தின் பயனாக அதனால் பாதிக்கப்படும் மிராசுதார்களிடத்தில் ஓரளவிற்கு கைக்கு பணம் வந்து சேரும். இதுவரையில் கையில் பணம் இருந்தால் நிலம் வாங்கவேண்டுமென்ற தோரணையில் போய்க் கொண்டிருந்தவர்கள் திடீரென்று தொழில்கள் ஆரம்பிப்பதற்கான சரியான விளக்கங்கள் அவர்களுக்கு இல்லை. ஆகவே, அவர்களை தொழில்கள் ஆரம்பிப்பதற்கு ஊக்குவிக்கவேண்டும். இப்போது அவர்கள் நகரங்களுக்கு சென்று வீடுகள் வாங்குவதற்குத்தான் முயற்சி செய்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு நல்ல முறையில் ஊக்கம் அளித்து தொழில்கள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். வண்டல் மண் நிறைந்தது தஞ்சை ஜில்லா. அங்கு செங்கல் சூளை, குடிசைக் கைத்தொழில்கள் ஆரம்பிக்க வசதியிருக்கிறது. அவைகளையும்



17th March 1966] [திரு. ரா. சுப்பிரமணியம்]

ஏற்படுத்த முற்படவேண்டும். தஞ்சை ஜில்லாவில் சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்க வசதியிருக்கிறது. அங்கு நூற்பாலைகள் ஆரம்பிக்க வசதியிருக்கிறது. அங்கு ஒரு தாலுகாவிற்கு ஒரு நூற்பாலை, ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அப்படி ஆரம்பிக்கும்போது உத்தியோகப் பற்றற்றவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கவேண்டும். மாயவரத்தில் ஒரு நூற்பாலை ஆரம்பித்தோம். அதற்கு பிரசிடெண்டாக கலெக்டரை போட்டிருப்பது சரியா என்பதை அமைச்சர் அவர்கள் யோசித்து அதற்குப் பதில் ஒரு நான்-அஃபிஷியலைப் போட்டு அவர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும். அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க வசதியிருக்கிறது. அங்கு நிறைய மூங்கில், கரும்புச் சக்கை, வைக்கோல் இவை எல்லாம் இருக்கிறது. இவை இருந்தும் அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்காமல் இருப்பது வருந்தத் தக்கது. (மணி அடிக்கப்பட்டது) 1956-ல் ரஷ்ய நிபுணர்கள் காவேரி டெல்டா பகுதியில் எண்ணெய் வளம் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். பத்தாண்டுகளுக்குப் பின் இப்போதுதான் இரண்டு துளைகள் போட்டு வெற்றி காணும் அறிகுறிகள் ஏற்பட்டிருக்கிறது. மூன்றும் துளை போட இருக்கிறார்கள். இதை துரிதமாகச் செய்யவேண்டும். அப்படி எண்ணெய் கிடைத்தால் தஞ்சை ஜில்லா வளர்ச்சி அடைய ஏது இருக்கிறது. கும்பகோணத்தில் போன ஆண்டு ஒரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஆரம்பிப்பதாக இருந்தது. அதை தள்ளிப் போட்டுவிட்டார்கள். அந்த இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. வை. சங்கரன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம் நாட்டின் இண்டஸ்ட்ரியல் மாப்-ல் நம் ராஜ்யம் முக்கிய இடம் பெறச் செய்த அமைச்சர் அவர்களுக்கும், தொழில் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் முதலில் என் நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு என் பேச்சை ஆரம்பிக்க விரும்புகிறேன். இந்த அறிக்கையில் இரண்டு விஷயங்கள் உள்ளன. கனரகத் தொழில்கள் நமக்கு குறைவாக இருக்கின்றன. 'The economy of the State and Industries not attracted by private enterprise" என்பதை மனதில் வைத்து பொதுத் துறையில் தொழில்கள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கிறது என்றிருக்கிறது. ஆகவே நம் ராஜ்யத்தில் மேஜர் ஆண்ட் மீடியம் இண்டஸ்ட்ரீசை ஸ்டேட் செக்டாரில் ஆரம்பிக்கவேண்டும், சென்ட்ரல் செக்டாரிலும் ஆரம்பிக்க வேண்டும். கனரகத் தொழிற்சாலைகள் நம் ராஜ்யத்தில் ஓரளவு குறைவாகவே இருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். ஆகவே கனரகத் தொழில்களை நம் ராஜ்யத்தில் அதிகப்படுத்த வேண்டும். டிபன்ஸ் பர்பஸுக்காக பெரிய தொழிற்சாலைகளை எல்லாம் எல்லைக்கு அப்பால் உள்ள தெற்கே அமைக்க அதை வாதாடிப் பெற முடியும். ஆகவே டிபன்ஸ் பர்ப்ஸுக்கான தொழிற்சாலைகளை நம் ராஜ்யத்தில் அமைக்க தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக திருச்சிக்கு தெற்கே எடுத்துக்கொண்டால்,

கனரகத் தொழில்கள் ஒன்றும் இல்லை. சில டெக்ஸ்டைல் மில்கள் போன்றவைகள் தான் நிறுவப்பட்டிருக்கின்றனவே தவிர பெரிய தொழில்கள் எதுவும் இல்லை. கப்பலூரில் எம்.எம்.டி. தொழிற்சாலையும், ஸ்டேட் இன் எலக்ட்ரானிக்ஸும் ஏற்படுத்தப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டையும் சீக்கிரமாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முறையில் பார்க்கும்போது, திருச்சிக்கு தெற்கே போதுமான தொழில் வளம் ஏற்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே திருச்சிக்குத் தெற்கே சீக்கிரமாக சில கனரகத் தொழில்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, சிறு தொழில்கள் பலவற்றுக்கும் இன்றைய தினம் மூலப் பொருட்கள் கிடைப்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. ரா-மெட்டீரியல்ஸ் கிடைக்காத காரணத்தால் தொழிற்சாலைகளில் வேலையில்லாமல் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். பல தொழிற்சாலைகள் நிறுத்தப்படும் தருவாயில் இருக்கின்றன. சிவகாசி, சாத்தூர் பகுதியில் இப்படிப்பட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட தொழில்களுக்கு வேண்டிய ரா-மெட்டீரியல்ஸ்-ஸை வேண்டிய அளவுக்கு வரவழைத்துக் கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு மூலமாக பல மில்களை ஆரம்பித்திருக்கிறார்கள். இருந்தாலும் ஏற்கனவே உள்ள பல தனியார் மில்களை நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே ஏற்கனவே இருக்கின்ற தொழில்களைப் பாதுகாப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக மெட்டீரியல்ஸ் இல்லாமல் தொழில் பாதிக்கக்கூடாத அளவுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹேண்ட்லூம் இன்டஸ்ட்ரீஸ் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக அங்கங்கே இருக்கின்ற கைத்தறி சொசைட்டிகளுக்கு எல்லாம் ஸ்டேட் சொசைட்டி தான் முக்கிய கஸ்டமர் ஆக இருக்கிறது. இந்த நிலையில் ஸ்டேட் சொசைட்டியிலிருந்து பணம் வருவதற்கு நாலைந்து மாதங்கள் ஆகிவிடுகின்றன. முக்கியமான கஸ்டமராக இருக்கின்ற ஸ்டேட் சொசைட்டியில் நாலைந்து மாதங்கள் பாக்கி வைத்துக்கொண்டால் எப்படி கீழ் இருக்கின்ற சொசைட்டிகள் செயல்பட முடியும் என்று தெரியவில்லை. நான் ஒரு சொசைட்டிக்கு பிரசிடெண்டாக இருந்த நேரத்தில் இதற்காக ஸ்டேட் சொசைட்டியில் போய் அழுக்கூட கேட்டிருக்கிறேன். என்னைப்போன்ற இன்ப்ளுயன்ஸ் பெற்றவர்கள் வந்து இப்படிக் கேட்டும் கிடைப்பதற்கு கால தாமதம் ஏற்படுகிறது என்றால், சாதாரணமாக இருக்கின்றவர்களுக்கு என்ன கஷ்ட நிலைமை ஏற்படும் என்பதைச் சொல்ல தேவையில்லை. அவர்களிடம் கேட்டால், ரிசர்வ் பாங்கியிலிருந்து பணம் வரவில்லை என்று காரணம் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுகின்ற சமாதானம் நியாயமானதாக இருக்க முடியாது. கண்டிப்பாக இரண்டு மாதங்களுக்கு மேல் பாக்கி வைக்காது





ஸ்டேட் சொசைட்டியிலிருந்து பணம் வந்தாகவேண்டும் என்று இருக்க வேண்டும். இல்லையென்றால் தொழிலையே நிறுத்த வேண்டிய நிலைமைதான் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசாரிகள், அதாவது பொற்கொல்லர்கள், அகதிகள் (ரெஃப்யூஜீஸ்) விஷயத்தில் அவர்களுக்கு போதுமான அளவில் தொழிற்சாலைகளில் வேலை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும் நிலைமை அபிவிருத்தி அடையாது. அதை விட தொழில் கொடுப்பதுதான் பெரும் உதவியாக இருக்கும். மேலூரில் ஸ்பின்னிங் மில் இருக்கிறது. இதில் இவர்களுக்கு அதிகமாக வேலை கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தொழிற்சாலைகளில் வேலை கொடுப்பதில் இப்படிப்பட்ட பொற்கொல்லர்கள், அகதிகள், இவர்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். அன்-ஸ்கில்ட் என்ற முறையில் அரசாங்கத் தொழில்களில் வேலை கொடுக்கப்படும் இடங்களில் இவர்களுக்கு முதலிடம் நிச்சயமாக கொடுக்க வேண்டும், இந்த முறையை கண்டிப்பான முறையில் அமல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் பணத்தைக் கொடுப்பதைவிட தொழில் கொடுப்பதுதான் முக்கியம் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தெர்மல் பிளாண்ட் ஆரம்பிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்ல விரும்புவது, இதில் வருகின்ற கழிவுப் பொருளை எடுத்துக்கொண்டால், அதை எடுத்து அங்கேயே போட்டு நல்ல நிலத்தையும் வீண் செய்கிறார்கள். ஆனால் இதை எடுத்து ரோட் ரிப்பேர், கடல் அரிப்பு தடுக்க சிமெண்டு தயாரிக்க போன்றவைகளுக்குப் பயன்படுத்தலாம். சமயநல்லூர் பக்கத்தில் இதை நான் பார்க்கிறேன். இதிலிருந்து வருகின்ற வேஸ்ட், கழிவை நல்ல இடங்களில் போட்டு நிலம் பாழடைந்து கிடக்கிறது. இதை அவ்விதம் போட்டு வைக்காமல் நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* SRI S. NANJUNDA ROW : Mr. Deputy Speaker, Sir, the Neyveli-Salem steel plant is gradually becoming a reality and we hope it will be a reality in the nearest future. We believe in a socialistic pattern of society and socialist economy. The report which the Hon. Minister has placed before us says that this plant will be taken up in the public sector. I have a genuine suggestion to make. We know that this plant would cost Rs. 100 crores and the foreign exchange will be about Rs. 40 crores and the indigenous money would be about Rs. 60 crores. For the last two years there has been very great enthusiasm and great fervour about the Salem Plant. Even in the remotest village in Tamilnad everybody knows about it and everybody talks about it. So, I want to request the Government to allow the public to contribute small shares of even Rs. 5 and Rs. 10 to this plant. Of course this is going to be a public sector industry

[Sri S. Nanjunda Row] [17th March 1966

and public sector industry means Government money. Even it being so, I think Government can come forward to exploit the enthusiasm of the people. There has been great enthusiasm and this enthusiasm could be exploited and if each family in Tamilnad can give at least Rs. 5 or multiples of Rs. 5 we could collect Rs. 20 crores. Rs. 20 crores can easily be forthcoming for this plant. Making this request, I now come to other points.

There has been mention of coir industry and many other things. In places like Sholavandan and Athur in Madurai district, the coconut coir fibre has not been exploited in any way. I request Government to start an industry in Sholavandan and Athur to utilise the coconut fibre properly. There has been mention of rural works centre and a number of good industries like hand-made paper units, hand-drawing units, blacksmithy and carpentry units have been started. I make a request that each panchayat union and each block should have a miniature industrial estate (it may not be of the usual industrial estate type). It may be like a rural works centre where all industries could get assistance. I hope Government will come forward to make villagers industry-conscious and in each block they should try to start such work centres.

There is the programme of rehabilitation of displaced goldsmiths and recently Government have started a scheme for the young men (among displaced goldsmiths and Handloom weavers) to get training in Industrial Training Institutes. Recently I was a member of the selection committee to select pupils for an Industrial Training Institute at Madurai. There the young boys are trained in fitters' job, etc. There is the problem of handloom weavers. I am of the view that more and more young men among the handloom weavers should be attracted to other industries. A scheme should be there to train handloom weavers in Industrial Training Institutes. At the same time I want to say that the stipend at present given to trainees in Industrial Training Institutes is not sufficient. I hope the Hon. Minister will agree to my suggestion to increase the stipend to displaced goldsmiths and handloom weavers undergoing training in Industrial Training Institutes to at least Rs. 30 per mensem.

Making one more request, I shall finish my speech. We believe in socialistic pattern of society and how far socialism can be taken to political and economic spheres. I am glad to see that ordinary people in our State believe in socialism and how it could be brought about. Unless villagers are made industry-conscious and unless we start industries in rural areas, it will not be possible to bring the industrial revolution. As Sri Veerabahu mentioned, more agro-Industries should be started in each block and people should be made industry-conscious. Then only we can usher in the goal of socialism into the villages also.

Thank you.



17th March 1966]

*திரு. அ. பெ. தர்மலிங்கம் : மதிப்புக்குரிய சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் அடிக்கடி 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்பதை வலியுறுத்தி வந்ததன் காரணமாக சமீப காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற தொழில் வளர்ச்சிப் பட்டியலைப் பார்க்கும்போது இன்னும் அதிகமான வளர்ச்சி அடையவேண்டும் என்ற நோக்கத்தோடு அதையே திருப்பிச் சொன்னாலும் அது தவறு ஆகாது என்று கருதுகிறேன். காரணம், இப்போது சிறு தொழில்கள் 4,618-லிருந்து 6,900-ஆக உயர்ந்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் பஞ்சாபில், ஒரு மாவட்டத்தில் மட்டும் 10,000 சிறு தொழில்கள் உள்ளன என்பதை நான் இங்கு சொல்லுவது மாத்திரம் அல்ல, நமது அமைச்சர் அவர்களும் நன்கு அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். பொதுவாக இங்கே போடப்படுகிற திட்டங்களையெல்லாம்பற்றி சொல்லவேண்டுமென்று சொன்னால் நேரம் இருக்காது என்ற காரணத்தினால் ஒரு சிலவற்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் வளம் அதிகமாகப் பெருகி வந்திருக்கிற இந்த நேரத்திலேதான் நம் மதிப்புக்குரிய மாநில தொழில் அமைச்சரைப் பற்றி சென்ற 10 வாரங்களாக ஒரு பத்திரிகையில் எழுதி வந்திருப்பதை இன்னும் தொழில் அமைச்சர் அவர்களோ அல்லது அவரது இலாகாவினரோ அதை மறுத்துக் கூறவில்லை. அப்படி சொல்லுகிற பத்திரிகை காங்கிரஸ் கட்சியின் ஆதரவு பெற்று, காங்கிரஸ்காரர்களால் நடத்தப்பட்டு, காங்கிரசில் உள்ள முக்கியஸ்தர்களால் வளர்க்கப்பட்டு வரும் பத்திரிகை. அதிலிருந்து ஒரு சிலவற்றை ஜன சக்தி என்ற பத்திரிகை எடுத்துப் போட்டிருப்பதை மட்டும் உங்கள் மூலமாக இந்தச் சபைக்கு நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"அமைச்சரின் ஊழலுக்கு தமிழக அரசின் பதில் என்ன? தமிழக தொழில் அமைச்சர் வெங்கட்டராமன் இலாகாவில் ஊழல்கள் மலிந்து விட்டன. அங்கே ஒரு ஜாதி ஆதிக்கம் கோலோச்சுகிறதாம். மதுரையிலுள்ள பிரபலமான மோட்டார் கம்பெனிக்காரர்களில் ஒருவர் 35 பஸ்களுக்கு 10 வருடகாலமாக 'டெம்பரரி' பர்மிட்டிலேயே ஓட்டினாராம். இதைத் தடுக்க முயன்ற திரு. ராயப்பா வேறு இலாகாவுக்கு மாற்றப்பட்டாராம் . . .

MR. DEPUTY SPEAKER: Is the hon. Member reading from the newspapers ?

திரு. அ. பெ. தர்மலிங்கம்: பார்லிமெண்டில்கூட படித்திருக்கிறார்கள். குற்றச்சாட்டுகள் இருப்பதால்தான் சொல்லுகிறேன். பத்திரிக்கையிலிருந்து நேரே படிக்காமல் எழுதிப் படித்தாலும் ஒன்றுதான். குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர் அவர்களுடைய பதில் என்ன என்றுதான் கேட்கப்படுகிறதே தவிர . . .

கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர் அவர்கள் அதை தன்னுடைய வாதமாக வைத்துக்கொள்ள விரும்புகிறாரா?

[17th March 1966

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் அதை நம்புகிறேன் என்று சொல்லிவிட்டு கனம் அங்கத்தினர் ஆரம்பிக்கலாம்.*

*திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் அமைச்சர் அவர்களோ அவரது இலாகாவினரோ அதற்கு மறுப்பு சொல்லாத காரணத்தினால் நான் நம்ப வைக்கப்படுகிறேன் என்றுதான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்புகிறேன் என்பது அல்ல, நம்ப வைக்கப்படுகிறேன் . . .*

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member should say, ' I take responsibility for the statement '.

*திரு. அ. பெ. தர்மலிங்கம் : இதைத் தடுக்க முயன்ற திரு. ராயப்பா அவர்கள் வேறு இலாகாவிற்கு மாற்றப்பட்டதன் மர்மம் என்ன . . .*

*கனம் உதவி சபாநாயகர் : இம்மாதிரி பத்திரிகைகளில் பல செய்திகள் வரலாம். பத்திரிகைச் செய்திகள் எவ்வளவு தூரம் உண்மையானவையாக இருக்கும் என்பது நமக்குத் தெரியும். கனம் அங்கத்தினர் இதில் உண்மை இருக்கிறது என்று நம்புவதாக இருந்தால், அதற்கு பொறுப்பு ஏற்பதாக இருந்தால், பொறுப்பு ஏற்று, அதை இங்கே படிக்கலாம். ஏனென்றால் கனம் அங்கத்தினர்கள் வாய் வார்த்தையாக சபையில் பேசும்போது அவர்களுக்கு உரிமை, பாதுகாப்பு இருக்கிறது. அவர்கள் பேசுவது உண்மைக்குப் புறம்பாக இருந்தாலும்கூட நடவடிக்கை எடுக்க முடியாது. ஆகவே, கனம் அங்கத்தினர் அவர்கள் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து, சிந்தித்து, சபையில் படிப்பது நல்லது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

*திரு. அ. பெ. தர்மலிங்கம் : இங்கே பதில் அளிக்க வேண்டிய அமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட இலாகாவினரும் இருக்கிற காரணத்தினால், இது பற்றி இது வரையில் எந்தவிதமான மறுப்பும் அளிக்காத காரணத்தினால், ஒரு வேளை நம்பத் தகுந்ததாக இருக்கும் என்ற காரணத்தினால், அந்த வகையில் சொல்லுவது நியாயம் என்று கருதுகிறேன் . . .*

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சட்ட சபையிலே பேசுகிற எல்லாக் கருத்துக்களுக்கும் அப்ஸல்யூட் ப்ரிவிலெஜ் உண்டு. அப்ஸல்யூட் ப்ரிவிலெஜ் என்று சொன்னால், அதுபற்றி யாரும் கோர்ட்டுகளிலே எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஆனால் அந்த அப்ஸல்யூட் ப்ரிவிலெஜ்ஜுக்கு கட்டுப்பாடு ஒன்று இருக்கிறது. அந்தக் கட்டுப்பாடு என்ன என்று சொன்னால், சொல்லுகிறவர்கள் ' பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன் ' என்று சொல்லவேண்டும். அப்படி பொறுப்பு ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று சொல்லிவிட்டால், உடனடியாக சர்க்கார் தரப்பில் இருக்கிறவர்களுக்கு அதை ப்ரிவிலெஜ் கமிட்டிக்கு விட்டு "சொன்னவர் சரியாகச் சொன்னாரா, இல்லையா" என்று விசாரிக்க உரிமை இருக்கிறது. அந்தமாதிரி*



17th March 1966] *[திரு. ஆர். வெங்கட்டராமன்]*

*கனம் உறுப்பினர் அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று சொன்னால் அதை ப்ரிவிலெஜ் கமிட்டிக்கு விடத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.*

*திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் கனம் அங்கத்தினர் பேசுவதைத் தடுக்க மிரட்டல் செய்கிறார்களே யொழிய எதை ப்ரிவிலெஜ் கமிட்டிக்கு விடுவது ? இந்த நடவடிக்கைகளைப் பற்றி முதலில் விசாரணை செய்யட்டும். கனம் அங்கத்தினர் அவர்கள் இங்கே சொல்லுகிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். இதில் ஒன்றும் இல்லை என்றால் இல்லை என்று போகட்டும். இதை எப்படி ப்ரிவிலெஜ் கமிட்டிக்குக் கொண்டு போக முடியும் ?*

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் நீண்டகாலமாக இருக்கக் கூடிய அங்கத்தினர் தான். எல்லோருக்கும் எல்லாம் தெரியும் என்று நினைத்துக் கொள்வது சரியல்ல . . (திரு. மீ. கலியாணசுந்தரம் : அந்த அகம்பாவம் எனக்கு இல்லை.) இதைக் குறித்து பார்லிமெண்ட்டில் டாக்டர் சின்ஹா கேஸ் என்று ஒரு கேஸ் இருக்கிறது. ப்ரிவிலெஜ் கமிட்டி கேஸ். டாக்டர் சின்ஹா அவர்கள் ஒரு உறுப்பினரைப் பற்றி இந்தவிதமான அவதூறு சொன்னார். அப்போது பொறுப்பு ஏற்றுக்கொள்ளுகிறீர்களா என்று கேட்டு, ப்ரிவிலெஜ் கமிட்டிக்கு விடப்பட்டு, சரியா, இல்லையா என்று விசாரணை செய்யப்பட்டிருக்கிறது. இதிலே பொறுப்பு ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று எந்த அங்கத்தினர் சொன்னாலும் இதை ப்ரிவிலெஜ் கமிட்டிக்கு விடத் தயாராக இருக்கிறேன். இந்தப் பொறுப்பை கனம் உறுப்பினர் தெரிந்துகொள்ளவேண்டும். ப்ரிவிலெஜ் கமிட்டிக்குப் போய், கமிட்டி சரி என்று சொன்னால் நான் விலகி விடுவேன். தவறு என்று ப்ரிவிலெஜ் கமிட்டியில் ஏற்படுமானால், கனம் உறுப்பினர் விலகுவதற்குத் தயாராக இருக்கவேண்டும்.*

*திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அண்மையில் பாராளுமன்றக் கூட்டத்தின்போது ஒரு மாதப் பத்திரிகையில் வந்த செய்தி பாராளுமன்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. மனோகரன் அவர்களால் பாராளுமன்றத்தில் படித்துக் காட்டப்பட்டது. அதுவும் உள் துறை அமைச்சர் திரு. நந்தா அவர்களைப் பற்றியும், பதவி விலகிய முன்னாள் அமைச்சர் திரு. டி.டி.கே. அவர்களைப் பற்றியும் வந்துள்ள தகவலை திரு. மனோகரன் அவர்கள் பாராளுமன்றத்தில் படித்துக் காட்டியிருக்கிறார். நமது கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கூறுவது போல அங்கே பயங்கர மிரட்டல் எதும் நடைபெறவில்லை என்று இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.*

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த நிலைமை பல அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கலாம், தெரியாமலும் இருக்கலாம் ஆனால் இதுதான் திட்டவட்டமான நிலைமை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.*

[17th March 1966

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதை மிரட்டல் என்று எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. சட்ட நிலைமையைத்தான் அவர்கள் எடுத்து விளக்கினார். நான் கனம் அங்கத்தினர் பேசும்போது குறுக்கிட்டுக் கேட்க விரும்பியது, பத்திரிக்கையில் வந்திருப்பதை கனம் அங்கத்தினர் நம்புகிறார்களா அல்லது இந்த மாதிரி வந்திருக்கிறது என்று சொல்ல மட்டும் விரும்புகிறாரா, அப்படி அதில் இருக்கிற விஷயங்கள் உண்மை என்று சொன்னால் அவரும் பொறுப்பு ஏற்கத் தயாராக இருக்கிறார்களா என்பது தான்.

**திரு. மு. கருணாநிதி :** கனம் உறுப்பினர் தர்மலிங்கம் அவர்கள் ஜனசக்தி என்ற பத்திரிக்கையில் வந்த இன்னொரு பெயர் சொல்லத் தேவையில்லாத பத்திரிகையில் வந்த செய்தியை ஜனசக்தியில் எடுத்துப் பிரசுரிந்ததை, அந்தச் செய்தியை எடுத்துச் சொன்னார்கள். அப்போது கனம் அமைச்சர் அவர்கள், அவைகள் உண்மை என்று நிரூபிக்கப்பட்டால் தான் பதவி விலகத் தயாராக இருக்கிறேன் என்றும், தவறு என்று நிரூபிக்கப்பட்டால் இதைக் குறிப்பிட்ட உறுப்பினர் தர்மலிங்கம் அவர்கள் பதவி விலக வேண்டும் என்றும் சொன்னார்கள். கனம் உறுப்பினர் தர்மலிங்கம் அவர்கள் நாட்டில் வருகிற பத்திரிக்கைகளில் வருகிற செய்தியைப் பற்றித் தான் சொன்னார்கள். கனம் அமைச்சர் அவர்கள் இங்கே போடுகிற பந்தயத்தை, விதிக்கிற நிபந்தனையை, அந்தப் பத்திரிகைக்காரர்களிடத்தில் போட்டு, செய்திகள் உண்மையாக இருக்குமானால் தான் பதவி விலகுவதாகவும், தவறு என்று ஏற்பட்டால் அந்தப் பத்திரிக்கையையே மூடி விடவேண்டும் என்றும் கனம் அமைச்சருடைய விளக்கம் அமையுமானால் எங்களைப் போல சந்தோஷம் அடைகிறவர்கள் வேறு இருக்க மாட்டார்கள் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சாக்கடைகளில் எல்லோருமே நீந்தி விளையாடுவதில்லை. சட்ட சபையில் இருக்கிற நிலைமைவேறு, சாக்கடை நிலைமை வேறு. சட்ட சபையில் சொன்னால் அதைப் பொறுப்பாக ஏற்று விசாரணை செய்யத் தயாராக இருக்கிறேன். சாக்கடைகளில் பேசுகிற பேச்சுக்கு பதில் சொல்லத் தேவையில்லை, அவசியமும் இல்லை.

(காங்கிரஸ் கட்சி தரப்பில் ஆர்வாரம்.)

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்புக்குரிய தொழில் அமைச்சர் அவர்களிடம் நிச்சயமாக நான் இந்த பதிலை எதிர் பார்க்கவில்லை. காரணம், சட்ட சபையும், சாக்கடையும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். சாக்கடை என்று அந்தப் பத்திரிக்கையைக் குறிப்பிட்டிருக்கிறார். உண்மையிலேயே அந்தச் சாக்கடையில் மிதக்கிறவர்கள் பலர் இங்கே இருக்கிற காரணத்தினால், தயவு செய்து மிதக்காதீர்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.



17th March 1966] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

கனம் அமைச்சர் அவர்கள், இந்தப் பத்திரிக்கைகளில் வருவதை வைத்துக் கொண்டு, அதை ஆதாரமாகக் கொண்டு பேசுகிறேன் என்று, அதை நிரூபிக்கத் தயாரா என்றும், உண்மை என்று ஏற்பட்டால் தான் விலகத் தயாராக இருப்பதாகவும் இல்லை என்று ஏற்பட்டால் நான் விலகத் தயாரா என்றும் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக கனம் அமைச்சர் அவர்கள் இந்தச் செய்திகளை மறுத்திருந்தால், நான் அப்படியே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் இன்றைய வரையில் சம்பந்தப்பட்டவர்கள் யாரும் பதில் சொல்லாத காரணத்தினால், இது குறித்து இறுதியிலே சொல்லுகிறேன் என்ற முறையில் ஒரு வார்த்தை கூடச் சொல்லாத காரணத்தினால் என்ன சொல்லுவது என்று புரிய வில்லை. பத்திரிக்கையிலே வந்திருக்கிற செய்தி மாத்திரமல்ல, சட்டசபை சம்பந்தப்பட்டவரையில் பேசப்பட்ட பேச்சுக்கள், எழுதப்பட்ட எழுத்துக்கள் இவைகளையெல்லாம் எடுத்து விவாதிப்பதற்கு இந்த சட்டமன்றத்திற்கு நிச்சயம் 12-00 noon.
உரிமை இருக்கிறது என்று கருதுகிறேன். தொழில் அமைச்சர் இங்கே இருக்கிறார்கள், அவரைப் பற்றி ஒரு சம்பவம் என்று சொன்னால், அவரைப்பற்றி பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சட்டசபை அங்கத்தினர்கள் அத்தனை பேர்களையும் பாதிப்பதாகும் என்று கருதி, இதைப்பற்றி நான் பேச ஆரம்பித்தேன். தனிப்பட்டமுறையில் அவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல. இந்த அரசாங்கம் செய்கின்ற, அமைச்சர்கள் செய்கின்ற நல்ல காரியமாக இருந்தாலும் சரி, கெட்ட காரியமாக இருந்தாலும் சரி, அங்கத்தினர்கள் அத்தனை பேர்களுக்கும் அதில் பங்கு உண்டு என்று கருதுகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு அபகீர்த்தி வர கூடாது என்று கருதித் தான் நான் இதுபற்றி சொல்ல முற்பட்டேன். அத்தனைக்கும் பொறுப்பாளி அவர் தான் என்று நான் இப்பொழுது குற்றம் சுமத்த விரும்பவில்லை. இறுதியிலாவது இதெல்லாம் தவறு என்று சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

சட்டசபையில் சொல்லிய கருத்துக்களையெல்லாம் நிரூபிக்க முடியுமா என்று சவால் விடுவது நல்லது அல்ல. 'நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய பல ஊழல்களை சுட்டிக்காட்டினால், 'உங்களுக்கு எப்படித் தெரியும், யார் சொன்னார்கள்? நடந்திருக்கிறதா, இல்லையா, அதை நிரூபிக்க வேண்டும்' என்று கேட்பது முறை அல்ல. அது சரிதானா, நடந்திருக்கிறதா என்று பரிசீலனை செய்யவேண்டும் அதற்குள் கனம் உதவி சபாநாயகர் அவர்கள் மணியைப் பார்க்கிறார்கள். எனக்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய அவகாசத்தை 4, 5 பேர்கள் எடுத்துக்கொண்டுவிட்டார்கள்.

6,900 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்ற கணக்கைப் பார்க்கும்பொழுது ஏற்கனவே இங்கே ஆரம்பிக்கப்பட்டு, நடந்து வருகிற பல தொழிற்சாலைகளும் இந்தக் கணக்கில் சேர்க்கப்பட்டு, இங்கே இந்தப் புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்

கிறது என்று நான் கருதுகிறேன். அரசாங்கம் பல கோடி ரூபாய் செலவு செய்து சிறு தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறது. இவைகளில் கிண்டியில் கண்ணாடித் தொழிற்சாலையும் ஒன்று, இந்தக் கண்ணாடித் தொழிற்சாலையில் நடைபெற்றுவருகிற ஒரு சில ஊழல்களை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கண்ணாடித் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முன்பு, அதிலே தொழில் நுணுக்க வல்லுனராக ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் ஜப்பான் நாட்டிற்கு பயிற்சி பெறுவதற்காக சர்க்காருடைய செலவில் அனுப்பி வைக்கப்பட்டார். அது முடிந்ததற்குப் பிறகு இங்கிலாந்து நாட்டிற்கு அவர் கண்ணாடித் தொழில் நுணுக்கம் சம்பந்தமாக பயிற்சி பெறுவதற்கு அனுப்பிவைக்கப்பட்டார். அப்படி அவர் அனுப்பி வைக்கப்பட்டதற்கு ஆன செலவு அத்தனையும் நமது அரசாங்கம் ஏற்றிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அவர் பயிற்சியை முடித்துக்கொண்டு வந்த பிறகு கண்ணாடித் தொழிற்சாலையில் பணிபுரிகிறாரா என்றால், இல்லை. அவர் வேறு இலாகாவுக்கு மாற்றப்பட்டிருக்கிறார். டைரக்டர் ஆப் ஹாண்டி கிராப்ட்ஸ் இலாகாவுக்கு மாற்றப்பட்டிருக்கிறார். இவ்வளவு செலவு செய்து படிக்க வைத்து வந்தவருடைய சேவை அந்தத் தொழிலுக்கு சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு இல்லை என்று பார்க்கிறபொழுது, இவ்வளவு பணம் நஷ்டம் ஆனதற்கு யார் பொறுப்பு என்பதை இந்தச் சபையின் முன்னால் கூறவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது போலவே ஆரம்பிக்கிறோம் என்று சொல்லி 10 ஆண்டு காலமாக திட்டம் போட்டு, சமீபத்தில் 18 மாதங்களுக்கு முன்பு தான் இந்தத் தொழிற்சாலை துவக்கப்பட்டது. அதிலே இருக்கிற கோளாறுகளைச் சொல்லவேண்டும் என்று சொன்னால் இப்பொழுது நேரம் இல்லை. இந்தத் தொழிற்சாலையில் சமீபத்தில் ஒரு ஃபர்னஸ் வெடித்துவிட்டதன் காரணமாக இன்னும் ஒரு ஆண்டு காலத்திற்கு இந்தத் தொழிற்சாலை நடக்குமா, நடக்காதா என்ற சந்தேகம் இருக்கிறது. இப்படிப்பட்ட தொழிற்சாலையை சரிவர கண்காணிக்கவேண்டும். தொழில் நுணுக்க பயிற்சி பெற்றது அவருடைய உத்தியோக உயர்வுக்காகவே தவிர கண்ணாடி தொழிற்சாலைக்காக அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அது போலவே பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவசரமாக ஒன்றிரண்டை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய அரசினரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற பல தொழிற்சாலைகளில் அரக்கோணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற உருக்கு வார்ப்பட தொழிற்சாலையும் ஒன்று. இந்த உருக்குத் தொழிற்சாலைக்கு வேண்டிய சாமான்கள், வேண்டிய தாதுப் பொருள்கள் பூராவும் இங்கு கிடைக்கிறதா என்று அரசாங்கம் சர்வே செய்திருக்கிறதோ, என்னவோ எனக்குத் தெரியாது. இல்லை என்று கேள்விப்படுகிறேன். உண்மையை அறிய விரும்புகிறேன். தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கணக்குப்படி அந்தத் திட்டத்தை எட்டிப் பிடிக்கிற அளவுக்கு அந்தத் தொழிற்சாலை இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





அதுபோல, திருமழிசையில் இயந்திர செங்கல் சூளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, அதற்காக ரூ. 36 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஸதர்ன் பிரிக் வொர்க்ஸ் என்ற தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதில் அரசாங்கத்திற்கு பங்கு இருக்கிறது. (திரு. கே. டி. கோசல்ராம்: அரசுக்கு பங்கு கிடையாது) ஏற்றுக்கொள்ளுகிறேன். அதற்கு நம்முடைய அரசு சார்பிலே டைரக்டர் ஆப் இண்டஸ்டிரிஸ் ஆலோசகராக இருப்பாரோ என்று நான் கருதுகிறேன். அதுவும் இல்லை என்றால், சரி. அது இயங்குகின்ற முறையைப் பார்க்கிறபொழுது அதிலே ஏற்பட்டிருக்கிற சிலவற்றை இங்கே குறிப்பிடலாம் என்றாலும் கூட, சம்பந்தப்பட்டவர்களுக்கு அங்கே வேலை இல்லை என்று சொல்லுகிற காரணத்தினால் அதை விட்டுவிடுகிறேன்.

ஜாயிண்டு டைரக்டர் ஆப் இண்டஸ்ரீஸ் (கோப்பரேஷன்) என்று கூட்டுறவுத்துறைக்கு ஆக்கம் அளிப்பதற்காக தொழில் இயக்குனரின் கீழே ஒருவர் இருந்து கொண்டிருந்தாலும், சமீப காலத்தில் அவர் இயக்குனரைக் கேட்காமலேயே எதையும் செய்யலாம் என்று அரசாங்கம் ஒரு தனி உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். இதற்குக் காரணம் நிர்வாகத்தில் ஏற்பட்ட கோளாறு? அல்லது இயக்குனருக்கும் இந்த உத்தியோகஸ்தருக்கும் ஏற்பட்ட தகராறு? அதன் காரணமாக பல தொழில்கள் பாதிக்கப்பட்டு, அரசாங்கமே நேரிடையாக பொறுப்பேற்று அவர்கள் மூலம் தகவல் கேட்டு செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கும்பகோணத்தில் அரசாங்கம் நடத்தும் பித்தளைப் பாத்திரத் தொழிற்சாலையில் ஏறத்தாழ ரூ. 25,000 மோசடி நடந்திருக்கிறது என்று தெரியவருகிறது. இந்த மோசடியில் ஈடுபட்ட அதிகாரிக்கு இப்பொழுது பதவி உயர்வு கொடுப்பது பற்றி அரசாங்கம் யோசித்துக்கொண்டிருப்பதாகக் கூட நான் கேள்விப்படுகிறேன். இல்லை என்று சொன்னால், அதை எக்ஸ் பிராஞ்சுக்கு அனுப்பி, தகுந்த ஆதாரம் இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடலூரில் அரசினர் தச்சுப் பட்டறை ஒன்று இருக்கிறது. அதிலே பல ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக அதிகாரி மீது வழக்குப் போட சிபார்சு செய்யப்பட்டது. இது வரையில் அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதுபோல பெரம்பூர் அரசினர் காலணித் தொழிற்சாலையில் பல ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவைகளையெல்லாம் உடனே கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதோடு, ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு மான்ய விவாதத்தின்போது பேசுகிறபொழுது சேலம் அம்மாபேட்டை விவர்ஸ் கோவாபரேடிவ் சொஸைடியில் நடக்கிற ஊழல்களைப்பற்றி நான் குறிப்பிட்டேன். அமைச்சர் அப்பொழுது இங்கே இல்லை. ஆனால் நான் குறிப்பிட்டது அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். அதைப்

போல பல ஊழல்கள் நடைபெற்று வருகின்றன. அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். கூட்டுறவுத் துறையில் ஸிம்ப்ஸன் குரூப் தொழிலாளர்கள் சங்கம் என்ற சங்கம் தொழிலாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அந்த சங்கத்திலிருந்து சிலருக்கு கடன் கொடுக்கப்படுவதில்லை. தொழிற் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்தால் தான் கடன் கொடுக்கப்படும் என்ற ஒரு விதி இருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்டிருக்கிற கூட்டுறவு விதி 17, 5 (1) விதியை மாற்றி, அங்கு வேலை செய்கின்ற அத்தனை தொழிலாளர்களுக்கும், எந்த சங்கத்தைச் சேர்ந்தவர்களாக் இருந்தாலும், அதைப்பற்றி கவலை இல்லை, கூட்டுறவு சங்கத்தில் அங்கம் வகிக்க உரிமை இருக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற துறை மான்யக் கோரிக்கையை வரவேற்கிறேன். தொழில் இலாகா இந்த மாநிலத்திற்கே விசேட பெருமை தரக்கூடிய ஒன்றிரண்டு இலாகாக்களில் ஒன்று. தென் நாடு, வட நாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. பாரத நாடு ஒன்று தான் நான் அறிந்த நாடு. இந்தியாவின் மத்திய பகுதியாக விந்திய சாத்பூரா மலையாக பழைய காலத்திலிருந்து இருந்து வருகிறது. அப்படிப்பார்த்தால் பம்பாய் ராஜ்யத்தின் பெரும் பகுதி உள்ளபடியே தென் இந்தியாவில் இருக்கிறது. தென் இந்தியாவிற்கு பம்பாய் ராஜ்யமும் சேர்த்து தான் பெருமை வரவேண்டும் என்று நான் நினைக்கவில்லை. உலகத் தொழிற் காட்சி சாலையை நடத்துவதற்கு இந்த ராஜ்யத்திற்கு தைரியம் வந்திருக்கிறது என்றால், உலக நாடுகள் இந்த ராஜ்யத்திலுள்ள தொழில்களை புரிந்துகொள்ள முடியும், பாராட்ட முடியும் என்ற ஒரு தைரியம் இந்த ராஜ்யத்திற்கு இருக்கிறது என்றால், இந்த ராஜ்யம் தொழில்துறையில் முன்னேறி வருகிறது என்பதில் சந்தேகமே இல்லை. புள்ளி விவரத்தைப் பார்த்தால் கூட கடந்த 5 வருஷ காலத்தில் ரூ. 110 கோடி அளவுக்கு ராஜ்யத்தில் வருமானம் தொழில் துறையில் மாத்திரம் பெருகி இருக்கிறது, அந்த அளவுக்கு தொழில் துறை உதவி புரிந்திருக்கிறது. இந்த ராஜ்யத்திலுள்ள வருமானத்தில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கு தொழில் மூலமாக இந்த ராஜ்யம் பெருகிறது என்றால், இந்த ராஜ்யத்தில் எத்தகைய தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. சர்க்கார் துறை, தனியார் துறை, கூட்டுறவு துறை என்றெல்லாம் பிரித்துப் பேசுவதற்கு இந்த நாட்டில் இடம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும், வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால், எல்லாவிதமான அமைப்பும் இருந்தால் தான் வளர்ச்சி ஏற்பட முடியும். ஆகவே, இந்த ராஜ்யத்திலும் அத்தகைய நிலையைக் கொள்வதில் தவறு இல்லை. அந்த அளவுக்கு ராஜ்யத்தில் தொழில் துறை முன்னேறி வந்திருக்கிறது. அரசாங்கம் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபொழுது, ஒரு பக்கத்தில் தனியார் துறையில் தொழிலாளர்கள் வளர்ச்சி





அடைவதோடுகூட, அரசாங்கத் தரப்பிலும் பல கோடி ரூபாய் செலவில் பல தொழில்களை மேற்கொள்வதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். அந்த முயற்சி வரவேற்கத் தகுந்தது.

கூட்டுறவுத் துறையில் பெருமை அளிக்கும் வகையில் 13 கூட்டுறவு மில்கள் இயங்குகின்றன. சோஷலிச ரீதியில் அந்த மில்களிலெல்லாம் வேலை செய்யும் தொழிலாளிகளை அதிலே பங்காளிகளாக ஆக்கவேண்டும் என்கிற கருத்தைத் தெரிவித்தேன். கிட்டத்தட்ட 5,000—6,000 தொழிலாளர்கள் கூட்டுறவு மில்களில் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த 5,000—6,000 தொழிலாளிகளுக்கும் ஒரு மில்லைத் தவிர, மற்ற எந்த மில்லிலும் பங்காளியாக ஆக்கப்படவில்லை. மூலதனக் கடன் கொடுத்து, கூட்டுறவு மில்களில் எல்லாம் தொழிலாளர்களைப் பங்காளிகளாக்க வேண்டும். இரண்டாவது மகாயுத்தகாலத்தில் இங்கிலாந்திலே அங்கேயுள்ள முதல் அமைச்சர் தெரிவித்தார், விசைத்தறியை Second rank defence என்கிற கருத்தைத் தெரிவித்தார். 10,000 விசைத் தறிகளை அமைக்க சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. காலாகாலத்தில் அவற்றை உபயோகிக்க வழி வகை செய்யப் படவேண்டும். கைத்தறித் தொழிலாளர்களுக்குக் கெடுதல் வந்துவிடாமல் கண்ணும் கருத்துமாக இருந்து, கூட்டுறவுத் துறையிலே வேலை செய்கிறவர்களை ஆக்கமும், ஊக்கமும் அளித்து பாதுகாப்பு அளித்து வருவது போல பிற கைத்தறித் தொழிலாளர்க்கும் போதிய உதவி அளிக்க வேண்டும். கஷ்டம் வந்த காலத்திலெல்லாம் கைத்தறித் தொழிலாளர்களை பட்டினியிலிருந்து பாதுகாத்திருக்கிறோம். இன்னும் அவர்கள் வளர்ச்சி அடைய வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது இருக்கக் கூடிய கூட்டுறவு நூற்பு மில்களையெல்லாம் இணைத்து, ரீஜனல் அளவில் ஒரு ரீஜனல் அட்மினிஸ்ட்ரேடரை வைத்துச் செயல்படுவது நலமாக இருக்குமா என்று யோசிக்க வேண்டும். திருநெல்வேலியில் சமீபத்தில் பூகர்ப்ப சாஸ்திர ஆராய்ச்சி செய்ததின் பேரில், அங்கே செம்பு கிடைக்கிறது என்றும், மாக்னைட் என்கிற மணல் கிடைக்கிறது என்றும், தகவல் கிடைத்திருக்கிறது. ஆராய்ச்சி செய்யச் செய்ய பூகர்ப்ப சாஸ்திரிகள் மூலம் நுணுக்கமான பல உலோகப் பொருட்கள் இன்னும் தென்படும். ஆகவே ஆராய்ச்சி தேவை என்பதைப் பார்க்கிறோம்.

திருச்செந்தூர் பக்கத்தில் குதிரைமொழித்தேரி என்கிற ரிசர்வ்ட் பாரஸ்ட் இருக்கிறது. மண் மேடிட்டிருக்கிறது. அதைப் பார்த்தால், அங்கே கனி வளம் இருக்கலாம் என்று கருத்து இருக்கிறது. அதை ஜாக்கிரதையாக பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அது போலவே, தூத்துக்குடி அனல் மின்சாரம் நிலையம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. வளரும் பெரிய துறைமுகப்பகுதியான தூத்துக்குடியைச் சுற்றிலும் வேறு பல வகைகளிலும் அபிவிருத்தி அடைய ஆதார வசதிகளைச் செய்ய வேண்டும். எண்ணெய் சுத்திகரிப்பாலையைத் தூத்துக்குடி அருகில் அமைக்க வேண்டும்.

திருச்சிக்கு அப்பால் கனரக தொழில்கள் வளரக் குந்தகமாக இருக்கும் காரணங்களில் மிக முக்கியமானது, அங்கே பிராட்கேஜ் வசதி இல்லை என்பதுதான். தொழில் இலாகா அந்த வசதியையும் பெற்று அங்கேயும் கனரகத் தொழில்கள் அமைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

கிண்டியில் இயங்கும் கூட்டுறவு பாங்கி சிரமமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. மற்றொரு கனம் அங்கத்தினர் ரீ-ஃபைனான்ஸிங்கிற்கு வசதி செய்யலாம் என்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். இங்கே இருக்கக்கூடிய ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள் இவைகளுடைய எண்டோமென்ட் பணங்களை அதிலே டெபாசிட் செய்து வைப்பதற்கு தூண்டுதல் செய்து இந்த இண்டஸ்ட்ரியல் பாங்கிற்கு பொருளாதார சிரமத்தைப் போக்க வழிவகை செய்யலாம். சர்க்காரும், பங்கு, கடன் மூலம் துணை செய்ய முன்வரவேண்டும். 411 தொழில்கள் கூட்டுறவு முறையிலே ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான விவரம் இங்கே இருக்கிறது. சிறிய சிறிய தொழில்களுக்கு சிரமம் வராமல், வளர்ச்சிக்குத் தடையில்லாமல் தக்க வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

பொற்கொல்லருக்குக் கொடுக்கப்பட்ட கடன், தொழில்களை மாற்றும் போது பெற்ற கடனை உடனே திரும்பக் கொடுக்க வேண்டிய கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே மற்ற தொழில்களுக்கு மாற்றினாலும் இந்தக் கடனைக் கொடுக்க வேண்டும். லைசென்ஸ் காலத்தை நீடித்துக் கொடுத்தால் விட்டுப் போனவர்கள் லைசென்ஸ் எடுத்துக்கொள்ள அவர்களுக்கு மற்றொரு சந்தர்ப்பம் கொடுத்தால் விட்டுப்போனவர்கள் புதிதாக பதிவு செய்துகொள்ள சௌகரியமாக இருக்கும் என்கிற காரணத்தால், அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

* **திரு. து. ப. அழகமுத்து :** கனம் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது பேசும்போது, இந்த சர்க்கார் மூன்று திட்டங்களுக்கும் விளக்கங்கள் கொடுத்து விட்டு, நான்காவது திட்டத்தில் கொள்கை மாற்றம் ஏற்பட்டு இருப்பதாகவும், தொழில்களை சர்க்கார் துறையில் செய்யப் போகிறோம் என்றும் கூறியிருப்பதற்காக நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். அதே சமயத்தில், தனியார் துறைக்கு மூலதனம் கொடுப்பது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியானால், அவர்கள் தனியார் துறைக்குப் போக மீதம் உள்ள தொழில்களை மட்டும்தான் நடத்தப் போகிறார்களா ? தனியார் துறையில் நடத்தும் தொழில்களில் லாபம் இருந்தால், ஏற்றுக் கொள்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதற்குப் பின்னால், இந்த மூன்று திட்டங்களிலும் ஏற்பட்டிருக்கிற தொழில் வளர்ச்சி பற்றியும், அதன்மூலம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள செல்வ வளர்ச்சி பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல, மூன்றாவது திட்டத்திலே 18 சத விகிதம் தொழில் வளர்ச்சி





மூலமாக வருமானம் அதிகரித்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். முன்பு 15 சத விகிதம் ஆக இருந்தது இப்பொழுது 18 சத விகிதமாக உயர்ந்திருக்கிறது. மொத்தத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை அதிகமாக்கியிருக்கிறார்கள். தொழிற்சாலைகளின் கணக்குப் பார்த்தால், கிடைக்கும் வருமானம் போதுமானதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் மாநில வருமானம் மூன்று சதவிகிதம் தான் உயர்ந்திருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் முதலீடு ஆறு மடங்கு அதிகமாயிருக்கிறது என்று கூறினார். அப்படியானால் நாட்டின் வருமானம் மூன்று மடங்குதான் உயர்ந்திருக்கிறது. ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில்கள் சரியான முறையில் செயல்படவில்லை என்பதுதான் குறையாக இருக்கிறது. தொழிற்சாலைகள் அதிகமாக ஆக, அவைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைக்க சர்க்கார் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படி பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்களா என்றால், இல்லை என்பதை அறியக் கிடக்கிறோம். தொழில் பேட்டைகளில் சர்க்காரின் மூலதனம் கொண்டு தொழில்களைத் தொடங்கியவர்கள், மூலப் பொருள்கள் கிடைக்காமல், பல வேலைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைக் கேட்கிறோம். தொழிலை ஆரம்பிக்கச் சொல்லிவிட்டு மூலப்பொருள் கொடுக்கவில்லை என்றால், தொழில் வளர்ச்சி எப்படி ஏற்பட முடியும் ? தொழில் கொள்கை வகுக்கப்பட்டு, தொழில்கள் பெருகும்போது, அதன் மூலமாக நாட்டின் வருமானம் பெருகும். அதே சமயத்திலே, வேலை வாய்ப்பும் அதிகரிக்கும். தொழில் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. மூலதனம் அதிகமாகப் போட்டிருக்கிறது. ஆனால் கிடைத்த வருமானம் குறைவாகவும் ஏற்பட்ட வேலை வாய்ப்புக்கள் என்ன என்பதற்கான கணக்குகள் கொடுக்காமல் இருக்கிறது சர்க்கார் குறிப்பு. வேலை வாய்ப்பு எந்த அளவுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது ? எவ்வளவு பர்சென்டேஜ் உயர்ந்திருக்கிறது ? என்பதற்கான கணக்கை தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே கொடுக்கவில்லை. அதற்கான காரணம் என்ன என்றும் புரியவில்லை.

கூட்டுறவு மானியத்தின் பேரில் பேசும்போது, கைத்தறி நெசவாளர்கள் தொழிலைப்பற்றி குறிப்பிட்டேன். தொழில் அமைச்சர் இந்த மானியத்திற்கு பதிலளிக்கும்போது, அதைப் பற்றியும் குறிப்பிடுவார்கள் என்று கூறினார்கள். கைத்தறித் தொழிலுக்கு மீளா செலவினத்தில் 89 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அப்படி ஒதுக்கியதோடு மட்டுமல்லாமல், கைத்தறிக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறோம், ஆனால் அவை பயன்படுத்தப் படுகிறதா அல்லது வீண் செலவாகிறதா என்பதையெல்லாம் கணக்கெடுத்துப் பார்த்தால், அந்த வகையில் சர்க்கார் அக்கறை எடுக்கவில்லை என்பதைப் பார்க்கிறோம். தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தைப்பற்றி அன்றைக்கு ஒன்றிரண்டு குறைகளைக் குறிப்பிட்டேன். இன்றைக்கும் வேறு சில குறைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். விளம்பரத்திற்கு என்று சர்க்காரே ஒரு தொகையைக் கொடுக்கிறது. ஆனால், அவர்கள் விளம்பரச் செலவுக்கு சர்க்காரையும் விட, மிக அதிகமாகச் செலவு செய்

கிறார்கள். அதே போல, ட்ராவெலிங் அலவன்ஸ் வகையிலும் அதிகமாகச் செலவு செய்கிறார்கள். ஏன்? அந்த அளவுக்கு அவர்களை தட்டிக் கேட்கும் நிலையில் சர்க்கார் இல்லையா? அதனுடைய தலைவர் திரு. நாச்சியப்பா 'ஏர் டிக்கட்' வாங்கி அதைக் கான்சல் செய்த வகையில் மட்டும் மூவாயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது. இப்படி வீண்செலவு செய்யலாமா? இதைச் சர்க்கார் கண்காணிக்க வேண்டாமா?

கொள்முதல் செய்வதில் குறைத்து மதிப்பிடுகிறார்கள் என்று நான் சென்ற தடவை குறிப்பிட்டேன். அப்படி குறைத்து மதிப்பிட்டு லாபத்தைக் குறைத்துக் காட்டுகிறார்களே, இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? ஈரோட்டில் துணி காலண்டர் செய்யும் தொழிற்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு சர்க்கார் 4 லட்சம் ரூபாயும், சொஸைடி 6 லட்சம் ரூபாயும் முதலீடு செய்திருக்கிறது. அந்தத் தொழில் சரிவர நடந்திருக்கிறதா என்றால், ஆண்டுக்காண்டு நஷ்டம் காட்டிக் கொண்டிருக்கிறது. 1961-62-ல் 10 ஆயிரம் ரூபாயும், 1962-63-ல் 87 ஆயிரம் ரூபாயும், 1963-64-ல் 1 லட்சத்து 55 ஆயிரம் ரூபாயும், 1964-65-ல் 1 லட்சத்து 91 ஆயிரம் ரூபாயும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் ஒரு தொழிலை நடத்துவதென்றால், அதில் என்ன பொருள் இருக்க முடியும்?

ப்ளீடிங் மெட்ராஸ் துணி விற்பனை செய்வதற்காகக் கொள்முதல் செய்தார்கள். கிட்டத்தட்ட கஜம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் 3 பைசா வீதம் 7 லட்சத்து 37 ஆயிரம் கஜம் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், இப்பொழுது அதனுடைய விலை ரூ. 1.85 ஆக இருக்கிறது. ஏன் இந்தக் கொள்முதல்? வேண்டியவர்களிடத்தில் கொள்முதல் செய்து சொஸைட்டி ஏன் இந்த நஷ்டத்தை அடையவேண்டும் என்பதைச் சர்க்கார் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, கைத்தொழில் நெசவுத் தொழிலாளர்களுக்குச் செய்யப்படும் உதவிகள் வீண் செலவு செய்யப்படுகின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். திரு. நாச்சியப்பா அவர்கள் அமைச்சர் அவர்களுக்கு மிக நெருங்கிய நண்பர் என்று கூறுகிறார்கள். அந்தக் காரணத்தால், அதைக் கண்காணிக்காமல் இருந்துவிட்டால் அது அவ்வளவு நல்லதாக இருக்காது என்று கூறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு செய்யப்படுகிற உதவிகளில் ஒன்று, காண்ட்ரிப்யூடரி ப்ராவிடென்ட் பண்டு என்பது. இதிலே, நெசவாளிகள் பெறுகின்ற கூலிக்கு ரூபாய் ஒன்றுக்கு 6 காசு வீதமும், அரசாங்கம் 4 காசு வீதமும், தொழிலாளர் 4 காசு வீதமும், சம்பந்தப்பட்ட சங்கம் 2 காசு வீதமும் கொடுக்கிறார்கள். இப்படிக் கொடுக்கின்ற பணம் அவர்கள் பெறுகின்ற கூலியினுடைய அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. ஆனால், இதிலே நடைமுறையில் என்ன சிக்கல் ஏற்படுகிறது என்றால், சில டெக்னிகல் பாயிண்ட்ஸ் என்று கூறுவார்கள். குறைந்த கூலி வாங்குகிறவன் குறைவான பணத்தைத்தான் பெற முடியும். அதிகக் கூலி வாங்குகிறவன் அதிகப் பணத்தைப் பெறுவான். இது நெய்கின்ற ரகம் அடிப்படையில் ஏற்படுகிற ஒன்றாகும். சொஸைட்டி நடத்துகிறவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அதிக வருமானம் வருகின்ற ரகத்தைக் கொடுக்கிறார்கள். தங்களுக்கு வேண்டாதவர்களுக்குக் குறைந்த வருமானம் வருகின்ற ரகத்தைக் கொடுக்கிறார்கள். இப்படிச் சில கோளாறுகள் சொஸைட்டி நடத்துபவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, நெசவாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய வருமானம் சமசந்தர்ப்பமாகக் கிடைக்கவில்லை என்பதைக் கூறி, இந்த நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன்.





**திரு. சா. கணேசன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்தைக் கூற அனுமதித்ததற்கு முதலிலே என்னுடைய நன்றி. இந்த மானியக் கோரிக்கைகள் சமர்ப்பணத்தின் மீது, எல்லாவற்றையும் விளக்கி அல்லது அலசிப் பேசுவதற்கு வேண்டிய காலமும் நேரமும் இல்லை. இனி, கட்சித் தலைவர்கள் பேசி, அமைச்சர் பேசி, எல்லாம் ஒன்றரை மணிக்குள்ளாக முடியவேண்டும் என்னும்போது ரொம்ப கஷ்டமாகவே இருக்கிறது. ஆகவே, நான் நிறைப் புள்ளி விவரங்களுக்குள்ளேயோ அல்லது பிறவற்றிலேயோ, எல்லாம் குறித்து வைத்திருந்தாலும் கூட, போகாமல், விருப்பத்தை அல்லது குறையை அல்லது தேவையை மட்டும் கூறி அமையலாம் என்று கருதுகிறேன்.

முதலில், ஒன்றை நான் திரும்பத் திரும்ப அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். தொழில் துறை வளம்பெற வேண்டுமானால், பர்மிட்-லைசென்ஸ் முறையைக் கைவிட வேண்டும். திறமையும் தகுதியும் உள்ளவர்கள் தொழிலை ஆக்குவதற்கு, தொழிலைக் கடைப்பிடித்து, தேவையை நிறைவு செய்வதற்கு உரிய நெறியிலே, அவர்களுக்குச் சுதந்திரமான வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். ஒன்றுக்கொன்று முட்டாமல் மோதாமல், நேர்மையான நெறியிலே, பல்வேறு தொழில்களும் போட்டாபோட்டி இடுவதற்கு வழிவகைகளை அரசு செய்யவேண்டும். அப்பொழுது தான் உற்பத்தி பெருகும், தரம் சிறக்கும், விலை குறையும். இந்த மூன்றையும் மனத்திலே கொண்டு, உற்பத்தியும் பெருக வேண்டும், தரமும் சிறக்க வேண்டும், விலையும் குறையவேண்டும் என்ற மூன்று நோக்கத்தையும் ஒரு நிலையாகக் கடைப்பிடித்துச் செல்வதுதான் பயனுடையது என்பதைப் பல்வேறு நாடுகளுக்கும் சென்று, இந்த தொழில் துறையிலே அனுபவம் பெற்று வந்திருக்கிற அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

அதோடு, தொழில் துறைகளை வகுக்கின்றபோது, சில செம்மையான வரையறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். முதலாவதாக, வளமான, சிறந்த, நிலப் பாங்கு உள்ள பூமியின் வளம் என்ன; விவசாயப் பகுதியிலே அந்த விவசாயத்திற்குத் தேவையான

[திரு. சா. கணேசன்] [17th March 1966

வற்றை வழங்குகிற அல்லது விவசாயத்தில் இருந்து பெறுகிற பண்டங்களை உற்பத்தி செய்கின்ற அந்தந் தொழில் துறைகளையன்றி பிற தொழில் துறைகளை அந்தப் பகுதியிலே வளர்க்கப் படாது. அப்படி வளர்த்தால் தொழில் துறையையும் பாதிக்கும், விவசாய உற்பத்தியையும் பாதிக்கும் என்பதை மனத்திலே கொண்டு அதற்கு வேண்டிய வழி துறைகளை வகுத்து, அந்த நெறியிலே செம்மையாக பயன்பட முயலவேண்டும் ஆட்சி.

அப்புறம், இயற்கை வளம்; நீர் வளம் நிரம்ப இல்லாத பகுதிகள், ஆங்காங்கு பல திட்டுக்கள், தாக்குகள் பாக்கெட்ஸ் என்று சொல்லுகிறோமே அவை இருக்கின்றன. இன்னும் பார்த்தால், ஒரு வளமான ஜில்லா என்று தோன்றும். கோவை ஜில்லா தொழில் துறையில் வளர்ந்திருக்கிறது என்று சொல்லிவிடுவது நியாயம். கணக்குப்படி சரியாக இருக்கலாம். புள்ளியும் தெளிவாகக் காட்டிவிடலாம். கோவை நகரத்தையும், அதன் சுற்றுப் புறத்தையும், இப்படிச் சில பகுதிகளைத் தள்ளிவிட்டுவிட்டால், எல்லாப் பகுதிகளும் தொழில் வளம் நிறைந்து விட்டன, சிறந்துவிட்டன என்று சொல்வதற்கில்லை. ஆங்காங்கு சில 'பாக்கெட்ஸ்'—தாக்கு அல்லது திட்டுக்கள் இருக்கின்றன. அங்கு கவனத்தைச் செலுத்தி, அதை மனத்திலே கொண்டு பார்த்தால், அந்த அளவிலே அவையும் கோவை நகரம் வளர்ந்திருக்கிற அளவு வளர்ந்திருப்பதாகக் கருத முடியாது. அதற்கு நேர்மாறான நிலையில் இல்லாமல், அது ஒரு தர அளவுக்கு வளம் பெறுவதற்கு வேண்டிய நெறிமுறைகளைக் கணித்து, அதைக் கடைப்பிடித்து நிறைவு செய்ய முயல வேண்டும்.

கோவை போன்று அல்லது அப்படிப்பட்ட ஜில்லாக்களல்லாமல், இராமநாதபுரம் போன்று பல துறைகளிலும் பிற்பட்ட ஜில்லாக்கள் உண்டு. ஜில்லாக்களில் பல தாலுக்காக்கள் உண்டு. அங்கெல்லாம் என்ன வகையான தொழில், அந்த நிலத்தின் தன்மை, சீதோஷ்ண ஸ்திதி, அங்கு தேவையானது அங்கு உற்பத்தி ஆனதா, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அங்கங்கே அந்தத் தொழில் முதலிலே தோன்ற, தோன்றி வளர வகை செய்ய வேண்டும்.

இனி, ஆட்சி எல்லா தொழில் துறையிலும் தாங்களே ஈடுபட வேண்டும் அல்லது தங்களுடைய மேல் அதிக்கம் இருக்கவேண்டும், தங்களுடைய பணம் நிறைய அதிலே போட வேண்டும் என்ற கருத்தை குறைக்க வேண்டும். அதே நேரத்தில் பிற தனிப்பட்டவர்களோ அல்லது தனிப்பட்ட ஸ்தாபனங்களோ கூட செயல்பட முடியாத, செயல்பட அஞ்சுகிற சில துறைகளை இவர்கள் மேற்கொண்டு, அதைக் கடைப்பிடித்து அதில் வளமான நிலையை உண்டாக்கி, அதைப் பிரித்து எங்கும் பரவலாக இயங்கும்படியாகச் செய்யவேண்டும். உதாரணமாக, நமது நாட்டிலே பல் வேறு துறைகளுக்கும் எரிபொருள்கள் மிகத் தேவைப்படுகின்றன. கரியோ, நிலக்கரியோ, மரமோ அல்லது எண்ணெய் வகைகளோ, அந்த வகையிலே எப்போதும் பற்றாக்குறை இருந்து கொண்டே இருக்கிறது. ஆனால், ஒரு அதிருஷ்டம் நமக்கு உண்டு. சூரியன் நமது



17th March 1966] [திரு. சா. கணேசன்]

பகுதியில் காய்கிற மாதிரி வேறு எங்கும் காய்வது இல்லை. அதைப் 12-30 p.m.
பற்றி எல்லாம் மேல்நாட்டு விஞ்ஞானப் பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. 'டெல்லி முதலிய சோதனைக்கூடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டவைகள் இருக்கின்றன. சூரிய வெப்பத்தை எரி பொருளாகப் பயன் படுத்தக்கூடும் ஆதலாலே சூரிய வெப்பத்தில் இருந்து பல்வேறு பொருள்களுக்கான எரிபொருள் தன்மையைப் பெற முயலவேண்டும். அதற்கு ஆகும் செலவையும் எளிதானதாகவும், குறைவானதாகவும் ஆக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இனி, காரைக்குடி போன்ற பகுதிகளை எடுத்துக்கொண்டால் அதுபோல் அநேக இடங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. அங்கெல்லாம் சுக்கான் பாறைகள்—லைம் ஸ்டோன் இருக்கிறது. கட்டடக் கலை அமைப்பை கணிப்பவர்கள் பழமை என்பதிலே வெறுப்பில்லாமல் அல்லது காதல் இல்லாமல் சமநோக்கோடு நின்று பார்க்கிறபோது சிமிட்டியைவிட சுண்ணாம்பினால் கட்டப்படுகிற கட்டடம் உறுதியானது, நீண்ட நாளைக்கு நிற்கக்கூடியது, வெடிவு அல்லது விரிவு ஏற்படாதது என்கிற உண்மையை ஒப்புக்கொள்கிறார்கள். அந்த உண்மையை மனத்தில் கொண்டு எங்கெல்லாம் சுக்கான் பாறைகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் நாம் மின்சார நீற்று அறைகளை ஏற்படுத்தி, நல்ல முறையில் சுண்ணாம்பு நீறு கிடைப்பதற்கு வழிவகை செய்தாகவேண்டும். இன்றையதினம் நாட்டில் சிமின்ட் பற்றாக்குறையும் இருக்கிறது. சிமிட்டியினால் கட்டக்கூடிய கட்டிடம் எவ்வளவு தரமானதாக இருந்தாலும் வெடிப்பு, விரிவு ஏற்படக்கூடியதாகவும் இருக்கிறது. அதுவும் சிமிண்ட் சீக்கிரத்தில் கட்டி தட்டிப் போவதைத் தடுக்க—பத்து மூட்டைக்கு ஒரு பாண்டு ஜீனி போட்டு கலக்க வேண்டிய நிலைமை வந்திருக்கிறது என்பதையும் நாம் அறிவோம். அந்த மாதிரியான கஷ்டங்கள் சுண்ணாம்பு நீற்றை எடுத்துக்கொண்டால் கிடையாது. நாள் தாங்குகிறது. இறுகிய பிடிப்புடையதாக இருக்கிறது. விரிவு அல்லது வெடிவு ஏற்படவில்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் சுண்ணாம்பினால் கட்டப்பட்ட கட்டிடங்கள் எல்லாம் தமிழகத்தில் இன்றும் சிறிதும் பழுதின்றி இருப்பதைப் பார்க்கிறோம். இன்றையதினம் எங்கள் பகுதியில் சுண்ணாம்புக் காளவாய் என்று போட்டு பனைமட்டைகளையும், விறகுகளையும் போட்டு எரித்துக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு மின்சார நீற்றறையை ஏற்படுத்திக் கொடுத்து தக்க ஊக்கமும்—ஊக்கம் மட்டும் போதாது—அவர்களோடு இருந்து எந்த எந்த வகையில் இயந்திர சாதன முறைப்படி கையாளவேண்டும் என்பதை சொல்லித்தரத்தக்க ஒத்துழைப்பையும் செய்துதர இந்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தொழில் கூடங்களை அமைப்பதிலும் ஒரு கஷ்டம் இருக்கிறது. ஒரு பக்கத்தில் ஆணி செய்வது, அடுத்து ரப்பர் செய்வது என்பதாக இப்படி ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத தொழில்களை அமைத்துக்கொண்டு போவதில் பயன் இல்லை. தொழில் கூடங்களில் அமைகிற தொழில்கள், தொழில்

பட்டறைகள் ஒன்றுக்கொன்று உதவும்படியாக, துணைசெய்யும்படியாக அமைவது சிறப்பு. அதோடு எல்லா இடத்திலும் எல்லாத் தொழில்களும் அமைவது என்பது தேவையில்லாத ஒன்று. ஒவ்வொரு இடம் என்று எடுத்துக்கொண்டால் அந்த அந்த இடத்தில் ஒவ்வொரு தொழில் சிறப்பாக அமைக்கப்படுமானால் அந்தத் தொழில்களுக்குரிய மூலப்பொருள்களும், உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களும் இறக்குமதி ஏற்றுமதி செலவில் பல மடங்கு குறையும். இதனால் செய்பொருள்களின் தரமும் உயரக்கூடும். ஆகவே இந்த அடிப்படையில் தொழில் பட்டறைகள் அமைக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, தொழில் துறையில் அக்கறை செலுத்திக்கொண்டு வருகிறபோது இன்னொன்றையும் நாம் மனத்தில் கொள்ளவேண்டும். தொழிலுக்குத் தேவையான திறமையை ஏற்படுத்தித்தருகிற இடங்கள் வேறு. பண்டங்கள் உற்பத்தி செய்து விநியோகிக்கிற துறை வேறு. இன்றைக்கு நாட்டில் எத்தனையோ விக்கிரகங்கள் 'செய்கிற, வேறு சில பண்டங்களை செய்து விற்பனைக்கு அனுப்புகிற கைவினைப் பொருள்கள்—ஹாண்டிகிராப்ட்ஸ் இருக்கின்றன. கைவினை வேறு, கலை வேறு—இரண்டும் ஒன்றென மயங்கப்படாது. கைவினைப் பொருள்கள் ஒருவகையில் லாபத்தைத் தரக்கூடியதாக இருக்கலாம். அவை தொழில் துறையின் உள்ளே இருப்பது நியாயம். இப்போது மகாபலிபுரத்தில் சிற்பப்பள்ளி இருக்கிறது. இது தொழில் துறையின் கீழ் இருக்கப்படாது. காரணம் இங்கே தொழிற்கல்விதான் போதிக்கப்படுகிறது. மற்ற தொழில்களைப் போல இங்கே செலவு என்ன, வருவாய் என்ன என்று கணக்குப் பார்க்க முடியாது. இதைத் தொழிற்பள்ளி என்ற அடிப்படையில் —தொழிற்கல்வி என்ற பிரிவில் அமைக்கவேண்டும். இதை நம்மால் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். அதேமாதிரி கும்பகோணத்தில் செம்புத் தொழில் போதிக்கின்ற கூடம் இருக்கலாம். தற்போது நாகர்கோயிலில் தேர் கட்டும் தொழிற்பள்ளி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் தொழிற் துறைக்கு உள்ளே இருக்கப்படாது. கல்வி கற்பிக்கும் பள்ளித்தரத்தைச் சேர்ந்தது. இதுமாதிரி இருக்கிற கல்விக்கூடங்களைக் காட்சிக் கூடங்களாகப் பயன்படுத்துகிறோம் என்பது உண்மை. ஆனால் இவை காட்சிக் கூடமாகவும் போய்விடாமல்—இவை கல்விக்கூடம் என்ற அளவில் கல்விப் பிரிவின் கீழ் இயங்கவேண்டும் என்பதை மிகமிக வற்புறுத்திக்கூறி, நேரம் இல்லாத காரணத்தினால் முடிக்கிறேன். வணக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே நான் பேசுகின்றபோது வெட்டுப் பிரேரணையை ஆதரிப்பதாக நினைக்கக் கூடாது. குறிப்பாக, நான் திரு. சா. கணேசன் அவர்களுடைய வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கவில்லை; அதை முதலில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் பொதுத் துறையை வளர்க்க வேண்டுமென்று விரும்புகிறவன். நான் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகிறேன் என்றால் அது வேறு காரணங்களுக்காக பொதுத்துறையை இன்னும் பலப்படுத்த வேண்டும். மக்கள் கொடுக்கிற வரிப்பணம்,





அரசாங்கம் அளிக்கிற மின்சார வசதிகள், இறக்குமதியில் பல சங்கடங்கள், அந்நியச் செலாவணிப் பிரச்னை எல்லாம் இருந்தாலும், அதுவகையில் நாம் கொடுக்கிற உதவி இவை எல்லாவற்றையும் பயன்படுத்திக்கொண்டு தொழில் நல்லமுறையில் நடக்கவும், உற்பத்தி செய்யப்படுகிற பண்டங்கள் சரியான முறையில் விநியோகிக்கப்படவும், நியாய விலையில் வழங்கப்படவும், வேலை வாய்ப்பு பெருகவும்—என்பவை போன்ற பல விஷயங்களைக் குறித்துத்தான் என்னுடைய குறைகள் எல்லாம் இருக்கின்றன. பொதுவாக இந்த அரசாங்கம் சொல்கிறபடி நடப்பதில்லை. பல அங்கத்தினர்களும்கூட சோஷலிசத்தைப் பற்றிப் பேசுவது சம்பிரதாயமாக ஆகிவிட்டது.

அரசாங்கமே பூராத் தொழிலையும் ஏற்று நடத்தி விட்டால் மட்டும் சோஷலிசமாகிவிடாது. அரசாங்கம் நடத்துகிற தொழில்களின் பலனை, உற்பத்தியின் பலனை எந்த அளவுக்கு மக்கள் பெறுகிறார்களோ, அதிலேதான் சோஷலிசம் இருக்கிறது. எந்த அளவுக்கு அந்த நோக்கம் நிறைவேறி இருக்கிறது? அமைச்சர் அவர்களுடைய அறிக்கையைப் பார்த்தால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ராஜ்ய சர்க்கார் பொதுத் துறையில் நேரடியாக ஈடுபட்டிருப்பது ஒரு வார்ப்படத் தொழிற்சாலையும் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையுந்தான். இந்த இரண்டுந்தான் ராஜ்ய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தொழிற்சாலைகள். ஆனால் இதையும் இடைத்தரத் தொழில்கள் என்றுதான் சொல்ல வேண்டுமே தவிர, பெருந்தொழில்கள் என்று சொல்ல முடியாது. இந்தத் தொழில்களை நிறுவ இப்போதுதான் நில ஆர்ஜிதத்திலே இறங்கியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொதுத் துறைத் தொழில்களோடு நோக்கும்போது நம்முடைய ராஜ்ய சர்க்கார் நிறுவி இருப்பது ரொம்பக் குறைவு.

ஏதோ செருப்புத் தைப்பது, வார்னிஷ் உற்பத்தி செய்வது, பூட்டு தயாரிப்பது போன்ற சிறு தொழில்களில் ஈடுபட்டு அவர்களை ஒழிக்கத்தான் பார்க்கிறார்களே தவிர, பெரிய தொழில்களை நடத்துகிற பெரும் முதலாளிகளுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்ற நிலையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் வசதிகளைப் பயன்படுத்தி பெரும் முதலாளிகள் லாபம் சம்பாதிக்க வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள். இது சோஷலிசத்திற்குப் போகும் பாதையாக இருக்கமுடியாது.

எவ்வளவு தொழில் வளர்ச்சி ஏற்பட்டாலும் கூட வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. தொழில்கள் மூடப்படுவதையும், முடங்கிக் கிடக்கும் சூழ்நிலையையுந்தான் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப காலத்தில் பார்க்கவேண்டியிருக்கிறது என்பதை வருத்தத்துடன் கூறுகிறேன். அரசாங்கம் கொடுத்திருக்கும் புள்ளி விவரத்தைப் பார்த்தாலே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரும் தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 3 கோடி 35 லட்சம்; செலவு 1 கோடி 42 லட்சம். குடிசைத் தொழில்களுக்காக, கிராமத் தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 20 கோடி 16 லட்சம்; செலவழித்தது 22 கோடி

97 லட்சம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட ஒதுக்கப்பட்டிருப்பது மிகக்குறைவு. முதல் வருஷமாகிய, 1966-67-ல் பெரிய தொழில்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 1 கோடி 62 லட்சம்; குடிசைத் தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையும் 3 கோடி 92 லட்சந்தான். ஒதுக்கப்பட்ட தொகையின் மொத்தம் 5 கோடிதான். 88 கோடி ரூபாய்க்கு புரொவிஷன் இருக்கும்போது, முதல் வருஷத்திற்கு 5 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் எவ்வளவு வேகமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு அது அடையாளமாக இருக்கிறது என்று தான் கூறவேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை விட நான்காவது திட்டம் சுருங்கி விடுமோ என்று கூட அஞ்ச நேரிடுகிறது. திட்டத்திலே மத்திய அரசாங்கத்திற்கு நம்பிக்கை குறைந்து வருகிறதோ என்றுகூட அஞ்ச நேரிடுகிறது.

இதுவரை ஏற்பட்ட தொழில் வளர்ச்சியின் பலன் என்ன வாயிற்று? எவ்வளவு வேலை வாய்ப்புக் கிடைத்தது? எவ்வளவு உற்பத்திப் பொருள் கிடைத்திருக்கிறது? இங்கே உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் இங்கேயாவது கிடைக்கிறதா என்பதைப் பொறுத்துத் தான் தொழில் வளர்ச்சியில் லாபத்தைப் பார்க்க முடியும். 1951-ல் 32 கோடி யூனிட் மின்சாரம் செலவழிந்தது, தற்போது 180 கோடி யூனிட் வரை செலவாகக் கூடிய அளவுக்குத் தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆறு மடங்கு பெருகியிருக்கிறது என்று கூறுகிறார்கள். அந்த அளவுக்கு வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறதா? அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதா? மூலப் பொருள் கிடைப்பதில் பல கஷ்டங்கள் ஏற்பட்டு பல தொழில்கள் மூடப்படுகின்ற நிலையில் இருக்கின்றன. நெருப்புப் பெட்டித் தொழிற்சாலையைப் பற்றிப் பலர் சொன்னார்கள். சுருட்டுத் தொழிற்சாலையைப் பற்றி ஒரு அவசரப் பிரேரணை கொண்டு வரவேண்டுமென்று விரும்பினேன். கனம் சபாநாயகர் அவர்கள் அதைப் பற்றி இன்று மானியத்திலே பேசும்போது கூறிவிடுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். சுருட்டுத் தொழில், தோல் பதனிடும் தொழில்களில் அதிகமாக ஈடுபட்டிருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது? திருச்சி ஜில்லாவிலே செயற்கை வைரத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிற்சாலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது அந்தத் தளத்தின் விலை அதிகமாக இருக்கிறது; பிளாக் மார்க்கெட்டில் வாங்க வேண்டியிருக்கிறது. ரா-மெட்டீரியல்லைக் கள்ள மார்க்கெட்டில் வாங்கும் நிலைமை ஏன் ஏற்பட வேண்டும்? இதையெல்லாம் கேட்கும்போது கோபப்படாது பதில் சொல்லவேண்டும்.

இந்தப் பத்து வருஷ காலத்தில் வேலை வாய்ப்பு எவ்வளவு அதிகரித்திருக்கிறது? அவர்களுடைய புள்ளி விவரப்படி நம்பர் ஆப் அப்ளிகண்ட்ஸ் ரிஜிஸ்டர்டு 1963-64-ல், 239,443 பேர்; 1964-65-ல் 232,418 பேர்; 1965-66-ல் 229,608 பேர். 1965-66-ல் குறைந்திருப்பதற்குக் காரணம் பாகிஸ்தான் சண்டையின் காரணமாக பலர் ராணுவத்திற்குச் சென்றதால் ஏற்பட்டது. அவர்களிலே வேலை கிடைத்தவர்களின் எண்ணிக்கை 1963-64-ல், 42,664; 1964-65-ல் 45,809 பேர்; 1965-66-ல் 42,485 பேர். நம்பர் ஆப் அப்ளிகண்ட்ஸ் ஆன் லைவ் ரிஜிஸ்டர் 1963-64-ல் 193,875; 1964-65-ல் 191,985; 1965-66-ல் ஹையஸ்ட் 209,525. தொழில் மூலம் வளர்ச்சி வேகமாக அடைந்திருக்கிறோம் என்று சொல்லும்போது தேசிய வருமானத்திலே எவ்வளவு தூரம் உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் 3 சதவிதம்தான் உயர்ந்திருக்கிறது என்ற விவரங்களை எல்லாம் பார்க்கும்போது இந்த ராஜ்யம் தொழில் வளர்ச்சியில் பெருமளவு அபிவிருத்தி அடைந்து விட்டது; இந்த ராஜ்யம் தொழில் மயமாகிவிட்டது என்று சொல்வதற்கில்லை; பெருமைப்படுவதற்கில்லை. இருக்கக்கூடிய வசதிகளும் சில தனி நபர்களுடைய கொள்ளை லாபத்திற்குப் பயன்படக் கூடிய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இதைப் போன்ற குற்றச்சாட்டுகள் வந்தால் அதைப் பரிசீலிக்க வேண்டுமேதவிர, அதைக் கண்டு ஆத்திரப்படுவதோ, மடக்குவதோ சரியல்ல.





அரசாங்கம் நடத்தும் சிறு தொழில்களின் நிலை என்ன? பெரும்பாலும் நஷ்டத்தில்தான் நடந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொழில்களின் லாபத்தை நான் ரூபாய் பைசாவில் பார்க்கவில்லை. செய்ய வேண்டிய விதத்தில் செய்திருந்தால் அதை நஷ்டமாகக் கருத முடியாது. தொழில் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் சரியாகச் செய்திருப்பார்களேயானால், நான் அதை லாபமாகக் கருதுவேனே தவிர, ரூபாயில் லாபத்தைப் பார்க்கமாட்டேன். திண்டுக்கல் பூட்டுத் தொழிற்சாலையில் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே போடப்பட்ட மூலதனம் 2,50,000 ரூபாய். இரண்டாவது திட்ட காலத்தில் அதிலே ஏற்பட்ட நஷ்டம் 2,78,000 ரூபாய். மூன்றாவது திட்ட காலத்திலும் நஷ்டம் ரூ. 15,000 என்றுதான் இருக்கிறதே தவிர, லாபம் இல்லை. இப்படிப் பல தொழில்கள் நஷ்டத்திலேயே இருக்கின்றன. சிலவற்றை லாபத்தில் காண்பித்திருக்கிறார்கள். அது கூடச் சந்தேகத்தை உண்டாக்குகிறது. எலெக்ட்ரிகல் கூட்ஸ் யூனிட்டில் 4 லட்ச ரூபாய் மூலதனம், லாபம் 10 லட்சம் என்று காண்பித்திருக்கிறார்கள். எப்படி அது வந்திருக்க முடியும்? மூலப் பொருள்கள் கிடைக்கின்றன. அதை விற்று லாபத்தைக் காண்பிக்க பூஸ்ட் பண்ணுகிறார்களா என்று தெரியவில்லை. லாபம் கிடைத்தது என்று எப்படிச் சொல்கிறார்கள்? 'நஷ்டம் வந்தால் அப்படிச் சொல்கிறேன். லாபம் வந்தால் இப்படிச் சொல்கிறேன்' என்று அமைச்சர் அவர்கள் கருதக்கூடும். லாபம் நியாயமான வகையில் வரவேண்டும். பொது ஜனங்களை ஏமாற்ற தேர்தல் பிரசாரமாக வேண்டுமானால் லாபம் வந்திருக்கிறது என்று பேசலாம். ஆனால் இங்கு உண்மைதான் பேசவேண்டும். சேலம் ஹாண்ட்லூம் யூனிட்டை எடுத்துக் கொண்டால் இதுவரை மொத்த நஷ்டம் 3,21,000 ரூபாய். அது கைத்தறிக்காரர்களுக்குச் சேவை செய்திருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. தறிக்காரர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர இந்த யூனிட் என்ன செய்தது? எவ்வளவு பேருக்குப் பலன் கிடைத்தது? இப்படிச் சொல்வதால் இந்த யூனிட்டையே கண்டெம் பண்ணுகிறேன் என்று அர்த்தமல்ல. இவர்கள் என்ன 'இம்ப்ரூவ்மென்ட்' செய்தார்கள்?

கிளாஸ் பாக்டரியைப் பற்றிக் கனம் அங்கத்தினர் தர்மலிங்கம் அவர்கள் சொன்னார்கள். அதற்கு சாங்க்ஷன் ஆகியும் எட்டு வருஷம் வரை ஏன் தொடங்கவில்லை? தொடங்க முடியாத ஒன்றாக ஏன் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது? அதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் பத்து வருஷம் இருந்திருக்கிறார். இந்தக் கண்ணாடித் தொழிற்சாலையின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அவர் வெளிநாடு போய்வர என்ன செலவாயிற்று? இப்போது அவருடைய ஆலோசனை இதற்கு அவசியம் இல்லையென்று அவரை வேறு பிரிவுக்கு மாற்றியிருக்கிறார்களா? பயிற்சி பெற்ற அவர் இல்லாமலேயே கிளாஸ் யூனிட் நடக்குமென்று சொல்லும்போது அவருடைய சேவை அந்த யூனிட்டுக்கு அவசியம் இல்லையென்று கருதப்படுகிறதா? நேரம் இருந்தால், இதைப் பற்றி நான் பூராவும் விரிவாக எடுத்துச் சொல்ல முடியும். இதெல்லாம் எதைக்காட்டுகின்றன. அமைச்சர் அவர்கள் நிதானத்தோடு சிந்திக்க வேண்டும். இந்தக் குறைகளை எல்லாம் போக்கவேண்டுமே தவிர, இதைப்பற்றி போடுவதால் பத்திரிகைகளைச் சாக்கடை என்று சொல்வதிலே அர்த்தம் இல்லை. தொழில் துறையில் சாக்கடை இருப்பதால் பத்திரிகையில் சாக்கடை இருக்கிறது. அதை எடுத்துச் சொல்வதால், வாய் சாக்கடை, பத்திரிகை சாக்கடை என்று சொல்லி விட்டால் போதுமா?

அது இந்தச் சபைக்குக் கொடுக்கக் கூடிய மதிப்பல்ல. குறைகளை நாங்கள் எடுத்துக் காண்பிக்கிறோம். அவற்றை விசாரிக்கவேண்டும். நான் விசாரணை கோருகிறேன்; வாருங்கள் என்று அவர்கள் அழைத்தால் அவர்கள் தைரியத்தை நான் மெச்சியிருப்பேன். அது உண்மையோ, பொய்யோ அது வேறு விஷயம். இப்போது இந்த டிமாண்ட் சம்பந்தப்பட்டதைப் பற்றி மட்டும் பேசுகிறேன். ரா-மெட்டீரியல்ஸ் விநியோகத்தில் என்னென்ன கோளாறுகள் இருக்கின்றன என்பது பற்றி நானே அவர்களிடம் ஒரு பெட்டிஷன் நேரில் கொடுத்துள்ளேன். தளம் பற்றிச் சொன்னார்கள், கள்ள மார்க்கெட்டில்தான் கிடைக்கிறது. நியாயமான விலையில் அவை கிடைப்பதில்லை. அதைப் பாதுகாக்க வேண்டாமா? அதேபோல் ஸ்டெயின்லஸ் ஸ்டீல். இன்று ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாத்திரங்களைத்தான் கல்யாணங்கள் போன்ற விசேஷங்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. தொழிலாளர்கள் அதில் சாப்பிடக் கூடாதா? அலுமினியம், பித்தளைப் பாத்திரங்களில் சாப்பிடுவது ஆரோக்கியக் குறைவுதான். சிட்டியில்தான் இந்தக் கோட்டா கொடுக்கப்படுகிறது. மொஃபசிலில் என்னவாயிற்று? சிட்டியில் தொழிற்சாலை இருக்கிறதா? நானா கொடுக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். இவர் கையெழுத்துப் போடாமல் இருக்கலாம். இன்டஸ்ட்ரியல் எசன்ஷியாலிட்டி சர்டிபிக்கேட் இல்லாமல் இதை வாங்க முடியுமா? நான் ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு வரத்தயார் எந்தக் கமிட்டி போட்டாலும் நான் வரத் தயார். அமைச்சர் அவர்களின் கௌரவத்தைக் காப்பாற்ற, அந்த இலாகாவின் கௌரவத்தைக் காப்பாற்ற அரசாங்கத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற நான் தயாராயிருக்கிறேன். எதிர்க்கட்சியினரைப் பார்த்து இப்படியா கேட்பது? எதிர்க்கட்சியினரிடம் ரிக்கார்ட்ஸ் இருக்





கிறதா? ஃபைல்ஸ் இருக்கிறதா? அவர்கள் குறைகளைக் கூறுகிறார்கள். அதை முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யட்டும். அல்லது அமைச்சரவையைச் சேர்ந்த மூன்று பேர்கள் அதைப் பரிசீலனை செய்யலாம் திரு. தர்மலிங்கம் அவர்கள் அவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பத்தைக் கொடுத்தார்கள். அந்தப் பத்திரிகைக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும், எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தீர்கள். இது எல்லாம் தவறு என்று சொன்னால் சந்தோஷமாக இருந்திருக்கும். அன்றொரு நாள் என் கேள்வி ஒன்றுக்கு கோபப்பட்டு பதில் சொன்னார்கள். என் மீது கோபமோ அல்லது வேறு யாராவது அம்மாதிரிச் சொன்னார்களோ தெரியாது. ஜாதி அடிப்படையில் உதவி செய்யவேண்டுமானால், இந்தப் பொறுப்பில் நான் இருக்கவேண்டியதில்லை என்று சொன்னார்கள். நானா இருக்கவேண்டுமென்று சொன்னேன்? அவர் இங்கு இருப்பதற்கு நானா காரணம்? அவர்கள் இந்தப் பொறுப்பில் இருக்க நான் காரணம் அல்ல. அதற்கு முதல் அமைச்சர்தான் காரணம். முன்னாள் முதல் அமைச்சர் அவர்களினால்தான் அவர்கள் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்கள் முடிவு செய்யவேண்டும். நான் கேட்பது நியாயமான கேள்வி. எல்லா ஜாதிகளுக்கும் சம சந்தர்ப்பம் இருக்கவேண்டும். முன்னேற்றம் அடைந்த ஜாதியினராகிய நாம்தான் அடக்கிக் கொள்ளவேண்டும். பின்தங்கிய ஜாதியினர் அக்ரஸிவ்-ஆக இருந்தால் அவர்கள் வேகமாக தாங்கள் முன்னேற வேண்டும் என்று நினைத்தால் அதை மன்னிக்கலாம். இல்லாவிடில் ஜாதி வெறி அதிகமாகிவிடும். வெள்ளைக்காரன் காலத்தோடு ஜாதி மனப்பான்மை போய் விட்டது என்று நினைத்தோம். இன்னும் ஜாதி மனப்பான்மை நிர்வாகத்தில் நடக்கிறது என்றால் நிர்வாகம் ஒழுங்காக நடக்காது. ஜாதித் துவேஷம் அதிகரித்துக்கொண்டு வருகிறது நிர்வாகத்தில். தேர்தலில் வோட்டு பெறுவதில் மட்டுமல்ல. இன்னின்ன இலாகாவில் இன்னின்ன அதிகாரிகளிடம் இன்னார் போனால்தான் செல்வாக்கு இருக்கும் என்றால் நிர்வாகம் எப்படித் திறமையாக நடக்கும்? அது அரசாங்கத்திற்கு எப்படி நல்ல பெயரைத் தேடிக் கொடுக்கும்? நானே ஒரு பெரிய புகார் கொடுத்திருக்கிறேன், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பற்றி. விசாரணை செய்து ஆறு மாதங்களுக்குப் பிறகு அது அஸ்திவாரம் இல்லாத குற்றச்சாட்டு என்று சொன்னார்கள். என்னைக் கூட்டிச் செல்லுங்கள், தொழிற்சாலைகளைப் பார்க்கலாம். மூன்று பேர் குழு ஒன்று வையுங்கள். எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், ஆளும் கட்சியைச் சார்ந்த இரண்டு உறுப்பினர்கள் என்று போய் அவற்றை பார்வையிடக் கூடாதா? உண்மையில் தொழிற்சாலைகள் இருக்கிறதா? ப்ரொடக்ஷன் எவ்வளவு? என்றெல்லாம் பார்ப்போம். டிஸ்ட்ரிப்யூஷனில் கூட 'ஈவனாக' டிஸ்ட்ரிப்யூட் செய்யவேண்டும். பெர்மிட் கொடுத்து விட்டு அதை 'ஃபாலோ அப்' செய்யவேண்டாமா என்று கேட்டேன், அதற்கு முரட்டுத்தனமாக பதில் சொன்னார்கள். தன்னுடைய செயலில் தொழில் அமைச்சர் அவர்களுக்கு இருக்கும் தன்னம்பிக்கை வேறு எந்த அமைச்சருக்கும் கிடையாது. எதையும் உதாசீனப்படுத்தி விடுவார். காந்திஜி சொன்னதுமாதிரி நேர்மையும் இருக்கவேண்டும், நியாயமும் இருக்கவேண்டும். அதோடு அதை பொது மக்கள் உணரும்

படியாகவும் நேர்மையாக நடக்கவேண்டும். என் மனதிற்கு திருப்தியாக இருக்கிறது என்று மட்டும் இருந்து விடக்கூடாது. அதற்குள்ள ஒரு சந்தர்ப்பத்தை திரு. தர்மலிங்கம் அவர்கள் கொடுத்தார்கள்.

பூச்சி மருந்துகள் தயாரிப்பதற்கு ஒருவருக்கு பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரா-மெட்டீரியல்ஸ் இம்போர்ட் செய்கிறார். அப்படிச் செய்து அதைக் கொண்டு உற்பத்தி செய்கிறார்களா? அல்லது அதை விற்கிறார்களா? சாயங்கள் வரவழைக்கப்படுகின்றன, அவை பட்டறைகளுக்கு போகிறதா? அல்லது கள்ள மார்க்கட்டில் விற்கப்படுகிறதா? யாருக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டாமா? இவைகளை ப்ளாக்மார்க்கெட்டில் வாங்க முடியும். தேவைப்படுகிறவர்களுக்கு இவை தேவைப்பட்ட சமயத்தில் வாங்க முடியாது. இப்படியிருந்தால் எப்படி தொழில்களைப் பாதுகாக்க முடியும்? எப்படித் தொழிற்சாலைகளைப் பாதுகாக்க முடியும்? ஆகவே இந்த இண்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மென்டை எப்படி புனரமைப்பது என்று பார்க்கவேண்டும். ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீசில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைப் பரிசீலனை செய்ய இந்த சபையிலுள்ள சில உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியைப் போடக் கூடாதா? There is no smoke without fire. சிறிது மிகைப்படுத்தியிருக்கலாம். தெரிந்தோ தெரியாமலோ சேர்த்திருக்கலாம். நெருப்பு இல்லாமல் புகைய முடியாது. நெருப்பு இருக்கிறது, அதை அணைக்கவேண்டும். சாக்கடையில் நாற்றம் இருக்கிறது என்றால் அதைச் சுத்தம் செய்யவேண்டும். சாக்கடை இல்லாமல் எந்த பங்களாவும் இருக்காது. சாக்கடை நாறுகிறது என்று சொன்னால் உன் வாயைக் கழுவிவா என்று சொல்வதுதானா சரியான பதில்? அதில் உண்மை இருக்கிறதோ இல்லையோ அதை ப்ரூவ் செய்யவேண்டும். தட்டிக் கழிக்கக் கூடாது. ரா-மெட்டீரியல்ஸ் விநியோகத்தில் உள்ள கோளாறுகளை எல்லாம் பரிசீலனை செய்து அந்த இலாகாவை ஒழுங்குபடுத்த வேண்டும். என்னிடம் தகவல் இருக்கிறது, பல பாகுபாடுகள் இருப்பதாக. இதற்கென்று ஒரு நாள் ஒதுக்கலாம், 'நான்-அஃபிஷியல் ரெஸல்யூஷனுக்காக' அடுத்த தடவை இப்படி ஒரு நாள் ஒதுக்கலாம் என்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும் பேசுவோம். அப்படிச் செய்து திருப்தியடையலாமே தவிர, தவறு இருந்தால் மன்னிப்பு கேட்க தயார். வருகிற தகவலைச் சொல்லவேண்டாமா? சாதாரண விஷயங்கள் சம்பந்தப்பட்டவைகளை நான் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவிடுவேன். ஊர் எல்லாம் தெரிந்த பிறகு சட்டசபையில் அதைப் பேசாமல் இருந்தால், மக்கள் எப்படி மதிப்பார்கள். பொறுப்பற்ற முறையில் எதை வேண்டுமானாலும் பேசுகிறவன் அல்ல நான். இன்று தமிழக தொழில் வளர்ச்சி யார் கையில் இருக்கிறது? இந்த இலாகாவின் கையில் இருக்கிறது. அமைச்சர்அவர்களும் இந்த இலாகாவும் ஒற்றுமையாக வேலை செய்வதைப் பார்த்து எனக்கு பொறுமையில்லை. நேற்று ஒரு அமைச்சர் அதிகாரிகளைப் புகழ்ந்தார்கள். அந்த அளவிற்கு புகழ



வேண்டுமா இந்த சபையில்? இது அமைச்சர்களின் தன்னம்பிக்கைக் குறைவைக் காட்டுகிறது. அதிகாரிகள் அதிகாரிகளாக இருக்கட்டும். அதிகாரிகள் அல்ல மக்களுக்கு பதில் சொல்கிறவர்கள்.

சேலம் உருக்காலைப் பற்றி நிலை என்ன என்பதைக் கூற வேண்டும். கடைசியாக, முதல் அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை. இந்த சபையில் உள்ள ஐந்து அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் விநியோகம், எசன்சியாலிட்டி சர்ட்டிபிகேட்ஸ் வழங்குவது, இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டில் புதுத் தொழில்களுக்கு அனுமதி வழங்கும் முறை இவற்றில் உள்ள குறைபாடுகளைப் பரிசீலிக்க வேண்டும். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. இராம. அரங்கண்ணல்: கனம் தலைவர் அவர்களே, நாட்டு வளத்தைப் பெருக்கக்கூடிய முக்கியமான இந்த கோரிக்கைகளின் மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 1-00 p.m. நல்ல காரியங்கள் நடந்தாலும், நாட்டுக்கு நல்ல காரியங்கள் செய்பவர்கள் யாராக இருந்தாலும், அதை பாராட்டுகின்ற பண்பு படைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுகின்ற எல்லோரையும் பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்விதம் பாராட்டைத் தெரிவிக்கின்ற நேரத்தில் எப்போதும் பாராட்டுதலைத் தான் பெற்றுக்கொண்டிருக்கவேண்டும் என்ற அவசியமும் இல்லை. பாராட்டிக்கொண்டிருப்பதுதான் வேலை என்று இருப்பதும் சரியில்லை. பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டி எங்கெங்கு குறைகள் இருக்கின்றனவோ, அவைகளை எடுத்துக் காட்டுவதோடு, அந்தக் குறைகளை களைவதிலும் கவனம் செலுத்த வேண்டியது எதிர்க்கட்சியின் பொறுப்பு. அந்த வகையில் இந்த தொழில் மான்யக் கோரிக்கையின் மீது பேசிய நேரத்தில் எங்கள் கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொன்ன நேரத்தில் நம்முடைய அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள்—அவர்களுடைய பண்பைப்பற்றியும், திறமையைப்பற்றியும் நாம் நன்றாக அறிவோம்—அப்படிப்பட்ட அமைச்சர் அவர்கள், அவரையும் மீறிய வகையில் இதை உரிமைக் கமிட்டிக்கு விட முடியுமா என்கிற அளவில் கேட்டார்கள். என்னுடைய கட்சியின் சார்பில் நான் அதைப் பொறுப்பேற்றுக்கொண்டு சொல்லுகிறேன், அவர்கள் விரும்புவார்களேயானால்—சபையின் முதல்வர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள்—அவர்களும் விரும்பினால் இந்தப் பிரச்னையை உரிமைக் கமிட்டிக்கு விட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அமைச்சர் அவர்கள் சொன்ன நேரத்தில், அவர்களுடைய வாயிலிருந்து நான் இப்படிப்பட்ட வார்த்தைகளை எதிர்பார்த்திருக்க மாட்டேன்—என்னுடைய கட்சியும் அவரிடத்திலிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகளை எதிர்பார்த்திருக்காது—

[திரு. இராம. அரங்கண்ணல்] [17th March 1966

அப்படிப்பட்ட அமைச்சர் அவர்கள் மிகவும் கோபப்பட்டு, 'சாக்கடை' என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்கள் சாக்கடை என்று குறிப்பிட்டுச் சொன்னது, இந்தத் தகவலைக் கொடுத்த ஏட்டினைத்தான் என்று நான் கருதுகிறேன்—(குறுக்கிடு) 'ஏடுகளை' என்கிற அளவுக்கு நான் போகவில்லை ஏதோ ஒரு ஏடு என்பதுதான் என் எண்ணம். ஆனால் எனக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம் நாட்டில் இருக்கின்ற சாக்கடைகளை சீர்படுத்துகின்ற பணியில்தான் நாம் அனைவரும் ஈடுபட்டிருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட சாக்கடைகளை உருவாக்குவதில் நாட்டின் நல்லவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஒருசிலர் ஈடுபட்டிருப்பதையும் பார்க்கிறோம். அமைச்சர் அவர்களுடைய மொழியில் சொன்னால் இந்த 'சாக்கடை' யைத் துவக்கி வைத்தவர் யார், இதற்கு நிதி தேடிக் கொடுத்தவர் யார், இதற்கு நிதி சேகரிப்பதற்கு என்று கலை நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுத்தவர் யார்? இந்த ஆளும் கட்சியை கட்டிக்காக்கின்ற திரு. காமராஜ் அவர்கள் அல்லவா? இப்படிப்பட்ட பெரும் தலைவர்கள் 'சாக்கடை'களை உருவாக்கிக் கொண்டு போவதும், அந்தப் பெரும் தலைவர்களுக்குக் கட்டுப்பட்ட அமைச்சர்கள் 'சாக்கடையிலிருக்கிறதே' என்று சஞ்சலப்படுவதும் விசித்திரமாயிருக்கிறது. எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்லும்போது, அதற்குரிய அமைச்சர் அவர்களே முந்திக்கொண்டு இதற்கான விளக்கங்களைச் சொல்லியிருப்பார்களேயானால், நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்போம். அதைவிட்டு விட்டு, சவால் விடக்கூடிய முறையில் ஒரு பிரச்னையாக்கியதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். அவர்கள் கேட்டுக்கொண்டதற்குப் பதிலாகவே சொல்லுகிறேன், இந்தப் பிரச்னையை உரிமைக் கமிட்டிக்கு விடவேண்டும் என்று அவர்கள் விரும்பினால், உரிமைக் கமிட்டிக்கு விடத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டிலுள்ள தொழில் பிரச்னையைப் பொறுத்தளவில், நாட்டில் பல்வேறு தொழில்கள் பெருகி வருகின்றன என்பதை. நம்மால் காண முடிகிறது. அந்த உண்மையை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், அவைகள் மூலம் வரும் வளம் எங்கே போய்ச் சேருகிறது என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஏற்பட்டிருக்கிற தொழில் வளம் போதும் என்று கூறி விடமுடியாது, அந்நாடு மேலும் தொழில் வளம் வளருவதற்கான அறிகுறிகள் இருக்கின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதைப்பார்க்கின்ற நேரத்தில் கனம் கலியாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டு சொன்னதுபோல், நம் நாட்டு தொழில் வளர்ச்சிக்கான எல்லா சாதனைகளையும் நாம் செய்திருக்கிறோமா என்று பார்த்தால் இன்னும் நாம் அடையவில்லை என்பதைத்தான் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள மொத்த ஜனத்தொகை, 1961 சென்சஸ்படி பார்த்தால் 3 கோடி 36 லட்சம் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த சென்சஸ்படி உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் ஒரு கோடி பேர்கள் இருக்கிறார்கள். இந்த ஒரு கோடி பேர்களைத் தவிர்த்து, கல் உடைக்கும் தொழிலாளர்கள்,



17th March 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

விட்டு வேலை செய்பவர்கள், வாணிபம் செய்கிறவர்கள், பிற சர்வீஸ்களில் இருக்கின்றவர்கள், இப்படிப்பட்ட காரியங்களில் இருக்கின்றவர்கள் 1½ கோடி பேர்கள் இருக்கிறார்கள். தவிர 1½ கோடி பேர்கள் பெண்களாக இருக்கிறார்கள். இவைகளை எல்லாம் நீக்கிவிட்டு பார்க்கும்போது, 60 லட்சம் ஆண்கள் வேலை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் கூறுகிறது. இவர்களுக்கு அரசாங்கம் எப்போது வேலை தேடித்தரப் போகிறது என்பதைக் கேட்டால் வேலை தேடித் தருவதற்கான ஸ்தாபனங்கள் இல்லையா? இதற்கென்று அமைக்கப்பட்டிருக்கும் எம்ப்ளாய்மெண்டு எக்சேஞ்சு இல்லையா? இதன் மூலமாக வேலையில்லாமல் இருந்துகொண்டிருக்கும் குறையைப் போக்கலாம். அதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறக்கூடும். ஆனால் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் எத்தனை பேர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கின்ற கணக்கைப் பார்க்கும்போது, 1964 செப்டம்பரில், வேலை தேடிக் கொடுக்க வேண்டும் என்பதற்காகப் பதிவு செய்துகொண்டவர்கள் 22,934 பேர்கள். அதே மாதத்தில் எம்பலாய்மெண்ட் எக்ஸ்சேன்ஜ் மூலம் வேலைத் தேடிக் கொடுத்து 6,180 பேர்களுக்கு இவ்விதம் பார்க்கும்போது மாதா மாதம் வேலை தேடித் தருவதற்காக பதிவு செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. இதிலிருந்து வேலை பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்படுகிறது. ஆக வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு இழுத்துப் போகின்ற நிலைமை இருக்கிறது என்பதைத் தான் எடுத்துக்கூற விரும்புகிறேன். அதற்குப் பரிகாரம் காணவேண்டும் என்றால், தொழில் துறைகளைப் பெருக்குவதும், அதற்கான நல்ல திட்டங்களை தீட்டி நல்ல முறையில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதிலும், அதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுவதற்கான ஆற்றல் இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக அந்த ஆற்றல் அமைச்சர் அவர்களிடம் இருக்கிறது. ஆற்றல் மட்டுமல்ல, அதற்கான ஆர்வம் இருக்கிறதா என்று பார்த்தால், அதற்கான ஆர்வமும் இருக்கிறது, அதிகமான ஆர்வமும் கூட இருக்கிறது. அப்படிப்பட்ட ஆர்வத்தை செயல்படுத்துகின்ற வகையில் "நேஷனல் கௌன்சில் ஆஃப் அப்ளைட் எக்னாமிக் ரிசர்ச்" என்ற ஸ்தாபனத்தினிடத்தில் தமிழ் நாட்டின் நான்காவது ஐந்தாண்டு திட்டம் பற்றி விளக்கம் வேண்டும் என்று தமிழ்நாடு சார்பில் கேட்டதற்கு அவர்கள் ஆராய்ந்து கொடுத்திருக்கும் 'Industrial Programmes for the Fourth Plan' என்ற அறிக்கையில் தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். 'The need to accelerate the tempo of industrial Development in the State is great, because of the sheer pressure of population. என்று கருத்து தெரிவித்து, எப்படி எப்படி தொழில் வளமாக்க முடியும் என்பதற்கு யோசனை சொல்லுகின்ற நோக்கில் அருமையான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த நாடு. அதனால் கிழக்காசிய நாடுகளோடும், தூரக்கிழக்கு ஆசிய நாடுகளோடும், ஆப்பிரிக்க நாடுகளோடும்,

*[திரு. இராம. அரங்கண்ணல்]* [17th March 1966

அழைத்து, அத்தனை பேர்களையும் கொண்ட கார்ப்பரேஷனை நிறுவி, அந்தக் கார்ப்பரேஷன் சார்பில் பல தொழில்களை நடத்தக் கூடாது என்பதாகும். கூட்டுறவு மூலமாக இயங்கும் முறையில், தனியாருடைய பணத்தையும் திறனையும் பெறும் முறையில், ஏன் கொள்கையை வகுத்துக் கொள்ளக் கூடாது? அதனாலே என்ன நஷ்டம் ஏற்பட்டுவிட முடியும்? அதனாலே என்ன தவறு நேர்ந்து விட முடியும்? எந்த அளவுக்கு உதவி செய்யும் கார்ப்பரேஷன்களுக்குப் பணம் தரப்படுகிறது என்று பார்த்தால் ஸ்டேட் பாங்க் ஆஃப் இண்டியா மட்டும் 25 கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கிறது. எல்.ஐ.ஸி.-யிலிருந்து 100 கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கப்படுகிறது அப்படிக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தனியார் துறையை வளர்க்கப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். தனியார் துறையில் லாபம் எந்த அளவுக்கு வருகிறது என்று பார்த்தால் அதிகமாக வருகிறது. ஃபெர்ட்டிலைசர் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியா என்று பொதுத் துறையில் ஒன்று இருக்கிறது. பொதுத் துறையில் நடத்தும் தொழில் லாபம் வரவில்லை என்பது திறமைக் குறைவுக்குச் சான்றாக இருக்குமேயொழிய, லாபமே இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஃபெர்ட்டிலைசர் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியா என்பது 75 கோடி ரூபாய் மூலதனம் போட்டு, சிந்திரி, துர்க்காபூர் போன்ற இடங்களில், ஆங்காங்கு பெர்ட்டிலைசர் ஃபாக்டரி ஆரம்பிக்க உதவி செய்கிறது. அதற்கு 1963-64 ல் வந்திருக்கிற மொத்த லாபம் 9 கோடி ரூபாய் என்று கணக்கிட்டுச் சொல்லப்படுகிறது. ஆகையினாலே, பொதுத் துறையில் தொழில் நடத்துகிற நேரத்தில் லாபம் வராது என்று பொருள் அல்ல. வருகிற லாபம் எங்கெங்கே போய்விடுகிறது என்று கண்டு பிடிக்காமல் விட்டுவிட்டு, பொதுத் துறையை மக்கள் குறை சொல்லும் அளவுக்கு ஆளாக்கி இருக்கிறோம் என்று சொன்னால் அது அரசாங்கத்தின் தவறே தவிர, கொள்கை தவறு என்பது அல்ல. தனியார் துறையைப் பார்த்தால் லாபம் தரக்கூடிய பல தொழில்களை சர்க்கார் ஏற்று நடத்த முடியும். ஆனால், அந்தத் துறைகளையெல்லாம் இன்றைய தினம் தனியாரிடம் விட்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ரூ. 3 கோடி மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்டது ஆறுமுகனேரியில் தாரங்தாரா கெமிகல்ஸ். அதற்கு 1964-ல் ரூ. 77 லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது. சங்கர நகரில் ரூபாய் ஒரு கோடி மூலதனம்போட்டு ஆரம்பிக்கப்பட்ட இன்டஸ்ட்ரியல் கெமிகல்ஸ் ரூ. 10 லட்சம் லாபம் சம்பாதித்திருக்கிறது. கனி வளத்தை எடுப்பது, கனிவளத்தைத் தோண்டுவது, சர்க்கார் பொறுப்பிலே இருக்கவேண்டும் என்று விளக்கம் தரப்பட்டது. சேலத்தில் மாக்னசைட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா என்று ஒரு கம்பெனி இருக்கிறது. அதன் மூலதனம் ரூ. 25 லட்சம். 1963-ல் அந்தக் கம்பெனி சம்பாதித்த லாபம் ரூ. 5 லட்சம் ஆகும். அதே போலத்தான் மேட்டூர் கெமிகல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் ரூ. 3 கோடி முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டு, 1964-ல் சம்பாதிக்கப்பட்ட லாபம் ரூ. 35 லட்சம். கடலூரில் இருக்கிற பிரிமியர் பெர்ட்டிலைசர் லிமிடெட் ஒரு கோடி ரூபாய் முதலோடு துவக்கப்பட்டது. அது சென்ற ஆண்டில் சம்பாதித்த லாபம் கிட்டத்தட்ட முக்கால் லட்சத்திற்கு மேல். இப்படி தனி



17th March 1966] *[திரு. இராம. அரங்கண்ணல்]*

கொள்ள முடியுமோ, அவைகளைத் தேடிக்கொள்வதற்கும், அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் அரசாங்கம் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இருக்கின்ற பிரச்னை என்னவென்றால் பல ஆண்டுகளாக நாம் பேசி வருபவை தான்—கனரகத் தொழில்கள் எல்லாம் மத்திய சர்க்காரிடத்தில் இருந்துகொண்டிருக்கின்றன, ஆண்டுதோறும் இதைப் படித்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டும் அதையேதான் படிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆனால் இந்த விளக்கக் குறிப்பில் கிடைக்கிற செய்தி, பொதுத் துறையில் மணலியில் ஏற்பட இருக்கிற ஆயில் ரிஃபைனரிக்காக 2,700 ஏக்கர் நிலப்பரப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செய்தியாகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் சீக்கிரத்தில் வேலைகள் நடைபெறவேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன்.

மாநில அரசைப் பொறுத்த அளவில் இந்த ஆண்டில் குறிப்பிடப்பட்டிருக்கக் கூடிய விவரங்கள், அரக்கோணத்தில் ஏற்பட இருக்கிற வார்ப்பட ஆலை 3 கோடி ரூபாய் அளவிலும், ஆலங்குளத்தில் 6 கோடி ரூபாய் அளவில் ஏற்பட இருக்கிற சிமெண்ட் ஆலையும் ஆகும். இந்த ஆலைகள் இரண்டும் 1967-ல் வேலை துவங்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையும் நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இந்த ஓராண்டு காலத்தில் கூட்டுறவுத் துறையில் ஒன்பது நூற்பு ஆலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன. ஆலைகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இது பெரிய சாதனை என்று இந்த விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது பெரிய சாதனை என்று நானும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்பது ஆலைகள் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்டிருக்கிற நேரத்தில், அதைப் பற்றி நாம் மகிழ்கிற நேரத்தில், நான் தெரிவித்துக்கொள்கிற கருத்து எல்லாம் கூட்டுறவு ஆலைகள் நல்ல முறையில் நடப்பதற்கான காரியங்களை நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். கூட்டுறவு ஆலைகள் ஏராளமான எக்ஸைஸ் வரி கட்டவேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. எக்ஸைஸ் வரி மத்திய அரசுக்குச் செல்லுகிறது. எக்ஸைஸ் வரியிலிருந்து ஓரளவுக்கு விலக்குத் தேடிக் கொடுப்போமானால் கூட்டுறவுத் துறையில் நம் ஆலைகள் நல்ல முறையில் முன்னேற்றத்தைக் காண முடியும். தனியார் துறையை வளர்ப்பதற்குப் பதில் கூட்டுறவுத் துறையிலேயே நல்ல காரியங்களைச் செய்வதற்கு முயற்சி எடுப்போமானால், கூட்டுறவுத் துறையை ஒரு சிலருடைய ஆதிக்கத்திலிருந்து விடுவித்து நல்ல துறையாக ஆக்குவோமானால், பல காரியங்களைக் கூட்டுறவுத் துறையில் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எதிர்க் கட்சியில் இருக்கிற எங்களுக்கு இருக்கிறது.

இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது, இந்த ஆண்டில் தகுதி வாய்ந்த, திறமை மிக்க தொழில் அதிபர்கள் 26 பேர்கள் பப்ளிக் லிமிட்டெட் கம்பெனிகள் துவக்கியிருக்கிறார்கள், 85

பேர்கள் பிரைவேட் லிமிட்டெட் கம்பெனிகள் துவக்கியிருக்கிறார்கள், ஆக மொத்தம் 111 கம்பெனிகள் துவக்கப்பட்டிருக்கின்றன என்றும், அதன் மூலதனம் ரூ. 39.64 கோடியாக அமையும் என்றும் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அடிக்கடி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் சொல்லி வருவதெல்லாம், தனியார் துறைக்கு ஆதரவைத் தராதீர்கள், பொதுத் துறையை வளர்க்க அதற்கு முக்கியத்துவம் தாருங்கள், அது தான் நாம் எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிற சமதர்மப் பாதைக்கு வழி வகுக்கும் என்பதாகும். கடந்த ஆண்டு இதே கருத்தைச் சொன்ன நேரத்தில், கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இது கொள்கையைப் பொறுத்த விஷயம் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னார்கள், "கொள்கையைப் பார்க்கிற போது இந்த ராஜ்ய சர்க்கார் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற நாங்கள் தேர்தல் காலத்தில் எத்தகைய தேர்தல் விஞ்ஞானத்தைத் தைப் பொது மக்களிடத்தில் வைத்துத் தேர்தலுக்கு நின்றோமோ, அவற்றைத்தான் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று. அது சரி. அப்படித்தான் தேர்தல் நேரத்தில் எந்தக் கொள்கையை தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்கள் முன்னிலையில் வைக்கிறோமோ, அந்த அடிப்படையில் தான் ஆட்சி நடத்தவேண்டும் என்பது ஜனநாயக முறை ஆகும். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அந்தக் கொள்கை என்ன என்றால், எல்லாம் எல்லாருக்கும் சொந்தம் என்று வருகிற வரையில் தனியாருடைய பெட்டியில் கிடக்கும் பணத்தைக் கொண்டுதான் தொழில்களை நடத்த வேண்டும் என்பது ஆகும். ஆனால், அந்த நோக்கம் எந்த இடத்தில் கொண்டு விட்டிருக்கிறது? எந்த அளவுக்கு நாட்டை இழுத்துச் சென்றிருக்கிறது? 1956-ம் ஆண்டு இன்டஸ்ட்ரியல் பாலிசி ரெஸலூஷன் எங்களுடையது. அந்த ரேஸலூஷன் அடிப்படையில்தான் தொழில் கொள்கைப் பற்றி தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரகடனம் செய்திருக்கிறோம்" என்று எடுத்துச் சொன்னார்கள். நாங்களும் கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்து மக்களிடத்தில் வைத்தோம். நாங்களும் அதில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். தொழில் கொள்கை என்ன என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். "தனியார் துறை, பொதுத் துறை இரண்டும் இருக்கும். சமதர்ம தத்துவம் எப்படி இருப்பினும், நடது நடைமுறைச் சமதர்மம் அதுதான் என்று காங்கிரஸ் கட்சி கூறி வருவதும், தொழில் துறை சம்பந்தமாக வெளியிட்டுள்ள கொள்கை அறிவிப்பும் நாட்டைச் சமதர்மப் பாதைக்கு அழைத்துச் செல்லாது என்று திராவிட முன்னேற்றக் கழகம் நம்புவதால், தொழில் வளம் மூலம் செல்வப் பெருக்கத்தை ஏற்படுத்தி, அச்செல்வம் ஒரு சிலரிடம் குவிந்திடும் கேட்டினை நீக்கிட உணவு, உடை இருப்பிடம், கல்வி, மருத்துவ நலம், ஓய்வு ஆகிய அடிப்படைத் தேவைகள் எல்லா மக்களுக்கும் கிடைக்கத் தக்க வழி செய்வதுடன், இவைகளுக்கான தொழில் துறைகள் தனியாரின் லாப வேட்டைக் காடாகி விடும் நிலைமையை மாற்றி அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படும். ஏற்கனவே தனியார் துறையில் உள்ள பெருத்த வருவாய் தரும் தொழில்களை நியாயமான நஷ்டஈடு பத்திரங்கள் மூலம் தரப்பட்டு



பொதுத்துறைக்கு மாற்ற வழி காண முனையும். தனியார் துறையினை நடத்தி வரும் தொழிலதிபர்களில் தொழில் நுணுக்கம் அறிந்தவர்களைப் பொதுத் துறைத் தொழிலாளர்களை நடத்திச் செல்லப்பணித்திட முனையும்" என்று 1961-ல் எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் பிரகடனத்தில் சொல்லியிருக்கிறோம். இன்றைய தினம் நாட்டிலே எதைக் காண முடிகிறது? ஆடும் ஒரு பக்கம் இருக்கும், புலியும் ஒரு பக்கம் இருக்கும், இரண்டு ஒன்றாக ஆற்றில் தண்ணீர் குடிக்கும் என்று சொல்லப்படுகிறது. இது நடக்கக்கூடிய காரியமா? இதுதான் மாடல் சோஷலிசம் என்று சொல்லப்படுகிறது. கலப்படப் பொருளாதாரம்! இதுதான் இண்டஸ்ட்ரியல் பாலிசி ரெசலூஷன் என்று பேசப்படுகிறது. அந்தக் கருத்தை, அந்தக் கொள்கையை அவர்கள் மனதார நம்புவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அந்தக் கருத்து தவறு என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்துச் சொல்லுகிறோம். தனியார் துறைக்குத் தொழில்களை விடுவோமானால், செல்வம் ஒரு சிலரிடம் சேர வழியாக அமையும். செல்வம் ஒரு சிலரிடம் சேருமானால், மக்களுக்கு எந்த விதப் பலனும் கிடைக்க முடியாது. அதைத் தானே இன்றைய தினம் பார்க்கிறோம். காங்கிரஸ் தலைவர்கள் சொல்லுகிறார்கள்; அமைச்சர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். செல்வம் ஒரு இடத்தில் சேருகிறது என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். கலப்புப் பொருளாதாரம் இருக்கும், தொழில் துறையில் அது அமல் நடத்தப்படும் என்று சொல்லுகிற கட்சியினர் இவ்வளவு வருமானம் தான் வரவேண்டும் என்று வருமானத்திற்கு ஸீலிங் ஏற்படுத்தியிருக்கிறார்களா என்று பார்த்தால் கிடையாது. இன்கம் டாக்ஸ் மூலம் வாங்கவில்லையா, கார்ப்பொரேட் டாக்ஸ் மூலம் பெரும் பகுதி வாங்கவில்லையா என்று கேட்கலாம். தனியார் நடத்துகிற ஒவ்வொரு ஆலையிலும் இந்த வரிகளையும் தாண்டி எவ்வளவு லாபம் வந்திருக்கிறது என்று கணக்குப் போட்டால் நமக்கெல்லாம் வியப்பாக இருக்கும்.

தனியார் துறைக்கு எந்த அளவுக்கு நாம் உதவி செய்கிறோம் என்று பார்த்தால், அவர்கள் வீட்டிலே வைத்திருக்கிற எல்லாப் பணத்தையும் கொண்டு வந்து, 1 கோடி ரூபாய், 2 கோடி ரூபாய் என்று போட்டுத் தனியார் தொழில் ஆரம்பிப்பதில்லை. தனியார் தொழில்கள் ஆரம்பிப்பதற்குக் கடன் கொடுக்கிற கார்ப்பரேஷன்களுடைய பெயர்களை எண்ணிப்பார்த்தாலேயே பிரமிப்பாக இருக்கிறது. மத்திய அரசின் கீழ் இருக்கிற கார்ப்பரேஷன்கள், மாநில அளவில் ஏற்பட்டிருக்கிற கார்ப்பரேஷன்கள், அந்தக் கார்ப்பரேஷன்கள் போதாது என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற ரீ-ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியா, இவ்வளவும் போதாது என்று திரு. டி.டி.கே. 1964-ல் உற்பத்தி செய்த "இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் பாங்க் ஆஃ இண்டியா", இப்படி தனியாருக்குக் கடன் கொடுக்க எவ்வளவோ விதமான கார்ப்பரேஷன்கள் அமைக்கிறோம். இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படும் கருத்து, கடன் கொடுக்க இவ்வளவு கார்ப்பரேஷன்கள் அமைக்கிறோமே, நாம் ஏன் எல்லாத் தொழிலதிபர்களையும்

அழைத்து, அத்தனை பேர்களையும் கொண்ட கார்ப்பரேஷனாக நிறுவி, அந்தக் கார்ப்பரேஷன் சார்பில் பல தொழில்களை நடத்தக் கூடாது என்பதாகும். கூட்டுறவு மூலமாக இயங்கும் முறையில், தனியாருடைய பணத்தையும் திறனையும் பெறும் முறையில், ஏன் கொள்கையை வகுத்துக் கொள்ளக் கூடாது? அதனாலே என்ன நஷ்டம் ஏற்பட்டுவிட முடியும்? அதனாலே என்ன தவறு நேர்ந்து விட முடியும்? எந்த அளவுக்கு உதவி செய்யும் கார்ப்பரேஷன்களுக்குப் பணம் தரப்படுகிறது என்று பார்த்தால் ஸ்டேட் பாங்க் ஆஃப் இண்டியா மட்டும் 25 கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கிறது. எல்.ஐ.ஸி.-யிலிருந்து 100 கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கப்படுகிறது அப்படிக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தனியார் துறையை வளர்க்கப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். தனியார் துறையில் லாபம் எந்த அளவுக்கு வருகிறது என்று பார்த்தால் அதிகமாக வருகிறது. ஃபெர்ட்டிலைசர் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியா என்று பொதுத் துறையில் ஒன்று இருக்கிறது. பொதுத் துறையில் நடத்தும் தொழில் லாபம் வரவில்லை என்பது திறமைக் குறைவுக்குச் சான்றாக இருக்குமேயொழிய, லாபமே இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஃபெர்ட்டிலைசர் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியா என்பது 75 கோடி ரூபாய் மூலதனம் போட்டு, சிந்திரி, துர்க்காபூர் போன்ற இடங்களில், ஆங்காங்கு பெர்ட்டிலைசர் ஃபாக்டரி ஆரம்பிக்க உதவி செய்கிறது. அதற்கு 1963-64 ல் வந்திருக்கிற மொத்த லாபம் 9 கோடி ரூபாய் என்று கணக்கிட்டுச் சொல்லப்படுகிறது. ஆகையினாலே, பொதுத் துறையில் தொழில் நடத்துகிற நேரத்தில் லாபம் வராது என்று பொருள் அல்ல. வருகிற லாபம் எங்கெங்கே போய்விடுகிறது என்று கண்டுபிடிக்காமல் விட்டுவிட்டு, பொதுத் துறையை மக்கள் குறை சொல்லும் அளவுக்கு ஆளாக்கி இருக்கிறோம் என்று சொன்னால் அது அரசாங்கத்தின் தவறே தவிர, கொள்கை தவறு என்பது அல்ல. தனியார் துறையைப் பார்த்தால் லாபம் தரக்கூடிய பல தொழில்களை சர்க்கார் ஏற்று நடத்த முடியும். ஆனால், அந்தத் துறைகளையெல்லாம் இன்றைய தினம் தனியாரிடம் விட்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ரூ. 3 கோடி மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்டது ஆறுமுகனேரியில் தாரங்தாரா கெமிகல்ஸ். அதற்கு 1964-ல் ரூ. 77 லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது. சங்கர நகரில் ரூபாய் ஒரு கோடி மூலதனம்போட்டு ஆரம்பிக்கப்பட்ட இன்டஸ்ட்ரியல் கெமிகல்ஸ் ரூ. 10 லட்சம் லாபம் சம்பாதித்திருக்கிறது. கனி வளத்தை எடுப்பது, கனிவளத்தைத் தோண்டுவது, சர்க்கார் பொறுப்பிலே இருக்கவேண்டும் என்று விளக்கம் தரப்பட்டது. சேலத்தில் மாக்னசைட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா என்று ஒரு கம்பெனி இருக்கிறது. அதன் மூலதனம் ரூ. 25 லட்சம். 1963-ல் அந்தக் கம்பெனி சம்பாதித்த லாபம் ரூ. 5 லட்சம் ஆகும். அதே போலத்தான் மேட்டூர் கெமிகல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் ரூ. 3 கோடி முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டு, 1964-ல் சம்பாதிக்கப்பட்ட லாபம் ரூ. 35 லட்சம். கடலூரில் இருக்கிற பிரிமியர் பெர்ட்டி லைசர் லிமிடெட் ஒரு கோடி ரூபாய் முதலோடு துவக்கப்பட்டது. அது சென்ற ஆண்டில் சம்பாதித்த லாபம் கிட்டத்தட்ட முக்கால் லட்சத்திற்கு மேல். இப்படி தனி





யார் துறையிலே ஒரு கோடிக்கு, 10 லட்சத்திற்கு லாபம் வரத்தக்க அளவில் தொழில்கள் முடங்கிக் கிடக்கின்றன. இவைகளுக்குக் கிடைக்கும் லாபம் எங்கே போய்ச் சேருகிறது? 'கறுப்பாகிறது' என்று கூறப்படுகிறது. எங்கே? எங்கே? என்று தேடுகிறோம். இன்னொரு கம்பெனி துவக்கப்படுகிறது. அந்தக் கம்பெனிக்கு அரசு கடன் தருகிறது, முதலீட்டுக் கார்ப்பரேஷன் கடன் வழங்கிறது. கூட்டுறவுத் துறை மான்ய விவாதத்தின்போது நான் குறிப்பிட்டது போல, ஒரு சிலரை சிற்றரசர்களாக ஆக்குவதற்கு இந்தக் கொள்கை பயன்படுகிறதே தவிர, நாம் எதிர்பார்க்கிறபடி செல்வம் எல்லோரிடமும் போய் பரவ வேண்டும் என்ற கொள்கை இந்த அரசின் ஆட்சியிலே தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், பல நல்ல தொழில்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். பேப்பர் மில் ஒன்றை நம்முடைய சர்க்கார் துறையிலே ஆரம்பிப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். பேப்பர் மில் துவங்குவதற்கான வாய்ப்பு, வசதிகள் இருந்தாலும், அந்த வசதிகளையெல்லாம் தனியாருக்குக் கொடுப்பது அவசியம் அல்ல. பேப்பர் அன்றாடம் எல்லோரும் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிற ஒரு பொருளாகும். பேப்பர் மில் ஆரம்பித்தால் நம்முடைய அரசுக்கு நிச்சயம் லாபம் வரும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. அரசுத் துறையில் ஆந்திராவில் ராசமகேந்திரபுரத்தில் ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு பேப்பர் மில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ரூ. 5 கோடி மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட, தனியாருக்குச் சொந்தமான, நேபா மில்லுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது. அதே போல ரூ. 30 லட்சம் முதலீடு கொண்ட புனலூர் பேப்பர் மில்லுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8 லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது. ஏராளமாக பணம் லாபம் வந்திருக்கக்கூடிய தொழில்களைக் கண்டறியக் கூடிய இலாகாவினை நாம் பெற்றிருக்கிறோம். அந்த இலாகாவினர் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சியை மீண்டும் வாழ்த்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அப்படி வாழ்த்துகிற நேரத்தில் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த இலாகாவினர் 'ஜியலாஜிகல் ஆக்டிவிடீஸ் இன் மெட்ராஸ்' என்ற ஒரு புத்தகத்தைத் தயாரித்து, எங்கே கனிவளம் கிடைக்கும் என்பதற்கான முயற்சிகளை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று விளக்கம் தந்திருக்கிறார்கள். கனிவளம் சம்பந்தமான ஆராய்ச்சிக்கு என்ஜினியரிங் கல்லூரியில் நாம் ஒரு பிரிவை வைத்து, மத்திய சர்க்கார் அளவிலிருப்பதுபோதாதா என்று மாநில அளவிலும் கனி வள ஆராய்ச்சிக்காக நாம் நல்ல முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். இருந்தாலும், மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிற ஆராய்ச்சியை விட, நம்முடைய அரசே நல்ல முறையில் ஆராய்ச்சியை எடுத்து நடத்த வேண்டும், அது தான் நல்லது, பலன் தரக்கூடியது என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன் உதாரணமாக நம்முடைய அமைச்சர் அவர்களுடைய ஊரான பட்டுக்கோட்டைக்கு அருகில் சிலட்டூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே நிலக்கரி

[திரு. இராம. அரங்கண்ணல்] [17th March 1966

கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி காரைக்கால் பகுதியில் எண்ணெய் பற்றியும், அங்கே இருக்கிற நாச்சுரல் காஸ் பற்றியும் நம்பிக்கை ஊட்டத் தகுந்த தகவல் நமக்குக் கிடைத்திருக்கிறது. சவுத் ஆர்காட் டிஸ்டிரிக்ட்டில், கள்ளக்குரிச்சியில் துத்தநாகம், காப்பர், போன்ற பொருள்கள் கிடைக்கும் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. கோவை ஜில்லாவில் சத்தியமங்கலத்திலிருந்து கொள்ளேகாலம் வரையில் தங்கம் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பொருள்களைப்பற்றிய ஆராய்ச்சிகளை கனிவள இலாகாவினர், ஜியலாஜிகல் டிபார்ட்மெண்டில் இருப்பவர்கள், நல்ல முறையில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக நான் ஒன்றே ஒன்றைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். தொழில் பேட்டைகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. நம்முடைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல, அந்தத் தொழிற் பேட்டைக்கு வேண்டிய உற்பத்திப் பொருள்கள் கிடைக்காத குறை ஒரு பெரிய குறையாக இருந்து கொண்டிருக்கிறது நமது எஸ்டிமேட்ஸ் கமிட்டி கூட இதைப்பற்றிச் சுட்டிக்காட்டியிருக்கிறது. பல நல்ல யோசனைகளை எஸ்டிமேட்ஸ் கமிட்டியினர் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனைகளையெல்லாம் நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன். அவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் வெளி நாடுகளில் விலை போவதற்குள்ள வாய்ப்புகளைப் பெற்றிருக்கிற பல நல்ல பொருள்கள் என்னென்ன என்று கண்டறிந்து சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் கண்டறிந்து சொல்லிய பொருளில் ஒன்று கடலை எண்ணெய். ரூ. 3 கோடிக்கு கடலை எண்ணெய் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடலை எண்ணெய் அதிகமாகக் கிடைக்கிற இடம் தமிழ்நாடு. அதுபோல, செருப்புகளை ரஷ்யாவுக்கும், மற்ற நாடுகளுக்கும் ஏராளமாக ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று இந்தக் கார்ப்பரேஷன் சொல்லியிருக்கிறது. தோல் தொழிலில் இந்தியாவிலேயே முதல் இடம் வகிப்பது நம்முடைய தமிழ்நாடு என்பதைப்பற்றி நாம் பெருமைப்படுகிறோம். தோல் தொழில் பற்றிய ஆராய்ச்சியை நல்ல முறையில் நடத்துவதற்கு நாம் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். மாதவரத்தில்கூட சிறிய அளவிலே இது சம்பந்தமான காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். இவைகளின் மூலம் தோல் பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு முயற்சி செய்யவேண்டும். இன்னும் மின்சார விசிறிகள், தேயிலை, ரேடியோக்கள், பிளாஸ்டிக் சாமான்கள். இப்படிப் பல சாமான்கள் கொண்ட பட்டியல் தரமுடியும். இந்தப் பட்டியல் நமது தொழில் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நல்ல முறையில் தமிழ் நாட்டிற்கு ஏற்றுமதியின் மூலம் வருமானத்தையும், தமிழ் நாட்டின் வளத்தையும் பெருக்கக் கூடிய வகையில் தொழில் இலாகாவின் திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.



17th March 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

தொழில் பெருக வேண்டும், தொழில் வளம் பெருக வேண்டும், அதன் மூலம் வருமானம் பெருகவேண்டும், அந்த வருமானம் எல்லா மக்களுக்கும் பயன்படவேணடும் என்பதுதான் சோஷலிசம் பேசுகிற நம் எல்லோருடைய கொள்கையாகும். ஆனால், காங்கிரஸ் அரசைப் பொறுத்த அளவில், அந்தக் கொள்கையை வாயளவில் பேசுகிறார்களே ஒழிய, அதன் மீது நம்பிக்கை இல்லாமல் ஒரு சில சிற்றரசர்களை உருவாக்கும் வகையிலே அமைந்திருக்கிறது, அவர்களுடைய தயவிலே கட்சி வளரவேண்டும் என்று கருதுகிற காரணத்தினால். இன்றையதினம் நம்முடைய தொழில் வளம் நல்ல அளவுக்கு வளராமல், வளம் பெருகாமல் இருப்பதற்குக் காரணம் வளம் எங்கே போகவேண்டுமோ அங்கே போகாமல் இருப்பதைத் தடுக்கவேண்டிய நல்ல கொள்கையை, சமத்துவக் கொள்கையை இந்த அரசு மேற்கொள்ளாதது தான். ஆகவே, அரசில் ஒரு மாற்றம் ஏற்படவேண்டும், அந்தக் காலம் விரைவில் ஏற்பட வேண்டும் என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : I hope the House gives permission to sit till 2 p.m. today.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான்கு மணி நேர விவாதத்திற்கு அரை மணி நேரத்தில் பதில் சொல்லுவது என்பது மிகவும் கஷ்டமான விஷயம். இருந்தாலும், அந்த அரை மணிக்குள் நான் விவாதத்திற்கு பதிலை முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இந்த விவாதத்தில் எழுப்பப்பட்ட விஷயங்களை மூன்று தலைப்பின் கீழ் பிரிக்கலாம். முதலாவது, கொள்கை அளவில் ஏற்பட்டிருக்கிற குறைபாடுகள்; இரண்டாவது, நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிற குறைபாடுகள்; மூன்றாவது, நமது சட்டசபை விதிகளில் இருக்கக்கூடிய உரிமைகள். ஏனென்றால், நான்கு மணி நேர விவாதத்தில்—நானும் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தேன்—ஒரு மணி நேரம் சட்டசபை உரிமையைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நான் விவாதத்தை வரவேற்கிறவன். விவாதம் எவ்வளவு காரசாரமாக இருந்தாலும், அதை அனுபவித்து, ரசித்து, பதில் சொல்லக்கூடிய பொறுப்பு எனக்கு உண்டு. ஏனென்றால், சற்றேறக்குறைய 20 ஆண்டுகள் சட்டசபையில் இருந்தாகிவிட்டது. இந்தச் சபையில் மாத்திரமல்ல; பார்லிமெண்டிலும், உலக அரங்குகளிலும், எல்லாச் சபைகளிலும் இருந்திருக்கிற காரணத்தினால், எனக்குக் கோபம் வந்துவிட்டது என்று யாரும் சொல்லவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பதில் திருப்திகரமாக இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம்; விதிகளை நான் விளக்குகிறபொழுது அது அங்கத்தினர்களுக்குப் பிடித்தமாக இருக்கலாம்; பிடித்தம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், விதிகளைப்பற்றி இருக்கிற நிலைமையை, சட்டத்தில் இருக்கிற நிலைமையை, நான் விளக்கத் தான் கடமைப் பட்டிருக்கிறேன். அதை நான் விளக்கினேன். (திரு. மீ. கலியாண சுந்தரம் எழுந்தார்). 'ஐ ஆம் நாட் யீல்டிங்'; எனக்கு அரை 1-30 p.m.
மணிதான் இருக்கிறது, நான் விடப்போவதில்லை. இந்தப் பிரச்னை

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [17th March 1966

யைப் பற்றி, இதை இரண்டு நிமிஷத்திலே 'டிஸ்மிஸ்' செய்து விடுகிறேன். ஏனென்றால், மற்ற விஷயங்களைப் பற்றி, இந்த டிமாண்டின் முக்கியமான கருத்துக்கள் பற்றி, குறிப்பிடவேண்டும். ஆகவே, இதைப் பொறுத்த அளவில் பதில் சொல்ல விரும்புகிறேன். இந்த சட்டசபை முறைகளைப் பற்றி பின்னால் எவ்வளவோ விவாதிக்க . . .

Sri M. KALYANASUNDARAM : On a point of Order, Sir,

கனம் அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் கூறியதில் உரிமைப் பிரசினை உண்டு என்று அமைச்சர் ஒப்புக் கொண்டார்கள் . . .

The Hon. Sri R. VENKATARAMAN : I am raising a point of order on the point of order raised by the hon. Member Sri M. Kalyanasundaram

Sri K. A. MATHIALAGAN : Let the Hon. Deputy Speaker decide first the point of order of Sri M. Kalyanasundaram.

Mr. DEPUTY SPEAKER : The Hon. Minister may allow the hon. Member Sri M. Kalyanasundaram to state his point.

Sri M. KALYANASUNDARAM : I have raised a point of order first. I have a right to be heard. I am not going to submit to the bullying tactics of the Hon. Minister.

Mr. DEPUTY SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram may continue.

திரு. மீ. கலியாணசுந்தரம் : உரிமைப் பிரச்சினை என்று கூறினார்கள் அவர்கள். உரிமைப் பிரச்சினை இல்லை என்று நாங்கள் வாதாடுகிறோம் . . .

Mr. DEPUTY SPEAKER : The hon. Member is anticipating that the Hon. Minister is going to say. The Hon. Minister has not yet come to the point. The hon. Member may. therefore resume nis seat

Sri M. KALYANASUNDARAM : The Hon. Minister was saying that he would dismiss it—the point raised by Sri Anbil Dharmalingam—in two minutes. It is not for the Hon. Minister to say whether there is a *prima facie* case or not. It is your duty to say whether there is a *prima facie* case or not.

Mr. DEPUTY SPEAKER : That is another matter.

The Hon. Sri R. VENKATARAMAN : This is only a point of disorder and there is no point of order. I will now proceed with my speech.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கொள்கை சம்பந்தமாகச் சொல்லுகின்றபோது, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவர்களுக்குள்ளே இருக்கின்ற முரண்பாடுகளைத் தெளிவாக விளக்கிக் கொண்



17th March 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

டார்கள். ஒரு புறத்திலே சுதந்திராக் கட்சித் தலைவர், ஸ்ரீ கணேசன் அவர்கள்—(திரு. சா. கணேசன் : பதிலைச் சொல்லுங்கள்.) சொல்லுகிறேன் ; சொல்ல மாட்டேன் என்று ஏன் நினைக்கிறீர்கள் ? இது எனக்கு ஏற்பட்ட சந்தர்ப்பம். அவர்களுக்குள்ளே இருக்கும் முரண்பாடுகளை எடுத்துச் சொல்லுவதற்கு எனக்கு உள்ள சந்தர்ப்பம்.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திலே நான் என்ன சொல்ல வேண்டும் என்பதைச் சொல்லுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற சந்தர்ப்பம் இது. கனம் உறுப்பினர்கள் விரும்பும், ஏற்றுக் கொள்ளும் பதில் வேண்டும் என்றால், அதற்குக் கேள்வி போடவேண்டும். இன்றைக்கு நான் சொல்ல வேண்டியது, என்னுடைய கருத்துக்களை. என் கருத்துக்களைச் சொல்லுகிறேன். முரண்பாடு இருக்கிறது என்று ஆரம்பத்தில் சொல்லுகிறேன். கனம் சுதந்திராக்கட்சித் தலைவர் ஆரம்பிக்கும் போது, நாம் இந்த நாட்டில் தனியார் துறைக்கு ஆக்கம் கொடுக்க வேண்டும், ஊக்கம் கொடுக்க வேண்டும், காம்பெடிஷன் உண்டாக்க வேண்டும், சர்க்கார் தலையீடு, குறுக்கீடு இருக்கக் கூடாது. இவையெல்லாம் தான் விரயத்தில் நஷ்டத்தில் கொண்டு விடுகின்றன என்பது அவருடைய அபிப்பிராயம், வாதம். கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அபிப்பிராயம் ஓரளவுக்கு கனம் எதிர்க் கட்சி டெபுடி லீடர் அபிப்பிராயமும் கருத்துக்களும் அதுவே தான்--இந்த நாட்டிலே இருக்கிற தொழில்கள் எல்லாம் சர்க்கார் மயம் தேசிய மயம், ஆகவேண்டும் என்பது. சென்ற ஆண்டு மானிய விவாதத்திற்குப் பதில் சொல்லும்போது, சர்க்காருடைய கொள்கை தேர்தல் பிரகடனத்தை ஒட்டி இருக்கும், எதிர்க் கட்சிக்கு ஒத்ததாக இருக்காது, என்று சொன்னேன். சர்க்கார் கட்சியின் தேர்தல் பிரகடனத்தில் என்ன சொல்லியிருக்கிறதோ, அதிலிருந்து தவறியிருக்கிறதா, அல்லது தவறவில்லையா என்று பார்க்கவேண்டும். தவறி இருக்கிறது என்றால் அந்தக் குற்றச் சாட்டுக்கு ஆளாக வேண்டும். தவறவில்லை என்றால் அது தன்னுடைய வேலையைத் திறமையாக, நேர்மையாகச் செய்திருக்கிறது என்றுதான் கொள்ளவேண்டும். இந்த சர்க்கார் கட்சி எந்தச் சமயத்திலும் எல்லாத் தொழில்களையும் சர்க்கார் மயம் ஆக்குகிறோம் என்று சொன்னதே கிடையாது. ஆரம்பத்திலிருந்து சொல்லியிருப்பது, நம் கொள்கை பற்றிச் சொல்லியிருப்பது, நம்முடையது ஒரு 'மிக்ஸெட் எகானமி' ஆக இருக்கும், கலப்புப் பொருளாதாரத் திட்டமாக இருக்கும், அதிலே தனியார் துறைக்கு இடம் உண்டு, அதிலே பொதுத் துறைக்கு இடம் உண்டு, அதிலே கூட்டுறவுத் துறைக்கு இடம் உண்டு, அதிலே சிறு சிறு தொழில்களுக்கு இடம் உண்டு என்று நாம் கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கிறோம். சர்க்காருடைய கட்சி தன் லட்சியத்தை நிறைவேற்ற மக்களுடைய ஆதரவைப் பெற்று, நிர்வாகம் நடத்துகிறது. இன்றைக்குச் சொல்லுகிறபோது, அந்தக் கொள்கையிலிருந்து ஏதாவது பிசகி இருக்கிறோமா, தவறி இருக்கிறோமா என்று பார்க்கும்போது, எங்கள் கொள்கையிலிருந்து இம்மி கூடக் குறையவில்லை, தவற

வில்லை என்று திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல முடியும். பெரிய தொழில்களை, தனியாரால் செய்ய முடியாத, தேச நன்மைக்குத் தேவையான, பாதுகாப்பிற்குத் தேவையான தொழில்களைச் சர்க்காரே நடத்துகிறது. ராஜ்ய சர்க்காரா அல்லது மத்திய சர்க்காரா என்பது பிரச்னை அல்ல. பெரும் தொழில்கள், கனரகத் தொழில்கள், இவைகளெல்லாம் சர்க்கார் துறையிலே செய்யப்படுகின்றன. நடுத்தரத் தொழில்கள் தனியார் துறைக்கு விடப்பட்டு, அதற்கான உதவிகள் நாம் செய்து வருகிறோம். இந்த ராஜ்யத்திலே தொழில்கள் வளரவேண்டும் என்று சட்டசபை உறுப்பினர்கள் சென்ற பத்து ஆண்டுகாலமாக வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். தொழில் வளர வேண்டும் என்று சொல்லும்போது, சர்க்கார் துறையில் இல்லாவிட்டால் எங்கள் ராஜ்யத்திற்கு தொழில் வேண்டாம் என்று சொல்லியிருந்தால் சரி. ஆனால், எந்தத் துறையிலாவது நம்முடைய ராஜ்யத்திலே தொழில் வளரவேண்டும் என்றும், அதற்கு எல்லா விதமான வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும் என்றும், அந்த அடிப்படையில் இந்த நாட்டில், இந்த ராஜ்யத்தில் சொல்லப் பட்ட கருத்து இன்றைக்கு என்னவாயிற்று? தொழில் வளர வில்லை என்று சொல்லியிருந்தால், இந்தப் பிரச்னையே வந்திருக்காது. இன்றைக்குத் தொழில் வந்துவிட்டதால் தனியார் துறையை மறைமுகமாக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்று மாற்றிச் சொல்லும்படியான நிலைக்குத் தங்களை ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இந்த ராஜ்யத்திலே தொழில் வளம் இராவிட்டால், விவாதம் வேறாக இருக்கும். 'இந்த ராஜ்யத்தில் தொழில் வளம் ஏற்பட என்ன செய்தார்கள்? வளம் ஒன்றும் இல்லை' என்கிற கூச்சல் ஏராளமாக இருக்கும். இன்றைக்குத் தொழில் வளம் ஏற்பட்டு விட்டதால், நாம் ஏதோ தனியார் துறைக்கு விட்டுவிட்டோம், சிற்றரசு வந்துவிட்டது, சிலர் லாபம் சம்பாதித்து விட்டார்கள், அவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள், இன்னொருவருக்குக் கொடுக்க வில்லை என்று குறைபாடுகள் சொல்ல ஆரம்பிப்பார்கள். . . .

SRI K. A. MATHIALAGAN : I will read the Election Manifesto of 1946 . . . .

THE HON. SRI R. VENKATARAMAN : Your Party's?

SRI K. A. MATHIALAGAN : No, your Party's manifesto.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்த விவாதத்தை எலெக்ஷன் ஓர்க் ஆரம்பித்துவிடும், அப்பொழுது வெளியிலே செய்யலாம். (குறுக்கீடு) எங்கள் எலெக்ஷன் மானிஃபெஸ்டோவைப்பற்றி எங்களுக்குத் தெரியாமல், உங்களுக்குத் தெரிந்து விட்டது என்பதை எப்படி ஒத்துக்கொள்வது? அது இருக்கட்டும். இந்தக் கொள்கை அடிப்படையில், தனியார் துறை, பொதுத் துறை மற்ற எல்லாத் துறைகளுக்கும் இடம் உண்டு. 1956-ம் வருஷத்திய இன்டஸ்ட்ரியல் பாலிஸி ரெஸல்யூஷன் அடிப்படையில் தேர்தலில் நிற்கிறோம் என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம்.





கடந்த பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பற்றி நான் ஏதோ புத்தகம் எழுதியது இருக்கட்டும். இந்த விவாதத்திலே சம்பந்தப்படாமல், தனியாக இருக்கும் பாங்கிகள், பொருளாதார நிலைமை பற்றிப் பரிசிலனை செய்து இருக்கிறார்கள். இந்த இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் ரெவ்யூவிலிருந்து—நேற்று இரவுதான் என் கைக்குக் கிடைத்தது—சில புள்ளிவிபரங்களைக் கொடுத்தால், வளர்ச்சி எப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு வேறு சான்றுகள் தேவையில்லை. இந்த ரெவ்யூவில் கொடுத்திருப்பது, அகில இந்தியாவில் தொழில் ஸ்தாபனங்களுடைய வளர்ச்சி, 1959-63 வரை, 23 சதவிகிதம். நம்முடைய ராஜ்யத்திலே 24 சதவிகிதம். வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள், அகில இந்தியாவில் 17 சதவிகிதம். அதே நேரத்தில் நம்முடைய ராஜ்யத்தில் 29 சதவிகிதம், 'Production Capital' என்ற வகையில், மூலதனம் உற்பத்திக்காக ஈடுபடுத்தப்பட்டது. அகில இந்தியாவிலும் வளர்ச்சி 132 சதவிகிதம்; தமிழ் நாட்டிலே 198 சதவிகிதம். 'Gross' Output-ஐ எடுத்துக்கொண்டால் அகில இந்தியாவில் 73 சதவிகிதம் வளர்ச்சி சென்னை ராஜ்யத்தில் 114 சதவிகிதம் வளர்ச்சி. 'Value of manufactures (added)' என்ற வகையில், உற்பத்தி அதிகரித்ததனால் ஏற்பட்ட அதனுடைய மதிப்பு, அகில இந்தியாவில் 68 சதவிகிதம்; தமிழ்நாட்டில் 102 சதவிகிதம். தொழில் வளம் பெருகியிருக்கிறது என்பதற்கு வேறு சான்றுகள் தேவை இல்லை.

தொழில் வளத்தை இந்த அளவுக்கு வளர்ச்சி செய்வதற்கு உதவியாக இருந்தது—நான் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்—இந்த ராஜ்யத்திலுள்ள, இந்த நாட்டிலுள்ள, சர்க்காருடைய தொழில் கொள்கைதான் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. (ஆரவாரம்). ஏதோ கொள்கை அளவில், சர்க்கார் துறை தான் வளரவேண்டும் என்று சொல்லி, தனியார் துறைக்கு உதவி கொடுத்திருக்காவிட்டால், இந்தத் தொழில் வளம் ஏற்பட்டிருக்காது. அதே போலத்தான், தனியார் துறைக்குத் தான் கொடுக்கவேண்டும் என்று சொல்லி, ராஜ்ய சர்க்காரோ மத்திய சர்க்காரோ எந்தவிதமான தலையீடும் செய்யக் கூடாது என்று சொல்லியிருந்தால், பெரிய கனரகத் தொழில்கள், ஸ்மால் இன்டஸ்ட்ரிஸ் போன்றவை எல்லாம் ஏற்பட்டிராது. ஆகவேதான், இந்தக் கலப்புப் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலே, நம்முடைய ராஜ்யத்தில், கடந்த ஐந்து ஆண்டுகளில், இரட்டிப்பு மடங்குக்கு மேல் அதிகமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏன் எல்லாத் தொழில்களையும் சர்க்கார் துறையில் செய்யவில்லை? எல்லாத் தொழில்களையும் சர்க்கார் துறையிலே செய்ய வேண்டும் என்றால், அதற்கு மூலதனம் வேண்டும். மூலதனம் வேண்டுமென்றால், வரியின் மூலமாக எழுப்ப வேண்டும்; அல்லது, கடன் மூலமாக எழுப்ப வேண்டும். கடன் மூலமாக எழுப்பினால், ஓரளவுக்குத்தான் கடன் வாங்க முடியும். அதற்கு மேல் முடியாது. அந்த ஓரளவுக்குக் கடன் எழுப்பும்போதே, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எல்லாம் எவ்வளவு கூச்சல் போடுகிறார்கள்? I am sorry—

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [17th March 1966

எவ்வளவு 'அப்ஜெக்ஷன்' செய்கிறார்கள்? ஆட்சேபணை சொல்லுகிறார்கள்? "கட்டாயமாக, பலவந்தமாக வாங்கிவிட்டார்கள்" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இந்த அளவுக்குத் தொழில் வளர்ந்திருக்கிறதே, அந்த அளவுக்கு நாமெல்லாம் சர்க்கார்த் துறையிலே செய்யவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்குமானால், எவ்வளவு கோடி ரூபாய் நாம் மூலதனம் போட்டிருக்கவேண்டும்? எத்தனை கோடி ரூபாய் வரிகளாகவோ அல்லது கடனாகவோ பெற்றிருக்கவேண்டும்? அவ்வாறு பெறக் கூடிய சக்தி இந்த ராஜ்யத்திற்கு இருக்கிறதா என்பதைக் கனம் அங்கத்தினர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும். அது இல்லாத காரணத்தினால், யார் யார் என்ன என்ன காரியங்கள் செய்யவேண்டும் என்று தொழில் துறையிலே அவரவர்களுக்குப் பங்கை வகுத்துக் கொடுத்து, பலர் சேர்ந்து தொழில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்ட ஒரு உயர்ந்த லட்சியம். It is a division of labour. நாமே இதைச் செய்ய வேண்டும் என்று சொன்னால், அதற்கு வேண்டிய மூலதனம் நம்மிடத்தில் கிடையாது. நம்மிடம் மூலதனம் இல்லாத காரணத்தால், தொழில் வளம் ஏற்பட்டிருக்காது, வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்காது, நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்காது, நாம் இன்னும் மிகப் பின்தங்கிய ராஜ்யமாகவே காட்சியளித்திருப்போம். ஆகவேதான், நம்மிடத்தில் இருக்கும் குறிப்பிட்ட மூலதனத்தைப் பல தொழில் செய்கின்றவர்களுக்குப் பங்கீடு செய்து கொடுத்து, அந்தத் துறையிலே தொழில்களையெல்லாம் வளர்க்கவேண்டும் என்ற ஒரு பெரிய முயற்சி எடுத்துக்கொண்டோம். 1957-ஆம் ஆண்டு இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டவுடன், ஏன் தமிழ்நாட்டில் தொழில் வேகமாகப் பரவில்லை என்பதைப்பற்றி ஆலோசனை செய்தேன். அவ்வாறு செய்கின்ற நேரத்தில், குறிப்பாகத் தொழில் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் என்னிடத்தில் சொன்னது இதுதான். "இன்றைக்குத் தமிழ்நாட்டில் மூலதனம் கிடைக்கவில்லை; மூலதனம் இல்லாத காரணத்தால் பம்பாயில் ஆரம்பிக்கிறார்கள்; கல்கத்தாவில் ஆரம்பிக்கிறார்கள்; பெரிய தொழில்கள் எல்லாம் எங்களால் செய்ய முடியவில்லை" என்பதைச் சொன்னார்கள். பொருளாதாரத் துறையிலே முக்கியமான அடிப்படைக் கொள்கை ஒன்று உண்டு. நாட்டின் வளர்ச்சிக்கு வேண்டிய 'இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்' என்ற வகையில், வேண்டிய உதவிகள் எல்லாவற்றையும் செய்து கொடுக்கவேண்டியது சர்க்காருடைய பொறுப்பு. நீர், மின்சாரம், போக்குவரத்து சாதனங்கள், மூலதனம் தேவையானால் மூலதனம் போன்ற 'இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்' எல்லாம் செய்து கொடுத்தால் வேகமாக வளர்ச்சி ஏற்படும். ஆகவே, இந்த இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர் அளிக்கவேண்டும் என்பதற்காக இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷனிலிருந்து தைரியமாக—இதில் எத்தனையோ 'ரிஸ்க்' இருந்தாலும் தைரியமாக—ஏராளமாகக் கடன் கொடுத்தோம். அதிருஷ்டவசமாக, அவையெல்லாம் இன்றைக்கு வெற்றிகரமாக வந்துவிட்டன. அவ்வாறு கடன் கொடுத்து, ஃபாக்டரிகள் வராமல் போயிருந்தால், நஷ்டமாகப் போயிருந்தால், இன்றைக்குக் கனம் உறுப்பினர்கள் பேசுகிற அல்லது சுமத்துகிற குற்றச்



17th March 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

சாட்டு வேறு விதமாக இருக்கும். ஆனால், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பெரிய அதிருஷ்டம் என்னவென்றால், ஒன்றரை கோடி ரூபாய் கொடுத்தோம், ஒரு கோடி ரூபாய் கொடுத்தோம், 70 லட்சம் ரூபாய் கொடுத்தோம், ஐம்பது லட்சம் ரூபாய் கொடுத்தோம். பெரிய தொழில்கள் இந்த ராஜ்யத்திலே செய்ய முடியாது என்று சொன்னது மாறி வியக்கத்தக்க அளவிலே, நாம் இந்தப் பணத்தைக் கொடுத்து இந்த ராஜ்யத்தில் தொழில்கள் வளரும்படியாகச் செய்தோம்.

சென்னையில் அலுமினியம் கம்பெனி வைக்கவேண்டும் என்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளின்போது அதற்கு என்னென்ன எதிர்ப்புகள் இருந்தன என்பதை எல்லாம்—அரசியலிலே மறதி ஜாஸ்தி என்பதனால்—நாம் எல்லோரும் மறந்து விட்டோம். ஆனால், அந்தவிதமான பெரிய திட்டங்களை, நம்முடைய இன்ஃப்ரா ஸ்ட்ரக்சரைப் பலப்படுத்தியதன் காரணமாக, இன்றைக்கு இந்த ராஜ்யத்தில் வளர்க்க முடிந்தது. வளர்ந்து விட்டதற்கு அதிருஷ்டம் நம் பக்கத்தில் இருந்தது. இந்தத் தொழில்கள் எல்லாம் வெற்றி பெறுமா, பெறாதா என்று தொழில் நுட்ப மேதைகள் எல்லாம் சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தது எல்லாம் இன்றைக்கு நம் ராஜ்யத்தில் வெற்றிகரமாக நடந்து விட்டன. ஆகவேதான், நான் மீண்டும் வற்புறுத்திச் சொல்லவிரும்புகிறேன், இந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தால்தான் மேலும் மேலும் முன்னேற்றம் ஏற்படும், தொழில் வளம் ஏற்படும். இந்தக் கொள்கையை மக்கள் மாற்றினாலும் சரி, கட்சிகள் மாற்றினாலும் சரி, நாம் பின்தங்கிவிடுவோம், பின்னோக்கிச் சென்றுவிடுவோம் என்று திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

இதோடு நான் கொள்கை சம்பந்தமான விஷயத்தை முடித்துக் கொண்டு, இலாகா சம்பந்தமாகக் கூறப்பட்ட சில குறைபாடுகளைப் பற்றி எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். முதலில், கனம் உறுப்பினர் திரு. வீரபாகு அவர்கள் சொன்னார்கள். "ஏன் இந்த சோடா ஆஷ் தொழிற்சாலையைச் சென்னையிலேயே வைக்கிறீர்கள்? தூத்துக்குடி போன்ற இடங்களில் வைக்கவில்லையே" என்று சொன்னார்கள். அதை அடிப்படையாக வைத்து, அந்தக் கொள்கையை நான் சற்று விளக்க விரும்புகிறேன். ஏனென்றால், பொதுவாக எல்லா கனம் அங்கத்தினர்களும் "தொழில்கள் பரவலாக அமைக்கப்படவில்லை, சென்னை நகரத்தைச் சுற்றி வளர்ந்துகொண்டிருக்கின்றன" என்று சொன்னார்கள். ஒரு தொழில் வளரவேண்டும் என்றால், அதற்கு இயற்கை வசதிகள் பல வேண்டும். குறிப்பாக, இந்த சோடா ஆஷ் செய்வதற்கு நமக்கு அமோனியா வேண்டும். சென்னையில் வருகிற ஆயில் ரிஃபைனரியில் Naphtha-Cracker போட்ட காரணத்தால் அமோனியா செலவில்லாமல் கிடைக்கிறது. வேறோர் இடத்தில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டும் என்றால், நாம் அதற்காக நாஃப்தா க்ராக்கர் ஒன்று போட்டு, வெளியிடத்திலேயிருந்து கொண்டுவந்தால் கட்டுபடியாகாது. கட்டுபடியாகக் கூடிய தொழிலைத்தான் நாம் செய்ய முடியுமே தவிர, கட்டுபடியாகாத தொழிலை நாம் செய்ய

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [17th March 1966

முடியாது. அதனால், சில இயற்கை வசதிகள் இருக்கிற இடத்திலே, தொழில் தானாகவே வந்து சேர்வதையும், இயற்கை வசதி இல்லாத இடங்களில் அது அவ்வளவு சுலபமாக, துரிதமாக ஏற்படுத்த முடியாத நிலைமை இருப்பதையும் நாம் காண்கிறோம். இதைப் போக்குவதற்காகத்தான், அங்கங்கே வசதிகள் செய்து கொடுப்பதற்காகத்தான் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் வைத்திருக்கிறோம். இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் வைப்பதற்குள்ள காரணமே, வசதிகள் இல்லாத இடத்தில் ஒரு டூல் ரூம் வைத்து, ஒரு டை-காஸ்டிங் மெஷின் வைத்து அவர்களுக்கு வேண்டிய பாகங்களையெல்லாம் செய்து கொடுத்து, அந்த இடத்தில் தொழில் வளரும்படியாகச் செய்கிறோம். விருத்தாசலத்தில் இருக்கும் ஸெராமிக் இன்டஸ்ட்ரீஸை எடுத்துக்கொண்டால், அந்த இடத்தில் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் போட்டு, அவர்கள் கொண்டுவருகின்ற உறுப்புக்கள் எல்லாவற்றையும் சூளையிலே வைத்து சுட்டுக் கொடுக்கக்கூடிய அளவு அல்லது அவர்களுக்கு வேண்டிய மற்ற சௌகரியம் செய்து கொடுக்கக்கூடிய அளவு அவற்றிலே செய்து கொடுக்கும் காரணத்தால் அங்கே தொழில் வளருகிறது. அந்தக் குறையைப் போக்குவதற்காக நாம் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் வைத்து ஓரளவுக்குச் சமாளித்துக் கொண்டு வருகிறோம்.

தீக்குச்சி தொழிலில் (மாட்ச் இன்டஸ்ட்ரி) நெருக்கடி இருப்பதாகத் தெரிவித்தார்கள். தீக்குச்சித் தொழிலில் நெருக்கடி இருக்கின்றது உண்மை தான். அவர்களுக்கு இதுவரையில் கிடைத்திருந்த 100 பங்கில் 70 பங்கு தான் கிடைக்கிறது. இவ்வாறு பற்றாக்குறை இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் மின்சார வெட்டும் ஒன்று. நாட்டில் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னால், அதை ஏற்றுக்கொண்டு, எப்படிச் சமாளிக்கவேண்டும் என்று தொழில் அதிபர்கள் முன்வரவேண்டும் என்று நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லாத ஒன்றை, "எங்களுக்குக் கிடைக்கவேண்டும், கிடைக்கவேண்டும்" என்று கிளர்ச்சிகள் செய்வதன் மூலமாக இந்த நாட்டினுடைய தொழிலையோ அல்லது அவர்களுடைய தொழிலையோ அபிவிருத்தி செய்து கொள்ளவே முடியாது. இன்றைக்கு அந்த பொட்டாசியம் க்ளோரைட் கிடைக்காமல் போனதற்குக் காரணம் சில இடங்களில் மின்சார வெட்டு இருக்கிறது, சில இடங்களில் உற்பத்தி சற்று குறைவாக இருக்கிறது. அதை நாம் சமாளிப்பதற்கு எல்லா முயற்சியும் செய்திருக்கிறோம். ராஜ்ய சர்க்காரைப் பொறுத்த வரையில், இதற்காக ஒரு கூட்டம் போட்டு, உற்பத்தி செய்கின்றவர்கள் எல்லோரையும் அழைத்து, "நாங்கள் 70 சதவிகிதம் செய்கிறோம், அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று சொல்லி, அந்த விதமான ஏற்பாட்டையும் செய்து வைத்திருக்கிறோம். ஆகவே நாட்டிலே பற்றாக்குறை இருப்பதைத் தொடர்ந்து ஒரு சர்க்காரோ, நிர்வாகமோ திருத்திவிட முடியாது. கஷ்டங்களையும், குறைபாடுகளையும் நிவர்த்திப்பதற்கான முயற்சிகளை நிர்வாகம் செய்யும். அதைச் செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



17th March 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

அடுத்து, அக்ரோ இன்ட்ஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனைப் பற்றிச் சொன்னார்கள். அதற்காக உதவிகளைச் செய்ய ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அபோடா என்ற பெரிய ஸ்தாபனம் முன்வந்திருக்கிறது. நான் ஜப்பன் போய் இருந்தபோதே கூட அவர்கள் சொன்னார்கள். ஆகவே அதற்கு வேண்டிய முயற்சிகளையும் கூட இந்த ராஜ்ய சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்டேட் இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேடிவ் பாங்கில் பணம் இல்லை என்று சொன்னார்கள். நாம் எவ்வளவு வேகமாகத் தொழில் வளர்ச்சி அடையவேண்டும் என்று விரும்புகிறோமோ அந்த அளவுக்கு பண உதவி செய்யப் போதுமான நிதி இல்லை என்பது உண்மைதான். வந்திருக்கக்கூடிய லோன் அப்ளிகேஷன்களைப் பார்த்தாலேயே அது தெரியும். மெட்ராஸ் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன், ஸ்டேட் இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேடிவ் பாங்க் இரண்டும் சமாளிக்கக்கூடிய நிதி வசதி பெறவில்லை. அவ்வளவு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஒவ்வொருவரும் வேகமாகத் தொழில்களை ஏற்படுத்தி நடத்தவேண்டும் என்று விரும்புகிறார்கள். நிதி வசதி எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்குத்தான் உதவி செய்ய முடிகிறது. (திரு. கே. டி. கோசல்ராம்: சாங்க்ஷனான லோனுக்கே இன்னும் பணம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. சாங்க்ஷன் ஆகிவிட்டால் என்ன? எம்.ஐ.ஐ.ஸி-க்கு, ஐ.டி.பி.-யில் இருந்து பணம் வரவேண்டும். இவர்கள் ரீ-ஃபைனான்ஸ் எதிர்பார்த்திருக்கிறார்கள் இவர்களிடம் இருந்து பணம் வந்தவுடன் கடன் கொடுக்கப்படும். அவர்கள் கொடுப்பார்கள். அதனால் தான் தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, யார்ன் சம்பந்தமாகவும் சொல்லப்பட்டது. நூல் விலை ஏறியிருக்கிறது என்பது உண்மைதான். அதற்குக் காரணங்கள் மூன்று. ஒன்று பருத்தி விலை உயர்வு, இரண்டு பவர் கட், மூன்றாவது சமீபத்தில் மத்திய சர்க்கார் போட்ட எக்ஸைஸ் வரி. இந்த எக்சைஸ் வரி சற்றுக் கூடுதலாகத்தான் இருக்கிறது. இது சம்பந்தமாகவும் கூட மத்திய சர்க்காருக்கு எழுதி இந்த வரியைக் குறைப்பதற்கான சிபாரிசுகளைச் செய்வதாக இருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அடுத்தாற்போல, நம்முடைய இராச்சியத்தில் மூலப்பொருள்கள் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. அத்துறையில் பற்றாக்குறை இருக்கிறது என்பது உண்மை. இந்த பற்றாக்குறை இருப்பதற்கு முக்கியமான காரணம் பாகிஸ்தானுடன் சமீபத்தில் ஏற்பட்ட சண்டை காரணமாக அயல் நாட்டுக்கடன் உதவிகள் போதிய அளவு கிடைக்கவில்லை. எய்ட் இந்தியா க்ளப் கூடவில்லை. அவர்கள் கூடி மீண்டும் உதவி செய்ய ஆரம்பிப்பார்கள். நமது பிரதம மந்திரி அவர்களும் அமெரிக்காவுக்கு நேரில் சென்று வாதாடி வாங்கிவருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதன் பிறகு ஓரளவு இந்தப் பிரச்னை தீர்க்கப்படலாம் என்று நம்புகிறேன்.

கைத்தறித்துணிகள் சம்பந்தமாக சேலைகள், வேஷ்டிகள் ஆகியவற்றை கைத்தறிகளுக்கே ஒதுக்கவேண்டுமென்பதை இந்த சர்க்கார் அசோக்மேத்தா கமிட்டிக்கு வற்புறுத்தி சிபார்சு செய்தது என்பதை கனம் உறுப்பினர்கள் அறிவார்கள். அதன் பிறகு அசோக்மேத்தா கமிட்டியினரும் அதை ஏற்றுக்கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால் பவர்லூம் பிரச்சினை இத்துடன் இணைந்திருப்பதனால் இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை. சீக்கிரத்திலேயே முடிவு எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி பற்றிய ஆய்வு அறிக்கை கனம் அங்கத்தினர்களுக்கு விநியோகம் செய்வதிலே காலதாமதம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். அது உண்மை. அதை ஏற்றுக்கொள்கிறேன். இனி அடுத்தமுறையில் இருந்து ஒரு இரண்டு தினங்கள் முன்கூட்டியே கனம் அங்கத்தினர்களுக்கு வழங்க கவனம் எடுத்துக்கொள்ளப்படும். (திரு. சா. கணேசன்: இப்படியே சொல்லிவிட்டுப் போய்விடுங்கள்) நாம் போய்க் கொண்டிருக்கலாம், வந்து கொண்டிருக்கலாம். ஆனால் அதிகாரிகள் நிரந்தரமாக இருப்பவர்கள். அவர்கள் இதுபற்றி கவனம் செலுத்துவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரையைப் பொறுத்தவரையில் இன்டஸ்ட்ரியல் டெவலப்மெண்டு குறைவாக இருப்பதாகச் சொன்னார்கள். நான் யாரைப் பற்றியும் குறை கூற விரும்பவில்லை. ஆனால் எவ்வளவோ முறை அந்தப் பகுதியில் உள்ளவர்களைப் பார்த்து பல்வேறு தொழில் துறையில் ஈடுபடுங்கள் என்று சொன்னாலும் அந்தப் பகுதி மக்கள் டெக்ஸ்டைல் மில்லைத் தவிர வேறு ஒன்றையும் துவக்குவதற்குத் தயாராய் இல்லை. இதுபற்றி ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுதந்திராக்கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் 'இந்த பர்மிட் ராஜ், லைசென்சு ராஜ் போகவேண்டுமென்று சொன்னார்கள். (கனம் சா. கணேசன்: நான் அப்படி இன்று ஒன்றும் சொல்லவில்லை. சொல்லாதவற்றையும் கூட சொன்னதாகச் சொல்கிறீர்கள்.) இங்கே சொல்லாமல் இருக்கலாம். வெளியில் சொல்கிறார்கள்.' அதனால் இங்கே நான் சொன்னேன். அதுபற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அந்த மாதிரி லைசென்சு, கோட்டா என்று நாம் வரையறுத்து வைத்துக்கொள்ளாதிருந்தால் இந்த இராச்சியத்தில் இன்றையதினம் இவ்வளவு தொழில்கள் வளர்ந்திருக்காது. டெக்ஸ்டைல் மில்களைத் தவிர வேறு ஒன்றுமே வந்திருக்காது. நானும் பத்து ஆண்டுகளாக முயற்சி செய்தேன். தொழில்கள் என்றால் டெக்ஸ்டைல் மில் ஒன்றுதானா? கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பியுங்கள், என்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பியுங்கள்—என்பதாக. நாம் லைசென்சு வைத்து ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தியவுடன் தான்- டெக்ஸ்டைல் மில் என்று காத்துக்கொண்டிருப்பதில் பயன் இல்லை, இனி அதற்கு லைசென்சு கிடைக்காது, தொழில் செய்யவேண்டுமென்றால் வேறு தொழில்களைத்தான் துவக்கவேண்டும், இல்லாவிட்டால் கடையைக் கட்டிக் கொண்டுதான் இருக்கவேண்டும்—என்ற நிலைமை வந்தபிறகு தான் மற்ற மற்ற பல தொழில்களிலே அவர்களுடைய கவனம் திரும்ப





ஆரம்பித்தது. அதனால் தான் இன்றைக்கு நம்முடைய இராச்சியம் பலவிதமான தொழில்களைக் கொண்ட ஒரு முன்னேற்றமான இராச்சியமாக இருக்கிறது. இன்றைக்கு மோட்டார் பார்ட்ஸ் உற்பத்தியை எடுத்துக் கொண்டால் நம்முடைய ராச்சியம்தான் முதன்மையாக இருக்கிறது. டெட்ராய்ட் ஆப்-இந்தியா என புகழ் படைக்கிற அளவுக்கு மோட்டார் ஸ்பேர் பார்ட்சுகள் இங்கே 80 சதவிகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கிருந்துதான் அகில இந்தியாவுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த விதமான பரவலான வளர்ச்சிக்கு நம்முடைய கட்டுப்பாடுகள் தான் உதவியாக இருந்து கொண்டிருக்கிறது.

அதுமாத்திரம் அல்ல. இன்றைக்கு இந்த விதமான கட்டுப்பாடுகள் இல்லை என்றால் சிறு தொழில்களே வளர்ந்திருக்காது. கட்டுப்பாடு வைத்து தலைக்கு ½ டன், 1 டன், 2 டன் என்று மூலப்பொருள்களைக் கொடுப்பதனால் தான் பரவலாகப் பல இடங்களில் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் நடைபெறுவதற்கு வசதி ஏற்பட்டது. தமிழ்நாட்டில் 1961-ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி 3,000 சிறு தொழில்கள் இருந்தன என்றால், 1965 டிசெம்பர் மாதம் முடிவில் பார்க்கிறபோது 8,818 சிறு தொழில்கள் இருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் ஒரு நம்பிக்கை, நாம் மனுச் செய்துகொண்டால் நமக்குக் கிடைக்கும், ஒரு சிறு தொழிலை நடத்தலாம் என்கிற ஊக்கம் ஏற்பட்டது. இப்படி ஒரு முறை இல்லை என்றால்---மூலப் பொருள்களும் பற்றாக்குறையாக இருக்கிற காலத்தில் பணம் படைத்த ஒருவர் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு விடுவார். பல பேர்களால் தொழில் நடத்துவதற்கே வாய்ப்பு இல்லாமல் போய் இருக்கும். விநியோகத்தில் ஒன்றிரண்டு தவறுகள் இருக்கலாம். —என்னவோ இன்றைக்கு திரு. கலியாணசுந்தரம் அவர்கள் என்னிடம் கோபமாகவே இருக்கிறார்கள். நான் சொன்னது எல்லாம் விதிகளின்படித்தான் செய்துகொண்டிருக்கிறோம் என்பதாகும். அவருக்கு என்னிடம் அவ்வளவு கோபம் வந்திருக்கவேண்டாம்— இன்றைக்குப் பலர் வந்து அப்ளிகேஷன் போட்டு வாங்கிக்கொண்டு போகிறார்கள். நூற்றுக்கு 90 பேர்கள் ஒழுங்காகச் செய்வார்கள். பாக்கி பத்துப் பேர்கள் அப்பால் போனவுடன் விற்றுவிடலாம். அதற்காக கோட்டா கொடுத்தவர்களுக்குப் பின்னாலேயே ஒரு அதிகாரி போய்க்கொண்டிருக்கவேண்டும் என்று சொன்னால், நிர்வாகம் நடத்தவே முடியாது. பிறகு இந்த ஆபீசர் பின்னாடி இன்னொருவர் போய்க் கொண்டே இருக்கவேண்டும். இப்படிப் போனால் தொழில் வளராது என்பது மட்டும் அல்ல. சமூகமே கெட்டுப்போய்விடும். அதை நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். தவறு செய்கிறவர்களைக் கண்டிபிடித்தால் தண்டிக்கிறோம். ஆயினும் மக்களை நம்பித்தான் விநியோகம் செய்யவேண்டியிருக்கிறது. நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் ஒழுங்காக நடந்துகொண்டார்கள் என்றாலே நாட்டுக்கு நல்லது. பத்துப்பேர்கள் தவறிவிடுகிறார்கள் என்பதற்காக அடிப்படையான நம்முடைய கொள்கையிலேயே தொல்லை கொடுத்தால், தொந்தரவு கொடுத்தால் இந்த மாநில தொழில் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டுவிடும். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2-00 p.m. MR. DEPUTY SPEAKER : May I know how long will the Hon. Minister take to conclude his speech ?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I think I require fifteen more minutes.

*இன்றைக்குக் கூட்டுறவுத் துறையைப் பற்றி ஏராளமான புகார்கள் சொன்னார்கள். கூட்டுறவுத் துறை சர்க்காரால் நேரடியாக நடத்தப்படுவது இல்லை. கூட்டுறவிலே பெரிய அளவு பொறுப்புகள் அவர்களையே சார்ந்தது. அது ஒரு அடானமஸ் பாடி. தவறு செய்தால் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர கூட்டுறவு சொசைடியில் தவறே இல்லாமல் சர்க்கார் பார்ப்பது என்பது கஷ்டமான விஷயம். தவறுதல் ஏற்படாதிருக்க வழிவகைகள் செய்யலாம்; விதிகள் செய்யலாம். பீனல் கோட் இருக்கும் காரணத்தால் சட்டத்தை மீறுகிறவர்களே கிடையாது என்று சொல்ல முடியாது. சட்டத்திலே கோளாறு இருக்குமானால் திருத்தத் தயாராக இருக்கிறேன் அதன் நிர்வாகம் அடானமஸ் ஆக இருக்கிற நிலைமையில் அவர்கள் தவறு செய்வார்களேயானால் தண்டிக்கத் தயாராக இருக்கிறேன். அவர்களுக்குச் சலுகை கொடுக்கிறோம் என்று சொன்னால் குற்றச் சாட்டை ஒத்துகொள்கிறேன். இந்த இலாகாவைப் பொருத்த வரை திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்—தவறு செய்தவர்கள் யாருக்கும் எந்த விதச் சலுகையும் கொடுக்கவில்லை. அவர்களிடத்திலே தகவல் இருக்குமானால் கேள்விகள் போடலாம். அசெம்பிளியில் கேள்வி முறை எதற்காக வைக்கப்பட்டிருக்கிறது? எல்லாத் தகவல்களையும் மந்திரிகளிடமிருந்து பெற வேண்டுமென்பதற்காகத்தான் வைத்திருக்கிறார்கள். அவ்வாறு தனியாகக் கேள்வி கேட்டால் சட்ட சபையில் சொல்வதற்கும் உபயோகமாக இருக்கும், எங்களுக்கும் உபயோகமாக இருக்கும். அதைப்பற்றி நாங்களும் கவனிக்க முடியும். இல்லாவிட்டால் எல்லாம் சரியாக நடக்கிறது என்று நினைத்துக் கொண்டிருப்போம். விதி முறைகளில் தவறு இருந்தால் திருத்தவேண்டும்; நிர்வாக முறையில் தவறு இருந்தால் அதைக் கண்டிக்கவேண்டும்.*

*இன்றைக்கு கூட்டுறவு இயக்கத்திலே தவறு செய்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டினால் அதிலே நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.*

***திரு. அ. பெ. தர்மலிங்கம் :*** *சட்டப்படி குற்றச்சாட்டு 24-6-1965-ல் அமைச்சரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அப்படி இருந்தும், இலாகாக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தும், ஓராண்டுக்காலம் ஆகியும் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?*

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :*** *இதைத்தான் அவர்கள் ஒரு கேள்வி மூலமாகக் கேட்கவேண்டுமென்று சொன்னேன். பட்ஜெட் விவாதத்தில் ஏதோ ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டு என்ன செய்தார்கள் என்று கேட்க முடியாது. இதே உறுப்பினர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இதுதான் அவருடைய கடமையும்*





*கூட; கேள்வியைப் போடவேண்டும். ஏன் அந்த நிர்வாகத்திலே இந்த மாதிரித் தவறு ஏற்பட்டது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேள்வியைப் போடவேண்டும். அவ்வாறு கேட்டால் பதில் கொடுக்க முடியும். சட்டசபை முறைகளில் கேள்வி நேரந்தான் முக்கியத்துவம் வாய்ந்தது. சிறு தவறுகளைப்பற்றி தனிப்பட்ட விஷயங்களைப்பற்றிக் கேள்விகள் மூலமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். கொள்கை அளவிலே தவறுதல்கள் இருந்தால் விவாதத்தின் மூலம் சுட்டிக்காட்டிப் பதிலைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதுதான் நான் அறிந்த பார்லிமெண்டரி முறை. அவ்வாறு புகார்கள் இருக்குமானால் ஒரு கேள்வியைப் போட வேண்டுமென்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.*

***திரு. து. ப. அழகமுத்து :*** *அமைச்சர் அவர்கள் கேள்வி போடுங்கள் என்று கூறுகிறார்கள். கேள்வி போட்டால் பதில் வருவதற்கு ஆண்டுக்கணக்காகிறது. எப்படி விவரத்தைத் தெரிந்து கொள்வது?*

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :*** *அதிலே தவறு இருந்தால் அதையும் திருத்திக் கொள்கிறோம். கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டுமென்பதுதான் எங்களுடைய எண்ணம். பதில் கொடுக்கக்கூடாது என்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது.*

*கிளாஸ் யூனிட்டைப் பற்றித் திரு. தர்மலிங்கம் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி அவர்கள் பேசியதற்காக நான் ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன். அதைப்பற்றி விளக்குவதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்தார்கள். எல்லா விஷயங்களிலும் நிபுணர்களை ஆலோசனை கேட்பதுபோல் இதிலும் ஒரு நிபுணரை வெளிநாட்டு நிபுணரைப் பிளான் போடச் சொன்னோம். கிளாஸ் யூனிட்டை அமைத்த போது அவர் ஃபர்னஸை ஆறு அடி உயரத்தில் வைக்க வேண்டுமென்று பிளான்போட்டுக் கொடுத்து விட்டுப் போய் விட்டார். நான் போய் அந்த ஃபர்னஸை வைக்க வேண்டுமென்று பார்த்தபோது, அவ்வாறு ஆறு அடி உயரத்தில் வைத்தால் கீழே விழுந்து விடும். இந்த நாட்டுக்கு அது ஏற்றதல்ல, அது சரியல்ல என்று நம்முடைய இலாகாவில் இருப்பவர்கள் சொன்னார்கள். நம்முடைய இலாகா வழக்கம் என்ன என்று சொன்னால், ஒரு தவறு நடந்துவிட்டால், யார் மீது தவறு என்பதற்கு ஒரு ஃபைல் ஆரம்பமாகிவிடும். யார் மீது தவறு என்று ஃபைல் போய்க்கொண்டே இருக்கும். அது என்னிடம் வந்தபோது, யார் மீது தவறு என்று விசாரிக்கத் தேவையில்லை. உடனடியாக கிளாஸ் யூனிட்டைப் போட்டு நடத்த வேண்டும் என்று சொல்லி நான் அங்கு சென்று பார்த்தபோது, அப்படி உயரத்தில் வைக்கக்கூடாது, கீழேதான் வைக்க வேண்டுமென்று சொன்னேன். அப்போது இருந்த எக்ஸ்பர்ட்டும் ஒத்துக் கொண்டு அந்த மாதிரி அமைத்தார்கள். வெளியார் தயவு இல்லாமல் இப்போது கிளாஸ் யூனிட் நடக்கிறது. முதலில் டி.சி.எம். எக்ஸ்பர்ட் கொடுத்த முறையினால் தவறு ஏற்பட்டது. நம்முடைய தொழில்களைச் சீர்திருத்தி அமைக்கக்கூடிய*

நிபுணர்கள், திறன் படைத்தவர்கள் நம்மிடத்திலும் இருக்கிறார்கள். இருந்தாலும் மேல் நாடு, மேல் நாடு என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இந்தத் துறையிலே பயிற்சி பெறுவதற்காக அனுப்பட்ட அதிகாரி வேறு ஒரு இலாகாவுக்குப் போடப்பட்டு, தகுதி பெறாத ஒருவர், பயிற்சி பெறாத ஒருவர் கிளாஸ் யூனிட் பொறுப்பிலே போடப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு. அதற்கு அமைச்சர் அவர்களுடைய பதில் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** சர்க்கார் இலாகாக்களிலே ப்ரொமோஷன் வரும். அவர்களுக்குப் ப்ரொமோஷன் வந்துவிட்டால் அவர்கள் அந்த இலாகாவுக்குப் போய்விடுவார்கள். இது கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒன்று இந்த யூனிட்டினுடைய நிர்வாகஸ்தருடைய வேலையை 'அப்-கிரேடு' செய்யவேண்டும். அப்படிச் செய்தால் செலவு கூடப் போய்விடும். அல்லது அவர் ப்ரொமோஷன் ஆன இடத்திற்குப் போய்விடுவார். இதிலே, அவர் ப்ரொமோஷன் ஆன இடத்திற்குப்போனாலும் கூட இதையும் கண்காணித்துக்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஓடவில்லை என்று சொன்னார்கள்; இது ஓடிக்கொண்டிருக்கிறது என்ற செய்தியையும் வைக்க முன் வருகிறேன்.

பெரம்பூர் ஃபுட்வேர் யூனிட்டில் நஷ்டம் என்று சொன்னார்கள். என் கணக்கு வேறு; நஷ்டமல்ல. எந்தத் தொழிலிலும் முதலில் நஷ்டமாகத்தான் இருக்கும். கன்ஸ்ட்ரக்ஷன் காபிடலை எல்லாம் சேர்த்துக்கூட நஷ்டம் என்று சொல்கிறார்கள். பெரம்பூர் ஃபுட்வேர் யூனிட்டைப் பொருத்தவரை நஷ்டம் இல்லை. அதற்கு மாறாக 1964-65-ல் 31,000 ரூபாய் லாபம். 1965-66-ல் இதே மாதிரி லாபம் வரும் என்று கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** நஷ்டம் என்று சொல்லவில்லை. கொடுக்கப்பட்டிருக்கிற கணக்குப்படி சாமான்கள் சரியாக இருக்கிறதா என்று பார்த்தார்களா என்றுதான் கேட்டேன். ஸ்டாக் சரியாக இருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ஆரம்பத்தில் சொன்னது போல் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு கேள்வி போட்டால் இதைப்பற்றிச் சொல்ல முடியும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கனம் அமைச்சர் அவர்கள் எல்லாவற்றுக்கும் கேள்வி போடுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். விவாதத்தில் எடுத்துச் சொல்லுகிற குறைபாடுகளுக்கும் பதில் சொல்லும்போது விளக்கம் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இலாகாவிலே இருந்து தகவல் வரவேண்டியிருக்கிறது. கேள்வி போட்டால்தான் விடை





யளிக்க முடியுமே தவிர, உட்கார்ந்த இடத்திலேயே பேசப்படும்போது அதைப்பற்றி விவரத்தை எப்படிச் சொல்ல முடியும் ? குறிப்பாக ஒரு கேள்வி கேட்டால்தான் சொல்ல முடியும். உண்மையாக, தகவல் வேண்டுமென்றால் கேள்வி போடுங்கள். குற்றம் சாட்டுவதோடு நிறுத்தி விடலாம் என்றால் இப்படிப் பேசியதோடு நிறுத்திவிடலாம்.

கூட்டுறவு மில்களிலே தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். வீவர்ஸ் கூட்டுறவு மில்களில் அவர்களுக்கு என்று 50 சதவீதம் ரிசர்வ் செய்திருக்கிறார்கள். அதைக் கொடுத்திருக்கிறோம். திரு. அழகமுத்து அவர்கள் ஸ்டேட் சொசைடிடியில் விளம்பரச் செலவு அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள்.

பத்து கோடி ரூபாய் வரவு செலவு செய்கிற ஒரு பெரிய இன்ஸ்டிட்யூஷன் இது. அது தனி சொசைட்டி. ஜெனரல் பாடி இருக்கிறது, அங்கத்தினர்கள் இருக்கிறார்கள், மீட்டிங் நடக்கிறது. டைரக்டர் இருக்கிறார்கள், அவர்கள் அதைப் பற்றிக் கேட்கிறார்கள். பத்து கோடி வரவு செலவு செய்கிற பெரியதொரு இன்ஸ்டிட்யூஷனில் டி.எ. அதிகமாக இருக்கிறது, விளம்பரம் அதிகமாக இருக்கிறது என்று நாங்கள் சென்று பார்த்துக் கொண்டிருந்தால் அப்போது அதற்கு அடானமியே கிடையாது, எல்லாவற்றையும் நாமே பார்க்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

ஹாண்டிகிராஃப்ட்ஸ் சிலவற்றை எல்லாம் கல்வி இலாகாவிற்கு மாற்றவேண்டுமென்று திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னார்கள். அதில் என்ன நன்மை யிருக்கும் என்று தெரியவில்லை. அப்படி இருக்குமானால் அதை சர்க்கார் பரிசீலனை செய்யும். லாக் யூனிட்டில் நஷ்டம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். அது ட்ரெயினிங் சென்டர் சில ட்ரெயினிங் சென்டர், சில ப்ரொடக்ஷன் யூனிட் என்று போட்டிருக்கிறோம். என்ஜினியரிங் காலேஜ் நடத்துவதினால் நஷ்டம் வருகிறது என்று சொன்னால் அந்தக் குற்றச்சாட்டு எவ்வளவு பொருத்தமானதோ அதுபோல்தான் இதுவும். உவமைக்காகச் சொல்கிறேன். மாணவர்கள் அதில் பயிற்சி பெற்று பின்னர் தனியாகவோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ பூட்டுகள் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வேர்ல்ட் ஃபேர் பற்றி திரு. அரங்கண்ணல் அவர்கள் சொன்னார்கள். இது சர்க்கார் செய்வதல்ல. இதை 'ஆல் இந்தியா மான்யூபாக்சரர்ஸ் அசோசியேஷன்' செய்கிறது. அவர்கள் நம்மிடம் உதவி கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்திருக்கிறார்கள். மிகக் கஷ்டமான பெரியதொரு பொறுப்பு இது. இது நல்ல முறையில் நடக்கவேண்டுமென்ற கவலையும் எனக்கு இருக்கிறது. 'ப்ரசல்ஸ் ஃபேர், லீப்ஸிக் ஃபேர், வேர்ல்ட் பேர்' இவற்றையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். அவற்றைப் பார்த்ததின் விளைவு இதுபற்றி ஒரு பீதி ஏற்படுகிறதே தவிர, நம்பிக்கை

இல்லை. அப்படி பீதி இருப்பது நல்லதுதான். அப்போது தான் இதை கண்ணும் கருத்துமாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்படும். காப்பர், லிங்க் போன்றவற்றை நம் ராஜ்யத்தில் சிறப்பாக ஜியாலாஜிக்கல் சர்வே மூலம் பயன்படுத்தவேண்டுமென்று அரங்கண்ணல் அவர்கள் கூறினார்கள். அந்த முயற்சி இப்போது நடந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் நான் ஜப்பான் சென்றிருந்தபோது கூட அதையொட்டி மேற்கொண்டு என்னென்ன வேலைகளைத் தொடங்கவேண்டுமென்று அவர்களுடன் கலந்தாலோசித்து இருக்கிறோம். இரண்டு நிபுணர்கள் வந்து பார்த்து விட்டு உடனடியாக நாம் என்ன வேலை செய்யவேண்டுமென்று அறிக்கை கூட கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். நம் ராஜ்யத்தில் ஜியாலாஜிக்கல் சர்வே நல்லமுறையில் வேலை செய்திருக்கிறது. பழனியில் பாக்சைட் இருக்கிறது என்று அவர்கள் கண்டுபிடித்தார்கள். பல பல பாகங்களில் என்னென்ன கனிப் பொருள்கள் இருக்கின்றன என்ற தகவல்களை அவர்கள் செவ்வையான முறையில் தந்திருக்கிறார்கள். கடைசியாக ஒன்றை சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தொழில் அமைச்சர் அவர்கள் டெல்லியிலிருந்து திரும்பியிருக்கிறார்கள். டெல்லிப் பட்டணத்திலிருந்த போது ஏடுகளில் வந்த செய்திகள், ஆந்துக்குடி அனல் மின்சார நிலையத் திட்டம் வெற்றி பெற்று விட்டது என்று செய்திகள் வந்தன. நீண்ட காலமாக பேசப்பட்டு வருகிற சேலம் உருக்காலை திட்டம் என்னவாயிற்று என்ற விளக்கத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள் எதிர்பார்ப்பதில் ரொம்ப சாமர்த்தியக்காரர். நான் எதைச் சொல்லப்போகிறேனோ அதைத்தான் கேட்டு வந்ததாக இருக்கவேண்டும் என்று இந்த ஒரு அடி போட்டு விட்டார்கள். நான் கடைசியாக ஒன்றை சொல்லிவிட்டு முடிக்கிறேன் என்று சொன்னேன். அந்தப் பேச்சு வார்த்தையின் முடிவு, இந்த ராஜ்ய சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்த முடியும் என்ற அளவிற்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் அவர்கள் எடுத்துக் கொண்டாலும் சரி, இல்லை என்றால் ராஜ்ய சர்க்கார் எடுத்துக் கொண்டு நடத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டு இவ்வளவு நேரம் பொறுமையாக என் உரையை கேட்டதற்கு நன்றி. நான் சொன்ன வார்த்தைகளினால் யார் மனமாவது புண்பட்டிருந்தால் என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏதான் ப்ரிக் வொர்க்சில் நம் இயக்குநர் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை என்று சொன்னார்கள். மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனிலிருந்து கடன் வாங்கியிருப்பதால் நம் டைரக்டர் ஆஃப் இண்டஸ்ட்ரீஸ் அதில் இயக்குநராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





SRI K. T. KOSALRAM : He is my nominee.

திரு. கே. ஏ. மதியழகன்: 1956 தொழில் கொள்கை பிரகடனப்படி இன்று சர்க்கார் கொள்கை அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அந்த கொள்கைப்படி பேசிக் இண்டஸ்ட்ரீஸ் பொதுத் துறையில்தான் அமைய வேண்டும். திரு லோகநாதன் ஆய்வுக் குழுவில் கூட அலுமினியம் தொழிற்சாலையை பேசிக் இண்டஸ்ட்ரீசில் சேர்த்திருக்கிறார்கள். அப்படியிருக்க கோவை மில் முதலாளிக்கு 15 கோடி ரூபாயுள்ள தொழிற்சாலையை கொடுத்தது முரண்பாடா, இல்லையா? பேப்பர் தொழிலை பப்ளிக் செக்டாரில் அமைக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை சேஷசாயி கம்பெனிக்குக் கொடுத்தது நாம் ஒத்துக் கொண்டதற்கு முரண்பாடு உடையதா, இல்லையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய சர்க்கார் அலுமினியம் கம்பெனியை எடுத்து நடத்தமுடியாது என்று முடிவு சொல்லிவிட்டார்கள். காரணம், அவர்கள் சொன்னது சென்னை ராஜ்யத்தில் கிடைக்கிற 'ஷேவராய்ஸ் பாக்சைட்' போதுமான தரமுள்ளதல்ல, போதுமான சத்துள்ளதல்ல என்று அதை எடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு பிறகு இதைத் தனியார் ஒருவர் செய்வதற்கு தயாராகயிருக்கிறார் என்றால் உங்களுக்கு என்ன அப்ஜக்ஷன்?

(திரு. கே. ஏ. மதியழகன்: உங்கள் எம்.பி.-க்கு கொடுக்கப்பட்டது;) யார் நல்ல தொழில் செய்தாலும் அவர் எங்களுடைய எம்.பி. என்று கொடுக்காமல் இருந்தால் தொழில் போய்விடும். என்றைக்கும் நான் அதை ஏற்றுக்கொள்ளமாட்டேன். யார் திறமையாக தொழில் செய்வார்களோ அவர்களுக்கு இதை கொடுக்கத்தான் செய்வோம். எம்.பி.-க்கு கொடுக்கக் கூடாது, ஜாதி என்ற காரணத்தால் கொடுக்கக் கூடாது என்று சொன்னால் அதை நான ஏற்றுக்கொள்ளமுடியாது. இது தான் எங்கள் திட்டவட்டமான கொள்கை. (பலத்த ஆரவாரம்.)

திரு. கே. ஏ. மதியழகன்: ஆளுக்கு ஒன்று வேண்டுமானாலும் வாங்கிக் கொண்டு போகட்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அங்கத்தினர் அவர்கள் அது மாதிரி ஒரு பெரிய தொழில் செய்வதாக இருந்தால் இப்போதே கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: அப்படிக் கொடுப்பதும் முறையாகாது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தொழில் வளர வேண்டும் என்று ஒரு புறத்தில் சொல்லிவிட்டு தொழில் செய்வதற்கு ஒருவர் முன்வரும்போது இன்னாருக்குக் கொடுப்பதா என்று சொல்வது தான் முரண்பாடாக இருக்கிறது.

The Madras Industrial Investment Corporation has nominated the Industrial Adviser, Sri Venkatiah, as their representative.

[17th March 1966

SRI K. T. KOSALRAM : He is my representative and not the represenative of the Government.

THE HON. SRI R. VENKATARAMAN : Let not the hon. Member please disturb me.

The Madras Industrial Investment Corporation has nominated the Industrial Adviser as their representative on the Southern Bricks.

*திரு. கே. டி. கோசல்ராம் :* சதேர்ன் ப்ரிக் வொர்க்சில் சர்க்காருடைய இன்டஸ்ட்ரியல் அட்வைசரை டைரக்டராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறது . . .

*திரு. சா. கணேசன் :* He is my nominee. என்று சொன்னார்கள். அவர் எப்படி நாமினேட் செய்ய முடியும் ?

*திரு. மீ. கலியாணசுந்தரம் :* இதிலிருந்து உரிமைப் பிரச்னைக் கோரிக்கையை வாபஸ் பெற்றுக் கொண்டு விட்டார்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அங்கத்தினர் அவர்கள் எதைப்பற்றியெல்லாமோ என்னவெல்லாமோ நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி இதைப்பற்றியும் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளலாம்.

The cut motions to Demand No. XX Industries were put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,82,64,100 under Demand No. XX—Industries.'

The Demand was put and carried and the Grant was made.

The cut motions to Demand No. XLI—Capital outlay on Industrial Development were put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 8,88,17,500 under Demand No. XLI—Capital Outlay on Industrial Development.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and
2-21 p.m. meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 166. *Notification issued with G.O. Ms. No. 467, Home, dated the 18th February 1966 making an amendment to the Madras Home Guard Rules, 1963, published with Home Department Notification S.R.O. No. A-421 of 1963, dated the 6th April*



17th March 1966]

*1963, at pages 433-438 of Part V of the Fort St. George Gazette, dated the 17th April 1963, as subsequently amended. [Laid on the Table of the House under section 15 (4) of the Madras Home Guard Act, 1963 (Madras Act 3 of 1963).]*

* 167. *Notification issued with G.O.P. No. 3523, Revenue, dated the 27th December 1965 making certain amendments to the Madras General Sales Tax Rules, 1959, published with Revenue Department Notification S.R.O. No. A-1941, dated the 28th March 1959, at pages 232-280 of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959).]*

### B. Reports, Notifications and other papers.

† 58. *Speech by Minister for Food on Demands for Irrigation Grants 1966-67 (English and Tamil).*

† 59. *A review on the Irrigation in Madras State 1965-66 (English and Tamil).*

* Laid on the table of the House on 16th March 1966.

† Despatched to Members on 15th March 1966.

# இணைப்பு

[483-ம் பக்கத்தில் உள்ள 329-ம் எண்ணுள்ள நட்சத்திர குறியிட்ட கேள்வியின் பதிலை பார்க்கவும்.]

**முதல் அமைச்சர் உட்பட அமைச்சர்களின் இல்லத்திலுள்ள 'தொலைபேசிகளில்' டிரங்கால் செய்ததற்கான கட்டணச் செலவைக் காட்டும் விவர அறிக்கை.**

| அமைச்சர் பெயரும், பதவியும். | தொலை பேசி எண். | 1964, ஏப்ரல். அலுவல் வகையில். | தனிப் பட்ட வகையில். | மொத்தம். | 1964, மே. அலுவல் வகையில். | தனிப் பட்ட வகையில். | மொத்தம். | 1964, ஜூன். அலுவல் வகையில். | தனிப் பட்ட வகையில். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய்) | | | | | |
| ஸ்ரீ M. பக்தவத்சலம், முதலமைச்சர் .. | 71243 | 14·80 | .. | 14·80 | 64·50 | 79·85 | 144·35 | 50·50 | 77·55 | 128·05 |
| | 74681 | .. | .. | .. | .. | 2·25 | 2·25 | .. | 1·50 | 1·50 |
| ஸ்ரீ R. வெங்கட்டராமன், தொழிலமைச்சர் .. | 71323 | 14·20 | .. | 14·20 | .. | .. | .. | 114·20 | .. | 114·20 |
| ஸ்ரீ P. கக்கன், உள்துறை அமைச்சர் .. .. | 71850 | 1·50 | .. | 1·50 | 99·40 | .. | 99·40 | 50·35 | .. | 50·35 |
| ஸ்ரீ V. ராமையா, உணவு அமைச்சர் .. .. | 71156 | 72·00 | .. | 72·00 | .. | .. | .. | .. | .. | .. |
| ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம், பொதுச் சுகாதார அமைச்சர். | 34961 | 127·50 | .. | 127·50 | 133·15 | .. | 133·15 | 213·75 | .. | 213·75 |
| ஸ்ரீ N. நல்ல சேனுபதி சர்க்கரை மன்றாடியார், கூட்டுறவு அமைச்சர். | 86334 | 64·40 | 10·40 | 74·80 | 6·25 | 46·80 | 53·05 | 136·20 | 37·50 | 173·70 |
| ஸ்ரீ கோ. பூவராகன், செய்தி-விளம்பரத் துறை அமைச்சர். | 71544 | 11·50 | 12·90 | 24·40 | 32·70 | 17·10 | 49·80 | .. | 37·15 | 37·15 |
| ஸ்ரீ S. M. A. மஜீத், தல நிர்வாக அமைச்சர். | 74132 | 37·95 | .. | 37·95 | 31·90 | .. | 31·90 | 57·55 | .. | 57·55 |
| | | 343·85 | 23·30 | 367·15 | 367·90 | 146·00 | 513·90 | 622·55 | 153·70 | 776·25 |



| அமைச்சர் பெயரும், பதவியும். | தொலை பேசி எண். | 1964, ஜூலை. அலுவல் வகையில். | தனிப் பட்ட வகையில். | மொத்தம். | 1964, ஆகஸ்டு. அலுவல் வகையில். | தனிப் பட்ட வகையில். | மொத்தம். | 1964, செப்டம்பர். அலுவல் வகையில். | தனிப் பட்ட வகையில். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) |
| | | | | | (ரூபாய்) | | | | | |
| ஸ்ரீ M. பக்தவத்சலம், முதலமைச்சர் .. | 71243 | .. | 23·00 | 23·00 | 85·85 | 43·50 | 129·35 | 24·07 | 40·20 | 64·27 |
| | 74681 | .. | .. | .. | 0·60 | .. | 0·60 | .. | .. | .. |
| ஸ்ரீ R. வெங்கட்டராமன், தொழிலமைச்சர் .. | 71323 | 13·00 | .. | 13·00 | .. | 27·80 | 27·80 | 81·55 | 8·60 | 90·15 |
| ஸ்ரீ P. கக்கன், உள்துறை அமைச்சர் .. .. | 71850 | 24·00 | .. | 24·00 | 6·85 | .. | 6·85 | 48·30 | .. | 48·30 |
| ஸ்ரீ V. ராமையா, உணவு அமைச்சர் .. .. | 71156 | 25·60 | .. | 25·60 | .. | .. | .. | 12·80 | .. | 12·80 |
| ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம், பொதுச் சுகாதார அமைச்சர். | 34961 | 91·55 | .. | 91·55 | 139·80 | .. | 139·80 | 158·05 | .. | 158·05 |
| ஸ்ரீ N. நல்ல சேனுபதி சர்க்கரை மன்றாடியார், கூட்டுறவு அமைச்சர். | 86334 | 19·10 | 75·00 | 94·10 | 17·00 | 57·00 | 74·00 | 67·50 | 39·00 | 106·50 |
| ஸ்ரீ கோ. பூவராகன், செய்தி-விளம்பரத் துறை அமைச்சர். | 71544 | 5·30 | 30·00 | 35·30 | 18·20 | 12·30 | 30·50 | 19·25 | 26·65 | 45·90 |
| ஸ்ரீ S. M. A. மஜீத், தல நிர்வாக அமைச்சர். | 74132 | 300·50 | .. | 300·50 | 26·90 | .. | 26·90 | 74·90 | .. | 74·90 |
| | | 479·05 | 128·00 | 607·05 | 555·20 | 140·60 | 435·80 | 486·42 | 114·45 | 600·87 |

[17th March 1966

முதல் அமைச்சர் உட்பட அமைச்சர்களின் இல்லங்களிலுள்ள "தொலைபேசிகளில்" 1964-65-ல் உள்ளூர்த் தொடர்புக்கு ஆன செலவைக் (Local call charges) காட்டும் விவர அறிக்கை.

| அமைச்சர் பெயரும் பதவியும். (1) | தொலைபேசி எண். (2) | காலப் பகுதி. (3) | உள்ளூர்த் தொடர்புக்கான கட்டணம். (4) ரூ. | கா. |
|---|---|---|---|---|
| ஸ்ரீ M. பக்தவத்சலம், முதலமைச்சர். | 71243 | 1964 மே முதல் ஜூலை வரை .. .. | 322 | 90 |
| | | 1964 ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை. | 431 | 70 |
| | | 1964 நவம்பர் முதல் 1965 ஜனவரி வரை. | 304 | 20 |
| | | 1965 பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை .. | 271 | 00 |
| | | | 1,329 | 80 |
| ஷை | 74681 | 1964 மே முதல் ஜூலை வரை .. .. | 37 | 20 |
| | | 1964 ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை.. | 97 | 00 |
| | | 1964 நவம்பர் முதல் 1965 ஜனவரி வரை | 105 | 40 |
| | | 1965 பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை .. | 94 | 00 |
| | | | 333 | 60 |
| ஸ்ரீ R. வெங்கட்டராமன், தொழில் அமைச்சர். | 71323 | 1964 மே முதல் ஜூலை வரை .. .. | 121 | 60 |
| | | 1964 ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை. | 123 | 80 |
| | | 1964 நவம்பர் முதல் 1965 ஜனவரி வரை. | 111 | 90 |
| | | 1965 பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை .. | 92 | 60 |
| | | | 449 | 90 |
| ஸ்ரீ P. கக்கன், உள்துறை அமைச்சர் | 71850 | 1964 மே முதல் ஜூலை வரை .. .. | 280 | 10 |
| | | 1964 ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை .. | 6 | 70 |
| | | 1964 நவம்பர் முதல் 1965 ஜனவரி வரை. | 180 | 20 |
| | | 1965 பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை .. | 210 | 30 |
| | | | 677 | 30 |
| ஸ்ரீ V. ராமைய்யா, உணவு அமைச்சர்.. | 71156 | 1964 மே முதல் ஜூலை வரை .. .. | 168 | 40 |
| | | 1964 ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை. | 221 | 60 |
| | | 1964 நவம்பர் முதல் 1965 ஜனவரி வரை. | 171 | 80 |
| | | 1965 பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை .. | 128 | 50 |
| | | | 690 | 30 |
| ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம், பொதுச் சுகாதார அமைச்சர். | 34961 | 1964 மார்ச் முதல் மே வரை .. .. | 211 | 20 |
| | | 1964 ஜூன் முதல் ஆகஸ்ட் வரை .. | 319 | 00 |
| | | 1964 செப்டம்பர் முதல் நவம்பர் வரை... | 307 | 40 |
| | | 1964 டிசம்பர் முதல் 1965 பிப்ரவரி வரை. | 291 | 60 |
| | | | 1,129 | 20 |



th March 1966]

| அமைச்சர் பெயரும் பதவியும். (1) | தொலைபேசி. எண். (2) | காலப் பகுதி. (3) | உள்ளூர்த் தொடர்புக்கான கட்டணம். (4) ரூ. | கா. |
|---|---|---|---|---|
| N. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார், கூட்டுறவு அமைச்சர். | 86334 | 1964 ஏப்ரல் முதல் ஜூன் வரை .. | 140 | 90 |
| | | 1964 ஜூலை முதல் செப்டம்பர் வரை .. | 158 | 80 |
| | | 1964 அக்டோபர் முதல் டிசம்பர் வரை .. | 161 | 30 |
| | | 1965 ஜனவரி முதல் மார்ச் வரை .. | 246 | 40 |
| | | | 707 | 40 |
| G. பூவராகன், செய்தி-விளம்பரத் துறை அமைச்சர். | 71544 | 1964 மே முதல் ஜூலை வரை .. .. | 195 | 20 |
| | | 1964 ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை. | 147 | 40 |
| | | 1964 நவம்பர் முதல் 1965 ஜனவரி வரை. | 117 | 30 |
| | | 1965 பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை | 133 | 50 |
| | | | 593 | 40 |
| S. M. A. மஜீத், தல நிர்வாக அமைச்சர். | 74132 | 1964 மே முதல் ஜூலை வரை .. .. | 223 | 60 |
| | | 1964 ஆகஸ்டு முதல் அக்டோபர் வரை. | 255 | 00 |
| | | 1964 நவம்பர் முதல் 1965 ஜனவரி வரை. | 281 | 00 |
| | | 1965 பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை .. | 282 | 10 |
| | | | 1,041 | 70 |

றிப்பு.—1964–65-ம் ஆண்டின் நான்கு காலாண்டுகளுக்கு, உள்ளூர்த் தொலைபேசித் தொடர்பிற்கான கட்டணங்களின் புள்ளி விவரம் "டெலிபோன் துறை" கேட்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

STATEMENT SHOWING THE EXPENDITURE INCURRED TOWARDS THE TRUNK CALL CHARGES IN RESPECT OF THE RESIDENTIAL TELEPHONES OF THE MINISTERS INCLUDING THE CHIEF MINISTER DURING 1964–65.

| Name and designation of the Minister. | Telephone number. | April 1964. | | | May 1964. | | | June 1964. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | *Official.* | *Private.* | *Total.* | *Official.* | *Private.* | *Total.* | *Official.* | *Private.* | *Total.* |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | RS. | RS. | RS. | RS. | RS. | RS. | RS. | RS. | RS. |
| Sri M. Bhaktavatsalam, Chief Minister. | 71243 | 14·80 | .. | 14·80 | 64·50 | 79·85 | 144·35 | 50·50 | 77·55 | 128·05 |
| | 74681 | .. | .. | .. | .. | 2·25 | 2·25 | .. | 1·50 | 1·50 |
| Sri R. Venkataraman, Minister for Industries. | 71323 | 14·20 | .. | 14·20 | .. | .. | .. | 114·20 | .. | 114·20 |
| Sri P. Kakkan, Minister for Home. | 71850 | 1·50 | .. | 1·50 | 99·40 | .. | 99·40 | 50·35 | .. | 50·35 |
| Sri V. Ramaiah, Minister for Food. | 71156 | 72·00 | .. | 72·00 | .. | .. | .. | .. | .. | .. |
| Srimathi Jothi Vencatachellum, Minister for Public Health. | 34961 | 127·50 | .. | 127·50 | 133·15 | .. | 133·15 | 213·75 | .. | 213·75 |
| Sri N. Nallasenapathi Sarkarai Manradiar, Minister for Co-operation. | 86334 | 64·40 | 10·40 | 74·80 | 6·25 | 46·80 | 53·05 | 136·20 | 37·50 | 173·70 |
| Sri G. Bhuvarahan, Minister for Information and Publicity. | 71544 | 11·50 | 12·90 | 24·40 | 32·70 | 17·10 | 49·80 | .. | 37·15 | 37·15 |
| Sri S. M. A. Majid, Minister for Local Administration. | 74132 | 37·95 | .. | 37·95 | 31·90 | .. | 31·90 | 57·55 | .. | 57·55 |
| | | 343·85 | 23·30 | 367·15 | 367·90 | 146·00 | 513·90 | 622·55 | 153·70 | 776·25 |



| Name and designation of the Minister. | Telephone number. | July 1964. | | | August 1964. | | | September 1964. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | *Official.* | *Private.* | *Total.* | *Official.* | *Private.* | *Total.* | *Official.* | *Private.* | *Total.* |
| | | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) |
| | | RS. | RS. | RS. | RS. | RS. | RS. | RS. | RS. | RS. |
| Sri M. Bhaktavatsalam, Chief Minister. | 71243 | .. | 23·00 | 23·00 | 85·85 | 43·50 | 129·35 | 24·07 | 40·20 | 64·27 |
| | 74681 | .. | .. | .. | 0·60 | .. | 0·60 | .. | .. | .. |
| Sri R. Venkataraman, Minister for Industries. | 71323 | 13·00 | .. | 13·00 | .. | 27·80 | 27·80 | 81·55 | 8·60 | 90·15 |
| Sri P. Kakkan, Minister for Home. | 71850 | 24·00 | .. | 24·00 | 6·85 | .. | 6·85 | 48·30 | .. | 48·30 |
| Sri V. Ramaiah, Minister for Food. | 71156 | 25·60 | .. | 25·60 | .. | .. | .. | 12·80 | .. | 12·80 |
| Srimathi Jothi Vencatachellum, Minister for Public Health. | 34961 | 91·55 | .. | 91·55 | 139·80 | .. | 139·80 | 158·05 | .. | 158·05 |
| Sri N. Nallasenapathi Sarkarai Manradiar, Minister for Co-operation. | 86334 | 19·10 | 75·00 | 94·10 | 17·00 | 57·00 | 74·00 | 67·50 | 39·00 | 106·50 |
| Sri G. Bhuvarahan, Minister for Information and Publicity. | 71544 | 5·30 | 30·00 | 35·30 | 18·20 | 12·30 | 30·50 | 19·25 | 26·65 | 45·90 |
| Sri. S. M. A. Majid, Minister for Local Administration. | 74132 | 300·50 | .. | 300·50 | 26·90 | .. | 26·90 | 74·90 | .. | 74·90 |
| | | 479·05 | 128·00 | 607·05 | 555·20 | 140·60 | 435·80 | 486·42 | 114·45 | 600·87 |

STATEMENT SHOWING THE EXPENDITURE INCURRED TOWARDS THE TRUNK CALL CHARGES IN RESPECT OF THE RESIDENTIAL TELEPHONES OF THE MINISTERS INCLUDING THE CHIEF MINISTER DURING 1964-65—*cont.*

| Name and designation of the Minister. | Telephone number | October 1964. Official. (21) | Private. (22) | Total. (23) | November 1964. Official. (24) | Private. (25) | Total. (26) | December 1964. Official. (27) | Private. (28) | Total (29) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | RS | RS | RS | RS | RS | RS | RS | RS | RS |
| Sri M. Bhaktavatsalam, Chief Minister. | 71243 | 17·10 | .. | 17·10 | 36·90 | 28·00 | 64·90 | 5·20 | 15·35 | 20·55 |
| | 74681 | .. | .. | .. | 104·60 | .. | 104·60 | 38·50 | .. | 38·50 |
| Sri R. Venkataraman, Minister for Industries. | 71323 | 90·40 | .. | 90·40 | 31·72 | 4·65 | 36·37 | 48·60 | .. | 48·60 |
| Sri P. Kakkan, Minister for Home. | 71850 | 102·25 | .. | 102·25 | 97·25 | .. | 97·25 | 90·60 | .. | 90·60 |
| Sri V. Ramaiah, Minister for Food. | 71156 | 86·80 | .. | 86·80 | 22·00 | .. | 22·00 | 20·50 | .. | 20·50 |
| Srimathi Jothi Vencatachellum, Minister for Public Health. | 34961 | 424·40 | .. | 424·40 | 251·35 | .. | 251·35 | 131·60 | .. | 131·60 |
| Sri N. Nallasenapathi Sarkarai Manradiar, Minister for Co-operation. | 86334 | 103·20 | 90·30 | 193·50 | 55·00 | 160·30 | 215·30 | 18·70 | 448·90 | 467·60 |
| Sri G. Bhuvarahan, Minister for Information and Publicity. | 71544 | 51·35 | 13·50 | 64·85 | 10·20 | 36·00 | 46·20 | 42·65 | 11·70 | 54·35 |
| Sri S. M. A. Majid, Minister for Local Administration. | 74132 | 75·10 | .. | 75·10 | 33·50 | .. | 33·50 | 59·75 | .. | 59·75 |
| | | 950·60 | 103·80 | 1,054·40 | 642·52 | 228·95 | 871·47 | 456·10 | 475·95 | 832·05 |



| Name and designation of the Minister. | Telephone number | January 1965. Official. (30) | Private. (31) | Total. (32) | February 1965. Official. (33) | Private. (34) | Total. (35) | March 1965. Official. (36) | Private. (37) | Total. (38) | Grand total. (39) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | RS | RS | RS | RS | RS | RS | RS | RS | RS | RS |
| Sri M. Bhaktavatsalam, Chief Minister. | 71243 | 25·70 | 8·25 | 33·95 | 33·70 | .. | 33·70 | 13·80 | .. | 13·80 | 687·82 |
| | 74681 | 80·00 | .. | 80·00 | 619·75 | .. | 619·75 | 65·60 | .. | 65·60 | 912·80 |
| Sri R. Venkataraman, Minister for Industries. | 71323 | 135·10 | 2·00 | 137·10 | 12·60 | 16·10 | 28·70 | 16·20 | 14·65 | 30·85 | 631·37 |
| Sri P. Kakkan, Minister for Home. | 71850 | 101·70 | 146·50 | 248·20 | 65·45 | .. | 65·45 | 35·10 | .. | 35·10 | 869·25 |
| Sri V. Ramaiah, Minister for Food. | 71156 | 95·20 | 2·30 | 97·50 | .. | .. | .. | .. | 89·00 | 89·00 | 426·20 |
| Srimathi Jothi Vencatachellum, Minister for Public Health. | 34961 | 198·85 | .. | 198·85 | 158·35 | .. | 158·35 | 108·35 | .. | 108·35 | 2,136·70 |
| Sri N. Nallasenapathi Sarkarai Manradiar, Minister for Co-operation. | 86334 | 28·20 | 228·40 | 256·60 | 95·50 | 194·70 | 290·20 | 50·00 | 109·00 | 159·00 | 2,158·35 |
| Sri G. Bhuvarahan, Minister for Information and Publicity. | 71544 | 37·20 | 35·00 | 72·20 | 59·70 | .. | 59·70 | .. | 10·20 | 10·20 | 530·20 |
| Sri S. M. A. Majid, Minister for Local Administration. | 74132 | 21·50 | .. | 21·50 | 19·50 | .. | 19·50 | 18·60 | .. | 18·60 | 757·65 |
| | | 723·45 | 422·45 | 1,145·90 | 1,064·55 | 210·80 | 1,275·35 | 307·65 | 222·85 | 530·50 | 10,110·34 |

STATEMENT SHOWING THE EXPENDITURE INCURRED TOWARDS LOCAL CALL CHARGES IN RESPECT OF THE RESIDENTIAL TELEPHONES OF THE MINISTERS INCLUDING THE CHIEF MINISTER DURING 1964–65.

| *Name and designation of the Minister.* | *Telephone number.* | *Period.* | *Local Charges.* | |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | |
| | | | RS. | P. |
| Sri M. Bhaktavatsalam, Chief Minister .. | 71248 | May to July 1964 .. | 322 | 90 |
| | | August to October 1964. | 431 | 70 |
| | | November 1964 to January 1965. | 304 | 20 |
| | | February to April 1965. | 271 | 00 |
| | | | 1,329 | 80 |
| Do. | 74681 | May to July 1964 .. | 37 | 20 |
| | | August to October 1964 .. | 97 | 00 |
| | | November 1964 to January 1965. | 105 | 40 |
| | | February to April 1965 .. | 94 | 00 |
| | | | 333 | 60 |
| Sri R. Venkataraman, Minister for Industries. | 71323 | May to July 1964 .. .. | 121 | 60 |
| | | August to October 1964 .. | 123 | 80 |
| | | November 1964 to January 1965. | 111 | 90 |
| | | February to April 1965 .. | 92 | 60 |
| | | | 449 | 90 |
| Sri P. Kakkan, Minister for Home .. .. | 71850 | May to July 1964 .. .. | 280 | 1 |
| | | August to October 1964 .. | 6 | 70 |
| | | November 1964 to January 1965. | 180 | 20 |
| | | February to April 1965 | 210 | 30 |
| | | | 677 | 30 |
| Sri V. Ramaiah, Minister for Food .. | 71156 | May to July 1964 .. .. | 168 | 40 |
| | | August to October 1964 .. | 221 | 60 |
| | | November 1964 to January 1965. | 171 | |
| | | February to April 1965 .. | 128 | 5[illegible] |
| | | | 690 | 30 |



STATEMENT SHOWING THE EXPENDITURE INCURRED TOWARDS LOCAL CALL CHARGES IN RESPECT OF THE RESIDENTIAL TELEPHONES OF THE MINISTERS INCLUDING THE CHIEF MINISTER DURING 1964–65—*cont.*

| *Name and designation of the Minister* | *Telephone number* | *Period.* | *Local Charges.* | |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | |
| | | | RS. | P. |
| Srimathi Jothi Vencatachellum, Minister for Public Health. | 34061 | March to May 1964 .. | 211 | 20 |
| | | June to August 1964 .. | 319 | 00 |
| | | September to November 1964. | 307 | 40 |
| | | December 1964 to February 1965. | 291 | 60 |
| | | | 1,129 | 20 |
| Sri N. Nallasenapathi Sarkarai Manradiar, Minister for Co-operation. | 86334 | April to June 1964 .. | 140 | 90 |
| | | July to September 1964 .. | 158 | 80 |
| | | October to December 1964. | 161 | 30 |
| | | January to March 1965 .. | 246 | 40 |
| | | | 707 | 40 |
| Sri G. Bhuvarahan, Minister for Information and Publicity. | 71544 | May to July 1964 .. .. | 195 | 20 |
| | | August to October 1964 .. | 147 | 40 |
| | | November 1964 to January 1965. | 117 | 30 |
| | | February to April 1965 .. | 133 | 50 |
| | | | 593 | 40 |
| Sri S. M. A. Majid, Minister for Local Administration. | 74132 | May to July 1964 .. .. | 223 | 60 |
| | | August to October 1964 .. | 255 | 00 |
| | | November 1964 to January 1965. | 281 | 00 |
| | | February to April 1965. | 282 | 10 |
| | | | 1,041 | 70 |

NOTE.—The figures for Local Call Charges are given for four quarters during 1964–65 as claimed by Telephone Department.

600 008.
13 2840
N66·36